சுவாமி விவேகானந்தரின்

ஞான தீபம்

சுவாமிகளின் நூற்றாண்டு விழாப் பதிப்பு

சுடர் 4

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்

மயிலாப்பூர் :: சென்னை-4.

சென்னையில் மயிலாப்பூர் ஸ்ரீ ராமகிருஷ்ண
மடத்துத் தலைவரால் வெளியிடப்பட்டது.

1847-ம் ஆண்டுச் சட்டப்பிரிவு XX-ன் படி
உரிமை பதிவு செய்யப்பட்டுள்ளது.

உரிமை பதிப்பாளர்க்கே

I– XXXXIII—9—62

சாதாரண பைண்டு ரூ 5-00
காலிக்கோ பைண்டு ரூ 6-00

அச்சிட்டோர் :
பிஸினஸ் வீக் பிரஸ், சென்னை-14.

சுவாமி விவேகானந்தரின்

ஞான தீபம்

சுவாமிகள் பேசியும் எழுதியும்
அருளியவற்றின்
தமிழாக்கம்

பொருளடக்கம்

பொருள்	பக்கம்
முன்னுரை	v
ஞானயோகம்	
1. சமயத்தின் இன்றியமையாமை	7
2. மனிதனது உண்மை இயல்பு	19
3. மாயையும் மித்தையும்	44
4. மாயையும் கடவுட்கருத்தின் வளர்ச்சியும்	68
5. மாயையும் சுதந்தரமும்	86
6. பரம்பொருளும் அதன் வெளிப்பாடும்	102
7. எல்லாவற்றிலுமுள்ள இறைவன்	123
8. மெய்யுணர்வு	141
9. வேற்றுமையில் ஒற்றுமை	170
10. ஆன்ம சுதந்திரம்	190
11. பிரம்மாண்டம், பேரண்டம்	209
சிற்றண்டம்	220
12. அமரநிலை	239
13. ஆன்மா	255
14. ஆன்மா, அதன் தளையும் விடுதலையும்	277
15. உண்மையான மனிதனும் தோன்றும் மனிதனும்	289
செயல்முறை வேதாந்தம் I—IV	322
சமய சமரச அனுபூதி நெறி	409
சமய சமரசக் குறிக்கோள்	433
பத்தியோகச் சொற்பொழிவுகள்	460
வழிபடுவோனும் வழிபடுபொருளும்	544
பொருட் குறிப்பகராதி	557

முன்னுரை

திருவளர்ந்தோங்கும் பாரத நாட்டில் அவதரித்து, குருவருளும் திருவருளும் பெற்று, ஆணையால் ஊரையும் நாட்டையும் உலகையும் தம்மைப் போல் ஆக்கும் ஞானவொளி பரப்பி உய்விக்கக் கருதினர் வீரமுனிவர் சுவாமி விவேகானந்தர். அவர் பரம் பொருளோடு மன்னிக்கிடந்து யோகத்துயிலினின்று விழித்தபின் வேதாந்தச் சிங்கம்போல மேலைநாடும் கீழைநாடும் திரிந்தார். சென்னையிலிருந்து சிக்காகோப் பல்சமயப் பெருமன்றத்திற்குச் சென்று தொண்டாற்றத் தொடங்கி நாவீறுடைய சமயாசாரியபதத்தில் ஏறினர். அகப்பகைகள் அஞ்சியொழியும்படி அதிர்ந்து, சொன்மாரியால் அமெரிக்காவிலும் ஏனைய நாடுகளிலும் மக்களை விழிக்கச்செய்து, சென்றவிடமெல்லாம் ஞானப் பயிர் தழைக்கச் செய்தார்.

அப்பெரியார் தம் குருநாதரின் திருவடிக்கு இவ்வாறு ஞானவிளக்கேற்றும் பணியில் ஈடுபட்டபோது, அவரது திருக்கரத்தினின்றும் வெளிவந்த ஞானமொழிகளைத் திரட்டி, பத்துத் தொகுதிகளாகத் தமிழுலகம் தழைக்குமாறு மொழி பெயர்த்து இந்த ஞான தீபத்தைப் பத்து சுடர்களாக வெளியிடுகிறோம்.

இந்த 4-வது சுடரில் ஞானயோகம் பற்றி அந்த யோகி வள்ளல் செய்த மிகச் சிறந்த சொற்பொழிவுகள் இருக்கின்றன. சரியானபடி பின்பற்றினுல் கடவுளிடம் நண்ண வைக்கும் நான்கு வழிகளில் ஞானயோகம் மிகக் கடினமும் நுட்பமானதுமென்பர். ஆனுல் மெய்யுணர்வு பெற்ற சுவாமிகள் தம் யோகவிழியால் நுட்பத்தையும் ஆராய்ந்து, உண்மைச் சாதகர்களுக்காக இந்தக் கடின மார்க்கத்தையும் மிக எளிதாகச் செய்துள்ளார். இச்சொற்பொழிவுகள் பெரும்பாலும் இலண்டனிலும், சில இந்தியாவிலும் ஆற்றியவை. ஞானயோகம் அதன் பெயருக்கேற்றவாறு நம் திவ்விய

இயற்கையை வெளிப்படுத்தும் வழியாகும். இந்த ஞானம் சாதாரண அறிவல்ல, ஆன்ம விளக்கை ஏற்றி வைக்கும் உயர்ந்த அறிவே. உலகப் பொதுச் சமயமாம் வேதாந்தத்தின் நடைமுறைப் பாகத்தை சுவாமிகள் தெளிவுபடுத்திய சொற்பொழிவுகளும் இங்கு தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளன.

சுவாமிகளின் அறிவொளி தங்கும் இவ்வுரையாற்றல்கள் வாசகர்களின் மனவிருளைப் போக்கடிக்கப் பெரிதும் பயன் படுமென்பது திண்ணம்.

'ஞானயோக'ச் சொற்பொழிவுகளிற் பெரும்பாலும் திரு. கி. ஸ்ரீ. திருநாராயண ஐயங்கார், பி.ஏ., பி.எல்., என்பவரால் மொழிபெயர்க்கப் பட்டன. செயல்முறை வேதாந்தத்தை ஸ்ரீ வி. கெ. பார்த்தசாரதி ஐயங்கார் அவர்களும், 'பத்தியோகச் சொற்பொழிவுக'ளை ஸ்ரீ "அண்ணு", திரு. எஸ். கிருஷ்ணன் எம். ஏ. என்பாரும் மொழிபெயர்த்து உதவினர். பிற்சொன்னவரும வித்துவான் - ஸ்ரீ. ம. வேணு கோபாலப் பிள்ளை அவர்களும் மொழிபெயர்ப்புகளைச் செப்பனிட்டு அச்சேற்றுவதில் உதவி புரிந்தனர். இவர் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றி!

பதிப்பாளர்

சுவாமி விவேகானந்தர்

சமயத்தின் இன்றியமையாமை

மனித இனத்தின் விதியினை உருவாக்க வினையாற்றி வந்துள்ள—இன்னும் ஆற்றி வருகின்ற—சத்திகள் யாவற்றுள்ளும் சமயமென்னும் வடிவிலே வெளிப்படுகின்ற சத்தி யாதோ, அதனினும் ஆற்றல் மிக்கது வேறொன்றில்லை என்பது உறுதி. சமூக வாழ்வு சம்பந்தமான சங்கங்கள் அனைத்திலும் பின்னணியில் எங்கேயோ இருந்து தொழிலாற்றி வருவது அந்த விசித்திர சத்தியே. தனி மனிதர்கட்கிடையே என்றேனும் தோன்றி அவர்களை ஒன்றாகப் பிணைக்கும்படி உந்தியுள்ள மிகப் பெரிய காரணமும் அவ் விசித்திர சத்தியினின்றும் பெறப் பட்டதேயாகும். பெரும்பான்மையான சந்தர்ப்பங்களில் இனத்தாலோ, தொழில் முதலானவற்றாலோ, ஒருகுடிப் பிறப்பாலோ அமையும் பிணைப்புகளினும் சமயப் பிணைப்பே மிக்க வலிமை வாய்ந்ததென்பது மெய்ப்பிக்கப்பட்டுள்ளது நம்மனைவர்க்கும் வெளிப்படையே. ஒரே தெய்வத்தை வழிபட்டு ஒரே சமயத்தைச் சேர்ந்தவர்களாய் உள்ள மக்கள், ஒரே குலத்திலுதித்தவரினும், உடன் பிறந்தோரைக்காட்டிலும், மிக்க ஆற்றலோடும், மாறா உறுதியோடும் ஒருவர்க்கொருவர் காப்பாகக் கூடிவாழ்ந்து வந்துள்ளார்கள் என்பதும் நாம் நன்கறிந்த ஓர் உண்மையே. சமயங்களின் தொடக்கத்தினை ஆராய்ந்தறியப் பலப்பல முயற்சிகள் செய்யப்பட்டுள்ளன. இன்று வரை வழங்கி வந்துள்ள பழமையான சமயங்கள் யாவற்றிலும் பொதுவாக ஓர் உரிமை பாராட்டப் படுவதை நாம் பார்க்கிறோம். அது யாதெனில், ‘ அவை யாவும் இயற்கையைக் கடந்தவையே; மனித அறிவினின்று உதித்தவையல்ல; அவ்வறிவிற்கு வெளியே எங்கிருந்தோ பிறந்தவை,’ என்பதே.

இக்கால அறிஞர்கள் (சமயத்தைப் பற்றிய) இருவிதக் கோட்பாடுகளை ஓரளவிற்கு ஆதரிக்கின்றார்கள். ஒன்று, ஆவிக்கொள்கை; மற்றொன்று, அகண்டாகாரக் கருத்தின் பரிணம முறையெனுங் கொள்கை. ஒரு சாரார் சமயக்

கருத்துகளின் தொடக்கம் இறந்துபோன மூதாதையர்களை ஆராதனை செய்யும் முறையிலிருந்தே தொடங்குகிறது என்று வாதாடுகின்றனர்; மறு கட்சியினரோ, இயற்கையின் சத்திகளை உருவகப் படுத்துவதினின்றே சமயம் தொடங்குகிறது என்று சாதிக்கின்றனர். மனிதன் தனக்குச் சொந்தமான, காலஞ்சென்ற உறவினரின் நினைவைப் போற்ற விழைகின்றான்; உடல் அழிந்த பின்னரும் இறந்த அவர்கள் உயிருடன் இருப்பதாகவே எண்ணி, அவர்களுக்கு உதவக்கூடிய அன்னமளிக்கவும் அவர்களை ஒரு வகையில் தெய்வமாக வணங்கவும் விரும்புகிறான். இதினின்றே விளைந்தது 'சமயம்' எனப்படுவது. நாம் எகிப்தியர், பாபிலோனியர், சீனர், மற்றும் அமெரிக்காவிலும் பிறநாடுகளிலுமுள்ள இனத்தவர் பலரின் புராதன மதங்களை அலசிப் பார்க்கும்போது, மூதாதையர் வழிபாடே மதத்தின் பிறப்பிடமாயிற்று என்பதற்குத் தெளிவான அறிகுறிகள் காணப்படுகின்றன. தொன்மையான எகிப்தியர்க்குள் ஆன்மாவைப் பற்றித் தோன்றிய முதற் கருத்தாவது, அது ஒரு போலியுருவம் என்பதே. ஒவ்வொரு மனித உடலும் தன்னைப் போன்றேயுள்ள மற்றொரு பொருளைத் தன்னகத்தே கொண்டுள்ளதென்றும், ஒருவன் இறக்குங்கால அப்போலியுருவம், மரித்த உடம்பு அதே நிலையில் பழுதுறாது இருக்குமளவுதான் வாழக் கூடுமென்றும் அவர்கள் கருதினார்கள். ஆகையினாலேதான் எகிப்தியர் இறந்தோரின் உடலைப் பழுதுபடாது பேணுவதில் அத்துணை ஆர்வம் காட்டிவந்ததைக் காண்கிறோம். மேலும், அதனாலே தான் அவ்வுடல்களைப் பாதுகாக்கும்பொருட்டு 'பிரமிடு' என்னும் பெரிய கட்டடங்களை அமைத்தனர். ஏனெனில், புறவுடலின் எச்சிறு பகுதியேனும் கேடடையின், அதன் போலியுருவமும் அதே முறையில் கேடுறும் என்றனர். இது மூதாதையர் வழிபாடே என்பது தெளிவு. பாபிலோனியர் சார்பிலும் இக்கூற்றே பொருந்தும்; ஆனால், இதில் ஒரு வேறுபாடு உண்டு. போலியுருவம் தனது அன்புணர்ச்சியை முழுதும் இழந்தே விடுகின்றது; உயிருடன் வாழ்வாரைத் தனக்கு உண்டியும் பானமும் அளிக்குமாறும் மற்றும் பற்பல வகைகளில் தனக்கு உதவி புரியுமாறும் அது அச்சுறுத்து

கிறது. அது தன் மனைவி மக்களிடம் கொண்ட பாசத்தையும் முற்றிலும் துறந்துவிடுகின்றது. பண்டைய இந்தியரிடத்தும் இத்தகைய முன்னோர் வழிபாட்டின் சிறு சின்னங்கள் காணப்படுகின்றன. சீனர்களிடையே அவர்களது மதத்தின் அடிப்படையும் மூதாதையர் வழிபாடு என்றேதான் கூறவேண்டும். அப்பரந்த நாடு முழுதும் இக்கருத்து இன்றும் பரவி நிற்கின்றது. உண்மையாகவே சீனாவில் செழிப்புடன் வழங்கிவரும் சமயநெறி ஒன்றுண்டெனில், அது மூதாதையரின் பூசனையாம் சமயமே. இப்படிக் கவனிக்கும்போது முன்னோரைத் தொழுகையே சமயத்தின் தொடக்கம் என்பதை விளக்கப் போதுமான சான்றுகள் அமைந்துள்ளன என்பது தெரிய வருகிறது.

இதற்கு மாறாக, இயற்கை வழிபாட்டினின்றே சமயம் தோன்றிற்றென்று ஆரிய இலக்கியங்களினின்றும் மேற்கோள்கள் எடுத்துக் காட்டக்கூடிய புலவர்களும் உள்ளார்கள். இந்தியாவில் நிகழ்ந்த தென்புலத்தார் பூசனைக்கு நற்சான்றுகள் எங்கும் காணப்படுகின்றன. என்றாலும், மிகத் தொன்மையான நூல்களில் அவற்றின் அறிகுறி (சின்னம்) எதுவும் காணப்படவில்லை. ஆரிய இனத்தினரின் மிகப் பழைமையான நூலாகிய "இருக்குவேதசங்கிதை"யில் அதன் சுவடே தெரியவில்லை. அதில் அலர்ந்திருப்பது இயற்கையின் வழிபாடே என்று இக்கால அறிஞர்கள் கருதுகின்றார்கள். மனிதனது உள்ளம் திரைக்கு அப்பாலுள்ளதனை எட்டிப்பார்த்துத் தெளியப் பெரிதும் முயல்வதாகவே தோன்றுகிறது. வைகறை, அந்தி மாலை, மாபெரும்புயல், கற்பனை கடந்த பேரளவிலுள்ள இயற்கையின் சத்திகள், இயற்கையின் எழில் ஆகிய இவை யாவும் மனித உள்ளத்தில் சிந்தனையைத் தூண்டிவந்துள்ளன; அம்மனம் அவற்றைப்பற்றி ஏதேனும் அறியும் பொருட்டு அவற்றைக் கடந்து செல்ல அவாவுகின்றது. அம்முயற்சியினால் இயற்கைத் தோற்றங்களுக்கும் நிகழ்ச்சிகளுக்கும் மனிதனுக்குரிய இயல்புகள் ஊட்டப்படுகின்றன; அவை சில சமயம் வனப்பு வாய்ந்த உயிரையும் உடலையும், வேறு சமயங்களில் அவற்றிற்கு அதீதமானவற்றையும் பெற்றுத் திகழ்ந்தன. ஒவ்வொரு முயற்சியின் முடிவும் யாதெனில், இத்தோற்றங்

கள் உருவுங்குணமும் பெறினும் பெருவிடினும், தனிக் கருத்துகளாக மாறிவிடுகின்றன. இதேபோலத்தான் பண்டைய கிரீசிலும் நோக்குகிறோம். கிரேக்கரின் புராண முழுவதும் கருத்தாகப் பிரிந்து நின்ற இயற்கை வழிபாடேயாகின்றது. இங்ஙனமே பழைமை வாய்ந்த ஜெர்மானியரிடத்தும், ஸ்காந்திநேவியரிடத்தும், ஆரியரிடத்தும் நிகழ்கின்றது. இவ்வாறு, இவர்கள் கட்சியிலும் சமயத்திற்குத் தாயகம் இயற்கைச் சத்திகளை உருவகப்படுத்துவதிலே தான் உளது என்ற கொள்கையே வலியுறுத்தப் படுகிறது.

இவ்விரு கருத்துகளும் முரண்பாடுடையனவாய்த் தோன்றினும் மற்றொரு மூன்றும் அடிப்படையைக் கொண்டு இரண்டையும் சமரசப் படுத்திவிடலாம்; அதுவே, என் கருத்துப்படி, சமயத்திற்கு உண்மையான கருவாவது. அதனையே நான் ஐம்புலன்களின் வரையறைகளைக் கடந்து செல்வதற்கான போராட்டம் என்று கூற நினைக்கின்றேன். ஒன்று, மனிதன் தனது இறந்துபட்ட மூதாதையரின் ஆவிகளைத் தேடிச் செல்கிறான்; அதாவது, உடல் மறைந்த பின்னர் எஞ்சி நிற்பது யாது என்பதை ஒரு கணக்காட்சியாலேனும் அறிய விரும்புகிறான்; அன்றேல், இயற்கையின் மகத்தான (பிரம்மாண்டமான) தோற்றங்களுக்குப் பின்னிருந்து ஆட்டி வைக்கும் சத்தியைத் தெரிந்துகொள்ள விழைகிறான். இந்த இரண்டில் எதுவாய் இருந்தாலுமே ஒன்றுமட்டும் உறுதி; அது யாதெனின், அவன் ஐம்புலன்களுக்கு அப்பாற்பட்டவற்றை அறிய முயலுகிறானென்பதே. அவன் ஐம்புல நுகர்ச்சிகளோடு திருத்தியடையாது, அவற்றைக் கடந்து செல்ல ஆர்வம் கொள்ளுகிறான். இதன் விளக்கம் இரகசியமாக இருத்தல் வேண்டா. எனக்குத் தோன்றுவது யாதெனில், மக்களுக்கு சமயக்காட்சி முதன் முதலாகக் கனவுகள் மூலமாகவே கிட்ட வேண்டும் என்பது இயல்பே. இக்கனவுகள் வழியாகவே அமர நிலையைப் பற்றிய முதற்கருத்தும் அவனுக்குக் கிடைக்கலாம். இது மிகமிக வியப்புக்கு உரிய நிலையன்றோ? கனவு நிலைக்கும் விழிப்பு நிலைக்கும் உள்ள வேறுபாடு, குழந்தைகட்கும் பயிற்சி பெறாத மனம் படைத்தவருக்கும் ஒரு சிறிதும் விளங்குவதில்லையன்றோ? உடல் வெளிப் பார்வைக்கு

இறந்துவிட்டது போலத் தோன்றும் நல்லுறக்க நேரத்திலும், மனம் அதன் சிக்கலான வினைகள் அனைத்தையும் ஆற்றிக்கொண்டேதானிருக்கிறது என்பதை இயல்பான தருக்க முறைப்படி காண்பதினும் மிக இயற்கையானது வேறு யாதிருக்கக் கூடும்? ஆகவே, உடல் இறுதியாகக் கெட்டு மறைந்த பின்னரும் அதே தொழில் நடந்து கொண்டேதானிருக்கிறது என்ற முடிவுக்கு உடனடியாக அவர் வருவதில் விந்தை என்ன? இயற்கைக்கு அப்பாற்பட்டனவற்றிற்கு இவ்விளக்கம் மிக இயல்பானதே என்று எனது மனத்தில் படுகிறது; இன்னும் இக்கனுக் கருத்தினின்றுமே உள்ளம் மேன்மேலும் உயர்வான எண்ணங்களைப் பெறுகின்றது. ஆனால், கனவிற் கண்ட காட்சிகள் நனவில் மெய்ப்பிக்கப்படவில்லை என்பதனையும், கனவு நிலையில் மனிதன் புதியதொரு வாழ்வைப் பெறுன் என்பதையும், விழிப்பு நிலைக்குரிய அனுபவங்களையே அந்நிலையில் மீளவும் நினைவுறுகிருன் என்பதையும் நாளடைவில் மக்களிற் பெரும்பாலார் கண்டு கொண்டனர் என்பதும் உண்மையே.

ஆனால், இக்காலத்திற்குள் அவர்கள் உண்மையைத் தேடத் தொடங்கி விட்டார்கள்; தேடியது உண்முகமாகத் தான். மனத்தின் பல நிலைகளையும் முன்னிலும் ஆழ்ந்து சிந்தித்து ஆராய்ந்து செல்லவே, விழிப்போ கனவோ இரண்டினும் மேலான நிலைகள் இருப்பதைக் கண்டுபிடிக்கலானுர்கள். இதே நிலை உலகிலே நன்கமைக்கப் பட்டுள்ள சமயங்களில் எல்லாம் ஆனந்த பரவசமென்றே, தெய்விக ஆவேசம் என்றே வழங்கப்படுவதைக் காண்கிறோம். ஒழுங்காக அமைக்கப்பட்டுள்ள எல்லாச் சமயங்களிலும். அவற்றை நிறுவியவரும், தீர்க்கதரிசிகளும், தேவதூதர்களும் விழிப்பும் உறக்கமும் அல்லாத தனிமன நிலைகளிற் புக்கிருந்ததாகவும், அவ்வமயம் ஆன்மிக பூமி யெனப்படும் ஓர் உலகிற்குரிய புதிய உண்மைகளை வரிசையாக நேரிற் கண்டதாகவும் கூறப்படுகிறுர்கள். உண்மைகளை நனவில் நாம் அறியும் வகையினைக் காட்டிலும் மிகமிகத் தெளிவாக அந்நிலையில் அவர்கள் தத்துவங்களைக் கண்டறிந்தார்கள். எடுத்துக் காட்டாக, அந்தணர்களின் சமயங்களை எடுத்துக்

கொள்வோம். மறைகள் இருடிகளால் எழுதப்பட்டன என்பர். இந்த இருடிகள் சிற்சில உண்மைகளை நேரில் கண்டறிந்து கொண்ட ஞானிகளே யாவார்கள். வடமொழிப் படி "ரிஷி" என்பதன் சரியான பொருள், "மந்திரங்களைக் காண்பவர்" என்பதே; அதாவது, வேதகீதங்களில் வெளியிடப்பட்டுள்ள கருத்துகளைக் கண்டவர்கள் என்பதே. இவர்களே அறிவுக்காட்சி பெற்றவர்களென்றும், புலன்களுக்கு அப்பாற்பட்டவற்றைக் கூறுமிடத்துப் பொருந்துமாயின் தத்துவங்களைப் புலன் கொளப்பெற்றவர்கள் என்றும் உறுதியாகக் கூறினுர்கள்; இவ்வுண்மைகளை அன்னுர் குறித்து வைக்க முற்பட்டனர். இதே உண்மையைத்தான் யூதர் கிறித்தவர் என்னும் இரு மதத்தினரிடத்தும் யாம் காண்கிறேம்.

'தென்கிளை'யைச் சார்ந்த பௌத்தர்கள் முற்கூறியதற்கு விலக்கானவர்கள் என்னலாம். 'பௌத்தர்கள் கடவுளிடத்தோ, ஆன்மாவினிடத்தோ நம்பிக்கையற்றவர் எனில், அவர்களது மதம் இந்த ஐம்புலன்களுக்கப்பாற்பட்ட ஒரு வாழ்வு நிலையிலிருந்து பெறப்பட்டதெனில் எவ்வாறு?' என்று வினவலாம். இதற்கு ஏற்ற மறுமொழி யாதெனின், 'புத்தமதத்தினரும் என்றுமுள ஓர் அறநியதியை ஒப்புக்கொள்வர்; அன்றியும், அந்த அறநியதியும் நாம் கொள்ளும் பொருளின்படி, தருக்க முறையாற் பெறப்பட்டதன்று,' என்பதே. ஆனுல், புத்தபிரானும் புலனுணர்வைக் கடந்த நிலையிலே அதன் உண்மையைக் கண்டவரே; கண்டுபிடித்தவரே. "ஆசிய சோதி" (Light of Asia) என்னும் சிறந்த நூலில் புத்தரது வளர்ச்சிப் படி மிகக் கவினுறச் சுருக்கமாய்ச் சித்திரிக்கப்பட்டிருக்கிறது. உங்களுள் புத்தரது வரலாற்றைக் கற்றுள்ளவர்க்கு, புத்தர் ஞான உணர்வு நிலையை — சமாதியை — அடையும்வரை போதி மரத்தடியில் அமர்ந்திருந்ததாகக் குறிக்கப்பட்டிருப்பது நினைவிருக்கலாம். அவர் அறிவுரைகள் யாவும் இந்நிலையிலே வெளிவந்தவையே யன்றி, அறிவால் ஆராய்ந்து பெறப்பட்டனவல்ல.

ஆகவே, எல்லாச் சமயங்களிலும் மாபேருரையொன்று காணப்படுகின்றது. அதாவது, மனித உள்ளம் சிற்சில நேரங்களில் ஐம்புல வரையறைகளை மட்டுமன்றி நியாய

வாதத்திறனையும் கடந்து செல்லுகின்றது என்பதே. அப்போது ஐம்புலக் காட்சியாலோ தருக்க ஆராய்ச்சியாலோ ஒருபோதும் அறியவொண்ணாத உண்மைகளை அது நேரிற் காண்கின்றது. இந்த உண்மைகளே உலகத்தே தோன்றியுள்ள எல்லாச் சமயங்களுக்கும் ஆதாரங்களாகும். நமக்கு இவ்வுண்மைகளை மறுத்துக் கூறவோ, யுத்தியாற் சோதிக்கவோ உரிமை உண்டு; என்றாலும், உலகிலுள்ள இக்கால மதங்கள் யாவும் மனிதவுள்ளத்திற்குப் புலன்களின் எல்லையையும் தருக்கமுறையின் எல்லையையும் கடந்து செல்லும் விசித்திரமான சத்தி யொன்று உண்டு என்பதை வற்புறுத்துகின்றன; அந்த ஆற்றல் ஓர் உண்மையுரையே என்று எடுத்துரைக்கின்றன.

சமயங்கள் கூறிவரும் செய்திகளின் உண்மையைப் பற்றிக் கருதுதல் ஒரு பக்கம் இருக்கட்டும்: அவற்றுக் கெல்லாம் பொதுவான சிறப்பியல்பு ஒன்று உளது. சமய உண்மைகளை உதாரணமாகப் பௌதிக நூல் கண்டறிந்துள்ள தூல உண்மைகளோடு ஒப்புநோக்கின், இவற்றுக்கு மாறாக அவை யாவும் சூக்குமமான கருத்துகளாயுள்ளன. சிறந்த அமைப்பைப் பெற்ற சமயங்களில் எல்லாம் அக் கருத்துகள் மிகத் தூய (கலப்பற்ற) ஏகம் என்னும் கருத்து வடிவத்தைப் பெற்று, எங்கும் நிறைந்துள்ள ஒரு பொருளாகவோ, கடவுள் எனப்படும் ஒரு தனிப் புருடனாகவோ, நீதிமயமான ஒரு நியதி வடிவாகவோ அமைகின்றது; அன்றேல், இருக்கும் பொருள் ஒவ்வொன்றிற்கும் பின்னுள்ள தனித்த சாரமாக அமைகின்றன. இக்காலத்திலும் புலனுணர்வுக்கு அப்பாற்பட்ட மனநிலையொன்று உள்ளது என்பதைக் குறிக்கொள்ளாது சமயபோதனை செய்யத் தலைப்படும் முயற்சிகள் முன்னோரின் பழமையான கருத்துகளைக் கைக்கொண்டு அவற்றிற்கு 'நீதிநெறி', 'இலட்சிய ஒருமை' முதலான வேறு பெயர்களையெல்லாம் கூறிவருகின்றனர்; இதனால் விளங்குவது யாதெனில், இக்கருத்துகள் புலன்களில் அடங்குவன அல்ல என்பதே. நம்முள் ஒருவரும் இதுகாறும் 'இலட்சிய மனிதனை'க் கண்டதில்லை; எனினும், அத்தகைய புருடன் இருப்பதில் நம்பிக்கை வைக்கவேண்டுமென்பது நமக்குக் கூறப்படு

கிறது. பூரண இலட்சிய மனிதன் ஒருவனையும் நம்முள் எவரும் கண்டதேயில்லை; ஆனாலும், அத்தகைய குறிக்கோளின்றி நாம் முன்னேற இயலாது. இவ்வாறு வேறுபடும் சமயங்களான இவையனைத்திலும் சிறப்பொடு முன்னிற்கும் ஓர் உண்மையாவது, 'இலட்சிய வடிவமான' ஏகமெனும் ஒரு கருத்து உள்ளது; அதனை ஒரு புருடனாகவோ நிர்க்குணப் பொருளாகவோ ஒரு நியதியாகவோ, ஒரு சத்துப் பொருளாகவோ நம்முன் எடுத்துக் காட்டுகின்றனர்,' என்பதே. நாம் எப்போதும் அந்த இலட்சியத்தை நோக்கி நம்மை உயர்த்திக்கொள்ளவே பாடுபட்டுக்கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு மனிதனும் — அவன் யாரேயாயினும், எந்நிலையில் இருப்பவனாயினும்—அளவுகடந்த சத்தியெனும் இலட்சியப் பொருளை உடையவனாகிறான். ஒவ்வொரு மனிதனும் அந்தமிலா ஆனந்தம் எனும் இலட்சியத்தைப் பெற்றுள்ளவனாகிறான். நம்மைச் சுற்றிலும் காணப்படும் வினைகளிற் பெரும்பாலனவும் எங்கணும் செய்யப்படும் முயற்சிகளும் இந்த அனந்த சத்திக்காகவோ எல்லையற்ற இன்பத்துக்காகவோ நிகழ்த்தும் போராட்டமாகின்றன. ஆனால், ஒரு சிலர் தாம் எல்லையற்ற ஆற்றலுக்காகவே போராடிவரினும் அதனைப் புலன்கள் வாயிலாக எய்தவொண்ணாது என்பதை விரைவிற் கண்டுகொள்கின்றனர். எல்லையற்ற இன்பமானது புலன்கள் வாயிலாக அடையப் பெறுவதன்று என்பதை, அதாவது, புலன்களும், உடலும் அகண்டப் பொருளை வெளிப்படுத்த இயலாத அளவிற்கு வரையறைக்குட்பட்டுள்ளன என்பதை விரைவில் அறிந்துவிடுகின்றனர். ஆதலால், இவை வரையறையற்ற பொருளை வரையறையுற்ற ஒன்று வாயிலாக வெளிப்படுத்துதல் இயலாத காரியமே; ஆதலால், சுருங்கிய காலத்திலோ, நீண்ட காலத்திலோ அகண்டத்தை எல்லைக்குட்பட்டதன் வாயிலாக வெளிப்படுத்தும் முயற்சியைக் கை விடுபவனாகிறான். இங்ஙனம் கைவிடுதலே, அம்முயற்சியைத் துறத்தலே, அறநெறிக்கு ஆதாரமாவது. அறத்திற்கு அடிப்படையாவது இத்துறவே. துறவை ஆதாரமாகக் கொள்ளாத ஓர் அறநெறியை இதுகாறும் எவரும் போதித்ததில்லை.

அறநெறி, "நானல்லேன்; நீயேதான்," என்று எப்

போதுமே முழங்குகின்றது. அதன் கொள்கை தன்னல மன்று; தன்னலமின்மை என்பதே: ஒருவன் ஐம்புலனறிவு களின் மூலம் எல்லையற்ற சத்தியினையோ அந்தமில் பேரின் பத்தினையோ அடைய முயலுங்கால், அவன் பற்றிக்கொண் டிருக்கும் தனிப் புருடனுந் தன்மையையொட்டிய விஞ்ஞன கருத்துகள் துறத்தற்குரியவை என்பது நீதிநெறியின் விதி. நீங்கள் உங்கள் நலத்தை இறுதியிலே வைத்துக்கொண்டு, பிறர் நலத்தை அதற்கு முன்னதாக வைத்துக் கொள்ள வேண்டும். இந்திரியங்கள் 'நானே முதல்,' என்னும். அறநெறி யோ, "என்னை நான் இறுதியிலேதான் வைத்துக்கொள்ள வேண்டும்" என்கிறது. இவ்வாறு அறநெறிக் கோட்பாடு கள் யாவும் இத்தகைய தியாகத்தை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன; சட உலகிலே 'தான்' எனும் நினைவை ஆக்குவதில் அல்லாது அழித்தலிலே ஆதாரம் பெற்றுள்ளன. சட உலகிலே அகண்டமான பரம் பொருள் ஒருபோதும் வெளிப்படமாட்டாது; அது இயலுவ தன்று, நினைக்கற்பாலதுமன்று. ஆகவே, மனிதன் சட வுலகை நீத்துவிட்டு ஏனைய உயர்ந்த பூமிகளுக்குக் கிளம்பினலன்றி, அகண்டப் பொருளை ஆழ்ந்த நிலையில் வெளிப்படுத்த இயலாது, இம்மாதிரியாகத்தான் பலப்பல அறநெறி நியதிகளும் உருவாக்கப்படுகின்றன; ஆனல், அவற்றிலெல்லாம் உள்ள ஒரே மையக்கருத்து யாண்டும் தன்னலம் மறுத்தலேயாம். அறத்தின் இலட்சியமாவது, பூரணத் தன்னலமறுப்பே தான் என்று நினைப்பதை விட வேண்டுமென்று மக்களிடம் சொன்னல், அவர்கள் அதிர்ச்சி யடைந்துவிடுகின்றார்கள். அவர்களுக்குரிய தனிப் புருடத் தன்மையை இழப்பதற்கு அத்துணைப் பேரச்சம் அடைகின் றார்கள். அதே சமயம், அம்மக்களே அறநெறியின் ஒப்புயர் வற்ற குறிக்கோள்களே சரியானவை என்று வற்புறுத்தவும் செய்வார்கள். அவ்வாறு சொல்லுங்கால் எல்லா அறநெறி யின் எல்லையும், முடிவும், உட்கருத்தும் தனிமனித நினைவை அழிப்பனவே யன்றி ஆக்குவனவல்ல என்பதனை அவர்கள் ஒரு கணமும் சிந்தித்துப் பார்ப்பதில்லை.

பயன்படுகையை அளவையாகக் கொண்டு நாம் மாந்தருக்குள் இருக்கவேண்டிய அறநெறி யொழுக்கத்தை

விளக்கிக்காட்ட இயலாது; ஏனெனில், முதலாவதாக, பயன்கருதும் பான்மையினின்றும் எவ்வித அறநெறி விதிகளையும் ஊகத்தாற் பெறுதல் இயலாததொன்று. பலர் மொழிகிறபடி, இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒன்றையும் பிரமாணமாகக் கொண்டாலன்றி, அதாவது யான் கூறுகிற படி, ஆன்மபோதக் காட்சியின்றி, அறநெறி என்பது இருக்கவொண்ணுது. அகண்டப் பொருளை அடையும் நோக்கொடு புரியும் பெருமுயற்சியின்றி, இலட்சியமே இருத்தல் இயலாது. மனிதர்களைத் தங்களது குழுக்களுக் குள்ளேயே இருக்கும்படி தளையிட்டு வைக்க விரும்பும் எந்தச் சமூக ஒழுங்கும் மனிதர்களின் அறநெறி விதிகளுக்கு விளக்கம் காண மாட்டாததாகின்றது. பயன்படுகைவாதி நம்மை நோக்கி, "அகண்டப் பொருளைத்தேடும் முயற்சியை —புலனுக்கப்பாற்பட்ட உலகை—எட்டிப்பிடிக்கும் பண்ணத் தைக் கைவிட்டுவிடு. ஏனெனில், அது கை கூடாத காரியம், யுத்திக்குப் பொருத்தமற்ற ஒன்று," என்று கூறு கிருன்; எனினும், அதே மூச்சில் நீதியின் நியதிகளைக் கைக்கொள்ளவேண்டுமென்றும் சமூகத்துக்கு நலம் புரிய வேண்டுமென்றும் உரைக்கிருன். நாம் ஏன் நன்மை புரிதல் வேண்டும்? நலம் செய்தல் இரண்டாவதாகக் கருதத்தக்க ஒன்றேதான். நமக்கு ஓர் இலட்சியம் வேண்டப்படுவதே. அறநெறியே அறுதிப் பயனன்று; அதனையடைய ஒரு சாதனமே. முடிவு ஒன்று அங்கு இல்லையாயின், அறநெறிச் சார்பு நமக்கு எதற்காக? பிறர்க்குத் தீங்கிழையாது நலமே புரிதல் வேண்டும் எனல் யாது கருதியோ? தீங்கு இழைத் தாலுந்தான் என்ன? இன்பமே மனிதனின் குறிக்கோளா யின், என்னை ஏன் இன்புறுபவனுகச் செய்து கொண்டு, பிறரைத் துயர்க்கடலில் ஆழ்த்தக்கூடாது? என்னைத் தடுப்பது யாது? இரண்டாவதாக, பயன் படுகையெனும் கொள்கைக்கு அடிப்படை மிகவும் குறுகலானது. இப்போதைய சமூக இயல் வடிவங்களும் முறைகளும் இன் றுள்ள நிலையிலே சமூகத்திலிருந்து பெறப்பட்டுள்ளன. ஆனல், பயன்படுகைவாதி சமூகத்தை நித்தியமானதாகக் கொள்வதற்கு என்ன உரிமை இருக்கிறது? பலயுகங் களுக்கு முன் சமூகம் இருந்ததன்று; பலயுகங்களுக்குப்பின்

அது இல்லாதுபோதலும் கூடும். பெரும்பாலும் நாம் வளர்ச்சி பெற்று உயர்நிலைக்கு முன்னேறிச் செல்லும் வழியில் அது ஒரு சிறு படியாய் அமையலாம்: அன்றியும், சமூகத்தினின்றும் மட்டும் பெறப்படும் எந்தச் சட்டமும் நிலைத்து நிற்க இயலாது: மனித இயல்பின் முழு எல்லையையும் அளாவுவதாகாது. ஆதலால், மிக உயர்த்திப் பேசினும், பயன் படுகைவாதியின் கொள்கைகள் இக்கால சமூக நிலையில் மட்டுந்தான் வினையாற்றவல்லனவாதும். ஆனால், மதத்தினின்றும் ஞானத்தினின்றும் பெறக்கூடிய ஒழுக்க நெறியும் அறநெறிக் கோட்பாடும் எல்லையற்ற மனித இயல்பு முழுதிலும் புகுந்து தொழில் புரிவனவாம். அது தனி மனிதனைக் கைக் கொள்கிறது; எனினும் அது அகண்டப் பொருளோடு தொடர்புறுகிறது; இன்னும், அது சமூகத்தையும் சேர்த்துக் கொள்ளுகிறது — ஏனெனில், இத்தனிமனிதர் பலரின் தொகுப்பேயல்லாது சமூகம் வேறில்லை. ஆகையால், அது, தனி மனிதனுக்கும் அவனது நித்தியமான தொடர்புகளுக்கும் பொருந்துவது போன்றே, சமூகத்திற்கும் எந்நிலையில் அது ஒரு குறிப்பிட்ட நேரத்து இருப்பினும் அவசியமாக அதற்கும் பொருத்தமுடையதாகும். ஆகவே, மனித வர்க்கத்திற்கு ஆன்மிகச் சமயநெறி யாண்டும் இன்றியமையாததாகும். மனிதனுக்குச் சடப் பொருள் எத்துணை இன்பம பயக்கினும் அதனையே எப்போதும் சிந்தித்தல் அவனுக்கு இயலாததாகும்.

ஆன்மிக விஷயங்களில் மிதமிஞ்சிய கருத்தைச் செலுத்துவதால் இவ்வுலக வாழ்க்கைக்குரிய தொடர்புகளுக்கு இடையூறு உண்டாகின்றது என்று சொல்வர். சீனதேசத்துப் பண்டைய அறிஞர் கன்பியூஷியஸ் என்பாரது காலமுதலே பின்வரும் கூற்று நிலவி வந்துள்ளது: நாம் இம்மையுலகினிற் கருத்தை ஊன்றச் செய்வோமாக; இவ்வுலக வாழ்வு முடிவுற்றதும் பிற உலகங்களைப் பற்றிச் சிந்தனை செய்வோம். நாம் இவ்வுலகக் காரியங்களிற் கருத்துறலைக் கடமையாகக் கொள்ளலும் மிகநன்றே. ஆனால், ஆன்மிக விஷயங்களில் அளவுவிஞ்சிய கவனத்தால் நம் உலக விவகாரங்களுக்குச் சிறிது ஊனம் விளையலாம் என்பது உண்மையெனில், அளவுமீறிச் செலுத்தும் கருத்து

நமக்கு இம்மைக்கும் மறுமைக்கும் ஊறு விளைப்பதாகும். அது நமக்கு உலகாயதச் சார்பை ஊட்டிவிடுகின்றது; ஏனெனில், மனிதன் இயற்கையினைத் தனது குறியாக மதியாது, அதனினும் உயர்ந்த ஒன்றையே குறியாகக் கொள்ளவேண்டுபவனாவான்.

மனிதன் மனிதனாவது இயற்கையை மீறி உயர்ந்தெழ அவன் போராடும் வரைதான்; இவ்வியற்கை அகம் புறமென இரு வகையுமாம். நமக்குப் புறத்தேயும் நம் முடலிலும் உள்ள சடப் பொருளின் துகள்களை மட்டுமன்றி, புறவுலகை ஆண்டு வரும் தூண்டுதற் சத்தியாக உண்மையாகவே அமையும் அகத்தேயுள்ள மிக நுண்ணிய இயற்கையையும் ஆளும் விதிகளையும் அடக்கிக்கொண்டிருக்கிறது. புற இயற்கையை வெல்லுதல் நன்மையும் மிக்க பெருமையும் வாய்ந்ததேயாம்; நமது அக இயற்கையை வெல்லுதல் அதனினும் பெருஞ் சிறப்புடையதாகும். உடுக்கணங்களையும் கோள்களையும் அடக்கியாளும் விதிகளைப் பற்றிய அறிவு பெருமையையும் நன்மையையும் நல்குவதே யாகும்; ஆனால், மனித இனத்தாரின் கோபதாபங்களையும் உணர்ச்சிகளையும் சங்கற்பத்தையும் அடக்கும் விதிகளை அறிதல், அதனினும் அளவற்ற பெருஞ் சிறப்பையும் பெருநலத்தையும் பெரும் பயனையும் அளிப்பதாகும். இவ்வாறு அகத்தேயுள்ள மனிதனை வெல்லுதலும் மனித மனத்திற்குள் நிகழும் நுண்ணிய முயற்சிகளைப் பற்றிய மருமங்களை உணரலும், அதன் ஆச்சரியமான இரகசியங்களை அறிதலும் சமயத்திற்கே முழுமையும் உரியனவாம். பெரிய தூல உலகக் காரியங்களைக் காண விரும்புவதே சாதாரண மனித இயல்பு. அவனுக்குச் சூக்குமமான ஒன்றையும் அறிந்துகொள்ளும் ஆற்றல் இருப்பதில்லை. ஆயிரம் ஆடுகளைக் கொன்றுவிடும் சிங்கத்தைப் பொதுமக்கள் வியந்து பாராட்டுகின்றார்கள். ஆனால், சிங்கத்தின் நொடிப் போதைய வெற்றி யாயினும், ஆடுகளுக்கு மரணம் உண்டாவதைப் பற்றி ஒரு கணமேனும் அம்மக்கள் சிந்திப்பதில்லை. இக்கூற்று நன்கு கூறப்பட்ட ஒன்றே. அதற்குக் காரணம் யாதெனின், அவர்கள் உடல் வலிமையினை வெளிக்காட்டுவ

தில் மட்டுமே தமது இன்பத்தைக் காண்கின்றார்கள். இது சாமானிய மனித இயல்பு. பாமர மக்கள் புறப்பொருள்களை அறிந்து, அவை யாவற்றிலும் இன்பம் காண்கிறார்கள். ஆனால், ஒவ்வொரு சமூகத்திலும் உள்ள ஒரு பிரிவினர் புலனுணர்ச்சியில் இன்பம் பெறுவதில்லை; அதற்கப்பாற் பட்ட ஒன்றிலே தான் இன்புறுகின்றனர்; மேலும், அன்னார் சடப் பொருளினும் மேம் பட்ட யாதோ ஒன்றைக் கணப்போதேனும் கண்டு அதனை அடையப் போராடு கின்றனர். பற்பல நாட்டினரின் சரித்திரங்களை ஆழ்ந்து கற்றால், ஒரு நாட்டில் அத்தகைய மாபுருடர்களின் எண்ணிக்கை மிகும் அளவிற்கு ஏற்ப, அந்நாடு சிறப்புற்று ஓங்குவதையும், அகண்டப் பொருளை நாடும் இம்முயற்சி ஓயும் போது, பயன்படுகை வாதியர் அதனை வறிதான தென்று கூறினும் அந்நாட்டின் வீழ்ச்சி தொடங்குவதை யும் நாம் காண்கின்றோம். வேறு வகையாகக் கூறினால், ஒவ்வொரு மனித இனத்திற்கும் வலிமைக்கு ஊற்றுவது (மூலம்) அதன் ஞானமே எனலாம். அந்த ஞானம் மங்கி உல காயதம் தலையெடுக்கும் போது, அவ்வினத்திற்கு அழிவு தொடங்குகின்றது.

நாம் சமயம் வாயிலாகக் கற்கக்கூடிய உறுதியான உண்மைகளையும் விஷயங்களையும் எண்ணுவிடினும், அத னால் நாம் பெறக்கூடிய சுகசாதனங்களையும் எண்ணுவிடி னும், சமயத்தை ஒரு விஞ்ஞான நூலாகவும் கற்றற்குரிய தாகவும் மட்டும் கருதினும், மனிதனது மனத்திற்கு மிக்க நலனூட்டும் கழிபெரும் பயிற்சி வேறில்லை யென்பதாகிறது. அகண்டப் பொருள் மீதுள்ள இந்நாட்டமும் அதனைக்கைப் பற்றுதற்கான இப்பாடும் ஐம்புல வரையறைகளுக்கப்பாலும் சடப் பொருள்களைவிட்டு வெளியேறுவது போன்று மனித னிடம் உள்ளடங்கிய ஞானத்தன்மையை மலரச்செய்யும் இப்பெரு முயற்சியும்,— அகண்டப் பொருளை நமது சுவரூபத் தோடு ஐக்கியப் படுத்தற்பொருட்டு அல்லும் பகலும் இவ் வண்ணம் உழைத்தலும் இத்தகைய போராட்டமே மனிதன் ஆற்றக்கூடிய மாட்சிமைமிக்க மாபெருஞ் செயலாகும். சிலர்க்கு உணவிலேதான் மிக உயர்ந்த இன்பம் சுரக்கின் றது. அவர்கள் அவ்வாறிருக்கக் கூடாதென்று சொல்ல

நமக்கு உரிமை ஏது? வேறு சிலர் சில பொருள்களை உடைமைகளாகச் செய்துகொள்வதில் மிகப்பெரிய விருப்பங் கொள்வர். இது கூடாதென்று சொல்ல நமக்கு உரிமை இல்லை. ஆனால், அவர்களுக்கும் ஆன்மிகச் சிந்தனைகளில் திளைப்பவர்களைப் பார்த்து, 'அது கூடாது' என்று சொல்ல என்ன உரிமை உண்டு? ஓர் உடல் அமைப்பு, கீழ் நிலைக்குச் செல்லும் அளவிற்கு ஐம்புல இன்ப அவா மிகுந்திருக்கும். மனிதர்களில் மிகவும் சிலரே நாயோ ஓநாயோ தின்னும் போது காட்டும் சிற்றின்ப உவகைப்பெருக்கோடு உணவை உண்பவராவர். ஆனால், நாயும் ஓநாயும் அனுபவிக்கக் கூடிய இன்பம் முழுதும் புலன்களுக்குள்ளே குடி புகுந்து விட்டன போலும்! எல்லாத் தேசங்களிலும் மனித இனத்திற் கீழ்நிலையிலுள்ளோர் புலனுணர்ச்சியில் இன்புறுவர்; ஆனால், கற்றுப் பண்பட்டவரோ தமது சிந்தனையிலும் தத்துவ நூல் களிலும் கலைகளிலும் விஞ்ஞானங்களிலும் இன்பம் பெறு கின்றனர். ஞானம் என்பது இன்னும் மேலான நிலத்தைச் சார்ந்தது. காண்பானுக்கு எல்லையற்றதாக இருப்பதால், அந்நிலமே யாவற்றிலும் உயர்ந்ததாம்; அங்குள்ள இன்பமே அதனையறிந்து பாராட்டக் கூடியவர்களுக்கு மிக உயர்ந்த இன்பமாம். ஆதலின், பயன் படுகைக் கொள்கைப் படியா யினும் அம்மனிதன் போகத்தை நாடுவனேல், அவன் சமய சிந்தனையை வளர்த்து வரவேண்டும்; ஏனெனில், அதுவே உள்ளவற்றுள் மிக உயர்வுற்ற இன்பமாகின்றது. ஆகவே, சமயம் கற்றற்குரிய பொருளாகும் நிலையிலும் முற்றிலும் இன்றியமையாததென எனக்குத் தோன்றுகிறது. இதனை நாம் அதன் பயன்களிலே கண்டு கொள்ளலாகும். அது மனித உள்ளத்தை ஆட்டி வைக்கும் மாபெரியக்கச் சத்தி யாகும். ஞான இலட்சியத்தைப் போன்று வேறெதுவும் அதே அளவு சத்தியை நம்முட் புகுத்த வல்லதாகாது. மனிதனது வரலாற்று நூல் ஆராய்ச்சி செல்லும் வரை இதுவே உண்மையாயிற்று என்பதும் அதன் வல்லமைகள் இறந்து விடவில்லை யென்பதும் நம் அனைவர்க்கும் வெளிப் படையே. மனிதர் பயன் படுகைக்கொள்கை யொன்றையே ஆதாரமாகக் கொள்ளினும், மிக நல்லோராயும் நீதிமான் களாயும் இருத்தல்கூடும் என்பதை யான் மறுக்கிறேனல்

லேன். பயன் படுகைக் கொள்கையொன்றையே சார்ந்ததன் பயனாகப் பூரண நலமும் நீதியும் வாய்ந்த பெருமக்களுள் பலர் இவ்வுலகிலே தோன்றியுள்ளனர். ஆனால், உலகத்தையே ஆட்டி வைக்கும் ஆற்றல் பெற்றவர்களோ, உலகிற்குள் மக்களின் மனத்தை ஈர்க்கும் காந்த சத்தியைப் பேரளவிற்குத் தம்முடன் கொண்டு வருகின்றனர். அவர்களது சத்தி நூற்றுக்கணக்கான மக்களைத் தூக்கி அவர்களிடம் தொழில் புரிகின்றது; அவர்களது வாழ்க்கை பிறருள்ளத்திலே ஞானத்தீயை மூட்டுகின்றது. இத்தகைய புருடர்களே பின்னணியில் அந்த ஞான சத்தியுடையவராவதை எப்போதும் நாம் காண்கிறோம். அவர்களது இயக்கும் சத்தி சமயத்திலிருந்தே வந்தது. ஒவ்வொரு மனிதனுக்கும் பிறப்புரிமையும் இயல்புமான அந்த அளவு படாத வலிமையைச் சிலரே உணர்வதற்கு வேண்டிய மிகப்பெரிய இயக்கச்சத்தி சமயமேயாகும். ஒழுக்கத்தை அமைத்தற்கும், நன்மையும் பெருமையும் வாய்ந்த ஒவ்வொன்றையும் பெற உதவுதற்கும், தனக்கும் பிறருக்குமே சாந்தியளித்துக் கொள்ளவும் பயன்படும் மிகப்பெரிய இயக்கச் சத்தியாவது சமயமே; ஆதலின், அங்கிலேயினின்றும் சமயம் ஆராயப்படல் வேண்டும். முன்னினும் பரந்த அடிப்படையைக் கொண்டு அதனை ஆராய்ந்தறிதல் வேண்டும். குறுகிய வரையறைக்குட்பட்ட வாதப்போர் விருப்பமுள்ள சமயக் கருத்துகளெல்லாம் ஒழிந்தேயாகவேண்டும், மதசம்பந்தமான ஓர் உட்பிரிவுக்குரிய கருத்துகளையும் ஒரு குழுவினர்க்கோ நாட்டினர்க்கோ உரிய சமயக் கருத்துகளையும் கைவிடத்தான் வேண்டும். ஒவ்வொரு குலமும் நாடும் அதற்குரிய தனிக்கடவுளை அமைத்துக்கொண்டு பின் ஏனையவை யாவும் தவறானவை என்று நினைத்தல் பிழையே; அது பழங்காலத்திற்கு உரிய ஒரு மூடக்கொள்கையே. இத்தகைய கருத்துகளையெல்லாம் விட்டுவிடல் வேண்டும்,

மனித உள்ளம் விரிவடையுங்கால், அதன் ஞானப்படிகளும் விரிவடைகின்றன. ஒரு கருத்தை ஒருவன் குறித்துவிடுவானாயின், அது உலகின் மூலை முடுக்குகளி லெல்லாம் பரவி விடும் காலம் முன்னரே வந்து விட்டது. தூல சாதனங்களின் துணையினால் மட்டும் நாம் முழு உலகத்

தோடும் சம்பந்தம் பெற்றுள்ளோம். அதற்காக உலகின் வருங்கால சமயங்களும் அதே அளவு உலகப் பொது விரிவு ஆதல் வேண்டும். சென்ற காலத்திலுள்ள நல்லன வெல் லாம் பாது காக்கப் படல் வேண்டும்; ஏற்கெனவே உள்ள பெரு நிதியைப் பெருக்கிக்கொள்ள அக்கருவூல அறையின் கதவுகள் திறந்தே வைக்கப் பெற்றிருத்தல் வேண்டும். சமயங்களும் ஒன்றை மற்றொன்று உள்ளடக்கியனவாய் இருத்தல் வேண்டுமேயல்லாது அதற்குரிய தெய்வத்தைப் பற்றிய இலட்சியங்கள் வேறு பட்டனவாக இருக்கும் காரணம் பற்றி ஒன்று மற்றொன்றினை இகழ்வொடு நோக்கு தல் கூடாது. எனது வாழ்நாளிலே நாம் 'கடவுள்' என்ப தற்குக் கொள்ளும் பொருளில் கடவுள் நம்பிக்கையற்றவ ரான பலப்பல ஆன்ம ஞானிகளையும் பலப்பல அறிஞர்களை யும் அறிந்துள்ளேன். ஒருகால் அவர்களே நாம் கடவுளை என்றும் அறியக்கூடிய அளவிற்கு மேற்பட்டு நன்றாக அவரை அறிந்தும் இருக்கலாம். கடவுளின் சகுண வடிவக் கருத்தோ, நிர்க்குணமோ, அகண்டா காரப்பொருளோ, உயர் நீதிநெறியின் நியதியோ, இலட்சியப் புருடனோ, இவை யாவுமே மதத்திற்கு இலக்கணத்தை வரையறுக்கும் போது, அதற்குள் அடங்கியே தீரவேண்டும். சமயங்கள் யாவும் இப்படி விரிவடையும் போது, அவை பயக்கத்தக்க நலனும் நூறு மடங்கு பெருகியே இருக்கும். தம்மிடத்து எல்லையற்ற சத்தி படைத்துள்ள மதங்கள் அவற்றின் குறுகிய நோக் கங்களாலும் வரையறைகளாலும் நன்மையைவிட உலகுக் குப் பெரும்பாலும் அதிகமான தீமையையே புரிந்துள்ளன.

இக்காலத்திலும் ஒரே விதமான கருத்துகளைக் கொண்ட ஒரு மதத்தின் பல பிரிவுகளும் சங்கங்களும் தம் முள் பூசலிட்டுக் கொண்டே யிருத்தலைக் காண்கிறோம். காரணம், ஒன்று மற்றொன்றைப் போன்று அக்கருத்து களை அதே அச்சுமுறையில் விளக்குவதில்லை யென்பதே. ஆதலால், மதங்களைப் பிரிவடைத்து தீர வேண்டும். சமயக் கருத்துகள் உலகப் பொதுவாகவும் பரந்தனவாகவும் எல்லையற்றனவாகவும் இருக்கத்தான்வேண்டும்; ஏனெனில், அப்போது தான் நாம் சமயத்தின் முழு ஆற்றலையும் அடையக் கூடும்; ஏனெனில் இப்போது தான் அது உலகில்

வெளித்தோன்ற அடியெடுத்து வைத்துள்ளது. சமயங்கள் இறந்து வருகின்றன என்றும், ஞானக் கருத்துகள் உலகிலே மரித்துக் கொண்டேயுள்ளன என்றும் சில சமயம் சொல்வதுண்டு. எனக்குத் தோன்றுகிறது யாதெனில், அவை இப்போது தான் வளரத் தொடங்கியுள்ளன என்பதே. சமயத்தின் சத்தி, விரிவும் தூய்மையும் பெற்று மனித வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியையும் துளைத்து உட்புகப் போகின்றது. சமயமானது பொறுக்கியெடுக்கப்பட்ட ஒரு சிலரதுகையிலோ மதக்குருக்கள் குழுவிலோ இருந்த காலமெல்லாம் அது ஆலயங்களிலும், கிறித்து மதக்கோவில்களிலும், நூல்களிலும், கோட்பாடுகளிலும், கிரியைகளிலும், முறைகளிலும் சடங்குகளிலுமே இருந்து வந்தது. ஆனல், நாம் சமயத்தைப் பற்றிய உண்மையான ஆன்மிக நெறிக்கு ஏற்ற உலகப் பொதுவான கருத்தை எய்தி நிற்கும் போது தான் சமயமானது உண்மையுள்ளதும் உயிருடன் கூடியதும் ஆகும்; அது நமது இயல்பிலே கலந்து, நமது ஒவ்வோர் அசைவிலும் வாழ்ந்து, நமது சமூகத்தின் ஒவ்வொரு சிறு பகுதியிலும் நுழைந்து, இது வரை இருந்ததற்கு மேலாக நன்மை செய்யும் சத்தியை எல்லையற்ற அளவு பெறுதலாகும்.

பல்வகைப்பட்ட சமயங்கள் அனைத்தும் ஒன்றுபட்டு வாழவோ, அன்றேல் வீழ்ச்சியடையவோ வேண்டும் நிலையில் இருப்பதைக் கருதுங்கால், அவற்றில் இப்போது வேண்டப்படுவது பரஸ்பர மனப்பரிவே. இம்மனப்பரிவு பரஸ்பரமதிப்பையும் பரஸ்பர மரியாதையையும் பற்றி எழ வேண்டும்; தாழ்ந்து வந்து பிறர்க்கும் பாதுகாப்பளிக்கும் ஒரு மனப் பான்மை நல்லெண்ணத்திற்கு அறிகுறியாகப் பலரிடத்தும் இக்காலம் வெளிப்பட்டு வழங்கி வருகின்றது. இது உலோபமேயன்றி முற்கூறிய அனுதாபமாகாது; இன்னும் மனநிகழ்ச்சிகளைப் பற்றிய ஆராய்ச்சியால் விளையும் பல் சமய வாதங்களுக்குள்ளும்—நமது திருவின்மையால் சமயம் எனத்தகும் தனியுரிமை தமக்கே உண்டெனஇவை இந் நாளையிலும் பெருமை பாராட்டி வருகின்றன, இன்னும் தம் பாதங்களை வையகத்தே ஊன்றிக் கொண்டிருப்பினும், தம் அறிவால் வானகத்துக்குரிய இரக

சியங்களை உட்புகுந்தறிய முற்படும் உலகியல் விஞ்ஞான நூலோர்க்கும் முற்கூறிய அனுதாபம் அவசியமாகின்றது.

இந்த ஒற்றுமையை விளக்க இரு திறத்தவரும் சில நேரங்களில் பெரிய தோரளவிலும், அம்மட்டிலல்லாது சில வேளைகளில் தமக்கே வேதனை தரும் வகையிலும் தம் கொள்கைகளைச் சற்று விட்டுக்கொடுக்க வேண்டுபவராவர். ஆனாலும், ஒவ்வொருவரும் தாம் இயற்றும் தியாகத்தால் நலம் பெறுவதையும் உண்மையைச் சாரும் நெறியில் முன்னேறுவதையும் தாமே காண்பர். இறுதியில், காலம், இடம், இவற்றுள் அடைபட்டிருக்கும் நிலையிலுள்ள அறிவும் அவை இரண்டிற்கும் அப்பாலுள்ளதும், மனம் வாக்குகளுக்கு எட்டாததுமான அதீத அகண்ட இரண்டற்ற ஏகப் பரம் பொருளைக் கண்டு அதனோடு ஒன்றிவிடுகிறது.

2. மனிதனது உண்மை இயல்பு

மனிதன் மிக்க விடாப்பிடியுடன் தன் புலன்களின்பால் பற்று வைக்கின்ருன். ஆனுல், தான் வாழ்ந்துவரும் உலகினை அவன் எத்துணை சாரமுள்ளதாக எண்ணிய போதிலும், மாந்தர் தம் வாழ்வில் (ஆழ்ந்து சிந்திக்கும்) சமயம் நேரும் போது தம்மை அறியாமலே 'இது உண்மைதானு?' என்று கேட்கின்றனர். ஒருவன் தனது புலனுணர்வின் தகுதியை ஐயுறும் நேரமே கிட்டாது ஏதோ ஒரு புலனின்பத்தில் ஒவ்வொரு கணமும் திளைத்திருப்பவனுயினும், அவனுக்கு இறப்பென்பது வந்தே தீர்கிறது. அவனுக்கும் "இது உண்மைதானு?" என்ற கேள்வி திண்மையாக எழுகின்றது. மதம் என்பது இந்த வினுவில் தொடங்கி, இதன் விடையில் முடிவடைகின்றது. வரலாறு எழுதி வைக்கப்படாத மிகப் பழமையான காலத்திலும் புராணமும் கதையும் வெளியிடும் மர்மம் நிறைந்த அறிவொளியிலும், அதன் பின்னர் நாகரிகம் தரும் மங்கலான அந்தி வெளிச்சத்திலுங்கூட "இதற்கு முடிவு யாது? எது உண்மைப் பொருள்?" என்ற கேள்வி எழுவதைக் காண்கிருேம்.

உபநிடதங்களுள் கவிநயம் மிக்க கடோப நிடதம் இவ் விசாரணையுடன் தொடங்குகின்றது: "மனிதன் இறக்கும் போது ஒரு விவாதம் எழுகின்றது. ஒரு சாரார், 'அவன் போய்விட்டான்; இனி என்றும் மீளான்' என்று கூற, மற்ெருரு சாரார், 'அவன் பின்னும் வாழ்கிருன்,' என்று சாதிக்கின்றனர்; 'எது உண்மை' என்பதே விவாதம்." இதற்குப் பலப்பல விடைகளைக் காண்கிருேம். மானத சாத்திரம், தத்துவ நூல், சமயம் இவை அனைத்தையுங் கொண்ட அறிவுமண்டலம், இக்கேள்விக்குரிய பல விடைகளால் உண்மையாகவே நிரப்பப்பட்டுள்ளது. அதே சமயம் இக்கேள்வியை அடக்கிவிட்டு, 'அதன் பின் யாது? எது உண்மை?' என்ற கேள்வியை எழுப்பும் மனத்தின் அமைதியின்மையை அடக்குவதற்கான முயற்சிகளும் நடைபெற்றுள்ளன. ஆனுல், சாவு உள்ளமட்டும் இவ்வாறு அதனை அடக்கிவைக்க நினைக்கும் முயற்சிகளெல்லாம் வீணேயாமன்ருே? நாம் மரணத்திற்கு அப்பால் எதிர்பார்ப்

பதற்கு யாதுளது என்பதைப் பற்றியும், நமது எல்லா நம்பிக்கைகளையும் மேலான விருப்பங்களையும் இக்காலத்திற்குள்ளே குறுக்கிவைப்பதைப் பற்றியும் பேசலாம். ஐம்புல உலகிற்கு அப்பாலான எதைப் பற்றியும் நினையாதிருக்கப் போராடியும் வரலாம்; ஒருகால் புறத்தேயுள்ள நிகழ்ச்சிகள் யாவும் நம்மை ஐம்புல உலகின் குறுகிய எல்லைக்குள்ளே அமைத்து வைக்கவும் உதவலாம். உலகம் முழுவதுமே ஒன்று சேர்ந்து நம்மை இக்காலத்தின் எல்லைக்கு வெளியே பறந்து செல்ல வொட்டாது தடுக்கவும் செய்யலாம். ஆனாலும், சாவு என்பது உள்ளவரை இந்தக் கேள்வி மீண்டும் மீண்டும் கிளர்ந்தெழும். "நாம் உண்மைப் பொருள்கள் அனைத்திலும் மிக உண்மையான பொருளென எண்ணிப் பற்றுக்கொண்டுள்ள இப்பொருள்கள் எல்லாவற்றிற்கும் முடிவு மரணந்தானா?" என்பதே அக்கேள்வி. உலகம் ஒரே நொடியில் மாயமாய் மறைந்தே போய்விடுகிறது. செங்குத்தான மலையுச்சியின்மீது விளிம்பில் நின்றுகொண்டு அதற்கு அப்பால் போய், வாய் திறந்து நிற்கும் எல்லையற்ற பாதாளத்தை நோக்குங்கால், எத்துணை வலிய நெஞ்சமும் பின்னுந்தப்பட்டு, "இது உண்மைதானா?" என்னும் கேள்வியைக் கேட்கவே செய்யும். மகத்தான ஒரு மனத்தின் சக்திகள் அனைத்தையும் கொண்டு சிறுகச்சிறுக ஆயுள் முழுதும் கட்டிய ஆசைக் கோட்டைகள் (எண்ணாத எண்ணமெல்லாம்) ஒரே கணத்தில் மறைந்து விடுகின்றன. அவை உண்மையா? இக்கேள்விக்கு விடை பகர்ந்தே ஆகவேண்டும். காலம் அதன் வலுவைக் குறைப்பதில்லை; அதற்கு மாறாக மேன்மேலும் இதன் ஆற்றலைப் பெருக்கி வருகின்றது. இன்னும் மகிழ்ச்சியுடன் வாழவேண்டுமென்ற அவா உள்ளது. நமக்கு இன்பத்தை ஊட்டும் பொருட்டே நாம் பல பொருள்களையும் தேடி ஓடுகிறோம்; பொறிகளுக்குத் தோன்றும் இப்புறவுலகிலே வெறிகொண்டு ஓடும் வாழ்வை விடாது பின்பற்றி வருகிறோம். வாழ்வு வெற்றியுற அமையும் ஓர் இளைஞனை வினவுவோமாயின், அவன் 'ஆம், வாழ்வு உண்மையே!' என்று உறுதியுடன் கூறுவான்; அவன் அவ்வாறு எண்ணுவதும் உண்மையே. ஒருகால் அவனே வயது முதிர்ந்த காலத்தில், பாக்கியம் அப்போதும் தன்னை

விட்டு விலகிச் செல்வதைக் கண்டதும், 'எல்லாம் விதியே!' என்று விளம்புவான். அவன் கடைசியாகத் தனது ஆசைகளை நிறைவேற்ற இயலவில்லை என்பதனைக் காண்பான். அவன் செல்லும் இடமெல்லாம் கடத்தற்கரிய வைரமனைய ஒரு சுவர் அவன் முன்பு காணப்படுகிறது. ஒவ்வொரு புலன் நுகர்ச்சிக்குப் பின்னரும் ஒவ்வோர் எதிர் விளைவு இருந்தே தீரவேண்டும்: எல்லாம் கணப்போதில் மறைவனவே. போகம், துயரம், பெருஞ்சுகம். செல்வம், வலிமை வறுமை,—ஏன்?—வாழ்வுமே கணப்போதில் தோன்றி மறைவனவே,

மார்ந்தர்க்கு இரண்டே நிலைகள் உள்ளன. ஒன்று, சூனிய வாதிகளுடன் சேர்ந்து, 'எல்லாம் சூனியமே; நமக்கு ஒன்றுமே தெரியாது. நம்மிடம் (இறப்பு, நிகழ்வு, எதிர்வு எனும்) முக்கரலங்களிலுமுள்ள எது பற்றியும் அறியும் ஆற்றல் இருப்பதில்லை' என்று நம்புவது; (ஏனெனில் இறந்த காலத்தையும் எதிர் காலத்தையும் இல்லை என்று விட்டு விட்டு நிகழ்காலத்தை மட்டும் பற்ற விரும்புபவன் பித்தனே யாவானென்பதனை நாம் நம் நினைவில் வைத்திருத்தல் அவசியம்) இது பெற்றோரின் இருப்பை மறுத்து விட்டுக் குழந்தையின் உண்மையை மட்டும் சாதிப்பது போன்றதாகும். இது தருக்க முறையில் இதற்கே இணையாம். எப்போது இறந்த காலத்தையும் எதிர் காலத்தையும் இல்லையென மறுக்க, நிகழ்காலத்தையும் இல்லையென மறுத்தல் இன்றியமையாததாகும்? இதுவே ஒரு நிலை—சூனியவாதிகளின் நிலை. உண்மையாகவே ஒரு நிமிஷமேனும் சூனிய வாதியாய் இருப்பது ஒருவருக்கு இயலாதென்பதே நான் எனது அனுபவத்தில் கண்ட உண்மை. வாய்ப் பேச்சு மிகவும் எளிதே.

மற்றொரு நிலையை இப்போது கவனிப்போம்; அந்நிலை, விளக்கம் காண்பதும், உண்மையை நாடுவதும், எப்போதும் மாறிக்கொண்டும் கணந்தோறும் தோன்றி மறைந்து கொண்டும் உள்ள உலகின் இடையே மெய்ப் பொருளைத் தேடிக் கண்டு பிடிப்பதுமாகும். சடப் பொருளின் நுண் துகள் தொகுதியாகிய இவ்வுடலில் உண்மையான பொருள் ஏதேனும் உளதா? மனித உள்ளத்தின் வரலாறு முழு

வதிலும் இதுவே நாடிக்காண வேண்டிய பொருளாயிற்று. மிக மிகப் பழைய காலத்திலே மனிதர்களின் உள்ளத்திற் குள்ளே ஞான ஒளி மின்னல்கள் புகுந்து வந்திருப்பதைக் காண்கிறோம். அக்காலத்தும் மனிதன் தன் உடலுக்கு அப் பால் எட்ட எடுத்து வைத்து பருப் பொருள் உடல் அல்லாத ஒன்றே எனினும் பெரும்பாலும் அதைப் போன்றதும், அதனினும் பேரளவிற்கு முற்றுப் பெற்றதும், மிக மிகப் பூரணமானதும், இவ்வுடல் அழிந்த பின்பும் எஞ்சியிருப்பது மான ஒன்றைக் கண்டு பிடித்திருப்பதை நாம் நோக்கு கிறோம். இருக்குவேத கீதங்களில் இறந்த உடலைச் சுட் டெரிக்கும் செந்தழல் தேவனை வேண்டும் பாடலொன்றில் "தீக்கடவுளே, அவனை நீ உன் கைகளில் மெல்லச் சுமந்து அவனுக்குப் பூரண உடலை—ஒளி விடும் உடலை—அளித்து, தென்புலத்தாராகிய தேவர் வாழும் உலகிற்கு—துயரமும் மரணமும் அறியா உலகிற்கு—கொண்டு செல்வாயாக!" என்ற கீதத்தைக் காண்கிறோம். இதே கருத்து ஒவ்வொரு மதத்திலும் உலவி வருவதை நாம் காணலாகும்! இத்துடன் மற்றுமொரு கருத்தும் நமக்குக் கிடைக்கின்றது. சமயங் களனைத்தும் விலக்கு யாதொன்று மின்றிக் கூறும் பயன் பொதிந்த ஓர் உண்மையாவது, மனிதன் தனது பண்டைய நிலையினின்றும் இழிந்தவன் என்பதே. இது புராணமுறை யிலே உடைதரித்து வந்தாலும், தத்துவ நூல் முறையிலே தெளிவான மொழியில் வெளியிடப்பட்டிருந்தாலும் சரி, கவி நயத்தோடு கவின் மிக்க மொழிகளிலே அமைந்திருந்தாலும் சரி, உட் கருத்து அதுவேதான்.

இப்போதுள்ள நிலையில் மனிதன் பண்டைய நிலையி னின்றும் இழிந்தவனே என்ற இக் கருத்து ஒவ்வொரு சாத் திரத்திலும் ஒவ்வொரு புராணத்திலும் வெளிவருகின்றது. யூதர்களது சாத்திரத்திலே 'ஆதாமின் வீழ்ச்சி' எனும் கதை யின் மிகச் சுவையான உண்மைப் பொருள் இதுவே. இது இந்துக்களுடைய சாத்திரங்களில் மீண்டும் மீண்டும் கூறப் படுகின்றது. எவனும்தானே இறக்கவிரும்பினாலன்றி, இறவா மலும், தான் விரும்பிய நாளளவும் தன் உடலைப் போற்றி வைத்தும் வாழக் கூடிய காலமாகிய 'சத்தியயுகம்' என்று குறிப்பிடப்படும் ஒரு கனவுக் காலமே அது. தீமையோ

துயரமோ இல்லாத காலம் அது. இக்காலமோ, அத்தகைய நிறைவு நிலை கெட்டொழிந்துபோன ஒரு காலம். இத்துடன் அதே சமயம் பிரளயத்தின் கதையும் எங்கும் கூறப்படு கிறது. இக் கதையே, இக் காலம் முன்னொரு காலத்தின் சிதைவு என்பதை ஒவ்வொரு மதமும் ஒப்புக்கொள்ளுதற்கு ஒரு சான்று. இக்கேடான நிலை மேன்மேலும் இழிவடைந்து கொண்டே வந்து இறுதியாகப் பெரும் பிரளயவெள்ளம் வந்து மக்களுட் பெரும் பகுதியினரையும் அடித்துக் கொண்டு போய்விட்டது; அதன் பின் மீண்டும் முன்னேற்ற நிலை தொடங்கியது. அது மறுபடியும் மெல்ல மெல்ல மேலேறிப் போகிறது. தொடக்கக் காலத் தூய்மையினை மீண்டும் பெற, பைபிளில் உள்ள பழைய ஏற்பாட்டில் வெள்ளக்கதை கூறப்படுவதை நீங்கள் அனைவரும் அறிவீர் கள். இதே கதை தொன்மையான பாபிலோனியரிடத்தும் எகிப்தியர், சீனர், இந்துக்களிடத்தும் வழங்கி வந்துள்ளது. பண்டைக்கால மஹரிஷியான மனு என்பார், கங்கைக் கரை யில் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தபோது ஒரு சிறு மீன் அவரிடம் வந்து அபயம் (தஞ்சம்) வேண்டிற்று. அவர் அதனை எடுத்ததும் எதிரில் இருந்த ஒரு மட்கலத்தில் விட்டார். "உனக்கு வேண்டுவது யாது?" என்று கேட்டார். தான் ஒரு பெரிய மீனால் துரத்தப்படுவதாகவும் அதனால் பாதுகாப்பு வேண்டி வந்ததாகவும் அது உரைத்தது. மனு அதனைத் தம் வீட்டுக்கு எடுத்துச் செல்ல, மறு நாட் காலை அது பாண்டத்தின் அளவு பெரிதாகியிருந்ததைக் கண்டார். அது, "நான் இனி இப் பாண்டத்தில் வாழ்தல் இயலாது," என்று கூறிற்று. மனு அதனை ஒரு குளத்தில் விட்டார். அது, "இனி இக் குளத்தில் இருக்க எனக்கு இயலாது" என்று கூறிற்று. ஆகவே, மனு அதனை ஓர் ஆற்றிற் கொண்டுபோய் விடவே, காலையில் அம் மீன் அந்நதியை நிரப்பிவிட்டது. பிறகு மனு அதனை ஆழ் கடலில் விட்டு விட்டார். அப்போது அது 'நான்தான் இப்பிரபஞ்சத்தைப் படைத்த பிரமன். நான் இவ்வுருக் கொண்டு வந்தது, நான் இவ்வுலகத்தினை வெள்ளத்தில் அமிழ்த்தப்போவதை உனக் குக் கூறி எச்சரிக்கை செய்யவேதான். நீ ஒரு பேழையை அமைத்து, அதில் ஒவ்வொரு விலங்கினத்தின் ஆணையும்

பெண்ணையும் விட்டு வைப்பாயாக. உனது குடும்பமும் அதில் புகுந்துகொள்ளட்டும். நீருக்கு வெளியே எனது கொம்பு நீட்டிக்கொண்டிருக்கும். பேழையை அத்துடன் கட்டிவிடு; வெள்ளம் வடிந்த பின்னர் வெளியே வந்து உலகினை உயிர்களால் நிறைத்துவிடு,'' என்று கூறிற்று. இப்படியே பிரபஞ்சம் வெள்ளத்தில் ஆழ்ந்தது. மனுவும் தமது குடும்பத்தினையும் ஒவ்வொரு விலங்கின் இரட்டையையும், ஒவ்வொரு செடியின் விதைகளையும் காப்பாற்றினர். வெள்ளம் வடிந்ததும் அவர் வந்து உயிர்களால் உலகை நிரப்பினர். நாமும் மனுவின் வழி வந்தவராயிருப்பதனுல் நமக்கு 'மானவர்' என்னும் பெயர் வழங்கலாயிற்று.

உள்ளத்தில் ஒளிரும் உண்மையை எடுத்துக்கூறும் முயற்சியே மானிட மொழி என்பது. நமக்கு விளங்காத சொற்களைத் தனது மழலையால் வழங்கும் ஒரு குழந்தை மேலான தத்துவ ஞானத்தை வெளியிடவே முயல்கின்றது. ஆனுல், குழந்தையினிடம் அதனை வெளியிடுதற்கு வேண்டிய உறுப்புகளோ சாதனங்களோ இல்லை. மிகச் சிறந்த தத்துவ ஞானிகளின் வாக்குக்கும் குழந்தையின் மழலைச் சொல்லுக்குமுள்ள வேறுபாடு அளவிலேயன்றி வகையிலேயன்று. இவ்வேறுபாடு இக்காலத்தே வழங்கும் மிகவும் சரியான, ஒழுங்கான, கணித நூல் மொழிக்கும் பழங்காலத்தவரது மங்கலான, அனுபூதிமயமான பௌராணிக மொழிக்கும் உள்ள வேறுபாடு அளவிலேதான் உள்ளது. எல்லாவற்றுள்ளும் மாட்சிமைப்பட்ட ஒரு கருத்து மறைந்து நின்று தன்னை வெளிப்படுத்திக்கொள்ளப் பெரிதும் போராடுகிறது; பன்முறையும் இப் புராணக் கதைகளுக்கு அடியிலே உண்மைப் பொருள் பண்படாத கட்டி வடிவமாயுள்ளது. ஆனுல், இக்காலத்தவரின் நேர்த்தியான, நன்கு இயைக்கப்பட்ட சொற்றொடர்களுக்குஅடியிலேபெரும் பாலும் முழுக் குப்பைதான் உள்ளது என்று கூற வருந்துகிறேன்! யாதானும் ஒன்று, கட்டுக் கதையின் அமைப்பில் இருப்பதனுலோ, இக்காலத்தவர்களான ஸ்ரீமான் இன்னரோ ஸ்ரீமதி இன்னரோ வெளியிடும் கருத்துக்கு இணங்காததனுலோ, நாம் அதனைத் தூர எறிந்துவிட வேண்டா. இன்ன இன்ன தீர்க்க தரிசியால் உபதேசிக்கப் பட்ட புராணக்

கதையை மக்கள் நம்ப வேண்டுமென்று பல சமயங்களும் வற்புறுத்துவதனுல் சமயங்கள் நகையம்புக்கே உரியன. இக்காலத்தவர் கூற்று இன்னும் அதிக அளவு நகை யாடற்கு உரியதாக வேண்டும். இக்காலத்தில் ஒருவன் மோசஸ் என்பவரையோ புத்தரையோ கிறித்துவையோ மேற்கோளாக எடுத்துக் காட்டிக் கூறினுல், அவன் ஏளனத் துக்கு ஆளாகிருன். ஆனுல், அவன் ஒரு ஹக்ஸ்லியோ, ஒரு டிண்டலோ, ஒரு டார்வினே, அவரது பெயரைக் கூறட்டும். அவரது உரை யாதாயினும் அது அவ்வண்ணமே ஐயமின்றி நம்பப்படுகின்றது. "ஹக்ஸ்லி இதனைக் கூறியுள்ளார்," என்று சொல்வதே பலர்க்கும் போதியதாகும். நாம் மூட நம் பிக்கைகளினின்றும் உண்மையாகவே விடுபட்டவர்களாம்! அது மதம் பற்றிய மூடக் கொள்கை. அந்த மூடக்கொள்கை யிலே தான், அவை வாயிலாகத்தான் உயிரூட்டும் ஞானக் கருத்துகள் வந்துள்ளன. இக்கால மூட நம்பிக்கையின் மூலம் காமமும் பேராசையுமே பிறந்துள்ளன. அந்த மூடத் தனத்தால் நிகழ்ந்தது கடவுள் வழிபாடு; இந்த மூடத்தனத் தால் விளைவது அழுக்குற்ற செல்வவழிபாடோ. புகழையோ அதிகாரத்தையோ வழிபடுதலோதான். இதுவே இவற்றுக் குள்ள ஏற்றத் தாழ்வு.

புராணக்கதைக்குத் திரும்புவோம். இக்கதைகள் அனைத் திற்கும் அடியிலே ஒரு கருத்து தலை தூக்கி நிற்கின்றது; அது யாதெனில், 'மனிதன் பண்டைய நிலையினின்றும் கேடடைந்தவன்' என்பதே. இக் காலத்தை நோக்கும் போது இந்தக் கருத்து முற்றிலும் மறுக்கப்படுவதாகவே தோன்று கிறது. பரிணமவாதியரோ, இக்கூற்றை முற்றும் மறுப் பவராகவே தோன்றுகின்றனர். அவர்களது கொள்கையின் படி, மனிதன் நத்தை இனத்தைச் சார்ந்த ஓர் உயிரின் விரிவே யாதலின், புராணம் கூறுவது மெய்யாக மாட்டாது. ஆனுல், இந்தியப் புராணம் ஒன்று இவ்விரண்டு நிலைகளை யும் சமரசப் படுத்த வல்லதாகின்றது. இந்து புராணப்படி, வட்ட நெறிக் கொள்கையொன்றுளது. அதன் படி முன் னேற்றமுழுதும் அலை வடிவங்களாகத் தான் நிகழ்கின்றது. ஒவ்வோர் அலையும் உயர்ந்த பின்னர் வீழ்ச்சியுறுகின்றது; மறுகணம் கிளம்பலும், அதன் பின் தாழ்தலும், அதன் பின்

மீண்டும் ஓர் உயர்தலும் ஆக இயக்கமே (உயர்வும் தாழ்வும் மாறிமாறி வரும்) ஒரு வட்டநெறி முறைப்படி நிகழ்வது. இக்கால ஆராய்ச்சியின் முடிவுகளைக் கொண்டாலும், மனிதன் முற்றிலும் ஒரு வகை விரிவின் விளைவாய் இருத்தல் இயலாது என்பது உறுதி. ஒவ்வொரு விரிவும் அதற்கு முன் ஒரு குவிதல் இருந்திருக்க வேண்டும் என்பதைச் சுட்டுகிறது. ஓர் இயந்திரத்தில் நீங்கள் முன்னரே அமைத்துள்ள சத்தியின் அளவேதான் அதனிடத்தினின்றும் பெறவியலும் என்று இக்கால விஞ்ஞானி உங்களுக்குக் கூறுவான். சூனியத்திலிருந்து ஒன்றும் விளைதலியலாது. மனிதன் நத்தையினின்றும் விரிவு முறையில் வந்துள்ளான் எனின், பூரண மனிதன்—புத்தர் போன்ற மனிதன், கிறித்துப் போன்ற மனிதன் நத்தையினிடம் கூம்பின வடிவில் உள்ளடங்கி இருந்தான் எனல் வேண்டும். அது அன்றேல் இத்தகைய மாபெரும் புருடர்கள் எவ்வாறு தோன்றினார்கள்! சூனியத்தினின்றும் யாதொன்றும் உண்டாக இயலாதன்றே! ஆகவே, நாம் சாத்திரங்களை இக்கால அறிவொளியோடு பொருத்திப் பார்க்கும் நிலையிலுள்ளோம். மெல்ல மெல்லப் பலப்பல படிகளைக் கடந்து பூரண மனிதனைப் பரிண மித்திருக்கும் ஆதிசத்தி சூனியத்தினிறும் பிறந்திருத்தல் ஒவ்வாது அது எங்கோ இருந்தது. அந்தச் சத்தியின் பிறப்பிடத்தை ஆராய்ந்து கொண்டு செல்லும் போது நத்தை வரையிலோ உயிரணு வரையிலோ தான் செல்ல இயலும் எனின், எவ்வாறோ அந்த உயிரணுவினிடத்திலே அந்தச் சத்தி ஒடுங்கியிருத்தல் வேண்டும்.

உடலெனக் கூறும் சடப்பொருள்களின் தொகுதியே ஆன்மா என்னும் நினைவு என்றும் இன்னும் பல விதமாகவும் கூறப்படும் சத்தியின் வெளித் தோற்றத்திற்குக் காரணமா அன்றேல் உடலையே தோற்றுவிப்பது நினைவு தானா என்பது பற்றி இப்போது ஒரு பெரிய வாதம் நடைபெற்று வருகின்றது. உலகத்து நிலவும் சமயங்களின் கருத்து யாதெனில், 'நினைவு என்னும் சத்திதான் உடலைத் தோற்றுவிக்கிறது; உடலினால் எண்ணம் உண்டாக்கப்படுவதில்லை;' என்பதே. இக்காலத்து ஆராய்ச்சியாளருள்ளும் பலரது கொள்கை நாம் நினைவு என்று கூறுவது 'உட

லென்னும் இயந்திரப் பகுதிகளுள் ஒன்றுக் கொன்று இசைந்து நிற்றலின் விளைவாக எழுவது' என்பதே. இரண்டாவது பட்சத்தை இப்போது ஆராய்வோம். ஆன்மாவோ, நினைவின் பிண்டமோ, வேறு எவ்வகையாகக் கூறினும் சரி, அது இந்த இயந்திரத்தின் விளைவே. சடப் பொருளின் நிலை மாற்ற இயல் மாற்றப் புணர்ப்புகளான உடலும் மூளையும் ஆகியவற்றின் விளைவே என்பதாயின், வினாவிற் தத்தக்க விடையில்லாது போகிறது. உடலை ஆக்குவது யாது? நுண்துகள்களை உடலின் வடிவாக இணைக்கும் சத்தி யாது? சூழ்ந்துள்ள சடப் பொருள் தொகுதியிலிருந்து வேண்டுவதைப் பெற்று என் உடலை ஒரு வகையிலும், மற்றொருவரின் உடலை மற்றொரு வகையிலும், இவ்வாறே பிறவற்றையும் அமைக்கும் சத்தி எது? இம் மாதிரியான எல்லையற்ற வேறுபாடுகளை விளைப்பது யாது? ஆன்மா எனக் கூறப்படும் சத்தி உடலின் நுண்துகள்களின் சேர்க்கையால் விளைந்ததெனல் முன்பின் முறைமாறக் கூறுவதாகும். இச்சேர்க்கைகள் எவ்வாறு விளைந்தன? இவற்றை உண்டாக்கும் சத்தி எங்கிருந்தது? இந்தச் சேர்க்கைகளுக்கு வேறொரு சத்தி காரணம் என்று கூறுவீராயின், ஆன்மா அந்தப் பொருளினின்றும் உண்டாயதென்று கூறுவீராயின், சடப் பொருளின் தொகுதியொன்றை இணைத்து வைத்த அந்த ஆன்மா இச்சேர்க்கைகளின் விளைவே என்றெல்லாம் கூறின், அது பொருத்தமான விடையாகாது. முழு உண்மையையும் விளக்காவிடினும் பெரும்பகுதியையாயினும் காரணங் கூறி விளக்குவதும் அப்போதும் அக்காலத்து வழங்கி வரும் மற்றைய கொள்கைகளை மறுக்காததும் எதுவோ, அதுவே கொள்ளத்தக்கதாம். சடப் பொருளைக் கொண்டு உடலைப் படைக்கும் சத்தியும் அவ்வுடல் மூலம் விளங்கும் சத்தியும் ஒன்றே யெனல் தருக்க முறைக்கு மிக இயைந்த தாகும். உடலினால் தோற்றுவிக்கப்படும் சிந்தனை சத்திகள் நுண்துகள்களின் ஒழுங்கு பாட்டினால் விளையும் பயன் எனக் கூறி, அவற்றிற்குத் தனித்த இருப்பு இல்லை என்று சாற்றுவதில் பொருள் யாதும் இன்று. தவிர, சடப் பொருளினின்றும்சத்தி எவ்வாறு பிறத்தல் கூடும்? வேறு வகையில் கூற வேண்டு

மாயின், நாம் சடப் பொருளென்று கூறுவதற்கு இருப்பே
இல்லை யென்று மெய்ப்பிக்கவும் கூடும். சடப்பொருள் ஒரு
சத்தியின் நிலையேயாம். திண்மையோ, கடினத்தன்மையோ,
சடப் பொருளின் வேறு எந் நிலையோ, இயக்கத்தின் பயனே
யென மெய்ப்பிக்க இயலும். திரவப் பொருள்களுக்குக் (நீர்ப்
பண்டம்) கொடுக்கப்படும் சுழற்சியியக்கத்தை அதிகப்
படுத்த அவற்றுக்குத் திண்பொருள்களின் வன்மையைத்தரு
கின்றது. சுழற்சியியக்கத்துடன் கூடிய ஒரு காற்றுப்
பிழம்பு—பெரும் புயலில் உள்ளது போன்று—ஒரு
திண் பொருள் போன்ற தாகித் தனது தாக்கு
தலால் திண் பொருள்களையும் உடைத்தோ (வாள்போலப்)
பிளந்தோ விடுகிறது. சிலந்தி வலையின் ஓர் இழை வரை
யறையில்லா விரைவுடன் செலுத்தப்படக்கூடுமானுல், ஓர்
இருப்புச் சங்கிலியின் உறுதியைப் பெற்று, ஒரு திண்ணிய
மரத்தையும் அறுத்துவிடும். இப்படிப் பார்க்கும் போது
நாம் சடமெனக்கூறும் பொருளே இல்லை என்பதை எளிதில்
நிலை நாட்டி விடலாம். ஆனுல், மற்றொரு வகையிலோ,
அதனை மெய்ப்பிக்க இயலாது.

உடல் வழியாகத் தன்னை வெளிப்படுத்திக்கொள்ளும்
சத்தி யாது? அது யாதாயிருப்பினும், சிறு கூறுகளைக்
கையில் எடுத்து அவற்றினின்றும் ஒரு வடிவம் ஆக்குவது
போல, மனித உடலைப் படைக்கின்றது என்பது அனைவர்க்
கும் தெளிவு. உங்களுக்கும் எனக்கும் உடல்களை அமைக்க
வேறு ஒருவரும் வருவதில்லை. எனக்காக வேறு எவரேனும்
உணவருந்துதலை யான் கண்டதில்லை. நானேதான் அதனை
உட்கொண்டு உடலோடு ஒன்றச் செய்யவும், குருதி எலும்பு
முதலானவற்றை அந்த உணவினின்றும் உற்பத்திசெய்து
கொள்ளவும் வேண்டும். இந்த மர்மமான சத்தி எது? எதிர்
காலம் பற்றியோ இறந்த காலம் பற்றியோ உள்ள கருத்து
கள் பலருக்கும் பயங்கரமானவையாகத் தோன்றுகின்றன.
இன்னும் பலருக்கு அவை வெறுங் கற்பனையாகவே படு
கின்றன. நாம் இப்போது பேசி வரும் பொருளை எடுத்துக்
கொள்வோம். நம் வாயிலாக வினையாற்றி வரும் இந்தச்
சத்தி யாது? பண்டைக் காலத்தில் பழைய மறை நூல்களி
லெல்லாம் இந்தச் சத்தி, ஆற்றலின் வெளித்தோற்றம், இவ்

வுடலின் வடிவம் பெற்ற ஒளி மயமான ஒரு பொருளின தாகவும், அவ்வுடல் மறைந்த பின்னரும் அவ்வொளி தங்கி நிற்பதெனவும் கூறப்பட்டுள்ளது. ஆனால், பின்னர் உயரிய கருத்தொன்று தோன்றலாயிற்று. அது இந்த ஒளியுடல் அந்தச் சத்தியினைக் குறிக்கவில்லை என்பதே. வடிவமைந்த எல்லாப் பொருள்களும் பல கூறுகளின் சேர்க்கையின் விளைவாகவே இருத்தல் வேண்டும்; அதனையசைக்க அதன் பின்னர் இயக்கும் சத்தியொன்று இருத்தல் வேண்டும். இவ் வுடலினை இயக்க உடலல்லாத வேறு ஏதோ ஒன்று வேண்டி யிருக்குமாயின், ஒளியுடலும் அதனை இயக்கத் தன்னினும் வேறான ஒன்றை அளாவி நிற்கும். ஆகையால், அந்த ஏதோ ஒன்று வடமொழியில் 'ஆன்மா' என்று கூறப்படுவது. இந்த ஆன்மாவே ஒளியுடல் வாயிலாகப் புறவுலகத்தூல உடலில் வினையாற்றி வருகிறது. ஒளியுடல் மனத்தின் கொள்கலமாகவும், ஆன்மா அதற்கப்பாற்பட்ட ஒன்றாகவும் கருதப்படுகின்றன. உங்களுள் ஒவ்வொருவர்க்கும் ஒவ் வோர் ஆன்மா உண்டு; எனக்கு வேறோர் ஆன்மா உண்டு; நம்முள் ஒவ்வொருவருக்கும் தனித்தனி ஆன்மா உண்டு; தனித்த சூக்கும உடலும் உண்டு. அதன் மூலமாகவே நாம் தூலமான புறவுடலைத் தொழிற் படச் செய்கிறோம். பின்னர் அந்த ஆன்மாவைப் பற்றியும், அதன் இயல்பைப் பற்றியும் கேள்விகள் எழுந்தன. 'உடலோ மனமோ அல்லாத இந்த ஆன்மா இந்த மனித ஆன்மா யாது?' பெரிய பெரிய விவா தங்கள் நடைபெற்றன. ஆழ்ந்த கருத்துகள் நிறைந்த சிந்தனைகள் எழுந்தன. பல தரப்பட்ட தத்துவ ஆராய்ச்சி கள் தொடங்கப்பட்டன. இந்த ஆன்மாவைப் பற்றிப் பெறப் பட்டுள்ள சில முடிவுகளை உங்கள் முன் வழங்க முற்படு கிறேன் :

பல சித்தாந்தங்களுக்கும் இடையேயுள்ள கருத் தொற்றுமையாவது, இந்த ஆன்மா எதுவாயிருப்பினும் சரி, இதற்கு உருவோ வடிவோ இல்லை என்பதிலும், உருவோ வடிவமோ அற்றது எங்கும் நிறைந்ததாக வேண்டும் என் பதிலும், காலம் மனத்தொடு தொடங்குகிறது. இடமும் மனத்திலே உள்ளது. நிமித்தமும் காலமின்றி நிற்க முடி யாது. தொடர்ச்சி என்ற கருத்தின்றிக் காரணகாரிய

முறைமை என்ற கருத்தே இருக்க இயலாது. ஆகவே, காலம், தேசம் (இடம்), நிமித்தம் இம் மூன்றும் மனத்தி லேயே உள்ளன; இந்த ஆன்மாவோ, மனத்துக்கப்பாற் பட்டதும் வடிவற்றதும் ஆதலால், இது கால தேச நிமித்தங் களைக் கடந்ததாகவே இருத்தல் வேண்டும். அவ்வாறிருப் பின் இது அகண்டப் பொருளாக வேண்டும். அதன் பின்னர்த்தான் நமது தத்துவத்தின் உயர்வற உயர்ந்த கருத்து உருவாகின்றது. அகண்டப் பொருள் இரண்டா யிருத்தல் இயலாது. ஆன்மா அகண்டமாயின், அது ஒன் ருகவே தான் இருத்தல் வேண்டும். பல ஆன்மாக்களைப் பற்றிய பேச்செல்லாம்—உனக்கு ஓர் ஆன்மா, எனக்கு ஓர் ஆன்மா, அவ்வாறே பிறர்க்கும் என்பனவெல்லாம்—உண்மை யாக மாட்டா. ஆதலால், உண்மை மனிதன், ஏகமே; அகண்டமே; எங்கும் பரந்துள்ள தத்துவமே. அந்த உண்மை மனிதன் வரையறையற்றவனே. இவ்வாறு பொருள் கொள்ளும்போது புராணக் கதைகள் யாவும் உண்மையானவைகளே. நாம் பார்க்கும் மனிதன் எவ்வளவு பெரியவனுய் இருந்தாலும், அவன் மனத்திற்கு அப்பாற்பட்ட உண்மை மனிதனது மங்கலான நிழலே. உண்மை மனிதனுகிய ஆன்மா, காரணகாரியத் தொடர்புக்கப்பாற் பட்டிருப்பதால், தேச காலங்களுக்குக் கட்டுப்படாதிருப்ப தால், விடுபட்டதாகவே இருத்தல் வேண்டும். அவன் ஒரு போதுமே கட்டுப்பட்டிருக்கவுமில்லை, கட்டுப்படக்கூடிய வனுமல்லன். தோற்றமான மனிதன்—அதாவது சாயை—கால தேச நிமித்தங்களாகிய வரையறைகளுக்கு உட் பட்டவன். ஆதலால், கட்டுற்றவனே. இதை நமது தத்துவ அறிஞர் சிலரின் கூற்ருகக் கூறும்போது அவன் கட்டுப் பட்டவன்போலத் தோன்றுகிருன்; ஆனுல், உண்மையில் கட்டுப்பட்டவனல்லன். இதுவே நமது ஆன்மாவிலுள்ள உண்மை—இந்த 'ஸர்வ வியாபகத்துவம்' (எங்கும் பரந்த தன்மை) இந்த அகண்டத் தன்மை. ஒவ்வோர் ஆன்மாவும் அகண்டமானதே; ஆகவே, பிறப்பு, இறப்பு என்பவற்றுக்கே இடமில்லை. சிறுவர் சிறுமியர் ஒரு சமயம் பரிசோதிக்கப்பட்டு வந்தனர். பரீட்சகர் சற்றுக் கடினமான கேள்விகளையே கேட்டு வந்தார். அவற்றுள் ஒன்று: "பூமி ஏன் விழவில்லை"

என்பது. அவருக்கு நிலக்கவர்ச்சி பற்றிச் சில விடைகள் பெற அவா. சிறுவருட் பலரால் விடை கூற இயலவில்லை. ஒரு சிலர் நிலக் கவர்ச்சியென்றே வேறு ஏதோ பதிலுரைத் தனர். புத்தி நுட்பமுள்ள ஒரு சிறுமி 'அது எங்கே விழும்?' என்ற கேள்வியால் விடையிறுத்தாள். கேட்ட கேள்வி பொருளற்றதே. பூமி எங்கே விழக்கூடும்? பூமிக்கு விழு வதோ எழுவதோ இல்லை. அகண்டப் பெரு வெளியில் 'மேல்' 'கீழ்' என்பதே இல்லையல்லவா? அது இந்த வரையறை யுள்ள இடத்தேதான் கூடும். அகண்டப் பொருளுக்குப் போவதும் வருவதும் எங்கே? எங்கிருந்து அது வரக்கூடும்? எங்குச் செல்லக்கூடும்? இப்படி மக்கள் பழமையைப் பற்றியோ வருங்காலத்தைப் பற்றியோ நினைப்பதை விட்டு விடின் உடல் வருவதும் போவதுமாகி வரையறையுற்றிருத் தலின் அவர்கள் உடலைப் பற்றிய கருத்தைத் துறக்கும் போது, அவர்கள் ஒரு மேலான குறிக்கோளை எய்தியவர் களாவார்கள். உடல் உண்மை மனிதனன்று; ஏனெனில், மனமும் வளர்ந்து தேய்வுறுவது; அனைத்திற்கும் அப்பாற் பட்ட ஆன்மாவே யாண்டும் வாழ வல்லது. உடலும் மனமும் இடையறுது மாறிக் கொண்டே வருகின்றன. உண்மையில் அவை மாறிக் கொண்டேயிருக்கும் தோற்றங்களின் வரிசை களுக்குரிய பெயர்களே; எப்போதும் பெருகி ஓடிக்கொண்டே யிருக்கும் யாற்று நீர், பிளவின்றித் தொடர்ந்த ஓர் ஆற்றின் தோற்றத்தை அளப்பதுபோல்வது இது. இந்த உடலிலுள்ள ஒவ்வொரு சிறு கூறும் இடையீடின்றி மாறிக்கொண்டே யிருக்கிறது. பல நிமிடங்கள் வரை சேர்ந்தாற்போல ஒரே உடலை ஒருவனும் பெற்றிருப்பதில்லை; அப்படி யிருந்தும், நாம் அதனை ஒரே உடல் எனக் கருதுகிறோம். அது போன்றதே மனமும்; ஒரு கணம் அது இன்பமாகவும் மறு கணம் துன்பமாகவும், ஒரு கணம் வல்லமையுள்ளதாகவும் மறு கணம் வலிமை குன்றியதாகவும் உள்ளது; அது எப் போதும் மாறிக்கொண்டே யுள்ள நீர்ச்சுழி போன்றதே. அது அகண்டமான ஆன்மாவாக இருத்தல் இயலாது. வரம்புக்குட் பட்டதிலே தான் மாறுதல் இருத்தல் கூடும். அகண்டப் பொருள் எவ்விதத்திலாயினும் மாறுகிறதென்று கூறுவது பொருந்தாது; உண்மையாகாது. நீங்களும் நானும் வரை

யறைக்குட்பட்ட உடல்களாக நகர்ந்து செல்லலாம். இந்தப் பிரபஞ்சத்திலுள்ள ஒவ்வொரு கூறும் இடைவிடாத பெருக்கிலே யுள்ளது; ஆனால், முழு உலகினையும் ஒரு முழுப் பகுதியாகக் கொள்வோமேயானால், அது அசைய இயலாது, மாற இயலாது. அசைவு எப்போதும் சார்பு பற்றிய கருத்தாகும். அசையாத வேறொரு பொருளை நோக்கும் போதே என் அசைவு தெரிய வருகிறது. இப்பிரபஞ்சத்துள்ள எந்தக் கூறும், வேறெந்தக் கூறு சம்பந்தப்பட்ட மட்டிலும் மாறக் கூடும்; ஆனால், பிரபஞ்சம் முழுதினையும் ஒரே பொருளாகக் கொள்ளும்போது அது எதனை வைத்து அசைவதெனக் கூற இயலும்! அதனைத் தவிர்த்து வேறோர் பொருள் இல்லையே! ஆகவே, இந்த அகண்ட முழுப் பொருள் மாறக்கூடியதன்று. அசையக் கூடியதன்று; அதீதமானது. இதுவே உண்மை மனிதன். ஆகையால் நமது உண்மை இம் முழுமையைப் பற்றியதாகவே உள்ளது ; வரம்பிற்குட்பட்டதிலன்று. இவை யாவும் எத்துணை ஆறுதல் அளிக்கினும், பழைய மயக்கங்களே—எப்போதும் மாறிக் கொண்டுள்ள சிறு வரம்பிற் குட்பட்ட சிற்றுயிர்களென்றெண்ணுவது மயக்கமே. மக்களிடம், 'நீங்கள் பரம் பொருளே; எங்குமுள்ள பொருளே,' என்று கூறும்போது, அவர்கள் அச்சமடைகின்றார்கள். ஒவ்வொன்றின் மூலமாகவும் நீங்கள் வினையாற்றி வருகின்றீர்கள்; ஒவ்வொரு அடியின் மூலமாகவும் நீங்கள் நடக்கிறீர்கள்; உதடு அசையும் ஒவ்வொரு போதும் நீங்கள் பேசுகிறீர்கள்; ஒவ்வோர் இதயத்தின் மூலமும் நீங்கள் உணருகிறீர்கள்.

இவ்வுண்மையை மக்களிடம் கூறும்போது அவர்கள் அச்ச மெய்துகின்றார்கள். அவர்கள் தங்களது தனி மனிதத் தன்மையை நிலையாக வைத்திருக்கப் போவதில்லையா என்று மீண்டும் உங்களைக் கேட்பார்கள். தனி மனிதத் தன்மை யென்பது யாது? நான் அதனைக் காண விரும்புகிறேன். குழந்தைக்கு மீசை இல்லை; அவன் பெரியவனாய் வளர்ந்த பின்னர் ஒரு கால் அவன் மீசையும்—தாடியுங்கூட—பெறலாம். அவனது தனி மனிதத் தன்மை அவனது உடலிலிருந்தால் அது கெட்டே போய் விடும் அன்றோ? நான் ஒரு கண்ணை இழந்தாலும் ஒரு கையினை இழந்தாலும், எனது

தனி மனிதத் தன்மை உடலிலிருந்தால் அது கெட்டே போயிருக்கும். ஒரு குடிகாரன் தன் குடியை நிறுத்த இயலாது. ஏனெனில் அவன் தன் தனி மனிதத் தன்மையை இழந்து விடுவான். ஒரு திருடன் நல்லவனுக இயலாது. ஏனெனில், அவன் அதனுல் தனது தனி மனிதத் தன்மையை இழந்து விடுவான். இந்த அச்சத்தால் எவனும் தன் பழக்க வழக்கங்களை மாற்றுதிருத்தல் வேண்டும். தனி மனிதத் தன்மை யென்பது அகண்டப் பொருளிடமல்லாது வேருெருவரிடத்திலும் இல்லை. மாருமலிருக்கும் நிலை அந்த ஒன்றிலேதான் உண்டு. மற்ற எப்பொருளுமே இடைவிடாது ஓடிக்கொண்டே உள்ளது. தனி மனிதத் தன்மை ஞாபக சத்தியிலும் இருக்க இயலாது. தலையின் மீது விழுந்த ஒரு பலத்த அடியினுல் நான் எனது கழிந்த காலத்தின் நினைவை முற்றும் இழந்து விட்டேனென்று வைத்துக் கொள்வோம். அப்போது எனது தனி மனிதத் தன்மையை முழுதும் இழந்து விடுகிறேன். நான் ஒழிந்தே போய் விட்டேன். எனது குழவிப் பருவத்தின் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளின் நினைவு (அற்றே) போய் விட்டது; நினைவும் இருப்பும், ஒன்ருகுமானுல், நான் மறந்து விட்டவையெல்லாம் போய் விட்டன. நான் நினைவில் வைத்துக் கொள்ளாத என் வாழ் நாளின் பகுதியில் நான் வாழவில்லை. இவ்வாறெல்லாம் எண்ணுவது தனி மனிதத் தன்மையைப் பற்றிய மிகக் குறுகிய கருத்தே.

நாம் இன்னும் தனி மனிதத் தன்மை படைத்தவர்கள் ஆகவில்லை. நாம் அதனை அடையப் போராடிக் கொண்டிருக்கிறோம். அதுவே அகண்டப் பொருள்; அதுவே மனிதனின் உண்மையான இயல்பு. எவனது வாழ்க்கை முழுமையான, அகிலாண்ட உலகில் உள்ளதோ, அவனே வாழ்பவனுகின்ருன். எவ்வளவுக்கெவ்வளவு நாம் நமது வாழ்க்கையினை வரையறைகளுக்குட் பட்ட பொருள்களின் மீது குவியச் செய்கின்ருேமோ, அவ்வளவுக்கவ்வளவு விரைவில் நாம் சாவை நோக்கிச் செல்கிருேம். நமது வாழ்க்கை முழுப் பிரபஞ்சத்திலுள்ளபோதே, பிறரிடத்து உள்ளபோதே அக்கண நேரங்களிலேதான் நாம் வாழ்கிருேம். குறுகிய தன்னல வாழ்க்கை வாழ்வது மரணத்துக்கு நிகரானதே—

மரணமே. ஆதலாலேதான் மரணபயம் நேர்கின்றது. பிரமாண்டத்தில் ஓர் உயிர் வாழ்கிற வகையில் தானும் வாழ்கின்றுனென்பதை மனிதன் அனுபவ பூர்வமாக உணரும் போதே மரண பயம் வெல்லப்பட்டதாகும். "நான் யாவற்றிலும் உள்ளேன்; எவரிலும் உள்ளேன்; எல்லோருடைய வாழ்விலும் உள்ளேன். நானே பிரபஞ்சம்," என்று சொல்ல இயலும்போதுதான் அச்சமில்லா நிலை ஏற்படும். எப்போதும் மாறிக் கொண்டேயிருக்கும் பொருள்களில் அமரத்துவம் உளதென்று கூறுவது பிதற்றலேயாகும். முதிய வடமொழி ஞானியார் ஒருவர் பின் வருமாறு கூறி வருகிறுர்: "ஆன்மாவே தனி மனிதன்; ஏனெனில், அது அகண்டமானது; அகண்டப் பொருளொன்று கூறு கூறுகப் பிரிக்க இயலாதது. அளவிகந்த பரம்பொருளை எவ்வாறு துண்டு படுத்துதல் இயலும்? அது எப்போதும் பிரிக்க வொண்ணுத, பிரி(க்கப்) படாத தனிப்பொருளே." இதுதான் தனி மனிதன்; உண்மை மனிதன். தோற்றமான மனிதன் அப்பாலுள்ள இந்தத் தனி மனிதத் தன்மையை வெளிக்காட்டிக் கொள்ளச் செய்யும் ஒரு வெறும் போராட்டமே: ஆன்மாவுக்கு வளர்ச்சி யென்பது இல்லையன்றே? இவ்வாறு நிகழும் மாறுதல்கள்—கெட்டவர் நல்லவராகி வருவதும், விலங்கினம் மனிதனுக மாறிக்கொண்டு வருவதும்—நாம் எப்படிப் பார்த்தாலும் ஆன்மாவிலில்லை. அவை இயற்கையின் விரிவும் ஆன்மா வினை வெளிப்படுத்தும் முயற்சியுமாம். என்னை மறைக்கும் திரை யொன்றுளது என்று வைத்துக் கொள்வோம். அதில் ஒரு சிறு தொளை இருக்கிற தென்றும் வைத்துக் கொள் வோம். அத்தொளை வாயிலாக நான் எனக்கு முன்னிருக்கும் சிலருடைய முகத்தினையே நோக்க இயலும். அந்தத் தொளை பெரிதாகிக் கொண்டே போகிறதென்றும் கருதுவோம். அது அவ்வாறு ஆகும்போது எனக்கு முன்னுள்ள காட்சி மேலும் மேலும் பெரியதோரளவில் புலப்பட்டு வருகிறது. முழுத்திரையும் மறைந்த பின் நான் உங்கள் எல்லோருக்கும் முன்னர் எதிர் நிற்கிறேன். இதில் நீங்கள் ஒரு மாறுதலும் பெறவில்லை; துளையே விரிந்து பெரிதாகி வந்தது; அப் போது நீங்கள் படிப்படியாகக் காட்சியளித்துக்கொண்டே வந்தீர்கள். இப்படியேதான் ஆன்மாவின் விஷயமாயுமுள்ள

நிறைவு நிலை இனி அடையப்போவதன்று, அது உங்களிடம் ஏற்கெனவே உள்ளது. நீங்கள் பூரணர்கள்; சுதந்தரம் படைத்தவர்கள். இந்த மதம், கடவுள், இனி வரப் போவது எது எனக்கண்டுபிடித்தல் ஆகிய இக் கருத்துகளெல்லாம் என்ன? மனிதன் ஏன் கடவுளைத் தேடுகிறுன்? ஏன் ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு சமூகத்திலும் நிறைவான இலட்சியப் பொருளை—மனிதனிலோ, கடவுளிலோ, வேறு எங்கேனுமோ அடைய விழைகிறுன்? அக்கருத்து உங்கள் உள்ளேயேதான் உள்ளது. அது உங்கள் இதயத்தின் துடிப்பே. அதனை நீங்கள் அறிந்து கொள்ளாது, அது புறத்தே இருந்து வருவதொன்றென்று தவருக எண்ணி விட்டீர்கள். உங்கள் நெஞ்சிலுள்ள கடவுளே அவரைத் தேடி அடையுமாறு உங்களைத் தூண்டிப் பிடித்துத் தள்ளுகிறுர். இங்கு மங்கும் நெடு நாளாகத் தேடி, ஆலயங்களிலும் மாதா கோவில்களிலும், நிலவுலகிலும் வானுலகிலும் நாடி, இறுதியில் இருந்த இடத்துக்கே வட்டமிட்டுத் திரும்பி உங்கள் ஆன்மா உள்ள இடத்துக்கே நீங்கள் வந்து விடுகிறீர்கள். நீங்கள் எவனுக்காக உலக முழுதும் தேடியலைந்தீர்களோ, எவனை அடைய நீங்கள் இடையருது அழுது புலம்பினீர்களோ, எவனுக்காக ஆலயங்களிலும் கோவில்களிலும் இறைஞ்சி வந்தீர்களோ, எவனை நீங்கள் மர்மங்களினும் மர்மமாக மழைமுகிலுக்கிடையே மறைந்துள்ளானென்றெண்ணி இருந்தீர்களோ, அவன் உங்களுக்கு மிகமிக அணியனுகவே உள்ளான். அவன் உங்கள் ஆன்மப் பொருளே; உங்கள் உடல், உயிர், ஆவி இவற்றின் உண்மையே; உங்கள் இயல்பே. அவ்வியல்பை உறுதியுடன் வற்புறுத்துக; அதனை வெளிக் கொணர்க. இவ்வாறு செய்வது தூய்மை பெருவதற்காக அன்று. நீங்கள் முன்னமே தூய்மையானவர்கள். நீங்கள் பூரணராகவேண்டிய அவசியமே இல்லை; ஏனெனில், இப்போதே நீங்கள் பூரணர்கள். இயற்கை தனக்கு அப்பாலுள்ள உண்மையை மறைக்கும் ஒரு திரையே. நீங்கள் எண்ணும் ஒவ்வொரு நல்லஎண்ணமும், செய்யும் நற் செயலும் இத்திரையைக் கிழித்தெறிவது போன்றதே; அப்போது தூய்மையும் அகண்டத் தன்மையும் பின்னுள்ள பரம் பொருளும் எல்லாம் உங்கள் வாயிலாக

மேலும் மேலும் வெளித் தோன்றுகிறது. இதுவே மனிதனது முழு வரலாறு. திரை மிக மிக மெல்லியதாக ஆக, பின்னுள்ள ஒளி விரிகின்றது. காரணம் யாதெனின் ஒளிர்வதே அதன் இயல்பாம். அது அறியப்படாதது. நாம் வீணே அதனையறிந்துகொள்ள முயல்கிறோம். அது அறியப்படும் பொருளாய் இருந்தால், அது இப்போது உள்ளதுபோன்று இராது; ஏனெனில், அது நிலையான காணும் பொருளே—ஞாதாவே. அறிவென்பது அதனை வரையறுத்தலே; அறிவென்பது புறத்தே தோன்றச் செய்தலே. அவனே அனைத்திற்கும் நிலையான அறிபவனுவான். அவனே பிரபஞ்சத்திலுள்ள நிலையான சாட்சி; அது உங்கள் ஆன்மாவே. ஞானமெனப் படுவது அதற்கடுத்த கீழான படியொன்றே; அதன் இழிவே. நாம் ஏற்கனவே அந்த நித்தியமான ஞாதாவென்பதை நாம் அறிவது எங்ஙனம் இயலும்? அதுதான் ஒவ்வொரு மனிதனுக்குமுரிய உண்மையான இயல்பாம். அவன் அதனைப் பல வகைகளிலும் வெளியிடப் போராடுகிறுன். இல்லாவிடின், இத்தனை நீதி நூல்கள் எதற்கு? எல்லா நீதி நூன் முறையின் இருப்புக்கும் காரணம் யாது? எல்லாச் சன்மார்க்க முறைகளுக்கும் மையமாய் விளங்குவதும் பல வகையாக வெளியிடப்பட்டு வருவதுமான ஒரே கருத்தாவது, பிறருக்கு நன்மை பயத்தலேயாம். மக்கள் மீது அன்பு செலுத்தலும் எல்லா விலங்குகள் மீதும் அன்பு செலுத்தலுமே மனித இனத்தினை வழிப்படுத்தும் நன்னோக்க மாதல் வேண்டும். ஆனுல், இவை யாவும் நிலையான ஒரே உண்மையாகிய "நானே பிரபஞ்சம்; இப் பிரபஞ்சம் ஒன்றே," என்பதனைப்பலவாறு உரைக்கும் வகைகளே. அன்றேல், இதற்குக் காரணம் யாது? நான் ஏன் மன்னுயிர்க்கு நன்மை புரிய வேண்டும்? பிறருக்கு ஏன் நன்மை செய்தல் வேண்டும்? என்னைக் கட்டாயப்படுத்துவது யாது? அது அனுதாபமே; எங்கும் பரவும் சமத்துவ உணர்ச்சியே. சில வேளைகளில் மிக மிகக் கடினமான இதயமும் பிறரிடம் அன்புகொள்கின்றது. நாம் நம் மீது ஏறிட்டுக்கொண்ட தனி மனிதத் தன்மையும் உண்மையில் பிரமையே (மயக்க உணர்வே) என்றும் தோற்றமாத்திரமான இத் தனி மனிதத் தன்மையினைப் பற்றி ஒட்டிக் கொண்டிருத்தல் ஈனமானது என்றும் கூறு

வதைக் கேட்டலும் அச்சம் அடையும் அம்மனிதனே, உங்களிடம், 'முழுத் தன்னலமறுப்பே நீதி நெறியின் மையக் கருத்து' என்று கூறுவான். பூரணத் தன்னல மறுப்பு என்பதுதான் யாது? இந்தத் தோற்றமாகிய அகங்காரத்தைத் துறத்தலே—எல்லாத் தன்னயத்தையும் துறத்தலே. இந்த அகங்கார மமகாரங்கள்—'யான்', 'எனது' என்பன—பண்டைய மூட நம்பிக்கையின் விளைவேயாவன. இந்த 'நான்' என்னும் தோற்றம் பழைய பழைய, உண்மையான 'நான்' என்னும் ஆன்மப் பொருள் பேரளவில் வெளிப்படும். இதுவே முற்றும் தன்னலந்துறத்தலாம்; இதுவே நீதி போதனைகளின் மையமும் அடிப்படையும், சத்துமாம். இதனை மனிதன் அறிந்தாலும் சரி, அறியாவிட்டாலும் சரி, உலகம் முழுதுமே மெல்ல மெல்ல இந் நிலையை நோக்கியே நடந்து செல்கின்றது; ஏறக்குறைய இதனையே பயின்று கொண்டு வருகிறது. (ஆனால்) பற் பலரும் இதனைச் செய்து கொண்டே வருவது அறியாமலேதான், அவர்கள் அறிந்தே இதனைச் செய்து வரட்டும். இந்த 'யான்' 'எனது' என்பன உண்மையான ஆன்மாவல்ல; ஒரு வரையறையேயாம் என்பதனை உணர்ந்து, அவர்கள் தன்னல மறுப்பைச் செய்வார்களாக. ஆனால், பின்னுள்ள அந்த அகண்ட மெய்ப் பொருளின் ஒரு கணத் தோற்றமே—எல்லாமாய அந்த எல்லையற்ற நெருப்பின் ஒரு பொறியே—இப்போதுள்ள மனிதனைக் குறிப்பதாகும். அகண்டத் தன்மையே அவனது மெய்யான இயல்பு என்க.

இத்தகைய அறிவின் இம்மைப் பயன், விளைவு, முடிவுதான் யாது? இக்காலத்தில் நாம் எல்லாவற்றினையும்இம்மைப் பயன் கருதியே அளந்தறியவேண்டும். அதன் விலை மதிப்பு ரூபா அணா பைசாவில் எவ்வளவு? இம்மைப் பயனையோ பணத்தையோ அளவையாகக் கொண்டு உண்மையினை மதிப்பிட வேண்டுமென்று கூற மனிதனுக்கு உரிமை ஏது? இம்மைப்பயன் இல்லை யென்றே வைத்துக்கொள்வோம். அதனால் அதன் உண்மை குறைந்துவிடுமா? உண்மையின் உரைகல் இம்மைப்பயனன்று, என்றாலும், உயர்வற உயர்ந்த இம்மைப்பயனும் உளது. ஒவ்வொருவரும் தேடி வரும் பொருள் ஆனந்தமே; ஆனால், பெரும்பாலார் அதனை அழியும் பொருள்களில்—உண்மையற்ற பொருள்களில்—தேடுகின்ற

னர். ஐம்புலன்களில் இன்பத்தைக் கண்டவர் என்றும் இல
ராவார். புலன்களிலோ, புலன்நுகர்ச்சிகளிலோ, இன்பத்தை
ஒரு நாளும் எவரும் கண்டதில்லை. ஆனந்தம் ஆன்மாவில்
மட்டுந்தான் காணப்படும். ஆதலால், மக்களுக்கு மிக
மேலான இம்மைப்பயன் ஆன்மாவில் இந்த ஆனந்தத்தைக்
காண்பதேயாகும். அடுத்த பொருளாவது, துயரனைத்துக்கும்
பெரும் பிறப்பிடம் அறியாமையே. அடிப்படை அறியாமை
யாதெனின், அகண்டப் பொருளே அழுது அறற்றுகிறது
என்றும் வரையறையுற்றது என்றும் எண்ணுவதே. இதுவே,
எல்லா அறியாமைக்கும் அடிப்படை. அமரராய், யாண்டும்
தூயராய், பூரண ஆன்மாவாய் உள்ள நாம், 'அற்பமனங்கள்
அற்ப உடல்கள்' என நினைத்தலே. இதுவே தன்னலத்திற்குத்
தாயகம். என்னை ஒரு சிற்றுடலாகக் கருதிய உடனே
அதனைக் கெடாது வைக்கவும் பாதுகாக்கவும் அழகாகவைக்
கவும் விரும்புகிறேன், அப்போது நானும் நீங்களும் வெவ்
வேருகிறோம். வேறு படுத்தும் இக்கருத்துப் புகுந்ததும் பல
விதமான குறும்புகளுக்கும் துன்பத்துக்கும் வழி திறந்து விடு
கிறது. அதன் இம்மைப் பயன் இது தான். இன்று வாழும் மக்
களுள் ஒரு சிறு பகுதியினர்க்குத் தன்னலமும் குறுகிய
மனப்பான்மையும் சிறுமையும் ஆகிய இக்கருத்தை அப்புறப்
படுத்த இயலுமாயின், இம் மண்ணகமே நாளை விண்ணக
மாம். ஆனல், இயந்திரங்களையும் பௌதிக அறிவின் வளர்ச்
சியையுங் கொண்டு அந்நிலையை அடைவது ஒரு நாளும்
இல்லை. இவை யாவும் தீயிற் சொரிந்த நெய் அழலை முன்னி
னும் கிளப்புவது போன்று துன்பத்தினைப் பெருக்கவே செய்
யும். ஆன்ம ஞான மின்றி விஞ்ஞான அறிவெல்லாம் தீயில்
விறகிடுவது போல்வதாம்; தன்னலப்பற்றுள்ளவனுக்குப்
பிறர் உடைமைகளைப் பறிப்பதற்கு உதவியாக மற்றுமொரு
கருவியை அளிப்பதேயாம்; தனது உயிரைப் பிறருக்காகத்
தியாகம் செய்வதற்கு மாருகப் பிறர் உயிரைத் தன்பொருட்
டாக வவ்வுதலேயாம்.

'இது செயலளவாக நிகழுமா?' என்பது கேள்வி. இக்
காலச் சமூகத்தில் இதனைப் பழகுதல் இயலுமா? மெய்யானது
எந்தச் சமூகத்திற்கும்—அது தொன்மையாயினும் நவீன
மாயினும்—தலை வணங்குவதில்லை. சமூகமே உண்மைக்குத்

தலை வணங்கி வாழ வேண்டும்; அன்றேல், அழிந்து போக வேண்டும். சமூகமே சத்தியத்தின் மீது அமைக்கப் பெற வேண்டும்; சத்தியம் சமூகத்துக்கு இசைவாகத் தன்னை ஆக்கிக் கொள்ள வேண்டுவதில்லை. தன்னலமின்மை என்பது போன்ற மேலான உண்மை சமூகத்திற் பழக இயலாது போமாயின், மனிதனுக்குச் சமூகத்தை விட்டுக் காட்டிற்குச் சென்று வன வாசம் செய்தலே சிறந்ததாம். அத் தகையவனே தீர புருடன். மனத் திண்மையில் இரு வகை உண்டு. ஒன்று, பீரங்கிக்கு முன்னர் எதிர்த்து நிற்கும் துணிவு; மற்றொன்று, ஞானத் தெளிவால் விளையும் வீரம். இந்தியாவின் மீது படையெடுத்து வந்த மன்னர்க்கு மன்னர் ஒருவர்க்கு அவர் குரு அங்குள்ள ஞானியைப் போய்ப் பார்க்கு மாறு கட்டளையிட்டார். நீண்ட காலமாகத் தேடிய பின், அவர் வயதான துறவியார் ஒருவர் ஒரு பாறையின் மீது வீற்றிருக்கக் கண்டார், அரசர் அவரிடம் சிறிது நேரம் உரையாடி, அவரது ஞானத்தின் திறத்தை மெச்சி, அவரைத் தமது நாட்டிற்குத் தம்முடன் வருமாறு அழைத்தார். அவரோ, "வேண்டாம்; காடே எனக்குப் போதிய திருத் தியளிக்கிறது," என்றனர். பேரரசரோ, "யான் உனக்குப் பதவியும் செல்வமும் தருவேன்; யான் இவ்வுலகிற்கு மன்னர் பிரான்" என்று கூறி வேண்டினர். ஞானியாரோ, "வேண் டேன்; இப் பொருள்களைப் புறக்கணிப்பேன்" என்று மறு மொழி பகர்ந்தார். அதைக் கேட்ட பேரரசர், "நீர் வாரீராயின், யான் உம்மைக் கொல்வேன்" என்று சொன்னார். ஞானியார் அமைதியோடு புன்னகை புரிந்து, "பேரரசரே, இதனினும் பேதைமையான தொன்றை என்றைக்கும் நீர் பேசியிருக்க மாட்டீர். உம்மால் என்னைக் கொல்லல் இயலாது. என்னைக் கதிரவன் காயான்; தீ எரிக்காது; வாள் வெட்டாது. ஏனெனின் நான் பிறப்பு இறப்பு அற்றவன், நித்திய வாழ்வுற்றவன். எல் லாம் வல்ல, எங்கும் பரந்த ஆன்மாவே," என்று மொழிந் தனர். இதுவே ஞானமயமான வீரம்! மற்றது சிங்கம் அல்லது புலியின் துணிவாம்.

1857-ஆல் ஆண்டில் நிகழ்ந்த சிப்பாய் கலகத்தில் ஒரு சுவாமியார், ஒரு பெரியார் இருந்தார்; அவரை ஒரு முஸல்மான் கலகக்காரன் கடுமையாகக் குத்தி விட்டு ஓடினான். இந்து

கலகக்காரர் அவனைப் பிடித்துக் கொணர்ந்து அவர் முன் நிறுத்தி, அவனைக் கொன்று விடவும் தாம் சித்தமாயிருப்ப தாகத் தெரிவித்தனர். ஆனால், துறவியாரோ, அமைதியுடன் அவனைப் பார்த்து, "சகோதர, நீ பரம் பொருளே; நீ அவனே" என்று கூறி உயிர் துறந்தார். இது மற்றுமோர் உதாரணம்.

உங்கள் சமூகத்தோடு மெய்யினைப் பொருந்தச் செய்யா விடின் மிக மேலான உண்மையோடு இயையவல்ல ஒரு சமூகத்தை உங்களால் உண்டாக்க இயலாவிட்டால், உங்களது தசை வலிமை பற்றியோ உங்களது மேலைநாட்டு நிலையங்களின் உயர்வு பற்றியோ பேசுவதில் என்ன பயன் உளது? நீங்கள் எழுந்து நின்று, "இத்தகைய நெஞ்சுரன் விவகார உலகில் நிகழக் கூடிய தன்று," என்பீர்களாகில், உங்களது தனி மாண்பையும் பெருமையையும் பற்றிக்கர்வ மாகப் பேசுவதில் உள்ள நலன் யாது? ரூபாய், அணா, பைசா தவிர்த்து வேறெதுவும் நடைமுறைக்குக் கொண்டு வர இயலாததா? அப்படியானால், உம் சமூகத்தைப் பற்றிப் பெருமை பேசிக் கொள்வதேன்? எங்கு மிக உயர்ந்த உண்மைகள் நடை முறையிலும் காணப்படுமோ, அச் சமூகமே மிக மிக உயர்ந்தது ஆகும். இதுவே எனது சொந்தக் கருத்து. எல்லாவற்றிலும் உயர்ந்த உண்மை களைப் பழக உங்களது சமூகம் தகுதி பெறவில்லையானால், அதனைத் தகுதிப் படுத்துங்கள்; மிக விரைந்து இதைச் செய்யின் அதேயளவு நலம்மிகும். ஆடவரே, மகளிரே, இம்மனப் பான்மை யோடு எழுந்து நில்லுங்கள்; உண்மை யில் நம்பிக்கை கொள்ள மனந்துணியுங்கள்; உண்மையைப் பழகிவரத்துணிந்திருங்கள்.

ஒரு சில நூற்றுக்கணக்கான தீரம் பெற்ற ஆடவரும் பெண்டிரும் உலகிற்குத் தேவை. உண்மையை அறியத் துணியும் தீரத்தைப் பழகுங்கள். வாழ்க்கையில் உண்மை யினை எடுத்துக்காட்டவும், சாவுக்கு முன் நடுக்கமுறாதிருக் கவும், அதனையே மகிழ்ந்து வரவேற்கவும் துணிவு பெறுங் கள். மனிதன் ஆன்மாவே ஆதலின், இவ்வுலக முழுவதி லும் அவனைக் கொல்லக் கூடியது யாதுமில்லை என்பதை அறியச் செய்யும் துணிவைப் பெறப் பழகுங்கள். அப்

போதுதான் நீங்கள் விடுதலை பெறுவீர்கள்; உங்களிடமுள்ள மெய்யான ஆன்மாவை அறிவீர்கள். இந்த ஆன்மா முதலில் கேட்கவும் வேண்டும்; பின்னர் சிந்திக்கவும் வேண்டும்; அதன் பின்னர்த் தெளிவும் பெற வேண்டும்.

இக்காலத்தில் சிந்திப்பதைக் குறை கூறிச் செயலாற்றுவதனையே பெரிதும் போற்றிப் பேசும் ஒரு பேரியல்பு உள்ளது. செயலாற்றுவது மிக நன்றே. ஆனால், அது சிந்தனையிலிருந்தே தான் விளைகின்றது. தசைகள் வழியாகச் சிறிது சத்தி வெளித்தோன்றுவதையே செயல் (வினை) என்கிறோம். ஆனால், சிந்தனையே நிகழாதபோது, வினையும் இல்லை. ஆகவே, மூளையை உயரிய எண்ணங்களினால், உயரிய இலட்சியங்களினால் நிரப்பிவிடுக; அவற்றை இரவும் பகலும் உங்கள் முன் அமைத்துக்கொள்க; அப்போது அவற்றினின்றும் பெரியதொரு வினை உதிக்கும். தூய்மையின்மையைப் பற்றிக் கூறாதீர்கள்; ஆனால், 'நாம் தூயோமே,' என்று உரைப்பீர்களாக. 'நாம் சிறுமையுற்றவர்; நாம் பிறந்தோம்; இறக்கப் போகிறோம்,' என்ற நினைவிலும், எப்போதும் அஞ்சி நிற்கும் நிலையிலும், நம்மை நாமே மயக்கி வைத்துவிட்டோம்.

பெண் சிங்கம் பற்றிய கதையொன்றுண்டு. அது கருவுற்றிருந்தபோது, இரைதேடி அலைந்தது; ஓர் ஆட்டு மந்தையைக் கண்டதும் ஆடுகள் மீது பாய்ந்தது. அம் முயற்சியிலேயே அது இறந்து விட்டது; ஆனால், ஒரு குட்டியினை ஈன்றது. பிறக்கும் போதே அக்குட்டி தாயற்ற தாயிற்று. அதனை ஆடுகள் காப்பாற்றி வளர்த்து வந்தன. அக்குட்டியும் அவற்றுடன் வளர்ந்து புல்லைத்தின்று ஆடு போன்றே கத்தியது. நாளடைவில் அது முழுவளர்ச்சிபெற்ற சிங்கமான பின்னும் தன்னை ஓர் ஆடாகவே எண்ணி வந்தது. ஒரு நாள் இரை தேடி அங்கு வந்த மற்றொரு சிங்கம், ஆட்டு மந்தைக்கு நடுவே ஒரு சிங்கம் தன்னை அபாயம் அணுகும் போது ஆடு போன்று அஞ்சி ஓடுவதைக் கண்டு வியந்து நின்றது; பின்னர் ஆட்டுச்சிங்கத்தின் அருகே சென்று, அது ஆடன்று, சிங்கமே என்று சொல்லமுயன்றது; ஆனால், அதன் அருகு சென்றதும் அது ஓடிவிட்டது என்றாலும், சமயம் பார்த்துக் கொண்டே இருந்தது. அச்சிங்கம் ஒரு நாள்

ஆட்டுச்சிங்கம் உறங்கிக் கொண்டிருந்ததைக் கண்டது. அதனருகேசென்று, "நீ சிங்கமே," என்று கூறியது; அதற்கு விடையாக அது, "நான் ஆடுதான்" என்றது; தான் சிங்கம் என்பதை நம்பமாட்டாது ஆடு போலவே கத்தியது. சிங்கம் அதனை ஓர் ஏரிக்கு இழுத்துச் சென்று, "அதோ இந் நீரில் உனது உருவத்தையும் எனது உருவத்தையும் காண்" என்றது. அப்போது இரண்டையும் அது ஒப்பிட்டு நோக்கியது. அது சிங்க உருவை நீரிற்பார்த்தது. பின் தன்னுருவையும் அதிற்கண்டது. உடனே ஒரு கணத்தில் அதற்குத் தான் சிங்கமே என்ற கருத்து உதித்தது. அச்சிங்கம் பின்பு முழங்கிற்று. ஆடு போலக்கத்துதல் ஒழிந்தே போயிற்று.

நீங்கள் சிங்கங்கள்; நீங்கள் தூய, அகண்டமான, பூரணமான ஆன்மாக்கள். உங்களுக்குள்ளே பிரபஞ்சத்தின் முழுச்சத்தியும் குடிகொண்டுள்ளது. "நண்ப, ஏன் அழுது புலம்புகிறாய்? உனக்குப் பிறப்போ இறப்போ இல்லை; நண்ப, உனக்குப் பிணியோ துயரமோ இல்லை. ஆனால், நீ எல்லையற்ற விசும்பைப் போன்றவன். பலவகையான வண்ணமுகில்கள் அதன் மீது பரந்து விளையாடி மறுகணமே மறைந்து விடுகின்றன. ஆனால், வானமோ, என்றும் நீல நிறமாயுள்ளது. நாம் ஏன் தீமையைக் காண்கிறோம்? ஒரு மரத்தின் அடித்தூறு நிலத்தில் நின்றது. இருட்டில் அவ்வழியே வந்த கள்வன், 'அது ஒரு காவலாளன்,' என்றுகூறினன், தன் காதலிக்காகக் காத்திருந்த ஓர் இளைஞன் அதனைக் கண்டு அது தனது அன்பிற் குரிய தலைவியே என்றெண்ணினன். பேய்க் கதைகளைப் பற்றிக் கேட்டிருந்த ஒரு குழந்தை அதைப் பார்த்துப் பேயென் றெண்ணிக் கதறியது. ஆனால், அது எப்போதும் ஒரு மரத்தின் அடித் தூறாகவே இருந்தது. நாமிருப்பதுபோன்றே உலகினையும் நாம் பார்க்கிறோம். ஓர் அறையில் ஒரு குழந்தையும் மேஜை மீது பொன்னிறைந்த பையும் இருந்தன. ஒரு திருடன் வந்து அந்தப் பொற்பையைக் களவாடிப் போகிறானென்று வைத்துக் கொள்வோம். அப்பணப்பை திருடு போயிற்றென்று குழந்தைக்குத் தெரியுமா? நம்முள் (மனத்தில்) இருப்பதையே நாம் புறத்தேயும் காண்கிறோம். குழந்தை மனத்தில் கள்வன் என்னும் கருத்து இராமையால் வெளியி

லும் அது கள்வனைக் காண்பதில்லை. இப்படியே தான், எல்லா அறிவும். உலகத்தின் தீமைகளைப் பற்றியும், அதிலுள்ள தீச்செயல்களைப்பற்றியும் பேசாதீர்கள். இப்போதும் தீமையைக் காண வேண்டியுள்ளதேயென அழுங்கள். எங்கும் பாவத்தைக் காண நேரிடுகிறதே என்றழுங்கள். உலகத்திற்கு உதவி செய்ய உங்களுக்கு விருப்பமாயின், அதனைக் கண்டிக்காதீர்கள். அதனைப் பலவீனமாக்காதீர்கள். பாவமும் துயரமும் பலவீனத்தின் விளைவுகளேயன்றி வேறு என்ன? அத்தகைய போதனைகளால் உலகம் நாளுக்கு நாள் வலிமை குன்றி வருகின்றது. குழவிப் பருவத்திலிருந்தே மக்கள் பலவீனர்கள் என்றும் பாவிகள் என்றும் போதிக்கப்பட்டு வருகிறார்கள். வெளிப்பார்வைக்கு மிகமிக வலிகுன்றியவர்கள் உட்பட மக்கள் யாவருமே அமர நிலையினின்றும் பிறந்த மேன்மை மிக்க குழந்தைகள் என்று அவர்களுக்கு அறிவு புகட்டுங்கள். உள்ளதைப் பற்றிய, உறுதியான, உதவியளிக்கக் கூடிய எண்ணங்கள் அவர்களது மூளையில் குழவிப் பருவத்திலிருந்தே புகுந்து வரட்டும். இத்தகைய எண்ணங்கள் புகுமாறு உங்கள் உள்ளங்களையும் திறந்து வையுங்கள்; பலவீனத்தையும் செயலற்ற தன்மையையும் தருவனவற்றுக்கு இடங் கொடாதீர்கள். உங்கள் உள்ளங்களுக்கு "நான் அவனே; நான் அப்பரம் பொருளே", என்று கூறுங்கள். அது ஒரு கீதம் போன்று அல்லும் பகலும் அங்கே ஒலிக்கட்டும். மரணத்தறுவாயிலும் உறுதியுடன், "நான் அவனே," என்று கூறுங்கள். அதுவே உண்மை; உலகின் எல்லைகடந்த சத்தியும் உங்களுடையதே. உங்கள் உள்ளத்தை மூடியுள்ள மூடக் கொள்கையை வெளியே விரட்டிவிடுங்கள். நாம் தீரம் படைத்தவராவோம். உண்மையை உணர்க. உண்மையைப் பழகி வருக. குறிக்கோள் தொலைவிலே இருக்கலாம்; ஆனாலும், எழுமின்; விழிமின்; குறி சாரும் வரை நில்லாது முன் செல்லுமின்.

3. மாயையும் மித்தையும்

மாயை என்னும் மொழியினைப் பெரும்பாலும், நீங்களெல் லோரும் கேட்டேயிருப்பீர்கள். அம்மொழி பொதுவாக மித்தையையோ மயக்கத்தையோ அது போன்ற வேறொன் றையோ குறிக்கத்தவறாகப் பயன் படுத்தப்படுகிறது. ஆனால், மாயை என்னும் கோட்பாடு வேதாந்தத்தைத்தாங் கும் ஒரு தூண் ஆகின்றது; அதனால், அதனைச் சரியாக அறிதல் அவசியமாகின்றது. நீங்கள் சற்றுப் பொறுமை யுடன் கேட்கவேண்டும்: அல்லாவிடின், அதனைத் தவறான வகையிற் பொருள் கொள்ளும் குற்றத்திற்கு உள்ளாவீர்கள். மாயையைப்பற்றி நாம் காணும் மிகப் பழமையான கருத்து 'மதிமயக்கம்' என்பதே. ஆனால், அப்போது உண்மையான கோட்பாடுபிறக்காத, உருவாகாத காலம். "இந்திரன் தனது மாயையால் பல உருவங்களைக் கொண்டான்", என்பது போன்ற பகுதிகளை நாம் காண்கிறோம். இங்கு 'மாயை' என் பதற்கு 'மந்திர வலிமை' போன்றதொன்று என்பது பொரு ளாகும்; இதே பொருளுள்ள பல பகுதிகளும் உள்ளன. பின்னர் இந்த மொழியே முற்றும் மறைந்து போயிற்று. ஆனால், இடைக் காலத்தில் அக்கருத்து வளர்ந்துகொண்டே வந்தது. பின்னர், "பிரபஞ்சத்தின் மர்மத்தை நாம் ஏன் அறிதல் கூடாது?" என்ற கேள்வி பிறந்தது; அதற்கு இறுக்கப்பட்ட விடையோ பொருள் பொதிந்ததாயிற்று. நாம் வீண் பேச்சே பேசி ஐம்புலப் பொருள்களைப் பெறுவதில் திருத்தியடைந்து, இச்சைகளைப் பின் தொடர்ந்தே ஓடு வதனால், நாம் மெய்ப் பொருளைப் பனிப் போர்வையைப் போன்ற ஒன்றால் மூடி விடுவார் போன்றவர் ஆகிறோம். இம் மேற்கோளில் 'மாயை' என்ற பதமே இல்லையென்றாலும், நமது அஞ்ஞானத்துக்குக் காரணமாயிருப்பது நமக்கும் மெய்ப்பொருட்கும் இடையேகுறுக்கிடும் ஒரு வகைப் பனிப் போர்வையே என்னும் கருத்தைப் பெறுகிறோம். இதற்கு நீண்ட காலத்துக்குப் பின்னர்த் தோன்றிய உபநிடதங் களுள் ஒன்றில் அம்மொழி மறுமுறையும் காணப்படுகிறது. ஆனால், இதற்குள் இந்த மொழியில் ஒரு மாறுதல் ஏற்பட்டு இது மிகுதியாகப் புதுப் பொருளையும் பெற்றுவிட்டது.

கோட்பாடுகள் புதியனவாக உண்டாக்கப்பட்டும் திரும்பத் திரும்பக்கூறப்பட்டும் வந்தன; அவற்றை விட்டு வேறு பலவும் கொள்ளப்பட்டன; இறுதியாக, 'மாயை' என்னும் மொழியின் கருத்து நிலைபெற்றுவிட்டது. ஸ்வேதாஸ்வதர உபநிடதத்தில், "இயற்கையன்னையே மாயை என்றும், மாயையினை ஆட்சி புரிவோன் ஈசனேயென்றும் அறிமின்," என்பதைக் காண்கிறோம். நம் தத்துவ அறிஞர்கள் இம்மொழியைப் பல விதங்களாகக் கையாண்டு வர, இறுதியில் மகான் சங்கராசாரியாரை அடைகிறோம். இம்மாயைக் கொள்கையைப் பௌத்தரும் சிறிது கையாண்டு பார்த்தனர். ஆயினும், அவர்களது சூழ்ச்சியில் இது இலட்சிய வாதத்தை (idealism)ப் பெரிதும் ஒத்திருக்கும் நிலையினை அடைந்தது; இப்பொருளே 'மாயை' என்ற பதத்திற்கு இப்போதும் பொதுவாகக் கொள்ளப்படுகின்றது. இந்து ஒருவன் 'உலகம் மாயை' என்று சொல்லும்போது, உலகம் மித்தை என்ற கருத்தையே மக்கள் உடனே கொள்கின்றார்கள். பௌத்த அறிஞர் மூலம் இது பெறப்படுதலின், இதற்கு ஒரு சிறிது ஆதாரமும் உள்ளது. எவ்வாறெனில், புறவுலகம் உளது என்பதை நம்பாத ஒரு சாரார் அவர்க்குள் இருந்தனர். ஆனால் வேதாந்தம் கூறும் மாயையோ முதிர்ச்சி நிரம்பிய, இறுதியான வடிவில் இலட்சிய வாதமுமன்று; சடஉண்மை வாதமுமன்று. அது ஒரு கொள்கையுமன்று. உண்மை நிகழ்ச்சிகளைப் பற்றிய ஓர் உரையே. "நாம் யார்? நாம் சுற்றிலும் காண்பது யாது?" என்பவற்றைப் பற்றிய ஓர் உரையேயன்றி வேறில்லை. நாம் முன்னர்க்கூறியுள்ளவாறே, வேதங்கட்குப் பிறப்பிடமான உள்ளங்கள் உயரிய கொள்கைகளைப் பின் பற்றுவதிலும், புதுக்கோட்பாடுகளைக் கண்டுபிடிப்பதிலும் கருத்தாயிருந்தன. அவர்களுக்கு விவரணம் செய்யவோ விவரங்களைப்பெறக் காத்திருக்கவோ நேரமில்லை; அவர்கள் பொருள்களின் சாரத்தைக் காணும்பொருட்டு ஆழ்ந்து செல்ல விழைந்தார்கள்: அப்பாலுள்ள ஒரு சத்தி அவர்களை அழைத்துக் கொண்டே இருந்ததால், அவர்களால் காத்திருக்க இயலவில்லை. உபநிடதங்களில் சிதறிக்கிடக்கும் பகுதிகளில் இக்காலத்தில் நாம் இக்கால விஞ்ஞானம் எனக்கூறும் பொருள்

களைப் பற்றிய விவரங்கள் பன்முறையும் பிழைபட்டிருக்கக் காண்கிறோம். ஆனால், அதே சமயம் அவை பின்பற்றும் கொள்கைகள் சரியாகவே உள்ளன. உதாரணமாக, இக்கால விஞ்ஞானக் கொள்கைகளுள் மிகப்புதுமையான ஒன்றாகிய 'ஆகாசம்' என்பது பற்றிய கருத்து நமது பண்டைய இலக்கியங்களில் இப்போதுள்ளதைவிட மிகமிக முதிர்ந்த வடிவத்திற் காணப்படுகின்றது. ஆனால், அது கொள்கையளவிலேதான் உள்ளது. அக்கொள்கையின் பிரயோகத்தை நிரூபிக்க முயன்றபோது, அவர்கள் பல தவறுகளுக்கு உள்ளானார்கள். பொருள்கள் அனைத்தையும் ஊடுருவி நிற்கும் ஓர் உயிர்த்தத்துவம் உள்ளது. அது வெளிப்படும் அளவில் உள்ள வேறுபாட்டால் இப்பிரபஞ்ச உயிர்வகைகள் யாவும் உண்டாயின என்னும் கொள்கை வேதகாலத்தில் அறியப்பட்டதேயாகும்; அது பிராம்மணங்களில் காணப்படுகின்றது. 'சங்கிதை'களில் 'பிராணனைக் குறித்து நீண்டதொரு துதிப்பாடல் உள்ளது; எல்லா உயிர்வகைளும் அந்தப் பிராணனின் அமிசமேயாம். இதற்கிடையில் ஒரு வார்த்தை; ஐரோப்பிய விஞ்ஞானிகளுள் சிலர், பூமியில் உயிர் எவ்வாறு உண்டாயிற்று என்பதைப் பற்றிக்கொண்டுள்ள கோட்பாடுகளைப் போன்றவை வேதத்திலுள்ள தத்துவ நூற்பகுதியில் உள்ளன என்பதை அறிவதில் உங்களுட் சிலர்க்கு விருப்பம் இருக்கலாம். உயிர் மற்றக் கிரகங்களிலிருந்தே இங்கு வந்தது என்ற கோட்பாடு இருப்பது உங்களனைவருக்கும் தெரிந்த செய்தியே. சந்திரனிடமிருந்தே இவ்வாறு உயிர் வந்ததென்ற கொள்கை வேதகாலத்தத்துவ அறிஞர் சிலரின் முடிந்த முடிபாகும்.

இனி, கொள்கைகளைப் பற்றிப் பேசுவோம்: வேதகாலச் சிந்தனையாளர் பெரிய பெரிய தொகுப்புக் கோட்பாடுகளை உரைப்பதில் மிக்க தைரியமும் வியக்கத்தக்க துணிவும் உள்ளவராய்க் காணப்படுகின்றனர். அவர்களது பிரபஞ்ச மர்மத்தைப் ப்ற்றிய முடிவு ஓரளவு திருத்திகரமானதே. இக்கால விஞ்ஞானிகளின் விவரமான ஆராய்ச்சியும் கருத்தைப் பற்றி முடிவாகக் கூறும் நிலையை ஓர் அடிகூட அணுகவில்லை; காரணம், கொள்கைகள் தவறின்மையே. ஆகாசத்தைப் பற்றிய கொள்கை பழங்காலத்தில் பிரபஞ்ச மர்மத்தை

அறியத்தவறிவிட்டதாயின், அதே ஆகாசக் கொள்கையைப் பற்றிய விவரமான ஆராய்ச்சியும் உண்மையை முன்னிலும் மிகுந்த தூரம் அணுகப்பயன்படாது. எங்கும் வியாபகமான ஓர் உயிர் உளது எனும் கொள்கை பிரபஞ்சத்தைப் பற்றிய ஒரு கொள்கையை எடுத்துரைக்கத் தவறிவிடின், அதனை விரிவாக ஆராய்வது பலன்தருமென்று எவ்வாறு கொள்ளக் கூடும்? ஏனெனில், பிரபஞ்சக் கோட்பாட்டை அந்த விவரங் களால் மாற்ற இயலாதன்றோ? நான் சொல்வது யாதெனில் கொள்கையைப் பற்றிய விசாரணையில் இந்தியச் சிந்தனை யாளர்கள் இக்கால விஞ்ஞானிகளைப் போன்று அதே அளவு துணிவுடனும், சில கருத்துகளில் அவர்களினும் மிக்க துணிவுடனும் இருந்தார்கள்; இதுகாறும் கண்டுபிடிக்கப் பட்டுள்ள மாபெருந் தொகுப்புரைகள் சிலவற்றைக் கூறி யுள்ளார்கள்; சில இன்னும்கொள்கையளவிலேதான் இருந்து வருகின்றன. ஆயினும், இக்கால விஞ்ஞானியர் அக்கொள் கையளவிற்குக்கூட இன்னும் வரவில்லை. உதாரணமாக, 'ஆகாசம்! (Ether) என்னும் கோட்பாட்டினைக் கண்டுபிடித் ததோடு நில்லாது, அவர்கள் அதற்கப்பாலும் சென்று, மனத் தினையும் அதனினும் மிக அருகியிருக்கும் ஆகாசமென்று உணர்ந்தும் உள்ளனர். அதற்கப்பாலும் இன்னும்அருகியிருக் கும் ஆகாசத்தையும் அவர்கள் கண்டு பிடித்து விட்டார்கள். ஆனாலும், அது முடிவானதாயில்லை; கேள்விக்குச் சரியான விடையாயில்லை. புறவுலக அறிவு எத்தகையதாயினும், பிரச்சினையைத்தீர்க்க அது வல்லமையற்றதாகும். விஞ் ஞானியார், "ஆனால், நாம் இப்போதுதான் ஒரு சிறிது அறிவு பெற்று வருகிறோம்; சில ஆயிரம் ஆண்டுகள் காத் திருந்தால் நமக்கு விடைகிடைத்து விடும்," என்று சாற்று கின்றனர். வேதாந்தி இதனை மறுத்துக் கூறுங்கால், உண்மையைப் பின்வருமாறு விளக்குகிறான்: "மனமானது வரையறைக்குட்பட்டது. அது ஒரு சில வரம்புகளுக்குள் ளேதான் இயங்கக் கூடும்; காலம், தேசம், காரணப் பொருள் இவற்றுக்கப்பால் அதனால் செல்லவொண்ணாது. இவை ஐய மின்றி நிலைநாட்டப் பட்டுள்ளன. எவனும் தன்னினின்றும் எவ்வாறு வெளியே தாவிக்குதிக்க இயலாதோ, அவ்வாறே கால தேச நியதிகளால் விதிக்கப்பட்ட வரம்புக்கப்பால் ஒரு

வனும் செல்லுதல் இயலாது. கால தேசநியதி என்னும் விதி களுக்குக் காரணங்காணும் ஒவ்வொரு முயற்சியும் வீணே யாம்; ஏனெனில், இம் மூன்றும் உள்ளன வென்று வைத்துக் கொண்டால் தானே அம்முயற்சியும் இயலும்? அப்போது உலகின் இருப்பு பற்றிப் பகரும் கூற்றுக்குப் பொருள் யாது?''

“இவ்வுலகத்துக்கு இருப்பேயில்லை'' என்பதற்குப் பொருள் என்ன? இதன் பொருள், தனியான இருப்பு இல்லை என்பதே. எனது மனமும், உமது மனமும், எல்லோருடைய மனமும் ஆகிய இவற்றைப் பொறுத்தே அதனது இருப்பு அமைகின்றது. நாம் உலகை ஐம் புலன்கள் வழியாக உணர் கின்றோம்; ஆனால், இன்னும் ஒரு புலனிருந்தால், அதில் இன்னும் சிறிது அதிகம் காண்போம். பின்னும் ஒரு புலன் கூட இருந்தால், உலகம் இன்னும் வேறு வகையில் புலப் படும். ஆகையினால், அதற்கு உண்மையான 'சத்து' பாவம் (உளது எனுந்தன்மை) இல்லை. அதற்கு மாறுதலில்லாத —பெயர்க்க முடியாத—அகண்ட இருப்பு இல்லை. ஆனால், அதனை 'இலது' என்று கூற இயலாது. ஏனெனில், அது உள்ள பொருளே அதிலேயே, அதன் மூலமாகவே, நாம்வினை யாற்ற வேண்டியிருக்கின்றது. அது 'உள்ளது, இல்லது' [சத்து, அசத்து] என்னும் இவ்விரண்டின் கலப்பேயாம்.

இனிக் கருத்துகளை விட்டு, சாதாரண அன்றாட வாழ்க்கை விவரங்கட்கு வருவோமாயின், நமது வாழ்க்கை முழுவதுமே முரண்பாடான சத்து அசத்து என்னும் இரண்டின் கலப்பாய் இருக்கக் காண்கிறோம். அறிவதிலும் இத்தகைய முரண்பாடுள்ளது. மனிதனுக்கு அறிவு பெற ஆவல் இருக்குமானால் அவன் எதனையும் அறிந்து கொள்ள லாம் என்பது தோன்றுகிறது. ஆனால், அவன் சிற்சில அடி கள் எடுத்து வைத்தவுடனே கடத்தற்கரிய வைரமனைய சுவர் ஒன்று குறிக்கிடுவதைக் காண்கிறான். அவனது கருமம் அனைத்தும் ஒரு வட்ட வழியிலே உள்ளன. அவன் அவ்வட்டத்தைத் தாண்டிச் செல்லும் ஆற்றல் அற்றவனா கிறான். அவனுக்கு மிகமிக நெருங்கியனவாகவும் விருப்ப மாகவும் உள்ள கருத்துகள் தமக்குத் தீர்வுகாணுமாறு அல் லும் பகலும் அவனை வற்புறுத்துகின்றன; ஆனால், அவனால்

அவற்றுக்குத் தீர்வுகாண இயலுவதில்லை. காரணம், அவன் தனது புத்திக்கு அப்பாற் செல்லமாட்டாமையே. ஆனாலும், அவ்விருப்பம் அவனிடம் மிக ஆழமாக வேரூன்றியுள்ளது. ஆயினும், அதை அடக்குவதாலும் தடுப்பதாலுமே ஒரு நன்மைவிளையக்கூடும். ஒவ்வொருதரம் மூச்சு விடும் போதும் நமது இதயத்தினின்றும் கிளம்பும் ஒவ்வொரு தூண்டுதலும் நம்மைத் தன்னலத்துடன் கூடியிருக்க வேண்டுகிறது. அதே சமயம் நமக்கு அப்பாற்பட்ட ஒரு மேலான சத்தியே "தன்னலமற்றிருத்தலே நலம் தரும்" என்று கூறுகிறது. ஒவ்வொரு குழந்தையும் பிறக்கும் போதே 'நடப்பதெல்லாம் நன்மைக்கே,' என்று எண்ணுகின்றது. அது சீரிய கனவுகளைக் காண்கின்றது. காளைப்பருவத்தில் நன்மை வெல்லும் என்ற நம்பிக்கை இன்னும் வளர்கின்றது. இளைஞனுக்குச் சாவோ தோல்வியோ முதுமையடைதலோ ஆகிய அத்தகைய பொருள் ஒன்று உள்ளதென நம்புதலும் அரிதாகின்றது. முதுமை வந்ததும் வாழ்க்கை அழிவின் குவியலாகிறது. பகற்கனவுகள் யாவும் காற்றிற் பறந்துவிடுகின்றன. அவன் உலகில் நேர்வதெல்லாம் தீமையே என்ற முடிவுக்கு வந்துவிடுகிறான். இப்படி நாம் இயற்கையால் உந்தப் பட்டு ஒரு கோடியினின்றும் மறு கோடிக்குச் சென்றுவிடுகிறோம். நாம் எங்கே செல்கிறோமென்பதே நமக்கு விளங்குவதில்லை. இது புத்தபகவான் வரலாற்றினை எடுத்துக் கூறும் 'லலிதா விஸ்தாரம்' என்னும் நூலிலுள்ள புகழ்வாய்ந்த ஒரு பாடலை நினைவூட்டுகின்றது. அதில் பின்வரும் கருத்துக் காணப்படுகின்றது :

புத்தர் மனித இனத்தை உய்விக்கவே பிறந்தார்; ஆனால் அரண்மனைக் குரிய சுகபோக வாழ்வில் தம்மை மறந்துவிட்டார். தேவ தூதர் சிலர் தோன்றி அவரை விழிப்புறச் செய்ய ஒரு பாட்டுப் பாடினர். அப்பாட்டின் பல்லவி, "நாம் ஓய்வு ஒழிவு இன்றி எப்போதும் மாறிக்கொண்டேயிருக்கும் வாழ்க்கை ஆற்றின் மீது மிதந்து செல்கிறோம்," என்பதே.

அப்படியே தான் நமது வாழ்க்கை ஓய்வையறியாது மேலும் மேலும் சென்று கொண்டே இருக்கிறது. நாம் செய்யத்தக்கது யாது? உண்ணவும் குடிக்கவும் போதி

யதைப் பெறுவான் 'யாவும் நல்லனவே,' என்ற நம்பிக்கையுடன் வாழ்கிறான்; அவனிடம் துன்பத்தைப் பற்றிய பேச்சே இல்லை; அதனால் அச்சமுறுதலில்லை. அவனிடம் சென்று உலகின் துன்பங்களையும் துயரங்களையும் பற்றிக் கூறுதீர். "ஆம், நான் பாதுகாக்கப்பட்டவனாகவே இருக்கிறேன்; என்னைப்பார். எனக்கு வாழ ஓர் அழகான வீடுள்ளது. பசியையும் குளிரையும் பற்றி நான் அஞ்சுவதில்லை; ஆதலால், என் முன் இக் கொடுமையான காட்சிகளைக் கொண்டு வாராதே," என்று அவன் சொல்கின்றான். ஆனால், இதற்கு மாறாக, பசியினாலும் குளிரினாலும் இறக்கும் வேறு சிலர் உள்ளனர். அவர்களிடம் சென்று 'எல்லாம் நன்மைக்கே' என்று அறிவுறுத்துவீராயின், அவர்கள் உங்கள் பேச்சுக்குச் செவி சாய்க்க மாட்டார்கள்: தாங்கள் துன்புற்றிருக்க, பிறர் நன்றாக வாழவேண்டுமென்று அவர்கள் எவ்வாறு விரும்புதல் கூடும்? இவ்வாறு நாம் நலமுடிவுவாதத்திற்கும் தீமைமுடிவு வாதத்திற்கும் இடையே ஊசலாடிக் கொண்டிருக்கிறோம்.

இன்னும் சாவு என்ற மாபேருண்மை ஒன்று உளது. உலகம் முழுதுமே சாவை நோக்கிச் செல்கின்றது; அனைத்தும் இறக்கின்றன. நம் முன்னேற்றங்கள், வீண் பெருமைகள், சீர்திருத்தங்கள், போகப் பொருள்கள், செல்வம், அறிவு என்னும் யாவும் சாவு என்னும் ஒரே முடிவைப் பெறுகின்றன. அந்த ஒன்றே திண்ணம். நகரங்கள் தோன்றி மறைகின்றன; பேரரசுகள் எழுந்து வீழ்கின்றன; கிரகங்களும் துண்டு துண்டாக உடைந்து தூளாகி மற்றக்கிரகங்களைச் சூழும் வாயுக்களால் பறக்கடிக்கப்படுகின்றன. இப்படியே தான் தொடக்கத்திலிருந்தே நடந்து வந்திருக்கிறது. மரணமே எதற்கும் முடிவாகின்றது. வாழ்விற்கும், அழிவிற்கும், செல்வத்திற்கும், அதிகாரத்திற்கும், அறத்திற்கும் முடிவு மரணமே. முனிவர்களும் இறக்கின்றார்கள்; பாவிகளும் மரிக்கின்றார்கள்; மன்னர்களும் மடிகின்றார்கள்; இரவலர்களும் மாள்கின்றார்கள்; யாவருமே எமனுக்கு இரையாகின்றனர். அப்படியிருந்தும், வாழ்வின் மீதுள்ள பெரும்பற்று ஒருவரையும் விடுவதில்லை. காரணங் கூற இயலாதபடி எவ்வாறோ நாம் வாழ்வைப் பற்றிக்கொண்டிருக்கிறோம்; அதைவிட்டு விட நம்மால் இயலாது. அதுதான் மாயை.

தாய் தன் சேயினை மிக்க கவனத்துடன் பாதுகாத்து வருகிறாள். அவளது வாழ்வும் அக்குழந்தையிடம் உள்ளது. குழந்தை வளர்கிறது; மனிதனாகிறது. ஒருகால் ஒரு கயவனாகவும், விலங்காகவும் தலையெடுத்துத் தாயை நாளும் உதைத்தும் அடித்தும் வருகிறது; எனினும், தாய் குழந்தையின் மீது பற்றுவிடாள். அவளுக்கு அறிவு விழித்ததும் அதனை அன்பெனும் கருத்தால் மூடிவிடுகிறாள். அது அன்பு அன்று; அவளால் விடுவித்துக்கொள்ள இயலாதபடி அவளுடைய நரம்புகளைப் பிடித்துக்கொண்டுள்ள பற்று என்பதை அவள் உணர்வதில்லை. அவள் எத்துணை முயன்றாலும், தான் சிக்கிக்கொண்டிருக்கும் பந்தத்தை அவளால் உதறிவிட இயல்வதில்லை. இதுதான் மாயை.

நாமெல்லோரும் பொற்குவையை நாடுகிறோம். நம்முள் ஒவ்வொருவரும் அது நமக்கு உரியதென்று எண்ணுகிறோம். கோடியில் ஒருவனாவது அது ஒரு வேளை தனக்குக் கிட்டுமென்பதை அறிகிறான்; ஆயினும், அதற்காகப் பாடுபடுகிறான். இது மாயையே.

நமது பூவுலகில் அல்லும் பகலும் மரணதேவதை பவனி வந்துகொண்டே யிருக்கிறது; எனினும், நாம் அழிவில் வாழ்க்கை வாழ்வோமென்று எண்ணுகிறோம். ஓர் இயக்கன் உதிட்டிரனைப் பார்த்து, "பூமண்டலத்தில் மிகமிக அற்புதமானது யாது?" என்று வினவினான். அதற்கு அம்மன்னன் "ஒவ்வொரு நாளும் நம்மைச்சுற்றி மக்கள் இறந்துகொண்டே வருகிறார்கள். ஆனாலும், நாம் மட்டும் ஒரு நாளும் இறக்கப்போவதில்லை என்று நினைக்கிறோம்" என்று கூறினன். இதுவே மாயை.

இத்தகைய மாபெரும் முரண்பாடுகள் நமது புத்தியிலும் அறிவிலும் நமது வாழ்க்கையின் பல நிகழ்ச்சிகளிலும் இருந்து நம்மை எல்லாப் பக்கங்களிலும் நோக்குகின்றன. ஒரு சீர்திருத்தவாதி தோன்றி ஒரு நாட்டிலுள்ள தீமைகளை விலக்க விரும்புகிறான்; அவை நீக்கப்படுதற்கு முன்னரே ஆயிரக்கணக்கான பிற தீமைகள் வேறோரிடத்தில் புகுந்துவிடுகின்றன. இது இடிந்து கொண்டிருக்கும் பழைய வீடு போன்றது. ஒரு பக்கம் நீங்கள் அதனைச் செப்பனிடும் போது வேறொரு பக்கம் அது சிதைந்து பாழடைகின்றது.

இந்தியாவில் சீர்திருத்தக் காரர்கள் கட்டாயக் கைம்மை விரதத்தின் (நோன்பின்) தீமைகளைக் குறித்துக் கண்டித்துச் சொற்பொழிவு நிகழ்த்துகின்றார்கள். மேலைநாடுகளில் விவாகமாகாமையே பெருந்தீமையாகிவிடுகிறது. 'மணமாகாமல் துன்புறும் மக்களுக்கு உதவுக' என்ற குரல் ஒரு பக்கம் எழுகிறது. மற்றொரு பக்கமோ, 'கைம்பெண்கள் துன்பம் பெரிது; அவர்களுக்கு உதவிபுரிக,' என்றகுரல் எழுகிறது. இது உடலில் ஊறியுள்ள வாதநோய் போன்றது. அதனைத் தலையினின்றும் ஓட்டிவிடின், நடுப்பாகத்தில் புகுந்துவிடுகிறது. அங்கிருந்து அதனை விரட்டியடித்தால் அது கால்களுக்குப் போய்விடுகிறது. சீர்திருத்தக் காரர்கள் தோன்றி, கல்வி, செல்வம், பண்பாடு யாவும் பொறுக்கியெடுக்கப்பட்ட ஒரு சிலரின் அதிகாரத்துக்குள் இருத்தல் கூடாதென்று மேடைப்பேச்சுப் பேசுகின்றனர்; தம்மால் இயலும் அளவும், அவை எல்லோருக்கும் கிட்டுமாறு செய்கின்றனர். இதனால் சிலருக்கு மிகுதியான இன்பம் கிட்டலாம். ஆனால்,ஒருகால் பண்பாடு தோன்றும்போது உடலைப் பற்றிய இன்பமே குறைந்துவிடுகின்றது. இன்பத்தைப் பற்றிய அறிவே துன்பத்தைப்பற்றிய அறிவைத் தோற்றுவிக்கிறது. நாம் எந்தப் பாதையில் நடப்பது? நாம் உலகவாழ்வில் துய்க்கும் இம்மியளவு இன்பம், வேறொரு பக்கத்தில் அதேயளவு துன்பத்தை உண்டு பண்ணிக் கொண்டிருக்கிறது. இதுவே நியதி. இளைஞர்களுக்கு இது ஒரு வேளை தெளிவாக விளங்காமலிருக்கலாம்; ஆனால், நெடுங்காலம் வாழ்ந்தவர்கட்கும் வாழ்க்கைப் போராட்டத்தில் போதிய அளவு மூழ்கியவர்களுக்கும் இது எளிதில் விளங்கும். இது மாயை.

இவை இரவும் பகலும் நடந்து வருகின்றன; இந்த இன்னலுக்கு முடிவு காண்பது இயலாது. இது ஏன் இவ்வாறிருத்தல் வேண்டும்? இதற்கு விடை கூறுவது இயலாததே; ஏனெனில், கேள்வியைத் தருக்க முறைப்படி அமைத்துக் கூறுதலே முடியாத காரியம். உலக நடப்பில் எப்படி என்றோ, ஏன் என்றோ கேட்பதற்கு இடமில்லை. அது உள்ளது என்பதையும் நம்மால் அதை மாற்ற முடியாது என்பதையும் மட்டும் அறிகிறோம். அதனை முற்றும் அறிதலோ, அதனைச் சரியானபடி நமது மனத்தில்

படம் வரைந்து கொள்ளலோ நமது ஆற்றலுக்கு அப்பாற்பட்டதாகிறது. அப்படியிருக்க, அதனை நாம் எவ்வாறு தீர்ப்பது? மாயை இந்தப் பிரபஞ்சத்தைப் பற்றிய உண்மையின் உரையே; அது எப்படி இயங்குகிறது என்பதனைப் பற்றிய உரையே. மக்களுக்கு இவற்றை யெல்லாம் இயம்பும்போது அவர்களுக்கும் அச்ச முண்டாகிவிடுகிறது. ஆனால், நாம் தைரியமாகவே இருத்தல் வேண்டும். உள்ளனவற்றை மறைப்பது தீர்வு காணும் முறையன்று. வேட்டை நாய்களால் விரட்டியடிக்கப்படும். முயல், தனது தலையை நன்ருகத் தரையில் மறைத்துக்கொண்டு, தான் அபாயமற்று இருப்பதாக நினைத்துக்கொள்கிறது. இது உங்கள் அனைவர்க்கும் தெரிந்ததே. இதுபோல நாமும் 'நடப்பதெல்லாம் நன்றே' என்ற முடிவிற்கு வரும்போது, முயலின் செயலைப் போன்றதையே செய்கிறோம்; ஆனால், இது பரிகாரமாகாது. இவ்வுண்மையை மறுப்பார் உளர்; ஆனால், அம்மறுப்பு பொதுவாக, இம்மைக்குரிய நல்ல பொருள்கள் பலவற்றைப் பெற்றுள்ளவர்களிடமிருந்தே வருகின்றது என்று நீங்கள் கூறலாம். இந்நாட்டில் (இங்கிலாந்தில்) நலமே முடிவு என்ற வாதத்தில் நம்பிக்கை கொள்ளாதிருப்பது மிகஅரிது. 'உலகம் எவ்வளவு அற்புதமாக நடந்து வருகிறது! எத்துணை முன்னேற்றம் அடைந்துள்ளது!' என்றெல்லாம் ஒவ்வொருவரும் உரைத்து வருகின்றனர்; ஆனால் அவரவர் இருக்கும் நிலையே அவரவரது தனித்த உலகம். பழைய விவாதங்கள் கிளம்புகின்றன; கிறித்துவநாட்டினர் செழுமையுடன் விளங்குவதனால் 'கிறித்துமதமே உலகின் உண்மையான ஒரே மதமாய் இருத்தல் வேண்டுமன்றோ' என்கின்றனர். இக்கூற்று தன்னுள்ளே முரண்பாடுற்றது; ஏனெனில், கிறித்தவர்களின் ஆக்கம் கிறித்தவர் அல்லாதாரின் தாழ்நிலையைப்பொறுத்தேயுள்ளது. சூறையாடுவதற்குச் சிலரேனும் இருக்க வேண்டுமல்லவா? உலகமுழுதும் கிறித்து மதத்தைச் சார்ந்து விடின், கிறித்தவநாடே வறியோர்களால் நிறைந்துவிடும்; ஏனெனில், அவர்களுக்கு இரையாகக் கிறித்தவரல்லாதாரே இரார். இப்படி, அவ்வழக்கு தன்னைத்தானே கொலைசெய்துகொள்கிறது. விலங்குகள் செடி கொடிகளைத் தின்று வாழ்கின்றன; மனி

தர் விலங்குகளைத் தின்று வாழ்கின்றனர் : அனைத்தினும் மிகக் கொடியது யாதெனின், வலியார் தம்மினும் மெலியாரைக் கொன்றுதின்று வாழ்வதே.

இதைத் தீர்க்க வழி யாது ? இதற்கு ஒவ்வொரு நாளும் நாம் பல விளக்கங்களைக் காதில் கேட்கிறோம் ; இறுதியில் எல்லாம் நன்மையாகவே முடியுமென்ற ஆறுதல் மொழியைப் பெறுகிறோம். இது நிகழக்கூடியதென்றே வைத்துக் கொள்வோம் ; நன்மை புரிய இத்தகைய தீய முறை ஏன் ? இப்பாதக முறைகளுக்குப் பதிலாக நன்மையான முறைமூலமாகவே ஏன் நலன் புரிதல் ஆகாது ? இன்று வாழும் மக்களின் சந்ததியார்கள் பிற்காலம் மகிழ்ச்சியோடு கூடியிருப்பார்கள் என்பீர்கள். ஆனல், இன்று ஏன் இத்துணைத் துன்பமுறல்வேண்டும் ? இதற்குத் தீர்வு இல்லை. இதுவே மாயை.

இன்னும் பரிணும முன்னேற்ற முறையில் உள்ள நல்ல அமிசம் ஒன்று யாதெனில், அது தீமையை ஒழிப்பது என்றும், இத்தீமை உலகினின்றும் தொடர்ந்து நீக்கப்படுதலின், இறுதியில் நன்மை ஒன்றே எஞ்சியிருக்கும் என்றும் பன்முறை யாம் கூறக்கேட்டுள்ளோம். இது கேட்பதற்கு மிக நேர்த்தியாயுள்ளது. ஆனல், இது உலகச் செல்வங்களைப் போதிய அளவு பெற்று, ஒவ்வொரு நாளும் அரும்பாடு பட வேண்டாத நிலையுற்று, பரிணும முன்னேற்றம் எனப்படும் சக்கரத்தின் கீழ் நசுக்கப்படாத பதவியிலிருப்போரின் செருக்கை வளர்க்கும் தன்மையது. அத்தகைய திருவுடையவர்களுக்கு இது மிக்க நன்மையையும் ஆறுதலையும் அளிக்கின்றது. சாதாரண மக்கள் துன்புறலாம் ; ஆனல் அவர்களுக்கு அது பற்றிக் கவலையில்லை அவர்கள் இறந்தாலும் அதனல் வருவதென்ன ? மிகு நன்மையே. எனினும், இவ்வழக்கு ஆதிமுதல் அந்தம் வரை பொய்ம்மை பொதிந்ததே. முதலாவதாக, உலகில் வெளிப்படும் நன்மையும் தீமையும் இருவேறு தனிப்பட்ட உண்மைகளென்பது ஒப்புக்கொள்ளப்பட்டதாகக் கருதுகிறது. இரண்டாவது, இதனினும் கேடான பாவனையாதெனில், நன்மையின் அளவு பெருகிவருகிறது. தீமையின் அளவு சுருங்கி வருகிறது என்னும் கொள்கை. இவ்வாருயின், பரிணும முன்னேற்றக் கொள்கைப்படி தீமை உலகினின்றும் ஒழிக்கப்படுமாயின்,

இத்தீமை யாவும் மறைதலின் பயனாக எஞ்சுவதெல்லாம் நன்மையேயாகும் ஒரு காலம் வரும். இதனைச் சொல்வது எளிது. ஆனால், தீமை குறைந்துகொண்டே வருவது என்பதை மெய்ப்பிக்க இயலுமா? சான்றாக, வனவாசி ஒருவனை எடுத்துக்கொள்வோம்; அவன் மனப் பயிற்சியை அறியாதவன்; ஒரு புத்தகத்தைப் படிக்க மாட்டாதவன்; எழுதுவது என்பதைக் கேட்டிராதவன்; அவன் கடுமையான காயமடையினும், வெகு விரைவில் அது குணமாகிவிடுகிறது; ஆனால், நாமோ, ஒரு சிறு காயத்தாலும் இறந்துவிடுவோம். யந்திரங்கள் பொருள்களை மலிவாக்கி முன்றேற்றத்தையும் வளர்ச்சியையும் விளைத்து வருகின்றன; ஆனால் ஒருவன் பணக்காரன் : அதற்காக இலட்சக்கணக்கான மக்கள் நசுக்கப்படுகின்றார்கள். ஒருவன் செல்வம்படைத்தோனாவதற்காக அதே சமயம் ஆயிரக்கணக்கில் மக்கள் வறுமை மிகுந்து வாடுகின்றார்கள்; மனிதர்கள் திரள் திரளாக அடிமைகளாக்கப்படுகின்றார்கள். இவ்வாறே செயல்கள் நடைபெற்று வருகின்றன. விலங்கு மனம்படைத்த மனிதன் புலன்களை ஒட்டியே வாழ்கிறான். அவனுக்குப் போதுமான உணவு கிடைக்கவில்லையானால் அவன் துயருறுகிறான்; உடலுக்கு ஏதேனும் நேர்ந்து விடினும் அவன் இடும்பையுறுகிறான். அவனது இன்பமும் துன்பமும் புலன்களிலேயே தொடங்கி அங்கேயே முடிவடைகின்றன. அவன் முன்னேற்றமடைந்ததும் அவனது இன்பவட்டாரம் விரிவடைந்ததும், அதற்குத்தக்கவாறு அவனது துக்க எல்லையும் பரவி வருகின்றன. காடு வாழ்வான் அழுக்காறு இன்னதென்பதும், நீதிமன்றம் புகுவதும், வரி செலுத்துவதும் சமூகத்தால் குற்றம் சாட்டப்படுவதும் இன்னவென்று அறியான். இன்னும் மனிதனது தீவினை என்றேனும் கண்டு பிடித்துள்ள மாபெருங் கொடுங்கோன்மையால் ஒவ்வொரு மனித உள்ளத்தின் இரகசியங்களையும் அறிந்து வரும் அரசியலால் அல்லும் பகலும் ஆளப்படுதல் இன்னதென்பதையும் அவன் அறியான். மனிதன் தனது விஞ்ஞான அறிவினாலும் ஆணவத்தினாலும் மற்ற விலங்கைக்காட்டிலும் ஆயிரம் மடங்கு கொடுமை வாய்ந்தவன் ஆகிவிடுகிறான் என்பதை அவன் அறியவே அறியான். இப்படி நாம் புலனின்பங்களைக் கடந்து செல்

லும் போது மேலான இன்பம் துய்க்கும் ஆற்றலையும், மிக
மிக மேலான துன்பம் பொறுக்கும் சீலத்தையும் வளர்த்துக்
கொள்ள வேண்டி நேர்கிறது. நரம்புகள் நுண்மையும்,
பொறையும் மிகப் பெற்றனவாகிவிடுகின்றன. ஒவ்வொரு
சமூகத்திலும் அறிவற்ற பாமரன், பழிக்கப்படும் போது
அதிக உணர்ச்சி வசப்படுவதில்லை. ஆனால், அவன் நன்கு
தண்டிக்கப்படும் போது அவனுக்குஉணர்ச்சி கிளம்புகிறது.
ஒரு கனவானோ, வசைச்சொல் ஒன்றையேனும் ஒரு போதும்,
பொறான். அவன் நரம்புகளுக்கு அத்துணை நுண்மை
அமைந்துவிட்டது. இன்ப உணர்ச்சிக்கு வயப்படும் அள
விற்குத்தக்கவாறு துன்பத்திற்கு வசமாகும் அளவும் மிகு
கிறது. ஆகவே, பரிணாம வளர்ச்சிக் கொள்கையினரின்
கட்சியை விளக்க இது பெரிதும் உதவுவதில்லை. இன்பம்
துய்க்கும் ஆற்றலைப் பெருக்கிவரும் அளவிற்கு நாம்
துன்பம் பொறுக்கும் சத்தியையும் பெருக்கி வருகிறோம்.
இன்னும் ஒருபடி மேலே சென்று கூறவும் எனக்கு விருப்பம்
எழுகின்றது. அதாவது இன்பநுகர்ச்சித்திறன் நம்மிடம்
கூட்டலளவை முறையில் ஓங்குமாயின், துயர உணர்ச்சித்
திறன பெருக்கலளவை முறையில் ஓங்கும். முன்னேறி
வரும் நமக்கு விளங்குவது யாதெனில், நாம் முன்னேறு மள
விற்கு நம் இன்பதுன்பங்களைச் சாரும் வழிகள் பலப்பல
வாக விரிகின்றன என்பதே. இது தான் மாயை.

இவ்வாறு மாயை உலகினை விளக்கும் ஒரு கோட்
பாடாகமாட்டாது. உள்ளதை உள்ளவாறு உரைக்கும் ஓர்
உண்மையுரையே அது. அவ்வுண்மையாவது, நமது இருப்
பின் ஆதாரமே ஒரு முரண் ஆகிறது; நாம் செல்லுமிடமெல்
லாம் இம் மாபெரு முரண்பாட்டின் ஊடே தான் செல்ல
வேண்டியிருக்கிறது; எங்கெல்லாம் நன்மையுளதோ, அங்
கெல்லாம் தீமையும் உண்டு; தீமையுள்ள இடத்தில் சிறிது
நன்மையும் இருந்தே தீரும்; வாழ்வுள்ள இடத்தே சாவும்
உண்டு. சிரிக்கும் எவனும் அழவேண்டி வரும்; அழுபவனுக்
குச் சிரிக்கும் காலமும் வரும். இந்நிலையை எதனாலும் மாற்ற
இயலாது. தீமையே நன்மையேயற்று உள்ள ஓரிடத்தையும்,
நமக்குச் சிரிப்பேயன்றி அழுகை அற்ற இடத்தையும் கற்
பனைக்கண் முன் காணலாம் என்பது உண்மையே. இது

உலகப் பொருள்களின் இயலினாலே நிகழ வொண்ணாத தோன்றும். ஏனெனில், நிலைமைகள் ஒரே வண்ணமாகவே இருக்கும். எங்கெல்லாம் நமக்குச் சிரிப்பு மூட்டும் சக்தி யுண்டோ, அங்கெல்லாம் அழுகையைத் தோற்றுவிக்கும் ஆற்றலும் பதுங்கிக் கிடக்கும். எங்கெல்லாம் இன்பம் பயக்கும் திறன் உளதோ, அங்கெல்லாம் நமக்குத்துயர்தரும் திறனும் அடங்கிக் கிடக்கும்.

இவ்வாறு, வேதாந்தம் 'எல்லாம் நன்மைக்கே,' என்றோ, 'எல்லாம் தீமைக்கே,' என்றோ கருதுவதில்லை. அது இவ் விரண்டு கொள்கைகளையுமே குறித்துப் பேசுகிறது; பொருள்களை உள்ளவாறே ஏற்றுக் கொள்கிறது; 'இவ்வுல கம் நன்மையும் தீமையும், இன்பமும் துன்பமும் கலந்த தாகவே, உள்ளது. ஆதலால், ஒன்றைப் பெருக்கும் போது மற்றொன்றையும் கட்டாயம் பெருக்கியே யாக வேண்டும்,' என்பதனை ஒப்புக்கொள்கிறது. ஒரு போதும் முழுதும் நல் லுலகமோ முழுதும் தீயவுலகமோ இருக்கப் போவதில்லை. ஏனெனில், இத்தகைய கருத்தே வெளிப்படும் மர்மம் (இரக சியம்) யாதெனில், நன்மையும் தீமையும் தனித்தனியாக வைக்கப்பட்டுள்ள இரண்டு வெவ்வேறான இருப்புகளல்ல. நாம் வாழும் இவ்வுலகில், 'இது நன்றே யாகும்,' என்றுகுறிப் பிடத்தகும் பொருள் ஒன்றும் இல்லை; அம்மாதிரியே, 'இது தீதேயாகும்,' என்று சுட்டத்தகும் ஒரு பொருளும் இப் பிரபஞ்சத்தில் இல்லை. இப்போது நல்லதெனத் தோன்றும் ஒரு நிகழ்ச்சி, நாளைக்குத் தீயதாகத் தென்படலாம். ஒருவருக் குத்துன்பமிழைக்கும் ஒரு பொருள், மற்றொருவருக்கு மகிழ்ச் சியளிக்கலாம். குழந்தையைச் சுட்டுப் பொசுக்கும் தீ, பசித்த வன் ஒருவனுக்கு நல்லுணவைச் சமைக்க உதவலாம். எந்த நரம்புகள் துன்ப உணர்ச்சிகளைச் செலுத்துகின்றனவோ, அவைகளே இன்ப உணர்ச்சிகளையும் எடுத்துச் செல்கின்றன. தீமையைத் தடுக்கும் ஒரே வழி யாதெனில், நன்மையையும் தடுத்துவிடுவதேயாகும். வேறு வழி இல்லை. மரணத்தை நிறுத்தவேண்டுமானால், வாழ்வையும் நிறுத்த வேண்டி வரும். சாவில்லாத வாழ்க்கையும், துன்பங்கலவாத இன்ப மும் ஒன்றுக்கொன்று மாறுபட்டவையே, இவ்விரண்டில் எதுவும் தனித்து நிற்க இயலாது; ஏனெனில், இவையிரண்

டும் ஒரே பொருளின் வெவ்வேறு தோற்றமேயாம். நான் நேற்றைய தினம் நன்றென்றெண்ணியதை இன்று நன்றென்று நினைப்பதில்லை. நான் எனது முன்னுளைய வாழ்வைப் பின்னோக்கி வெவ்வேறு காலங்களில் என்னென்ன இலட்சியங்களாயின என்பதைப் பார்க்கும்போது, எனக்கு இவ்வாறு காணப்படுகிறது. ஒரு சமயம் வலிமை வாய்ந்த ஒரு சோடி குதிரைகளைப் பூட்டிய வண்டியை ஓட்டுவதே எனது இலட்சியமாயிற்று. மற்றொரு வேளையில் நான் ஒரு வித இனிப்புப்பண்டத்தைச் சமைக்கக் கூடுமானால் எனக்குப் பூரண இன்பம் உண்டாகும் என்றெண்ணினேன்; பின்னர் மனைவியும் மக்களும் நிறைசெல்வமும் இருப்பின் எனக்கு முழுத்திருத்தி உண்டாகும் என்று கருதினேன். இன்றோ, இந்த இலட்சியங்கள்யாவும் குழந்தைக்குரிய முட்டாள் தனமே என்று எள்ளி நகையாடுகிறேன். நமது தனித்தன்மையைத்துறத்தற்கு அஞ்சச்செய்யும் உயர் கொள்கைகளைக் கண்டு நகைக்கும் காலம் வந்தேதீரும் என்று வேதாந்தம் கூறுகின்றது. நாம் மிகுந்த சந்தோஷத்துடன் வாழ்வோமென்றெண்ணி இவ்வுடலை வரையறையின்றி நெடுங்காலம் வைத்திருக்க வேண்டுமென்று நம்முள் ஒவ்வொருவரும் விரும்புகிறோம். ஆனால் இக்கருத்தைக் குறித்து நாம் நகைக்கும் காலம் வரும். இது உண்மையானால், நாம் நம்பிக்கைக்கே இடமில்லாத முறையிலே முரண்பாடுகளுற்ற நிலையில் உள்ளவராவோம். சத்துமில்லை அசத்துமில்லை; துன்பமுமில்லை; இன்பமுமில்லை; இவ்விரண்டின் கலப்பே உள்ளது. அவ்வாறாயின், வேதாந்தம் முதலான தத்துவதரிசனங்கள் சமயங்கள் அனைத்தாலும் பெறும் பயன் தான் யாது? எல்லாவற்றிற்கும் மேலாக நற்கருமம் ஆற்றிவரும் பயன்தானென்ன? இத்தகைய வினா மனத்திலே எழுகின்றது. தீங்கிழையாது உங்களால் நன்மையே புரிய இயலாதெனில், நீங்கள் இன்பம் பயக்க முனையும் போதெல்லாம் கூடவே துன்பமும் தோன்றுமென்றால், மக்கள் உங்களை, "நீங்கள் நன்மை செய்வதன் பயனென்ன? என்று கேட்பார்கள்." இதற்கு விடை யாது? முதலாவதாக, துன்பத்தைக்குறைக்க நாம் உழைக்க வேண்டும்; ஏனெனில் நம்மை இன்புறச்

செய்ய அதுவே வழி. நம்முள் ஒவ்வொருவரும் நமது வாழ்க்கையில் முன்னரோ, பின்னரோ காண்கின்றோம். அறிவொளி மிக்கவர் சற்று விரைவாகவே இதனையறி கின்றனர்; அறிவு குறைந்தவர் சிறிது பொறுத்துக் கண்டு கொள்கின்றனர். மந்தமதிகள் இவ்வறிவைப் பெறப் பெருந் துன்பமுறுகின்றார்கள்; அறிவாற்றலுள்ளவர்கள் அத் துணைத் துன்பம் உறுவதில்லை.

இரண்டாவதாக, நாம் நமக்குரிய பங்கை வாழ்க்கையில் செய்தே தீரவேண்டும்; ஏனெனில், அது ஒன்றே மாறுபாடு நிறைந்த இவ்வாழ்க்கையை விட்டு வெளியேறும் வழி. நாம் நமது கனவுகளினின்றும் விழித்துக்கொண்டு, மண்-கறி சமைப்பதை விட்டொழிக்கும் வரை நன்மைதீமைகள் எனும் சக்திகள் இரண்டுமே எல்லா உலகையும் நமக்கு உயிருள்ளதாகச் செய்து வைக்கின்றன. இப்பாடமே நாம் படிக்க வேண்டியிருக்கும்; இதற்கு மிக மிக நீண்ட காலம் தேவைப்படும். வரையறைக்கு அப்பாற்பட்ட பரம் பொருளே வரையறைக்குட்பட்ட பொருளாயிற்று எனும் ஆதாரத்தின் மீது ஜெர்மனியில் ஒரு சித்தாந்தத்தை நிறுவ முயற்சிகள் செய்யப்பட்டுள்ளன. இத்தகைய முயற்சிகள் இங்கிலாந்திலும் நடை பெற்றுள்ளன. இத்தத்துவக்கலை ஞர்களின் கொள்கைகளை ஆராய்ந்து கூறின், இதுவே அதில் அடங்கிய கருத்தாகும்: அகண்டப் பிரம்மம் தன்னை இப்பிரபஞ்சத்தில் வெளிப்படுத்த முயன்று வருகிறது; அது அம்முயற்சியில் வெற்றி பெறும் ஒரு காலம் வரும் என்பதே. இது மிக நன்றே; நாம் 'அகண்டம்' 'வெளிப்படுத்தல்', 'தோற்று வித்தல்' என்னும் மொழிகளைப் பயன்படுத்துகி ன்றோம். ஆனால், தத்துவ நூல் வல்லுநர் அகண்டப் பொருளைக் கண்டப் பொருள் முழுதும் தோற்றுவிக்க இயலும் என்று உரைப்பதற்குத் தருக்க ரீதியான ஆதாரம் (அடிப்படை) யாது என்று கேட்பார்கள். பாரமார்த்திகப் பொருளும் அகண்டப் பொருளும் தன்னை வரையறைக்கு உட்படுத்திக் கொண்ட பின்பே இப்பிரபஞ்சம் ஆகக்கூடும். புலன்வழி யாகவோ மனம் வழியாகவோ அறிவு வழியாகவோ வரும் ஒவ்வொன்று அளவுக்குட்பட்டதாகவே இருத்தல்வேண்டும்.

அளவுக்குட்பட்ட பொருள் அளவற்றதாதல் யுத்திக்கு ஒவ்வாததேயாம். அது ஒரு காலும் ஆகப்போவதில்லை.

அதற்கு மாருக வேதாந்தம் கூறுவது யாதெனில், பரம்பொருளோ அகண்டப் பொருளோ கண்டப் பொருளில் தன்னை வெளிப்படுத்த முயன்று வருகின்றது; ஆனால், அது இயலாததொன்றே என்பதனைக் கண்டுகொள்ளும் காலம் வரும். அப்போது அது பின்வாங்க நேரும். இவ்வாறு பின்வாங்குதலே தியாகமாகும்; இத்தியாகமே சமயத்தின் உண்மையான தொடக்கம், என்பதேயாகும். இக்காலத்தில் தியாகம் பற்றிப் பேசுதலே மிகக் கடினமானது. ஐயாயிரம் ஆண்டுகளாக இறந்து புதைக்கப்பட்டிருந்த ஒரு நாட்டிலிருந்து வந்து தியாகத்தைப் பற்றிப் பேசுபவர் இவர் என்று என்னைக்குறித்து அமெரிக்கர் பேசினர். ஆங்கிலத் தத்துவ அறிஞரும் இவ்வாறே சாற்றுவர் போலும். ஆனால் சமயத்திற்கு அழைத்துச் செல்லும் நெறி தியாகம் ஒன்றே என்பது உண்மை. தியாகம் புரியுங்கள்; துறந்துவிடுங்கள். ஏசுநாதர் வாக்கை நினைவு கூருங்கள்; "என் பொருட்டுத் தன் உயிரைத் துறப்பவன் அதனை மீண்டும் பெற்றுவிடுவான்." பூரணத்துவம் பெறத் தியாகந்தான் ஒரே மார்க்கம் என்று அவர் திரும்பத் திரும்பப் பகர்ந்தார். இதுவே அவர் கற்பித்த கற்பனை: "பயங்கரமான நெடுங் கனவினின்றும் உள்ளம் விழித்தெழும் காலம் ஒன்று வரும்." குழந்தை தன் விளையாட்டை விட்டு விட்டுத் தனது தாயிடம் செல்ல விரும்புகின்றது; அது (அவ்வுள்ளம்) பின்வரும் உரையின் உண்மையைக் காண்கிறது. 'ஆசைகளை அனுபவித்தால் ஒரு நாளும் ஆசை திருத்தியடைவதில்லை; அது அனுபவிக்கும் அளவிற்கு ஓங்கத்தான் செய்கிறது. நெய்யினைத் தீயில் சொரிவதால் தீ வளர்வதேபோல்வது அது.' மேலே கூறப்பட்டுள்ளது ஐம்புல இன்பங்கள் அனைத்தையும் குறித்தும், மனித உள்ளத்தால் அனுபவிக்கக்கூடிய எல்லாப் போகங்களையும் குறித்தும் மெய்யேயாம். அவையாவும் 'இல்பொருள்களே.' அவை மாயைக்குள் அடங்கியவை. அவை நம்மால் கடக்க இயலாத இவ்வலைக்கு உட்பட்டனவேயாம். எல்லை கடந்த கால அளவும் நாம் அம்மாய வலையினுள் ஓடிவந்தாலும், அவ்

வோட்டத்தின் இறுதிப் பயனைக்காண இயலாது ; நாம் ஏதோ ஒரு சிறிது இன்ப நுகர்ச்சியைப் பெற முயலுங்கால் ஒரு துன்பக் குவியலே நம்மீது குவிகின்றது. இது எத்துணைப் பயங்கரமானது! இதனை நினைக்கும்போது, இந்த மாயைக் கொள்கையே, யாவும் மாயையின் காரியம் என்ற இம்முடிபே அனைத்திலும் சிறந்த ஒரே விளக்கமாகும். இவ்வுலகிலே எத்துணைத் துயரம் உள்ளது ! பல நாடுகளுக்கும் கடற் பிரயாணஞ் செய்வீர்களாயின், ஒரு நாடு தனக்குள்ள தீங்குகளைப் போக்க ஒரு வழியில் முயல, இன்னொரு நாடு இன்னொரு வழியில் முயல்கின்றதை நீங்கள் காண்பீர்கள். ஒரே கேட்டினை ஒழிக்கவே பல நாடுகளும் பாடுபடுகின்றன: அதனைத் தடுக்கப் பலவாறு முயற்சிகள் நடைபெற்றுள்ளன; ஆயினும் எந்த நாடும் வெற்றி காணவில்லை. ஒரு பக்கம் அதனை மிகச் சிறிய அளவிற்குக் குறைத்துவிடின், இன்னொரு பக்கம் அக் கேடு பேரளவிற்குத் திரண்டு விடுகிறது. இதுவே நடைமுறை. இந்தியர் தம் இனத்தார்க்குள் கற்பின் ஆட்சியை மிக உயர்ந்த நிலையில் அமைக்கக் கருதி இளமைமணத்தை அனுமதித்தனர்; ஆனால், நெடுங்காலத்திற்குப் பின் இதனால் இனத்திற்கே இழிநிலை ஏற்பட்டுவிட்டது. ஆனாலும், அதே சமயம் இளமைப்பருவ மணம் இனத்தாரைக் கற்பிற் சிறந்தவர் ஆக்குகின்றது என்பதையும் என்னால் மறுக்க இயலவில்லை. உங்களுக்கு எது வேண்டும்? மக்களினம் மிக்க மிக்க கற்புடன் வாழவேண்டுமாயின், ஆணையும் பெண்ணையும் இளமை மணத்தால் உடல் வலிமையற்றவர்களாக்க வேண்டுவதாகிறது. மற்றொரு பக்கத்தில், இங்கிலாந்திலுள்ள நீங்கள் அவர்களினும் அதிக நலமுற்று வாழ்கிறீர்களா ? இல்லை; ஏனெனில், ஒரு நாட்டின் உயிர் நாடி கற்பேயாம். கற்பற்ற நிலையே ஒரு நாட்டின் அழிவுக்கு அறிகுறியாயிருந்துள்ளதை வரலாற்றிலே நீங்கள் காணவில்லையா? அந்நிலை நாட்டில் நுழைந்து விடின், அந்த மக்களினம் விரைவிலே அழிந்துவிடும். ஆதலால், துயரங்களைத் தீர்க்கும் வழியை எங்கே காண்பது? பெற்றோர்களே தங்கள் மக்களுக்குரிய மணமகனையோ மணமகளையோ தேர்ந்தெடுக்கக் கூடுமானால், இக்கேடு மிகக் குறையும். இந்தியப் பெண்மணிகள் உணர்ச்சி வயப்படாது காரிய நடைமுறையிலே கருத்தா

யிருக்கின்றார்கள். ஆனால், அவர்களது வாழ்க்கையில் காவிய இன்பம் காண அரிதாகின்றது. இன்னும், மக்கள் தாங்கள் தங்களுக்கு உகந்த துணைவரைத் தேர்ந்தெடுக்கும் போதும் அதிக இன்பமுண்டாவதாகத் தெரியவில்லையே! இந்தியமாது பொதுவாக மிக இன்பமாய் வாழ்கின்றாள்: மணவாழ்க்கையில் சதிபதிகள் ஒருவரோடொருவர் பூசலிட்டுக் கொள்வது மிகச் சிலரிடத்தேதான் காணப்படுகிறது. இதற்கு நேர் மாறாக, மணப்பதில் மிகவுயர்ந்த சுதந்தரம் அளிக்கப்படும் அமெரிக்காவின் ஐக்கிய நாடுகளிலோ, துயரமிக்க இல்லங்கள் மணங்கள் இவற்றின் தொகை பெரிதேயாகிறது. துயரம் இங்கும், அங்கும், எங்கும் உள்ளது. இது எதனைக் குறிக்கின்றது எனில், இவ்வுயர் இலட்சியங்களால் அதிகமான சுகமொன்றும் மக்களுக்குக் கிட்டிவிடவில்லை என்பதைத்தான். எல்லோரும் இன்பத்துக் கெனவே போராடுகிறோம். ஒரு பக்கம் சிறிது இன்பம் கிடைத்து விடின், மற்றொரு பக்கத்தில் துன்பமும் வந்து சேர்கின்றது.

அவ்வாறாயின், நாம் நன்மை செய்தற்காக உழைக்க வேண்டாவா? ஆம்; என்றைக்கும் உள்ளதைவிட மிக்க உற்சாகத்துடனே உழைக்கவே வேண்டும். ஆனால், இந்த அறிவினால் நமக்கு விளையும் பயன் யாதெனில், நமது மூடநம்பிக்கை வெறியை நீக்கி விடுதலேயாம். ஆங்கிலேயன் மூடக்கொள்கை வெறியால் இந்தியனைச் சபிக்க மாட்டான். அவன் வெவ்வேறு நாட்டினரின் பழக்க வழக்கங்களை மதிக்க முற்படுவான். மதவெறிக்குறைவும் உண்மை உழைப்பின் மிகுதியும் உண்டாகும். கொள்கை வெறியினர் உழைக்க இயலாது. அவர்கள் தங்கள் சக்தியில் முக்காற் பகுதியை வீணாக்கி விடுகின்றார்கள். சமநிலையிலுள்ள அமைதியான, கருமத்திற் கண்ணாயுள்ள மனிதனே உழைப்பவனாவன். ஆதலால், இக்கருத்திலிருந்து வேலை செய்யும் ஆற்றல் மிகும். இதுதான் உண்மை நிலை என்ற அறிவு ஏற்பட்டவுடன் பொறுமை மேன்மேலும் பெருகும். துன்பத்தினையோ கேட்டினையோ பார்ப்பதால் நாம் நமது சமநிலையை இழந்து நிழல்களைத் தேடியோட மாட்டோம். ஆகையால், உலகம் தன் வழியிலேதான் செல்லுமென்ற அறிவினால் நாம் பொறுமையை மேற்கொள்வோம். சான்றாக, மாந்தர்

அனைவரும் நல்லவராகிவிடின்; அதற்கிடையில் விலங்குகளும் மனிதர்களாக முற்றி வளர்ந்துவிடும் அதே மனித நிலையைக்கடக்க வேண்டும். இத்தகையதுதான் செடிகொடிகளின் நிலையும். ஆனால் ஒன்று மட்டும் உறுதி: பேராறு கடலை நோக்கி விரைகின்றது; அதிலுள்ள ஒவ்வொரு நீர்த்துளியும் தக்க காலத்தில் எல்லையற்ற பெருங் கடலால் இழுத்துக் கொள்ளப்படும். அதேபோல், இந்த வாழ்க்கையிலும் எத்துணைத் துன்பமும், துயரமும், இன்பமும் புன்சிரிப்பும் கண்ணீரும் காணப்படினும் ஒன்றுமட்டும் திண்ணம்: அதாவது, பொருள்களனைத்தும் தத்தமது குறிக்கோளை நோக்கி விரைந்து செல்கின்றன; நீங்களும் நானும், செடிகளும், விலங்குகளும், இங்குள்ள உயிரின் ஒவ்வொரு சிறு பகுதியும் எல்லைகடந்த பரிபூரணம் என்னும் கடலை அடைந்தே தீரவேண்டும்; முத்தியைப் பெற்றே ஆகவேண்டும்; கடவுளை அடைந்தே தீரவேண்டும்.

மற்றொரு முறையும் அழுத்தமாகக் கூறுவேன்; வேதாந்தத்தின் கொள்கை, யாவும் நன்மைக்கே என்பதுமன்று, யாவும் தீமைக்கே என்பதுமன்று. அது உலகம் முற்றும் நன்மையானதென்றோ முழுதும் தீயதென்றோ கூறுவதில்லை. அது உரைப்பதெல்லாம் இதுவே; நமது தீமை நமது நன்மையினும் குறைந்த மதிப்புடையதன்று. அம்மாதிரியே நமது நன்மையும் நமது தீமையினும் அதிக மதிப்புடையதன்று என்பதே. இரண்டும் ஒன்றாகவே பிணைக்கப்பட்டுள்ளன. இதுவே உலகம்; இதனையறிந்தே நீங்கள் பொறுமையுடன் உங்கள் வினையையாற்றுகிறீர்கள். எதற்காக? தொழில் புரியவேண்டுவது ஏன்? நிலை இவ்வாறிருப்பதெனின், நாம் செய்ய வேண்டுவது யாது? நாம் ஏன் *அஞ்ஞேய வாதிகளாகி விடக்கூடாது? இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு இல்லை என்பது இக்கால அஞ்ஞேயவாதிகளுக்கும் தெரியும். மாயை என்னும் தீமையின் பிடியினின்றும் தப்ப வழியில்லை. ஆதலாலேதான் அவர்கள் இவ்வாழ்க்கையில் திருத்தியுற்று, இன்பம் நுகரவேண்டும் என்கின்றார்கள். இதிலும் ஒரு தவறு—ஒரு பெருந்தவறு—

* அஞ்ஞேயவாதம் (Agnosticism) கடவுளுண்மை நமக்குத் தெரியமாட்டாது; அது தேவையுமில்லை, என்ற வாதம்.

உள்ளது; தருக்கமுறைக்கு ஒவ்வாத பெரும் பிழையுள்ளது
அது இதுதான் : வாழ்க்கையைப் பற்றி உங்கள் கருத்து
யாது? ஐம்புல வாழ்வு மட்டும் என்பதுதான் நீங்கள்
கொள்ளும் பொருளா? இதில் நம்முள் ஒவ்வொருவரும்
விலங்கினத்தினின்றும் சிறிதளவே வேறு பட்டுள்ளோம்.
வாழ்வின் ஐம்புலன்களாகவே உள்ள எவரும் இங்கு இல்லை
யென்றே நான் உறுதி கூறுவேன். இது உண்மையாயின்,
இப்போதைய நமது வாழ்க்கை அதனினும் மிக்கது என்றே
நான் கொள்கிறேன். நம் உணர்ச்சிகள், எண்ணங்கள்,
உயர்ந்த விருப்பங்கள் ஆகிய இவையாவும் நமது வாழ்க்கை
யின் ஒரு பகுதியே. அதனால், நமது உயர்ந்த இலட்சியத்திற்
காக, பூரண நிலையைப் பெறுவதற்காக, நாம் பாடுபடுவது,
நாம் வாழ்வு என்று கூறுவதன் மிக முக்கியமான உட்
பகுதிகளில் ஒன்றல்லவா? அஞ்ஞேயவாதிகளின் கொள்கைப்
படி நாம் இந்த வாழ்க்கையை உள்ளவாறே நுகரவேண்டும்.
ஆனால், இந்த வாழ்க்கை என்பது அனைத்திற்கும் மேலாக,
இலட்சியத்தைத் தேடுதலையும் குறிக்கின்றது; வாழ்க்கை
யின் சாரமாவது, பூரணத்தை நோக்கிச் செல்வதேயாம்.
அதை நாம் பெற்றே ஆகவேண்டும். நாம் அஞ்ஞேயவாதி
களாய் இருக்க இயலாது; வாழ்க்கையைத் தோற்ற நிலையில்
ஏற்றுக்கொள்பவராக இயலாது. அஞ்ஞேய வாதியின் கொள்
கைப்படி, இலட்சிய வாழ்வுப்படி தீமையற்ற இவ்வாழ்வே
இருப்பதெல்லாம் என்பதாகும்; அந்த இலட்சியம் அடைய
வொண்ணாததென்பதை அவர்கள் ஒப்புக்கொள்ளுதலின்,
அதனைத்தேடும் முயற்சியைக் கைவிடவேண்டும் என்கின்றார்
கள். இதுதான்—இவ்வியற்கையே, இப்பிரபஞ்சமே—மாயை
எனப்படுவது. மதங்கள் யாவுமே, ஏறக்குறைய, இயற்கைக்கு
அப்பாற் செல்லும் முயற்சிகளேயாகும். மதங்கள் பண்
படாதனவாயினும், மிகப் பண்பட்டனவாயினும், புராணங்
கள் வாயிலாகவோ குறியீடுகள் மூலமாகவோ வெளிப்
படுத்தப்படினும், தேவர்கள் தேவதூதர்கள் அசுரர்கள்
இவர்களைப்பற்றிய கதைகள் வாயிலாகவோ, இருடியர்,
ஞானியர், பெரியார், தீர்க்க தரிசிகள் இவர்களைப்பற்றிய
கதைகள் வாயிலாகவோ, தத்துவ சாத்திரத்துக்குரிய
பண்புக் கருத்துகள் வாயிலாகவோ வெளியிடப்படினும்,

அவையெல்லாம் அவ்வொரே நோக்கத்தையுடையவை. அனைத்தும் இவ்வரையறைகட்கு அப்பாற் செல்ல முயன்று கொண்டிருக்கின்றன. சுருங்கக் கூறின், அவையாவும் விடுதலையடையப் பாடுபட்டுக்கொண்டிருக்கின்றன எனலாம். மனிதனுக்கு, அறிந்தோ அறியாமலோ, தான் கட்டுண்டவன் என்னும் உணர்ச்சி ஏற்படுகிறது; தன் விருப்பப்படி அவன் இல்லை. அவன் பல பக்கங்களிலும் சுற்றிப் பார்க்கத் தொடங்கும்போதே அப்போதனை அளிக்கப்படலாயிற்று. அப்போதே அவன் தான் கட்டுண்டவன் என்பதை அறிந்து கொண்டான் : மேலும், தன்னிடத்து ஏதோ ஒன்று இருந்து உடல் செல்லக்கூடாத இடத்துக்கு எதற்கும் அப்பால் பறந்து செல்லுமாறு விரும்புவதையும், ஆனால் அது இன்னும் இவ்வரையறை யென்னும் தளைக்கு உட்பட்டிருப்பதனையும் உணர்கிறான். இறந்துபோன முந்தையோரின் ஆவிகளும் பிறபேய்களும் பெரும்பாலும் வல்வினையும் கொடுமையும் வாய்ந்து தம் நண்பர்களின் வீடுகளைச் சுற்றி, மறைவாயிருந்து, குருதியைச் சொரிதலையும், குடியையும் விழைந்து திரிவதாகக் கருதி அப்பேய்களை வணங்கும் மிகத் தாழ்ந்த வகை மதத்திலும், சுதந்தரமென்னும் அப்பொது அமிசத்தைக் காண்கிறோம். தெய்வங்களைத்தொழ விழையும் மனிதன், எல்லாவற்றிற்கும் மேலாக அவற்றினிடம் காண்பது, தன்னிடத்தில் உள்ளதினும் மிக்க சுதந்தரமே. ஒரு கதவு அடைக்கப்பட்டிருந்தாலும், தெய்வங்கள் அது வழியாகப் புக இயலும் என்றும், சுவர்கள் அவற்றைக் கட்டுப்படுத்தமாட்டா என்றும் அவன் நினைக்கிறான். சுதந்தரம் பற்றிய இக்கருத்து வளர்ந்து இறுதியில் சகுணக் கடவுள் வரை வருகிறது; இக்கடவுட்கருத்தில் அடங்கிய பரம்பொருளின் சிறந்த பகுதியாவது, இயற்கையின்—அதாவது மாயையின்—வரையறையைக் கடந்திருக்கும் நிலையே. வனங்களிலுள்ள ஏகாந்த இடங்களில் இந்தியாவின் பண்டைய இருடிகளால் இதே கருத்து ஆராய்ச்சி செய்யப்படுவது போல என் மனக்கண் முன் காண்கிறேன். அவற்றில் ஓர் ஆச்சிரமத்தில், மிக்க முதுமையும் புனிதமும் வாய்ந்த முனிவரும் முடிவு காணாது திகைத்தபோது, இளைஞன் ஒருவன் அவர்களுக்கு நடுவே எழுந்து பின்வரு,

மாறு உறுதிமொழி புகல்வதாக என் செவியில் விழுகின்றது: "கேளுங்கள்: அமரவாழ்விற்குப் பிறந்த குழந்தைகளே, மிக மேலான உலகங்களில் வாழ்பவர்களே, கேளுங்கள்: நான் நெறியைக் கண்டு விட்டேன். இருளுக்கப்பாலுள்ள பரம்பொருளை அறிவதனால் நாம் மரணத்தைக் கடந்து செல்லக்கூடும்."

இம்மாயை எங்குமுளது. இது கொடுமையானது. ஆயினும், நாம் இதன் மூலமே வினையாற்ற வேண்டியிருக்கிறது. உலகம் முழு நன்மையுடன் விளங்கும் போதுதான், உழைத்துப் பேரின்பம் பெறலாம் என்று எண்ணுபவன் கங்கைக் கரையில் உட்கார்ந்துகொண்டு, "இந்த நீரெல்லாம் கடலிற் புகுந்த பிறகு நான் இந்நதியைக் கடந்து செல்வேன்," என்று சொல்லுபவன் எவ்வளவு காரியசித்தி பெறக்கூடுமோ அவ்வளவேதான் காணக்கூடும். வழி மாயையுடன் செல்வதன்று; அதனை எதிர்த்துச் செல்வதே. இது அறியவேண்டிய மற்றொரு கருத்து. நாம் இயற்கைக்குத் துணை புரிபவர்களாகப் பிறக்க வில்லை; அதனுடன் போட்டியிடுபவர்களாகவே பிறந்துள்ளோம். நாம் இயற்கையைக் கட்டுப்படுத்தும் இனமானவர்கள். ஆனால், நாம் நம்மையே கட்டுப்படுத்திக் கொண்டுவிடுகிறோம். இந்த வீடு ஏன் இங்கே இருக்கிறது? இயற்கை இதனைக் கட்ட வில்லையே! இயற்கையானது, மனிதனை நோக்கி, "சென்று வனத்தில் வாழ்," என்று சொல்கிறது. மனிதனோ, "நான் ஒரு வீடு கட்டுவேன்; இயற்கையுடன் போராடுவேன்," என்கிறான்; அவ்வாறே செய்கிறான். மனித இனத்தின் வரலாறு முழுவதும் இயற்கையின் நியதிகளெனக் கூறப்படுவனவற்றோடு ஓயாத போராட்டமேயாம்; இறுதியில் மனிதனே வெற்றி காண்பவன். அகவுலகை, நோக்கும் போதும், அங்கும் இத்தகைய போரே நிகழ்கின்றது; மனிதனின் மிருக இயற்பகுதிக்கும் ஆன்ம இயற் பகுதிக்கும், இருளுக்கும் ஒளிக்கும் போர் நடைபெறுகிறது; இங்கும் மனிதனே வெல்கின்றான். அவன் இயற்கையை ஊடறுத்துச் சுதந்தரத்திற்கு வழி கோலுகிறான். ஆகவே, இம்மாயைக்கு அப்பால், மாயையினால் கட்டுண்ணப் பெறாத ஏதோ ஒன்றை வேதாந்த அறிஞர் காண்கின்றனர் என்பதையும், நாம் அங்குச் செல்லக்

கூடுமாயின் நம்மை மாயையானது கட்டுப் படுத்ாது என்பதையும் நாம் அறிகிறோம். இக்கருத்து, ஏதோ ஒரு வடிவில் எல்லா மதத்தவர்கட்கும் பொதுச் சொத்தாகவே இருக்கிறது. ஆனால், வேதாந்தத்தின் முடிவு யாதெனில், அது மதத்தின் ஆதியேயல்லாது அந்தமன்று என்பது. உலகை யாள்பவர், படைத்தவர் என்று கூறப்படுபவரும் மாயை எனும் இயற்கையையே அடக்குபவரும் ஆகிய சகுணக் கடவுளைப் பற்றிய கருத்து வேதாந்தக் கருத்துகளின் முடிவாகாது. அது அவற்றின் தொடக்கமேயாம். இந்தக் கருத்து மேன் மேலும் வளர்ச்சியுறுகிறது. புறத்தேயிருப்பதாக வேதாந்தி எண்ணியிருந்த அக்கடவுள் (பரம் பொருள்) தானே என்றும் அது தன்னுள்ளேயே உறைகின்றது என்றும் அவன் உணர்கிறான். சுயேச்சையோடு இருந்தும் உபாதியினால் தன்னைக் கட்டுக்கு அடங்கியவனாகக் கற்பனை செய்து கொண்டவன் அவனே என்பதுதான் முடிவு.

மாயையும் கடவுட்கருத்தின் வளர்ச்சியும்

(இலண்டனில் 20–10–1896-ல் ஆற்றிய சொற்பொழிவு)

அத்துவைத வேதாந்தத்திற்கு அடிப்படையாகவுள்ள கொள்கைகளிலொன்ருன மாயை என்னும் கருத்து முளை வடிவில் சங்கிதைகளிலும் காணப்படுவதையும், உண்மையாகவே, உபநிடதங்களில் பிற்காலத்தே வளர்ச்சி எய்தியுள்ள எல்லாக் கருத்துகளும் யாதோ ஓர் உருவில் சங்கிதைகளில் முன்னரே காணப்படுகின்றன என்பதையும் முன்பே குறித்துள்ளோம். மாயை எனும் கருத்து இதற்குள் உங்களிற் பெரும்பாலோர்க்குப் புலப்பட்டிருக்கும். சில சமயம் அதனை மித்தையெனத் தவருக விளக்குவதையும் நீங்கள் அறிந்திருப்பீர்கள் : அவ்வாறு கொள்ளுங்கால் பிரபஞ்சமே மாயை என்னும்போது அதனையும் மித்தையெனவே விளக்க வேண்டுவதாகின்றது. அச்சொல்லின் மொழி பெயர்ப்பு அழகாகவோ சரியானதாகவோ இல்லை. மாயை என்பது ஒரு கொள்கை யன்று; உள்ளபடி உலகத்தைப் பற்றிய உண்மைகளின் உரையேயாகும். மாயை இன்னதென அறிதற்பொருட்டு நாம் சங்கிதைகட்கே திரும்பிச் சென்று அக்கருத்தின் முளையிலிருந்து தொடங்க வேண்டும். தேவர் என்னும் கருத்து முதன்முதல் எப்படி வந்ததென்பதனை நாம் கண்டுள்ளோம். அதே சமயம் தேவர்கள் ஆதியில் பெருஞ் சத்தி பெற்ற உயிர்களே யல்லாது வேறல்லர். உங்களிற் பலரும் பழைய சாத்திரங்களைப் படிக்கும்போது அவை கிரேக்கர்க்கோ ஹிப்ருக்களுக்கோ பாரசீக நாட்டினர்க்கோ உரியவாயினும் சரியே—அக்காலத்துக் கடவுளர் நமக்கு மிகவும் வெறுப்பு அளிக்கக்கூடிய செயல்களைச் சில சமயம் செய்தனர் என்பதைக் கண்டு நீங்கள் திகிலடைகிறீர்கள். ஆனல், நாம் அந்நூல்களைப் படிக்கும்போது நாமனைவரும் பத்தொன்பதாவது நூற்ருண்டைச் சார்ந்த மக்களாவதையும், அக்கடவுளர் அனைவரும் பலப்பல நூற்ருண்டுகளுக்கு முன்னர் இருந்தவர் என்பதனையும் முற்றும் மறந்து விடுகிறேம். இன்னும், அக்கடவுளரை வழிபட்டு வந்த மக்கள் அவர்களுடைய குணத்தில் பொருத்தமற்றதான யாதொன்றையோ காணவில்லை; ஏனெனில், அக்கட

வுளர் தம்மைப் போன்றே பெரும்பாலும் இருந்து வந்தவரே யாளுர். மேலும், நமது வாழ்க்கை முழுவதிலும் நாம் கற்றுக்கொள்ள வேண்டிய ஒரு பெரும்பாடம் அதுவே என நாம் சொல்லலாம். நாம் பிறரைப் பற்றித் தீர்ப்பளிக்கும் போது, நமது மேலான குறிக்கோள்களைக் கொண்டேதான் அவர்களை மதிக்கிறோம். இது இருக்க வேண்டிய முறை யன்று. ஒவ்வொருவரையும் அவரவரது சொந்த இலட்சி யத்தைக் கொண்டே மதிப்பிட வேண்டுமேயன்றி வேறொரு வரது இலட்சியத்தைக் கொண்டன்று. நாம் நம் சகோதர மக்களோடு பழகும்போது இத்தகைய பிழைக்கே பெரும் பாலும் ஆளாகி வருகிறோம். நமக்குள் இருக்கும் பிணக்கு களில் மிகப்பெரும்பாலன இந்த ஒரு காரணத்திலேயே தோன்றுகின்றன. நாம் பிறருடைய தெய்வங்களைக் கொண்டு நம் தெய்வங்களையும், பிறருடைய குறிக்கோள் களைக்கொண்டு நம் குறிக்கோள்களையும், பிறரது உள் நோக்கத்தைக் கொண்டு நமது உள் நோக்கத்தையும் மதிப் பிடுகிறோம்—இதுவே என் கருத்து. சிற்சில சம யங்களில் நான் ஒரு செயலைச் செய்யலாம்; மற்றொருவன் அதே செயலை ஆற்றும்போது அவனையும் எனது நோக்க மேதான் தூண்டி யிருந்திருக்கவேண்டு மென்று நான் கொள்கிறேன். ஆனால், விளையும் செயல் ஒன்றுயிருப் பினும், வேறு பல காரணங்கள் அதே செயலை உண்டாக்க லாம் என்பதைக் கனவிலும் யான் கருதுவதில்லை. என்னைச் செய்யுமாறு தூண்டிய நோக்கத்தினின்றுப் முற்றிலும் வேறுபட்ட ஒரே நோக்கத்தால் அவன் அச்செயலை இயற்றி யிருக்கலாம். ஆகவே, இப்பழமையான மதங்களைப் பற்றி நாம் மதிப்பிடும்போது நமக்கு விருப்பமானதொரு நிலையி னின்று நோக்காது, அப்பண்டைக் காலத்திற்குரிய கருத்து நிலை வாழ்க்கை நிலைகளில் நம்மை நிறுத்திக்கொள்ளுதல் வேண்டும்.

'பழைய ஏற்பாட்டிற்' காணப்படும் கொடுமையான, இரக்கமில்லாத ஜெஹோவாவைப்பற்றிய கருத்து, பலரை யும் அச்சுறுத்தி விட்டது. ஆனால் பழமையான யூதர் களின் ஜெஹோவா இக்காலம் வழங்கிவரும் கடவுட் கருத் தையே குறிக்க வேண்டுமென்று பாவித்துக்கொள்ள அவர்

களுக்கு உரிமை ஏது? அதே சமயம் நாம் நம்முன்னோரது கடவுட் கருத்தினையும் மதக் கருத்தினையும் கண்டு நகைப்பது போன்றே, நமது கடவுட் கருத்தினையும் மதக்கருத்தினையும் பார்த்து, நமக்குப்பின் தோன்றும் மக்கள் நகைப்பார்கள் என்பதனை நாமும் மறவாதிருத்தல் வேண்டும். ஆயினும், இத்தகைய பலதிறப்பட்ட கருத்துகளின் ஊடே ஓர் ஒற்றுமைப் பொற் சரடு செல்கின்றது. அச்சரட்டினைக் கண்டுபிடிப்பதே வேதாந்தத்தின் நோக்காகும். கண்ணபிரானார், “இத்தகைய முத்துகள் போன்ற பல கருத்துகளின் வழியாக ஊடுருவிச் செல்லும் சரடு யானே,” என்கிறார். இக்காலத்தவரின் கருத்துக்கு ஏற்றவாறு மதிப்பிடும்போது அவை எத்துணை முரணாகவோ அருவருப்புள்ளனவாகவோ தோன்றினும், அனைத்தையும் ஒன்றாகக் கோக்கும் இச்சரட்டின் உண்மையை நிலைநாட்டுவதே வேதாந்தத்தின் கடமையாகும். பழங்காலச் சூழ்நிலையில் இக்கருத்துகள் இனிமையாகவே இருந்தன. இக்காலக் கருத்துகளினினும் இவை அதிக அவலட்சணமுள்ளனவாய் இருந்ததில்லை. இவற்றுக்குரிய சூழ்நிலைகளினின்றும் இவற்றைப் பிரித்தெடுத்து, நமது காலத்துள்ள சந்தர்ப்பங்களுக்குப் பயன்படுத்தும்போதுதான் இவற்றின் கோரம் தெற்றென விளங்குகின்றது. ஏனெனில் பழைய சூழ்நிலைகள் கழிந்தே போய்விட்டனவாதலால், பழமையான யூதன் இக்காலத்துள்ள நுண்மதியூதனாய் வளர்ச்சி பெற்றுவிட்டது போன்றே, பழைய ஆரியன் அறிவாற்றல் பெற்ற இந்துவாகி விட்டது போன்றே, ஜெஹோவாவும் தேவர்களும் வளர்ச்சியுற்று வந்துள்ளார்கள். பெரும்பிழையாதெனில், வழிபாடாற்றுபவர்களின் வளர்ச்சியை ஏற்றுக்கொள்வது போன்று வழிபடு கடவுளரின் வளர்ச்சியையும் நாம் ஒப்புக்கொள்ளுவதில்லை. ஒரு தெய்வத்தின் அடியார்கள் முன்னேற்றம் பெறுவதுபோல் அத்தெய்வமும் முன்னேற்றம் அடைகின்றது என்பதை நாம் கொள்வதில்லை. அதாவது, நீங்களும் நானும் சில கருத்துகட்கு அறிகுறிகளாக அமையும் நிலையிலே வளர்ச்சி பெற்றுள்ளோம். அவ்வாறே, இக்கடவுளரும், கருத்துகளுக்கு அறிகுறியாய் அமையும் நிலையிலே, வளர்ச்சியுற்றே வந்துள்ளனர். கடவுளும் கருத்

தாகிய நிலையிலே வளர்ச்சி யடைகிறார் என்பது உங்களுக்கு வியப்பாகத் தோன்றலாம். கடவுள் வளரக்கூடியவரல்லர்; அவர் மாறாதவர் என்னலாம். அதே கருத்தின்படி உண்மை மனிதனும் ஒரு காலும் வளர்வதில்லை யன்றோ? ஆனால் கடவுளைப் பற்றிய மனிதன் கருத்துகள் அடிக்கடி மாற்றம் பெற்றும் விரிவடைந்துமே வருகின்றன. மேலே செல்லச் செல்ல, நாம் பின்வரும் இக்கருத்துகளை அறிவோம்: மனி தத்தோற்றமளித்து வரும் ஒவ்வொருவர்க்குள்ளும் உறை யும் உண்மையான மனிதன் அசைவற்றவன்; மாறுபா டில்லாதவன்; தூயவன்; எப்போதும் நிறைந்தவன். இது போன்றே நாம் கடவுளைப் பற்றிக்கொள்ளும் கருத்தும் வெறுந்தோற்றமே; நமது சொந்தப் படைப்பே. அத்தோற் றத்திற்குள் எந்நாளும் மாற்றமே யற்றவரும், மாற்ற மடைய ஒண்ணாதவரும் ஆன கடவுள் குடிகொண்டுள்ளார். ஆனால், தோற்றம் மட்டும் என்றும் மாறிக்கொண்டே இருக் கிறது; சிறிது சிறிதாகத் தன்னகத்தேயுள்ள உண்மை யினை வெளிப்படுத்திக்கொண்டே வருகிறது. உள்ளே இருக்கும் உண்மைப் பொருளை அதிகமான அளவில் வெளிக் கொணர்ந்து காட்டும்போது அதற்கு முற்போக்கு (அபி விருத்தி) என்றும், அவ்வாறு விஷயங்களை வெளியிடாது மறைத்துவைக்கும்போது அதற்குப் பிற்போக்கென்றும் பெயர்களிடப்பட்டுள்ளன. இப்படி, நாம் வளரும்போது கடவுளரும் (தெய்வங்களும்) வளர்ச்சி பெறுகின்றனர். சாதாரணமாகப் பார்க்குங்கால் நாம் மலர்ச்சியுறும்போது நம்மை வெளிப்படுத்திக்கொள்வது போன்றே கடவுளரும் தம்மைத்தாமே வெளிப்படுத்திக்கொள்கின்றனர்.

இப்போது நாம் 'மாயை' என்னும் கொள்கையினை அறிந்துகொள்ளக்கூடிய நிலையிலுள்ளோம். உலகிலுள்ள எல்லாச் சமயங்களையும் பற்றிக் கூறும்போது, அவை ஆராய்ந்து விடையளிக்கக் கருதும் ஒரு கேள்வி இதுவே: இப்பிரபஞ்சத்தில் இசைவின்மை இருப்பதேன்? பிரபஞ்சத் தில் ஏன் இத்தீமை உள்ளது? ஆதி மனிதர்களிடத்து மதக் கருத்துகள் தோன்றிய சமயம் இக்கேள்வி எழவில்லை. காரணம், அந்த ஆதி மனிதனுக்கு உலகம் முரண்பாடுற்ற தாகத் தோற்றம் அளிக்கவில்லை என்பதே. சந்தர்ப்பங்களில்

இசைவின்மை அவனுக்குத் தோன்றவில்லை; கருத்துகள் ஒன்றோடொன்று மாறுபடவில்லை; நன்மை தீமைகள் ஒன்றுக்கொன்று எதிராக இருக்கவில்லை. அவனது உள்ளத்திருந்த ஏதோ ஓர் உணர்ச்சி, 'சரி' என்றும், 'சரியன்று' என்றும் சொல்லி வந்தது; அவ்வளவே. ஆதி மனிதன் உள்த் தூண்டுதலின்படியே நடந்து வந்தான். அவன் தனக்குத் தோன்றியதைச் செய்துவந்து, தன் மனத்துக்குப்பட்டது எதுவாயினும் அதைத் தசைகளின்மூலம் செயலாக வெளிக்கொணர முயன்று வந்தான். அவன் ஆராய்ந்து முடிவு காண்பதற்காக ஒருபோதும் தாமதிப்பதில்லை. உள் தூண்டுதல்களை அடக்க முயல்வதுமில்லை. அவ்வாறே தான் தேவரும் உள் தூண்டுதற்கு வசப்பட்டே வாழ்ந்தனர். இந்திரன் தோன்றி அசுரப் படைகளைச் சின்னபின்னமாக்குகிறான். ஜெஹோவா எதனாலோ ஒருவரிடம் விருப்பும் மற்றொருவரிடம் வெறுப்பும் கொள்கிறார். அக்காரணத்தை அறிவாருமில்லை; கேட்பாரும் இல்லை. ஆராய்ச்சி செய்யும் பழக்கம் அப்போது உண்டாகவில்லை. அவர் செய்தது சரியென்றே கருதப்படுவதாயிற்று. நன்மை தீமைகளைப் பற்றிய கருத்தே எழவில்லை. நமக்குத் தீமைகளெனத் தோன்றும் பல செயல்களையும் தேவர்கள் செய்து வந்தார்கள்; மீண்டும் மீண்டும் இந்திரனும் மற்றுமுள்ள தேவர்களும் மிகத் தீய செயல்களைப் புரிந்து வந்தார்கள். ஆனால், இந்திரனைப் போற்றி வணங்கும் பத்தர்களுக்குத் தீமை பொல்லாங்குகள் பற்றிய நினைவே உண்டாகவில்லை; ஆதலால், அவை சரியா என்ற வினாவே எழவில்லை.

அக்கருத்துகள் வளர வளரச் சண்டையும் அகத்தே மூளலாயிற்று. மனிதனிடம் ஏதோ ஓர் உணர்வு தோன்றியது. அதனைப் பற்பல மொழிகளிலும் பற்பல நாடுகளிலும் பலப்பல பெயர்களைக் கொண்டு வழங்கலானார்கள். அதனைக் கடவுளின் குரலென்றோ, அது முன்பு கற்றதனாலான பயனென்றோ, வேறு வகையாகவோ கூறினும் சரி. அதனால் விளைந்தது இதுவே: மனிதனிடம் இயல்பாக எழுந்த தூண்டுதல்களை அடக்கும் ஆற்றல் அதற்கு இருந்தது. நமது மனத்தே ஒரு தூண்டுதல் 'செய்' என்று ஏவ அதற்குப் பின்னின்று இன்னொரு குரல் 'செய்யாதே' என்

கின்றது. நமது மனத்துள்ள கருத்துகளில் ஒரு தொகுதி, ஐம்புலன்கள் வாயிலாகப் புறத்தே செல்ல எப்போதும் போராடிக்கொண்டேயிருக்கிறது; அதற்குப் பின்னே, அனைத்தினும் மிகச் சிறிய குரலொன்று, மெல்லிதேயாயினும், திறனற்றதாயினும், "புறத்தே செல்லற்க," என்கின்றது. வடமொழியில் இத்தகைய நிகழ்ச்சிகளுக்குப் 'பிரவிருத்தி' என்றும் 'நிவிருத்தி' என்றும் அழகிய பெயர்களை இட்டிருக்கின்றனர். 'பிரவிருத்தி' என்பது 'வட்டமிட்டு உட்செல்லுதல்.' வட்டமிட்டு வெளிச்செல்லல் எனும் முறையே பொதுவாக நம் செயல்களை அடக்கியாண்டு வருவது. 'வட்டமிட்டு உட்செல்லல்' என்ற முறையிலே தான் சமய வாழ்வு தொடங்குகிறது. மறுமை வாழ்வு, 'செய்யாதே' என்பதிலே தொடங்குகின்றது. 'செய்யாதே' என்பது இராதபோது சமயவாழ்வு இன்னும் தொடங்கவில்லை. 'செய்யாதே' என்னும் இது தோன்றவே, மக்கள் போரிடும் தேவர்களை வழிபட்டுவந்தபோதும் அவர்களுடைய கருத்துகளை வளர்ச்சியுறச் செய்யலாயிற்று.

மனித உள்ளத்தில் ஒரு சிறிது அன்பு அரும்பிற்று. அது உண்மையில் மிகச் சிறியதே: இப்போதும் அதன் அளவு பெரிதும் பெருகிவிடவில்லை. அது முதன் முதல் ஓர் இனத்திற்குள்ளே அடங்கியிருந்து, ஒரு கால் ஒரே குடியினைச் சார்ந்த அங்கத்தினர்க்குள் மட்டும் பரவிவந்தது; இக்கடவுளர் தம் இனத்தவரை நேசித்து வந்தனர்; ஒவ்வொரு கடவுளும் ஒவ்வோர் இனத்திற்குரிய கடவுளாகிய அந்த இனத்தாரின் காப்புக் கடவுளானார். ஒரே இனத்தினைச் சார்ந்தார், சில சமயம் தம்மைத் தமது கடவுளின் சந்ததியாராகவே கருதி வருவார்; வெவ்வேறு நாடுகளிலுள்ள இனத்தினர் பலரும் தம் ஒரே குல முதல்வரின் வழி வந்தவராகவே தம்மைக் கருதுவது போன்றதே அது. பண்டைக் காலத்திலே, ஏன், இன்றுங்கூடச் சிலர் தம்மைத் தம் இனங்களுக்குரிய கடவுளரின் வழிவந்தவரென்றே கூறிக்கொள்வதோடு அமையாது, தம்மைச் சூரிய சந்திரர்களின் வமிசத்தினரென்றும் உரிமை பாராட்டுகின்றனர். பழமையான வடமொழி நூல்களில் சூரிய சந்திர வமிசங்களைச் சார்ந்த பேரரசர்களைப் பற்றி நீங்கள் படித்திருப்பீர்

கள். அவர்கள் முதலில் ஞாயிற்றையும் திங்களையும் போற்றி வழிபட்டு வந்தார்கள்; பின்னர்ப் படிப்படியாகத் தங்களை அக்கடவுளரின் பரம்பரையினர்களாகவே பாவித்துக்கொள்ளலானார்கள். ஆகவே, இவ்வாறு இனத்தைப் பற்றிய இக்கருத்துகள் வளரத் தொடங்கியதும், அவர்களுக்குள் ஒரு சிறிது அன்பும், ஒருவருக்கொருவர் மாட்டுள்ள கடமையுணர்ச்சியும், ஒரு சிறு சமூக அமைப்பும் தோன்றலாயின. பிறகு இயல்பாகவே, "நாம் ஒருவரோடொருவர் பொறுமையும் சகிப்புமின்றி எவ்வாறு ஒன்றாக வாழலாகும்? ஏதாவது ஒரு சமயமேனும் ஒருவன் தன் மனத்தில் எழும் தூண்டுதல்களைத் தடுக்கவும் தன்னையடக்கவும், தன் மனம் தன்னைச் செய்யும்படி தூண்டும் செயல்களைச் செய்யாதிருக்கவும் அவசியமின்றி எவ்வாறு மற்றொருவனோடு சேர்ந்து வாழ இயலும்? அது இயலாததே," என இவ்வாறு சிந்திக்கின்றனர். 'தன்னடக்கம்' என்ற கருத்துத் தோன்றுகின்றது. சமூகம் என்ற கட்டடம் முழுதும் அடக்கம் என்னும் அக்கருத்தினையே அடிப்படையில் கொண்டுள்ளது. சகிப்பு, பொறுமை என்னும் பெரும் பாடத்தைக் கற்று அதன்படி நிற்காத ஆடவரோ பெண்டிரோ, மிகத் துயருற்ற வாழ்க்கையையே பெறுகிறார் என்பதை நாமெல்லோரும் நன்கறிவோம்.

மதத்தைப் பற்றிய இத்தகைய கருத்துகள் தோன்றியதும், இவற்றினும் உயர்ந்ததும், ஒழுக்கம் மிக்கதுமான ஒன்றின் காட்சி கணப்பொழுது மனிதனது அறிவிற்குத் தென்படலாயிற்று. களியாட்டமும் போரும் குடியும் மாட்டிறைச்சியுண்ணலுமே பொழுது போக்காக அமையும் இப்பழந்தெய்வங்கள், வேகும் ஊனின் மணத்திலும், வெறி மிக்க மதுவின் நாற்றத்திலும் மகிழும் முன்னோரின் தெய்வங்கள் பொருந்தாதவையெனக் காணப்படலாயின. சில சமயங்களில் இந்திரனும் மிகுதியாகக் குடித்து, அதன் விளைவாக மயங்கித் தரையில் விழுந்து பிதற்றலானான். இத்தகைய கடவுளரை மக்களாற் பொறுத்துக்கொள்ள இயலவில்லை. செயல்களின் உள் நோக்கங்களை ஆராயும் கருத்து எழும்பிவிட்டது; ஆதலால், தெய்வங்களையும் விசாரணைக்கு உட்படுத்தும் நிலை வந்தெய்தியது. இன்னின்ன செயல்

களுக்குக் காரணம் இன்னின்ன எனக் காணுதலை வற்புறுத்தினர்; அக்காரணம் காணல் அரிதாயிற்று. ஆதலால், மனிதன் இத்தெய்வங்களைத் துறந்துவிட்டான். இவ்வாறு கூறுவதைவிட, மனிதர்க்கு இத் தெய்வங்களைப்பற்றி முன்னிலும் உயர்ந்த கருத்துகள் வளரலாயின என்பதே சரி. தெய்வங்களின் செயல்கள் குணங்கள் அனைத்தையும் மொத்தமாகப் பார்த்துவிட்டு, தங்களாற் பொருத்தமுடியாதவற்றைத் தள்ளிவிட்டு, தங்களுக்கு விளங்கக்கூடியவற்றைக் கைக்கொண்டு, அவற்றை ஒருங்கே தொகுத்து, அத்தொகுதிக்குத் தேவதேவன் என்ற ஒரு பெயரளித்தார்கள். வழிபடற்குரிய கடவுட் சத்தியின் எளிய சின்னமாக மட்டும் அதன்பின் இருக்கவில்லை; அதனினும் மிகுதியாக வேண்டி இருந்தது. அவர் அறநெறிக் கடவுள் ஆயினர். அவர் மன்னுயிர்மீது அன்பு செலுத்தினர்; மன்னுயிர்க்கு நலம் புரிந்துவந்தனர். ஆனாலும், கடவுள் என்ற கருத்து மறையவில்லை. மக்கள் அவரது அறநெறி மாண்பினைப் பெருக்கினார்கள்; அவரது சத்தியையும் பெருக்கினார்கள். அவர் பிரபஞ்சத்திலே அறத்தாற்றில் அனைவரினும் உயர்ந்தவராயும் கிட்டத்தட்ட எல்லாம் வல்லவராயும் விளங்கலானார்.

ஆனால், இத்தகைய ஒட்டுவேலை போதாதன்றோ? விளக்கம் பெரிதாக ஆக, அது தீர்க்க நினைந்த இன்னலின் அளவும் வரவர வளர்ந்து வரலாயிற்று. கடவுளின் நற்பண்புகள் கூட்டல் வரிசையில் பெருகிவந்தன வெனின், சங்கடமும் ஐயமும் பெருக்கல் வரிசையில் ஓங்கிவந்தன. மாபேருலகின் இறைவனது துன்ப நிலையோடு ஒப்பிட்டுப் பார்க்குங்கால் ஜெஹோவாவின் சங்கடம் மிக அற்பமாயிற்று. இக்கேள்விகளும் இன்றளவும் இருந்தே வருகின்றன: எல்லாம் வல்லவரும் அனைவரிடத்தும் அன்புமிக்கவருமான இப் பிரபஞ்ச இறைவரது அரசாட்சியிலே அசுரச்செயல்கள் இருக்க இடங்கொடுப்பதேன்? இன்பத்தைவிடத் துன்பமும் நன்மையைவிடத் தீமையும் இத்துணை மிஞ்சியிருப்பதேன்? நாம் இவையாவற்றினையுங்காணாது கண்ணைப் பொத்திக்கொண்டுவிடலாம்; எனினும் இந்த உலகம் அருவருக்கத்தக்கதே என்ற உண்மை இன்னும் எஞ்சவே செய்கிறது. மிஞ்சிய வழி, அது 'டான்டலஸ்' என்பவர் கண்ட ஏமாற்ற மிக்க நரகமே.

இங்கே நம்மிடம் வலிய உந்துதல்களும் புலநுகர்ச்சியின் கண் மிகவலிய விழைவுகளும் அமைந்துள்ளன; ஆயினும் நாம் அவற்றை நிறைவேற்ற இயலாதவராவோம். ஓர் அலை நமது சங்கற்பத்தையும் மீறி நம்மை முன்னே தள்ளுகிறது; ஆனால், ஓர் அடி எடுத்து வைத்ததும் நமக்கு ஓர் ஆறு கிடைக்கிறது. நாமெல்லோரும் 'டான்டல'ஸைப் போல இங்கு வாழும் விதிக்கு உள்ளாயிருக்கிறோம். நமது ஐம்புல இன்ப இலட்சியங்களின் எல்லைக்கு நெடுந் தொலைவிலுள்ள இலட்சியங்கள் நம் அறிவில் உதிக்கின்றன; ஆனால், அவற்றை வெளிப்படுத்த எண்ணும் போது, நாம் சத்தியற்றவராகிறோம். இதற்கு மாறாக, நம்மைச் சுற்றியுள்ள அலைபோன்ற பெருங் கூட்டத்தின் தாக்கலால் நாம் நசுக்கப் படுகிறோம். ஆனால், நான் உயர்ந்த குறிக்கோளைக் கைவிட்டு இவ்வுலகின் நடுவே போராட மட்டும் புகுந்தாலோ, எனது வாழ்வு விலங்கின் வாழ்வேயாகின்றது. நான் மேன்மேலும் இழிந்து வாழ்வுறுகின்றேன். எவ்வழியிலும் இன்பமில்லை. பிறந்திறந்தபின் இவ்வுலக வாழ்விலே திருத்தியடைபவர்க்கு உற்ற விதி துயரமே. உண்மைக்கும் அதனினும் உயர்ந்த பொருள்களுக்கும் என்றே முன் வந்து நிற்கவும் சாதாரண மிருக வாழ்வினும் மேலான ஒன்றை வேண்டவும் துணிவோரின் விதியோ, அதனினும் ஆயிர மடங்கு மிக்க துயரந் தான். இவை உண்மை நிகழ்ச்சிகளே. ஆனால், இவற்றுக்குக் காரணம்—மூலம்—விளக்கம் இல்லை; விளக்கம் இருத்தலும் ஒண்ணாது. ஆனால், வேதாந்தம் ஒரு வழி வகுக்கின்றது. சில சமயம் உங்களை அச்சுறுத்தும் உண்மைகளையும் யான் கூறவேண்டுவதாகிறது என்பதை நீங்கள் நினைவுறுத்திக் கொள்ளல் வேண்டும். ஆனால், நான் சொல்வதை நீங்கள் மறவாதிருப்பீர்களாயின், அதனைச் சிந்தியுங்கள். அதனை உங்களோடு ஒன்றச் செய்யுங்கள்; அது உங்களுக்குரியதாகும்; மென்மேலும் உங்களை உயர்த்தும். அறியும் திறனையும், உண்மைக்கியைய வாழும் திறனையும் உங்களுக்கு ஊட்டும்.

இனி, இவ்வுலகம் டான்டலஸின் நரகமே என்பதும், இப்பிரபஞ்சத்தைப்பற்றி யாம் ஏதும் அறிந்திலம் என்பதின் உண்மையுரையே ஆயினும், அதே சமயம் நாம் அறி

யோம் என்றும் கூறவும் முடியவில்லை. அந்தச் சங்கிலியை யான் அறியேன் என நினைக்கும்போது, அது உள்ளது என்று கூறமுடியாது. அது எனது மூளையின் கலக்கமாய் இருக்கலாம். நான் எந்நேரமும் கனவு கண்டு கொண்டிருக்கலாம். நான் உங்களுடன் பேசிக் கொண்டிருப்பதாகவும் நான் கனவு கண்டு கொண்டிருக்கிறேன். அது சொப்பனமன்று என யாராலும் மெய்ப்பிக்க இயலாது. எனது மூளையே ஒரு கனவாய் இருக்கலாம்; இதைப்பற்றிப் பேசத்தொடங்கினுலோ, எவனும் என்றேனும் தனது மூளையைக் கண்டவனல்லன். இது இருக்கிறது என்பதனை நாம் எல்லோரும் ஒப்புக் கொள்ளுகிறோம். எல்லா வற்றிலும், இப்படியே எனது உடலையும் நான் இருப்பதாக ஒப்புக்கொள்ளுகிறேன். இதே சமயம் இதனை யான் அறியேன் எனக்கூற இயலாது இப்படி அறிவிற்கும் அறியாமைக்குமிடையே உள்ள நிலை, இந்த மங்கலான அந்தியொளி, மெய்மையும் விரவியுள்ள இந்நிலையாகிய இவை எங்கே ஒன்று கூடுகின்றன என்பதனை ஒருவரும் அறியார். நாம் கனவின் இடையே பாதி விழிப்பாகவும் பாதி உறங்கியும் செல்கின்றோம்; நமது வாழ்க்கை முழுவதையும் மங்கலான ஒளியில் கழித்து வருகிறோம். இதுவே நம்முள் ஒவ்வொருவருக்கும் உள்ள விதி. அனைத்துப் புலனறிவின் விதியும் இதுவே. இதுவே எல்லாத் தத்துவத்திற்கும், தருக்குள்ள எல்லா விஞ்ஞானத்திற்கும், தருக்கார்ந்த எல்லா மனித அறிவுக்கும் உள்ள விதியாம்.

சடமென்றே உயிரென்றே மனமென்றே வேறு எப்பெயர் கொண்டோ வழங்க நீங்கள் விரும்பும் உண்மை ஒரே மாதிரியாகவே இருக்கிறது. அதாவது, அவை ஒன்றென்றும் கூற இயலாது; பல வென்றும் கூற இயலாது. ஒளியும் இருளும் ஆகிய இந்த விளையாட்டு குழம்பிருப்பதும், பிரித்தறிய ஒண்ணுததும், பிரிக்க வொண்ணுததுமான இது—எப்போதும் அங்கு உள்ளதே. இது உண்மையே; ஆனாலும், அதே சமயம் உண்மையுமன்று. இது விழிப்பும், அதே சமயம் உறக்கமும் ஆகும். இது உள்ளவற்றைக் கூறும் உரையே. இதுவே மாயை எனப்படுவது. நாம் பிறப்பதும் அம்மாயையிலே; வாழ்வதும் இதிலே; நினைப்பதும் இதிலே; கனவு காண்பதும் இதிலே. நாம் தத்துவ

ஞானிகளாவதும் இதிலே; பாரமார்த்திகப் பெரியாராவதும் இதிலே. இம்மட்டோ! பிசாசுகளாவதும் தேவர்களாவதும் இம்மாயையிலேதான். உங்கள் கருத்துகளைக் கூடிய மட்டும் வளர்த்து வாருங்கள்; மேலும் மேலும் உயரச் செய்யுங்கள். இவற்றை எல்லையற்றன வென்றோ, விருப்பமான வேறு எப் பெயர் கொண்டோ வழங்குங்கள். இக்கருத்துகளும் இம் மாயைக்குள் அடங்குவனவேயாம். இது வேறுவகையாக இருத்தல் இயலாது. மனித அறிவு முற்றுமே இம்மாயையைப் பற்றிய பொதுவுரையே; இது இருப்பதாகத் தோன்றும் முறைப்படி இதனை அறியும் முயற்சியே. இது நாம ரூபங் களின் வேலை. உருவம் பெற்ற பொருள் ஒவ்வொன்றும், உங்கள் உள்ளத்தே ஒரு கருத்தினைத் தோற்றுவிக்கும் எப் பொருளும், இம்மாயைக்குள் அடங்கப் பெற்றிருக்கிறது. ஏனெனில், கால தேச காரண காரிய நியதிகளால் கட்டுண்ட யாவுமே மாயைக்கு உட்பட்டனவே.

நாம் இப்போது ஒரு சிறிது பின்சென்று, கடவுளைப் பற்றிய தொடக்கக் கருத்துகளையும் இவை எப்படி ஏற் பட்டன என்பதையும் காண்போம்: நம் மீது நித்தியமாகத் தன்னலமற்றவருமான எல்லாம் வல்ல இறைவர் உலகினை ஆண்டு வருகிறார் என்ற கருத்து அவர்களுக்குத் திருத்தி அளிக்கவில்லை என்பதை உடனே காண்கிறோம். தத்துவ அறிஞர், "நீதியாளரான கருணைக் கடவுள் எங்குளார்?" என்று வினவுகிறார். அவருடைய சேய்கள் மனித வடிவிலும் விலங்கு வடிவிலும் இலட்சக் கணக்காக மாய்வதை அவர் காணவில்லையா? பிறரைக்கொல்லாது இங்கு ஒரு கணம் வாழவல்லார் எவர்? ஆயிரக் கணக்கில் உயிர்களை அழிக் காமல் ஒரு மூச்சும் உங்களால் இழுக்க இயலுமா? கோடிக் கணக்கில் உயிர்கள் இறப்பதனாலன்றோ நீங்கள் வாழ்கிறீர் கள்? உங்கள் வாழ்க்கையில் ஒவ்வொரு கணமும் நீங்கள் விடும் மூச்சும் இலட்சக் கணக்கான உயிர்களுக்கு மரணத்தை விளைக்கிறது. உங்களது அசைவு ஒவ்வொன் றுமே கோடிக்கணக்கான உயிர்களுக்கு இறப்பைத் தரு கிறது. ஏன் அவை சாகவேண்டும்? அவை கீழ்த்தர உயிர் களே என்ற பழங்காலப் பொய் வழக்கு ஒன்று உள்ளது. அவை அத்தகையன என்று கொண்டாலும்—அதுவும்

வழக்கிற் கிடமானதே; ஏனெனில், எறும்பு மனிதனினும் உயர்ந்ததா, மனிதன் எறும்பிலும் உயர்ந்தவனு? இதை யார் அறிவார்? ஒன்றையோ மற்றென்றையோ யார் உண்மை காணவல்லார்? இக்கேள்வி கிடக்கட்டும். அவை மிகக் கீழான உயிர்களென்றே கருதிப் பேசுவோம். எனினும், அவை சாக வேண்டுமென்பதேன்? அவை கீழானவையாயின், அவை வாழவேண்டும் என்பதற்குக் காரணம் அதனுல் அதிக மன்றே! ஏன் வாழக்கூடாது? ஏனெனில், அவை அதிக மாகிய புலன்களைப்பற்றி வாழ்கின்றன. உங்களையும் என்னையும் விட ஆயிரமடங்கு அதிகமாக இன்ப துன்பங் களை அவை துய்க்கின்றன. நாயைப்போன்றே ஓநாயைப் போன்றே நம்மில் எவர் அத்தகைய பேரவாவினேடு ஒரு விருந்தை அனுபவித்துப் புசிக்கிறுர்? ஒருவருமில்லை. ஏனெனில், நம்முடைய சத்திகளெல்லாம் புலன்களில் நில் லாது அறிவிலும் பரமார்த்தத்திலுமே நிலைத்துள வாதலால். ஆனல், விலங்குகளிலோ, அவற்றின் ஆவி முழுதுமே புலனின்பங்களிலேயே குவிகின்றது. அவை வெறி கொண்டு மாந்தர் கனவிலும் கருதாத வகையில் (அளவி லுமே) போகம் துய்க்கின்றன; இன்பத்துக்கு ஏற்றவாறே துன்பமும் பேரளவினதாகின்றது. இன்பமும் துன்பமும் சம அளவிலேதான் ஆண்டவர் அளிக்கிறுர். விலங்குகள் நுகரும் இன்பம் மனிதன் அனுபவிப்பதைக் காட்டிலும் பன் மடங்கு தீவிரமானதெனின், விலங்குகள் அடையும் துன்ப மும் மனிதற்குரிய அளவிற்கோ அதனினும் மிக்க அள விற்கோ கூரியதாகலாம். ஆதலால், உண்மை யாதெனில், இறப்பதில் மனிதன் உணரும் துயரம் விலங்குகளிடம் ஆயிரம் மடங்கு பெருக்கம் அடைகிறது; எனினும், அவற்றின் துயரத்தைக் கருதாது நாம் அவற்றைக் கொல்கி ரேும் என்பதே. இது மனிதனைப் போன்ற ஒரு சகுணக் கடவுள் அனைத்தையும் படைத்தார் எனக் கொள்ளின் பெயரளவான இவ்விளக்கங்களும் கொள்கைகளும், தீமை யினின்றும் நன்மை விளையும் என்பதை நிலை நாட்டும் இவை யாவும் போதியனவாகா. இருபதினுயிரம் நன்மைகள் விளை யட்டும்; அவை தீமையினின்றும் விளைய வேண்டுமா? இக்கோட்பாட்டின்படி, யான் பிறர் கருத்துகளை அறிந்துவிட

லாம்; ஏனெனில், என் ஐம்பொறிகளுக்கும் பூரண இன்பம் எனக்குத் தேவையென்பேன். இது காரணமாகாது. நன்மை தீமையினின்றும் ஏன் பிறக்கவேண்டும்? இவ்வினாவிற்கு விடை அளித்தாகவேண்டும். விடையளித்தல் இயலாததே. இந்தியாவின் தத்துவ அறிஞர்களுக்கு இதனை ஒப்புக் கொள்ளுதல் கட்டாயமாயிற்று.

வேதாந்தமே சமயங்களுக்குள் மிகத் துணிவுடைய தாயிற்று; ஆகின்றது. இது இடைவழியில் எங்கும் நின்று விடவில்லை. இதற்கு ஒரு நன்மை ஏற்பட்டிருந்தது. உண் மையை உரைக்க முயன்ற ஒவ்வொருவனையும் அடக்கியாள நினைத்த குருமாரது குழு இருந்ததில்லை. முழுமையான சமய சுதந்தரம் யாண்டும் இருந்து வந்தது. இந்தியாவில் மூட நம்பிக்கையால் விளையும் பந்தம் சமூகம் பற்றியதே: இங்கே மேலை நாட்டிலோ, சமூகம் சுயேச்சை பெற்றுள்ளது. இந்தியாவில் சமூகவிஷயங் களில் பெருங் கண்டிப்பு உண்டு; ஆனால், சமயத் துறையிலோ, அபிப்பிராயம் கட்டற்றதாகும். இங்கிலாந்தில் ஒருவன் தன் இச்சைப்படியே எவ்வாறேனும் உடையணிய லாம்; விரும்பியதை உண்ணலாம்—அதற்கு ஒருவரும் தடை செய்யார்: ஆனால், ஒருவன் கிறித்துக் கோவிலுக்குச் செல லத் தவறிவிடின், சமூக மூதாட்டி அவனைத் தூற்றுவாள். சமயம் பற்றிச் சமூகம் யாது கூறுகின்றதோ, அதற்கு அவன் முதலிற் கட்டுப்படவேண்டும்; பின்னர் அவன் உண்மையைப் பற்றிச் சிந்திக்கலாம். இந்தியாவிலோ, அதற்கு மாறாக, தனது சாதியைச் சாராதவனுடன் ஒருவன் உண்பானேல், சமூகம் தனது பயங்கரமான முழு வலிமை யோடும் அவன்மீது சீறிப் பாய்ந்து, அப்பொழுதே அங்கே அவனை நசுக்கிவிடும். அவன் தன் முன்னோர் பழங்கால முதல் அணிந்துவந்த முறைக்குச் சிறிது வேறுபாடாக உடைதரிக்க விரும்புவானாயின், அவன் தொலைந்தே போவான். முதன் முதல் வந்த இருப்புப் பாதை வண்டித் தொடரைக் காணப் பல மைல் வழி நடந்து சென்றதற்காக ஒருவனை அவனது சமூகம் விலக்கிவிட்டதை (ஜாதிப்பிரஷ் டம் செய்ததை) யான் கேள்வியுற்றுளேன். அது உண்மை யன்று என்றே வைத்துக்கொள்வோம். ஆனால், சமயத்

துறையிலோ, நாத்திகரும் உலகாயதரும் பௌத்தரும் பல் கிளையவான பல்வேறு வகைப்பட்ட கொள்கைகள் கருத்து கள் சிந்தனைகள் ஆகியவும், இவற்றிற் சில நடுக்குறச் செய் யும் இயல்பின எனினும், ஒருங்கே வாழ்ந்து வருவதைக் காண்கிறோம். பல்வகைச் சமயப் பிரசாரகரும் தத்தம் கொள்கைகளைப் போதித்தும் ஏற்பாரைச் சேர்த்தும் திரிகின் றனர் ; தெய்வங்களுக்குரிய கோயில்களின் வாயில்களிலும் பிராமணர் உலகாயதரைக்கூடி நிற்கவும் தம் கருத்துகளை வெளியிடவும் அனுமதிக்கின்றனர்—என்னே அவரது பெருமை !

தொண்டு கிழவராய்ப் புத்தர் உயிர் துறந்தனர். அவ ரது வரலாற்றைப் படிக்க ஆர்வங்கொண்ட அமெரிக்கப் பெரு விஞ்ஞானியரான என் நண்பர் ஒருவரது நினைவு எனக்கு எழுகின்றது. புத்தர் சிலுவையில் உயிர் துறவா மையால் அவரது மரணத்தை என் நண்பர் விரும்பவில்லை. எத்துணைப் பொய்ம்மையான கருத்து! ஒருவன் உயர் வடைய வேண்டின், அவன் கொலையுண்ண வேண்டுமாம்! இத்தகைய கருத்துகள் இந்தியாவில் என்றைக்கும் வழங்கி வரவில்லை : அந்தப் புத்த பெருமானார் இந்தியா முழுதும் சுற்றினர். இந்துக்களின் கடவுளரையும், அம்மட்டோ, உல கத்தைப் படைத்த இறைவனையுமே தூற்றினர். எனினும், அவர் தொண்டு கிழவராகும்வரை வாழ்ந்தார். எண்பது ஆண்டுகள் அவர் உயிர் வாழ்ந்து நாட்டிற் பாதியைத் தம் மதத்திற்கு மாற்றிவிட்டனர்.

இன்னும், சார்வாகரும் இருந்தனர் ; அவர்கள் அருவருக் கத்தக்கவற்றையும் போதித்துவந்தார்கள். இப்பத்தொன்ப தாம் நூற்றாண்டில், வெளிப்படையாகப் பேசத் துணியமாட் டாத அளவிற்கு மிதமிஞ்சிய ஒளிப்பற்ற உலகாயதத்தையும் பிரசாரஞ் செய்தனர். அவர்கள் சமயம் என்பது முழுப் பேதைமையென்றும் குருமார் செய்த சூழ்ச்சி என்றும், வேதங்கள் அறிவிலிகளும் கயவரும் அரக்கருமானோர் கூறியவையும் எழுதியவையுமாகிய மொழிகள் என்றும், ‘கடவுளும் இல்லை ; நித்தியமான ஆன்மாவும் இல்லை’ என்றும், கோயில்தோறும் நகரந்தோறும் சென்று பிரசாரஞ் செய்ய அனுமதிக்கப்பட்டார்கள். ‘ஆன்மா ஒன்று இருந்த

தாயின், அது சாவுக்குப்பின், மனைவிமக்கள் பாசத்தினால் இழுப்புண்டு மீளாததேன்?' என்பது அவர்கள் வினா. அவர்களது கருத்து யாதெனின், 'ஆன்மா ஒன்று இருந்ததாயின், அது மரித்தபின்னும் அன்பு செலுத்தவேண்டும்; உண்ண நல்ல உணவுகளையும் உடுக்க நல்ல ஆடைகளையும் விரும்ப வேண்டும்,' என்பதே. எனினும், அச்சார்வாகர்க்குத் தீங்கு செய்தார் எவருமில்லை.

இவ்வாறு, இந்தியாவிலே சமயசுதந்தரம் எனும் இம் மேன்மையான கருத்து எப்போதும் இருந்து வந்துள்ளது. ஈண்டு நீங்கள் நினைவுறுத்திக்கொள்ள வேண்டுவது சுதந்தரமே வளர்ச்சிக்குரிய முதல் நிபந்தனை யாகும் என்பது. நீங்கள் எதற்குச் சுதந்தரம் அளிப்பதில்லையோ, அது ஒரு நாளும் வளராது. பிறரை வளரச் செய்தல் உங்களுக்கு இயலும். அவரது வளர்ச்சிக்கு உதவுதலும் உங்களுக்கு இயலும். குருவுக்குரிய சுதந்தரத்தை உங்களிடம் எப்போதும் வைத்துக்கொண்டே பிறரைக் கட்டளை யிட்டு வழி நடத்த இயலும் என்னும் கருத்து மூடத்தனமே; இத்தகைய ஆபத்தான வாழ்வே இவ்வுலகிலே கோடிக்கணக்கான மக்களின் வளர்ச்சியைத் தடுத்துவிட்டது. மக்கள் சுதந்தர ஒளி பெறட்டும், அதுவே வளர்ச்சிக்குரிய ஒரே நிபந்தனை.

இந்தியாவிலே நாங்கள் ஆன்மிகத்துறையில் சுதந்தரம் அளித்தோம். அதன் பயனாக இன்றைக்கும் சமயக்கருத்தில் ஏராளமான ஆன்மிகச் சத்தி உள்ளது. அதே மாதிரி நீங்கள் சுதந்தரத்தைச் சமூகத் துறையில் அளித்தீர்கள்; ஆதலால், மாட்சியுற்ற சமூக அமைப்பைப் பெற்றுள்ளீர்கள். நாங்கள் சமூகத் துறைகளில் விரிவடைதற்கு ஒரு சுதந்தரமும் அளிக்கவில்லை, அதனால் எமது சமூகம் குறுகியதாயிற்று. நீங்கள் சமயக் கருத்துகளில் எவ்விதச் சுதந்தரமும் எப்போதும் அளித்ததில்லை; ஆனால், கையில் வாளும் தீயுங் கொண்டு உங்கள் நம்பிக்கைகளை வற்புறுத்தினீர்கள். அதனால் விளைந்த விளைவு, ஐரோப்பியரின் மனத்திலே சமய வளர்ச்சி குறுகிச் சீரழிந்த நிலையில் உள்ளது. இந்தியாவிலே நாங்கள் சமூகத்திற்கு இட்ட தளைகளைக் களைய வேண்டுவதாகிறது. நீங்கள் ஆன்மிக வளர்ச்சிக்கு இட்ட தளைகளைக் கால்களினின்றும் நீக்கியாக வேண்டும். அப்

போதே மனிதன் வியக்கத்தக்க வளர்ச்சியும் முதிர்ச்சியும் எய்துவான். ஆன்மிகத் துறையிலும், அறத்துறையிலும், சமூகத்துறையிலும் பெறும் இவ்வளர்ச்சிகள் அனைத்திற்கும் ஊடே ஒருமைச் சரடு ஊடுருவி நிற்பதை நாம் கண்டறிவோமாயின், சமயம் அதற்குரிய முழுமையான பொருளிலே சமூகத்திலும் நமது அன்றாட வாழ்விலும் புகுந்தே தீரும் என்பதைக் காண்போம். வேதாந்தக் கண்கொண்டு நோக்கின், விஞ்ஞான சாத்திரங்கள் யாவும் சமயமலர்ச்சியின் வகைகளேயாகும் என்பதையும் உலகத்திலுள்ள ஒவ்வொன்றும் இத்தன்மையதே என்பதையும் நீங்கள் உணர்வீர்கள்.

ஆகவே, சுதந்தரம் வாயிலாகவே விஞ்ஞான சாத்திரங்கள் அமைப்பைப் பெற்றன என்பதையும் அறிகிறோம். இவற்றில் நாம் இரண்டு வகையான கருத்துகளைக் காண்கிறோம்; ஒன்று, உலகாயதத்திலும் கண்டனத்திலும் சார்புடையதாகும்; மற்றொன்றோ, செயல் முறையிலும் ஆக்கத்திலும் சார்புடையதாகும். ஒவ்வொரு ஜன சமூகத்தும் இவ் விருவகைகளும் காணப்படுதல் மிக்க வியப்புக்குரியதேயாம். சமூகத்தில் ஒரு தீமை உள்ளதென வைத்துக்கொள்வோம். உடனே ஒரு சாரார் எழுந்து பழி வாங்குவார் போன்று அதனைக் கண்டிப்பதைக் காண்பீர்கள். இது சில சமயம் மதவெறியளவில் இழிந்துவிடுவதும் உண்டு. இத்தகைய வெறியர் எந்தச் சமூகத்திலும் உளர்; மகளிரும் உந்துதல்களுக்கு இணங்கவொழுகும் இயல்பால் இக்கூக்குரல்களில் அடிக்கடி கலந்துகொள்வதுண்டு. எழுந்து நின்று யாதேனும் ஒன்றைக் கண்டனம் செய்ய முன் வரும் ஒவ்வொரு மதவெறியனுக்குமே அவனைப் பின்பற்றி வருவோர் கிடைப்பதுண்டு. ஒன்றை உடைத்தல் எளிது. ஒரு பித்தனும் விரும்பியவாறே அதை உடைக்கக் கூடும்; ஆனால், எதையேனும் ஆக்கி அமைத்தல் அவனுக்கு அரிதேயாகும். இம்மூட வெறியர், தாம் அறிந்தவாறே ஏதோ நன்மையும் செய்யலாம்; எனினும், கேடே மிகுதியாகும். காரணம் யாதெனில், சமூக நிலையங்கள் ஒரே நாளில் உண்டாவன வல்ல. அவற்றை மாற்றுதல் என்பது, காரணத்தை ஒழித்தல் என்றே பொருள்படும். ஒரு தீமை உளதேல், அதனைக் கண்டிப்பதனால் அதை ஒழித்து விடமுடியாது. அதன்

மூலத்தை இடித்தே வேலை செய்யச் சொல்ல வேண்டும். முதலில் காரணத்தைக் கண்டறிக; பின்பு அதனை நீக்குக! காரியமும் நீக்கப்பட்டதாகும். வெறுங் கூச்சலால் யாதும் விளையாது; உண்மையில் தீமை விளைதலும் கூடும்.

நெஞ்சிலே பரிவுடைய பிறரும் இருந்தனர். அன்னார் ஆழ்ந்து சென்று காரணத்தைக் காணவேண்டும் என்பதை அறிந்தவர்; அன்னாரே ஞானியர். நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டிய உண்மை ஒன்றுண்டு: உலகிலுள்ள மாபெருங்குரவர் யாவரும் தாம் அழிக்க வரவில்லையென்றும் நிறைவாக்கவே தோன்றியுள்ளனரென்றும் கூறியுள்ளனர். பலகாலும் இது அறியப்படவில்லை; மற்றும் அவர்களது பொறுமை அப்போது வழங்கிவந்த சாதாரணக் கருத்துக்களோடு தகாத முறையில் மனம் பொருந்தியிருந்தமையாகவே தவருகக் கொள்ளப்பட்டது. இச்சமயாசாரியரும் பெருங்குரவரும் கோழையராயினர் என்றும், தாம் சரியானதென நினைத்ததைச் சொல்லவும் செய்யவும் துணிந்தவரல்லர் என்றும் இன்னும் இடையிடையே கேள்விப் படுவீர்கள். ஆனுல் அது அவ்வாறன்று. இவ்வுலக வாசிகளைத் தம் குழந்தைகளாகக் கருதிய இப்பேரிருடியர்களின் உள்ளத்தே அரும்பிய ஆதரத்தின் பின்னுள்ள அளவு கடந்த ஆற்றலை வெறியர் அறிதல் அரிதே. இவர்களே உண்மைத் தந்தையர்கள்; உண்மைத் தெய்வங்கள்; யாவரிடத்தும் கொண்ட வரம்பிலா அனுதாபமும் பொறுமையும் நிறைந்த நெஞ்சினர்கள். இவர்கள் பொறுக்கவும் மன்னிக்கவும் ஆயத்தமாயிருந்தார்கள். இவர்களுக்கு மனித சமூகம் எவ்வாறு வளரக் கூடுமென்பது நன்கு தெரியும். ஆதலால் பொறுமையாக, மெதுவாக, திண்ணமாக, தக்க பரிகாரங்களைப் பயன்படுத்திக் கொண்டே வந்தார்கள். மக்களைக் கண்டியாமலும், அச்சுறுத்தாமலும், ஆனுல் படிப்படியாக மேல்நோக்கி, அன்போடு சாந்தமாகவும் வழி நடத்திக்கொண்டும் வந்தார்கள். இத்தகையோரே உபநிடதங்களின் பேராசிரியர்கள். பழைய கடவுட் கருத்துகள் அக்காலத்துக்குரிய முதிர்ந்த, அறநெறிக் கருத்துகளோடு பொருத்த முடியாதன என்பதை இவர்கள் நன்கறிவார்கள். நாத்திகர் பரப்பும் கருத்துகளில் பேரளவிற்கு உண்மைக் கட்டிகள் இருப்பதும் அவர்கள் நன்கறி

வார்கள். ஆனால், அதே சமயம் மணிகளைக் கோக்கும் கயிற்றை அறுக்க விழைபவரும், அந்தரத்திலே ஒரு புதிய சமூகத்தை அமைக்க வேண்டும் என்பவரும் முழுத்தோல்வி யடைவார் என்பதையும் அவர்கள் நன்கறிவார்கள்.

நாம் ஒரு காலும் புதிதாகக் கட்டுவதில்லை; இடங்களை மட்டும் மாற்றுகிறோம். நாம் புதிதாக ஒன்றையும் பெற இயலாது; பொருள்களின் இடங்களைமட்டும் மாற்றுகின் றோம். வித்தானது, பொறுமையாகவும் மெதுவாகவும் மர மாக வளர்கின்றது. நாம் உண்மையை நோக்கி நமது முழு ஆற்றல்களையும் செலுத்த வேண்டும்; உள்ள உண்மையைப் பூர்த்தியாக்க வேண்டுமேயல்லாது, புது உண்மைகளை உண்டாக்க முயலக்கூடாது. ஆகவே, கடவுளைப் பற்றிய பழமையான கருத்துகளைக் காலத்துக்கு ஏற்றனவல்ல என்று கண்டனம் செய்யாது அவற்றின் அகத்தே சிக்கிக் கிடந்த உண்மைப் பொருளைத் தேட அப்பண்டைய முனிவர் தலைப்பட்டனர்; அதன் விளைவாக வேதாந்த தத்துவ சாத்தி ரம் தோன்றலாயிற்று. பழைய தெய்வங்களினின்றும் பிரபஞ் சத்தை ஆண்டுவந்த ஏகமான இறைவனிடத்தினின்றும், வரவர உயர்ந்த கருத்துகளை நாடி, இறுதியாக நிர்க்குணப் பிரம்மத்தைச் சார்ந்தனர்; பிரபஞ்சம் முழுவதிலும் ஒருமை யைக் கண்டனர்.

வேற்றுமை நிறைந்த இவ்வுலகிலே அனைத்துக்கும் ஊடே செல்லும் அப்பரம் பொருளைக் காண்பானும், மரண மயமான இவ்வுலகில் ஏகமான அகண்ட பரம் உயிர்ப்பொரு ளைக் காண்பானும், சடமும் அறியாமையும் நிறைந்த இவ் வுலகிலே அந்த ஏகசைதன்னிய சோதியை(அறிவொளியை)க் காண்பானும் எவனோ, அவனே நித்தியமான சாந்திக்கு உரியவன். வேறெவனும் அல்லன்; வேறெவனும் அல்லன்.

5. மாயையும் சுதந்தரமும்

"சிறப்பெனும் தூய வெண்முகில் பின் தொடர நாம் உதிக்கிறோம்,'' என்பார் கவிஞர். எனினும், நாமெல்லோரும் மேன்மை யெனும் முகில்களைப் பின்னிழுத்துக் கொண்டே வருகிறோமல்லோம். நம்முட் சிலர் கறுத்த மூடு பனி முகில்களையும் பின்னிழுத்துக் கொண்டு வருகிறோமென்பது பற்றி ஐயமேயில்லை. ஆனால் நம்முள் ஒவ்வொருவரும் போர்க்களத்துக்குட் புகுவது போன்றே இவ்வுலகிற்குட் புகுகின்றோம். நாம் இயன்றமட்டும் போராடி, வாழ்க்கை என்னும் கரையிலாக் கடலில் நமக்கு ஒரு வழி தேடுதற் பொருட்டு அழுதுகொண்டே உலகிற்கு வருகிறோம். நமக்குப் பின்னே பல யுகங்களும் அப்பால் பெரும்பரப்பும் இருக்க, நாம் முன் செல்கின்றோம். இவ்வாறு முன் செல்லும்போதே காலன் வந்து நம்மைப் போர்க்களத்தினின்றும் அப்புறப் படுத்துகிறான்; வெற்றி பெற்றோமோ, தோல்வியுற்றோமோ, நாமறியோம். இதுவே மாயை.

குழந்தையின் நெஞ்சத்தில் நம்பிக்கை மேலோங்கி நிற்கின்றது: குழந்தையின் மலரும் கண்களுக்கு உலகம் முழுதுமே பொன்னுலகமாகக் காட்சியளிக்கின்றது; அது தனது இச்சையே மேலானது என்றெண்ணுகிறது. அக் குழந்தை முன் செல்லச் செல்ல, அடியெடுத்து வைக்கும் தோறும், இயற்கை ஒரு வைரச் சுவர் போன்று நின்று அதன் வருங்கால முன்னேற்றத்தைத் தடை செய்கிறது. மீண்டும் மீண்டும் மனிதன் அதனைப் பதமாகத் தாக்கி உடைத்து உள் நுழைய முயல்கிறான். அவன் முன்னேற முன்னேற, அவனது குறிக்கோள் எட்ட எட்டச் செல்கிறது; இறுதியில் மரணம் வருதலும், ஒருவேளை அவனுக்கு விடுதலை கிடைக்கின்றது போலும்! இது மாயையே.

ஒரு விஞ்ஞானியார் கிளம்புகிறார்; அவர் அறிவைப் பெறப் பெருவிடாய் கொள்ளுகிறார். தம் சத்திக்கு மிஞ்சிய அளவிற்கு, அவருக்கு எந்தத் தியாகமும் பெரிதாவதில்லை, எம்முயற்சியும் நம்பிக்கையற்றதாகவும் இருப்பதில்லை. அவர் இயற்கையின் இரகசியங்களை ஒவ்வொன்றாகக் கண்டு பிடித்துக்கொண்டே முன் செல்கிறார். அதன் மிக ஆழ்ந்த

பகுதிகளிலும் உள்ளவற்றைத் தேடியலைகிறார். எதற்காக? இம்முயற்சியெல்லாம் எதற்காக? நாம் ஏன் அவரைப் பெருமைப்படுத்த வேண்டும்? அவர் ஏன் புகழ் பெற வேண்டும்? எம் மனிதனும் செய்வதை விட இயற்கை செய லாற்ற வில்லையா? இயற்கையோ, மந்தமானது; சடமானது. மந்தமான, சடமான ஒன்றை அனுசரித்துச் செயலாற்று வதால் புகழ் எவ்வாறு உண்டாகும்? இயற்கை எத்துணைப் பெரிய இடியையும் எவ்வளவோ தூரத்துக்குச் செலுத்தக் கூடும்; ஒரு மனிதன் அதில் ஒரு சிறு பகுதியைச் செய் யினும், நாம் அவனைப் பாராட்டுகின்றோம்; வானளாவப் புகழ்கின்றோம். அது ஏன்? அவன் இயற்கையினை அனு சரிப்பதற்காக, சாவை அனுசரிப்பதற்காக, மந்தத் தன்மை யையும் சடத்தன்மையையும் அனுசரிப்பதற்காக நாம் ஏன் அவனைப் புகழவேண்டும்? பொருட் கவர்ச்சியெனும் சத்தி இதுவரை இருந்தவற்றுள், அனைத்தினும் பெரிய அண்டத் தையும் பொடிப் பொடியாக்க வல்லதாகும்; எனினும், அது சடமே. இத்தகைய சடத்தைப் போன்று செய்வதில் என்ன பெருமை உள்ளது? அப்படியிருந்தும், நாம் யாவரும் அதைக்குறித்தே போராடிக்கொண்டிருக்கிறோம். இது மாயையே.

புலன்கள் மனிதனது ஆன்மாவை வெளியே இழுத்துவிடு கின்றன. நலத்தையும் இன்பத்தையும் எங்கே காண முடி யாதோ, அங்கே அவன் அவற்றைத் தேடுகிறான். இம்முயற்சி பயனற்றது, வீணானது என்பதையும், இவ்வுலகிலே இன்பம் இல்லையென்பதையும் யுகக்கணக்காக நம் அனைவர்க்கும் கற் பித்துள்ளனர். ஆனால், நாம் அப்பாடத்தைக் கற்க இயலாத வராகிறோம்; நமது சொந்த அனுபவம் வாயிலாக அன்றி நம்மால் அதனைக் கற்றல் ஒரு போதும் ஒண்ணாது. நாம் முயன்று பார்க்கிறோம். நம்மீது ஓர் அடி விழுகின்றது; அப் போதும் நாம் அறிகிறோமோ? அப்போதும் அறிவதில்லை. சுடரின் மீது பாயும் விட்டில்கள் போன்று நாம் ஐம்புல இன்பங்களுக்கு இடையே மீண்டும் மீண்டும் நம்மைத் தள்ளிக்கொண்டிருக்கிறோம்—அங்கே திருத்தி பெறுவோம் என்ற நம்பிக்கையால், சத்தியைப் புதுப்பித்துக்கொண்டு மீண்டும் மீண்டும் செல்கிறோம்; இறுதியில் செயலற்று

ஏமாற்றமடைந்து, மடியும் வரை அவ்வாறே செய்து வருகிரோம். இது மாயையே.

இங்ஙனமேதான் நமது புத்தியும், மாபேருலகின் மருமங்களைக் கண்டறியும் அவாவினால் வினாக்களை எழுப்புவதை நம்மால் தடுக்க இயலவில்லை; அறிந்தே தீரவேண்டுமென்றே உணர்ச்சி நம்மிடம் எழுகின்றது; அவ்வறிவைப் பெற முடியாதென்பதை நாம் நம்பமாட்டோம். முன்னே அடிகள் எடுத்து வைத்தும், நம்மாற் கடத்தற்கரிய ஆதியும் அந்தமுமற்ற காலம் எனும் சுவர் நம் முன் கிளம்புகின்றது; இன்னும் சில எட்டுகள் வைத்தால், கடத்தற்கரிய அகண்டாகார வெளியெனும் சுவர் தோன்றுகின்றது. இவை யாவும் சூழ்ந்துள்ள காரண காரியச் சுவர்களுக்குள்ளே மீள வொண்ணுதவாறு அடைபட்டுக் கிடக்கின்றன. இவற்றைத் தாண்டி அப்பாற் செல்ல நமக்கு இயலாதெனினும், அதற்கெனப் போராடுகிரோம். இது மாயையே.

மூச்சு விடுந்தோறும், இதயப்பை துடிக்குந்தோறும், இயக்கம் நம்மிடய் நிகழுந்தோறும் நாம் சுயேச்சையுள்ளவரென்றே எண்ணுகிரோம்; ஆனால், அதே க்ஷணத்தில் நாம் அத்தகையினரல்லரென்பது நமக்குக் காட்டப்படுகிறது. உடலாலும் உள்ளத்தாலும், நம் எல்லா நினைவுகளாலும், உணர்ச்சிகள் யாவற்ருலும் நாம் கட்டுப்பட்ட அடிமைகளே யாவோம்; இயற்கையின் அடிமைகளே யாவோம். இது மாயையே.

தனது சேய் பிறவியிலிருந்தே மகா மேதை, அது வரை பிறந்திராத மிகவும் அசாதாரணமான குழந்தை என்று எண்ணுத தாய் எப்போதும் இருந்ததேயில்லை. அவள் தன் குழந்தை மீது மிதமிஞ்சிய பாசம் வைக்கிருள், அவளது முழு உயிரும் அக் குழந்தையிடமே உள்ளது. அக் குழந்தை வளர்கின்றது; ஒரு கால் குடியனுகி,விலங்கின் தன்மையனுய், தாயைக்கொடுமையாக நடத்தத் தலைப்படுகிருன். அவனது கொடுமை மிகும் அளவிற்குத் தாயின் அன்பும் பெருகுகிறது. 'தன்னலமற்ற தாயின் பெற்றிமை என்னேயென்னே !' என்று உலகம் அதனைப் புகழ்கின்றது; ஆனால், தாயானவள் பிறவியிலே அடிமையாதலின் அவ்வாறன்றி இருத்தல் இயலாதவள் என்பதனை அது சற்றும் கருதுவதில்லை. இந்தச்

சுமையை விட்டெறிய அவள் ஆயிரம் தடவையும் விரும்பத் தான் செய்கிறாள்; ஆனால் அது அவளுக்கு இயலுவதில்லை. ஆதலால், அக்குறையைப் பூவால் மூடி வைக்கிறாள்; அதனை வியக்கத்தக்க அன்பு என்கிறாள். இதுவும் மாயையே.

நாமெல்லோரும் உலகில் இவ்வாறுதான் இருக்கிறோம். நாரதர் ஒரு முறை கண்ணபிரானரைப் பார்த்து, 'அண்ணலே, நீங்கள் எனக்கு மாயையினைக் காட்டியருளல் வேண்டும்,' என்று கூறினதாக ஒரு கதை யுண்டு. சில நாள் சென்றதும் கண்ணபிரானார் நாரதரை ஒரு பாலை வனத்துக்குத் தம்மோடு வருமாறு வேண்டினார். சில 'மைல்' தூரம் நடந்த பின்னர், "நாரத, எனக்கு நீர் வேட்கை மிக்கிருக்கிறது; தாகத்தைத் தீர்க்கும் பொருட்டுச் சிறிது தண்ணீர் கொணர்ந்து தருக," என்று கேட்டார். "ஐயன்மீர், நும் பொருட்டு இதோ சென்று நீர் கொணர்கின்றேன்," என்று கூறிவிட்டு நாரதர் புறப் பட்டார்; சிறிது தொலை சென்றதும் ஓர் ஊர் தோன்ற, நீர் தேடி இதனுட் புகுந்து ஒரு வீட்டின் கதவைத் தட்டினார். அழகுமிக்க ஓர் இள நங்கை கதவினைத் திறந்தனள்; அவளைக் கண்டதுமே அவர், 'நம் குரவர் விடாய் தீரும் பொருட்டு நீருக்காகக் காத்திருப்பாரே! நீர் பெறாது உயிரையும் இழக்க லாமே!' என்ற எண்ணத்தை அக்கணமே மறந்து விட்டார். அனைத்தையும் மறந்து அவர் அப்பெண்ணுடன் உரையாட லானார். இன்று முழுதும் இவர் குரவரிடம் மீளாதிருந்தார்; மறு நாளும இப்பெண்ணுடன் பேசிக்கொண்டே அவ் வீட்டில் இருந்தார். இப்பேச்சுக் காதலாகக் கனிந்தது. இவர் அவள் தந்தையாரிடம் இவளைத் தமக்கு மணம் புரிவிக்கு மாறு கேட்டார். இருவரும் மணங்கொண்டு இங்கே வாழ்ந்து மக்களையும் பெற்றனர். இங்ஙனம் பன்னீராண்டுகள் கழிந்தன. அவர் மாமனார் மறையவே, அவரது சொத்துக்கு மருகரே உரியவரானார். அவர் தம் மனைவி மக்களுடனும், நிலங்கள் மாடுகள் முதலியவற்றோடும் இன்பம் பெருக வாழ் வதாகவே கருதினார். இப்போது ஒரு வெள்ளம் வந்து, ஓர் இரவில் ஆறு பெருகி, கரையின் மீது வழிந்தோடி, ஊர் முழு தும் வெள்ளக் காடாக்கிற்று. வீடுகள் வீழ்ந்தன. மக்களும் விலங்குகளும் ஆற்றின் வெள்ளத்தால் இழுத்துச் செல்லப் பட்டு நீரில் மூழ்க, பாய்ந்தோடும் வெள்ளத்திலே ஒவ்வொன்

றும் மிதக்கலாயிற்று. நாரதர் உயிர் தப்ப வேண்டியதா யிற்று. அவர் ஒரு கையினால் தம் மனைவியையும் மற்றொரு கையினால் இரு குழந்தைகளையும் பற்றிக்கொண்டு, மற்றொரு குழந்தையைத் தம் தோளில் சுமந்துகொண்டு, அப்பெரு வெள்ளத்தைக் கடக்க முயன்று கொண்டிருந்தார்; சில அடி கள் எடுத்து வைத்தபின், வெள்ளத்தின் வேகம் மிஞ்சியதைக் கண்டார். தோளிலிருந்த குழந்தை விழவே, ஆறு அதனை இழுத்துச் சென்றது. செயலற்ற நிலையினைக் குறிக்கும ஒரு குரல் நாரதரிடமிருந்து கிளம்பியது. வீழ்ந்த குழந்தையைக் காப்பாற்ற முயன்றபோது, மற்றக் குழந்தைகளில் ஒன்றைப் பற்றிய கை நழுவி, அதுவும் மாண்டது. அறுதியாக அவர் தம் முழு வலிமையோடு பிடித்திருந்த மனைவியும் வெள்ளத் தால் பறிக்கப்பட, அவர் அழுது புலம்பிப் பரிதவித்த வண்ணம் கரையோரம் ஒதுக்கப்பட்டார். அப்போது அவ ருக்குப் பின்னிருந்து ஒரு சாந்தக்குரல் எழுந்தது: "குழந்தாய், தண்ணீர் எங்கே? நீ ஒரு கலம் நீர் கொணரச் சென்றாயே! நான் உனக்காகக் காத்திருக்கின்றேனே! நீ சென்று "அரை மணி நேரம் ஆகி விட்டதே!" என்றது அக்குரல். அரை மணி நேரமா!" என்று வியந்து வினவினர். அவரது மனத் திலே பன்னிராண்டுகள் கழிந்திருந்தன. அக் காட்சிகள் அனைத்தும் அரைமணி நேரத்தில் நேர்ந்து விட்டன!

இது மாயையே. யாதானும் ஒரு வடிவிலே நாம் அனை வரும் அதில் அமிழ்ந்துள்ளோம். காரியங்கட்குரிய இந்நிலை அறிதற்கரியதும் மிகச் சிக்கலானதுமாகும். ஒவ்வொரு நாட் டிலும் இது பிரசாரம் செய்யப்பட்டுள்ளதே எனினும், ஒரு சிலரால் மட்டும் நம்பப்படுகின்றது. ஏனெனில், நாமே அவ் வனுபவம் பெற்றாலன்றி, அதில் நமக்கு நம்பிக்கை எழ இய லாது. இது எதனைக் காட்டுகிறது? மிக்க பயங்கரமான ஒன்றையே. ஏனெனில் அது முற்றும் பயனற்றதே. எதனை யும் பழிவாங்கும் காலதேவர் வருகிறார்; அவர் ஒன்றையும் மிஞ்ச விடுவதில்லை. அவர் முனிவரையும் பாவியையும், அரசனையும் குடியானவனையும், அழகுடையாரையும் அரு வருக்கத்தக்கவரையும் ஒருங்கே விழுங்கிவிடுகிறார்; ஒரு வரையும் விட்டுவைப்பதில்லை. எல்லாமே அந்த ஒரே முடி வாகிய நாசத்தை நோக்கியே விரைந்து சென்று கொண்

டிருக்கின்றன. நம் அறிவும், கலைகளும், விஞ்ஞான சாத்திரங்களும்—ஒவ்வொன்றும்—அதனை நோக்கியே விரைந்து கொண்டுள்ளது. இப்போக்கினை எவரும் எதிர்க்க இயலாது; எவரும் ஒரு நிமிட மேனும் தடுத்து வைக்க இயலாது. கொள்ளை வியாதியினாற் பிடிக்கப்படும் நகர மக்கள் குடியினாலும் கூத்தினாலும் வேறு வீண் முயற்சிகளாலும் மறதியைப் படைத்துக்கொள்ள முயன்று, அதனால் ஒன்றும் செய்ய இயலாத நிலையினை அடைகின்றார்கள். அது போன்றே, நாம் மறக்க முயலுகிறோம்; எல்லாவகைப் புல இன்பங்களாலும் மறதியைப் படைக்க முயல்கிறோம். இது மாயையே.

இரண்டு வழிகள் சொல்லப்பட்டுள்ளன. ஒன்று, மிகவும் சாதாரணமானது; அனைவரும் அறிந்துள்ளது. அது யாதெனில், "அது மிக உண்மையாகவே இருக்கலாம்; ஆனால், அதைப் பற்றி நினைக்காதே. 'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்' என்ற பழமொழியைப் பற்றுக. அது முற்றும் மெய்யே; உண்மையான நிகழ்ச்சியே. ஆனால் அதனைப் பொருட்படுத்தாதே. உன்னால் இயன்ற அளவு போகங்களைக் கைப்பற்று. இயன்றவரை சிறிதேனும் செய். படத்தின் இருளார்ந்த பகுதியை நோக்காது, யாண்டும் நம்பிக்கையையூட்டும் ஐயமற்ற பகுதியையே நோக்கு என்பதே. இதில் உண்மை ஒரு சிறிது உள்ளது; ஆனால் ஓர் அபாயமும் உள்ளது. உண்மை யாதெனின், அது நம்மை உந்துதற்கு உரிய நல்ல சக்தியே. நம்பிக்கையும் ஒரு தெளிவான குறிக்கோளும் நமது வாழ்க்கையை உந்தவல்ல நல்ல சக்திகளேயாம். ஆனால், அவற்றில் ஓர் இன்னலும் உள்ளதே. ஆபத்தாவது, நம்பிக்கையற்று நாம் முயற்சியை நிறுத்தி விடக் கூடுமென்பதே. பின் வருமாறு போதிப்பவர்க்கு அதுவே கதியாகும்; "உலகினை உள்ளவாறே ஏற்றுக்கொள். உன்னால் முடிந்த அளவு அமைதியாகவும் இன்பமாகவும் அமர்ந்திரு; இத்துயரங்கள் அத்தனையாலும் திருத்திகொள்; அடி வீழ்ந்தாலும் அவை அடியல்ல, மலர்களே என்று நினை. அடிமைகளைப் போன்று நீ விரட்டப்படும் போதும், உன்னைச் சுதந்தர புருடனாகக் கூறிக்கொள். அல்லும் பகலும் பிறரிடத்தும் உன்னிடத்துமே பொய்யுரைத்துக் கொண்டிரு;

ஏனெனில், ஆனந்தமாக வாழ்வதற்கு அது ஒன்றே வழி.'' இதுதான் உலக அனுபவ ஞானம் என்பர். இது பத்தொன்பதாம் நூற்றாண்டிற் பரவியுள்ளனது போல உலகில் வேறு எக்காலத்தும் அவ்வளவு பரவியதில்லை. ஏனெனில், இக்காலத்தில் பெற்றதைவிட மிகப் பலத்த அடிகள் வேறு எக்காலமும் விழுந்ததில்லை. போட்டி மிகத் தீவிரமானது; வேறு எக்காலமும் இல்லை. இப்போது போன்று மக்கள் எப்போதுமே உடன் வாழ்வோரை அத்துணைக் கொடுமையாக நடத்தியதில்லை; ஆகவேதான் இவ்வாறு ஆறுதல் அளிப்பது அவசியமாகிறது. இக்காலத்தே அது மிகமிக உறுதியாக வெளியிடப்படுகிறது; ஆனால், அது தோல்வியையே பெறுகிறது; எப்போதும் அது தோல்வியடைந்தே தீர வேண்டும். நாம் பிணத்தை ரோஜா மலர்களால் மூடி மறைத்தல் இயலுமா? அது ஒருகாலும் இயலாது. அது நீண்ட காலம் பயன்படுமா? ஏனெனில், ரோஜா மலர்கள் விரைவில் வாடும்; அப்போது பிணம் அதற்கு முன் இருந்ததைவிட மிகக் கேடுற்றதாகவேயிருக்கும். நம் வாழ்க்கையும் இத்தகையதுதான். நமது பண்டைய அழுகிப் போன புண்களைப் பொன்னுடையினால் போர்த்திவைக்க முயலலாம்; ஆனால் ஒரு நாள் இந்தப் பொன்னுடையை நீக்கும் காலம் வரும். அப்போது அப்புண் அதன் முழு விகாரத்தோடு தென்படவே செய்யும்.

அப்போது நம்பிக்கைக்கு இடமே இல்லையா, என்ன? நாம் யாவரும் மாயையின் அடிமைகளே; அதிலே பிறந்து, அதிலே வாழ்பவராகிறோம். பின்பு அதினின்றும் வெளிவர வழியே இல்லையா? வெளிவரும் நம்பிக்கை இல்லையா? நாம் எல்லாரும் துன்புறுகிறோம். இவ்வுலகம் உண்மையிலே ஒரு சிறைச்சாலைதான். பொங்கிப் பின் தொடரும் வனப்பு எனப்படும் அழகும் ஒரு சிறைச்சாலையே. நமது புத்திகளும் மனங்களும் சிறைச்சாலைகளேயாம். இவ்வுண்மை ஊழிதோறும் அறியப்பட்ட ஓர் உண்மையே.

மனிதனாய்ப் பிறந்தவன் எவனும், அவன் எவ்வாறு பேசினும், இதனை என்றேனும் ஒரு சமயம் உணர்ந்திராதவனாய் இருந்ததேயில்லை. மூப்படைந்தார்களே இதனைப் பேரளவுக்கு உணர்கின்றார்கள். ஏனெனில், அவர்களிடம் வாழ்க்கை முழுவதும் உள்ள அனுபவமும் குவிக்கப்

பட்டுளது; மற்றும் இயற்கையின் பொய்களால் அவர்கள் எளிதாக ஏமாற்ற மடைய மாட்டார்களல்லவா? வெளியேற வழியே இல்லையா? இவ்வளவும் இருந்தும், இப்பயங்கரமான உண்மை நம்முன் ஒளிரவும், துன்பதுயரங்களுக்கு நடுவேயும், வாழ்க்கையும் சாவும் ஒரே பொருளைக் குறிக்கும். இவ்வுலகிலும் ஓர் அமைதியான மென் குரல் எல்லாக்காலங்களிலும் ஒவ்வொரு தேசத்திலும் ஒவ்வோர் இதயத்திலும், பின் வருமாறு ஒலித்துக்கொண்டுள்ளது. "இந்த எனது மாயை தெய்விகமானது; குணங்களாலானது; கடக்கமிக அரியது ஆயினும், என்னைச் சாரபவர் வாழ்க்கையாற்றைத் தாண்டி விடுகின்றனர்,"—"வருந்தி உழைப்பவரும் பெரும் பாரம் தாங்குவோரும், அனைவரும் என்னை வந்தடையுங்கள்; நான் உங்களுக்கு ஓய்வளிப்பேன்," இக்குரலே தான் நம்மை முன்னே செலுத்தி வருகிறது. மனிதன் இக்குரலைக் கேட்டிருக்கிறான்; காலமெல்லாம் இதைக்கேட்டுவருகிறான். அனைத்தையும் இழந்து விட்டதாகத் தோன்றும் போதும், நம்பிக்கை பறந்தோடிவரும் போதும், மனிதனுக்குத் தன் சொந்த வலிமையில் உள்ள நம்பிக்கை நசுக்கப் படும் போதும், அவன் பெற்றன வெல்லாம் தன் கை விரல்களுக்கிடையே மறைவதாகத் தோன்றும் போதும், வாழ்க்கை செயலற்ற நிலையாற் பாழ்படும் போதும் இக்குரல் அவனைச் சார்கிறது. அப்போது அது அவனது செவியில் வீழ்கிறது. இதுதான் 'சமயம்' எனப்படுகிறது.

ஆகவே, ஒரு பக்கம், 'இது முற்றும் பேதைமை; இது மாயை,' என்ற துணிவுள்ள அழுத்தமான உரை; ஆனால், சுடுகாடு, மாயைக் கப்பால், அதனினின்றும் வெளியேற வழியொன்றுண்டு என்னும் மாபெரு நம்பிக்கையை யூட்டும் ஓர் அழுத்தமான உரையும் உள்ளது. மறு பக்கம் உலகானுபவம் முதிர்ந்த மக்களோ, நம்மிடம், "சமயம் என்னும் இயற்கைக்கு அதீதம் என்றும் கூறும் அத்தகைய பேதைமையைப் பற்றிச் சிந்தித்து உங்கள் மூளையைக் குழப்பாதீர்கள். இங்கேயே வாழுங்கள்; இது உண்மையாகவே மிகக் கெட்ட உலகந்தான். ஆனால் இதிலிருந்து இயன்றவரை நன்மையெல்லாம் பெற்றுவிடுங்கள்," என்று இயம்புகின்றார்கள். தெளிவாகக்கூறும் போது இதன் பொருளாவது, "பாசாங்கும்

பொய்யும் நிறைந்து வாழ்; புண்களையெல்லாம் இயன்றவரை மூடிக்கொண்டு, இடையருத வஞ்சனை வாழ்வை நடத்து; வரிசையாக ஒட்டுப் போட்டுக்கொண்டே வா; எல்லாவற்றையும் இழந்து ஒட்டு வேலையின் தொகுதியாகவே நீ எஞ்சும் வரை அங்ஙனம் செய்து வா. இதுவே உலகானுபவத்தோடு இயைந்த வாழ்வு. இத்தகைய ஒட்டு வேலையில் திருத்தியடைபவர் ஒரு நாளும் சமய நெறியைச் சாரமாட்டார். காரியங்கள் இப்போதுள்ள நிலையிலும், நமது வாழ்வுகளிலும் பேரளவிற்கு அதிருத்தியும் வாழ்க்கையில் நடைபெறும் ஒட்டு வேலையில் தீவிரமான வெறுப்பும். வஞ்சனை மீதும் பொய்யின் மீதும் அளவு கடந்த அருவருப்புமே சமய வாழ்வின் தொடக்கமாம், உலகானுபவத்தை ஒட்டி வாழ்தலெனும் கருத்து புத்தரது மனத்தில் உதித்தபோது, அனைத்தும் பேதைமை என்று அறிந்தும், அதினின்றும் வெளியேற வழி காணுதவரானுர், அவ்வமயம் அப்பேராற்றல் வாய்ந்த புத்த பகவான் போதிமரத்திலிருந்து கூறியவாறே துணிந்து உரைப்பவனே சமய வாழ்வினனுகவல்லான். மெய்ப்பொருளை நாடுவதைக்கைவிட்டு, உலகிற்கே மீணடும் சென்று, எல்லாவற்றுக்கும் பொய்ப் பெயர்களையிட்டு, தம்மிடமும் பிறரிடமும் பொய்களேபேசிப் பழைய வஞ்சனை வாழ்வைப் பற்றும் மயக்கத்தூண்டுதல் அவரிடம் எழுந்தபோது அம் மாபெருந் திறலினர் அதனை வென்று, பின் வருமாறு மொழிந்தார் 'அறியாமை நிறைந்து தாவரம் போல் வாழ்வதினும் இறத்தலே சிறந்தது. தோல்வி யெய்தி வாழ்வதினும் போர்க்களத்தில் மடிவதே சிறந்தது.' இதுவே சமய வாழ்விற்கு ஆதாரமாகும். இந்நிலையில் நிற்கும் போது ஒரு மனிதன் மெய்யினை அறியும் நெறியின் பாலுள்ளான்; அவன் கடவுளைக் குறித்துச் செல்லும் நெறியிலுள்ளான்... இத்தகைய மனத்திட்பமே சமயவாழ்வினனுதற்கு முதல் யாதல் வேண்டும். நான் எனக்கெனவே ஒரு வழியை ஏற்படுத்திக் கொள்வேன், நான் மெய்யினைக் காண்பவனுவேன்; அன்றேல் உயிரைத் துறப்பது திண்ணம். ஏனெனில், இப்பக்கத்தில் ஒன்றுமேயில்லை. அது போய்விட்டது; ஒவ்வொரு நாளும் அது மறைந்து கொண்டே வருகின்றது. அழகிய நம்பிக்கை மிக்க இன்றைய இளைஞனே நாளைய வீரனுகிருன்

நம்பிக்கைகளும் இன்பங்களும் போகங்களும் நாளைய மூடு பனியிலே மலர்கள் போன்று நாசமுறும் அது ஒரு பக்கம்; மற்றொரு பக்கத்தில் வெற்றியின் பெருங்கவர்ச்சியும், வாழ்க்கைத்திமைகள் அனைத்தையும் அடக்கியாளுதலும், பிரபஞ்சத்தின் மீது ஆட்சிசெலுத்துதலும் உள்ளன. இப்பக் கத்தில் மக்கள் நிற்க முடியும் ஆகையால், வெற்றிக்காகவும போராடத் துணிபவர்கள் சரியான பாதையிற் செல்பவர்கள். அதுவே வேதங்கள் போதிக்கும் நெறி. "செயலற்றுத் திகைக்கும் நிலையினை அடையாதீர். நெறிமிகக் கடின மானதே; கூரான கத்தியின் விளிம்பின் மீது நடப்பது போன்றது. அது ஆயினும், நம்பிக்கையைக் கைவிடாதீர்; எழுமின் விழிமின் குறிக்கோளைக் காண்மின்."

சமயத்தின் பல திறப்பட்ட புறத்தோற்றங்களாகிய இவையனைத்தும் எந்த வடிவத்திலும் வகையிலும் மக்களைச் சார்ந்திருந்தாலும், அவற்றுக்கு இந்த ஒரே பொதுவான ஆதாரம் உண்டு. அது யாதெனின், இவ்வுலகினைவிட்டு வெளியேறும் வழியைப்பற்றி, விடுதலையைப் பற்றிய போதனையே, அவர்கள் உலகியலையும் சமயத்தையும் ஒரு காலும் சமரசப்படுத்தி வரவில்லை. வாழ்க்கையிலுள்ள பெரு முடிச்சை அறுத்து விடவும் சமயத்தை அதற்குரிய இலட் சியத்தின் மீது நிலை நாட்டவும் உலகியலோடு சமரசப் படுத்தலை ஒழித்து விடவுமே வந்தனர். ஒவ்வொரு சமயமும் போதிப்பது இதுவே, இந்த நல்ல ஆசைகள் அனைத்தையும் இசையும்படி ஒருங்கே இணைத்தலும், உலகத்துள்ள சமயங் கள் அனைத்திற்கும்—மிக உயர்ந்ததற்கும் மிகத் தாழ்ந்த தற்கும்—பொதுவாயுள்ள பகுதியை வெளிப்படுத்தலும் வேதாந்தத்தின் கடமையாகும். மிக இழிந்த மூடநம்பிக்கை யென்றும், மிக உயர்ந்த தத்துவ ஞானமென்றும் நாம் கூறும் அவையும் உண்மையில் ஒரே பொது நோக்கத்தைக் கொண்டுள்ளன. அவையிரண்டும் சங்கடத்திலிருந்து வெளி யேறும் வழியைக் காட்ட முயல்கின்றன; பெரும்பாலும் அவ் வழியாவது இயற்கை நியதி; கட்டுப்படாத ஒருவனது உதவியின் மூலமே. ஒரு வார்த்தையில் கூறின் (சுவாதீன முள்ள) ஒரு முத்தனது துணையின் மூலமே. சுதந்தரக்கருத் தாவான ஒருவனது இயல்பைப்பற்றிப் பல சங்கடங்களும்

பல்வேறு அபிப்பிராயங்களும் இருந்த போதிலும், அக் கருத்தா சகுணக்கடவுளா, மனிதனைப்போன்று அறிவுற்ற ஒருவனா, ஆணா பெண்ணா அலியா என்பவை பற்றிய வழக்குகள் ஓயாதிருப்பினும், அடிப்படைக் கருத்து ஒன்றேயாம். பற்பல தரிசனங்கள் சற்றும் கிட்டத்தட்ட இசைய ஒண்ணாதவாறு ஒன்றிற்கொன்று மாறுபட்டிருப்பினும், பொற் சரடனைய ஒருமை யென்பது அவை அனைத்துள்ளும், ஊடுருவியிருப்பதைக் காண்கிறோம்; இந்தத் தரிசனத்திலோ, இப்பொற்சரட்டின் இருப்பைக் கண்டறிந்து, சிறிது சிறிதாக நமது காட்சிக்கு இலக்காக்கியுள்ளனர். இவ்வுண்மையின் காட்சிக்கு முதலடியாவது, அனைத்தும் முத்தியை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன என்ற பொதுக் கொள்கையே.

நம் இன்பதுன்பங்களுக்கு இடையே, வருத்தங்கள் சங்கடங்களுக்கு நடுவே, தோன்றும் ஒரு விசித்திரமான உண்மை யாதெனின், நாம் திண்ணமாக முத்தியை நோக்கிப் பயணம் செய்து கொண்டிருக்கிறோம் என்பதே. அனுபவ வாழ்க்கையில் எழும் வினா இதுவே: "இந்தப் பிரபஞ்சம் என்பது என்ன? எங்கிருந்து தோன்றுகிறது? எதற்குள் செல்லுகிறது?" இதற்கு விடையாவது, "அது சுதந்தரத்தில் கிளம்புகிறது; சுதந்தரத்தில் நிலைபெறுகிறது; சுதந்தரத்தில் மறைகின்றது. சுதந்தரம் எனும் இக் கருத்தை நீங்கள் ஒருகாலும் கைவிட இயலாது; உங்கள் செயல்களையும் உங்கள் வாழ்வுகளையும் அது இல்லாதபோது இழந்து விடுவீர். ஒவ்வொரு கணமும் இயற்கை நாம் அடிமைகள் என்பதையும், நாம் சுதந்தரர்களல்லர் என்பதையும் நிலைநாட்டி வருகின்றது. ஆயினும், அதே சமயம் நாம் சுவாதீனம் பெற்றவர்களே என்ற மற்றொரு கருத்தும் எழுகின்றது. அடியெடுத்துவைக்குந்தோறும், நாம் மாயையினால் அடித்துத் தள்ளப்பட்டவர்கள் போன்றே ஆகிறோம்; நாம் கட்டுண்டவர்களே என அறிவுறுத்தப் பெறுகிறோம். ஆயினும், அதே காலத்தில் இந்த அடியுடனும் நாம் கட்டுப்பட்டவரே என்ற உணர்ச்சியுடனும் நாம் சுயேச்சையுள்ளவரே என்ற மற்றோர் உணர்ச்சியும் கூடவே வருகிறது. ஏதோ ஒரு குரல் உள்ளிருந்து நாம் சுதந்தரரே என்று கூறு

கின்றது. ஆனால், அந்தச் சுதந்தரத்தைப் பெறமுயலுங் கால், அதை வெளிப்படுத்த முயலுங்கால், வெல்லற்கரிய இன்னல்கள் எழுவதைக் காண்கிறோம். ஆயினும், அது அவ்வாறிருந்தும், உள்ளிருந்து தன்னை, "நான் சுதந்தரன், நான் சுதந்தரன்", என்று வற்புறுத்திக் கூறிக்கொண்டே தானிருக்கிறது. உலகிலுள்ள சமயங்கள் யாவற்றையும் ஆராய்ந்து பார்த்தால், இக்கருத்து வெளியிடப்படுதலை நீங்கள் காண்பீர்கள். சமயம் மட்டுமன்று—நான் அம்மொழி யைக் குறுகிய பொருளில் மட்டும் கூறவில்லை—ஆனால், சமூகத்தின் வாழ்வு முழுதுமே சுதந்தரம் என்னும் ஒரே கோட்பாட்டினை வற்புறுத்துவதாகின்றது. அந்த ஒரே சுதந்தரத்தினை வலியுறுத்துவனவே. இயக்கங்கள் யாவும் அக்குரலை ஒவ்வொருவரும் கேட்டே உள்ளனர். அறியினும், அறியாவிடினும், அக்குரல், "கடுமையாக உழைப்பவரே, பெரும் பாரம் தாங்குவோரே, என்னிடம் வாருங்கள்", என்று கூவுகின்றது. இது ஒரே மொழியிலோ ஒரே வகையிலோ வேறொரு வகையிலோ, அச்சுதந்தரக்குரல் நம்முடன் கூடவே இருந்துவந்துள்ளது; நமது இயக்கம் ஒவ்வொன் றும் அதற்காகவேதான். நாமெல்லோரும்; அறிந்தோ அறி யாமலோ அச்சுதந்தரத்தை நோக்கியே விரைந்து செல் கிறோம். அக்குரலைப்பின்பற்றியே செல்கிறோம்; ஒரு கதை யில் கிராமக் குழந்தைகள் புல்லாங்குழல் ஊதுபவனின் இன் னிசையைப் பின் தொடர்ந்து எவ்வாறு சென்றனவோ, அப் படியேதான் நாமும் நம்மை அறியாமலே—இக்குரலின் இசை யைப் பின் பற்றிச் சென்று கொண்டிருக்கிறோம்.

நாம் அக்குரலைப் பின்பற்றி ஒழுகுங்கால் அறநெறியில் நிற்கிறோம். மனித ஆன்மா மட்டுமன்றி, அனைத்தினும் தாழ்ந்த உயிர் முதல் அனைத்தினும் உயர்ந்த உயிர் வரை எல்லா உயிர்களும் அக்குரலைக் கேட்டுள்ளன; அதனை நோக்கியே ஓடுகின்றன. அவ்வாறு அவை ஒன்றோடொன்று சேர்கின் றன, அன்றேல், ஒன்றை மற்றொன்று வழியினின்றும் விலக் கித் தள்ளிவிடுகின்றன. இவ்வாறாகவே போட்டியும், இன் பங்களும், போராட்டங்களும், வாழ்வும், சுகமும், இறப்பும் வருகின்றன, முழு உலகமே அக்குரலைச் சாரும். வெறி

கொண்டு போராடி வருவதன் பயனன்றி வேறன்று.
உள்ளியல்பு வெளிப்படுவது இவ்வாறே.

பிறகு நேர்வது யாது? காட்சி மாறத்தொடங்குகிறது. அக்
குரலை நீங்கள் உணர்ந்து,அது இன்னதென அறிந்தும் முழுக்
காட்சியும் மாறிவிடுகின்றது. மாயையின் கோரப்போர்க்
களமாக இருந்த அதே, உலகம், இப்போது எழில்மிக்கதாக
வும் நல்லதாகவும் மாறிவிடுகின்றது. பின்பு ஒருபோதும் நாம்
இயற்கையினைச் சபிப்பதில்லை—உலகம் பயங்கரமானதென
வும். அனைத்தும் பயனற்ற முயற்சிகளே யெனவும் பகர்
வதில்லை. பின்னர் நாம் அழுது புலம்ப வேண்டுவதில்லை.
நமக்கு அக்குரலை அறிந்ததும், இப்போராட்டமும், போட்டி
யும், சங்கடமும், கொடுமையும், இவ்வற்ப இன்ப துன்பங்
களும், இங்கிருக்கும் காரணத்தை அறிகிறோம்; ஏனெனில்
அவையின்றி நாம் அக்குரலை நோக்கிச் செல்லல் நிகழாது;
ஆனால், அறிந்தோ அறியாமலோ, நாம் அக்குரலை அடைய
மாறே விதிக்கப்பட்டுள்ளோம். ஆதலால், மனித வாழ்வு
முழுதும், இயற்கை முழுதும், சுதந்தரத்தை (முத்தியை)
அடையப் போர்புரிந்து கொண்டிருக்கிறது. ஞாயிறு அந்த
இலட்சியத்தை யடையவே சென்றுகொண்டிருக்கிறது. கதிர
வனைச் சுற்றிவரும் பூமியும், அத்தகையதேதான் பூமண்ட
லத்தைச் சுற்றிவரும் மதியும் அக்குறியை நோக்கியே
செல்லுகிறான்; அவனைத்தடுத்தல் அரிது, கஞ்சனும்
(உலோபி) அம்முடிவிடத்தையே நோக்கிச் செல்கிறான்.
அனைவரினும் மிக்க நன்மை செய்வோனும் உள்ளே அக்
குரலைக் கேட்கிறான். அவனால் அதனை எதிர்க்க இயலாது.
அதை நோக்கி இவன் சென்றேயாகவேண்டும், முழுச்சோம்
பேறியும் அப்படியே செய்கிறான். ஒருவன் மற்றொருவனி
லும் அதிகம் தடுமாடுகிறான்; அதிகம் தடுமாறுகிறவனைக்
கெட்டவன் என்றும், குறைந்த தடுமாற்ற முடையவனை
நல்லவனென்றும் நாம் நவில்கிறோம். நன்றும் தீதும் எப்
போதுமே இருவேறு பொருள்களாகா; அவை ஒன்றேயாம்.
வேறுபாடு இனத்திலன்று; அளவிலேதான்.

இச்சுதந்தர சத்தியின் வெளிப்பாடே பிரபஞ்ச முழு
வதையும் உண்மையாகவே ஆட்சி செய்து வருகிறதானல்-
இக் கருத்தினை நாம் சிறப்பாக ஆராய்ந்து வரும் சமயத்திற்

குப் பயன் படுத்துவோமாயின்-இக்கருத்தே எல்லாவிடத்தும் வற்புறுத்தப்பட்டு வருவதைக் காண்கிறேம். அனைத்தினும் தாழ்ந்த சமயத்தில் உள்ள பிதிர்களின் வழிபாட்டையோ சத்திமிக்க சில கொடிய தேவதைகளின் வழிபாட்டையோ கருதுவோம். அத்தெய்வங்களைப் பற்றியோ பிதிர்களைப் பற்றியோ உள்ள முக்கியமான கருத்து யாது? அவர்கள் இயற்கையினும் மேம்பட்டவர்கள்; இயற்கையின் தடைகளுக்குக்கட்டுப்படாதவர்கள். வணங்குபவன் இயற்கையைப் பற்றிக் கொண்ட கருத்துச் சுருங்கிய எல்லைக்கு உட்பட்டது என்பதிற் சந்தேகம் இல்லை. அவன் சுவரை ஊடுருவிச் செல்ல மாட்டாதவன்; வானிற் பறக்க இயலாதவன்; ஆனல், அவன் வணங்கும் தெய்வங்களோ, இவற்றை ஆற்ற வல்லன. தத்துவ முறையில் பொருள் என்ன? இதுவே: சுதந்தரம் தன் இருப்பை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறது. அவனது அறிவுக்கு எட்டிய மட்டில் அவன் வணங்கும் தெய்வங்கள் இயற்கையைப் பற்றிய கருத்து விரிய விரிய, இயற்கையினும் மேலான ஆன்மாவின் கருத்தும் விரிவடைந்துகொண்டே வந்து, நாம் இறுதியில் ஒரே கடவுளென்று கூறிவரும் கோட்பாட்டினை அடைகிறேம்: அதன்படி மாயை (இயற்கை) என்பது உளதாகின்றது; அதனை ஆட்சி செய்யும் பரம்பொருளான ஒரு தெய்வமும் உள்ளதாகிறது.

இந்த ஒரே கடவுளென்ற கொள்கை முதன் முதல் தோன்றுமிடத்திலேதான் வேதாந்தம் பிறக்கின்றது. ஆனல், அத்தத்துவம் இன்னும் மிகுதியான விளக்கம் பெற வேண்டியிருக்கிறது. மாயையின் இவ்வெல்லாத் தோற்றங்களுக்கும் அப்பாலுள்ள ஒரு பரமபுருடர் உளர் என்றும், அவர் மாயையினும் மேலானவரென்றும், அதனைச் சாராது வாழ்பவர் என்றும், அவர் நம்மைத் தம் பக்கல் ஈர்த்துக்கொள்கிருர் என்றும், நாம் எல்லோரும் அவரை நோக்கியே சென்று கொண்டிருக்கிறேம் என்றும் கூறும். இவ்விளக்கம் மிக நன்றாக இருக்கிறது. எனினும், உணர்வு தெளிவாகவில்லை காட்சி மங்கலாகவும் ஒரு வாறு மறைபட்டும் இருக்கிறது ஆனல், அது நியாய அறிவுக்கு முரணுகவுமில்லை. இதுவே வேதாந்தம் கூறுவது. உங்களது தோத்திரப் பாடலில்,

“என் கடவுளே, உமக்கு முன்னினும் அண்மையிலே”,
என்று கூறியுள்ளபடி, அதே தோத்திரம் வேதாந்திக்கும்மிக
நல்லதேயாம். ஆனுல், ஒரு வார்த்தையை மட்டும் மாற்றி,
“என் கடவுளே, எனக்கு முன்னினும் அண்மையிலே,”
என்று கூறுவேன். இலட்சியம் (குறி) நெடுந் தூரத்துக்கப்
பால், இயற்கைக்கு நெடுந் தொலைக்கு அப்பால் இருந்து நம்
அனைவரையும் தன்னிடம் இழுத்துக் கொண்டிருக்கிறது
என்ற கருத்து இழிவடையாமலோ, சீர் குலையாமலோ நமக்கு
மேலும் மேலும் அருகே கொண்டுவரப் படல் வேண்டும்.
சொர்க்கத்தே வாழும் கடவுள் இயற்கையிலுள்ள கடவுளா
கிருர். இயற்கையிலுள்ள கடவுள் இயற்கையே யாகும்
கடவுள் உடலெனும் கோயிலிலே உறையும் கடவுளாகிருர்;
உடலெனும் கோயிலிலே உறையும் கடவுள் இறுதியிலே
அக்கோயிலே ஆகிருர்; ஆன்மாவாகிருர்; மனிதனுகிருர்.
இதிலே அது உபதேசிக்கக் கூடிய அறுதியான மொழிகளை
எட்டி விடுகிறது முனிவரர் யாவரும் இத்தனை யாண்டுகளா
கத் தேடிக்கொண்டிருக்கும் அப்பரம் பொருள் நம் உள்ளங்
களிலேயே உறைகின்றது; நீங்கள் செவிமடுத்தகுரல்
சரியானதே. ஆனுல், நீங்கள் அக்குரல் இன்ன திசையி
லிருந்து வருகிறது எனக் கூறியது பிழையாயிற்று நீங்கள்
கண்ட சுதந்தர இலட்சியம் சரியானதே; ஆனுல், நீங்கள்
இதனை உங்களுக்குப் புறம்பே படைத்தீர்கள். அதுவே உங்
களது பிழை அதனை வரவர அணித்தாகவே கொண்டுவரு
வீர்களாயின், அது எப்போதும் உங்கள் இதயத்திலேயே
இருந்து வந்துள்ளதென்பதையும் அது உங்கள் ஆன்மா
வின் ஆன்மாவே என்பதையும் காண்பீர்கள். அந்தச் சுதந்
தரமே உங்களது சொந்தப் பண்பாம் இம்மாயை உங்களை
ஒரு போதும் கட்டுப்படுத்தியதேயில்லை. இயற்கை உங்கள்
மீது ஒருகாலும் அதிகாரம் செலுத்த இயலாது அச்
சுறுத்தப் பெற்ற குழந்தை போன்று அது உங்கள் குரல்
வளையைப் பிடித்து இறுக்கியதென்று கனவு கண்டு கொண்
டிருந்தீர்கள்; இந்த அச்சத்தினின்றும் விடுதலை பெறுவதே
இலட்சியப் பொருள்; இதனை அறிவினுல் உணர்ந்து கொள்
வதனுல் மட்டு மன்று இதனைக்காணலும், உலகினைக் காண்
பதினும் மிகத் தெளிவாக இதனை உண்மைப் பொருளாக

இனுபவித்தலும் வேண்டும். இப்போது நாம் சுதந்தர முற்ற வர் என்பதை அறிவோம். அப்போதே எல்லாச்சங்கடங் களும் நீங்கும்; உள்ளத்தின் குழப்பங்கள் யாவும் சரியாகும்; கோணல்யாவும் நிமிரும் அப்போது பல்பொருளுண்மையும் இயற்கையும் மாயமே—பொய்த்தோற்றமே—என்பது விளங் கும் மாயை என்பது பயங்கரமான தொருகனவாக இப்போது இருப்பதற்குப் பதிலாக அழகாக வினங்கும்; இப் பூமியும் சிறைச்சாலை யாவதற்குப் பதிலாக, நமது விளையாட்டுக் குரிய இடமாகும்; அபாயங்களும் சங்கடங்களுங் கூட, துன் பங்கள் அனைத்துமே, தெய்வத்தன்மை வாய்ந்தன வாகித் தமது உண்மையான இயல்பைக் காட்டும்; எல்லாவற்றிற் கும் அப்பால், எல்லாவற்றிகும் சாரமாகப் பரம் பொருளான இறைவன் எழுந்தருளியிருப்பதையும், அவனே ஏகமான, உண்மையான ஆன்மப் பொருள் என்பதையும் அறிவுறுத்து வதாகும்.

6. பரம் பொருளும் அதன் வெளிப்பாடும்

அத்துவிதத்தத்துவ சாத்திரத்தை அறிந்து கொள்வதில் மிகவும் கடினமானதும், அடிக்கடி வினவப்பட்டு வந்தும் என்றுமே முடிவு காணமாட்டாது நிற்கக் கூடியதுமாகிய பிரச்சினையொன்று யாதெனில், 'அளவுகடந்த, நினைவுக்கு எட்டாத, கலப்பற்ற பொருளாகிய பரம் பொருள் எவ்வாறு அளவுக்குட்பட்ட உருவுடன் திகழும் அவதாரமாகிறது' என்பதே, இக்கேள்வியைப்பற்றி நாம் ஆராய்வோம். அதனை விளங்கச் செய்ய ஒரு படம் வரைந்து காட்டுகிறேன்.

(அ) என்பது 'பரம் பொருள்' அல்லது 'பரப்பிரம்மம்'. (ஆ) பிரபஞ்சத்தைக் குறிப்பது. 'கலப்பற்றி பிரபஞ்சமாகப் பரிணமித்திருக்கிறது இதன் பொருள் புறவுலகம் விரிந்துள்ளது மட்டுமன்று. அகவுலகும், ஆன்மவுலகும் மேலுலகங்கள், பூவுலகு முதலிய உலகங்கள், இருப்பனவெல்லாமே, மனமென்பது ஒரு மாறுதலின் பெயர், உடல் மற்றொரு மாற்றத்தின் பெயர், இப்படி எல்லா மாறுதல்களும் சேர்ந்தே நமது பிரபஞ்சமாகின்றது. இந்த மெய்ப் பொருளாகிய (அ) காலம், இடம், நிமித்தம் இவற்றைக் கடந்து வந்தே (தோன்றும்) பிரபஞ்சமாகிவிட்டது. இது அத்துவைதத்தின் மையக்கருத்து காலம், இடம், நிமித்தம் இவை ஒளி கொடுக்கிற கண்ணாடி போன்றிருந்து அப்பாலிருக்கும் பொருள்களைக் காணச் செய்கின்றன. இந்த ஆதி மூலமே பரம்பொருள் காணப்படுகின்றது அதனை படத்தில் உள்ளது போல கீழே பாருங்கள். அது பிரபஞ்சமாகத்தோற்றம் அளிக்கிறது. இதினின்றும் நாம் பரம்பொருளில் கால, இட, நிமித்த நியதிகள் கிடையா என்பதனை உடனே கண்டு கொள்கிறோம், காலம் என்னும் கருத்து அங்கு இருக்க இயலாது; ஏனெனில், மனமும் எண்ணமும், அங்கு இல்லை யாதலால், இடம் என்ற கருத்தும் இருக்க



சுவாமி விவேகானந்தர்

இயாலது; ஏனெனின், புறத்தே மாறுதல் எதுவும் இல்லே. கூறுவன (ஒன்றே ஒன்றுதான் இருக்குமிடத்தில் நிகழ மாட்டாது; நிகழ இயலாது. ஆதலால், ஒறே ஒன்றுதான் உளதென்றும்போது நாம் அசைவும் என்றுமே (Causation) காரணத்துவம் என்றும் நாம் இதனை நன்கு அறிந்து கொண்டு மனத்தில் பதிய வைத்துக் கொள்ளவேண்டும்—முற்றிலும் இயற்கையுலகாக மாறி விட்ட பின்னரே (இவ் வா்று அதனைக் கூறிவதற்கு நான் உங்கள் அனுமதியைக் கோருகிறேன்.) அதற்கு முன் அன்று—நாம் காரணததுவம் என்று கூறும் ஒன்று தொடங்குகின்றது. இன்னும், நம் சங்கற்பம், இச்சை யாவும் அதன் பின்னரே தோன்று கின்றன, வேதாந்தத்தை விளக்கி விரிவுரை ஆற்றுங்கால் (அறிஞர்) ஷோபனேர் சற்று மயங்கி விட்டாரென எண்ணு கிறேன். ஏனெனில், அவரது உரையில் சங்கற்பமே எல்லாம் என்பது சாதிக்கப்பெறுகின்றது. பரம் பொருளைச் சங்கற் பம் என்றே எடுத்துக் கூறுதல் ஒவ்வாது அவர் அவ்வாறே உரை செயகிறார். ஏனெனில், சங்கற்பம் என்பது மாறு தலுடையது; தோன்றிக் கணப்போதில் மறையக் கூடியது; இயற்கையினைச் சார்ந்தது. நாம் கால, இடம், நிமித்தம் என்றவற்றிற்கு மேலாக வரைந்துள்ள கோட்டிற்கு மேலே யாதொரு மாறுதலோ, அசைதலோ இல்லே. ஆதலால், அக் கோட்டிற்குக் கீழே தான் எண்ணமென்னும் அப்புற இயக்கங்கள் தொடக்கமாகி திகழ்கின்றன. அதற்கு அப்பால் சங்கற்பம் என்பதே இருக்க இயலாது; ஆகவே, சங்கற்பித்தல் என்பது பிரபஞ்சத்தின் தோற்றத்துக்குக் காரணமாக மாட் டாது, நம்மயே இன்னும் சிறிது அணுகுவோம். அப்போது, நமது உடலிலேயே ஒப்போருர் அசைவிற்கும் இச்சாசத்தி காரணமாக மாட்டாது என்பதனைக் காண்கிறோம், இந்தச் சங்கற்பமே மறு கோடியில் தசைக்கட்டுகளின் அசைவு (Muscularmotlon) வட்டமிட்டு வரும் செலவாக வெளிப்படு கிறது, எந்தச் சத்தி நாற்காலினது நகர்த்துகிறதோ, அதே சத்தி தான் இதயத்தையும், சுவாசப்பையையும், பிறவற்றை யும் இயக்குகின்றது. ஆனால், இயக்கச் சங்கற்பத்தின் மூல மாக அன்று, சத்தி யொன்றுதான் என்று வைத்துக் கொள் ளும் போது உணர்வென்னும் தனத்துகு அது ஏறும்போதே

அது இச்சத்தி யாகின்றது. இதற்கு முன்னர் அதனைச் சங்கற்பச்சத்தி எனக் கூறுவது பிழை. இதனுல், ஷோபனேரின் தத்துவத்தில் குழப்பம் மிக்க தோராளவில் உண்டாகின்றது. ஒரு கல்விழுகிறது நாம், 'இது ஏன்?' எனவினவுகிருேம் காரண மின்றி எதுவும் நிகழாது என்ற நியாயத்தை ஒப்புக் கொள்ளும் போதுதான் இத்தகைய கேள்வி பொருத்தமாகும். இதனை நீங்கள் உங்கள் உள்ளத்தில் தெளிவுற அமைத்துக் கொள்ள வேண்டு மென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். ஏனெனில், எந்த ஒரு காரியமும், 'ஏன் நிகழ்கிறது?' என்று நாம் கேட்கும்போதெல்லாம், நடப்பதற் கெல்லாம் ஒரு காரணம் இருத்தல் அவசியம் எனத் தீர்மானித்துக் கொள்கிருேம், அதாவது, அதற்கு முன் ஒரு காரணம் ஓர் ஏதுவான செய்தி—நிகழ்ந்திருக்க வேண்டு மென்று (தருக்க ரீதியாக) அனுமானிக்கிருேம் இந்த முற்படுதலும் பின் தொடர்தலும் காரணத்தத்துவ நியதி எனப் பெயர் பெறுகின்றன. இதன் பொருள் முழு உலகில் ஒவ்வொன்றும் தன் முறையில் ஏதுவும் பயனுமாய் மிளிர்கின்றது. பின்னர் வரும் சில நிகழ்ச்சிகளுக்கு அது காரணமாகின்றது; தன் முன் நிகழ்ச்சியின் பயனுமாகின்றது, இதற்குத்தான் 'காரண காவியத் தொடர்பின் நியதி' என்பது பெயர். இது தமது சிந்தனைக் கெல்லாம் அடிப்படையாய் உள்ள முக்கியமான—கட்டாயமான—ஒரு நிபந்தனை பிரபஞ்சத்திலுள்ள ஒவ்வொருதுகளும்—அது எதுவாய் இருந்தாலும் மற்றொன்றுடன் ஒரு தொடர்பு முறையிலுள்ளது என்பது நமது நம்பிக்கை. இக்கருத்து எப்படிப் பிறந்தது என்பது பற்றிப் பெரிய ஆராய்ச்சி இருந்து வந்துள்ளது. ஐரோப்பாவில் இயல் புணர்ச்சி பெற்றதத்துவ ஞானிகள் தோன்றியிருந்தாகள். அவர்களது நம்பிக்கை அது மனித இனத்தில் இயற்கையமைப்பிலேயே உண்டாய தென்பது மற்றொரு சாராரது நம்பிக்கை. அது சிறந்த அனுபவத்திலுல் சித்தித்த தென்பது. ஆனுல், பிரச்சினை இது காறும் தீர்ந்த பாடில்லை. இது பற்றி வேதாந்தத்தின் கருந்து யாது என்பதனைப் பின்னர்க்காண்பம் நாம் முதன் முதல் அறிந்து கொள்ள வேண்டுவது ஒன்று உண்டு, அது யாதெனில், 'ஏன்?' என்று நாம் கேட்பதிலிருந்தே நம்மைச் சுற்றியிருக்கும் ஒவ்

வொன்றுக்குமுன் சில நிகழ்ச்சிகள் நாம் பெற்றன என்ருலும், அதற்குப பின்னர் சில விளைவுகள் பிறந்தன என்றும் நாம் முன்னறிவாகக் கொள்ள வேண்டும் இப்பிரச்சினையினின் றும் மற்றுமொரு நம்பிக்கை வெளிப்படுகிறது. அது யாதெனின் உலகத்தில் சார்பின்றி ஒன்றுமே இல்லை யெனவும், ஒவ்வொன்றும் தனக்குப் புறம்பாயுள்ள ஒன்றி ஞல் இயக்கப்பட்டுள்ள தெனவும் கொள்வதே ஒன்று மற் ருென்றினைச் சார்ந்து நிற்பது இயற்கையின் நியதி. அகில புவனத்திலும் 'மெய்ப்பொருள்' எதிலிருந்து உண்டாயிற்று என்று நாம் கேட்கும்போது நாம் பிழை செய்கிருேம். இதைக் கேட்கும்போது நாம் சில வற்றை (இருப்பவை போல) எண் ணிக்கொள்ள வேண்டியிருக்கிறது. அதாவது, பரம்பொரு ளும் மற்ருென்றிஞல் கட்டுப் படுத்தப பட்டுள்ள தாகவும் அதுவும் தன்னைச் சார்ந்தது ஆகாது பிற பொருற் றென்றினைச் சார்ந்திருப்பதாகவும் எண்ணி கொள்வது இவ் வாறு கொள்ளும் போது நாம் பரம் பொருளையும் பிரபஞ்சத் தின் இழிவான நிலைக்கு இறக்கிக் கொண்டு வந்துவிடு கிருேம், பரம் பொருளில் காலமோ, இடமோ, சாரணத்து வமோ இல்லை அங்கு எல்லாம் ஏகமே தவிர, வேறில்லை. தாஞகவே இருப்பதற்கு ஒரு காரணம் இருத்தல் இயலாது சுவாதீனத்துடன் இருப்பதற்கு ஏது இருத்தல் இயலாது அவ்வாறு இல்லையாஞல் அது சுயேச்சையுடன் கூடியுள்ள தாய் இராது; கட்டுப் பட்டுள்ளதே இருக்கும் எதற்கு மற்ருென்றுடன் தொடர்பு உண்டோ அது விடுதலையுடன் கூடியதாய் இருக்க இயலாது. 'அகண்டமானது என் அளவிற்குட் பட்டதாயிற்று?' என்னும் கேள்வியே தன் னுடன் முரண்பட்டிருப்ப திஞலேயே நிகழக்கூடாதது ஆகின்றது. சூக்குமங்களை விட்டுவிட்டு நமது சாதரண மான தருக்களவுக்கும் பொதுஅறிவுக்கும் வரும்போது நாம் இதனை மற்ருெரு கோணத்தில் நின்று நோக்கலாம்; அதா வது, பரம்பொருள் எப்படிச் சார்பினதாயிற்று என்ற அறிவினை நாடும்போது. நமக்கு விடை கிடைத்து விட்ட தென்றே வைத்துக்கொள்வோம்; அப்போதும் மெய்ப் பொருள் அத்தகையத்தாகவே இருக்குமா? அது தற்சார் பினதாய் இராது) சார்புற்றதாகி விடுகிறது. நமது சர்வ

சதாரணமான பொது அறிவின் கருத்தில் 'ஞானம்' என்பது யாது? நமது மனத்தின் எல்லையால் வறையறுக்கப்பட்ட ஏதோ ஒன்ரு—நமக்குப் புலப்படும் ஒன்றே அது நம்மனத்துக்கு எட்டாத போது அது அறிவாகமாட்டாது. மெய்ப்பொருள் மனத்தின் வரையறைக்குட் பட்டு விடின், அது இனி எவ்வாறு பரம்பொருளாய் இருக்க இயலும்? அது அளவிற்குட்பட்டதேயாகி விடுகிறது. மனத்திஞல் அகப்படுத்தப்பட்ட அனைத்தும் அளவுள்ள பொருளே ஆகிவிடுகின்றன. ஆகையிஞல், மெய்ப்பொருளை அறிவதென்பது முரண்பாடுற்ற மொழியே. அதனாலேதான், இக்கேள்விக்கு மறுமாற்றம் கூறப்படவில்லை; ஏனெனில், விடை இருக்கப்படின், 'மெய்ப்பொருள்' என்பதே இலதாகிவிடும். அறியப்பட்ட கடவுள், 'கடவுள்' ஆகார்; அவர் நம்மைப்போன்ற ஒருவரையாகிவிட்டார்: அவர் அறியக் கூடாதவர்; எப்போதும் அறியப்படாதவர். ஆனுல், அத்துவைதம் கூறுவது யாதெனில், கடவுள் அறியப்படுபவர் மட்டுமல்லாது, எல்லை கடந்தவருமாவர். அறியவேண்டிய அவர் ஒரு பேருண்மை நாத்திகர் கூறும் வகையில் கடவுள் அறியப்படுபவரல்ல ரென்று எண்ணி நீங்கள் உங்கள்விடுகளுக்குச் சென்று விடக்கூடாது. சான்ருக, இங்கே ஒரு நாற்காலியுள் ளது; அது நமக்குத் தெரிந்த பொருள் ஆனுல் விசும்பின் பெருவெளிக்கு அப்பாற்பட்டது, அல்லது அங்கு மனித இனம் வாழ்கின்றதோ இல்லையோ என்பது அறியக்கூடாத பொருளாக இருக்கலாம். ஆனுல், இந்தப் பொருளில் கடவுள் அறியப்பட்டவரும் அல்லர்; அறியப்படுபவருமல்லர். அவர் அறிந்த பொருள்களிலும் மிகமேலானர்; இதுதான் கடவுள் அறியப்படாதவர்; அறிவுக்கு எட்டாதவர் என்று சொல்வதன் பொருள் சாதாரண வழக்கில் சொற்பொருளாக கூறப்படும் அறியப்படவில்லை, 'அறியக்கூடாதாவர்' என்ற பொருளில் பயன்படுத்தப் பெறவில்லை அச்சொற்ருேடர். கடவுள் அறியப்பட்ட எதற்கும் மேலனவர். இந்த நாற்காலி அறியப்படுகின்றது; ஆனுல், கடவுளோ, இதனிலும் மிக்க பேரளவில் அறியப்பட்டவர்; ஏனெனில், அவரிலும் அவர்மூலமாகவே இந்த நாற்காலியையும் நாம் அறிந்து கொள்கிருேம். அவர் எல்லா அறிவுக்கும் சாட்சி

யாவார்—நிரந்தரச் சாட்சியாவர். நாம் அறிவையாவும் அவரிலும் அவர் வாயிலாகவுமே அறியவேண்டியுள்ளன. அவர், நமது சொந்த ஆன்மாவின் சாரமேயாவர். இந்த 'நான்' என்பதில்லாமலும் இதன் மூலமாகி அல்லாமலும் நாம் எதனையும் அறிந்து கொள்ள இயலாது. பிரம்மனிலும் அவர்மூலமாகவுமே எப்பொருளையும் அறியவேண்டியிருக்கிறது ஆகையால், நாற்காலியை அறியவேண்டுமானால் அதனைக் கடவுளினிலும் அவர் மூலமாகவுமே அறிய வேண்டியுள்ளது. இவ்வாறாக நாற்காலியிலும் மிக மிக நெருங்கியவராய் இருக்கிறார் கடவுள், நமக்கு என்றாலும்; அவர் நமக்கு சேய்மையில் இருக்கிறார்; அறியப் படவுமில்லை; அறியப்படாமலுமில்லை; இவ்விரண்டிற்கும் அளவின்றிய உயர்ந்தப்புகழ் நிறைந்த ஒருவர் பிரபஞ்சத்தில் பரந்திராவிடில்; யாரால் ஒரு நொடி வேறு வாழ இயலும்? யார் ஒரு நொடியேனும் மூச்சுவிட இயலாது? ஏனெனில், அவரிலும் அவர் வாயிலாகவுமே நாம் உயிராகின்றோம், அவர் ஏதோ ஓர் இடத்தில் இருந்துகொண்டு எனது இருதியை (உடலில்) ஓடச் செய்கிறாரென்பதன்று கருத்து; மற்று யாதெனில். இவையாவற்றிற்கும் அவரே சாசப்பொருள்; எனது வாழ்வின் உயிர் ஒரு வகையிலும் நீங்கள் அவரை அறிந்து விட்டதாகக் கூறுதல் இயலாது. அப்படிச் செய்வது அவரை இழிவு படுத்துவதாகும் நீங்கள் உங்களினின்றும் எவ்வாறு வெளியேறக்கூடும்? அது கூடாத வகையாக, அவரை அறிந்து கொள்ளவும் அறிவென்பது ஒரு பொருளைப்பற்றிய செய்திகளைப் பெறுவது. எடுத்துக்காட்டாக, உங்கள் நினைவில் நீங்கள் பல விஷயங்களைப் பற்றி கொள்கின்றீர்கள்: 'விசேஷம்' அலைகள் உங்கள் உள்ளத்தின்றுமே கிளர்ந்து எழுந்து புறத்தே தோன்றுகின்றன எல்லா நினைவுகளும் நான் கண்டுள்ள எப்பொருள்களும்; என் அகத்தேயுள்ளனவென்று நான் அறிவனவே; இவ்வாறு தோன்றுகின்றன. இந்த அனைத்துப் பொருள்களின் படங்களும் பதிவுகளும் என் மனத்தில் உள்ளன; நான் இவற்றினை நினைக்க முயலுங்கால், அறியுங்கால் அறிவின் முதல் வினை (தொழில் செய்ய) இவற்றை வெளியே எறிந்து ஓரிடத்தில் குவியச் செய்கிறது. இது கடவுள் விஷயத்தில்

செய்ய இயலாது; ஏனெனில், அவரை நாம் அவ்வாறு நமக்குப் புறம்பே செலுத்தி வைக்க இயலாது. இங்கு வேதாந்தத்திலுள்ள மிக்க ஆழ்பொருள்களுள் ஒன்றைக் குறிப்பிடுவோம். உனது ஆன்மாவின் சாரமான பொருளாக இருப்பவன் அவன், அவன் அப்பரம் பொருளே. சுவேதகேதுவே! நீ அவனு இருக்கிருய் தத்-த்வம்-அஸி என்பதன் பொருள் இதுவே. வேறு எந்த வாக்கினுலும் (மொழி) அவனை சித்திரித்தல் இயலாது. அவனைத் தகப்பன் என்றே, சோதரனென்றே நம் எல்லாரினும் மிக (நெருங்கிய) பிரியமான தோழன் என்றே, உரைக்க முயல்வதெல்லாம், கடவுளை ஒரு பொருளெனக் கொண்டு பார்க்க நினைக்கும் முயற்சியே. அது வீணேயாகும். அவன் எப்பொருளுக்கும் 'சாசுவத எழுவாயாக' (Subjeet) மிளிர்கிருன். இந்த நாற்காலியைக் காண்பதற்கு, நான் எழுவாய், நான் இதனைக் காண்கிறேன்; இது போலவே, கடவுளே ஆன்மாவின் 'நிரந்தா எழுவாயாய்' விளங்குகிருன். உங்கள் ஆன்மாவின் சாரமாவனை சகலமான பொருள்களின் உண்மையானவனை நீங்கள் எப்படிப் பொருளெனக்கண்டு கொள்ளல் இயலும்? இவ்வாறு உங்களுக்கு நான் மறுமுறையும் கூறுவேன்: கடவுள் அறிவுக்குப் புலனுகுபவரும் அல்லர்; அவ்வாருகாத வருமல்லர்; ஆனுல், இவ்விரண்டினும் எல்லையின்றி உயர்ந்திருப்பவர். அவர் நம்முடனே ஒன்று பட்டவர்; நம்முடன் ஒன்றுபட்டுள்ளதொன்று நமது ஆன்மாவைப் போன்றே அறியப்படுவதுமன்று. அறியப்படா திருப்பதுவுமன்று அறியப்படாததிருப்பதுவுமன்று. உனது ஆன்மாவை உன்னுல் காண இயலுமா? அதனை நீ பார்க்கும் பொருளாகச் செய்ய வெளிச்செலுத்த இயலுமா? இயலாது. ஏனெனில், நீயே அது அதனிடமிருந்து எப்படி உன்னைப் பிரித்துப் பார்க்க இயலும்? ஆனுல், அது தெரிந்து கொள்ளப் படாததுமன்று; ஏனெனில். உன்னைத்தவிர உனக்கு எதைத்தான் அதனினும் நன்ருக அறிந்து கொள்ள இயலும்? அது உண்மையாகவே நமது மதிநலத்தின்மையும் இதன் ஒத்த அளவிலேயே உள்ள பொருளில் கடவுள் அறியக்கூடாதவருமல்லர்; அறியப்படுபவருமல்லர்; ஆனுல், இரண்டினும் மிகமிக மேம்பட்ட

அளப்பரிய அளவிலுள்ளவர். அவரே நமது உண்மையான ஆன்மப் பொருள்.

முதலாவதாக, "பரத்தின் காரணப் பொருள் யாது? என்ற கேள்வி முரணானது என்பதைக் காண்கிறோம்; இரண்டாவதாக, அத்துவைதத்திலுள்ள கடவுட்கருத்து இந்த ஒருமையே என்பதைக் காண்கிறோம். ஆகையினாலேயே, அவனை ஒரு பொருளாக வைத்துப் பார்க்க இயலாது; ஏனெனில், நாம் எப்போது அறிந்தோ அறியாமலோ-அவனிலேயே வாழ்ந்து அவனிலேயே இயங்குகின்றோம் என்பதைக் காண்கிறோம். நாம் இயற்றுவனயாவும் எப்போதும் அவன் வாயிலாகவேதான். இப்போது கேள்வியாதெனில் காலம், இடம் காரணத்துவம் என்பவை யாவை? என்பதே. அத்துவைதம் என்பதன் பொருள் இரண்டான்மை (ஏகமானது); இரண்டு அல்லது, ஒன்றேதான் உண்டு. ஆயினும், நாம் இங்கே ஒரு கோட்பாட்டினைக் காண்கிறோம்; அஃதாவது, மெய்ப் பொருள் தன்னைக்காலம், இடம், காரணத்துவம் என்றதிரைச் சீலையின் மூலமாகப் பலவாகக் காட்டிக் கொள்ளுகிறது. (வெளிப்படுத்திக் கொள்கின்றது) என்பது. ஆதலால், இங்கே இரண்டுபொருள்கள் பரம்பொருள் மாயையும் (இடம், காலம்; காரணத்துவம் மூன்றும் சேர்ந்தகூட்டான மொத்தத் தொகை) உள்ளன எனத்தோனகின்றது. இரண்டு உள்ளனவென்று (அநேகமாக) உறுதியோடு அறிவுறுத்தப்படுகின்றது இதற்கு மறுமாற்றமாக, 'இதனை இரண்டென்று கூறக் கூடாது,' என்பதாக அத்துவைதி கூறுகின்றார். இரண்டாக இருக்க வேண்டுமானால், சிருட்டிக்கப்படாத இரண்டு தற்சார்ந்த (பிறச்சார்புகளில்லாத, சுதந்தரமான) தனிப் பொருள்கள் இருக்கவேண்டும். முதலில், காலம், இடம், காரணத்துவம் இவை இத்தகைய சுவாதீனமான தனிப்பொருள்களெனக் கொள்ளல் இயலாது; காலம் முற்றும் பிறசார்புள்ள ஒன்றே; அது நமது உள்ளத்தின் ஒவ்வொரு மாறுதலுடன் இழைந்த மாறுதல்களை உடையதாகும். சிற்சில நேரங்களில் கனவில் ஒருவன் பல்லாண்டுகள்தான் வாழ்ந்து வந்ததாகக் காண்கிறான்; வேறு சில சமயங்களில் பல திங்களை ஒரு நொடிப்பொழுது போலக் கழித்துவிட்டதாகவும் கனவுகாண்கிறான். ஆகையினால், காலமானது

நமது மனநிலையைச் சார்ந்ததாகவே உள்ளது. இரண்டாவதாக, சிலநேரம் காலக் கருத்தே முற்றும் மறைந்து விடுகிறது. அதேபோன்றுதான் இடமும், இடமென்பது யாதென்பது நமக்குத் தெரியது. ஆயினும், அது வரைத்து, நவிலவொண்ணுததாகவே (அங்கே) இருக்கிறது. மற்றும் வேறொன்றினிடமிருந்தும் அது பிரிந்திருக்க இயலாது, இதேபோலத் தான். காரணத்துவம் என்பதிலும் காலம், இடம், காரணத்துவம் இவற்றில் நாம் காணும் சிறந்த நிலை ஒன்றுண்டு, அது மற்றப் பொருள்களினின்றும்பிரிந்து இருத்தல் இயலாது நிறம் அல்லது அதனைச் சூழ்ந்துள்ள பொருள்களின் தொடர்பு அற்று உள்ள இடத்தைப்பற்றி, தனிபபட்ட வெளியைப் பற்றி சற்றே எண்ணிப்பாருங்கள். அது உங்களால் இயலுவததென்று, அதனை இரண்டு எல்லைகளுக்குட்பட்ட இடமாகவே மூன்று பொருள்களுக்கு இடையேயுள்ள இடமாகவோதான் எண்ண இயலும் பிறிதோர் பொருளுடன் சம்பந்தப்படுத்தியேதான் அதன் இருப்பை (உண்மையைக்) காண இயலும் அதுபோன்றேதான் காலதத்துவத்துவமும் தனித்துள்ள காலம் பற்றிச் சிந்திக்கவே இயலாது முன்னுள்ள ஒரு நிகழ்ச்சி, அதன் பின்னுள்ள ஒரு நிகழ்ச்சி ஆகிய இவ்விரண்டிற்கும் இடையேயுள்ள காலம் பற்றி (இடை வெளி பற்றியே) தான் நாம் சிந்தனை செய்ய இயலும். எப்படி இடமானது வெளியே உள்ள இரு பொருள்களைக்கொண்டே தீர்மானிக்கப் படுகிறதோ, அவ்வாறே காலமும் இரு செய்திகளின் நிகழ்ச்சியைக் கொண்டே கணக்கிட இயல்கிறது காரணத்துவ மென்னும் கருத்தையும் காலம் இடம் என்னும் இரண்டினின்றும் பிரித்துக் காண்பது அரிது. அவற்றிற்குச் சுயமான இருப்பு என்பது இல்லை என்பது தான் அவை பற்றிய சிறப்பு அசாதாரணமான செய்தி நாற்காலியோ சுவரோ பெற்றுள்ள இருப்பும் இவற்றிக்கு இல்லையாகின்றது. எங்நிலையையும் சூழ்ந்துள்ள நிழல் போன்றவை. அவை அவற்றைப் பற்றிக் கொள்ள இயலாதன்றோ? அவற்றிற்கு உண்மையான இருப்பு (பாவம்) இல்லை. ஆயினும், அவை இராமலுமில்லை; ஏனெனில், அவை வாயிலாகவே நாம் பிரபஞ்சத்தில் வெளித்தோன்றும் பொருள்களைக் காண்கிறோம். இவ்வாறு, நாம்

முதலிற் காண்பது, இடம், காலம், காரணத்துவம்—இவற்றின் கூட்டுறவில் இருப்புமில்லை இருப்பற்ற ஒரு நிலையுமில்லை என்பது இரண்டாவதக, இக் கூட்டுறவும் (அபாவமும்) சில நேரங்களில் மறைந்து விடுகின்றன. இதற்கு ஓர் உதாரணம் உரைக்கலாம். பெருங்கடல் மீதுள்ள ஒரு திரையைக் கவனிப்போம் திண்ணமாகவே திரையும் கடலும் ஒன்றே; அப்படியிருந்தும், அலைவேறு, கடல் வேறு என்று நாம் அவற்றைப் பிரித்துக் காண்கிறோம். இந்த வேற்றுமைக்குக் காரணம் என்ன? பெயரும் உருவமுமே ஓர் அலையின் வடிவைக் கடலென்னும் கருத்தினின்றும் பிரித்துக் காண இயலாது; திட்டமாக இயலாது அது (கடல்) எப்போதுமே கருத்துடன் ஒட்டியேதானிருக்கும்; அலை வடிந்தபோது அந்த அலையுருவம் ஒரு நொடியில் மறைந்தே போய் விடுகின்றது; ஆயினும் அவ்வுருவம் அறிவுமயக்கத்தில் தோன்றிய தொன்றன்று அது மாயம் (பொய்த் தோற்றம்) அன்று அலை தோன்றின வரை அந்த உருவம் இருப்புப் பெற்றிருந்தது; அதனை நீங்கள் காணக்கடமைப் பட்டுள்ளீர்கள் ; இது மாயை.

ஆகவே, இப்பிரபஞ்சம் முழுதும் ஒரு சிறப்புருப் பெற்றுளதே; கலப்பற்ற அம்மெய்ப்ப பொருள் அப்பெருங்கடலாகும்; நீங்களும், நானும், கதிரோனும், உடுக்களும், மற்றுமுள்ளயாவும் அப்பெருங் கடலின் பலதிறப்பட்ட அலைகளைப் போன்றுள்ளோம் இந்த அலைகளை வேறு படுத்துவது எது? உருவத்தோற்றமே; அது தான் அலையைச்சார்ந்த கால இட காரணத்துவங்களின் கூட்டுறவு அலை மறைந்ததும் அவையும் மறைந்து விடுகின்றன மாயையைத் தனித்தொகுதியிலுள்ளவர்கள் விட்டு விடும் போதும் அவர்கள் சுவாதீனம் (விடுதலை) பெற்றவர்களாகின்றார்கள் நமக்கு இடையூறுகளாய் இருக்கும் காலம், இடம், காரணத்துவம் இவற்றுடன் ஒட்டிக்கொண்டிருப்பதினின்றும் நம்மை விடுவித்துக்கொள்வது பெரும் போராட்டம் வளர்ச்சிக்கொள்கை என்பது யாது? அதன் இரண்டு அக அமிசங்கள்யாவை? உள்ளூர் இருந்து வரும் ஒரு மகத்தடன் சத்திதன்னை வெளியிட்டுக் கொள்ள முயன்று கொண்டிருக்கிறது, அதனைத்தலை தூக்க வொட்டாது அமுக்கியும், அது வெளிப்

பட விடாது தடுத்தும் வருகின்றன சூழ்நிலைகளுடன் போரிடவே இச்சத்தி மீண்டும் மீண்டும் புத்துடல்களைப் பெற்று வருகின்றது தேங்கியுள்ள புது வெள்ளத்தில் வாழும் அணுப் பிர மாணமுள்ள சிற்றுயிர் இத்தகைய போரில் வேற்றுடன் பெற்றுச் சில தடைகளை வென்று வந்து மற்றுமோர் உடலைப் பெறுகின்றது இப்படி வளர்ச்சி பெற்றுல் மனித உடல் பெறுகின்றது இக் கருத்தை நீங்கள் இதன் தருக்க முறையின முடிவிற்கு எடுத்துச் செல்லின், ஒரு காலம் வரும்; அப்போது சிற்றுயிரில் தங்கியிருந்துஇறு தியில் மானிடனுகப் பரிணமிகத் ஒரு சத்தி இயற்கை உண்டாக்கும் பல இடையூறுகளையும் வென்று விட்ட தாகும் இப்படியே தன் சுற்றுப் புறங்களினின்றும் தப்பித் துக் கொள்ளும் மானத நூலிற் கூறப் பட்டுள்ள கருத்து இவ்வடிவம் (அத்யாதம) பெறும் ஒவ்வொரு செயலிலும் இரு பகுதிகள் உள்ளன ஒன்று (Subjaect) பொருள், (கர்த்தா) மற்ருென்று, செயப்படு பொருள் வாழ்க்கையின் ஒரே குறி கர்த்தாவைச் செயப்படு பொருளின் எசமானனுக்குவது சாதாரணமாக, ஒருவன் என்னை வசை கூறுவதால் (பழிப்ப தால்) நான் துயருறுகின்றேன்; வருந்துகின்றேன் எனது போர் (முயற்சி) சூழ்நிலையை வெல்லும் அளவிற்கு என்னை வலியுள்ளவனுகச் செய்து கொள்ளலே அப்போது அவன் ஏச்சு என்னைப் பாதிக்காதவாறு நான் என்னை ஆக்கிக் கொள்கிறேன் இப்படியே நாமெல்லோரும் வெல்லமுயலு கின்ருேம். நன்னெறி என்றதியாது? தனிப் பொருளுக்குத் தக்கவாறு தன்னையே பொருளானது வலி பெற்றதாகச் செய்து கொள்வது இந்நிலையில் வரம்பிறக்குட்பட்ட இயற்கை நம் மீது ஆட்சி செலுத்துவதை விட்டொழித்து விடுகின்றது. இயற்கை வரம்பிற்குட்பட்டதாய் இருப்பத ஞல், நாம் நமது சூழ்நிலைகள்யாவற்றையும் வெற்றிகொள் ளும் காலம் வந்தே தீருமென்பது நமது தத்துவ ஞானத்தில் தருக்க நெறியில்—உள்ள முடிந்த முடிபாகும்.

இங்கு நாம் அறியவேண்டுவதான வேருெரு செய்தியும் உண்டு: உங்களுக்கு இயற்கை வரம்பினையுடையது என்பது எவ்வாறு தெரிகிறது? இதனை உள நூல் வாயிலாகத்தான் அறிதல் கூடும், இயற்கை கிற்சில வரையறைகளுக்குட்பட்ட

அகண்டமே. ஆகையினால், அது அளவினதே ஆகும். ஆதலால் நாம் நமது சுற்றுப் புறங்களை முழுதும் வெல்லும் காலமொன்று வந்துதான் ஆகவேண்டும். நாம் அவற்றை வெல்வது எவ்வாறு? நாம் சுற்றுப்புறத்திலுள்ள அனைத்துப் பொருள்களையும் வென்றுவிடுவதென்பது கூடாத காரியம். நம்மால் அது இயலாது. நீரிலிருக்கும் மீன் தனது பகை உயிர்களிடமிருந்து தப்பிப் பறக்க உன்னுகின்றது. அது எவ்வாறு அதனைச்சாதிக்கின்றது? சிறகுகளையேற்றுப் பறவையாவதனாலேதான். மீனானது நீரினையோ அல்லது வாயுமண்டலத்தையோ மாற்றிவிடவில்லை. மாற்றம் தானாகவே தான் நிகழ்ந்தது. மாறுதல் எப்போதுமே பொருவதிலேதான் உள்ளது. பொருளிலுள்ள மாற்றத்தினாலேயே இயற்கையின் மீது ஏற்படும் வெற்றி உண்டாகிறது என்பதை வளர்ச்சியின் வகைகளில் நீங்கள் காணலாம். அதனாலேதான் மனிதன் அகத்தினைப்பற்றிய பகுதியினின்றே வேதாந்தம் தனது பேராற்றலின் முழுச் சக்தியினையும் பெற்றுவிடுகின்றது. தீமை துயர்பாடுகள் பற்றிக் கூறுவன பொருளற்றவை. ஏனெனில், அவை புறத்தே நிகழ்வன அல்ல. சீற்றத்தினின்றும் காக்கப்படுவேனாயின் நான் ஒரு போதும் வெகுள்வதில்லை. பகைமையினின்றும் நான் முற்றும் காப்பாற்றப்படின், நான் ஒருபோதும் பகைமை பாராட்டுவதில்லை; ஏனெனில் வெறுப்பு என்னைத் தீண்டுவதேயில்லை.

அத்தகைய வெற்றியினைப் பெறுவதற்கான வழி இதுவே. தன்னைப்பற்றியுள்ளதனைத் திருத்திப் பூரணமாக்கி விடுவதே. பௌதிக முறையிலும் நீதி நெறியிலும் இக்கால ஆராய்வுகளுக்குப் பொருந்த—இல்லை அதற்குச்சிறிது மேலாகவே—அத்துடன்பட்டு ஒழுகும் ஒரே சமயம் வேதாந்தமேயாகும்; அதனாலேதான் அது இக்கால விஞ்ஞானிகளோடு அத்துணை விருப்பமுள்ளதாய்த் திகழ்கின்றது. பழமையான துவைதக் கோட்பாடுகள் அவர்களுக்குப்போதுமானவையாகவோ திருத்திகரமானவையாகவோ இருப்பதில்லை. ஒருவனுக்கு நம்பிக்கை மட்டும் இருத்தல் போதாது; அவனது அறிவினுக்கு உகந்ததாகவும் இருத்தல் வேண்டும். இப்போதும்—19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும்—தனது

பரம்பரை மதத்துக்குப்புறம்பான ஓரிடத்திலிருந்து வருவதனுலேயே அது பிழைபட்டேயிருத்தல் வேண்டுமென்ற கருத்து நம்மில் இன்றும் வலிகுன்றியேயுள்ளது என்பதனைக்குறிக்கின்றது : இவ்வெண்ணங்களை விட்டொழித்தேயாகவேண்டும். இந்நாட்டிலே மட்டுந்தான் இத்தகைய நிகழ்ச்சி நடையாடுகிறதென்று நான் கூறவில்லை. எல்லா நாடுகளிலும் இவ்வாறேயுள்ளது ; அதுவும் எனது நாட்டிலேதான் மிகப் பெரிய அளவில் இருந்து வருகிறது. அத்துவைத அறிவு மக்களுக்கு எட்டாதபடி தடுக்கப்பட்டது. முதலில் சில மடவாசிகள் அதனை ஏற்ருர்கள். அதனை வனத்தும் எடுத்துச் சென்றனர், ஆதலால்தான் அதற்கு "ஆரணிய தத்துவம்" என்ற பெயரும் கிட்டிவிட்டது. இறைவன் நல்லருளால் பகவான் புத்தர் அவதரித்துப பொதுமக்களிடை அதனைச்சொற்பொழிவு மூலம் பரப்பினுர்: நாடு முழுதும் புத்தக் கொள்கையினை ஆதரித்தது, புத்த தருமத்துக்கு மாறியது. நெடு நாளைக்குப் பின்னர் நாட்டினை நாத்திகர்களும் கடவுளுண்மையில் ஐயம் கொண்டவர்களும் குலையும்படி செய்தபோது, அத்துவைதம் ஒன்றே இந்தியாவை உலகாயதத்தினின்றும் காக்கும் என்பது புலப்பட்டது.

இப்படி இருமுறையும் அத்துவைதமே இந்தியாவை உலகாயதத்துக்கு ஆளாகிவிடாது காத்து வந்திருக்கிறது ; புத்தர் வருமுன் அது மிகப்பேரளவில் நாட்டில பரவிவிட்டது. அது மிகக் கோரமான உருவம்படைத்திருந்தது. இன்றைய உலகாயதத்தைப் போலாகாமல் அதனினும் மிகக் கெட்ட தன்மையுற்றதாய் இருந்தது. நான் ஒரு வகையில் உலகாயத மதத்தைச் சார்ந்தவனே. ஏனெனில், நான் ஒரு பொருளேதான் உள்ளதென நம்புகின்றேன். உலகாயதனும் அதையேதான் நம்புமாறு உங்களுக்கு வேண்டுகோள் விடுக்கிருன். வேறுபாடு ஒன்றேதான். அவன் அப்பொருளை இயற்கைப் பொருள் என்று வழங்குகின்ருன் நானே, அந்த ஒன்றைக் கடவுளென்று கூறி மகிழ்கிறேன். இந்த ஒரே சடப்பொருளினின்றுமே முழு நம்பிக்கையும், சமய உணர்ச்சியும், மற்றுமுள்ள யாவும் பிறந்துள்ளன என்பதை உலகாயதவாதிகள் ஒப்புக் கொள்கின்றனர். நான் கூறுவது, இவை யாவும் பிரம்மனிடத்திலிருந்தே வந்துள்ளன என்பது. புத்தர்

காலத்துக்கு முன்புள்ள உலகாயதம், "உண்டு பருகிக் களித்திரு," என்று போதித்து வந்த பக்குவப்படாத வகையிலிருந்தது. "கடவுள் இல்லை; ஆன்மா இல்லை; சொர்க்கம் இல்லை. மதமென்பது தீயகுணமுள் குருமாரின் கட்டுக் கதை, ஒரு சூழ்ச்சி. ஆயுள் உள்ளளவும் இன்ப வாழ்க்கை வாழ முயல்; உணவின் பொருட்டுக் கடன் கொள்ள வேண்டியிருப்பினும், நன்றாக உண்டிரு. கடனைத் திருப்பக் கொடுப்பது பற்றிக் கவலையே கொள்ள வேண்டாம்." இதுதான் பழைய உலகாயத வாதம். அந்தத் தத்துவம் நீண்டு பரவியது; இதன் அளவைக்காண வேண்டுமாயின், இக்காலத்தும் இதற்குப்பெயர் "மக்கள் உகக்கும் தத்துவம்" என்பது. புத்த தேவர் வேதாந்த அறிவு ஒளியை மக்களுக்கு அளித்து இந்தியாவினைக் காத்தருளினர். அவர் மறைந்து ஓராயிரம் ஆண்டுக்குப் பின்னர், இதே மாதிரியான நிலை திரும்பவும் ஏற்பட்டது. பாமர மக்கட் கூட்டம், பொதுச்சனம், பல இனங்கள் பௌத்த மதத்துக்கு மாறின. இயல்பாகவே புத்தரது அறிவுரைகள் நாளடைவில் கீழ் நிலைக்கு வந்து விட்டன; இதற்குக் காரணம்,பெரும்பான்மையான மக்கள் அறிவொளி பெறாமல் இருந்ததே. அந்தச் சமயம் அம்மகான் கடவுளைப் பற்றியோ, பிரபஞ்சத்தையாளும் ஒரு கர்த்தரைப்பற்றியோ போதிக்கவில்லையாதலால், பாமர மக்கள் படிப்படியாகத் தமது தெய்வங்களையும் பிசாசுகளையும் பேய்களையும் கொணர்ந்து, இந்தியாவிலுள்ள அம்மதத்தில் புகுத்தி விட்டார்கள்—மிகப் பேரளவில் மறு முறையும் உலகாயதம் முன்னுக்கு வந்தது; மேல்வகுப்பினரிடம் வரம்பு மீறிய நடத்தையையும் கீழ் வகுப்பினரிடம் மூடநம்பிக்கையையும் உண்டு பண்ணியது. பின்னர் ஆதி சங்கர பகவத் பாதர் தோன்றி, வேதாந்தத்துக்குப் புத்துயிர் அளித்தனர். அதனை அவர் ஒரு தருக்க முறைக் குகந்த தத்துவம் ஆக்கினர். உபநிடதங்களில் நியாய வாதங்கள் அடிக்கடி மிகவும் தெளிவின்றி உள்ளன. புத்தர் தத்துவத்தின் நீதிநெறிப் பகுதியினையும் சங்கரர் ஞானப் பகுதியினையும் அழுத்திக்கூறி வந்தனர். பின்னவரே அத்துவைதம் என்ற அற்புதமான ஒழுங்கைச் சமைத்த

அதனை மக்கள் முன்னர் தருக்க ரீதியில் எடுத்துக் காட்டினர்.

இன்று ஐரோப்பாவில் உலகாயதமே மேலோங்கி நிற்கின்றது. நீங்கள் இக்கால சமுசய வாதிகளின் உயர்வுக்கு இறைவனை இறைஞ்சலாம்; ஆனால், அவர்கள் இடம் கொடுப்பதில்லை: அவர்களுக்கு வேண்டுவது அறிவு வாதம். ஐரோப்பாவின் கடைத்தேறுதல் அறிவுடன் கூடிய ஒரு சமயத்தின்மீது சார்ந்திருத்தலைப் பொறுத்தது. இத்தகைய மக்களின் அறிவினைக் கவரும் ஒரே மதம் அத்துவைதந் தான்—அதன் இரண்டன்மை, ஏகத்துவம் உருவிற் கப்பாற் பட்ட ஒரு பிரம்மத்தின் கருத்து, இவையே ஆத்திகம் அழியும் போலத்தோன்றி அதற்கு எதிர்மறையான நாத்திகம் பரவுவதாகக் காணப்படும் போது அது தோன்று கிறது; அதனாலேதான் அது ஐரோப்பாவிலும் அமெரிக்கா விலும் வேரூன்றி வருகின்றது.

இத்தத்துவ சம்பந்தமாக நான் இன்னுமொரு செய்தி கூற விரும்புகிறேன். பழைய உபநிடதங்களில் வானுயர் கவிதை மிளிர்கின்றது. அதை இயற்றியவர்கள் கவிஞர்கள். கவிதையினாலேயே மக்கட்கு தெய்வ ஊக்கம் கிளர்கின்ற தென்று பிளாட்டோ கூறுகிறார். இந்தப் புராதன இருடிகள் —உண்மையைத் தெளிவாக, கண்கூடாகச் காண்பவர்கள் மனித இனத்திற்குமேல் உயர்த்தப்பட்டு கவிதையினால் இவ் வுண்மைகளைப் பரப்ப ஏற்பட்டவர்கள். அவர்கள் ஒருபோதும் பிரசங்கம் செய்ததில்லை, தத்துவம் பேசவில்லை, எழுதவு மில்லை, இன்னிசை அவர்தம் இதயத்தினின்றும் பொங்கி எழுந்தது. புத்தபகவானிடம் பிரபஞ்சம் முழுவதனையும் தழுவிய பரந்த மனம் பொருந்தியிருந்தது; அம்மட்டோ, எல்லையற்ற பொறுமையும் அவர் படைத்திருந்தமையால் சமயத்தினைச் செயல் முறைக்குக் கொணர்ந்து ஒவ்வொரு வீட்டுக்குமே அதனை அவர் வாரி வழங்கி வந்தார். எப்பொருளின் மீதும் அறிவொளியை மிகுந்த அளவில் கொட்டும் மகத்தான மேதையின் ஆற்றலைச் சங்கரரிடம் கண்டோம். இக்காலத்தே நமக்கு வேண்டுவது ஒளிமிக்க கதிரவனின் ஒளிபரப்பும் சங்கரரின் பேரறிவுப் பொலிவுடன் வியப்புற்றதாக எல்லையில்லாத அன்பும்

அருளும் கொண்ட புத்தர் பிரானின் உள்ளமுமேயாம். இத்தகைய சேர்க்கை நமக்கு மிகமேலான தத்துவ விளக்கம் தரும், விஞ்ஞானமும் சமயமும் ஒன்றுகூடிக் கைகுலுக்கும். கவிதையும் உள நூலும் நட்புற்றுவிளங்கும். இது எதிர்காலத்தின் மதமாகும். அதற்கு நாம் உழைப்போமாயின் அது எக்காலத்துக்கும் எல்லா மக்களுக்கும் பயன் படுவதாகும் என்பது பற்றி நாம் துணிவாகக் கொள்ளலாம். இக்கால விஞ்ஞான ரீதிக்கு சம்மதமான ஒரே நெறியாக அது திகழும்: ஏனெனில் விஞ்ஞானம் அதனை அடுத்து விட்டது. விஞ்ஞான போதகர் ஒரே சத்தியின் பல திறப்பட்ட வெளிப்பாடுகளே அனைத்துப் பொருள்களும் என்று உறுதியாய்க் கூறும்போது, அது உபநிடதங்களில் கூறப்படும் கடவுளை உங்களுக்கு நினைவூட்டவில்லையா? உபநிடதத்தின் பொருளைப் பார்ப்போம்: "பிரபஞ்சத்திற்குள் நுழையும் ஒரே தீயானது பலதிறப்பட்ட வடிவங்களிலும் தன்னை வெளிப் படுத்திக்கொள்வதுபோல் ஒரே ஆன்மப் பொருள் ஒவ்வோர் உயிரிலும் தன்னை வெளிப்படுத்திக் கொள்வதுடன், இன்னும் வரம்பற்ற அளவிலுங்கூட இருக்கிறது." விஞ்ஞானம் எதனை நோக்கிச் சாய்கின்றது என்பதனை நீங்கள் காணவில்லையா? இந்திய மக்கள் உள்ளத்தின் நிலையையும் வினையையும் நன்கு ஆராய்ந்தறிவதன் மூலம், உள நூல் சாத்திர வாயிலாக, தருக்கம் மூலமாக முன்னேறினர்கள். ஐரோப்பியரோ, புறத்தேயுள்ள இயற்கையினின்றும் தொடங்குகின்றனர்: இப்போது அவர்களும் அதே முடிவுகளுக்குத்தான் வந்துகொண்டிருக்கிறார்கள். உள்ளத்தில் கூர்ந்து ஆராயுங்கால், நாம் இறுதியாக அந்த ஒரே தத்துவத்தினை, பிரபஞ்சம் முழுதும் பரந்துள்ள ஒரே பரம்பொருளை, எப்பொருளுக்கும் அகவுயிராக விளங்கும் ஒன்றை, சாரமான, சத்தாகிய என்றும் சுயேச்சையாகவும் பேரின்பப் பொருளாகவும் நியதமானதாகவும் விளங்கும் பரம்பொருளை வந்து எய்துகின்றோம் என்பதனைக் காண்கிறோம். புறப்பொருள் ஆராய்ச்சியான விஞ்ஞானத்தின் முடிவாகவும் இதே ஏகதத்துவத்தையே எய்துகின்றோம். இன்று விஞ்ஞானம் இயம்புவதும் இதுவே—உள்ள பொருள்கள் எல்லாம் யாவற்றினும் ஒரே

மொத்தமாக உள்ள ஒரு சத்தியின் வெளிப்பாடேயென்பதும் மனித வர்க்கத்தின் முன்னேற்ற நோக்கு முத்தியினை நோக்கியே உளதென்பதும் பந்த பாசத்தின் பாதையிலில்லையென்பதுமே; ஏனெனில் நன்னெறி முத்தியளிப்பது, நெறி பிறழ்வதோ அடிமைத்தன்மைக்கே அழைத்து செல்வது.

அத்துவைத ஒழுங்கின் மற்றொரு சிறப்பு, அது தன் தொடக்கத்திலிருந்தே எதையும் அழிக்காதது. இது மற்றொரு மேன்மை, இவ்வாறு கூறும் திரம் "ஒருவர் நம்பிக்கையையும் கலக்காதே, அறியாமையால் கீழான உருவ வழிபாடு கொண்டிருப்பவர்களது விசுவாசத்தையும் கலக்காதே," என்பது. அது கூறுவது இதுவே: "கலக்க வேண்டா, ஆனால், ஒவ்வொருவரும் மேல்நோக்கிச் செல்லும் வகைக்கே உழைத்து வருக." இவ்வுயர் தத்துவம் ஒரு மொத்தமாகப் பரவியுள்ள கடவுளையே போதிக்கின்றது.

அகில உலகத்திற்கும் பொதுவான ஒரு சமயத்தை நீங்கள் தேடுவீர்களாயின், மனித இனத்தில் ஒவ்வொருவனுக்குமே பொருந்தக்கூடிய ஒரு மதத்தை நீங்கள் நாடுவீர்களானல், அது பல பகுதிகளாலானதாக இராது, மத வளர்ச்சியின் எல்லாத்தரங்களையும் தன்னகத்தே அடக்கிக் கொண்ட அப்பகுதிகளின் கூட்டுத் தொகையாகவே இருத்தல் வேண்டும்.

இக்கருத்து வேறு எந்த மத ஒழுங்கிலும் இவ்வளவு தெளிவாகக் காணப்படவில்லை. அவை யாவும் முழுமையைப் பெற்றுவிட முயன்றுவரும் பல பகுதிகள், கூறுகள்; பகுதியின் இருப்பே இதற்காகத்தான். ஆகவே ஆதியிலிருந்தே அத்துவைதமுறை இந்தியாவிலுள்ள பலதிறப்பட்ட மதப் பிரிவுகளுடன் பிணக்கம் கொள்ளவில்லை. இன்றும் துவைதிகள் உண்டு: அவரது எண்ணிக்கையே இந்தியாவில் அனைத்திலும் பேரளவிலுள்ளது; ஏனெனில், அதிகப்பயிற்சி பெருத மனங்களுக்கு அது ஒன்றே அபயமளிப்பதாய் உள்ளது. அது மிகவும் வசதியான, இயல்பான, பொது அறிவினுக்கு ஒத்ததான உலக விளக்கம். ஆனல், இந்தத் துவைதிகளுடன் அத்துவைதிகளுக்கு ஒரு விதமான சச்சரவும் இல்லை. ஒன்று, கடவுள் பிரபஞ்சத்துக்கு வெளியே எங்கோ ஒரு சுவர்க்கத்தில் உள்ளதாகக் கருதுகின்றது; மற்றொன்று

கடவுள் தமது உள்ளிருக்கும் ஆன்மாவே, அதனை நெடுந்தொலைவில் உள்ளதாக எண்ணி அழைப்பதும் தெய்வ நிந்தையாகும் என நினைக்கிறது. பிரிவை நினைப்பதே ஆற்றெணு அளவில் அச்சுறுத்துவது. அவர் மிக அண்மையிலுள்ள பொருள்களிலும் அணியரா யிருப்பவர். எம்மொழியிலும் இந்த அண்மையைக் குறிக்கும் மொழி 'ஐக்கிய பாவம்' என்பதைத் தவிர்த்து வேறென்றும் இலது. துவைதவாதி அத்துவிதக் கருத்தைக்கண்டு நடு நடுங்கி அதனைத் தெய்வ நிந்தை எனக் கூறுவது போன்றே, அத்துவைதிகள் வேறு எக்கருத்தினோடும் அமைந் திருப்பதில்லை. அதே சமயம் அத்துவைதிக்கு இவை யாவும் இப்படியே தானிருக்க இயலுமென்று தெரிந்திருப்பதால் அவனுக்குச் சரியான பாதையில் செல்லும் துவைதியுடன் யாதொரு சண்டை சச்சரவும் இல்லை. துவைதவாதி தனது நோக்குப்படி பன்மையையே காணக்கூடும். அது அவனது நோக்கின் அமைப்பிலுள்ள இன்றியமையாமை—ஒரு கட் டாயம். அவன் அவ்வாறே கொள்ளட்டும். அவனது கோட் பாடு யாதாயிருப்பினும், அவனும் தன்னைப் போன்று ஒரே இலட்சியத்தையே அடைய முயன்று கொண்டிருக்கிறன் என்பதை உணர்கிறன். இதில் அவன் துவைத வாதியிட மிருந்து முற்றிலும் வேறுபடுகிறன். துவைதியோ தன்னி னின்றும் வேறுபட்ட கொள்கைகள் யாவும் பிழை பட்டன வாகவே இருக்கவேண்டும் என்று கருதுகிறன். உலகம் முழுதும் இயல்பிலே உருவமைந்த ஒரு கடவுளில் நம்பிக்கை வைக்கின்றது. அக்கடவுள் இவ்வுலகிலுள்ள மிகப் பெரிய சாம்ராச்சியாதிபதி போன்று சிலரிடம் உவகை கொண்டும், மற்றேரிடம் வெறுப்புக்கொண்டும், நாம ரூபங்களோடு, சகல நற்குணங்களும் உடைய ஓர் உபாசன மூர்த்தியாக அவனுக்குத் தோன்றுகிறர். அவர் காரண மின்றிச் சிலருடன் அல்லது சில இனத்தைச்சார்ந்த வர்களுடன் திருத்தியுற்று அவர் மீது மிகப்பல ஆசிகளைச் சொரிகின்றர். இயல்பாகவே துவைதி கடவுளுக்கு அத்தி யந்தமாக வேண்டியவர் சிலர் உளரென்று முடிவுகட்டித் தானும் அவர்களில் ஒருவனுக இருக்க விருப்பமும் நம் பிக்கையும் கொள்கிறன். ஏறக்குறைய எல்லா மதங்

களிலுமே அதுவேதான் கருத்தாக அமைந்துள்ளது என்பதனை நீங்கள் காணலாம். "நாங்கள் எங்கள் கடவுளுக்கு உகந்தவர்கள். நாங்கள் நம்புமாறு நீங்களும் நம்பினால்தான் உங்களுக்கு அவரது அருள் கிட்டும்." துவைதிகளிற் சிலர் குறுகிய மனப்பாங்குடன் இருந்து முன் கூட்டியே கடவுளின் அருளுக்கு நியமிக்கப் பட்டுள்ளவர்களே தகுதியுற்றவராய் விதிக்கப்படுவார்கள் : பிறர் எத்துணை முயன்றாலும் ஏற்றுக்கொள்ளப் படமாட்டார்கள். ஏறக்குறைய இத்தகைய கொள்கையற்ற ஒரு துவைத மதத்தை நீங்கள் காணவே இயலாது ; ஆகையால் இயற்கையின் நியதியினாலேயே துவைத மதப்பிரிவுகள் பரஸ்பரம் போரிட்டே தீரவேண்டும் ; இதனை அவர்கள் செய்தே வந்திருக்கிறார்கள். மற்றும், அவர்கள் படிப்பற்ற மக்களின் தற்பெருமையை வளர்த்து அவர்களது தயவை, ஆதரவைப் பெற்று விடுகின்றனர். தாங்கள் தங்களுக்கே தனியான சிறப்புரிமைகளைப் பெற்று இன்புறுவதாக உணர்வதில் அவர்களுக்கு விருப்ப முளது. அவர்கள் கருத்து, கையில் கோல்வைத்துக்கொண்டு தண்டிக்கத் தயாராக இருக்கும் ஒரு கடவுள் இருந்தாலன்றி நீங்கள் நன்னெறியில் ஒழுக மாட்டீர்களென்பது. சிந்தனையற்ற பாமரமக்கள் பொதுவாகத் துவைத மதச்சார்பினரே : அவர்கள் ஆயிரம் ஆண்டுகளாக ஒவ்வொரு நாட்டிலுமே துன்புறுத்தப்பட்டு வந்துள்ளார்கள். எனவே, அவர்களுக்கு முத்தியின் கருத்து அஞ்சுதலினின்றும் விடுதலைபெறுவதே. அமெரிக்காவில் ஒரு மதபோதகர் என்னை நோக்கி "என்ன! உங்கள் சமயத்தில் சாத்தான் இல்லையா? அது எவ்வாறு இயலும்?" என்று கேட்டார். ஆனால் உலகில் பிறந்து வாழ்ந்த சான்றோர் யாவரும் அந்த உயர்வான அத்துவைதக்கொள்கையே கைக்கொண்டு அதற்கெனவே பெரிதும் பாடுபட்டு வந்துள்ளனர். "நானும் என் பிதாவான ஆண்டவரும் ஒருவரே," என்று சொன்ன பெரியாரின் ஆற்றலே இப்போது கோடிக்கணக்கான மக்களுக்கு இறங்கியுள்ளது. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக அது நன்மை பயந்துள்ளது. அதே மனிதர் அத்வைதியாய் இருந்தமையால் பிறரிடம் கருணை காட்டிவந்தார் என்பதனை நாம் அறிவோம். உருவ அமைப்பிலுள்ள கடவு

ளைப்பற்றி வேறு மேலான ஒன்றையும் கற்பனையால் காணக் கூடாத பொதுமக்களுக்கு அவர், "பரமண்டலத்திலுள்ள உங்கள் தந்தையாரைக் குறித்து இறைஞ்சுவீர்களாக" என்றார். இதனிலும் மேலானதோர் கருத்தை மதியினுல்கொள் பவருக்கு அவர், "நான் திராட்சைக்கொடி, நீங்கள் கிளைகள்," என்று கூறினர். ஆனல், தம்மை அதிகமான அளவில் காட் டிக்கொண்ட தம் சீடர்களுக்கு அவர் எல்லாவற்றிலும் மேலான உண்மையினை வெளியிட்டுக் கூறியதாவது "நானும் எனது தந்தையும் ஒன்றே" என்பதுதான்.

புத்தர் பெருமான் துவைதிகளின் கடவுள்களைப் பொருட்படுத்தவில்லை. அவரை நாத்திகர் என்றும் உலகாயதர் என்றும் இகழ்ந்து ஏசினர். அவரோ ஒரு வெள்ளாட்டுக்காகத் தமது உயிரையும் அர்ப்பணிக்க ஆயத்தமாய் இருந்தவர். அப்பெரியார் உலகிலுள்ள எந் நாட்டினரும் பெருமைப்படக்கூடிய எல்லாவற்றிலும் மேலான நன்னெறிகளைப் பரப்பினர். எங்கெல்லாம் நீதி நெறிச்சட்டம் உளதோ, அது அவரது கதிர்க் க்ற்றையின் ஒரு கதிர். நாம் உலகப் பெரியார்களின் கருத்துகளைக் குறு கிய வரையறைகட்குள் வலிய அடக்கி முடங்கியிருக்குமாறு செய்வது இயலாத செயல். அதுவும் மனிதவர்க்கத்தின் வரலாற்றில் இவ்வமயத்தே; உலகம் ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் இத்தகைய பெரிதாக வளர்ந்துள்ள மதிநுட்பத் தின் அளவினைக் கனவிலும் கண்டிருக்க இயலாது. இக் காலத்தே ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் ஒருவரும் கற்பனையிலும் கண்டிருக்க வொண்ணத விஞ்ஞான அறி வின் ஒரு பேரலை எழுந்துள்ளது. மக்களை வெகு நுண்ணிய அளவிற்குள் கட்டுப்படுத்திவைக்க எண்ணி நிர்ப்பந்திக்க முயல்வதால் நீங்கள் அவர்களை விலங்குகள் போலவும் சிந் தனையற்ற கூட்டங்கள் போலவும் இழிநிலைக்கு இழுத்துச் செல்கின்றீர்கள். நீங்கள் அவர்களது நன்னெறி வாழ்க்கையினை நாசப்படுத்தி விடுகின்றீர்கள். இப்போது தேவையானது, மிகப் பெரிதான உள்ளம், உயர் புலமை, அழிவற்ற அன்பு, எல்லையில்லா அறிவு இவற்றின் கூட்டே யாகும். வேதாந்தி கடவுளுக்குக்கீழ்க் காணும் மூன்று பண்பு களைத் தவிர்த்து வேறு ஒன்றையும் குறிப்பிடுவதில்லை.

அவர் அகண்ட இருப்பு, எல்லையற்ற அறிவு அழிவில்லாப் பேரின்பம், சத் சித் ஆனந்தம் இம் மூன்றினையும் ஏகமாகவே தான் கருதுகிருர். அன்பும் அறிவும் இல்லாத இருப்பு இயல்வதில்லை. அன்பின்றி அறிவும், அறிவின்றி அன்பும் இருக்க இயலாது. நமக்கு வேண்டுவது யாதெனில், இருப்பு, அறிவு, முடிவில்லதோர் பேரானந்தம் இவற்றின் இழையோடு இயைந்த இணைப்பு. அதுதான் நமது இலட்சியம். நாம் விரும்புவது சமரசம் பொருந்தியுள்ள ஒன்று—ஒருபாற்பட்ட வளர்ச்சியன்று. புத்தரது கருணையுள்ளத்துடன் சங்கரரது மகா மேதையும் இணைந்த கூட்டுறவு அடையக் கூடியதே. அத்தகைய ஆனந்தமான சேர்க்கையை எட்டிப் பிடிக்குமாறு நாமெல்லோரும் பெரு முயற்சி செய்வோமாக !

எல்லாவற்றிலும் உள்ள இறைவர்

வாழ்நாளிற் பெரும்பாகம் துக்கம் செறிந்ததாய்த்தான் இருக்க இயலும் என்பதை நாம் தெரிந்துகொண்டோம். அத் துக்கம், துன்புறுத்தா வண்ணம் எவ்வகையில் தடுக்க முயன்ருலும் வந்தே தீரும் என்பதை நாம் அறிவோம். இம் மட்டோ! அத்துன்பங்கள் அளவு கடந்த பாரமுள்ளன, எனவும் நமக்குப் புலப்படுகின்றது. அவைகளைத் துடைக்க நாம் நெடுங்காலமாய்ப் போராடி வருகிருேம். ஆயினும் அவை ஒழிந்தபாடில்லை. சில பரிகாரங்களால் அவற்றுட் சில வற்றைப் போக்கியவுடனே, முன்னிலும் கடுந்துன்பங்கள் பல புதிது புதிதாய்த் தோன்றி, நம்மை வருத்தச் சூழ் கின்றன. இது நமது அனுபவமாகும். இறைவன் வழிபா டொன்றே இத்துன்பங்களை ஒழித்தற்கு ஏற்ற வழியென எல்லாச் சமயங்களும் சாற்றுகின்றன. இவ்வழியிற் செல்லா மல், 'உலகம் எப்படி இருக்கிறதோ அப்படியே அதனை மதித்து நடந்துகொள்க,' என்று உலகியலறிஞர் சிலர் கூறுகிறபடி நடப்போமானல், அதனல் நமக்கு விளைவது மிகுதியான இடரே தவிர, வேறன்று என எல்லா மதங்களும் கூறுகின்றன. மேலும், அம்மதங்கள் பலவும் இவ்வுலகத்திற் கப்பால் ஏதோ ஒன்றுளது என்று உறுதிப்படுத்துகின்றன. நாம் பார்க்கும் இந்த உலகம்—ஐம்புலன்களால் கவரப்பட்ட இந்த உலகம்—அதன் சிறியதொரு பாகமேயாகும். இவ் வுலகம், அதன்மேற் பரப்பில் காணப்படும் காட்சியேயாம். மேற்பரப்பை யகற்றிச் சிறிது ஆழ நோக்கின், (காணப் படும்) இவ்வுலகத்திற்கு எட்டாததும் வேருனதும் அளவு கடந்ததுமான பொருளொன்று உண்டு என்பது புலப்படும். அது துன்பமற்றதாய், இன்ப வடிவினதாயத் திகழும் பான் மையது. அத்தகைய பொருளை, சிலர் சிவனென்றும், சிலர் திருமாலென்றும், சிலர் அல்லா என்றும், சிலர் யாகோபு என்றும், சிலர் யோவான் என்றும் வெவ்வேறு பெயரிட்டு வழங்குகின்றனர். அதனையே பிரம்மம் என்று வேதாந்தி பகர்கின்ருன்.

இப்படிச் சமயங்கள் சாற்றுவதிலிருந்து நமக்கு முதலில் தோன்றுவது நமது வாழ்க்கையைத் துறந்துவிடவேண்டு

மென்பதேயாகும். 'உலக வாழ்க்கையில் செறிந்துள்ள துன்பங்கள் என்னும் நோயைத் தீர்க்கும் மருந்து எது' என்னும் கேள்விக்கு, 'இவ்வாழ்வையே விட்டு விடுவது' என்னும் விடையை எல்லா மதங்களும் அளிப்பது போலக் காணப்படுகின்றது. இந்த போதனையின் இயல்பை விளக்கும் ஒரு கதை என் நினைவிற்கு வருகின்றது :

கொசு வொன்று ஒருவன் தலைமேல் உட்கார்ந்தது; அதனைக் கொல்ல எண்ணி அவன் தோழனொருவன் ஓங்கி ஓர் அடி அடித்தான். அந்த அடி, கொசுவோடு அந்தத் தோழனையும் கொன்றுவிட்டது.

மதங்கள் கூறும் உபாயமும் இதை ஒப்பதே. உயிர் வாழ்க்கை துன்பம் நிறைந்ததெனவும், உலகம் துன்பமயமெனவும் சிறிது உலகானுபவமுள்ளவனும் ஒப்புக்கொள்ளுவான்.

பின்னை, இத்துன்பநோய்க்கு மதங்கள் கூறும் மருந்து தான் என்ன? 'இந்த உலகம் பொருட்படுத்தத்தக்கதன்று; உலகம் நிலையாதது. இந்த உலகத்திற்கப்பால் ஒரு பொருளுளது; அதுவே நித்தியம்,' என்று எல்லா மதங்களும் கூறுகின்றன. இது மிகக் கடினம். உபாயம், எல்லாவற்றையும் அழிக்கும் அபாயமாகின்றது. இது எங்ஙனம் மருந்தாகும்? 'துன்பநிவர்த்திக்கு வேறு வழியில்லையா?' என்று மனிதன் ஆராய்கிறான். வேதாந்த நூல்கள் என்ன மொழிகின்றன வென்றால் : மதங்கள் கூறுவதில் சிறு தவறுமில்லை. அம்மதங்கள் கூறுவதின் கருத்தைத் திருத்தமாக ஆராய்ந்துணராமையாலேயே தவறு நேருகின்றது. பல சமயங்களில் மதங்களின் கருத்து நேர்மாறாகவே கொள்ளப்படுகின்றது. ஏனெனில், அவை தத்தம் கருத்தை யாவரும் எளிதில் உணரும்படி வெளிப்படையாக உரைப்பதில்லை, அதனாலேயே மதங்களைப்பற்றி மக்கள் தவறான எண்ணங்களைக் கொள்ளலானார்கள் என்பதாம்.

நமக்கு உண்மையில் வேண்டுவன புத்தி, அன்பு ஆகிய இவ்விரண்டும் கலந்ததேயாம். அன்பு, மிகச் சிறந்ததென்பது உண்மையே. அதன் மூலமாகவே அருட்செல்வம் வந்தணுகும்; செயற்கரிய செயல்களைச் செய்தற்குரிய ஆர்வமும் வந்தடையும். அன்பு சிறிதுமில்லாத புத்தி நுட்பத்தை

அடைய நான் சிறிதும் விரும்பேன். நுண்ணறிவு சிறிது மில்லாமற் போனாலும், அன்பு மட்டில் சிறிதளவாவது என்னிடம் நிலைத்திருக்குமானால், அதுவே மிக்க மகிழ்ச்சியைக் கொடுக்கும். அன்புள்ள ஒருவனே இன்பத்தோடு வாழவல்லவனாவான். அவனே முன்னேற்றத்திற்குத் தகுதியுடையவனாவான். அன்பு இல்லாமல், புத்திக் கூர்மையை மாத்திரம் ஒருவன் உடையனாயின், அவன் ஈரமின்மையால் மரணமடைகிறான்.

மேலும், அன்பு வயப்பட்ட ஒருவன், நுண்ணறிவு இல்லாதவனாயின், பல துன்பங்களை அனுபவிப்பதை நாம் கண்டிருக்கிறோம். ஏனெனில், அவன் அடிக்கடி பல இன்னல்களுக்காளாகிறான். ஆகையினால், அன்பு, புத்தி ஆகிய இரண்டும் கலந்தது எதுவோ, அதுவே நமக்கு வேண்டும். நான் இப்படிச் சொல்லும் போது, ஒருவன் தன்னிடமுள்ள புத்தியின் நிமித்தம் அன்பிற்கோ, அன்பின் நிமித்தம் புத்திக்கோ, ஓர் எல்லை ஏற்படுத்த வேண்டுமென்று இயம்புவதாகக் கொள்ளக் கூடாது. பின்னை ஒவ்வோரிடத்தும் அனுதாபம் நிலைத்திருக்கட்டும்; அதனோடு அளவிடற்கரிய நுண்ணறிவும் கூடியிருக்கட்டும் என்பதே என் கருத்து.

இவ்வுலகத்தில் நாம் விரும்பும் பொருள்களுக்கு எல்லையுண்டா? இதற்கேற்றபடி உலகமும் எல்லை கடந்ததாக இல்லையா? எனவே, அளவில்லா அன்புக்கு இவ்வுலகம் இடம் கொடாதோ? அவ்விதமே அளவில்லா விவேகத்திற்கும் இவ்வுலகம் இடம் தராதா? இவ்விரண்டும் அளவு கடந்து இவ்வுலகில் உலாவட்டும்; நிகழட்டும். இவ்விரண்டும் ஒன்றுக்கொன்று சமமாக எப்பொழுதும் நிலையாக வளர்ந்து கொண்டே போகட்டும்.

அன்பும், விவேகமும் எல்லையற்றிருக்க வேண்டுமென்பது எல்லா மதங்களுக்கும் தெரிந்ததே. ஆயினும், அவை எல்லாம் உள்ள நெகிழ்ச்சி ஒன்றிலேயே மூழ்கடிக்கப்பட்டு விடும் தவற்றை இழைத்தவைகளாகின்றன. 'பிரபஞ்சத்தில் தீமை நிலவுகின்றது; ஆகையால், பிரபஞ்சத்தைத் துறந்துவிடு,' என்பது உண்மையும் பெருமையும் வாய்ந்த உபதேசமே. இதுவே சிறந்த போதனை என்பதில்

ஐயமில்லை. உலகப்பற்று விட வேண்டுவதுதான். உண்மையைக் கடைப்பிடிக்கப் பொய்யை விடவேண்டும் என்பதைப் பற்றிக் கருத்து வேற்றுமை இருக்க இயலாது. அவ்வண்ணமே, நன்மையை விழைவோன் தீமையை விடவேண்டும் என்பதைப் பற்றியும் கருத்து வேறுபாடு இருக்க இயலாது.

வாழ்வு என்று நாம் கருதுகிற ஐம்புல வாழ்க்கையை விட்டுவிட வேண்டுமென்பது உட்கருத்தாயின், 'எஞ்சியிருப்பது யாது? இதைத் தவிர, வேறெதை நாம் வாழ்வென்று உணர்கிறோம்? இதை விட்டால் பின்பு நாம் விடாது வைத்திருப்பதற்கு என்ன இருக்கிறது?' என்னும் திகைப்பு உண்டாகின்றது. மேலே நாம் கூறப்போகும் வேதாந்த நூல்களின் உண்மைகளிலிருந்து இதற்குச் சமாதானம் வெளியாகும். வேதாந்தமொன்றே மேற்கூறிய வினாக்களுக்குத் தக்க விடை அளிக்கின்றது. இச் சொற்பொழிவில் வேதாந்தம் எதைக் கற்பிக்க முன்வந்தது என்பதை மாத்திரம் இப்பொழுது எடுத்துக் காட்ட இயலும். அது 'உலகையே பிரம்மமாகப்பாவித்து இறைஞ்சு' என்பதேயாம்.

உண்மையில், வேதாந்தம் இவ்வுலகை இழிவுபடுத்திக் கண்டிக்கவில்லை. வேதாந்தத்தில் துறவின் லட்சியம் முதிர்ச்சி பெற்று மிக உயர்நிலையில் நிற்றல்போல வேறெம்மதத்திலாயினும் சாத்திரங்களிலாயினும் நிற்கக் காணலரிது. ஆயினும், தற்கொலை போன்ற போதனையளிப்பது இதன் கருத்தன்று. 'குற்றமுள்ளதாகக் காணும் இவ்வுலகத்தை—அஃதாவது, இவ்வுலகத்தைப் பற்றி நாம் கொண்டிருக்கும் கருத்து எதுவோ, அதைப் பற்றிய நம்முடைய ஞானம் எதுவோ, அஃது எப்படி நமக்குத் தோற்றுகிறதோ, ஆகியவைகளை—விடுத்து அதனது உண்மை வடிவை உற்றுணர்ந்து, பிரம்மமாகப் பாவித்து இறைஞ்சு,' என்று வேதாந்தம் போதிக்கின்றது, உண்மையில் வேதாந்தம் கூறும் மார்க்கம் இதுவே. 'பிரபஞ்சம் பிரம்மமயம் என்று பாவித்து அதனை இறைஞ்சு. இப்பிரபஞ்சத்தில் என்னென்ன இருக்கின்றனவோ, அவையெல்லாவற்றையும் இறைவனாகவே கருதவேண்டும்,' என்று பழமை வாய்ந்த உபநிடதம் ஒன்றின் தொடக்கத்தில் வாசிக்கின்றோம்.

அனைத்தையும் பிரம்மமாகப் பார்த்தல் என்பது, எல்லாம் நன்மைக்கே உளவாகின்றன என்று எண்ணிக் கொள்ளும் போலிப் பாவனையைக் கொள்வதன்று: உலகத்தில் துக்க மிருக்கக்கண்டும் அதனைக் காணாதது போல இருந்துவிடு வதுமன்று; உண்மையாக எல்லாவற்றிலும் ஈசுவரனைக் காண்பதேயாம். இப்படித்தான் உலகத்தைத் துறக்கவேண்டும். இவ்விதம் துறந்த பிறகு மிகுந்திருப்பது என்ன? ஈசுவரனே. இந்த உபதேசத்தின் கருத்து என்ன? 'உன் மனைவியைவிட்டு ஓடிப்போ,' என்பது அன்று; 'நீ உன் மனைவியோடிருக்கலாம்; அவளிடத்திலும் ஈசுவரனைத் தரிசிக்க வேண்டும்,' என்பதுதான் கருத்து. 'உன் குழந்தைகளைத் துறந்துவிடு,' என்பதன் கருத்தென்ன? எல்லாத் தேசங்களிலும் விலங்கின் இயல்புள்ள சில மாந்தர் செய்கிற மாதிரி குழந்தைகளை வீட்டை விட்டுத் துரத்திவிடு என்பதா? அன்றன்று. அப்படித் துரத்தி விடுவது பேய்ச் செயலாகும்; மதமாகாது. 'உன் குழந்தைகளிடத்து இறைவரைக் காண்,' என்பதுதான் இதன் கருத்து. இவ்விதமே எல்லாவற்றிலும் ஈசுவரனைக் காண்க; உயிரினிடத்தும், மரணத்தினிடத்தும், துயரினிடத்தும், இன்பத்தினிடத்தும் இறைவர் யாதொரு வேறுபாடுமின்றி உறைகின்றார். உலகெங்கும் இறைவர் நிறைந்துள்ளார். உன் கண்களைத் திறந்து அவரைப் பார். இதைத்தான் வேதாந்தம் போதிக்கின்றது. உன் யூகத்தினால் விளைந்த உலகத்தை விட்டொழி; ஏனெனில், உன் யூகம் முழு அனுபவத்தை ஆதாரமாக உடையதன்று; அற்ப யுத்தியினால் உண்டானது; குற்றமுள்ள உன் குணங்களால் விளைவிக்கப்பட்டது. இப்படிப்பட்ட உலகத்தைத் துறந்துவிடு. இவ்வளவு காலமாக நாம் இடைவிடாது பற்று வைத்திருந்த அந்த உலகம்—நம்மால் படைக்கப்பட்ட பொய் உலகமாகும். இதை விட்டுவிடு. கண்ணைத் திறந்து பார். இத்தகைய உலகம் எக்காலமும் இருந்ததேயில்லை என்பதை உணர். இது ஒரு கனவு; மாயை, உண்மையில், இருப்பவர் இறைவரே. குழந்தையில் மிளிர்பவர் அவரே; மனைவியிடம் திகழ்பவர் அவரே; கணவனிடத்து தோன்றுபவரும் அவரே. நன்மை தீமை இரண்டிலும் உறைபவர் அவரே, பாவத்திலும் பாவியினிடமும் காட்சி

அளிப்பவர் இவரே. உயிரினிடமும் மரணத்தினிடமும் இலங்குபவர் அவரே.

இவ்வாக்கு நம்மைத் திடுக்கிடவே செய்கிறது! எனினும், இதைப் பிரமாணத்தோடு மெய்ப்பிப்பதற்கும், போதிப்பதற்கும், பிரசாரம் செய்வதற்கும், வேதாந்தம் முன்வந்துள்ளது. இந்த விஷயத்தைக் கொண்டே வேதாந்த சாத்திரம் தொடங்குகின்றது.

இவ்வண்ணம் உயிர் வாழ்க்கையில் செறிந்துள்ள அபாயங்களையும் தீமைகளையும் போக்கிக் கொள்ள வேண்டும். ஒன்றினிடமும் ஆசை வையாதே. நமக்கு இடும்பை விளைவிப்பது எது? நம்மைப் பீடிக்கும் துன்பங்கள் எல்லாவற்றிற்கும் காரணமாயிருப்பது ஆசையேயாம். நீ ஏதோ ஒன்றை அடைய ஆசை நிறைவேருதபோது துயரம் விளைகின்றது. ஆசையே இல்லையாயின், துயரமும் இல்லை. இப்படி நான் சொல்லும்போதுகூட என் கருத்தை நீங்கள் மாறுபாடாகக் கொள்ளக்கூடிய ஆபத்துண்டு. ஆகையினுல் உங்கள் ஆசையை ஒழித்து எல்லாத் துன்பங்களினின்றும் விடுபடுங்கள் என்று நான் சொல்லும்பொழுது, என் கருத்து என்னவென்பதை உங்களுக்கு விளக்கிச் சொல்ல நேரிடுகின்றது. சுவர்களுக்கு ஆசையே இல்லை; அதனுல், அவை ஒரு பொழுதும் துன்பப்படுவதுமில்லை. இது உண்மைதான்; ஆனுல் அவை சிறிதும் முன்னேற்ற மடைவதேயில்லை; எப்பொழுதும் சுவர்களாகவே இருக்கின்றன.

இந்த நாற்காலிக்கு ஓர் ஆசையும் இல்லை; ஒரு பொழுதும் துன்பபபடுவதுமில்லை; ஆனுல், நாற்காலி நாற்காலியாகவே எக்காலமும் இருக்கும். இன்பத்தில் ஒரு சிறப்புண்டு; அவ்வண்ணமே துன்பத்திலும் ஒரு சிறப்புண்டு. துன்பத்தினுல் பயன் உண்டு எனவும் நான் கூறத்துணிவேன். துன்பம் நமக்குப் புகட்டும் நீதி இன்னதென்பதை நாம் எல்லாரும் அறிவோம். நாம் நமது வாழ்நாளில் நூற்றுக்கணக்கான தீய காரியங்களைச் செய்துள்ளோம். நாம் ஏன் அவைகளைச் செய்தோம் என்று துக்கிப்பதுண்டு. ஆயினும், அவை நமக்கு நல்ல புத்தி புகட்டின என்பதை நாம் அறிந்துள்ளோம். என்னைப்பற்றி நான் சிந்தித்துப் பார்ப்பேனுயின், நன்மைகள் சிலவும் தீமைகள் பலவும் நான் செய்திருப்பது

எனக்குப் புலப்படுகின்றது. இவ்விரண்டிற்கும் நான் உவகையடைகிறேன். நான் சில சரியான காரியங்களைச் செய்திருக்கிறேன் என்பதற்கும் மகிழ்ச்சி அடைகின்றேன். பல சமயங்களில் தவறிழைத்திருப்பதற்கும் மகிழ்கிறேன். ஏனெனில், இவற்றுள் ஒவ்வொன்றும் எனக்குப் படிப்பினையாய் இருந்திருக்கின்றது. இப்பொழுது உள்ள நான், இது வரை யான் செய்த கன்மத் தொகுதியின் காரிய வடிவமாவேன். நான் எண்ணின ஒவ்வோர் எண்ணமும் நான் செய்த ஒவ்வொரு வினையும் தத்தம் பயனை எனக்கு விளைவித்திருக்கின்றன. இப்பயன்களின் திரட்சியே நானடைந்த முன்னேற்றமெனலாகும்.

ஆசை அடாது என்பதை நாம் அனைவரும் அறிந்துள்ளோம். 'ஆசைகளை விட்டுவிடு,' என்பதன் கருத்தென்ன? ஆசையின்றி உலக வாழ்வு எங்ஙனம் நடைபெறும்? 'ஆசையை விட்டுவிடு,' என்னும் போதனை, ஆசையுடன் மனிதனும் அடியோடே அழிந்துபோகும் தற்கொலையான அறிவுரையன்றோ? பின் இத்துன்பம் துடைப்பதற்கு வழி யாது? 'ஆசையை விட்டுவிடு' என்னும் பொழுது, அதன் கருத்து, 'நீ பொருளொன்றும் வைத்துக்கொள்ளக்கூடாது;' என்பதன்று; உனக்கு இன்றியமையாததான பொருளை நீ வைத்திருத்தல் கூடாதென்பதுமன்று; பெருமித வாழ்வுக்குரிய பொருள்கள் என்று கருதுவனவற்றை வைத்திருத்தல் ஆகாதென்பதுமன்று. உனக்கு எவ்வளவு தேவையோ, அவ்வளவும் அதற்கு மேலும் நீ வைத்துக்கொள். அதற்கு ஒரு தடையுமில்லை; ஆனால் அவற்றின் இயல்பை மட்டும் ஓர்ந்துணர்; உண்மையை அறிந்துகொள். செல்வம் எவருக்குமே சொந்தமாகாது. 'நானே உரியன்; அது எனக்கே உரியது,' என்னும் எண்ணத்தைக் கொள்ளாதே. நீயும், நானும், வேறு யாராயினும் ஒரு துரும்புக்கும் ஒப்பாகோம்; எல்லாம் இறைவர் உடைமையே. ஏனெனில், எல்லாப் பொருளிலும் இறைவரைக் காணும்படி முதல் மந்திரம் கூறியுள்ளதல்லவா? நீ அனுபவிக்கும் செல்வத்தில் ஈசுவரர் இருக்கிறார். உன் மனத்தில் எழும் ஆசையில் அவர் குடிகொண்டிருக்கிறார். நீ உனது ஆசை முற்றுப்பெறுவதற்கு வாங்கும் பொருள்களில் அவர் வீற்றிருக்கின்றார்; உனது அழகிய உடைகளில்

அமர்ந்திருக்கின்றூர், உனது சுந்தரமான ஆபரணங்களில் பரவியிருக்கிறூர். அப்படித்தான் சிந்தை செய்யவேண்டும். அந்தப் பாவனையுடன் நீ எல்லாப் பொருள்களையும் பார்க்கத் தொடங்கினுயானுல், அவை எல்லாம் உருமாறி வேறு வித மாக உன் கண்ணுக்குத் தோன்றும். உன் உரையாடலில், உன் உருவத்தில்,—உனது நடமாட்டத்தில்,—பிறவற்றிலும் கடவுள் வீற்றிருப்பதை நீ உணர்வாயானுல், துன்பமும் துக்கமும் செறிந்து தோன்றும் இந்த உலகம் சொர்க்கமாக மாறிவிடும்.

'சுவர்க்க இராச்சியம் உள்ளுள்ளிருக்கிறது,' என்று கூறினுர் ஏசுநாதர். அவ்வண்ணமே வேதாந்தமும் கூறு கின்றது. உயர்தர போதகாசிரியர் அனைவரும் அவ் வண்ணமே கூறியுள்ளார். 'பார்க்கக் கண்ணுள்ளவன் பார்க் கட்டும்; கேட்கக் காதுள்ளவன் கேட்கட்டும்,' என்று உரைத்துள்ளார் ஏசுநாதர். 'நாம் இதுகாறும் தேடிவந்த உண்மைப்பொருள் நம்முள்ளே இருக்கின்றது; இதுகாறும் நம்மிடமே அகலாது இருந்து வந்திருக்கின்றது,' என்று வேதாந்தம் மெய்ப்பிக்கின்றது. அது நமது இதயத்தில் இடைவிடாது எப்பொழுதுமே குடிகொண்டிருக்க, நமது அஞ்ஞானத்தால் அதனை இழந்துவிட்டோம் என்று எண்ணி, அழுது புலம்பி, அதனைக் கண்டுபிடிக்க உலகத்தில் அங்கும் இங்கும் மிக முயன்று வருந்தி அலைந்து திரிகிறேம். உண்மைப்பொருள் நமது இதயத்திலேதான் இருக்கின்றது. இங்கேதான் அதனை நாம் காண இயலும்.

'உலகத்தைத் துறந்துவிடு,' என்பதைப் பழங்காலத்துப் பண்படாத அர்த்தத்தில் கொள்வோமானுல், அது நம்மை அதோகதியில் கொண்டுபோய்ச் சேர்க்கும். சாதாரணமாய் வழங்கிவரும் அர்த்தத்தின்படி நோக்கினுல், நாம் ஓர் எண்ண மும் எண்ணக்கூடாது; ஒரு காரியமும் செய்தல் கூடாது; மண்ணுங்கட்டிபோல அசைவற்றுச் சோம்பலாய் உட் கார்ந்து பொழுது போக்கவேண்டும். ஓரிடத்திலிருந்து பிறிதோரிடத்திற்குக் கர்மகதியால் தள்ளப்படும்போது மாத்திரம் அசைந்து சென்று, மற்றக் காலங் களில் எல்லாம் ஊழின் பயன் என்னும் கொள்கை வயப் பட்டு, உயிர் வாழ்ந்து வரல் வேண்டும் என்பது ஏற்

படுகின்றது. ஆனால், 'உலகத்தை விட்டுவிடு' என்னும் போதனைக்குச் 'செயலற்று இரு,' என்பது பொருளாகாது. நாம் கருமம் செய்யவேண்டும். அப்படிச் செய்யும் பொழுது அதன் தன்மையைக் கண்டறிந்து செய்யவேண்டும். பொய்யான ஆசை வயப்பட்டுத் திரியும் பாமர மக்களுக்குக் கர்மத்தின் இயல்பு என்ன தெரியும்? புலன்களாலும் இச்சையினாலும் இழுக்கப்படும் மனிதனுக்குக் கர்மத்தைப்பற்றி என்ன தெரியும்? ஆசைக்கயிற்றால் இழுக்கப்படாமல், சுயநலம் சிறிதுமின்றி, வினையைச் செய்ய வல்லவன் எவனோ, அவனே கர்ம இயல்பை அறிந்து கர்மம் செய்பவனாவான். சுயநல உட்கருத்து ஏதுமின்றிச் செய்பவனே கர்மத்தைத் தெரிந்து செய்பவனாவான். பயனெதையும் பெற விரும்பாமல் கர்மம் செய்பவனே தெரிந்து செய்பவனாவான்.

ஒரு சித்திரப் படத்தைக் கண்டு உவகை கொள்பவன் யார்? படத்தை விற்பவனா, அதனைப் பார்க்க வந்தவனா? படத்தை விற்பவன் கணக்குப் பார்ப்பதிலும் இலாபம் எவ்வளவு கிடைக்க வேண்டும் என்று சிந்தித்தலிலும், இன்ன விலைக்கு விற்றால் படம் ஒன்றுக்கு என்ன இலாபம் கிடைக்கும் என்று கணித்தலிலுமே ஆழ்ந்த எண்ணம் உள்ளவனாயிருப்பான். இவ்வித எண்ணங்களைத் தவிர, வேறு எண்ணங்களுக்கு அவன் புத்தி இடம் கொடாது. விலை கூறுவதையும், விலை கேட்கிறவர்கள் எவ்வளவுக்கு விலையை உயர்த்துகிறார்கள் என்பதையும் அவன் முழுக் கவனத்துடன் பார்த்துக் கொண்டிருப்பான். இதுவே அவன் வேலையாயிருக்கும். வாங்கவாவது விற்கவாவது எண்ணமில்லாமல், அங்குப் போயிருக்கும் மனிதன் ஒருவனே அந்தப் படத்தைப் பார்த்து மகிழ்ச்சிக் கொண்டிருப்பான். அவனே அந்தப் படத்தைப் பார்த்து இன்புற்றிருப்பான். அதுபோல இந்தப் பிரபஞ்சம் ஓர் ஓவியம். இந்த ஆசைகள் ஒழிந்த பிறகே மனிதர்கள் அதனைப் பார்த்து இன்புற்றிருக்க இயலும். அப்பொழுது வாங்குதல், விற்றல், சொத்துச் சம்பாதிக்க வேண்டும் என்னும் மூட எண்ணங்கள் ஆகிய இவைகள் ஒழிந்து போம். வட்டிக்குப் பணம் கொடுப்பவனும் ஒழிந்து போய்விடுவான்; வாங்குபவனும் ஒழிந்து போய்விடுவான்; விற்பவனும் ஒழிந்து போவான்; இவ்வுலகம் ஓர் அழகான சித்திரப் படம்போல்

விளங்கி நிற்கும். "இறைவர் ஓர் ஒப்பற்ற கவிஞர்; அவர் முதிய பாவலர்; அளவு கடந்த ஆனந்த நிலையில் அவரால் இயற்றப்பட்ட சிறுபாக்கள், செய்யுட்கள், தாளஸ்வர நயங் கள் நிரம்பியுள்ள காவியமாகும் இந்த உலகம்," என்று இவ்வளவு அழகாகக் கடவுள் பாவனையைச் சித்தரித்திருப்பது போல் வேறெங்கும் நான் வாசித்ததில்லை. எப்பொழுது ஆசை களை விட்டொழிப்போமோ, அப்பொழுதுதான் கடவுள் மய மான இப்பிரபஞ்சத்தைப் படித்துணர்ந்து ஆனந்தமடைய இயலும், அப்பொழுது எல்லாம் ஈசுவரமயமாகக் கண்டு நிற்போம். நாம் இதுகாறும் இருள் நிறைந்ததாயும் அபரிசுத்தமாயும் நினைத்து வந்த சந்து பொந்துகளும் மூலை முடுக்குகளும் ஈசுவர மயமாய் இருக்கக் காண்போம். அவை கள் தங்கள் உண்மை இயல்பை வெளிக்காட்டி நிற்கும் பொழுது, நம்மை நாமே பார்த்து நகைத்து, "இத்தனை நாளாக நாம் அழுது புலம்பியதெல்லாம் குழந்தை விளை யாட்டே; நாம் பக்கத்திலிருந்து சாட்சி மாத்திரமாய்த்தான் இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்தோம்," என்று எண்ணுவோம்.

ஆகையால், 'உன் வேலையைச் செய்,' என்று வேதாந்தம் விதிக்கின்றது; அப்படிக் கூறும் பொழுது வேலை செய்கிற வகையை நமக்கு முதலில் போதிக்கிறது. அஃதாவது, "உலக நிலையாமையை உணர்ந்து அதனது வெளித் தோற் றத்தில் பற்று வையாது உன் வேலையைச் செய்," என்று வேதாந்தம் புத்தி புகட்டுகின்றது. இப்படிச் சொல்வதன் கருத்தென்ன? கடவுளை எங்கும் காண்டலேயாம். இவ்விதம் கண்டு உங்கள் பணியைச் செய்வீர்களாக.

வேண்டுமென்றால், நூறு ஆண்டு உயிருடனிருக்க விருப்பம் கொள்க; உங்களுக்கு விருப்பமிருக்குமாயின், உலக ஆசைகள் அனைத்தையும் வைத்துக்கொள்க. ஆனால், அவைகளை இறைவர் மயமாகக் கருது, அவைகளைச் சுவர்க்கமாக மாற்றிக்கொள்—பிறர்க்கு உதவி புரியவும், எப்பொழுதும் பயன் கருதாக் கர்மத்தில் ஆழ்ந்து ஆனந்தம் எய்துவதற்கும் நெடுநாள் வாழ்ந்திருக்க ஆசை கொள்க. இவ்வண்ணம் கர்மம் செய்து வருவீர்களாயின் கர்ம சக்கரத்தினின்றும் நீங்கும் வழி உங்களுக்குப் புலப்

படும். வேறு உபாயம் இல்லை. உண்மையைத் தெரிந்து கொள்ளாமல் ஒரு மனிதன் அறிவின்மையால் உலகபோகங்களிற் கண் மூடி மூழ்கிவிடுவானானால், அவன் வழி தவறிக் கிடப்பவனாவானே யன்றி, தான் விரும்பிய இடத்திற்குச் செல்லான்; மோட்சமெய்தான். அது போலவே, ஒருவன் இந்த உலகத்தை நிந்தித்து, இதை விட்டு அகன்று, காட்டினுட்சென்று தன் உடலை வாட்டி உணவு முதலியவைகளை உண்ணாமல் பட்டினியினால் மெல்ல மெல்லத் தன் உயிரைப் போக்கிக்கொண்டே எல்லா உணர்ச்சிகளையும் நசிக்கச் செய்து, தன் இதயத்தை ஈரமற்ற ஒரு பாலை வனம்போலாக்கிக்கொள்வானாயின், அவனும் நெறி தப்பினவனே யாவான். எல்லையை மீறிய இவ்விருவகையினரும் பெரும் பிழை செய்பவரேயாவர்; வழி தப்பியவராவர். இவ்விருவரும் மோட்சமாகிய இலக்கை இழந்து விட்டவராவர்.

"ஆகையால், இறைவரை எல்லாப் பொருளினும் அமைத்து, அவர் எல்லாவற்றிலும் இருப்பதாக அறிந்து வேலை செய்," என்று வேதாந்தம் போதிக்கின்றது. ஜீவனைத் தெய்விகமாகக் கருதி, இறைவராகவே பாவித்து, இடைவிடாது வேலை செய்க; நாம் செய்ய வேண்டுவது இவ்வளவு தான் என்றும் நாம் விரும்பிப் பிரார்த்திக்க வேண்டியது இந்தப் பாவனையே என்றும் அறிந்து ஓயாது வேலை செய்க. எல்லாவற்றிலும் கடவுளிருக்கிறார். அவரை வேறெங்கே போய்த் தேடுவது? அவர் ஒவ்வொரு எண்ணத்திலும் ஒவ்வொரு கருமத்திலும் ஒவ்வோர் உணர்ச்சியிலும் முன்னமே வியாபத்திருக்கிறார். இவ்விதம் உணர்ந்து வினையாற்ற வேண்டும். இதுவே தக்க வழி. இதைத் தவிர வேறு வழியில்லை. இவ்விதம் செய்யப்பட்ட கர்ம பலன்கள் நம்மைக் கட்டுப் படுத்த மாட்டா. நாம் படும் துன்பங்களுக்கும் தீமைகளுக்கும் காரணம், நம்முடைய ஆசைகள் அவிவேகத்தால் ஏற்பட்டிருப்பதே என்பதை நாம் முன்னமே தெரிந்துகொண்டோம். இவ்வாசைகள், ஈசுவர பாவனையால் தெய்விகமாக்கப் பெறின், தூயவையாகச் செய்யப்படின், அவை தீமை பயப்பதில்லை; துக்கம் விளைவிப்பதில்லை. இந்த இரகசியத்தையறியாதவர், அதனையறியு மட்டும் கொடுமை நிறைந்த துன்ப உலகில் வசித்து வரத்தான் வேண்டும். அளவு கடந்த

ஆனந்தமென்னும் சுரங்கம், தங்களிடத்தும் தங்களைச் சுற்றிய எல்லாவிடத்தும் இருந்து வருகின்றதென்பதைப் பலர் அறியார். அதனை அவர்கள் இன்னமும் கண்டுபிடிக்கவில்லை. 'கொடுமை நிறைந்த உலகென்பது எது? அஃது அஞ்ஞானமே' என்று வேதாந்தம் கூறுகின்றது.

பேராற்றின் கரையில் உட்கார்ந்து கொண்டிருந்தும், நாம் தாகத்தால் உயிர் விடுகிறோம்; உணவுப் பொருள்கள் குவியல் குவியலாக நம் பக்கத்திலிருந்தும், பசிப்பிணியால் மரணமடைகிறோம் ; நம் கண்ணெதிரில் ஆனந்தமயமான உலகமிருந்தும், அதனைக் காணாதிருக்கின்றோம். ஆனந்தமய உலகத்திலேயே நாம் தங்கியிருந்தும், அதை வேறொன்றாகக் காண்கின்றோம். உலகத்தை ஆனந்தமயம் என்று காட்டவே, மதங்கள் எல்லாம் முன்வந்துள்ளன. இந்த ஆனந்தமய உலகத்தை அடையவேண்டுமென்னும் அவா, எல்லாருள்ளத்தும் உள்ளது. எல்லாத் தேசத்தினரும் இதனைக் கண்டு பிடிக்க முயன்று வருகின்றனர். இஃது ஒன்றே, எல்லா மதங்களினுடைய குறியாகவும் இருந்துவருகின்றது. இதை, வெவ்வேறு மதங்கள் வெவ்வேறு சொற்களால் விவரித்துள்ளன. மதங்களிற் காணப்படும் மாறுபாடெல்லாம், சொல்லின் வேறுபாட்டைப் பொறுத்தவையேயொழிய உண்மையில் மாறுபட்ட கருத்துடையனவல்ல. ஒரு மதம் ஒரு வகையில் விளக்கிக்கூறும். அதே கருத்தைப் பிற மதம் வேறு விதமாக எடுத்துக் கூறும். வேறுபாடெல்லாம் பாஷையிலேயே தவிர, கருத்தில் இல்லை.

இது சம்பந்தமாக வேறு பல ஐயங்கள் உதிக்கின்றன. பேசுவது மிக எளிது. 'எல்லாவற்றிலும் எவ்விடத்திலும் இறைவரைக் கண்டால் அப்பொழுது உலகத்தைச் சந்தோஷமாய் அனுபவிக்கலாம்,' என்று சொல்வதை நான் குழந்தைப் பருவத்திலிருந்தே கேட்டுள்ளேன். ஆனால், உலகத்தோடு சேர்ந்து கொஞ்சம் உறவு கொள்ளத் தொடங்கியவுடனே, என்மேல் குத்தும் உதையும் வந்து விழுகின்றன. உடனே நான் எண்ணியிருந்த எண்ணமெல்லாம் பறந்தோடிவிடுகின்றன. எல்லாரிடமும் இறைவர் இருக்கிறார் என்று நினைத்துக்கொண்டே, வீதியில் நடந்துகொண்டிருக்கிறேன். அப்பொழுது பலசாலி ஒருவன் அவ்வழியாக வந்து என்னை ஓர்

இடி இடித்துத் தள்ள, நான் பாதையில் குப்புற விழுகிறேன். பின்பு மிக விரைவில் அவனைக் குத்தக் கையை மடக்கிக் கொண்டு எழுந்திருக்கிறேன். ஏன்? எனக்குக் கோப மூண்டது; உதிரம் மண்டைக்கேறிற்று; அறிவை இழந்து விட்டேன், அப்பொழுதே பித்துப் பிடித்தவனானேன்; எல்லா வற்றையும் மறந்தேன். ஈசுவரனைக் காண வேண்டியவிடத் தில் தீமையையே காண்கின்றேன். 'எல்லாவற்றிலும் இறை வரைப் பார்,' என்று பிறந்தது முதல் நமக்குப் போதிக்கப் பட்டு வருகிறது. 'எல்லாப் பொருள்களிலும், எவ்விடத்தி லும் ஈசுவரரைப் பார்,' என்ற இதனையே ஒவ்வொரு மதமும் போதிக்கின்றது. இதனையே கிறித்து, புதிய ஏற்பாட்டில் எவ்விதம் கூறியிருக்கிறார் என்பது உங்கள் ஞாபகத்திற்கு வரவில்லையா? நம்மனைவருக்கும் இது உபதேசிக்கப் பட்டே வந்திருக்கிறது. ஆயினும், நாம் இதன்படி நடக்க முயலும் பொழுது பெருங்கஷ்டங்கள் எதிரே நிற் கின்றன. ஈஸாப்புக் கதைக் கொத்து (Aesop's Fables) என்னும் புத்தகத்தில் 'மான் கதை' ஒன்று வருகிறது; அதை நீங்கள் வாசித்திருப்பீர்கள். ஏரிக்கரையில் நின்றுகொண் டிருந்த ஒரு மான், தண்ணீரில் தன்னிழலைப் பார்த்துத் தனது குட்டியினிடம், 'நான் எவ்வளவு ஆற்றலுடையவனாயிருக்கி றேன் பார்; அழகான என் தலையைப் பார்; என் கால்களைப் பார். அவை எப்படிப் பருத்துத் திரண்டிருக்கின்றன! என் னால் மிக விரைவாய் ஓடக்கூடும்!' என்று கூறியது. மான் இப்படிச் சொல்லிக்கொண்டிருக்கையில் தூரத்தில் திடீ ரென்று நாய்கள் குரைக்கும் சத்தம் கேட்டது. கேட்டவுடனே, கலைமான் ஓட்டம் பிடித்தது. நெடுந்தூரம் ஓடிக் களைத்துப் பின், இரைக்க இரைக்கத் தன்னிருப்பிடம் வந்து சேர்ந்தது. அப்பொழுது குட்டி தன் தந்தையைப் பார்த்து, 'நான் எவ்வளவு ஆற்றல் படைத்தவன் பார்!' என்று என்னிடம் இப்பொழுது தான் இயம்பி கொண்டிருந்தாய்; நாய் குரைத்த சத்தம் கேட்டதும் பெரிய ஓட்டம் பிடித்தாயே! இஃது என்ன காரணம்?' என்று மொழிந்தது. அது கேட்ட மான், 'ஆம், குழந்தாய்! நாய்கள் குரைக்கும் சத்தம் என்காதில் பட்டால் என் தைரியமெல்லாம் எங்கேயோ போய்விடுகிறது,' என்று உரைத்தது. இதைப்போன்றவர்களே நாமெல்லோரும். மனித

சமூகத்தை மிகவும் உயர்வுள்ளதாக எண்ணுகிறோம். மிகுந்த பலசாலிகளென்றும், தைரியசாலிகளென்றும் நம்மைப்பற்றி நாமே பெருமை பாராட்டிக்கொள்கிறோம். மிக அரிய பெரிய தீர்மானங்களைச் செய்கிறோம். ஆனால், துன்பம், மோகம் என்னும் நாய்கள் குரைக்கும்பொழுது இவை யெல்லாவற்றையும் மறந்து, கதையிற் கூறிய மான் போல் செய்யத் தலைப்படுகிறோம். இங்ஙனமாயின், மேற்கண்ட போதனைகளால் யாது பயன்? மேலான பயன் உண்டு. அஃது என்னவெனின், உறுதியுடன் இடைவிடாமல் இங்ஙனம் முயன்று வந்தால், இறுதியில் வெற்றி பெறுவோம் என்பதே. இதில் ஐயமில்லை. எந்தக் காரியமும் ஒரே நாளில் சித்தி பெறமாட்டாது.

"ஆன்மாவைப் பற்றி முதலில் கேட்க வேண்டும், பிறகு சிந்திக்க வேண்டும், அதன் பின்னர் தியானம் செய்ய வேண்டும்." நீல நிறமான வானத்தை எல்லோரும் பார்க்க லாம். தரையில் ஊர்ந்து செல்லும் புழுவும் பார்க்கிறது. ஆனால் அவ்வானம் எவ்வளவு சேய்மையில் இருக்கிறது! அதைப் போன்றதே நமது இலட்சியார்த்தமும். நமது குறி வெகு தூரத்தில் இருக்கிறது என்பது உண்மைதான். எனி னும் அதே சமயத்தில் எப்படியாகிலும் நாம் அதைக் கைக் கொள்ள வேண்டும் என்பதையும் நாம் அறிவோம். எல்லா வற்றிலும் உயர்ந்த இலட்சியத்தை நாம் கைக்கொள்ளவே வேண்டும். தீய ஊழ் வலியால் மக்களில் பெரும்பான்மையோர் இவ்வாழ்க்கையில் யாதோர் இலட்சியமின்றி, அந்தகாரத்தில் அழுந்தித் தங்கள் வாழ்நாளைக் கழித்து வருகின்றனர். இட்சியம் ஒன்று வைத்துக் கொண்டு வாழ்ந்துவரும் ஒருவன், ஆயிரம் பிழைகள் செய்வானாயினும் இலட்சியம் ஒன்றுமில்லாதவன் ஐம்பதினாயிரம் பிழைகள் செய்வான் என்பது திண்ணம். ஆதலின், ஓர் இலட்சியத் தைக் கொண்டிருப்பதே உத்தமம். இந்த இலட்சியப் பொருள் நமது இதயத்திற் புகுந்து மூளையில் தங்கி, நாடி நரம்பு களில் நுழைந்து, குருதியின் ஒவ்வொரு துளியிலும் ஊறி, உடலின் ஒவ்வொரு மயிர்க்காலிலும் ஊடுருவிக் கலந்து நிற்கும் வரையில், இதைப்பற்றி நம்மாலான வரைக் கும் சிரவணம் செய்து வரவேண்டும்; சிந்தித்துத் தெளிதல்

வேண்டும். 'உள்ள நிறைவால் வாய் உரைக்கும்' என்னும் முதுமொழியொன்று வழங்குகின்றது. அங்ஙனமே உள்ள நிறைவால் கையும் வேலை செய்யும்.

உள்ளிருந்து நம்மை ஏவும் சத்தி, நமது எண்ணமே யாம்; ஆதலின் உயர்ந்த எண்ணங்களினால் மனத்தை நிறையச் செய்யுங்கள்; நாடோறும் உயர்தரக் கருத்துகளைக் காதாற் கேளுங்கள்; நீண்ட நாள் அவற்றைச் சிந்தியுங்கள். இவ்வெண்ணங்கள் கைகூடாமற் போகலாம்; அதைப் பற்றிக் கவனியாதீர்கள். தோல்வி உண்டாவது இயல்பே. தோல்விகளே உயிர் வாழ்வுக்கு அழகைத் தருவனவாகும். இவையில்லாத உயிர் வாழ்க்கை என்ன பயனைச் செய்யும்! இந்தப் போராட்டங்கள் இல்லையாயின் உயிர் வாழ்க்கை மதிப்பற்றுப்போம். அதனை ஒருவரும் விரும்பார். இவை களில்லாவிட்டால், வாழ்க்கையிலுண்டாகும் சுவை யாவும் எங்கிருக்கும்? ஆகையால், துன்பங்களைக் கவனியாதீர்கள்; தவறுதல்களைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். ஒரு பசு பொய் பேசினதை நான் கேட்டதேயில்லை. ஆனால் அது பசு தானே? மனிதனுவதுண்டோ? ஒருபொழுதும் இல்லையே! ஆதலால், தோல்வியைப் பற்றியாவது ஒழுக்கத் தவறுதல்களைப் பற்றியாவது கவனியாதீர்கள். உங்கள் இலட்சியத்தை யடைய ஆயிரம் தடவை முயற்சி செய்யுங்கள். அவ்வாயிரந் தடவையும் தவறினாலும், இன்னுமொரு முறை முயற்சிசெய் யுங்கள். இறைவரை எல்லாப் பொருளிலும் காண வேண்டு மென்பதே மனிதனுடைய இலட்சியம். எல்லாப் பொரு ளிலும் கடவுளைக் காணுதல் உங்களால் இயலாவிட்டால், உங்களுக்கு மிகவிருப்பமான ஏதாவது ஒரு பொருளில் அவ ரைக்காண முயற்சி செய்க. பிறகு மற்றுமொரு பொருளில் காண முயலுக. இவ்வண்ணம் செய்து கொண்டே வாருங் கள். ஜீவனது எதிர்கால வாழ்வுக்கு அளவற்ற காலம் இருக் கிறது. ஆதலால், பொறுமையுடன் முயன்று வந்தால், கடை சியில் உங்கள் நோக்கம் கைகூடுவது திண்ணம்.

"மனோவேகத்தைவிட அதிக விரைவில் அசைய வல்ல வரும், மனம் எவ்வளவு வேகத்தை எய்தும் ஆற்றலுடை யதோ அதனினும் அதிக வேகத்தை எய்துபவரும், தேவர் களுக்கும் எட்டாதவரும், எண்ணத்தைக் கடந்திருப்பவரும்

எவரோ, அவர் அசைய, ஏனைய யாவும் அசைகின்றன. அவர் எல்லாவற்றிற்கும் உறைவிடமாயிருக்கிறார்; அசைகின்ற வராயும் அசைவற்றவராயுமிருக்கின்றார்; அண்மையிலும் சேய்மையிலும் இருக்கிறார்; எல்லாவற்றிலும் உள்ளும் புறம் புமாய் உறைந்து, ஊடுருவியும் இருக்கிறார். யாவனொருவன் ஆன்மாவை அனைத்திலும், அனைத்தையும் ஆன்மாவிலும் காண்கின்றானோ, அவன் அவ்வான்மாவிலிருந்து தூர அகல மாட்டான். எல்லா உயிரையும் உலகையும் இந்த ஆன்மாவில் காணும் பொழுதே மனிதன் இரகசியத்தைத் தெரிந்து கொண் டவனாவான்; அதன் பின்னர் அவனை மயக்கம் அணுகாது, இந்த ஒரு மெய்ப் பொருளை பிரபஞ்சத்தினிடத்துக் காண வல்லவனுக்குத் துக்கமென்பது எங்கிருக்கும்?''

வேதாந்தம் முழங்கும் மற்றோர் உயர்ந்த விஷயம் இந்த ஏகத்துவமேயாம். எல்லா உயிரும் ஒன்றே; பொருள்கள் யாவும் ஒன்றே. 'அஞ்ஞானமே நமது துக்கமனைத்திற்கும் காரணம்,' என்பதை இவ்விஷயம் எப்படிப் புலப்படுத்துகின் றது என்பதை மேலே காண்போம். ஒரு மனிதனுக்கும் மற் றொருவனுக்கும் வேறுபாடு கற்பித்தலும், ஒரு நாட்டாரை மற்றொரு நாட்டாரினின்றும் வேறு பிரித்துக் காணலும், புவிக்கும் மதிக்கும், திங்களுக்கும் ஞாயிற்றுக்கும் வேறு பாடு கற்பித்தலும் ஆதிய பலவாகக் காணும் இப்பாவனையே அஞ்ஞானமாகும். ஓர் அணுவை மற்றோர் அணுவிலிருந்தும் வேறு பிரித்தறிதலினாலே, பேதமாகக் காண்பதாலேதான் துக்கமனைத்தும் விளைகின்றன. இந்த வேறுபாடு உண்மை யில் இல்லவே இல்லை. இது உண்மையன்று என்று கூறு கின்றது வேதாந்தம். இப்பேதம் உள்ளதுபோல் காணப்படு கின்றது. உள்ளே நுழைந்து பார்க்கின், அனைத்திலும் ஏகத் துவம் இருந்துவருவது புலப்படும். மேற்பரப்பிலேயே அமர்ந் துள்ள நோக்கைப் பெயர்த்துச் சற்றே ஆழ்ந்து செல்லும்படி திருப்பினால், மனிதரில் பல வகுப்பினரிடமும் உயர்ந்தோர் தாழ்ந்தோரிடமும், வறியவர் எளியவரிடமும், மக்கள் தேவ ரிடமும், மனிதர்கள் விலங்குகளிடமும் ஏகத்துவம் ஒளி வீசி நிற்பதைக் கண்ணுறலாம். இன்னும் ஆழ்ந்து நோக்கின், ஒரு பொருளே பல பொருள்களாகத் தோன்றுகிற தென்பது புலப்படும். இந்த ஏகத்துவ தரிசனம் பெறும் ஒருவனை அஞ்

ஞானம் மேன்மேலும் வந்து அணுகாது. அப்பொழுது அவனை வஞ்சிக்க வல்லது யாது? அவன் எல்லாவற்றின் மர்மத்தையும், உண்மை வடிவத்தையும், அறிந்தவனாய்விடுகிறான். அதன் பிறகு அவனுக்குத் துக்கம் என்பது எவ்வண்ணம் இருக்க இயலும்? அவன் எதனை அடைய ஆசைப்படுவான்? ஆராய்ச்சியின் மூலமாக, எல்லாப் பொருள்களின் உண்மை ரூபமாயிருப்பதும், அவை எல்லாவற்றுள்ளும் ஊடுருவி யிருப்பதும் கடவுளே என்று உணர்ந்து கொண்டவனாய்விடுகிறான். அதுவே சச்சிதானந்த பிரம்மம். அதனிடத்துப் பிணியில்லை; மரணமில்லை; துக்கமில்லை; துன்பமில்லை; மனக் குறைவுமில்லை. யாவும் அகண்டமாய் ஆனந்த பூர்த்தியாய் விளங்குவதாகும். அப்படியிருக்க, அவன் யாருக்காகத் துக்கிப்பது? உண்மையில் மரணமென்பதும் இல்லை. யார் யாருக்காக வருந்துவது? யாருக்காகத் துன்பப்படுவது? கடவுள் பரிசுத்தர், நாமரூபமற்றவர், நிராகாரர்: குற்றமற்றவர்; ஞாதா; பெருங்கவிவாணர்; சுயம்பு; எல்லாருக்கும் அவரவர் யோக்கியதைக்குத் தக்கவாறு அளிக்க வல்லவர்: இவ்வியல்பினையுடைய பரம்பொருளே எல்லாப் பொருள்களினும் செறிந்திருக்கின்றார். இந்த அவிவேகத்தை, அஞ்ஞானகாரியமாகிய பிரபஞ்சத்தை நித்தியமாக எண்ணி அதனை யார் வழிபட்டு வருகின்றனரோ, அன்னோர் அந்தகாரத்தில் உழன்றுகொண்டிருக்கும் மாந்தரேயாவர். இவ்வஞ்ஞான உலகிலேயே, தங்கள் வாழ்நாள் முழுதும் கழித்து, இதைவிடச் சிறந்தது அல்லது உயர்ந்ததான வேறு யாதொன்றையும் காணாதார் இன்னும் பெரியதோர் அந்தகாரத்தில் உழலும் மானிடராவர். எவனொருவன் பிரகிருதியின் உதவியைக்கொண்டே அதற்கு அப்பாலுள்ள பரம்பொருளை அடைகின்றானோ, அவனே மரணத்தைக் கடந்து பேரின்பத்தை அடைகின்றான்.

"ஓ கதிரவனே, உனது பொன்மயமான தட்டால் உண்மையை மூடியிருக்கிறாய். உன்னுள்ளிருக்கும் உண்மையை நான் அறிந்துகொண்டேன்: உன்னுடைய கதிர்களினுடையவும் உன் பிரதாபத்தினுடையவும் உட்கருத்தை உணர்ந்து கொண்டேன். உன்னுள் ஒளிவிட்டுக் கொண்டி

ருப்பது யாதோ, அதனை நான் கண்டுகொண்டேன். உன்னுள்ளிருக்கும் உண்மையைக் காண்கின்றேன். உன்னுள் இருப்பது எதுவோ, அதுவே என்னுள்ளும் இருக்கிறது. அதுவே நான்.''

மெய்யுணர்வு

(இலண்டனில் 1896-ஆம் ஆண்டு: அக்டோபர் திங்கள் 29-ஆம் நாள் ஆங்கில சொற்பொழிவு.)

உபநிடதங்களுள் ஒன்றினின்றும் நான் எடுத்து உங்களுக்கு வாசித்துக் காட்ட எண்ணுகிறேன். அதன் பெயர் கடோபநிடதம். உங்களில் சிலர், 'சாவின் மர்மம்' என்ற சர் எட்வின் ஆர்நால்டு அவர்களின் மொழிபெயர்ப்பு நூலைப் படித்திருக்கலாம். உலகின் தொடக்கம் பற்றியும் மாபேருலகின் படைப்பைப் பற்றியும் தொடங்கிய ஆய்வு எவ்வாறு திருத்தமான விடையை வெளியுலகினின்றும் பெருதுபோய்விட்டது என்பது பற்றியும் பின்னர் அது எவ்வாறு அகமுகமாகச் சென்றது என்பது பற்றியும் முந்தைய சொற்பொழிவில் நாம் கண்டோம். இந்நூல் உள நூல் முறையில் அந்தக் குறிப்பை எடுத்துக் கொண்டு மனிதனின் அகவியல்பினை ஆராய்கின்றது. வெளியுலகினை உண்டு பண்ணியவர் யாரென்றும், அது எவ்வாறு பிறந்ததென்றும் முதலில் வினு எழுந்தது. இப்போது கேள்வி யாதெனில், 'மனிதனின் உயிர் வாழ்ந்து இயங்குமாறு செய்வது அவனிடம் உள்ள எந்தச் சக்தி? அவன் சாகும் போது அது என்ன ஆகிறது?' என்பதே. ஆதி தத்துவ நூல்வல்லுநர் சடவஸ்துவையே நன்கு ஆராய்ந்தனர்; அதன் மூலம் முடிவெல்லையை அடைய எத்தனித்தனர். அதிகமாகப் போனுல் அவர் மாபேருலகுக்கு ஓர் உருப்பெற்ற ஆட்சியாளரைக் கண்டார்: ஒரு மனித உருவமே, ஆனுல் மிகவும் பெருக்கிக் காட்டப் பெற்ற உருவம்—ஆயினும் நடைமுறை காரியாதிகளுக்கு மனிதனே. ஆனுல், அது முழுமையான உண்மையாக இருக்க இயலாது, அதிகமாகப் போனுல், அரை குறை உண்மையே. இப்பேருலகை நாம் தனிமனிதர்களாகப் பார்க்கிருேம்; நமது கடவுள் இப்பிரபஞ்சத்தின் மனித விளக்கமாக இருக்கிருர்.

ஓர் ஆவுக்கு தத்துவத்தில் பிரியமிருந்து அது ஒரு சமயத்தினைக் கைக்கொள்கிறதென்று பாவனை செய்து கொள்வோம். அது பசுவுருப் பொருந்தியதான ஓரு பிரபஞ்சத்தையே

படைத்துக் கொள்ளும்; பசுவுக்கு ஏற்றதான பிரச்சினைத் தீர்வும் கொண்டிருக்கும்; நமது தெய்வத்தை அது காண இயலாது. பூனைகள் தத்துவம் வல்லுநவாய் விளங்குகின்றன என்று கற்பனைசெய்வோமானுல், அவை பூனைக்குரிய பிரபஞ்சத்தினையே காணும். அவற்றிற்குப் பூனைகளுக்கேற்ற பிரபஞ்சத்தின் பிரச்சினைத்தீர்வு தோன்றும்; அவை அதனை ஒரு பூனையே ஆட்சிபுரிந்து வருவதாகக் கருதும். இதிலிருந்து நமது பிரபஞ்ச விளக்கம் தீர்வின் முழுவது மன்று; மேலும் நமது மனேபாவனை பிரபஞ்சம் முழுவதனையும் கொண்டதாகாது. மனிதன் ஏற்றுக் கொள்ளக் கூடிய அளவுகடந்த சுயநலமிக்க ஒரு நிலையை ஒப்புக்கொள்வதும் பெரும் பிழையேயாகும். நாம் புறத்தே நின்றும் பெறக்கூடியதாயின் அத்தகைய பிரபஞ்சப் பிரச்சினையின் தீர்வில் ஒரு பெரிய சங்கடம் குறுக்கிடுகிறது. முதலில் நமக்கு முன்னர்த் தோன்றும் பிரபஞ்சமானது நமக்கே சிறப்பாகவுள்ள தொன்று; மெய்ப் பொருளைப் பற்றிய நமது சொந்தக் கருத்து. அப்பொருளை நாம் புலன்களால் அறிய இயலாது. நாம் அதனை முற்றும் கண்டு கொள்ள முடியாது. ஐம்புலன்களுடைய உயிர்களின் நிலையிலிருந்தேதான் நாம் பிரபஞ்சத்தைக் காணக்கூடும். நாம் மற்ருெரு புலனைப் பெறுகிறேமென எண்ணிப் பேசுவோமாகுல் முழு உலகமே நமக்கு மாறுதல் அடைய வேண்டும். நமக்குக் காந்தத்தின் உணர்வு இருப்பின், இப்போது புலப்படாத கோடிக்கணக்கான சக்திகளைக் காண்போம். அவை நாம் இப்போது படைத்துள்ள புலன்களாலோ உணர்ச்சியினுலோ அறிய முடியாதவையாய் உள்ளன. நமது புலன்கள் வரையறைக்கு உட்பட்டவை; மிகவும் குறுகியவை. அவற்றிற்குள்ளாகவே நாம் நமது பிரபஞ்சமெனக் கூறும் ஒன்று உளது; நமது கடவுள் அப்பிரபஞ்சத்தின் தீர்வு என நாம் நினைக்கிறேம். அது முழுப்பிரச்சினைக்கும் தக்க தீர்வாக இருத்தல் இயலாது. ஆனுல் மனிதன் அத்துடன் நிற்க இயலாது. அவன் சிந்தனு சக்தி படைத்தவன்; எல்லாப் பிரபஞ்சங்களைப்பற்றியும் முடிவானதொரு முழுவிளக்கம் காண விழைகிருன்; அவன் மனிதர்களுக்கும் கடவுளர்க்கும் மற்ற எல்லா உயிர்களுக்கும் உரியதோர் உலகினைப்

பார்க்கவும் இயற்கையின் எல்லாச் சம்பவங்களையும் விளக்கும் ஒரு தீர்வைக் காணவும் விரும்புகிறான்.

முதன் முதல் நாம் எல்லாப் பேருலகங்களையும் தன்னகத்தே அடக்கிக் கொண்ட அகில உலகினைக் கண்டு கொள்ளவேண்டும். நமக்குப் புலப்படினும் புலப்படாவிடினும் இப் பல்வேறு பட்டிருக்கும் பூமிகளை ஊடுருவிச் செல்லும் பொருளாகத்தன் தன்மையினாலே அமையும் ஒன்றினை நாம் காணவேண்டும். கீழான உலகங்களுக்கும் மேலான உலகங்களுக்கும் பொதுவாக உள்ள தன்மை படைத்த ஒன்றை நாம் கண்டுகொள்ளக்கூடுமானால், அப்போது நமது பிரச்சினை தீர்ந்துபோம். வெறும் தருக்க முறையின் பலனாகவே நாம் இருப்புகளுக்குப் பின்னால் அவற்றிற்கு அடிப்படையாய் உள்ள ஒன்றைப் புரிந்துகொள்ளுவோமாயின், அத்தருணத்தில் நமது பிரச்சினை ஒரு வகையான தீர்வை அணுகியதாகும். ஆனால், இத்தீர்ப்பானது நாம் பார்த்து அறிந்து கொண்டுள்ள உலகினால் மட்டும் கிடைத்து விடாது; ஏனெனில், அது மொத்தக் காட்சியின் ஒரு சிறுபகுதியேயாகும்.

ஆகவே, நமது ஒரே ஆசையின் நிறைவேற்றம் இன்னும் ஆழ்ந்து துளைத்துச் செல்வதிலே தான் உளது. ஆதிகால அறிஞர்கள், மையத்தின்றும் விலகிப்போகப் போக மாறுபாடுகளும் தெளிவாக விளங்குகின்றன; மற்றும் மையத்தை அணுகிச் செல்லச் செல்ல, ஒற்றுமை அதிகரிக்கின்றது என்று கண்டார்கள். ஒரு வட்டத்தை எடுத்துக் மையத்துக்கு எவ்வளவுக் கெவ்வளவு நெருங்கியிருக்கின்றோமோ அவ்வளவுக் கவ்வளவு எல்லா ஆரங்களும் குவிந்து ஒன்று சேரும் பொது இடத்துக்கு அணித்தாகச் செல்லுகிறோம். மையத்திலிருந்து விலகியிருக்கும் அளவுக்கு நமது ஆரக் கோடும் மற்றவற்றினின்றும் விலகியே செல்லுகின்றது. புற உலகு மையத்தினின்றும் மிகவும் சேய்மையிலுள்ளது: அதனால் அங்கு இருப்புலகின் எல்லாத்தோற்றங்களும் ஒருமிக்கக் கூடும் ஒருபொது இடம் இருப்பதில்லை. மொத்தமாக நிகழும் மாறுபாடுகளில், உயர்த்தி கூறும்போது புறவுலகம் ஒருபகுதியே யாகும்: இன்னும் வேறுசில பகுதிகளும் உள்ளன: மானசீகமானவை, நெறிபற்றியவை, மதிபற்றியவை—இவை இருப்பின் பலபூமி

களிலிருந்து ஒன்றைமட்டும் எடுத்துக்கொண்டு அந்த ஒன்றி னின்றும் முழுவதுக்கும் தீர்வு காண்பது அறவே இயலாத காரியம். ஆகவே நாம் முதலில் இருப்பின் எல்லாத் தளங் களும் தொடங்கிப்பிரிந்து செல்லும் மையம் போன்ற ஒன்றினை எங்கேனும் காணவேண்டும். அங்கு நின்று கொண்டு ஒரு தீர்வு காண நினைக்க வேண்டும். அதுவே பிரச்சினை. அந்த மையம் எங்கு உள்ளது ? அது நம் அகத் திலேயே உள்ளது. பழைய காலத்து இருடியர் மிக்க ஆழத்திற் சென்று துளைத்துப் பார்த்து மனித ஆன்மாவின் மிகவும் ஆழ்ந்த முக்கியப்பகுதியில் முழுப்பேருலகின் மையம் உளது என்பதை கண்டனர் ; எல்லாத் தளங்களும் அந்த ஒரே நுண்ணிய புள்ளி போன்ற இடத்தைக் குறித்தே ஈர்க் கப்பட்டுச் செல்லுகின்றன. அதுவே பொதுவான இடம். அங்கே தனிநின்று பார்க்கும்போது, நாம் பொதுவான தீர்வைக் காண இயலும். ஆகவே உலகை யார் படைத்தார் என்ற கேள்வி மிகவும் தத்துவ ரீதியிலேயே உள்ளதன்று ; அதன் தீர்வும் ஒரு பொருளாக மாட்டாது.

இச்செய்தியினையே கடோபநிடதம் மிகவும் உருவகமான தொரு வகையில் சித்திரிக்கின்றது. பண்டை நாளில் ஒரு பணக்காரன் இருந்தான். அவன் ஒரு வேள்வி நடத்தினன். அதன் பொருட்டு அவன் தன்னிடத்துள்ள பொருளனைத் தினையும் தியாகம் புரிந்திட வேண்டுமாம். அவன் உண்மை யுள்ளத்துடன் இருக்கவில்லை. அவனுக்கு வேள்வி செய்த தன் புகழும் மகிமையும் மட்டும் வேண்டி இருந்தன ; ஆனல் அவன் தானமாகக் கொடுத்த பொருள்களோ அவனுக்கு இனி உதவக் கூடாத கழிபொருள்களே: கிழப்பசுக்கள், மலடுகள், குருடானவை, நொண்டிகள். அவனுக்கு நசிகேதன் என்று ஒரு புதல்வன் இருந்தான். அந்த மைந்தனுக்குத் தன் தகப்பன் செய்துவந்தது சரியான காரியமன்று என்றும் அவன் தனது விரதத்தை மீறினன் என்றும் தோன்றி யது. ஆனல் அவனிடம் என்ன சொல்லுவதென்பது அவ னுக்குத் தெரியவில்லை. இந்தியாவில் பெற்றோர்கள் தம் மக் களுக்கு நடமாடும் தெய்வங்கள். ஆகவே மிக்க பணிவுடன் நசிகேதன் தகப்பனைக் கிட்டி வணக்கமாகப் பின்வருமாறு வினவினன் : “ தந்தையீர், என்னை யாருக்கு அளித்தருளப்

போகிறீர்கள்? ஏனெனில் வேள்வியில் யாவும் கொடுபட வேண்டுமல்லவா?'' என்றான். தகப்பன் இக்கேள்வியால் அலமந்தான். அவன் "குழந்தாய், உன் எண்ணம் யாது? தந்தை ஒருவன் சேயைக் கொடுப்பதாவது! உன் பேச்சுப் பொருளற்றது,'' என்றான். மைந்தன் விடாது பல்முறை இக் கேள்விகளை மீண்டும் கேட்டு வந்தான். தகப்பன் வெகுண்டு, "உன்னை நான் யமனுக்குக் கொடுக்கிறேன்!'' என்று கூறினான். இதுதான் கதையின் போக்கு. அப்பையன் மரண தேவதையான யமனிடம் சென்றான். யமனே இறந்த முதல் மானிடன். அவன் சொர்க்கம் புகுந்து பிதுர்களுக்கெல்லாம் தேவனானான்; சாவுக்குப் பின்னர் நல்லோர் யாவரும் அவனுடன் சென்று அவன் கூடவே நீண்டகாலம் உறைகின்றனர். அவன் ஒரு புனித ஆன்மா. அவன் பேருக்கு ஏற்ப நல்லவனாகவும் மனவுறுதியுடன் கூடியவனாகவும் விளங்கினான். ஆகவே பையன் யமலோகத்துக்குச் சென்றான். கடவுள் சிற்சில நேரங்களில் தமது இருப்பிடத்தில் இருப்பதில்லை; பையனும் மூன்று நாள் அங்குக் காத்திருக்க வேண்டியதாயிற்று. மூன்றும் நாள் கழிந்ததும் யமன் வீடு திரும்பினான்.

யமன் நசிகேதனை நோக்கி, "அறிஞரே, நீர் உண்ண உணவின்றி இங்கு மூன்று நாள் தங்கியிருந்திருக்கிறீர்; நீர் மதிப்புக்கும் விருந்தோம்புதலுக்கும் உடையீர். உமக்கு வணக்கம்! அந்தணரே, எனக்கு மங்களம் உண்டாகட்டும், நான் வீட்டில் இராதது பற்றி வருந்துகின்றேன்! ஆனால், அதற்கு நான் குற்றத்தைத் துடைக்கும் காணிக்கை யளிக்கிறேன். மூன்று வரங்கள்—மூன்று நாளைக்குமாகக் கேளும், தருகிறேன்,'' என்றான்.

மைந்தன், "எனது முதல் விருப்பம் என் தகப்பனாருக்கு என் மீது கொண்ட சீற்றம் மறையவேண்டும் என்பது. அவர் என்னிடம் பிரியமுற்றிருந்து எனக்கு நீங்கள் திரும்பிச் செல்ல விடையருளும் போது என்னை அவர் தம் பிரியமுள்ள மகனாகக் கண்டுகொள்ளல் வேண்டும்,'' என்றான்.

இந்த வரத்தினை அருளினன் யமதருமன். அடுத்ததால் மக்களைச் சொற்கத்துக்கு அழைத்துச் செல்லும் ஒரு வேள்வி பற்றி அறிய வேண்டினான் நசிகேதன். வேதங்களின் சங்கி

தைப் பகுதியில் காணப்படும் பழமையான கருத்து சொர்க்க மொன்று பற்றியதேதான்: அங்கு ஒளிமிக்க உடல்களைப் படைத்து அவர் தென்புலத்தார்களோடு வாழ்ந்தார்கள். படிப்படியாகப் பிற கருத்துக்களும் புகுந்தன; ஆனால் அவை திருத்திகரமானவையாக விளங்க வில்லை: அதனினும் மேலான ஒன்றின் தேவை இருந்தது. சொர்க்க வாழ்வு, இவ்வுலக வாழ்க்கையினும் மிக்க வேறுபாடுள்ளதாய் இல்லை. அது பெரும்பாலும் உடல் நலம் பெற்ற ஒரு செல்வனது வாழ்வாகவே விளங்கியது—நிறைந்த புலனின் நுகர்ச்சிகளும் நோயற்ற நல்லுடலும் அங்கே இலங்கின. இவ்வுலகேதான்—ஆனால் சற்று நயப்பட்டிருந்தது. பொருள்களால் நிறைவுற்ற புறவுலகு பிரச்சினையினைத் தீர்க்கவே தீர்க்காது. ஆகையினால், ஒரு சொர்க்கமும் பிரச்சினையைத் தீர்க்க முடியாது. இந்த உலகப் பிரச்சினையைத் தீர்க்க முடியாவிட்டால், இவ்வுலகின் பெருகிய அளவினதான சொர்க்கமும் அதற்குத் தீர்வு அளிக்க இயலாததாகி விடும். ஏனெனில், சடப்பொருள் இயற்கையின் தோற்றங்களின் மிகமிகச் சிறுபகுதியே என்பதனை நாம் எப்போதும் இடையறாது நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். எண்ணற்ற இயற்கை நிகழ்ச்சிகளின் பெரும் பகுதி சடப் பொருள் அன்று.

எடுத்துக் காட்டாக, நமது வாழ்க்கையின் ஒவ்வொரு கணமும் பெரும்பகுதி எண்ணத்தினாலும் உணர்ச்சியினாலுமே நிரப்பப்பட்டுள்ளது; புறப்பொருள்களின் தோற்றங்கள் அவ்வளவில் இருப்பதில்லை. மகத்தான சுருசுருப்புடன் கூடிய அகவுலகம் எத்துணை அகன்றது! அத்துடன் ஒப்பிட்டு நோக்குங்கால் புலப்படும் தோற்றங்கள் மிகச்சிறிய அளவினவாயுள்ளன. சொர்க்கத்தைக் கூறிப் பிரச்சினை தீர்க்கும் முறை இப்பிழைக்கு உட்பட்டது: அது தோற்றம் முழுதும் சுவை, ஒளி, ஊறு முதலியவற்றிலேதான் இருக்கிறதென்று வற்புறுத்துகின்றது. ஆகவே, சொர்க்கக் கற்பனை யாவருக்கும் திருத்தியளிப்பதாயில்லை. ஆயினும், நசிகேதன் தனது இரண்டாவது வரமாக இத்துறக்கத்தை மக்கள் அடையுமாற்றைக் கூறும் ஒரு வேள்வியை உபதேசிக்குமாறு கேட்டான். வேதங்களில் இக்கருத்து மிளிர்ந்தது: இது

வேள்விகள் தெய்வங்களை உகப்பித்து மக்களைத் துறக்கம் ஏற்றுவித்தன என்பது.

சமயங்களனைத்தையும் உன்னிப்பாய்க் கவனிக்கும் போது ஓர் உண்மை விளங்குகிறது: பழமையானவையெல்லாம் புனிதமெனப் பாவிக்கப் படுகின்றன. நம்முன்னோர்கள் பூவரசம் பட்டைமீது எழுதுவது வழக்கம். ஆனால் காகிதத்தின்மீது எழுதக்கற்ற பின்னரும் பூவரசம் பட்டையை மிகவும் புனிதமானதாக இன்னும் எண்ணிப்போற்றி வருகின்றனர். சமையல் செயயும் கலங்கள் சீர்திருத்தம் அடைந்த பின்னர், அவை புனிதமானவை எனக்கருதி வரப் பட்டன. இதில் இந்தியாவே மிகத்தொன்மை வாய்ந்த நாடாய் விளங்குகிறது. தீயினை உண்டாக்கும்முறை ஒன்பது அல்லது பத்து ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் வழங்கிய முறை—இரு குச்சிகளை ஒன்றினோடு மற்றொன்றினை உரசித் தீயினை உண்டாக்கும் முறை இன்னும் பின்பற்றப்பட்டு வருகின்றது. வேள்விக்காலங்களில் வேறு ஒரு முறையையும் பின்பற்றக்கூடாது. இப்படியேதான் ஆசிய ஆரியர்களின் மற்றொரு நிலையிலும் நடைபெறுகிறது. அவர்கள் வழி வந்த இக்காலத்தவரும் தீயை மின்னினின்றும் உண்டாக்கவே விரும்புகின்றனர். இதினின்றும் இவ்வாறே அவர்கள் தீயை உண்டு பண்ணிவருவது வழக்கம் என்பதனை விளக்கி வருகின்றார்கள். வேறு வகையான பழக்கங்களைக் கைக்கொள்ளக் கற்றபோதும் பழைய முறைகள் கைவிடப்படவில்லை. அவை புனிதமானவை எனக் கருதப்பட்டன. இப்படியே எபிரேயர்களும் பனையோலைகள் மீது எழுதுவது வழக்கம்; இப்போது காகிதத்தில் எழுதுகின்றனர்; ஆயினும் ஓலையைப் புனிதமெனப் போற்றுகின்றனர். இப்படியேதான் எல்லா நாட்டினரிடையேயும் நடைபெறுகிறது. இப்போது புனிதமான சடங்கெனக் கருதும் ஒவ்வொன்றும் முன்னர் ஒரு பழக்கமாய் இருந்து வந்ததொன்றே. வேத வேள்விகள் இத்தகையனவே. நாளடைவில் சீரிய வாழ்க்கை முறைகளை அவர்கள் கண்டுகொண்ட பின்னர், அவர்கள் கருத்துத் திருத்தம் பெற்றதாயினும், இந்தப் பழைய முறைகள் நிலைபெற்றன; நாளடைவில் வழக்கில் வழங்கிப் புண்ணியபாவனை அடையப் பெற்றன. பிறகு ஒரு கூட்டத்தினர் இவ்வேள்விகளை

நடத்துவதே தமது தொழிலெனக் கொண்டனர். இக்குழு வினர்களே குருமார்கள், அவர்கள் அவற்றின் ஆதாயத்தால் நல்ல வருமானம் பெற எண்ணி அவற்றையே தமது வியா பாரமாகவும் சிறந்ததெல்லாமாகவும் கொண்டார்கள். வேள் வியின் நறுமணத்தை நுகரத் தெய்வங்கள் இறங்கி வந்தன இவ்வுலகச் செல்வமெலாம் இத்தகைய வேள்விகளின் சக்தி யினுல் அடையப் பெறலாமென்று கருதினுர்கள். மக்கள் சில பலிகளையிட்டு, சில தோத்திரப் பாக்களைப் பாடி (உச் சரித்து) சில விசித்திரமாள ஓமகுண்டங்கள் அமைத்துவந் தால் கடவுளர் எதனையும் அளிப்பர் என்று கருதப்பட்டது. ஆகவே நசிகேதன், 'எவ்வித வேள்வி முறையைப் பின் பற்றினுல் மனிதன் சொர்க்கம் புகலாம்?' என்று கேட்டான். இந்த இரண்டாவது வரமும் யாதொரு தடங்கலுமின்றி னடியாக அளிக்கப்பட்டது. அத்துடன் அவ்யாகத்திற்கு 'நசிகேதன் யாகம்' என்றே பெயர் வழங்கப்படும் என்றும் யமன் விளம்பினுன்.

பின்னர் மூன்ருவது வரத்தோடு, உபநிடதத்தின் பொருள் தொடங்குகின்றது. சிறுவன், 'இந்தச் சிக்கல் ஏற் படுகிறது. ஒருவன் இறக்குங்கால் அவன் உளன் என்று சிலர் கூறுகின்றனர்; வேறு சிலர் அவன் இல்லையென்று இயம்புகின்றனர். நீங்கள் சொல்ல அடியனேன் இதனை அறிந்து கொள்ள நாட்டம் கொள்கிறேன்' என்ருன். யமன் கலக்க முற்ருன். மற்ற இரண்டு வரங்களையும் மிக்க மகிழ்ச் சியுடன் வரவேற்றுத் திருத்தியளித்தான்; இப்போது அவன் "பண்டைய நாளில் தேவர்கள் இச்செய்தியைப்பற்றித் தடு மாற்ற முற்ருர்கள். இந்நுண்ணிய பகுதி எளிதில் அறிந்து கொள்ளக் கூடியதன்று. நசிகேதரே, வேறு ஒரு வரத்தினைக் கேட்பீராக; என்னை இது பற்றி வற்புறுத்தலை விடுவித்து விடுவீராக" என்ருன்.

இளைஞனே, விடாப்பிடியுடன் இருந்தான். அவன், "யம தருமரே, நீங்கள் கூறியது உண்மையே; அதாவது, இது பற்றி தேவர்களும் ஐயங்கொண்டாரென்பதும், இது அறிந்து கொள்வதற்கு எளிய பொருளன்று என்பதும் உண்மையே. ஆனுல் இதனை நான் நன்கு விளங்கிக்கொள்ள உங்களைப் போன்ற நல்ல குருவை எவ்வாறு அடைவேன்? அதுவும்

அல்லாமல், இதற்குச் சமமானவரம் வேறென்றும் இருப்பது அரிதே'' என்றான்.

மரணதேவன் "நீர் நூறாண்டு வாழக் கூடிய பிள்ளைகளையும் பேரன்மார்களையும் விரும்பி வரமாகப் பெறுவீராக: ஆடுமாடுகள் பலவற்றையும், யானைகளையும், குதிரைகளையும், மிகுந்த பொன்னையும் விரும்புவீராக. அகிலத்திலுள்ள சாம்ராச்சியத்தையே கேட்பீராக. விரும்புமளவு வாழ்நாள் பெறுவீராக. அல்லது இவற்றுக்கு ஒப்பான எந்த வரத்தையேனும்—செல்வம், நெடு வாழ்வு—வேறு எதனையும் கேட்டுப் பெறுவீராக. அல்லது, அகலிடத்தின் அரசினையே அடைந்து வாழ்வீராக. ஆசைகளனைத்தையும் அடையப்பெறுமாறு நான் செய்வேன். உலகில் கிடைக்க அரிதான மிகக் கடினமான பொருள்களையும் கேட்டுப் பெறுவீராக. மனிதனுக்குக் கிட்டக் கூடாத தேவமாதர்களையும், தேவர்களையும் தக்க இசைக் கருவிகளுடன் சேர்த்து நல்குகின்றேன். அவற்றையெல்லாம் பெற்று இன்ப வாழ்வு வாழலாம். ஆனால் இக் கேள்வியாகிய 'சாவுக்குப்பின் நேர்வதென்ன?' என்பதனை மட்டும் வற்புறுத்த வேண்டா,'' என்றான்.

நசிகேதன், "இவை யாவும் ஒரு நாள் நிலைக்கும் நிலையில்லாத பொருள்களே. இவை புலனறிவின் சத்தியனைத்தையும் வாங்கிவிடுவனவே. நீண்ட நாள் வாழ்வும் மிகக் குறுகியதே. இக் குதிரைகளும் தேர்களும் கூத்தும் பாட்டும் தேவரீரிடமே இருக்கலாம். மனிதனுக்குப் பெருஞ் செல்வத்தினால் திருத்தி ஏற்படுமோ? தேவரீரைக் காண நேரும்போது பணத்தைப் பத்திரப்படுத்தி வைக்க இயலுமா? நீங்கள் விரும்புமளவன்றோ நாங்கள் வாழக்கூடிய காலம்? நான் வேண்டும் பொருள் ஒன்றினை முன்னரே கேட்டுவிட்டேன்—தேர்ந்தெடுத்தே கேட்டுளேன். அதனையே அளிப்பிராக,'' என்றான்.

இவ்விடையைக் கேட்ட யமதருமனுக்கு மிக்க மகிழ்ச்சி ஏற்பட்டது. அவன், 'பூரணத்தன்மை ஒரு பொருள்; போகப் பொருள் வேறொன்று; இவை வெவ்வேறு பயன் கொண்டவை; வெவ்வேறு வகையில் மனிதனுக்குக் கவர்ச்சி உண்டாக்குகின்றன. முத்தியை நாடுபவன் புனிதமடைகிறான். மற்றொருவன் இன்ப வாழ்வையே நாடுபவன் வாழ்க்கையின்

பெரும்பயனை இழந்தே விட்டவனாகின்றான். பூரணத் தன்மை, போகம் இரண்டும் மனிதனுக்கு முன் நின்று தம் முன் ஒன்றினைத் தேர்ந்தெடுக்குமாறு ஏவுங்கால் அறிஞன் இரண்டினையும் நன்கு ஆராய்ந்து விவேகத்தால் அறிந்து, பாகுபாடு செய்கின்றான். போகத்தினும் சிறந்ததெனப் பூரணத்துவத்தையே நாடி விழைகிறான்; மழுங்கிய அறிவு டையவனோ, தன் புலன் இன்பங்களையே தேர்ந்தெடுக்கிறான். பெரும் புலவீர், நீர் நன்கு ஓர்ந்து வெளிப் பார்வைக்கு மட்டும் ஆசைப்படும் பொருள்களைக் கேளாது அவற்றினை நல்லறிவுடன் கூடி ஒதுக்கித் தள்ளிவிட்டீர்," என்று புகழ்ந் துரைத்தான். இதன் பின்னர் நசிகேதனுக்கு அறிவுரை பகர யமதேவன் தலைப்பட்டான்.

இப்போது நாம் துறவின் மிக்க உயர்நிலையையும் வேத காலத்து ஒழுக்கத்தினையும் பற்றிய வளர்ச்சி பெற்ற கொள்கையினையும் காண்கின்றோம். அதாவது, ஒருவன் தன் ஆசைகளையெல்லாம் வெல்லும்போதன்றி, அவன் மெய்ப் பொருளைக் கண்டுகொள்வது இயலாது என்ற கருத்து தெளிவாகின்றது. வறிய காம இச்சைகளை வெறுத்துத் தள் ளாத வரை அவை போராடி ஒருவனைப் புறப் பொருள்பால் இழுத்துச் சென்றே தீரும்; ஒவ்வொரு கணமும் நம்மை உலகப் பொருள்களின் வயப்படுத்தி அவற்றுக்கு அடிமை களாக்கி விடும். ஒரு சிறு வண்ணப் பூச்சு, ஓர் அற்பமான நாவின்பம், உற்றறியும் ஓர் இன்பம் இவை யாவற் றுக்குமே நம்மை அடிமைப்படுத்தி விடுவனவாம். நம் வீண் பேச்சுக்கள் வாயளவில் எப்படி இருப்பினும், செயலில் நாம் தவறுகிறோம். அப்போது மெய்ப்பொருள் நமது உள்ளத்தில் எவ்வாறு இடம் பெறக்கூடும்?

மரணத்தேவன், "மிக்க செல்வத்தினை நாடும் அறி வின்மையால் மயக்கங்கொண்டுள்ள மதியற்ற குழந்தையின் உள்ளத்தில் அப்பாற்பட்டுள்ள மெய்ப் பொருளினைக்காணும் பேரவா எப்படி எழக் கூடும்? இவ்வுலகினை உண்மையெனக் காண்கிறோம், பரலோகம் காணப்படுவதில்லை; என்றெண்ணி அறிவற்ற மனிதர் மீண்டும் மீண்டும் எனது ஆட்சிக்கு உட் படுகின்றனர்.

... உண்மையினை அறிந்து கொள்வது மிக

... இடையீடின்றிக் கேட்டு வரும் பலருங்

கூட அதனை அறிந்து கொள்வதில்லை; ஏனெனில், பேசுபவரும் வியத்தகு புருடராகவும் கேட்பவரும் அதேபோன்று அதிசயம் படைத்தவராகவே இருத்தல் வேண்டும். குருவும் ஆச்சரியப் படத்தக்கவராய் இருக்க வேண்டும்; சீடரும் வியப்புக்குரியராகவே இருத்தலும் வேண்டும் மனமும் வீண் வாதங்களால் கலக்கமடைதல் கூடாது; ஏனெனில், அது இனி வாதத்துக்குரிய பொருள் ஆக மாட்டாது: அது உண்மையினைப் பற்றியதே யாகும்,'' என்று கூறினன்.

நமக்குப் பூரண நம்பிக்கை இருக்கவேண்டுமென்று ஒவ்வொரு சமயமும் வற்புறுத்துகிறதென்பதை நாம் கேட்டுள்ளோம்; கண்மூடித்தனமாக நம்பும்படி போதிக்கப் பெற்றுள்ளோம். நல்லது: குருட்டுத்தனமான நம்பிக்கை ஐயமின்றி ஆட்சேபணைக்குரியதே; எனினும், பகுத்து நோக்குங்கால் அதற்குப் புறத்தே ஒரு பேருண்மை உள்ளது. அதன் உண்மைப் பொருள் யாதெனில், அது நாம் இப்போது படிப்பதே. மனம் வீண் வாதங்களால் குழப்பமெய்தலாகாது; ஏனெனில், வாதம் கடவுளைக் காண உதவி செய்யும் ஆற்றல் பெற்றிலது. அது உண்மையைப் பொருத்ததேயன்றி, வாதத்தைப் பொருத்ததன்று. எல்லா வாதமும் தருக்கமும் சில புலப்பாடுகளை ஆதாரங்களாகக் கொண்டிருத்தல் வேண்டும். இவையன்றி வாதமே நிகழ இடமில்லை. நமக்குப் புலப்பட்ட சில விஷயங்களை ஒன்றுடன் பிறிதொன்றையோ பிற வற்றையோ ஒப்பிட்டுப்பார்த்து ஆராயும் முறையே தருக்கம் அல்லது அளவை நூல் (Science of reasoning or logic). புலனுக்கு விஷயமான பொருள்கள் முன்னமே இருந்திராவிடின் யுத்தி வாதத்துக்கே இடமேது? அது புறத்தோற்றங்கள் பற்றி மெய்யாகுமாயின், அது ஏன் அக நிகழ்ச்சிகளைப் பொருத்தும் உண்மையாக இருத்தல் கூடாது? இரசாயன நூல் வல்லுநர் சில இரசாயனப் பொருள்களைக் கூட்டிச் சில புதுப் பொருள்களைப்படைக்கின்றனர். இது ஒரு பொருள் உண்மை; இதனை நீங்கள் பார்த்திருக்கிறீர்கள்; புலன் வாயிலாகக் கண்டு கொள்கிறீர்கள்; இரசாயனம் பற்றிய வாதங்கள் புரிய அவற்றை அடிப்படையாகக் கொள்கின்றீர்கள். இவ்வாறேதான் பௌதிகப் பொருள் நூலறிஞர் விஷயத்திலும் மற்றுமுள்ள பிற சாத்திர விஷயங்களிலும் நிகழ்

கிறது. அறிவு அனைத்தும் சில உண்மைகளின் புலப்பாட்டின் மீதே நிலையாக நிற்க வேண்டும்: அதன் மீதே நாம் நமது யுத்தி வாதத்தை நிகழ்த்த வேண்டும். ஆனால், வியப்பான வகையில், மானிடருள் மிகப் பெரும்பாலார் இக்காலத்தே 'சமயத்தில் அத்தகைய புலப்பாடு காண இயலாது; சமயம் வறிய வாதங்களினாலேதான் உணரக்கூடும்' என்று உன்னுகின்றனர். ஆகையினால், நாம் வீண் தருக்க வாதங்களால் மனத்தைக் கலக்கிக் கொள்ளக் கூடாதென்று நமக்குச் சாற்றப்படுகிறது. சமயம் ஒரு பேச்சைப் பற்றியதன்று, உண்மையைப் பற்றியதே. நாம் நமது சொந்த ஆன்மாவை நன்கு ஆராய்ந்து பார்த்து அங்கு உள்ளதனைக் கண்டு கொள்ள வேண்டும். நாம் அதனை அறிந்து அப்படி அறிந்த பொருளை அனுபவ சாத்தியமானதாகச் செய்து கொள்ள வேண்டும். பெரும் பேச்சு எவ்வளவில் இருப்பினும், அது சமயம் ஆகாது. ஆதலால், கடவுள் ஒருவர் உளரோ இலரோ என்னும் கேள்வி ஒரு நாளும் வாதத்தால் மெய்ப்பிக்க இயலாது; ஏனெனில், நியாயம் ஒரு தரப்பில் போன்றே; மறு தரப்பிலும் பேசுவதாகும். ஆனால், ஒரு கடவுள் இருக்கும் பட்சத்தில் அவர் நமது இதயத்திலேயே உள்ளனர். அவரை நீங்கள் எப்போதேனும் கண்டிருக்கிறீர்களா? இவ்வுலகு உள்ளதா இல்லதா என்பது இன்னும் முடிவாகத் தீர்மானிக்கப்படவில்லை. கொள்கைவாதிகளுக்கும் உண்மைவாதிகளுக்கும் உண்டான தருக்கம் முடிவற்றது; எனினும், உலகம் இருக்கிறது என்பதை நாம் அறியவே செய்கிறோம்; அது நடந்து வருகின்றதென்பதனையும் அறியத்தான் செய்கிறோம். நாம் மொழிகளின் கருத்தைத் தான் மாற்றுகிறோம். இப்படியேதான் வாழ்க்கையிலுள்ள பல பிரச்சினைகளிலும்; நாம் உண்மையைக் காண வேண்டும். புறப் பொருள்கள் பற்றி எவ்வாறு உன்னிப்பாய் ஆராய்கின்றோமோ, அவ்வாறே சில சமய உண்மைகளையும் உன்னித் தெரிந்து கொள்ளல் வேண்டும். அவற்றின் மீதே சமயம் அமைக்கப் பெறுவது. ஒரு சமயத்தின் ஒவ்வொரு கோட்பாட்டினையும் ஒருவன் ஒப்புக் கொள்ள வேண்டுமென வற்புறுத்தும் உரிமை

கொண்டாடுவது மனித உள்ளத்தையே தாழ்த்துவதாகும். எல்லாவற்றையும் நம்புமாறு கூறும் மனிதன் தன்னையே தாழ்த்திக்கொள்கின்றான்; நீங்கள் அவனை நம்பினால் உங்களையும் தாழ்த்திக் கொள்ளுகிறீர்கள். உலகிலுள்ள முனிவர்கள் தங்களுடைய உள்ளத்தை நன்கு பயன் படுத்தி இவ்வுண்மைகளைக் கண்டார்களென்று நமக்கு எடுத்துக் கூறவே அதிகாரம் பெற்றுள்ளார்கள். நாமும் அவ்வாறு செய்தால், அப்போது நம்புவோம். அதற்கு முன் நம்போம். சமயத்தில் உள்ள முழுமை இதுவே. ஆனால், நீங்கள் எப்போதும் உங்கள் நினைவில் வைத்திருக்கவேண்டு வது இது: சமயத்தைத் தாக்கி வருபவருள் 99.9 சத வீதத் தினர் தமது உள்ளத்தைச் சத கூறிட்டுப் பார்த்ததே இல்லை, உண்மையைக் கண்டறியப் போரிட்டதே இல்லை. ஆகையால், ஒரு குருடன் நம்மைப் பார்த்து "ஞாயிற்றை நம்பும் நீவிர் எல்லீரும் மூடரே," என்று சாற்றினால் அவன் மொழிகளுக்கு எவ்வளவு ஆதரவு இருக்குமோ, அவ்வளவு ஆதரவுதான் சமயத்துக்கு விரோதமாக எடுத்துக் கூறுபவர் களது வாதத்துக்கும் இருத்தல் கூடும். இரண்டுமே நம்மை பாதிக்க மாட்டா.

மெய்யுணர்வுக் கருத்து—அதனைச் சற்று விடாப் பிடியுடன் பற்றியிருத்தல் ஒரு மகத்தான பொருள் பொதிந் தது. இச்சந்தடியும், பூசலும், மதங்களுக்கிடையே யுற்ற வேற்றுமையும் ஓயுங் காலம் ஏதுவெனில், மதம் நூல் களிலும், கொள்கைகளிலும் இல்லையென்று நாம் அறிந்து கொள்ளும் காலமேயாகும். அது உண்மையில் நமது மனத்துக்குப் புலப்படுவதே. பரமான்மாவையும் ஆன்மா வையும் உண்மையாகக் கண்டவனே சமயம் உடையவன். பனுவல் பனுவலாக விரித்துரைக்கும் ஒரு பெரிய மதபோதகருக்கும் ஒன்றுமறியாத மிகக் கீழான உலகாயதருக்கும் உண்மையில் யாதொரு வேறுபாடும் இல்லை. நாமெல்லோரும் நாத்திகரே. அதனை நாம் ஒப்புக் கொள்வோமாக. புத்தியால் ஒப்புக் கொள்வதனால் மட்டும் நாம் சமய உணர்ச்சியுடன் கூடினவர்களாகி விட மாட் டோம். ஒரு முகம்மதியனையோ, கிறித்தவனையோ உலகி லுள்ள வேறு எந்த மதத்தினைப் பின்பற்றும் ஒருவனையோ

எடுத்துக் கொள்ளுங்கள். 'மலைப் பிரசங்க'த்தின் உண்மையினை சுவானுபூதியினால் கண்டறிந்த எவனும் பூரணனாகி, உடனடியாகவே தெய்வமாகி விடுவான். ஆனால், 'உலகில் கோடிக்கணக்கான கிறித்தவர்கள் உளர்,' என்று சொல்லப்படுகின்றது. கருத்து யாதெனில், மனித வர்க்கம் எப்போதேனும் அந்தப் பிரசங்கத்தின் பொருளை அனுபவ சாத்தியமானதாக்க முயன்று வரலாம் என்பதே. இரு கோடி கிறித்தவர்களுள் ஒருவனுமே உண்மைக் கிறித்தவனாயில்லை.

அவ்வாறே இந்தியாவில் முப்பது கோடி வேதாந்திகள் இருப்பதாகக் கூறுகின்றனர். ஆனால், இவருள் ஆயிரவருள் ஒருவரேனும் சமயத்தினை அனுபவத்தில் உருவாக்கிக் கொண்டிருப்பாரானால், இவ்வையகம் விரைவிலே பெரிய மாறுதலைப் பெற்றுவிடும். நாமெல்லோரும் நாத்திகரே; அப்படியிருந்தும் நாம் அதனை ஒப்புக் கொள்பவர்களுடன் போர் தொடுக்க முயல்கின்றோம். நாமெல்லோருமே அஞ்ஞான இருளில் மூழ்கியிருக்கிறோம். சமயமென்பது நமக்கு ஒரு வெற்று அறிவினது உடன்பாடு, ஒரு வறிய பேச்சு, வெற்றுரை, சூனியம். நன்றாகப் பேசக்கூடிய ஒருவனை மதத்தைப் பின்பற்றுகிறவன் என்று கருதுகிறோம். ஆனால், இது மதமேயன்று. "மொழிகளை இணைக்கும் விசித்திர வகைகள், வாக்கியாலங்காரமாகக் கூறும் ஆற்றல்கள், மூல நூல்களைப் பலதிறப்பட்ட வகையில் விரித்து விளக்கிக் கூறல் இவை யாவும் பண்டிதர்களின் சொல்லின்பத்திற்கேயொழிய, இவை மதம் ஆகமாட்டா." நமது ஆன்மாவில் ஞானச்சுடர் ஒளிரும் போதே மதமானது தோன்றுகிறது. அதுவே சமயத்தின் வைகறை. அப்போதே நாம் நன்னெறிப் பட்டவர்களாவோம். இப்போதோ, நாம் விலங்குகளினும் சிறந்த நெறிமுறையில் நடப்பவர்களல்லோம். நாம் சமூகத்தின் கசையடிகளுக்கு அஞ்சி அடங்கி ஒழுகுகிறோம். இன்று சமூகம், "நீ திருடினால் நான் உன்னை ஒறுக்கப் போவதில்லை," என்று உறுதி கூறுமானால், நாம் வெகு விரைவிலேயே பிறர் உடைமைகளைக் கவரப்பாய்ந்தோடுவோம். காவலாளர்களே நம்மை நல்லொழுக்கத்தில் நிலைநிறுத்துகிறார்கள். நம்மை நீதியால்

நிற்கச் செய்வது மிகுதியான மக்கட் கருத்தேயாகும்.
உண்மையிலேயே நாம் விலங்கினும் மிகச் சிறந்த முறையில்
நடப்பவர்களல்வோம். இது எந்த அளவில் உண்மை என்
பதை நமது இதயத்தின் அந்தரங்கத்தில் நாமே அறிவோம்.
ஆகையால், நாம் கள்ள ஒழுக்கம் பூண்டவர்களாக இருக்க
வேண்டா. நாம் சமய ஆசாரத்தில் ஒழுகவில்லை என்பதனை
யும் நமக்குப் பிறரை இகழ்வதற்கு உரிமையில்லை என்பதனை
யும் ஒப்புக் கொள்வோமாக. நாமெல்லோரும் உடன்
பிறந்தோர். நாம் சமய மெயயுணர்வு பெற்றால் உண்மையான
நன்னெறியில் வாழ்பவர்களாவோம்.

நீங்கள் ஒரு குறிப்பிட்ட நாட்டைப் பார்த்துள்ளீர்கள்,
ஆனால், நீங்கள் அதனைப் பார்த்ததேயில்லையென்று கூறு
மாறு உங்களை ஒருவன் வற்புறுத்துகிறான் என்று வைத்துக்
கொள்வோம். அப்போது உங்கள் அந்தரங்கத்தில் நீங்கள்
அந்நாட்டினைக் கண்டுள்ளீர்கள் என்பது உங்களுக்கு விளங்
கும். இப்புறவுலகினைக் காண்பதினும் மிகுந்த நெருக்கமான
அளவில் நீங்கள் சமயத்தையும் கடவுளையும் காணுங்கால்
உங்கள் நம்பிக்கையை அளப்பதற்கு எதனாலும் இயலாது
போய்விடும். அப்போது உங்களுக்கு உண்மை நம்பிக்கை
உண்டாகும். அதுதான் உங்கள் வேதத்தில், "கடுகு
வித்தின் அளவு நம்பிக்கை வைத்திருப்பவன்"
எனக் கூறப்படுவதன் பொருள். அப்போது உங்களுக்கு
மெய்ப் பொருள் புலப்படும்; ஏனெனில், நீங்கள் மெய்யேயாகி
விட்டீர்களல்லவா?

இதுவே வேதாந்தத்தின் துணிபு: மதத்தை நேரில்
உணர்ந்து கொள்க; பேச்சினால் பயனொன்றுமில்லை. ஆனால்,
இது பெரிதும் இன்னலுற்று எய்தக்கூடியதே. அவன் தன்னை
அணுவிற்குள் மறைத்து வைத்துக் கொண்டுள்ளான். அப்
பழம்பொருளான பரம்பொருள், எல்லா மனிதரின் உள்ளத்
தின் அடித்தளத்திலும் கரந்துறையும் பொருள். அவனைத்
தமது அகமுக நோக்கின் ஆற்றலினால் இருடியர் கண்டு
கொண்டனர்; அவ்வாறு கண்டு அவர்கள் இன்ப துன்பங்க
ளுக்கப்பால், அறம் மறமென நாம் சாற்றுவனவற்றுக்கப்பால்;
நற்செயல்கள், தீச்செயல்களுக்கப்பால், இருப்புக்கும் சூனியத்
துக்கும் அப்பால்ஏகிவிட்டார்கள். அப்பொருளினைக் கண்டவர்

மெய்ப்பொருளைக் கண்டவரேயாவர். சரி. ஆனால், சொர்க்கம் பற்றி என்னவது? அது, 'துன்பமே இல்லாத இன்ப உலகம்' என்ற கருத்து அதாவது, உலகின் துயர்களை யொழிந்த இன்ப உலகே நாம் விரும்புவது. இது மிக அழகான ஒரு கருத்தே, ஐயமின்று. இது இயல்பிலேயே வருவது; ஆனால், இது முற்றிலும் பிழைபாடுடையதே; ஏனெனில் கலப்பில்லாத முழு நன்மையோ முழுத்தீமையோ இருப்பதில்லை.

நீவிர் எல்லீரும் ரோமில் வசித்துவந்த ஒரு செல்வந்தன் வரலாற்றினைக் கேட்டிருப்பீர். அதாவது, அவன் ஒரு நாள் தன்னிடம் இருப்பது பத்து லட்சம் பவுன் பெறுமதியுள்ள சொத்தேதான் என்பதைக் கண்டு கொண்டான். அவன், 'நான் நாளைப்போதில் என்செய்வேன்?' என்று சொல்லி உடனே தன்னையே மாய்த்துக்கொண்டான். அவனுக்குப் பத்து லட்சம் பவுன் உடைமை வறுமையெனவே தோன்றிற்று. எது மகிழ்ச்சி? எது துக்கம்? அது மறைந்து கொண்டே செல்லும் ஓர் அளவு. நான் சிறு குழந்தையாய் இருந்தபோது, 'ஒரு வண்டிக்காரனாக இருக்கக் கூடுமாயின், வண்டியை ஓட்டிச்செல்வது மகிழ்ச்சியுள்ளதாக இருக்கும்!' என நினைத்தேன். இப்போது அவ்வாறு நான் கருதவில்லை. நீங்கள் எந்த இன்பத்துடன் ஒட்டிக் கொள்வீர்கள்? இதுதான் நாம் எல்லோரும் அறிந்து கொள்ளவேண்டிய முதல் கருத்து; இதுதான் நம்மைவிட்டு இறுதியாக அகன்று செல்லும் மூடக்கொள்கைகளிலொன்று. ஒவ்வொருவனும் இன்பத்தை வெவ்வேறு வகையில் அறிந்து கொள்ளுகிறான். நாளும் ஓர் உருண்டை கஞ்சா உட்கொண்டாலன்றி மகிழாத மனிதன் ஒருவனை யான் கண்டுள்ளேன். தரை கஞ்சாவினாலேயே ஆன ஒரு சொர்க்கத்தினைப் பற்றிய கனவினையே அவன் காண்பானன்றோ? அது எனக்கு மிகவும் கெட்ட சொர்க்கமாகும். அராபியக் காவியங்களில் நீர்ப்பெருக்குள்ள ஆறுகள் பாய்ந்தோடும் பக்கங்களிற் காணும் அழகிய தோட்டங்கள் நிறைந்த ஒரு போக பூமி பற்றி நாம் அடிக்கடி படிக்கிறோம். எனது வாழ்க்கையின் பெரும் பகுதியையும் மிகுதியான நீர்ப்பெருக்குள்ள நாட்டிலேயே கழிக்கலானேன். பெரு வெள்ளத்தினால் பல கிராமங்களும் அழிந்து பல்லாயிரக்கணக்கான மக்களும் அது வாயி

லாக ஆண்டுதோறும் உயிர் இழக்கலானார்கள். ஆகவே, எனது கற்பனைச் சொர்க்கத்தில் ஆறு பாய்ந்து செல்லும் தோட்டங்கள் இரா. அதற்கு மாறாக, மழையே இல்லாத நாடாகவே அது விளங்கும். நம் இன்பங்கள் பலகாலும் மாறிக்கொண்டே இருப்பன. ஓர் இளைஞன் சொர்க்கம் பற்றிக் கனவு காண்பானானால், அவன் ஓர் அழகிய மனைவியுள்ள இன்பமயமான இடத்தையே காண்பான். அதே மனிதன் கிழவனாகி விடில் அவனுக்கு ஒரு மனைவி வேண்டியிராள். நமது தேவைகளே நமக்குரிய துறக்கத்தினை உண்டுபண்ணுகின்றன; அச்சுவர்க்கமும் நமது தேவைகளின் மாறுதல்களுடன் மாறுபாடடைகின்றது. பொறி புலன் நுகர்ச்சிகளையே தமது வாழ்க்கைப் பயனெனக் கொண்டு அவற்றை இச்சிக்கும் மாந்தரின் சொர்க்கம் ஒன்றை நாம் பெற்றிருப்பின், நமக்கு முன்னேற்றம் இல்லையென்பது திண்ணம். ஆன்மாவுக்கு இதனினும் பயங்கரமான சாபக் கூற்று இருக்க இயலாது. இதுதானா நாம் அடையக்கூடிய சிறந்த நிலை? ஒரு சிறு அழுகுரல், ஒரு நடனம், பின்னர் நாய் போன்ற சாவு—இத்தகைய பொருள்களை இச்சிக்கும் போது நீங்கள் மனித வர்க்கத்தின் மீதே எத்தகைய சாப மொழி கூறுகின்றீர்கள்! உலக இன்பங்களுக்காக நீங்கள் ஏக்கங்கொண்டு அழும்போது இதனைத்தான் நீங்கள் செய்கின்றீர்கள்: ஏனெனில், மகிழ்ச்சி உண்மையில் யாதென்பதை நீங்கள் அறியவில்லை. தத்துவ சாத்திரம் போதிப்பது இன்பங்களைத் துறந்து விடுவது அன்று; ஆனால், இன்பம் உண்மையில் யாதென்று அறிவதே. நார்வே நாட்டினரின் சொர்க்க மென்பது ஒரு மகத்தான போர்க்களம்: அங்கு யாவரும் ஓடின் (கடவுள்) திருமுன்னர் அமர்ந்திருக்கின்றனர். காட்டுப் பன்றி வேட்டை நடக்கிறது; பின்னர்ப் போர் மூண்டு ஒருவர் ஒருவரைத் துண்டு துண்டாக வெட்டிவீழ்த்துகின்றனர்; எப்படியோ போர் முடிந்து சிறிது நேரம் சென்றதுமே அவர்கள் ஏற்ற வடுக்கள் யாவும் ஆறிவிடுகின்றன. யாவரும் மண்டபத்துக்குள் புகுந்து ஆயத்தமாக உள்ள பன்றி மாமிசம் தின்று குடித்துக் களித்த பின்னர் அக்காட்டுப் பன்றி மீளவும் உயிர்பெற்று மறு நாள் வேட்டைக்குத் தயாராகி விடுகிறது. அது நமது சொர்க்கம் போன்றேதான்

உளது: சிறிதும் மோசமானதாக இல்லை; ஒரே வேறுபாடு மட்டும் இருக்கலாம். நம் கருத்துகள் சற்றே பண்பட்டவை தான் நாம் காட்டுப் பன்றிகளை வேட்டையாட விழைகின்றோம்: நார்வேயர்கள் போன்றே அதே பன்றியைத் தின்னவும் அது மறு நாள் தங்களது இன்பத்துக்கென மீண்டும் உயிர் பெறவும் இப்படித் தங்கள் சுகபோகங்களில் நெடுங்காலம் தொடர்ந்திருப்பது போன்று நமக்கும் இன்பங்களெல்லாம் நீடித்து நிற்குமிடத்திற்குச் செல்ல நாம் ஆசைப்படுகிறோம்.

மாறுதலே இல்லாத முழு இன்பம் உளதென்று தத்துவ நூல் வற்புறுத்திக் கூறுகின்றது. அந்த இன்பம் உலகிலுள்ள இவ்வாழ்க்கையில் நாம் காணும் மகிழ்ச்சி இன்பம் போல்வதன்று. எனினும், வேதாந்தம் காட்டுகின்றது: இங்குள்ள மகிழ்ச்சியளிக்கும் பொருள்கள் யாவும் அந்த உண்மையான பேரானந்தத்தின் சிறு துகள்களே; ஏனெனில், அந்த ஆனந்தம் ஒன்றே உள்ளது. ஒவ்வொரு நொடிப் பொழுதும் நாம் உண்மையாகவே மிக்க பேரானந்தத்தைத் துய்த்துக் கொண்டே யுள்ளோம்: அது மறைபட்டிருப்பினும், தக்கவாறு அறிந்து கொள்ளாது யோயினும், கலக்க முற்றிருப்பினும் கூட. எங்கெல்லாம் திரு விளங்குகிறதோ, பேரின்பமோ மகிழ்ச்சியோ நடமாடுகின்றதோ அங்கெல்லாம் அது காட்சி அளிக்கிறது. களவாடுவதில் திருடனுக்கு இருக்கும் மகிழ்ச்சியிலும் அந்த முழுப்பேரின்பமே வெளிப்படுகிறது: ஆனல் ஒன்று, அது மங்கிப்போய், குழம்பி, எல்லாவகையான வெளி நிபந்தனைகளுடன் கூடி விளங்கி, மாருன பொருள் கொள்ளப்பட்டிருப்பது. இதனைப் புரிந்து கொள்வதற்கு முதலில் எதிர்மறையான பொருளைக் காண வேண்டி வருகிறது: பின்பே உடன்பாடாக உள்ள பொருளைக் காணலாகும். நாம் அஞ்ஞானத்தினை நீக்கி விட்டு, பொய்ப் பொருள்கள் அனைத்தையும் ஒதுக்கி விடின் உண்மை தன்னையே நமக்குக் காட்டிக் கொள்ளும். நாம் சத்தியத்தைப் பற்றிக்கொள்வதும் முதலில் உதறித்தள்ளிய பொருள்கள் யாவும் உருவும் வடிவும் பெற்றுப் புதுவகையான ஒளியுடன் தோற்ற மளித்துத் தெய்விகம் பொருந்தியனவாகவே காணப்படும். அவை மேன்மை பெற்று

விடும்; அப்போது நாம் அவற்றை அவற்றின் உண்மை வடிவில் கண்டு கொள்ளலாம். அவற்றை அறிவதற்கு முதன் முதல் மெய்ப்பொருளின் ஓர் இமைப்போது பார்வை பெறவேண்டும்; அவற்றை முதலில் தள்ளிவிட்டுப் பின்னர்த் தெய்விகம் பெற்றதாகத் திரும்பவும் கொள்ளவேண்டும். நம் துன்பங்களையும் துயரங்களையும் அற்பமான இன்பங்களையும் விட்டொழித்தல் வேண்டும்.

"வேதங்கள் யாவும் கூறும் ஒன்று, தவங்கள் அனைத்திலும் கோஷிக்கப்பட்டுள்ள ஒன்று, அதனைத் தேடிக்கொண்டு மனிதர்களுள் பிரம்மசரியம் பயின்று வாழ்நாட்களைக் கழிக்கின்றனர்: அந்த ஒன்றை ஒரே வார்த்தையில் கூறுவேன்; அதுவே 'ஓம்'." ஓமென்ற இம்மொழியினை வேதங்கள் எங்கும் பெரிதும் போற்றுவதைக் காணலாம். அது மிகப் புனிதமான சொல்லெனப் கூறப்படுகின்றது.

இப்போது மரணத்தேவன், 'ஒருவனது உடல் இறக்குங்கால், அவன் என்ன ஆகிறான்' என்ற கேள்விக்கு விடை இறுக்கிறான். "இந்த அறிஞன் ஒருபோதும் இறப்பதில்லை; இவன் ஒருபோதும் பிறந்தவனும் அல்லன். அது ஒரு பொருளினின்றும் உண்டாவதில்லை; அதினின்றும் ஒன்றும் பிறப்பதும் இல்லை. பிறப்பற்று, நித்தியனாகி, என்றும் நிலையுற்றிருந்து இபபுராதனன் உடல் நாசத்துடன் ஒருபோதும் நாசமடைபவனல்லன். கொல்லுபவன் கொல்லக்கூடியவனென்றெண்ணினால், அல்லது கொல்லப்பட்டவனே கொலையுண்பவனாக எண்ணங் கொண்டால், இருவருமே உண்மையினை அறியவில்லை; ஏனெனில், ஆன்மா கொல்லுவது மில்லை, கொல்லப்படுவதுமில்லை." இது மிகமிக மேம்பட்டது. முதலில் உள்ள 'அறிஞன்' என்ற மொழியை உங்கள் கவனத்துக்குக் கொண்டுவர நான் விரும்புகிறேன். மேலே செல்லச் செல்ல வேதாந்தத்தின் இலட்சியம், எல்லா ஞானமும், எல்லாத் தூய்மையும் ஆன்மனில் ஏற்கெனவே—தெளிவில்லா முறையிலோ, சிறிது நல்ல முறையிலோ—உள்ளதே எனக் காண்போம். ஒரு மனிதனுக்கும் மற்றொருவனுக்கும் உள்ள வேறுபாடு—முழுப் படைப்பிலுமுள்ள எல்லாப் பொருள்களுக்கு இடையேயுமுள்ள வேறுபாடு—இனத்திலல்லாது அளவிலேதான் உளது. ஒவ்வொருவரது பின்

புறமும் உண்மைத் தன்மையும், அதே நித்தியமான, என்றும் பேரின்பமயமாய் விளங்கும், எப்போதும் தூய்மையாயுள்ள, என்றும் பூரணனாய் உள்ள ஒருவனே. முனிவரிடத்தும் பாவியினிடத்தும், சுகம் பெற்றவனிடத்தும் துன்புற்றவனிடத்தும், அழகுப் பொருளிலும் அவலட்சணமான பொருளிலும், மனிதனிடமும் மிருகத்தினிடமும் அது ஆன்மாவாக விளங்குவது; அது எல்லாவற்றிலும் ஒரே படித்தாய் இருப்பது. அது சுயஞ்சோதிப் பொருள். வேறுபாடு, மொழியில் வெளிப்படும் ஆற்றலின் அளவைப் பொருத்தது. சிலரிடத்தில் அத்துணைச் சிறந்த முறையில் சாற்றப்படுவதில்லை ஆனால், இச்சொல் வகைகளின் வேறுபாடு ஆன்மாவைப் பாதிப்பதில்லை. உடைகள் வாயிலாக ஒருவன் மற்றொருவனைக் காட்டிலும் உடலை அதிகமாகப் புலப்படுத்துகிறானெனில், அவர்கள் உடல்களில் யாதொரு மாறுதலும் ஏற்படுவதில்லை; அவர்களது ஆடையிலேதான் வேறுபாடு. வேதாந்த தத்துவம் முழுவதிலும் நன்று, தீது என்பனவே இல்லை; அவை வேறு பட்ட பொருள்களுமல்ல; அப்பொருளே நல்லதாகவோ கெட்டதாகவோ உள்ளது; வேறுபாடு அளவிலேதான் என்பதனை நாம் இங்கு நினைவு கூர வேண்டும். இன்று இன்பமானது என நான் கூறும் ஒன்றே, எனது சிறந்த சூழ்நிலையில் மறுநாளே துன்பமளிப்பதென நான் கூற நேரலாம். நமக்குச் சூடளிக்கும் தீ நம்மை எரித்து விடவும் கூடும்; அது அத்தீயின் குற்றமன்று. இவ்வாறு, ஆன்மா பூரணமாகவும் தூயதாகவும் இருக்கவும், தீங்கு செய்யும் மனிதன் தன்னைத்தானே பொய்யனாக்கிக் கொள்கிறான்; அவன் தனது தன்மையை அறிந்து கொள்ளவில்லை. கொலைகாரனிடமும் தூய ஆன்மா ஒளிர்கிறது; அது சாகவில்லை. அது அவனது பிழை; அவனால் அதனைத் தோற்றுவிக்கக் கூடவில்லை; அவன் அதனை நன்கு மூடிவிட்டான். தான் கொல்லப்பட்டதாக நினைக்கும் மனிதனிலுள்ள ஆன்மா நாசமுறுவதில்லை; அது சாசுவதமானது; கொல்லப்பட வொண்ணாதது; ஒரு போதும் அழிக்க இயலாதது. மிகச் சிறிதினும் சிறிதான, மிக மிகப் பெரிய பிரமாண்ட அளவினும் பெரிதாயுள்ள இறைவராயிருப்பவர் ஒவ்வொரு மனித உள்ளத்தின் ஆழத்

திலும் உறைந்து வருகிறார். பாவமற்றவர்கள் எத்துன்பமும் நீங்கப்பெற்று, ஆண்டவரது அருளினால் அவரைக் காண் கிறார்கள்; உடலற்றவர், ஆனால் உடலை உறையுளாகக் கொண்டவர்; இடங்கியதியினைக் கடந்தவர்; எனினும் இடத் திற்குள் அகப்பட்டவர் போல் நடிப்பவர்; எல்லையற்றவர்; எங்கும் பரந்துள்ளவர். இப்படி ஆன்மாவைக் கண்டுகொண்டு முனிவர்கள் ஒருபோதும் துயருறுவதில்லை."

"இந்த ஆன்மா பேச்சு வல்லமையாலோ, மிகப் பரந்த புத்தியின் வலிமையினாலோ, வேதங்களை நன்கு பயில் வதனாலோ அடையப் படுவதில்லை." இது மிகத் துணிவுடன் கூடிய உரை. நான் முன் கூறியது போன்று சான்றோர், பெருந்தீர புருடர்; சிந்தனையாளர்: அவர் ஒருபோதும் எதற்குந் தயங்குவதில்லை. இந்தியாவில் வேதத்தைப் போற்றும் அளவு, கிறித்தவர் தமது விவிலிய நூலை மதிப் பதினும் மிகப் பெரியது. வெளிப்பாடு பற்றிய உங்களது கருத்து அது கடவுளால் ஆவேச மூலம் ஒருவருக்குத் தரப் பட்ட தென்பது; இந்தியர்கள் கருத்தோ, 'வேதங்களில் கூறப் பட்டுள்ளமையால் பொருள்கள் இருக்கின்றன' என்பது. வேதத்திலும் அதன் மூலமாகவுமே படைப்பு முழுவதும் ஏற்பட்டுள்ளது. அறிவு என்பது முழுவதுமே வேதங்களில் இருக்கின்றது. ஒவ்வொரு சொல்லும் புனித மானது; சாசுவதமானது; ஆன்மாவைப் போன்றே ஆதி அந்தமின்றி நித்தியமாய் உள்ளது. படைப்புக் கர்த்தாவின் உள்ளம் முழுவதும் இந்நூலிலேயே குவிந்திருப்பதாகக் காணப்படுகிறது. இந்த முறையிலேயே வேதங்களைப் பாராட்டுகின்றார்கள். இந்தக் கருத்து நெறி நின்றுள்ளது. ஏனெனில், வேதங்கள் அவ்வாறு கூறுகின்றன. இன் ஞென்று ஏன் நெறியற்றது? வேதங்கள் அப்படி முழங்கு கின்றன. இப்படியெல்லாமிருந்தும், வேதங்களின் மிக்க பயிற்சியால் உண்மை காண முடியாது என்று கோஷமிடும் முனிவர்களின் நெஞ்சுரத்தைக் காணுங்கள். "எவனொருவ னிடம் ஆண்டவர் மகிழ்ச்சி யுறுகின்றனரோ, அவனுக்கு அவர் தம்மைத் தெளிவுறக் காட்டிக் கொள்கிறார்". ஆனால், ஓர் ஆட்சேபணை ஏற்படலாம். இது ஒரு பக்கச் சார்பு போலல்லவா உள்ளது? அறக்கடவுள் இதனை விளக்குகிறார்:

“ தீச்செயல் புரிபவர்கள், மனநிம்மதி இல்லாதவர்கள் ஒரு காலும் அறிவொளியைக் காண இயலாது. இவ்வான்மா தன்னைக் காட்டிக் கொள்ளும் சான்ருண்மையுடையோர் இதய சுத்தியுடன் கூடியவர்; தூயசெயலில் இயங்குபவர்; இந்திரியங்களை அடக்கி வைத்திருப்பவர்கள் இவர்களே''.

இங்கு ஓர் அழகிய உருவகம் தோன்றுகின்றது. ஆன்மாவை ஒரு தேரில் செல்பவனுகவும் இவ் வுடலைத் தேராகவும், புத்தியைத் தேரோட்டியாகவும், மனத்தைக் கடிவாளமாகவும் புலன்களைக் குதிரைகளாகவும் கற்பனை செய்து கொள்ளுங்கள். நன்கு வசப்படுத்தப்பட்டு வந்து வன்மையான கடிவாளத்தால் தேரோட்டியின் (புத்தியின்)கைகளின் கெட்டியான பிடியில் வைக்கப் பெற்றுள்ள குதிரைகளுள்ள ஒருவன் தன் இலட்சியத்தினை—அதாவது, எங்கும் நிறைந்துள்ள ஆண்டவரின் நன்னிலையை—அடைந்து விடுகிருன். ஆனுல், எவனது குதிரைகள் (புலனறிவுகள்) கட்டுப் படுத்தப் பெருமலும், (மனமாகிய) கடிவாளம் சரியாகக் கையாளப் படாமலும் இருக்கின்றதோ, அவன் அழிகின்ருன். எல்லா உயிர்களிலுமுள்ள இவ்வான்மா கட்புலன்களுக்கோ, மற்றைய புலன்களுக்கோ, தன்னைப் புலப்படுத்திக் கொள்வதில்லை; ஆனுல், மனத்தூய்மை பெற்றுப் புடமிடப்பட்டுச் சுத்தி பெற்றவர்கள் அப்பரம்பொருளைக் காண்கின்ருர்கள். செவிப்புலனுக்கும் கட்புலனுக்கும் எட்டாமல், வடிவங்களுக் கப்பாற்பட்டு, தானே தனிப் பொருளாய் விளங்கி ஊறு சுவைகளுக்கும் எட்டாது அவற்றையுங் கடந்து எல்லையற்று ஆதியந்தங்களின்றி இயற்கையினையுங் கடந்து விகாரமற்ற பரம்பொருளினை உணர்பவன், தன்னை மரணத் தேவனது பற்களினின்றும் விடுவித்துக் கொள்கிருன். ஆனுல், இது மிகவும் கடினமான காரியமே. அது வாளின் விளிம்பின்மீது நடப்பதையே ஒக்கும்; வழியோ, நீண்டது; அபாயகரமானது; ஆனுல், போராடுக; நிராசையுருதீர்கள். விழிமின்; எழுமின்; குறியை யடையுங்காறும் நில்லாது நடந்து செல்லுமின்.

உபநிடதங்கள் முழுவதிலுமே முக்கியமான கருத்து ஆத்துமானுபவம் பெறுவதே. அடிக்கொரு முறை பலபெரிய பிரச்சினைகள்—இக் காலத்துக்குத்—தோன்றுவது இயல்பு.

பயனேக்குப் பிரச்சினை வரும்; வேறு பல பிரச்சினைகளும் எழும்; ஆனல், அவை யாவற்றிலும் நாம் நம் பழைய தொடர்புகளால் தூண்டப்படுகிருே மென்பதைக் காண் கிருேம். இத்தகைய கருத்துகளின் தொடர்பே மனத்தின் மீது அளவில்லாத ஆதிக்கம் செலுத்துகின்றது. குழவிப் பருவந் தொட்டே ஓர் உருவமைந்த கடவுளைப் பற்றி எப் போதும் கேட்டு வந்தவர்களுக்கு, மனத்தின் ஆட்சி செலுத்தும் ஆற்றலைக் குறித்துக் கேட்டுவந்தவர்களுக்கு, இக்கருத்துகள் இயல்பாகவே கண்டிப்பானவையாகவும், கடுமையாகவும் தோன்றும்; ஆனல், அவர்கள் இவற்றைச் செவிமடுத்துச் சிந்தனை செய்வார்களாயின், இவை அவர் களது வாழ்க்கையின் இணைபிரியாப் பகுதிகளேயாகி விடும்; இனியொரு நாளும் அச்சம் விளைவிக்காதன ஆகிவிடும். பொதுவாக எழும் பெரிய கேள்வி தத்துவ சாத்திரத்தின் கைகண்ட பலனுகும். அதற்கு ஒரே விடைதான் இருத்தல் கூடும். அஃதாவது, பயனேக்குக் காரணமாகவே மக்கள் இன்பம் நாடிச் செல்வது நலமாகக் கருதப்படின், சமய சிந்தனைகளில் தமது இன்பத்தைக் காண விழையும் மாந்தர் ஏன் அவ்வாறு அவற்றினை நாடுதல் கூடாது? பலரையும் மகிழ்விக்கும் புலன் இன்பங்களை அவர்கள் இயல்பாக நாடு கிருர்கள்; ஆனல், அவ்வின்பங்கள் திருத்தியளிக்கக் கூடாத பிறரும் இருக்கலாமல்லவா? அவர்களுக்கு அவற் றிற்கு மேலான போகங்களில் நாட்டம் உள்ளது. நாய்க்கு இன்பம் தின்பதிலும் பருகுவதிலும் தான் உள்ளது. அதற்கு யாவற்றையும் துறந்து விட்டுச் சில விண்மீன்களை நோக்கு வதற்கென மலையுச்சிக்குச் சென்று அங்கே உறையும் விஞ்ஞானியின் பெருமகிழ்வினை அறியும் சக்தி இருக்குமா? நாய் அவனைக் கண்டு இகழலாம்; அவனை மூளைக் கோளா றுள்ளவனென்றே நினைக்கலாம். ஒருவேளை அவ்வெளிய விஞ்ஞானிக்கு மணம் புரிந்து கொள்ளப் போதுமான பொருள் வசதி என்றும் இராமலிருக்கலாம். அவன் சார மற்ற வாழ்க்கை நடத்துபவனுய் இருக்கலாம். அந்த நாய் அவனைக் கண்டு இகழலாம். ஆனல் அந்த விஞ்ஞானி, "எனது அருமை நாயே, புலனின்பம் ஒன்றிலேயே உனது மகிழ்ச்சி காணப்படுகிறது; அதற்கப்பாலுள்ள எதனையும்

நீ அறியவில்லை; ஆனால் எனக்கோ, இதுவே மிக்க பேரின்ப மளிக்கத்தக்க வாழ்க்கையாகும். உனக்கு உன் விருப்பப்படி இன்பப் பொருளைத் தேடிக்கொள்ள உரிமை யுண்டெனில், எனக்கும் அதே போன்ற உரிமை உண்டல் லவா?'' என்று கூறுவான். பிழை எதில் உள்ளதெனின், நமது எண்ண நிலைக்கே உலகம் முழுதினையும் கொணர்ந்து அத்துடன் பிணித்து விடவேண்டு மென்று நாம் நினைக் கிறோம் என்பதிலேதான். இன்னும் நாம் மனத்தையே மாபேருலகின் அளவையாகக் கொள்ள விழைகிறோம். இதிலேதான் பிழையுள்ளது. உங்களுக்குப் பழமையான பொறிபுலன் விஷயங்களே பெரிதும் இன்பம் அளிப்பனவாக இருக்கலாம்; ஆனால், எனது மகிழ்ச்சியும் அதே போலத் தான் இருக்க வேண்டுமென்பது என்ன கட்டாயம்? அவ் வாறிருந்தும் என்னை நீங்கள் வழிக்குவர வற்புறுத்தும் போது நான் உங்கள் கருத்துக்கு உடன்பட இயலவில்லை. இது தான் பயனேக்கும் இலௌகிகனுக்கும் வைதிகப் பற்றுள்ளவனுக்கும் உள்ள வேறுபாடு. முதல் மனிதன், "நான் எத்தனை சந்தோஷத்துடன் கூடியிருக்கிறேன் பார், எனக்குப் பணம் கிடைக்கிறது, ஆனால் நான் சமயம் பற்றிக் கவலை கொள்வதில்லை. அது தேடி அடைவதற்கு இயலாததாய் இருக்கிறது; நான் அதின்றியே சுகமாக இருக்கிறேன்'' என்கிறான். அம்மட்டும் நல்லதே; பயனேக் குள்ளவர்களுக்கெல்லாம் அது நல்லதே. ஆனால், இவ்வுலகு பயங்கரமானது. ஒருவனுக்குப் பிறரைத் துன்புறுத்தாது உள்ள எவ்வழியிலேனும் இன்பம் பெறக் கூடுமாயின், கடவுள் அவனுக்கு நலம் அருளட்டும்; ஆனால் அவன் என்னை நண்ணி ''நீயும் இவ்வாறு செய்ய வேண்டும்; அல்லாவிடின், நீ மதிகேடன் ஆவாய்,'' என்று கூறும்போது, நான், ''நீ சொல்வது சரியன்று; ஏனெனில், உனக்கு இன்ப கரமான அப்பொருள்களே எனக்கு யாதொரு கவர்ச்சியும் தருவதில்லை. நான் கைநிறையச் சில பொற்காசுகளைத் தேடிச் செல்லவேண்டிவரின், எனது வாழ்க்கை பாழானதே யாகும்; நான் இறந்து படுவேன்'' என்பேன். இவ்வாறு தான் சமய உணர்ச்சியுள்ளவன் கூறுவான். உண்மை யாதெனில், கீழான ஆசைகளைத் துறந்தவர்களுக்கே சமய

வாழ்க்கை கூடுவதாகும். நமக்குச் சொந்தமான அனுபவங்கள் ஏற்படவேண்டும்; நமது விருப்பப்படியே முற்றும் செய்தாக வேண்டும். இந்த இச்சை அலுத்துத் தீர்ந்த பின்னரே மோட்ச உலகம் வழி திறப்பதாகும்.

புலனின்பந் துய்த்தலில் மூழ்கியிருப்பது அபாயகரமான ஆசையைத் தூண்டக்கூடிய வேறோர் உருவத்தைப் பெற்றுக்கொள்கிறது. பண்டைக் காலத்தில் ஒவ்வொரு சமயத்திலும், உலகத்துயர்கள் தீருங்காலம் ஒன்று வருமென்றும், அப்போது இன்பங்களும் பெருமகிழ்ச்சியுமே தங்கி நிற்பனவாகுமென்றும் இம்மண்ணுலகமே சொர்க்கமாகிவிடுமென்றும் கூறப்படுவதை எப்போதும் கேட்பீர்கள். அதனை நான் நம்புவதில்லை. இப்பூமி இப்படியேதான் எப்போதும் இருக்கும். இது சொல்வதற்கு அச்சமுண்டாக்கத் தக்கதாய் இருக்கிறது. ஆனால், நான் சொல்லாமலிருக்க வேறு வழியொன்றுமில்லை. உலகின் துன்பம் உடலிலுள்ள நெடுங்காலத்து வாத நோய் போன்றது. அதனை ஓரிடத்தினின்றும் விரட்டிவிட்டால், வேறு இடத்தை அடைகிறது; அங்கிருந்து விரட்டினால், மற்றொரு மூன்றாமிடததுக்குச் செல்கின்றது. நீங்கள் என்ன செய்தாலும் அது உடலில் தங்கத்தான் செய்கின்றது. பண்டைக் காலத்தில் மக்கள் வனத்தில் வாழ்ந்து, ஒருவரையொருவர் தின்று வந்தார்கள். இப்போது அவர்கள் ஒருவர் மற்றொருவரது ஊனைத்தின்பதில்லை; ஆனால் ஒருவரையொருவர் ஏமாற்றுகின்றனர். நகரங்களும் நாடுகளுமே இம்மோசடியினால் நாசமுறுகின்றன. அது அதிகமான முன்னேற்றத்தைக் காட்டுவதாக அமைந்திருக்கவில்லை. உலகத்தில் முன்னேற்றம் என்று நீங்கள் கூறுவது, ஆசைகளைப் பெருக்குவதிலன்றி வேறொன்றிலே இல்லை என்பதுதான் நான் காணும் உண்மை. எனக்கு ஒன்று தெளிவாகின்றது: காமங்கள் துன்பமனைத்தையும் கொண்டு வந்து விடுகின்றன; எப்போதும் ஏதோ ஒரு பொருளுக்கு யாசித்துக்கொண்டும் எப்பொருளைக் காணினும் அதனையடைய விரும்பியும், எப்போதும், 'அதிகம், இன்னும் அதிகம் வேண்டும்,' என்று ஏங்குவது தவிர வேறொன்றினையுங்காணமாட்டாத பிச்சைக்காரனின் நிலையே அது. நம் ஆசைகளைத் திருத்தி செய்யும் ஆற்றல் ஏறு

வரிசையில் இருந்தால் ஆசையின் ஆற்றல் அதைவிடப் பன் மடங்கான நிலையிலுள்ளது. சுகதுக்கங்களை மொத்தமாகப் பார்க்கும் போது அம்மொத்தம் ஒரே நிலையிலேதான் எங்கும் உளது. கடலில் ஒரு திரை எழுந்தால், அது மற்றோரிடத்தில் பள்ளம் உண்டுபண்ணியே தீரும். ஒருவனுக்கு இன்பம் கிட்டினால் மற்றொருவனுக்கு கிலேசம் தோன்றுகிறது; அல்லது விலங்குக்கு அது நேருகின்றது. மக்கள் பெருகிக்கொண்டே வர, விலங்குகள் குறைந்து கொண்டே வருகின்றன; நாம் அவற்றைக் கொன்றுவருகின்றோம்; அவற்றின் இடத்தையும் கவர்ந்து வருகிறோம்; அவற்றினிடமிருந்து ஆகார வசதிகளை யெல்லாம் பறித்து வருகிறோம். இத்தகைய நிலையில் சுகம் பெருகி வருகிறதென்று நாம் எப்படிக் கூறுதல் இயலும்? வலிமையுற்ற இனம் எளியதனைத் தின்று விடுகிறது; ஆனால், அது மிகவும் களிப்புடன் கூடியிருக்குமென நீங்கள் எண்ணுகின்றீர்களா? இல்லை. அவை ஒன்றை மற்றொன்று கொல்லத் தொடங்கிவிடும். விவகார உலகிலுள்ள முறையில் இவ்வுலகு சொர்க்கமாக மாறக்கூடுமென்பது என்னால் நம்ப முடியாது. உண்மை அதற்கு எதிரிடையாய் உள்ளது. கோட்பாட்டின் ரீதியாகவும் அது நிகழாது என்பதைக் காண்கிறேன்.

பூரணத்துவம் எப்போதும் எல்லையற்றதே. நாம் ஏற்கெனவே இந்த அகண்டப் பொருள், இதனை வெளிப்படுத்த முயன்று கொண்டிருக்கிறோம். நீங்களும் நானும் மற்றுமுள்ள எல்லா உயிர்களுமே அதனை வெளிப்படுத்த முயன்று வருகின்றோம். இதுவரை அது சரியே. ஆனால், இதினின்றும் சில ஜெர்மானியத் தத்துவ சாத்திரிகள் ஒரு விசித்திரமான கொள்கையினை ஆரம்பித்துள்ளார்கள்: நாம் பூரண வெளிப்பாடு செய்து நிறைநிலையைப் பெறும் வரை இத்தோற்றம் அல்லது வெளிப்பாடு விருத்தி பெற்று வருவதாகும். பூரண வெளிப் பாட்டின் பொருள் யாது? பூரணத்துவம் என்பது எல்லை கடந்தது; வெளிப்பாடு என்பது வரையறை; ஆகவே, அதன் பொருள் நாம் வரையறையற்ற வரம்புக்குட்பட்டவர்கள் என்பது. இது முரண்பாடுடையது, அத்தகைய கோட்பாடு குழந்தைகளுக்கு இன்ப மளிக்கலாம்; ஆனால், அது பொய்களால் அவர்கள் உள்ளத்தை நஞ்சூட்டியதாகச்

செய்து விடுகிறது ; சமயத்துக்கு மிகக்கேடு விளைப்பதாகும். ஆனால், நமக்குத் தெரியும் உண்மை இவ்வுலகம் கீழ்நிலைக்கு வந்துள்ளது என்பதும், மனிதன் கடவுட் டன்மையினின் றும் இழிந்தவனே என்பதும் ஆதாம் வீழ்ச்சி யுற்றான் என் பதும் நமக்குத் தெரிகின்றன. மனிதன் இழி நிலையினை எய்தி விட்டவன் எனக்கூற முடியாத ஒரு மதமும் இக்காலத்தில் இல்லை. நாம் விலங்கின் நிலைக்கு இழிந்து விட்டோம்: இப்போது இக்கட்டினின்றும் விடுபட்டு மேல் நோக்கிச் செல்கிறோம். ஆனால், எல்லையில்லாப் பொருளை நாம் இங்கே முழுதும் வெளிக்கொணர ஒரு போதும் ஆற்றல் பெற்றவர் ஆகோம். நாம் சிரமத்துடன் போராடி வருவோம். ஆனால் புலன்களால் கட்டுப்பட்டு இருக்குங்கால் இங்கே பூரணத் தன்மை பெறுவது இயலாத காரியம் என்பதனை நாம் காணும் காலம் ஒன்று வரும். அப்போது கரை கடந்த பழைய நிலைக்கு நாம் மீண்டும் நடந்து செல்வது பற்றி அறிவிக்கப் படுவோம்.

இது தியாகம். நாம் வந்த வழியைத் திருப்பியமைத்து, சங்கடத்தினின்றும் தப்பவேண்டுகிறோம். அப்போது நீதி முறையும் தான நிலையும் ஆரம்பமாகும். அறநெறிச் சட்டங் களின் காவலனது குழூஉக்குறி யாது? "நானல்ல, நீயே" என்பது. "நான்" என்பது பின்னுலுள்ள எல்லை கடந்த பரம் பொருளின் விளைவு. இது தன்னையே புற உலகினுக்குக் காட்டிவர முயன்று கொண்டிருக்கிறது. இச்சிறிய "அகம்" என்பதே அம்முயற்சியின் பயன். அது திரும்பிப்போய், அகண்டப் பொருளான தன் சொரூபத்தோடு சேரவேண்டும். "தம்பி, நானன்று, நீயேதான்" என்று சொல்லும்போது நீ மீண்டும் அகண்டத்தினை அடைய முயலுகிறாய். "நான், நீ யில்லை," என்று கூறும்போதெல்லாம் அகண்டப்பொருளை ஐம்புலனறிவு கொண்ட உலகின் வாயிலாகவே வெளிக்காட் டும் பிழைபட்ட அடியினை எடுத்து வைக்கிறாய். அது போராட்டங்களையும் தீமைகளையும் உலகிற்குள் கொணர்ந்து விடுகிறது. ஆனால், ஒரு கால அளவு கடந்ததும் தியாகம்—நிரந்தரத் தியாகம்—வந்தே தீரவேண்டும். சின்ன "நான்" என்பது கழன்று விடுகிறது. இந்தச் சிறு வாழ்க்கைக்காக ஏன் இத்துணைக் கவனம் செலுத்திவர வேண்டும்? இங்கோ

வேறு எங்கேனுமோ வாழ்ந்து வாழ்க்கையினை அனுபவிக்க வேண்டும். வினைகள் மரணத்தையே கொண்டுவந்து விடும்.

நாம் விலங்குகளினின்றும் வளர்ச்சிபெற்று மனிதப் பிறவியைப் படைத்திருந்தால், விலங்குகளும் இழி நிலைக்கு இறங்கிய மனிதர்களாக இருக்கலாமன்றோ! அவ்வாறு இல்லையென்பது உங்களுக்கு எப்படித் தெரியும்? வளர்ச்சிக்குத்தக்க சான்று இதுவே என்பதை நீங்கள் பார்த்துள்ளீர்கள்: படிப்படியாக வரிசைக் கிரமத்தில் மிகக் கீழான நிலையிலிருந்து மிக மேலான நிலைக்கு ஏறிவரும் உருவங்களை நீங்கள் காண்கிறீர்கள். அதிலிருந்து கீழ் நிலையினின்றுமே மேல் நிலைக்குத்தான் எப்போதும் உயர்கிறதென்று நீங்கள் எப்படி வற்புறுத்த இயலும்? ஏன் மேலிருந்து கீழாக இருக்கக்கூடாது? அப்போக்கு வாதம் இருவகையும் அமைவதாகும். ஏதாவது உண்மையிருப்பின் இத்தொகுதி மேலும் மாறி மாறித் தொடருகிறதென்றே நான் எண்ணுகிறேன். மீண்டும் பழைய நிலைக்கு உட் சுருங்குதலின்றி விரிதல் மட்டும் எப்படி நிகழக்கூடும்? மேலான வாழ்க்கைக்கு நாம் போரிடுவதே நாம் மேல் நிலையினின்றும்வழுவியுள்ளோம் என்பதனைத் தெளிவாக்குகிறது. அப்படித்தான் இருக்கவேண்டும். விவரங்களில் மட்டும் மாறுதல்கள் இருக்கக்கூடும். கிறித்து, புத்தர், வேதாந்திகள் ஒரே குரலுடன் மொழிந்துள்ள கருத்துடன் நான் எப்போதும் ஒட்டிக்கொண்டே இருக்கிறேன்: அதாவது, ஒரு காலத்தில் நாமெல்லோரும் பூரணத்துவம் பெற்றேயாக வேண்டும். ஆனால், குறைபாடுகளைக் களைந்தெறிந்து விட்டேதான் அது இயலும். இவ்வுலகம் ஒரு பொருட்டன்று. மிகுதியாகச் சொல்வோமானால் அது கோரமான பரிகாசப் படம்; உண்மையின் நிழல். நாம் மெய்ப்பொருளை அணுக வேண்டும். தியாகம் அவ்விடத்துக்கு நம்மை அழைத்து செல்லும். நமது உண்மையானவாழ்க்கைத்குத் தியாகமே அடிப்படை; நம்மைப் பற்றி நாம் நினையாதபோதுதான், நலம் செய்யும் ஒவ்வொரு கணமும் நாம் துய்க்கும் உண்மைச் சுகமும் பெறுகிறோம். இச்சிறு தனி ஆன்மா என்பது சாகவேண்டும். அப்போது நாம் உண்மையில் உள்ளோம் என்பதனையும் கடவுளே அவ்வுண்மை என்பதனையும்

அவரே நமது உண்மைச் சொரூபம் என்பதையும் அவர் எப்போதுமே நம்முள், நம்முடன் இருக்கிருர் என்பதனையும் காண்போம். நாம் அவருள் வாழ்ந்து அவருள் நிலையாக நிற்போமாக. அஃதொன்றே இருப்பின் ஒரே இன்பநிலை. ஆன்மிக உலக வாழ்க்கையே உண்மையான நல்வாழ்க்கை. இந்த மெய்யுணர்வை அடைய நாம் முயல்வோமாக !

வேற்றுமையில் ஒற்றுமை

(3—11—96-ல் இலண்டனில் நிகழ்த்திய சொற்பொழிவு)

"சுயம்புவானவர் புலன்களை வெளி நோக்கிச் செல்லுமாறே படைத்தனராதலால், மனிதன் தன் புறத்தையொழித்துத் தன் அகத்தே பார்ப்பதில்லை. ஓர் அறிஞன் அமரத்துவம் விரும்பி, புலன்களை அங்நோக்குடன் உட்செலுத்தி அங்குள்ள ஆன்மப் பொருளினைக் கண்டு கொண்டான்." நான் முன்னரே கூறியுள்ளவாறு வேதங்களில் நாம் காணும் முதல் விசாரம் புறப்பொருள்கள் பற்றியே போந்தது. பின்னர் ஒரு புதுக்கருத்து பிறந்தது. வெளியுலகப் பொருள்களில் உண்மை காண்பதரிது; வெளியில் பார்வையைச் செலுத்தாது கண்களை உள்நோக்கிச் செலுத்தினுல் உண்மை காணப்படும். ஆன்மாவைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் சொல் மிகவும் பொருள் பொதிந்தது; அவனே உட்புகுந்திருப்பவன். அவனே நமது இருப்பின், உள்ளத்தின் ஆழத்தேயுள்ள உண்மை; இதயமையம்; எந்த இடத்தினின்றும் எல்லாம் கிளம்பி வெளியேறி வருகின்றனவோ, அந்த கருப்பச் சாரமான இடம் அவனே. உள்ளம், உடல், பொறி வாயில் மற்றும் நாம் பெற்றுள்ள யாவும் பிரிகதிர்கள் போன்று எங்கிருந்து கிளர்ந்தெழுகின்றனவோ, அவற்றின் மையமான கதிரவனும் அவனே. "சிறு பிள்ளைகளின் மதியைப் படைத்தவர்கள், அறிவிலிகள், புறத்தேயுள்ள விரும்பும் பொருள்களைக் குறித்து விரைந்து ஓடி வெகு தொலைவிலும் செல்லக்கூடிய மரணதேவதையின் வலைக்குள் புகுகின்றனர்; ஆனல், அமரத்துவத்தின் உண்மையையறிந்த மதிவாணர்கள் முடிவுற்ற பொருள்களையே கொண்ட இம்மையில் அநந்தப் பொருளைத் தேடுவதில்லை. இதே கருத்து இங்குத் தெளிவுறக் காட்டப்படுகிறது. முடிவுற்ற பொருள்கள் மண்டிக்கிடக்கும் இந்த வாழ்வில் அகண்டமான பொருளைத் தேடமாட்டார்கள். எல்லையற்ற ஒன்றிலேதான் அகண்டப் பொருளினைத் தேடக்கூடும்; தேடிக் காணக்கூடும். அவ்விதம் நமக்கு அகண்டப் பொருள், நம்மகத்தே விளங்கும் நமது ஆன்மா

வேயாகும். நமது உடலோ, உள்ளமோ, சிந்தனையோ நம்மைச் சுற்றியுள்ள உலகோ எல்லையற்றதல்ல. காண்பான் ஆகிய எவனுக்கு எல்லாம் உரியனவோ, அவனே மனித ஆன்மப் பொருள்; மனிதனுக்குள்ளே விழிப்புடன் விளங்கும் ஒருவனே அந்த அந்தமில்லாதவன். இப்பிரபஞ்சம் முழுவதற்கும் எல்லையற்ற காரணப் பொருளான அவனைக் காண நாம் அங்கேதான் தேடிச் செல்லவேண்டும். இறுதியற்ற ஆன்மாவிலேயே நாம் அவனைக் காணக்கூடும். "இங்கிருப்பது அங்குமுண்டு அங்குள்ளது இங்குமுண்டு. எவன் பலதிறப்பட்டவற்றையே காண்கின்றானோ, அவன் சாவினின்றும் சாவுக்கே செல்கிறான்." சொர்க்கம் அடையும் ஆசை எப்படி முதலில் இருந்ததென்பதை நாம் பார்த்துள்ளோம். தங்களைச் சுற்றியுள்ள உலகுபற்றிப் பழைய ஆரியர் அதிருத்தியடைந்த போது அவர்கள் மரணத்துக்குப்பின் துன்பமே இல்லாத இன்பம் மிக்க இடம் ஒன்றுக்குச் செல்வார்களென்று இயல்பாக எண்ணியிருந்தார்கள்; இவ் விடங்களையே பெருக்கிப் பல சொர்க்கங்களாகக் கொண்டார்கள். அங்கே எப்போதும் இன்பமே நிலவும்; உடல் நிறைவுற்றதாய் இருக்கும்; உள்ளமும் அவ்வாறே இருக்கும். மற்றும், அங்கே அவர்கள் தங்கள் முன்னோர்களுடன்கூடி வாழ்வார்கள் என்றெல்லாம் எண்ணினார்கள். ஆனால், தத்துவ அறிவு தோன்றிய பொழுது, இது நிகழாதென்றும், இது அர்த்தமற்றதென்றும் அறிந்தார்கள். அடைபட்ட ஓரிடத்தில் எல்லையற்ற பொருள் இருப்பதென்னும் கருத்தே அறிவுக்குப் பொருந்தாதது. ஏனெனில் ஓரிடம் காலத்தில் தொடங்கி அதில் தொடர்ந்து நிற்கவேண்டும். ஆகவே, அக்கருத்தை அவர்கள் விட்டொழிக்க வேண்டியதாயிற்று. இந்தச் சொர்க்கங்களில் வதிந்து வந்த கடவுளர்கள் ஒருகாலத்தில் மண்ணுலகில் மக்களாய் விளங்கி வந்துள்ளார்கள். அவர்கள் அவ்வாறே தெய்வத்தன்மை பெற்றமைக்குக் காரணம், அவர்கள் முன்பு செய்துள்ள நல்வினைகள். அத்தெய்வத் தன்மைகள் வெவ்வேறு நிலைகள். பதவிகள். வேதங்களில் கூறப்பட்ட ஒரு தெய்வமும் நிரந்தரமாக உள்ள தனிப்பட்டவரல்ல.

இந்திரன், வருணன் என்னும் பெயர்களைக் கவனித்தால், அவை தனிப்பட்டோர் தனிப் பெயர்களேயல்ல; ஆட்சி

செலுத்துவோர் போன்ற தலைமைப்பதவிகள். முந்தி இருந்த இந்திரன் இப்போது உள்ள இந்திரன் அன்று. அவன் காலஞ் சென்று புவனத்தினின்றும் வந்த வேறொரு மனிதனே. இத் தகையனவே மற்றத் தெய்வங்களும். மனித ஆன்மாக்களால் தொடர்ந்து முற்றுவிக்கப்படும் சில நிலைகள் உண்டு. அம் மனிதர்கள் மேலான தெய்வங்களின் நிலைகளுக்குத் தங்களை உயர்த்திக்கொண்டு விட்டார்கள். ஆனாலும், அவர்களும் சாவுக்கு ஆட்பட்டவர்களாகவே உள்ளார்கள். இருக்கு வேதத்தில் 'அமரத்துவம்' என்ற மொழி இத்தெய்வங்கள் பற்றிப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது: பின்னர் அதனை முற்றும் நழுவவிட்டு விட்டார்கள். ஏனெனில், காலத்துக்கும் இடத்துக்கும் அப்பாற்பட்ட அமரத்துவம் எந்தப் பௌதிக உருவைப் பற்றியும், அது எத்துணை நுண்ணிதாக இருந் தாலும் சரி, சொல்லுவதிற்கில்லை. அது எவ்வளவு சூக்குமமா யிருப்பினும், அதற்குக் காலத்திலும் இடத்திலும் ஒரு தொடக்கம் இருக்கவே வேண்டும்; ஏனெனில், அதன் வடி வமைப்பில் நுழைந்திருக்கும் பகுதிகள் இடவெளியிலேதான் உள்ளன. இடத்தையின்றி வடிவைச் சிந்திக்கவும் இயலாது. இடம் என்பது வடிவின் அமைப்பில் அடங்கப்பெற்றது; இது எப்போதும் மாறிக்கொண்டே இருப்பது. இடமும் கால மும் மாயையின்கண்ணே உள்ளன. இக்கருத்தே "இங் குளது அங்குளது" என்பதால் விளக்கிச் சொல்லப்படுகிறது. இத்தெய்வங்கள் உளவானால், இவைகள் இவ்விடத்துக்குப் பொருத்தமான நியதிகளாலேயே கட்டுப்படுத்தப்படுவன: எல்லாச் சட்டங்களுமே மாறி மாறி அழிவும் புத்துயிர்ப்பும் தம்மகத்தே அடங்கப்பெறுவனவாம். இந்த நியதிகள் சடப் பொருள்களைப் பல வடிவங்களாலும் வடிக்கின்றன. மறுபடி யும் அவற்றை நசுக்கி விடுகின்றன. பிறப்புள்ள எதுவும் மறைந்தே தீரும். ஆகவே, சொர்க்கங்கள் உண்மையாயின், அங்கும் அதே சட்ட ரீதிகள் ஆட்சி புரியவேண்டும்.

இவ்வுலகில் இன்பம் முற்றும் துயரினைத் தன் நிழலாகக் கொண்டு அதனைப் பின் தொடரப் படுவதனைப் பார்க்கின் றோம். வாழ்வுக்கும் அதன் நிழல் ஆகிய சாவு உண்டு. அவை சேர்ந்தே போகின்றன; ஏனெனில் அவை முரண்பாடுற்றன வல்ல. அவை தனியாய் உள்ள இருவேறு இருப்புகளல்ல.

ஆனால், வாழ்வு சாவு, இன்ப துன்பம், நன்மை தீமை இவை யாவும் ஒன்றின் பல திறப்பட்ட தோற்றங்களே. நன்மை தீமை இவ்விரண்டும் வெவ்வேறு பொருள்களென்ற வேற்றுமைக் கருத்தும், இவை இரண்டும் இடையறுது நிகழ்ந்தே வருகின்றன என்பதும் பொருளற்றன என்பது முதற் பார்வையிலேயே விளங்கும். அவை ஒரே உண்மை ஒரு சமயம் நன்மையாகவும் மற்றொரு சமயம் தீமையாகவும் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும் தோற்றங்களே. இவ் வேற்றுமை இனத்திலல்லாது அளவிலேயே உளது. அது ஒன்றுக்கொன்று தனது நெருக்கத்தின் மிகுதியினாலேயே வேறுபாடுற்றதாகக் காணப்படுகின்றது. உண்மையில் ஒரே நரம்புக்குழாய்களின் தொகுதி நல்லுணர்ச்சிகளையும் தீய உணர்ச்சிகளையும் மூளைக்கு எடுத்துச் செல்கின்றது: இக் குழாய்கள் சிதைவுறுமாயின், இரு விதமான உணர்ச்சிகளும் எழுவதில்லை. குறிப்பிட்ட ஒரு குழாய் மரத்துப் போய்விட் டால், அது வாயிலாக வந்துகொண்டிருந்த இன்ப உணர்ச்சி களை நாம் பெறுவதில்லை; அதே போன்று, துன்பம் தரும் உணர்ச்சியும் நிகழ்வதில்லை. அது எப்போதுமே இரண்டு படாத ஒன்றேயாம். மேலும், ஒரே நிகழ்ச்சி வாழ்வின் வெவ் வேறு காலங்களில் இன்பமும் துன்பமும் பயக்கின்றது. ஒரே தோற்றம் ஒருவருக்கு இன்பமும் மற்றொருவருக்குத் துன்பமும் இழைக்கின்றது. ஊன் உண்பது ஒருவனுக்கு இன்பம் தந்து, உண்ணப்படும் விலங்கினுக்குத் துன்பம் அளிக்கின்றது. எல்லோருக்கும் ஒரே விதமாக இன்பமளிக் கும் ஒரு பொருள் ஒரு போதும் இருந்ததில்லை. சிலருக்கு மகிழ்ச்சியும் சிலருக்கு அதிருத்தியும் ஏற்படுவதே வழக்க மாக உள்ளது. இது இப்படியேதான் நடந்துவரும். ஆகவே, இருப்பின் இரண்டுபட்ட நிலை மறுக்கப் படுகிறது. அதி னின்று நாம் அறிந்து கொள்ள வேண்டுவது என்ன? இவ் வுலகில் இறுதியில் எல்லாம் நமக்குத் தீமையே இல்லாது நன்மை பயப்பனவாகவே இருக்கும் நிலை எய்தற்பாலதன்று என்ற கருத்தை நான் எனது முன்னைய சொற்பொழிவில் கூறியுள்ளேன். நான் என் சொற்களால் உங்களில் சிலருக்கு ஏமாற்றம் விளைத்திருக்கலாம்; அல்லது சிலரை அச்சுறுத் தியிருக்கலாம். ஆனால், அதற்கு நான் என்ன செய்வேன்?

நான் சொன்னதன் பிழையை எடுத்துக் காட்டினால் என் கருத்தை மாற்றிக்கொள்ள ஆயத்தமாயிருக்கிறேன். ஆனால், அவ்வாறு எனக்கு நேரில் காணும் வண்ணம் எடுத்துக் காட்டினாலன்றி, நானே அதனை உண்மை என்று கண்டாலன்றி அவ்வாறு கூறமுடியாதன்றோ?

எனது கூற்றிற்கு எதிராகவும், பார்ப்பதற்கு நிரம்பவும் திருத்தி யளிப்பதாகவும் தோன்றக்கூடியதாயுள்ள பொது வாதம் இதுவே: வளர்ச்சியின் போக்கில், நாம் நம்மைச் சூழ்ந்துள்ளவற்றைப் பார்த்துக் கொண்டிருக்கும் தீமையனைத்தும் படிப்படியாக நீக்கப்பட்டு வருகின்றன; அதன்பயனாக இத்தகைய நீக்கம் மிக நீண்டகால அளவு—கோடிக்கணக்கான ஆண்டுகள்—தொடர்ந்து வரின், எல்லாத் தீமையுமே நீக்கப்படும் காலம் வந்தே தீரும்: அப்போது எஞ்சி நிற்பது நலமொன்றே. இது மேற் பரப்பில் நிரம்பவும் குற்றமற்ற வாதமாகவே தோன்றுகின்றது. இது உண்மையாக இருக்க இறைவன் அருளுவாரோ! இதில் போலிவாதமே உள்ளது; அது, நன்மையும் தீமையும் எப்போதும் நிலையுற்றனவாகக் கொள்ளவும் படுகின்றன என்பதே. குறிக்கப்படக் கூடிய அளவுள்ள தீமை ஒரு நூறு என வைப்போம். அது போன்றே குறிப்பிடப்பட்ட அளவுள்ள நன்மையும் உள்ளதென்றும் கற்பனை செய்துகொண்டு இத்தீமையின் அளவு நாளுக்குநாள் குறைந்து வருகின்றதென்றும் கருதப்படுகின்றது. ஆனால், அது அப்படி இருக்கின்றதா? நாம் உலகசரித்திரத்தில் காண்பன தீமை இடைவிடாது அதிகரிக்கின்றனதென்பதும் நன்மையும் விருத்தியாகிறதென்பதுமே, மிகவும் கீழான மனிதனை எடுத்துக் கொள்வோம்; அவன் காட்டில் உறைகின்றான். அவனது இன்ப நுகர்ச்சி மிகச் சிறிய அளவினது; அத்தகையதேதான் அவன் துன்பம் பொறுக்கும் தன்மையும். அவனது துயர் ஐம்புல நிலையிலேதான் அமைகிறது. அவனுக்கு மிகுதியாக உணவு கிட்டாவிட்டால் அவன் துயருகின்றான்; ஆனால், அவனுக்கு மிகுதியாக உணவு கொடுத்துத் தன் விருப்பப்படி திரியும் உரிமையும் வேட்டையாடும் உரிமையும் அளித்து விட்டால், அவன் முற்றும் மகிழ்ச்சியுறுகின்றான். அவனது இன்பம் முழுதும் புலன்களிலேதான் உள்ளது. அவனது துன்ப

உணர்ச்சியும் அத்தகையதே. ஆனால், அவன் அறிவு வளரும் போது, அவனது இன்பமும் வளர்ந்து மதியும் மலர்ந்து, அவனது புலன் நுகர்ச்சி அறிவின்ப அனுபவமாகப்பெருகி வரும். அவன் அழகிய ஒரு செய்யுளைப் படிக்க விழைவான்; நல்ல ஒரு கணக்கைத் தீர்ப்பதில் ஆழ்ந்த அக்கறையும் கொள்வான். ஆனால், இவற்றுடன் அவன் நுண்ணிய நரம்பு கள் படைத்து, காடுறைபவனது மனத்திற்கு எட்டாத மனவேதனைகளுக்கு ஆளாவான். எளிதான ஓர் எடுத்துக் காட்டைக் காண்போம். திபேத்தில் திருமணம் இல்லை, கற்பில் எழும் அழுக்காறும் இல்லை. ஆயினும், மணம் உயர் வான ஒரு நிலை என்பதை நாம் உணர்வோம். திபேத்தியர் களுக்குக் கற்பொழுக்கத்தின் அற்புதமான நுகர்ச்சி நலத் தையும் அதன் பேரின்பத்தினையும் அறியும் வகை தெரிய வில்லை. கற்புள்ள அறத்தில்நிற்கும் இல்லாளைப்படைத்ததின் —ஒருத்தி நிலையான நெறிபிறவாத கணவனைப் பெற்றிருப்ப தின்—இன்ப சுகத்தை அவர்கள் அடைந்ததில்லை. அவர் களுக்கு அத்தகைய உணர்ச்சியே இருக்க இயலாது. அதே போலவே, கற்புள்ள மனைவியின் அல்லது கண வனின் காதல், பொறுமையின் வேகத்தையோ அல்லது நெறிதவறிய இல்லறத்தோர்களில் ஒருவரின் செய்கையால் மற்றவருக்கு ஏற்படும் துயரையும் மனக்கொதிப்பையுமோ அவர்கள் அறிய மாட்டார்கள். அவை கற்பில் நம்பிக்கை யுள்ளவர்களுக்கே நிகழ்வனவாகும். ஒரு பக்கம் பின்னவர் களுக்கு மகிழ்ச்சி மிகுந்திருக்கும்; ஆனால், மறுபக்கம் அவர் களுக்குத் துயரமும் பெரிதே.

உங்கள் நாட்டை எடுத்துக்கொள்வோம். அது உலகி லேயே செல்வத்தில் எல்லா நாடுகளிலும் மிகச்சிறந்தது. அங்கே பிற நாடுகளைக் காட்டிலும் சுகபோகங்களும் மிகு தியே. அங்குள்ள துயர்களின் பேரளவினைக் காணுங் கள். அவர்களுடைய விருப்பங்கள் மிகப்பெருகியிருப்பதாலே தான், மற்ற மனித இனங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது அவர்களில் மூளைக்கோளாறு உள்ளவர்கள் மிகப் பெரிய எண்ணிக்கையில் இருக்கின்றனர்; ஒரு மனிதன் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தைப் பெற்றிருத்தல் வேண்டும். அவர்களில் ஒருவன் ஓராண்டில் செலவிடும் தொகை

இந்தியாவிலுள்ள எவனுக்கும் ஒரு பெரிய நிதியாகும். அவனிடம் போய் எளிய வாழ்க்கை பற்றி நீங்கள் போதிக்க இயலாது. ஏனெனில், அவனது சமூகம் அவ்வளவு அதிகமான கடமையை அவனிடம் எதிர்பார்க்கிறது. சமூக வண்டியின் சக்கரம் உருண்டு கொண்டே போகின்றது: அது கைம் பெண்களின் கண்ணீருக்கோ, தாய் தந்தையர்கள் அற்ற சேய்களின் அழுகுரலுக்கோ இரங்கி நிற்பதில்லை. எங்கும் இதே நிலைதான் உள்ளது. இன்பம் துய்க்கும் உங்கள் உணர்ச்சியின் ஆர்வம் வளர்ச்சியுற்றதொன்று; உங்கள் சமூகம் சிலவற்றினைக் காட்டிலும் மிக மிக வனப்புவாய்ந் துள்ளது. உங்களுக்கு அனுபவிக்க ஏராளமான பொருள் களும் இருக்கின்றன. ஆனால், பொருள்கள் குறைவாக உள்ளவர்களுக்கோ, துன்பம் மிகக் குறையும். அப்படியே நாம் நியாய வாதம் பேசிவரலாம். மூளையில் எவ்வளவுக்கெவ் வளவு பெரிய குறிக்கோள் உள்ளதோ, அவ்வளவுக்கவ்வளவு போக அனுபவமும் மிகுதியேயாகும். அதே சமயம், துயரத் தின் ஆழமும் மிகப் பெரிதேயாகும். ஒன்று மற்றொன்றின் நிழல் போன்றது. தீமைகள் விலக்கப்பட்டு வருகின்றன என்பது உண்மையாய் இருக்கலாம்; அப்படியானால், நன்மையும் குறைந்தே ஆகவேண்டுமல்லவா? ஆனால், தீமை கள் அதிவிரைவில் பெருகிவரவில்லையா? சொல்லப்போனால் நன்மைகள் குறைந்து கொண்டே வரவில்லையா? நன்மைகள் கூட்டல் முறையில் பெருகிவரின், தீமைகள் பெருக்கல் முறையில் பெருகவில்லையா? இதுவே மாயை. இது நன்மை நேரும் என்ற நம்பிக்கைக் கொள்கையுமன்று; தீமைதான் விளைவது என்ற ஆசையற்ற தன்மையுமன்று. இவ்வுலகம் இடும்பையே நிறைந்துளது என்ற நிலையை வேதாந்தம் கொள்ளவில்லை. அது உண்மையற்றதாகும். அதே சமயம் இவ்வுலகம் இன்பமும், செல்வமும் நிறைந்ததே என்று கூறு வதும் தவறே. ஆகவே குழந்தைகளுக்கு, 'இவ்வுலகு நலமே படைத்தது; யாவும் மலர்களும், தேனும் பாலும் சொரியும் இடங்களே,' என்று கழறுவது பயனில் சொல் ஆகும். அதுவே நாமெல்லோரும் மேற்கொண்ட கனவு. அதே சமயம், ஒருவன் மற்றொருவனைவிட அதிக மனத் துன்பம் அடைந்திருப்பதனால் எல்லாம் தீமையே என்று நினைப்பதும்

தவருகும். இந்த இரட்டைத் தன்மையே—இந்த நன்மை தின்மைகளின் மாறி மாறி வரும் நடனமே—நமது அனுபவ உலகத்தை ஆக்குகின்றது. அதே சமயம் வேதாந்தம், "நன்மையும் தீமையும் தனித்த இரு தத்துவங்கள் என எண் ணுதீர்கள்; ஏனெனில், அவை வெவ்வேறு தரங்களில், வடிவங் களில் தோன்றி ஒரே உள்ளத்தில் பலதிறப்பட்ட உணர்ச்சி களைக் கிளப்பி விடுகின்றன," எனக் கூறுகின்றது. ஆகவே வேதாந்தத்தின் முதற் சிந்தனை புறப்பொருளில் ஒருமையைக் காண்பதே; ஒரே இருப்புத்தன்மை தோற்றத்தில் எவ்வளவு வேருகத் தோன்றினும், தன்னையே வெளிப்படுத்துகிறது. பாரசீகர்களின் பக்குவமற்ற பழைய கொள்கையை நினைவு கூருங்கள். அது இரு தெய்வங்கள் உலகத்தைப் படைக் கின்றன என்பது. அதில் நல்ல கடவுள் நன்மை யாவற்றினை யும் அமைக்கிருர்; தீயதன்மை வாய்ந்த கடவுள் தீமையை எல்லாம் ஆற்றிவருகிருர். முதற் பார்வையிலேயே இதன் பொருளற்ற தன்மையை நீங்கள் காண்பீர்கள்; ஏனெனில், செயல்முறையில் இயற்கையின் நியதி ஒவ்வொன்றுக்கும் இரண்டு பகுதிகள் இருத்தல் வேண்டும்; ஒன்றினை ஒரு தெய்வம் ஆளும்; பிறகு சென்றுவிடும்; மற்ருென்றினை மறு தெய்வம் நிகழ்த்தும். அங்கேதான் சங்கடம் தோன்றுவது: இரண்டும் ஒரே உலகில் தொழில் புரிந்து ஒரு பகுதிக்குக் கேடு விளைத்தும் மற்ருென்றினுக்கு நன்மை புரிந்தும் வந்து இரு தெய்வங்களும் ஒத்துப்போகும் நிலையில் தம்மை வைத் துக் கொள்ளுகின்றன. இது அழகற்ற, நன்கு சமையாத, ஒரு முறை; இருப்பின் இருமையைச் சொற்கொண்டு சாற்றுவ தாகும். ஆனுல் முன்னேற்றமடைந்த கண்ணுக்குப் புல ஞகாத கொள்கையான ஒன்றை—இந்த உலகம் ஒரு பகுதி கேடுற்றதாகவும் மற்ருென்று நலம் படைத்ததாகவுமுள்ள ஒன்றை—எடுத்துக் கொள்ளுங்கள். அதே முறையில் வாதிக்கும்போது அது அறிவின்மையானதே. நமக்கு உணவளிப்பது ஒற்றுமை நியதி. அதுவே தற்செயலான இன்னல்களாற் பலரையும் மாய்த்துவிடுகின்றது.

ஆகவே, இவ்வுலகம் எல்லாம் நல்லதற்கே என்ற நம்பிக் கையை அடிப்படையாகக்கொண்ட கொள்கை சேர்ந்ததா

கவோ இதற்கு மாறான எல்லாம் கேடுற்றது என்ற கொள்கை யைப் பற்றியதாகவோ இராது, இரண்டின் தன்மையையும் கலந்துகொண்டதாகவேயுள்ளது. அதே சமயம் மேலே செல்லச் செல்ல குற்றச்சாட்டு இயற்கையின் மீது இராது நம் தோள்களின் மீதே சுமத்தப்படுகின்றது என்பதனைக் காண் போம். அதே சமயம் வேதாந்தம் தீமையின் உண்மையை மறுக்காமல், நாம் மீளும் வழியை நமக்குக் காட்டுகிறது; ஏனெனில், உள்ளதை தைரியமாக எடுத்து உரைத்தும் ஒன் றினையும் ஒளிக்க நினையாது பாகுபாடு செய்தும் விடுகிறது. அது நம்பிக்கையினை இழந்ததாக இருப்பதில்லை. அது அஞ் ஞேய நிலையிலும் இல்லை. அது ஒரு நோய்க்கான நன் மருந் தைக் கண்டுபிடித்து அதனை வைரமனைய உறுதியான அடிப்படையின் மீது தாபிக்க விரும்புகிறது; குழந்தையின் வாயை மூடியோ அல்லது பொய்யான தொன்றைக்காட்டி அதன் கண்களை மறைத்தோ தாபிக்க விரும்பவில்லை. ஏனெனில், குழந்தை உண்மையைச் சில நாளில் தெரிந்து கொள்ளவே செய்யும். நான் சிறுவனாய் இருந்தபோது இளைஞன் ஒருவனுடைய தகப்பனார் காலஞ் சென்று விட்ட தும் அவனை ஏழையாகவும் ஒரு பெரிய குடும்பத்தினைக் காக் கும் பொறுப்புடையவனாகவும் விட்டுச் சென்றதும் அத் தகப் பனாரின் தோழர்கள் அவனுக்கு உதவ விரும்பாததையும் நான் நினைவுகூர்கிறேன். அவன் பாதிரி ஒருவரிடம் உரை யாடி வந்தபோது, அவர், "அப்படியா! எல்லாம் நன்மைக்கே. நமது நன்மைக்காகவே யாவும் நமக்கு வழங்கப்பட்டுள்ளன," என்று ஆறுதல் கூறினார். இது ஒரு பழைய வடுவின்மீது ஒரு தங்கத் தகட்டை வைத்து மூட முயலும் பழைய முறை. இது வலியின்மையை, பொய்யை ஒப்புக்கொள்ளுவது. இது கேட்டு இளைஞன் போய் விட்டான்; ஆறு மாதங்கள் கழிந்ததும், பாதிரிக்கு ஆண் மகவு ஒன்று பிறந்தது. அவர் அதற்காக மகிழ்ச்சி விருந்து அளிப்பதாக எண்ணி அச்சிறு வனையும் அவ்விருந்துக்கு அழைத்திருந்தார். பாதிரியார் வழி பாட்டுப் பிரார்த்தனையில் "அவரது இரக்கங்களுக்காகக் கட வுளை வந்திப்போமாக!" என்று கூறினார். இளைஞன் எழுந்து "நிறுத்துங்கள்! இது முழுதும் துன்பமே!" என்றான். பாதிரி "ஏன் ?" என்று கேட்க, அவன், "என் தகப்பனார் இறந்தபோது

அது தீமைச் செய்தியாகத் தோன்றி இருந்தும் அதனை நன்றென்று சாற்றினீர்; இப்போது, இது நன்ருகத்தோற்றம் அளிப்பினும், உண்மையில் தீயதே" என்று கூறினுன். உலகத்தின் துன்பத்தைத் துடைக்கும் வழி இதுவா? நல்ல முறையில் வாழ்ந்து துன்புறுபவர்களின் மீது இரக்கம் காட்டுக—அதனை மழுப்பி மூட எண்ணற்க. இவ்வுலகினை ஒன்றுமே நலமுறுத்தாது; அதற்கப்பாற் செல்க.

இவ்வுலகம் நன்மை தீமைகளுடன் கூடியது. எங்கெல்லாம் நன்மையுளதோ, அங்கெல்லாம் பொல்லாங்கும் தொடர்கின்றது. ஆனல் இவை எல்லாவற்றின் தோற்றங்களுக்கும் முன்னும் பின்னும் வேதாந்தம் அந்த உண்மையான ஒருமைப்பாட்டைக் காண்கின்றது. அது, "தீமையுள்ளதனையும் நன்மையுள்ளதனையும் இரண்டினையுமே துறந்து விடு," என்கின்றது. எஞ்சுகிற பொருள் யாது? நன்மைக்கும் தீமைக்கும் பின்னர் உங்களுக்குச் சொந்தமான தொன்று, உண்மையான 'நீ', ஒவ்வொரு தீமைக்கும் அப்பால் ஒவ்வொரு நன்மைக்கும் அப்பால் உள்ள அதுவே தன்னை நலமென்றும் தீதென்றும் வெளிக்காட்டிக் கொள்கின்றது. அதனை முதலில் புந்தியில் வையுங்கள்; அப்போதுதான் நீங்கள் உண்மையான நன்னம்பிக்கை கொண்டவர்களாவீர்கள். அதற்கு முன்னர் அல்ல; ஏனெனில், அப்போது நீங்கள் ஒவ்வொன்றையும் அடக்கக்கூடிய சக்தி படைத்திருப்பீர்கள் இத்தகைய தோற்றங்களை அடக்கி விடுக; அப்போது நீங்கள் உங்களது உண்மையான 'நீ' என்பதனை வெளிக்கொணரும் சுதந்தரம் பெற்றவர்களாவீர்கள். முதலில் நீங்கள் உங்களையே வெற்றி கொள்ளுங்கள்; உறுதியுடன் நின்று உங்கள் விருப்பப்படி இருங்கள்; இந்நியதிகளுக்கு அப்பால் செல்லுங்கள். ஏனெனில், இச்சட்டங்கள் உங்களை முற்றும் ஆட்கொள்வதில்லை; இவை உங்கள் இருப்பின் ஒரு பகுதியே. முதலில் நீங்கள் இயற்கையின் அடிமைகள் அல்லீர். அவ்வாறு எப்போதும் இருந்ததுமில்லை; இருக்கப்போவதுமில்லை. இந்த இயற்கை—நீங்கள் இதனை அகண்டமானதென்று எண்ணியிருந்தாலும்—அளவுபட்டதே; பெருங்கடலில் உள்ள ஒரு சிறு திவலையே. உங்கள் ஆன்மாவே அப்பெருங்கடல்; நீங்கள் விண்மீன்களுக்கப்பாலும், ஞாயிறு திங்களுக்

கப்பாலும் உள்ளீர்கள். உங்கள் அகண்ட ஆன்மாவுக்கு முன் அவை வெறும் குமிழிகளே. இதை நீங்கள் உணர்ந்து விட்டால் நன்மை தீமைகள்மீது நீங்கள் வெற்றிகொண்டவர்களாவீர்கள். அப்பொழுதுதான் நன்மை தீயைகளைப் பற்றிய உங்கள் கருத்து முற்றிலும் மாறும். காட்சி மாறியதும் நீங்கள் எழுந்து நின்று, "நன்மை எத்துணை அழகியது! தீமையும் எத்துணை வியக்கத்தக்கது!" என்று கூறுவீர்கள்.

இதுவே வேதாந்தம் வழங்கும் அறிவுரை. அது காயங்களைப் பொன்னாலான தகடுகளால் மூடுவதில்லை. அவை அழுகவழுக மேலும் மேலும் பொன் தகட்டினால் மூடும் திருத்தமற்ற பரிகாரத்தை அது எடுத்துக் கூறுவதில்லை. இவ் வாழ்க்கை ஒரு மறுக்க முடியாத கடினமான உண்மை. இது வயிரமனைய கடினமாயிருந்தாலும் உழைப்புடன் ஊடுருவிச் செல்க; இதைப் பொருட் படுத்த வேண்டா. ஆன்மா வலியதே: அது அற்பத் தெய்வங்கள்மீது பொறுப்பைச் சுமத்துவதில்லை. ஏனெனில், நீங்களே உங்களது நற்பேறுகளின் சிற்பிகள். நீங்களே உங்களைத் துன்புறுத்திக் கொள்கிறீர்கள்; நன்மையையும் தீமையையும் உண்டுபண்ணுகிறீர்கள். நீங்களே உங்கள் கண்களுக்குமுன்னர் கைகளை வைத்து மறைத்துக் கொண்டு, 'இருள் மூடியிருக்கிறதே;' என்று அழுது புலம்புகிறீர்கள். உங்கள்கைகளை எடுத்து விட்டு, ஒளியினைக் காணுங்கள்; நீங்கள் ஒளிப் பிழம்பானவர்கள். நீங்கள் ஏற்கெனவே பரிபூரணம் பெற்றவர்கள். இப்போது நமக்கு, "இங்கேயுள்ளனவற்றைப் பலதிறப்பட்டனவாகக் காண்போன் சாவினின்றும் சாவினுக்கே செல்கின்றான்," என்னும் அச் செய்யுளின் பொருள் நன்கு விளங்கும். அந்த ஒருவனைக் காண்க, கண்டு விடுதலைபெறுக!

அந்தப் பரம் பொருளைக் காண்பதெவ்வாறு? இம்மனம், எத்தனை வஞ்சிக்கப்பட்டதாயும் வலிகுன்றியதாயும் எவ்வளவு எளிதில் பிறரால் செலுத்தப்படும் பெற்றித்தாயும் இருந்த போதிலும் இது வன்மையுடன் கூடி, நம்மை மீண்டும் மீண்டும் சாவினின்று மீட்கும். அந்த ஒருமையின், அந்த அறிவின் ஒளிப் பார்வையைப் பெறச் செய்யும் ஆற்றல் படைத்தது. மலையின் மீது பெய்யும் மழையானது எவ்வாறு அதன் பக்கத்திற் பல அருவிகளாய்ப் பாய்ந்து ஓடு

கின்றதோ, அவ்வாறே இங்கு நீங்கள் காணும் சக்திகள் யாவும் அந்த ஒரே பொருளினின்றே இயங்குகின்றன. மாயை யின் மீது தெறித்துச் சிதறிய ஒரே மகத்தான சத்தியே பலவாகப் பல்கிவிட்டது. பலதிறப்பட்டவற்றின் மீது ஆசை வைத்து ஓடாதீர்கள்; அந்த ஒன்றன்பாலே செல்க. "அவன் அசையும் பொருள்கள் யாவற்றிலும் உளன்; அவன் தூய பொருள்களிலெல்லாம் உளன்; அவன் அகில உலகினையும் நிரப்புகிறான்; அவன் வேள்வியில் விளங்குகிறான், வீட்டிற்கு வரும் விருந்தினரிடத்திலும் தோன்றுகிறான்; அவன் மனி தனிலும், நீரிலும், விலங்குகளிலும், வாய்மையிலும் உள்ளான்; அவன் மிகப் பெரியன். உலகில் தோன்றும் வெந் தழல் பல வடிவங்களில் எவ்வாறு தன்னைக்காட்டிக் கொள் கின்றதோ, அவ்வாறே பிரபஞ்சத்தின் ஒரே ஆன்மாவான அவனும் இப்பல வடிவங்களில் தன்னைத் தோற்றுவித்துக் கொள்ளுகிறான். பேருலகில் நுழைந்து உலாவும் காற்றானது தன்னைப் பல வடிவங்களிலும் எவ்வாறு தோற்றுவித்துக் கொள்ளுகின்றதோ, அவ்வாறே எல்லா ஆன்மாக்களிலும் எல்லாஉயிர்களிலும் விளங்கும் அந்த ஒரே ஆன்மா தன்னையே எல்லா வடிவங்களிலும் காட்டிக்கொள்ளுகிறான்." நீங்கள் இந்த ஒற்றுமையை அறியுங்கால் உங்களுக்கும் இது உண் மையாக இருக்கும். அதற்கு முன் இது புலப்படாது. இதை உணர்ந்தக்கால் எல்லா நிகழ்ச்சிகளும் நன்னம்பிக்கையே; ஏனெனில், ஆண்டவன் எங்கும் காணப்படுகிறான். இப் பொழுது கேள்வி: அந்தக் தூய, அகண்ட ஆன்மா யாவற்றி லும் ஊடுருவியுள்ளானென்பது உண்மையானால், அவன் துன்புறுவது, தூய்மையை இழப்பது எங்ஙனம்? அவன் துய ருறவில்லையென்று உபநிடதம் உரைக்கின்றது. "பகலவன் ஒவ்வோர் உயிரின் கண்ணொளிக்கும் காரணனாய் இருந்தும் எந்தக் கண்ணிலுமுள்ள ஊனத்தினால் எவ்வாறு பாதிக்கப் படுவதில்லையோ, அவ்வாறே எல்லோருடைய ஆன்மாவுமான கடவுள் உடலின் துன்பங்களால் பாதிக்கப் படுவதில்லை; உங்களைச் சுற்றியுள்ள துயரங்களால் நலிவுறுவதில்லை." எனக்கு ஒருநோய் காரணமாக நான் எப்பொருளையும் மஞ்சள் நிறமாகக் காணலாம். ஆனால், ஞாயிறு அதனால் ஒரு மாற்ற மும் அடைவதில்லை. அவன் தனிப்பொருளே; யாவற்றை

யும் படைத்தவனே; எல்லார் மீதும் ஆட்சி புரிபவனே, ஒவ்வோர் உயிரின் அகஆன்மாவாய் இருப்பவனே. அவன் தனது ஏகத்துவத்தைப் பலவாகச் செய்து கொள்பவன். இவ்வாறாக எவனை மாமுனிவர்கள் தம் ஆன்மாக்களின் ஆன்மாவாகக் கருதுகின்றார்களோ அவர்களுக்கே நிலையான உள்ளமைதி கிட்டுகிறது; வேறெவர்க்குமன்று: வெறெவர்க்குமன்று. யாரிந்த அழியுமுலகில் என்றும் மாறாதவனைக் காண்கிறாரோ, சாவுகொண்ட இப்பிரபஞ்சத்தில் அந்த ஒரே உயிரை யார் காண வல்லவரோ, இன்னும் யாரெல்லாம் அவனைத்தம் ஆன்மாக்களின் ஆன்மாவாக அறிகின்றனரோ, அவருக்கே நிலையான அமைதியுள்ளது; வேறெவருக்குமல்ல.'' அவனை வெளியுகில் எங்குக்காண இயலும்? வெய்யோன் மதிமண்டலங்களிலும் உடுககணங்களிலும் அவனை எங்கே காண்பது? அங்கே பரிதி ஒளி சிந்துவதில்லை; திங்களோ விண்மீன்களோ அங்கு ஒளிர்வதில்லை, மின்னலின் வீச்சும் சோதியை அங்கு நல்குவதில்லை. அப்படி இருக்க அவிந்துபோம் தீயா அவனது ஒளிபிறங்கும் காரணமாகப் போகின்றது? அவன் சுடர்விட யாவும் விளங்குகின்றன. அவனது சோதியினின்றே அவைகளெல்லாம் கடன் கொண்டுள்ளன; அவர்கள் வாயிலாக அவனே ஒளிர்கின்றான். இங்கு மற்றோர் அழகிய உருவகம் தோன்றுகின்றது. உங்களில் இந்தியாவுக்குச் சென்று ஆலமரம் ஒரே வேரினின்றும் எவ்வளவு பெரிதாகப் பரவியுள்ளதெனக் கண்டவர்கள் இவ்வுண்மையினை அறியலாம். அவனே அந்த ஆலமரம், அவனே எல்லாவற்றிற்கும் ஆணிவேர். அவன் விரிந்து கிளைத்து இப்பிரபஞ்சம் முழுதும் ஆகியுள்ளான். அவன் எத்தனை தொலைவு விரிந்து பரவியிருப்பினும், விழுதுகளுள் ஒவ்வொன்றும் அவனுடன் தொடர்புற்றே இருக்கும்.

வேதங்களின் 'பிராம்மணங்கள்' என்னும் பகுதியில் பல வகையான சொர்க்கங்களைப் பற்றிப் பேசப் படுகிறது. ஆனால் உபநிடதங்களின் தத்துவ அறிவுரையோ, அச்சொர்க்கங்களுக்குச் செல்லும் கருத்தினை விட்டுவிடுகிறது. சுகம் இந்தச் சுவர்க்கத்திலோ, அந்தத் துறக்கத்திலோ இருப்ப தொன்றன்று. அது ஆன்மாவிலேயே உள்ளது; இடங்களுள் ஒன்றையும் குறிப்பதாகாது. ஆன்ம தரிசனத்

தின் பல நிலைகளைக் காட்டும் ஒரு வாக்கியம் இதோ உள்ளது: "மூதாதையர்களின் சொர்க்கத்தில் எவ்வாறு ஒருவன் தனது கனவிற் பொருள்களைக் காண்கின்றானோ, அவ்வாறே மெய்ப்பொருளும் காணப்படுகின்றது." எப்படி நாம் கனவுகளில் பொருள்களை மங்கலாகவும் தெளிவில்லாத நிலையிலும் காண்கின்றோமோ, அப்படியேதான் உண்மையினையும் அங்கே காண்கிறோம். கந்தர்வ உலகம் என்ற மற்றோருலகம் உள்ளது. அங்கு இன்னும் மங்கலாகவே பொருள்கள் விளங்குவனவாம்; ஒருவன் நீரில் தனது நிழலை எவ்வாறு காண்கின்றானோ, அவ்வாறே அங்கும். இந்துக்கள் கற்பித்துள்ள மிக உயர்ந்த உலகம் பிரம்மலோகமெனப் பெறுகிறது. இதில் உண்மையின் வடிவம் ஒளியும் நிழலும் போன்றே மிக்க தெளிவுடன் காணப்படுகின்றது. ஆயினும், அதுவும் முற்றிலும் தெளிவான உருவமன்று, ஆனால் ஒருவன் ஆடியில் தனது முகத்தைப் பரிபூரணமாக, மிகத் தெளிவாகக் காண்பதுபோல, அவ்வளவு தெளிவுடன் மெய்ப்பொருள் மனிதனின் ஆன்மாவில் விளங்குகின்றது. ஆகவே மிகமிக மேலான சொர்க்கம் நமது ஆன்மாவிலேயே உள்ளது; வழிபடும் மிகப்பெருங் கோயில் மனிதனது ஆன்மாவிலேதான் உள்ளது. அது அகில சொர்க்கங்களினும் பெரிதானது என்று வேதாந்தம் விவரிக்கின்றது. ஏனெனில் எங்குமே இவ்வாழ்க்கையில் நமது ஆன்மாவிலேயே காண்பதனைப் போல அவ்வளவு தெளிவுற வேறு எந்தச் சொர்க்கலோகத்திலும் நாம் மெய்ப்பொருளைக் கண்டு கொள்ளல் இயலாது. இடமாற்றத்தால் ஒருவன் பெரும் பயனொன்றும் பெற்றுவிடுவதில்லை. நான் இந்தியாவிலுள்ளபோது குகை தெளி பொருளைக் காட்டுமென்றெண்ணியதுண்டு. ஆனால் அது அப்படியொன்றும் காட்டவில்லை. பின்னர்க் காட்டிற்குச் சென்றால் காரிய சித்தி பெறலாமென்று கருதினேன். பிறகு காசியம்பதியை நண்ணினேன்: ஆனால், அதே சங்கடந்தான் புலப்பட்டது. ஏனெனில், நமது உலகினை நாமே படைத்துக் கொள்கிறோம். நான் தீயவனாயிருந்தால், உலகு முழுதும் எனக்குத் தீமை பயப்பதாகவே உள்ளது. இதுதான் உபநிடதம் உரைக்கும் உண்மை. இது அனைத்து உலகங்களுக்குமே பொருந்தக்கூடிய உண்மையே.

நான் இறந்து சொர்க்கம் புகுந்தால் இதையேதான் அங்கும் காணநேரும்; ஏனெனில், நான் தூயனாகும்போதன்றிக் குகையில் உறைவதோ, காட்டிற்குச் செல்வதோ காசியில் வதிவதோ அல்லது சொர்க்கம் புகுவதோ பலனளிக்க மாட்டாது. எனது கண்ணாடியைத் தூய்மைப் படுத்தி நான் எங்கிருந்தாலும் உண்மைப் பொருளை உள்ள வாறே அறிகின்றேன். ஆகையினால் இங்குமங்கும் ஓடி சக்தியை வீணாய்ச் சிதையச் செய்வதில் யாது பயன்? நமது வீரியம் முழுதும் கண்ணாடியைத் துடைத்து வைத்திருப பதிலேயே செலவிடப்படவேண்டும். இக்கருத்தே கீழே காணப்படுவது:

"ஒருவரும் அவனைக் காண்பதில்லை; அவனது வடிவத் தினை ஊனக்கண்களால் எவனும் பார்ப்பதில்லை; அது உள் ளத்திலே உறையும் பொருள்; தூய உள்ளமுள்ளவனே அவ னைக்காணக்கூடும்; இவ்வாறுதான் அமரத்துவம் கைகூடும்."

ராஜயோகம் பற்றி நான் கோடையில் பேசியுள்ளன வற்றைச் செவி மடுத்தவர்கள் அப்போது போதிக்கப்பட்ட யோகம் வேறு வகையானது என்பதை அறிந்து கொண் டிருப்பார்கள். இப்போது நாம் கவனம் செலுத்தி வரும் யோகம் புலனடக்கம் பற்றியே பெரும்பாலும் பேசும். மனித ஆன்மாவினால் பொறி புலன்கள் அடிமைகளாக நடத்தப் படும்போது, அவை இனி ஒரு நாளும் உள்ளத்தைக் கலக்கா திருக்கும்போது, யோகி தனது இலட்சியத்தை அடையப் பெற்றவனாகிறான். "இதயத்தின் வீணாசைகளெல்லாம் துறக்கப்பட்ட போது இந்த சாவுக்குட்பட்ட மனிதன் அமரத்துவம் எய்தி விடுகிறான். அப்போது அவன் இங்கு வாழினும் கடவுளுடன் ஒன்றிவிடுகிறான். இதயத்தின் முடிச்சுகளெல்லாம் துணிக்கப் படும்போது, மனிதன் அமரனாகி இங்கேயே பிரம்மத்தை நுகர்கிறான்." இப்புவி யிலேயே, வேறோரிடத்திலில்லை.

ஒரு சில வார்த்தைகள் இங்கே சொல்லத்தக்கன. இந்த வேதாந்தமும் வேறு கீழைநாட்டுத் தத்துவங்களும் வாழ் விலுள்ள போராட்டங்களையும் விட்டு விட்டு அப்பாலுள்ள ஏதோ ஒன்றினை நோக்கியே நிற்கின்றன என்று சொல்வதை நீங்கள் கேட்டிருப்பீர்கள். இக்கருத்து முற்றும் பிழை

பட்டது. கீழை நாட்டுச் சிந்தனைகளைப் பற்றி யாதும் அறியாதவர்களே—அதன் உண்மைப் போதனையை அறிய ஆற்றலிலில்லாதவர்களே உங்களிடம் அவ்விதம் சொல்லக் கூடும். இதற்கு மாறாக எங்கள் வேதங்களும் எங் கள் தத்துவ ஞானிகளும் வெளியுலகங்களுக்குச் செல்ல ஆசைகொள்ளவில்லை யென்றும், அத்துடன் நில்லாது அவற்றைக் குறைவு படுத்திக்கூறுகிறார்களென்றும் அவை மக்கள் சென்று சிலகாலம் தங்கி அழுது புலம்பியும் நகை யாடியும் வரும் தலங்களென்றும் பிறகு அவர்கள் சாகிறார் கள் என்றும் சாற்றுகின்றனர். நாம் வலிமை இழந்திருக்குங் காலை, இத்தகைய அனுபவங்களைப் பெற்றுத்தானாக வேண்டும். ஆனால், எது உண்மையோ அது இங்கே உள்ளது. அதுதான் மனித ஆன்மா. ஆனால், இன்னும் வற்புறுத்திக் கூறப்படுவதொன்றுளது. தற்கொலை புரிந்து கொள்வதனால் நாம் தடுக்க வொண்ணாததிலிருந்து தப்ப முடியாது; அதனால், நாம் தப்பிச் செல்ல வழியில்லை. ஆனால், நேரான பாதையைக் காண்பது எளிதன்று. இந்துவும் மேலை நாட்டானைப் போலவே செயல் முறையை நன்கு பயின்றிருக் கிறான். வாழ்க்கையின் நோக்கங்களிலே தான் நாம் மாறு படுகிறோம். நல்ல ஒரு வீட்டினைக் கட்டி எங்களுக்கு நல்ல ஆடை, உணவு, அறிவுப பயிற்சி முதலியவற்றைத் தாருங் கள் என்று ஒருவன் கேட்கின்றான்; ஏனெனில், இவற்றிலே தான் அவன் வாழ்வு முற்றிலும் அமைந்திருக்கிறது. அந்த அளவில் அவன் செயல் முறையில் மிக மிக ஓங்கியிருக் கிறான். ஆனால், ஓர் இந்துவோ, வேறு வண்ணம் உரைக் கின்றான். உலகத்தைப் பற்றிய உண்மையான ஞானம் என்பது ஆன்ம ஞானமே, புலன் கடந்த ஞானமே அந்த வாழ்க்கையில் அவன் அனுபவிக்க விழைகின்றான். அமெரிக் காவில் ஒரு பெரிய அஞ்ஞேயவாதி யிருந்தார்; அவர் ஒரு பெருந்தகையாளர்; நல்லவர்; சிறந்த சொல் வன்மை யுள்ள வர். அவர் மதம் பற்றி ஒரு சொற்பொழிவாற்றி வந்து அதனால் பயனொன்றும் மில்லை என்று பகர்ந்தார். பிற உலகங் களைப் பற்றி நாம் ஏன் மண்டையை உடைத்துக் கொள்ள வேண்டும்? அவர் இந்த உவமையினைக் கையாண்டார், 'இங்கு ஓர் ஆரஞ்சுப் பழம் இருக்கிறது; நாம் அதன் சாறு

முழுவதையும் பிழிந்தெடுக்க விரும்புகின்றோம்.'' நான் ஒரு முறை அவரைச் சந்தித்து இவ்வண்ணம் இயம்பினேன், "உம்முடன் முற்றும் உடன்பாடுடையேன். என்னிடத்தும் ஒரு பழம் உள்ளது; அதன் சாற்றைப் பிழிந்தெடுக்க் நானும் விழைகின்றேன். நமது வேற்றுமை எந்தப் பழம் என்பதிலேதான் உளது. உங்களுக்கு ஆரஞ்சுப் பழம் தேவை; எனக்கு மாம்பழமே தேவை. நீங்கள் இங்கு வாழ்ந் திருந்து உண்டு பருகி ஒருசிறிது விஞ்ஞான அறிவு விளக் கம்பெற ஆர்வமுறுகின்றீர்கள். நீங்கள் அதுபோதுமென்றே எண்ணுகிறீர்கள். ஆனால், அது எல்லோருக்கும் சுவையுள்ள தாக இருக்கும் என்று சாதிக்க உங்களுக்கு உரிமை இல்லை. அக்கற்பனையை நான் மதிக்க இயலாது. ஓர் ஆப்பிள் பழம் எவ்வாறு கீழே விழுகிற தென்பதையோ, எனது நரம்புகளை ஒரு மின்சத்தி எப்படி அசைக்கிறது என்பதையோ மட்டும் நான் கற்க வேண்டியிருப்பின், நான் தற்கொலையே புரிந்து கொண்டு விடுவேன். பொருள்களின் மூலத்தையே, அவற் றின் உள்ளீட்டையே நான் அறிய ஆசைப்படுகிறேன். உங்க ளுடைய ஆராய்ச்சி வாழ்வின் தோற்றம் பற்றியதே. எனதோ, அந்த வாழ்க்கை பற்றியதே எனது தத்துவம், "நீ அதனை அறியவேண்டும்; உனது உள்ளத்தினின்றும் சொர்க்க நரகங்களையும் பிற குருட்டு நம்பிக்கைகளையும் அகற்றிவிட வேண்டும். அவை இவ்வுலகம் போல் உண்மை யில் இருந்தாலும் சரியே'' என்று கூறுகின்றது. எனக்கு இவ்வாழ்க்கையின் இதயம் தெரிய வேண்டும். நான் அதன் சாரத்தை அறிய விரும்புகிறேன். அதோடு நில்லாமல் அது யாது? எவ்வாறு வினையாற்றுகின்றது? அதன் வெளித் தோற்றங்கள் எவை? என்பவற்றையெல்லாம் நான் அறியும் அவாவுடையேன். எனக்கு ஒவ்வொன்றின் மூல காரணமும் நன்கு விளங்குதல் வேண்டும். அது எவ்வாறென்பதனைக் குழந்தைகளுக்கு விட்டுவிடுகிறேன். உங்கள் நாட்டினர் ஒருவர் 'நான் சிகரெட்டுக் குடிக்கும்போது, ஒருநூல் எழுத வேண்டியிருப்பின், அது சிகரெட்டின் விஞ்ஞானம் பற்றிய தாகவே இருக்கும்,' என்று உரைத்தார். விஞ்ஞான ஆராய்ச்சித் தன்மையுடன் இருப்பது நல்லதே; பெருமை யளிப்பதே; அவர்களது ஆராய்ச்சித் துறையில் கடவுள்

ஆசியையும் பொழிவாராக. ஆனுல், ஒருமனிதர் அதுவே எல்லாம் என்று சாற்றுங்கால், அவர் அறிவற்றவராகவே பேசுகிருர். வாழ்க்கையின் பாற்பட்ட மூலகாரணத்தையோ அதன் நியதியையோ அறிந்து கொள்ள அக்கறை யின்றியும் இருப்பு என்பதை ஆய்ந்து அறியாமலும் அவர் பகர்கிருர். அவரது அறிவு முழுதும் பொருளற்றது, அடிப்படை இல்லாதது என்று நான் வாதாடலாம். நீங்கள் வாழ்க்கையின் வெளிப்பாட்டினை நன்கு கற்று ஆராய்ந்து வருகின்றீர்கள்; ஆயினும், உங்களை நான், 'வாழ்க்கை என்பது யாது?' என்று வினவும் போது உங்களுக்குத் தெரியவில்லையென்று கூறுகின்றீர்கள். நீங்கள் உங்கள் பாடத்தைப் படிக்க முழுஉரிமை பெற்றுள்ளீர்கள்; ஆனுல், என்னை எனது ஆராய்ச்சிக்கு விட்டுவிடுங்கள்.

நான் உலக விவகாரங்களில் எனக்கு உரிய வழிமுறையில் மிகுந்த கருத்துள்ளவனுகவே இருக்கிறேன். ஆகவே, மேனுடுதான் அவ்வாறிருக்கிறது என்று சாற்றும் சொல் பொருளற்றது. நீங்கள் ஒரு வழியில் உலக ரீதியில் ஆற்றல் படைதுள்ளீர்கள்; நான் வேருெரு வகையில் அவ்வாறிருக்கின்றேன். மாந்தர்களுள் பலவிதங்கள் உண்டு; அவர்கள் மனப்பாங்குகளிலும் பல்வேறு வகைகளுண்டு. கீழை நாட்டில் ஒருவனிடம் அவன் வாழ்நாள் முழுதும் ஒற்றைக் காலால் நின்றுவந்தானுனல், அவனுக்கு உண்மை புலனுகும் என்று யாராவது இயம்பினுல், அவன் அம்முறையைப் பின்பற்றுவான். மேலைநாடுகளில் நாகரிகமற்ற ஒரு நாட்டில் எங்கோ ஒரு தங்கச் சுரங்கம் உள்ளதென்று உரைத்தால், அதனை அடைய ஆயிரம் ஆயிரம் மக்கள் சென்று எவ்வித இன்னலையும் எதிர்க்க ஆயத்தமாகி விடுவார்கள்; அதில் வெற்றி கொள்பவர் ஒருவரே இருக்கலாம். அம் மக்களே தங்களுக்கு ஆன்மா உண்டென்பதனைக் கேட்டுள்ளார்கள்; ஆனுல் அவர்கள் அதனைத் தங்கள் மாதாகோவிலாரிடம் ஒப்படைத்து திருத்தியடைகின்ருர்கள். இந்தியன் காட்டுமிராண்டியினிடம் செல்லான்: அவன் அது அபாயகரமென்பான். ஆனுல், ஓர் உயர்ந்த மலையின் உச்சியில் ஓர் அற்புத மகாபுருடர் உளரென்றும் அவர் அவனுக்கு ஆன்மாவைப் பற்றிய அறிவினை வழங்குவார் என்றும் சொன்னுல் போதும்!

அவன் தன் முயற்சியில் கொல்லப்படலாமெனினும், மலைமீது ஏறவே முயல்கிருன். இந்த இரண்டு வகையான மக்களும் உலக விவகாரத்தில் தேர்ந்தவர்களே. இவ்வுலகமே வாழ்க்கை என்று எண்ணுவதிலேதான் பிழையுள்ளது. புலனின்பங்கள் மறையும் வரையில் நீங்கள் அவற்றைத் துய்க்கின்றீர்கள்; அவ்வனுபவத்தில் நிலையென்பதொன்றுமில்லை. அது மேலும் மேலும் துன்பத்தையே கொணர்கின்றது; எனது கொள்கையோ, என்றுமுள்ள அமைதியை அளிக்கின்றது.

உங்களது கருத்துத் தவறென்று நான் கூறவில்லை. நீங்கள் தாராளமாக அதனைக் கடைப்பிடிக்கலாம். மிக்க மகழ்ச்சியே! பெரு நன்மையும் அதிகமான பாக்கியமும் அதினின்றும் கிளம்புகின்றன. ஆனல், அது காரணமாகவே எனது அபிப்பிராயத்தை நீங்கள் புறக்கணிக்கக் கூடாது; எனது கருத்து தனது வழியில் செயல் முறைக்குப் பொருந்தியதாகவே உள்ளது. நாம் எல்லோரும் அவரவருக்குரிய மனோநிலை யிலிருந்து கொண்டே வினையாற்றுவோம். ஆனல் நாமெல்லோரும் இருவழிகளிலும் செயல் புரியக் கடவுள் அருள் புரிவாராக! விஞ்ஞானிகளுள் சிலர் தம்தொழில் துறையிலும் ஆன்மீகத் துறையிலும் சமஅளவில் சாமர்த்தியம் காட்டி வந்துள்ளனர் என்பதனைக் கண்டுள்ளேன் நான். எனது நம்பிக்கை மனித இனம் விஞ்ஞான்ம், ஆன்மஞானம் ஆகிய இவ்விரு துறைகளிலும் முழுதுமே இதே போன்று காலக்கிரமத்தில் தக்க திறன் பெற்றதாக இருக்கும் என்பதே. ஒரு கலத்தில் உள்ள நீர் கொதிக்கும் பருவம் வந்ததும், அதனை உற்றுப் பார்க்கும்போது முதலில் ஒரு குமிழி எழுகின்றது; பிறகு ஒன்று எழுகிறது; இப்படியே இறுதியில் ஒரு பலத்த குமுறலும் ஏற்பட்டு ஒலிகள் தோன்றுகின்றன. இந்த ஞாலம் இது போன்றதே. ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு குமிழியை ஒத்தவனுகின்ருன். ஒரே நாட்டினர் பல குமிழிகளைப் போன்றவர்கள். படிப்படியாகப் பல நாட்டினர்களும் ஒன்று சேர்கிருர்கள். பிரிவே மறைந்து நாம் நோக்கிச் சென்று கொண்டிருக்கும் ஏகத்தன்மை ஒரு நாள் தோற்றமளிக்குமென நான் உறுதி கொள்கிறேன். ஒவ்வொருவனும் விஞ்ஞான உலகிலும், ஆன்மீக உலகிலும் ஆழ்ந்த அனுபவ ஞானத்துடன் விளங்கும் காலம் அண்மை

யில் திண்ணமாக வந்தே தீரும். அப்போது அந்த ஏக பாவமும் ஏகத்துவத்தின் இன்னிசையொழுங்கும் உலகம் முழுதும் பரவும். உலகம் முற்றுமே சீவன் முத்தர்கள் மய மாகிவிடும்; மாந்தர்கள் உயிருள்ள போதே சுதந்திரம் பெற்ற வர்களாவார்கள். நம் அழுக்காறுகள், வெறுப்பு, பகைமை, அன்பு, கூட்டுறவு இவற்றின் மூலம் நாமெல்லோரும் அந்த ஒரே குறியை எய்தப் போராடிக் கொண்டிருக்கிறோம். மிகப் பெரிய ஓர் ஆறு கடலை நோக்கி விரைகின்றது. அவ்வாறு செல்லும்போது நம்மையெல்லாம் இழுத்துச் செல்கின்றது. சில புற்பூண்டுகளும் காகிதத் துண்டுகளும் போன்று நாம் சிலகாலம் குறியின்றி இங்குமங்கும் "கண்டவாறு திரிந்து" மிதந்து செல்லினும், இறுதியில் நாம் வாழ்க்கைப் பேரின்பக் கடலில் கலப்பது ஒருதலை.

ஆன்ம சுதந்தரம்

(5—11—1896ல் இலண்டனில் நிகழ்த்திய சொற்பொழிவு)

நாம் பயின்று வந்த கடோபநிடதம், நாம் இப்போது படிக்க நினைக்கும் சாந்தோக்கிய உபநிடதக் காலத்துக்கு மிகவும் பிற்பட்ட காலத்தேதான் எழுதப் பெற்றது. மொழியோ இக்காலத்தினைச் சார்ந்தது; சிந்தனையும் மிக நல்ல முறையில் உருவாக்கப் பெற்றுள்ளது. இதனினும் பழமையான உபநிடதங்களில் மொழியானது புராதனத்தைச் சார்ந்ததாய் உள்ளது—வேதத்திலுள்ள துதிப்பாக்களின் வகையில் அமைந்தது; சாரமாகிய கருத்துக்களைப் பருகுவதற்குள் தேவையில்லாத பல பொருள்களையுங் கொண்ட ஒரு பெரும் பகுதியினூடே ஒருவன் செல்ல வேண்டிய கட்டாயம் சில வேளை ஏற்படுகின்றது. வேதங்களின் இரண்டாம் பகுதி, நான் முன்னரே கூறியுள்ள சடங்குகளைப் பற்றியதாய் விளங்கி, இப்பழமையான உபநிடதத்தின்மீது மிகுதியாக அதன் சுவட்டினைப் பதித்து விட்டிருக்கிறது. ஆகவே, இதன் பெரும்பகுதி கிரியைகள் பற்றியதேயாகும் ஆயினும், மிகப் பழைமயான உபநிடதங்களைப் பயிலுவதில் பேருதியம் உள்ளது. ஆன்மீகக் கருத்துகளின் வரலாற்றினை நாம் ஒரு கோவையாகக் கண்டுகொள்ள இயல்கின்றது. அண்மைக் காலத்து உபநிடதங்களில் ஆன்மிகக் கருத்துகள் யாவும் திரட்டப்பட்டு, ஒரே இடத்தில் தொகுக்கப்படுகின்றன; சான்ருக, பகவற்கீதையைக் கூறலாம். இதனை நாம் பெரும்பாலும் இறுதியான உபநிடதமென்றே கொள்ளலாம். இதில் சடங்கு முறைகளின் திவலைகூடச் காணப்படவில்லை. கீதையானது உபநிடதங்களினின்றும் திரட்டப்பட்ட ஆன்மீக உண்மைகளென்னும் அழகிய மலர்களால் ஆன பூங்கொத்தை யொத்ததென்றும் நாம் கொள்ளலாம் ஆனல் கீதையில் ஆன்மீகக் கருத்துகளின் வளர்ச்சி பற்றி அறிய இடமில்லை; அங்கே அவற்றின் மூலத்தைக் காணவும் இயலாது. அதனை அறிய, முன்னரே பலரால் குறிப்பிடப்பட்டவாறு நீங்கள் வேதங்களையே ஆராயவேண்டும். இங்

நூல்களுக்குப் புண்ணியக் கிரந்தங்கள் என்று குறிப்பிட்ட பெருங்கருத்தே இவற்றை அழியாமற் காத்து வந்தது. இந்த அளவில் உலகிலுள்ள வேறு எந்த நூலும் சிதைவு ருது இதனைப்போன்று பாதுகாக்கப் பெறவில்லை. அவற்றில் மிகமேலான சிந்தனைகளும், மிகக்கீழ் நிலையிலுள்ள சிந்தனைகளும், முக்கியமானவையும் அல்லாதவையுமான விஷயங்களும், மிகவும் பெருமை வாய்ந்த அறவுரைகளும் மிக எளிய செய்திகளும் விவரங்களுடன், ஒன்றையடுத்து மற்றொன்ருகக் காணபடுகின்றது. ஏனெனில் யாரும் எங்கும் அவற்றைத் தொடத் துணிவு கொள்ளவில்லை. விரிவுரைகளை இவற்றுபவர் தோன்றி அவற்றை மழுப்ப முயன்று பழைய செய்திகளினின்றே வியத்தகு புதுக் கருத்துக்களை வெளிக் கொணர முயன்ருர்கள்; அவர்கள் சாதாரணமான உரைகளிலும் ஆன்மிகக் கருத்துக்களைக் காணமுற்பட்டார்கள்; ஆனல், முதல் நூல்கள் மாருதிருந்தமையால், அவை அற்புதமான வரலாற்று ஆராய்ச்சி நூல்களாய் அமைந்துவிடுகின்றன. ஒவ்வொரு சமயத்தின் வேதநூல்களிலும் பிற்காலத்தவரது ஆன்மிக வளர்ச்சிக்கு மாறுதல்கள் செய்யப்பட்டன என்பது நமக்குத் தெரியும். இங்கு ஒரு சொல் மாற்றப்படும், அங்கு ஒரு வார்த்தை நுழைக்கப்படும், இப்படி வேத இலக்கியங்களில் செய்யப்படவில்லை என்பது ஒருதலை. அப்படியே எப்போதேனும் செய்யப்படினும், அது மிகுதியாகப்புலனுகும் அளவிற்கு இருந்ததில்லை. ஆகவே, நமக்கு இந்தப் பெருவாய்ப்புக் கிடைத்துளது. நாம் சிந்தைகளின் பண்டைய சிறப்பினை ஓர்ந்தறியவும் அவை எப்படி வளர்ந்தன என்பதைக்காணவும் இயலுகிறது. 'சடப்பொருள்கள் பற்றிய கருத்துக்களினின்றும் நுண்ணிய நேர்த்தியான ஆன்மிகக் கருத்துகள் எப்படி வளர்ந்து வந்தன? அவை வேதாந்தத்தில் தம் உன்னதமான நிலையை எப்படி அடைந்தன? என்பவற்றையெல்லாம் பற்றி நாம் அறியப் பயன்படுகிறது. பழங்காலத்துப் பழக்க வழக்கங்களைப் பற்றிய விவரங்களும் அங்கே உள்ளன. ஆனல், அவை உபநிடதங்களில் அதிகமாகக் காணப்படுவனவல்ல; மொழி ஒரு தனிப்பட்ட, முற்றிலும் சுருங்கிய, முறையில் ஆனல் நினைவில் வைத்துக் கொள்ளும்படி அமைந்துள்ளது.

நன்கு அறியப்பட்ட விஷயங்களெனத் தாம் நினைத்த சில செய்திகளை நினைவில் வைத்துக் கொள்ள உதவக் கூடிய இவ்வரிகளை நூலாசிரியர்கள் குறித்து வைத்து வந்தார்கள். அவர்கள் கூறிவரும் :வரலாற்று முறையில் ஒரு கால் அவர்கள் தாங்கள் சொல்லப்புகுந்த விஷயங்கள் யாவருக்கும் தெரிந்த செய்திகளே என்று எண்ணி வந்தார்கள் போலும். இவ்வாறு ஒரு பெரிய சங்கடமான நிலை ஏற்படுகிறது. இக்கதைகளில் ஒன்றில் உள்ள பொருளேனும் நாம் அறிகிறோமில்லை: ஏனெனில், சம்பிரதாயக் கொள்கைகள் மறைந்து விட்டன; எஞ்சியவை மிகைபடுத்திக் கூறப்பட்டவையாகத் தோன்றுகின்றன. அவற்றிற்குப் புது உரைகள் பலவும் இயற்றப்பட்டுவிட்டன: ஆகவே நீங்கள் அவற்றைப் புராணங்களில் காணும்போது அவை ஏற்கனவே இசைப்பாக்களாக அமைந்துவிட்டன. மேலைநாட்டினரின் அரசியல் வளர்ச்சியை நாம் இந்த ஒரு முக்கியமான கொள்கையைக் காண்பது போன்று, அவர் சர்வாதிகார ஆட்சியினைப் பொறுரென்றும், எந்த ஒரு தனி மனிதனும் தம்மீது ஆட்சி செலுத்தி வருவதனை எவ்வகையிலும் தடுக்கமுயன்று வருகிறார்களென்றும், படிப்படியாக உயர்ந்த ஜனநாயகக் கொள்கைகளை நோக்கி முன்னேறி வருகின்றனரென்றும் அரசியல்வாழ்வில் சுதந்தரக் கொள்கை உயர உயர ஓங்குகிறதென்றும் காண்பது போன்று இந்தியரின் புலன் கடந்த சாத்திரத்திலும் இதே வளர்ச்சி ஆன்மிக வாழ்வில் நாம் காண்கின்றோம். பற்பல கடவுளர் வழங்கி வந்த இடத்தில் அவர்களுக்கு மாறாக பிரபஞ்சத்திற்கு ஒரே கடவுள் தோன்றலானார். உபநிடதங்களில் இந்த ஒரு கடவுளின் மீதும் ஒரு கிளர்ச்சி எழுகிறது. உண்மை தமது விதிவசத்தை வகுக்கும் ஆட்சியாளர் பலருமுண்டு என்ற கருத்துப் பொறுக்கவொண்ணாதாய் இருந்தது மட்டுமல்லாது, ஒரேஆள் ஆட்சி புரிந்து வருவதும் அவர்களுக்குப் பொறுக்கக் கூடாததாயிற்று. இதுவே நம் மனத்தில் தோன்றும் முதல் கருத்து ; அது வளர்ச்சியுற்று உச்சநிலையை எய்துகின்றது. பெரும்பான்மையான உபநிடதங்களில். இந்தச் சிகரம் இருந்து வரக் காண்கிறோம் : அது பிறபஞ்ச மண்டலத்தின் கடவுளையே அரியாசத்தினின்றும் இறக்கி விடுவதாகும். கடவுளின் உரு

வமின்மை மேலெழுகின்றது. கடவுள் இனி ஒரு புருடரல்லர்; எத்துணை பெருக்கப்படினும் பெருக்கிக் காட்டப்படினும் இவ்வுலகினை ஆளும் மனிதரல்லர்; ஆனால், அவர் ஒவ்வோர் உயிரிலும் யாக்கை கொண்ட சீவதத்துவம், பிரபஞ்சத்தினையே ஊடுருவியுள்ளவர் ஆவார். உருவமைந்த கடவுளை விட்டுவிட்டு, அருவமாய ஒரு கடவுளைக் கொண்டு அதே சமயம் மனிதனை ஒரு புருடனாகக் கொள்வது தருக்க அறிவுக்குப் பொருந்தாததாகத் தோன்றுகின்றது. ஆகவே. உருவமுள்ள மனிதன் என்ற கொள்கையினைக் கைவிட்டு, மனிதனையே ஒரு கொள்கையாகக்கொண்ட ஒரு சித்தாந்தம் எழுப்பப்படுகின்றது. மனிதன் ஒரு தோற்றமே; அவனுக்குப் பின்னால் ஒரு தத்துவம் இலங்குகின்றது. இப்படியாக, இருமருங்கிலிருந்தும் ஒரே சமயத்தில் தனிமனிதத் தன்மைகள் முறிந்து கொள்கைகளை நோக்கிச் செல்வதையும், உருப்பெற்ற கடவுள் உருவற்ற பொருளின் நிலையை அணுகுவதையும், உருவமுள்ள மனிதன் உருவைக் கடந்த தன்மையை நண்ணுவதனையும் நாம் காண்கின்றோம். இதன் பிறகு இவ்விரு முன்னேற்ற கொள்கைகளும் மெல்ல மெல்ல இணையும் நெறியில் அடுத்தடுத்து வரும் துறைகளில் உருவற்ற கடவுளாகவும் மனிதனாகவும் தோன்றுகின்றன. உபநிடதங்கள் இவ்விரு கோடுகளும் இணைந்து ஒன்றாகும் கட்டங்களைத் தம்முள் அடக்கிக் கொள்கின்றன. ஒவ்வொன்றின் இறுதி வாக்கியமும் "நீ அதுவே ஆகிறாய்," என்பதே. என்றுமுள்ள பேரானந்தம் படைத்த ஒரே தத்துவம் உளது: அந்த ஒன்றே இப்பலவான பொருள்களில் தன்னை வெளியிட்டுக் கொள்கின்றது.

பிறகு தத்துவ வாதிகள் தோன்றினார்கள். உபநிடதங்களின் பணி இங்கு முடிந்துவிட்டதாகக் காணப்படுகின்றது. அடுத்துள்ள பணியைத் தத்துவ சாத்திரிகள் ஏற்றுக்கொண்டார்கள். மேற் சட்டம் அவர்களுக்கு முன்னதாகவே உபநிடதங்களால் நல்கப்பட்டது: அவர்கள் விவரங்களைச் சேர்க்க வேண்டியதாயிற்று. ஆகவே, பல கேள்விகளும் இயல்பாகவே எழுமல்லவா? இப்பலதிறப்பட்ட வடிவங்களிலெல்லாம் தன்னைத் தோற்றுவித்துக் கொள்ளும் ஓர் அருவமான தத்துவமே உளது என்று கொள்வோமானால், அந்த

ஒன்று பலவாகக் கிளைப்பது எவ்வாறு? பக்குவப்படாத முறையில் உள்ள பழைய அதே பிரச்சினையான தீமையின் காரணம் உள்ளத்தில் எழுவது போன்றே இப்போது வேறொரு வடிவத்தில் கிளம்பியுள்ளது. தீமை ஏன் உலகில் நிலவுகின்றது? அதன் மூல காரணம் யாது? என்னும் பழைய கேள்விகள் நிகழ்கின்றன. அதே கேள்வி இப்போது வடிகட்டப்பட்டு நுண்ணியதாகி விட்டது. 'நாம் ஏன் துயருகின்றோம்?' என்பது புலன்களின் துறையினின்றும் கேட்கப்படாது தத்துவத்துறையின் மேடையினின்றும் கேட்கப்படுகின்றது. ஒரே தத்துவம் பலவாக ஏன் மாறவேண்டும்? இதற்கு விடை நாம் முன் கூறியபடி இந்தியா தரக்கூடும் யாவற்றிலும் நல்ல விடை—'மாயை'க் கொள்கையே. அது உண்மையில் பல பொருள்களாகவில்லை: அது உண்மையில் தனது உண்மைத் தன்மையின் ஒரு பகுதியையும் இழந்து விடவில்லை. பலதிறப்பட்ட தன்மை வெறுந்தோற்றமே. மனிதன் ஓர் ஆளாகத் தோற்றமளிக்கிறான்; உண்மையில் அவன் அந்த அருவமான பொருளே. கடவுள் ஓராளாகத் தோன்றுகின்றார். ஆனால் உண்மையில் அவர் பரமான்ம வடிவேயாவார்.

இந்த விடையிலும் தொடர்ச்சியான நிலைகளுண்டு: தத்துவ அறிஞர்களும் தங்கள் கருத்துகளில் வேற்றுமை காட்டியுள்ளார்கள். இந்தியாவிலுள்ள தத்துவ ஞானியர் அனைவருமே இம் 'மாயை'க் கொள்கையினை ஒப்புக்கொண்டனரெனச் சாற்ற இடமில்லை. பெரும்பாலார் இதனை ஒப்புக்கொள்ளவில்லை. பக்குவப்படாத துவைத பாவனை ஏற்றுக் கேள்வியே கேட்கக்கூடாதெனக் கொள்ளும் துவைதிகளும் உள்ளார்கள். அவர்கள் கேள்வியை முதற்படியிலேயே தடுத்துவிடுவர். "உங்களுக்கு அத்தகைய கேள்வி கேட்கும் உரிமையே இல்லை. விளக்கம் கோரவும் உங்களுக்கு உரிமை இல்லை. அது ஆண்டவன் இச்சை. நாம் அதற்கு அமைதியுடன் அடிபணிந்தேயாக வேண்டும். மனித ஆன்மாவுக்குச் சுதந்தரம் என்பதே இல்லை. நாம் செய்யவேண்டுவன யாவும், நாம் பெற்றுள்ள உடைமைகள் யாவும், நாம் இன்பம் பெறுவதோ இடும்பையுறுவதோ எல்லாம் முன்னமே வகுக்கப்பட்டுள்ளன; துன்பம் வந்து சேருங்கால் நாம் அதனைப்

பொறுமையுடன் ஏற்பது நமது கடன்; இல்லையேல் நமக்கு மிகுதியான தண்டனையுண்டு. அதனை நாம் எவ்வாறு அறியக் கூடும்? அது வேத விதி யாதலால்" என்பர். இதற்கு அவர்கள் முதல் நூல் சான்றும் விரிவுரையும் கூறுவர்; அவற்றைத் திணிக்க முயல்வர்.

வேறு சிலர், மாயைக் கோட்பாட்டினை ஒப்புக்கொள்ளாவிடினும், நடுவு நிலையை மேற்கொண்டு நிற்பர். அவர் மொழிவது: படைப்பு முழுவதுமே கடவுளின் உடல் போன்றது. அவர் அகில ஆன்மாக்களுக்கும் ஆன்மா ஆவர்; இயற்கை முழுவதற்குமே அகவுயிராவர். தனி ஆன்மாக்களுக்கு அவற்றின் தீய செய்கைகளால் ஒடுக்கம் விளைகின்றது. ஒருவன் ஒரு கேடு செய்யும்போது அவனது ஆன்மா ஒடுங்கிப்போய் அவனது சத்தி குறைந்து கொண்டே போய், அவன் நற்செயலாற்ற முற்பட்டதும் மறுமுறையும் விரியத் தொடங்குகின்றது. இந்திய ஒழுங்குகள் யாவற்றிலும் ஒரு பொதுவான கருத்து இருப்பதாகத் தோன்றுகிறது. உலகிலுள்ள ஒவ்வொரு ஒழுங்கிலுமே, இயற்றியவர்கள் அறிந்திருந்தாலும் அறியாவிட்டாலும், இது போன்றுதான் உளது. இதனையே நான் மனிதனது 'தெய்விகத்தன்மை' எனக் குறிப்பிடுகிறேன். புராண வாயிலாகவோ, ஒட்டுவமை வகையிலோ, தத்துவ நூல் வழியாலோ, கூறப்பட்டிருப்பினும், மனிதனது ஆன்மா—அது எதுவாய் இருந்தாலும் சரி, கடவுளுடன் எத்தகைய தொடர்பு கொண்டிருந்தாலும் சரி—சிறப்பாகத் தூயதாகவும் நிறைநிலை பெற்றதாகவும் உள்ளதென்ற கருத்தினைக் கொள்ளாத ஒழுங்கோ உண்மைச் சமயமோ உலகில் இல்லை. அதன் உண்மை உருவம் இன்ப அருளும் சக்தியும் கூடியது—பல வீனமும் துன்பமயமுமான தன்று; எப்படியோ இந்தத் துன்பம் வந்து புகுந்துவிட்டது. பக்குவம் பெறாத ஒழுங்குகள் இதனை 'உருக்கொண்ட தீமை, ஒரு பேய், ஒரு அஹரிமான்' என்று கூறி இவ்விடும்பை வந்தவாற்றை விளக்க முயலலாம். மற்ற ஒழுங்குகள் கடவுளையும் ஒரு பேயையும் சேர்த்துப் படைத்து, அது யாதொரு ஏதுவுமின்றியே சிலரைத் துன்புறுத்தியும் சிலரை இன்புறச் செய்தும் வருவதாக நவிலும். மிகுதியாக சிந்தனை செறிந்த ஏனையோர், மாயைக் கொள்கையை அல்லது அது

போன்ற வேறு சிலவற்றை இவ்வாறு கற்பிக்கலாம். ஆனால் ஒரு கருத்துத் தெளிவாகின்றது: இதனைப் பற்றியே நாம் பேசவேண்டி வருகிறது. சிந்தித்தால், இத் தத்துவக் கருத்துகளும் ஒழுங்குகளும் மனச் சிலம்பு விளையாட்டுகளே; புத்திக்கு வழங்கப்படும் பயிற்சிகளே. ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு சமயத்திலுமுள்ள மூட நம்பிக்கைகளின் தொகுதி களினின்றும் தோன்றித் தெளிவுற்றிருக்கும் ஒரு பெருங் கருத்து—ஒளி மிக்க ஒரே கருத்து—யாதெனில், 'மனிதன் தெய்வத் தன்மை பெற்றுள்ளவன்; தெய்வத் தன்மையே நமது உண்மையான இயல்பு,' என்பதே.

வேதாந்தி விவரிப்பது போன்று இந்த உண்மை இயல் பைத் தவிர வருகின்றது எதுவும் கற்பிதமே—அதிட்டானத் தின் மீது ஏதோ ஒன்று ஆரோபிக்கப்படுகின்றது; ஆனால் தெய்விக இயல்பு ஒரு நாளும் அழிந்து விடுவதில்லை. மிக இழிந்தவரிடமும் உயார்ந்த முனிவரிடமும் அது எப்போ துமே உள்ளது. அதனை வெளிக்கிளப்ப வேண்டியுள்ளது, பிறகு அது தன்னைத் தானே முற்றும் விளக்கிக்கொள்ளும். நாம் வேண்டிக் கொள்வதுதான் தாமதம்; அது தன்னையே வெளிப்படுத்திக் கொள்ளும். பழைய காலத்தவருக்கு நெருப் பானது கல்லிலும் காய்ந்த மரக்கட்டையிலும் கரந்திருந்தது தெரியும். ஆனால், அதனை வெளிப்படுத்த உரசுதல் இன்றி யமையாததே. ஆகையினால், சுதந்தரம் தூய்மை ஆகிய இவற்றையே தன்மையாகக்கொண்ட சுடர் ஒவ்வோர் ஆன் மாவுக்கும் உளதே. அது ஒரு குணப் பண்பன்று; ஏனெனில் பண்புகள் திரட்டப்படலாம்; அதனாலேயே இழக்கவும் பட லாம். ஆன்மா சுதந்தரத்துடன் கூடிய ஒன்றே; ஆன்மா இருப்புடன் கூடியது; ஞானத்துடன் ஒன்றுபட்டது. சச்சி தானந்தம், மிக உயர்ந்த இருப்பு, அறிவு, ஆனந்தம் இவை ஆன்மாவின் இயலே; ஒவ்வோர் ஆன்மாவின் பிறப்புரி மையே. மேலும், நாம் காணும் வெளிப்பாடுகளெல்லாம் அப் பொருளின் விளக்கங்களே. அது தன்னைத்தானே மங்க லாகவோ, மிக விளக்கமாகவோ அறிவித்துக்கொள்ளும் தோற்றமே. சாவும் உண்மை நிலையின் வெளிப்பாடே. பிறப்பு, இறப்பு, உயிர், அழிவு, கீழே இழிதல், புதுப்பிக்கப் பெறுதல் ஆகிய இவையாவும் அந்த ஒருமையின் வெளிப்

பாடுகளே. ஆகவே, அறிவு அஞ்ஞானமாகவோ ஞான மாகவோ எந்த விதத்தில் தன்னை வெளியிட்டுக்கொண்ட போதிலும், அது அந்த ஒன்றான சித்தின் தோற்றம், ஞானத் தின் சுவை. வேறுபாடு அளவிலேதான் உள்ளது; இனத் தில் இல்லை. நமது காலடிக்குக் கீழ் ஊர்ந்து செல்லும் புழுவுக் கும் உலக மாமேதையின் அறிவுக்குமுள்ள வேற்றுமை அள விலேயே உள்ளது—தரத்திலன்று. வேதாந்தியர் நெஞ்சுரத் துடன், "இவ்வாழ்க்கையிலுள்ள இன்பங்களும் மிகவும் இழிவான மகிழ்ச்சிகளும், அந்த ஒரே இறை அருளின் சாரத் தின் வெளிப்பாடுகளே" என்று கூறுவர்.

இக் கருத்தே வேதாந்தத்தின் மிகச் சிறந்ததெனத் தோன்றுகிறது. இன்னும் நான் கூறியுள்ளவாறு, ஒவ்வொரு சமயமும் இக்கருத்தையே கொள்ளுகிறது. இப்படிக் கொள் ளாத மதத்தை நான் இதுகாறும் கண்டதேயில்லை. இது எல்லாச் சமயங்கள் வாயிலாகவும் வினையாற்றி வரும் முழு உலகுக்கும் பொதுவான தனிக் கருத்து. விவிலிய நூலினை எடுத்துக் கொள்வோம். அதில், முதல் மனிதனான ஆதாம் தூயனாய் விளங்கினான். அவனது தீச்செயலினால் பின்னர்த் தனது தூய்மையினை இழந்தான், என்னும் ஒட்டுவமைச் சொற்றொடரினைக் காண்கின்றோம். இந்த ஒட்டுவமைக் கதை யினின்றும் ஆதி மனிதனது இயல்பு நிறைவு நிலையில் இருந்ததாக அவர்களது சிந்தனையில் பட்ட தென்பது நமக் குத் தெளிவாகின்றது. நாம் காணும் மாசு மலங்கள், நமது உணர்வுக்குப் புலனாகும் பலவீனங்கள் ஆகிய இவை யாவும் அதிஷ்டானமான இயல்பின் மீது ஏற்றிக் கூறப்படுவனவே. கிறித்தவ சமயத்தின் பிற்கால வரலாறு கிறித்தவர்களும் அப்பழைய நிலையைப் பெறக் கூடும் தன்மையில் மட்டுமல் லாது, அதன் உறுதியான உண்மையிலும் நம்பிக்கை கொள் கிறார்களென்பதனை நமக்குத் தெளிவாக்குகின்றது. இதுவே விவிலிய நூலின் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு ஆகிய இரண்டினையும் சேர்த்துப் பார்க்கும்போது தெரியவரும் முழு வரலாறு. இப்படியே முகம்மதியர்களும் ஆதாமிலும் அவனது தூய்மையிலும் நம்பிக்கை கொண்டார்கள். முகம் மது நபியவர்கள் மூலம், அந்த இழந்த நிலை மீட்கப்பட்டது. இவ்வாறேதான் பௌத்தர்களும் இக்காட்சி யுலகுக்கு அப்

ஏற்பட்ட நிர்வாண நிலையொன்றை நம்புகிறார்கள். அது வேதாந்திகளின் பிரம்மமேயாகும். பௌத்தர்களின் ஒழுங்கு முறை, இழக்கப்பட்ட இந்நிலையினை மீண்டும் பெறக் கருதலின் அடிப்படையே. எந்த ஒழுங்கினை ஆராய்ந்து பார்த்தாலும், இத்தத்துவம் அதில் விளங்குவதைக் காண்கிறோம்: முன்னமே உங்கள் உடைமையாய் இருந்த ஒன்றினையல்லாது எதனையும் நீங்கள் பெறுவது இயலாது. இப்பிரபஞ்சத்தில் நீங்கள் யாருக்கும் கடன் பட்டவர்களல்லர். ஒரு சிறந்த வேதாந்த நூல் வல்லுநர் தமது நூல் ஒன்றின் தலைப்பில் கவினார்ந்த கவிதை நயம் ததும்பக் கூறியுள்ளவாறு உங்கள் சாம்ராச்சியத்தை அடைதலையே''—உங்களது சொந்தப் பிறப்புரிமையையே—நீங்கள் வற்புறுத்தி வேண்டுகிறீர்கள். அந்த சாம்ராச்சியத்தின் பேறுநமதே. நாம் அதனை இழந்திருந்தோம். ஆனால் மாயாவாதி கூறுவது யாதெனில், 'சாம்ராச்சியத்தின் இழப்பு ஒரு பொய்த்தோற்றமே; நீ அதனை எப்போதும் இழக்கவில்லை,' என்பது. இதுதான் வேறுபாடு.

எல்லாக் கோட்பாடுகளும் நமக்குச் சாம்ராச்சியப் பேறு ஏற்பட்டிருந்ததென்பதையும் அதனை நாம் இழந்து விட்டோமென்பதையும், கருத்தொற்றுமையுடன்கூடி ஒப்புக்கொண்ட போதிலும் அந்நிலையை மீண்டும் எய்துதல் பற்றி கருத்து வேற்றுமை கொள்கின்றன. தத்துவ ஒழுங்கில் உரைக்கப்படுவதாவது, 'நீ சில கிரியைகள் செய்தல் வேண்டும்; சில மூர்த்திகளுக்கு குறிப்பிட்ட காணிக்கைகள் செலுத்தியாக வேண்டும்; சில உணவு வகைகளை அருந்த வேண்டும்; விசித்திரமான வகையில் வாழ்க்கையை நடத்தவேண்டும். இவ்வாறு ஆற்றிவரின் நீ இழந்த சாம்ராச்சியம் உனக்குக் கிட்டிவிடும்,' என்பது. மற்றொன்று, 'நீ இயற்கையினைக் கடந்த ஒரு பொருளின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி, புலம்பிக் கண்ணீர் சொரிந்து பாவமன்னிப்புக் கோரினால், உனக்கு அந்த இராச்சியம் கிட்டும்,' எனக் கூறுகிறது. இன்னுமொரு தத்துவ ஒழுங்கு, 'அத்தகைய ஒரு பரமனை நீ முழு மனத்துடன் நேசித்துவரின், உனக்கு அந்த மோட்ச உலகம் கிட்டும்,' என்று கூறுகிறது. இந்த அறிவுரைகள் யாவும் உபநிடதங்களில் உள்ளன. நான் மேலே சொல்லிக் கொண்டு போகும் போது நீங்கள் அதனைக் காண்பீர்கள்.

ஆனால், எல்லாவற்றிலும் மிகப் பெரிதான, உயர்வானஅறிவுரை யாதெனில், "நீ அமுதரற்ற வேண்டுவதே இல்லை. நீ இந்தக் கருமங்களைச் செய்யவேண்டுவதே இல்லை. நீ இழந்த சாம்ராச்சியத்தை எவ்வாறு பெறுவது என்பது பற்றிக் கவலையே கொள்ள வேண்டாம். ஏனெனில், நீ அதனை எப்போதுமே இழந்தது இல்லை. நீ இழக்காத பொருளை ஏன் தேடிச் செல்லவேண்டும்! நீ என்றுமே தூயவனாகவே இருந்துள்ளாய்; ஏற்கெனவே சுதந்தரனாய் மிளிர்ந்துள்ளாய். நீ சுயேச்சையுள்ளவன் என்று சிந்திப்பாயானால், இத்தருணமே நீ சுதந்தர புருடனாவாய்; நீ கட்டுக்குள்ளானவன் என எண்ணினால், கட்டுப்பட்டவனே யாவாய்," என்பது. இது மிகவும் வீரம் செறிந்த சொல்லே. இந்தச் சொற்பொழிவின் தொடக்கத்தில் நான் நவின்றவாறு, உங்கள் முன்னர் மிக்க துணிவுடனேதான் நான் பேசியாகவேண்டும். அது உங்களை இப்போது வெருட்டலாம். ஆனால் அதனை உன்னிப்பார்க்கும் போது—நீங்கள் உங்கள் வாழ்க்கையில் அனுபவம் வாயிலாகக் காணும்போது—நான் சொல்வது உண்மையே என்பது உங்களுக்குத் தெரியவரும். சுதந்தரம் உங்களது இயல்பாய் இராவிடின், எந்த விதமான கருவியைக் கையாளினும் நீங்கள் அதனை அடைய இயலாது. நீங்கள் சுதந்தரத்துடன் வாழ்ந்து வந்திருந்து, எப்படியோ உங்கள் சுதந்தரத்தை இழந்து விட்டீர்களென்று பாவித்துக் கொள்வோம். அது நீங்கள் பண்டுதொட்டே விடுதலை பெற்றிருந்ததில்லை என்பதனையே குறிக்கின்றது. நீங்கள் விடுதலையுடன் கூடியிருந்திருப்பீர்களானால் அதனை இழக்கச் செய்யும் வல்லவை எதற்கேனும் இருந்திருக்குமா என்ன! சார்பற்ற ஒன்றைச் சார்புற்றதாகச் செய்தல் ஒரு போதும் இயலாது; அது உண்மையில் சார்புற்றதாகவே இருப்பின், அதன் சார்பற்ற வெற்றி வெறுந் தோற்றமேயாகும்.

இவ்விரண்டு கட்சிகளில் நீங்கள் எதனை ஏற்கப்போகிறீர்கள்? ஆன்மா தனது இயல்பிலேயே தூயதாகவும் சுயேச்சையுற்றதாகவும் இருந்ததெனில், மாபெருலகில் எதுவும் அதனை வரையறைகளுக்கு உட்படுத்த வல்லதன்று; ஆனால், இயற்கையில் ஏதேனும் ஆன்மாவைத் தளையிடக் கூடுமானால், அந்த ஆன்மா வீடு பெறவில்லை என்பதும் அது சுயேச்சை

யுடன் விளங்கிற்றென்று நீங்கள் சாற்றியது வீண் பிரமை என்பதும் இயல்பாகவே தெளிவாகின்றன. ஆதலால், நாம் முத்திபெறக் கூடுமாஞல், ஆன்மா தன்னியல்பிலேயே சுதந்தரம் படைத்ததாகவே இருக்க வேண்டுவது மறுக்கவொண்ணுத தோர் உண்மை. அது வேறு விதமாய் இருத்தல் இயலாது. சுயேச்சை என்னும் சொல்லிற்குப் பொருள், எதன் மீதும் சார்பற்றிருத்தல் என்பதே. அஃதாவது, அதற்குப்புறம்பான பொருள் எதுவுமே அதன் மீது அதற்குக் காரணமாக ஆட்சிபுரிய இயலாது. ஆன்மா தனக்கொரு காரணமில்லாத தொன்று; இதிலிருந்தே நம்மிடத்தே மிகச் சிறந்த கருத்துகள் யாவும் தொடர்கின்றன. புறப்பொருள்களால் ஆன்மா ஆட்டுவிக்கப்பட வில்லை; அது இயல்பிலேயே சுதந்தரம் உடையது என்பதை ஒப்புக்கொண்டாலன்றி, ஆன்மாவின் அமரத்துவத்தை நிலை நாட்ட உங்களால் இயலாது. ஏனெனில், சாவு வெளியேயுள்ள ஒரு காரணப் பொருளால் நிகழக்கூடிய காரியம். நான் நஞ்சுண்டு இறக்கிறேனென்பதன் பொருள் எனக்குப் புறத்தேயுள்ள நஞ்சென்றும் ஒரு பொருள் எனது உடலை இயக்கக்கூடும் என்பதே. ஆஞல், ஆன்மா சுதந்தரம் பெற்றுளது என்பது உண்மையாஞல், எதுவும் அதனைப் பாதிக்க மாட்டாதென்பதும், அது ஒரு போதும் அழியாத தென்பதும் இயல்பிலேயே உணர வேண்டியவையே. வீடுபேறு, அமரத்துவம், பாக்கியம் பெற்றிருத்தல் ஆகிய இவை யாவும், ஆன்மா காரண காரிய நியதிகளுக்கு அப்பாற்பட்டதாக, மாயையின் ஆட்சிக்கு அப்பாற்பட்டதாக, மாயையின் ஆட்சிக்கு அப்பாற்பட்டதாக இருப்பதனைப் பொருத்தனவே. இந்த இரண்டில் நீங்கள் எதனைக் கொள்வீர்கள்? ஒன்று, முதலாவதைப் பிரமை என்று கொள்ளுங்கள்; அல்லது இரண்டாவதனை அவ்வாறு கருதுங்கள். நிச்சயமாக நான் இரண்டாவதனையே மயக்கமாகக் கொள்வேன். அதுவே எனது உணர்ச்சிகளுக்கும் ஆர்வங்களுக்கும் ஒத்ததாய் இருக்கின்றது. நான் இயற்கையில் சுயேச்சையுடையவஞகவே உள்ளேன் என்பது பற்றி நான் முற்றிய உணர்வுடன் கூடியிருக்கிறேன். இந்தக் கட்டு உண்மையானதென்றும் எனது சுதந்தரம் பிரமையே என்றும் நான் ஒரு போதும் கொள்ளேன்.

இவ்வாராய்ச்சி ஏதேனும் ஒரு வடிவில் தத்துவங்களனைத்திலும் உள்ளதே. இக்காலத் தத்துவ நூல்களிலும் இவை உளவாதலை நீங்கள் காணலாகும். இரு கட்சிகள் உள்ளன. ஒரு சாரார், 'ஆன்மா உண்மையன்று. ஆன்மாவின் கருத்து, உடலென்றோ மூளையென்றோ நீங்கள் கூறும் சடப் பொருள்களின் துகள்களின் பல போக்குவரவுகளால் உண்டாகிய மருள் ஆகும்: சுயேச்சையின் பதிவு, அங்குமிங்கும் அலையும் அசைவுகள், இடம் பெயர்தல்கள்; இத்துகள்களின் தொடர்ச்சியான போக்கு, இவற்றின் விளைவே,' என்பர். இதே கருத்தைக் கொண்ட பௌத்தப் பிரிவினர்களும் உண்டு. அவர்கள் இதனை ஒரு சான்முக எடுத்துக் காட்டினார்கள்: 'நீ ஒரு தீப்பந்தத்தை எடுத்து அதனை விரைவாகச் சுழற்றிவரின், ஒரு ஒளி வட்டம் தோன்றும். அந்த வட்டம் உண்மையில் நிகழ்வதில்லை. ஏனெனில், பந்தம் ஒவ்வொரு நொடியிலும் இடம் பெயர்ந்தே வருகின்றது. நாம் சிறுதுகள்களின் பெரிய மூட்டைகளே. அவற்றின் தீவிரமான சுழற்சியால் நித்திய ஆன்மாவின் மயக்க அறிவு தோன்றுகிறது.'

மற்றொரு சார்பினர் கூறுவது யாதெனில், 'சிந்தனை விரைவின் தொடர்ச்சிகளால் சடப் பொருள் ஒரு மாயையாகக் காட்சியளிக்கின்றது; உண்மையில் அது இருக்கவில்லை. ஆகவே, நாம் காண்கிறோம்: 'ஆன்மா ஒரு மயக்க' மென்று ஒரு தரப்பினர் கூறவும், மற்றொரு சாரார் சடப்பொருள் மோகம் என்று கூறி வருவதனையும் நீங்கள் அறிவீர்கள். எந்தப் பக்கம் நீங்கள் சார்வீர்கள்? திட்டமாகவே நாம் ஆன்மாவின் உண்மையினையே ஒப்புக்கொண்டு சடத்தைப் புறக்கணிப்போம். இரண்டிற்கும் கட்சி வாதம் ஒன்றேதான்: ஆன்மாவின் பக்கல் அது சிறிது மிகுந்த வலியுடன் சாரும். ஏனெனில், ஒருவரும் சடப்பொருள் யாதெனக் கண்டதேயில்லை. நாம் நன்மையே உணர்ந்து கொள்ள இயலும் தனக்கு வெளியே சடப்பொருளினை இருப்பதாக உணர்ந்தவரை நான் கண்டதில்லை, ஒருவரும் இதுவரையில் தனக்கு வெளியே குதித்ததாக ஏற்படவில்லை. ஆதலால் தருக்க வாதம் ஆன்மாவின் பக்கமாகவே வலியுற்று சாயும்; இரண்டாவதாக, ஆன்மாவைப் பற்றிய கொள்கை மாபேருலகினை விளக்குவதாகும்;

சடவாதம் அவ்வாறு உணர்த்துவதில்லை. ஆகவே, சடவாதச் சார்பில் கூறப்படும் விளக்கம் யுத்திவாதத்துக்குப் பொருந்தாது. தத்துவங்களனைத்தையும் ஆராய்ந்து பாகுபடுத்திப் பார்க்குங்கால், அவை யாவும் இந்த இரு பகுப்புகளுக்குள் அடங்கிவிடும். ஆகவே, இங்கும் அதிக சிக்கலான முறையில் அதி நுட்பமான தத்துவ சாத்திரத்துக்குப் பொருத்தமான வடிவில் நாம் தூய்மையும் விடுதலையும் பற்றிய அதே பிரச்சினைக்கே திரும்பவும் வந்து விடுகிறோம். ஒரு சாரார் முதலாவது நிலை மயக்க அறிவென்றும், மற்றொரு சாரார் இரண்டாவது நிலையே பிரமைக்கு உள்ளானதென்றும் பகலார். நாமோ, இரண்டாவது கட்சியிலேயே நமது கருத்தினைச் செலுத்துவோம்: நமது பந்தம் மாயையென்றே எண்ணி வருவோம்.

“நாம் தளையுறவில்லை; நாம் இப்பொழுதே சுதந்தரர்களே,” என்பதுதான் வேதாந்தத்தின் முடிவாகும். அம்மட்டோடு நில்லாது, நாம் கட்டுப்பட்டவர்களெனக் கூறுவதோ நினைப்பதோ, அபாயகரமானது. அது தவறு. அது தன்னைத் தானே மயக்கத்துக்குள்ளாக்கிக் கொள்வதேயாகும். நீங்கள் எப்போது, “நான் கட்டுப்பட்டவன்; நான் வலியற்றவன், நான் துணையற்றவன்,” என்று சொல்லுகிறீர்களோ, அப்போதே நீங்கள் உங்களுக்கு இன்னுமொரு விலங்கை மாட்டிக் கொண்டவர்களாகிறீர்கள்; நீங்கள் அவ்வாறு மொழியாதீர்கள்; நினைக்கவும் நினையாதீர்கள். இரவுபகலாக “சிவோஹம்” (நான் அப்பேரின்பப் பொருளே) என்று ஓதிக் கொண்டு காட்டில் இருந்த ஒருவரைக் குறித்து நான் கேள்வியுற்றுள்ளேன். ஒரு நாள் ஒரு புலி அவர் மீது பாய்ந்து அவரைக் கொல்ல இழுத்துச் சென்றது. ஆற்றின் அக்கரையிலிருந்தவர் அதனைக் கண்டதும், ‘சிவோஹம்’ என்று சொல்லும் ஒலியும் புலியின் வாயில் அகப்பட்டவர் தொண்டையினின்றும் வெளிவருமளவும் கேட்டுக்கொண்டிருந்தனர். இத்தகையோர் பலருளர். தம்மைத் துண்டு துண்டாக அறுக்கும் வரை தம் பகைவர்களை வாழ்த்திச் சென்றவரும் இருந்திருக்கின்றனர். “நான் அவனே; அவன் நானே; நீயும் அவனே; நான் தூயன்; பூரணன். என் பகைவர்களும் அத்தகையவர்களே. நீயும் அவனே; நானும் அவனே.” இதுதான் வலிமையின் நிலை.

அப்படியிருந்தும், துவைதிகளின் மதத்தில் பெரிய, அற்புத மான விஷயங்கள் உள்ளன ; பிரகிருதிக்கு புறம்பான நாம் வணங்கி பத்தி செலுத்தும் உருவமைந்த பரம் பொருளின் கருத்து வியக்கத்தக்கது. சில நேரங்களில் இக்கருத்து ஆறுதல் அளிக்கக் கூடியதாகவும் உள்ளது. வேதாந்தம், அவ்வாறுதலை போதைப்பொருளின் பயனாக விளைந்ததனைப் போன்றதேயன்றி இயல்பானதல்ல,'' என்று கூறுகின்றது. இறுதியில் அது பலவீனத்தையே அளிக்கின்றது. இவ் வுலகம் எக்காலத்தையும்விட இக்காலத்தே இன்றியமையாத தாக வேண்டுவது பெருவலிமையே. வேதாந்தம், 'இவ்வுலகி லுள்ள துன்பங்கள் யாவும் வலிவின்மையே காரணமாகக் கொண்டுள்ளன,' என்று கூறுகிறது. நாம் வலி குன்றியிருப் பதனாலேயே பொய்சொல்லுகிறோம் ; திருடுகிறோம் ; கொலை செய்கிறோம் ; இன்னும் பல குற்றங்கள் இயற்றுகிறோம். நாம் வலியற்றிருப்பதனாலேயே துன்புறுகிறோம். வலியின்மை யாலேயே நாம் சாகவும் சாகிறோம். நம்மை வலிகெடுக்க யாதொன்றும் இல்லாதபோது சாவுமுல்லை ; அவலமுமில்லை. பிரமையினால் நாம் துன்புறுகிறோம். மோகத்தை விட்டொழிக ; எல்லாம் பறந்துபோம். இது மிகவும் தெளிந்த விஷயம் ; உண்மையிலேயே எளிய செய்தி ; தத்துவ ஆராய்ச்சிகள் பலவும் நிகழ்த்தி மகத்தான மனப்பயிற்சி பெற்று இவ்வுலகிலுள்ள மிக எளியதான சமயக் கருத்தைப் பெறுகின்றோம்.

எல்லாவற்றினும் எளிய வடிவில் மெய்யினைத் தெளியக் கூறுவது அத்துவைத வேதாந்தமே. இந்தியாவிலும் பிற நாடுகளிலும் துவைத மதத்தைப் போதித்து வந்தது ஒரு பெருந்தவறு ; ஏனெனில், மக்கள் அறுதியாயுள்ள தத்துவங் களை அறிய நாடாது, மிகச் சிக்கலான முறையினையே எண்ணி வந்தார்கள். பலருக்கு இம்மகத்தான யுத்திவாதத் தைப் பொருத்த சித்தாந்தங்கள் அச்சுறுத்துவனவாக அமைந்திருந்தன. ஆகையினால், அவர்கள் இவை முழு உலகினுக்கும் இயையாவென எண்ணி வந்தார்கள். இவை அன்றாட வாழ்க்கை முறைக்கு ஒவ்வாதன ; இத் தத்துவத் தை ஒரு வியாஜமாக வைத்துக்கொண்டு உலகில் வாழ்க்கை முறை கட்டுப்பாடற்றுப் போமென அவர்கள் நினைத்தார்கள்.

ஆனால், உலகுக்கு அத்துவைதம் போதிக்கப் படுவதனால் அத்தகைய ஒழுக்கக்கேடோ, வலியின்மையோ நேருமென்பதை நான் நம்பமாட்டேன். இதற்கு மாறாக, அது ஒன்றே தக்க மாமருந்தென நான் நம்புகிறேன். இது உண்மையாய் இருக்குமானால், உயிரூட்டும் நீரோட்டம் அண்மையில் இருக்கும்போது சாக்கடை நீரை ஏன் பருகுதல் வேண்டும்? இது, அவை முற்றும் தூயனவென்பது—உண்மையாய் இருக்குமானால், இதனை ஏன் இக்கணமே உலகம் முழுதுக்கும் அறிவுறுத்தக் கூடாது? மனிதனாய்ப் பிறந்த ஒவ்வொருவனுக்கும் அவன் பாவியோ, முனிவரனோ, ஆணோ, பெண்ணோ, குழந்தையோ, அரியாதனத்தே அமரும் அரசனோ தெருக் கூட்டும் தோட்டியோ—எவனுக்குமே ஏன் இதனைப் பேரிடிமுழக்கம் போல வலியுறுத்திக் கற்பிக்கக்கூடாது?

இப்போது இது மிகவும் பெரிய, அருஞ் செயலாகத் தோன்றுகிறது. இது பலரையும் மிகவும் திடுக்குறச் செய்யும் வினையாகத் தோன்றலாம்; ஆனால் அதன் காரணம் குருட்டு நம்பிக்கையே; வேறொன்றுமன்று. கண்ட பண்டங்கள் யாவற்றினையும், செரிக்காத பொருள்களையெல்லாம்—உணவாக உட்கொள்ளின், அல்லது பட்டினி கிடக்கின், நாம் நல்ல உணவு கொள்ளவும் வலிகுன்றியவர்களாகி விடுவோம். நாம் நமது இளமை தொட்டே வலிமையை இழக்கச் செய்யும் மொழிகளையே கேட்டு வந்துள்ளோம். மக்கள், தாங்கள் பேய் பிசாசுகளை நம்புவதில்லை என்று பறையறைவதை நீங்கள் செவி மடுக்கிறீர்கள்: அதே நேரத்தில் இருட்டில் செல்லும்போது நடுக்குறாதவர் ஒரு சிலரே. இது குருட்டு நம்பிக்கையேயன்றி வேறு யாது? சமய சம்பந்தமான மூடக்கொள்கைகள் அனைத்தும் இத்தகையனவே. இந்நாட்டில், பேய் என்பது இல்லை என்று நான் கூறுவேனானால், சமயமே கெட்டுப்போய் விட்டதென்று எண்ணக்கூடிய மக்களே உள்ளார்கள். பேயினை அகத்தே கொள்ளாத ஒரு மதம் எப்படி இருக்கக்கூடும்? நாம் மற்றொருவரால் ஆளப்படாமலிருப்பின் மதம் இருப்பதெவ்வாறு? நாம் அதற்குப் பழக்கப்பட்டு விட்டதால், நாம் அவ்வாறே நடத்தப்பட விரும்புகிறோம். நாம் எவராவது கண்டிக்கப் பட்டவராக உணர்ந்தாலன்றி, சுகம் அடைந்தவர்களாக

இருப்பதில்லை. இதுவும் மூட நம்பிக்கையே! ஆனால் இது எத்துணை பயங்கரமானதாக இப்போது தோன்றினாலும், நாம் ஒவ்வொருவரும் முன்கொண்டிருந்த குருட்டு நம்பிக்கைகளால் மூடப்பட்ட தூயதான, என்றுமுள்ள ஆன்மாவைப் பற்றி நினைக்கும் போது, 'நான் சுதந்தரன்; எப்போதும் சுதந்தரனாகவே விளங்கி வந்துள்ளேன், அங்ஙனமே இருப்பேன்' என்று உவகை பொங்க, உண்மையுடன், உரத்துடன் திரும்பத் திரும்பக் கூறுங்கால், நாம் முன்பு கொண்டிருந்த மூட நம்பிக்கையைக் குறித்துப் புன்முறுவல் கொள்வோம். இந்த அத்துவித ஞானம் வேதாந்தத்தினின்றே தோன்றும். இந்த ஒரு கருத்தே நிலவி நிற்கவேண்டும். வேதங்கள் நாளையே அழிந்து போகலாம். இந்தக் கருத்து முதலில் ஹிப்ருக்களிடம் தோன்றியதோ, அல்லது வடதுருவப் பிரதேசங்களில் தோன்றியதோ, அது குறித்து எவருக்கும் கவலையில்லை. ஏனெனில் இதுவே உண்மை; மெய்ப்பொருளுக்கு அழிவில்லை. வாய்மையே தான் ஒரு தனி மனிதனுக்கோ ஒரு நாட்டினருக்கோ சொந்தமானதன்றென்று போதிக்கின்றது. விலங்குகளோ, கடவுளரோ, மாந்தர்களோ—எல்லாரும் இவ்வுண்மையைப் பெறத் தகுதியுள்ளவர்களே. அவர்கள் இதனை ஏற்றுக்கொள்ளட்டும். வாழ்வை ஏன் துன்புற்றதாக்கிக் கொள்ளவேண்டும்? மாந்தர்களை ஏன் கண்டபடி எல்லா வகையான மூட நம்பிக்கைகளுக்கும் இடமாகுமாறு செய்யவேண்டும்? இருபதுபேர் மூட நம்பிக்கைகளை விட்டுவிட இசைந்தால், நான் பதினாயிரம் முறையும் என் உயிரைவிட முற்படுவேன். இந்நாட்டில் மட்டுமல்லாது, இது பிறந்து வந்த நாட்டிலுமே இவ்வுண்மையினை உரைக்கும் போது மக்கள் அலறுகின்றார்கள். அவர்கள், "இக் கருத்துத் துறவிகளுக்கே உரியது; உலக வாழ்க்கையினைத் துறந்து காட்டில் வாழ்பவர்க்கே உரியது. ஆனால் நம் போன்ற எளிய குடும்பத்தவர்களுக்கு ஒரு வகையான அச்சம், ஒரு வகைச் சடங்குகள் இருத்தல் இன்றியமையாதது" என்று கூறிக்கொண்டே போவார்கள்.

துவைத ஆட்சிக்காலம் மிக நெடிதாகி, போதும் போதுமென்று சொல்லுமளவிற்கு வந்து விட்டது. அதன் பயன் இதுவே; நாம் ஏன் புதிதான ஒன்றை ஆராய்ந்து

பார்க்கக் கூடாது? எல்லா உள்ளங்களும் அத்துவைதக் கொள்கையினை ஏற்றுக்கொள்ளப் பல ஊழிகள் பிடிக்கலாம். ஆனால் நாம் ஏன் இப்போதே தொடங்கக்கூடாது? நாம் அதனை நம் வாழ்நாளில் இருபது பேருக்கு உரைப்போமானால், நாம் பெரும்பணி ஆற்றியவர்களாவோம்.

இதற்கு எதிரான ஒரு கருத்துமுண்டு: " நான் தூயவன்; நான் புனிதப்பேறு பெற்றுள்ளவன் " என்றெல்லாம் சொல்லிக்கொள்வது மிகவும் எளிதே. ஆனால், அதனை நான் எனது வாழ்க்கையில் செயலளவில் செய்து காட்ட இயல்வதில்லை. இது உண்மையே. எப்போதுமே உயர் குறிக்கோள் கடினமானது. பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் தன் தலைக்கு மேலே நெடுந்தொலைவில் உள்ள விசும்பினைக் காண்கின்றது; அச்சேய்மையினால் மட்டும் நாம் விண்ணில் நோக்குவதை நிறுத்தி விடுவது தகுமா? மூடக் கொள்கைகளை ஆதரிப்பதனால் காரியம் சீராகுமா? நமக்கு நல்லமிர்தம் கிட்டவில்லை என்ற காரணத்தினால் நஞ்சினைப் பருகலாமா? அதனால் சீரமைப்பு ஏற்பட்டு விடுமா? நாம் உடனடியாக உண்மைத் தத்துவத்தைச் கண்டுகொள்ள இயலவில்லையெனின், அதற்காக நாம் இருளில் புகுந்து கோழைத் தனத்துக்கும் இடம் கொடுத்துவிடலாமா?

பல முகப்பட்ட துவைதக் கொள்கைகளுக்கு நான் தடை கூறவில்லை. எனக்கு அவற்றில் பலவும் மிகவும் பொருத்தமுள்ளனவே; ஆனால், கோழைத்தனத்தைப் பெருக்கும் ஒவ்வோர் அறிவுரையையும் நான் எதிர்க்கின்றேன். நான் ஒவ்வொரு ஆடவனையும் பெண்ணையும் குழந்தையையும்—அவரவர் ஆன்மப் பயிற்சி, உடற்பயிற்சி, உள்ளப் பயிற்சி கொள்ளும்போது, 'நீங்கள் வலியுற்றவர்களாய்த் திகழ்கின்றீர்களா? நீங்கள் உங்களது வலிமையை உணர்கின்றீர்களா?' என்று வினவுகிறேன். ஏனெனில், உண்மை ஒன்றே வலு அளிப்பது. சத்தியமே வாழ்வு தருவது. மெய்ம்மையை நோக்கிச் செல்லுதலன்றி மற்ற எதுவும் நமக்கு ஆற்றல் அளிப்பதில்லை; அவ் வலிமையினை நாம் அடையப் பெற்றாலன்றி, சத்தான பொருளை எய்துதல் இயலாது. ஆகவே, எந்தத் தத்துவ ஒழுங்கினால் நாம் மனத்திண்மையை இழக்கின்றோமோ, நம்மை எது ஒரு மூலையில்

சோர்ந்து நிற்கும்படி செய்கின்றதோ, எது இயங்கக் கூடாத எவ்வகையான இச்சைகளுக்கும் இடமளிக்கின்றதோ, மூட நம்பிக்கைகளை நாடுகின்றதோ அதனை நான் வெறுக்கிறேன் : ஏனெனில், அது இன்னலை விளைவிக்கக் கூடியது என்ற காரணத்தினால். அத்தகைய வழிகள் நன்மை யளிப்பதற்கு மாருகச் சிந்தை நோயை உண்டு பண்ணி மனத்தை வலியிழக்கச் செய்து நாளடைவில் உண்மையினை வரவேற்கவும் அதன்வழி யொழுகவும் ஆற்றலின்றிப் போமாறு செய்கின்றன. ஆகவே, வலிமை யொன்றே தான் திண்மையாக வேண்டப்படுவது. உலகத்தின் நோய்க்குப் பேராற்றலே மருந்து. வலியராலும் செல்வம் படைத்தோராலும் வாட்டப்படும் போது எளியவனுக்கு வேண்டும் மருந்து வலிமையொன்றே. அறிஞர்களால் ஆட்சி செலுத்தப்பட்ட போது எளியோருக்கு உதவும் மருந்து அவ் வலிமையே. அதுவே பாவம் புரிந்தோர்களை வேறு பாவிகள் கொடுமைப் படுத்தும் போது அவசியம் வேண்டப்படும் மருந்தாகும். இத்தகைய வன்மையளிப்பது அத்துவைதக் கொள்கையே. நம்மீது பொறுப்பு சுமத்தப் படுதலே நம்மை நமது முழுவலிமையுடனும் முழுத்திறனுடனும் வினை யாற்றத் தூண்டுகிறது. உங்களுக்குள் ஒவ்வொருவரையும் நான் அறை கூவி அழைக்கின்றேன். ஒருசிறு குழந்தையை உங்கள் கையில் நான் கொடுப்பேனுனல், நீங்கள் எவ்வாறு நடந்து கொள்வீர்கள் ? அக்கணத்தே உங்களது வாழ்க்கை முறையே முற்றிலும் மாறுபாடு அடைந்துவிடும். நீங்கள் யாராய் இருந்தாலும் சரி ; அந் நேரத்துக்கேனும் உங்கள் சுயநலத்தைத் துறந்தேயாக வேண்டும். உங்களுக்குப் பொறுப்பளிக்கப் பட்டதுமே உங்கள் குற்ற கருத்துகள் யாவும் மறைந்தே போம். உங்கள் குணமே மாறுதலடைந்து விடும். ஆகவே, முழுப் பொறுப்பும் நம்மீது விழும் போது நாம் நமது ஆற்றலின் உச்ச நிலையை அடைந்து விடுவோம். அப்போது நாம் வேருெருவனைத் துணைதேடி அலைய மாட்டோம் ; ஒரு பேயின் மீது வீண்பழி சுமத்த மாட்டோம் ; நமது சுமையைத் தாங்கிக் கொள்ள உருவமைந்த ஒரு கடவுளரும் இரார் ; ஆகவே, பொறுப்பு முழுதும் நம்மீதே உள்ள போது நாம் நமது செயலின் உயர் நிலையினை எய்தி

விடுவோம். நானே விதிவசத்துக்குப் பொறுப்பாளியாவேன். என் நலனுக்கு நானே உத்தரவாதி யாவேன்; எனது கேட்டுக்கும் நானே பொறுப்பாளி யாவேன். நான் தூய்மை படைத்த புனிதனுன அந்த ஒருவனே. இதனை மறுக்கும் எண்ணம் ஒவ்வொன்றினையும் நாம் அகற்றி விடவேண்டும். எனக்கு இறுதியோ அச்சமோ இல்லை; எனக்குச் சாதியோ வகுப்புச் சார்போ இல்லை. எனக்குத் தாய் தந்தையர் இல்லை; பிறப்பில்லை; நட்பும் பகையும் இல்லை; ஏனெனில், நான் இருப்பு, பேரறிவு, பேரின்பப் பரம் பொருளே. நான் அப் பேரின்பப் பொருளே. என்னை அறமும் மறமும் கட்டுப் படுத்த மாட்டா; இன்ப துன்பங்கள் தளையிடா. யாத்திரை களும் நூல்களும் சடங்குகளும் என்னை ஒருபோதும் கட்டுப் படுத்தா. எனக்கு ஒருபோதும் பசிப் பிணியோ நீர்வேட்கை யோ இல்லை; இவ்வுடல் எனதன்று; நான் உடலுக்கு ஏற் படும் அழிவுக்கும் மடமைக்கும் ஆட்பட்டவனல்லேன். நான் சச்சிதானந்தப் பொருளே. நான் பேரின்பம் படைத்த அவ் வொருவனே. நான் அப்பரம் பொருளே.

இது ஒன்றே நமது வழிபாடாக இருத்தல் வேண்டு மென்று வேதாந்தம் கூறுகின்றது. நாம் தெய்விகம் படைத் தவர்களெனச் சொல்லிக் கொள்வதும் பிறருக்கு இயம்பு வதும் குறியைப் பெறுவதற்கான ஒரே வழி. இதனை உருப் போடுவதனுல் வலிமை வந்தடையும். முன்பு தயங்கியவன் பின்பு படிப்படியாக வலிமை மிகுவான். குரலும் தொனியில் சிறந்து, சத்தியம் நமது இதய பீடத்தில் அரசு வீற்றிருந்து ஆட்சி செலுத்தி நமது இரத்தக் குழாய்களில் பாய்ந்து நமது உடல் முழுதும் பரவிவரும். ஒளியின் சுடர் ஓங்க ஓங்க மயக்கம் தெளியும்; அறியாமையின் சுமைகள் ஒவ்வொன்ருக நழுவிவிடும். பின்னர் யாவும் மறைந்து பேரறிவுச் சுடராம் பரிதி தனது ஞானக் கதிர்க் கற்றைகளைப் பரப்பி வரும் காலம் ஒன்று வருவது திண்ணமே.

சுவாமி விவேகானந்தர்

பிரமாண்டம்

பேரண்டம்

(நியூயார்க்கில் 19—1—1896 ஆற்றிய சொற்பொழிவு.)

நம்மைச் சுற்றியுள்ள மலர்கள் வனப்புற்று விளங்குகின்றன. காலைக் கதிரோன் கவின் பெற்றுயருகிறான். பிரகிருதி முழுதுமே இனிய வண்ணத் தோற்றங்களோடு விளங்குகிறது. பிரபஞ்சம் முழுவதும் அழகுற மிளிர்கின்றது. மனிதன் தோன்றிய காலம் தொட்டே இத்தகைய எழில் அனைத்தினையும் பருகி வந்திருக்கிறான். மலைகள் மாட்சிமையுடன் தோன்றிப் பணிவும் அச்சமும் விளைக்கின்றன. பேராறுகள் பாய்ந்து உருண்டு ஓடிக் கடலிற் கலக்கின்றன. இவையும், திக்குத் தெரியாத பாலை வனங்கள், எல்லையற்ற பெருங்கடல், விண்மீன் விரியும் வானம் ஆகிய இவை யாவும் அச்சங் கலந்த பணிவை ஊட்டி, உயர்ந்த நிலையில் அழகுமிக விளங்குகின்றன. நாம் இயற்கையெனக் கூறும் புறப்பொருள்களின் ஈட்டம் பண்டுதொட்டே மனித உள்ளத்திற் படிந்து அதனை இயக்கி வந்துள்ளன. அதன் எதிர் வினையாகவே 'இவை யாவை? எங்கிருந்து தோன்றின?' என்ற வினாக்கள் பிறக்கின்றன. தொன்மை மிக்க வேதங்களின் பழைமையான பகுதியிலும் இதே கேள்வி எழுப்பப் பட்டிருப்பதை நாம் காண்கிறோம். "'அஸ்தி' என்னும் ஒன்று இராத போதும் 'நாஸ்தி' என்பதும் இராத போதும், இருள் இருளில் மறைந்திருந்த போதும் யார் இவ்வுலகினைத் தோற்றுவித்தவர்? எந்த வகையில்? இந்த மருமத்தை யாரே ஓர்வார்?" இதே கேள்வி இக்காலத்தும் கேட்கப்படுவதை நாம் அறிவோம். இதற்கு விடை காணப் பலகோடி முயற்சிகள் செய்யப் பட்டுள்ளன. இன்னும் கோடிக்கணக்கான தடவைகள் அது மறுமொழி காணவும் வேண்டும். ஒவ்வொரு முயற்சியும் வீணாயிற்றென்பது கருத்தன்று. ஒவ்வொரு விடையிலும் உண்மையின் ஒரு கூறு கண்டுரைக்கப்பட்டது. இவ்வுண்மை காலம் செல்லச் செல்லப் பெரிதும் வலுக்கின்றது. நான் பழங்காலத்து இந்திய தத்துவ ஞானிகள் கூறியவற்றைத் தொகுத்து, இக்கால விஞ்ஞானத்துக்கு ஏற்ப எடுத்துக்கூற முயல்வேன்.

மிகப் பழைய கேள்விகளிலேயே எழுந்த சில பிரச்சினைகளுக்கு முடிபுகள் ஏற்கெனவே மொழியப்பட்டுள்ளன. முதன் முதலில் உலகம் உருப்பெருத சமயத்தில், 'அஸ்தியுமில்லை, நாஸ்தியுமில்லை,' என்ற நிலையிலே இருந்து வந்தது. அப்போது இவ்வுலகம் தோன்றவில்லை. அப்போது நமது தாய்பூமி, அலைகடல்கள், மாமலைகள், பேராறுகள், பெருநகரங்கள், சிற்றூர்கள், மனித இனங்கள், விலங்குகள், செடி கொடிகள், பறவைகள், கோள்கள், விண்மீன்கள் ஆகிய எண்ணிக்கையிலாப் படைப்புகள் இருக்கவில்லை; இது உண்மைதானு? இம்முடிவின் வழிவகையை அறிய முயல்வோமாக:

மனிதன் தன்னைச் சுற்றி எதைக் காண்கிருன்? ஒரு சிறு கொடியை எடுத்துக்கொள்வோம். அவன் நிலத்தில் ஒரு விதையை ஊன்றுகிருன்; சற்றுப் பின்னர் ஒரு சிறு முளை வெளிப்படுவதைக் காண்கிருன். சிறிது சிறிதாக அது வளர்ந்து வந்து ஒரு மகத்தான மரம் ஆகிவிடுகின்றது. பிறகு அது அழிந்து, வித்தையே மிகுந்திருக்கிறது. ஒரு வட்டம் முடிந்து விடுகிறது. அது வித்தினின்றும் விளைந்து மரமாகி இறுதியில் வித்திலேயே ஒடுங்கிவிடுகின்றது. ஒரு பறவையை எடுத்துக்கொண்டால், அது ஒரு முட்டையினின்றும் தோன்றித் தனது வாழ்வை முடிப்பதற்கு முன்னர் வரவிருக்கும் புள்ளினங்களுக்கு ஆதாரமான முட்டைகளை இடுகின்றது. அதைப் போன்றதே விலங்கு, மனிதன் விஷயமும். இயற்கையிலுள்ள ஒவ்வொன்றும் குறிப்பிட்ட வித்துகளினின்ருே, தொடக்க நிலைகளினின்ருே சிற்சில நுண்ணிய வடிவங்களினின்ருே பிறந்து, தூயநிலையில் தோன்றி, சிறிது காலம் வளர்ந்து, பின்னர் மீண்டும் அந்நுண்ணிய நிலைக்கே திரும்பி இறுதியில் மறைந்துவிடுகின்றது. மின்னலிட்டு ஒளிரும் மழைத்துளியானது பெருங்கடலிலுள்ள நீர் ஆவியாக மாறி, காற்றில் நெடுந்தொலைவில் சென்று, விண்ணின்றும் மழைத்துளியாய்க் கீழே விழுகிறது. இது மறுபடியும் நீராவியாகவே மாறுகின்றது. இப்படியே தான் நம்மைச் சூழ்ந்துள்ள இயற்கைப் பொருள்கள் யாவற்றிலும் நிகழ்வது. மிகப்பெரிய மலைகளும் பேராறுகளாலும் பனியாறுகளாலும் தாக்குற்றுச் சுக்கு நூருகப் பொடியாக்கப்

பட்டு நுண்மணல்களின் நிலையை எய்திப் பெருங்கடலிற் கலந்து, வண்டலாகி, அடுக்கடுக்காய் இருந்து திண்மை பெற்றுப் பாறைகளாகி, மீண்டும் வருங்காலத்து மாமலை ஆகிவிடுகின்றன. மறுபடியும் அவை தகர்க்கப் பெற்றுப் பொடியாகி அதே வட்ட முறையில் தொடர்கின்றன. ஆகவே, மணலே மலையாகி மலையும் பின்னர் மணலேயாகி விடுகின்றது.

பிரகிருதி என்றும் ஒரே ஒழுங்கில் இயங்குவது உண்மையாயின், (மனிதரின் அனுபவம் இதுவரை இதை மறுத்ததில்லை) ஒருசிறு தூள் உண்டாகும் முறையிலேயே ஞாயிறுகளும், விண்மீன்களும், அண்டகோளங்களும் உண்டாகின்றன. இதுவே கண்கண்ட உண்மை என்பது உண்மையானல், சிற்றணுவின் அமைப்பிலேயே பேரண்டமும் அமைந்துள்ளதென்பது உண்மையானல், பிரபஞ்சம் முழுதும் ஒரே முறையிலேதான் செயற்படுகின்றது என்பது உண்மையானல், வேதங்களின் வாக்குப்படி "ஒரே களிமண் கட்டியை நாம் அறிந்துவிடின், அகில உலகின் களிமண்ணின் இயல்பினை நாம் முழுதும் அறிந்து விட்டவர்களாவோம்." ஒரு சிறு செடியின் உயிரை ஆராய்ந்து பார்க்குமிடத்து, அகில புவனத்தின் மர்மமும் நம்மால் நன்கு அறியப் பட்டதாகிவிடுகின்றது. ஒரு துகளின் இயற்கையை நாம் நன்கு உணரின் நமக்கு முழு அண்டத்தின் மருமமும் தெளிந்து விடுகின்றது. இம் முறையில் ஆராய்ந்து பார்க்கும்போது, ஒவ்வொரு விஷயத்துக்கும் முதலிலும் இறுதியிலும் பெரிதும் ஒற்றுமை இருப்பதனை நாம் காண்கிறோம். மலை மணலினின்றும் பிறந்து, அது மீண்டும் மணலாகவே மாறுகின்றது. ஆறு நீராவியினின்றும் தோன்றி மறுபடியும் அந்நிலைக்கே மீளுகின்றது; செடி வித்தினின்றும் தோன்றி வித்தையே கொடுக்கின்றது. மனிதவுடல் கருவிலிருந்து தோன்றி அச்சிற்றுயிர் நிலைக்கே திரும்புகின்றது. பிரமாண்டத்திலுள்ள உடுக்கணங்களும் கோள்களும் ஆதியில் 'அவ்யக்த'த்தினின்றே தோன்றின; மீண்டும் அதற்கே சென்றுகவேண்டும். இவற்றினின்றும் நாம் அறியத்தக்கது யாது? தூலமான வெளிப்பாடுகள் யாவும் காரியமும், நுண்ணிலை காரணமுமாம் என்பதே. அறிவு என்பது

காரண நிலைக்கு மீள்வதே என்பதை ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே, தத்துவ ஞானத்தின் பரம பிதாவான கபில முனிவர் நமக்கு விளக்கிக் காட்டியுள்ளார். இம்மேசை அழிந்தால் இது தனது காரணமான சிறு துகள்களும் நுண்ணிய மர அணுக்களுமாக மாறி விடுகிறது. அவற்றின் சேர்க்கையாலேயே மேசையெனும் வடிவம் உருவாகின்றது. ஒருவன் இறந்து பட்டால் அவன் தனக்கு உடலளிப்பதற்குக் காரணமாய் இருந்த பஞ்ச பூதங்களாக மாறி விடுகிறான். இம்மண்ணுலகு மறைந்தால் தனக்கு வடிவம் தந்த அப்பௌதிகப் பொருள்களுக்கே மீண்டுவிடுகின்றது. இதைத்தான் அழிவென்று—பண்டைய நிலைக்கு மீள்வதென்று—நாம் கூறுகிறோம். ஆகவே, காரணமும் காரியமும் ஒன்றே; வேறல்ல என்பதை நாம் கற்கிறோம். அது உருமாற்றமே. இந்தக் கண்ணாடி ஒரு பயனே. இதற்கு ஒரு காரணப் பொருள் உண்டு: அக்காரணம் படிகவடிவத்திலேயே உள்ளதாம். கண்ணாடிக்கு ஆன பொருளும் அதனை ஆக்குபவனது வேலைப்பாடும் சேர்ந்தே படிகமாகின்றது. இவ்விரண்டுமே சேர்ந்து 'ஆடி' என்ற பொருளை ஆக்குவதற்குக் காரணங்களாகின்றன. ஆக்குவோனிடத்திருந்த சத்தி கண்ணாடியில் ஒட்டும் ஆற்றலாக அமைந்து விட்டது. அஃதின்றேல், நுண்துகள் பறந்தே போம். கண்ணாடிப் பொருளும் அதில் உளது. கண்ணாடி என்பது இந்நுண்ணிய காரணங்களின் புதிய வடிவின் வெளிப்பாடே யாகும்; அதனை உடைத்தெறிந்தால், ஆதியில் இருந்த ஒட்டும் ஆற்றல் சிதைந்து போய், அது அதன் முதற் காரணத்திற்கே மீண்டு விடுகின்றது. கண்ணாடிப் பொடிகளும் புதிய வடிவங்கள் பெறும் வரை அப்படியேதான் இருக்கும்.

இவ்வாறு நாம் காரியத்தினின்றும் காரணம் வேறன்று என்பதனைக் காண்கிறோம். காரணத்தின் தூல வடிவமே காரியமாவது. நாம் செடிகள், விலங்குகள், மாந்தர்களெனக் கூறுவன யாவும் மேல் நோக்கிச் சென்றும் கீழ் நோக்கி இழிந்தும் எண்ணற்ற தடவை மேலும் கீழும் மாறி மாறிச் சென்றுவிடுவன என்பதனைக் காண்கிறோம். விதை மரத்தை உண்டாக்குகின்றது. மரமும் வித்தினை உண்டாக்குகின்றது. அவ்வித்து மற்றொரு மரத்தினுக்குக் காரணமா

கின்றது. இப்படியே மாறி மாறி ஒரு வட்ட வடிவம் நிகழ்ந்து வருகின்றது. இதற்கு ஒரு முடிவே இல்லை. நீர்த் துளிகள் மலைகளினின்றும் இறங்கிப் பெருங்கடலில் கலக் கின்றன; பின்னர் கடல் நீரினின்றும் ஆவியாகி மலை மீதே மழை வடிவில் விழுந்து கடலுக்கே மீள்கின்றன. இப்படியே ஏற்றமும் இறக்கமும் உண்டாகி ஒரு வட்ட வடிவ நிகழ்ச்சி விளைகின்றது. இப்படியே எல்லா உயிர்கள் விஷயத்திலும் நடக்கின்றது. இப்படியே நாம் கண்டு கேட்டு உற்று மனத் தினுல் எண்ணிவரும் எப்பொருளிலும் நிகழும். நமது அறிவின் எல்லைக்குட்பட்ட அனைத்துப் பொருள்களும் இந்த முறையிலேதான் செல்கின்றன. நாம் மூச்சுக்காற்றை உள்ளே வாங்கி வெளிச் செலுத்தும் வகையினையே இது ஒத்திருக்கின்றது. படைப்பிலுள்ள எதுவும் இவ்வுருவி லேயே விளங்குகிறது; ஓர் அலைமேலே எழுவதும் மற் ருென்று கீழே இறங்குவதும் போன்றே, மீண்டும் மீண்டும் இத்தொழில் நடந்து வருகின்றது. ஒவ்வோர் அலைக்குப் பின்னரும் ஒரு பள்ளமும், அதற்குப் பின்னர் ஓர் அலை யெழுச்சியும் உண்டாகின்றன. பிரபஞ்சம் ஒரு நீராகவே அமைந்திருப்பதனுல், இதே நியதியிலேதான் எதுவும் அமைந் திருத்தல் இயலும். பிரபஞ்சம் அதன் காரண நிலைவரை ஆராய்ந்தறியப்பட வேண்டும். திங்கள், கதிரவன், விண் மீன்கள், மண்ணகம், மனம், உடல், மற்றுமுள்ள புறப் பொருள்கள் யாவும் தம் ஆதி நுண்ணிலைக்கே மீளவேண் டும்; மறைதல் வேண்டும். அதாவது, உலக நடைக்கூற்றில் அவை நாசமுறவே வேண்டும். ஆனுல், அவை மிக நுண்ணிய வடிவில் தமது காரண நிலைகளில் ஒடுங்கி நிற்கும். இந்த சூக்கும நிலையினின்றே மறுமுறையும் அவை புதிய நிலங்களாகவும் தாரகைகளாகவும் வெளிப்படு கின்றன.

இந்த ஏற்ற இறக்கங்களைப் பற்றிய மற்ருெரு விஷய மும் உண்டு: விதை மரத்தினின்றும் வெளிப்படுகின்றது; ஆனுல், அது உடனடியாக வந்து விடுவதில்லை. ஓய்வுக்கான ஓர் இடைக்காலம் அமைகின்றது. அப்போது மிக நுட்ப மான, வெளிப்படாத செயல் உண்டு. ஆனுல், விதையானது மண்ணுக்குள்ளேயே சிறிது காலம் வினை புரிய வேண்டும்.

அது சிதைவுற்றுக் கீழ்நிலையினையெய்தி அதினின்றும் மறு பிறப்புப் போன்ற நிலையினைப் பெற்று விடுகின்றது. முதன் முதலில் பிரபஞ்சம் முழுதும் இதே போன்று ஒரு சிறிது காலம் வெளி உலகுக்குத் தோன்ருத மிக நுண்மையான ஒரு நிலையில் இயங்கவேண்டியுள்ளது. இதையே 'அவியக்தம்' அல்லது 'உருவற்ற நிலை' எனக் கூறுவர். இதனின்றே ஒரு புதுப் புடைப்பு ஏற்படுகிறது. பிரபஞ்சத்தின் தோற்றம், அது நுண்ணிலை பெறல், அந்நிலையில் சிறிது போழ்து தங்கி யிருத்தல், மறுமுறையும் அதினின்றும் வெளிப்படுதல் ஆகிய இத்தொகுதிக்கு வடமொழியில் 'கற்பம்' அல்லது 'யுகம்' என்பது பெயர். இனி இக்காலத்தில் ஒரு முக்கியமான பிரச்சினை எழுகின்றது. நுட்பமான வடிவங்கள் மெல்ல மெல்ல வளர்ந்து படிப்படியாகப் பருஉருவாக மாறுகின்றன. காரணமும் காரியமும் ஒன்றே என்றதை நாம் கண்டோம்; காரியம் காரணத்தின் மற்ருெரு வடிவமே என்பதனையும் நோக்கினேம். ஆகவே, இம்மாபேருலகு சூன்யத்தினின்றும் உண்டாகியிருத்தல் இயலாது. காரணப் பொருளின்றி ஒன்றும் உண்டாவதில்லை. காரணம் மற்ருேர் உருவத்தி லுள்ள காரியமேயாகும்.

இப்பிரபஞ்சம் எதினின்றும் உண்டாக்கப்பட்டுள்ளது? முன்னிருந்த நுண்ணிய பேருலகினின்றே. மனிதன் எதி னின்றும் உண்டாகியிருக்கின்ருன்? முன்னுள்ள நுண்ணிய நிலையிலிருந்தே. மரம் எதினின்றும் தோற்றம் எய்தியுள்ளது? வித்தினின்றே; முழு மரமும் அவ்வித்திலேயே அடங்கி யிருந்தது. அது வெளிப்பட்டுக் கட்புலனுகின்றது. ஆகவே, இப்பிரபஞ்சம் முழுவதும் நுண்ணிய நிலையிலிருந்த இதே பிரபஞ்சத்தினின்றே ஆக்கப்பட்டது. இப்போது இது வெளியே தோற்றுவிக்கப்பட்டுள்ளது; நுண்ணிய நிலைக்கே மீண்டும் போய்த் திரும்பவும் வெளிப்படும். நுண்ணிய வடி வங்கள் தோன்றித் தூலமாய் அவற்றின் வரம்பை எட்டிய தும், பின் சென்று மறுபடியும் நுண்ணிய நிலையை எய்தும். இவ்வாறு படிப்படியாக நுண்ணிய நிலையை நீங்கிப் பருப் பொருளாக மாறி வருதற்குத்தான் இக்காலத்தில் 'பரிணுமக் கொள்கை' என்னும் பெயர் வழங்குகிறது. இதில் பகுதி களின் வரிசைப்பாடு மாறியிருப்பதல்லாது முழுப்பொருள்

மாறுவதில்லை. இது முற்றும் உண்மையே. இதனையே நாம் வாழ்வில் காண்கின்றோம். இக்கொள்கையை உடையவர்களிடம் நாம் ஒரு போதும் பிழைகாண இயலாது. ஆனால், மற்றொரு விஷயத்தை நாம் அறிய வேண்டும். நாம் ஓர் அடி முன்னேறிச் செல்லவேண்டும். ஒவ்வொரு விரிதலுக்கும் முன்னர் ஓர் ஒடுங்கு நிலை இருந்திருக்க வேண்டும். மரத்துக்கு வித்தே ஆதாரம்; ஆனால், அந்த வித்துக்கு மற்றோர் மரமே ஆதியாய் இருந்திருக்க வேண்டும். விதை நுண்ணிய நிலை; மரம் அதன் மிக விரிந்து பரந்தநிலை. அதேபோன்று, நுண்ணிய பிரமாண்டத்தில் இந்த முழுப் பிரபஞ்சமும் ஒடுங்கி இருந்தது. பின்னர் மனிதனுப் வளர்ச்சி பெற்ற சிற்றுயிர், அது தன்னகத்தே வளர்ச்சிபெற்ற மனிதனைக் கொண்டிருந்தது. அது மனிதனின் ஒடுக்க நிலை. பின்னர் அது மனிதனின் தூல உடலாக மாறி, வளர்ச்சி பெற்றது. இது தெரிவானால், நமக்கும் பரிணாமக் கொள்கையினருக்கும் மாறுபாடு ஒன்றும் இராது. ஏனெனில், அவர்கள் தங்கள் அழிவுக் கொள்கையை விட்டு இப்பகுதியை ஒப்புக்கொண்டார்களாயின், அவர்களே இக்கொள்கையின் மிக மிகப் பெரிய ஆதரவாளர்களாகிவிடுவார்கள்.

சூனியத்தினின்றே யாதொன்றும் பிறக்க முடியாதென்பதனை இதிலிருந்து நாம் அறிகிறோம். எப்பொருளும் கால வரம்புவரை இருந்தே தீரும். அதன் போக்கு மட்டும் அலை வடிவங்களிலேதானிருக்கும்; அதாவது, ஓர் எழுச்சியும், அதனையடுத்து ஓர் பள்ளமும் மாறி மாறி ஏற்படும். பின் நோக்கிச் சென்று நுண்ணிய வடிவத்துக்குப் போயும், பின்னர் அவை மீண்டும் தூல வடிவிற்கு வந்தும் காட்சியளிக்கும். இந்த ஒடுக்க நிலையும் விரிவும் இயற்கை முழுவதிலும் நடந்து வருகின்றன. மிகத் தாழ்ந்த உயிர் வெளிப்பாட்டினின்று தொடங்கி, மிக உயர்வான, பரிபூரணமான மனித உருவம் வரையிலுள்ள விரிவுத் தொகை ஏதோ ஒன்றின் ஒடுக்கமாயிருந்தது. எதன் ஒடுக்கம்? ஒடுங்கியிருந்தது யாது? கடவுள். இந்தப் பரிணாமக் கொள்கையினர் 'கடவுளே அது', என்பது பிழை என்பர்; ஏனெனில், கடவுள் முற்றறிவுடையவர் என்று நாம் சொல்வோம். ஆனால், புத்தி என்பது வளர்ச்சி முறையில் பின்னரே

தோன்றுவதாகும். விவேகமானது மனிதனிலும் உயர்ந்த விலங்குகளிலுமே விளங்குவது; ஆனால், இந்த விவேகம் இவ்வுலகில் தோன்றுவதற்குள் பலகோடி ஆண்டுகள் கடந்துவிட்டன. பரிணமக்கொள்கையினரின் இந்த மறுப்பு ஒப்புக்கொள்ளத்தக்கதன்று. அதனை நாம் பின்னர் நமது கொள்கையை ஒப்பிட்டுக் காண்போம். மரம் வித்தினின்றும் தோன்றி அதற்கே மீள்கின்றது. தொடக்கமும் முடிவும் ஒன்றே.

பூமி தன் காரணத்தினின்றும் பிறந்து, அதற்கே மீள்கின்றது. ஆதியை அறிந்தால், அந்தத்தையும் அறியலாமென்பதனை நாம் அறிவோம். அதேபோல், இறுதியை அறிந்துவிட்டால் முதலையும் அறிந்தவர்களாவோம். அப்படியானால், சிற்றுயிர் முதல் பூரண மனிதன் வரை ஒரே உயிரே. ஆகவே, பூரண மனிதன் சிற்றுயிரில் அடங்கியுள்ளான். அது அவனது ஒடுக்க நிலை. நாம் இதனை வெளிப்படையாகக் காண இயலாதெனினும், பூரண ஞானம் தன்னைச் சுற்றியிருந்த விரியினின்றும் தன்னைப் பிரித்துக்கொண்டு பூரண மனிதனில் தோற்றமளிக்கின்றது. இதனைக் கணக்கு முறையில் மெய்ப்பிக்கலாம். சக்தி அளவின் மாற்ற மின்மை நியதி உண்மையானால், ஒரு பொறியில் நாம் வைக்கும் சத்தியைப் பொருத்தேதான் அதினின்று கிடைக்கும் சத்தியும். நாம் பொறியில் கரி, தண்ணீர் என்ற வகையில் அமைக்கும் சத்தியே அதினின்றும் நமக்கு மாறிய உருவில் கிட்டுகின்றது. நான் இப்போது ஆற்றும் வினை நான் என்னுள் வாயு, உணவு, பிறபொருள்களின் உருவில் அதில் செலுத்தும் அளவிற்குத்தான் இருக்கும். அதெல்லாம் மாறுபாடு, தோற்றம் என்றவற்றைப் பொருத்துதான் இருக்கும். அகில உலகப் பொருளாதாரத் தத்துவத்தில் ஒரு துகளையோ, சத்தியின் சிறிய அளவையோ, கூட்டவோ குறைக்கவோ ஒண்ணாது. அப்படியானால், அந்த அறிவு என்பது யாது? சிற்றுயிரில் அது இருந்திராவிடின், திடீரென வந்திருக்க வேண்டும்; சூனியத்தினின்றே வந்திருத்தல் வேண்டும். தருக்க முறைக்குப் பொருந்தாது. ஆகவே, முற்றுமுணர்ந்த ஞானி, சுதந்தர மனிதன், தெய்வப் பிறப்புள்ளவன், பூரண மனிதன், இயற்கையின் நியதியைக் கடந்து மேல்நிலம்

சென்றவன் இனி இவ்விரிவுத் தொடரைப் பின்பற்ற வேண்டியதில்லை. இவனே கிறித்தவர்களால் கிறித்து மனிதனென்றும், பௌத்தர்களால் புத்த மனிதனென்றும், யோகிகளால் முக்தன் என்றும் கூறப்படுவன். இவனும் பரிணம வளர்ச்சியின் சிற்றுயிர்க் கோடியில் மறைந்து இருந்தவனே.

இந்த முறையில் பார்க்குங்கால், அறிவே பிரபஞ்சத்தின் காரணமாக, படைப்பை ஆளுவதாக விளங்கவேண்டும். மனிதனுக்கு இப்பிரபஞ்சம் பற்றிய உயர் கருத்து யாது? அது புத்தியே; பகுதிகள் இணங்கியிருக்குமாறு செய்தல், புத்தியை வெளிக்கொணர்தல், பழங்காலத்து நோக்கக் கொள்கை இதை விளக்கவே முயன்றது. ஆதியில் விவேகம் இருந்தது. அந்த அறிவு ஒடுங்கி முடிவாக வளர்ச்சி பெற்றது. உலகில் இப்போதுள்ள மொத்த ஞானம் ஆதியில் ஒடுங்கியிருந்த விவேகத்தின் அளவேயாகும். இதனையே நாம் கடவுளெனக் கூறுகின்றோம். வேறு எப்பெயரிட்டுக் கூறினும் இந்த எல்லையற்ற முழு ஞானமே ஆதியிலும் இருந்ததென்பது திண்ணம். இந்தப் பிரபஞ்ச முற்றறிவு ஒடுக்க நிலை பெறுகின்றது. அதுவே தோற்றமாகி வளர்ந்து பூரண மனிதன் ஆகின்றது; ஏசுநாதரோ, புத்தரோ ஆகி விடுகின்றது. பின்பு அது தனது பூர்வ நிலையான ஆதாரத்துக்கே மீள்கின்றது. அதனாலேதான் எல்லா வேதங்களும், "அவரிடமே நாம் உறைகின்றோம்; ஒழுகி வருகின்றோம்; நமது உயிரையே வைத்துள்ளோம்," என்று அறைகின்றன. அதனாலேதான் அவை, "நாம் கடவுளிடத்தினின்றும் பிறக்கின்றோம்; அவரிடமே செல்கின்றோம்," என்றும் சாற்றுகின்றன. சமயச் சொற்களினால் அஞ்ச வேண்டா. அச்சொற்களுக்கு அஞ்சுபவன் ஒரு காலும் தத்துவ ஞானியாகான். இந்த முழு ஞானத் தொகையையே மதக்குரவர்கள் கடவுளெனக் கூறுகின்றார்கள்.

"நீங்கள் ஏன் 'கடவுள்' என்ற இப்பழைய பெயரையே பயன்படுத்துகிறீர்கள்?" என்று பன்முறையும் மக்கள் என்னை வினவியுள்ளார்கள். ஏனெனில், அதுவே இக்காரியத்துக்கு மிகச் சிறந்த சொல். அதின் மிக்க சொல் கிட்டமாட்டாது. ஏனெனில், மக்களினத்தின் ஆசாபாசங்கள், அவர்களுடைய முழு விருப்பங்கள், முழுச் சுகம் இவை யாவும் அச்

சொல்லிலேயே குவிக்கப் பெற்றுள்ளன. அச்சொல்லை இப்போது மாற்ற இயலாது. அத்தகைய சொற்கள் அவற்றின் முழுப் பொருளையும் அறிந்து பருகிய சான்றோர் களால் புதிதாகக் கண்டுபிடித்துக் கையாளப்பட்டன. ஆனால், அவை மக்களால் வழங்கப்படும் பழக்கம் ஏற்பட்ட பின்னர், பாமரர் அவற்றை ஏற்கின்றனர். அதன் பயனாக அவற்றின் மாண்பும் உயிர்க்களையும் மறைந்து போகின்றன. 'கடவுள்' என்ற அச்சொல் மிகப் பழைமையான காலந் தொட்டே பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது; உலகப்பேரறி வென்ற கருத்தும் அத்துடன் சார்ந்த மிகப்பெரிய புனிதக் கருத்துகளும் கூடவே மனத்திற் பதிந்து விடுகின்றன. அறிவிலி ஒருவன் அது தக்கதன்று என்று உரைப்பதால் அம்மொழியை நாம் புறக்கணிக்கலாமா? வேறொருவன் முன்வந்து, "எனது மாற்றத்தையே ஏற்றுக்கொள்," என் பான். மூன்றும் மனிதன், "எனது சொல்லையே வழங்குவது நலம்," என்பான். ஆகவே, நலன்கெட்ட பிற சொற்களுக்கு ஒரு முடிவே இல்லை. பழைய சொல்லையே பயன்படுத்தி வாருங்கள்; இடுக்கண் இல்லை. ஆனால், அதனைத் தக்க உண்மையான பொருளில், மாசற்ற முறையில், குருட்டு நம் பிக்கை நீங்கிய வகையில் வழங்கி, அப்பெரிய தொன்மை மிக்க சொல்லின் முழுக் கருத்தை முற்றும் கண்டு கொள் ளுங்கள். அவ்வாறு கண்டு அநுபவத்திற்குக் கொண்டு வாருங்கள். தொடர்பின் நியதி பற்றிய சத்தியை நன்கறிந் தால், உங்களுக்கு இம்மொழிகள் பல மகிமையுற்ற, வன்மை வாய்ந்த கருத்துகளோடு இணைந்துள்ளன என்பது தோன்றும். அவை பல்லாயிரக்கணக்கான மனித இனத்த வரால் போற்றப் பெற்று மிக உயர்ந்த, அறிவோடு கூடிய, விரும்பத்தக்க, மனித இயல்பின் மேன்மை மிக்க, யாவற்று டனும் இணைந்தவற்றுடன் கொண்டு போற்றப் பட்டிருப் பவை. மேலும், அவை இத்தொடர்புகளை நன்கு நினைவூட்டு கின்றன. அவற்றை விட்டுவிட ஒண்ணாது. இத்தனையை யும் நான் உங்களிடம் நவில்வதால் கடவுளே உலகைப் படைத்தார் என்ற மொழிகளைப் பயன்படுத்தினால் யாதொரு பொருளும் உங்களுக்கு எட்டாது. ஆனால், இவ்வாறு

திண்டாடிய பின்னர் அந்தப் பழமையான பரம்பொருளுக்கே மீண்டு வருகிறோம்.

உலகச் சத்திகளின் பல்வேறு வடிவங்களான புறப் பொருள், அகநினைவுகள், ஆற்றல், அறிவு முதலியன யாவும், பூரண ஞானத்தின், பரம் பொருளின் வெளிப் பாடுகளே என்று அறிகிறோம். நீங்கள் காணும், கேட்டும் உணரும் ஒவ்வொன்றும் பரமனது படைப்பே. இன்னும் திட்டவட்டமாகச் சாற்ற வேணடுமாயின், அவை அப் பரமனே; அவனே ஞாயிறாக ஒளிர்கின்றான்; அவனே விண் மீனும், நிலமகளும்; அவனே மாகடலும். அவன் இனிய சாரல் ஆகின்றான்; அவனே நாம் உட்கொள்ளும் பிராண வாயுவும். அவனே உடலில் சத்தியாய் இயங்கி வருபவன். வாக்கும் அவனே; பேசுபவனும் அவனே; இங்குள்ள அவை யோரும் அவனே; நான் நிற்கும் இம் மேடையும் அவனே; உங்களை நான் காண உதவும் ஒளியும் அவனே. எல்லாம் அவனே. அவனே பிரபஞ்சத்தின் உபாதான காரணமும் நிமித்த காரணமும். அவனே சிற்றுயிர்க் கூண்டில் ஒடுங்கி நின்று, பின்பு வளர்ந்து, மறுகோடியில் தெய்வ மாகவும் பொலிகின்றான். அவனே கீழே இறங்கி சிற்றணு வாகித் தனது இயல்பை மெல்ல மெல்ல விரித்து தானேயாகி விடுகின்றனன். இது தான் பிரபஞ்சத்தின் மருமம். "நீயே ஆண்; நீயே பெண். நீயே இளமை யுடன் ஆண்மை தோன்றச் செருக்குற்று நடமாடுபவன். நீயேதான் தளர்ந்து தடுமாறிக் கோல் ஊன்றிச் செல்லும் முதியவனும். நீயே எப்பொருளிலுமுள்ளவன்; நீயே எப் பொருளும், எனது ஆண்டவனே," என்பதே மனித மூளைக்குத் திருத்தியளிக்கும் உலகத் தத்துவ ஞானத்தின் தீர்ந்த முடிவு. சுருங்கச் சொல்லும்போது நாம் அவனிட மிருந்தே பிறக்கிறோம்; அவனிலே உறைகின்றோம்; அவ னிடமே மீளுகின்றோம்.

சிற்றண்டம்

(1896-ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில், 26-ஆம் நாள் நியூயார்க்கு மாநகரில் ஆற்றிய சொற்பொழிவு.)

உடற் சிறைக்கப்பால் யாது உளது என்றறியும் ஆவலை மனித மனம் கொள்வது இயல்பே. இதற்கு இந்திரியங்களே தக்க சாதனங்கள். கண் காணுதல் வேண்டும், செவி ஒலிமடுத்தல் வேண்டும். மற்றைய புலன்களும் பொறிகள் வாயிலாகப் புறத்தே யுள்ளவற்றை உணர்தல் வேண்டும். இயற்கையின் அழகும் மாண்பும் முதலில் மனத்தைத் தம் வயப்படுத்துதல் இயல்பானது. மாந்தர் மனத்தில் முதன் முதல் முகிழ்த்த கேள்விகள் புறவுலகில் காண்பன பற்றியவையே. மண், விண், உடுக்கணங்கள், கோள்கள், ஆறுகள், மலைகள், கடல்கள் ஆகிய இவற்றின் மூலம் தத்துவத்தினையறிய அறிஞர் விழைந்தனர். பண்டைச் சமயங்கள் யாவும் மனமானது புறப்பொருள்களிலேயே பொருந்தி வருந்துவதைச் சுட்டுகின்றன. நாம் இக்காலத்தே இயற்கைச் சத்திகளென வழங்கும் புறப்பொருள்களுக்கெல்லாம் தனித் தனி தேவதையைப் படைத்து ஆற்றுக்கடவுள், விண்ணின் இறை, முகில் தலைவன், மழைத்தேவன் என்றும், வான நாட்டவரென்றும், தேவதூதரென்றும், சங்கற்ப சத்திகளென்றும் நம்முன்னோர்களால் மாற்றியமைக்கப் பெற்றனர்; ஆராய்ச்சிகள் பெருகப் பெருக, இப் புறத்தோற்றங்கள் மனித அறிவுக்குப் போதாவெனத் தோன்றவே, மக்கள் தங்கள் மனத்தை அகநோக்காகத் திருப்பி, ஆன்மாவையே நோக்கி விடையறிய அவாவினுர்கள். இப்போது ஆராய்ச்சி பேரண்டத்தினின்றும் அகநோக்காகத் திரும்பியது. சிற்றண்டத்தையே அறிய மனம் முற்பட்டது. புறத்தேயுள்ள பொருள்களை ஆராய்வதை விடுத்து, மனிதன் அகத்தேயுள்ளதை ஆராயத் தொடங்கினுன். இத்தகைய ஆய்வே மனித நாகரிகத்தின் வளர்ச்சிக்குரிய சான்ருகும். இப்போது இயற்கையின் நுட்பங்களை ஆழ்ந்தறியும் ஆற்றல் உண்டாகி, அறிவின் உயர் வளர்ச்சிக்கு அறிகுறியாகின்றது.

இன்று நாம் பேசப்புகுவது இத்தன்மையவான அக நிகழ்ச்சிகளைப் பற்றியே. மனிதனுக்கு இதனினும் அணித்தான, இனிய பொருள் யாதொன்றும் இல்லையென்றே கூறலாம். இப்பொருள் பன்முறையும் பற்பல நாடுகளிலும் ஆராயப்பட்டு வந்துளது. வேந்தரும் முனிவரும், செல்வர்களும் வறியோர்களும், சான்றோரும் மற்றோரும், தக்கோரும் அல்லாரும், ஒவ்வோர் ஆடவரும் பெண்டிரும் ஒவ்வொரு காலத்திலும் இவ்விஷயத்தை ஆராயப் புகுந்துள்ளனர். 'கணநேரத்தில் மறையக் கூடிய இம்மனித வாழ்வில் அழியாப் பொருள் ஒன்றுமே இருக்கவில்லையா?' என்பதே வினு. இவ்வுடல் மறையும்போது வாழ்க்கையில் மாருத பொருள் ஒன்றும் எஞ்சுவதில்லையா? இந்த உடல் பிடி சாம்பலாகப் போம்போது உயிருள்ள பொருள் ஒன்றுமே நிலையாக நிற்பதில்லையா? அப்படி எஞ்சி நிற்கும் பொருள் உண்டேல், அதன் கதிதான் என்ன? அது செல்வது எவ்விடம்? அது தோன்றியது எங்கிருந்து? இத்தகைய கேள்விகள் அடிக்கடி கேட்கப்பட்டு வந்துள்ளன: இன்னும், உலகமுள்ளளவும் மாந்தருள்ளளவும் கேட்கப்பட்டே வரும். ஆனல் இதுகாறும் இக்கேள்விகளுக்கு விடை இறுக்கப் படவில்லை என்பது கருத்தன்று. ஒவ்வொரு முறையும் ஓரளவு விடை கிடைத்தே உள்ளது. நாள் செல்லச் செல்ல விடையின் ஆற்றல் வளர்ச்சி யுறுகின்றது. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே கேள்விக்கு விடை ஐயப்பாடின்றியே கிட்டிவிட்டது. பின்னர் நிகழ்ந்தன யாவும் இதனைத் திரும்பக் கூறுவதும் விளக்கம்பெறச் செய்வதும், எடுத்துக் காட்டுவதுமே. நாம் செய்ய வேண்டுவது விடையை வேறுவிதமாக எடுத்துரைப்பதேயாகும். இப்பெற்றித்தான உள்ளத்தைக் கிளறும் கேள்விகளுக்குப் புதியதொரு விளக்கம் தர நாம் முற்படவில்லை. முன்னைய விடைகளையே இக்காலத்துக் கேற்ப மொழிய முயல்கின்றோம். தத்துவங்களைப் பாமரர்க்கும் விளங்கும் வகையில் கூறவிழைகின்றோம்; தேவர்களுக்கேற்ற கருத்துகளை மானிடமொழியில் பேசப் புகுகின்றோம்; கடவுளின் சித்தத்தை ஏழை மானிட மொழியில் இயம்ப எண்ணுகின்றோம்; சிற்றறிவுடையோரும் அதனை யோர்ந்து பயன் பெறுமாறு

நவில நினைக்கிறோம். இக் கருத்துகளுக்குக் காரணமான அதே சத்துவம் என்றுமே மனிதவுள்ளத்தில் உறைந்து வருகின்றது. இக்காரணத்தினாலேயே அவன் அதனை எப்போதுமே அறிய வல்லனாய் விளங்குகின்றான்.

உங்களை நான் நோக்கும்போது எத்துணைப் பொருள்கள் ஒன்றுகூட வேண்டியிருக்கின்றன! முதலாவதாக, கண்கள்; நான் மற்ற எல்லா வகைகளிலும் சிறப்புற்றிருப்பினும், எனக்குக் கண்பார்வை இல்லையெனில் என்னால் உங்களைக் காண இயலாது. இரண்டாவதாக, பார்ப்பதற்குரிய உண்மையான துணைக் கருவி ஒன்று தேவைப்படும். ஏனெனில், கண்கள் வெறுந் துணைக் கருவிகளேயன்றி, அவை பார்வையுறுப்புகளல்ல. அவற்றிற்குப்பின் உண்மையான பார்வையுறுப்புகள் மூளையிலுள்ள நரம்புமையமேயாம். இம்மையம் பழுதுற்றிருப்பின், தெளிவான அழகிய இருகண்களையுடைய ஒருவன் ஒன்றையுமே பார்க்கக் கூடியவனாகான். ஆகவே, உண்மையான பார்வை யுறுப்பான நரம்பு மையம் இருந்தாகவேண்டும். இது போன்றனவே மற்றுமுள்ள புலன்களும். புறத்தேயுள்ள காது உறுப்பு வெற்று உபகரணமேயன்றிக் கேட்கும் சாதனமாக மாட்டாது. காதுகள் ஒலியலைகளை மூளையிலுள்ள நரம்புமையத்துக்கு எடுத்துச் செல்லும் புறக்கரணங்களே. எடுத்துச் செல்வது மட்டும் போதாது. நீங்கள் நூலகத்தேயுள்ள ஒரு நூலை மிகுந்த ஆவலுடன் படித்து வருகிறீர்களென்று வைத்துக் கொள்வோம். அப்போது சுவர்க்கடிகாரத்தில் மணி அடிக்கிறது. எனினும், அவ்வொலி உங்கள் உள்ளத்தில் நுழைவதில்லை. மணியோசை உண்மையேயெனினும், ஒலியலைகள் பரந்து சென்று மூளையின் மையத்தை யடைகின்றன எனினும், அவை உங்களுக்குப் புலனாவதில்லை. குறை என்ன? உங்கள் மனநாட்டம் அதில் இல்லை. ஆகவே, மூன்றாவது இன்றியமையாத பொருளாகிய மனமும் அங்கே பொருந்தியிருததல் வேண்டும். முதலாக அமைவன, புறக்கருவிகளான பொறிகள்; பின்னர் புலனுணர்வு தரும் மூளையிலுள்ள நரம்புமையம்; இறுதியாக, மூளைக்கு உணர்ச்சியை எடுத்துச் செல்லும் உறுப்பு; இத்தனையோடும் மனமும் இணைந்தாலன்றி, பொருள்கள் நமக்குப் புலனாக மாட்டா. மனமும் எடுத்துச்

செல்லும் ஒரு கருவி போன்றதே, அது உணர்ச்சியைக் கொண்டு சென்று புத்தியில் செலுத்துவதாகும். புத்தியே (விவேகமே) தன்னிடம் கொணரப்பட்ட செய்தியைத் தீர் மானம் செய்யும் கருவி. மதிதான் கருத்தை ஆராய்ந்து அதனை எடுத்துச் சென்று, அரியாதனத்தில் வீற்றுள்ள கர்த் தாவான ஆன்மாவிடம் சேர்ப்பது. ஆன்மாவினிடம் சேர்ப் பிக்கப்பட்டதும், அவ்விடத்தினின்றே, எது செய்யவேண்டு வது, எது செய்யா தொழிய வேண்டுவது என்பன பற்றிய கட்டளை பிறக்கும். இந்த உத்தரவு எதிர்மாறுன வழியாக, புத்தி, மனம், உறுப்பு இவற்றிற்கு எட்டி இறுதியாகப்பொறி கட்குப் போய்ச் சேர்ந்து புலனுணர்வு பூர்த்தி பெறுகின்றது.

கருவிகள் யாவும் மனிதனுடைய புறவுடலில் அமைவன: மனமும் புத்தியும் அங்கே இருப்பனவல்ல. அவை இந்துக்களால் கூறப்படும் சூக்கும உடலிலும் கிறித் தவ மதக் குரவர் மொழியும் நுண்ணிதான ஆவி உடலிலும் இருப்பனவாகும். இவை உடலினும் மிக நுட்பமானவை. ஆனல், ஒருவனது ஆன்மா ஆகமாட்டா. ஆன்மா அவற்றுக்கெல்லாம் அப்பாற்பட்டது. புறவுடல் சில ஆண்டு களுக்குள் அழியக் கூடியது. ஒரு சிறு அற்பகாரணமும் அதனைக் கலைத்துவிடக்கூடும்; அதனைக் கொன்றுவிட்வும் இயலும். நுண்ணுடலோ, அத்துணை எளிதில் அழிக்க வொண்ணுதது. ஆயினும், அதுவும் சில வேளைகளில் சிதை வுறுகின்றது; வேறு சமயங்களில் வலுப்பெற்றும் இருக் கின்றது. முதியோரது மனம் தளர்வதை நாம் கண்கூடாகக் காண்கின்ருேம். உடல் வன்மையுடன் கூடியிருக்குங்கால் மனம் வலுப் பெற்றும், அது வலியற்ருே வலி குன்றியோ இருக்குங்கால் உரனிழந்தும், உடல் நோய்வாய்ப்பட்டிருக் குங்கால் பல மருந்துகளும் பல வகைகளிலும் அதனைப் பாதித்து வருவதுவும், புறப்பொருள்களனைத்தும் அதன் மீது ஆதிக்கம் செலுத்தி வினையாற்றுவதும், அது அவற் றின் மீது எதிர்வினை யாற்ற முயன்று அவ்வாறு செய்வதும் நாம் காண்கின்ருேம். உடலுக்குரிய முன்னேற்றமும் பிற் போக்கும் போலவே, உள்ளத்துக்கும் அவையுண்டு. ஆகவே மனம் ஆன்மாவாகாது. ஏனெனில் ஆன்மாவுக்கு அழிவோ இழிநிலையோ இருப்பதில்லை. இது நமக்கு

எப்படித் தெரியும்? மனத்துக்கப்பால் ஏதோ ஒன்று இருக்கிறதென்பதை நாம் எவ்வாறறியக் கூடும்? தன்னொளி கொண்ட அறிவு மந்தமான—சைதன்னியமற்ற சடத்திற்கு உரியதாகாது. அசேதனப் பொருள் எதுவும் அறிவை ஒரு போதும் தனது சாரமாகக் கொண்டதை நாம் என்றும் கண்ட தில்லை. தூலப் பொருளை யெல்லாம் விளக்குவது அறிவொளியே. இங்குள்ள மண்டபம் காணப் பெறுவது அறிவொன்றினுலேதான் ஏனெனில், மண்டபம் ஒரு சேதனனுல் கட்டப்பட்டிருந்தாலன்றி, தோற்றமே அளிக்காது. இவ்வுடல் தன்னொளியுடையதன்று; அவ்வாறிருந்தால், உயிர் நீங்கிய பின்பும் இதில் தன்னொளி விளங்க வேண்டுவதே. இவ்வாறே மனமும் சூக்கும உடலும் தம்மொளி யுடைய பொருள்களல்ல. அவை சித்தின் சாரமல்ல. தன்னொளிப் பொருள் தேய்வதில்லை. இரவல் கொண்ட ஒளி வாயிலாகக் கிளர்ந்தெழும் சுடர் தோன்றி மறைவதாகவே இருக்கும். ஆனுல், ஒளிப்பிழம்பை யார்தாம் அழிக்கவல்லவராவர்? அது எப்படி மாறிமாறி வளமுற்றும் அழிந்தும் போக இயலும்? மதி வளர்ந்தும் தேய்ந்தும் காண்கிறது. காரணம், அது கதிரவன் ஒளியை ஏற்று மீளச்செய்வதே. இரும்புத்துண்டு ஒன்றைத் தீயிலிட்டுப் பழுக்கக் காய்ச்சியினுல், அது சுடர் விட்டு ஒளிரும்; ஆனுல், அதன் ஒளி மறைந்து போம். ஏனெனில், அந்த ஒளி கடன் கொள்ளப்பட்டதே. ஆகவே, தனது தத்துவமாக அல்லாமல் கொள்ளப்பட்ட ஒளியே அழியக்கூடியது.

ஒளியைத் தனது சாரமாக—தன்மயமாகக் கொள்ளாத வடிவுடன் கூடிய உடல் தன்னொளி பெற்றதாக இருத்தல் இயலாது: அது தன்னையறிந்துகொள்ளும் திறனுடையதாகாது. மனமும் அத்தகையதே. எனெனில், மனம் வளர்ந்தும் தேய்ந்தும் வருகிறது. அது ஒரு கால் ஆற்றலுடன் கூடியும், மற்ருெரு சமயம் வலி குன்றியும் தோன்றுவதாகும். மேலும், அதனை எபபொருளும் பாதிக்கக்கூடும்; மாற்றவுங் கூடும். ஆகவே, மனத்தினை ஊருடுவிச் செல்லும் ஒளி அதற்குரிய பொருளன்று. பின்னை அது எதனைச் சார்ந்ததெனின், தன்மயமான பொருளொன்றின் சாரமாகி, சிதைவுருது, அழியாது, வலிமிக்கதாகவோ வலிகுன்றியதாகவோ

யாதொரு மாற்றமும் இல்லாத் தன்னொளிப் பிழம்பாய் விளங்கும் ஒன்றின் ஒளியாகவே அது விளங்கவேண்டும். ஆன்மா அறிவதென்பதே ஒல்லாது; ஏனெனில், அது அறிவே யாவது. ஆன்மாவுக்கு இருப்பு என்பது இல்லை; ஏனெனில், அதுவே இருப்பாகும். ஆன்மா இன்புற்றிருப்பது என்பதில்லை; ஏனெனில், அதுவே இன்பமாயிற்றே! இன்பமாகவே இலங்குவது, இன்பத்தை இரவல் கொண்டதாக ஆகும். அறிவைப் பெற்றிருப்பது அதனை வேறொன்றின் இடமாகக் கொண்டதாகும். ஒன்று மற்றொன்றுடன் தொடர்பு வைத்துக் கொள்ளும் இருப்பு ஒரு நிழல் வடிவமே. குணங்கள் இருக்கும் இடமெல்லாம் இப் பண்புகள் பொருள்கள் மீது நிழலிட்டு அவற்றில் பிரதி பலிப்பனவே. ஆனால், ஆன்மாவுக்கு அறிவோ, இருப்போ, பேரின்பமோ, அதன் பண்புகளாக மாட்டா. ஏனெனில் இவை யாவும் அதன் சாரமே.

இதனை நாம் ஒப்புக்கொண்டேதான் தீரவேண்டுமா? ஆன்மாவுக்குப் பூரண ஞானம், பேரின்பம், இருப்பு இவை யாவும் கடன் கொள்ளப்பட்டவையல்ல என்பதை நாம் ஏன் நம்பவேண்டும்? ஆன்மாவின் முற்றறிவு, அதன் தன்னொளி, பேரானந்தம் இவை அனைத்தும் மனத்தினின்றும் உடல் தனது ஒளியை கடனாகக் கொண்டாற் போன்று இரவலாகப் பெறப்பட்டவை என ஏன் இயம்புதல் ஆகாது? இத்தகைய தருக்கத்தின் முறைகேடு எல்லையின்றிப் போய்க்கொண்டே யிருக்கும். இவை எவரிடத்தினின்றும் கொள்ளப்பட்டன? பிறிதோரிடத்தினின்றும் எனக் கூறின் அதே கேள்வி மறுமுறையும் கிளம்பி இறுதியில் ஒரு தன்னொளிப் பொருளுக்கே கொண்டு செலுத்தும். சுருங்கக் கூறுமிடத்து தன்னொளிப் பிழம்பு வரை வந்ததும் நாம் அங்கேயே நின்று தருக்கத்தின் எல்லையைக் காணுதல் வேண்டும்.

ஆகவே, நாம் முதன் முதலில் காண்பது மனிதன் உடம்பென்னும் உறையால் மூடப்பட்டிருப்பது. அடுத்தபடியாக நாம் காண்பன, மனிதனுக்கு ஒரு சூக்கும உடல் இருப்பதும், அதில் மனம், புத்தி, அகங்காரம் அடங்கிக்கிடப்பதுமாகும். இவற்றிற்கப்பால் மனிதனது உண்மையான ஆன்மா உறை

கின்றது. பூதவுடலின் சத்தியும். அதன் அனைத்துப்பண்பு களும் அவனது உள்ளத்தினின்றும் கடன் கொள்ளப் பட்டவையென்றும், நுண்ணிய மனமானது தனது பலவகை யான ஆற்றல்களையும் அறிவொளியையும் தனக்குப்பின் நிற்கும் ஆன்மாவிடமிருந்தே கடன் கொண்டதென்றும் நாம் முன்னரே கண்டு கொண்டோம்.

இந்த ஆன்மாவின் இயல்பு பற்றிப் பல கேள்விகள் எழுகின்றன. ஆன்மா ஒளிமயமானது—முற்றறிவு, பூரண ஆனந்தம் இயல்பான நிலை அதன் சாரம் என்ற வாதத்தி னின்றும் அதன் உண்மை மெய்ப்பிக்கப் பட்டதாகுமாயின், அது படைக்கப்பெற்ற பொருளன்று என்பது எளிதில் விளங்கும். வேறொன்றிலும் சார்பு கொள்ளாத அத்தகைய ஒளிமயமான நிலை, பிறிதொன்றினின்றும் தோன்றியிருக்க இயலாது. அது என்றுமே இருந்திருக்கவேண்டும். அது இல்லாத காலமே இல்லை. ஏனெனில், ஆன்மா இராதபோது காலமும் இராதுபோம். காலமோ, ஆன்மாவில் அடங்கிக் கிடப்பது. ஆன்மா தன் சத்திகளை மனத்தின்மீது பிரதி பலிக்கச் செய்ய, அம்மனம் சிந்திக்கும் போதே காலம் தோன்றுகின்றது. ஆன்மா இராதபோது எண்ணமும் இருத் தல் இயலாது. எண்ணமில்லாத போதோ, காலமே இருப்ப தில்லை. காலமே ஆன்மாவின் உள்ளீடாய் இருக்கும்போது, ஆன்மா காலத்தில் அடக்கம் என்று எவ்வாறு சாதிப்பது? ஆன்மாவிற்கோ பிறப்புமில்லை, இறப்புமில்லை ; ஆனால், அது இப்பல படிகளையுங் கடந்து செல்கின்றது. அது மெதுவாக, நிதானமாக, படிப்படியாக மேனிலை எய்தியவாறு தோற்ற மளிக்கிறது. அது தனது மேன்மையால் மனம் வாயிலாக உடலில் இயங்குகின்றது. அவ்வுடலின் மூலமாகவே அது வெளியுலகத்தை அறிந்து ஏற்றுக்கொள்கிறது. அது ஓர் உடலெடுத்து அவ்வுடலைப் பயன்படுத்திய பின்னர் அவ் வுடல் பசையற்றுப் போனதும் மற்றோர் உடலைக்கொண்டு தன் காரியத்தைச் சாதித்துக் கொள்ளுகிறது; இவ்வாறே பல உடல்களையும் தொடர்ந்து கொள்ளுகின்றது.

வியத்தகு கேள்வி யொன்று இப்போது எழுகின்றது. இது ஆன்மாவின் மறுபிறப்பெனும் கொள்கையைப் பற்றியது. இதனைக்கண்டு மக்கள் சிற்சில நேரங்களில்

அஞ்சுகின்ருர்கள். சிந்தனு சத்தி மிகுதியாக அமையப்
பெற்றவருங்கூட மூட நம்பிக்கைக்கு ஆட்பட்டு தாம்
சூனியத்திினின்றும் தோன்றியவரெனக் கருதி, அற்புதமான
தருக்க வாதத்தினுல், அப்படியிருந்தும் தாம் பின்னர்
எப்போதுமே விளங்கலாகும் என்ற நம்பிக்கையை
ஏற்கின்றனர். சூனியத்தினின்றும் தோன்றுபவர் அதற்கே
நிச்சயமாக மீளவேண்டுமன்ருே? நீங்களோ நானே,
இங்குள்ள மற்ற எவருமோ சூனியத்தினின்றும் உதிக்க
வில்லை; அதில் மாயப் போவதுமில்லை. நாம் காலமெல்லாம்
இருந்து வந்துள்ளோம்; இனி வருங்காலமெல்லாம்—காலத்
தத்துவமுள்ள வரையும்—அவ்வாறே வாழப் போகின்ருேம்.
இந்த நிலையை மாற்றியமைக்க எங்கும் எவருக்கும் எத்தகைய
ஆற்றலும் ஒரு சிறிதுமின்று. நம்மைச் சூனியத்துக்குச்
செலுத்திவிட எவராலும் இயலாது. இம் மறு பிறப்புக்
கருத்து அச்சுறுத்துவதாக இராததுடன், அது மனித இனத்
தின் நெறிநின்ற வாழ்க்கை நலனுக்குப் பெரிதும் அவ
சியமே. இதுவே நல்லறிஞர் கொள்ளக்கூடிய நியாயத்
துக்குப் பொருந்திய முடிவாகும். நீங்கள் இனி என்றும்
நித்தியமாக இருக்கப்போவது உண்மையே எனின், கடந்த
காலத்தில் நீங்கள் என்றென்றுமே நித்தியமாய் இருந்து வந்
துள்ளீர்கள் என்பது திண்ணம். இது வேறுவகையாய்
இருத்தல் இயலாது. இக்கொள்கைக்கு மாருகச் சிலர் கூறும்
சிற்சில தடைகளுக்கு எதிர்மாற்றம் பகர நான் முனேவேன்.
உங்களுட் பலரும் இம்மறுப்புகள் யாவும் பொருளற்றவை—
பேதைமை மிக்கவை—என்று எண்ணினுலும், நான் அவற்
றிற்கு எதிருரை கூறுவது அவசியமே; ஏனெனில், சிந்தனு
சத்தி மிக்கவரும் சில சமயங்களில் பேதமை பொருந்திய
கருத்துகளைப் பரப்ப முற்படுகின்றனர். எக்காலத்திலும் எத்
தகைய அபத்தமான கருத்துகளையும் ஆதரித்துப் போற்றும்
அறிஞர் அரியரல்லர். முதலாவது தடை, 'நாம் ஏன் நமது
கடந்த காலத்தை நினைவிற்கொள்ளுவதில்லை?' என்பது. இப்
பிறவியிலுள்ள பழங்காலச் செய்திகளையெல்லாம் நாம்
நினைவுறுகின்ருேமா? உங்களில் எத்துணை பேர் குழவிப்
பருவத்தின் நிகழ்ச்சிகளை நினைவில் வைத்துள்ளீர்கள்? இள
மையின் நினைவுகள் உங்களுள் ஒருவரிடமும் இல்லை.

ஆகவே உங்களது இருப்பு அந்த நினைவின் சார்பாகவே இருக்குமாயின், உங்களிடம் இளமை நினைவு இல்லாததனால் நீங்கள் குழந்தைகளாகவே இருந்திருக்க இயலாதென்ற இக் கட்டான தருக்க நிலை நிகழ்வதாகும். நமது நினைவின் சார் பாகவே நமது இருப்பும் உளதென்றுரைப்பது பொருளற்ற பயனில்சொல்லேயாகும். நாம் ஏன் கழிந்த காலத்தை நினைவுற வேண்டும்? அப்போதிருந்த மூளை சிதறியே போய்விட்டது; இப்போது அவ்விடத்தில் புதியதொரு மூளை புகுந்துவிட்டது. இப்போதுள்ள மூளையிலிருப்பது முன்னால் ஏற்பட்ட அனுபவங்களின் கூட்டுத்தொகையான பதிவுகள்: இந்தப் பதிவுகளோடுதான் மனம் இந்தப் புதிய உடலைத் தன் இருப்பிடமாகக் கொண்டுள்ளது.

நான் எல்லையற்ற என் பழமையின் விளைவே. பழைய சம் பவங்கள் யாவற்றினையும் நான் ஏன் என் நினைவில் வைத்துக் கொண்டிருக்கவேண்டும்? இக்காலத்தவர் பழைய இருடியோ, முனிவரோ, ஞானப்பெரியாரோ தம் முன் தோன்றி, ஏதோ ஓர் உண்மையை எடுத்துரைத்தால், குதித்தெழுந்து "ஓ! அவரே மடமை மிக்கவர்," என்று வாய் கூசாமல் கூறுவர்; ஆனால் ஆசிரியர் ஹக்ஸ்லி அல்லது டிண்டல் என்ற இக்காலப் புகழ் பெற்ற ஆசிரியராய் இருந்தால், அவர் கூறும் செய்தியைச் சிறந்த மேற்கோளாகப் போற்றி அது உண்மையே என்று நம்பிவிடுகின்றனர்; தொன்று தொட்டுவரும் மூடநம்பிக்கை களுக்கு மாறாக இக்காலக் குருட்டு நம்பிக்கைகளை ஏற்கின் றனர். அப்போது மதக் குரவரான போப்பாண்டவர் பெரும் பாராட்டுப் பெற்றிருந்தால், இப்போது விஞ்ஞான நூலிற் சிறந்த பேராசிரியர் பெரும்பாராட்டுப் பெறுகின்றனர். நினை வாற்றல்பற்றிய மறுப்பு வாதம் செல்லத்தக்கதன்று. அந்த ஒன்றேதான் நமது கொள்கைக்கு விரோதமாகக் கூறிய பலத்த மறுப்பு. பழைய பிறவிகளின் நினைவுகள் இருக்க வேண்டிய அவசியம் கொள்கைக்கு இல்லை எனினும், இத் தகைய பழைய நினைவுகள் நேரும் நேரங்கள் திண்ணமாக உண்டென்று துணிந்து கூறும நிலையில் நாம் உள்ளோம். இதற்குச் சான்று கூறலாம். மற்றும் நாம் மோட்சநிலை பெறக்கூடிய வாழ்வில் நமக்கு இந்நினைவாற்றல் உண்மை யிலேயே கிட்டுவதாகும். அப்போதுதான் இந்த உலகம் ஒரு

கனவே என்பதை நீங்கள் காண்பீர்கள். அப்போதே உங்களது உள்ளத்தில் நீங்கள் நடிகர்களே யென்பதையும் உலகம் ஒருநாடக மேடையே என்பதையும் அறிவீர்கள். அபபோதே பற்றற்ற நிலையின் கருத்து உங்களுக்கு இடி முழக்கத்தின் வலியுடன் விளங்கும். அப்போது உலக இன்பங்களில் உங்களுக்குள்ள அவா, வாழ்க்கையில் மிகுதியான பற்றுதல், இந்த உலக வாழ்விலுள்ள பேராசை யாவும் மறைந்தேபோம். அப்போது மனம் பகலவன் ஒளியில் காண்பது போன்று இவை உங்களுக்காக எத்தனை முறை தோற்றமளித்துள்ளன, எத்தனை கோடிக்கணக்கான முறை நீங்கள் பெற்றோரையும், மனைவி மக்களையும், கணவரையும், சுற்றத்தாரையும், நாட்டினரையும், செல்வம் அதிகாரம் முதலியவற்றையும் பெற்றுள்ளீர்கள் என்பதை மனம் வாயிலாகக் காண்பீர்கள். அனை வரும் மாறி மாறி வந்து போயினர். நீங்கள் அலையுச்சியில் எத்தனை தடவை விளங்கி வந்தீர்கள், எத்தனை முறை அவாவின்மையின் அடித்தளத்தில் நின்றீர்களென்பதைக் காண்பீர்கள். நினைவு இவற்றையெல்லாம் உங்களுக்கு அறிவிக்கும் போது, நீங்கள் வீரர்களாய் விளங்கி, உலகம் உங்களைக் கடியும்போதும் புன்முறுவல் கொள்வீர்கள். அப்போது தான் நீங்கள் எழுந்து நின்று, "காலனே, நான் உனக்கு அஞ்சேன்! நீ என்னை என்ன செய்யக் கூடும்?" என்று கூறுவீர்கள். இந்நிலை யாவர்க்கும் கிட்டக் கூடியதே.

ஆன்மாவின் மறுபிறபபுக் கொள்கைக்குச் சரியான யுத்தி வாதங்கள்— சமாதானங்கள்—இருக்கின்றனவா? இதுகாறும் நாம் கூறிவந்தது எதிர்மறைப்பகுதியே. அதாவது, 'நாம் கூறப்புகும் உண்மைகளை மறுத்துச் சொல்லும் நியாயம் சரியன்று', என்பதைக் காட்டும் பகுதியே. இனி நமது கட்சியை உறுதிப் படுத்தக்கூடிய சித்தாந்தப் பகுதியைப் பற்றிக் கூறுவோம். நம் கருத்தை மெய்ப்பிக்கும் வகையில் மிக மேலான சான்றுகள் உண்டு. அறிவை ஈட்டும் திறன் பற்றி ஒரு மனிதனுக்கும் மற்றொருவனுக்கும் உள்ள மிக்க வேறுபாட்டிற்குக் காரணங் காட்டுவது இந்த ஒரு கொள்கைக்கே இயலும். அறிவு கொள்ளும் வகை பற்றி முதலில் கவனிப்போம். நான் தெருவிற் சென்று ஒரு நாயினைக் காண்கிறேனென்று

வைத்துக்கொள்வோம். அதனை நாயென்று நான் எப்படி அறிந்து கொள்வது? நான் என் மனத்தில் ஆழ்ந்து நோக்கு கிறேன். அங்கு எனது பலதிறப் பண்டைய அனுபவங்கள் சேகரிக்கப்பட்டுத் தரம் தரமாகத் தொகுத்து வைக்கப்பட் டிருக்கக் காண்கிறேன். ஒரு புதிய பதிவு ஏற்படுங்கால் அதன் இனம் அங்குள்ளதா என்று சிந்தித்துப் பார்த்து அந்த இடத்தில் அதனை வைக்க முயல்கிறேன். அந்த இனம் அங்குள்ள போது எனக்கு மிகுதியான திருப்தி பிறக்கிறது. அங்குக் காணும் கூட்டத்தில் இப்புதிய பொருளின் இனம் இருக்கும் போது இப்பொருள் நாயென்பதை உணர்கிறேன். இக்கூட்டம் உள்ளே காணப்பட வில்லையெனின், எனக்கு மிகுந்த வெறுப்பு நேர்கின்றது. இந்த வெறுப்பு ஏற்படுங் கால், இம்மன நிலைக்கு 'அறியாமை' என்னும் பெயர் வழங்கு கிறது. ஆனால், அந்த இனம் முன்னரே அந்த இடத்தில் காணப்படும் போதோ, நமக்கு திருத்தி ஏற்பட்டு, இந்த மன நிலையை 'அறிவு' என்று கூறுகின்றோம். ஒரே 'ஆப்பிள்' பழம் மரத்தினின்றும் தரையை நோக்கிக் கீழே விழும்போது மக்களுக்கு அதிருத்தி விளைந்தது. பின்னர்ப் படிப்படியாக இதற்கேற்ற ஒப்புகளை மக்கள் காணலானார்கள். அவர்கள் கண்ட ஒப்பு யாது? பிற ஆப்பிள்களும் கீழே விழக் கண்டார் கள். ஆகவே, பொருள்களை இவ்வாறு கீழ்நோக்கி ஈர்க்கும் பூமியின் சத்தியை 'நிலக்கவர்ச்சி' என்று வழங்கினார்கள். ஆகவே, முன்னரேயுள்ள பழைய அனுபவங்களின் தொகுதி யொன்று இராவிடின், ஒரு புதிய அறிவு உண்டாவதில்லை; ஏனெனில், எதனுடன் ஒப்பிட்டுப் பார்த்து இந்தப் புதிய பதிவை அத்துடன் சேர்த்து வைப்பது? சில ஐரோப்பியத் தத்துவ ஞானிகள் கூறுவது போன்று ஒரு குழந்தை நில வுலகில் பிறக்கும் போது பண்டைய அனுபவம் எதையும் கொண்டு வராவிட்டால் அக்குழந்தை என்றுமே எவ்வித அறிவாற்றலையும் பெறாது; ஏனெனில், அதற்குத் தன் புதிய அனுபவத்துடன் ஒப்பிட்டுப் பார்க்க யாதொரு பண்டைய அனுபவமும் இல்லை. அறிவு ஈட்டும் ஆற்றல் ஒவ்வொரு வருக்கும் வெவ்வேறு அளவிலேயே இருந்து வருகிறதென் பதனை நாம் காண்கின்றோம். இதிலிருந்தே ஒவ்வொருவரும் மண்ணுலகிற்கு வரும் போது தம்முடன் ஓரளவு அறிவுத்

தொகையைக் கொண்டு வருகிருரென்பது நமக்குத் தெளி வாகின்றது. அறிவு ஒரே வழியிலேதான் அடையப் பெறுவது: அது அனுபவம் வாயிலாகவேதான், வேருென்ருலும் அன்று. அதனை நாம் இவ்வுலகில் எய்தியிரா விட்டால், வேறு முன்பிறப்புகளில் எய்தியிருக்க வேண்டும். எங்குப் பார்த்தாலும் ஏன் மரண அச்சம் இருக்க வேண்டும்? ஒரு சிறு கோழிக்குஞ்சு முட்டையினின்றும் இப்போதுதான் வெளிவந்துள்ளது. அதை நோக்கி ஒரு கழுகு வந்ததும் பேரச்சத்திஞல் அது தன் தாயிடம் பறந்து செல்கின்றது. இதற்கு ஒரு பழைய விளக்கம் உண்டு. அதுதான் இயற்கை உணர்வென்பது. இம்மரணபயம் அச் சிறு குஞ்சுக்கு எங்கிருந்து வந்தது? ஒரு வாத்துக்குஞ்சு ஒரு சிறு நீர்க்குட்டையைக் கண்டதும் நீரில் குதித்து நீஞ்சுகின்றது. அது முன்னர் நீந்தியதுமில்லை; நீந்தும் பறவையைக் கண்டறிந்ததுமில்லை. இதனையே மக்கள் இயற்கையுணர் வென்னும் பெரிய வார்த்தையால் கூறி வருகின்ருர்கள். ஆஞல் நமக்கோ, இம்மொழியிஞல் அதிக விளக்கமொன்றும் ஏற்பட்டு விடவில்லை. நாம் இவ்வியற்கை யுணர்ச்சியைப்பற்றிச் சிறிது ஆராய்வோம். ஒரு சிறு குழந்தை ஒரு ஆர்மோனியப் பெட்டியை வாசிக்கிறதென்று வைத்துக்கொள்வோம். முதன் முதல் அதுதான் தொடும் ஒரு சிறு கட்டையையும் உன்னிப்பாய்ப் பார்த்து அழுத்தி வந்து மாதக்கணக்கில் பயின்று வருங்கால், பயிற்சியிஞல் இன்னிசை கிளம்புகிறது. பல காலும் நன்கு பயின்று வருவதஞல் சில ஆண்டுகளில் அது அறியாமலே விரல்கள் வேகமாகக் கட்டைகளை அழுத்தி இன்னிசை யெழுப்புகின்றன. இனிய கானம் பிறக்கின்றது. முதன் முதல் மனம் ஒன்றி, சங்கற்பத்துடன் கூடிய செயல் நாளடைவில், இச்சை யொன்றுமில்லாமலே, இசைக்கருவியைக்கையாளுகின்றது. அது இன்னும் முடிந்த சான்ருகாது. இன்னும் ஒருபாதி எஞ்சி நிற்கின்றது. இப்போது இயற்கை யுணர்விஞல் இயங்கும் செயல்கள் யாவற்றையும் சங்கற்பச் சத்தியின் ஆட்சிக்குள் கொண்டுவர இயலும். உடலிலுள்ள ஒவ்வொரு தசைநாரும் நமது இச்சையின்வழி இயங்குமாறு செய்யலாம். இது நன்கு அறியப்பட்டதே. இப்போது முழுச் சான்றும் கிடைத்து விட்டது; இவ்விரட்டை ரீதியால்

அறிந்து செய்யும் செயல்களின் இந்த நிலையே இயற்கையுணர்ச்சி என்பது. ஆகவே, இந்த உவமை படைப்பு முழுதிற்கும் பொருந்துமானால், இயற்கை என்றுமே ஒன்று போலவே இயங்கி வருவதாயின், கீழான விலங்குகளிடம் தோன்றும் இயற்கை யுணர்வும் மனிதர்களிடம் தோன்றக் கூடிய இயற்கை யுணர்வும் சங்கற்ப சத்தியின் இழிநிலையே யாகும்.

பேரண்டம் பற்றிய சொற்பொழிவில் நான் குறிப்பிட்ட சட்டநியதிப்படி ஒவ்வோர் ஒடுக்கத்துக்கு முன்னும் ஒரு வளர்ச்சி இருந்திருக்க வேண்டும். ஒவ்வொரு வளர்ச்சிக்கு முன்னும் ஓர் ஒடுக்கம் நிகழ்ந்திருக்க வேண்டும். இந்த முறையில் பார்க்கும்போது இயற்கை யுணர்வென்பது ஒடுக்க நிலையிலுள்ள புத்தியாகும். மனிதனிடமோ விலங்குகளிடமோ உள்ள இயற்கையுணர்வு என்பது நினைத்துச் செய்யும் செயல்களின் ஒடுங்கிய நிலையே. வேண்டுமென்று நினைத்துச் செய்யும் செயல்கள் அனுபவமின்றி நிகழாதன. அனுபவமே அந்த அறிவைத் தோற்றுவித்தது. அந்த அறிவு அங்கே உள்ளது. சாவின் அச்சம், வாத்துக் குஞ்சின் நீர் நசை, மனிதன் நினைவின்றியே இயற்கை யுணர்வினால் வெளிப்படும் வினைகள் ஆகிய இவை யாவும் பண்டைய அனுபவங்களின் விளைவே. இதுகாறும் நாம் மிகத் தெளிவான வகையில் முன்னேறி வந்துள்ளோம். அது இக்கால விஞ்ஞான முறைக்குப் பொருந்தியதாகவே உள்ளது. ஆனால் இங்கே மற்றோர் இன்னல் தோன்றுகின்றது. மிகவும் அண்மையிலுள்ள விஞ்ஞானிகள் பழைய இருடிகளின் முடிவையே பின்பற்றும் அளவிற்கு வந்து கொண்டிருக்கின்றார்கள். ஒப்புக்கொள்ளும் அளவிற்கு அது நன்றே. அவர்கள், "ஒவ்வொரு மனிதனும் தனது அனுபவ மூட்டையுடனேயே தோன்றியுள்ளான்; ஒவ்வொரு விலங்கும் அத்தகையதே. மனத்தின் இயக்கங்கள் யாவும் பூர்வ அனுபவத்தைப் பொருத்தனவே," எனக் கூறுகின்றார்கள். ஆனால் அவர்கள், "அந்த அனுபவம் ஆன்மாவைக் குறித்ததே என்று சொல்வதன் பயன் என்ன? அது உடலுக்கே தான் உரியதென்று ஏன் சாற்றலாகாது? ஏன் அது பரம்பரையாக வருவதொன்றே என்று சாற்றலாகாது?" என்று வினவு

கின்றனர்கள். இது கடைசிக் கேள்வி: "நான் பிறக்கும் போது என்னுடன் கொண்டுவரும் அனுபவங்கள் யாவும் என் முன்னோர்களின் மொத்த அனுபவத்தின் முடிந்த பயனே என ஏன் மொழியலாகாது? சிற்றுயிர் முதல் மிக மேலான மனிதன் வரையுள்ள அனுபவம் முற்றுமே என்னிடம் உளது. ஆனால், அது பரம்பரையாக ஒவ்வோர் உடல் வழியாகவும் தொடர்ச்சியாக வந்துளது. இப்போது சங்கடம் எங்கே இருக்கிறது?" இக்கேள்வி நுணுக்கமானதே. இந்தப் பரம்பரை வாதத்தில் ஒரு பகுதியை நாம் ஒப்புக் கொள்ளவே வேண்டும். ஆனால், எம்மட்டில்? முதற் பொருள் தரும் அளவிலேதான். நாம் நமது முன்னைய செயல்களால் ஒரு குறித்த உடலில் ஒரு குறிப்பிட்ட பிறப்பை அனுசரித்து நடக்கிறோம். அதற்குத் தகுந்த முதற் பொருள் மட்டும் பெற்றோர்களிடமிருந்து வருவது. அப்பெற்றோரும் அந்த ஆன்மாவைத் தமது மகவாக ஏற்கும் தகுதியுற்றவராகத் தம்மை அமைத்துக் கொண்டிருக்க வேண்டும்.

மானத அனுபவம், 'தூலப் பொருள் ஒன்றில் பதியக் கூடும். அது பின்னதில் ஒடுங்கியிருத்தல் கூடும்,' என்னும் மிகமிக விசித்திரமான கொள்கையை ஒரு சான்று மின்றியே ஏற்றுக் கொள்கிறது. நான் உங்களை நோக்கும் போது எனது மனமென்னும் ஏரியில் ஓர் அலை எழுகின்றது. அது விழ்ச்சி யுறுகின்றதாயினும், அவ்வெழுச்சி ஒரு பதிவாய் நிலைத்து விடுகிறது. உடலில் ஒரு பதிவு ஏற்படுவதை நாம் கொள்ள யாதோர் ஆதாரமோ, சான்றோ, இல்லை. அப்பதிவை எடுத்துச் செல்வது எது? ஒவ்வொரு மானத அனுபவமும் உடலில் நிலைக்கக் கூடுமென்று ஒப்புக் கொண்டாலும், முதல் மனிதரிடமிருந்து என் தந்தையார் வரையிலுள்ள சரீரங்களிற் பதிந்துள்ளவை யாவும் என் தந்தையாரின் உடலுக்கே வந்து சேர்ந்து விட்டன என்று வைத்துக் கொண்டாலும், அவை எனக்கு இறங்குகின்றன என்பதை நாம் அறிந்து கொள்வது எவ்வாறு? அவை, "பயோப்ளாஸ்மிக்" என்ற சிற்றறை மூலமாகவா இறங்கி வருகின்றன? அது எப்படி இயலும்? ஏனெனில், தந்தையின் உடல் குழந்தைக்கு முழுதும் இறங்கி விடுவதில்லையே! பெற்றோர் பல மக்களையும் பெறலாமன்றோ? அப்போது வமிச பரம்பரை

நியதிப்படி ஒவ்வொரு குழந்தை பிறக்கும் போதும் தாய் தந்தையர் தம்மிடத்துள்ள பதிவுகள் யாவற்றையும் இழக்க வேண்டும்; அல்லது தமது முழுப் பதிவுகளையும் குழந்தைக்குக் கொடுத்துவிடும் பட்சத்தில் முதற் குழந்தை பிறந்ததுமே அவர் மனத்தில் சூனியமே எஞ்சி நிற்பதாகும்.

உயிருக்காதாரமாயுள்ள கருவாம் "பையோப்ளாஸ்மிக்" சிற்றறையில் அனாதி காலந்தொட்டுள்ள கணக்கற்ற பதிவுகளும் இருக்குமேயானால் அத்தொகுதி எங்குளது? எவ்வாறு உள்ளது? இது மிகவும் கடினமான நிலையே. 'அச் சிற்றறையில் எங்கு எவ்வாறு பதிவுகள் உறைகின்றன?' என்பதை உடல்நூல்வல்லுநர் நிரூபிக்கும் வரையில் அவை ஒப்புக் கொள்ளத்தக்கனவல்ல. மற்றும், ஒரு மானசப் பதிவு பௌதிக அறை யொன்றில் உறங்குகிறதென்பதன் பொருளென்ன வென்பதை நூலோர் நன்கு விளக்கிக் காட்டினாலன்றி, நம்மால் அது ஒப்புக்கொள்ள இயலாது. இப்போது நமக்குத் தெளிவாவது யாதெனின், 'பதிவு மனத்தே யுள்ளது; மனம் மாறி மாறிப் பிறந்து தனக்கேற்ற உடலொன்றில் புகுந்து கொண்டு தான் உறையும் ஒரு குறிப்பிட்ட உடலில் வதியத் தன்னைத் தகுதி யுடையதாக்கிக் கொள்வதற்குச் சிறிது காலம் காத்திருக்கவே வேண்டி வரும்,' என்பது. இது நமக்கு விளங்கக் கூடியதே. அக்கொள்கையின் பொருள் இதுவே. ஆன்மாவுக்கு ஏற்றதோர் உடலைத் தயாரித்துக் கொடுக்கவேண்டிய அளவிற்குப் பரம்பரையில் தொடர்ந்து செல்லும் தத்துவம் உதவுகின்றது. ஆனால் சஞ்சரிக்கும் சுபாவமுள்ள ஆன்மா ஓர் உடலினின்று மற்றோருடலைப்பெறுகிறது. நாம் எண்ணும் ஒவ்வோர் எண்ணமும், செய்யும் ஒவ்வொரு செயலும் அவ்வுடலில் நுண்ணிய வடிவில் சேமிக்கப் பெற்று மற்றோரிடம் பாய்ந்து புதுவடிவெடுக்க ஆயத்தமாய் இருக்கின்றது. நான் உங்களை நோக்கும்போது என் உள்ளத்தில் ஓர் அலை எழுகின்றது. அது ஆழ்ந்து உள்ளே சென்று மிகமிக நுண்ணியதாகின்றது. ஆனால் அது முற்றும் அழிந்து போவதில்லை. நினைவாற்றலென்ற வடிவில் ஓர் அலையாக மறுமுறையும் எழத் தயாராய் இருக்கின்றது. ஆகவே, இந்தப் பதிவுகள் அனைத்தும் என் மனத்தில் இடம் பெறுகின்றன. நான் மரிக்கும் தறுவாயில் இவற்றின்

மொத்தத் தொகை என்னுள் இறங்கும். பலர் ஒரு பந்தை ஒவ்வொருவரும் ஒவ்வொரு மட்டையினுல் தட்டி வரும் போது அது ஒவ்வொரு திசையிலும் சென்று கதவு வழியாக இறுதியில் தான் இருந்த அறையை விட்டு வெளியே சென்று விடுகிறது. அத்துடன் எதை எடுத்துச் செல்கிறது? இறுதித் திசையைக் கணிக்கும் போது, அது தாக்குதல் களின் மொத்த விளைவையே; அதுவே அதற்குத் தன் திசையைக் காட்டுகிறது. அது போன்றே, உடல் நழுவும் போது ஆன்மா செல்லும் திசையை ஈவது யாது? அவ் வுடலில் இருந்தபோது செய்துள்ள வினைகளின் கூட்டுத் தொகையும் அது எண்ணிய எண்ணங்களின் கூட்டுத் தொகையுமே யாம். இக் கூட்டுத் தொகையினுல் அது வேறு சரீரம் எடுக்கும் நிமித்தம் இருக்குமாயின் அது அவ்வுடலுக் குத் தகுந்த பௌதிகப் பொருள்களை அமைத்துத் தரத்தக்க பெற்ருரிடம் சேரும். இப்படியே அது ஒருடலினின்றும் மற்ருருடலுக்கு முறையாகச் சென்று, அதன் பொருட்டு மானிடராகவோ விலங்காகவோ உருப்பெற்று, துறக்க போகமோ எய்தி, இறுதியில் நிலவுலகிற்கே மீளும். இவ் விதமாகத் தனது அனுபவத்தை ஒரு வட்டத்தில் முடித்துக் கொள்ளும். அப்போது அதற்குத் தனது உண்மையான இயல்பு தெரியவரும். அதன் அஞ்ஞான இருள் மறைந்து, அதன் ஆற்றல் முழுதும் வெளிப்பட்டு, அதன் பூரணத் துவம் விளங்கும். ஆன்மாவுக்கு உடலெடுக்கும் தேவை இல்லாது போம்; நுண்ணிய உடலோ, சூக்குமமான மனமோ, கொள்ளவேண்டிய அவசியமே இராது போய் விடும்; அது தனது சொந்த ஒளியில் திளைத்து நிற்கும்; விடுதலைப் புத்தியுடன் விளங்கும். அதற்கு இனிப் பிறப்பு மில்லை, இறப்புமில்லை.

இனியும் இதை வளர்த்தாமல் மறு பிறவி குறித்து ஒன்றை மட்டும் எடுத்துக்கூறி விடுகிறேன். அதுதான் ஆன்மாவின் விடுதலை பற்றிய கொள்கை. அக்கொள்கை மனிதனுக்கு இயற்கையான ஒரே துர்க்குணமாய தனது வலியின்மையைப் பிறர் மீது ஏற்றிக்கூறும் பெற்றியைத் தவிர்த்து விடும். நாம் நமது குற்றம் குறைகளைக் காணமாட் டோம்; கண்கள் தம்மைக் காணும் தன்மை பெற்றவையாகா

ஆனுல், பிறர் யாவருடைய கண்களையும் காண்பனவாம். நாம் பிறர் மீது பழியைச் சுமத்தும் வாய்ப்பு நேரும்போதெல்லாம் நமது சொந்தப் பலவீனங்களையோ, நம் குற்றங்களையோ நாம் ஒப்புக்கொள்வதில்லை. கூடிய மட்டும் நமக்குள்ள குறைகளைப் பிறர்மீதோ, அது முடியாதபோது தெய்வத்தின் மீதோ ஏற்றிக்கூறவும் துணிகின்றோம்; புதிதாக ஒரு பேயைக் கற்பனை செய்து அதனை விதியெனக் கூறுகின்றோம். விதி என்பது யாது? அது எங்கு உளது? நாம் விதைத்ததையேதான் அறுவடை செய்யக்கூடும். நாமே நமது விதிக்குப் பொறுப்பாளிகளாவோம். வேறொருவருக்கும் அதற்கான புகழோ இகழ்வோ கிடையாது. காற்று அடிக்கும்போது பாய்மரத்தைத் தயாராக வைத்திருக்கும் மாலுமிகள் அதன் பயனைப் பெற்றுத் தமது பாதையில் முன்னேறிச் செல்வார்கள்; பாயை விரியாதவர்கள் காற்றின் பயனைப் பெற மாட்டார்கள்; இது காற்றின் குற்றமாகுமா? நம்முட் சிலர் துன்பத்திற்கும் சிலர் இன்பத்திற்கும் ஆட்பட்டிருக்கின்றனர். இது கடவுளின் குற்றமா? அவருடைய கருணைவிலாச மென்னும் காற்று அல்லும் பகலும் இடைவிடாது வீசிக்கொண்டேயிருக்கிறது. அவரது இரக்கத்துக்கு அழிவில்லை. நாமே நமக்குள்ள விதியைத் தேடிக்கொள்ளுகிறோம். கதிரோன் வலியவனுக்கும் எளியவனுக்கும் ஒரே வகையிலேதான் ஒளிர்கின்றான். காற்றும் பாவிக்கும் புண்ணியவானுக்கும் ஒன்று போலவேதான் வீசுகின்றது. கடவுள் யாவருக்கும் தலைவர்; தந்தையார், யாவரிடத்தும் ஒன்றுபோலவே தயையுடன் கூடி இருக்கிறார். படைப்போராகிய அவர் நம்மைப்போன்று வாழ்வின் அற்ப விஷயங்களையும் நம் கண் கொண்டு பார்ப்பதில்லை. கடவுளைப்பற்றிய எத்துணை கீழ்த்தரமான கருத்து அது? நாம் சிறு நாய்க்குட்டிகள் போன்று வாழ்வில் பலமாகப் போராடி வருகிறோம். கடவுளும் நம் போன்று விஷயங்களைக் கடுமையான வகையில் பார்ப்பாரென்று நாம் மடமையினுல் எண்ணுகிறோம். அவருக்கு நாய்க்குட்டிகளின் விளையாட்டு நன்றாகத் தெரியும். நன்மைக்கும் தீமைக்குப் அவரையே அதிகாரியாக்கி அவற்றிற்கேற்ற பரிசையும் தண்டனையையும் அவர் வழங்குகிறாரென்று நாம் அவர் மீது வீண் பழி சுமத்துகிறோம். இது

மடமையேயாகும். அவரது அளவிலாத் தண்ணளி யாவருக்
கும் உண்டு. அது யாவருக்கும் என்றும் எப்போதும் எல்லா
நிலைகளிலும் தவருது, கோடாது கிடைப்பதாகும். நாமே
தான் அதனைத் தக்கவாறு பயன் படுத்திக் கொள்ள
வேண்டும். நம்மீதே அப்பொறுப்புச் சார்ந்துளது. கட
வுளையோ, பிறரையோ, குறை கூறலாகாது. நீங்கள் துன்புறு
வதற்குப் பொறுப்பாளர் நீங்களேயாவீர்கள் என்பதை
யறிந்து உங்களையே சீராக்கிக் கொள்ளுங்கள்.

இதுவேதான் பிரச்சினைக்கு ஏற்ற தீர்வு. பிறரைக்குறை
கூறுவோர் (நாடோறும் அதிகரித்துவரும் பெரும்பாலோர்)
பொதுவாகத் துயருற்ற வாழ்வே வாழ்கின்றனர்: மதி
யிழந்து ஒழுகுகின்றனர். அவர்கள் தங்கள் தவறுகளால்
தங்களையே அந்நிலைக்குச் செலுத்திவிட்டவர்கள்; பிறர்மீது
வீணில் பழியைச் சுமத்துகிருர்கள். நிலை மட்டும் மாற்ற
மடைவதில்லை. அவர்கள் பயன்பெறுவதும் இல்லை. பழி
சுமத்தும் முயற்சி அவர்களை மேன் மேலும் பலவீனர்
களாக்கி விடுகின்றது. ஆகவே, உங்கள் குற்றங்களுக்காகப்
பிறரைப்பழிக்காதீர்கள். உங்கள் முயற்சியினுல் முன்னேற்ற
மடையப் பாருங்கள். உங்கள் சொந்தப் பொறுப்பை
நீங்களே ஏற்று, "நான் துன்புறுவதற்குக் காரணம் நானே.
அது என் செயலாலேயே விளைந்துளது. விளைவை விலக்
கவோ ஒழிக்கவோ நானே முயல வேண்டும்; வினை புரிய
வேண்டும்," என்று கூறிக்கொள்ள வேண்டும். நான்
படைத்துள்ளதை என்னுலேதான் துடைக்க இயலும். பிறர்
தோற்றுவித்ததை நான் எவ்வாறு அழிக்கக்கூடும்? ஆத
லால் உறுதியுடன், வன்மையுடன் கூடி நின்று, உங்கள்
பொறுப்பை நீங்களே ஏற்றுக்கொண்டு உங்கள் நற்கதிக்கு
நீங்களே நாயகர்களாவீர்களென்பதை நன்கறிந்து வினை
யாற்றுங்கள். உங்களுத்குத் தேவையான உதவியும் ஆற்
றலும் உங்களிடமே குடி கொண்டுள்ளன. ஆகவே, உங்கள்
எதிர்கால நலனை நீங்களே இயற்றிக்கொள்ளுங்கள். "கடந்த
காலம் தன் இறப்பைப் புதைக்கட்டும்!" உங்கள் முன்னர்
எல்லையற்ற நற்காலம் உளது. நீங்கள் மொழியும் ஒவ்வொரு
சொல்லும், எண்ணும் ஒவ்வொரு எண்ணமும், செய்யும் ஒவ்
வொரு செயலும் அதற்கு ஏற்ற பயனை விளைவிக்கும் என்ற

நினைவை எப்போதும் மறவாமல் வினையாற்றி வாருங்கள். கெட்ட எண்ணங்களும் செயல்களும் உங்கள் மேல் புலிப் பாய்ச்சலோடு பாய்வது போன்றே, நல்லெண்ணங்களும் நல்ல செயல்களும் நூறாயிரம் தேவதூதர்களைப்போல உங்களைக் காக்கத் துடிக்கின்றன என்பதை மறவாது என்றும் மகிழ்வுற்று வாழ்ந்திருப்பீர்களாக!

அமர நிலை

(அமெரிக்காவில் ஆற்றிய சொற்பொழிவு)

இந்த ஒன்றைவிட—மனித ஆன்மாவின் அமரநிலையை விட—எந்த வினு பல தடவைகளில் எழுப்பப்பட்டுள்ளது? மறுமாற்றம் பெறுவதற் பொருட்டுப் பிரபஞ்சததைத் துருவி ஆராய எந்தக் கருத்து முன் விரைகின்றது? மனித இதயத் திற்கு எந்தக் கேள்வி மிக அண்மையிலும், உவந்ததாயும் திகழ்கின்றது? எந்த வினு நம் வாழ்க்கையோடு இணைபிரி யாது பிணைக்கப்பட்டிருக்கிறது? இது கவிஞர்களுக்கும், முனிவர்களுக்கும் பூசனை ஆற்றுவோர்களுக்கும், வரும் பொருள் உரைக்கும் சான்றோர்களுக்கும், பொருளாய் வரு கின்றது. அரியணைமீது அமர்ந்து வேந்தர்கள் இதை ஆய்ந் திருக்கின்றார்கள். தெருக்களில் பிச்சையெடுக்கும் மக்கள் இதைப்பற்றிக் கனவு கண்டிருக்கின்றார்கள். மக்களினத்தில் மிகச்சிறந்தவர்கள் இதை நண்ணியிருக்கின்றார்கள். மக் களுட் பதர்கள் கூட இதை அடையவேண்டுமென்று ஆசை கொண்டுள்ளனர். இந்தப் பொருளிலுள்ள ஆர்வம் இன்னும் இறந்தொழியவில்லை. இவ்வையகத்தில் மனித வியற்கை திகழ்கிறவரையில் இது மாயவே மாயாது. இந்த ஞாலத் திற்குப் பற்பல மனங்களால் பற்பல விடைகள் அளிக்கப் பட்டுள்ளன. வரலாற்றுப் பகுதிகளுள் ஒவ்வொன்றிலும் பல்லாயிரக்கணக்கான மாந்தர் இத்தகைய ஆன்ம ஆராய்ச் சியை அறவே அகற்றியுள்ளனர்! ஆனால். வினுவின் பசுமை எப்பொழுதும் போலவே மிளிர்கின்றது. நம் வாழ்க்கைக் கொந்தளிப்பிலும் போராட்டத்திலும் அடிக்கடி நாம் அதனை மறத்தல் கூடும்! ஆனால், யாரேனும் ஒருவர் திடீரென மாண்டு போகலாம். ஒருகால் அவர் நாம் மிகவும் அன்பு பாராட்டியவராயு மிருக்கலாம். மிக நெருங்கினவராயும், நம் இதயத்தில் குடிகொண்டவராயும் திகழ்ந்த ஒருவரைப் பறி கொடுத்திருப்போம். அக்கணத்தில் நம்மைச் சூழ்ந்துள்ள உலகக் கொந்தளிப்பு, போராட்டம், சந்தடி இவை யாவும் அவிந்துபோய்விடும். இதற்கப்பால் யாதோ? நம்முடைய ஆன்மாவிற்கு யாதாகுமோ? என்ற பண்டைய வினுக்களை நம் இதயம் மீண்டும் கேட்கின்றது.

மனித அறிவு முழுவதும் அனுபவத்தினின்றே பிறக்கின்றது. அனுபவமின்றி எதையும் நாம் உணர இயலாது. பொதுவாக்கப்பெற்ற அனுபவத்தின் மீதே நமது அறிவு முற்றும் ஒழுங்குபட்ட அனுபவமே. சுற்றி நோக்கும்போது, இடையறுத மாறுதலைத் தவிர எதைக் காண்கின்றோம்? செடி விதையிலிருந்து முளைத்து, மரமாய் வளர்கின்றது. வாழ்வாம் வட்டத்தை முடித்துக்கொண்டு மீண்டும் விதைக்கே அது மீள்கின்றது. இவ்வண்ணமே ஒரு விலங்கும் தோன்றுகிறது. சில நாள் வரை உயிர் வாழ்ந்து பின்னர் மரிக்கிறது இவ்வண்ணம் அதன் வாழ்வுச் சக்கரம் சுழன்று இறுதிநிலை யடைகின்றது. இத்தகையதே மனிதனது வாழ்வும். பெருமலைகளும் இப்படியே மெல்ல மெல்ல, ஆனால் திண்ணமாகச் சிதைந்து பொடிப்பொடியாய் விடுகின்றன, ஆறுகளும் சிறுகச்சிறுக நீர்வளம் குன்றி ஆனால், உறுதியாக வற்றிப் போகின்றன. கடலிலிருந்து மழை எழுந்து கடலுக்கே செல்கின்றது. எங்கும் வட்டங்கள் இம் முறையில் முடிவடைகின்றன. பிறப்பு, வளர்ச்சி, முதிர்ச்சி, அழிவு— இவை யாவும் ஒன்றன்பின் ஒன்றாகக் கணித முறையில் சிறிதும் பிறழாத வகையில் இயங்கிக்கொண்டேயிருக்கின்றன. இதுதான் அன்றாட அனுபவம். நாம் வாழ்வு என்று வழங்கும் மிகவும் பரந்த இந்தத் தொகுதியாகிய கோடிக் கணக்கான உருவங்களும் வடிவங்களும் ஓர் அணுவிலிருந்து மிகுதியான ஆன்மிகச் செல்வத்தைப்பெற்ற சான்றோன் வரையிலுள்ள பலகோடி மாறுதல்களுக்கும் பின்னால் ஏதோ ஓர் ஒருமைப்பாடு இருக்கக் காண்கின்றோம். ஒரு பொருளிலிருந்து மற்றொன்றைப் பிரிக்கிறதாக நாம் கருதும் சுவரும் நாளுக்கு நாள் சிதைந்து விழுவதைப் பார்க்கின்றோம். பல முறைகளிலும் பல வடிவங்களிலும் காணப்படும் பொருள்கள் யாவும் ஒரே வஸ்துவே என்பது இக்கால விஞ்ஞானத்தால் உணரப்படுகின்றது. இடையறாது ஒரு சங்கிலிபோல இவற்றில் ஊடுருவிச் செல்லுகிறது ஒரே உயிராகும்; இணைப்புக்குமேல் ஓர் இணைப்பாய் எல்லையில்லாமல் தொடர்ந்து போகின்ற இந்தச் சங்கிலியைத்தான் இந்தப் பல்வேறு வடிவங்கள் சுட்டுகின்றன. இதைத்தான் பரிணாமம், விரிவு, என்கிறோம். இது தொன்மைவாய்ந்த கருத்தாகும்; மனித சமுதாயம் போலப் பழமையுடையது. மனித அறிவு ஓங்க ஓங்க

இக்கருத்து மேன்மேலும் பசுமையுற்றுத் திகழ்கின்றது. இன்னும் ஒரு பொருள் இருக்கிறது. அது முன்னோர்களால் காணப்பட்டது, ஆனால், இக்காலத்தில் முன்போலத் தெளிவாக நோக்கப்படவில்லை. அதுவே ஒடுங்குதல் அல்லது கூம்புதல், என்ற தத்துவமாகும். விதை தான் செடியாக வளர்கின்றது. ஒரு மணல் மாறுவதில்லை: தந்தை ஒருவனே குழவியாய் அமைகின்றான்; களிமண் உருண்டை குழந்தையாகாது. இந்தப் பரிணமம் எங்கிருந்து வருகின்றது என்பதுதான் வினா. விதை என்பது என்ன? அதுவே மரம். இனி வளரும் மரத்தின் தன்மைகளனைத்தும் விதையிலேதான் கரந்திருக்கின்றன. எதிர்கால மனிதனின் ஆற்றல்கள் யாவும் சிறுகுழவியில் இருக்கின்றன; இனி வரும் வாழ்வின் அம்சங்கள் யாவும் கருவில் ஒடுங்கியிருக்கின்றன. இந்த நிலை யாது? இந்தியாவின் பண்டைத் தத்துவ அறிஞர்கள் இந்நிலையை ஒடுங்குதல் என்று வழங்கினார்கள். ஒவ்வோர் அலர்தலும் ஒரு கூம்புதலை அடிப்படையாகக் கொண்டுள்ளதை நாம் பார்க்கின்றோம்.

ஏற்கெனவே கரந்தில்லாத ஒன்று விரிய இயலாது. இந்நிலையில் இக்கால விஞ்ஞானம் நமக்குத் துணைபுரிய வருகின்றது. இந்தப் பிரபஞ்சத்தில் காணப்படுகின்ற சத்தியின் கூட்டுத் தொகுதி எப்பொழுதும் ஒன்றே என்பதை கணிதம் கற்பிக்கும் தருக்க அறிவு கொண்டு நாம் உணர்கின்றோம். ஓர் அணுப் பொருளையும் அல்லது ஓர்அடி-ராத்தல் சத்தியையும் நீக்க உங்களால் இயலாது. ஓர் அணுப் பொருளை இந்தப் பிரபஞ்சத்தோடு கூட்டவோ அல்லது ஓர் அடி-ராத்தல் சத்தியைச் சேர்க்கவோ உங்களால் இயலாது. இக்காரணம் பற்றியே விரிதல் என்பது பூச்சியத்திலிருந்து நிகழவில்லை. பிறகு எங்கிருந்து இது அலர்கின்றது? முந்தியிருந்த கூம்புதல் நிலையிலிருந்தே. குழந்தை என்பது ஒடுங்கிக் கிடந்த மனிதனேயாகும். மனிதன் என்பவன் விரிந்த குழவியேயாவான்; விதை என்பது ஒடுங்கிக் கிடந்த மரமே. மரம் என்பது விரிந்த விதையே. உயிரின் விளைவுகள் யாவும் கருவில் கரந்து நிற்கின்றன. நம்முடைய பிரச்சினை இப்பொழுது சற்றுத் தெளிவடைகின்றது. இக்கருத்தோடு உயிரினத் தொடர்பையும் சேர்த்துப் பாருங்கள். மிக எளிய உயிரி

ணத்திலிருந்து மிகுதியான பூரணத்தை அடைந்த மனிதன் வரையிலும் உண்மையில் ஒரே உயிர்தான் இயங்குகின்றது. இந்த ஒரே உயிரில் பலவிதமான தோற்றங்களைப் பார்க்கின்றோம்: கரு, குழந்தையாக உரு எடுக்கின்றது; குழவி ஓர் இளைஞனாகவும் இளைஞன் கிழவனாகவும் மாறுகின்றனர். எனவே, உயிர்க் கருவிலிருந்து பூரணத்தை அடைந்த மனிதன் வரையில் உயிராகிய ஒரு சங்கிலித் தொடர்பை நோக்குகின்றோம். இதுதான் பரிணமம். ஒவ்வொரு விரிதலும் அதற்குரிய ஒடுங்குதலை அடிப்படையாகக் கொண்டுள்ளது என்பதை முன்பு கண்டோம். மெல்லமெல்லப் புலனாகின்ற இவ்வுயிரனைத்தும்—உயிர்க் கருவிலிருந்து பூரணத்தை அடைந்த மனிதன் வரையில்—இம்மண்ணுலகில் வருகின்ற கடவுளின் அவதாரம் வரையில்—விரிந்துகொண்டே போகின்றன. இந்த வரிசை முழுதுமே ஒரே உயிராகும். இந்தத் தோற்றமனைத்தும் அதே கருவில் கரந்திருக்கவேண்டும். இந்த உயிர் முழுதும், இந்தப் பாரில் தோன்றிய கடவுளும், இதில் ஒடுங்கி நின்று இதிலிருந்தே மெல்ல மெல்ல வெளிவருகின்றனர். எங்கும் பிரபஞ்சமாய் விரிந்து கிடக்கின்ற உயிரின் ஒடுங்கிய நிலைதான் இந்தச் சத்தியும் இந்தச் சங்கிலியும். இந்த அறிவுத் தொகுதிதான் கருவிலிருந்து பூரணத்தை எய்திய மனிதன் வரையில் மெல்ல மெல்ல அலர்ந்து கொண்டே போகின்றது. இது வளர்ச்சி இல்லை; அது வளர்கிறது என்ற எல்லாக் கருத்துகளையும் உங்கள் மனத்திலிருந்து நீக்கி விடுங்கள். ஒன்று வளர்ச்சியுறுகின்றது என்று கருதினோமானால் அதற்குப் புறம்பாய் உள்ள ஒன்று அதற்குத் துணை புரிகின்றதென்பதும், அதற்குப் புறம்பாய் ஒன்று இருக்கிறதென்பதும் ஏற்பட்டுவிடும். எவ்விதப் புறநிலைகளையும் சாராது தனித்தே மெய்ப்பொருள் ஒவ்வோர் உயிரிலும் கரந்து நிற்கின்றது என்னும் உண்மைக்கு வளர்ச்சி என்பது முரண்பட்டதாகும்; அது வளர இயலாது. அது எப்பொழுதுமே இருக்கிறது. ஆனால், அது தன்னைப் புலப்படுத்திக் கொள்கின்றது.

காரியம் என்பது காரணத்தின் தோற்றமே. காரண காரியங்களுக்கு இயல்பிலே யாதொரு மாறுபாடுமில்லை. இந்தக் கண்ணாடியைச் சான்றாக எடுத்துக்கொள்ளுங்கள். இதற்

குரிய பொருள் இருந்தது. இந்தப்பொருளும் இதைப் படைப் போனது சங்கற்பமும் சேர்ந்து இந்தக் கண்ணுடியை அமைத்தன. இவ்விரண்டுமே கண்ணுடிக்குக் காரணங்கள்; அவை அதிலேயே யிருக்கின்றன. எந்த முறையில் சங் கற்பம் இருந்தது? சேர்க்கும் சக்தியாகவே. இந்தச் சேர்க் கைச் சக்திஇல்லாது ஒழியுமாயின், ஒவ்வொரு சிறு பகுதியும் சேராது கீழே விழுந்துவிடும். இக்காரணத்தால் காரியமென் பது எது? காரணத்தைப் போன்றதேதான் காரியமும்; ஆனால், வேறு ஓர் உருவடைகின்றது; வேறு முறையில் அமை கின்றது. காரணம் உருமாறி காலவரையறைக்குள் வரும் போது காரியமாகிறது; இதை நாம் நினைவுகூர வேண்டும். நாம் கொண்ட வாழ்வின் கருத்தை இக்கோணத்தினின்று ஆராயும்போது உயிர்க் கருவிலிருந்து, மிக உயர்ந்த பூரண மடைந்த சான்ருேன் வரையிலுள்ள படிகளின் தோற்றம் யாவும் ஓர் அகண்டமாய் விரிந்திருக்கிற வாழ்வுதான். எனினும் முடிபுக்கு நாம் வருவோம். முதலில் இது கூம்பிச் சூக்குமமாகின்றது; காரணமான சூக்குமத்திலிருந்து இது விரிந்துகொண்டே போய்த் தோற்றமளித்து, தூலமாகின் றது.

எனினும், அமர நிலை என்ற பிரச்சினை இன்னும் முடிந்த பாடில்லை. பிரபஞ்சத்தில் ஒவ்வொன்றும் அழியாத இயல்பு வாய்ந்தது என்பதைக் கண்டோம். ஒன்றும் புதுமை அன்று; புதுமையாக இருக்கவும் இயலாது. படிப்படியான இந்தத் தோற்ற வரிசை மாறி மாறிச் சகடககால் போல ஏறுவதும் இறங்குவதுமாக இயங்கிக்கொண்டே இருக்கும். இந்தப் பிரபஞ்சத்தில் நிகழும் சலனங்கள் யாவும் அலைகள் போல் ஓங்கி யடங்கியும் விடுகின்றன. சூக்கும வடிவங்களிலிருந்து ஒழுங்கமைப்புகளுக்குமேல் ஒழுங்கமைப்புகள் பிறந்து விரிந்து தூலத்தை எய்திப் பிறகு கரைந்து மீண்டும் சூக்கு மத்தில் ஒடுங்கிவிடுகின்றன. மீண்டும் சூக்குமத்திலிருந்து கிளம்பி ஒரு குறிப்பிட்ட கால அளவு வரையில் விரிந்து இறுதியில் அவற்றின் மூலகாரணத்திற்கே திரும்பி விடு கின்றன. வாழ்வு முற்றும் இப்படியே தான் இயங்குகின்றது. ஒவ்வொரு வாழ்வும் தோன்றி அதன் காரணத்திற்கே சென்று விடுகின்றது. மறைவது எது? உருவந்தான்.

உருவம் துண்டு துண்டாய்ச் சிதைந்து விடுகின்றது; ஆனால், மீண்டும் காட்சி அளிக்கின்றது. ஒரு முறையில் ஆலோசிக்கும் போது உடல்களும் உருவங்களும் அழி வற்றன என்று கூறிவிடலாம். எப்படி? சூதாடும் பாச்சி கையை உருட்டுவதாக வைத்துக்கொள்வோம். 6, 5, 3, 4 என்ற விகிதத்தில் விழுகின்றன. காய்களை எடுத்து எடுத்து உருட்டிக் கொண்டேயிருந்தோமானால், அதே எண்கள் கொண்ட முறை தோன்றும் காலம் வராமற் போகாது. மேலே குறிப்பிட்ட எண்களின் சேர்க்கை வந்தே தீரும். இந்தப் பிரபஞ்சத்திலுள்ள ஒவ்வொரு துகளும்—ஒவ்வோர் அணுவும்—சூதாட்டக் காயாக நான் கருதுகிறேன். அவை எறியப் படுகின்றன; சேர்ந்து சேர்ந்தே வருகின்றன. நம்முன் தோன்றுகின்ற வடிவங்கள் யாவும் ஒரே சேர்க்கை தான். ஒரு கண்ணாடி, ஒரு மேசை, ஒரு நீர்க்குடம்—இவை போன்றவற்றின் உருவங்களே நம் முன் விரிகின்றன. இது ஓர் இணைப்பேயாகும். காலத்தில் இந்த இணைப்புக் குலைந்து விடும். ஒரு காலம் வந்தே தீரும்: அப்பொழுது இதே இணைப்புத் தோன்றும். நீங்களும் இருப்பீர்கள். இந்த உருவமும் இருக்கும். அதே பொருளைப் பற்றிப் பேசுவார்கள்; அந்தக் குடமும் இங்கே இருக்கும். எண்ணிறந்த தடவைகளில் இப்படித்தான் இருந்திருக்கிறது; கணக்கிலாத் தடவைகளில் இது திரும்பத் திரும்ப நிகழும் பௌதிக உருவங்களைப் பற்றி இனிக் கூற வேண்டுவதில்லை. இதிலிருந்து நாம் என்ன அறிந்து கொள்ளுகிறோம்? பௌதிக உருவங்களின் சேர்க்கை இடையறாது திரும்பத் திரும்பக் காட்சி அளித்துக் கொண்டே இலங்கும் என்பதே.

இந்தக் கொள்கையினின்று சுவைமிக்க ஒரு முடிபு விளைகின்றது. பின்வரும் நிகழ்ச்சிகளை இதைக் கொண்டு விளக்கலாம்: மற்றவர்களுடைய பண்டைப் பிறவியைப் பற்றியும் வருங்காலத்தைப் பற்றியும் உரைக்கக் கூடிய ஒரு மனிதனை நீங்கள் பார்த்திருக்கக்கூடும். ஒழுங்கு படுத்தப் பட்ட ஏதோ ஓர் எதிர்காலம் இல்லாமற் போகுமாயின், எப்படி வருங்காலத்தை உணர்த்தக்கூடும்? இறந்த காலத்தின் விளைவுகள் எதிர் காலத்தில் மீண்டும் தோன்றும்; நாம் அங்ஙனமே காண்கின்றோம். சிக்காகோவில் அமைக்கப்

பட்ட பெரிய பெர்ரிஸ் இராட்டினத்தைப் பார்த்திருப்பீர்கள். சக்கரம் சுழல்கின்றது. அந்த இராட்டினத்திலுள்ள தொட்டில்கள் ஒன்றன்பின் ஒன்றாக ஒழுங்காக வந்துகொண்டேயிருக்கும். அவற்றில் வரிசை வரிசையாக மக்கள் அமர்வார்கள். ஒரு சுற்றுப் போனதும் அவர்கள் இறங்கிவிடுவார்கள்; மற்றொரு வரிசை மக்கள் ஏறுவார்கள். கீழ் இன விலங்குகளிலிருந்து மிக உயர்ந்த சான்றோன் வரையிலுள்ள தோற்றங்கள் வரிசை வரிசையாகப் போவதும் இறங்குவதுமான மக்களை ஒக்கும். பெர்ரிஸ் இராட்டினத்தின்* சங்கிலியை நிகர்க்கும் இயற்கையும். அது முடிவற்றது; எல்லையற்றது. அதிலிருக்கிற தொட்டில்களே பல்வேறு உடல்களும் உருவங்களுமாதும். புதிய புதிய ஆன்மாக்களின் வரிசைகள் அவற்றில் அமர்ந்து மேலே போய்க்கொண்டேயிருக்கும்; பூரணத்தை அடைந்ததும் இந்த இராட்டினத்தை விட்டு வெளியேறிவிடும். ஆனால், இராட்டினம் சுழன்று கொண்டேதான் இருக்கும். உடல்கள் இந்தச் சக்கரத்தில் அமர்ந்திருக்கும் வரையில், கணக்கு முறையில் மிகத் திண்ணமாக இவை எங்கே செல்லும் என்பதை முன்னரே மொழிய இயலும். ஆன்மாக்களைப் பற்றி அவ்வண்ணம் இயம்புவது இயலாது; இறந்த காலத்தையோ, எதிர் காலத்தையோ சற்றும் பிழையின்றி உணர்த்த இயலும். அதே பௌதிகத் தோற்றங்கள் குறிப்பிட்ட காலப் பகுதிகளில் திரும்பத் திரும்ப வந்துகொண்டேயிருக்கும். எஞ்ஞான்றும் இடையறாது இதே சேர்க்கை நிகழ்ந்தேயாகும். ஆனால் அது ஆன்மாவின் அமர நிலையாகாது. எந்தச் சத்தியும் மாண்டு

*விளையாட்டிற்குரிய ஓர் இயந்திரத்தை அமைத்தார்கள். அந்த மிகப்பெரிய இயந்திரம், சத்தியால் இயக்கப்பட்ட எஃகுச் சக்கரமாகும். நிலைத்துள்ள அச்சில் அது சுழன்றுகொண்டேயிருக்கும் அதன் ஓரத்தில் தொட்டில்கள் தொங்கிக்கொண்டிருக்கும். சமமான தொகையுடைய பிரயாணிகளை அவை சுமந்து செல்லும்—வெப்ஸ்டர். ஜி. டபிள்யு. ஜி. பெர்ரிஸ் என்பவரால் 1893-ம் ஆண்டு முதன் முதலாகச் சிக்காகோ பொருட்காட்சியில் இது அமைக்கப்பட்டது. இந்தியாவில் இதைப் போன்ற இராட்டினம் உண்டு. அது மரத்தினால் இயற்றப்பட்டது. திருவிழாக் காலங்களில் இதைப் பெரும்பாலும் காணலாம்—ஆசிரியர்.

போகாது; எந்தப் பௌதிகத்தையும் அழிக்க இயலாது. அதற்கு என்ன நேரிடும்? எந்த மூலத்திலிருந்து வந்ததோ, அந்த மூலத்தை நண்ணுகிற வரை, அது முன்னும் பின்னும் சென்று மாறுதல் அடையும். ஒரு நேர்க் கோட்டில் சலன மில்லை. ஒவ்வொன்றும் ஒரு வட்டத்திலே தான் சலிக்கின்றது. ஒரு நேர்க் கோட்டை எல்லையில்லாமல் இழுத்துக் கொண்டே போனால், ஒரு வட்டமாய்விடும். இது உண்மையாயின், எந்த ஆன்மாவுக்கும் மாறுத இழிவுநிலை இருக்க இயலாது. ஒவ்வொன்றும் வட்டத்தைப் பூர்த்தி செய்து, அதனதன் மூலத்திற்குச் செல்ல வேண்டும். நீங்களும் நானும், ஆன்மாக்களும் யார்? அலர்தல் கூம்புதல் என்னும் நம்முடைய ஆய்வில் நீங்கள், நான் எல்லாம், அகண்ட அறிவு, அகண்ட மனம், அகண்ட உயிர் ஆகிய இவற்றின் பகுதிகளாக இருந்தே தீரவேண்டும் ஏன்பதை நோக்கினேம். இவை யாவும் ஒடுங்குகிற நிலை உண்டு; நாம் நம் வட்டத்தை முடித்துக்கொண்டு இந்த அகண்ட அறிவுக்கு மீள வேண்டும். இந்த அகண்ட அறிவுதான் கடவுளாவார். இந்த அகண்ட அறிவைத்தான் மக்கள் அண்ணல் என்றும், கடவுளென்றும், இயேசு என்றும், புத்தரென்றும், பிரம்மம் என்றும் வழங்குகின்றார்கள். பௌதிக வாதிகள் அதைச் சத்தியெனக் காண்பார்கள்; அஞ்ஞேய வாதிகள் புகலரிய எல்லையற்ற ஒன்று என்று இயம்புவார்கள்; நாமனைவரும் அதன் பகுதிகளே.

இதை இரண்டாம் கருத்து எனக் கொள்ளலாம்; இது போதாது. இன்னும் ஐயப்பாடுகள் இருந்தே தீரும். எந்தச் சத்திக்கும் அழிவில்லை என்று கூறுவது நலமே; ஆனால் எல்லாச் சத்திகளும் உருவங்களும் சேர்க்கைகளே. அவ்வண்ணமே நாம் காண்கின்ற ஒவ்வோர் உருவமும் கூட்டுப் பொருளே. இதை அமைக்க வேண்டிய பாகங்கள் இதில் அடங்கி யிருக்கின்றன; பௌதிகங் கண்ட சத்தியைப் பற்றிய கருத்தை ஆராய்வோம்: அது எல்லாம் சேர்ந்த ஒரு முழுச் சத்தியே—பல சத்திகளின் விளைவான ஒரு சத்தியே. இந்நிலையில் உங்களுடைய தனி வடிவத்திற்கு யாதாகுமோ? சேர்க்கைப் பொருள் ஒவ்வொன்றும் விரைவிலோ அல்லது சற்றுக்காலம் தாழ்த்தோ அதை உருவாக்கின அமிசங்களுக்கு மீண்டும் ஏகிவிடும். பிரகிருதியின் சேர்க்கையின்

விளைவாலோ, அல்லது சத்தியின் விளைவாலோ தோன்றிய எந்தப் பொருளும் இந்தப் பிரபஞ்சத்தில் இதைச் சமைத்த அமிசங்களுக்கு மீள வேண்டும். சில காரணங்களின் விளைவுகளால் ஏற்பட்ட ஒன்று மரித்தேதீரும்; அல்லது அழிவுறும் என்பது திண்ணம். இது சிதைந்து சிதறிப் போகின்றது. அது அதன் அமிசங்களில் மீண்டும் கரைந்து விடும். ஆன்மா என்பது சத்தி அன்று; எண்ணமும் அன்று. அது எண்ணத்தைப் படைத்திருக்கின்றது; ஆனால் எண்ணமன்று; உடலை அமைக்கின்றது; ஆனால் உடலன்று. 'ஏன்?' என்று வினவலாம். உடல் ஆன்மாவாய் இருக்க இயலாதென்பதை அறிகின்றோம். ஏன்? அதற்கு அறிவில்லை. ஒரு பிணத்திற்கு அறிவுண்டோ? கசாப்புக் கடையில் உள்ள ஓர் இறைச்சித் துண்டு அறிவுள்ளதாய்த் திகழுமோ? நாம் கருதும் அறிவு என்பது யாது? எதிர்ச் செயல் புரியும் சத்தியே. இந்தத் துறையில் இன்னும் சற்று நாம் புகுந்து துருவி ஆராயவேண்டும். இங்கே ஒரு குடம் இருக்கின்றது. அதை நான் காண்கின்றேன். எப்படி? குடத்திலிருந்து ஒளிக்கதிர்கள் என் கண்களில் விழித்திரை மீது ஒரு படத்தை எழுப்புகின்றன. ஆயினும் காட்சிக்குப் புலனாகவில்லை. உடலாராய்ச்சி வல்லுநர் உரைக்கும் உணர்ச்சி நரம்புகள் அதை உள்ளே இழுத்துச் செல்கின்றன. இது வரையில் யாதொரு பிரதிவினையும் தோன்றவில்லை. மூளையிலுள்ள நரம்புமையம் இந்தப் பதிவை மனத்திற்கு எடுத்துச் செல்கின்றது. அப்பொழுது மனம் பிரதிவினை ஆற்றத் தொடங்குகின்றது; அக்கணமே அதன் முன் குடத்தின் வடிவம் காட்சியளிக்கின்றது. இதை விடப் பொதுவாக உள்ள ஒரு சான்றை எடுத்துக்கொள்ளுங்கள். உங்களுடைய மூக்கு நுனியில் ஒரு கொசு உட்காருவதாக நினைத்துக் கொள்ளுங்கள். அது உங்களுக்கு கொசு அளிக்கக் கூடியதான உணர்ச்சியை அளிக்கின்றது. நீங்கள் என் பேச்சில் மிகவும் ஆழ்ந்திருந்தால், கொசு உங்கள் மூக்கின் நுனியில் உட்கார்ந்திருப்பதைக் கூட நீங்கள் உணரமாட்டீர்கள். அது என்ன ஆயிற்று? உங்களுடைய உடலினது தோலின் ஒரு பாகத்தைக் கொசு கடிக்கின்றது. நரம்புமையங்களும் இருக்கின்றன. அந்தக் கடிப்பதிவும் அமை

கின்றது; ஆளும் மனம் வேறு ஒன்றில் ஆழ்ந்திருந்த காரணத்தால், பிரதிவினை செய்ய இயலாது போகின்றது. அக்காரணம் பற்றியே கொசு இருக்கிறதுங் கூடத் தெரிகிறதில்லை. ஒரு பதிவு அமைகின்ற பொழுது மனம் பிரதிவினை செய்யாதபோது அதைப் பற்றிய நினைவே இருப்பதில்லை. பிரதிவினை இயங்குங்கால் நாம் ஒன்றை உணருகிறோம், காண்கிறோம்; செவிமடுக்கின்றோம்; இப்படியே அடுக்கிக் கொண்டு போகலாம். இந்தப் பிரதிவினை தொழிலாற்றும் போதுதான் சாங்கியத் தத்துவ ஆசிரியர்கள் சாற்றுகிறது போலவே, அறிவொளி திகழ்கின்றது. உடல் ஒன்றையும் ஒளியுறச் செய்ய இயலாது; அறிவு கவனம் செலுத்தாமல் போகுமாயின் ஓர் உணர்ச்சியும் எழ இயலாது. சில நிகழ்ச்சிகள் அறியப்பட்டிருக்கின்றன: ஒரு மனிதன்—ஒரு குறிப்பிட்ட மொழியைக் கல்லாதவன்—சில தனிப்பட்ட சூழ்நிலைகளில் அந்த மொழியைப் பேசுவது காணப்படுகின்றது. பிறகு அதைப்பற்றி ஆராய்ந்தபோது, அந்த மனிதன் குழந்தையாயிருந்தபொழுது அந்த மொழியை வழங்குகிறவர்களிடையே வாழ்ந்திருந்தான் என்ற உண்மை புலனாயிற்று. அந்த மொழியைப் பற்றிய பதிவுகள் அவன் மூளையில் அமைந்திருந்தன.

ஏதோ ஒரு காரணத்தால் மனம் பிரதிவினை செய்ய முற்பட்டது. அவனுக்கு அறிவொளி திகழ்ந்தது; அந்த மொழியில் அவனால் பேச இயன்றது. மனம் மட்டும் இருத்தல் போதாது என்பதை இது உணர்த்துகின்றது. மனமும் மற்றொன்றிற்குக் கருவியாய் அமைந்துள்ளது. உடல் சம்பந்தப்பட்ட வரையில், மனம் அந்த மொழியைத் தன்னிடத்தில் அடக்கிவைத்திருந்தது, அதை அவனால் அறிய முடியவில்லை. பிறகு ஒரு காலம் வந்தது. அப்பொழுது அவன் அதை உணர்ந்தான். மனத்திற்குப்பின் ஒன்று இயங்குகின்றதன்றோ? அந்த சிறுவன் ஒரு குழவியாயிருந்தபோது, அந்த சத்தியை வேறொருவன் பயன்படுத்திக்கொள்ளவில்லை; அந்தச் சிறுவன் வளர்ந்து வந்தபொழுது, அதற்குற்ற வாய்ப்பில் எழுந்த அந்தச் சத்தியை அவனே பயன்படுத்திக் கொண்டான். முதலில் உடல், அதற்குப்பின் மனம் அல்லது எண்ணத்தின் கருவி, அதற்கப்பால் மனிதனது ஆன்மா (வட மொழியில்). மூளையில் ஏற்படுகின்ற சிறு சிறு மாறுதல்களை

யும் எண்ணங்களேயும் ஒன்றென நினைக்கும் இக்காலத் தத்துவ ஆராய்ச்சி அறிஞர்கள் ஆன்மா ஒன்று இல்லை என்று பெரும்பாலும் கூறிவிடுகின்றனர்கள். அதற்கு அவர்களால் விளக்கம் தர இயலவில்லை. மனம் மூளேயோடு நெருங்கிய தொடர்புடையது. உடல் மாறுதல் உண்டாகுமாயின், அந்த மூளை அழிந்துவிடுகின்றது. எல்லாவற்றையும் ஒளியுறச் செய்கிறது ஆன்மாதான்; மனந்தான் அதன் கையிலுள்ள கருவியாகும். அந்தக் கருவி வாயிலாக ஆன்மா புறக்கருவியைப் பற்றுகிறது. அப்பொழுதுதான் உணர்வு பிறக்கின்றது. புறக்கருவிகள் பதிவுகளைப்பற்றிக் கரணங்களுக்கு எடுத்துச் செல்கின்றன. கண்களும் செவிகளும் ஏற்றுக்கொள்ளுகிற கருவிகளே தவிர, வேறல்ல என்பதை எப்பொழுதுமே நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். அந்தக் கரணங்களே—மூளையின் மையங்களே—தொழில் புரிகின்றன. வடமொழியில் இந்த மையங்களை 'இந்திரியங்கள்' என்று இயம்புவார்கள். அவை பதிவுகளை மனத்திற்கு ஈர்த்துச் செல்கின்றன. அந்த மனம் தனது மற்ருெரு நிலேயான சித்தத்திற்கு அவற்றை அழைத்து ஏகுகின்றது. இவை யாவும் சங்கற்பம் என்ற உருவை அடைகின்றன. இவை யனைத்தும் மன்னர்க்கு மன்னனுய் அரியணைமீது ஆட்சிபுரிகின்ற மனிதனுடைய ஆன்மாவுக்கு அந்தப் பதிவுகளைச் சமர்ப்பிக்கின்றன. அவன் கண்ணுற்றுக் கட்டளையிடுகின்றுன்; மனம் இந்திரியங்கள்மீது ஆட்சி புரிகின்றது. இந்திரியங்கள் புற உடல் மீது ஆணைகளை செலுத்துகின்றது. உண்மையிலேயே காண்பது, ஆட்சி புரிவது, நடத்துவது, படைப்பது, எல்லாவற்றையும் ஆட்டிவைப்பது மனிதனிடம் கரந்து நிற்கும் ஆன்மாவேயாகும்.

மனிதனது இந்த ஆன்மா உடலன்று; எண்ணமுமன்று, ஒரு சேர்க்கைப் பொருளன்று. ஏன்? சேர்க்கைப் பொருளொன்றைக் காண இயலும்; அல்லது கற்பனை செய்து கொள்ள இயலும். ஆனுல், நம் கற்பனை காண இயலாதது, உணர இயலாதது; சேர்த்துப் பிணிக்க இயலாதது. சத்தியாகவும், பிரகிருதியாகவும், காரண காரியமாகவும், சேர்க்கைப் பொருளாகவும் இருக்க இயலாதது. மனப்பிரபஞ்சம் வரையிலேதான்—எண்ண ஞாலம் வரையிலேதான்—இந்தச்

சேர்க்கைப் பொருளுலகம் இலங்கும். இதற்கப்பால் அதன் இயல்பு பொருந்தாது. இந்தச் சேர்க்கைப்பொருளின் எல்லை சட்டதிட்ட நியதிக்கு—ஆட்சிக்கு—உட்பட்டதே. நியதிக்கு அப்பால் ஒன்று இருக்குமாயின், அது சேர்க்கைப் பொருளாக இருக்க இயலாது. மனிதனது ஆன்மா, காரணகாரிய நியதியைக் கடந்து நிற்கின்றது. அக்காரணம் பற்றியே அது சேர்க்கைப் பொருளன்று. அது எப்பொழுதும் சுதந்தரமுள்ளது, சட்ட நியதிக்கு உட்பட்ட எதன் மீதும் அது ஆணை செலுத்துகின்றது. அது இறவாது; இறப்பதென்பது அதை உருவாக்கிய அமிசங்களுக்கு மீண்டும் செல்வதாகும்; சேர்க்கைப் பொருள் அல்லாதது இறக்க இயலுமோ? அது மாண்டுபோகின்றது என்று மொழிவது பயனற்ற முழுப் பிதற்றலேயாகும்.

நாம் இப்பொழுது மிக மிக நுட்பமாகச் சென்று கொண்டிருக்கின்றோம்; உங்களுள் சிலர் இதைக்கண்டு அச்சங்கொள்ளவும் கூடும். பொருள், சத்தி, எண்ணம் இவற்றால் ஆகிய இச்சிறு பிரபஞ்சத்திற்கப்பால் இலங்குகின்ற ஆன்மா, கலப்பற்ற ஒன்றே ஆகும். ஒன்றே ஆகிய இது, இறக்க இயலாது. சாகாதது உயிர் வாழவும் இயலாது. மரணமும் வாழ்வும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களைப் போன்றவைகளே. வாழ்வென்பது மரணத்தின் மற்றொரு பெயராகும்; மரணமும் அவ்விதமே வாழ்வின் மற்றொரு பெயராகும்; குறிப்பிட்ட ஒருவிதமான தோற்றத்தின் முறையை வாழ்வு என்று கூறுகின்றோம். அவ்வண்ணமே அதே பொருளின் குறிப்பிட்ட தோற்றத்தின் முறையை இறப்பு என்று இயம்புகின்றோம். ஓர் அலை உயர ஓங்கி எழும்போது அதுவே வாழ்வாகும்; அதே அலை பள்ளத்தில் ஆழ்ந்துவிடும்போது அதுவே சாவாகும். மரணத்திற்கப்பாலுள்ள ஒன்று இயல்பாகவே வாழ்வுக்கும் அப்பாலுள்ளதாய் இருக்க வேண்டுமென்பதைக் காண்கின்றோம். அகண்ட—சத்தியாய் இருக்கின்ற ஒன்றின்—அதாவது கடவுளின் பாகமே மனிதனது ஆன்மாவாகும் என்ற முடிவை நான் உங்களுக்கு நினைவூட்டுகின்றேன். அது பிறப்பு இறப்பு என்னும் இவ்விரண்டிற்கும் அப்பாலுள்ளது. நீங்கள் பிறக்கவில்லை; ஆதலால், மரிக்கவும் மாட்டீர்கள். நம்மைச் சுற்றி

லும் பிறப்பையும் மரணத்தையும் காண்கின்றோமே! இவை இரண்டும் உடலைச் சார்ந்தவைகளே. ஏனெனில், ஆன்மா எங்கும் நிறைந்தது. "அது எப்படி இயலும்?" என்று நீங்கள் வினவக்கூடும். "பற்பல மனிதர்கள் இங்கே அமர்ந்திருக்கின்றார்கள் எனினும், ஆன்மா எங்கும் நிறைந்தது என்று உரைக்கின்றீர்கள்." சட்ட நியதியைக் கடந்த, காரண காரியத்திற்கப்பாலுள்ள ஒன்றை கட்டுப் படுத்த எதுதான் உள்ளது என்றுதான் நான் மொழிகின்றேன். இந்தக் கண்ணுடி வரையறுக்கப்பட்டுள்ளது; இது எங்கும் நிறைந்ததன்று. ஏனெனில், இதைச் சூழ்ந்துள்ள பிரகிருதி இதை இந்த வடிவைக் கொள்ளும்படி வற்புறுத்துகின்றது. இதை வளர்ந்து ஓங்க விடாது தடுக்கின்றது. இதைச் சுற்றியுள்ள ஒவ்வொன்றாலும் இது எல்லைக்குட்படுத்தப்பட்டுள்ளது; ஆதலால், இதற்கு வரம்பு ஏற்பட்டு விட்டது.

எது ஒரு நியதிக்கும் புறம்பாயுள்ளதோ, எதன் மீது ஆட்சிபுரியதற்குரியது ஒன்றுமில்லையோ, அது எவ்வண்ணம் வரையறுக்கப்படும்? ஆகையால், அது எங்கும் நிறைந்ததே. நீங்கள் இந்தப் பிரபஞ்சத்தில் எங்கும் நிறைந்துள்ளீர்கள். அப்படியானால், 'நான் பிறக்கின்றேன்; இறக்கின்றேன்,' என்று இவ்வண்ணம் இயம்புகின்றோமே இது எங்ஙனம்? இவை யாவும் அறியாமையால் பிறந்த போச்சு; மூளையின் மாய மயக்கமே. நீங்கள் பிறக்கவும் இல்லை; இறக்கவும் இல்லை. உங்களுக்குப் பிறப்பும் இல்லை; மறு பிறப்புமில்லை; வாழ்வுமில்லை, அவதாரமும் இல்லை. சுருங்கக் கூறுமிடத்து உங்களுக்கு ஒன்றுமே இல்லை. வருவது என்பதும் போவது என்பதும் என்ன? பொருளற்ற பிதற்றலே. நீங்கள் எங்கும் உள்ளீர்கள். வருவதும் போவதும் தூக்கும் உடலில், நீங்கள் மனம் என்று கருதுகிற ஒன்றில், ஏற்படுகிற மயக்கமே தவிர வேறன்று. இது நிகழ்ந்துகொண்டேதான் இருக்கும். விசும்பின் மீது மிகச் சிறிய பொட்டுப்போல—ஒரு முகில் போல அது செல்கிறது. அப்படிச் செல்லும்போது விண்ணே நகர்வது போலத் தோன்றுகின்ற ஒரு மயக்கத்தை அது எழுப்பிவிடும். திங்களின் முன் ஒரு முகில் தவழும், அப்பொழுது மதிதான் ஊர்ந்து செல்கிறது என்று நினைப்பீர்கள். புகைவண்டியில் பயணம் செய்யும்போது தரைதான் பறந்து

பாய்வதாகக்கருதுவீர்கள்; படகில் அமர்ந்து நீங்கள்விரைந்து செல்லும்போது தண்ணீரே நகர்கின்றது என்று எண்ணுவீர்கள். உண்மையிலேயே நீங்கள் போகவும் இல்லை, வரவும் இல்லை. நீங்கள் பிறக்கப்போவதில்லை; உங்களுக்கு மறுபிறவியும் இல்லை. நீங்கள் எல்லையற்ற மெய்ப்பொருள்; எக்காலத்தும் உள்ளீர்கள். பந்தமற்ற நீங்கள் காரணகாரிய நியதிக்கு அப்பால் நிற்கின்றீர்கள். வருவதும் போவதும் பற்றிய வினாவிற்கு இடமே இல்லை. அது வெறும் பிதற்றலே. பிறவியே இல்லாத பொழுது மரணமும் உண்டோ?

தருக்கச்சர்ச்சையின் முடிவிற்கு வர இன்னும் ஒரு படி மேலே செல்ல வேண்டும். நாம் நடுவில் தங்குவது என்பது இயலாது. புலன் கடந்த பொருளாராய்ச்சியாளர்கள் ஈவிரக்கமின்றி வழக்காடிக்கொண்டே போவார்கள். நாம் எல்லா நியதிகளையும் கடந்த காரணத்தால், எல்லாம் அறிந்தவர்களாயும், பேரின்பமயமானவர்களாயும் இருந்தே தீர்வோம். எல்லா அறிவும், எல்லா ஆற்றலும், எல்லாப் பேரின்பமும் நம்மிடத்தே திகழும். ஆம்; இது உண்மைதான். நீங்கள் எல்லா அறிவுமுடையவர்களாகவும் எங்கும் நிறைந்தவர்களாகவும் இந்தப் பிரபஞ்சத்தில் இலங்குகிறீர்கள். இப்படித் திகழக்கூடிய பலர் இருத்தல் கூடுமோ? எங்கும் நிறைந்தவர் கோடிக்கணக்காக இருக்க இயலுமா? இயலாது! அப்போது நாமெல்லாம் என்ன ஆவோம்? நீங்கள் ஒன்றே, அத்தகைய ஆன்மா ஒன்றே, அந்த ஒரே ஆன்மா நீங்களே. இந்தச் சிறிய பிரகிருதிக்குப் பின்னால் மிளிர்வதை ஆன்மா என்கிறோம். இருப்பது ஒரேப் பொருளே. அது எங்கும் நிறைந்தது; அறிவுமயமானது; பிறப்பற்றது; சாவற்றது. "அவனது ஆட்சி மூலந்தான் வானம்பு விரிகின்றது; காற்று வீசுகின்றது; ஞாயிறு ஒளிர்கின்றது; எல்லாம் உயிரோடு வாழ்கின்றன. பிரகிருதியில் திகழும் மெய்ப்பொருள் கடவுளே. அவர் ஆன்மாவிற்கோர் ஆன்மாவாய் விளங்குகின்றார். இல்லை, ஒரு படி மேலே செல்க. நீங்கள் அவரே. நீங்கள் அவரோடு இரண்டறக்கலந்து நிற்கின்றீர்கள். எங்கெங்கே இரண்டு பொருள்கள் தோன்றுமோ அங்கங்கே அச்சமும் அபாயமும், ம்பாராட்டமும், பூசலும் கிளர்ந்தெழுந்துவிடும். எல்லாம் ஒன்றாய் இலங்குமாயின், பகைப்

பதற்த யார் உளர்? யாரோடு போராடுவது? எல்லாம் அவரே யாகில் யாரோடு நீங்கள் போர் புரியக் கூடும்? வாழ்வின் இயல்பிற்கும் மெய்ப்பொருளுக்கும் இதுதான் தக்க விளக்கம் அளிக்கின்றது; இதுதான் நிறைவு. இதுதான் கடவுள். பலவற்றைக் காணும்போதெல்லாம் நீங்கள் மாய மயக்கத் தில் இருக்கிறீர்கள். "பலவாய்த் தோன்றும் இவ்வையகத் தில் எவனொருவன் ஒரு பொருளைக் கண்ணுறுகின்றானோ, இடையறாது மாறுதல் அடைகின்ற ஞாலத்தில் எவனொரு வன் மாறுதலில்லாத அப்பரம்பொருளைத் தனது ஆன்மாவுக் கோர் ஆன்மாவாக நோக்குகின்றானோ, அல்லது தானாகவே பார்க்கின்றானோ, அவனே தனை நீங்கிப் பேரின்ப முற்றவன், குறிக்கோளை எய்தியவன்." ஆதலால், நீங்கள் அதுவே, இந்தப் பிரபஞ்சத்தின் கடவுளும் நீங்களே. ('தத்துவமஸி'— அதுதான் நீ) 'நான் ஓராடவன்; நான் ஒரு நங்கை; நோயுற் றிருக்கிறேன். உடல் நலன் பெற்றிருக்கின்றேன்; வலிமை யுடையவனாய்த் திகழ்கிறேன்; பலவீனமாய்க் காட்சி அளிக் கின்றேன்; நான் பகைக்கின்றேன்; அல்லது அன்பு செய் கின்றேன்; சிறுது ஆற்றல் படைத்துள்ளேன்" என்னும் இத் தகைய பல்வேறு கருத்துகள் யாவும் மயக்கமே. இவற்றை அறவே அகற்றுங்கள். உங்களைப் பலவீனப் படுத்துவது எது? அஞ்சச் செய்வது எது? இந்தப் பிரபஞ்சத்தில் நீங்களே அந்த மெய்ப்பொருள். எது உங்களை அச்சுறுத்துகின்றது? நிமிர்ந்து நின்று சுதந்தரராய் இருங்கள். உலகில் உங்களைப் பலவீனப் படுத்தும் ஒவ்வோர் எண்ணமும் சொல்லுமே ஒரே தீமையென்பதை உணர்வீர்கள். எது உங்களைப் பலவீன மாகச் செய்கின்றதோ, எது உங்களை அஞ்சும்படி புரி கின்றதோ, அதுதான் தீமை; அதை விலக்குவீர்களாக. உங்களை அச்சுறுத்த வல்லது யாது?

பரிதிகள் விழுந்தாலென்ன? மதிகள் சிதைந்து மண்ணு லென்ன? கோள்களுக்கு மேல் கோள்களாக எல்லாம் பெயர்த்தெறியப்பட்டு மாபேரழிவுற்றாலும் அதனால் உங் களுக்கென்ன? குன்றுபோல் நிமிர்ந்து நில்லுங்கள். நீங்கள் அழிவற்றவர்கள். நீங்களே அந்த ஆன்மா; பிரபஞ்சத்தின் கடவுள். "நானே அந்தச் சச்சிதானந்தம், நானே அவன்," என்று அறையுங்கள். கூட்டை உடைத்

துக்கொண்டு ஒரு சிங்கம்போல வெளியேறி உங்கள் தளையைத் தகர்த்து என்றைக்குமே சுதந்தரராவீர்களாக. உங்களை எது அச்சுறுத்தும்? உங்களைக் கீழே அடி பணியும்படி எது செய்யக்கூடும்? அஞ்ஞானமும் மயக்கமுந் தவிர, வேறொன்றும் உங்களைத் தளையுறச் செய்யாது. நீங்களே தூய்மையான அந்தப் பொருள், மடியாத பேரின்பப் பொருள்.

உங்களைப் பாவிகள் என்று அறிவிலிகள் வழங்குகின்றார்கள்; நீங்களும் ஒரு மூலையில் அமர்ந்து அழுகின்றீர்கள். உங்களைப் பாவிகள் என்று உரைப்பது அறிவின்மை; கொடுமை; வெறுங் கயமை. நீங்களெல்லாம் கடவுளே. கடவுளைக் கண்டு அவரை மானுடன் என்று நீங்கள் கூறுவதில்லையா? ஆகவே உங்களுக்குத் துணிச்சல் இருக்குமாயின், அந்தக் கொள்கை மீது நில்லுங்கள்; உகளுடைய வாழ்க்கையை அதற்கேற்றவாறு அமைத்துக் கொள்ளுங்கள். ஒருவன் உங்கள் கழுத்தை வெட்ட வந்தால், வேண்டா என்று சொல்லற்க: நீங்களே உங்கள் கழுத்தை வெட்டிக் கொள்கிறீர்கள். வறுமையுற்ற ஒருவனுக்கு உதவி புரிந்தால் சற்றும் செருக்கடையற்க. உதவிபுரிவதே உங்களுக்கோர் ஆராதனையாகும். அது செருக்குக்கு மூலமன்று. அகில பிரபஞ்சமும் நீங்களல்லவா? உங்களைத் தவிரவேறு எவரேனும் உளரோ? இந்தப் பிரபஞ்சத்திற்கு ஆன்மாவாய் விளங்குகின்றீர்கள், ஞாயிறும் திங்களும் விண்மீன்களும் நீங்களே; நீங்களே எங்கும் ஒளிர்கின்றீர்கள். பிரபஞ்சமனைத்தும் நீங்களே; யாரை வெறுத்து யாரோடு பூசல் புரியப்போகின்றீர்கள்? அவனே நீங்கள் என்பதை உணர்ந்து உங்கள் வாழ்க்கையை அவ்வண்ணமே சமைப்பீர்களாக. இந்த உண்மையைத் தேர்ந்து இதன்படி வாழ்வை வகுப்போன் இருட்டில் இனி உழலமாட்டான்.

ஆன்மா

(அமேரிக்காவில் ஆற்றிய சொற்பொழிவு)

வேதாந்தம் பற்றிய 'மூன்று பேருரைகள்' என்ற மாக்ஸ் முல்லரின் புகழ் பெற்ற நூலை உங்களிற் பலரும் படித்திருக்கலாம். சிலரேனும் அத்தத்துவம் பற்றி ஜெர்மானியப் பேராசிரியர் டூஸன் எழுதிய நூலையும் பார்த்திருக்கக் கூடும். இந்தியாவின் சமய சிந்தனை பற்றி மேனாட்டில் எழுதியும் போதித்தும் வருவனவற்றில், அங்குள்ள தத்துவக் கொள்கைகளில் அத்துவைதம் என்ற ஏகவாத தரிசனமே சிறப்பாக வழங்கி வருகின்றது. சில வேளைகளில் வேதங்களின் உபதேசங்கள் யாவும் அந்த ஒரு கொள்கையிலேயே அடங்கி விட்டவை போலக் கருதப்பட்டு வருகின்றன. ஆனால் இந்தியச் சிந்தனையுலகில் பல்வேறு பக்கநோக்குகளும் உண்டு. சொல்லப்புகின், மற்ற வகுப்பினரோடு ஒப்பு நோக்கும் போது, பிரம்மமொன்றே உலகில் உள்ளது என்ற கொள்கையினைக் கடைப் பிடிப்போர் சிறுபான்மையினராகவே இருக்கின்றனர். மிகப் பழைமையான காலத்திலிருந்தே இந்தியாவில் பலப்பல மதப்பிரிவுகள் இருந்துள்ளன. ஆனால் பொதுமையான சங்கங்களில் இயங்கி அந்த அந்த ஒழுங்கு முறைகளை அனுசரித்து வழக்கத்துக்குக் கொண்டுவர இயலாமையால் மக்கள் தங்களுக்கு விருப்பமான தத்துவ முறையை ஏற்றுக்கொண்டு அதன் வடிவையும் தமது சொந்த மதக் குழுவினைச் சார்ந்திருக்கும் சுயேச்சையையும் பெற்றிருந்தார்கள். ஆகவே, தொன்று தொட்டே இந்தியாவில் பல மதப் பிரிவினைகளும் வழங்கிவந்தன. இக்காலத்தும் அங்கே எத்தனை நூற்றுக்கணக்கான மதப் பிரிவினைகள் உள்ளனவென்பதை என்னால் கூற இயலவில்லை. இப்போது இன்னும் பல புதிய பிரிவுகளும் ஒவ்வோர் ஆண்டிலும் பெருகிக் கொண்டே வருகின்றன. அந்நாட்டிலுள்ள மதம்பற்றிய ஊக்கத்தை அளவிட்டறைதலரிது.

முதன் முதல் இப்பல்வகைப் பிரிவுகளையும் இரு முக்கியப் பகுதிகளாகப் பகுத்துக் கூறலாம். ஒன்று, வைதிகத் தருமம்; மற்றொன்று, அவைதிகமானது. இந்து வேத நூல்

களே எக் காலத்திற்குமானவை. அவை மெய்ம்மையின் வெளிப்பாடுகளென்று நம்புபவர்களை வைதிகரெனவும்; அவற்றை அவ்வாறு கொள்ளாது, வேறு பிரமாணங்களை ஆதாரமாகக் கொள்பவர்களை அவைதிகர்கள் என்றும் பாகு படுத்திக் கூறுகின்றனர். அவைதிகரெனக் கூறப்படும் பிரிவினருள் முக்கியமானவர் பௌத்தரும் சமணருமேயாவர். சில வைதிகர் வேத நூல்களே நியாயத்தைக் காட்டிலும் மிக்க பிரமாணமுள்ளவை யென்றும், மற்றவர்கள் நியாயத்துடன் பொருந்திய வேத நூல்களே ஏற்கத்தக்கன என்றும், மற்றவை ஒதுக்கற்பாலன என்றுமே கூறுவர்.

சாங்கியம், நையாயிகம், மீமாமஸகம் என்னும் மூன்று பிரதானப் பிரிவுகளுள் முதலிரண்டும் தத்துவ விசார முறைகளாய் விளங்கி வரினும், அவை மதப் பிரிவுகளாய் வழக்குக்கு வரவில்லை. இப்போது இந்தியா முழுவதும் பெரி தும் பரவியுள்ளது வேதாந்த மதம் அல்லது பிந்திய மீமாஞ் சகக் கொள்கையே. அவர்களது கோட்பாட்டிற்கு வேதாந்த வழக்கென்பது பெயர். இந்து தத்துவ மனைத்துமே வேதாந் தம் அல்லது உபநிடதத்தினின்றே கிளைத்து மேலெழத் தொடங்குகின்றன எனினும் அத்துவைதவாதிகள் அப் பெயரைச் சிறப்பாகத் தமக்கே கொண்டார்கள். ஏனெனில், அவர்கள் தங்கள் கொள்கைகள் அனைத்தையும் வேதாந்தத் தில் வேரூன்றியவை எனவே கொண்டார்கள்; அவை மதத் திற்கு ஆதாரமாய் இருப்பினும் சரி, தத்துவத்தின்பாற் பட்டனவாய் இருப்பினும் சரி, காலக்கிரமத்தில் வேதாந்தக் கருத்தே மேலோங்கி நின்றது. இந்தியாவில் இப்போதுள்ள மதபபிரிவுகள் யாவும் இந்த வேதாந்தத்தின் ஏதோ ஓர் அமிசத்தைப் பற்றியதாகவே இருக்கக் காணலாம். என்ரு லும், இவ்வித்துவச் சபைகள் தங்கள் கருத்துகளில் ஒன்று பட்டு விளங்கவில்லை.

வேதாந்திகளுக்குள்ளேயே மூன்று முக்கிய வகுப்புகள் உள்ளன என்பதை நாம் காண்கின்றோம். கடவுள் உண் டென்னும் நம்பிக்கை ஒன்றில் மட்டும் இவர் அனைவருமே ஒத்திருக்கின்றனர். மற்றும் இவர்கள் வேதங்கள் அக்கடவு ளால் வெளியிடப் பட்ட சத்தியமே என்பதையும் நம்புகின் ருர்கள். அவர்களது இந்நம்பிக்கை கிறித்தவர்களின்

அல்லது முகம்மதியர்களின் நம்பிக்கைகளுக்கு நேருக்கு நேராக ஒத்திராது, விசித்திரமான ஒரு வகையில் விளங்குகின்றது. அவர்கள் கருத்துப்படி வேதங்களே இறைவரைப் பற்றிய அறிவின் விளக்கம். கடவுள் என்றுமுள்ளவர் என்பதனுல், அவரைப் பற்றிய அறிவும் யாண்டும் அவருடன் கூடியே இருந்து வருகின்றது; ஆகவே, வேதங்கள் என்றுமுள்ளவை. மற்றும் ஒரு பொதுவான நம்பிக்கையும் உள்ளது: படைப்பு வட்டம்போன்று சுற்றிச் சுற்றி வரும் இயல்பினது; படைப்பு முழுதுமே இயங்கி மறைவது. அது வெளியே வீசி எறியப்பட்டுத் தூலமாக விளங்கி இறுதியில் எல்லையற்ற காலத்துக்குப் பின்னர் மிக நுணுகி ஒடுக்கமெய்திக் கரைந்து தோற்ற மழிந்து மறைந்து, பின்னர் ஓய்வுறுவது என்பது. மீண்டும் அது தோன்றி இதே வகையில் இயங்கி வருகின்றது. மகாகாசம் என்ற பொருளொன்றினை அவர்கள் கற்பனை செய்கின்ருர்கள். அது இக்கால விஞ்ஞானிகள் 'ஈதர்' எனக் கூறிவருவதனை ஒத்தது. பிராணனாகிய மற்றொன்றும் அவர்களது கற்பனையில் இடம் பெறுவதாகும். இந்தப் பிராணனைப் பற்றி அவர்கள் கூறுவது இதன் அசைவின் வலிமையினுலேயே பிரபஞ்சமே தோன்றுகிறது என்பதாகும். ஒரு வட்டமாகிய யுகம் முடிவுறும் போது இயற்கையின் இந்தத் தோற்றம் மிகமிக நுண்ணிதாய் அருகி, பார்க்கவோ பரிசிக்கவோ ஒண்ணுத, ஆனுல் எப்பொருளும் இதினின்றே விளைவதாகும் என்ற முறையில் ஆகாசத்தே கலந்து விடுகின்றது. நமது இயற்கையில் காணும் புவியீர்ப்புச்சத்தி ஈர்த்தும் தள்ளியும் வரும் பௌதிக சத்திகளும் எண்ணம், உணர்வு, நரம்பின் இயக்கம் ஆகிய அகத்தேயுள்ள மனச்சத்திகள் யாவுமே இந்தப் பிராணனது அசைவினின்று விரிகின்றது. அடுத்த யுகத்தின் ஆரம்பம் வரை, ஊழிக் காலம் தோன்றுமளவும் இந்த நிலை தங்கி நிற்கும். அதன் பின்னர்ப் பிராணன் அசையத் தொடங்கி, விசும்பின் மீது செயலாற்றி வந்து, இவ்வடிவங்கள் யாவும் ஒழுங்காக, தொடர்ச்சியாகத் தோற்றம் பெறுமாறு, வெளியே வீசி யெறியப் படுவதாம்.

நான் கூற முற்படும் முதலாவது மதத்தின் பெயர் துவைதமென்பது. பிரபஞ்சத்தைப் படைத்து அதை ஆண்டு

வரும் கடவுள், எப்போதுமே பிரகிருதியினின்றும் வேறு பட்டவரே; ஜீவான்மாவினின்றும் வேருனவரே. கடவுள் என்றென்றும் நிலேத்து நிற்பவர். இயற்கையும் அறியாப் பொருளே; ஆன்மாக்களும் அது போன்றே என்றைக்கு முள்ளன. இயற்கையும் ஆன்மாவும் வெளிப்படத் தோன்றி மாறுபாடடைகின்றன. ஆனல், கடவுள் ஒரே நிலேயில் நிற்பவர். மற்றும் துவைதவாதிகள் கொள்கைப்படி கடவுள் ஒரு புருட வடிவத்திலுள்ளவர்; அவருக்கு உடல் தேவை யானதன்று. ஆனல், அவரிடம் நற்பண்புகள் மிகுந்துள்ளன. "அவர் மனிதகுணங்கள் யாவும் படைத்தவரே. அவர் கருணே யாளர்; அவர் நியாயவான்; ஆற்றலனைத்தும் பெற்றவர். அவரையணுகிப் பிரார்த்தனே புரியலாம். அவரை அன்பினல் அணேக்கலாம். அவரும் அதற்குப் பிரதியாக நேசிப்பர். இவ்வாறு கடவுள் எத்தனே எத்தனேயோ விதமானவர். அவரே மனிதர்க்குகந்த கடவுள். ஆனல், மனிதனேக் காட்டிலும் மிக்க ஆற்றலுள்ளவர். சுருங்கக் கூறுமிடத்து, அவர் மாந் தருக்குள்ள தீய குணங்களற்றவர். அவர் அலகிலா நலத்தி னர்," என்பது அவர்கள் வரையறுத்த கூற்று. அவரால் உபாதான காரணமின்றிப் படைத்தல் பொருந்தாதாதலால், பிரகிருதியினின்றே அவர் வேண்டும் பொருள்களேக் கொண்டு பிரபஞ்சத்தைப் படைக்கின்ருர். அணுவாதி களென்ற வேதாந்திகளல்லாத துவைத வாதிகளுள்ளார்கள். அவர்கள், இயற்கை என்பது எண்ணிறந்த அணுக்களின் கூட்டமேயன்றி வேறன்று; கடவுளின் இச்சை இதன் மீது இயங்கிச் சிருட்டிக்கின்றது, என்பார்கள். வேதாந்திகள் இந்த அணுவாதத்தை மறுத்து, இது நியாயத்துக் கொவ் வாததெனத் தள்ளிவிடுகின்ருர்கள். பகுக்க வொண்ணுத அணுக்கள் இடக்கணித்தைச் சார்ந்த புள்ளிகள் போன்று பகுதிகளோ பருமை முதலியனவோ பெற்றிருப்பனவல்ல. இவற்றைப் பெருதவை, எந்தப் பெரிய எண்ணினுல் பெருக் கப்படினும் மாற்றமடையாதவை. பகுதிகளேப் பெருத எதுவும் பகுதிகளுள்ள ஒன்ருகப் பரிணமிப்பதில்லே. பூச்சியங் களேத் தொகுத்துக் கொண்டே போனல் அவை ஒரு தனி எண் ஆகிவிடுமா? ஆகவே, அணுக்கள் பகுதியையோ, பருமேயோ பெற்றிராவிடின், அவற்றைக்கொண்டு இப்பிர

பஞ்சந்தான் எவ்வாறு படைக்கப்படும்? ஆகவே, துவைத வேதாந்திகளின் கூற்றுப்படி, அறிவற்ற அல்லது அவியக்தமான இயற்கை இருக்கின்றது, அதனின்றே கடவுள் பிரபஞ்சத்தைப் படைக்கின்றார். இந்தியாவிலுள்ள பெரும்பான்மையினர் துவைதிகளே. மனித இயல்பு சாதாரணமாக இதைக்காட்டிலும் மேலான கற்பனையொன்றையும் எட்டிப் பிடிக்கு மாற்றல் வாய்ந்ததன்று. உலகிலுள்ள ஆத்திகருள் தொண்ணூறு சதவீதத்தினர் துவைதவாதிகளே. ஐரோப்பா, மேற்கு ஆசியாப் பகுதிகளிலுள்ள மதத்தினர் பலரும் துவைதவாதிகளே. அவர்கள் அப்படித்தான் இருக்க இயலும். சாதாரண மனிதன், தூலவடிவில் அமையாத எதையுமே தனது சிந்தனையில் கொள்ளும் ஆற்றல் பெற்றிலன். அவன் தனது மதிக்கு எட்டக்கூடிய பொருளையே விடாப்பிடியாய்ப் பிடித்து நிற்பான். அதாவது, அவன் மேலான அத்தியாத்தும சிந்தனைகளையும் தூலவடிவிற்குக் கொணர்ந்தே அவற்றைப் பற்ற இயல்கின்றது. உலக முழுதும் உள்ள மக்களின் மதம் இதுவே. தம்மினின்றும் விலகி நிற்கும் கடவுளிடமே நம்பிக்கை கொள்கின்றனர் மாந்தர். சிறந்த பேரரசன் ஒருவனை, அல்லது வலிமைமிக்க சக்ரவர்த்தி ஒருவனைப் போன்றவரே அவருடைய கடவுள். அதே சமயம் அன்னார் அவரை உலகிலுள்ள பேரரசர்களினும் தூயராக்கிவிடுகின்றனர். அவருக்கு நற்பண்புகள் அனைத்தையும் நல்கி, அவரிடமிருந்து தீய இயல்புகள் யாவற்றையும் அகற்றி விடுகின்றனர். இது எவ்வாறிருக்கிறதெனின், தீய பண்புகளே இராது நலனே நிலவுவது போன்றுளது; இருளேயில்லாத ஒளிப் பிழம்பே எங்கும் நிறைந்துள்ளது போன்றுளது.

துவைதக் கோட்பாட்டிலுள்ள முதல் இன்னல் யாதெனில், 'நியாயவானான, அருளே வடிவான கடவுளின் ஆட்சியில், கணக்கறு நலத்தினராம் கடவுளின் ஆளுகையில் இத்தனை தீமைகள் ஏன் இருத்தல் வேண்டும்?' என்பதே. இக்கேள்வி துவைத சமயங்களிலெல்லாம் கிளம்பியது. ஆனால், இந்துக்கள் இதற்கு மாற்றாக ஒரு பேயைப் படைக்கவில்லை. அவர்கள் ஒரே மனமாக, மனிதன் மீதிலேயே குற்றத்தைச் சுமத்தினார்கள். இது அவர்களுக்கு மிக எளிதே. ஏனெனில், நான் உங்களுக்கு இப்போது கூறியவாறு அவர்கள் ஆன்

மாக்கள் சூனியத்தினின்றும் படைக்கப்பட்டன என்பதை நம்பவில்லை. நாம் நமது வருங்காலத்தை வகைப்படுத்தி, அதற்கு ஒரு நல்ல வடிவமும் கொடுக்கலாமென்பதை இவ் வாழ்க்கையிலேயே பார்க்கிறோம். நம்மில் ஒவ்வொருவரும் மறுநாளை உருவாக்கப் பார்க்கிறோமல்லவா? நாளைய தினத்தின் கதியை இன்றே கணிக்க எண்ணுகிறோமல்லவா? நாளைக்கு அடுத்த மறுநாளையும் தீர்மானம் செய்கின்றோம். இப்படியே மேலும் மேலும் செய்கின்றோம். இதே நீதி பின்புறமாகவும் பார்க்க உதவும். நாம் நமது வருங்காலத்தை நமது செயலாலேயே உருப்படுத்தக் கூடுமெனின், இதே நியாயத்தை ஏன் நமது கழிந்துவிட்ட காலத்துக்கும் பொருத்திப் பார்த்தல் கூடாது? ஒரு முடிவற்ற சங்கிலித் தொடரில் சிற்சில சங்கிலி வளையங்கள் மாறி மாறி, திரும்பத் திரும்ப வருகின்றனவெனின் சங்கிலித் தொடரின் ஒரு சிறு தொகுதியைக் கொண்டே முழுச் சங்கிலியையும் ஏன் மதிப்பிடக்கூடாது? ஏன் விளக்கிக் காட்டக் கூடாது? இவ்வாறு எல்லையற்ற காலக் கணக்கில், நாம் ஒரு பகுதியைக் குறித்து, அந்த ஒரு பகுதியை விளக்கிக் காட்டி, அதைப் புரிந்துக்கொள்ளக் கூடுமானால், அப்போது இயற்கையின் ஒழுங்கு முறையில் இயங்கிவருவது உண்மையாயின், அதே விளக்கம் அகண்டமான காலத் தத்துவத்துக்கும் இதுவே பொருந்த வேண்டும். இச்சிறிய கால அளவிற்குள்ளாக நாம் நமது சொந்த விதியினை ஆற்றிவருவது உண்மையாயின் நாம் இப்போது காணுமாறு, எப்பொருளுக்கும் ஒரு காரணம் இருக்க வேண்டுமென்பது உண்மையாயின், நாம் இப்போது இருக்கும்நிலை நம் பண்டைவினை முழுவதற்குமுரிய பயனாக இருத்தல் வேண்டும். ஆகவே, மனிதனது விதியை வகுக்க அவனைத்தவிர்த்து வேறு எவராலும் உண்டுபண்ண இயலாது. நாமே இத் தீமைகளுக்கெல்லாம் காரணராகின்றோம்; எப்படி நாம் தீச் செயல்களால் விளையும் துயரங்களைக் காண்கின்றோமோ அப்படியே உலகிலுள்ள நிகழும் தீமைகளுககெல்லாம் காரணம் மனிதனுடைய முன்னையத் தீச்செயல்களேயாம். இக் கொள்கைப்படி மனிதனே பொறுப்பாளி, கடவுளல்லர். அவர் பேரருள் வடிவானவர், எல்லார்க்கும் தந்தையாராக என்றும்

நிலையுற்றிருப்பவர், ஒரு காலும் பழிக்கு ஆளாகமாட்டார். "நாம் விதைத்ததையே அறுவடை செய்கிறோம்."

துவைதவாதிகளின் மற்றொரு விசித்திரமான கொள்கை 'ஒவ்வோர் ஆன்மாவும் இறுதியில் முத்தியடைந்தே தீரும்,' என்பது. ஒருவருமே தவிர்க்கப்படார். பற்பல மாறுதல்களுக்குப் பின்னர், பற்பல இன்பதுன்ப அனுபவங்களுக்குப் பின்னர், ஒவ்வொருவரும் இறுதியில் மீட்கப்பெறுவர். எதினின்று? இந்து மதப்பிரிவினர் யாவருமே, எல்லா ஆன்மாக்களும் இப்பிரபஞ்சத்தினை விட்டு விடுதலை பெறவேண்டுமென்ற பொதுக் கருத்துக் கொண்டிருக்கின்றனர். நாம் காணும், கண்டு உணரும் பிரபஞ்சமோ, கற்பனை செய்யக்கூடிய பிரபஞ்சமோ, நேர்மையானதாக இருத்தல் இயலாது. ஏனெனில் இரண்டிலும் நன்மை தீமைகள் பரவியே உள்ளன. துவைதிகளின் கருத்துப்படி, இப்பிரபஞ்சத்துக்கப்பால் ஓர் இடம் உள்ளது; அங்கே இன்பமும் நலனுமே நிலவுகின்றன; அந்த இடத்தை அடைந்ததும் மறுபிறப்புக்கு அவசியமே இராது. இக்கருத்து அவர்களுக்கு மிகுதியான இன்பத்தை அளிப்பதாகும். இனி அங்கே நோய் நொடி ஒன்றுமில்லை; சாவில்லை. நிலையான இன்பமே அங்கு நிகழ்வது யாவரும் கடவுள் முன்னிலையிலேயே எப்போதும் வீற்றிருந்து, என்றும் இன்ப நலமே துய்த்திருப்பர். தாழ்ந்த புழுவிலிருந்து மிக உயர்ந்த நிலையிலுள்ள தேவதூதர் வரையில் யாவருமே அண்மையிலோ சற்றுத் தாமதித்தோ துன்பமே தோன்றாத உலகினை அடைவரென்பதை அவர்கள் நம்புகின்றார்கள். ஆனால், நமது உலகிற்கு ஒரு முடிவே இல்லை. அது அலை வடிவத்திலே சென்று கொண்டிருந்தாலும், முடிவிலாக் காலமெல்லாம் இவ்வாறே நிகழ்ந்து வரும். வட்டமிட்டே சென்றபோதிலும் அது முடிவு பெறுவதில்லை. காக்கவேண்டிய ஆனமாவின் எண்ணிககை, பூரணமாக்கப்பட வேண்டியவரது எண்ணிக்கை எல்லையற்றது. சில தாவரங்களிலும், சில விலங்குகளிலும் மனிதரிலும், சில தெய்வங்களிலும் உள்ளன; ஆனால் மேலான தெய்வங்களை முன்னிட்டு யாவருமே கட்டில் அடங்கியுள்ளனர். பந்தம் என்பது யாது? பிறந்து இறக்க வேண்டிய கட்டாயமே அது மிக்க உயர் நிலையிலுள்ள கடவுளரும்

மரித்துப் போகின்றனர். இக்கடவுளர் யாவர்? சில நிலைகளும் பதவிகளுமே இப்பெயர்களால் குறிக்கப் படுகின்றனர். எடுத்துக் காட்டாக, தேவ தேவனாகிய இந்திரன் ஒரு பதவியையே குறிக்கின்றான். மிகமிக உயர்ந்த நிலையிலிருந்த ஓர் ஆன்மா இந்த யுகத்தில் அந்தப் பதவியை வகிக்கச் சென்றுள்ளது. பின்னர் அவ்விந்திரன் மறுமுறையும் மனிதப் பிறப்பெடுத்து அங்கண்மாஞாலத்தில் தோன்றுவன். இந்த யுகத்தில் மிக மிக நல்லோனாய் விளங்குபவன் அடுத்த யுகத்தில்—பிரளயத்துக்குப் பின்—அந்தப் பதவி அடைவன். இக் கடவுளர் பற்றிய செய்தியும் இது போலவதே: குறிப்பிட்ட பதவிகளை மாறி மாறி லட்சக்கணக்கான மாந்தர் நிரப்பிப் பின்னர் அந்த அந்தத் தொழிலை ஏற்கும் மனிதராக வந்து தோன்றுகின்றனர். இவ்வுலகில் நற்கருமங்கள் ஆற்றிப் பிறருக்கு உதவி செய்பவர்கள்—ஆனால் சொர்க்கம் பெறும் ஆசையினாலோ அல்லது உடன் வாழ்வோர் புகழ்வதை எதிர் நோக்கியோ அவ்வாறு இயற்றுபவர்கள்—தாங்கள் சாகுந்தறுவாயில் நற்செயல்களின் பயனாக நலம் பெற்றுக் கடவுளராகத் திகழ்வார்கள். இது முத்தியன்று; பலனுக்கு விழையுங்கால் ஒரு போதும் முத்தி நெறி கிட்டுவதில்லை. மனிதன் விரும்புவதனை ஆண்டவர் அருள்கின்றார். மக்களுக்கு அதிகார வேட்கை உண்டு; கௌரவம் வேண்டப்படும் தெய்வ போகங்கள் தேவை. இத்தகைய விருப்பங்கள் யாவும் நிறைவேறுகின்றன. ஆனால், கருமப் பலன் ஒரு நாளும் நிலையாகவே அமைந்திருப்பதன்று. ஏதோ ஒரு கால அளவில் முடிவடையும். என்றைக்கோ ஒரு நாளில், அது மிக நீண்ட காலமாக இருக்கலாம்—யுகக் கணக்காகவும் இருக்கலாம்; காலவரையறை கழிந்ததும் இத் தெய்வங்கள் மீண்டும் மனித யாக்கையுடன் பிறந்து முக்தி பெற மற்றுமோர் வாய்ப்புப் பெறுகின்றனர். கீழான விலங்குகள் உயர்வெய்தி மனிதப் பிறவி பெறுகின்றன. ஏன்? தெய்வங்களுமாகி விடுகின்றன. மறு முறையும் மனிதர்களாகப் பிறப்பெடுத்தோ விலங்குப் பிறவியடைந்தோ தம் போக விழைவுகளைத் துறந்து வாழ்க்கையிலுள்ள வேட்கையினை விட்டு, 'நான்', 'எனது' என்னும் ஆணவத்தோடு ஒட்டிக் கொண்டிருப்பனத ஒழித்து வரும் கால எல்லை வரை மேற்

கண்டவாறு பிறப் பெடுப்பர். இந்த அகங்கார மமகாரமாகிய நான் எனது என்கிற செருக்கே உலகிலுள்ள தீமை அனைத்திற்கும் 'வேர் முதல்' ஆகும். துவைதியை நோக்கி நீங்கள் "இக்குழந்தை உன்னுடையதா?" எனவினவினால், "இது கடவுளது, எனது சொத்து எதுவுமே எனதன்று; கடவுளதே," என்பான். யாவுமே கடவுளின் உடைமைகளெனக் கருதப்படல் வேண்டும்.

இந்தியாவிலுள்ள இந்தத் துவைத வகுப்பினர் ஊன் உண்பதில்லை. இவர்கள் புலாலை விலக்கிய தீவிரவாதியர்கள். ஆனால், அது பற்றிய அவர்தம் கருத்து பௌத்தர் கருத்துப் போன்றதன்று. ஒரு பௌத்தனைப் பார்த்து, 'நீ ஏன் கொல்லாமை பற்றிச் சொற் பொழிவு ஆற்றுகின்றாய்?' என்று கேட்டால், அவன், 'எங்களுக்கு உயிரைப் போக்க உரிமை இல்லை,' என்று கூறுவன். துவைதியைப் பார்த்து, 'நீ ஏன் விலங்கினங்களைக் கொல்வதில்லை?' என்று கேட்டால் அவன், 'அது கடவுளது,' என்று சொல்வான். ஆகவே, 'நான், எனது' என்னும் சொற்கள் கடவுளுக்கே பிரயோகப் படவேண்டுவன; அவருக்கு மட்டுமே உரியன. 'நான்' என்பதன் பொருள் அவ்விறைவர் ஒருவரே. எப்பொருளும் அவரது உடைமையேயாகும். 'நான்', 'எனது' என்னும் நிலையைக் கடந்து சென்று ஒருவன் எல்லாவற்றையும் கடவுளுக்கே அர்ப்பணித்துவிட்ட பின்னர் அவன் எவரையும் நேசிக்கும் போது, ஒரு விலங்கின் பொருட்டும் தனது உயிரைத் தியாகம் செய்ய ஆயத்தமாய் இருக்கும் போது அவனது இதயம் தூய்மையுற்றிருக்கும். அந்தத் தூயஉள்ளத்தில் கடவுளன்பு பற்றி வெள்ளம் பெருக்கெடுக்கும். ஒவ்வோர் ஆன்மாவுக்கும் கடவுளே கவர்ச்சிக்குரிய மையப் பொருள்,' என்று கூறுவான். மேலும், "களிமண்ணால் மூடப் பெற்ற ஊசி காந்தத்தினால் கவரப் படாது. ஆனால், அந்த மண் நீங்கியதும் அது ஈர்க்கப்படும்," என்பான். கடவுளே அத்தகைய காந்தசத்தி, மனித ஆன்மாவே அந்த ஊசி; அதன் தீச் செயல்களே அதனை மூடியுள்ள மாசு மலங்களாகும். ஆன்மா தூய்மை பெற்றவுடன் இயற்கையாகவே கடவுளிடம் ஈர்க்கப்பட்டு எப்பொழுதும் அவருடன் தங்கும், ஆனால் அவருடன் ஒன்றிவிடாது. பூரணத்தன்மை பெற்ற ஆன்மா விரும்

பினுல் எவ்வடிவினையும் எடுக்க வல்லது. அதற்கு விருப்ப மானுல், ஒரு நூறு உடல்களையும் பெற்று நிற்கலாம், அல்லது ஓர் உடலும் இல்லாமல் வாழக்கூடும். அது ஏறத் தாழச் சத்தியனைத்தும் பெற்றுள்ளதாகி விடுகின்றது; படைக்கும் திறன் மட்டும் அற்றிருப்பது. அச் சிறந்த வல்லமை கடவுளொருவர்க்கே உரியது. எத்துணை பூரணத்து வம் பெற்றிருக்கும் ஒருவனுலும் பிரபஞ்ச அலுவல்களனைத் தையும் சமாளிக்க இயலாது. அந்த அறம் கடவுள் ஒரு வருக்கே உரியது. ஆனுல் எல்லா ஆன்மாக்களும் நிறை நிலை பெற்றக்கால், எப்போதும் இன்புறக் கடவுளுடன் அழி யாமல் இருக்கும். இதுவே துவைதியின் கடைப்பிடி.

மற்றுமொரு கருத்தையும் துவைதிகள் போதித்து வரு வார்கள். அவர்கள் கடவுளிடம் சென்று, "ஆண்டவரே, எங் கட்கு இதனைக் கொடுப்பீராக; அதனைக் கொடுப்பீராக," என்று வேண்டிக் கொள்ளும் கருத்தினை வெறுப்பார்கள். இது செய்யத்தகாத தெனச் சாற்றுவாரகள். உலகப் பண்டங்கள் ஒருவனுக்கு வேண்டுமெனின், அதனை அவன் கீழான தேவதைகளைக் கேட்டுப் பெறுதல் வேண்டும். இந் தத் தேவதூதர்களையோ தெய்வங்களையோ பூரணம் பெற்ற ஒருவரையோ கேட்டு இலௌகிகப் பொருள்களைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். கடவுள் நேசிக்கப்படவே இருக் கிருர். கடவுளைக் குறித்து "எம்பிரானே, எனக்கு நீ அதனைத் தர வேண்டும்; இதனை யருள வேண்டும்;" என்று இறைஞ்சு வது தேவ நிந்தனையாகும். துவைதிகள் கருத்துப்படி தேவர்களுள் ஒருவரைக் குறித்து வேண்டுதல் செய்யின் ஒருவன் தனது விருப்பினை அண்மையிலோ சற்றுப் பொறுத்தோ பெறுவது திண்ணம். ஆனுல், அவனுக்கு முத் தியே வேண்டுமாயின், அவன் இறைவரையே பூசை செய்ய வேண்டும். இதுவே இந்திய மக்களுள் பெரும்பாலாரின் சமயமாகும்.

உண்மையான வேதாந்தம் விசிட்டாத்துவைதிகளிட மிருந்தே தோன்றுகின்றது. அவர்கள் "காரியம் காரணத் தினின்றும் ஒரு போதும் வேறு பட்டதாகாது. காரணமே வேருேர் மாற்று வடிவத்துடன் காரியமாய்க் காட்சியளிக் கின்றது. பிரபஞ்சம் காரியமாகி அதன் காரணம் கடவுளாய்

இருந்தால், அக்காரணப் பொருள் கடவுளாகவே தான் இருத்தல்வேண்டும். இத்னைத் தவிர்த்து வேறேதேனுமாக இருக்கவொண்ணாது. கடவுளே சகத்திற்கு முதற் காரணமாகவும் இயக்கும் காரணகர்த்தாவாகவும் உளர். அவரே படைட்போர். அவரே பிரகிருதியை வெளிப்படுத்தும் மூலப் பொருள், என்பார்கள். உங்கள் மொழியில் வழங்கும் படைப்பு என்ற சொல்லிற்கு நேரான சொல் வடமொழியில் இல்லை. ஏனெனில் மேலை நாடுகளில் கருதுவது போன்று இந்தியாவில் சூனியத்திலிருந்து ஒரு பொருளுண்டாவதாக நம்பும் ஒரு மதப் பிரிவினையும் இல்லாமையாலே தான். ஒரு காலத்தில் அவ்வாறு எண்ணின சிலர் இருந்தனரென்றும், அவர்களது குரல் ஓங்காது அமுக்கப் பட்டுவிட்டதென்றும் தோன்றுகிறது. இக்காலத்தே அத்தகைய கருத்தில் நம்பிக்கை வைக்கும் மதப் பிரிவு இருப்பதையும் நாம் காண்பதில்லை. படைப்பு என்பதன் பொருள், 'உள்ளே அடங்கப் பெற்றிருக்கும் ஒன்றை வெளியில் அலரச் செய்தல்' என்பதே. இக்கொள்கையினர் கருத்துப் படி பிரபஞ்சம் முழுதும் கடவுளே; அவரே சகத்திற்கு முதற் பொருள். 'சிலந்திப் பூச்சி தனது உடலினின்று கொண்ட பொருளைக் கொண்டே வலையை விரிக்கின்றதுபோல் மாபேருலகம் முழுதும் அந்த ஒரு சத்தியிலிருந்தே வெளி வந்துள்ளது.' இவ்வாறு மறைகள் முழங்குகின்றன.

பயனென்பது காரணத்தின் புனரமைப்பேயாயின் "சடமின்றி 'அசிச'மாயுள்ள அறிவின் களஞ்சியமான கடவுளினின்றும் பிறந்த இப் பிரபஞ்சம் ஏன் அறிவற்று அசேதனப் பொருளாய் விளங்குகின்றது? காரணம் தூயதாகவும் சம்பூரணமானதாகவும் மிளிரும்போது காரியம் மட்டும் ஏன் வேறுபாடுற்றிருத்தல் வேண்டும்?" என்னும் கேள்வி எழும். விசிட்டாத்துவைதிகள் இதற்கு என்ன சொல்லுகிறார்கள்? அவர்களது கொள்கை மிகவும் வியக்கத்தக்கது. அவர்கள், "கடவுள், பிரகிருதி, ஆன்மா இம்மூன்றும் ஒரேயிருப்பே தான்," என்று கூறுவார்கள். கடவுளே ஆன்மா என்றும், இயற்கையும் சீவ ஆன்மாக்களும் கடவுளின் உடல் என்றும் அவர்கள் கூறுவார்கள். எனக்கு ஓர் உடலும் ஆன்மாவும் இருப்பது போன்றே, பிர

பஞ்சமும் ஆன்மாக்களும் கடவுளுக்கு உடலாகும். கடவுள் எல்லா ஆன்மாக்களுக்கும் 'பெரிய' ஆன்மா ஆவர். இவ்வாறு கடவுளே பிரபஞ்சத்துக்கு உபாதான காரணம். உடல் மாறலாம், அது இளமையுடன்கூடியோ முதுமை எய்தியோ இருக்கலாம்; வன்மையுடன்கூடியோ வலிகுன்றியோ விளங்கலாம். ஆனால், அதனால் ஆன்மா சிறிதும் மாறுபாடு அடைவதில்லை. அது உடல் வழியாக வெளிப்படும் ஒரே அழிவற்ற பொருளே. உடல்கள் வரும், போகும்; ஆனால் ஆன்மா மாறுபாடடையாது. இவ்வாறு பிரபஞ்சம் முழுதுமே கடவுளின் உடல். அப்பொருளில் அது கடவுளே. உலகின் தோற்றமும் மாறுதலும் கடவுளை ஒரு சிறிதும் பாதிப்பதில்லை. இம்மூலப் பொருளை வைத்தே அவர் பிரபஞ்சத்தைப் படைக்கிறார்: ஊழிக்காலம் முடிவுற்றதும் அவரது உடல் நுண்மையுற்றுச் சுருங்கி விடுகிறது. மற்றொரு யுகத்தின் தொடக்கத்தில் அது மறுபடியும் விரிவுற்று, அதினின்றும் இவ் வேறுபட்ட உலகங்கள் யாவும் உண்டாகி வளர்கின்றன.

ஆன்மா தன்னியப்பிலே தூய்மையான தென்பதையும் ஆனால், தன் செயல்களால் தன் தூய்மையினை அது இழக்கிறதென்பதையும் துவைதிகளும் விசிட்டாத்துவைதிகளும் ஒப்புக் கொள்கின்றார்கள். இக்கருத்தை விசிட்டாத்துவைதிகள் துவைத வாதிகளைக்காட்டிலும் மிக அழகிய முறையில் சித்திரிக்கின்றார்கள், "ஆன்மாக்கள் தூய்மையும் நிறைநிலையும் கூம்பி மறுபடியும் மலரும் நிலை எய்துகின்றன. நாம் இப்படிச் செய்ய முயலவதெல்லாம் புத்தியின் இயல்பான குணங்களாய், வல்லமையை, தூய்மையினை, ஆற்றலை மறுமுறையும் தோன்றச் செய்யவே. சீவனுக்கு மிகப்பல பண்புகளுமுண்டு. ஆனால், அவற்றில் முடிவில்லாத ஆற்றலும் எல்லையில்லாத அறிவும் அடங்கியவையல்ல. ஒவ்வொரு தீச்செயலும் ஆன்மாவின் இயல்பினைச் சுருங்கச் செய்தும் ஒவ்வொரு நற்செயலும் அதனை விரிவு படுத்தியும் வருகின்றது. இவ்வான்மாக்கள் யாவும் கடவுளின் அமிசங்களே," என்கிறார்கள். "சுடர்விட்டெழும் வெந்தழலினின்றும் தீப்பொரிகள் இலட்சக் கணக்கில் எழுவதைப் போன்று, பிரம்மத்தினின்றும் இவ்வான்மாக்கள் தோன்றியுள்ளன." ஒவ்வொன்றிற்கும் ஒரே குறிதானுண்டு விசிட்டாத்துவை

திகளின் கடவுளும் வடிவுடன் கூடியவரே; எல்லையில்லாத நலத்தினரே, ஆனால் அவர் எப்பொருளையும் ஊடுருவிச் செல்கின்றார். அவர் சருவவியாபியாய் விளங்குகின்றார். அவர் எப்பொருளினும் கலந்துள்ளார்; இதிலிருந்து, வேதங்கள் கடவுளே எல்லாம் என்று கூறுவதிலிருந்து கடவுள் எங்கும் பரவி உள்ளனர் என்பது மட்டுமே பெறப்படும். அவர் பரும்பொருளே ஆகிவிடுகிறாரென்பது கருத்தன்று. ஆனால், அவர் எப்பொருளிலும் கரந்து உறைகின்றார் என்பதே பொருள். அகிலத்தில் அவர் அகத்தே இராத ஓர் அணுவேனும் ஒரு துகளேனும் இல்லை. சீவர்கள் கட்டுண்டவர்களே; அவர்கள் எங்கும் நிறைந்திருப்பவர்களல்லர். அவர்களுடைய வல்லமைகள் விரிந்து பரிபூரணத்துவமடையுங்கால், அவர்கள் பிறப் பிறப்பைக் கடந்தவராகின்றார்கள்; கடவுளுடன் என்றென்றும் கூடிவாழ்கின்றனர்.

இப்போது நாம் அத்துவைதத்தில் இறங்குவோம்: இது பற்றி எனது கருத்தைக் கூறவேண்டுமானால், இது எக்காலத்திலும் எந்நாட்டிலும் மனிதனால் அமைக்கப் பெற்ற சமயங்களின், தத்துவ நூல்களின் மிகமிகச் சிறந்த தூமலர், யாவற்றிலும் சிறந்ததொன்று. இதில் மானிடச் சிந்தனைச் சத்தி அதன் அழகின் உச்சிக் கோட்டை எட்டிவிட்டது: துளைந்தறிய இயலாத மருமத்தினையும் கண்டுவிட்டதெனலாம். இதுதான் 'ஏகமேவ அத்விதீயம்' எனப்படும் அத்துவைதம். இது ஆழ்ந்த மறை பொருளைக் கொண்டது; சாதாரண மக்களால் செயல் முறையில் ஆக்க முடியாத மிகமிக உயர்ந்த நிலை. தத்துவம் சென்ற மூவாயிரம் ஆண்டுகளாக ஆட்சிப் பீடத்திலிருந்துவந்த தனது பிறப்பகமாகிய இந்தியாவிலும் பாமர மக்களின் மனத்திற் புகவில்லை. அத்துவைதக் கொள்கையைப் புரிந்துகொள்வது எந்நாட்டிலுமுள்ள எத்தகைய சிந்தனையாளருக்கும் முற்றும் பிடிபடவில்லை. நாம் நம்மையே அவ்வளவு தூரம் பலவீனர்களாக்கிக் கொண்டோம். அவ்வளவு இழிவான நிலைக்கு நம்மை நாமே கொண்டுவந்து விட்டோம். நாம் எத்துணைப் பெரிய உரிமைகளைக் கொண்டாடி வரினும், பிறரைச் சார்ந்திருக்கவே விழைகின்றோம். வலிமையற்ற சிறு செடிகள்

போன்று ஒரு கொழு கொம்பை அவாவி நிற்கின்றோம். எத்தனை தரம் என்னை மக்கள் அணுகி, 'சுகந்தரும் சமயத்தைத் தாருங்கள்' என வேண்டியுள்ளனர்! ஒரு சிலரே உண்மையினையறிய விழைகின்றனர்: அவருள்ளும் சிறுபான்மையோரே வாய்மையினைக் காக்கும் ஆற்றல் பெற்றுள்ளனர். சத்தியத்தைச் செயல் முறையிற் கடைப்பிடிப்பவர் மிகமிகச் சிலரேயாவர். இது அவர்கள் குற்றமன்று, அவர்களது மூளையின் தாழ் நிலையே அக்குறைக்குக் காரணம். ஒரு புதிய கருத்து, அதுவும் சிறப்பாக மிக உயர்ந்த எண்ணம், ஒரு குழப்பத்தை உண்டு பண்ணிவிட்டுப் பின்னர் ஒரு புது வழியையமைத்து, பழைய ஒழுங்கைச் சீர்குலைப்பது. அவர்கள் ஒரு குறித்த சூழ்நிலையிற் பழக்கப் பட்டவர்கள். புராதனமான பல மூடக் கொள்கைகளையும் மூதாதையர் போற்றி வந்த குருட்டு நம்பிக்கைகள், வகுப்புக்குரிய குருட்டு எண்ணங்கள், நகரத்தார் ஏற்படுத்திக் கொண்ட பழக்க வழக்கங்கள், சிற்றூரில் வழங்கிவரும் அறிவற்ற எண்ணங்கள் இவை யாவற்றுக்கும் புறத்தே, ஒவ்வொரு மனித இயல்பிலுமுள்ள பெரும்பான்மையான மூடக்கொள்கைகள் ஆகிய இவை எல்லாவற்றினையும் வெல்ல வேண்டியவர்களாய் உள்ளனர். இவ்வாறிருந்தும், உலகிலுள்ள ஞான வீரர் சிற்சிலர் உண்மையினைக் கண்டு கருத்தில் இருத்தி, விடாப்பிடியுடன் இறுதி வரையில் பற்றிவரும் மதிவலியினரும் தோன்றியே வருகின்றனர்.

அத்துவைதியின் உறுதிச் சொல் யாது? கடவுள் ஒருவர் இருந்தால், அவரே பிரபஞ்சத்தின் உபாதான காரணமாகவும் நேரிடையான முகாந்தரமாகவும் இருக்க வேண்டும். படைப்புக்கு அதிபராக மட்டும் இராது, படைக்கப் பெற்ற பொருளும் அவரேயாயிருத்தல் வேண்டும். இப்பிரபஞ்சமும் அவரே. அது எவ்வாறு இருக்கக்கூடும்? தூய ஆவியின்பாற்பட்ட அவர் சகமாதல் இயலுமா? ஆம், அப்படித்தான் தோன்றுகிறது. அறிவொளி மங்கிய பேதை மக்கள் மாபேருலகமாகக் காண்பது உண்மையில் மெய்ப்பொருளன்று. 'நீ', 'நான்' என்பவரும் நாம் காணும் இப்பொருள்களும் யாவை? எல்லாம் தன்னையே வஞ்சிக்கும் மயக்கமே. இருப்பது ஒரே பொருளே; அகண்டாகாரமான, என்றும்

பேரானந்தத்தோடு விளங்கும் ஒன்றே. இந்த ஓர் உண்மை நிலையில் பலவிதமான கனவுகளைக் காண்கின்றோம். எல்லா வற்றிருக்கும் அப்பாற்பட்ட ஆன்மாவே உளது; அது அகண்டமானது; காணும் பொருள்களுக்கு அப்பாற்பட்டது: காணக் கூடியவற்றிற்கும் அப்பாற்பட்டது; நாம் அதிலும் அதன் மூலமாகவுமே பிரபஞ்சத்தைக் காண்கிறோம். அது ஒன்றே மெய்ப்பொருள். 'அதுவே இந்த மேசையும், கேட்போரின் கூட்டமான இப்பேரவையும் அதுவே; இச்சுவரும் அதுவே. எல்லா நாமரூபங்களையும் நீக்கிப் பார்ப்போமானால், மேசையின் வடிவத்தினை மறந்துவிடுக; அதன் பெயரை மறந்துவிடுக: எஞ்சிநிற்பது அப்பொருளே. வேதாந்திகள் அதனை 'அவன்' என்றோ, 'அவள்' என்றோ கூறுவதுண்டு. இவை மனத்தின் கற்பனைகள்; மனித மூளை யின் மோக மயக்கங்கள். ஆன்மாவிற்குப் பாற்பிரிவென்பது இல்லையன்றோ! விலங்கு போன்றாகிவிட்ட மயக்குற்ற மக் கள் ஆடவரையோ பெண்டிரையோ பார்க்கின்றனர். நடமா டும் தெய்வங்கள் அவ்வாறு ஆடவர்களாகவோ பெண்டிர் களாகவோ நோக்குவதில்லை. யாவற்றிற்குமப்பாற்பட்டவர் எப்படிப் பாற்பகுப்பினைப் பார்த்தல் இயலும்?

யாவரும், எப்பொருளும் ஆன்மாவே; ஒரே உயிர், ஆணல்லாத, பெண்ணல்லாத, அலியுமல்லாத, தூய்மை நிறைந்த, என்றும் பேரின்பத்துடன் கூடியுள்ள அந்த ஆன்மாவே. பௌதிகமாயுள்ள அந்த உருவமும் வடி வமும் உடலுமே எல்லா வேற்றுமைகளுக்கும் காரணம். நாமரூபங்களை நீக்கிப்பார்த்தால், பிரபஞ்சம் முழுவதுமே ஒன் றாகிய பரப்பிரம்மமே; இரண்டென்பதே இல்லை; எங்கும் நிலவும் ஒன்றே. நீங்களும் நானும் ஒன்றே. இயற்கையு மில்லை; ஈசுவரனுமில்லை; பிரபஞ்சமும் இல்லை. இருப்பது ஒரே அகண்டமான எல்லையில்லாத மெய்ப்பொருளே. அதினின்றுமே பெயரும் உருவும் பெற்ற பலப்பல பொருள் களும் தோன்றியுள்ளன. யாவற்றுக்கும் அறிவோனாய் இருப் பவனை அறிவது எங்ஙனம்? அது அறிய வொண்ணாதது. ஆகவே, உங்களையே நீங்கள் காணும் வகை யாது? உங்க ளையே நீங்கள் பிரதிபலிக்கச் செய்துகொள்ளலாம். இவ்வாறே இப்பிரபஞ்சமும் அந்த ஒரே நித்தப் பொருளாகிய ஆன்மா

வின் சாயையே. நிழல் நல்ல பொருளிலோ தீய பொருளிலோ விழுவதற்கேற்றவாறு தெளிவாகவோ அன்றியோ காணப்படுகிறது. கொலை செய்பவனிடத்தில் இப்படியாகக் கெட்ட சாயை பிரதிபிம்பிக்கிறது. கெடுவது ஆன்மாவன்று. மேதக்கோருடையது நற்சாயை ; அது தெளிவுபடைத்தது. ஆன்மா தன் இயல்பில் தூய்மையுடையது. அது ஒரு தன்மைத்தே : பிரபஞ்சத்தின் ஒரே பொருளாய் இருந்து தன்னைத் தானே மிகக் கீழான புழுவிலும் மிக மிகச் சிறந்த மேலான பரிபூரணம் பெற்ற தெய்வத்தினிடத்தும் பிரதிபலித்துக் கொள்ளுகின்றது. இப்பிரபஞ்சம் முற்றும் ஒரே பொருள் ; ஒரே இருப்பு ; பௌளதிக முறையிலோ, மானதக் கற்பனையிலோ நீதி நெறியிலோ, ஆன்மிகத் துறையிலோ, நாம் இந்த ஒரே இருப்பினைப் பலபடிப்பட்ட வடிவங்களிலும் அவற்றின் மீது விளங்கும் நிழல்களிலுமே காண்கின்றோம். தன்னை ஒரு மனித நிலைக்குக் கொணர்ந்து அதிலே வரம்பிற்குட்பட்டிருக்கும் ஒருவனுக்கு அது மனித உலகமாகத் தோன்றுகிறது. அதனினும் மேலான வட்டத்திலுள்ள தேவனுக்கு அது துறக்கமாய் விளங்கும். பிரபஞ்சத்தில் ஒரே ஒரு ஆன்மா தான் உள்ளது ; இரண்டல்ல. அது வருவதும் போவதுமன்று. அது பிறப்பதுமில்லை ; இறப்பதுமில்லை ; மறுபிறப்பெய்தவுமில்லை. அது எப்படி அழிவதாகும்? அது எங்குச் செல்வது? சொர்க்கங்களும் பூமிகளும் மற்ற எல்லா இடங்களும் மனத்தின் வீண் கற்பனைகளே. இவை உண்மையில் இருப்பனவல்ல. இவை என்றும் இருக்கவுமில்லை ; இனி இருக்கப்போவதுமில்லை.

நான் எங்கும் பரந்துளேன். என்றைக்கு முள்ளோன் நானே. ஏற்கெனவே நான் இல்லாத இடம் இல்லை. நான் இயற்கையின் இந்த ஏட்டைப் புரட்டிக்கொண்டேயிருக்கிறேன். ஒன்றன் பின் ஒன்றாக வாழ்க்கையின் எக்கனவும் பறந்து போய் விடுகின்றது. வாழ்க்கையின் மற்றோர் ஏட்டினைத் திருப்புகிறேன். வாழ்க்கையின் மற்றொரு கனவும் வந்து அதுவும் உருண்டுருண்டு ஓடுகின்றது. நான் எனது படிக்குந் தொழிலை முடித்துக் கொண்டு அதை விட்டு விலகி நிற்கின்றேன் : புத்தகத்தையும் வீசி எறிந்துவிடுகின்றேன். எல்லாம் முடிவு பெற்று

விடுகின்றது. அத்துவைதி கூறுவது யாது? கடவுளர் யாவரையும் தம் உயர்ந்த பொன்மயச் சேர்க்கையினின்றும்—அரியாதனத்தினின்றும்—இறக்கி விடுகிறார். வரப்போகிற கடவுளர்க்கும் அவர் அதில் அமர இடமளிப்பதில்லை. அந்த உயர்சிங்காதனத்தே மனிதனது உயிர்க்குயிரான ஆன்மாவை அமர்த்தியருளுகிறார் இறைவர். அந்த ஆன்மா விரிகதிரோனினும் திங்களினும் உயர்ந்தது. சொர்க்கத்தினும் உயர்ந்தது. இப்பிரபஞ்சத்தினும் மிகப் பெரிது. மனித உருவெடுத்து வந்த ஆன்மாவின் மாட்சியை உரைக்கற்பாலதன்று; கற்பனைக் கண்ணால் காணக்கூடியதுமன்று. அன்று, இன்று, என்றுமே அதனின் மிக்கோர் இல்லை, இல்லை. ஆகவே, 'நான் என்னையே (எனது ஆன்மாவையே) தவிர்த்து யாரைப் போற்றி வழுத்துவது?' என்று அத்துவைதி அறைகின்றான். 'யாருக்கு நான் வணக்கம் செலுத்த வேண்டும்?' என்பது அவனது வாய்மொழி. 'எனது ஆன்மாவையேதான் யான் வணங்குதல் வேண்டும்,' என்பது அவனது கருத்து. 'நான் வேறு எவரிடம் உதவி தேடிச் செல்வது? பிரபஞ்சத்தின் எல்லையற்ற தலைவனாக எனக்குத் துணைபுரிய வருபவன் யாரே?' என்பது அவன் கூற்று. இவை யாவும் பொருளற்ற கனவுகளே; மதிமயக்கத் தோற்றங்களே. யார் எவருக்கு உதவி புரியக்கூடும்? ஒருவரும் இல்லை. எங்கெல்லாம் ஒரு பலவீனன், ஒரு துவைதி எங்கிருந்தோ வானுலகினின்றும் உதவி வருமென்று அழுதரற்றுகிறானோ, அங்கெல்லாம் அவனுக்கு அவ்வானம் தன்னுள்ளேயே உளதென்பது தெரிவதில்லை. அவனுக்கு விண்ணினின்றும் உதவி வேண்டியிருக்கின்றது. அவ்வுதவியும் அவனுக்குக் கிட்டுகின்றது. உதவி வருவதனை நாம் அறிகின்றோம். ஆனால், அவ்வுதவி அவனுக்கு அவனிடமிருந்தேதான் வருகின்றது. அதனையறியாது, அவன் அது வெளியே இருந்துதான் வருகிறதென்று தவறாக நினைக்கிறான். சில வேளைகளில் படுக்கையில் கிடக்கும் நோயாளி கதவண்டையில் கதவைத் தட்டும் சத்தத்தைக் கேட்கிறான். அவன் எழுந்து கதவருகே சென்று கதவினைத் திறக்கவும் ஒருவரும் அங்கு இல்லை என்பதனை அறிகிறான். அவன் படுக்கைக்குத் திரும்பி மறுபடியும் கதவு தட்டுவதைச்

செவி மடுக்கிறான். அவன் எழுந்து போய்க் கதவைத் திறக்கிறான். அங்கே யாருமில்லை. இறுதியாகக் கதவைத்தட்டும் சத்தம் அவன் கற்பனை செய்துகொண்டதே; அவனது இதயத்துடிப்பே. அம்மனிதன் தனக்குப் புறத்தேயுள்ள பல்வேறு தெய்வங்களை வீணில் தேடி அலைந்து முடிவில் ஒரு வட்டத்தைப்பூர்த்தி செய்துவிட்டு, தான் தொடக்கத்திலிருந்த இடத்துக்கே— தன் ஆன்மாவுக்கே வந்து சேர்ந்து, எந்தக்கடவுளைத் தான் மலை மீதும் மடுவிலும் சிற்றோடையிலும் ஒவ்வொரு கோவிலிலும் தேடி வந்தானோ, அக்கடவுள், ஏதோ ஒரு சொர்க்கத்தில் அமர்ந்து இவ்வுலகை ஆள்வதாகக் கற்பனைக் கண்ணால் கண்டு வந்த அக்கடவுள், தனது ஆன்மாவைத் தவிர்த்து வேறொருவருமல்லர் எனக் கண்டுகொள்கின்றான். நானே அவன் ; அவனே நான்; என்னையன்றி வேறு கடவுள் இருந்ததில்லை. இந்தச் சிறிய "நான்" எப்போதும் இருந்ததே இல்லை.

ஆனால், அத்தகைய பரிபூரணமான கடவுள் எப்படி ஏமாற்றப்பட்டிருத்தல் கூடும் ? அவர் ஒருபோதும் ஏமாற்றப்படவில்லை. நிறை நிலையிலுள்ள கடவுள் எவ்வாறு கனவு கண்டு கொண்டிருத்தல் இயலும் ? அவர் ஒரு போதும் கனவு காணவில்லை : மெய்ப்பொருள் ஒரு போதும் கனவு காண்பதில்லை. 'இந்த மயக்கம் எங்கிருந்து தோன்றியது ?' என்று கேட்பதே பொருளற்ற கேள்வி. பிரமையிலிருந்து பிரமையே விளைதல் கூடும். மெய்யினைக் கண்ட பின்னர் மயக்க அறிவு நிலையாது. மயக்கம் என்ற அஞ்ஞானத்தின் மீதே, அதனையே ஆதாரமாகக் கொண்டு நிற்பது. அது உண்மை வடிவான ஆன்மாவான கடவுளினிடம் ஒரு போதும் நிலைபெற்றிருப்பதில்லை. நீங்கள் மயக்கத்தில் இருக்கவில்லை. மயக்கம் உங்களிலும் உங்களுக்கு முன்பும் தோன்றுகிறது. முகில் ஒன்று இங்குத் தோன்றுகிறது. மற்றொன்று தோன்றி அதனைத் தள்ளிவிட்டு அந்த இடத்தில் புகுந்து விடுகின்றது. வேறோர் முகில் வந்து அதனையும் அகற்றி விடுகிறது. என்றைக்குமுள்ள நீல வானின் முன்னர்ப் பல வண்ணம் படைத்த முகிற் படலங்கள் தோன்றிச் சிறிது காலம் தங்கிவிட்டு மறைகின்றன.

அப்போது பண்டைய நீலவிசும்பு முன்போலவே தெரிவான காட்சியளிக்கிறது. அது போன்றே நீங்களும் என்றென்றும் பரிசுத்தத்துடன் பூரணத்துவம் பெற்று விளங்குகிறீர்கள். நீங்களே பிரபஞ்சத்தின் உண்மையான கடவுள். கடவுள் ஒருவரே உண்டு; இருவரில்லை.'நீயும் நானும்' என்று சொல்வது பிழையே. 'நான்' என்று சொல்க, பல இலட்சக் கணக்கான வாய்களின் மூலம் நானேதான் உண்கிறேன். எனக்குப் பசி என்பது எவ்வாறு இருக்கக் கூடும்? பலப்பல கைகள் மூலமாகவும் நானே தொழிலாற்றி வருகிறேன். நான் எவ்வாறு செயலற்றிருத்தல் இயலும்? பிரபஞ்சத்தில் வாழ்பவனும் நானே. எனக்குச் சாவு என்பது ஏது? நான் வாழ்வுக்கப்பாலும் இறப்புக்கப்பாலும் சீவனுடன் உள்ளேன். நான் சொந்த விருப்பத்திற்காக எங்குச் செல்லல் வேண்டும்? ஏனெனில், இயல்பிலேயே நான் அதனைப் பெற்றுள்ளேன். பிரபஞ்சத்தின் கடவுளாகிய என்னை யாரால் கட்டுப்படுத்த இயலும்? உலகத்திலுள்ள வேத நூல்கள் யாவும் பிரபஞ்சத்திலுள்ள ஒரே இருப்புள்ள எனது மாட்சிமையை எடுததுக் கூற ஆசைப்படும் சிறு படங்கள். அப்படியாயின் இந்நூல்கள் யாவும் எனக்கு ஏன்? அத்துவைதி இங்ஙனமே அறைகின்றான்.

"மெய்யினை யறிந்து ஒரு கணப்போதில் முத்தியினைப் பெற்றிரு." அப்போது இருள் முற்றும் ஒதுங்கிவிடும். மனிதன் தன்னை அகண்டாகாரப் பிரம்மத்தினோடு ஒன்றாகப் பார்த்ததன் பின்னர்—பிரிவு நினைவே ஒழிந்த பின்னர்—எல்லா ஆடவரும் பெண்டிரும், தெய்வங்களும் தேவதூதர்களும், விலங்குகளும், செடிகளும், முழுப் பேருலகமும் அந்த ஒன்றான பொருளில் நெகிழ்ந்து கரைந்துவிட்ட பின்னர், அச்சமனைத்தும் மறைந்தே போகின்றது. நான் என்னையே துன்புறுத்திக் கொள்ளல் இயலுமா? என்னையே நான் தற்கொலை புரிந்துகொள்ளுதல் ஒல்லுமா? எனக்கே நான் தீங்கிழைத்துக்கொள்ளக் கூடுமா? யாரைக் கண்டு நான் அஞ்சவேண்டும்? நீங்கள் உங்களைக் குறித்தே பயங்கொள்ளுதல் கூடுமா? அப்போது துயரனைத்தும் மறைந்துபோம்; அழுக்காறும் அகன்றுபோம். எனக்குத்துயர் ஏது? யார் அதனை இயற்றவல்லவர்? நான் உலகத்தின் ஒரு

பாவனைப் பொருள். யாரைக்கண்டு நான் பொருமை கொள்ளுவது? என்மீதே நான் பொருமை கொள்ள இயலுமா? அப்போது பகைமை தொலைந்தேபோம்; எனக்கு யார் மீதும் கொடுமை இருத்தல் இயலாது. மாபேருலகில் என்னைத்தவிர்த்து வேறு எவருமே இல்லையே! இது ஒன்றே ஆன்ம அறிவுக்கு வழியென்று வேதாந்தி உரைக்கின்றான். வேற்றுமை யுணர்ச்சியை மாய்த்து விடுக. பலர் உளர் என்னும் மூடக்கொள்கையைத் தகர்த்தெறிந்துவிடுக. "பலருள்ள இவ்வுலகினில் அந்த 'ஒருவ'னையே எவன் காண்கின்றானோ, உயிரற்ற பெருங்கூட்டத்தில் எவன் அந்த ஒரே அறிவுச் சுடரைக்காண்கின்றானோ, எவன் இந்த நிழலால் நிரப்பப்பட்ட உலகில் உண்மையான ஏகப்பொருளினை அறிந்துகொள்ளுகிறானோ அவனுக்கே அழிவற்ற மன அமைதி நிலவுவதாகும், வேறொருவனுக்கன்று; வேறொருவனுக்கு மன்று."

மெய்ப்பொருளின் ஆராய்ச்சி பற்றி இந்திய சமய உணர்ச்சி எடுத்துக்கொண்ட மூன்று துறைகளின் முக்கியக் குறிப்புகள் இவையேயாம். முன்னமே நான் குறித்துள்ளபடி அது பிரபஞ்சத்துக்கப்பால் சகுணத்துடன் தொடங்குவது. அது புறத்தே இருந்து உள்ளிருக்கும் பிரம்மாண்ட உடலுக்குட்புகுந்து பிரபஞ்சத்துக் குள்ளேயே எங்கும் பரந்த கடவுளாகி, ஆன்மாவும் பரமான்மாவும் ஒன்றெனவே கொண்டு ஒரே கூட்டான பிரிக்க இயலாத ஆன்மாவே பற்பல தோற்றங்களாகிறது. இவ்வுலகிலுள்ள இதுவே வேதங்களின் முடிந்த முடிவாகும். இது துவைதத்தில் தொடங்கி ஒரு விசேட அத்துவைதத்தின் மூலம் சென்று இறுதியில் சம்பூரணமான அத்துவைதத்தில் முடிவடைகின்றது. இக் கடைசிக் கொள்கையின் கருத்து ஒரு சிலருக்கே எட்டக் கூடியது; அவர்களாலேயே நம்புவதற்கு இயல்கின்றது: இன்னும் குறைந்த எண்ணிக்கையுடையவர்களாலேயே செயல் முறையில் இறங்குதற்கு இடமளிக்கின்றது. ஆனால் இதிலேதான் மாபேருலகிலுள்ள எல்லா நீதிக்கும், நன்னெறிக்கும், 'அதியாத்தும' வித்தைக்கும் விளக்க முள்ளதென்பதனை நாம் அறிவோம். "பிறருக்கு நன்மைபுரி," என்று ஏன் ஒவ்வொருவரும் உரைக்கின்றார்?

அதன் விளக்கம் எங்குளது? மனித உடன் பிறப்புரிமையை ஏன் தக்கோர் யாவரும் போதித்து வந்தனர்? மேலும், பெரியோர் ஏன் எல்லா உயிர்களின் சகோதரத்துவத்தின் உண்மை பற்றியே சொற்பொழிவாற்றி வந்தனர்? ஏனெனில், அவர்கள் அதனை அறிந்தோ, அறியாமலோ, யாவற்றுக்கும் பின்னிலுள்ள அவர்களது நியாய உணர்ச்சிக்கு அப்பாலுள்ள, அறிவிலியின் கொள்கைகளுக்கும் அப்பாற்பட்ட ஆன்மாவின் சோதி சுடர்விட்டெரிந்து பிரபஞ்சம் முழுவதினையும் ஒன்றாகக் காட்ட அதன் பலவகைப் பட்ட தோற்றங்களையும் மறுத்து வந்ததனாலேதான்.

மேலே மொழிந்ததிலிருந்து நாம் புலன்களால் காணும் சடப்பொருள்களையும், நன்மதியால் காணும் ஆன்மாக்களையும், உணர்வினால் கண்டுகொள்ளும் கடவுளையும் ஒரே பிரபஞ்சமென்ற முழுமையான பொருளைக் காட்டியது. துன்பென்னும், துட்டத்தனமென்னும் போர்வையைத் தன்மீது போர்த்துக் கொள்பவனுக்கு இதே பிரபஞ்சம் மாறி மிகக் கோரமான நரகமாகத் தோன்றும்: போகங்களையே விரும்பும் மற்றவனுக்கு இது மாறிச் சொர்க்க இன்பமாகவே காட்சியளிக்கும். பூரணமனிதனுக்கு எல்லாம் மறைந்து ஆன்மா தனது சுய சொரூபத்தில் விளங்குவதாகும்.

இப்போதுள்ள சமூகத்தின் அமைப்பில் இம்மூன்று படிகளும் அவசியமே. ஒன்று மற்றொன்றினை மறுப்பதாய் இல்லை; ஒன்று மற்றதைப் பூரணப்படுத்துவதேயாகின்றது. அத்துவைதியோ, விசிட்டாதத்துவைதியோ, துவைதமதம் பிழைபட்டதென்று கூற முன்வரவில்லை. அது சரியானதே, ஆனால், ஒரு படி கீழேயுள்ளது. ஆகவே அது மெய்மைக்குப் போகும் வழியிலேயே உள்ளது. யாவரும் தத்தம் கருத்துக்கிணங்கிப் பிரபஞ்சத் தோற்றத்தின் நிலையினை நல்ல முறையில் ஆராய்ந்து செல்வாராக. ஒருவருக்கும் தீமை இழையாதீர்கள். ஒருவர்க்கும் அவரவர்க்குரிய பதவியை மறுக்காதீர்கள். மனிதனை அவனவன் உள்ள நிலையில் ஒப்புக்கொள்ளுங்கள். உங்களால் கூடுமானால், அவனுக்கு உதவி செய்து அவனை உயர்ந்த ஒரு பீடத்தில் அமர்த்த முயலுங்கள். ஆனால் அவனுக்குத் தீங்கிழையாதீர்கள்; நாசம் உண்டு

பண்ணுதீர்கள். இறுதியில் யாவரும் உண்மையை அறிந்தே தீருவர். "இதய இச்சைகள் யாவும் வெல்லப்படும்போது இந்த ஈனமான மானிட வடிவே அமர நிலை படைத்ததாகும். மனிதன் அப்போது கடவுளேயாகி விடுவான்.''

ஆன்மா : அதன் தளையும் விடுதலையும்

(அமெரிக்காவில் ஆற்றிய சொற்பொழிவு)

அத்துவைதக் கோட்பாட்டின்படி இப்பிரபஞ்சத்தில் ஒரே உண்மைதான் உளது; அதுவே 'பிரம்மம்' என்று கூறப்படுவது; பிற யாவும் பொய்யே: மாயையின் வல்லமையினால் பிரம்மத்தினின்றே வெளிப்பட்ட ஒரு தோற்றம், ஓர் ஆக்கப் பொருள். அந்தப் பிரம்மத்தினை மீண்டும் அடைவதே நமது இலட்சியம். நம்முள் ஒவ்வொருவரும் அந்தப் பிரம்மமாகிய மெய்ப் பொருளும் அத்துடன் கலப்புற்ற மாயையும் ஆவோம். நாம் இந்த மாயையை அல்லது, அஞ்ஞானத்தை தொலைத்துவிட்டால், 'உள்ள பொருளே ஆகிவிடுகிறோம். இந்தத் தத்துவக் கொள்கைப்படி ஒவ்வொருவரிலும் உடல், உள்ளுறுப்பு அல்லது மனம், அதற்குப்பின் நிற்கும் ஆன்மா ('தான்') என்னும் மூன்று பகுதிகள் உண்டு. உடல் என்பது காண்பானாகிய, அனுபவிப்பவனாகிய உடலில் உறைந்து அதனை உள்ளுறுப்பாகிய மனம் வாயிலாக இயக்கி வருவதாகிய ஆன்மாவின் புறப்போர்வையே; மனம் அதன் உள்ளுறையாகும்.

மனித உடலில் பூதசம்பந்தமில்லாத ஒரு கூறு ஆன்மாவே. அது சடமல்லாததால், கூட்டுப் பொருளாய் இருக்க இயலாது; அப்படி இராமையால், அது காரணகாரிய நியதிக்கு அப்பாற்பட்டது. ஆதலால், அது அமரத்தன்மை வாய்ந்தது. முடிவற்ற பொருளுக்கு ஆதி என்பது இல்லை. ஏனெனில், தொடக்கமுள்ள பொருள்கள் யாவும் நாசமுறுவனவே. இதிலிருந்து அது வடிவற்றதாக இருத்தல்வேண்டுமென்பதும் பெறப்படும். பௌதிகப் பொருளின்றி ஒரு வடிவு தோன்றக்கூடியதன்று. வடிவுள்ள பொருள்கள் யாவும் தொடக்கமும் முடிவும் உடையனவே. தொடக்கமில்லாத ஒரு வடிவை—எல்லையில்லாத ஒரு வடிவை—நம்முள் எவரும் கண்டதில்லை. சத்தியும் சடப்பொருளும் ஒன்றாய்க் கலக்கும்போதுதான் ஒரு வடிவு உண்டாகின்றது. இந்த நாற்காலிக்கு ஒரு விசித்திரமான வடிவம் இருக்கிறது; அதாவது, ஒரு சடப்பொருளின் மீது இயக்கும் சத்தி

ஒன்றைப் புகுத்தி ஒரு குறித்த வடிவினைப்பெறுமாறு ஆற்றப்படுகின்ற சடமும் ஒரு சத்தியும் கூடியதன் பயனாக ஓர் உருவம் உண்டாகின்றது. இந்தச் சேர்க்கை என்றென்றைக்கும் நிலைத்து நிற்கக் கூடியதன்று; ஒவ்வொரு சேர்க்கைக்கும் அது பிரிவுபடும் காலமொன்றுண்டு. இது இயல்பே. ஆகவே, எல்லா உருவங்களுக்கும் தொடக்கமும் முடிவுமுண்டு. நமது உடல் அழியுமென்பதை நாம் அறிவோம். அநாதி காலமாக அதற்கு ஒரு முதலும் உண்டு, இறுதியுமுண்டு. ஆனால், வடிவே பெறாத ஆன்மா, ஆதியந்தமென்ற சட்ட வரம்பினால் கட்டுப்படுத்தக்கூடியதன்று. அது அநாதி காலமாகவே இருந்து வருகின்றது; காலம் எப்படி எல்லை கடந்ததோ, அப்படியே மனித ஆன்மாவும் எப்போதும் நிலையாக உள்ளதொன்றே. இரண்டாவதாக, அது எங்கும் நிறைந்ததாய் இருக்க வேண்டும். இடத்தினால் எல்லையுட்படுத்தப்பட்டும் சில நிபந்தனைகளுக்கு உட்படுத்தப்பட்டும் இருப்பது வடிவம் ஒன்றே; வடிவம் பெறாத ஒன்று பரவெளியில் அடக்கப்படமாட்டாது. ஆகவே, அத்துவைத வேதாந்தத்தின் கருத்து இதுவே. உங்களில், என்னில், பிறர் யாவரிலுமுள்ள ஆன்மா எங்கும் பரந்துளது. நீங்கள் நிலத்திலிருப்பது போன்றே பகலவன் மண்டலத்திலும் உள்ளீர்கள்; அமெரிக்காவில் இருப்பது போன்றே இங்கிலாந்திலும் இருக்கின்றீர்கள். ஆனால், ஆன்மா மனத்தின் மூலமாகவும் உடல் வாயிலாகவும் இயங்குகிறது. அவை இருக்குமிடத்தில் அதன் தொழிலும் காணப்படுகின்றது.

நாம் செய்யும் ஒவ்வொரு வினையும், நினைக்கும் ஒவ்வோர் எண்ணமும் வடமொழியில் 'சம்ஸ்காரம்' என்று கூறப்படும் ஒரு பதிவை உள்ளத்தில் பொறிக்கின்றது; இப்பதிவுகளின் கூட்டுத் தொகை 'சீலம்' என்னும் மாபெரும் வலிமையாகின்றது. ஒருவனது குணாதிசயமென்பது, அவன் தானே தனக்கெனப் படைத்துக்கொண்ட ஒன்று. அது இந்த வாழ்க்கையில் அவன் ஆற்றிய வினைகளின், நினைத்த நினைவுகளின், பயனேயாம். சம்ஸ்காரங்களின் மொத்தத் தொகை அவன் இறந்த பின்னர் அவனுக்குச் செல்லவேண்டிய வழியைச் சுட்டும் ஒரு சத்தி. ஒருவன் மறைகின்றான்;

உடல் கீழே விழுந்து அழிந்து ஐம்பூதங்களாக மாறிவிடுகின்றது; ஆனால், அவனுடைய பதிவுகள் அழிவதில்லை. நுண்பொருளினாலாகிய மனத்துடன் ஒட்டிக்கொண்டு கரையாது எஞ்சி நிற்கின்றன; ஏனெனில் எவ்வளவுக்கெவ்வளவு ஒரு பொருள் நுண்ணியதாக இருக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு அது வன்மையுடன் மாற்றத்தை எதிர்த்து நின்று நிலைத்து விடுகின்றது. ஆனால், இறுதியில் உள்ளமும் உருகி விடுகின்றது. இதற்குத்தான் நாம் போராடி வருகிறோம். இந்தச் சந்தர்ப்பத்தில் மிக நல்லதான ஒரு சான்று என் மனத்தில் அரும்புகின்றது: அதுதான் சுழல் காற்று. பல்வேறு திசைகளினின்றும் வந்து ஒன்றுகூடும் பல காற்றோட்டங்களும் ஒன்று சேர்ந்து உருண்டு சுழன்று கொண்டே வருகின்றன; அவ்வாறு செய்யுங்கால் ஒரு தூசிப் பிழம்பு எழுந்து, அதனுள் கடிதத்துண்டுகள், தானியத்தின் தாள்கள் முதலியவற்றையும் ஈர்த்துவந்து கீழே வீசிஎறிந்துவிடுகின்றது; இவ்வாறு இடம் பெயர்ந்து சுழன்று சுழன்று சென்று தம் முன்னேயுள்ள பொருள்களினின்றும் வேறுருவங்களைப் படைத்தே செல்கின்றது. அதுபோன்றே பிராணனென்று சாற்றப் பெறும் வலிமைகள் ஒன்றுகூடி மூலப் பிரகிருதியினின்றும் உடலையும் மனத்தினையும் உண்டுபண்ணி உடல் கீழே விழுமளவும் இயங்கிப் பின்னர் வேறு சடப்பொருள்களைக் கொண்டு மற்றோர் உடலை உண்டாக்குகின்றன; இதுவும் கீழே விழ, வேறொரு உடல் ஆயத்தமாகின்றது; இவ்வாறு வினையாற்றப்பட்டே வருகின்றது. சடமின்றிச் சத்தி இயங்காது. ஆகவே, உடல் கீழே விழவும் மனப்பொருள் தங்கி நிற்க அதன்மீது பிராணன் பதிவு வடிவத்தில் இயங்க, அது இடம் பெயர்ந்து வேறோர் இடம்பற்றி மற்றொரு சுழலை ஏனைய புதிய பொருள்களினின்றும் உண்டாக்குகின்றது. இதனின்றும் மற்றுமோர் இயக்கம் ஏற்பட்டு, இவ்வாறே மற்றுமொரு பிரயாணம் தொடங்கி, சத்தி முழுதும் செலவாகுந்துணையும் இடத்துக்கிடம் யாத்திரை செய்கின்றது; பின்னர் வலிகுன்றி வீழ்ந்துவிடுகின்றது. ஆகவே எஞ்சிய சமஸ்காரம் யாதொன்று மிராது போகுந்தனையும் மனம் சுக்குநூறாக முழுதும் பொடியாய்விடும்போது நாம் பூரணமான சுதந்திரம் பெறுகின்றோம்; அதுகாறும் நாம் கட்டுண்ட நிலை

யிலேயே நிற்கின்றோம். அதுவரை ஆன்மா மனத்தின் சுழற்சியில் அகப்பட்டுக்கொண்டுதான் ஒவ்வொரு இடமாக அழைத்துச் செல்லப்படுவதாகக் கற்பனை செய்து கொள்கின்றது. சுழற்சி நிற்கும்போது ஆன்மாவே எங்கும் நிறைந்திருப்பதாகத் தன்னைக் காண்கின்றது. சுயேச்சையாக அது எங்கும் திரியக்கூடிய பூரண சுதந்தரத்தோடுதான் விளங்குகிறது; எத்தனை மனங்களையோ உடல்களையோ தன் விருப்பப்படி தானே படைத்துக்கொள்ளும் ஆற்றல் பெற்றதாகின்றது. ஆனால் அந்நிலை வரும் வரை அது சுழவின் கூடவே செல்ல வேண்டுவதாகின்றது. நாம் எல்லோரும் நோக்கிச் செல்லும் குறி இந்த விடுதலையே.

இந்த அறையில் ஒரு பந்து இருக்கிறதென்று வைத்துக் கொள்வோம்; நம்மில் ஒவ்வொருவரிடமும் ஒரு கொட்டாப்புளி உளதென்றும் அதனைக்கொண்டு நம்முள் ஒவ்வொருவரும் நூறுதரம் தட்டுகிறோமென்றும் கற்பனை செய்வோம். அலைந்துதிரிந்த அப்பந்து இறுதியாக அறையை விட்டே வெளியேறி விடுகிறது. வெளியே செல்லும்போது அதன் விசை யாது? எத்திசையை நோக்கி அது செல்லும்? அவை இதுகாறும் அதன்மீது இயங்கி வந்துள்ள பல வலிமைகளின் கூட்டுத் தொகையினைப் பொருத்துள்ளனவாகும். அடித்த ஒவ்வொரு அடிக்கும் அதன் பயன் இருந்தே தீரும். நமது மனச் செயல்கள், உடலின் இயக்கங்கள் இவற்றில் ஒவ்வொன்றிற்குமுரிய விளைவு உண்டு. அது பந்தடியைப் போன்றதே. நாம் இந்த உலக அரங்கில் எத்தருணத்திலும் உதைபடும் பந்து போன்றே தாக்கப்படுகின்றோம். நாம் அதைவிட்டு வெளியேறுவது அத்தாக்குதல்களின் மொத்தவலிமையைப் பொருத்ததே. ஒவ்வொரு விஷயத்திலும் பந்தின் விரைவும் அதன் திசையும் அது வாங்கியுள்ள தாக்குதல்களைப் பொருத்தனவாகும். ஆகவே, இவ்வுலகில் நாம் ஆற்றும் வினைகள் யாவும் நமது மறுபிறப்பினைத் தீர்மானிப்பனவாகும். ஆதலால், நமது இப்பிறவி நமது முன் பிறப்பின் விளைவாகவே வந்துள்ளது. இது ஒரு சங்கிலி. நான் உங்களிடம் நுனியற்ற சங்கிலித் தொடரைக் கொடுக்கிறேனென்றும் இதில் மாறிமாறிக் கறுத்ததும் வெளுத்ததுமான வளையங்கள் உள்ளனவென்றும் வைத்துக்கொள்

ளுங்கள். நான் இச்சங்கிலித் தொடரின் இயல்புபற்றி உங்களை வினவுகிறேன். முதன் முதலில் நீங்கள் அதன் தன்மையைக் கண்டுபிடிக்க வருந்துகிறீர்கள். சங்கிலியோ இருபுறமும் எல்லையற்றிருக்கிறது; ஆனால், மெதுவாக நீங்கள் அது சங்கிலி என்பதனைக் காண்கிறீர்கள். மிகுவிரைவில் அந்த எல்லையற்ற சங்கிலித் தொடர் கருமையாகவும் வெண்மையாகவும் மாறிமாறி மீண்டும் மீண்டும் வருகிறதென்பதனையும் அது கணக்கில்லாமல் பெருக்கிக்கொண்டே போனால், ஒரு முழு வளையமாகிவிடுகின்றதென்பதனையும் காண்கின்றீர்கள். தனி வளையங்களின் இயல்பு உங்களுக்குப் புரிந்துவிடின், நீங்கள் முழுச் சங்கிலியின் இயல்பினை முற்றும் அறிந்துவிட்டவர்களாவீர்கள். ஏனெனில், அது மீண்டும் மீண்டும் ஒரே ஒழுங்கில் அமைக்கப் பெற்ற ஒன்றே. நமது வாழ்க்கை முழுதும்—கடந்த, நிகழ்ந்து வரும், இனி வரப்போகும் வாழ்க்கைகள் யாவும் ஆதியும் அந்தமும் இல்லாத ஒரு முழுச் சங்கிலிக் கோவையே. அதன் ஒவ்வொரு கொளுவும் பிறப்பு, இறப்பு என்ற இரு கோடிகளைக் கொண்டதே. நம் செயலும் பண்புமே பின்னர் மாற்றமின்றி மீண்டும் மீண்டும் தோன்றும். ஆகவே, நமக்கு இந்த இரு கொக்கிகளும் நன்கு அறியப்பட்டுவிடின் இவ்வுலகில் நாம் கடந்து செல்ல வேண்டிய பாதைகளனைத்தும் நன்கு புலனாகும். நாம் கடக்க வேண்டிய பாதை நமது முன்பிறப்பு நுகர்ச்சிகளால் திட்டவட்டமாக முன் கூட்டியே தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது போலவேதான் நமது சொந்த வினைகளின் பயனாகவே நாம் இவ்வுலகினுக்கு வந்துள்ளோம். நாம் இப்போது ஆற்றிவரும் செயல்களின் கூட்டுத்தொகையுடன் எவ்வாறு உலகினை விட்டுச் செல்கிறோமோ, அவ்வாறே நாம் அதிற் புகும்போதும் முன் பிறவிகளின் கூட்டுப் பயனை உடன் கொண்டு வருகிறோம். எது நம்மை வெளியே அழைத்துச் செல்கின்றதோ, அதுவேதான் உள்ளேயும் இழுத்துச் செல்கின்றது. நம்மை உள்ளே கொண்டு செல்வது யாது? நம் தொல்வினை. நம்மை வெளியே கொண்டு செல்வது எது? நாம் இங்கு ஆற்றிவரும் செயல்களின் தொகுதியே. இப்படியே மேலும் மேலும் நடைபெற்று வருகின்றது. சிலந்தி எப்படி இழையைத்

தனது வாயிலிருந்தே உண்டாக்கித் தன் கூண்டினைச் சமைக்கின்றதோ, அப்படிச் செய்து இறுதியில் தன்னைத் தானே அதில் சிறைப்படுத்திக்கொள்கின்றதோ, அப்படியே நாமும் நம் வினைகளாலேயே கட்டுண்டு நம்முடைய செயல்களின் வலையை நம்மைச் சுற்றி அமைத்துக்கொள்கிறோம். காரணகாரியத் தொடர்பினை நாம் இயக்கிவிட்டு, பின்னர் அதனை விட்டு வெளியேறும் ஆற்றலின்றி, வகையறியாது உழல்கின்றோம். நாம் சக்கரத்தைச் சுழலச் செய்துவிட்டு அதனடியில் அமர்ந்து நசுக்குண்கிறோம். ஆகவே, இந்தத் தத்துவ நூல் நமக்கு அறிவுறுத்துவது யாதெனின், நல்வினையினாலோ தீச் செயலாலோ நாம் ஒரே மாதிரியாகக் கட்டுறுகின்றோம் என்பதே.

ஆன்மா ஒருபோதும் எங்கிருந்தும் வருவதுமில்லை, எங்கும் போவதுமில்லை. அது ஒரு போதும் பிறக்கவோ இறக்கவோ செய்வதில்லை. பிரகிருதியே அதற்கு முன்னே இயங்குகின்றது; இவ்வியக்கத்தின் நிழலே ஆன்மாவின் மீது ஒளிர்வது. ஆன்மா மதிமயக்கத்தினால் தானே—இயற்கையன்று—நகருவதாக நினைக்கின்றது. இப்படி ஆன்மா நினைக்கும் போது அது தளையுற்று உள்ளது; ஆனால், தான் நகருவதே இல்லை, தான் எங்கும் பரந்திருப்பது என்று காணும் போதுதான் விடுதலை எய்துகிறது. கட்டுப்பட்ட ஆன்மாவுக்குச் சீவன் என்பது பெயர். ஆகவே, ஆன்மா வருகிறது, போகிறது என்று நாம் கூறுங்கால், அறிவு விளக்கததின் வசதியின் பொருட்டே நாம் அவ்வாறு சாற்றுகின்றோம். வான நூல் பயிலும்போது புவியே ஞாயிற்றைச் சுற்றி வந்தாலும், நாம் எளிதில் அறிந்துகொள்ளும் பொருட்டு ஞாயிறேதான் பூமியைச் சுற்றுவதாகக் கருதி வருகிறோம். இப்படியே சீவான்மா மேலான நிலைகளுக்கும் ஏறி, கீழ் நிலைகளுக்கும் இழிந்து செல்கின்றது. இதுதான் மறுபிறப்பென்னும் பிரபலமான நியதியின் கருத்து. இது உலகப் படைப்பு முழுவதையும் கட்டுப்படுத்துகின்றது.

இந்நாட்டு மக்களை மனிதன் விலங்கு நிலையினின்றும் மேலே வளர்ந்து உயர்கின்றான் என்ற எண்ணமே அச்சுறுத்துகின்றது! ஏன்? கோடிக்கணக்கான இவ்விலங்கு

களின் முடிவுதான் என்ன? இவை ஒரு பொருளன்றோ! நமக்கு ஓர் ஆன்மா இருப்பது போன்றே இவற்றிற்கு முண்டு. அவ்வாறில்லை யெனின், நமக்கும் ஆன்மா இல்லையே? மனிதனுக்கு மட்டும் ஆன்மா உண்டு, விலங்கினத்துக்கு அது இல்லை என்று செப்புவது பொருளற்றதே. விலங்குகளைக் காட்டிலும் இழிவான மனிதர்களை நான் கண்டுள்ளேன்.

மனித ஆன்மா கீழான வடிவங்களிலும் மேலான வடிவங்களிலும் தோன்றியுள்ளது; ஒன்றினின்றும் மற்றொன்றிகுப் பண்டையப் பதிவுகளின் படி திரிந்து வந்துள்ளது; ஆனல், மிக மேலான மனித வடிவத்திலே தான் அது முத்தி பெறுகின்றது. மனிதனே தேவதூத உருவினும் பிற உருவினும் மேலானவன்; எல்லாவற்றினும் மிகமேலானவன். படைப்பில் மனிதனே எல்லாவற்றினும் மிக மேலானவன்; ஏனெனில், அவனே மோட்சநிலையினைப் பெறுகிருன்.

பிரபஞ்சம் முழுதும் பிரம்மனில் இருந்தது. அது அதனின்றும் வெளியே எறியப் பட்ட புடைப்புப் போன்றது. மின்சத்தி எவ்வாறு தன்னைப் பிறப்பிக்கும் யந்திரத்தினின்றும் புறப்பட்டுத் தனது சஞ்சாரத்தின் பின் அதற்கே திரும்பி விடுகிறதோ, அவ்வாறே அது நகர்ந்து கொண்டே சென்று முடிவில் தான் வந்த இடத்துக்கே மீண்டும் செல்ல விழைகிறது. ஆன்மாவும் அது போன்றதே. பிரம்மத்திலிருந்து புறப்பட்டு அது தாவரங்கள், விலங்குகள் இவற்றின் பல படியான உருவங்களை யெல்லாம் கடந்து சென்று, இறுதியாக மனிதனில் நிலைக்கின்றது. மனிதனே பிரம்மனுக்கு மிக அண்மையில் வரக்கூடியவன். நாம் எங்கிருந்து தோன்றினேமோ, அந்தப் பிரம்மத்துக்கே மீண்டும் செல்லும் முயற்சியே சீவனது பெரும் போராட்டம். மக்களுக்கு இது தெரியினும் சரி, தெரியாவிடினும் சரி, அதனல் ஒரு நலிவுமில்லை. பிரபஞ்சத்தில் நாம் காணும் இயக்கம், கருப் பொருள்கள், செடி கொடிகள், விலங்குகள் ஆகியவற்றின் இடையேயுள்ள போராட்டங்கள் யாவும் மையத்துக்குத் திரும்பிவந்து, அங்கு ஓய்வு கொள்ளும் முயற்சியே. சமநிலை ஒன்று இருந்தது; அது அழிக்கப்பட்டுவிட்டது;

எல்லா அணுக்களும் பரமாணுக்களும், பகுதிகளும், இழந்து போன சமநிலையைக் காணப் போரிட்டுக்கொண்டிருக்கின்றன. இப்போரில் அவை கலந்துகொண்டு மாறி அமைகின்றன; இயற்கையின் வியத்தகு தோற்றங்களுக்குக் காரண மாகின்றன; விலங்கு வாழ்வில், தாவர வாழ்வில், மற்றும் எங்குமுள்ள வாழ்விலுள்ள போராட்டங்களும் போட்டிகளும் சமூகச் சண்டைகளும் யாவும் பழைய சம நிலையை அடைய ஆற்றிவரும் இயையருத போரின் வெளிப்பாடுகளேயாம்.

பிறப்புமுதல் இறப்புவரை செல்லும் யாத்திரையே சம்ஸ்கிருதத்தில் 'சம்ஸாரம்' (பிறப்பிறப்புக்களின் சுழல் வட்டம்) என்று கூறப்படுவது. இவ்வட்டத்தின் வழியே செல்லும் சீவர் யாவரும் அண்மையிலோ சற்றுப் பொறுத்தோ விடுதலை பெறுகின்றனர். யாவருமே முத்தியடையப் போகிருேமெனின், நாம் ஏன் அதனைப் பெறப் போர் தொடுக்க வேண்டும்? ஒவ்வொருவருமே கட்டற்ற நிலையை எய்துவதாலுல், நாம் உட்கார்ந்து அதற்கெனக் காத்திருப்போமே. அண்மையிலோ, சற்றுக்கழித்தோ ஒவ்வொருவரும் விடுதலை பெறுவரெனின், ஒருவரும் அதை இழந்து விடப் போவதில்லை. இழக்க விட்டு விடப்படமாட்டா ரென்பது திண்ணம். ஒன்றுமே அழியப் போவதில்லை; ஒவ்வொன்றுமே மேலே வந்தாக வேண்டும். அவ்வாருனுல், நாம் போரிடுவதன் பயன் யாது? போர் புரிவதே நம்மை மையத்தினிடம் செலுத்தும் ஒரே சாதனமாகுமென்பது முதலாவது கருத்து. மற்றும் நாம் ஏன் எதிர்த்துப் போர் புரிகிருேமென்பது நமக்கு விளங்குவதில்லை. நாம் அவ்வாறு செய்தேயாக வேண்டும். "ஆயிரக்கணக்கான மக்கள் தாங்கள் முத்தி பெறுவார்கள் என்னும் கருத்துக்கு விருப்புற்றிருக்கின்ருர்கள். மனித இனத்திலுள்ள மிகப் பல பெருங் கூட்டத்தினருக்கும் புறச் சாதனங்களே திருத்தியளிப்பன வாகின்றன; ஆனுல் சிலர் விழிப்படைந்து, திரும்ப விழைகின்றனர். இங்குள்ள விளையாட்டுகளைக் கண்டு அலுத்துப்போய்விடுகின்றனர். இவர்கள் விழித்த அறிவுடன் போராடுகின்றனர்; மற்றவரோவெனில் எண்ண மின்றியே அவ்வாறு செய்கின்றனர்.

வேதாந்தத்தின் முதலும் முடிவுமான அறிவுரை "உலகினைத் துறந்துவிடு" என்பதே; பொய்யுலகினை விட்டுவிட்டு மெய்பொருளைப் பற்றிக்கொள்வதே. நாம் அதனை விட்டு ஏன் வெளிச்சென்று மீண்டும் மையத்தினை அடையவேண்டும்? உலகப் பொருள்களில் மயக்குற்றவர்கள், "நாம் யாவரும் கடவுளிட மிருந்தே வந்துள்ளோ மென்று வைத்துக் கொள்வோம்; ஆனால் இவ்வுலகு இன்பம் நிறைந்தது; அழகு படைத்தது. அப்படியிருக்க ஏன் இதினின்றும் மேலும் மேலும் நன்மையினைப்பெற முயலலாகாது? அதனை ஏன் விட்டொழித்து வெளிச் செல்ல விழைதல் வேண்டும்?" என்று கேட்கலாம். "ஒவ்வொரு நாளும் வியப்பிற்குரிய விருத்திகளை அடைய அவற்றிற்கான எத்தனை போகப் பொருள்கள் தயாராகிக்கொண்டே வருகின்றன என்பதைப் பாருங்கள்," என்று கூறலாம். இது துய்த்தற்குரியதே; இதனை விடுத்து நாம் ஏன் இதைத் தவிர்த்து வேறொன்றுக்காக அதற்கென உழைத்து வரவேண்டும்? இதற்கு விடை, உலகம் அழிவதும் அது துண்டுபட்டுப்போவதும் உண்மை. மேலும் ஒரே விதமான போகங்களைப் பலகாலும் துய்த்தாகி விட்டதே!" என்பதே. இப்போது நாம் காணும் வடிவங்கள் யாவும் திரும்பத் திரும்ப முன்னரே காட்சியளித்து விட்டன. நாம் வாழும் இவ்வுலகு மீண்டும் மீண்டும் பல தடவைகளும் தோன்றியாகி விட்டதே! நான் இங்கிருந்து உங்களிடம் எவ்வளவோ பேசியிருக்கிறேன். அது உங்களுக்குத் தெரிய வரும்; நீங்கள் இப்போது கேட்கும் சொற்களையே மீண்டும் மீண்டும் கேட்பீர்கள். இது எவ்வளவோ தடவை நிகழும். ஆன்மாக்கள் எப்போதுமே வேறுபட்டிருக்கவில்லை; உடல்கள் மறைந்தும் திரும்பவும் தோன்றியுமே வந்துள்ளன. இரண்டாவது, இவ்விஷயங்கள் மீண்டும் மீண்டும் குறித்த கால எல்லையில் தோன்றிக் கொண்டே வருகின்றன. இங்கு மூன்று அல்லது நான்கு கழற்சிக்காய்கள் உள்ளன வென்று கற்பனை செய்து கொள்வோம். அவற்றை எறியும் போது ஒன்று ஐந்து தடவையும், மற்றொன்று நான்கு தடவையும், மற்றொன்று மூன்று தடவையும், வேறொன்று இரண்டு தடவையும் மேலெழுகிறதென்று வைத்துக் கொள்வோம். நீங்கள் கழற்சிக்காய்களை மேலே எறிந்து கொண்டேவரின்,

அதே எண்கள் திரும்பத் திரும்ப வரும். பல முறைகளும் ஏற்படலாம். நீங்கள் எறிந்துகொண்டே வந்தால், இடைக்காலம் எத்துணை நீண்டதாயிருப்பினும், அதே எண்கள் மீண்டும் வந்தே தீரும். எத்தனை தரம் அவை மீளுமென்பது உறுதியுடன் கூற இயலாது. இது தற்செயலின் நியதி. இப்படியே ஆன்மாக்களுக்கும் அவற்றுடன் தொடர்பு வைத்துக் கொண்டவற்றிற்கும் இடைக்காலம் எத்துணை நீண்டிருப்பினும் இதே பிரிவுகளும் சேர்க்கைகளும் திரும்பத் திரும்ப நேர்வனவாம். இதே பிறப்பில் உண்ணுதலும், பருகுதலும், பின்னர்ச் சாதலும், மீண்டும் மீண்டும் தொடர்ந்து வருவன. சிலருக்கு உலக போகங்கள் தவிர்த்து வேறு மேலான தொன்றும் காணப்படுவதில்லை. ஆனால், பின்னரும் மேன் மேலும் உயர்ந்து செல்லும் சிந்தனையாளர்க்கு இவ்வின்ப அனுபவங்கள் யாவும் முடிவானவையாகமாட்டா; இடையே தோன்றுவனவாகவே விளங்கும்.

சிறு புழு முதல் மனிதன் ஈருகவுள்ள ஒவ்வொரு வடிவமும் குடை இராட்டினத்திலுள்ள தொட்டிலையொத்தேயாகும். அது எப்போதும் இயங்கிக்கொண்டே தானிருக்கும்; ஆனால், அதன் மீதிருப்பவர் கணந்தோறும் மாறுபவரே. ஒருவன் தன் இருக்கையில் அமர்கிறான். சக்கரம் சுழன்று கொண்டே இருக்கிறது. ஓர் ஆன்மா ஒரு வடிவில் நுழைந்து சிறிது போது அதில் வதிந்த பின்னர் அதனை நீங்கி வேறோர் வடிவத்திற்குள் புகுந்து விடுகிறது; மறுமுறையும் மற்றொன்றில் புகுந்து, பிறகு அதனையும் விட்டு நீங்கி மூன்றாவதொன்றில் புகுகின்றது. இப்படியே பூரணவட்டம் முடிவுற்று ஆன்மா சக்கரத்தினின்றும் வெளிப்பட்டு விடுதலையடைகின்றது.

ஒவ்வொரு நாட்டிலும் ஒருவனது பண்டைய நிலையையும் வருங்கால நிலையையும் கண்டுகொள்ளும் வியத்தகு ஆற்றல் உள்ளவர்கள் உண்டு. அவர்கள் எக்காலத்தும் தோன்றி வந்திருக்கின்றார்கள். இதற்கு விளக்கம் யாதெனில் ஆன்மா காரண மண்டலத்தில் நிலவிநிற்கும் துணையும் தன் இயற்கைச் சுதந்தரம் முற்றும் ஒழியாது தன்னைத்தான் உறுதியுடன் காட்டிக்கொள்ளக்கூடு மென்றாலும், முத்தியடைந்தவர்கள் விஷயத்தில் உள்ளவாறு ஆன்மனைக்

காரணத் தளையினின்றும் விடுவிக்கும் அளவிற்குக்கூட அதன் செயல்களைக் காரண நியதியினால் தன்வயமாக்கிக் காரிய காரணங்களின் பயன்களை நன்கறிந்து முக்காலச் செய்திகளையும் கூறும் திறன் வாய்ந்தவர்களாக்கி விடும் சக்தி பெறுகின்றதென்பது.

ஆசையோ, குறையோ, இருக்கும் வரை நிறை நிலையின்மை உளதென்பதற்கு அதுவே தக்க அத்தாட்சியாகும். பூரணத்துவமெய்திய சுதந்தரன் எதற்கும் ஆசைப்படுவதில்லை. கடவுளுக்கு வேண்டப்படும் பொருள் யாதொன்றுமில்லை. அத்தகைய அவா அவருக்கு உளதாகுமாயின், அவர் எவ்வாறு கடவுளாய் இருத்தல் கூடும்? அத்தகையவருக்குப் பூரணத்தன்மை ஏது? ஆகவே, கடவுள் இதனை விரும்புகிறார், அதனை வேண்டுகிறார், இப்போது உவகையுடன் இருக்கிறார், இக்கணத்தே சீற்றங் கொள்கிறார் என்று மாறி மாறிக் கூறுவது ஒரு குழந்தையின் அறிவிலாத பேச்சே, பொருளற்ற பிதற்றல்களேயாகும். ஆதலாலேதான் குரவர்கள், "ஒன்றையும் விரும்பாதே. ஆசைகளை ஒழித்துவிடு; போதுமென்ற மனம் படைத்திரு," என்னும் அறிவுரையை வழங்கிவருகின்றனர்.

ஒரு குழந்தை உலகத்திற்குள் பல்லின்றித் தோன்றுகின்றது; வயதானவனும் உலகினை விட்டு அதே நிலையில் வெளியேறுகிறான். இறுதியில் செயல்கள் இரண்டும் ஒரே தன்மையனவாகவே இருக்கின்றன. ஒருவனுக்கு ஒரு விதமான உலக அனுபவமும் இல்லை. மற்றவரோ எல்லாவற்றையும் துய்த்துவிடார். விசும்பின் நுண்ணிய அசைவுகள் மிக உயர்ந்தோ மிகத் தாழ்ந்தோ இருக்கும்போது அவை கட்புலனாவதில்லை. பொதுவாக இருமுனைகளும் துருவங்கள் போன்ற அத்துணை இடைவெளி பெற்றிருந்தபோதும், ஒரே குணங்களைப் பெற்றிருப்பனவாய் அமைந்திருக்கின்றன. சுவருக்கு இச்சைகள் இல்லை. பூரண மனிதனுக்கும் இச்சைகள் இல்லை. ஆனால், இச்சிப்பதற்கு அவசியமான 'சித்து' என்ற அறிவுச் சக்தி எப்போதுமே சுவருக்கு இல்லை. பூரணமான மாநில மாந்தர்க்கோ, விருப்பங்கள் இல்லை. ஆசையே இல்லாத அறிவிலிகளும் உலகிலுள்ளார்கள். அதற்குக் காரணம் மூளைக்கோளாறே. அதே சமயம் எல்லாவற்றிலும்

மேலான நிலை நமக்கு இச்சையே இராதொழியும் நிலைதான். ஆனால், இவ்விரண்டும் ஒரே இருப்பு நிலையின் இரு தலைப்புகளே. ஒன்று, விலங்கின் தன்மையைச் சார்ந்துள்ளது; மற்றொன்று, தெய்விகத் தன்மை எய்திப் பரமனுக்கு அருகிலேயே அமர்வது.

உண்மையான மனிதனும் தோன்றும் மனிதனும்

(நியூயார்க்கில் ஆற்றிய சொற்பொழிவு)

நாம் இருப்பது ஓரிடத்திலேயாயினும் நமது பார்வை நெடுந் தொலைக்கும் அப்பாலுள்ள பொருள்களிடமும் செல்கின்றது. மனிதன் சிந்தனையும் இக்காலத்தைக் கடந்து வருங்காலத்தின் மிகுதியான அளவிலும் செல்கின்றது. மனிதன் சிந்தனைச் சத்தி படைத்த நாள் தொட்டே இவ்வாறு நினைந்து வருகிறான்; வரும் பொருளை எண்ணியே சிந்திக்கின்றான். தனது உடல் நழுவிய பின்னரும் தான் செல்வது எங்கோ என்று ஆழ்ந்து சிந்திக்கின்றான். இதற்கு விளக்கம் தர ஆராய்ச்சி செய்து பலப்பல கோட்பாடுகள் கிளம்பின; பல்வேறு கொள்கைகளும் தோன்றின; பல ஒழுங்குகள் ஏற்பட்டன. அவற்றுள் சில கொள்ளப்பட்டும் பிற தள்ளப்பட்டும் வந்தன. மனிதன் உள்ள மட்டும், அவனது சிந்தனை சக்தி தொழிலாற்றிவரும் வரை இவ்வாறேதான் வரும். இம் முறைகளுள் ஒவ்வொன்றிலும் சிறிது உண்மை உண்டு. யாவற்றிலுமே பெரும்பான்மையும் உண்மையல்லாதன மலிந்து உள்ளன. இந்தியாவில் இது பற்றிய விசாரங்களால் விளைந்த நுண் சுவையையும் முடிவையும் உங்களுக்கு நான் வடித்து எடுத்துக்கூற முயல்வேன்; இந்தியத் தத்துவ நூலோர்களுக்கு அவ்வப்போது ஏற்பட்ட ஞானோதயத்தின் பலனாக வந்த முடிவையும் அறிவுச் செல்வங்களையும் இணைத்துக்கூறத் தலைப்படுவேன்; மன நூல் அறிஞர்களின் முடிவையும் அகத்தே நிகழ்வதை ஆராய்ந்த புலவர்களின் கொள்கைகளையும், கூடுமானால் இக்கால விஞ்ஞானிகளின் கருத்துகளையும் இணைத்துக்கூற முற்படுவேன்.

வேதாந்தத்துக்குக் கருத்தாவது, ஏகமான பொருள் ஒன்றை நாடித் தேடிக்காண்பதே. இந்துக்களின் மனப்பான்மை, சிறப்பான ஒரு பொருளை நாடாது யாண்டும் யாவற்றுக்கும் பொதுவான—பேரண்டங்களில் எங்கும் பொதுவாயுள்ள—உண்மையைத் தேடிச் செல்வதே; எந்த ஒரு பொருளை அறிவதனால் எப்பொருளும் அறியப்பட்டதாகுமோ, அதனைத் தேடுவதே அவர்களது பெரு

முயற்சி, "ஒரே களிமண் கட்டியின் தன்மையை அறிந்து கொள்வதனுல் களிமண்ணுலான அனைத்துப் பொருள்களின் பெற்றியும் எப்படி அறியப்பட்டதாகுமோ, அவ்வாறே எப் பொருளுடைய தன்மையை அறிவதனுல் எல்லாப் பொருள் களின் திறமும் கண்டு கொள்ளப்பட்டதாகுமோ அப்பொரு ளின்" ஆராய்ச்சியே அவர்களது நாட்டமாகும். இந்து தத்துவ சாத்திரிகளின் கருத்துப்படி மாபேருலகம் முழுதும் 'விசும்பு' என்னும் மூலத் தத்துவத்தையே ஆதாரமாகக் கொண்ட தாகும். உலகத்தில் நாம் பார்க்கும் பொருள்கள், உணரும் பொருள்கள், சுவைக்கும் பொருள்கள் ஆகிய யாவுமே இந்த 'ஆகாச'த்தின் பரிணுமங்களே. ஆகாசம் எங்கும் நிறைந்தது, நுண்ணியது; திடபதார்த்தங்கள், திரவப்பொருள்கள், ஆவிபோன்றவை, பல வடிவங்கள் கொண்ட பொருள்கள்— மண், விண்மீன்கள், ஞாயிறு, திங்கள் ஆகிய யாவுமே இந்த ஆகாசத்திஞல் ஆனவையே.

இத்தன்மைத்தான ஆகாசத்தில் இயங்கி அதினின்றும் மாபேருலகத்தைப் படைக்கும் ஆற்றல் வாய்ந்த சக்தி எது? ஆகாசத்துடன் இயைந்து விளங்கும் வியாபகமான சத்தி ஒன்று உளது. விசுவ மண்டலத்திலுள்ள சத்திகள் யாவும்— அவை ஈர்க்கும் சத்தியோ மற்ற விசையோ,—ஏன் எண்ண மென்ற நிலையிலுங்கூட இந்துக்களால் 'பிராணன்' என்று கூறப்படும் ஒரே சத்தியின் வேறுபட்ட நிலையே. இப் பிராணன் ஆகாசத்தில் இயங்கி இம் மண்டலங்களனைத்தினை யும் படைத்து வருகிறது. யுகத்தொடக்கத்தில் இந்தப் பிராணன் 'ஆகாசம்' என்னும் எல்லையற்ற மாபெருங்கடலில் உறங்கிக் கிடக்கின்றது. இது ஆதியில் அசைவற்றிருந் தது; பின்னர்ப் பிராணனின் சேர்க்கையால் இவ்விசும்புக் கடலில் அசைவு ஏற்பட்டது. பிராணன் அலைவடிவாக அசையும்போது, இப்பெருங்கடலினின்றும் பலப்பல அண்டங்கள், கதிரவர்கள், மதிகள், விண் மீன்கள், மண் ணுலகு, மனிதஇனம், விலங்குகள், தாவரங்கள், மற்றுமுள்ள அனைததின் சத்திகளும் தோற்றங்களும் வெளிப்பட்டன. சத்தியின் ஒவ்வொரு வெளித்தோற்றமும் 'பிராணன்' என்று வேதாந்திகள் கூறுவார்கள். பருப் பொருளாகத் தோன்று வன யாவும் ஆகாசமே என்பது அவர்களது கூற்று. வட்ட

முறையில் சுற்றிவரும் இத்தோற்றம் முடிவடையும்போது நாம் திடபதார்த்தம் எனக்கூறும் எப்பொருளும் கரைந்து அதிலும் நுண்ணிதான திரவநிலையைப் பெறும். பின்னர் இவை ஆவியாய் மாறி மிக மிக நுண்ணிய நிலையினையெய்தி நுண்ணிய வெப்ப அலைகளாகப் பரிணமித்து, இறுதியில் எல்லாம் தம் பழைய நிலையாகிய ஆகாசத்திலே மீண்டும் கலந்துவிடும். நாம் இப்போது கவர்ச்சியென்றும், விலக்குதல் என்றும், அசைவு என்றும் கூறுவன அனைத்தும் 'பிராணன்' என்னும் நிலைக்கே மீண்டுவிடும். அப்பால் இப்பிராணன் ஒரு சிறிது போது உறங்கி, மறுமுறையும் வெளிப்பட்டுப் பல வடிவங்களைத் தோற்றுவிக்கும். இக்கால அளவு கடந்ததும் இவை பண்டைய நிலையிலேயே ஒடுங்கிவிடும். இப்படைப்பு முறை மாறி மாறி வெளிக்கிளம்பியும் உள்ளடங்கியும் வரும்; முன்னேறியும் பின் சென்றும் வரும். இதனை இக்கால விஞ்ஞான முறையில் கூறும்போது அசைவற்றிருத்தலென்றும், அசைவுற்று ஆற்றலுடன் இயங்குதல் என்றும் பகர்கின்றோம். படைப்பு முறை ஒரு சமயம் மறைந்துள்ள நிலையென்றும், மற்றொரு வேளையில் வெளிப்பட்டுப் பணி ஆற்றும் நிலையென்றும் கூறுகின்றோம். இத்தகைய மாறுதல் யாண்டும் நிகழ்ந்து வந்துள்ளது.

இவ்வாறு வகைப்படுத்திக் கூறுதலும் உண்மையின் ஒரு கூறே என்பது இக்கால விஞ்ஞானிகள் கூட அறிந்த கருத்து. அதற்கப்பாற்பட்ட நிலை பௌதிக நூலோரின் அறிவாற்றலுக்கும் அப்பாற்பட்டதே. இத்துடன் துருவி ஆராய்தல் நின்று விடுவதில்லை. எதனை யறிந்ததனால் அனைத்தும் அறியப்பட்டதாகுமோ, அதனை நாம் இதுவரை கண்டு பிடிக்கவில்லை. நாம் பிரம்மாண்டத்தில் சடம், சேதனம் என்ற இரு பகுதிகள் உளவெனக் கணடுள்ளோம். இதனையே தொல்லறிஞர்கள் 'ஆகாசம்' என்றும், 'பிராணன்' என்றும் இரு கூறுகளாகப் பாகுபடுத்தியுள்ளார்கள். அடுத்தபடி யாதெனில், நாம் ஆகாசத்தையும் பிராணனையும் அவற்றின் அடிப்படையையும் காண வேண்டும். இவ்விரண்டையும் இவற்றினும் பெரிதாய மனத்துடன் தொடர்பு படுத்தவேண்டும். மனத்தினின்றே 'மகத்து' என்ற அகண்ட உலகினது 'சிற் சத்தி'யினின்றே, இவ்விரண்டும் உண்டாகியுள்ளன.

ஆகாசம், பிராணன் என்ற இரண்டினும் நுண்ணிய வெளிப்பாடே 'சிந்தனை' என்பது. எண்ணமே இவ்விரு கூறுகப் பிரிந்து காணப்படுகின்றது. அகண்டமான எண்ணம் ஆதியில் விளங்கி அதுவே மாறி, வெளித்தோற்றத்தில் ஆகாசமாகவும் பிராணனுகவும் வருகின்றது. இந்த இரண்டின் கூட்டுறவினுலேயே அகண்டமான அண்டமனைத்தும் ஆக்கப்பெற்றுள்ளது.

இப்போது நாம் உள நூலைக் கூர்ந்து நோக்குவோம். நான் உங்களைப் பார்த்துக்கொண்டிருக்கிறேன். புறப் பொருள்களின் உணர்ச்சிகள் என் கண்கள் மூலம் எனக்குப் புலனுகின்றன. அவை எனது மூளைக்கு உணர்வு நரம்புகளால் எடுத்துச் செல்லப்படுகின்றன. கண்கள் பார்வைக்கான உறுப்புகளல்ல. அவை புறக்கரணங்களே ; ஏனெனில், கண்களுக்குப் பின்னிருந்து பொருள்களின் உணர்வை மூளைக்கு எடுத்துச் செல்லும் உண்மையான உறுப்பு நாசமுறின், எனக்கு இருபது கண்களிருந்தும் நான் ஒன்றையுமு காணப்பெறேன். ஆகவே, உறுப்பு அதன் கருவிகளினின்றும் வேருனதே. கருவிகளான கண்களுக்குப் பின்னுல் கட்புலனுகிய உறுப்பு ஒன்றுளது. இது போன்றே மற்றப் புலனறிவுகளும் மூக்கும் முகரும் புலனல்ல, கருவியே ; அதற்குப்பின் இருப்பதே உறுப்பு : ஒவ்வொரு புலனுக்கும் முதலாகப் பூதவுடலில் புறக்கருவியுளது. அதற்குப் பின்னுல் அவ்வுடலிலேயே ஓர் உறுப்பும் உளது. இன்னும் இவையும் போதாதனவே. நான் உங்களுடன் பேசிக்கொண்டிருக்கிறேன். நீங்களும் கூர்ந்தே கவனித்து வருகின்றீர்கள். ஏதோ ஒன்று நிகழ்கின்றது. ஒரு மணி அடிக்கிறது என்று வைத்துக்கொள்வோம். ஒரு கால் உங்களுக்கு அந்த மணியோசை காதுக்கெட்டாமற் போய் விடலாம். ஒலியானது உங்கள் காதின் உட்கருவியான செவிப்பேரிகையில் பட்டும் அதன் பதிவு உங்கள் மூளைக்குச் செலுத்தப்பட்டும் அந்த ஓசை உங்கள் செவிக்குப் புலனுவதில்லை. இது ஏன்? முக்கியமான ஏதோ ஒன்று இயங்கவில்லை ; மனம் புற உறுப்பினேடு இணையவில்லை. ஆகவே, மனம் ஒன்றுபடாதபோது புலன் கருவியும் உறுப்பும் சேர்ந்து இயங்கியும் நாம் விடயங்களை

அறிய இயலுவதில்லை; மனம் புறப்பொருள் அறிவினைக் கொள்ள மறுக்கிறது. மனம் இயைந்தபோதே செய்திகளை மூளை வாங்கிக்கொள்ள சித்தமாகின்றது. இப்போதும் முழு உண்மையும் நமக்குத் தெரியவில்லை. ஏனெனில், இது காறும் நாம் கண்ட முறைகள் யாவும் நிகழ்ந்து வந்த போதும் நமக்கு உணர்ச்சி முழுதும் ஏற்படாமற் போய்விட லாம். மற்றுமோர் அமிசம் கூடியிருத்தல் வேண்டப்படுகின் றது. உள்ளத்தே எதிர்வினை ஒன்று நிகழ்தல் வேண்டும். அப்போதே புலன் அறிவு தோன்றுகிறது. வெளிப் புலன் செய்தியை உள்ளே இருக்கும் மூளைக்கு அனுப்புகிறது. செய்தி அவ்வாறு செலுத்தப்பட்டவுடன் மனம் அதனை வாங்கி புத்திக்கு அளிக்கின்றது. இது முன்னுள்ள பதிவு களுடன் ஒழுங்கான முறையில் பொருத்தி வைக்கப்படுகின் றது. எதிர்வினை ஏற்பட்டுத் உணர்ச்சி தோன்று கின்றது. இங்கேதான் இச்சாசத்தி உளது. இவ்வாறு எதிர் வினை வரும் நிலைக்கே புத்தி என்ற பெயர் இடப்பட்டிருக் கிறது. இப்போதும் ஒரு கருத்து பூர்த்தியாக இல்லை. இன்னு மோர் படி வேண்டப்படுகின்றது. ஒரு படங் காட்டும் விளக்கும் ஒரு திரையும் இருக்கின்றன என்று பாவிப்போம். நான் அத்திரையின் மீது ஒரு படத்தைப் பதிய வைக்க முயல்கிறேன். நான் செய்ய வேண்டுவது என்ன? அக் கருவி வழியாகப் பல ஒளிக் கதிர்களை பாயவிட்டு அவற்றை ஒழுங் கான, தெளிவான முறையில் திரைமீது பதியச் செய்ய வேண்டும். திரை இருந்த இடத்தை விட்டகலாமல் இருத்தல் வேண்டும். அப்போதே நான் செலுத்தும் அசையக் கூடிய ஒளிக்கதிர்கள் நிலையாக ஓரிடத்தில் குவியும். அசையாத திரையின் மீது இக்கதிர்கள் ஒன்றுபடக் குவிந்து ஒழுங்கு முறையில் படிகின்றன. இது போன்றே நம் பதிவுகள் உறுப்புகளால் மனத்திற்கும், மனத்தால் புத்திக்கும் அளிக் கப்படுகின்றன. இதைப் பூர்த்தி செய்வதற்கே பின்னில் நிலையான ஒன்றின் மீது பற்பல பதிவுகள் படிந்து ஒன்று பட வேண்டும். மாறிக்கொண்டேயுள்ள நமது இருப்பு நிலைக்கு ஒருமையளிக்கும் சத்தி எது? கணந்தோறும் மாறிக் கொண்டுள்ள மனத்துக்கு மாறுபாடில்லாத ஒருமையை அளிக்கும் பொருள் யாது? நமது பல வகையான பதிவுகளும்

எதன் மீது பட்டு ஒருமைப்பாட்டுடன் இணைந்து இலகுகின்றன? எவ்வாறு அகண்டமான ஒரு முழுப் பொருள் ஆகின்றன? இத்தகைய பயனைப் பெற, சலிக்கும் மனத்திற்கும் உடலுக்குமிடையே சலனமில்லாத ஒரு பொருள் தேவை என்பதை முன்னரே அறிந்து கொண்டோம். திரைப்படத்தின் திரை அசையாது நிற்பதனால் படம் காணப்படுகின்றது; காண்பவன் தனி ஆன்மாவாக வேண்டும். மனம் தீட்டி வரும் படங்களும், மனமும் புத்தியும் எடுத்துச்செல்லும் பதிவுகளும் நிகழ்ந்து ஒன்றுபடுமிடமே ஆன்மா என்னும் பெயரால் விளங்குகிறது.

அகண்ட உலகின் உள் ஆன்மாவான மனமே ஆகாயமென்றும் பிராணனென்றும் இரண்டாகப் பிரிந்துள தென்றும், மனத்திற்குப் பின்னால் நமது ஆன்மா உளதென்றும் நாம் இப்போது அறிந்து கொண்டோம். மாபேருலகில் அகண்ட மனத்திற்குப் பின்னால் என்றுமுள்ள ஆன்மா விளங்குகின்றது. அதற்குத்தான் கடவுளென்று பெயர் வழங்குகிறார்கள். தனிமனிதனுள் அது சீவான்மாவாகும். அகண்ட மனம் எவ்வாறு பேருலகில் ஆகாசமென்றும் பிராண னென்றும் விரிகின்றதோ, அவ்வாறே விசுவ ஆன்மாவும் மனமென மலர்கிறது. தனி மனிதனிலும் அவ்வாறே தான் விளங்குகின்றதா? அவனது மனமே அவன் உடலையும், ஆன்மாவே அவன் மனத்தையும் படைக்கின்றனவா? அஃதாவது அவனது உடல், மனம், ஆன்மா இம்மூன்றும் வேறு பட்ட மூன்று நிலைகளா அல்லது ஒரே பொருளின் வேறு வேறு தோற்றங்களா? இதனைப் படிப்படியாகக் கண்டறிய முயலுவோம். முதலாவது, இப்புறவுடலுக்குப்பின் உறுப்புகள், மனமும், புத்தியும் உள்ளன. அவற்றுக்குப் பின் ஆன்மா துலங்குகின்றது. முதற்படியில் ஆன்மா உடலினின்றும், மனத்தினின்றும் வேறுபட்டதென்பதனைக் கண்டோம். இங்கேதான் பல மதத்தினர்களுக்கும் கருத்து வேற்றுமை ஏற்பட்டுளது. துவைதவாதிகள் ஆன்மாவுக்குப் பண்புகள் உண்டென்றும் அவை பலதிறப்பட்டனவென்றும், நமது இன்பதுன்பபோக உணர்ச்சிகள் யாவும் உண்மையில் ஆன்மாவைப் பற்றியனவே என்றும் அறைவார்கள். அத்துவிதச் சார்புற்றவரோ, ஆன்மாவுக்குக்

குணங்களே இல்லையென்றும், அது குணங்களால் பாதிக்கப் படவில்லையென்றும் நவில்வர்.

முதன் முதல் நாம் துவைதிகளது கொள்கையின் நிலையினைக் காண்போம்: ஆன்மாவைப் பற்றியும், அதன் போக்கு, முடிவுகள் பற்றியும், அவர்கள் கொள்ளும் கருத்தை விளக்குவோம். பின்னர் இதனை மறுப்போரின் கொள்கையைக் காண்போம். இறுதியாக, அத்துவித நிலையினை எடுத்துக்கூறி, அதன் இசையைக் காண முயல்வோம். ஆன்மா உடலினின்றும், மனத்தினின்றும் பிரிவுற்றிருப்பதனுல், அது ஆகாசம், பிராணன் இவற்றின் கலவையாய் இராமையால், என்றென்று மிருப்பதே ஆகும். இது ஏன் என்பதையும், சாவு என்பது என்ன என்பதனையும் ஆராய்ந்து பார்ப்போம். சாவென்பது மூலப் பொருள்களுக்கே மீள்வது. இது கலவைப் பொருள்களுக்கே ஏற்படக் கூடியது. இரண்டு அல்லது மூன்று பொருள்களாலான கூட்டானது கலைந்தே தீரும். பல பொருள்களின் சேர்க்கையினுல் ஆகாத ஒன்றே என்றென்றும் நிலையாய் நின்று விளங்குவதாகும். அது அழிவில்லாதது, அது என்றென்றும் நின்று நிலவி வருவது; அது பிறவாதது. படைப்புப் பொருள் எதுவுமே ஒரு கலவையாகும். ஒன்றுமில்லாத சூனியத்தினின்றும் ஒரு பொருள் உண்டானதை எவரும் கண்டதில்லை. நாம் படைப்பைப் பற்றி அறிவது யாதெனில், முன்னமே இருந்த பொருள்களைச் சேர்த்து அவற்றுக்குப் புதிய வடிவங்கள் தருவது என்பதே. ஆகவே, மனிதனது ஆன்மா கூட்டுப் பொருளாய் இராமையால், அது எப்போதுமே இருந்திருக்க வேண்டும்; இன்னமும் எக்காலத்திலும் இருக்கவும் செய்யும். இவ்வுடல் சிதைந்த பின்பும் அது நீடித்து வாழும். உடல் நழுவிய போதும் ஆன்மா அழிவதில்லை. அது எப்பொழுதும் வாழ்ந்திருப்பதாகும். வேதாந்திகளின் கருத்தாவது, 'இவ்வுடல் நழுவுங்கால் உடல் படைத்த சீவனின் உயிர்ச் சத்திகள் யாவும் அவனது மனத்திற்கு மீளுகின்றன. அம்மனமும் பிராணனில் கரைந்து விடுகின்றது. அந்தப் பிராணன் அவனது ஆன்மாவிற் புகுந்து விடுகின்றது. அந்த ஆன்மா ஒரு சூட்சும உடலைப் பற்றிக் கொள்கின்றது. இந் நுண்ணிய உடலையே மானத சரீர

மென்றே ஆவி உடலென்றே கூறி வருகிறோம். இந்த உடலில் அம் மனிதனின் சம்ஸ்காரங்கள் அடங்கி யிருக்கின்றன,' என்பது. சம்ஸ்காரங்களென்பன யாவை? மனம் ஓர் ஏரி போன்றது. மனத்தில் எழும் ஒவ்வோர் எண்ணமும் ஏரியின் மேற்பரப்பில் தோன்றும் அலை போன்றது. ஏரியில் ஓர் அலை எழுந்து மறுபடியும் மறைந்து விடுவது போன்றே மனத்தில் எண்ண அலைகள் இடைவிடாது எழுந்தும் மறைந்தும் வருகின்றன. ஆனால், அவை ஒரேயடியாக மறைந்தே போவதில்லை. இவை மிகமிக நுண்ணிய நிலைகளை எய்தி, அங்கேயே கிடந்து உரிய காலத்தில் எழுப்பப்படும் போது மீண்டும் வெளிக்கிளம்ப ஆயத்தமாய் இருக்கின்றன. நினைவாற்றலென்பது இவ்வாறு நுண்ணிய நிலையினை எய்தியுள்ள பழைய நினைவுகளை அலைவடிவில் கொணரும் காரியமே. இதனால், நம்முடைய ஒவ்வொரு சிந்தனையும் ஒவ்வொரு செயலும் மனத்தில் குடி கொள்கின்றது. இது நுண்ணிய நிலையிலிருந்து மனிதன் இறந்ததும் இத்தகைய பதிவுகளின் தொகுதி மனத்தில் பதிந்திருந்து, அம்மனம் ஒரு சிறு நுட்பமான பொருளை ஆதாரமாகக் கொண்டு அதில் இயங்குகின்றது. ஆன்மா, இப் பதிவுகளையும் நுண்ணுடலையும் தன் உறையுளாகக் கொண்டு வெளிக் கிளம்பிவிடுகின்றது. ஆன்மாவின் போக்கு வெவ்வேறு பதிவுகளுக்குரிய பல ஆற்றல்களின் கூட்டுப் பயனாகிய திசையினை நோக்கி யிருக்கும் நம் கருத்தில் ஆன்மாவுக்கு மூன்று குறிப்பிட்ட இடங்கள் உள்ளன.

மிக்க ஆன்மிக வாழ்வுடையவர் உடலை விட்டு நீங்கிய பின்னர், பகலவன் கதிர்கள் வழிச்சென்று ஞாயிற்றுக் கோளத்தினை யடைந்து, அது வழியாக மதி மண்டலத்தை எய்தி, அதன் மூலம் மின் ஒளியின் கோளத்தைச் சேர்ந்து விடுகின்றனர்; அங்கே பேரின்பம் பெற்றுத் திளைத்த ஓர் ஆன்மாவின் துணையைக் கொள்ளுகின்றனர். அந்த ஆன்மா புதிதாக வந்தவரை மிக உயர்ந்த பிரம்ம லோகத்துக்கே அழைத்து செல் கின்றது. அங்குச் சென்று இவ்வான்மாக்கள் அனைத்தறிவையும் எல்லா வல்லமையையும் அடைந்து, கடவுளைப் போன்றே எல்லா அறிவையும் திறனையும் பெற்றுத் திகழ்ந்து இறைவனுடனே உறைகின்றன. இது

துவைதிகளின் கொள்கை. அத்துவைதிகளின் கருத்துப் படி அவர்கள் யுகமுடிவில் பரம் பொருளுடனே இரண்டறக் கலந்து விடுகின்ருர்கள். அடுத்துள்ள வகுப்பினராவார் தந் நலத்துடன் கூடியே நல்வினை யாற்றி வருபவராவர். இவர்கள் உயிர் நீத்ததும் தங்கள் நல்வினைப் பயனாக மதி மண்டலத்திலுள்ள பல துறக்கங்களுக்கும் அழைத்துச் செல்லப்பட்டு, அங்கு சிறந்த உடல்களைப் பெற்றுத் தேவர்களேயாகி, நீண்டகாலம் சொர்க்க போகங்களைத் துய்க்கின்றனர். அதற்குரிய கால எல்லை கடந்ததும் அவர்களுடைய பழைய கருமங்களால் மீண்டும் மண்ணகத்துக்கே செலுத்தப் படுகின்ருர்கள். அவர்கள் வாயு வழியாகவும் முகில் மண்டலங்கள் மூலமாகவும் மற்றும் பல இடங்களைக் கடந்து மழைத்துளிகள் வடிவில் பூமிக்கு இறங்குகின்ருர்கள்; பூமியில் வந்து நவதானியங்களில் ஏதோ ஒன்றுடன் கலந்திருந்து முடிவில் தமக்கு ஏற்ற உடலைத் தரத்தக்க ஒருவரால் உண்ணப்படுகின்ருர்கள். கடை இனத்தினராகிய கொடியவர் இறந்து பேய் பிசாசுகளாகி, மதி மண்டலத்துக்கும் இப்புவிக்கு மிடையேயுள்ள வானவெளியில் உறைகின்றனர். சிலர் மனிதஇனத்தவர்களுக்குத் துன்பிழைக்கவும், வேறு சிலர் நட்புற்றுக் கூடியிருக்கவும் முயல்கின்றனர்; அவ்வாறு சிறிது காலம் வாழ்ந்துவிட்டுப் பின்னர் மண்ணுலகில் விலங்குகளாய் தோன்றுகின்றனர். விலங்கின் உடலில் சிறிது காலம் தங்கியபின் அவர்கள் விடுதலை பெற்று மனிதர்களாகவே ஆகி விடுதலைபெற மற்றுமொரு வாய்ப்பைப் பெறுகிருர்கள். இதினின்றும் நாம் அறிவதென்ன? ஒரு சிறிதே மிஞ்சி, பெரும்பாலும் பூரணநிலை அடையப் பெற்றவர் பகலவனின் ஒளிக்கதிர்கள் வாயிலாகப் பிரம்மலோகம் சேர்கின்றனர்; துறக்கம் செல்ல வேண்டிச் சிறிது நல்வினை யாற்றிய நடுத்தரத்தினர், மதி மண்டலத்தேயுள்ள மேலான உலகங்கட்குச் சென்று அங்கே தேவர்களுக்கே உரிய வுடல்களைப் பெற்று, மறுமுறையும் மானிட உடலை யடைந்து நிறைநிலை பெறுதற்கு மற்றுமொரு வாய்ப்பு அருளப் பெறுகிருர்கள். மிகமிகக் கொடியவர்கள் பேய் பிசாசங்களாகப் பிறந்து பின்னர் விலங்குப் பிறவியும் எடுக்க வேண்டி வருகிறது. அதன்

பின்னர் மனிதப் பிறவியுமெடுத்துத் தம்மைப் பூரண மனிதர்களாக்கிக் கொள்ள மற்றுமொரு வாய்ப்பைப் பெறுகின்றனர். இப்பூவுலகிற்குக் 'கருமபூமி' என்னும் பெயர் ஏற்பட்டுளது. இங்கேதான் மனிதன் தனது நல்வினையையோ தீவினையையோ ஆற்றுகின்றான். ஒருவன் சொர்க்கம் புக நினைந்து அதன் பொருட்டு நற்கருமங்கள் ஆற்றி வந்தால், அவன் ஒரு தெயவம் ஆகின்றான். அப்போது அந்நிலையில் அவன் 'தீவினைப் பயனை'ச் சேர்த்து வைப்பதில்லை. பூமியில் செய்துள்ள நல்வினையின் பயனை மட்டும் நுய்க்கின்றான். இந்நல்வினைப் பயன் தீர்ந்து போனதும் அவன் முன்னர்ச் செய்துள்ள தீவினைகளின் கூட்டுப் பயன் அவனைப் பின் தொடர்ந்து அவனை மறுபடியும் மண்ணுலகுக்கு இழியச் செய்து விடுகின்றது. இது போன்றே பேய் நிலை எய்தியவர்களும் புதியதொரு கன்மத்துக்கு ஆளாகாமையால், அவர்கள் முன் செய்துள்ள தீவினைகளின் பயனான துன்பத்தினைத் தீர்த்த பின்னர் சிறிது காலம் ஒரு விலங்குடலில் தங்கி யாதொரு புதிய கருமத்தையும் ஆற்றுவதில்லை; அந்தக் காலம் முடிந்தவுடன் மனித உடலையே அடைகின்றார்கள். நல்ல அல்லது தீய வினைகளின் பயனாக வரும் சுக நிலைகளோ தண்டனைகளோ புதிய கருமங்களை ஆற்றுவிக்கும் திறனற்றவை; அக்கருமங்களைப் புரிந்த மாந்தர் அவற்றிற்குரிய இன்பத்தையோ துன்பத்தையோ துய்க்கின்றனர், அம்மட்டே. எல்லை கடந்த நற்செயலோ தீச்செயலோ புரியப்பட்டால் அவற்றின் பயன் மிகவும் விரைவாகக் கிட்டுவதாகும். சான்றாக ஒருவன் வாழ்நாள் முழுதும் பல தீமைகளையே புரிந்திருந்து, ஒரே நல்ல செயலைச் செய்திருப்பின், அந் நல்வினைப் பயனின் விளைவை அவன் உடனடியாகவே எய்துவான். ஆனால், அது முடிவடைந்ததும் தீமைகளின் பயனும் விளைந்தே தீரும். குறிப்பிட்ட பெரிய, நல்ல காரியங்களைச் செய்தும் அவரது வாழ்க்கை முறைகள் பொதுவாகத் தவறான வழிகளிலேயே சென்றிருந்தால், அவர்கள் தேவதைகளாகி, சில காலம் அவ்வுடலில் வாழ்ந்து அத்தெய்வங்களுக்குரிய ஆட்சிகளைச் செலுத்திய பின்னர் மனிதர் நிலைக்கே இறங்க வேண்டி வருகிறது. நல்வினைகளின் ஆற்றல் தேய்ந்ததும், பழைய தீமையின் பயன் அவர்களைத்

தொடர்கின்றது. மிகமிகக் கொடிய தீமைகள் புரிந்தவர்களாய், பேய் பிசாசுகளின் உடல்களை ஏற்க வேண்டி வரும். தீவினைப் பயன்கள் முற்றும் தீர்ந்ததும், அவரிடம் எஞ்சிய சிறு நல்வினையின் பயனாக அவர்கள் மீண்டும் மனிதர்களாய்ப் பிறக்கிறார்கள். பிரம்மலோகம் சென்றவர்கள் கீழே இழிவதில்லை. அவ்வுலகுக்குச் செல்லும் வழி 'தேவயானம்' என்று கூறப்படுகிறது. சொர்க்கம் செல்லும் பாதைக்குப் 'பிதிருயானம்' என்ற பெயர் உண்டு.

வேதாந்தக் கருத்துப்படி மாபேருலகப் படைப்பில் மனிதனே சிறந்த பிறவி. கரும பூமியாகிய இதுவே யாவற்றினும் சிறந்த நிலப்பரப்பு. ஏனெனில், இங்கே தான் ஒருவனுக்குத் தன்னை பூரணநிலை பெற்றவனாகச் செய்து கொள்ள, மிகமிக நல்ல வாய்ப்புக் கிட்டுகின்றது. தேவதூதர்களும் (தெய்வங்களும்) தங்களை அந்நிலைக்குத் தகுதியுள்ளவர்களாக உயர்த்திக் கொள்ள வேண்டுமானால், மனிதர்களாகப் பிறந்தேயாக வேண்டும். இதுவே, இம் மானிடப் பிறவியே, அதற்கு ஏற்ற பெருமையாம்; அற்புதமான சமநிலை; மிகச் சிறப்பான வாய்ப்பு.

இப்போது நாம் தத்துவத்தின் மற்றொரு பக்க நோக்கைப் பற்றிக் கவனிப்போம். நாம் இப்போது அறிந்துள்ள ஆன்மாவின் கோட்பாட்டை மறுத்துக் கூறும் பௌத்தர் உளர். அவர்களது கூற்று இதுவே: "இவ்வுடலுக்கும் உள்ளத்திற்கும் ஏதோ ஒன்றை ஆதாரமாக வைத்துக் கொள்வதில் என்ன பயன்? நம் எண்ணங்கள் செல்லுகிறவாறே செல்லட்டுமே! மனம், உடல் இவ்விரண்டுடன் மற்றொரு மூன்றாவது பொருளான ஆன்மாவைக் கொள்ள வேண்டிய அவசியம் யாது? அதன் பயன் என்ன? இந்தச் சீவ அமைப்பே தன்னை விளக்கிக் கொள்ளாதா? மூன்றாவது பொருளான ஆதாரம் ஒன்று புதிதாக ஏன் கற்பிக்கப்படல் வேண்டும்?" இது வன்மை மிக்க வாதமே; வலுப்பெற்ற தருக்கமே. புற ஆராய்ச்சி வகையில் இந்தச் சீவதத்துவம் தன்னைத்தானே போதுமான முறையில் விளக்கிக் கொள்ளுகின்றது. இது அவ்வாறு அமைந்திரா விடினும், நம்மில் பலர் அப்படி அமைந்ததெனவே காண்கிறோம். ஆகவே, உடலும் உள்ளமும் ஆகாத மற்றுமொரு

மூன்றாவது பொருளை இவற்றிற்கு ஆதாரமாகக் கொள்ள வேண்டிய தேவைதான் என்ன? மனமும் உடலுமே நம் கொள்கைக்குப் போதுமானவை. உடலென்பது இடையறாது மாறிக்கொண்டே உள்ள ஒரு சடப் பொருள் ஒழுங்கு. மனமோ, அவ்வாறு மாற்றம் அடைந்து கொண்டேயுள்ள இடையறாத எண்ணத்தின், சிற் சத்தியின் பெருக்கு. இவ்விரண்டும் சேர்ந்துள்ளதாகத் தோற்றமளிப்பது எதனால்? இச்சேர்க்கை உண்மையில் நிகழவில்லை என்றே கூறுவோம். இதற்கு எடுத்துக் காட்டாக ஒரு தீப்பந்தத்தை எடுத்து மிக வேகமாகச் சுழற்றும் போது ஒரு தீவட்டம் உண்டாகிறது. இந்த வட்டம் உண்மையல்லவே! பந்தம் சுற்றிக் கொண்டே யிருப்பதனால் இத்தோற்றம் விளைகின்றது. அது போன்றே, இவ் வாழ்வில் ஓர் ஒருமை இருப்பதில்லை. சடப் பொருள்களின் ஒரு தொகுதி இடை விடாது விரைந்து சென்றுகொண்டே யுள்ளது. அதன் நிமித்தம் நிகழ்வதனை நாம் ஒரு திடத்தத்துவமாகக் கொள்கிறோம், அவ்வளவே. அத்தகையதே மனத்தைப் பற்றிய கருத்தும். ஒவ்வோர் எண்ணமும் மற்றொன்றினின்றும் வேறான தெனினும், மிக வேகமாகப் பாய்ந்தோடுவதனால் ஒரே தன்மை போன்று தோற்றமளிக்கின்றது. மூன்றாவது பொருளுக்கு யாதோர் அவசியமும் இல்லை. உடலும் உள்ளமுமே எங்கும் உள்ளன. இதற்குப்பின்னால் ஒரு பொருள் தேவையில்லை.''

இந்தப் பௌத்தக் கொள்கையினை இக்கால ஞானிகளும் சமயத்தினர்களும் பின்பற்றி வருகிறார்கள். அவர் யாவரும் இது தமக்கே உரிய புதிய கொள்கையென்று கூறித் தற்பெருமையுங் கொள்வர். இது புத்த தருமத்தினர்களுள் தோன்றிய அறிவாளரின் முக்கியக் கொள்கை. இதன் விவரம் பின்வருவது: இவ்வுலகம் தன்னிலேயே நிறைவுற்றது; தன்தேவைகளைத் தானே பூர்த்தி செய்துகொள்ள வல்லது. இதற்குப் பின்பலம் ஒன்றும் அவசியமில்லை. இருப்பன யாவும் புலனுலகேயன்றி வேறல்ல. இதற்கு ஓர் ஆதாரமாகப் பிறிதொன்றை நினைப்பது வீண். அனைத்துமே பல பண்புகளின் கூட்டு. எல்லாம் சேர்ந்தே மற்றொரு கற்பனைப் பொருளில் மருவுகின்றனவென்று ஏன் கருதவேண்டும்?
... பண்புகள் ஒன்று மற்றொன்றுக்குப்

பதிலாக விரைவாக மாற்றப் படுவதால் வருவது; அதற்குப் பின்புள்ள வேறோர் மாற்றமில்லாத பொருளினின்றும் பெறப்படுவதன்று.

இத்தகைய வாதங்களிற் சில எத்துணை வியப்புத் தருவனவாய் அமைந்துள்ளன! இந்த வாதம் சாதாரண மக்களால் எளிதில் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. கோடிக் கணக்கானவருள் ஒருவரே புலனுண்மையைத் தவிர்த்து வேறொன்றைச் சிந்திக்கக் கூடும். மக்களிற் பெரும்பாலோருக்கு இயற்கையென்பது மாறுதலுள்ள, வேகமாய்ச் சுழன்று கொண்டுள்ள, பிறபொருள்களுடன் சேர்ந்து கலந்து உண்டு பண்ணப்பட்ட 'மாறுதல்' என்ற பெயர் கொண்ட ஒரு கெட்டிப் பொருள். நம்மில் சிலருக்கே பின்னாலுள்ள அமைதியான பெருங்கடலின் கணப்பொழுதைய காட்சி கிட்டுகின்றது. நமக்கோ, அது கொந்தளிக்கும் கடல்; அலைகளால் ஓயாது மோதப்படுவதொன்று. இம்மாபேருலகமும் நமக்கு எப்போதுமே அலைமோதிக் கொண்டுள்ள கடலாகவே தோற்றமளிக்கிறது. இத்தகைய இரண்டு கருத்துகள் இருக்கக் காண்கின்றோம். ஒன்று, உடலுக்கும் உள்ளத்துக்கும் பின்னால் ஏதோ ஒரு மாற்றமில்லாத அசையாப் பொருள் உளதென்பது; மற்றொன்று அசைவோ மாறுதலோ ஒன்றுமே இப்பிரபஞ்சத்தில் இல்லை; எல்லாம் மாறுதலே—மாறுதல் தவிர்த்து வேறொன்றுமே இல்லை, என்பது. இதற்கு மாறான முடிவு சிந்தனையின் அடுத்த படியாக வருவது: அதுதான் அத்துவைத தரிசனம்.

அத்துவைதம் கூறுவதாவது: எல்லாவற்றிற்கும் பின்னால் பின்புலமாக, மாறாத ஒரு பொருள் உளது என்று துவைதிகள் கூறுவதில் பிழை யாதுமில்லை. மாற்றமற்ற ஒரு பொருளை வைத்துத்தான் மாறுதல் என்பது என்ன என்று நாம் தெரிந்துகொள்ளக்கூடும். மாற்றமுள்ள பொருள் ஒன்றை உணர்ந்து கொள்ளவேண்டுமானால், அதனினும் குறைந்த மாற்றமுள்ள பொருளொன்றைக் கொண்டேதான் அது இயல்வதாகும். மற்றும் இப்பொருள் மற்றொரு பொருளைக் காட்டிலும் மிகுதியான மாற்றமுள்ளதாய் இருத்தலும் வேண்டும். இப்படித் தருக்கம் செய்துவரும் போது இறுதியாக மாற்றமேயிராத ஒரு பொருள் இருந்தே தீரவேண்டு

மென்பதை ஒப்புக்கொண்டேயாக வேண்டும். இப்போது வெளிப்படுவது எதுவும் வெளிப்படாது அடங்கியிருந்த நிலையில் அமைதியாகவும் ஒலியிறந்ததாகவும் இருந்திருக்க வேண்டும். ஏனெனில், சமநிலை கலையும்போதுதான், முரண்பாடுற்ற சத்திகளின் எதிர்ப்புகளினுல் ஒரு விசை இயங்கி வெளிப்பாட்டினை உண்டு பண்ணுகிறது. பிரபஞ்சம் முழுதுமே மீண்டும் அந்த சமநிலையைப் பெறவே விரைந்து கொண்டிருக்கிறது. ஏதாவது செய்தி பற்றி நாம் உறுதி கூற முடியுமாஞல், அது இச்செய்தியின் உண்மையே. துவைதிகள் மாருத ஒரு பொருளைப் பற்றிப் பேசுவதில் பூரணமான உண்மையிருக்கின்றது. ஆனுல், அவர்களுடைய ஆராய்ச்சியில் உடலும் மனமும் அல்லாத மூன்ருவது பொருள் ஒன்றைப் பற்றிப் பேசுவதிலும் அப்பொருள் இவ்விரண்டிலும் சம்பந்தப்படாத பொருள் எனக் கூறுவதிலுந்தான் பிழையுளது. பௌத்த ஞானிகள் பிரபஞ்சம் பெருமாற்றத்தின் திடப்பொருள் என்று கூறும்போது அவர்கள் முற்றும் சரியான ஒன்றையே கூறுகிருர்கள். ஏனெனில் என்னைப் பிரபஞசத்தினின்றும் வேறு படுத்திக்கொண்டு பார்க்கும் வரை, நான் பின்நின்று என் முன் இருக்கும் பொருளைப் பார்க்கும் வரை, இருபொருட்கள்—காண்பான், காணப்படு பொருள் என்னும் இவ்விருமை—உள்ளபோது பிரபஞ்சம் எப்போதுமே, இடையருது மாறிக்கொண்டேயிருப்பதாகத்தான் தோன்றும். உண்மை யாதெனில், பேருலகில் மாற்றமும் உண்டு; மாற்றமின்மையும் உண்டு. ஆன்மா, மனம், உடல் இவை மூன்றும் தனித்தனி இருப்புகள் எனக்கூறுவதற்கில்லை; ஏனெனில், இம்மூன்றும் சேர்ந்து கலந்துள்ள சீவன் ஒன்றே. உடலாகவும் மனமாகவும், இவ்விரண்டுக்கும் அப்பாலான ஒன்ருகவும் உள்ளது. ஆனுல், ஒரே காலத்தில் அவ்வாறிருப்பதில்லை. உடலைப் பார்ப்பவன் உள்ளத்தையும் உணர்வதில்லை; மனத்தை நோக்குபவன் ஆன்மா எனப்படுவதைக் காண்பதில்லை. ஆன்மாவை நேரில் காண்போனுக்கு, மனமும் உடலும் மறைந்தே போய்விடுகின்றன. சலனத்தை மட்டும் காண்பவன் நிறைவுள்ள அமைதியை ஒரு போதும் காண்பதில்லை; நிறைவான அமைதியைக் காண்பவனுக்குச் சலனம் மறைந்து

விடுகிறது. கயிற்றைப் பாம்பெனக் கொள்கின்றனர். அர வமாகப் பார்க்கிறவனுக்குப் கயிறு என்ற ஞானம் உண்டாவ தில்லே. மயக்கம் தீர்ந்து அவன் கயிற்றைப் பார்க்கும்போது பாம்பென்ற உணர்வே மறைந்து விடுகிறது.

ஆகவே, அனைத்தறிவுமாய்த் திகழும் ஒரே பொருள் உளது. அது பல விதமான தோற்றமளித்து வருகின்றது. இப்பரமான்மாவே, பரம்பொருள் ஒன்றே, பிரபஞ்சத்தில் நிலவியுள்ளது. இந்த ஏகமானபொருளே அத்துவைதிகளின் குழுவுக்குறியில் 'பிரம்மம்' எனப்படுவது. இந்தப் பிரம்மமே நாமரூப பேதங்களால் பலவெனத் தோற்றமளிக்கிறது. கடல் நீரிலுள்ள அலேகளேப் பாருங்கள். எந்த ஓர் அலேயாவது உண்மையில் கடலினின்றும் வேருன பொருளாகுமா? அதனே வேறுபோலக் காணுமாறு செய்வது யாது? பெயரும் உருவமுமே: அலேயின் வடிவமும், அதற்கு இடப்பட்ட 'அலே' என்ற பெயருமே. இதுதான் அலேயைக் கடலினின் றும் வேறுபடுத்திக் கூறுவது. இந்த உருவமும் பெயரும் அழியும் போது முற்றும் ஒரே கடலாகவே காட்சியளிக் கிறது. அலேக்கும் உண்மையான வேற்றுமை கற்பிப்பவர் யாவர்! அது போன்றே, பிரபஞ்சம் முழுதும் பரம் பொருள் ஒன்றே: நாமரூபங்களே அப் பல வேற்றுமைகளேயும் தோற் றுவித்து விட்டன. கோடிக்கணக்கான நீர்த்துளிகளின் மீது கதிரோனின் ஒளி பரவும் போது, ஒவ்வொரு நீர்த்துளியும் ஒவ்வொரு கதிரவனுகவே தோற்றமளிக்க வில்லேயா? அது போன்றே, பரமான்மாவும் பெயர் உருவம் படைத்த பல பொருள்களின் மீது பட்டதும் அப்பொருள்களின் நிழலாக, வேறு வேருன அப்பொருள்களெனவே காட்சியளிக்கின்றது. ஆனல், உண்மையில் பிரம்மம் ஒன்றேதான். 'நான், நீ' என்பது ஒன்றும் இன்றியே எல்லாம் ஒன்ருகவே உள்ளது. ஒன்று, எல்லாம் 'நா'னுகவே இருக்கும். அல்லது, எல்லாம் 'நீ'யே. இருமை என்ற எண்ணம் முழுப்பொய்யே. நாம் காணும் இப்பிரபஞ்சம் இப்பொய்யறிவினுல் ஏற்பட்ட தோற்றமே. அறிவு அலர்ந்தபோது, மனிதன் இரண்டற்ற 'ஒன்றே' உளதெனவும், தானே அப்பேருலகம் எனவும் அறிந்துகொள்கிருன். "இப்போதும் ஒரே மாறுதலின் தொகையாக உள்ள முழுவுலகும் நானே. எல்லா மாறுபாடு

களுக்கும் பின் நிற்பவன், என்றும் பூரணமாக உள்ளவன், என்றும் பேரின்பப் பொருளாக உள்ளவன் நானேதான்.''

ஆகையினுல், என்றென்றும் அழியாததாய் உள்ள பொருள் ஆன்மா ஒன்றே. அது தூய்மையின் நிறைவு; மாருதது; மாற்றமும் பெருதது; மாற்றம் பெற இயலாதது. உலகில் மாற்றம் பெற்றனவாகத் தோற்றம் அளிப்பன யாவும் அப்பரம்பொருளான ஆன்மா ஒன்றே.

மாந்தர் அதன்மீது நாமரூபங்கள், கனவுகள் யாவற்றையும் ஏற்றி விட்டனர். எப்படி அலையைக் கடலினின்றும் வேருக்கியது வடிவமோ அப்படியே. அலை, ஓய்ந்ததும் அவ் வடிவம் காட்சிக்குப் புலப்படுகிறதா? இல்லை; அது மறைந்து விடுகிறதல்லவா? கடலின்றி அலை உளதாகுமோ? ஆனுல், அலையின்றிக் கடல் இருக்கக்கூடுமல்லவா? அலையுள்ள மட்டும் வடிவம் உள்ளது; ஆனுல், அலை மறைந்ததும் வடிவமும் மறைந்து விடுகிறது. அது நிலைத்து நிற்கமாட்டாது, இந்தப் பெயரும் உருவமுமே 'மாயை'யின் விளைவு. இம் மாயைதான் மக்களைப் பிரித்துக் காட்டுகின்றது. ஆனுல், இந்த வேறுபாட்டுக்கு உண்மையில் இடமே இல்லை. மாயை என்பது உளதென்று கூறுவதும் பிழையே; உருவம் உண்டென்று பகர்வதும் தவறே. ஏனெனில், அது மற்ருெரு பொருளின் இருப்பைச் சார்ந்ததாகவே இருக்கிறது. அதனை இலதென்றும் நவில்வதற்கில்லை. ஏனெனில், அது வேற்றுமைகள் யாவற்றையும் படைக்கின்றது. அத்துவிதக் கருத்துப்படி இந்த மாயை அல்லது மயக்க அறிவு நாமரூபம் (இவற்றை ஐரோப்பியத் தத்துவ ஞானிகள் காலம், இடம், காரண காரியத் தொடர்பு என்று கூறுவார்கள்.) இவை அகண்டமான ஒரே 'சத்து'ப் பொருளிலிருந்து தோன்றி, உலகிலுள்ள பல்வேறு பொருள்களாகக் காட்சியளிக்கிறது பேரண்டம் ஒன்றேதான் என்பது இதன் சாரம். அறுதிப் பொருள்கள் இரண்டுளவென்று எண்ணுபவன் பிழைபடவே கருதுகிருன். உண்மைப் பொருள் ஒன்றேயென்று அவன் தெரிந்து கொள்ளும்போது அவன் தக்கபடியே எண்ணுகிருன். இந்த உண்மையே ஒவ்வொரு நாளும் நமக்குக் கண் காட்சியாகவும் மானத உலகிலும் ஆன்மிகத்திலும் மெய்ப்பிக்கப்படுகின்றது. நீங்களும் நானும், திங்களும் விரிகதி

ரோனும் விண்மீன்களும் சடவுலகில் சிதறிக்கிடக்கும் பல் வேறுபொருள்களான யாவருக்கும் யாவற்றிற்கும் இடப்பட்ட தனிப்பெயர்கள். இந்தத் தூலப்பொருளோ, கணந்தோறும் உருமாற்றம் அடைந்து கொண்டே உள்ளது. பற்பல மாதங் கட்கு முன்னர் ஞாயிற்றிலிருந்த சத்திகளின் ஒரு சிறு துளி ஒரு மனிதனை இப்போது அடைந்திருக்கலாம். இன்று அவனிடமுள்ள அது, நாளையதினமே ஒரு விலங்கினிடம் விளங்கலாம்; மறுநாளே அது ஒரு தாவரத்தைச் சேர்ந்து விடலாம். அது வந்து கொண்டும் போய்க்கொண்டுமே இருக்கிறது. எல்லாமே அகண்டமான ஒரு சடப்பொருளின் தொகுதியே; உருவமும் பெயர்களும் மட்டும் வேருகக் கொண்டன. ஒன்றற்குப் பரிதியென்றும் மற்ருென்றிற்கு மதியென்றும் மூன்ருவது பொருளுக்கு விண்மீனென்றும், வேருென்றற்கு மானிடனென்றும் விலங்கென்றும், தாவர மென்றும் பெயர்கள் அமைந்துள்ளன. இப்பெயர்கள் யாவும் பொய்யே. ஏனெனில், இவற்றிற்கு ஓர் அடிபபடையும் இல்லை. எப்படியெனின், முழுதுமே இடைவிடாது மாறிக் கொண்டுள்ள ஒரு சடக்கூட்டமே. மற்ருெரு பக்கநோக்குப் படி பார்த்தோமாஞல், இப்பிரபஞ்சமே ஒரு நினைவுக் கடல் என்னலாம். இதில் நம்முள் ஒவ்வொருவரும் தனித்த மனம் என்னும் ஒரு தனிப்பட்ட புள்ளியிடமாவோம். நீங்கள் ஒவ் வொரு மனம், நான் ஒரு மனம்; ஒவ்வொருவரும் ஒவ்வொரு மனமே. இதே பிரபஞ்சம், அறிவின்நிலை கொண்டு பார்க்கும் போது, பொய்ம்மையில்லாத கண்கள் பார்க்குங்கால், தூய மனம் பார்வையிடுங்கால், ஒரே அகண்டமான, கேவலமான தனிப்பொருள்; தூய, மாற்ற மற்ற முடிவில்லாப் பொரு ளாகக் காட்சியளிப்பதாகும்.

இந்தக் கொள்கையை ஒப்புநோக்கும்போது துவைதவாதி களின் மூவகைக் கருத்து என்ஞவது? அவர்கள், 'ஒருவன் இறந்ததும் அவன் சொர்க்கத்துக்கோ, அல்லது இந்தக் கோளத்துக்கோ, அல்லது அந்த ஒரு கோளத்துக்கோ, மற் ருெரு கோளத்துக்கோ போகிருன். கொடியவர்கள் பேயா கவோ பிசாசாவோ, விலங்காகவோ, வேருென்ருகவோ பிறப்பு எடுக்கிருர்கள்,' என்று கூறுகின்ருர்கள். வேதாந்தி, 'ஒருவரும் வருவதுமில்லை; போவதுமில்லை. நீங்கள் எவ்

வாறு வரவோ போகவோ கூடும்? நீங்களே எல்லையற்ற பரப் பிரம்மம்: நீங்கள் போகக்கூடிய இடம் எங்குளது?'' என்கிறான். குறிப்பிட்ட ஒரு பள்ளியில் சிறுவர் பலர் பரீட்சிக்கப்பட்டனர். பலவிதக் கடினமான கேள்விகள் கேட்கப்பட்டன. அவை அறிவற்ற கேள்விகளே. அவற்றில், "பூமி ஏன் கீழே விழுவதில்லை?'' என்பதும் ஒரு வினா. இவ்வினாவை எழுப்பியவர் புவியீர்ப்பைப் பற்றிய உண்மையையோ வேறு சில சிக்கலான விஞ்ஞான முடிபையோ விடையாகப் பெற விழைந்தார். மாணவ மாணவியருட் பலரும் கேள்வியையே விளங்கிக் கொள்ளும் திறமையற்றவராயினர்; பிழைபட்ட விடைகளையே பகர்ந்து வந்தனர். கடைசியாக அறிவுமிக்க ஒரு சிறுமி மற்றொரு கேள்விமூலம் விடை இறுத்தாள்: "அது எங்கே விழக்கூடும்?'' என்பதே அவள் விடை. கேள்வி கேட்டவரின் வினாவே அறிவின்மையுடன் கூடியது; பொருளற்றது. உலகத்திற்கு 'மேல்' 'கீழ்' என்பதே இல்லை. எல்லாம் ஒன்று மற்றொன்றை ஒப்பு நோக்குவதனால் ஏற்படும் மாறுபாடே. அது போலவேதான் ஆன்மா விஷயத்திலும். அதைப்பொறுத்த மட்டில் பிறப்பு இறப்பு என்பதே அர்த்தமற்ற—பயனற்றதொன்று. யார் செல்கின்றனர்? யார் வருகின்றனர்? நீங்கள் இல்லாத இடம் ஒன்றுளதா? நீங்கள் முன்னர் இருந்திராத சொர்க்கம் எங்கிருக்கிறது? சீவான்மா எங்கும் பரவியுள்ளது. அது எங்குச் செல்லக்கூடும்? அது எங்கேதான் செல்ல முடியாது? அது எங்கும் நிறைந்திருப்பது. ஆகவே பிறப்பு, இறப்பு என்னும் இந்த அற்பமான தோற்றங்கள் யாவும் ஒரு சிறுவன் காணும் கனவே. அப்படியே சொர்க்க நரகங்கள், தேவ உலகங்கள் யாவும் பூரண அறிவு பெற்றவனுக்கு கணத்தில் மறைவனவாம். அங்கிலையில் சற்றே பின் தங்கியவனுக்கு பிரம்மலோகம் வரையிலுள்ள பல காட்சிகளைக் காட்டிய பின்னர்த் தோற்றம் மறைந்துவிடும்; ஆனால், அறிவிலிகளுக்கோ நீடித்து நிற்கும்.

அப்படியானால் உலகத்தவர் யாவரும் ஏன் சொர்க்கம் செல்வது பற்றியும், சாவு பற்றியும், மறு பிறப்புப் பற்றியும் நம்பிக்கை கொள்கின்றனர்? நான் ஒரு நூலைப் படித்து வருகிறேன். ஒவ்வொரு பக்கமாகத் திருப்பிப் படித்து விட்டு

ஏட்டினைப் புரட்டுகிறேன். மறு பக்கம் வருகிறது, மாறுவது எது? வருவதும் போவதும் எது? நானல்லவே; நூல்தானே! இயற்கை முழுதும் ஆன்மாவுக்கு முன்னுல் உள்ள ஒரு நூல் போன்றது. ஒவ்வோர் அதிகாரமாக வாசித்த பின்னர் ஏடு புரட்டப் படுகின்றது. இடையிலே ஒரு காட்சி வருகிறது. மறுபடியும் படிக்கப்பட்டுப் பக்கம் திருப்பப் பட்டதும் மற்றொரு புதிய காட்சி தோன்றுகிறது. ஆன்மாவோ ஒன்றேதான்; சதாகாலமும் மாருமலிருப்பது. இயற்கை மாறிக்கொண்டேதான் இருக்கிறது. ஆனுல் மனிதனுடைய ஆன்மா மாறுவதில்லை. பிறப்பும் இறப்பும் இயற்கையில் உண்டு, உங்களிடத்தே இல்லை. அறிவிலிகள் மயக்க முறுகிருர்கள்—நாம் மயக்க அறிவினுல், 'கதிரவன் சுற்றிவருகிருன்; பூமியன்று,' என்று நினைப்பதுபோல, இப்படியே, 'மாய்வது இயற்கையன்று; நாமே,' என்றுதான் நாம் நினைக்கிருேம். இவை யாவும் பிரமைகளே. எப்படியெனில், இருப்புப் பாதையில் வண்டித்தொடர் செல்லுகையில், அதனுள் இருக்கும் நாம் 'ஓடுபவர் நாமல்லோம்; ஓடுவன அக்கம் பக்கத்திலுள்ள வயல்களே' என்று நினைப்பது போல. இவ்வாறேதான் மதிமயக்கத்தினுல் பிறப்பு இறப்பு என்னும் விஷயங்களிலும் நினைக்கிருேம். மனிதன் ஒரு மன நிலையில் உள்ளபோது, இவ்வாழ்வே மண்ணும் விண்ணும், ஞாயிறும் திங்களும், விண்மீன்களும் பிறகோளங்களும் என்று நினைக்கிருன். அவன் போன்ற மனநிலையிலுள்ள யாவரும் அதேபோன்றுதான் சடப்பொருள்களைப் பார்க்கின்றனர். உங்களுக்கும் எனக்கும் இடையே கோடிக்கணக்கான சீவர்கள் வெவ்வேறு ஞான பூமிகளில் வாழ்ந்து கொண்டிருக்கலாம். அவர்களால் நம்மைப் பார்க்கவோ நம்மால் அவர்களைப் பார்க்கவோ இயலாது. நாம் பார்க்கக் கூடியவர் யாவரும் நம் போன்ற ஒரே அறிவு நிலையிலும் மனோநிலையிலும் இருப்பவரே; ஒரேமுறையான அதிர்வுகளுடைய இசைக் கருவிகளே. ஒன்றோடொன்று இசைந்து இணங்கிருக்கும். மனித-அதிர்வு என்று ஒன்று இருந்து, அது வேறு படுமாயின், நாம் மனிதர்களை இங்குக் காண இயலாது; மனித உலகமே மறைந்துபோம். அதற்கு மாருக வேறு ஒரு காட்சி நம் முன் நிற்கும்—நல்லவனுக்குத் தெய்வங்களும்

தேவலோகங்களும் தீயோனுக்குப் பேய் பிசாசுகள்,பூதங்கள் இவற்றின் உலகமும். மனிதன் நிலையில் நின்று பார்க்கும் போது மண், விண், பரிதி, திங்கள் முதலியன உள்ளனவாகப் பார்க்கிறோம். இதே பிரபஞ்சம், மனிதர்களுள் கெட்ட இனத் தவர் கண்கொண்டு பார்க்கும்போது, ஒரு தண்டிக்கும் உலக மாகக் காட்சியளிக்கும். சொர்க்கமாகப் பார்க்க விரும்புபவர் களுக்கு அது அவ்வாறே தோன்றும். அரியாதனத்தில் வீற்றிருந்து தம் புகழ்மாலைகளை ஏற்றுக்கொண்டேயிருக் கும் ஒரு கடவுளைப் பற்றி ஒருவன் வாழ்நாள் முழுவதும் கனவுகண்டுகொண்டிருந்தால், அவன் இறக்கும்போது தான் மனத்திற் கொண்டுள்ள அந்த மூர்த்தியின் காட்சியையே காண்பான். இது திண்ணம். இந்த உலகமே பேரளவின தாகி அவனுக்குப் பெரியதொரு சுவர்க்கமாகக் காட்சியளிக் கும். இதில் அவன் சிறகுடன் கூடிய பல உயிர்கள் பறந்து செல்வதையும், சிங்காதனத்தில் வீற்றுள்ள ஒரு கடவுளை யும் காண்பான். இந்தச் சொர்க்க பூமிகள் யாவும் மனித னுடைய சொந்தப் படைப்புகள்; ஆகவே அத்துவைதி, "துவைதவாதி கூறுவது உண்மையே. அவை யாவும் அவனது முழுக் கற்பனை நிலங்களே. இக்கோளங்களும் பேய்களும் தெய்வங்களும் மறுபிறப்புகளும் மாற்றுருவங் களும் யாவும் புராணக்கதைகளே. மனித வாழ்வும் அத் தன்மைத்தே. அவர் இழைக்கும் பிழை யாதெனில் இவ் வாழ்க்கை மட்டும் உண்மை என்று கொள்வதே. பிறரது கற்பனைகளைப் புராணங்கள் கட்டுக்கதைகள் என்று கூறுங் கால் அது அவர்களுக்கு உடன்பாடாகி அவர்கள் மகிழ்கிறார் கள். ஆனால், தமது நிலையை அவ்வாறு சாற்றுகிறபோது அவர்கள் அதனை ஏற்பதில்லை; எல்லாமே பொய்க் கதைகள். யாவற்றிலும் பெரும்பொய் யாதெனில், நாம் என்றும் இல்லாத, இனியும் இராத, இருக்கக்கூடாத உடல்கள் என்பதே. நாம் வெறும் மனிதர்களென்ற கூற்று யாவற் றிலும் பெரிதான பொய். நாம் உலகத்தின் கடவுளே. பரம்பொருளை நாம் வழிபடும் போதெல்லாம் நாம் நமது சொந்த ஆன்மாவையே, நம்மையே வணங்கி வருகிறோம். எல்லாவற்றிலும் கீழான பொய் யாதெனில், நம்மை நாமே பாவிகளென்றும் கயவர்களென்றும் கூறிக்கொள்வதே.

மற்ெருருவரில் பாவியைப் பார்ப்பவனே பாவியாவான்,'' என்று கூறுவான். இங்கு ஒரு குழந்தை இருப்பதாகவும், அதன் அருகிலுள்ள மேசையின் மீது பொன் நாணயங்கள் நிறைந்த பை ஒன்றிருப்பதாகவும் கருதுவோம். ஒரு திருடன் வந்து அப்பையைக் களவாடிச் செல்கிருனென்றும் கற்பனை செய்துகொள்வோம். அக்குழந்தைக்கு எல்லாம் ஒன்றே. அதன் உள்ளும் புறமும் ஒரு திருடனும் இல்லை. பாவிகளுக் கும் தீயோர்க்கும் புறத்தே தீமை காட்சியளிக்கிறது. நல்ல வர்களுக்கோ, அத்தீமை தோன்றுவதில்லை. ஆகவே, கொடி யவர்கள் பிரபஞ்சத்தை நரகெனக் காண்கிருர்கள். அரை குறையாக உள்ள நல்லவர்கள் அதனைச் சொர்க்கமாகவும், பூரணத்துவம் பெற்ற மாந்தர் அதனைக் கடவுளாகவும் கருதுகின்றனர். அப்போதே கண்ணை மறைத்திருக்கும் திரை நீங்கி அம்மனிதன் தூய்மையுற்று, தெளிந்த நெஞ்சங் கொண்டு, காட்சி முற்றும் மாறியிருப்பதைக் காண்கின்ருன். தன்னைப் பல கோடி ஆண்டுகளாகத் துன்புறுத்தி வந்த கெட்ட கனவுகள் யாவும் அகல்கின்றன. அப்போது தன்னை ஒரு மனிதனுகவோ தெய்வமாகவோ பேயாகவோ நினைந்து, தான் மேலான உலகங்களிலோ கீழான நிலங்களிலோ மோட்ச பூமியிலோ இருப்பதாகக் கொண்டவன்தான் உண்மையாகவே எங்கும் இருப்பவனுகவும், கால எல்லைக் குட்படாதவனுகவும், காலம் தன் உள்ளீடாக இருப்பதாகவும் சொர்க்கத் தடங்கள் யாவும் தன்னுள்ளேயே இருப்பன வாகவும், தான் அவற்றில் இருப்பவனல்லன் என்றும் மனிதன் வழிபடக்கூடிய தெய்வங்கள் யாவும் தன்னுள் ளேயே விளங்குகின்றனவென்றும், தான் அவைகளிடம் இல்லையென்றும் கண்டுகொள்கிருன். தானே தெய்வங்களை யும், பூதங்களையும், மாந்தர் தாவரங்கள் கற்கள் முதலிய யாவற்றையும் படைத்தவனென்றும், 'மனிதனது உண்மை வடிவு சொர்க்கத்தினும் பெரிதானது; இந்தச் சகத்தினும் நிறைநிலையுடன் கூடியது; எல்லையற்ற காலத்தையும் கூர்ந்து நின்றது; எங்கும் பரந்து நிறைந்த விண்ணிலும் அளவு கடந்தது,' என்றும் கண்டு கொள்கிருன். இப்படியா வதனுலேதான் மனிதன் அச்சம் அகற்றிச் சுதந்தரனுகிருன். மோகங்கள் யாவும் தீர்ந்து விடுகின்றன; துயர்கள்

தேய்கின்றன; அஞ்சாமையே என்றும் நிலவுகின்றது; பிறப்பும் இறப்பும் அற்றுப் போகின்றன. துயரங்கள் மறையவே, இன்பங்களும் இல்லாமற்போம். மண்ணும் விண்ணும், உடலும் மனமும் தோற்றமளிக்கமாட்டா. அத்தகைய மனிதனுக்குப் பிரபஞ்சமே மறைந்துவிடுகின்றது. தேடித்திரியும் நிலையும் இடையீடின்றி இயங்கி வரும் சத்திகளின் போராட்டமும் ஒருமிக்க ஒழிந்தே போம். தன்னை இதுகாறும் சத்தியாகவும், சடமாகவும், இயற்கையாகவும், இயற்கையின் போராட்டங்களாகவும், சொர்க்கங்களாகவும், பூமிகளாகவும், தாவரங்களாகவும், விலங்குகளாகவும், மானுடர்களாகவும், தேவதூதர்களாகவும் காட்டி வந்த ஏகதத்துவமே ஒரு அகண்டமான, வரம்பில்லாத, தகர்த்தற்கரிய, மாற்றக்கூடாத சத்தாக மிளிர்கின்றது; ஞானி தன்னை அதனுடன் ஒன்றெனவே கண்டுகொள்கிறான். "பல வண்ணங்கள் கொண்ட முகில்கள் வானில் தோன்றி ஒரு கணப்போதில் மறைவது போன்றே இந்த ஆன்மாவுக்கு முன்னர் இப்புவனம், ஞாயிறு, திங்கள், சொர்க்க பூமிகள், மோட்ச உலகுகள், பல தெய்வங்கள், இன்ப துன்பங்கள் ஆகிய யாவும் ஒரே கணநேரத் தோற்றமாகி, உடன் மறைந்து, ஒரே அகண்டமான வரம்பற்ற நீல நிறம் படைத்த என்றும் மாற்றமில்லாத வானவெளியே நிலையாகத் தங்கி நிற்கின்றது. வானம் ஒரு போதும் மாறுவதில்லை. மாற்றம் பெறுவன முகிற்கணங்களே. வானம் மாறுகின்றதென்றெண்ணுவது பிழைபட்டதாகும். நாம் தூய்மையற்றவர், வரம்பிற்குட்பட்டவர், தனிப்பட்டவர் என்ற கருத்துக் கொள்வது தவறேயாகும். உண்மை மனிதன் அந்த ஏகமான சச்சிதானந்தமே.

இப்போது இரு வினாக்கள் எழுகின்றன: முதலாவது, "இந்நிலையை எய்துவது இயலுமா? இது கொள்கையளவில் இருக்கும்போது தத்துவ ஞானமாகும்; ஆனால் இதனைப் பின்பற்ற, செய்முறைக்குக் கொண்டுவர, இயலுமா?" என்பது. இது திண்ணமாக இயலும். இப்போதும் மயக்கம் நீத்த பெரியோர் உலகில் வாழ்கின்றனர் என்பது உண்மை. அவர்கள் அனுபூதி பெற்றவுடன் மறைந்துவிடுகின்றனரா? நாம் நினைப்பது போன்று அத்துணை விரைவில் அவர்கள் மறைவ

தில்லை. ஒரு தடியால் இரு முனைகளிலும் பற்றப்பட்ட இரண்டு சக்கரங்கள் ஒன்றாக ஓடிக்கொண்டிருக்கின்றன. அவற்றில் ஒன்றை மட்டும் பிடித்துக்கொண்டு நான் வாளால் தடியை வெட்டுகிறேன். நான் பற்றியுள்ள சக்கரம் நின்றுவிடுகிறது. மற்றொன்றோ, முன்னமே பெற்றுள்ள விசையுடனேயே ஓடிச் சிறிது நேரம் சென்றதுமே விழுந்து விடுகிறது. இத்தூய்மையான, பூரணப்பொருளான ஆன்மா ஒரு சக்கரம்; உடலும் மனமுமாகத் தோற்றமளிக்கும் மற்றோர் ஆழி 'கருமம்' எனும் வினையான தடியால் அத்துடன் சேர்க்கப்பட்டுளது. இந்த இரண்டு ஆழிகளின் சேர்க்கையை வெட்டித்தறிக்கும் கோடரி ஞானமே. ஆன்மா என்ற ஆழி நின்றுவிடுகிறது; அதாவது, தான் வருவதாகவும் போவதாகவும், வாழ்வதாகவும் சாவதாகவும் எண்ணுவதை நிறுத்தி விடுகிறது; மேலும் தான் இயற்கையென்றும், தனக்கு விருப்பங்களும் வேண்டுதல்களும் உள்ளனவென்றும் எண்ணுவதைத் தவிர்க்கின்றது; தான் பூரணப்பொருள் என்பதையும் தனக்கு இச்சைகள் எவையும் இல்லை என்பதையும் கண்டு கொள்ளும். மற்றோர் சக்கரமான உடலும் மனமும் சேர்ந்த ஒன்றின்மீது அனாதி காலமாக ஏறியுள்ள கரும பலன்கள் இவற்றின் உந்தும் சக்தியினால் சிறிது காலம் ஓடிவிட்டு அச்சக்தி குன்றி ஓய்ந்தவுடன் மனமும் உடலும் அழிந்து, ஆன்மா விடுதலை அடையும். இனிமேல் சொர்க்கம் புகுவதோ, திரும்பி வருதலோ, பிரம்மலோகம் அடைவதோ ஆகிய செயல் ஒன்றும் இராது. போக்குவரவே அற்றுப் போம். எங்கே போவது; எங்கே வருவது? இப் பிறவியிலேயே இந்நிலையை அடைந்தவனுக்கு, அது ஒரு கணப் பொழுதே யாயினும், சாதாரண உலகக்காட்சி மாறி உண்மைக் காட்சி தோன்ற அவனே "சீவன் முத்தன்" எனக் கூறப்பெறுகிறான். இதுவே வேதாந்தியின் உயர் குறிக்கோள்; சீவன் இருக்கும் போதே விடுதலை பெறுதலே.

நான் ஒருகால் இந்துமகா சமுத்திரத்திற்கருகேயுள்ள இந்தியாவின் பாலைவனப் பரப்பில் நடந்து செல்ல நேர்ந்தது. அப்போது நாள் கணக்கில் நடந்துகொண்டே பல அழகிய ஏரிகளையும் அவற்றைச் சுற்றியுள்ள மரங்களையும் அம் மரங்களின் தலைகீழான நிழல்களையும் அவை அதிர்வதையும்

கண்டேன். என்ன விந்தை! இந்நிலத்தையா பாலைவன மென்று கூறுகின்றனரென்று வியந்து என்னுள் பேசிக் கொண்டேன். இப்படிப்பட்ட காட்சிகளைப் பார்த்துக் கொண்டே ஒருமாதம் நடந்து சென்றேன். வியக்கத் தகும் இந்த ஏரிகளையும் மரங்களையும் செடிகளையும் பார்த்துக் கொண்டே சென்றேன். ஒருநாள் எனக்கு மிகுதியான நீர் வேட்கை தோன்றிற்று. நீர் பருகும் பொருட்டு அந்த அழகிய தெளிவான நீர்நிலை ஒன்றை நோக்கி அதன் அருகு சென்றேன். நான் அதனை அணுகுந்தோறும் அது மறைய லாயிற்று. அப்போது தான் என் மூளையில் ஓர் எண்ணம் முகிழ்த்தது. அது "இதுவே நான் என் வாழ்நாள் முழுதும் படித்தும் கேட்டும் வந்த கானல்நீர் போலும்!'' என்ற எண்ணம். அத்துடன் மற்றொரு நினைப்பும் உண்டாயிற்று. அது, 'நாம் மாதக் கணக்காகப் பார்த்து வியந்து உண்மை யென்று போற்றி வந்த நிலம் இக் கானலே,' என்பது. ஒரு மாத காலமாக நான் கானலையே கண்டு வந்து அதனை அறியவில்லையே. மறுநாள் எப்போதும்போல நான் நடக்கத் தொடங்கினேன். இப்போதும் அந்த ஏரி காட்சியளித்தது; ஆனால், 'இது கானல்; உண்மையான ஏரி அன்று,' என்னும் இக்கருத்தும் அதனுடனே எழலாயிற்று. அது போன்றதே தான் இவ்வுலகும். உலகமாகிய இக் கானல்நிலத்திலே தான் நாம் எப்போதும், நாடோறும், திங்கள் தோறும், ஆண்டு தோறும் பிரயாணம் செய்துகொண்டுள்ளோம்—ஆனால் அது கானல் போன்றது என்ற அறிவு சிறிதுமின்றியே. ஒரு நாள் அக்கருத்துக் குலைந்துவிடும். ஆயினும், அது பின்னும் மீண்டுவிடும். உடல் அதன் பழவினைக்கு வயப்பட்டே இருக்கவேண்டி யுள்ளது. ஆதலால், அக்கானல் என்ற நினைவு மறையவே செய்யும். இவ்வுலக எண்ணமும் அவ் வாறே நமது கர்ம பலனாக வந்தே தீரும். ஆண், பெண், விலங்கு, செடி, பாசம், பற்று, கடமையுணர்ச்சி யாவும்,—அந்த அளவிற்குக் குறைந்த அளவிலே யாயினும் மீளும். புதிய அறிவு வந்தவுடன் கருமத்தின் ஆற்றல் அழிந்து போக, அதன் விடம் மாய்ந்து விடும். கருமமே மேலான நிலையாகி மாற்றமெய்தி, அறிவாகப் பரிணமித்து, நமக்கு

உண்மை நிலையைக் காட்டிவிடுகிறது—கானலை நன்கு வேறு படுத்திக் காட்டிவிடுகிறது.

அப்போது இவ்வுலகம் முன்போல இருப்பதில்லை. ஆனால், இதில் ஓர் அபாயமும் உள்ளது. இந்தத் தத்துவத்தை எந்நாட்டினரும் கையாண்டு வந்து, "நான் அறத்தையும் தீமையையும் கடந்தவன்; ஆதலால், நான் எந்தத் தார்மிக விதிகளுக்கும் கட்டுப்பட்டவனல்லேன்; நான் எதை வேண்டினும், என் விருப்பப்படியே செய்யலாம்," என்று கூறுவதைக் கேட்கிறோம். இந்நாட்டிலும் அறிவிலிகள் பலர், " நான் கட்டுப் பட்டவனல்லேன்; நான் என் விருப்பப்படி எதனையும் ஆற்றலாம்—நானே கடவுளாதலால்," எனக் கூறுகின்றனர். இது சரியன்று; பௌதிக மானத நீதி நெறிச் சட்டங்களுக்கெல்லாம் அப்பால் ஆன்மா இருப்பினும் சட்டங்களுக்குள் அடங்கியிருப்பது சிறைப்பட்டிருப்பதே; அதற்குப் புறம்பாக இருப்பதுதான் சுதந்தர இருப்பு என்பது உண்மையே. சுதந்தரம் என்பது ஆன்மாவின் இயல்பு; அதன் பிறப்புரிமையுங்கூட. ஆன்மாவின் உண்மையான சுயேச்சை, மனிதனது சுதந்தரமெனத் தோன்றும் வடிவிலுள்ள தூலப்பொருள்களின் முகமூடிகள் வாயிலாக ஒளிர்கின்றது. உங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு நிமிடமும் நீங்கள் சுதந்தரமுள்ளவர்களாகத் திகழ்கிறீர்களென்பதை நீங்களே உணர்கிறீர்கள். நாம் சுதந்தர புருடர் என்னும் நினைவின்றி ஒரு கணமேனும் வாழவோ பேசவோ மூச்சு விடவோ கூட இயலாது. ஆனால், அதே சமயம் நாம் பொறிகள் போன்றே இயங்குகிறோம். நாம் சுயேச்சை யற்றவர்கள் என்பதை நமது ஒரு சிறு சிந்தனையும் புலப்படுத்தி விடுகின்றது. அப்போது எது தான் உண்மை? இந்தச் சுதந்தரக் கருத்து வெறும் பிரமையா? ஒரு சாரார் இது மயக்க அறிவே என்றும், மற்றொரு சாரார் கட்டுப்பட்டமையென்னுங் கருத்தே வெற்று உருவெளித் தோற்றமேயன்றி வேறன்று என்றும் கூறுகின்றனர். இது எவ்வாறு நிகழக் கூடும்? மனிதன் உண்மையாகவே சுயேச்சை பெற்றவன்; சுதந்தரனே. அவன் வேறு விதமாய் இருத்தலே இயலாது. அவன் மாயையால் சூழப்பட்ட, நாமரூப பேதங்கள் உள்ள உலகில் அடிவைத்த பின்னரே அவன் அவ்வாறு கட்டுண்

கிறான். தன் இச்சை என்ற மொழியே பிழைபட்ட கருத்தைத் தருகிறது. சங்கற்பம் ஒரு போதும் சுதந்தரமாய் விளங்க இயலாது. ஏனெனில், உண்மை மனிதன் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட பின்னரே அவனது இச்சை தோன்றும்; அதற்கு முன்பன்று. மனிதனது சங்கற்பம் கட்டுப்பட்டதே; ஆயினும், அந்த இச்சையின் அடிப்படையான தத்துவம் என்றுமே சுதந்தரத்துடன் இலகுவது. ஆகவே, மனித வாழ்வென்றோ தெய்வப்பிறவி யென்றோ நாம் கூறிவரும் கட்டுப்பட்ட நிலையிலும்—அது விண்ணுலகிலாயினும் சரி, மண்ணுலகிலாயினும் சரி—நமக்கு எஞ்சி நிற்பது நமது பிறப்புரிமையினால் நமதான சுதந்தரத்தின் நினைவேயாகும். உணர்ந்தோ உணராமலோ, நாம் யாவருமே அதை நோக்கிப் போராடிச் செல்கிறோம். ஒருவன் தனது சுதந்தரத்தை மீளப்பெற்ற பின்பு எவ்வாறு எச்சட்டத்தால் கட்டுப்படுவன்? உலகிலுள்ள எச்சட்டமும் அவனைக் கட்டுப்படுத்த மாட்டாது. ஏனெனில், பார் முழுதுமே அவனதாயிற்றே!

அவனே இம்முழுப் பிரபஞ்சமும். ஒன்று, அவன் இந்தப் பிரபஞ்சமாய் இருத்தல் வேண்டும்; அல்லது இந்த உலகம் அவனைப் பொறுத்த மட்டில் இல்லையாகி விடவேண்டும். அப்போது அவனுக்கு, ஆண் பெண் என்ற அற்ப வேற்றுமைகளோ நாடு என்ற பெரும்பற்றோ எவ்வாறிருத்தல் கூடும்? அவன், 'நான் மனிதன்; நான் பெண் இனம்; நான் ஒரு குழவிப் பருவத்தினன்' என்றவாறெல்லாம் எப்படி இயம்புதல் கூடும்? இவை யாவும் பொய்யே அன்றோ? அவன் எவ்வாறு, "இவை இவை ஆடவரின் உரிமைகள்; இன்னின்னவை மகளிரின் உரிமைகள்" என்று பாகுபடுத்தி இயம்பலாகும்? ஒருவருக்குமே உரிமைகள் இல்லை; ஒருவருமே தனித்த நிலைமையில் இல்லை; ஆடவருமில்லை, பெண்டிருமில்லை; ஆன்மாவுக்கு பால் வேற்றுமையே இல்லை. அது என்றும் பரிசுத்தமான நிலையில் இலங்குவது. நான் ஓர் ஆடவன் என்றோ பெண் என்றோ சொல்வதும் மெய்யன்று; நான் இந்த நாட்டினன் அல்லது மற்றொரு நாட்டினன் எனக் கூறுதலும் பொறுத்தமாகாது. ஏனெனில், முழுப் பேருலகமும் எனதே; அதை நான் எனது உடலாகக் கருதி விட்டேன். இத்தகைய கொள்கைகளைக் கூறி வந்தும்

மிகவும் இழிந்த செயல்களைச் செய்து வருவோரும் உலகில் உலாவி வருகிறார்கள் என்பதனை நாம் காணுமலில்லை. அவர்கள் ஏன் அவ்வாறு நிகழ்த்துகின்றார்கள் என்று நாம் கேட்டால், அவர்கள் அது முற்றும் மாயை யென்றும், தாம் ஒரு போதும் ஒரு பிழையும் செய்யாதவரென்றும் சாற்று கின்றனர். அவர்களது நிலையை நன்கு ஆராய்வது எவ்வாறு? அம்முறையை இனி நோக்குவோம் :

நன்று, தீது என்ற இரண்டும் ஆன்மாவுக்கு உபாதிகளால் ஏற்பட்ட நிலை எனினும், தீதென்பது உண்மைமனிதன்—சீவான்மா—யாவற்றினும் புறத்தேயுள்ள கோசம்; நன்றென்பது அதனை ஒட்டியுள்ள பூச்சு. ஒருவன் மேலாக உள்ள தீமையின் அடுக்கைக் குலைத்து உட்சென்றாலன்றி நன்றின் அடுக்கை அணுகுதல் அரிதே. பரமான்மாவை அடைந்தவனிடம் எது தான் ஒட்டி நிற்கும்? ஒரு சிறிது வினை, முன் பிறவியின் உந்தும் சத்தி—எஞ்சி நிற்கிறது; அது நல்ல சத்தியாகவே தானிருக்கும், தீ வினையின் ஆற்றல் முழுதும் மறைந்து பண்டைய மாசுகளனைத்தும் சுட்டெரித்து ஒழிக்கப் பட்டாலன்றி, ஒருவனும உண்மையினைக் கண்டுகொள்ள இயலாது. ஆதலால், பிரம்மத்தை அடைந்து மெய்யினைக் கண்டுணர்ந்தவனுடன் ஒட்டியிருப்பது அவனது முன் பிறப்பின் நற்பதிவுகளே, நல்வினைகளின் வேகமே. அவன் உடலுடன் கூடியிருந்த போதும், இடையறாது வினையாற்றிவரும் போதும், நலம் புரியவே முயல்கிறான். அவன் உதடுகள் இனிய ஆசிக்கூற்றுகள் மொழியவே முற்படுகின்றன; அவன் கைகள் நலம் புரியவே தொழிற்படுகின்றன; அவன் மனம் நல்லெண்ணங்களையே நாடுகின்றது. அவன் எங்குச் செல்லினும் அவனது தெய்விகத் தோற்றமே நலம் பொழிவதாகும். அவனே ஒரு வாழும் வாழ்த்தாவன்; அவன் தனது அண்மையினால் யாவரினும் தீயோரையும் தூய முனிவர்களாகச் செய்துவிடுகிறான். பொலிவுற்றவரது முன் தோற்றமே அவர் வாய் திறவாவிடினும் மானிட இனத்திற்கே ஒரு நன்மை தரும் செய்தியாகும். அப் பெற்றி வாய்ந்தவர் தீமை ஆற்றக் கூடுமா? துன்புறுத்தும் வினைகள் புரிய அவர்களுக்கு இயலுமா? வெறும் பேச்சுக்கும் செயல் முறையில் சாதித்துக் காட்டு

வதற்கும் எட்டாத தொலைவு என்பதை நினைவில் நாம் வைத்துக்கொள்ள வேண்டும். எத்தகைய பேதையும் சொல் வீரனாகிவிடலாம். கிளிகளும் மிழற்றுகின்றன. பேச்சொன்று; அதை உருவாக்குவது வேறொன்று. தத்துவங்களும், கோட்பாடுகளும், சொற்போர்களும், நூல்களும், கொள்கைகளும், மாதாகோவில்களும் மதப்பிரிவுகளும், அவ்வவற்றிற்கு உரிய வழிகளில் நல்லவைகள். ஆனால், ஞானோதயம் கிடைத்த பின்னர் அவை யாவும் நழுவி விடுகின்றன. எடுத்துக்காட்டாக நாட்டுப் படங்கள் நலம் பயப்பனவே; நீங்கள் நாட்டினை நன்கு சுற்றிப் பார்த்த பின்னர் அப்படங்களைப் பார்ப்பீர்களானால் எத்தனை மாறுபாடுகளைக் காண்கிறீர்கள்! அவ்வாறே, மெய்ப் பொருளைக் கண்டவர்களுக்கு, உண்மையினை உணர்ந்தவர்களுக்கு, தத்துவ நூல்களின் படிப்படியான தருக்க முறையும் மதிநுட்பங்களின் ஒழுங்குகளும் தேவைப் படுவதில்லை. சத்தியமே அவர்களது இன்னுயிர்க்கும் இன்னுயிராவது; அது தூலவடிவமே பெற்று ஒரு தொடுபொருளெனப் பற்றவும் எளிதாகின்றது. வேதாந்தம் பயின்ற இருடிகள் உரைப்பதுபோல, 'அங்கை நெல்லி போன்று' அது எளிதே விளங்குகின்றது. நீங்கள் நின்று, "இதோ தெரிகின்றதே அது," என்று மெய்ப் பொருளைப் பற்றியும் பேசலாம். உண்மையினைக் கண்டுணர்ந்தவர்கள எழுந்து நின்று, "இதோ இருக்கிறது பரம்பொருள்," என்று உரைப்பார்கள். நீங்கள் அவர்களோடு யுகக்கணக்காக வாதாடலாம். அவர்களோ, உங்களைப் பார்த்துப் புன்னகை புரிவார்கள். அவற்றையெல்லாம் அவர்கள் குழந்தையின் மழலைச் சொல்லெனக் கொள்வார்கள். அவ்வாறு கொண்டு அவர்களைத் தங்கள் விருப்பப்படி பிதற்ற விட்டு விடுவார்கள்; தாங்கள் மெய்ப் பொருளைக் கண்டு அம்மன நிறைவுடன் பூரித்திருப்பார்கள். நீங்கள் ஒரு நாட்டினை நன்கு பார்த்தறிந்து வந்தபின் வேறொருவன் உங்களிடம் வந்து அத்தகைய நிலம் இருக்கவே இல்லை என்று வாதாடினால், அவன் எத்தனை சொல்லி வந்தாலும் நீங்கள் அவனை எவ்வாறு மதிப்பீர்கள்? மூளைக்கோளாறுள்ள அவன் இருக்க வேண்டிய இடம் பித்தர் மருத்துவச்சாலையே என்று எண்ணுவீர்கள். ஆகையால் அனுபூதி அடைந்தவன்,

"உலகிலுள்ள அற்ப சமயவாதங்கள் யாவும் பேதைகளின் பிதற்றல்களே ; ஆன்மதரிசனமே சமயத்தின் சாரமாவது, அதன் சீவன்," என்பான். சமயம் செயல்முறைக்குக்கொண்டு வருதற்கு ஏற்றதாகும். நீ ஆயத்தமாய் இருக்கிருயா? நீ உண்மையாக அதை விரும்பிஞல் அதனே அடைந்தே தீர் வாய். அப்போது நீ உண்மையில் வைதிக தருமத்தில் ஒழுகு வாய். ஆன்ம தரிசனம் பெற்ருலன்றி, உனக்கும் நிரீச்சுர வாதிகளுக்கும் யாதொரு வேறுபாடும் இல்லை. அவர்கள் வெள்ளை உள்ளத்தவர்கள். ஆஞல், பின்னவர்கள் மதமுண் டென்று வாயால் மட்டும் வழுத்திவிட்டுச் செயல்முறையில் வழுவிவந்த போலிகளேயாவார்கள்.

இனி, 'பரமனைக் கண்டபின்பு நிகழ்வது யாது?' என்பது பற்றிச் சிந்திப்போம். பிரபஞ்சத்தின் ஏகத்துவத்தை அறிந்து நாம் அந்த ஒரே அகண்டமான பொருளுடன் ஒன்றியவரே என உணர்ந்து விட்டோமென்றும் வைத்துக் கொள்வோம். மற்றும் அந்த ஒரு பரமான்மாவே உண்மையான ஒரே தத்துவமென்றும், அந்த ஒன்றே உலகத்திலுள்ள பல்வேறு பட்ட பொருள்களிலும் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிற தென்றும் தெரிந்தால், அதன் பின்னர் நடப்பது என்ன? நாம் சோம்பி ஒரு மூலையில் உட்கார்ந்து மடிவதா? அதஞல் உலகிற்கு என்ன பயன் விளையும்? இதுவே அந்தப் பண்டைக் காலக் கேள்வி. முதன் முதல் அது ஏன் உலகிற்கு நன்மை புரியவேண்டும்? "உலகிற்கு அதஞல் என்ன நன்மை செய்ய முடியும்?" என்று கேட்க ஒருவனுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது? அதன் பொருள்தான் என்ன? ஒரு குழந்தைக்குக் கற்கண்டில் விருப்பம் அதிகம் ; நீங்கள் மின் சக்தி குறித்து ஒரு பெரிய ஆராய்ச்சி செய்துகொண்டிருக் கிறீர்கள். அப்போது அது உங்களைப் பார்த்து, "இந்த ஆராய்ச்சியிஞல் எனக்குக் கற்கண்டு கிடைக்குமா?" என்று கேட்கிறது. "கிடையாது," என்று நீங்கள் கூற, "இதஞல் என்ன பிரயோசனம்?" என்கிறது. இதுபோன்றே மானிட ரும் 'இதஞல் உலகிற்குப் பயன் என்ன? அதஞல் பொருள் வருவாய் உண்டாகுமா?' என்று கேட்கின்றனர்; 'இல்லை' என்ற விடையே வர, 'அப்படியாயின் அதன் நலந்தா னென்ன?' என்று வெறுக்கின்றனர். உலகிற்கு நன்மை புரிவ

தென்ருல், இதனையே மாந்தர் தேர்கின்றனர். ஆனுல் சமயத் தின் மெய்யுணர்வோ, உலகுக்கு மிகப்பெரு நன்மைகளைத் தருகின்றது. அந்நிலையை அடைந்ததும், ஏகத்துவத்தை அறிந்ததும், அன்பெனும் ஊற்று வற்றிப் போய்விடுகிற தென்றும், வாழ்க்கையிலுள்ள பற்றெல்லாம் போய்விடுகிற தென்றும், தாம் அன்பு செலுத்தி வந்த பொருள்கள் யாவும் இவ்வுலகிலும் வரவிருக்கும் உலகிலுமே இராது அழிந் தொழிந்தே போய்விடுமெனவும் அவர்கள் அஞ்சுகின்ருர்கள். அவர்களுக்கு ஒரு செய்தி மறந்தே போய்விடுகிறது. தங்க ளது தனித்தன்மை மீது ஒரு சிறிதும் கருத்தைச் செலுத்தா திருத்தவர்களே உலகிற்கு மிகப்பெரிய சேவை புரிந்துள் ளார்கள் என்பதனை உலகத்தவர் நினைத்துப் பார்ப்பதே யில்லை. கீழான, அற்பமான, அழிவுற்ற ஒரு பொருளன்று தான் நேசிப்பது என்பதை ஒருவன் அறியும் போதே அவன் உண்மையில் அன்பு செலுத்துபவனுகிருன்; தன் அன்பிற் குரிய பொருள் ஒரு மண்ணுங்கட்டியன்று; பரம்பொருளே என்று காணும் போதுதான் ஒருவன் உண்மையில் நேசிக்கி ருன். தன் கணவன் பரம்பொருளே என்று நினைக்கும் போதே மனைவி அவனை இன்னும் மிகுதியான அன்புடன் போற்றுகிருள். கணவன், மனைவி கடவுளே என்றுதெரிந்து கொண்டால் அவளிடம் இன்னும், அன்பு செலுத்துகிருன். அவ்வாறே தன் குழந்தைகள் கடவுளே என்றெண்ணும் தாய் அவற்றை மிகுதியாக நேசிப்பாள். தன் கொடிய விரோதி யும் கடவுள் என்றெண்ணுபவனே பகைவனையும் நேசிப் பான். புனித சந்நியாசியைக் கடவுள் என்றே போற்றுபவன் அம்மா புருடனை இன்னும் அதிகமான நேசத்துடன் போற்று வான். அதே மனிதன் தூய்மையற்ற, கேடான ஒருவனும் கடவுளே என்றறிந்து, அவனையும் மிக நன்ருக நேசித்து ஆதரிப்பான். அத்தகையவன் தன்னை முற்றும் மறந்தவனு கிக் கடவுளையே அந்தத் தானத்தில் வைத்து நினைப்பானுய், உலகினையே ஆட்டி வைப்பவனுகிருன். உலகமே அவன் பார்வையில் மாறி, மகோன்னத நிலையில் வைக்கப்பட்டதாகி விடும். அவனுக்குத் துன்பங்கள் துயரங்கள் யாவும் மறைந்து போம்; ஒரு சிறு ரொட்டித் துண்டுக்காக உலகில் ஏற்படும் தினசரிப்போர், போராட்டங்கள் யாவும் மறைந்து

விடும், பிரபஞ்சம் பெருஞ் சிறைக் கூடமாக இருப்பதற்கு மாருக, விளையாட்டு மைதானமாக மாறிவிடும், பிரம்மாண்டம் அப்போது அழகுபெற்று விளங்கும். அத்தகைய மனிதனே நிமிர்ந்து நின்று, “இம்மாநிலம் எத்துணை அழகுடன் திகழ்கின்றது!” என்று வியந்து கூறும் திறத்தினனுகிருன். அவன் ஒருவனுக்கு மட்டுமே யாவும் நலமே என்று கூறும் உரிமை உண்டாகின்றது. அத்தகைய அனுபூதியினுல் விளையும் பெரு நன்மை இதுவே: உலகத்தின் தோற்றம் முழுதும் மாறி, சண்டை சச்சரவுகளும் இருப்பதற்கு மாருக அமைதி நின்று நிலவும். அழகற்ற, கொடிய, விரைந்து போட்டியிடும் மனப் பாங்கோடு நாம் ஓடித் தடுமாறுவது ஒழிந்தே போம்; அத்துடன் அனைத்துப் போராட்டமும் அழிந்தே போம்; வெறுப்பு மறைவதுடன், பொருமையும் மற்றுமுள்ள தீமைகள் யாவும் நிலவுலகிலிருந்து திரும்பி வராமல் நீங்கியேபோம். இம்மானிலமே சொர்க்கமுமாகிவிடும். தெய்வங்கள் தெய்வங்களுடன் விளையாடிவரும் போது, தெய்வங்களே தெய்வங்களுடன் கூடி வினையாற்றும்போது, தெய்வங்கள் தெய்வங்களோடு நட்புடன் அளவளாவி வரும்போது என்ன தீங்கு நேரக்கூடும்? ஆன்ம சாட்சாத்காரமடைந்து ஈசுவர சாந்நித்யம் பெறுவதன் பெரும்பயன் இதுவேயன்றே! அப்போது சமூகத்தில் நாம் காணும் நிலைமாறி மிகமேலான செயல்களும் அபூர்வமான காட்சிகளுமே தலையெடுக்கும். அதன் பின் மனிதனே தீமையின் தோற்றம் என்ற எண்ணத்தை மாற்றிவிடுவீர்கள். இதனின் மிக்க பயன் யாதுளது? இனி எவரும், ஆடவராயினும் பெண்டிராயினும், தவறிழைத்தற்காக அவரை இழிவு படுத்த மாட்டார். இரவில் தெருக்களிற்றிரிந்து நெறிதவறிய மாதரைப் பார்த்துப் பெண்டிரும் இழிவாகச் சுட்டிக்காட்டி இகழ்ந்தும் நிந்தனை செய்தும் வரமாட்டார்; ஏனெனில், அத்தரத்தினரிடமும் கடவுளையே அவர் காண்பார்கள். இனி நீங்கள் ஒருபோதும் பொருமை குறித்தும் தண்டனைகள் பற்றியும் நினைக்க மாட்டீர்கள். அவை மறைந்தொழியும். அன்பெனும் இலட்சியப் பொருளொன்றே எஞ்சி நிற்பதாகும். மனித வர்க்கத்தை

நல்ல நெறியிற் செலுத்தற்கு தண்டிப்புக் கருவிகள் எவை யும் தேவையாகா.

இப்போது உலகிலுள்ள மக்களில் கோடியில் ஒருவரே னும் அமைதியுடன் அமர்ந்திருந்து, "மேன் மக்களே, மற் றுள்ள உயிர்களே, நீங்கள் யாவரும் ஒரே பரம புருடரின் சேய்கள் என்று சிறிது காலம் சொல்லி வருவீராயின், அரை மணி நேரத்தில் உலகம் பெருமாற்றமடைந்து நன்மை பெறும். ஒவ்வொரு மூலை முடுக்கிலிருந்தும் வெறுப்பென்ற மகத்தான சத்திவாய்ந்த வெடிக்குண்டுகளை வீசியெறி வதற்கு மாருக, ஒவவொரு நாட்டிலும் பொருமைத் தாரை களையும் கெட்ட எண்ணங்களின் தொகுதியையுய் பரப்புவ தற்கு மாருக மக்கள் யாவரும், எங்கும், யாவரிலும் இறை வனே தோற்றமளிக்கிருன் எனக் கொள்வீர்களாகில் எத் துணை சிறப்பாக இருக்கும்! நீங்கள் பார்க்கும் பொருள்கள், உணரும் பொருள்கள் யாவும் இறைவரே. உங்களிடம் தீமை யிருந்தாலன்றி நீங்கள் பிறரிடம் அதனைக் காண்பதெவ் வாறு? உங்கள் உள்ளத்தே கள்ளன் குடிகொண்டிருந்தா லன்றி, கொலைகாரனை நீங்கள் எவ்வாறு காண இயலும்? நீங்கள் நல்லவர்களாக இருங்கள், அப்போது தீமையை நீங் கள் காணமாட்டீர்கள். இப்படிப் பிரபஞ்சமே மாறுத லடைந்துவிடும். இதுதான் சமூகத்துக்கு மேலான லாபம். இது மக்களினத்துக்கே பெரியபயன் நல்கும் கருத்து. இவ் விதச் சிந்தனைகளைத் தக்கோர் அக்காலத்தே மிகுதியாகச் சிந்தித்து முறைப்படுத்தி வைத்தனர். இவ்வெண்ணங்கள் பரவாது போனமைக்குப் பல காரணங்களும் உண்டு. போதகர்கள் மக்களுடன் நெருங்கிப் பழகவில்லை; பிறநாட் டினர் நாட்டைக் கைப்பற்றி அதன்மீது ஆட்சி செலுத்தி வந்தனர். ஆனல், மதபோதனைகள் மேன்மை மிக்கன வாகவே விளங்கிவந்தன. அப்போதனைகள் அனுஷ்டிக்கப் பட்ட இடங்களில் மக்கள் தெய்வநிலை பெற்றுர்கள். அத் தகைய ஒரு தெய்விகப்புருடரின் மேம்பாடுற்ற கூட்டுறவி னல் எனது வாழ்க்கை முழுதும் மாறி, திருத்தம்பெற்று, உயர்நிலை எய்தியது. அம்மகா புருடரைப் பற்றி உங்களுக் குப் பின்னர்க் கூறப் போகிறேன். அவருடைய அமுத மொழி கள் உலகெங்கும் பரவப்போகின்றன. அதற்குரிய காலம்

வந்துவிட்டது. மடங்களில் மறைந்திராமல் அறிஞர்களால் மட்டும் கற்கக்கூடிய வேதாந்த நூல்களைப் பயில்வதோடு மட்டும் திருத்தியுறாது அறிவுரைகளை ஒரு குறுகிய இனத்தாரிடமும் படித்தோர்களிடமும் புதையல்போன்று வைத்திராது, புண்ணிய புருடர்களும் பாவிகளும், பண்டிதரும் பாமரரும், ஆடவர், பெண்டிர், சிறு குழந்தை ஆகிய அனைவருமே அவ்வுயர்ந்த அறிவுக் கருவூலத்திற் பங்கு கொள்ளுமாறு அனைவருக்கும் பொது உடைமையாக வைக்க ஏற்பாடு செய்யப்படும். அப்போது அவ்வுயரிய அறிவுரைகள் உலகெங்குமே பரவி நாம் மூச்சுவிடும் காற்றும் அதன் ஒலியால் அதிர வேண்டும், அதிரும். அப்போது 'தத்துவமஸி' என்ற அந்தப்பேரொலி எங்கணும் பரந்திருக்கும். பல்லாயிரக்கணக்கான ஞாயிறுகளும் மதிகளும் கொண்ட இப்பிரபஞ்சம் முழுதும், பேசுபவர்கள் ஒவ்வொருவர் வாயிலாகவும், 'தத்த்வம் அஸி' என்ற அந்தப் பேரொலி ஒரே குரலில் முழங்கும்.

செயல் முறை வேதாந்தம்—I

(1896–ஆம் ஆண்டு, நவம்பர்த் திங்கள். 10–ஆம் நாள் இலண்டன் மாநகரில் ஆற்றிய சொற்பொழிவு)

வேதாந்த தத்துவத்தின் செயல் முறைப் பகுதியைப் பற்றிச் சில மொழிகள் இயம்பும் படி யான் வேண்டப்பட்டுள்ளேன். முன்னரே உரைத்தது போல, அறிவுரை வழங்குவது சாலவும் நன்றே; ஆனால் அதனை எப்படி ஏற்று நடப்பது? அப்படி இயலாது போமாகில் வெற்று அறிவு வளர்ச்சிப் பயிற்சிக்குற்றதாய் அது அமையுமே தவிர வேறு வகையான சிறப்பு அதற்கு இருக்க இயலாது. எனவே, சமயத் தொடர்பான வேதாந்தம் என்பது, ஆர்வமிக்க செயல் முறையைப் பற்றியதாய்த் திகழ வேண்டியதாகும். செயல் முறை அதற்கு மிகவும் இன்றியமையாததே. நம் வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் நாம் அதனை ஏற்று அதை உருவாக்க முயல வேண்டும். இது மட்டுமன்று, சமயத்திற்கும் உலக வாழ்க்கைக்கும் கற்பிக்கப்பட்ட போலி மாறுபாடு யாவும் மறைந்தாக வேண்டும். ஏனெனில், ஒருமைப் பாட்டையே—முழுதும் ஒரே உயிர் வாழ்வையே—வேதாந்தம் போதிக்கின்றது. சமயக் குறிக்கோள்கள் வாழ்க்கைத் துறையனைத்தையும் தழுவி நிற்கவேண்டும். நம் எண்ணங்களையெல்லாம் அவை ஊடுருவிச் செல்ல வேண்டும். மேன்மேலும் செயல் முறையில் அவை புகுதல் இன்றியமையாததாகும். நடைமுறைப் போக்கைப் பற்றிப் போகப் போக உங்களுக்கு விரித்து உரைப்பேன். ஆனால் இந்தச் சொற்பொழிவு அதற்கோர் அடிப்படை போல அமைந்துள்ளது. ஆகவே, நம் மனத்தைக் கொள்கைகளில் ஊன்றியே காட்டுக் குகைகளிலிருந்து நெருக்கடி மிக்க நீள் தெருக்களுக்கும், மாநகரங்களுக்கும் அவை எப்படிக் கொண்டு வரப்பட்டன என்பதைத் தெளிவுற நாம் துருவி ஆராய்வோம். இவற்றிற் காணும் சிறப்பு யாதெனில், இந்தக் கருத்துகள் யாவும் காட்டை நண்ணித் தவங்கிடந்ததால் கிடைத்தவையல்ல என்பதே. ஆனால் நாம் எதிர்பார்க்கிறபடி உலகச் சந்தடிகளில் இடையறுது ஈடுபட்டவர்கள், பாராளும் மன்னர்கள்—இவர்களிடமிருந்தே இவை வெளிவந்தவை.

சுவாமி விவேகானந்தர்

சுவேதகேது என்பான் ஆருணி என்ற முனிவரின் மைந்தன். ஒருகால் ஆருணி காடுறைந்தவராயிருக்கக் கூடும். சுவேதகேது காட்டிலே வளர்ந்து வந்தவன். அவன் பாஞ்சால நகருக்குச் சென்று பிரவாகண ஜைபலி என்னும் வேந்தனது அரசவையை அடைந்தான்.

மன்னன், "சீவன்கள் இறக்குங்கால் இவ்விடம் விட்டு எப்படி வெளியேறுகின்றன என்பதை நீர் அறிவீரோ?" என்று வினவினான்.

"அறிந்திலேன் மன்னரே."

"அவை எப்படி இவ்விடம் திரும்புகின்றன?"

"யான் அறியேன் அரசரே."

"தந்தையர் சென்ற வழிகளையும் கடவுளர் போகும் நெறிகளையும் நீர் உணர்ந்திருக்கின்றீரா?"

"யான் உணர்ந்திலேன், வேந்தரே."

அரசன் மேன்மேலும் பல கேள்விகளைத் தொடுத்தான். அவற்றுக்குச் சுவேதகேதுவால் விடையளிக்க இயலவில்லை.

"எதையும் நீர் அறிந்திலீர்," என்று அவனை நோக்கிப் பார்த்திபன் பகர்ந்தான்.

புதல்வன் தந்தையாரிடம் திரும்பிச் சென்றான். தந்தையார் தம்மாலும் இவற்றிற்கு விடை கூற இயலாதென்று உரைத்தார். இந்த வினாக்களுக்கு விடையிறுக்க அவர் விரும்பாதவரல்லர்; தம் மைந்தனுக்கு அறிவுரை வழங்க விழையாதவரல்லர். இவற்றைப் பற்றி அவரே ஏதும் அறியார். ஆகவே, அவர் அரசனை அணுகி இவ்விரகசியங்களைத் தெளிவுப் படுத்த வேண்டுமென்று இறைஞ்சினர். இவை இதுவரை வேந்தர்களால் மட்டுமே அறியப்பட்டிருந்தவையென்றும், மதக்குருமாருள் எவரும் இவற்றை அறியாரென்றும் மன்னன் மொழிந்தான். எனினும், அவர் அறிய விரும்பியதை அவருக்கு வழங்கத் தொடங்கினான். இந்த வேதாந்தத் தத்துவம் காடுகளில் உறைந்து தவமாற்றிப் பெறப்பட்டது மட்டுமன்று என்பதையும், இதன் சீரிய பகுதிகள் யாவும் வாழ்க்கையின் அன்றாட அலுவல்களில் ஆழ்ந்து கிடக்கும் அறிஞர்களாலேயே வெளிப்படுத்தப்பட்டவை என்பதையும் பல்வேறு உபநிடதங்கள் வாயிலாக நாம் அறிகின்றோம். பல கோடிக் கணக்கான மக்கள் மீது ஆட்சி

செலுத்திவரும் ஒரு தனிப்பட்ட வேந்தனைக் காட்டிலும் உலக அலுவல்களில் மிக்க பரபரப்புடன் ஈடுபடுகின்ற மனிதனை நாம் காண இயலாது; எனினும், பாராளும் மன்னர்களுட் சிலர் ஆழ்ந்த சிந்தனையினராய்த் திகழ்ந்திருக்கின்றனர்.

இந்தத் தத்துவம் செயல் முறைக்குக் கொண்டு வரப் பட வேண்டும் என்பதை இவை யாவும் எடுத்துக்காட்டுகின்றன. பகவற் கீதையைப் பலர் படித்திருக்கலாம். வேதாந்தத் தத்துவத்தைப் பற்றி நாம் பெற்றுள்ள உரைகள் யாவற்றிலும் தலை சிறந்ததாய் விளங்குவது இக் கீதையேயாகும். இதிலொரு வியப்புக்கு இடமுண்டு. இதன் காட்சி செருக்களத்தில் நிறுவப்பட்டுள்ளது. அங்கே தான் அருச்சுனனுக்குக் கண்ணபிரானுர் அறிவுரை வழங்கினுர். ஆர்வமிக்க செயலாற்றலே இதன் ஒவ்வோர் இதழிலும் மிளிரும் கொள்கையாகும். அச்செயல் என்றும் குலையாத அமைதியிலே தான் நிகழ வேண்டும். இதுதான் கருமத்தின் இரகசியமாகும், இதை அடைவதே வேதாந்தத்தின் குறிக்கோளாகும். வாளாவிருத்தல் என நாம் பொதுவாகப் பொருள் கொள்ளும் செயலாற்ருமை இந்தக் குறிக்கோளன்று என்பது திண்ணம். அப்படியிருக்குமாயின், நம்மைச் சுற்றியுள்ள சுவர்களும் சிறந்த அறிவாளிகளே. ஏனெனில், அவை செயலற்றவை. மண்ணுங்கட்டிகளும் மாசு தூர்களும் உலகிற் சிறந்த ஞானிகளாகி விடும், ஏனெனில், இவை செயலற்றவையே. உணர்ச்சிவிரைவுடன் இணைந்திருப்பதாலுங் கூடச் செயலாற்ருமை என்பது செயலாற்றலாகி விடாது. வேதாந்தத்தின் குறிக்கோள் உண்மையான செயலே. இந்தச் செயல் என்றும் அழியாத அமைதியுடன் கூடியிருத்தல் வேண்டும். எது நேர்ந்தாலும் குழம்பாத மனம் வேண்டும்; எதுவும் மனத்தின் சமநிலையை அசைக்கக் கூடாது. செயலிற் காட்டக்கூடிய இந்த நோக்கம் உயர்ந்தது என்பதை வாழ்க்கையின் அனுபவம் வாயிலாக நாம் காண்கிறேம்.

'வேலை செய்வதற்கென சாதாரணமாய் நாம் கொள்ளும் மனேவேகம் நம்மிடையில்லாது போகுமாயின், நாம் எப்படி வேலை செய்யக்கூடும்?' எனப் பலமுறை என்னைப் பலர்

கேட்டுளர். பல்லாண்டுகளுச்கு முன்னர் நானும் இப்படியே எண்ணியிருந்தேன். ஆனல் வயது முதிர முதிர, அனுபவம் வளரவே இது உண்மையன்று என்பதை அறிகின்றேன். மனவேகம் குறையக் குறைய வேலைத்திறன் நிறைந்துதான் வருகின்றது. அமைதி ஓங்க ஓங்க நாம் நலம் பெறுவோராகின்றோம்; நமது வேலைத்திறனும் மிகுதியாகின்றது. நமது உணர்ச்சிவேகத்தைக் கட்டவிழ்த்து விடுவோமாகில், அவ்வளவுக்கும் சக்தியை வீணுக்குவோம்; நரம்புகளைத் தளர்வுறச் செய்வோம்; மனத்தைக் கலவரப் படுத்திச் செயலாற்றலையும் குறைத்தவராவோம். செயலாற்றலாக வெளிப்படவேண்டிய சக்தி, எதற்கும் பயனற்ற வெற்றுணர்ச்சியில் வீணுக்கப்படுகிறது. மனம் மிக அமைதிகொண்டு ஒரு நிலைப்பட்டதாக இருக்கும்போதே அதன் ஆற்றல் முழுதும் நல்லுழைப்பாக செலவிடப் படுகிறது. உலகம் பெற்ற சீரிய செயலாளர்களது வாழ்க்கை வரலாற்றைப் படிப்பீர்களாகில், அவரனைவரும் வியக்கத்தக்க அமைதியுற்றவராயிருந்தனரென்று காண்பீர்கள். அவர்களது மனச் சம நிலையைக் கலைத்திட எதனுலும் இயலாது போயிற்றெனத் தோன்றும். இதனுலேதான் கோபங்கொண்ட ஒருவனுல் மிகுந்த அளவு வேலை செய்ய இயல்வதில்லை; எதனுலும் கோபமூட்டப் படாத ஒருவனே பலவற்றை நிறைவேற்ற வல்லவனுகிறுன். கோபத்திற்கோ பகைக்கோ வேறு எவ்வித உணர்ச்சி வேகத்திற்கோ இடங்கொடுப்பவன் பணியாற்ற இயலாது. அன்னுன் தன்னையே சிதைந்து போகும்படி செய்துகொள்ளுகிறுன். செயல் முறைக்காக எதுவும் அவன் ஆற்றுவதில்லை. அமைதி, மன்னிக்கும் இயல்பு, நிலைதிரியா நெஞ்சம், மனச் சம நிலை ஆகிய இவற்றைக் கொண்ட ஒரு மனிதனே பேரன்பிற்குத் தொழிலாற்றக்கூடும்.

வேதாந்தம் ஓர் இலட்சியத்தை அறிவுறுத்துகின்றது: நாம் செயல்முறை என்று நவில்கின்றேமே, கண்கூடாகக் காண்கின்றேமே—இதற்கு அப்பாலேதான் இலட்சியம் மிளிர்கின்றது. மனித இயல்பில் இரண்டு வகையான சார்புகள் உள்ளன. ஒன்று இலட்சியத்தை வாழ்வோடு இணைக்கப் பார்ப்பது; மற்றொன்று, வாழ்க்கையை ஒரு குறிக்கோளுக்கு உயர்த்துவது. இதைத் தெளிவுற அறிவது சாலச் சிறந்த

தாகும். முன்பு மொழியப்பட்ட சார்பு, நம்முடைய வாழ்க்கையைக் கவரக் கூடியதே. ஒரு வகையான பணிவைத்தான் நாம் செய்யக்கூடும் என்று நினைக்கின்றேன். அப்பணியில் பலவும் ஒருகால் தீயவையாயிருக்கலாம்; அல்லது ஒருகால் பலவற்றின் பின்னணியில் நின்று தூண்டுவது ஏதாவது ஓர் உணர்ச்சியாயிருக்கலாம். சீற்றமோ, பேராசையோ தன்னலமோ ஆகலாம். தன்னல மறுப்பு, தன்னல இன்பம் துறத்தல்—இவற்றை முதற்படியாகக்கொண்ட ஓர் இலட்சியத்தை அறிவுறுத்த ஒருவன் வருவனாயின், செயல் முறைக்கு ஒவ்வாதது என்று நான் கருதுவேன்; ஆனால், என் தன்னலக் கொள்கையோடு இணையக்கூடியதொன்றை என் முன் விவரிப்பானாகில், அதைக் களி நடனம் புரிந்து உடனே தாவிக்குதித்து ஏற்பேன்; அதுவே எனக்கேற்ற குறிக்கோள். 'சமய நூல் முறை' என்ற சொற்றொடரைப் பல்வேறு உருக்கொடுக்கும் வகைகளில் வழங்கக்கூடும்; செயல் முறை என்பதையும் அவ்வண்ணம் திரிக்கலாம். எனது சமய நூல் முறை உங்களுக்கு மாறுபட்டதாயிருக்கலாம்; செயல் முறையும் அத்தகையதேதான். 'நான் எதைச் செயல் முறை என்று இயம்புகின்றேனோ, அது ஒன்றே உலகில் செயல்முறையாகும்,' என்று நான் சாற்றுவேன். நான் ஒரு கடை வைத்திருக்கும் வாணிகனாயின், 'கடை வைத்து வாழ்வதொன்றே இந்தப் பாரில் செயல்முறைத் தொழில்,' என்று நான் கருதுவேன். நானொரு கள்வனாயின் களவாடுவதே செயல் முறைக்குகந்த வழி என்றும் மற்றவர் எவரும் செயல் முறையை ஓர்கிலர் என்றும் எண்ணுவேன். 'செயல் முறை' என்பதை நாம் விரும்புவனவும் ஆற்றக்கூடியனவுமான செயல்களைக் குறித்தே வழங்குகின்றோம் என்பதை இப்பொழுது நீங்கள் அறிந்தீர்களல்லவா? ஆகவே, வேதாந்தம் என்பது ஆர்வமிகச் செயற்படுவதையாயினும் வாழ்க்கையின் சிறந்த குறிக்கோள் என்ற பொருள் கொண்டே அது இலங்குகின்றது என்பதை நீங்கள் அறியவேண்டுகிறேன். எவ்வளவு உயர்ந்ததாயினும், அது உருவாக்க இயலாத இலட்சியம் அன்று என்பதை வேதாந்தம் விளக்குகின்றது. ஒரு குறிக்கோளாய் இருப்பதற்கு ஏற்றபடிதான் அது மிளிர்கின்றது. சுருங்கக் கூறுமிடத்து, அதன் குறிக்கோள்

'நீயே கடவுள்' என்பதே, அதுதான் நீ. இதுதான் வேதாந்த சாரம். பல கிளைகளைக் கொண்டு பார்ப்பினும், தருக்க அறிவாகிய சிலம்பம் பயின்றாலும், அது உணர்த்துவது யாதெனில் மனித ஆன்மா தூய்மையானது, அது எல்லாம் அறிந்தது, என்னும் உண்மையே. இதை நீங்கள் அறிவீர்கள். ஆன்மாவின் தொடர்புபற்றி பிறப்பும் இறப்பும் போன்ற குருட்டு நம்பிக்கைகள் யாவும் முழுப் பிதற்றலென்பதை நீங்கள் காண்கிறீர்கள். ஆன்மா என்றும் பிறந்ததுமில்லை; என்றும் இறந்ததுமில்லை. 'நாம் மாளப்போகின்றோம்; நாம் காவுக்கு அஞ்சுகின்றோம்,' என்று சொல்லப்படும் கருத்துகள் யாவும் வெற்று மூட நம்பிக்கைகளே. நம்மால் இதைப் புரியக்கூடும் அல்லது அதைச் செய்ய இயலாது என்பன போன்ற எண்ணங்களும் குருட்டுச் சிந்தனைகளே. நம்மால் அதையும் செய்யக்கூடும். மானிடர் முதன் முதலாகத் தன்னம்பிக்கை கொண்டவராயிருத்தல் வேண்டுமென்பதையே வேதாந்தம் ஓதுகின்றது. தனக்குப் புறம்பேயுள்ள உருவக் கடவுளை நம்பாத ஒருவனை நாத்திகன் என எப்படிச் சில சமயங்கள் சாற்றுகின்றனவோ, அப்படியே தன்னம்பிக்கை அற்றவனை நாத்திகன் என நவில்கின்றது வேதாந்தம். நமக்கே சொந்தமான நமது ஆன்மாவின் ஏற்றத்தில் நம்பிக்கையற்றிருத்தலையே வேதாந்தம் நாத்திகம் என்கிறது. பலருக்கு இது ஒரு பயங்கரக் கருத்தாகவே தோன்றக்கூடும். இத்தகைய வாழ்க்கைக் குறிக்கோளை இன்றும் அடையமுடியாதென்றே நம்முள் பலரும் எண்ணுகிறோம்; ஆனால் இதனை அடைய ஒவ்வொருவராலும் இயலுமென்றே வேதாந்தம் அறுதியிடுகிறது. இந்தக் குறிக்கோளை உருவாக்கிக் கொள்வதைத் தடுக்க எந்த ஆடவனுலோ பெண்ணாலோ, குழவியாலோ மற்றும் இனம், பாலென்னும் பேதங்களாலோ,வேறெதனாலோ இயலாது. ஏனெனில் இது ஏற்கெனவே உருவாக்கப்பட்டதே என்பதையும் முன்னமே இங்கிருப்பதே என்பதையும் வேதாந்தம் அறிவிக்கிறது.

இந்தப் பிரபஞ்சத்திலுள்ள சக்திகள் யாவும் ஏற்கெனவே நமக்குரியவையே. நாமே நம் கண்களைக் கைகளால் மூடிக் கொண்டு, 'இருண்டு காண்கிறதே!' எனக் கதறுகிறோம். நம்மைச் சுற்றி எம்மருங்கும் இருட்டே இல்லை என்பதை

அறியுங்கள். கண்ணை மூடும் கைகளை அகற்றுங்கள். பண்டு முதல் இருந்துவரும் ஒளி உடனே காணப்படும். இருளென்பதே என்றும் இருந்ததில்லை; பலவீனம் என்பதே என்றும் இருந்ததில்லை. அறிவிலிகளாகிய நாமே, 'நாம் திறனற்றவர்கள்!' என அழுகிறோம். அறிவிலிகளாகிய நாமே, 'நாம் தூய்மையற்றவர்கள்!' எனக் கண்ணீர் உதிர்க்கின்றோம். எனவே வாழ்க்கைக் குறிக்கோள் செயல் முறைக்கு ஏற்றதாய் இருப்பதுடன், எக்காலும் அப்படியே இருந்து வருவதென்றே வேதாந்தம் வற்புறுத்துகிறது. நமது சொந்த இயல்பே அத்தகைய இந்த வாழ்க்கைக் குறிக்கோள், இந்த மெய்ப்பொருள். நீங்கள் காணும் மற்றைய யாவும் பொய்யே, மெய்யில்லாதவைகளே. "நான் சாகும் ஓர் அற்பப் பிராணி," என்று நீங்கள் சொல்லும்போதே உண்மையல்லாத ஒன்றைப் புகலுகின்றீர்கள்; நீங்களே உங்களைப் பொய்யர்கள் ஆக்கிக் கொள்கிறீர்கள்; ஏதோ கொடியதும் திறனற்றதும் இழிவானதுமான ஒன்றைப் போல நீங்களே உங்களைக் கண் கட்டிக் காண்கிறீர்கள்.

பாவமென்பதையே வேதாந்தம் ஒப்புவதில்லை. அது ஒப்புவது, தவறு என்பதைத்தான். 'நான் திறனற்றவன், நான் பாவி, இழிவானதோர் அற்பப் பிராணி, இதைச் செய்யவோ அதைச் செய்யவோ திறனற்றவன்,' என்று சொல்வது தான் மாபெருந் தவறு என்பதை வேதாந்தம் வெளியிடுகிறது. உங்களை இறுக்கிக் கட்டிவரும் சங்கிலித் தொடருடன் மீண்டுமொரு சங்கிலிக் கண்ணியையே நீங்கள் இம்மாதிரி நினைக்கும் ஒவ்வொரு சமயத்திலும் சேர்த்துக் கொள்கிறீர்கள். உங்களது ஆன்மாவின் மீது மீண்டுமொரு கண் கட்டி மயக்கப்படையை நீங்களே விடுவது போல நடந்து கொள்கிறீர்கள். எனவே தான் திறனற்றவன் என எண்ணுபவன் எவனும் தவறிழைப்பவனே; தான் தூய்மையற்றவன் எனக் கருதும் எவனும் தவறிழைப்பவனே; அன்னோன் ஒரு தீய கருத்தையே உலகில் நிறுவிச்செல்கின்றான். இந்த நிகழ்கால வாழ்க்கையை, கண் கட்டிக் காணும் நமதென்ற வாழ்க்கையை, வாழ்க்கைக் குறிக்கோளான இலட்சியத்துடன் சமரசப் படுத்தும் முயற்சி எதுவும் வேதாந்தத்தில் இல்லை யென்பதை நாம் என்றும் மனத்திற் கொண்டிருக்க

வேண்டும். இப்பொய்யான வாழ்க்கை தொலைய வேண்டும்; என்றும் இருந்து வரும் மெய்யான வாழ்க்கை தன்னை வெளிப்படுத்தவேண்டும், இதுவே ஒளியுறத் திகழவேண்டும். எவனும் மேலும் மேலும் தூய்மையுற்று வருகிறுன் என்பதே இல்லை; மேலும் மேலும் தூய்மை வெளிப்படுத்தப் படுவது தான் உண்மை. திரை வீழ்கின்றது, ஆன்மாவின் இயல்பான தூய தன்மை தன்னை வெளிப்படுத்திக் கொள்ளத் தொடங்குகின்றது. முடிவிலாத் தூய்மை, சுயேச்சை, அன்பு, சக்தி ஆகிய அனைத்தும் ஏற்கெனவே நம்முடையனவே.

நடுக்காடுகளிலோ குகைகளிலோ மட்டு மன்றி, வாழ்க்கையின் எவ்வகைத் துறைகளிலும் துலங்குவோர்களுக்குங் கூட இது செயல் முறைக்கானதே என்பதை வேதாந்தம் வெளியிடுகிறது. இந்த உண்மைகளைக் கண்டறிந்தோர் குகைகளிலோ காடுகளிலோ வாழ்ந்திருந்தவர் அல்லர் என்பதையும், வாழ்க்கையின் சாதாரண அலுவல்களில் ஈடுபட்டிருந்தவர் என்பதையும் மிக மிக நெருக்கடி வாழ்வு நடத்தியவர், சேனைத் தலைமை வகித்தவர், அரியணை அமர்ந்திருந்தோர், பல கோடி மக்களின் பாதுகாப்பை ஏற்று நின்றவரே என்பதையும் நாம் அறிகிறோம். அரசனென்பான் வெறும் பொம்மை போல் இருந்துவரும் இக்காலம் போன்றதன்று அக்காலம் : ஏகாதிபத்திய முடிமன்னர் வாழ்ந்த காலம் அது. அப்படியிருந்தும் இக்கருத்துக்களைப் பற்றிச் சிந்திக்கவும் இவற்றைச் செயல் முறைக்கு ஏற்றவை ஆக்கவும், மனித இனத்திற்கு இவற்றினை அறிவுறுத்தவும் அவர்கள் ஓய்வு கண்டிருந்தனர். அவர்களது வாழ்க்கையோடு ஒப்பிட்டுக் காணும்போது, அவகாசமே நிறைந்ததெனச் சொல்ல வேண்டிய வாழ்க்கை நடத்தும் நமக்கு இது எத்தனை செயல் முறைக் கேற்றதாக வேண்டும்? செய்வதற்கு மிகச் சிறிதளவே உள்ளவராய் காலமெல்லாம் அவகாசம் கொண்டவராய் இருந்துவரும் நம்மால் இது செயல் முறை ஆக்கப்படவில்லையென்ருல், அது நமக்குப் பெருத்த அவமானமே. புராதன சர்வாதிகார மன்னர்களின் தேவையுடன் ஒப்பிட்டு நோக்கினுல் என் தேவைகள் இல்லாதவையே. மாபெரும் படையை நடத்தி, குருட்சேத்திரப் போர்க்களத்

தில் நின்றிருந்த அருச்சுனனது தேவைகளோடு ஒப்பிட்டால் என் தேவைகள் இல்லாதவையே. ஆயினும் அந்தச் செருக்கள ஓலங்களுக்கும் கொந்தளிப்புகளுக்கும் இடையே, மிகமிகச் சிறந்த தத்துவங்களைப் பற்றி ஆய்வதற்கும் அவற்றை வாழ்க்கை அனுபவம் ஆக்கிக் கொள்வதற்கும் கூட அவனால் பொழுது காண முடிந்தது. அதை விட அலுவல்கள் குறைந்ததும் சுலபமானதும், சுகமானதுமான இந்த நமது வாழ்க்கையில் அவ்வளவாவது செய்ய நம்மால் இயல வேண்டாவா? அவகாசத்தை நல்லவைகளுக்காகப் பயன் படுத்திக்கொள்ள நாம் உண்மையில் விரும்புவோமாகில், நாம் கொண்டுள்ளதாக நினைப்பதைவிட அதிக அவகாசமே இங்குள்ள நாமனைவரும் கொண்டுள்ளோம். நாம் மட்டும் விரும்புவோமாகில், நமக்கிருக்கும் சுயேச்சை காரணமாய் இந்த வாழ்க்கையிலேயே இரு நூறு இலட்சியங்களை நிறைவேற்றிக்கொள்ளலாமே! ஆனால் இலட்சியங்களை நடமாட்ட நிகழ்ச்சியின் மட்டத்திற்கு இழிவுபடுத்தலாகாது. நமக்கு நேரிடுபவைகளில் மிக அருவருக்கத்தக்கது யாதெனில், நம் தவறுகளுக்காகச் சாக்குப்போக்குச் சொல்லிவைத்தும் நம் பொருளற்ற தேவைகளுக்கும் வீண் விருப்பங்களுக்கும் சிறப்பான காரணங்களை முன் கொணர்ந்தும் மானிட உருவிற் பலர் நம் முன்னே தோன்றுவது தான். இவர்கள் காட்டும் குறிக்கோளே நமக்குத் தேவையாக நாம் கருதுகிறோம். ஆனால் அது உண்மையன்று. அத்தகையது எதையும் வேதாந்தம் போதிக்கவில்லை. நடமாட்ட நிகழ்ச்சி வாழ்க்கைக் குறிக்கோளுடன் ஒருங்குபடுத்தப்பட வேண்டும்; தற்கால வாழ்க்கையை நிரந்தர வாழ்க்கையுடன் இணையச் செய்ய வேண்டும்.

ஏனெனில் வேதாந்தத்தின் ஒரே நடுநாயகக் குறிக்கோள் இந்த ஒருமைப்பாடுதான். இதை நாம் என்றும் நினைவு கூரவேண்டும். எதிலும் இரண்டு என்பதே இல்லை, ஈருயிர்கள் என்பதில்லை; ஈருலகங்களுக்கான இருவித வாழ்க்கை என்பதும் இல்லை. முதன்முதலில் வேதங்கள் சொர்க்கங்களைப் பற்றியும் அவை போல்வன பற்றியும் கூறிவரலாம்; ஆனால் பிறகு, தமது தத்துவத்தின் உன்னதக் குறிக்கோள்களை அணுகுகையில், இவற்றை யெல்லாம்

அவை ஒதுக்கி விடுகின்றன. இருப்பது ஒரே வாழ்க்கை தான்; ஒரே உலகு, ஒரே இருக்கைதான். அனைத்தும் அந்த ஒன்றே. மாறுபாடு முழுவதும் அளவு முறையதே யொழிய இனம் பற்றியதன்று, நம் வாழ்வுகளின் வேறுபாடு இனத்தைப் பற்றியதன்று. விலங்குகள் மனிதரினின்றும் வேறுபட்டவையாக அவற்றினைக் கடவுள் படைத்துள்ளார் என்றே கொள்ளும் கருத்துகள் யாவற்றையும் வேதாந்தம் முற்றும் மறுக்கிறது.

நல்லெண்ணத்துடனே சிலர் விலங்கறுவைத் தடுப்புச் சங்கமொன்று நிறுவினர். அதன் உறுப்பினர் ஒருவரை யான், "நண்பரே, உணவுக்கென விலங்குகளை வதைப்பது மிகவும் நியாயமென்கிறீர்கள். ஆனால் விஞ்ஞான சோதனைக் கென இரண்டொரு விலங்குகளையறுப்பது மட்டும் தகாது என்கிறீர்களே, அஃதேன் ?" என்று வினவினேன். "விலங்கு களை அறுப்பது மிகவும் கொடுமையே, ஆயினும் நாம் உண்ணவே அவை நமக்கு அளிக்கப்பட்டுள்ளன" என்று அவர் விடையிறுத்தார். ஒருமைப்பாடென்பது விலங்குகளை யும் தழுவியது தான். மானிடன் உயிர் சாகாததாயின் விலங்கின் உயிரும் அத்தகையதே. மாறுபாடு அளவு முறையிலேயே தவிர இனம் பற்றியது அன்று. அற்பப் புழு வும் நானும் ஒரே மாதிரிதான்; மாறுபாடு அளவு முறையி லேயே. உயர்தர உயிர்நோக்கில் இவ்வித மாறுபாடுகள் அனைத்தும் மறைந்தே போகும். புல்லுக்கும் செடிக்கு மிடையே பல மாறுபாடுகளை ஒருவன் காணலாம். ஆயி னும் மிக உயரமான இடமொன்றில் ஏறிக் காண்பீராகில் புல்லும் பெருத்த மரமும் ஒன்றுபோலவே தோன்றும். எனவே மிகச் சீரிய குறிக்கோளின் நோக்கில் அற்ப விலங் கும் மிகச் சிறந்த மனிதனும் ஒத்தவரே. கடவுள் எனு மொருவர் இருப்பதாக நீங்கள் நம்புவீர்களாயின் விலங்கு களும் மிக உயர்ந்த பிறவிகளும் ஒரு தன்மையாகவே இருத்தல் வேண்டும். மானிடரென்று தம் மக்களிடம் ஒரு தலைப்பட்சம் கொண்டும், வெறும் விலங்குகளெனப் படும் தம் குழவிகளிடம் வன்கண்மை காட்டியும் வரும் கடவுள் பேயை விடக் கொடியவரே. அத்தகைய கடவுளை வழிபடுவதை விட நூறு தடவை நான் உயிரிழக்க சித்தமா

யிருக்கின்றேன். என் வாழ்க்கை முழுவதும் அத்தகைய கடவுளுடன் போராடியே நிற்பேன், ஆனால் மாறுபாடு கிடையாது; இருப்பதெனக் கூறுவோர் பொறுப்பற்றவர், கல் நெஞ்சம் கொண்ட அறிவிலிகள். அனுபவசாத்தியம், எனும் சொற்றொடர் தவறான முறையில் வழங்குவதற்கு இஃதோர் எடுத்துக் காட்டு. நான் புலாலுணவு முழுவதும் மறுக்காமல் இருக்கலாம்; ஆனால் வாழ்க்கைக் குறிக்கோளை அறிந்தவனே. புலால் உண்ணுங்கால் அது தவறே என்பதை நான் அறிவேன். குறித்த சில சந்தர்ப்பங்களில் அவ்வாறு அருந்த அவசியம் ஏற்படினும், அது கொடிதே என்று அறிவேன். எனது குறிக்கோளை நடமாட்ட நிகழ்ச்சியின் மட்டத்திற்கு இழிவு படுத்தி விட்டு, அத்தகைய திடனற்ற செயலுக்காக நான் மன்னிபபுக் கோரல் தகாது. புலால் உண்ணல் ஆகாதென்பதும் எவ்வுயிர்க்கும் தீங்கிழைக்கக் கூடாதென்பதுமே குறிக்கோள். எல்லா விலங்குகளும் என் உடன்பிறப்பே; நீங்களும் அவற்றை உங்கள் உடன்பிறப்பெனக் கருதுவீராகில், மானிட சகோதரத்துவம் மட்டுமன்று, எல்லா ஆன்ம சகோதரத்துவமும் ஏற்படும் பாதையில் சிறிதளவு முன்னேறியவர்கள் ஆவீர்கள்! இதெல்லாம் குழவியின் விளையாட்டுப் போலவேயாம். இது பலரும் ஒப்பக் கூடியதன்று என்பதை நீங்கள் சாதாரணமாக அறிந்திருக்கலாம். ஏனெனில் நடமாட்டக் காட்சியைக் கைவிட்டு இலட்சிய மொன்றை நோக்கி மேலேற அது அறிவுறுத்துகிறது. ஆனால் நிகழ்கால நடவடிக்கையுடன் சமரசம்கொண்டதோர் உபதேசத்தைக் கொணர்வீர்களாகில் அதை அவர்கள் முற்றிலும் செயல் படுவதென்றே மதிப்பார்கள்.

மனிதரியல்பில் இத்தகைய திடமான நிலைமாறுமை நோக்கே இருந்துவருகிறது. ஓரடி முன்னேற நாம் விரும்புவதில்லை. பனியில் தோய்வோர்களைப்பற்றிப் படிப்பது போன்றே நான் மனித இனத்தைப் பற்றி எண்ணுகிறேன், அவர்கள் துயில்கொள்ளவே விரும்புவதாகக் கூறுகிறார்கள். அவர்களைப் பனியை விட்டு வெளியில் இழுக்க முயன்றால் "என்னைத் தூங்க விடுங்கள். ஆ! பனிக்கட்டி மீது படுத்துறங்குவது எவ்வளவு இன்பமாயிருக்கிறது," என்கிறார்கள். அவ்வுறக்கத்தில் அவர்கள் இறந்து போகின்றனர்.

இங்ஙனமே உள்ளது நமது இயல்பும். நமது வாழ்க்கை முழுவதும் நாம் இப்படியே செய்து வருகின்றோம். உள்ளங் காலுக்கு மேல் பனியால் சிலிர்த்துப் போகிறது, ஆயினும் அங்கே உறங்கிக் கிடக்கவே விரும்புகிறோம். ஆகவே நீங்கள் வாழ்க்கைக் குறிக்கோளை அடையவே போராடிச் செல்லவேண்டும். அந்த இலட்சியத்தை உமது மட்டத் திற்கு கீழிழுத்து, மிக உயர்ந்த குறிக்கோளை ஏற்காததொரு மதத்தை உபதேசிக்க எவனுவது முன் வந்தால் அவன் பேச்சை மதியாதீர்கள். என்னைப் பொறுத்த வரையில் அஃதோர் செயல்முறைக்கியையாத மதமே. விழுமிய குறிக் கோளைக் காட்டும் மதமொன்றை உபதேசிக்க ஒருவன் வந் தால் அவனை மதிக்க நான் சித்தமாயுள்ளேன். இந்திரிய சுகத் தையும் வீண் புலநுகர்ச்சியையும் பற்றிப் பரிந்து பேசு வோரிடம் விழித்தேயிருங்கள். இவ்வழி உபதேசிக்க எவ ரேனும் வருவாராகில், அது கேட்டு நடக்கும் நாம் ஐம்புலன் களுக்கு வசப்பட்ட மண்ணுங்கட்டிகளாகவே நம்மை ஆக்கிக் கொள்வோம்; எக்காலும் முன்னேற மாட்டோம். இத்தகையவற்றுள் பலவற்றைக் கண்டுள்ளேன். உலக அனுபவம் சிறிதளவு எனக்குண்டு. எனது நாடு காளான் களைப் போல் மதசமயங்கள் வளர்ந்துவரும் பூமியே. ஆண்டுதோறும் புதுப் புது மதங்கள் எழும். ஆனால் ஒன்று மட்டும் கவனித்துள்ளேன்; ஊனுடல் மனிதனை உண்மை மனிதனுடன் ஒன்றச் செய்ய விரும்பாதவனே முன்னேற்றம் காண்பவன். ஊனுடலை, வீண் பெருமைகளைச் சிறந்த இலட்சியங்களுடன் ஒன்றச் செய்வதும், கடவுளை மானிடன் மட்டத்திற்கு இறக்குவதும் போன்ற பொய்க் கருத்துகள் உள்ள இடமெல்லாம் சீர்கேடே உண்டாகிறது. உலகப் பற்றுகளுக்கு அடிமைப்படும் மட்டத்திற்கு மனிதனை இழிவு படுத்தாமல் கடவுள் பதவிக்கே அவனை உயர்த்த வேண்டும்.

இதனுடன் இந்தப் பிரச்சினையை மற்றொரு நோக்கிலும் காண்பதவசியம். நாம் மற்றவர்களைப் பழித்து இகழலாகாது. நாம் அனைவரும் ஒரே குறிக்கோளை நோக்கியே போகிறோம். பலவீனத்திற்கும் பலத்திற்குமான மாறுபாடு அளவுமுறை யதே ; நலத்திற்கும் தீமைக்குமான வித்தியாசம், சொர்க்கத்

திற்கும் நரகத்திற்குமான பேதம் அளவு முறையதே ; வாழ்வுக்கும் சாவுக்குமான மாறுபாடு அளவு முறையதே. இவ்வுலகிலுள்ள எல்லா மாறுபாடுகளும் அளவு முறை பற்றியவையே தவிர, இனமுறை பற்றியது எதுவுமே இல்லை. ஏனெனில் ஒருமைப்பாடே அனைத்திற்குமான மர்மம். எண்ணமாகவோ உயிராகவோ, ஆன்மாவாகவோ, தம்மை வெளிப்படுத்திக் கொள்ளும் யாவும் ஒன்றே. இவற்றின் பேதம் அளவு முறையிலேதான். எனவே நமக்கு சமமான அளவு வளர்ச்சி யுருதவர்களைப் பழித்து இழிவு படுத்த நமக்கு உரிமையில்லை. எவரையும் பழியாதீர்கள். உங்களால் கை கொடுத்து உதவக்கூடுமானல் உதவுங்கள் ; இயலாவிட்டால் கைகளைக் கட்டிக்கொண்டு தூரநின்று, சகோதரர்களுக்கு வாழ்த்துக்கூறி, அவர்கள் வழியே அவர்களைப் போக விடுங்கள். இழிவு படுத்துவதும் பழிப்பதும் செயல் புரிவதற்கு நேர்வழியல்ல. செயலாற்றலென்பது அம்முறையில் நடைபெறுவதன்று. பிறரைப் பழிப்பதால் நாம் நம் சக்திகளைச் சிதைத்துக் கொள்ளுகிறோம். பழிப்பதும் குற்றங் காண்பதும் நம்முடைய சக்திகளைச் செலவிடும் பயனற்ற முறையே. அனைவரும் ஒரே மெய்ப் பொருளைக் காண்கின்றனர் என்பதும் ஒரே குறிக்கோளை நண்ணுகின்றனர் என்பதும், நம்முடைய மாறுபாடுகள் யாவும் தோற்ற அளவிலேயே உள்ளன என்பதும் முடிவில் நாம் உணர்வோம்.

பாவம் என்ற கருத்தை எடுத்துக் கொள்வோம். இது பற்றிய வேதாந்தக் கருத்தை இப்பொழுதுதான் உங்களுக்கு எடுத்துரைத்தேன். மனிதன் ஆவி என்பதுதான் இதன் மற்றொரு கருத்தாகும். இரண்டும் அநாதியாகக் குறிப்பதொன்றே. ஆனலொன்று உள்ளதைக் கருதுகின்றது, மற்றொன்று இல்லாததைக் கருதுகின்றது. ஒன்று மனிதனின் வலிமையையும் மற்றது அவனுடைய வலியின்மையையும் அறிவுறுத்துகின்றன. பலவீனம் இருக்கக் கூடுமென்றே வேதாந்தம் கூறுகின்றது. ஆனல் அதை மதியாதீர்கள். நாம் ஓங்கி வளர விரும்புகின்றோம். மானிடன் இறந்த அக்கணமே பிணியும் அறியப்பட்டதே. அவனவன் நோயை அவனவனே அறியக்கூடும். நம் பிணியை நமக்குக் குறிப்பிட வேறெவரும் தேவையில்லை. ஆனல், நாம் நோயுற்றவரே

என்று இடையருது சிந்தித்தல் நம்மைக் குணப்படுத்தாது; மருந்து இன்றியமையாததே. புறத்திலுள்ள எதையும் நாம் மறந்துவிடலாம். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுபவர்களாக வெளியுலகிற்கு விளங்கலாம். ஆனால் நம் நெஞ்சினுள்ளே நம் குறைபாடுகளை நாம் நன்கறிந்தவர்களே. வேதாந்தம் விவரிப்பது இதுதான்: குணக்கேடுகளைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருப்பது நமக்குத் துணைபுரியப் போவதில்லை. பலத்தை ஊட்டுங்கள். பலமென்பது குறை பாடுகளைப் பற்றி எப்போதும் எண்ணுவதால் ஏற்படாது. வலிமையின்மைக்கான மருந்து வலியின்மையைக் குறித்து சிந்தித்துக் கிடப்பதன்று; திறனையே நினைத்து நிற்பதே. அவர்களுக்குள்ளேயே இருந்துவரும் திறனைப்பற்றி மானிடர்க்கு எடுத்தோதுங்கள். அவர்கள் பாவிகளென அவருக்குக் கூறுவதைத் தவிர்த்து, அதற்கு நேர் எதிர்கட்சி யையே வேதாந்தம் ஓதுகிறது: "நீவிர் பரிசுத்தரே, பூரணரே; பாவமென்பது உங்களுக்கு உரியதன்று." பாவங்கள் அதன் தாழ்ந்த தோற்றங்களே. உங்கள் ஆன்மாவின் உயர்ந்த இயல்பை வெளிப்படுத்துங்கள். அதுதான் நினைவு கொள்ள வேண்டுவது. நாமனைவரும் அதைச் செய்யக் கூடும். "முடியாது" என என்றும் மொழியாதீர்கள்; "என்னால் ஆகாது," என என்றும் இயம்பாதீர்கள். நீங்கள் முடி வில்லாதவர்கள். உங்கள் இயல்புடன் ஒப்பிடின் காலமும் இடமும்கூட எதிர் நிற்கக் கூடாதவையே. உங்களால் எதை யும் ஆற்றக்கூடும்; யாவற்றையும் முடிக்கக்கூடும்; நீங்கள் எல்லாம் வல்லவர்களே.

இவையெல்லாம் நன்னெறிக் கொள்கைகள். நாம் சிறி தளவு கீழிறங்கி விவரங்களை விரித்துக் கூறுவோம். நம் தினசரி வாழ்க்கை, நகர வாழ்ககை, சிற்றூர் வாழ்க்கை, நாட்டு வாழ்க்கை, மற்றும் ஒவ்வொரு நாட்டாரின் குடும்ப வாழ்க்கை—இவற்றை யெல்லாம் வேதாந்தம் எப்படி ஏற்றிச் செல்வதெனக் காண்போம். ஏனெனில் மானிடன் எங்கிருப்பினும் எந்நிலையில் நிற்பினும், சமயம் அவனுக்கு உதவாது போனால், அதனால் எவ்விதப் பயனும் இல்லை; தேர்ந்தெடுத்த சிலருக்கான அறிவுரையாகவே அது இருக் கும். மதமென்பது மனித இனத்திற்கு உதவுவதாயின்,

அவன் அடிமையாகவோ சுதந்திரனுகவோ, இழிவில் ஆழ்ந்த வனுகவோ அல்லது தூய்மையில் உயர்ந்தவனுகவோ எங் கிருப்பினும் அவனுக்குதவி புரிய ஆயத்தமாக இருத்தல் வேண்டும்: வேதாந்தத்தின் கொள்கைகள் அல்லது மதத் தின் குறிக்கோள்—எந்தப் பெயர் கொண்டு நீங்கள் அதை அறியினும் அது இப்பெரும் பணியை முடிக்கவல்ல தம் திறன் காரணமாகவே நிறைவுறுவதாகும்.

நம்மிடம் நாம் நம்பிக்கை வைத்திருப்பது நமக்குப் பேருதவி புரிவது. தன்னம்பிக்கையைப் பரக்க உபதேசித்து அதைச் செயல் முறைக்குக் கொணர்ந்தால் நம்மிடை உலவும் தீமைகளும் துயர்களும் பெரும்பாலும் மறைந்து போகுமென நான் கருதுகிறேன். மனிதஇன வரலாற்றில் ஆடவர் பெண்டிருட் சிறந்து விளங்குவோர் அனை வருடைய வாழ்க்கையிலும் ஒன்றைவிட வேருென்று மிகுதி யான சக்தி வாய்ந்ததெனக் காணப்படுமாகில் அது தான் தன்னம்பிக்கை சக்தி. பிறந்தது முதல் நாம் சிறப்புடன் விளங்கப் போகிருேம் என்ற உணர்ச்சியை வளர்ப்ப தாலேயே சிறப்புற இயலும். எத்தனை தாழ்ந்த நிலையில் ஒருவன் தள்ளப்பட்டும் நம்பிக்கை யிழந்த வெறி காரண மாகவே மேலெழவல்ல வழிவு மார்க்கம் ஒன்று அவனுக்குத் தோன்றி, அவனும் தன்னம்பிக்கை கொண்டவனுகும். காலம் கிட்டியே தீரும். எனினும் முதலிலிருந்து இதனை நாம் அறிந்திருப்பது நலம். தன்னம்பிக்கையோடு இருக்க இத் தகைய கசப்பான அனுபவங்கள் நமக்கெதற்கு? ஆகவே மனிதனுக்கும் மனிதனுக்குமிடையே உள்ள பேதங்கள் அனைத்தும் தன்னம்பிக்கை இருப்பதோ அல்லது இல்லா திருப்பதோ எனும் காரணம் பற்றி நிகழ்வதாகக் காண் கிருேம். தன்னம்பிக்கையே அனைத்தையும் சாதிக்கவல்லது. என் வாழ்க்கையில் இதன் சிறப்பை நானே உணர்ந்திருக் கிறேன். எனக்கு வயது முதிர முதிரத் தன்னம்பிக்கை வலுத்தே வளர்ந்து வருவதாகும். தன்னம்பிக்கை யற்றவனே நாத்திகன். கடவுள் நம்பிக்கை யில்லாதவனைத்தான் பழங் கால மதங்கள் நாத்திகன் எனக் கூறிவந்தனர். புதுமதமோ தன்னம்பிக்கை யற்றவனே நாத்திகன் என்கின்றது. ஆனல் இந்நம்பிக்கை தன்னலம் பற்றியதாய் இருத்தலாகாது. ஏன்

எனில் ஒருமைப் பாட்டையே வேதாந்தம் அறிவுறுத்துகிறது. இதன் பொருள், நீங்களே அனைத்துமாதலால் அனைத்திலும் நம்பிக்கை கொள்வதே. உங்களிடம் நீங்கள் அன்பு கொள்வதென்பது அனைத்திலும்: விலங்குகளிலும் மற்ற எல்லாவற்றிடமும் அன்பு கொள்வதே. ஏனெனில் அனைத்தும் ஒன்றே. இதுவே உலகை மேம்படுத்தும் விழுமிய கொள்கை. நான் இதைத் திண்மையாக நம்புகிறேன். "என்னைப் பற்றியவை அனைத்தும் எனக்குத் தெரியும்," என உண்மையுடன் கூறவல்லவனே மிகச் சிறந்தவன். வெளிக் காணப்படும் அந்த உங்கள் உடற்சட்டத்திற்குப் பின்னே எவ்வளவு சக்தி, எத்தனை வகைத் திறன்கள், வேகங்கள் இன்னும் மறைந்துள்ளன என்பதை நீங்கள் அறிவீர்களா? மனிதனிடத்துள்ள மனித இயல்பனைத்தையும் அறிந்த விஞ்ஞானியுமுளனோ? மானிடன் இங்குதித்த பின் கோடிக்கணக்கான ஆண்டுகள் கழிந்து போயின; ஆயினும் அவனது திறன்களில் மிகச் சிறிய அணு அளவிலேயே வெளிப்படுத்தப் பட்டுளது. எனவே சக்தியற்றவரென நீங்கள் உங்களைச் சொல்லிக்கொள்ளக் கூடாது. வெளிப் படையாகத் தோன்றும் இந்த இழிவுகளுக்கெல்லாம் அடிப் படையாக என்னென்ன சாத்திய சக்திகள் ஆழ்ந்துள்ளன என்பதை நீங்கள் எப்படி அறிவீர்கள்? நீங்கள் அறிந்துள்ளது உங்கள் உட்புறத்திலுள்ளதில் மிகச் சிறிதளவே. முடிவிலாத் திறனும் நல்வாழ்த்துகளும் உங்களுக்குள்ளே நிறைந்த கடலாக உளது.

"முதன் முதலாக இந்த ஆன்மாவைப் பற்றிக் கேட்க வேண்டும்." நீங்கள் அந்த ஆன்மாவென்றே அல்லும் பகலுமாகக் கேட்டு வாருங்கள். அதுவே உங்கள் இரத்தக் குழாய்களிற் புகும்வரை, உங்கள் ஒவ்வொரு சொட்டு உதிரத்திலும் சிலிர்க்கும் வரை, உங்கள் ஊனிலும் எலும்பிலும் ஊறும் வரை அதையே இரவுபகலாக உங்களுக்குள்ளேயே உருப் போட்டிருங்கள். "நானே பிறப்பிலி, இறப்பிலி, பேரின்பம் படைத்தோன், யாவுமறிந்தோன், எல்லாம்வல்லவன், என்றும் ஒளி திகழும் ஆன்மா" என்ற இந்த ஒரே இலட்சியங் கொண்டதாகவே உடல் நிறைந்திருக்கட்டும். இரவுபகலாக அதையே எண்ணியிருங்கள்; உங்கள் உயிரோடொன்றி

விடும் வரை அதையே சிந்தித்திருங்கள். அதைத் தியானம் பண்ணினால் அதிலிருந்து செயலாற்றல் வெளிப்படும். "இதய நிறைவு காரணமாக வாய் பேசுகிறது," இதய நிறைவாலேயே கையும் செயல் புரியும்; செயலாற்றல் ஏற்படும். இவ்விலட்சியங்கொண்டே நிறைந்தவராய் இருங்கள். எதைச் செய்யினும் இதையே நன்கு சிந்தித்திருங்கள். இதை நினைத்துவரும் சக்தி காரணமாகவே உங்கள் செயல்கள் யாவும் பெருக்கப்படும், மாறுபாடு அடையும், தெய்வீகமாகும். பௌதிகம் பலத்ததென்றால் சிந்தனை எல்லாம் வல்லது. இந்தச் சிந்தனையை உங்கள் வாழ்க்கையுள் உறுதிகொள்ளச் செய்யுங்கள்; எல்லாம் வல்ல உங்கள் ஆற்றல், உங்கள் சிறப்பு, உங்கள் கீர்த்தி இவைபற்றிய சிந்தனை நிறைந்திருங்கள். உங்கள் மண்டையில் குருட்டு நம்பிக்கை எதுவும் புகாதிருக்கக் கடவுள் அருள் புரியட்டும். நம்முடைய திறனின்மை, தீமைகள் என்பன போன்ற குருட்டு நம்பிக்கையின் வலிமையால் உணர்வழிக்கும் கருத்துகள் பிறப்பு முதல் நம்மைச் சூழ்ந்து வருவதைக் கடவுள் தடுப்பாராக! மதிப்பும் உயர்வும் மிக்க உண்மைகளை அடையவல்ல எளிய பாதைகளை மனிதன் அடையக் கடவுள் கருணை செய்வாராக ஆயினும் மானிடன் இவற்றையெல்லாம் கடந்துதான் தீர வேண்டியிருந்தது. உங்கள் பின் வருவோர்க்குப் பாதையை மேலும் கடினமாகச் செய்யாதீர்கள்.

அறிவுரை வழங்குவதற்குக் கொடிய கொள்கைகளாகவே இவை சில சமயம் தோன்றும். இந்தக் கருத்துகளைக் கேட்ட மாத்திரத்திலேயே நடுக்கங்கொள்ளும் மனிதர்களை நான் கண்டிருக்கிறேன். ஆனால் இவற்றைச் செயல்முறைக்குக் கொணர, முதன் முதலாகக் கற்றறிய வேண்டிய பாடம் இதுவே. உங்களுக்குள்ளாகவோ பிறர்களுக்கோ நீங்கள் திறமை யற்றவரென என்றும் கூறாதீர்கள். உங்களால் இயலுமானால், நன்மை புரியுங்கள். ஆனால் உலகிற்குத் தீமை இழையாதீர்கள். நம் குறுகிய நோக்கங்கள், நம்மை நாமே இழிவுபடுத்திக் கொள்வது, கற்பனைத் தெய்வங்களை நோக்கி இறைஞ்சுவது ஆகிய இவை போன்ற அனைத்தும் குருட்டு நம்பிக்கைகளே என்பதை உங்கள் உள்ளத்தின் அடித்தலத்திலேயே நீங்கள் அறிவீர்கள். இந்தப்

பிரார்த்தனைகளுள் ஏதாவது ஒன்றிற்கேனும் விடை கிடைத்ததாக உங்களால் எடுத்து உரைக்க இயலுமா? உங்களுக்காகக் கிடைத்ததென்ன நீங்கள் தரும் விடைகள் யாவும் உங்கள் இதயங்களினின்றே பிறந்தவையாகும். பேய்கள் என்பன இல்லை, இது நீங்கள் அறிந்ததே எனினும், இரவில் புகுந்ததுமே ஏதோ ஊர்ந்து வருவது போன்ற உணர்ச்சி கொண்டுவிடுகின்றீர்கள். இத்தகைய அச்சுறுத்தும் கருத்துகளுக்கெல்லாம் வேர் நம் குழவிப் பருவத்தில் நம் இதயத்தில் புகுத்தப்பட்டிருப்பதே. சமூகத்திற்காகவோ, 'நண்பருடைய பகையைப் பெற்றுவிடுவோம்,' என்பதற்காகவோ, நீண்ட காலம் வளர்த்து வந்த நம்பிக்கைகளை இழந்து விடுவோமே என்ற கருத்தாலோ, அஞ்சி இத்தகைய விஷயங்களை மக்களுக்கு வழங்காதீர்கள். இவற்றின் மீது ஆணை செலுத்துவீர்களாக உலக ஒருமைப்பாடு, அவரவரது தன்னம்பிக்கை இவற்றைத்தவிர மிகுதியாக அறிவுறுத்துவது சமயத்தில் யாதுளது? கடந்த ஆயிரமாண்டுகளாக மனித இன உயர்வுக்காக ஆற்றப்படும் உழைப்புகள் யாவும் இந்த ஒரே குறிக்கோளை நோக்கியவையே. மனித இனம் இன்னும் இதற்காகவே உழைத்துக்கொண்டேயிருக்கிறது. இப்பொழுது உங்கள் முறையாகும். நீங்கள் முன்னரே உண்மை அறிந்தவர்கள். எம்மருங்கும் இதுவே உங்களுக்கு அறிவுறுத்தப்படுகின்றது. தத்துவசாத்திரமும் உளவியற் சாத்திரமும் மட்டுமன்றி உலகாயதச் சாத்திரங்கள்கூட இதையே அறுதியிட்டுள்ளன. படைப்பின் ஒருமைப்பாட்டின் உண்மையை ஒப்புக்கொள்ள அஞ்சும் விஞ்ஞானி இன்று எவனேனும் உளனோ? உலகங்கள் பல எனப் பகரத் துணிபவன் யாவன்? இவையனைத்தும் குருட்டெண்ணங்களே. இருப்பது ஒரே வாழ்க்கை ஒரே உலகு, இந்த ஒரே வாழ்க்கையும் உலகுந்தான் நமக்குப் பலவாகத் தோன்றுகின்றன. இந்தப் பலவான தோற்றங்கள் கனவு போன்றவை. கனவு காண்கையில் ஒரு கனவு தோன்றி மறைய மற்றொன்று தொடர்கிறது. கனவு நிலையில் நீங்கள் உயிர்த்திருப்பவர்கள் அல்லர். கனவுகள் ஒன்றன் பின் ஒன்றாக வந்து போகின்றன; காட்சிக்குப் பின் காட்சியாக உங்களுள் விரிகின்றன. தொண்ணூறு சதவிகிதம் துயரும் பத்துச் சதவிகிதம் இன்பமும் கொண்ட இவ்

வுலகில் இப்படியே நடந்தேறுகிறது. சிலகாலம் சென்றதும் இதுவே தொண்ணூறு சதவிகிதம் இன்பம் நிறைந்ததாக உங்களுக்குத் தோன்றும். அதை சொர்க்கமே என்று சொல்ல லாம். ஆனால் ஞானிக்கு இவையனைத்தும் மறைந்து இவ் வுலகே கடவுளாகவும் தன் ஆன்மாவே கடவுளாகவும் தோன் றும் காலம் வரும். எனவே பல உலகுகள், பல உயிர்கள் உள் ளன என்பதில்லை. இந்தப் பற்பல தோற்றம் யாவும் அந்த ஒன்றின் வெளித்தோற்றங்களே. அந்த ஒன்றே தம்மைப் பல வாக பௌதிகம், ஆன்மா, மனம், எண்ணம் மற்றுமனைத்து மாக வெளிக் காட்டுகிறது. அவனே தன்னைப் பலவாகக் காட்டுகிறான். ஆகவே நாம் இவ்வுண்மையை நமக்கும் வழங்கவேண்டுவது முன் வைக்க வேண்டிய முதலடி. இந் தக் குறிக்கோள் உலகெங்கும் முழங்கட்டும்; குருட்டு நம்பிக் கைகள் மறையட்டும், வன்மையற்றவர்களுக்கு இதைச் சொல்லி அடித்துக் கூறுங்கள். நீங்கள் அந்தத் தூய ஒரு வனே. பெருவீரனே, கண்விழித்து எழு; இவ்வுறக்கம் உனக்குத் தகுந்ததல்ல, நீ திடமற்றவனே துயருற்றவனே என்று நினைக்க வேண்டாம். எல்லாம் வல்லோர்களே, உயிர்த்தெழுந்து தமது இயல்பை வெளிக்காட்டுங்கள். பாவி களே நீங்கள் என்று எண்ணுவது, உங்களைக் கருதுவது ஏற்றதல்ல. இதை உலகிற்கு எடுத்தோதுங்கள். உங்களுக் குள்ளேயே சொல்லிக் கொள்ளுங்கள்; அப்பொழுது வெளிப் படும் பயனைக் காணுங்கள். மின்னல் வேகத்தில் அனைத்தும் வெளிப்படுகிறது, மாறுபாடடைகிறது என்பதைக் காணுங் கள். மனித இனத்திற்கு இதை எடுத்துரைத்து அவர்களு டைய சக்தியைக் காண்பியுங்கள். அதன் பின்னரே நம் அன் றுட வாழ்க்கையில் அதை எப்படிப் பயன்படுத்துவதென்று கற்றறிவோம். பகுத்தறிவை உபயோகப் படுத்திக்கொள்ள நம் வாழ்க்கையில் ஒவ்வொரு விநாடியிலும் ஒவ்வொரு செய லிலும் தக்கது, தகாதது என்பதையும் மெய், பொய் என்பதை யும் பகுத்தறிந்துக்கொள்ள உண்மையின் உரைக்கல்லாகிய தூய்மையென்னும் ஒருமைப்பாட்டைத் தெரிந்து கொள்ள வேண்டும். ஒருமைப்பாடு உண்டாக்கவல்ல அனைத்தும் மெய்யே. அன்பென்பது உண்மை, பகையென்பது பொய்; ஏனெனில் பகைமையே பலவாக்குதற்குக் காரணமாவது.

பகைமையே மனிதனை மனிதனினின்றும் பிரிக்கிறது, எனவே அது தவறும் பொய்யுமாகும். அது பிரிவுபடுத்தும்—சக்தி, தனிப்படுத்தி அழிப்பது.

அன்பு இணைப்பது, ஒருமைப்பாட்டை உருவாக்குவது. சேயுடன் அன்னைபோல, குடும்பங்கள் நகருடன் ஒன்றாய் நீங்களும் ஒன்றாகிறீர்கள்; உலகனைத்தும் விலங்கினத்துடன் ஒன்றாகிறது. அன்பே உயிர்ப்பு, அதுவே கடவுள். அந்த ஒரே அன்பின் சற்றேறத்தாழ்வுகொண்ட வெளிப்பாடுகளே தோற்றங்களனைத்தும். இவற்றின் மாறுதல்கள் அளவு முறையிலேயே, ஆனால் அது எப்பொழுதும் ஒரே அன்பின் வெளித்தோற்றமே. ஆகவே நம் செயல்கள் யாவற்றிலும் அவை பலமையைப் புலப்படுத்துகின்றனவா அல்லது ஒற்றுமை விளைவிக்கின்றனவா என்று தேறவேண்டும். பலவாகச்செய்து வந்தாலும் அவற்றை விடவேண்டும்; அல்லாமல் ஒருமையை உருவாக்குவதானால் நன்றென்று கொள்ள வேண்டும். இவ்வண்ணமே நம் எண்ணங்களும். அவை ஒற்றுமை அழிப்பனவா, பன்மையைப் பெருக்குவனவா அல்லது ஒருமைப்படுத்தி ஆன்மாவுடன் சேர்த்து ஒரே சக்தி செயலாற்ற முற்படுவனவா என்று தீர்மானிக்க வேண்டும். அவை இவ்விதம் செய்தால் அவற்றை ஏற்போம், இல்லையேல் குற்றம் புரிபவை என அகற்றி விடுவோம்.

அறியவொண்ணாதது எதன் மீதும் சார்ந்திருப்பதே நன்னெறியின் முழுக்கருத்துமாம். அறியப்படாததெதையும் அது ஓதுவதில்லை. ஆனால் உபநிடதத்தின் மொழிப்படி, "அறிய வொண்ணாக் கடவுளென நாம் யாரை வழிபடுகிறோமோ, அதே கடவுளை நான் உனக்கு ஓதுகின்றேன்." தான் என்பதன் மூலமாகவே நீங்கள் எதையும் அறிகிறீர்கள். நான் இந்த நாற்காலியைக் காண்கிறேன், ஆனால் அதைக் காண்பதற்கு, முதன் முதலாக நான் என்னை உணர்ந்து கொண்டுதான் பிறகு நாற்காலியை உணர வேண்டுவதாகிறது. தான் என்பதைக் கொண்டும் அதன் மூலமாகவுமே நாற்காலி உணரப்படுகிறது. தான் என்பதைக் கொண்டும் அதன் மூலமும் நான் உங்களைத் தெரிந்து கொள்கிறேன், உலக முழுவதையும்தெரிந்து கொள்கிறேன். எனவே இந்தத் தான் என்பது அறியப்படாதது என்றால் அது பெரும்பிதற்

றலே. தான் என்பதை அகற்றிவிடுங்கள்; உலகெல்லாம் மறைந்து விடுகிறது. அறிவனைத்தும் இந்தத் தான் என் பதிலும் அதன் மூலமுமே வருகின்றது. எனவே இந்தத் தான் யாவற்றிலும் நன்கு அறியப்படுவது. 'நான்' என்று நீங்கள் சொல்வது உங்களையே. எனது 'நான்' என்பது உங்க ளுடைய 'நான்' ஆக எங்ஙனம் இருக்கக் கூடுமென நீங்கள் வியப்புறலாம். எல்லையுள்ள இந்த 'நான்' எல்லையற்ற அந்த முடிவிலியாக எப்படி இருக்கக் கூடுமென நீங்கள் வியப்பெய்த லாம்; ஆனால் அது உண்மையே. எல்லையுளதென்பது வெறுங் கற்பனையே. அம்முடிவிலி போர்வையால் மூடப்பட்டது. போலும் அதன் சிறிதளவே இந்த 'நான்' ஆக வெளிப்படுவது போலும் ஆகிறது. எல்லையற்றதன் மீது எல்லையுறல் ஒரு போதும் நேர இயலாது, அதொரு கற்பனையே. எனவே இந்த ஆன்மா ஆண், பெண், குழவி ஆகிய நமக்கும்—ஏன், விலங்களுக்குங்கூட—அறியப்பட்டதாகிறது. அவனையறியா மல் உயிர்த்திருக்கவோ இயங்கவோ, வாழ்க்கை நடத்தவோ நம்மாலியலாது; இந்த அனைத்திற்கும் நாதனை அறியாமல் நாம் மூச்சுவிடவோ, கணப்பொழுதும் உயிருடனிருக்கவோ இயலாது. வேதாந்தக் கடவுள் எல்லாவற்றையும் விட நன் கறியப்பட்ட பொருள்தான், கற்பனையின் ஒப்பனையல்ல.

இதுவே நடைமுறைக்கொத்த கடவுள் பற்றிய நல்லுரை யாகாதெனின், அத்தகைய கடவுளைப்பற்றி அறிவுறுத்த உங்களால் எப்படித்தான் இயலும்? என்முன் நான் காணும் அவன்—ஒவ்வோர் உயிரிலும் இருக்கும் எங்கும் நிறைந்தவன் —நம் ஐம்புலன்களைவிட மெய்ம்மையானவன் ஆகியவனை விட அதிகம் செயல்முறைகேற்ற கடவுள் வேறெங்குண்டு? நீங்களே அவன்: எங்கும் நிறைந்த எல்லாம்வல்ல தெய்வம்; உங்கள் ஜீவன்களின் ஆன்மா; அங்ஙனமன்று என நான் இயம்பினுல் பொய் சொன்னவனுவேன். எல்லா வேளைகளி லும் நான் அதனை உணர்ந்தாலும் உணராவிட்டாலும், நான் அதை அறிந்தவனே. அவனே ஒருமைப்பாடு, அனைத்தையும் இணைக்கும் ஒற்றுமை, எல்லா உயிருடையவும் இருப்புகளு டையவும் மெய்ப்பொருள்.

வேதாந்த நன்னெறியின் இக்கருத்துகளை விவரமாக விரித்தாக வேண்டும்; ஆகவே உங்களுக்குப் பொறுமை

தேவை. மிகத்தாழ்வான குறிக்கோள்களினின்றும்கருத்துகள் எப்படி மேல் வளர்வன என்பதையும், ஒருமைப்பாடென்ற ஒன்றேயான சீரிய குறிக்கோள் உலகப் பொது அன்பாக எப்படி உருவாயிற்றென்பதையும் கண்டறிய நான் புகன் றதுபோல் விஷயத்தை விரிவுபடுத்தி ஆராய்ந்தால் மட்டுமே அபாயங்களைத் தவிர்க்கலாம். படிப்படியினின்றும் மெல்ல மெல்ல இதனை ஆராய்ந்து ஏற அவசரம்காண உலகினருக்கு இயலாது. ஆனால் மேற்படிகளில் நின்றுகொண்டு, நம் பின் வருவோருக்கு மெய்ப் பொருளை வழங்க நம்மால் இயலாவிட் டால் பயனென்ன? எனவே அதனது செயல் முறைகளை ஆராய்ந்தறிவது சிறந்ததாகும். அறிவுக்கான பகுதிகளை முதலில் தெளிந்து கொள்வது மிகவும் அவசியம். அறிவுப் பகுதியில் மட்டும் மகிமை ஏதுமில்லை என்று நாம் அறிந் தவர்களாயினும் இதயமே மிகவும் முக்கியமானது இதயத் தாலேயே நாதனைக் காண்போம், புத்தியாலன்று. புத்தியென் பது தெருவைக் கூட்டும் கருவி, நமக்காகப் பாதையைச் சுத் தம செய்கிறது; குற்றேவல் செய்யும் காவலாளன் போல், ஆனால் சமூக ஆக்கங்களுக்குக் காவலாளன் இன்றியமையா தவன் அல்ல. கலகங்களைத் தடுக்கவும் குற்ற மிழைத்தலைக் கண்டிப்பதற்குமே அவன் தேவை. புத்தியின் வேலையும் இத் தகையதே. அறிவூட்டவல்ல நூல்களைப் படித்து, கரை கண்டு விட்டதாக நீங்கள், "தெய்வ கதியால் நான் இவற்றி னின்றும் விடுபட்டுள்ளேன்" என்று எண்ணுகிறீர்கள். ஏனெனில் புத்தி விழி அற்றது; அதற்குக் கைகளும் கால் களும் இன்மையால் தானே இயங்க வல்லதன்று. உணர்ச் சியே செயலாற்றுவது; மின்சாரத்தையோ வேறெதையோ விடக் கணக்கிட முடியாச் சிறந்த வேகத்துடன் விரைந்து பாய்வது. 'உங்களுக்கு உணர்ச்சி இருக்கிறதா?' என்பதே கேள்வி. இருந்தால் எம்பிரானைக் காண்பீர்கள்; இன்று உங்களிடமுள்ள உணர்ச்சிதான் யாவற்றிலுமுள்ள ஒற்று மையையும் அது உணரும் வரை, தன்னுள்ளும் பிறரிலும் கடவுளை உணரும் வரை செறிவுற்று, தெய்வீகத் தன்மை கொண்டு, மிகச் சிறந்த மேடைக்கு உயர்த்தப்படுகிறது. புத்திக்கு ஒருபோதும் இவ்வாற்றல் கிடையாது. "சொற்களை விதவித முறைகளில் உச்சரிப்பது, புத்தகங்களின் மூலப்

பாடங்களை விதவிதமாக உரைசெய்வது ஆகிய யாவும் கற்றறிந்தோரின் இன்பந் துய்த்தலுக்கே, ஆன்ம விடுதலைக் காகவன்று.''

தாமஸ்—அ—கெம்பிஸ் என்பவர் நூலைப் படித்துள்ளோர் அதன் ஒவ்வோரிதழிலும் இதையே அவர் வற்புறுத்துகிறார் என்று அறிவீர்கள்; உலகில் ஒவ்வொரு சான்றோனும் பெரும் பாலும் இதை வற்புறுத்தியுள்ளான். புத்தி அவசியமே, அதின்றி நாம் விகாரமான பிழைகளுக்காளாகிறோம்; பல விதத் தப்பிதங்களை இழைக்கிறோம். புத்தி இவற்றைத் தடை செய்கிறது; அதற்குமேல் அதன்மீது எதையும் ஏற்ற முயலாதீர்கள். அது செயலாற்றாத துணைக் கருவியே; உண்மையான துணை உணர்ச்சியே, அன்பே. பிறரைக் குறித்து நீங்கள் உணர்ச்சி கொள்கிறீர்களா? ஆனால் நீங்கள் ஒருமைப் பாட்டில் வளர்கிறீர்கள்; அஃதின்றேல் நீங்கள் உலகில் எவ்வளவு பெரிய மேதாவியாய் இருந்தாலும், எதற் கும் பயனற்றவர்களே; ஈரமற்ற புத்தியாகி அதாகவே இருந்து வருவீர்கள். உணர்ச்சியுள்ளோர் ஒரு நூலையும் படிக்காவிடினும் ஒரு மொழியையும் தெரிந்துகொள்ளா விடினும் சரியான பாதையிலேயே செல்வோராவர். கடவுள் உம்முடையவரே. தீர்க்கதரிசிகளின் சக்தி எங்கிருந்த தென்று உலக வரலாற்றிலிருந்து நீங்கள் அறிந்ததில்லையா? அது எவ்விடமிருந்தது? அறிவுப் பகுதியிலா? தத்துவ சாத் திரம் பற்றியோ மிக நுணுக்கமான தர்க்கரீதியிலுள்ள நியாயம் பற்றியோ அவர்கள் சிறந்த நூல் ஏதேனும் இயற்றி னார்களா? ஒருவருமே இல்லை. சில சொற்களை மட்டுமே மொழிந்துள்ளனர். நீங்கள் கிருஸ்துவைப்போல உணர்ச்சி கொண்டால் கிருஸ்துவே ஆவீர்கள். புத்தரைப்போல் உணர்ச்சி கொண்டால் புத்தராகவே இருப்பீர்கள். உணர்ச் சியே உயிர், வலிமை, வீரியம்; அஃதின்றேல் புத்தி எவ் வளவு செயலாற்றினும் கடவுளை அடைய இயலாது. நடக் கும் சக்தியில்லாத கால்கள் போன்றதே புத்தி. உணர்ச்சி வந்து அவற்றிற்குச் செல்லும் சக்தியை ஈந்தால் அவை நகர்ந்து மற்றவரையும் இயக்குவிக்கின்றன. உலகமெங்கும் இங்ஙனமே நடந்தேறுகிறது! நீங்கள் எப்போதும் நினைவு வைத்துக்கொள்ள வேண்டுவதும் இதுவே, வேதாந்த நன்

னெறியில் மிகவும் செயலாற்றக் கூடியதே இது. நீங்களெல்லோரும் தீர்க்கதரிசிகள், அனைவரும் தீர்க்கதரிசிகளாக வேண்டும் என்றே வேதாந்தம் போதிக்கின்றது. புத்தகம் உங்களுடைய நடத்தைக்குச் சான்றல்ல, நீங்களே புத்தகத்திற்குச் சான்று. ஒரு நூல் உண்மையை உபதேசிக்கிறதென்று எங்ஙனம் அறிவீர்கள் ? நீங்களே உண்மை, அதனை உணர்கிறீர்கள் என்பதனாலேயே. வேதாந்தம் இயம்புவது இதுவே. இவ்வுலகில் உண்டான கிறிஸ்துக்களுக்கும் புத்தர்களுக்கும் உரிய சான்று யாது? நீங்களும் நானும் அவர்களைப் போலவே உணர்ச்சி கொள்கிறோம் என்பதுதான். அவர்கள் உண்மையில் இருந்தவர்களே என்பதை இவ்வாறே நீங்களும் நானும் அறிந்துகொள்கின்றோம். நமது சான்றோனுன்மா அவர்களது தீர்க்கதரிசி-ஆன்மாவை மெய்ப்பிக்கிறது. உங்கள் தெய்வீகத் தன்மையேகடவுள் என்பவரை மெய்ப்பிக்கும் சான்று. நீங்கள் முக்காலு முணர்பவரல்ல வெனில், கடவுள் என்பதைப் பற்றிய எவ்வித உண்மையும் ஒரு போதும் இருந்ததில்லை. நீங்கள் தெய்வமல்லாவிட்டால், கடவுள் என்றும் இருந்ததில்லை; இனி இருக்கப் போவதுமில்லை. இதுவே பின்பற்றக்கூடிய குறிக்கோள் என்கிறது வேதாந்தம். நம்முள் ஒவ்வொருவரும் தீர்க்கதரிசி ஆகவேண்டும். இப்பொழுதே நீங்கள் அங்ஙன முள்ளவர்களே ; அதை அறியவேண்டுவதுதான் குறை. ஆன்மாவால் ஆக்கக்கூடாதது எதுவும் இருப்பதாக நீங்கள் என்றும் எண்ணுதீர்கள். அப்படி எண்ணுவது மிகுந்த தெய்வகுற்றமே. பாவமென்று ஒன்றுண்டானல், நீங்கள் திறமையற்றவரென்றோ மற்றவர்கள் திறமையற்றவர்களென்றோ சொல்வதொன்றே அது.

செயல்முறை வேதாந்தம்—2

(இலண்டனில் 1896-ம் ஆண்டு நவம்பர் 12-ம் தேதி நிகழ்த்திய சொற்பொழிவு.)

ஒரு சிறுவனுக்கு அறிவொளி எப்படிப் பிறந்ததென்பதை விளக்கும் மிகத் தொன்மை வாய்ந்த கதையொன்றைச் சாந்தோக்கிய உபநிடதத்தினின்றும் எடுத்து இயம்புகின்றேன். கதையின் தோற்றம் நயமற்றது போலக் காணலாம். ஆயினும் அதிலொரு தத்துவம் இருப்பதாகத் தெரிந்து கொள்ளலாம். ஒரு சிறுவன் தன் தாயை நோக்கி, "நான் வேதங்கள் கற்கப்போகிறேன். என் தந்தையார் பெயரையும் குலத்தையும் எனக்குக் கூறுக," என்று கேட்டான். தாய் முறைப்படி திருமணஞ் செய்தவளல்லள். இந்தியாவில் விதிப்படி மணம் புரியாதவளின் குழந்தையைக் குலங் கெட்டதெனக் கருதுவர். சமூகம் அவனை மதியாது; அவன் வேதமோதத் தகுதியற்றவன். எனவே அத்தாய், "குழந்தாய், உன் குலப்பெயரை நானறியேன். நான் வேலை செய்து பிழைத்தவள்: பல்வேறிடங்களில் வேலை செய்துவந்தேன். உன் தந்தையார் எவரென்பது எனக்குத் தெரியாது. என் பெயர் ஜபாலா, உன் பெயர் சத்யகாமன்," என்று சொன்னாள். அச்சிறுவன் ஒரு முனிவரிடம் சென்று, தன்னை மாணவனாக ஏற்றருளும்படி வேண்டி நின்றான். "உன் தந்தை பெயர் யாது? உன் குலம் யாது?" என்று அம் முனிவர் கேட்டார். தன் தாயிடம் கேட்டறிந்ததைப் பையன் அவரிடம் அப்படியே மொழிந்தான். உடனே முனிவர், "தன்னைப் பற்றி இத்தகைய மதிப்பற்ற மெய்ம்மையை ஓரந்தணனேயன்றி வேறெவனும் உரையான். நீர் ஓர் அந்தணனே. ஆதலின் நானுனக்குக் கற்பிப்பேன். நீ மெய்ந்நெறி பிறழாதவன்," என்றார். அங்ஙனமே அவர் அப்பையனைத் தம்மிடம் இருத்திக் கொண்டு அவனுக்குக் கல்வி கற்பித்து வந்தார்.

பண்டைய இந்தியாவில் நிலவிவந்த வியத்தகு கல்வி முறைகளிற் சிலவற்றை நாம் இப்போது அறியலாம். அந்தக் குரு மெலிந்த பலமற்ற நானூறு பசுக்களைச் சத்தியகாமனிடம் பாதுகாக்கவென ஒப்படைத்து அவனைக் காட்டுக்கு

அனுப்பினுர். அவன் காடடைந்து சில காலம் ஆங்குறைந் தான். அம்மாடுகள் ஆயிரமாகிப் பெருகிய பின்னரே வீடு திரும்பும்படி குரு கட்டளை யிட்டிருந்தார். சில ஆண்டு கள் கழிந்த பின் ஒருநாள் மந்தையிலிருந்த கொழுத்த காளை யொன்று சத்தியகாமனிடம், "எங்கள் தொகை இப்போது ஆயிரமாகிவிட்டது. எங்களை உன் குருவிடம் ஓட்டிச் செல். பிரம்மத்தைப் பற்றிச் சிறிதளவு நானுனக்கு அறிவுறுத்து கிறேன்," என்றது. "சொல்லுக," என்ருன் சத்தியகாமன். அக்காளை, "கிழக்குத் திசை ஆண்டவனின் ஒரு பகுதி, மேற் கும் ஒரு பகுதி, தெற்கும் ஒரு பகுதி, வடக்கும் அதுபோன் றதே. நான்கு முக்கிய திசைகளும் பிரம்மத்தின் நான்கு பகுதிகள். பிரம்மத்தைப் பற்றி இன்னும் சிலது தீக்கடவுள் உனக்கு உபதேசிப்பார்," என்றது. தீ அக்காலத்திய பெருஞ் சின்னங்களுள் ஒன்று; ஒவ்வொரு மாணவனும் தீ வளர்த்து அதற்கு அவி சொரிய வேண்டும். சத்தியகாமனும் மறு நாளே குருவின் வீடு நோக்கிப் புறப்பட்டான்; மாலையில் தீயை வணங்கி அவியிட்டு அதனருகே அமர்ந்திருக்கையில் "சத்தியகாமா," என்று கூப்பிடுங்குரல் தீயினின்றுங் கேட்டது. "ஐயனே, சொல்லுக," என்ருன் சத்தியகாமன். (இங்ஙனமே ஸாமுவேலென்பவர் வியத்தகு குரலொன்றைக் கேட்டதாக விவிலிய நூல் பழைய ஏற்பாட்டில் வருங் கதை உங்கள் நினைவுக்கு வரலாம்.) "சத்தியகாமா, நான் பிரம் மத்தைப் பற்றி உனக்குச் சிறிது உபதேசிக்க வந்துளேன். இந்தப் பூமி பிரம்மத்தின் ஒரு பகுதி, விசும்பும் சொர்க்கமும் அதன் பகுதிகளே. மாகடலும் அந்தப் பிரம்மத்தின் பகுதியே. மேலும் அறிவுரையைப் பறவை யொன்று நல்கும்."

சத்தியகாமன் பிரயாணந் தொடர்ந்தான். மறுநாள் மாலைச் சடங்கு முடிந்ததும் ஓர் அன்னப்புள் அவனெதிர்ப் பட்டு, "சத்தியகாமா, பிரம்மத்தைப் பற்றிச் சிறிதளவு நானு னக்கு உபதேசிக்கிறேன். நீ வழிபடும் இந்தத் தீ அந்தப் பிரம்மத்தின் ஒரு பகுதி, ஞாயிறும் மதியும் பகுதிகள்; மின்னலும் பிரம்மத்தின் பகுதியே. மதுகு என்னும் பறவை இதைப் பற்றி இன்னும் சொல்லும்," என்றது. அப்பட்சி மறு நாள் மாலை தோன்றி, முன்போன்றதொரு குரல் சத்திய காமன் செவிகளில் வீழ்ந்தது, "பிரம்மத்தைப் பற்றி நான்

சில பகர்கின்றேன். மூச்சுக் காற்று பிரம்மத்தின் ஒரு பகுதி, பார்வைச் சத்தியும் கேட்கும் சத்தியும் பகுதிகளே, மனம் ஒரு பகுதி.'' மறுநாள் குருவின் வீடடைந்த சிறுவன் முறைப்படி அவரை வணங்கி நின்றான். குரு சீடனைக் கண்டதும், "சத்தியகாமா, பிரம்மத்தை அறிந்தவன் முகத்தைப் போல உன் முகம் ஒளிர்கிறதே! யாரப்பா உனக்கு உபதேசஞ் செய்தவர்?'' என வினவினார். "மானிடரல்லாத உயிர்களே; எனினும் உங்களது உபதேசத்தையே நான் கோருகிறேன். ஏனென்றால் குரு மூலம் பெறும் ஞானமே ஒப்பிலா உயர்நலம் தரவல்லதென உங்களைப் போன்றோர் கூறக் கேட்டுளேன்,'' எனக் கூறினான் சத்தியகாமன். அம்முனிவரும் கடவுளர் புகட்டிய அறிவையே அவனுக்குரைத்தார். "எதுவும் விடப் படவில்லை; ஆம், எதுவும் விடப்படவில்லை.''

அந்தக் காளை, தீ, பறவைகள் என்ற யாவும் உபதேசித்த உருவகக் கதைகளோடு கூட அக்காலக் கருத்துகளின் நோக்கையும் போக்கையும் இதினின்றும் நாம் அறிகிறோம். ஈண்டு நாம் காணும் வித்தினின்றும் விளையும் விழுமிய கருத்து யாதெனின், இக்குரல்களனைத்தும் நம்முள் இருப்பன என்பதே. இவ்வுண்மைகளை மேலுந் தெளிவாக நாமறியும் போது, அந்தக் குரல் நம் இதயத்திலேயே இருப்பதாகக் காண்கிறோம். அந்நாட்களில் மெய்ம்மையைக் கேட்டதாக அம்மாணவன் தெளிந்தான், ஆனால் அவன் கொண்ட விளக்கம் நேரானதன்று. அக்காலமெல்லாம் குரல் தன்னுள்ளேயே இருந்ததாயினும், அது வெளியுலகிலிருந்து வருவதாகவே அவன் கருதினான். பிரம்ம ஞானத்தைச் செயல் முறையாக்கிக் கொள்வதே இதினின்று நாம் பெறும் இரண்டாவது கருத்து. மதத்தின் செயல்முறை ஆக்கங்களையே உலகு என்றும் தேடிவருகிறது. அவை எப்படிச் செயல் முறைக் கேற்றனவாகத் தினந்தோறும் மேன்மேலும் ஆகின்றோம். மாணவருக்குப் பழக்கமானவற்றைக் கொண்டே மெய்ப்பொருள் தெளிவாக்கப்பட்டு வந்தது. அவர்கள் வழிபட்டு வந்த தீ, பூமி முதலியவை பிரம்மத்தின் பகுதிகளாகவே கருதப்பட்டன.

அடுத்த கதை உபகோஸல காமலாயனனைப் பற்றியது. இவன் சத்தியகாமனுக்குச் சீடன்; சத்தியகாமனிடம் உபதேசம் பெறவந்து அவனுடனேயே சிறிது காலம் தங்கினுன். ஒரு நாள் சத்தியகாமன் புறப்பட்டு யாத்திரை சென்ருன். தனித்திருந்த மாணவன் மனக்கவலை மிக்கவனுனுன். "நீ ஏன் உண்பதில்லை?" என்று குருவின் மனைவி கேட்டபோது, "நான் உண்பதற்கும் ஊக்கமற்ற கவலையுற்றிருக்கிறேன்," என்ருன். அத்தருணம் அவன் வழிபட்டு வந்த தீயினின்றும் ஒரு குரல் எழுந்தது, "இந்த உயிர் பிரம்மம், வானும் பிரம்மம், சுகம் பிரம்மமே. பிரம்மத்தை அறிவாய்."

மாணவன் விடை கூறினுன், "உயிர் பிர்ம்ம மென்பதை அறிவேன், ஐயா. ஆனுல் வானும் சுகமும் பிரம்மமே என்பதை அறியேன்." அக்குரல் வானும் சுகமும் ஒரே மெய்ம்மையைக் குறிப்பனவே என்றும், உணரக்கூடிய வான் இதயத்திலுள்ள தூய அறிவுதானென்றும், ஆகவே உயிரும் இதயத்திலுள்ள வானும் பிரம்மமே என்றும் விளக்கியது.

அஃது பின்னும் உரைக்கலாயிற்று, "இந்த ஞாலம், உணவு, நீ வழிபடும் பரிதி, தீ அனைத்தும் பிரம்மத்தின் உருவங்களே. பரிதியிற் காணப்படும் புருடன் நானே. இதை அறிந்து அவனைப் பற்றி தியானிப்பவனுடைய பாவங்களெல்லாம் மறைந்து போகின்றன; அவன் சுகமாக நீண்ட காலம் வாழ்கின்ருன். நான் முக்கியத் திசைகளிலும் மதி, விண்மீன்கள், நீர் இவற்றிலும் உறைகிறேன். இவ்வுயிர், ஆகாயம், விண்ணுலகு, மின்னல் இவற்றில் இருப்பவனும் நானே." இங்கும் செய்முறை மதமென்னும் அதே கருத்தைக் காண்கிருேம். அவர்கள் வழிபட்டு வந்த தீ, கதிர், மதியம் போன்றவையும் அவர்களுக்குப் பழக்கமான குரலுமே அவற்றினை விளக்கி, அவற்றுக்கோர் உயர்தரப் பொருள் பயக்கும் கதைகளுக்கான பொருள்களாகின்றன. இதுவே வேதாந்தத்தின் உண்மையான செயல்முறை நோக்கு. இது உலகை அழிப்பதில்லை, ஆனுல் விளக்குகிறது; உருவுள்ளவனை அழிப்பதில்லை, அவனைத் தெளிவாக்குகிறது; தனிப்பட்ட தன்மையைத் தொலைக்காமல் மெய்யான தனித்துவத்தைக் காட்டுகிறது. இவ்வுலகு வீணனதென்ருே இருப்பதன்று என்ருே சொல்லாமல், "இவ்வுலகம் உங்களுக்குத்

திங்கிழைக்காமலிருக்க அதன் உண்மையைத் தெரிந்து கொள்ளுங்கள்,'' என்கிறது. அவன் வழிபட்டு வந்த தீயோ கதிரவனே, அல்லது திங்களோ மின்னொளியோ வேறெதுவோ தவறென்று அக்குரல் சத்தியகாமனுக்குக் கூற வில்லை. ஆனால் அந்தப் பரிதி, மதி, மின்னல், தீ, ஞாலம் இவற்றிலுறையும் அதே ஆவிதான் அவனுள்ளும் இருக்கிற தென்று நவின்றதால் எல்லாம் அவன் பார்வையில் மாறு பட்டதாய் தோன்றிற்று. அவியை ஏற்கும் பௌதிகத் தீயே புத்துருக் கொண்டு ஆண்டவனாகிறது. இங்ஙனமே பூமியும் உயிரும் கதிரோன், மதி, விண்மீன்கள், மின்னொளி, மற்று யாவும் வேறு தோற்றம் பெற்றுத் தெய்வீகமாகின்றன. இவற்றின் மெய்யான இயல்பு அறியப்படுகிறது. வேதாந் தத்தின் பொருள் அனைத்திலும் ஆண்டவனைக் காண்பதே; அவற்றின் புறத்தோற்றங்களை விடுத்து உண்மைக் குணங் களைத் தெரிந்து கொள்வதே. உபனிடதங்கள் மூலம் மற் றொரு பாடமும் கற்கப்படுகிறது. "கண்களின் மூலம் ஒளிர் பவன் பிரம்மனே. அவன் அழகன், தன்னொளி உள்ளோன்; இந்த உலகங்களெங்கும் அவனே ஒளிர்கின்றான்.'' கண் ணொளி யெனப்படுவது தூய்மையுள்ளவனிடம் மிளிரும் ஒருவிதத் தனிப்பட்ட ஒளியே என விளக்குகிறார் உரை யாசிரியர் ஒருவர். மாசற்ற மனிதனின் கண்களில் அத் தகைய ஒளி எழுமென்றும் அவ்வொளி எங்குமுள்ள ஆன்மா வின் ஒளியே என்றும் உரைக்கப் படுகிறது. அதே ஒளி கோள்கள், உடுக்கணங்கள், ஞாயிறுகள் இவற்றிலெல்லாம் திகழும்.

பிறப்பு, இறப்பு, போன்றவற்றைப் பற்றிய புராதன உபநிடதக் கொள்கைகள் வேறு சிலவற்றைப் படித்துக் காட்டுகிறேன். இது உங்களுக்குச் சுவையாய்த் தோன்ற லாம். சுவேதகேது பாஞ்சால மன்னனிடம் வந்தான். அரசன் "மனிதர் இறந்ததும் எங்குச் செல்கின்றனர் என்பதை நீர் அறிவீரா? அவர்கள் எப்படி மீண்டு வருகிறார்கள் என்பதை அறிவீரா? அந்த வேறு ஓர் உலகு ஏன் நிரம்புவதே இல்லை என்பதை நீர் அறிவீரா?'' என்று அவனைக் கேட்டான். "நான் அறியேன்,'' எனப் பையன் பதில் இறுத்தான். அவன் தன் தந்தையாரிடம் சென்று இக்கேள்விகளையே அவரிடம்

கேட்டான். அவரும், "நான் அறியேன்," என்றார். அவர் அரசனை அணுகினார். அரசர் இதன் அறிவு மதக் குருக்களுக்கு என்றும் கிடையாதென்றும், அரசர்களிடமே இது இருந்து வந்தது என்றும், இது காரணமாகவே மன்னர் பாராளுபவர் ஆகின்றனர் என்றும் அவருக்கு அறிவித்து, தான் அதனை அவருக்கு உபதேசிப்பதாகக் கூறினான். ஆகவே அவரும் அரசனுடன் சிலகாலம் உறைந்து வந்தார். அரசன், "கௌதமரே, அந்த மற்றோர் உலகு தீயே. ஞாயிறே அதன் விறகு. கதிர்களே புகை, பகலே சுவாலை, திங்களே அதன் தணல்; விண்மீன்களே பொறிகள். அந்தத் தீயில் நம்பிக்கையென்ற அவியைக் கடவுளர் சொரிகின்றனர். இந்த அவியினின்றே சோமவேந்தன் பிறக்கிறான்" என இவ்வண்ணம் இயம்பி வந்தான். "இந்தச் சிறு நெருப்பில் நீர் அவி சொரிய வேண்டுவதில்லை. உலக முழுவதுமே இந்தத் தீ. இந்த அவி சொரிதல், வழிபாடு, என்றும் தொடர்ந்து கொண்டே வருகிறது. தேவர்கள், தேவ தூதர்கள், மற்று யாவருமே இதனை வழிபட்டு வருகின்றார்கள். மனிதன்—அவனது உடல்—தீயின் தலை சிறந்த அறிகுறியாம்." இங்கேயும் குறிக்கோள் செயலாற்றுவதை நாம் காண்கிறோம். பிரம்மம் யாவற்றிலும் காணப்படுகிறது. புதியனவாகக் கண்டு பிடிக்கப்படும் சின்னங்கள் நல்லவையே, உகதவுபவைகளே; ஆயினும் நாம் புதியனவாகக் கண்டு பிடிக்கக் கூடியவைகளை விட மேம்பட்ட சின்னங்கள் ஏற்கனவே உள்ளன. இந்தக் கொள்கையே இந்தக் கதைகள் யாவற்றினோடும் உருவிச் செல்வது. கடவுளை வழிபடுவதற்கென நீங்கள் ஒரு பிரதிமையைக் கண்டுபிடிக்கலாம். ஆனால் அதைவிட மேம்பட்டதொரு பிரதிமை, உயிர்த்துள்ள இம் மனிதன், இருந்து வருகிறது. கடவுளை வழிபடுவதற்கென நீங்கள் ஒரு கோவில் கட்டலாம். அது நல்லதுதான். ஆனால் அதைவிட மேம்பட்டதும் சிறந்ததுமான ஒன்று, அதாவது மனித உடல், முன்னமே இருந்து வருகிறது.

வேதங்கள் கருமகாண்டம், ஞான காண்டம் என்னும் இருபாகங்களைக் கொண்டன என்பது உங்களுக்கு நினைவிருக்கும். கிரியைகள் காலப் போக்கில் பிரித்துத் தனியாக்க கூடாதபடி அவ்வளவு சிக்கல்கள் மிகுந்து வளர்ந்தன.

ஆகவே உபநிடதங்களில் இவை மெதுவாகவும், தெளிவாக்கும் முறையிலும் பெரும்பாலும் நீக்கப்பட்டன. பழைய காலங்களில் அவிகளும் பலியிடுவதும் மிகுந்திருந்தன. பின்னர் தத்துவசாஸ்திரிகள் தலையெடுத்தனர். அறியாதார் கரங்களினின்றும் இச்சின்னங்களைப் பிடுங்கி எறிவதற்கு மாருக—நமது கெட்டகாலம் நவீன சீர்திருத்தங்களில் நாம் வெகு சாதாரணமாக கண்டுவரும் மறுப்பு மனப்பான்மைக்கு மாருக, அவர்கள் மற்ருென்றினை அளித்தார்கள். அவர்கள், "தீயென்னும் சின்னம் இதோ இருக்கிறது. இது மிகவும் நல்லதே. ஆனுல் பூமியென்னும் மற்ருெரு சின்னம் ஈண்டு உள்ளது; எத்தகைய கம்பீரமும் பெருமையும் வாய்ந்த சின்னம்! இதோ ஒரு சிறிய கோயில் உளது. ஆனுல் படைப்பனைத்துமே ஒரு கோயில். மானிடன் எங்கு வேண்டினும் வழிபடலாம். மண்மீது மனிதர் வரைந்துள்ள வியத்தகு சித்திரங்கள் அதோ. இதோ பலி பீடங்கள். ஆயினும் யாவற்றினும் சிறந்த பீடம் உளதே: அதுதான் உயிர்த்து உணர்வுள்ள மனிதவுடல். உயிரற்ற சின்னமொன்றின் முன் வழிபடுவதைவிட இந்தப் பீடத்தில் வணங்குவது மிக மிக மேலாயிற்றே," என்று கூறினுர்கள்.

பெரிதும் வியக்கத்தக்க கொள்கையொன்றை இனி பாடுத்துக்கொள்வோம். அது பற்றி எனக்கே புரிந்தபாடில்லை. அதனை உங்களால் எவ்விதத்திலாவது அறிந்துகொள்ளக் கூடுமானுல் இதோ படித்துக் காட்டுகிறேன். தியானத்தால் தன்னைத் தூயவனுகச் செய்து அறிவு பெற்ற ஒருவன் இறந்ததும் முதன் முதலில் ஒளி மண்டலத்தை அடைகிருன். ஒளியினின்றும் பகலுக்குப் போகிருன். பகலினின்று வளர் பிறையை நோக்கியும். அதினின்று ஞாயிறு வடக்கு நோக்கிச் செல்லும் ஆறு மாதங்களுக்கும், அவற்றினின்று ஆண்டிற்கும் அங்கிருந்து ஞாயிறுக்கும், அதனின்று மதியின் பாலும் பின்னர் மின்னொளிக்கும் செல்கின்ருன். இம் மின்னொளி மண்டலத்தை அடைந்ததும் மனிதனல்லாத ஒருவன் சந்திக்கிருன். அப்புதியவன் இவனை (கட்டிலடங்கிய) பிரமத்தினிடம் அழைத்துப் போகிருன். இதுதான் கடவுளர் மார்க்கம். முனிவர்களும் ஞானியரும் உயிர் நீத்ததும் இவ்வழியேதான் செல்கின்றனர்; மீண்டும் திரும்புவதுமில்லை.

இந்தத் திங்கள், ஆண்டு போன்றவற்றிற்கெல்லாம் பொருள் யாதென்று தெளிவுற ஓர்ந்தார் எவருமிலர். ஒவ்வொருவர் தத்தமக்குத் தோன்றியபடி பொருள் கூறுகின்றனர்; சிலர் இவை யாவும் வீண்பிதற்றலே எனச் சொல்லிவிடுகின்றனர். இரவி மண்டலம், மதி மண்டலம் போவதென்பதற்குப் பொருளென்ன? மின் மண்டல மடைந்ததும் அவ்வான்மாவிற்கு உதவ வரும் அந்தப் புதியவன் யாவன்? இவற்றை எவரும் அறியார். சந்திரன் உயிர் உள்ள ஓரிடம் என்னும் கருத்து இந்துக்களிடை இருந்து வருகிறது. உயிர் அங்கிருந்து எப்படி வந்தது என்பதை நாமும் காண்போம். ஞானம் பெருதது யாராயினும் இவ்வாழ்க்கையில் நற்செயல் புரிந்தோர் தாம் மரித்ததும், முதலிற் புகை மூலமும் பின்னர் இருளுக்கும் அதன் பின் திங்களின் தேய்பிறைக்குரிய பதினைந்து நாட்களுக்கும், பின்னர் இரவி தெற்கு நோக்கிச் செல்லும் ஆறுமாத காலத்திற்கும், அங்கிருந்து தம் மூதாதையர் வாழும் மண்டிலத்திற்கும், அதன் பின் ஆகாய வெளியும் சென்று ஆங்கிருந்து சந்திரமண்டிலத்தை அடைகின்றனர். அவ்விடத்தே கடவுளர்க்குரிய உணவாக மாறிப் பின்னர் கடவுளராய்ப் பிறந்து, தம் நற்செயல்கள் அனுமதிக்கும் வரை அங்கேயே வாழ்ந்து வருகின்றனர். நற்செயல்களின் விளைவு முற்றுப் பெற்றதும் வந்த வழியாகவே பூமண்டலம் திரும்புகின்றனர். முதலில் ஆகாயவெளி, பின்னர் காற்று ஆகின்றனர்; அப்புறம் புகையும் பின்பு பனித்துளியும் பிறகு மேகமுமாகி, மழைத்துளிகளாய்ப் பூமியில் வீழ்கின்றனர். பிறகு உணவுப் பொருள்களிற் புகுந்து மனிதரால் உண்ணப்பட்டு, முடிவில் அவர்களுக்கு மக்களாகின்றனர். மிக நல்ல செயல் புரிந்தோர் நற்குடும்பங்களிற் பிறக்கின்றனர். தீச் செயல் புரிந்தவராயின் விலங்குடல்கள் முதலிய இழி பிறவிகளாய்ப் பிறக்கின்றனர். விலங்குகளும் இடையருது இவ்வுலகிற்கு வருவதும் இதினின்றும் போவதுமாகவே இருக்கின்றன. அதனுலேதான் இப் பூமண்டலம் என்றும் முற்றிலும் நிறைந்ததாகவோ என்றும் காலியாகவோ காணப்படுவதில்லை.

இதினின்றுங்கூட நாம் பல கருத்துகளைப் பெறலாம். போகப் போக இவற்றினை நாம் நன்கு புரிந்துகொள்ளக்

கூடும்; இதன் பொருள் யாதெனத் துணிவதில் முயலவும் கூடும். சொர்க்கஞ் செல்லும் முதற் பாகத்தை விட ஆங்கிருப்பவர்கள் எங்ஙனம் பூமிக்குத் திரும்புகின்றனரென்பதே தெளிவாகத் தோன்றுகிறது. கடவுளை ஆராய்ந்தறியாவிடில் என்று முளதாம் சொர்க்க மெதுவும் கிடையாதென்பதே இதன் முழுக் கருத்துமெனத் தோன்றுகிறது. கடவுளின் மெய்யுணர்வு இல்லாதவரும், பயனைக்கருதியே இங்கு நற்செயல் புரிந்தவருமான சிலர் இறந்ததும் இத்தலம், அத்தலம் என்ற வழிகளால் சொர்க்கம் சேர்ந்து, நாம் இவ்வுலகிற் பிறப்பதுபோலவே தாமும் ஆங்குக் கடவுளரின் மக்களாய்ப் பிறந்து, தம் நற்பயன்கள் அனுமதிக்கும் வரை அங்கு வாழ்கின்றனர். வேதாந்தத்தின் அடிப்படையான கருத்தொன்று இதன் மூலம் வெளியாகிறது. அதாவது, பெயரும் உருவும் கொண்ட ஒவ்வொன்றும் நிலைத்திராததே என்பதுதான். இப் பூமி நெடுங்காலம் இராது, ஏனெனில் அதற்குப் பெயரும் உருவும் உள்ளன. இதேபோல சொர்க்கமும் அழிவுறுவதே, ஏனெனில் ஆங்கும் பெயரும் உருவும் தோன்றுகின்றனவே. அழியாச் சொர்க்கம் என்பது ஒன்றையொன்று மறுக்கும் எதிரிடைத் தொடராகும். ஏனென்றால் பெயரும் உருவமும் கொண்ட ஒவ்வொன்றும் நாளடைவிற் பிறந்து, உற்ற காலம் வரை இருந்து, உரியகாலத்தில் முடிவு பெற வேண்டும். இவை யாவும் வேதாந்தத்தின் முடிவாகப் பெறப்பட்ட கொள்கைகளே. இதனால் சொர்க்கங்கள் கைவிடப்படுகின்றன.

சொர்க்கம் என்றும் அழியாதது என்னும் கொள்கை சங்கிதையிற் காணப்படுகிறது. இது சற்றேறக் குறைய முகம்மதியரிடையேயும் கிறித்தவரிடையேயும் நிலவிவரும் கருத்துப் போன்றதே. இஸ்லாமியர் இதனை மேலும் சிறிதளவு திடவுருக் கொண்டதாக்குகின்றார்கள். அடித்தலத்தில் ஆறுகள் பாயும் தோட்டங்கள் கொண்டதே சொர்க்கம் என்கின்றார்கள். அராபியப் பாலைவனத்தில் தண்ணீரே மிகத் தேவையானது. ஆதலால்போலும் முகம்மதியன் தனது சொர்க்கத்தை என்றும் நீர் நிறைந்த இடமாகக் கற்பிக்கின்றான். நானோ, ஆண்டில் ஆறுமாதம் மழைபொழியும் நாட்டில் பிறந்தேன். எனவே சொர்க்கத்தை வரண்ட இடமாகவே நான்

உருவகப்படுத்த வேண்டும் போலும்! ஆங்கிலேயரும் அத்தகையவரே. சங்கிதை கூறும் இந்தச் சொர்க்கங்கள் என்றுமிருப்பவை. உலகை நீத்தோர் ஆங்குச் சுந்தர வடிவந்தாங்கித் தத்தம் மூதாதைகளுடன் வாழ்ந்து, என்றும் களித்திருப்பர். ஆங்குத்தம் பெற்றோர், மக்கள், மற்ற உறவினர்களையெல்லாம் சந்தித்து, நாம் இங்கு நடத்தும் வாழ்க்கை போலவே அவர்களும் அவ்வுலகில் நடத்துவர்; நம்மைவிட அவர்கள் அதிக இன்பம் பெறுவரென்பதே மாறுபாடு. நம் வாழ்க்கையில் இன்பம் துய்க்க உண்டாகும் இடும்பைகளும் இடையூறுகளும் ஆங்கு மறைந்துபோம்; இதன் நற்பகுதிகளும் ஆனந்தங்களுமே ஆங்கு மிகுந்திருக்கின்றன. இத்தகைய நிலைமையை எவ்வளவு சுகபோகங்கொண்டதாக மனிதவர்க்கம் கருதினும், மெய்ம்மை என்பதொன்று, சுகபோகமென்பது வேறொன்றே. மெய்ம்மையின் உச்ச நிலை அடையப்படும் வரை அது சுகமற்றதாகும் சந்தர்ப்பங்களுமுள்ளன. மிகுதியான மாறுதல் கோராமையே மனிதரியல்பு. ஒன்றைச் செய்து அது முடிந்ததும் அதனின்று விலக இயலாமல் துன்புறுவதே அது. புதிய கருத்துகளை மனம் ஏற்பதில்லை, ஏனெனில் அவை அசௌகரியத்தை விளைக்கின்றன.

உபநிடதங்களில் அற்புதமான ஒரு மாறுதல் நிகழ்வதைக் காண்கிறோம். இறந்த பின் மனிதர் தம் முன்னோர்களுடன் வாழ்ந்து வரும் இந்த சொர்க்கங்கள் நிலைத்திருப்பனவல்ல என அவை கூறுகின்றன. ஏனெனில், பெயரும் உருவமுங் கொண்ட எதுவும் அழியத்தானே வேண்டும்? உருக்கொண்ட சொர்க்கங்கள் இருப்பின் அவையும் நாளடைவில் மறைந்தே போகவேண்டும். கோடிக்கணக்கான ஆண்டுகள் வரை அவை இருந்துவரலாம், ஆயினும் அவை அழிய வேண்டிய காலம் ஒன்று வந்தே தீரும். இதனுடன் மற்றொரு கருத்தும் வெளிப்பட்டது. இந்த ஆன்மாக்கள் பூமிக்குத் திரும்பவேண்டியவையே; சொர்க்க மென்பது தம் செய்கையின் பலனை அனுபவிக்கும் தலமே. இப்பலன் முடிவெய்தியதும் அவை இப்புவிக்கே திரும்பிவிடுகின்றன. இதினின்றும் ஒன்று தெளிவாகிறது. அது, மிகப்புராதன காலத்திலே உற்பத்தி காரணம் பற்றிய தத்துவ அறிவு

மானிடவர்க்கத்திற்கு இருந்து வந்ததென்பது தான். நம் தத்துவசாத்திரிகள் இதனைத்தத்துவ தர்க்க மொழிகளால் எப்படி வெளியிடுகிறார்கள் என்பதைப் பின்பு காண்போம். ஆனால் இது பெரும்பாலும் குழந்தைகள் மொழி போலவே இப்போது காண்கிறது. இப்புத்தகங்களைப் படிப்பதால் ஒன்றுமட்டும் நீங்கள் குறிப்பிடலாம். அதாவது, அவை யனைத்தும் உள்நோக்கான உணர்வாகின்றன என்பதே. இது செய்முறையுடையதாயிருக்கக் கூடுமா என என்னைக் கேட்பீர்களாயின், முதலிற் செயல் முறையதாகவும் பின்னரே தத்துவ வழியதாகவும் இருந்ததென்று யான் பதிலுரைப்பேன். இவ்விஷயங்கள் முதலிற் காணப்பட்டுப் பின்னர் உணரப்பட்டு, அதன் பின்பே எழுதப்பட்டன என்பதை நீங்கள் காணலாம். பண்டைக்காலச் சிந்தனை யாளருடன் இவ்வுலகு பேசிற்று, பறவைகள் அவருடன் உரையாடின. விலங்குகள் பேசின, ஞாயிறும் திங்களும் அளவளாவின. சிறுகச்சிறுக அவர்கள் பொருள்களை உணர்ந்து இயற்கையின் இதயத்தினுட் புகுந்தனர். சிந்தித்து வந்ததாலன்று, தர்க்கவாதத்தாலன்று; நவீன காலப் பழக்கம் போலப் பிறர் மூளைகளினின்றும் கருத்து களைப் பொறுக்கிப் பெரியதொரு நூலியற்றியுமன்று; நான் செய்வது போல அவர்களுடைய நூல்களுள் ஒன்றைக் கொண்டு நீண்டதொரு சொற்பொழிவு நிகழ்த்துவதுமன்று. பொறுமை மிக்க திடமான ஆராய்ச்சியாலும் புதுமை கண்டு பிடித்தலாலுமே அவர்கள் மெய்ம்மையைக் கண்டறிந்தார்கள். அதன் திடமான முறை செயல்முறையே. இப்படியே இது என்றும் இருந்தாக வேண்டும். மதமென்பது எக்காலும் செய்முறையதான சாத்திரமே. உபதேச மொழிகளேயான மதம் என்றும் இருந்ததுமில்லை, இனி இருக்கப் போவதுமில்லை. முதலது செய்முறை, பிறகே அறிவு. ஆன்மாக்கள் திரும்புகின்றன என்ற கருத்து தொடக்க முதலே இருந்து வந்தது. பயன் கோரி நற் செய்கை புரிவோர் இதனை அடைகின்றனர், ஆனால் முடிவு நிலைத்ததன்று. காரணத்தின் அளவாகவே விளைவு தோன்று வதென்ற உற்பத்தி காரணக் கருத்து வெகு அழகாகக் குறிக்கப் படுவதை இங்கே நாம் பெறுகிறோம். காரணம்

இருப்பது போலத் தான் விளைவும் இருக்கும். காரணம் முடிவுள்ள தானுல் விளைவும் முடிவுற்றதே யாக வேண்டும். காரணம் என்றும் இருப்பதாயின் விளைவும் நிலைத்திருப்பதாகும். ஆனுல் நற்செயல் புரிவது முதலான எல்லாக் காரணங்களும் முடிவுறும் காரணங்களே யாகையால், முடிவற்ற விளைவுகளையுண்டாக்க இவற்ருல் முடியாது.

இனி இதே பிரச்சினையின் மறுபுறத்தைக் காண்போம். என்றும் நிலைத்துள்ள சொர்க்கம் இருக்க இயலாது; இக் காரணங் கொண்டே என்றும் நிலைத்த நரகமும் இருக்க இயலாது. என் வாழ்வில் ஒவ்வொரு கணமும் தீமை புரிவோனுன கொடியவன் நானென வைத்துக் கொள்ளுங்கள். ஆயினும் எனது முடிவற்ற வாழ்க்கையுடன் இங்குள்ள வாழ்க்கையை ஒப்பிட்டால், இது யாது மிலாததே. முடிவற்ற தண்டனை இருப்பதாயின், முடிவு கொண்ட காரணத்தினின்றும் முடிவில்லாத விளைவு ஏற்படுவதேயாகும். இப்படி இருக்க இயலாது. என் வாழ்வு முழுவதும் நலமே புரிந்து வருவேனுயின் முடிவிலாச் சொர்க்கம் எனக்குக் கிட்டுவதில்லை; அன்றேல் அதே தவறுதான் இதிலும் காணப்படும். மெய்ம்மையை யறிந்து அடைந்தோருக்கு மூன்ருவதொரு மார்க்க முண்டு. இந்த மாயைத்திரைக்கப் பாற் போக இது ஒன்றே வழி: மெய்ம்மையை உணர்வது. மெய்யுணர்வு யாதென்பதை உபநிடதங்கள் குறிப்பிடுகின்றன.

நன்மை அல்லது தீமை என்பனவற்றை ஒப்பாமலிருப்பதுடன் அனைத்தும் தான் என்பதிலிருந்து வெளிவருவதாக அறிவதே இதன் பொருள். தான் என்பது யாவற்றுள்ளும் இருப்பதே. உலகை மறுப்பதே இதன் பொருள்; அதைக் கண்டு கண்மூடியிருப்பதே, சொர்க்கத்திற் போல நரகத்திலும் ஆண்டவனைக் காண்பதே; உயிர்ப்பிலும் இறப்பிலும் ஆண்டவனைக் காண்பதே. நான் படித்த வாக்கியத்தின் சிந்தனைவழி இதுவே. ஆண்டவனிருப்புக்கு ஒரு சின்னமே இந்தப் பூமி, வானும் ஆண்டவனே, நாம் நிரம்பியுள்ள இடமும் அவனே. அனைத்தும் பிரம்மமே. இதனைக் காணவும் உணரவும் வேண்டும்; பேசவோ சிந்திக்கவோ

மட்டும் செய்தாற்போதாது. யாவற்றிலும் ஆண்டவன், பிரம்மம், நிறைந்திருப்பதாக ஆன்மா கண்டால் அதன் நியாயமான விளைவு இதுவே : அது சொர்க்கத்திற்கோ நரகத்திற்கோ, வேறெங்குமோ செல்வதைப் பற்றிக்கவலை கொள்ளாது; இப்பூமியில் மீண்டும் பிறக்குமோ சொர்க்கத்தில் வதியுமோ என்பது பற்றி நினையாது. அந்த ஆன்மாவிற்கு இக்கருத்துகள் யாவும் பொருளற்றவையாகவே தோன்றும் ; ஏனெனில் அதற்கு எவ்விடமும் ஒரே தன்மையானதே, ஒவ்வோரிடமும் ஆண்டவரது திருக்கோயிலே. ஒவ்வொரு தலமும் புனிதமாய் விட்டது; சொர்க்கத்திலோ நரகத்திலோ வேறெங்குமோ அது காண்பது ஆண்டவன் இருக்கையே. நல்லதன்று, தீயதன்று ; உயிர்ப்பன்று, இறப்பு மன்று ; உள்ளது முழுவதும் ஒன்றேயான முடிவற்ற பிரம்மமே.

வேதாந்தத்தின்படி, மனிதன் இந்தக் காட்சி பெறுவானுயின் அவன் சுதந்தரனுவான். அவன் ஒருவனே இவ்வுலகில் உயிர்த்திருக்கத் தகுதியுடையோன்; மற்றவரன்று. தீமையைக் கண்டவன் இவ்வுலகில் எப்படி வாழ இயலும்? அவன் வாழ்க்கை ஒரு துன்பச் சுழலேயாம், அபாயங்களையும் இறப்பையும் காண்பவன் துயருடனே வாழ்கிருன். மெய்ம்மையை அறிந்து அதை யாவற்றிலும் கண்டவனே இவ்வுலகில் வாழ்ந்து, "நான் இவ்வாழ்க்கையை நுகர்கிறேன்,இவ்வாழ்க்கையில் நான் இன்புற்றிருக்கிறேன்" என்று சொல்ல இயலும். மற்றுமொன்று : நரகம் பற்றிய கருத்து வேதங்களில் எவ்விடத்தும் இல்லையென நான் உங்களுக்குக் கூறுவேன். மிகவும் பின்னரே அது புராணங்களில் காணப்படுகிறது. வேதங்களின்படி மிகக்கடுமையான தண்டனை யாதெனில் மண்ணுலகு திரும்புவதே; இங்கு மற்றுமொரு வாய்ப்புக் கொள்வதே. தொன்று தொட்டு இக்கருத்து அருவ நெறிக்குச் செல்வதை நாம் காண்கிறோம். தண்டனையும் பரிசும் என்ற கருத்துகள் வெறும் பௌதிகமானவை, அவை நம்மைப் போன்ற மானிடக் கடவுள் ஒருவனை நேசிப்பதும் இன்னொருவனை வெறுப்பதும் செய்வதுடன் இயைகின்றன. அத்தகைய கடவுள் இருப்பதாலேயே தண்டனையும் பரிசும் பொருந்துகின்றன. சங்கிதையில் அத்தகைய

கடவுள் இருந்தார். அச்சமென்ற கருத்து அங்கே புகுவதாகக் காண்கிறோம். ஆனால் உபநிடதங்கள் தோன்றுவதுடன் அது மறைந்து அதற்குப் பதிலாக அருவம் என்ற கருத்து வருகின்றது. அருவம் என்னும் கருத்து மனிதனுக்கு புரிந்து கொள்ள மிகவும் கடினமென்பது இயற்கையே. ஏனெனில் அவன் என்றும் உருவத்தையே தழுவி நிற்பவன். பெருஞ்சிந்தனையாளர்கள் எனக் கருதப்படுவோரும் அருவக் கடவுளென்றால் வெறுப்படைகின்றனர். ஆனால் கடவுளை மனித உருவில் எண்ணுவது பொருளற்றதென்றே எனக்குத் தோன்றுகிறது. உயிர்க்கடவுளா அல்லது உயிரற்ற கடவுளா, எது உயர்தரக் கருத்து? எவனும் காணாத, அறியாத கடவுளா அல்லது அறியப்படும் கடவுளா?

அருவக் கடவுளே உயிர்க்கடவுள்; அந்நிலையில் அது ஒரு தத்துவமாகும். உருவக் கடவுளுக்கும் அருவக் கடவுளுக்கும் மாறுபாடு இதுவே: உருவக் கடவுள் மனித வடிவோடு நின்றுவிடும். ஆனால் அருவக் கடவுளோ, ஒரு தெய்வமாகவும் மனிதனாகவும் ஒரு விலங்காகவும் திகழும். இத்தகைய காட்சிகளோடு அது நில்லாமல் கட்புலனுக்கப்பாலுள்ள ஒன்றையும் அது சுட்டும். உலகில் உள்ள உருவங்களனைத்தையும் கணக்கிறந்த பலவற்றையும் ஒன்று கூட்டிய மொத்தமே அது. "இவ்வுலகில் தோன்றும் ஒரே தீ பல வடிவங்களில் மிளிர்ந்தாலும், அது அவ்வடிவங்களைக் கடந்து நிற்பதே போல" அருவமும் நிற்கிறது.

உயிர்க் கடவுளையே நாம் வழிபட விழைகின்றோம். கடவுளைத் தவிர வேறெதையும் நான் என் வாழ்க்கை முழுதிலும் கண்டதில்லை. நீங்களும் அத்தகையவர்களே தான். இந்த நாற்காலியைக் கண்ணுற வேண்டுமானால், கடவுளைத் தரிசித்த பின்னரே அவர்மூலம் நீங்கள் நாற்காலியை நோக்குகின்றீர்கள். "நான் உள்ளேன்," என்று சொன்னவண்ணமே அவர் எங்கும் இயங்குகின்றார். "நான் உள்ளேன்," என்று உணர்ச்சியுறுங்கணமே நீங்கள் உங்களுடைய இருப்பை அறிந்தவர்களாகின்றீர்கள். நம்முடைய இதயத்துள்ளும் மற்றும் ஒவ்வோர் உயிரிலும் அவரைக்காண நம்மால் இயலாதாயின், கடவுளை நாடி வேறெங்குப் போவது? 'ஆணும் நீயே, பெண்ணும் நீயே; சிறுமியும் நீயே; சிறுவனும் நீயே;

தடியூன்றித் தள்ளாடிச் செல்லும் கிழவனும் நீயே; கிளரொளி இளமைச் செருக்கில் பெருமிதம் கொள்ளும் இளைஞனும் நீயே; இருக்கின்ற அனைத்தும் நீயே. வையகத்தில் வியத்தகும் ஒன்றேயான மெய்ப்பொருள் நீயே.' ஒரு திரைக்குப் பின்னால் எங்கோ உறைவானும், எவராலும் காணக்கூடாதவனுமான பரம்பரைக் கடவுளைப் பற்றிய கருத்திற்கும் இக்கருத்திற்கும் மிகவும் அச்சுறுத்தும் முரண்பாடு தோன்றக்கூடும். தம் அடியொற்றி மக்கள் நடந்தாகவேண்டும்; தாம் இடித்துக் கூறும்அறிவுரைகளுக்குச் செவிசாய்க்க வேண்டும்; தாம் வகுத்த நெறியில் போக வேண்டும் என்று சமயக் குருக்கள் மொழிகின்றார்கள். இப்படி நடந்தாற்றான் ஆண்டவரின் திருமுகத்தைக் கண்டுதரிசிக்க அனுமதிச் சீட்டு அளிக்கப்படுமாம். சுவர்க்கங்களைப் பற்றிய கருத்துகள் யாவும் சமய குருக்களின் பொருளற்ற பொய்புதைந்த தொழில் முறையின் வேறுபாடுகளே தவிர வேறல்ல.

இந்த அருவக் கருத்து அழிக்கும் தன்மை வாய்ந்தது; சமய குருக்களுடைய தொழிலை அகற்றிவிடுகின்றது. மாதா கோயில்கள், கோயில்கள் இவற்றிற்குரிய தொழிலும் அறவே அழிந்துபோய்விடுகின்றது. இப்பொழுது இந்தியாவில் பஞ்சம் நடமாடுகின்றது. ஆனால், அங்கே பல கோயில்கள் உள்ளன. ஒவ்வொன்றிலும் ஓர் மன்னனையே மீட்கக்கூடிய அணிகலங்கள் திகழ்கின்றன. இந்த அருவக் கருத்தை அவர்கள் மக்களுக்குப் போதிப்பார்களேயாகில், அவர்களுடைய தொழில் மறைந்தே போய்விடும். எனினும், தன்னலமின்றிக் குருக்கள் தொழிலகற்றி நாம் அறிவுரை வழங்கவேண்டும். நீயே கடவுள்; நானும் அவ்வண்ணமே. யார் யாருக்கு அடிபணிந்து ஒழுகுவது? நீயே அவன் உறையும் வானளாவும் கோயில். வேறெந்தக் கோயிலையோ உருவத்தையோ, அல்லது கிறித்தவ வேத நூலையோ வழிபடுவதைவிட, நான் உன்னை வழிபடுவதையே சிறப்பென உன்னுவேன். சிலர் முரண்பட்ட கருத்துள்ளவராய் ஏன் இருக்கின்றனர்? நம் விரல்களினூடே நழுவியோடும் மீன்களை ஒத்தவர்களே இவர்கள். தாங்களே செயல் துறையிற் பழுத்த கிழவர்கள் என்று இயம்புகின்றார்கள். நல்லது தான். ஆனால், இவ்விடத்தே, உன்னையே வழிபடுவதைவிட வேறெது செயல்

முறையாக இருக்கக்கூடும்? நான் உன்னைக் காண்கின்றேன், தொட்டறிகின்றேன். நீயே கடவுளென உணர்ந்துள்ளேன். அல்லாவைத் தவிர்த்து வேறு கடவுளை இல்லையென மகம்மதியன் மொழிகின்ருன். கடவுள் அல்லாதது எதுவுமே இல்லையென வேதாந்தம் சாற்றுகின்றது. உங்களுள் பலரை இக்கூற்று அச்சுறுத்தலாம். ஆயினும், இதைக் கொஞ்சம் கொஞ்சமாக நீங்கள் அறிந்து கொள்வீர்கள். உயிர்க் கடவுள் உம்முள்ளேயே உறைந்து வருகிருர். அப்படியிருந்தும் நீங்கள் மாதாகோயில்களையும் ஆலயங்களையும் கட்டுகிறீர்கள்; மற்றும் பல கற்பனைப் பிதற்றல்களில் நம்பிக்கை கொள்கிறீர்கள். வழிபடத்தக்க தெய்வம் மனித உடலிலுள்ள மனித ஆன்மா ஒன்றே. எல்லா விலங்குகளும்கூட ஆலயங்களே. ஆனுல் மனிதனே இவற்றுள் சிறந்தவன், ஆலயங்களுள் தாஜ்மஹால் போல. இதனை வழிபட இயலாதவனுயின் வேறெந்த ஆலயமும் எனக்கு ஒருவிதப் பயனும் தராது. ஒவ்வொரு மனிதனுள்ளும் உறைந்த இறையை நான் உணர்ந்து ஒவ்வொரு மனித உயிர் முன்னும் அவரை நான் வணங்கி நின்ற கணமே, நான் தளைகளற்று சுதந்திரனுகின்றேன்.

இதுவே மிகவும் செயல் முறைக்கேற்ற வழிபாடாகும். கொள்கைகளை அமைத்துச் சிந்தனை செய்வதில் அது உறையவில்லை, இருந்தும் இம்முறை பலரையும் அச்சுறுத்துகிறது. இது தக்கதன்று என்கிருர்கள். ஏதோ சொர்க்கத்தில், எங்கோ இருக்கும் கடவுளொன்று, எவரிடமோ தானே கடவுளெனக் கூறியதாகத் தமது முப்பாட்டன்மார்கள் தமக்குள் கூறிவந்த பழைய இலட்சியங்களையே இவர்கள் ஓதி வருகிருர்கள். அக்கால முதல் நம்மிடை உபதேசங்கள் மட்டுமே இருந்து வருகின்றன. அவர்களது செய்முறை இவ்வளவே! நம் கருத்துகளோ, செயல் முறைக் கொவ்வாததாம். ஒவ்வொருவருக்கும் விருப்பமான பாதையை அவனவன் பற்ற வேண்டுமென வேதாந்தம் கூறுவது உண்மையே. ஆனுல் முடிவெல்லை பாதையாகாது. சொர்க்கத்திலுள்ள கடவுள் வழிபாடு, மற்றும் இதைப் போன்றவையெல்லாம் கெடுதலில்லை; ஆனுல் இவையனைத்தும் மெய்யை நோக்கிச் செல்லும் படிகளே தவிர, மெய்யாகாது. இவை நல்லவை,

அழகானவை; இவற்றுள் வியத்தகு கருத்துகளும் உள்ளன. ஆனால் ஒவ்வொரு நிலையிலும் வேதாந்தம் கூறுவதென்ன? "அன்பரே, அறியப்படாதவரென நீர் வழிபடும் அவனை நீரே தானென்று நான் வழிபடுகிறேன். அறியவொண்ணாதவனென எவனை நீர் வழிபட்டு உலகமுழுதும் தேடுகிறீரோ, அவன் இக்காலமெல்லாம் உமதுள்ளேயே உறைகின்றான். அவன் மூலமே நீர் உயிர்த்துள்ளீர்; அவனே இவ்வுலகின் நிலைபெற்ற சான்று." "வேதங்களனைத்தும் வழிபடும் அவன்—அல்ல, இன்னும் அதிகமாக, என்றுமுள்ள 'நான்' என்பதுள்ளே என்றும் இருந்துவரும் அவன் இருப்பானாயின் உலகனைத்தும் இருப்பதாகும். அவனே உலகின் ஒளியும் உயிரும். அந்த 'நான்' உம்முள் இன்றேல் கதிரவனைக் காணவும் உம்மாலியலாது; அனைத்தும் இருட்கட்டையாகவே தோன்றும். அவன் ஒளியிட்டால் உலகை நீங்கள் காணலாம்."

மிகப் பொதுவான ஒரு வினா எழும்புகிறது. இதெல்லாம் மிகப் பெரிய கஷ்டத்திற்கு வழிவிடுமென்பதே அது. "நானே கடவுள்; நான் செய்வதெல்லாம், சிந்திப்பதெல்லாம் நன்மையே. ஏனெனில் கடவுள் தீமையேதும் செய்வாரா?" என்று நம்முள் ஒவ்வொருவரும் நினைக்கலாம். முதலில் இத்தகைய தவறான பொருள் கொள்ளலின் அபாயம் இருப்பதாகவே வைத்துக் கொள்வோம். ஆனால் மறுபுறத்தில் அதே அபாயம் இல்லையென மெய்ப்பிக்கக் கூடுமோ? தம்மினும் வேறான, அச்சுறுத்துவதும் சொர்க்கத்தில் உறைவதுமான கடவுளை இவர்கள் வழிபட்டு வந்துள்ளனர். அச்சுற்று நடுங்கிய வண்ணமே இவர்கள் பிறந்தனர்; வாழ்க்கை முழுதும் நடுங்கியே கழிக்கின்றனர். இதனால் உலகு எவ்வளவேனும் செம்மைப் பட்டதா? உருவக்கடவுளை அறிந்து வழிபடுவோர் ஒருபால், அருவக்கடவுளை அறிந்து வழிபடுவோர் ஒருபால்; இவர்களுள் உலகிற் சிறந்த செயலாளர், ஒழுக்கம் வாய்ந்த பெருஞ் செயலாளர் எப்பக்கம் இருந்து வந்தனர்? திண்ணமாக அருவக்கடவுள் பக்கமேதான். அச்சங் காரணமாக அறநெறி வளரக்கூடுமென நாம் எங்ஙனம் எதிர்பார்ப்பது? அது எக்காலும் ஆகாததே. "ஒருவரை வேறொருவர்

காண்பது, அல்லது ஒருவர் வேறு ஒருவருக்குச் செவி சாய்ப்பது, இவை யாவும் மாயையே. வேறு ஒருவர் இருப்பதைக் காணுக்கால் வேறு ஒருவர் கூறுவதைக் கேளாக்கால்—எல்லாமே ஆ ன் ம ா வ ா கி விட்டால்—யாரை யார் காண்பது? எவரை எவர் உணர்வது?" அவையனைத்தும் அவனே; அதே மூச்சில் நானே! அந்நிலையில் ஆ ன் ம ா தூய்மை அடைந்து விட்டது. பின்னரே தான் அன்பு என்பது யாதென்பதை நாம் அறிந்து கொள்கிறோம். அன்பு அச்சங் காரணமாக வருவதன்று; அதன் வேர் சுதந்தரமே. உண்மையாக நாம் உலகின்மீது அன்பைச் சொரியும் போது தான் மனித இனத்தின் சகோதர இயல்பு என்பதை அறிந்து கொள்ளக்கூடும்; அதற்கு முன்பு அன்று.

ஆகவே அருவக் கொள்கை அளவு கடந்த மாபெருந் தீச்செயலில் உலகத்தை ஈர்த்துவிடும் என்று இயம்புவது தவறு. உருவக் கொள்கை மட்டும் வாளா இருந்துவிட்டதா? அது கணக்கற்ற தீச்செயல்களுக்கு இழுத்துச்செல்லவில்லை, அது மதப்பிளவுகளை உண்டுபண்ண வில்லை, உலகத்தையே ஒரு குருதிக் கடலாகக்வில்லை; ஒருவரை ஒருவர் பிய்த்துக் கிழித்துக்கொள்ளவில்லை என்று கூற இயலுமோ? "என் கடவுளே உயர்வற உயர்ந்த கடவுள். இந்தக் கொள்கையைப் போர் முனையில் தடங்கலின்றித் தீர்மானித்துக் கொள்ளுவோம்." துவைதக் கொள்கையால் உலகெங்கும் எழுந்த விளைவு இதுவேயாகும். பகலின் பரந்த ஒளியிடையே வாருங்கள். குறுகிய பாதைகளை விட்டு வெளியேறுங்கள். எல்லையற்றதான ஆன்மா ஒடுங்கிய பள்ள நெறிகளில் வீழ்ந்து மாயுமா? ஒளியுலகிற்கு வருக. வையகத்தில் அனைத்தும் உம்முடையனவே. கைகளை நீட்டி அவற்றை அன்புடன் அணைக. அப்படிச் செய்ய வேண்டுமென எப்பொழுதாவது உணர்ச்சி எழுமாயின் நீங்கள் அக்கணமே கடவுளை உணர்ந்தவர்களே.

மிகவும் வியக்கத்தக்கதும் எல்லையற்றதுமான இந்த அன்பு என்பதே ஞாலம் முழுதும் பொங்கிப் பரக்கக்காணும் வரை, தெற்கிலும், வடக்கிலும், கிழக்கிலும், மேற்கிலும், விண்ணிலும், மண்ணிலும் தம் அன்பாம் சிந்தனை செல்ல வேண்டும் என்று இயம்பிய புத்தரின் அறவுரை உங்களுக்கு

நினைவிருக்குமன்றோ? அந்த உணர்ச்சி கொள்ளும்பொழுதே நீங்கள் உண்மையான தோற்றப் பொலிவு கொள்வீர்கள். உலக முழுவதும் ஒரே புருடனே; அற்ப விஷயங்களை அகற்றுவீர்களாக. எல்லையற்ற ஒன்றிற்காகச் சிறியவற்றை உதறித்தள்ளுங்கள். ஆராவமுதிற்காகச் சிற்றின்பங்களை ஒழியுங்கள். அனைத்தும் உம்முடையனவே, ஏன் எனில் அருவம் உருவத்தைத் தன்னிடையே அடக்கிக் கொள்வதாம். கடவுள் ஒரேயடியாக உருவமாகவும் அருவமாகவும் உள்ளார். எல்லையற்ற அருவமான புருடன் மனிதனுகப் புலப்படுகின்றான். எல்லையற்ற நாம் நம்மையே சிறு பாகங்களாகக் கட்டுப்படுத்தி யிருக்கிறோம். முடிவற்றிருப்பதே நமது உண்மையான இயல்பென வேதாந்தம் விவரிக்கிறது. அதென்றும் மறையாது, என்றும் இருந்தே வரும். ஆனால் நாமே நம் கருமங்களால் நம்மைக் கட்டுப்படுத்திக் கொள்கிறோம். கழுத்தைச் சுற்றிக் கட்டிய சங்கிலிபோல இக்கருமம் என்பது நம்மை இந்தத் தளையுறும் நிலைக்கு இழுத்து வந்துள்ளது. அந்தச் சங்கிலியை அறுத்தெறிந்து சுதந்தரராயிருங்கள். நியதி என்பதைக் காலின் கீழிட்டு மிதியுங்கள். மனிதரியல்பில் நியதி என்பதே இல்லை; ஊழுமில்லை, விதியுமில்லை. எல்லையற்றதில் நியதி என்பது எப்படி இருக்கக்கூடும்? சுதந்தரமே அதன் காப்புச் சொல்; அதன் இயல்பு, பிறப்புரிமை. சுதந்தரராயிருங்கள், அதன்பின் உங்கள் விருப்பப்படி எத்தனை வடிவங்களேனும் கொண்டிருங்கள். அதற்குப்பின் நாடகமேடையேறி, பிச்சைக்காரன் வேடந்தாங்கி நடிக்கும் நடிகன்போல நாமும் நடிப்போம். அவ்வேடம் பூண்டவரையும் உண்மையாகவே தெருக்களில் திரியும் பிச்சைக்காரர்களையும் ஒப்பிட்டுப் பாருங்கள். இருவர் விஷயத்திலும் காட்சி என்னமோ ஒன்று போலிருக்கலாம், உரையாடலும் ஒரேவண்ணமெனக் காணலாம். ஆயினும் எவ்வளவு மாறுபாடு! ஒருவன் தன் வறுமை வேடத்தைச் சுவைக்கிறான், மற்றவன் ஏழ்மையால் துயருறுகிறான். இம்மாறுபாட்டை உண்டாக்குவது எது? ஒருவன் சுதந்தரன், மற்றவன் கட்டுண்டவன். தன்வறுமை உண்மையன்று எனவும் அது நாடகத்திற்காக ஏற்றுக்கொண்டதென்றும் நடிகன் உணர்கிறான். உண்மைப் பிச்சைக்காரனே,

தான் விரும்பினும் விரும்பாவிட்டாலும் அதைச் சகித்தே தீரவேண்டுமென்றும் கருதுகிறுன். இதுவே நியதி. நமது உண்மை இயல்பு தெரிந்திடும்வரை இயற்கைச் சத்திகள் ஒவ்வொன்ருலும் முன்பின் அலேக்கப்பட்டு, இயற்கை யிலுள்ள ஒவ்வொன்றிற்கும் அடிமைப்படும் பிச்சைக்காரர் களே நாம். உலகெங்கும் கைகட்டி உதவிகோரிக் கதறு கிருேம், ஆனுல் உதவி நமக்குக் கிட்டுவதில்லே; கற்பனேக் கடவுளரை நோக்கிக் கண்ணீர் உதிர்க்கிருேம், ஆயினும் உதவி கிட்டுவதில்லே. அதற்கப்புறமும் உதவி அகப்படு மென்று நம்பியிருக்கிருேம்; இப்படிக் கண்ணீருகுத்தும் கதறி யழுதும், நம்பிக்காத்தும் ஒரு வாழ்க்கை கழிகிறது; இந்த ஆட்டம் இப்படித் தொடர்ந்தே செல்கிறது.

சுதந்தரராயிருங்கள்; எவரிடமும் எதையும் எதிர்பாரா தீர்கள். உங்கள் கடந்த வாழ்க்கையைச் சிறிது பின்னோக்கிப் பார்ப்பீராகில், நீங்கள் என்றும் வாராத உதவிக்காக மற்ருேரி டம் எப்போதும் வீணில் எதிர்பாத்திருந்தீர்களென்பது திண்ணமாகத் தெரியவரும். கிடைத்த உதவியெல்லாம் உங்களுடைய உட்புறத்திலிருந்து வந்ததே. நீங்கள் உழைத்ததன் பயனேயே பெற்றுள்ளீர்கள், ஆயினும் எப் போதும் உதவியை விந்தையாக வேண்டி நின்றீர்கள். தன வந்தன் வீட்டின் முன்புறம் என்றும் நிறைந்து காணப்படும். ஆனுல் நன்கு சிந்திப்பீராகில், எப்போதும் ஒரே மனிதர்களே அங்கு இருப்பதில்லே. தனவந்தரிடமிருந்து தமக்கு ஏதேனும் கிடைக்குமென்றே அங்கு காத்துக்கிடப்போர் என்றும் நம்பி யிருப்பர்; ஆனுல் ஒரு போதும் ஒன்றும் கிடைப்பதில்லே. இப்படியே முடிவிலா நம்பிக்கை, நம்பிக்கை என்பதிலேயே நமது வாழ்வெல்லாம் கழிந்துவிடுகிறது. 'நீ எதிர்பார்ப்பதைக் கைவிடு,' என்கிறது வேதாந்தம். நீங்களேன் கோரிக்கிடக்க வேண்டும்? நீங்கள் அனைத்தும் உடையவர்கள்; அம்மட்டோ, நீங்களே அனைத்தும். நீங்கள் எதற்காக ஆசை கொள் கிறீர்கள்? ஒரு மன்னன் பித்தனுகி, தன் நாட்டரசனேத் தேடித் திரிவானுயின் அன்னுனே என்றும் கண்டுபிடிக்க அவன் இயலாதவனே; ஏனெனில் அவனே அந்த அரசன். தன் நாட்டின் ஒவ்வோர் ஊரிலும் நகரிலும், ஒவ்வொரு வீட் டிலும் கதறிக் கண்ணீர் விடுத்துத் தேடி அலேந்தாலும்

அன்னனைக் கண்டுபிடிக்க இயலாது; ஏனெனில் அவன் தானே அவ்வரசன்? நாமே பைத்தியத்தை விடுவதே நலம். நாமே கடவுளென்றறிந்தால் ஆனந்தமும் திருத்தியும் கொண்டவராவோம். இந்தப் பைத்தியக்கார நாட்டங்களை யெல்லாம் விடுத்து, நாடகமேடை நடிகனைப்போல இவ் வுலகில் உங்களுக்குரிய பகுதியை ஏற்று நடியுங்கள்.

நம் நோக்கு முழுவதும் மாறுபாடடைந்து, இவ்வுலகம் முடிவிலாச் சிறைச்சாலையாய் இராமல் விளையாட்டுத் தல மாகத் தோன்றும்; போட்டித் தலமாவதை விடுத்து என்றும் இளவேனிலும் மலரும் பூக்களும், பறக்கும் வண்ணப் பூச்சி களும் கொண்ட ஆனந்த உலகமாகும். முன்னர் நரகமா யிருந்த இவ்வுலகே சொர்க்கமாய் விடும். கட்டுண்டவர் களுக்கு இ∴தொரு பயங்கரமான இன்னல் நிலமாகும்; ஆனல் சுதந்தரர் பார்வையில் வேறுவிதமாகக் காணப் படும். இந்த ஒரு வாழ்க்கையே உலகப் பொதுவாழ்க்கை; சொர்க்கங்களும் மற்ற எல்லா இடங்களும் இங்கேயே உள்ளன. மனித உருத்தாங்கிய தெய்வங்களும் இங்கே உள்ளனர். தெய்வங்கள் தமது உருவத்தில் மனிதனைப் படைக்கவில்லை, மானிடனே தன்னுருவில் தெய்வங்களைப் படைத்தான். முக்கியமான உருவங்கள் இதோ உள்ளன: இதோ இந்திரன், இதோ வருணன், உலகிலுள்ள கடவுளர் யாவரும் இதோ உள்ளனர். நாம் நமது சிறிய இரட்டை வடிவங்களை வெளியே தள்ளி வந்தோம்: நாமே இக்கட வுளரின் மூல உருவங்கள். நாமே மெய்யான, வழிபடுவதற் குரிய தெய்வங்கள். இதுவே வேதாந்தக் கருத்தும் அதன் செய்முறையும். சுதந்தரரானதுமே பித்தேறி சமூகத்தை விடுத்துக் காட்டிற்கோ குகைக்கோ ஓடிப்போக வேண்டுவ தில்லை. இருந்தவிடத்தே இருப்போம், அனைத்தையும் அறிந்து கொள்வோம்; அவ்வளவே. அதே நிகழ்ச்சிகள் தொடர்கின்றன, ஆனல் புதுப்பொருளைத் தருகின்றன. நாம் இன்னும் உலகை அறிந்தவரல்ல; சுதந்தரர் ஆகும் போதே அதன் மெய்யான இயல்பை அறிந்து கொள்வோம். விதி அல்லது நியதி என்று சொல்லப்படுவது நம் இயல்பின் மிகச் சிறுதுளியே என்று அப்போது காண்போம். அது ஒரு பக்கமே, மறுபக்கத்தில் எப்போதும் சுதந்தரம் இருந்து

வந்தது. இதைத் தெரிந்து கொள்ளாமல், தீமையினின்று நம்மைக் காப்பாற்றிக் கொள்வதற்கு வேட்டையாடப்பட்ட முயலைப்போல நம் முகத்தைத் தரையில் புதைத்துக் கொள்கிறோம். மாயையால் நம் இயல்பை மறந்துவிட முயன்று வந்தோம், ஆனால் அது இயலவில்லை. சுயஇயல்பு எப்போதுமே நம்மைக் கூவியழைத்தது : கடவுள் அல்லது கடவுளர், வெளிச் சுதந்தரம் இவற்றை நாடியதுஉண்மையில் நம் இயல்பின் நாட்டமே. குரலைத் தவறாக எடுத்துக்கொண்டோம்: அது தீயினின்றோ அல்லது கடவுள், ஞாயிறு, திங்கள், விண்மீன்கள் இவற்றினின்றோ வருவதாகக் கருதினோம். ஆனால் முடிவில் அது நம்முள்ளேயே எழுந்ததாகக் கண்டுகொண்டோம். என்றுமுள்ள சுதந்திரத்தைப் பேசி வரும் இந்த அழியாக்குரல் நம்முள்ளேயே உள்ளது; இதன் நாதகீதம் என்றும் ஒலித்து வருகிறது. இந்த ஆன்ம கீதத்தின் ஒரு பகுதி பூமியாகவும் நியதியாகவும் இப் பிரபஞ்சமாகவும் உள்ளது. எனினும் அஃதென்றும் நமதாகவே இருந்தது, இன்னும் அப்படியே இருந்துவரும். ஒரே சொல்லில், வேதாந்தத்தின் குறிக்கோள் மனிதனின் உண்மையான தன்மையை அறிவதே. இதுவே அதன் நற்செய்தி: கட்புலனாங் கடவுளாகிய உங்கள் உடன் பிறந்த மனிதனை வழிபட மாட்டீர்களெனில், வெளித்தோன்றாத கடவுளை நீங்கள் எப்படி வழிபடக்கூடும்?

"நீங்கள் கண்டுவரும் உமதுடன்பிறந்தார்மீது உங்களால் அன்புகொள்ள முடியாது போல், நீங்கள் கண்டிராத கடவுள்மீது எப்படி அன்புவைக்கக் கூடும்?" என விவிலிய நூல் சொல்வது உங்களுக்கு நினைவில்லையா? மானிட வதனத்தே கடவுளைக் காண இயலாது போனால், முகில்களிலோ அல்லது மங்கிய உயிரற்ற பொருள்களாற் செய்த பிரதிமைகளிலோ, அல்லது உங்கள் மூளை புனையும் பொய்க் கதைகளிலோ அவரை எங்ஙனம் காணக்கூடும்? ஆணிலும் பெண்ணிலும் கடவுளைக் காண நீங்கள் தொடங்கும் நாள் முதலே உங்களை நான் மதப்பற்றுள்ளவர்கள் என வழங்குவேன். 'உனது வலது தாடையில் அடிப்பவனுக்கு இடத் தாடையையும் காட்டு,' என்பதன் உட்பொருளை அதன் பின்பே நீங்கள் புரிந்துகொள்வீர்கள். மனிதனையே

கடவுளாகப் பார்க்குங்கால் அனைத்தும்—ஒரு புலியுங் கூட உங்களுக்கு உவப்பானவை யாயிருக்கும். நம் முன் பல வேறு உருக்களில், நமது தந்தையாகவும் தாயாகவும், குழந்தையாகவும் நண்பனுகவும் தோன்றும் ஒவ்வொருவரும் அந்த அறிவிலா ஆண்டவரே, நம்முடன் விளையாடும் நமது ஆன்மாவே.

நமது மானிட உறவு முறைகள் இப்படித் தெய்விகப் படுவது போலவே, கடவுளுடன் நம் உறவு முறையும் இவ்வுருக்களில் எதுவேனும் கொண்டதாகலாம். ஆண்டவனை நாம் தந்தை தாய்போலவும், அல்லது நண்பன் காதலன் போலவும் கருதலாம். கடவுளைத் தந்தையாய் வழங்குவதைவிடத் தாயெனக் கொள்வது சிறந்த குறிக்கோளாகும்; அவனை நண்பனென நினைப்பது இன்னும் சிறந்ததாகும், யாவற்றினுஞ் சிறந்தது அவனைக் காதலன் என மதிப்பதே. காதலிப்பவனுக்கும் காதலிக்கப்படு பவனுக்கு மிடையே மாறுபாடொன்றும் பார்க்காததே யாவற்றினும் மிகச் சிறந்தநோக்கு. பழைய பாரஸிகக் கதை உங்களுக்கு நினைவிருக்கலாம்: காதலனொருவன் தன் காதலி வீட்டைந்து கதவைத் தட்டினுன். "நீ யார்?" என்னும் குரல் கேட்டது. "நானே," என்று பதிலிறுத்தான் அவன்; பதிலொன்றுங் கிடைக்கவில்லை. இன்னொரு முறை வந்து, "இதோ யான் வந்திருக்கிறேன்," என்றுன்; கதவு திறக்கப்படவில்லை. மூன்று முறை வந்தான். "யாரங்கே?" என்று கேட்டது உள்ளிருந்த குரல். அவன், "என் அன்பே, நீயேயன்றே நான்?" என்றுன்; கதவும் திறந்தது. இத்தகையதே கடவுளுக்கும் நமக்குமுள்ள உறவுமுறை. அவன் ஒவ்வொன்றிலும் உளன்; அவனே யாவும். ஒவ்வோர் ஆணும் பெண்ணும் தொட்டறியவல்ல, உயிர்த்துள்ள, ஆனந்தமயமான கடவுளே. அறியப்படாத பொருள் கடவுள் என யார் கூறுவது? அவனைத் தேடிக் கண்டுபிடிக்கவேண்டுமென எவர் சொல்வது? எக்காலமும் நாம் கடவுளைக் கண்டிருக்கிறேம், எப்போதும் அவனுள்ளே உயிர்த்து வருகிறேம்; அவனெங்கும் எல்லாக்காலமும் அறியப்பட்டவன், வழிபடப்பட்டவனே.

இதன் பின்னர் இதர வழிபாட்டு முறைகள் தவறன்று என்னும் கருத்தும் உதிக்கிறது. எவ்வளவோ நயமற்றதென நாம் கருதுவதாயினும், சடங்குகள் கொண்டும் உருவங்கள் கொண்டும் கடவுளை வணங்குவோர் தவருன வழியிற் செல்பவரல்லர் என்பது நாம் நினைவு கூர வேண்டியவற்றுள் சீரியவொரு கருத்து. இஃது மெய்ம்மையினின்றும் மெய்ம்மைக்கு முன்னேறும் பிரயாணம் : தாழ்ந்த மெய்ம்மையினின்று உயர்வகைக்குச் செல்வது. இருளென்பது ஒளி குறைந்த நிலை, அசுத்தமென்பது சுத்திகுறைந்த நிலை. அன்பொழுகு கண்கொண்டு, கருணைததும்பு மனங்கொண்டு நாம் நடந்த பாதையிலேயே மற்றவரும் நடந்துவருகிருர்களென்று எப்போதும் நினைவில் வைத்தொழுகுவது அவசியம். நீங்கள் சுதந்தரராயின் மற்றவரும் சற்று முன்பின்னுக அங்ஙனமே யாவரென்று அறியவேண்டும்; நீங்கள் சுதந்தரர்கள் ஆயின் நிலையற்றதனை எப்படிக்காண இயலும்? நீவிர் உண்மையில் பரிசுத்தராயின் அசுத்தத்தைப் பார்க்கக் கூடுமோ? ஏனெனில் உள்ளிருப்பதே புறத்தும் உளது. நமக்குள்ளே அசுத்தம் இருப்பின் அதை வெளியிலும் காண்போம். வேதாந்தத்தின் செயல் முறைக் கருத்துகளுள் இதுவுமொன்று: வாழ்க்கையில் இதனை நாமனைவரும் ஏற்று நடப்போமென்று நம்புகிறேன். இங்குள்ள நமது வாழ்வனைத்தும் இதைச் செய்முறையில் ஏற்று நடத்துவதற்கே. இதனுல் நாமடையும் பயன், அதிருத்தியும் அருவருப்புங் கொண்டு செயலாற்றுவதை விடுத்து, விருப்புடனும் மன நிறைவுடனும் செயல்புரிவோமென்பதே. ஏனெனில் மெய் நம்முள்ளேயே இருப்பதை அறிந்து நம் பிறப்புரிமையாம் அதனைப் பெற்று, தொட்டறியவல்லதாக அதை வெளிப்படுத்துவதே நம் கடமை.

செயல் முறை வேதாந்தம் — 3

(இலண்டனில் 1896ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 17ஆம் நாள் ஆற்றிய சொற்பொழிவு.)

நாரதமுனிவர் சனத் குமார முனிவரிடம் வந்து அவரைப் பல கேள்விகள் கேட்டதாகவும், தாம்தாம் இருப்பன போலப் பொருள்கள் காணப்படுவதன் காரணங்களுள் சமயம் ஒன்று ஆக்கக் கூடுமா என்று வினவியதாகவும் சாந்தோச்ய உபனிஷத்தில் படிக்கிறோம். சனத்குமாரரும் நாரதரைக் கைப்பிடித்தேற்றிச் செல்வதுபோலப் படிப்படியாகச் சொல்லி வருகிறார். வானமண்டலத்திற்கு வரும் வரையில், பூமியை விடச் சிறந்தது வேறொன்றுளது; அதைவிடச் சிறந்தது இன்னுமொன்றுளது; அதைவிட இது சிறந்தது என்பதாகப் படிப்படியாய் கூறிப்போகின்றார். விசும்பு ஒளியைவிட மேம்பட்டது, ஏனெனில் இதில் தான் ஞாயிறும் திங்களும் மின்னொளியும் விண்மீன்களும் உள; நாம் வாழ்வதும் ஆங்கேதான், நாம் மரிப்பதும் அங்கேயே. அப்படிக்காயின் இதைவிட மேம்பட்டது வேறே ஏதேனும் உளதா என்பதே அடுத்த படியான கேள்வி. பிராணன் என்பதைப் பற்றி சனத்குமாரர் இதன் பதிலுரையாக மொழிகின்றார். வேதாந்த முறைப்படி இந்தப் பிராணனே வாழ்க்கைத் தத்துவம். விசும்பைப் போல இதுவும் எங்கும் நிறைந்தவோர் உண்மை. உடலிலோ மற்று வேறெவ்விடத்திலோ யாவற்று வித இயக்கமும் இந்தப் பிராணனின் செயலாற்றலே. இது விசும்பைவிட மேம்பட்டது; இதன் மூலமே அனைத்தும் உயிர்த்துள. அன்னையிடம் இருப்பதும் பிராணனே, தந்தையிடமும் உடன்பிறந்தாரிடமும் குருவினிடமும் உள்ளதும் பிராணனே, பிராணனே அனைத்தையும் அறிவது.

வேறொரு பத்தியைப் படிக்கிறேன், செவி சாயுங்கள். இதில் மெய்ம்மை என்பதைப் பற்றி சுவேதகேது தன் தந்தையை வினவுகிறான். தகப்பனும் பல விஷயங்களைப் பற்றிப் பிள்ளைக்குப் போதிக்கிறார். முடிவில் அவர் கூறுவது இதுதான், "இந்தப் பொருளிலெல்லாம் நுண்ணிய காரண

மாயிருந்து வருவது எதுவோ, அதைக்கொண்டே இப் பொருள்களனைத்தும் ஆக்கப்பட்டுள. அனைத்தும் அக் காரணப் பொருளே, அதுவே மெய்ம்மை. சுவேதகேது, நீயும் அதுவே.'' பின்னர் பல சான்றுகளைக் காட்டுகிறார்: ''சுவேத கேது, வண்டினம் பல மலர்களினின்றும் தேன் எடுத்து வந்து ஓரிடத்தில் சேகரிக்கிறது. ஆனால் வெவ்வேறு மரங் களினின்றுமோ, வெவ்வேறு பூக்களினின்றுமோ தாம் எடுத்துவரப்பட்டவையாக அந்தத் தேன் துளிகள் அறியா. அதுபோலவே மூலத்திற்கு வந்தடைந்து விடும் நாம், நாமும் இப்படிக்கே அவ்விடம் வந்தடைந்தோம் என்பதை அறிவ தில்லை. அந்த நுண்ணிய சத்துப் பொருளாயிருப்பது எதுவோ, அதில் தான் காணப்படுவன யாவும் தம் நிலையை அடைந்துள்ளன. அதுவே மெய்ப்பொருள். அதுவே உண்மை. சுவேதகேது, நீயும் அதுவே தான்.'' ஆறுகள் கடலோடிக் கலந்திடுவதை மீண்டுமொரு சான்றாகக் காட்டு கிறார்: ''கடலிடைக் கலந்துள்ள ஆறுகள் யாவும் தாம் தனித்த பல நதிகளாயிருந்ததை அறியாததுபோலேயே, ஆதியிருப்பிடம் விட்டு வெளிவந்த நாமும் முன்னர் இருந்த நிலையை அறிவதில்லை. சுவேதகேது, நீயும் அதுவே.'' இவ் வண்ணம் அவர் அறிவுரை வழங்கிச் சென்றார்.

அறிவைப் பற்றி இருவகையான கொள்கைகள் உண்டு. தனிப்பட்டதைப் பொதுப்பட்டதைக்குறித்தும், அப்பொதுப் பட்டதைப் பொது உலகைக் குறித்ததுமாக நாம் அறிகிறோ மென்பது ஒரு கொள்கை; எதைப்பற்றி நாம் விளக்கங் கோருகிறோமோ அந்த விளக்கமென்பது கூடுமானவரை அந்தந்த வஸ்துவின் சொந்த இயல்பினைக் கொண்டே விளக்கப்படுகிறது என்பது மற்றொரு கொள்கை. முதல் வழியை எடுத்துக் கொள்வோம். நமது அறிவெல்லாம் மேன்மேலும் மேம்பட்டதுகளாக இனமுறை கொண்டு போவதாகவே உண்மையில் உள. ஏதாவதொன்று தனிப் பட்டதாக நிகழ்ந்திடுமாகில் அது கண்டு தான் அதிருப்தி கொள்பவர்போலேயே ஆகிறோம். அதே நிகழ்ச்சி அடிக்கடி நிகழ்ந்துவருவதைக் காண்போமானால் நாம் திருப்தி கொண்டவராகி அதனை நியதி என்கிறோம். ஓர் ஆப்பிள் பழம் மட்டும் கீழே விழுவதைக் காண்போமாகில் நமக்குத்

திருப்தி ஏற்படுவதில்லை. எல்லாப் பழங்களுமே விழுவதைக் காண்பதால் அதனை ஈர்க்கும் சத்திமுறை யென்று மொழிந்து திருப்தி கொள்கிறோம். தனிப் பட்டதைக் கொண்டே பொதுப்பட்டதை நாம் ஊகித்தறிகிறோம்; இதுவே அதன்கண் காணப்படும் உண்மை.

சமயத்தைப் பற்றி நாம் அறிகிற துறையிலும் இந்த விஞ்ஞான முறையையே பயன்படுத்திக் கொள்ளவேண்டும். அதே முறைதான் இங்கும் தேவைப்படுவது. உண்மையில் இதுவே எங்கும் இலங்கிவரும் முறைப்பாடென்பதை நன்கறிவோம். நான் உங்களுக்கு மொழிபெயர்த்துக் கூறி வந்த இந்நூல்களைப் படிக்குங்கால் தனிப்பட்ட ஒன்றினின்று பொதுப்பட்ட ஒன்றிற்குச் செல்லும் முறை மிகத்தொன்மை வாய்ந்தகொள்கையே எனத்தெரிகிறது. ஒளியுற்றவை யாவும் ஒன்றாய்க் கலக்கும் தத்துவத்தை நாம் காண்கிறோம். இவ் வெண்ணமே பண்டைக் காலத்துச் சிந்தனையாளர்கள் ஒழுங் குண்ட உலகு பற்றிய கருத்துகளுள் மேன்மேலும் உயர்ந்த வைக்கு ஏகுவதை நோக்குகின்றோம். நுண்மூலங்களினின்றும் மேலும் நுண்ணியவையாயும் நுண்ணிய அமிசங்கள் கொண் டவையாயும் உள்ள மூலங்களைத்தேடி அடைகின்றார்கள். தனிப்பட்ட ஒன்றினின்றும் எங்குமுளதொரு வானிற்கு வரு கின்றதை நாம் கண்ணுறுகின்றோம். இன்னும் இதைக்காட்டி லும் பரந்துள்ள ஒரு சத்திக்கோ அல்லது பிராணனுக்கோ விரைகின்றார்கள். எல்லாவற்றிலும் இதே தத்துவம் ஊடுரு விப் பாய்ந்தாலும் ஒன்று மற்றொன்றைவிட மாறுபட்ட தன்று. இந்த வானே பிராணன் என்ற உயர்ந்த வடிவத்தில் காட்சி அளிக்கின்றது; அல்லது இந்தப் பிராணனே சற்றுத் தூல வடிவமான விசும்பாய் விளங்குகின்றது. இந்த வான் தூலம் தூலமாகக் கீழே இறங்கிவருகிறது.

உருவக்கடவுளைப் பொதுப்படுத்துவது இது பற்றிய மற்றொரு பொருளாகின்றது. இந்தப் பொதுப்படுத்துகை எப்படி அமையப்படுவதென்பதையும் எல்லா மன உணர்வு களின் பிழம்புதான் இது என்று கூறப்பட்டதையும் நாம் முன்னரே அறிவோம். ஆயினும் இதிலோர் இடையூறு தோற்றலாம். அதாவது, இது நிறைவுற்றிராத ஒரு பொதுப் படுத்தல் வகை என்பதே. மன உணர்வு என்ற இயற்கை

யின் ஒருபுறத்ததான பொருளை மட்டுமே நாம் எடுத்துக் கொண்டு அதைக் கொண்டு மட்டுமே பொதுப்படுத்து கிறோம். இதனால் இயற்கையின் மறுபுறம் விடப்பட்டுப் போகிறது. ஆகவே, முதலாக, இதொரு குறைபாடு கொண்ட பொதுப்படுத்தலே. இதில் மற்றொரு குறைபாடு முளது. அது இரண்டாவது விதிப்பாடு பற்றியதாகும். அனைத்தும் அதனதன் இயல்பு கொண்டே விளக்கப்பட வேண்டும். தரை மீது விழும் ஒவ்வொரு ஆப்பிள் பழமும் ஏதாவதொரு பூதத்தால் கீழிழுக்கப்படலாமென எண்ணக் கூடியோரும் இருக்கலாம். ஆனால் அதன் விளக்கம் புவிக் கவர்ச்சி சக்தியே. இது முற்றிலும் திருப்திகரமான விளக்க மல்ல வென்பதை நாம் அறிவோமானாலும் மற்றதைவிட இதுவே சிறந்ததாகிறது. ஏனெனில் இது பொருளின் இயல்பினின்றுமே அடையப்படுவதாயிருக்க, மற்றையது வெளிப்பட்டதாயுள்ள வேறு காரணத்தையே முன்வைக் கிறது. இப்படிக்கே தான்நமது அறிவுலகு முழுவதும். பொரு ளின் இயல்பையே ஆதாரமாகக்கொள்ளும் விளக்கமே விஞ் ஞான வழியதான விளக்கமாகும்; வெளிப்புறத்ததான உத வியைக்கொணரும் விளக்கமெதுவும விஞ்ஞானவழியதல்ல.

எனவே உருவக்கடவுளே இவ்வுலகின் படைப்புக் காரணமென்ற விளக்கமும் இந்தச் சோதனைக்கு உட் பட்டேயாக வேண்டும். அந்தக் கடவுளோ இயற்கைக்கு அப் புறத்ததாயிருக்கிறது; இயற்கையோடு எவ்வித சம்பந்தமு மற்றது; இந்த இயற்கை அந்தக் கடவுளின் உத்திரவுப் படி தோற்றுவதாகி, இல்லாததொன்றினின்றும் உண்டாக்கப் படுவதானல் இக்கொள்கை முற்றிலும் விஞ்ஞான முறைக்கு ஏற்றதன்று. ஒவ்வோர் இறைவழி மதத்தின் ஊனக்குறி இதுவே. மிகமிகப் பெரிதாக்கிய மானிடகுணவிசேடங்களை யெல்லாம் தன்னிடைக் கொண்டதாகி, தனது இச்சை காரணமாகவே ஒன்று மில்லாததினின்றும் உலகையுண் டாக்கி, தான் மட்டும் அவ்வுலகைக்கடந்து தனித்து வேறுபட்டு நிற்பதான தோற்றப் பொலிவுள்ள கடவு ளென்ற இந்த ஒரே கடவுள் கொள்கையில் இவ்விரு குறைபாடுகளும் பொதுவாக இருந்தே வருகின்றன. இதன் காரணமாய் இரண்டு இடையூறுகள் நேரிடுகின்றன.

நாம் முன்னரே கண்டதுபோல, இது போதுவானதோர் பொதுப்படுத்துகையன்று; இரண்டாவதாக, இயற்கையின் இயல்பினின்றும் எடுபடும் விளக்கமல்ல இது. காரியம் காரணமல்ல வென்றும், காரணமென்பது காரியத்தினின்றும் முற்றிலும் தனிப்பட்டதாகு மென்றும் இது கொள்கிறது. இருந்தும் காரியமென்பது மாற்றுருக்கொண்ட காரணமே என்பதையே மானிட அறிவு அனைத்தும் அறிவிக்கிறது. இக்கருத்திற்காகவே நவீன விஞ்ஞானப் புதுக் கண்டுபிடிப்புகள் யாவும் நாள்தோறும் முன்னேக்கிச் செல்கின்றன. எம்மருங்கும் ஒப்பப்பட்டதான கடைசிக் கொள்கையும் வெளிவிரிவுக் கொள்கையே. காரியமென்பது, வேறு உருவில் காணப்படும் காரணமே என்பதும், காரணத்தின் மாற்றமைப்பே அது என்பதும், காரணமே காரிய உருக் கொள்கிறது என்பதுந்தான் இதன் விதிப்பாடு. சூனியத்தினின்றும் படைப்பு உண்டாவதென்ற கொள்கை இக்கால விஞ்ஞானிகளின் நகைப்பிற்கே இடங்கொடுக்கும்.

சமயம் இச்சோதனைகளைத் தாங்கி நிற்குமா? இவ்விரு சோதனைகளுக்கும் ஈடுகொடுக்கவல்ல மதக்கொள்கைகள் தாம் நவீன மனத்தார்—சிந்தித்துப் போதும் மனத்தவர்—ஒப்பவல்லதுகள். அப்படிக்கல்லாது மதகுருக்கள், அல்லது மாதாக்கோயில்கள் அல்லது புத்தகங்களின் அதிகாரம்—இவை மூலமாக நம்பச் சொல்லும் வேறெந்தக் கொள்கையும் நவீன மானிடன் ஒப்பக் கூடாதவைகளே. இதன் விளைவு பயங்கரமானதோர் அவநம்பிக்கைக் குவியலே. வெளிப் பார்வைக்கேனும் நம்பிக்கை கொண்டவர்போல் நடிப்போரது மனத்துள் கூட, மிகப்பயங்கரமான அளவு, மிக்க அவநம்பிக்கையே நிறைந்து காணும். இதரர் மதத்தைக் கண்டு நடுங்கி யொதுங்குபவர் போல் அதனை மதகுருக்களது பிழைப்புவழி என்று மதித்துக் கைவிட்டிடுவர்.

மதமென்பது ஒருவண்ணமான நாட்டின் இயல்பினை உருக்கொள்ளும் மட்டத்திற்காக இழுபட்டுவிட்டது. நமது சமூக எச்சங்களில் சிறப்புமிக்க தொன்றுதான் இதுவும். ஆகவே, இதுவும் இருந்து வரட்டும். ஆனால் நவீன மானிடனின் பாட்டன்மார்களுக்கு இதனிடை இருந்து வந்த உண்மைத் தேவை இப்பொழுது உள்ளாருக்கு இல்லாததாகி

விட்டது. நவீனன் தனது காரணவாராய்ச்சிக்கு இது திருப்திகரமல்ல வென்பதைக் கண்டறிந்து விட்டான். இத்தகைய தோற்றப்பொலிவுள்ள கடவுட் கருத்து, இத் தகைய படைப்பு, ஒவ்வொரு மதத்திலும் ஒன்றே கடவுள் எனப் பொதுவில் அறியப்பட்டு வரும் கொள்கை, இவை யாவும் இனித் தம்வழி நில்லாதவையே. இந்தியாவில் இவை நிலைபெறாது போனதன் காரணம் பௌத்தர்களால் தான். புராதன காலங்களில் இதை எதிர்த்தே இவர்கள் தமது வெற்றியை நாட்டினர். இயற்கையே முடிவிலாச் சக்திகள் அனைத்தையும் தன்னுள் அடக்கியதென ஒப்புவோமாயின், இயற்கையே தனது தேவைகளனைத்தையும் தானே தேடி அமைக்கக் கூடுமாயின், இயற்கை தவிர்த்த பிறிதொன்று இருப்பதாக வற்புறுத்துவது முற்றிலும் அனாவசியமே என்பதைத்தான் இவர்கள் எடுத்துக் காட்டினர். ஆன்மா கூட அனாவசியமே.

பொருளும் குணமும் பற்றிய விவாதம் மிகத்தொன்மை வாய்ந்தது. பழைய குருட்டு நம்பிக்கைகள் இன்னும் இருந்து வருவதைச் சிலவேளை காணலாம். குணமென்பது பொருளை ஒட்டியிருப்பதா; நாம் உயிரற்றதெனக் கூறும் வஸ்துவை நீளம், அகலம், பருமன் என்பன ஒட்டி நிற்ப வையா; பொருள் அப்படியே இருந்துவர, குணமென்பது அதனுள் இருந்து வருவதா அல்லவா—இதுதான் இடைக் காலங்களிலும், ஏன், அதற்குப் பின்னருங்கூட விவாதத் திற்கான விஷயங்களிலொன்றாயிருந்ததை நீங்கள் பலரும் படித்திருக்கலாம். இதற்குப் பௌத்தர் கூறும் பதிலாவது: " அத்தகைய வஸ்துவொன்று இருப்பதாக நீ கொள்வதற்கே ஆதாரமேதுமிலதே; இருப்பவை குணங்கள் மட்டுந்தான். அதற்கு அப்பாலாக நீ காணக்கூடியதேதும் இல்லை." இக் கால இறைநிலை மறுப்போர் பலரது நிலையும் இதுவே. பொருளுக்கும் குணங்களுக்குமான இதே சச்சரவுதான் உயர் மட்டத்தில், தோற்றப்பாடற்றது, தோற்றப்பாடுள்ளது என்றவை பற்றிய சர்ச்சையாக உருக்கொள்கிறது. தோற்றப்பாடுள்ள உலகம், இடையறு மாறுதல் நிறைந்த சிருஷ்டி, இதோ உளது; மாறுபாடற்றதொன்று அதன்பின் இருந்து வருகிறது. தோற்றப்பாடற்றது, தோற்றப்

பாடுள்ளது என்ற இந்த இரட்டை இருப்புகளும் உண்மையே யெனச் சிலர் கொள்கின்றனர்; மேலுஞ் சிறந்த காரணவா ராய்ச்சித் திறன்கொண்ட இதரர் இவ்விரண்டையும் ஒப்பிட நமக்கு அதிகாரமில்லையென திடமாய்க் கூறுகின்றனர். ஏனெனில் நாம் காண்பது, உணர்வது, நினைப்பது ஆகிய யாவும் தோற்றப்பாடுள்ளவைகளே என்கின்றனர். தோற்றப்பாடுள்ளதற்கு அப்பாலாக ஒன்றுளதெனத் திட மாய்க்கூற உனக்கு எவ்வித அதிகாரமுங் கிடையாது. இதற்கேற்ற பதிலில்லை. நாம் பெறவல்ல ஒன்றேயான பதில் வேதாந்தத்தின் ஒருமைப்பாடென்ற கொள்கையினின்று தான். இருப்பது ஒன்றேதான் என்பதென்னவோ உண் மையே. அந்த ஒன்று தோற்றப்பாடு கொண்டதோ அல்லது தோற்றப்பாடு கொள்ளாததோ; ஆனால் மாறுபாடடைவதான ஒன்றும், அதிலிருந்து அதன் மூலமாகவும் மாறுபாடற்ற தாகவுமுள்ள தொன்றும் ஆக இரண்டு இருப்பதென்பது மட்டும் உண்மையல்ல. ஒன்றேதான் மாறுபடுவது போலத் தோற்றுவதும் உண்மையில் மாறுபாடடைய இயலாதது மாக இருப்பது. நாம் உடல், மனம், ஆன்மா ஆகியவை களைப் பலவாக எண்ணிவரப் பழக்கப்பட்டு விட்டோம். உண்மையில் இருப்பதொன்றே, அவ்வொன்றே இந்தப் பல் வேறு உருக்களாகத் தோற்றம் அளிக்கின்றது. ஒன்றே யென்போரின் நன்கறியப்பட்டதான கயிறு, பாம்புபோலத் தோற்றும் சான்றை எடுத்துக் கொள்ளுங்கள். இருட்டிலோ அல்லது வேறெந்தக் காரணத்தாலோ சிலர் கயிற்றைப் பாம்பெனத் தவறுதலாய் நினைக்கின்றார்கள். ஆனால் அறிவு உதயமானதுமே பாம்பு மறைந்து அதுவே கயிறென அறியப்படுகிறது. மனதில் பாம்பு இருந்து வருகையில் கயிறு மறைகிறது, கயிறு இருந்து வருகையில் பாம்பு போய் விடுகிறது என்பதை இந்த எடுத்துக்காட்டிலிருந்து நாமறிகிறோம். நம்மைச் சுற்றி எங்கும் தோற்றப்பாடு களை மட்டுமே நாம் காண்கையில் தோற்றப்பாடற்றது மறைந்து போய்விடுகிறது, ஆனால் தோற்றப்பாடற்றதைக் காண்போமானால் தோற்றப்பாடுள்ளதின் மறைவு தானாகவே தொடர்ந்திடும். தோற்றவாதிகள், இலட்சியவாதிகள் என்ற இருதிறத்தார் நிலையையும் இப்பொழுது நாம் தெளிவுறப்

புரிந்து கொள்கிறோம். தோற்றப் பொருண்மைவாதி காண்பதைமட்டும் ஏற்கின்றான்; கருத்துண்மைவாதி அருவத்தைத் தேடுகிறான். கருத்துண்மைவாதிக்கு, உண்மையில் தூய இலட்சியவாதிக்கு மாறுபாடென்ற கருத்துகள் அனைவற்றினின்றும் விடுபட்டு நிற்கவல்ல உணர்வு சக்தியை உண்மையில் அடைந்தவனுக்கு, மாறுபட்டு வரும் இந்த உலகம் மறைந்ததேயாகி விடுகிறது; இவை யாவும் பொய்த் தோற்றமென்றும் மாறுபாடென்பதே கிடையாததென்றும் சொல்வதற்கு அவனுக்கு உரிமை ஏற்படுகிறது. அதே காலத்தில் பொருளுண்மை வாதியோ, மாறுபாடுள்ளது களைத்தான் காண்கிறான். மாறுபாடற்றது அவனுக்கு மறைந்து விடுகிறது. இவையனைத்தும் உண்மையாகி இருப்பனவேயென்று கூறும் உரிமை கொள்வானாகிறான்.

இந்தத் தத்துவத்தின் முடிவுதான் யாது? தோற்றப் பொலிவுள்ள கடவுட் கருத்து பூர்த்தியற்றது எனபதே இதன் முடிவு. இதைவிட மேம்பட்டதான ஒன்றை, அருவக் கருத்தை, நாம் அடைந்தாக வேண்டும். அது ஒன்றே நாம் கொள்ளக்கூடிய நியாய வழியான ஏற்றப்படி. இதனால் உருவக்கருத்துகள் அழிபட வேண்டுமென்பதல்ல, தோற்றப் பொலிவுற்ற கடவுள் இருப்பதில்லை என நாம் மெய்ப்பிக்கப் போகிறோமென்பதுமல்ல. ஆனால் உருவங் கொண்டவற்றை விளக்க நாம் அருவநிலைக்குப் போயாக வேண்டும். ஏன் எனில் அருவப் பொருள் உருவப் பொருளைவிட மேம்பட்டதான ஒரு பொதுக் கொள்கையாகும். பொலிவில்லாத அருவமே முடிவிடமியா யிருக்கவல்லது, உருவம் கட்டுப் பட்டதுவே. எனவே உருவத்தை நாம் பாதுகாக்கிறோமே யொழிய அழிப்போமல்ல. அருவமென்ற கருத்தைப் பெறுவோமாகில் உருவமென்பது அழிக்கப்படுமென்றும், அருவக் கருத்தைப் பெறுவோமாகில் உருவம் இடிக்கப்படுமென்றும் நம்மிடையே ஐயம் அரும்புகிறது. ஆனால் வேதாந்தக் கருத்து தனிப்பட்டதை அழிப்பதன்று, அதனை உண்மையில் பாதுகாப்பதுவே. தனிப்பட்டதைப் பொதுப்பட்டதைக்குறித்தன்றி வேறெவ்விதத்தாலும் நாம் மெய்ப்பிக்க இயலாது. இந்தத் தனிப்பட்டது உண்மையில் பொதுவானதே என்றுதான் மெய்ப்படுத்தியாக வேண்டும். உலகிலுள்ள இதர யாவற்றி

னின்றும் தனிப்பட்டதொன்று வேறுபட்டுத் தனித்து நிற்ப தாக நாம் நினைப்பது கணமும் செல்லத்தக்கதல்ல. அத் தகையது என்றும் இருந்ததே கிடையாது.

இரண்டாவதாக: பொருளின் இயல்பினின்றுமே யாவற் றுடைய விளக்கமும் அடையப்பட வேண்டுமென்ற இரண் டாவது விதியை உபயோகிப்பதால், மேலுமொரு திரக் கருத்திற்காகவும் தெரிந்துகொள்வதற்கு மேலும் கடினமான ஒரு கருத்திற்காகவும் நாம் அழைத்துச் செல்லப்படுவோம். நமது ஒப்புயர்வற்ற பொதுப்படுத்துகையாகிய தோற்றப் பொலிவற்ற இருப்பு என்பது நம்முள்ளேயேதான் இருக் கிறது என்பதும், நாமே அது என்பதுந்தான் அத்திரக் கருத்து.

"அப்பா சுவேதகேது, நீயேதான் அது." நீயேதான் அந்நித்த அருவப்பொருளின் இருப்பு; உலகெங்குமாக நீ தேடிவரும் அந்தக் கடவுள், அக்காலமெல்லாம் நீயேதான். 'நீயே' என்பது உருவப் பொருளிலல்ல, அருவப்பொருளி லேயே. வெளித்தோன்றியுள்ள நாமறியும் மனிதன் உருவப் பொருளாகிருன், ஆனல் இதன் உண்மையான இருக்கை அருவமே. உருவத்தை அறிந்து கொள்ள நாம் அருவத்தை அடையவேண்டும். தனிப்பட்டது, பொதுப்பட்டதிற்காகக் குறிப்பிடப்படவேண்டும். அந்த அருவமே மெய்ப்பொருள், மானிடனின் ஆன்மாவே.

இது பற்றிப் பல கேள்விகள் எழக்கூடும். அவை களுக்கான பதிலைப் போகப் போகக் கூறி விளக்குகிறேன். பல சிக்கல்களும் தோன்றக்கூடும். எதற்கும் முதன் முதலாக ஒன்றேயிருப்பு என்ற கொள்கையின் நிலையை நாம் தெளி வாகப் புரிந்துகொள்ள வேண்டிய தவசியம். வெளித் தோன்றும் இருப்புகளாகிய நாம் தனிப்பட்டது போலத் தோன்றுகிறோம், ஆனல் நமதுண்மை ஒன்றே. அந்த ஒன்றினின்றும் வேறுபட்டவராக நம்மை எவ்வளவு குறை வாக எண்ணுகிறோமோ அவ்வளவும் நமக்கு நலமே. முழுவ தினின்றும் வேறுபட்டவராக நம்மைக் கருத அதிகம் துயருறுவோம். இந்த ஓரிருப்புத் தத்துவத்தினின்றே அற வழியின் அடிப்படை அமைகிறது. வேறெங்கிருந்தும் ஒரு வித அறநெறியும் கிட்டாதென்று நான் திண்ணமாகக்

கூறுவேன். அறவழியென்பது குறிப்பிட்ட ஒருவரதோ சிலரதோ இச்சை தானென்பதே பழைய கருத்து என்று நாம் அறிவோம். ஆனால் இன்று இதனை ஏற்றிடச் சிலரே முன் வருவர், ஏனெனில் அரைகுறைப் பொதுப்படுத்தலே இது. 'இதையோ அல்லது அதையோ செய்யவேண்டா, ஏன் எனில் வேதங்கள் அங்ஙனம் முறையிடுகின்றன,' என இந்துக்கள் கூறுவர்; ஆனால் கிறித்தவருக்கு இது உடன் பாடன்று. பின் சொன்னவர், 'இதைச் செய், அதைச் செய்ய வேண்டா, ஏனெனில் விவிலிய நூல் அங்ஙனம் உரைக் கிறது,' என்றே கூறுவர். அந்நூலை நம்பாதாருக்கு இதுவும் உடன்பாடன்று. எனவே இந்தப் பல்வேறு ஆதாரங்களைத் தன்னுள் அடக்கவல்ல பரந்த கொள்கையை நாம் அடைய வேண்டும். கோடிக்கணக்கான மக்கள் உருவமுள்ள படைப்புக்கடவுளை நம்ப ஆயத்தமாயிருக்கின்றனர், ஆனால் அத்தகைய கருத்துகள் தமக்குப் போதாவென நினைத்து மேம்பட்டதொன்றைத்தேடும் உலகிற் சிறந்த ஆயிரக்கணக் கான மேதாவிகளும் உளர். இத்தகையோரைத் தன்னுள் அடக்க இயலாத மதம் சமூகத்திலுள்ள பெரிய மேதாவி களைத் தமக்குப் புறத்தே நிற்க வைப்பதாயிற்று. இன்று உள்ளதுபோல இங்ஙிலை என்றும் அவ்வளவு தீவிரமாக இருந்ததில்லை; அதிலும் முக்கியமாக ஐரோப்பாவில்.

இம்மனத்தினரை எல்லாம் சேர்த்துக் கட்ட மதம் மேலும் பரந்தாகவேண்டும். அதன் சித்தாந்தமெல்லாம் புத்தியின் நோக்கிலிருந்து நியாயமாகப் படவேண்டும். தாம் புத்திக்குக் கட்டுப்பட்டவை அல்ல என மதங்கள் கோருவது எதனால் என்று ஒருவருக்கும் தெரியவில்லை. மத விஷயங்களில் கூட புத்தியின் மதிப்பை ஈர்க்கா விட்டால் சரியான விவேகம் இருக்க இயலாது. ஒருமதம் மிகப் பயங்கரமான ஒன்றை விதிக்கலாம். உதாரணமாக, தம்மதம் சாராதார் அனைவரை யும் கொன்றிட முகமதிய சமயம் தனது சார்பினரை அனு மதிக்கிறது. "நம்மத நம்பிக்கை யற்றோர் இஸ்லாமியர் ஆகாவிடில் அவர்களைக் கொல்லுங்கள்," எனக் குரானில் தெளிவாகக் கூறியிருக்கிறது. அன்னாரைத் தீக்கோ வாளுக்கோ இரையாக்க வேண்டும். இப்போது நாம் இது தவறென்று ஒரு முகமதியனுக்குச் சொன்னால் அவன்,

"உனக்கு எப்படித் தெரியும் அது? அது நலமன்றென நீ எப்படி அறிவாய்? என புத்தகம் அது நலமே எனக் கூறு கிறது," என்றே சாதாரணமாய் கேட்டிடுவான். என் புத்தகமே புராதனமென்று நீ கூறினுல் உடனே பௌத்தன் முன்வந்து, தன்புத்தகமே அதனினும் புராதனமென்பான். பின்னர் இந்து முன்வந்து தன் புத்தகங்களே மிகப்பழையன என்பான். எனவே புத்தகத்தை எடுத்துப் பேசுவது பிர யோசனப்படாது. எதை அளவு கோலாகக்கொண்டு ஒப் பிட்டுப் பார்ப்பது? மலைமேலுள்ள உபதேசத்தைப் பார் என் பீர்கள் நீங்கள்; இதற்குப் பதிலாக, குரானின் அறவழியைப் பார் என்பான் முகமதியன். இவ்விரண்டில் சிறந்தது யா தெனத் தீர்மானிக்க மத்தியஸ்தன் யார் என்று அவன் கேட்பான். இவர்களுடைய சச்சரவைத் தீர்க்க சுவிஷேத் தாலும் குரானுலும் நடுநிற்க இயலாது. வேறுபட்டதோர் அதிகாரியே தேவை: அதும் எந்த நூலுமாக இருக்க இய லாது, யாவர்க்கும் பொதுவான தொன்ருக இருத்தல் வேண்டும். புத்தியைவிடப் பொதுவானது யாது இருக் கின்றது? புத்தியும் போதிய வலுக்கொண்டதல்ல என்றும் எப்போதும் அது மெய்மையை அறிய உதவாதென்றும் சொல்லப்பட்டிருக்கிறது; பலபொழுதும் அது தவறிழைப்ப தால் நாம் மத நிறுவனத்தையே மதிக்க வேண்டுமென்று தீர்மானிக்கிருர்கள்! உரோமன் கத்தோலிக்கர் ஒருவர் எனக்கு இவ்விதம் இயம்பினுர், ஆனுல் அதன் நியாயத்தை நான் காண இயலவில்லை. புத்தி திடனற்றதெனில் ஒரு மதகுருக்கள் கூட்டம் அதனிலும் திடனற்றதென்றும், அவர்களுடைய தீர்ப்பை நான் ஒப்பப் போவதில்லையென்றும் என் புத்திவழியே செல்வேனென்றும் மறுத்துக் கூறு வேன். ஏனெனில், திடனற்றிருப்பினும் அதன் மூலம் மெய்ம்மையை அடையும் வாய்ப்பு என்றேனும் கிட்டக் கூடும்; ஆனுல் மற்ற வழியில் அந்த வாய்ப்புக்கூடக் கிட்டுமெனும் நம்பிக்கை இராது.

ஆகவே நாம் புத்திவழியைப் பின்பற்றி, அம்மார்க்கத் தில் ஒருவித நம்பிக்கையும் வைக்காதோரிடம் கருணைகாட்ட வேண்டும். ஏனெனில் எவருடைய மதிப்பையும் கொண்டு இருபது கோடித் தேவர்களைக் கண்மூடித்தனமாக நம்பு

வதைவிட, மனிதஜாதி புத்தியைப் பின்பற்றி நாத்திகர்களாவதே சால நன்று. முன்னேற்றம், விரிவு, மெய்யுணர்வு இவையே நமக்குத் தேவை. சித்தாந்தங்களொன்றும் மனிதர்களை ஒருபோதும் உயரத் தூக்கிவைக்க வில்லை ; எத்துணை நூல்களும் நம்மை மிகத் தூயோராக்க வல்லனவன்று. மெய்யுணர்விலேயே சத்தி இருக்கின்றது, அது நம்மிலே உளது ; சிந்தனையால் வருவது அஃது. மானிடர் சிந்திக்கட்டும் மண்ணாங்கட்டி ஒருபோதும் சிந்திப்பதில்லை; அது மண்ணாங்கட்டியாகவே இருக்கிறது. தான் சிந்திப்பவன் என்பதே மனிதனின் புகழ் ; அவனது இயல்பே அஃது ; அதிலேயே அவன் விலங்குகளினின்றும் மாறுபடுகிறான். அதிகாரத்தின் முடிவெல்லை எய்திய நாட்டில் பிறந்தவன் யான், ஆகவே அதன் தீமைகள் பலவும் கண்டுளேன் ; எனவே புத்தி மார்க்கத்தை நம்பி அதையே பின்பற்றுபவன் யான்.

உலகப் படைப்பு வேதங்களினின்று வந்ததென இந்துக்கள் நம்புவர். பசு இருப்பதாக நீ எப்படி அறிவாய் ? வேதங்களில் பசு என்ற சொல் இருப்பதால். வெளிப்புறத்தில் மனிதன் ஒருவன் உளனென்பதை நீ எப்படி அறிவாய் ? மனிதனெனும் பதம் ஆங்கிருப்பதால். வேதங்களில் அந்தச் சொல் இன்றேல் மனிதனொருவனும் வெளியே இருந்திருக்க இயலாது. இங்ஙனமே அவர்கள் இயம்புகின்றனர். பழி வாங்குவது போன்ற அதிகாரந்தான் இது ! நான் கற்ற முறையிலல்ல அவர்கள் அவற்றைக் கற்பது ; ஆற்றல்மிக்க மனத்தினர் பலர் அவற்றைச் சுற்றி அற்புதமான நியாயக் கொள்கைகளை நிறுவியுள்ளனர் ; தருக்கவாத முறையில் தத்துவ ஒழுங்கொன்றையே திரித்து வைத்துள்ளனர். ஆயிரக்கணக்கான உயிர்மேதைகள் ஆயிரமாயிரம் ஆண்டுகளாக இக்கொள்கையை விரிக்கும் பணியை ஆற்றி வந்தனர். அதிகார வலிமை இத்தகையதே. அதனால் விளைய வல்ல ஆபத்துகள் பலவே. மானிடவர்க்கத்தின் வளர்ச்சியையே இது தடை செய்கிறது. நாம் வேண்டுவது வளர்ச்சியே என்பதை மறக்கக் கூடாது. மெய்ம்மையைவிட ஒரு சார்பு உண்மைகள் யாவற்றிலும் இப்பயிற்சி தேவையாகிறது. இதுவே நம் வாழ்க்கை.

நாம் நினைக்கக் கூடிய மதக்கொள்கைகள் அனைத்தி லும் ஒருமைபபாடு சித்தாந்தம் மிகவும் புததிவழியில் ஆன தென்பதே அதன் சிறப்பு. ஒரு பகுதியான சிறிய, உருவத் தைச் சார்ந்த மற்றக் கொள்கைகளெல்லாம், தெய்வம் பற்றிய கருத்துகளெல்லாம், புத்திமார்க்கத்தில் எழுந்தவை யன்று. எனினும் கடவுள் பற்றிய இந்தத் துண்டுக் கருத்து கள் யாவும் பலர்க்கும் தேவையென்றே அவையனைத்தையும் அணைத்து நிற்பதே ஒருமைப்பாட்டுச் சித்தாந்தத்தின் காம் பீர்யமாகும். இந்த உருவவிளக்கம் புத்தித்கு விரோதமெனச் சிலர் பகர்வர். ஆனல் அது மனத்திற்கு ஆறுதலளிக்கும்; ஆறுதலளிக்கும் மதத்தை அவர்கள் வேண்டுவதால் அது அவர்களுக்கு இன்றியமையாததெனத் தெளிவோம். இவ் வாழ்க்கையில் மெய்ம்மையின் தெருளைத் தாங்கிட, அதனி னும் அது கொண்டு வாழ, மிகச் சிலருக்கே இயலும். ஆகவே ஆறுதலளிக்கவல்ல மதம் இருக்கவேண்டியதவசியம். பல ஆன்மாக்கள் இன்னும் நல்ல மதத்தை எட்டுவதற்கு அது உதவுகிறது. கட்டுப்பட்ட சுற்றளவு கொண்டதும் மேலோங்குவதற்குச் சிறு விஷயங்களை வேண்டி நிற் பனவுமான சிறு மனங்கள், சிந்தனையில் அதிக உயரம் பறந்திடத் துணியா. அவர்களுடைய கருத்துகள் சிறு கடவுளர்களையும் சின்னங்களையும் பற்றியதாயிருப் பினும், மிக நல்லவை; அவர்களுக்கு உதவுபவை. ஆயினும் அருவமானதை நீங்கள் அறிந்திடவேண்டும், ஏனெனில் அதனிலும் அதன் மூலமுமே மற்றவை அனைத்தையும் விளக்க இயலும். உதாரணமாக உருவக்கடவுளையே எடுத்துக் கொள்வோம். ஜாண் ஸ்டுவர்ட் மில் போன்று அருவத்தை அறியவும் நம்பவும் செய்பவர் உருவக்கடவுள் இருக்க முடியாதென்றும் அதற்கு அத்தாட்சி கிடையா தென்றும் கூறலாம். ஆனல் மனிதபுத்திக்கெட்டும் அருவ அறிவுகளுள் மிக உயர்ந்த பாடமே அவன்: படைப்பென்பது சார்பற்ற பொருளின் பல விதப் பாடங்களேயன்றோ? அது நம்முன் ஒரு புத்தகம் போன்றது; ஒவ்வொருவனும் தன் புத்தியால் அதைப் படிக்க முயன்றிருக்கிருன், ஒவ்வொருவ னும் தனக்காக அதைப் படிக்க வேண்டியதே. எல்லா மனிதர் மதியிலும் பொதுவாக ஒன்றுளது, ஆகவே மனித

இனத்தின் புத்திக்குச் சில விஷயங்கள் ஒரு போலவே தோற்றுகின்றன. நீங்களும் நானும் ஒரு நாற்காலியைக் காண்கிறேமென்பது நம் மனங்களுக்குப் பொதுவான ஒன்றுளது என்பதற்கு அத்தாட்சியாம். வேறொரு புலனுடன் ஒருவன் வந்தால் அவன் நாற்காலியைக் காணவே மாட்டான்: ஆனால் ஒரே மாதிரியில் படைக்கப்பட்டவர்கள் அதே பொருள்களைப் பார்ப்பார்கள். ஆகவே இப்பிரபஞ்சமே சார்பற்ற பொருள், மாறுதலில்லாத தெய்வம்; நிகழ்ச்சிகளனைத்தும் அதன் பாடபேதங்களே. ஏனெனில், நிகழ்ச்சிகளெல்லாம் எல்லையுற்றனவென்றறிவீர்கள். நாம் காணும், உணரும், நினைக்கும் நிகழ்ச்சி ஒவ்வொன்றும் நம் அறிவால் கட்டுண்டதே; நம் நினைவிலுள்ள உருவக் கடவுள் கூட உண்மையில் ஒரு நிகழ்ச்சியே. காரியகாரண சம்பந்தமெனும் கருத்தே நிகழும் உலகில் தான் உள்ளது. இப்படைப்பின் காரணமாகிய கடவுளும் இயற்கையாகவே எல்லைகளுக்குட்பட்டவரென்று கருதவேண்டும். ஆனால் அவரே அருவக் கடவுளுங் கூட! முன் சொன்னதுபோல் இப்பிரபஞ்சம் நம் மதியால் அறியப்பட்ட அந்த அருவக்கடவுளே. இப்படைப்பில் உண்மையாகவுள்ள ஒவ்வொன்றும் அருவமான அத் தெய்வமே; நம் மதிகளே அதற்குரிய உருவங்களையும் கருத்துகளையும் தருகின்றன. இம்மேசையில் உண்மையாயிருப்பது அந்தக் கடவுளே; மேசையெனும் உருவமும் மற்ற உருவங்களனைத்தும் நம் மனத்தால் ஆக்கப்பட்டவையே.

எடுத்துக்காட்டாக, நிகழ்ச்சிகளில் அசைவென்பது இன்றியமையாத அமிசமாக உளதே, அதைப் பிரபஞ்சத்துடன் சேர்த்துக்கூற இயலாது. பிரபஞ்சத்திற்குள் ஒவ்வொரு சிறு துகளும் அணுவும் எப்பொழுதும் மாற்றம், அசைவு இவற்றிற்கு உட்பட்டிருக்கின்றன. ஆனால் பிரபஞ்சம் முழுவதும் மாற்றமில்லாதது, ஏனெனில் அசைவும் மாற்றமும் சார்புற்றவையே. அசையாத ஒன்றுடன் ஒப்புமை கொண்டே அசையும் ஒன்றை நாம் சிந்திக்க இயலும். அசைவைப் பற்றித் தெரிந்துகொள்ள இரண்டு பொருட்கள் இருக்கவேண்டும். ஒன்றாகக் கருதப்பட்ட பிரபஞ்சம் முழுதும் அசையவொண்ணாததே. எதைக் குறித்து அஃது அசையும்? ஆகவே முழுதென்பது சார்பற்றதே; ஆனால் அதற்குள் ஒவ்

வொரு துகளும் எப்பொழுதும் அசைகிறது, மாறுகிறது. அஃது ஒரே காலத்து மாற்றமும் மாற்றமின்மையுங் கொண்டது; ஒன்றிலே உருவமாகவும் அருவமாகவும் உளது. இதுவே பிரபஞ்சத்தையும் அசைவையும் கடவுளையும் பற்றிய நமது எணணம்; 'நீயே அஃது' என்பதன் பொருளும் இதுவே. ஆகவே அருவம் உருவத்தை இல்லாமற் செய்வதற்குப் பதிலாக, சார்பற்றது சார்புள்ளதை இடித்துத் தள்ளுவதற்கு மாருக, நம் மனத்திற்கும் இதயத்துக்கும் முழுத்திருத்தியுடன் விளக்கவே செய்கிறது. உருவக்கடவுளும் பிரபஞ்சத்திலுள்ள அனைத்தும் நம் மதிமூலம் காணப்படும் அதே அருவப்பொருளே. நமது சிறுமனங்கள் சிறு தோற்றங்கள் விழுந்தவுடன் நாம் அதனோடு ஒன்றிவிடுவோம். 'நீயே அஃது' என்பதன் பொருள் இதுவே. ஏனென்ருல் நாம் நமது உண்மை இயல்பை, சார்பற்றதை, தெரிந்து கொள்ளவேண்டும்.

எல்லைக்கடங்கிய தோற்றமனிதன் தனது ஆதிமூலத்தை மறந்தவனுய், தான் முற்றிலும் தனிப்பட்டவனே என நினைக்கிருன். உருவமடைந்த, வேறுபடுத்தப்பட்ட நாம் நமது உண்மை நிலையை மறந்து விடுகிருேம். அத்துவைதத்தின் அறிவுறுத்தல் நாம் இந்த வேறுபாடுகளை இழக்க வேண்டுமென்பதன்று, அவற்றைத்தக்கபடி அறிந்து கொள்ள வேண்டுமென்பதே. உண்மையில் நாம் அந்த எல்லையற்ற பொருளே, நமது தோற்றங்கள் அந்த எல்லையற்ற மெய்ம்மை தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும் கால்வாய்களே. பரிணுமமென்று நாம் இயம்பும் மாற்றங்களின் தொகை முழுவதும் ஆன்மா தனது எல்லையற்ற சத்தியை மேன்மேலும் வெளிப்படுத்த முயல்வதன் பயனே. எல்லையற்றதன் இப்புறத்தில் நாமெங்கும் நிலைபெற இயலாது; நமது சத்தி, நிறைவு, அறிவு அனைத்தும் எல்லையற்று வளர்ந்தே தீரும், கட்டுக்கடங்காத ஸத்—சித்—ஆனந்தம் நமதே, அதை நாம் பெறவேண்டுவதன்று; அது நமதே என்று வெளிப்படுத்துவதே தேவையாகும்.

இதுவே அத்துவிதத்தின் உட்கருத்து; தெரிந்து கொள்ளக் கடினமானதே இது. என் குழவிப்பருவத்திலிருந்து என் அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் பல

வீனத்தையே போதித்துவந்தனர், நான் பிறந்ததிலிருந்தே வலிமையற்றவனென்று எனக்குச் சொல்லிவந்தனர். இப்பொழுது எனக்கு என் பலத்தைத் தெரிந்துகொள்வது மிகக் கடினமே, ஆனால் விவேகத்தாலும் மதியறிவாலும் அதைத் தெரிந்து கொள்கிறேன், மெய்யாக உணர்கிறேன். இவ்வுலகிலுள்ள அறிவெல்லாம் எங்கிருந்து வந்தது? அது நமக்குள்ளே இருந்தது. வெளியே அறிவேதும் இருக்கின்றதா? இன்று. அறிவு சடத்தில் இருக்கவில்லை, மனிதனிலேயே எப்பொழுதும் இருந்து வந்தது, ஒருவனும் அறிவைப் படைக்கவில்லை, மனிதன் அதைத் தன்னகத்திருந்தே கொண்டு வருகிறான்; அது அங்கேயே உறைகிறது. எவ்வளவோ நிலப்பரப்பைக் கவிந்து நிற்கும் அந்தப் பெரிய ஆலமரம் முழுதும், கடுகின் எட்டிலொரு பங்கிற்கதிகம் வராத சிறுவிதையிலே இருந்தது; அவ்வளவு சத்தியும் அதனுள் அடங்கியிருந்தது. மிகப் பெரிய மேதை உயிர்ச்சத்தின் சிறுதுகளில் சுருண்டுகிடக்கிறதென நாமறிவோம்; எல்லையற்ற சத்தியும் அங்ஙனமே இருக்கக் கூடாதா? அஃதங்ஙனம் இருக்கிறதென்றே நாமறிவோம். இது மாறுபட்ட பேச்சாகத் தோன்றலாம், எனினும் உண்மையே. நாம் ஒவ்வொருவரும் உயிர்ச்சத்தின் ஒரு சிற்றறையிலிருந்து வந்தவரே, நமக்கிருக்கும் சத்திகளெல்லாம் அதிலேயே சுருண்டுகிடந்தன. அதெல்லாம் உணவிலிருந்து வந்ததென நீங்கள் கூற இயலாது, ஏனெனில் குன்றுபோல உணவைச் சேர்த்துவைத்தாலும் அதனின்று சத்தியேதும் பிறக்குமா? சத்தி உயிர்ச்சத்தில் இருந்தது; வெளிப்படையாகவன்று, எனினும் அங்கே உறைந்திருந்தது. அதுபோன்றே மட்டற்ற சத்தி மனிதனது ஆன்மாவில் உளது; அவன் அதைத் தெரிந்துகொண்டாலும் சரி, இல்லாவிட்டாலும் சரியே, அதன் வெளிப்பாடு அதனை உணர்ந்திருப்பதைப் பொருத்தது; மெல்லமெல்ல இந்தக் கட்டுக்கடங்கா இராட்சதன் உறக்கம் விட்டெழுந்து தன் பலத்தை அறிந்துகொள்கிறான் எனலாம். அவனது உணர்ச்சி வளர வளர அவன் தளைகள் மேன்மேலும் அறுபடுகின்றன, சங்கிலிகள் இற்றுப் போகின்றன; தனது எல்லையற்ற அறிவையும் வலுவையும் முழுவதும் உணர்ந்து கொண்டு அவன் நிமிர்ந்துநிற்கும் நாள் வந்தே தீரும். அம்மாபெரும் நிகழ்ச்சியை விரைவுபடுத்த நாமனைவரும் உதவுவோமாக!

செயல்முறை வேதாந்தம்—4

(இலண்டனில் 1896ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18ஆம் தேதி ஆற்றிய சொற்பொழிவு.)

இதுவரையில் நாம் பொதுவானதைப் பற்றியே அதிகமாக ஆராய்ந்து வந்தோம். இன்று காலையில் நான் சிறப்பானதற்கும் பொதுவானதற்குமுள்ள தொடர்பைப் பற்றிய வேதாந்தக் கருத்துகளை உங்களுக்கு மொழிவேன். பழைய துவைத வேதாந்தக் கொள்கையில் ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு குறிப்பிட்ட, கட்டுண்ட சீவன் இருப்பதாக அறிந்தோம். ஒவ்வொருவனிடமும் உள்ள இந்தச் சிறப்பான சீவனைப் பற்றி எத்துணையோ கொள்கைகள் எழுந்துள்ளன; ஆனால், பழைய வேதாந்திகளுக்கும் பழைய பௌத்தர்களுக்குமிடையேதான் முக்கியமான சர்ச்சை நடந்தது. முன்னவர் தனிப்பட்ட சீவன் தன்னிலே நிறைவுற்றதென நம்பிவர, பின்னவர் அங்ஙனமொரு சீவனே இல்லையென்று சாதித்தனர். அன்றொரு நாள் நான் உங்களுக்குச் சொன்னது போல, பொருளையும் குணத்தையும் குறித்து ஐரோப்பாவிலும் கிட்டத்தட்ட இத்தகைய சர்ச்சை நடந்திருக்கிறது: குணங்களுக்குப்பின் பொருளென ஒன்றுளதென்றும் அதிலே குணங்கள் சார்ந்திருக்குமென்றும் ஒரு பிரிவினர் கூற, மற்றொரு சாரார் பொருளொன்றும் தேவைப்படாததால் அது இல்லையென்றும் குணங்கள் தாமாகவே இருக்க இயலுமென்றும் கூறுகின்றனர். சீவனைப் பற்றிய மிகப் பழைய கொள்கை தன் ஒற்றுமையெனும் நியாயத்தை அடிப்படையாகக் கொண்டதே: "நானே நான்;" "நேற்றைய நானும் இன்றைய நானும் ஒன்றே;" "இன்றைய நான்" நாளைய நானாகவும் இருக்கும்; உடலில் உண்டாகும் மாறுதல்களுக்கெல்லாம் அப்பால் நான் ஒருவனே என்று நம்புகிறேன். எல்லைக்குட்பட்ட, ஆனால் மிகப் பூரணமான, சீவான்மாவைப்பற்றி நம்பி வந்தவரின் முக்கிய நியாயம் இதுவே போலும்.

ஆனால், புராதன பௌத்தர்கள் இத்தகைய கொள்கைக்கு அவசியமே இன்றெனச் சாற்றினார்கள். நாம் அறிவதும் அறிய இயல்வதும் அனைத்தும் இந்த மாற்றங்களே

எனும் நியாயத்தை அவர்கள் எடுத்துக்காட்டினார்கள். மாற்ற மில்லாத, மாறமுடியாத, ஒரு பொருளின் கொள்கை அனுவசியமே; அங்ஙனமொரு மாறுப்பொருள் இருப்பினும், அதை நாம் ஒருபோதும் அறிய இயலாது; அதைப் பற்றித் 'தெரிந்து கொள்ளல்' என்னும் சொல்லிற்குப் பொருளே இல்லை. இதே ஆராய்ச்சி இன்று ஐரோப்பாவில் மதச்சார்பினர், கொள்கை வாதிகள்[1] என்பாருக்கும் இப்போதைய உடன்பாட்டினர்[2], அஞ்ஞேயவாதிகள்[3] என்பாருக்குமிடையே நடந்து வருவதை நீங்கள் அறிவீர்கள். மாறுத ஒன்றுண்டென ஒருசாரார் நினைக்க (இவர்களுடைய பிரதிநிதியே உங்களுடைய ஹெர்பர்ட்டு ஸ்பென்ஸர்), மாறுதவொன்றைக் கணநேரம் நாம் காணலாமென்று கூற, மற்றொரு சாரார் இதை மறுக்கின்றனர். பின்னவரின் பிரதிநிதிகளே கோந்த் என்பாரைத் தலைவராகக் கொண்டவர்களும் இன்றைய அஞ்ஞேய வாதிகளும். சில ஆண்டுகளுக்கு முன் ஹெர்பர்ட்டு ஸ்பென்ஸருக்கும் பிரெடரிக்கு ஹாரிஸனுக்கும் இடையே நடந்த வாதங்களை உங்களிற் சிலர் கவனித்திருக்கலாம்: மாற்றங்களுக்குப்பின் ஒரே பொருள் உள்ளதை ஒரு சாரார் சாதிப்பது, அங்ஙனம் கொள்வது இன்றியமையாததன்று என்று மற்றவர் மறுப்பது—இந்தப் பழைய சங்கடமே இது என்பது அன்னருக்குத் தெரியும். மாறவொண்ணாத ஒன்றன் நினைவு கொண்டே மாற்றங்களைப் பற்றி நாம் நினைக்கக் கூடுமென ஒரு கட்சியினர் கூற, அது தேவையே யில்லையென மறுகட்சியினர் வாதிக்கின்றனர்: மாறுவதைக் குறித்தே நாம் சிந்திக்கலாம்; மாற்றமில்லாததைப் பற்றி நாம் அறியவோ உணரவோ இயலாது.

இந்தியாவில் மிகப் பழைய காலத்தே இப்பெரும் பிரச்சினையின் முடிவு காணப்படவில்லை. ஏனெனில், குணங்களுக்குப்பின் அவையல்லாத ஒருபொருளைக் கொள்வதற்குச் சான்றில்லையெனக் கண்டோமல்லவா? அம்மட்டோ? தன் ஒற்றுமை வாதமும்—நினைவு கூரலால் நேற்றைய நானே இன்றுமுளேன்; ஆகவே தொடர்புள்ள ஒரு பொருளே நான் எனும் நியாயமுங்கூட—ருசுப்படுத்த இயலாதது. சரியலாத இன்னொரு யுத்தி கூறப்படுவது வெற்றுச் சொற்களா

[1]Idealists. [2]Positivists. [3]Agnostics.

லுள்ள ஏமாற்றமே. எடுத்துக்காட்டாக, ஒருவன், ‘நான் செய்கிறேன்,’ ‘நான் போகிறேன,’ ‘நான் கனவு காண் கிறேன்,’ ‘நான் உறங்குகிறேன்; செல்கிறேன்,’ முதலிய வாக்கியத் தொடரை அமைத்து, செயல், போதல், கனவு காண்டல் முதலியன மாற்றங்களும், ‘நான்’ என்பது அவற் றின்மாருதஅமிசமுமே எனக் கூறலாம். ஆகவே, இந்த ‘நான்’ என்பது மாருத ஒன்றும், தன்னிலடங்கிய தனிப்பொருளும்; இம்மாற்றங்களனைத்தும் உடலைச் சார்ந்தனவே என்றும் கொள்ளப்படலாம். இது மிகத் தெளிவானதாகவும் நம்பக் கூடியதாகவும் தோன்றினும், வார்த்தைகளாலுள்ள விளை யாட்டே அதன் அடிப்படை. ‘நான்’ என்பதைச் செய்தல், போதல், கனவு காண்டல் முதலியவற்றிலிருந்து காகிதத் திலேயே பிரிக்க இயலும்: ஒருவனும் அவற்றைத் தன் மனத்தில் பிரித்து வைக்கமாட்டான்.

நான் சாப்பிடும்பொழுது என்னைச் சாப்பிடுபவனாக மட்டும் காண்கிறேன்; அவ்வேலையுடன் ஒன்றி விடுகிறேன். நான் ஓடும்பொழுது ஓட்டமும் நானும் வேறல்ல. ஆகவே, ‘ஒரே நான்’ என்னும் நியாயம் அதிக வலுவுள்ளதாகத் தோன்றவில்லை. நினைவு கூரலெனும் மற்ற நியாயமும் வலு வற்றதே. ‘ஒரே நான்’ என்பதற்கு நினைவு கூரலே அடிப் படையானல், நான் மறந்துபோன பல காரியங்களும் அவ் வொருமைப் பாட்டினைச் சிதைக்கும். மேலும், சிலர் குறிப் பிட்ட சந்தர்ப்பங்களில் தமது இறந்தகால முழுவதையும் மறந்து விடுவதாகக் காண்கிறோம். பைத்தியத்தின் பல வகைகளில் மனிதன் தன்னைக் கண்ணுடியால் ஆக்கப் பட்டவனுகவோ, ஒரு விலங்காகவோ மதிக்கிருன். அம் மனிதனது இருப்பு நினைவு கொள்வதைப் பொறுத்திருந் தால், அவன் கண்ணுடியாகி விட்டான் எனலாம்; இது உண்மையல்ல வாதலால், தான் என்பதன் ஒற்றுமை வலு வற்றதொன்ருன நினைவைப் பொறுத்ததன்று. எனவே கட்டுண்ட, ஆனல் நிறைவும் தொடர்பும் அமைந்த, ஒற்று மையே சீவன் என்பதை குணங்களிலிருந்து வேறுபட்ட வழியில் நிருபிக்க வொண்ணுது. குறுகிய, எல்லையுற்ற இருப்பில் குணங்களின் தொகுதியைச் சேர்க்க இயலாது.

மேலும் பழைய பௌத்தர்களின் நியாயம் அதிக வலு

வுற்றதாகத் தோன்றும்: குணங்களின் தொகுதியைத் தவிர நாமொன்றும் அறியோம்; அறியவும் இயலாதென்பதே அது. அவர்களுடைய கருத்தின்படி ஆன்மாவென்பது புலனறிவுகள், உணர்ச்சிகள் என்னும் குணங்களின் தொகுதியேயாம். இத்தொகுதியான ஆன்மா, எப்பொழுதும் மாறிக்கொண்டேயிருக்கிறது.

ஆன்மாவைப் பற்றிய அத்துவிதக் கொள்கை இவ்விரண்டு முனைகளையும் சேர்த்து விடுகிறது. பொருளும் குணங்களும் வேறுபட்டவையென நினைக்க இயலாதென்னும் உண்மையை அத்துவைதி ஏற்றுக்கொள்கிறன். மாற்றம், மாற்றமின்மை இவ்விரண்டையும் நாம் ஒரே காலத்தில் நினைக்க இயலாது. ஆனால், பொருளென்பதே குணம்; பொருளும் குணமும் வேறுபட்டவையல்ல. மாறுதவொன்றே மாற்றமுள்ளதாகத் தோற்றமளிக்கிறது. உலகத்தின் மாற்றமிலா உட்பொருள் உலகினின்றும் வேறுபட்டதன்று. உட்பொருள் வெளியே நிகழ்வதிலிருந்து மாறுபட்டதன்று. அப்பொருளே நிகழ்ச்சிகளாய் விடுகிறது. மாறுத ஆன்மாவொன்றுளது; புலனறிவு என்றும் உணர்ச்சிகள் என்றும் நாம் சொல்பவையும், உடலுங்கூட, மற்றொரு நோக்கிலிருந்து காணப்படும் ஆன்மாவே. நமக்கு உடல்கள், ஆன்மாக்கள் முதலியன உளவென்று நினைப்பதே நம் வழக்கமாகிவிட்டது; ஆனுல், உண்மையில் அவையெல்லாம் ஒன்றே.

நான் என்னை உடலாக நினைக்குமிடத்து உடலேயாகிறேன்; நான் வேறேதேனும் ஆவதாகக் கூறுவதற்குப் பொருளேயில்லை. மேலும், நான் ஆன்மாவென்று நினைக்கும் பொழுது உடல் மறைந்து விடுகிறது; உடலின் தோற்றமே அப்போது இல்லை. உடலின் தோற்றம் மறைந்தாலன்றி ஒருவனும் ஆன்மாவைக் காண இயலாது; குணங்களின் தோற்றம் மறைந்தாலன்றிப் பொருளைக் காண ஒருவனுக்கும் இயலாது.

அத்துவைதத்தின் பழைய உதாரணமான பாம்பென்று நினைக்கப்படும் கயிறு, இதை இன்னும் விளக்கலாம். ஒருவன் கயிற்றைப் பாம்பாகக் கருதும்பொழுது கயிறு மறைகிறது; அவன் அதைக் கயிருகவே கருதும் பொழுது பாம்பு மறைந்து கயிறே எஞ்சி நிற்கிறது. இரட்டை இருப்பு,

மூவிருப்பு முதலிய எண்ணங்களெல்லாம் போதாத காரணங்கள்மீது எழுப்பும் நியாயமே. நாம் அவற்றைப் பற்றிப் புத்தகங்களில் படிக்கவோ கேட்கவோ செய்கிறோம்; ஆன்மா உடல் என்னும் இரட்டைக் காட்சி வந்து விட்டதாகத் தவருக நினைக்கிறோம்; ஆனால், அத்தகைய காட்சி உண்மையில் இல்லை. நாம் உடலைக் காண்கிறோம், அல்லது ஆன்மாவையே காண்கிறோம். இதை நிரூபிக்கத் தருக்கம் தேவையில்லை; நீங்கள் உங்கள் மனத்திலேயே இதன் உண்மையைத் தெரிந்து கொள்ளலாம்.

நீங்கள் ஆன்மாவல்ல என்றும், உடலற்ற ஒன்றென்றும் நினைத்துக் கொள்ளுங்கள். இது கிட்டத்தட்ட அசம்பாவிதமென்றே தோன்றும். மிகச் சிலரே இங்ஙனம் நினைக்கக் கூடும்; ஆனால், தங்களை ஆன்மாவாகக் கருதும் போது உடலின் நினைவே அவர்களுக்கு இராது. சிலர் சிற்சில சந்தர்ப்பங்களில் ஆழ்ந்த தியானத்தாலோ, தம்மைத்தாமே ஏமாற்றுவதாலோ, நரம்புத் தளர்ச்சியாலோ அல்லது மருந்துகள் மூலமோ, வியத்தகு மனநிலையில் இருப்பதாகக் கேட்டிருப்பீர்கள்; அல்லது கண்டிருப்பீர்கள். அவர்களுடைய அனுபவங்களிலிருநது நீங்கள் தெரிந்து கொள்வது யாதெனில், உள்ளே உள்ள ஒன்றைக் காணும்போது வெளியே ஒன்றையும் காண்பதில்லை என்பதே. ஒரே இருப்பே உளதென்பது இதனுல் தெளிவாகிறது. அந்த ஒன்றே பற்பல உருவங்களில் காணப்படுகிறது; இவ்வுருவங்கள் அனைத்தும் காரண காரியத்தொடர்பை ஏற்படுத்துகின்றன. இந்தத் தொடர்பே பரிணமம் ஆவது, ஒன்று மற்ருென்ருக மாறுவது முதலியன. சில சமயங்களில் காரணம் மறைவதாகத் தோன்றுகிறது; காரியமே எஞ்சி நிற்கிறது. உடலின் காரணம் ஆன்மாவானுல், பின்னது தற்சமயம் மறைந்து உடலே எஞ்சி யிருப்பது; உடல் மறையும் பொழுது ஆன்மா தங்கியிருக்கிறது. உடலும் ஆன்மாவும் இரண்டென்ற கருத்திற்கெதிராகப் பௌத்தர்கள் கூறும் நியாயங்களுடன் இக்கொள்கை ஒத்துப்போகிறது. அவர்கள் இரட்டையிருப்பை மறுத்து, பொருளும் குணங்களும் பல உருக்களில் தோன்றும் ஒன்றேயெனக் கூறிவந்தார்கள்.

மாறவொண்ணுத பொருளெனும் கருத்து முழுமைக்

குமே பொருந்தும்; அதன் பகுதிக்கு ஒரு போதும் பொருந்தாதென்பதை நாம் அறிந்துகொண்டோம். பகுதியென்னும் கருத்தே மாற்றம் அல்லது அசைவு என்னும் கருத்தினின்று பிறக்கிறது. எல்லைக்குட்பட்ட ஒவ்வொன்றையும் நாம் தெரிந்து கொள்ளலாம்; ஏனெனில், அது மாறக்கூடியது; முழுமையோ, மாறவொண்ணாதது; ஏனெனில், அதற்குப் புறம்பான வேறொன்றும் இல்லை. அந்த வேறொன்றைப் பொறுத்து மாற்றமும் நிகழாது. மாற்றம் எப்பொழுதும் மாறாதவொன்றை, அல்லது குறைவாக மாறுவதைப் பொறுத்தே நிகழக்கூடும்.

ஆகவே, அத்துவைதக் கொள்கைப்படி, 'ஆன்மா பொதுப்படையானது; மாற்றமில்லாதது; அமரத்துவம் வாய்ந்தது,' என்னும் கருத்தைக் கூடிய வரையில் நிரூபிக்கலாம். சிறப்பான தனிப் பொருளைப் பற்றியே இன்னல் உண்டாகலாம். சிறிய கட்டுண்ட தனி ஆன்மாக்களைப் பற்றி நம்பும் பழைய துவைதக்கொள்கைகள் நம் மனத்தைப் பற்றியிருக்கின்றன; நாம் அவற்றையும் கடந்தாக வேண்டும்; அவற்றை வைத்துக்கொண்டு என் செய்வது?

முழுமையைப் பொறுத்தவரையில் நாம் அமரர்கள் என்பதைத் தெரிந்துகொண்டோம்; ஆனால், முழுமையின் பகுதிகளாயும் நாம் அமரர்களாக எவ்வளவோ அவாவுகிறோம் என்பதாலேயே இன்னல் எழுகிறது. நாம் எல்லையற்றவர் என்பதைக் கண்டோம்; அதுவே நமது சரியான தனித்துவம். எனினும், இந்தச் சிறிய ஆன்மாக்கள் தனியாகவே இருக்கவேண்டுமென்று மிகவும் அவாவுகிறோம். நமது அன்றாட வாழ்க்கையில் அந்தச் சிறிய ஆன்மாக்கள் தனிப்பட்டனவாயிருந்தும், இடையறாது வளர்கின்றன என்றறியும் பொழுது அவை என்ன ஆகின்றன? அவை மாறியும் மாறாமலும் இருக்கின்றன. நேற்றிருந்த நான் இன்றிருக்கும் நானே; ஆயினும், அங்ஙனமன்றி, சிறிது மாறியிருக்கிறேன். இப்பொழுது துவைதக் கொள்கையை விடுத்து, இம்மாறுதல்கள் அனைத்திற்குமிடையே மாறாத ஒன்று இருக்கிறதென்று கொண்டு, மிகப்புதிய பரிணமக் கருத்தின் உதவியால் 'நான்' என்பது இடையறாது மாறிக் கொண்டும் விரிந்துகொண்டும் வருகிறதென்பதைத் தெரிந்

துகொள்வோம். மனிதன் மிகச்சிறிய ஜீவியின் பரிணாமமென்பது உண்மையானால், தனிப்பட்ட அந்த ஜீவியும் மனிதனும் ஒன்றே; அந்த ஜீவி மிகப் பெரிதாக விரிந்திருப்பதே மாறுபாடு. மிகச் சிறிய பிராணியிலிருந்து மானிடன் வரையில் இடையறாது எல்லையில்லாத்தன்மை வரையில் விரிவுண்டாகிறது. ஆகவே, எல்லையுற்ற ஆன்மா இடையறாது விரிந்து, எல்லையற்ற ஆன்மாவாகிவிடும் தனிப்பட்ட ஒன்றே எனக் கொள்ளலாம். பூரணமான தனித்துவம் வரவேண்டுமானால் எல்லையற்றதை அடைந்தாக வேண்டும்: ஆனால், எல்லையற்றதன் இக்கரையில் இடையறாது மாறி வளரும் தோற்றமே உளது. தனக்கு முன் வந்த ஒழுங்குகளை ஒன்றுபடுத்தும் நயமே அத்துவைத வேதாந்தத்தின் சிறந்த குணங்களில் ஒன்று. பல விஷயங்களில் அது தத்துவசாஸ்திரத்திற்கு மிகவும் உதவியது; சிலபொழுது அதற்குத் தீங்கும் இழைத்தது. பரிணாமவாதம் என்பதை எங்கள் பண்டைய அறிஞர்கள் தெரிந்திருந்தார்கள். வளர்ச்சி மெல்லமெல்ல, படிப்படியாக நிகழும் என்று தெரிந்து, அவர்கள் பழைய ஒழுங்குகளையெல்லாம் ஒன்று படுத்தினார்கள். ஆகவே, பழைய கருத்துகளில் ஒன்றையேனும் கைவிடவில்லை. புத்தமதம் இயற்றிய பிழை இந்த இடைவிடாத வளர்ச்சியை, விரிதலைப் பற்றிய அறிவோ மதிவன்மையோ அவர்களுக்கில்லாததே. இது காரணமாகவே, தமக்கு முன் குறிக்கோளை நோக்கிச் சென்ற படிகளுடன் தம்மை ஒன்றுபடுத்த அது முயலவே இல்லை. அவையெல்லாம் உபயோகமற்றவை என்றும் தீங்கிழைப்பவை என்றும் கருதிக் கைவிடப்பட்டன.

மதத்தின் இந்தப் போக்கு மிகவும் தீங்கிழைப்பதே. ஒருவனுக்குப் புதிய, நலமிக்க கருத்துத் தோன்றியவுடன் பின்நோக்கி, தான் கைவிட்ட கொள்கையெல்லாம் அனுவசியமும் தீமை பயப்பதுமென்று தீர்மானிக்கிறான். இப்போது அவனது நோக்கிற்கு அவை எவ்வளவு நயமற்றவையாகத் தோன்றினும் இந்தப் பதவிக்கு வர அவை அவனுக்கு மிகவும் உதவின, அவசியமாயிருந்தன என்பதை மறந்து விடுகிறான். நாமெல்லோரும் இங்ஙனமே வளர வேண்டும். தொடக்கத்தில் நயமற்ற கருத்துகளையே உபயோகித்துப் பின்னர்

உயர்ந்த நிலையை எட்டவேண்டும். ஆகவே, அத்துவிதம் மிகப் பழைய கருத்துகளையும் வரவேற்கிறது. துவைதமும் தனக்கு முன்சென்ற மற்ற ஒழுங்குகளும் தற்பெருமை யின்றியே அதனுற் கொள்ளப்படுவது இந்த நம்பிக்கையு டனேதான்; அவையும் அதே உண்மையின் தோற்றங்களே. அத்துவிதத்தின் முடிபான அதே சித்தாந்தங்களில் அவை யும் வந்து சேருகின்றன.

மனிதஇனம் கடக்கவேண்டிய இப்பல்வேறு படிகள் ஆசியுடன் காப்பாற்றப்பட வேண்டும்; சாபத்துடனன்று. ஆகவே, இந்தத் துவைதக் கொள்கைகளனைத்தும் வேதாந் தத்தால் ஒருபோதும் மறுக்கப் படாமல், செம்மையாகப் பாதுகாக்கப்பட்டன; கட்டுண்ட ஜீவன் தன்நிறைவுற்ற தெனும் துவைதக் கொள்கைக்கு வேதாந்தத்தில் இடம் அளிக்கப்படுகிறது.

துவைதக் கொள்கைப்படி மனிதன் இறந்தால் மற்ற உலகங்களுக்கேகுவது முதலிய கருத்துகள் யாவும் வேதாந் தத்தில் இடம் பெற்றிருக்கின்றன. ஏனெனில், அத்துவித ஒழுங்கில் வளர்ச்சி என்பதை ஏற்பதால் அக்கருத்துகள் தத்தம் இடங்களில் அமைந்திருக்கும்; அவை உண்மை யின் ஒரு பகுதியே என்பது உடன்பாடு.

துவைத நோக்கிலிருந்து பார்த்தால், இப்பிரபஞ்சம் சடத்தின் அல்லது சத்தியின் படைப்பு என்பதைக் காண லாம். ஏதோ ஓரிச்சாசத்தியின் விளையாட்டே இது. அந்த இச்சாசத்தியோ, பிரபஞ்சத்தினின்றும் வேறுபட்ட தென்றே கொள்ளவேண்டும். அந்நோக்கிலிருந்து மனிதன் தன்னை இரட்டை இயல்பினனுக, உடலும் ஆன்மாவுமாக, பார்க்க வேண்டும்; இந்த ஆன்மா எல்லையுற்றதெனினும், தன்னிலே நிறைந்ததாம். அமரத்துவம், எதிர்கால வாழ்வு பற்றி அம் மனிதனது கருத்துகள் ஆன்மாவைப் பற்றிய கருத் தோடியைந்தே இருக்கும். இப்படிவங்கள் வேதாந்தத்தில் பாதுகாக்கப்பட்டிருப்பதால், சாதாரணமான துவைதக் கொள்கைகளுட் சிலவற்றை நானுங்களுக்கு எடுத்தோது வது அவசியமாகும். இதன்படி நமக்குக் காயமோ இருக்கத் தான் செய்கிறது; அதற்குப்பின் நுட்பவுடலொன்று இருப்ப தாகச் சொல்கிருர்கள். அதுவும் சடத்தாலானதே; ஆனுல்,

மிக நுட்பமான சடம். நம் கருமம் அனைத்தும், தோற்றப் பொலிவுள்ள உருவங்களாக வெளிவரவிருக்கும் செயல்களும் பதிவுகளுமெல்லாம் அதிலேயே உறைகின்றன. நமது எண்ணம் ஒவ்வொன்றும், செயல் ஒவ்வொன்றும் சிறிது காலத்திற்குப் பின் நுண்ணிதாகி, விதைபோன்றதாய், சூக்குமவுடலில் சாத்தியவடிவமாய் உறைகிறது; பின்னர் வெளிவந்து, தன் பயனை அளிக்கிறது. இப்பயன்களே மானிட வாழ்வை உருவாக்குகின்றன. இங்ஙனம் மனிதன் தனது வாழ்க்கையை அமைத்துக் கொள்கிருன்; தனக்காகச் செய்துகொள்ளும் சட்டங்களைத் தவிர வேறென்றாலும் அவன் கட்டுப் பட்டவனல்லன். நன்மைக்கோ, தீமைக்கோ, நம்மைச் சுற்றி வீசிக்கொள்ளும் வலையின் இழைகளே நம் எண்ணங்களும் மொழிகளும் செயல்களும். குறிப்பிட்ட ஒரு சத்தியை நாம் இயக்குவித்தால், அதன் பயன் அனைத்தையும் அனுபவிக்கக் கடவோம், இதுவே கருமத்தின் நியதி. நுட்பவுடலிற்குப் பின் ஜீவன், மானிடனது தனியான ஆன்மா, இருக்கிறது. இவ்வான்மாவின் உருவத்தையும் பருமனையுங் குறித்துப் பல வாதங்கள் எழுந்தன. இது அணுப்போல மிகச் சிறியதென்பது சிலருடைய கருத்து; அவ்வளவு சிறியதன்று என்பர் மற்றும் சிலர்; மிகப் பெரிதே இது என்பர் வேறொரு சாரார். உலகம் நிறைந்த பொருளின் பகுதியே இது; அமரத்துவம் வாய்ந்ததுங்கூட; தொடக்கமின்றி உயிர்த்துவருவதும் முடிவின்றி இருக்கப் போவதுமேயாம். தூயதான தனது உண்மை இயல்பினை வெளிக் கொணரவே அஃது இவ்வுருவங்களை யெல்லாம் கடந்து செல்கிறது. இந்த வெளிப்பாட்டைத் தடுக்கும் ஒவ்வொரு செயலும் தீங்கெனப்படும்; ஒவ்வோர் எண்ணத்தையும் இப்படியே சொல்லலாம். ஜீவன் விரிவுற்றுத் தன் உண்மை இயற்கையை வெளிப்படுத்த உதவும் ஒவ்வோர் எண்ணமும் செயலும் நல்லதே. ஆன்மாவின் சாத்தியங்களும் சத்திகளும் அனைத்தும் தன்னகத்தேயுள்ளன; புறம்பான ஓரிடத்தினின்றும் வருவனவல்ல என்னும் கருத்து இந்தியாவில் நயமற்ற துவைதிகளுக்கும் மிக முன்னேறிய அத்துவைதிகளுக்கும் பொதுவானதே. ஆன்மாவில் அவை சாத்திய உருவில் உள்ளன; அவற்றை

வெளிக்கொணரவே வாழ்க்கை முழுவதும் முயலவேண்டும்.

மறுபிறப்புக் கொள்கையும் பொதுவாக உளது. இவ்வுடல் அழிந்த பின் ஜீவன் இன்னொன்றை ஏற்கும்; அதுவும் அழிந்த பின்னர் வேறொன்றை ஏற்கும்; இப்படித் தொடர்ச்சியாக இங்கோ வேறுலகங்களிலோ நடைபெறும். ஆனால், மற்ற உலகங்களனைத்தையும் விட இவ்வுலகே நம் நோக்கத்திற்கு மிகவும் உதவுவதாகக் கருதப்படுவதால், இதிலேயே விருப்பங் கொள்கிறார்கள். மற்ற உலகங்களில் மிகச் சிறிதளவே துன்பம் இருப்பதாகக் கருதப்படுகிறது; அக்காரணம் பற்றியே அங்கு உயர்ந்த விஷயங்களைப் பற்றிச் சிந்திக்கும் வாய்ப்புக் குறைகிறதெனக் கொள்ளப் படுகிறது. இவ்வுலகில் சிறிது சுகமும் அதிக துக்கமும் இருப்பதால், ஜீவன் இன்றோ நாளையோ உறக்கம் விட்டெழுந்து, தனது சுதந்தரத்தைப் பற்றி நினைக்கிறது. மேலும் இவ்வுலகில் பெரிய சீமான்களுக்கு உயர்ந்த விஷயங்களைப்பற்றி நினைவு கூர வாய்ப்புக் குறைவது போல, ஜீவனுக்கும் சொர்க்கத்தில் முன்னேற அதிகம் வாய்ப்பு இராது. ஏனெனில் அதன் நிலைமையும் சீமான் நிலைமையைப் போன்றதே; இன்னும் அதிகம் சூறையும் எனலாம். அதன் நுட்ப உடலில் நோய் வாராது; உண்ணவோ, பருகவோ அதற்குத் தேவையில்லை; அதன் விருப்பங்களெல்லாம் நிறைவேறுகின்றன. ஜீவன் ஆங்கு ஒவ்வோர் இன்பத்தையும் துய்த்துத் தன் உண்மை இயற்கையை முற்றும் மறந்து விடுகிறது. ஆயினும், சில மிகவுயர்வுள்ள உலகங்களில், இன்பங்கள் இருப்பினும், அதற்கு மேலும் முன்னேற இயலும். சில துவைதிகளின் குறிக்கோள் மிகவுயர்ந்த சொர்க்கமாம்; அங்கு ஜீவன்கள் கடவுளுடன் என்றென்றும் உறைகின்றன. அவற்றிற்கு அழகிய உடல்கள் இருக்கும்; நோயோ, இறப்போ, மற்றத் துன்பங்களோ அங்கு இல்லை; தம் விருபபங்கள் அனைத்தும் நிறைவேறி விடுகின்றன. சிற் சில சமயம் அவற்றிற் சில இப்பூவுலகிற்குத் திரும்பி வந்து, வேறோர் உடல் எடுத்து, மனிதர்களுக்குத் தெய்வத்தைக் காணும் வழியை உபதேசிக்கின்றன. இவ்வுலகின் மாபெருந் தீர்க்க தரிசிகள் இத்தகையவர்களே; அவர்கள் ஏற்கெனவே

சுதந்தரராகிக் கடவுளுடன் மிக உயர்ந்த உலகில் வசித்து வந்தார்கள். ஆனால் துன்பப்படும் மனித இனத்தின் மீது உள்ள அன்பும் கருணையும் மேலிட்டு அவர்கள் இங்கு வந்து உடல் கொண்டு, மனிதஜாதி உய்யும் வழியைக் கற்பித்தனர்.

இதுவே குறிக்கோளன்று என்று அத்துவைதம் கொள்வது நமக்குத் தெரியும்: உடலற்று இருப்பதே குறிக்கோளாகும். குறிக்கோள் கட்டுக்கடங்கி இருக்க இயலாது. எல்லையற்றதற்குக் கீழான ஒன்றும் குறிக்கோளாக முடியாது; எல்லையற்ற உடலென்பது இருக்க இயலாதன்றோ? ஏனெனில், உடலின் தன்மை எல்லைக்குள் இருப்பதே. எல்லையற்ற எண்ணமும் இருக்க இயலாது; ஏனெனில் எண்ணம் எல்லைக்குள்ளேயே எழுகிறது. ஆகவே, நாம் உடலுக்கப்பாலும் எண்ணத்திற் கப்பாலும் செல்ல வேண்டுமென அத்துவைதம் கூறுகின்றது. மேலும், இந்தச் சுதந்தரம் இனிப்பெற வேண்டுவதன்று: ஏற்கெனவே நமது தான் என்றும் அத்துவைதம் கூறுவதைக் கண்டுகொண்டோம். நாம் அதை மறந்து போய் மறுக்கிறோம், அவ்வளவே. நிறைவென்பது இனிக் கிட்டவேண்டுவதன்று. அது நமக்குள்ளேயே உறைகிறது. அமரத்துவமும் ஆனந்தமும் இனிப்பெறவேண்டுவன அல்ல; அவை நம்முடையனவே; எப்பொழுதும் நம்முடையனவாகவே இருந்திருக்கின்றன.

நீங்கள் சுதந்தரர் என்று சொல்லத் தைரியம் உற்றால் இந்நொடியிலேயே நீங்கள் சுதந்தரர்களே. நீங்கள் கட்டுப்பட்டவர்களென்று கூறுவீரேல், அப்படியே இருப்பீர்கள். இதுவே அத்துவைதம் திண்மையாக இயம்புகிறது. நான் உங்களுக்கு துவைதிகளின் கருத்துகளையும் கூறியுள்ளேன்; நீங்கள் விரும்புவதை ஏற்றுக்கொள்ளலாம்.

வேதாந்தத்தின் மிக உயர்ந்த குறிக்கோளைத் தெரிந்து கொள்வது மிகவும் கடினமே. ஜனங்கள் அதைப் பற்றி எப்பொழுதும் வாதம் செய்கின்றார்கள். அவர்கள் சில கருத்துகளை ஏற்றுக் கொண்டால் மற்றவைகளை மறுத்து வாதம் புரிவார்கள் என்பதே பெரிய இன்னலாகும். உங்களுக்கு விருப்பமுள்ளதை ஏற்றுக்கொள்ளுங்கள்; ஏனையோர் விரும்புவதை அவர்களும் கொள்ளலாம். இந்தச் சிறிய தனித்து

வத்தை, மனிதத்தன்மையை, விரும்பி இதையே பற்றியிருப்பீர்களாகில், இதற்குரிய விருப்பங்கள் கொண்டு திருத்தியுடன் சுகித்திருங்கள். மனிதத்தன்மையைப் பற்றிய அனுபவம் உங்களுக்கு மிக நன்ருகவும் அழகாகவும் தோன்றினுல் அதை வேண்டு மளவும் துய்த்திருங்கள். ஏனெனில், நீங்களே உங்களுடைய நியதியை உருவாக்குகிறீர்கள். உங்களது மனிதத்தன்மையைக் கைவிட ஒருவரும் உங்களை வற்புறுத்த இயலாது. விரும்பிய அளவிற்கு மனிதர்களாகவே இருங்கள்; யார் தடைசெய்வது? நீங்கள் தெய்வதூதர்கள் ஆக விரும்பினுல், அத்தகையோராய் இருப்பீர்கள்; இதுவே நியதி. ஆனுல், மற்றும் சிலர் தெய்வதூதர்களாகவும் விரும்பவில்லை எனலாம். அவர்களுடைய கருத்துப் பயங்கரமானது என்று நினைக்க உங்களுக்கு உரிமை ஏது? நூறு பவுனைத் தொலைத்துவிட்டால், நீங்கள் அச்சங்கொள்ளலாம்; ஆனுல், இவ்வுலகிலுள்ள சொத்தனைத்தையும் இழந்தாலும் கண்ணிமையாதவர்களும் இருக்கலாம். அத்தகைய மனிதர்கள் இருந்திருக்கிருர்கள்; இன்னும் இருப்பார்கள். உங்களது நிலையிலிருந்து அவர்களை ஏன் மதிக்கத் துணிய வேண்டும்? உங்கள் எல்லைக் கோடுகளுக்குள் நீங்கள் வதிந்து இந்தச் சிறு உலகாயதக் கருத்துகளே உங்களுடைய மிக உயர்ந்த குறிக்கோளாக அமையலாம். அது உங்கள் விருப்பம்; அதன்படியே உங்களுக்கு அது அமையும். ஆனுல், உண்மையைக் கண்ட ஏனையோரும் இருக்கின்றனர். அவர்கள் இந்தச் சிற்றெல்லைகளுக்குள் தங்கமாட்டார்கள்; இவற்றைக் கடந்து அப்பாற் போகவே விரும்புவார்கள். இவ்வுலகும் இதன் இன்பங்களும் அவர்களுக்குச் சேறு நிறைந்த சிறு குளம் போன்றனவே. உங்களுடைய கருத்துகளால் அவர்களை ஏன் கட்டுப்படுத்த விரும்புகிறீர்கள? இந்த மனப்போக்கு நீங்கள் என்றென்றைக்கும் தொலைத்து விட வேண்டுவதே. அனைவருக்கும் அவரது இடத்தை அளியுங்கள்.

தென்கடல் தீவுகளில் பெரும் புயற் காற்றினுல் அடிபட்ட சில கப்பல்களைப் பற்றி ஒரு கதையை யான் ஒருகால் படித்தேன்; அதைப் பற்றிய படமும் 'இல்லஸ்ட்ரேட்டு லண்டன் நியூஸ்' என்னும் பத்திரிகையில் வெளிவந்திருந்

தது. ஓர் ஆங்கிலக் கப்பலைத் தவிர மற்றவை அனைத்தும் உடைந்து போயின; ஆங்கிலக் கப்பலே எஞ்சி நிற்க இயன்றது. அப்படத்தில் மூழ்கிப் போகும் ஜனங்களும் கப்பல் தளத்தில் நின்று கொண்டு புயலைச் சட்டை செய் யாது செல்லும் கப்பல்களை உற்சாகப் படுத்துவோரும் கண்டிருந்தனர்.[1] அவர்களைப் போலவே தைரியமும் கருணை யும் கொண்டிருங்கள். உங்களுடைய தளத்திற்கு மற்ருேரை யும் இழுத்து விடவேண்டா. நமது சிறிய தனித்துவத்தை இழந்தால், நன்னெறி பிறழ்வோ மென்றும் மனித இனம் ஆசையற்றுவிடும் என்றும் இன்னொரு மதியற்ற எண்ண மும் வழங்குகிறது. அனைவரும் எப்பொழுதும் மனித ஜாதிக் காக உயிர் துறக்கிருர்களா என்ன! கடவுள் உங்களைக் காப் பாராக! ஒவ்வொரு நாட்டிலும் இரு நூறு ஆடவரும் பெண்டிரும் உண்மையாகவே மனித இனத்திற்கு நன்மை செய்ய விரும்பினுல், ஐந்தே நாட்களில் சொர்க்கங் கீழிறங்கி விடும். மனித ஜாதிக்காக நாம் எங்ஙனம் உயிர் துறக்கிருே மென்பது தெரியாதா என்ன! இவையெல்லாம் இடம்பப் பேச்சேயன்றி வேறன்று. தமது சிறிய பொலிவைப் பற்றி ஒரு போதும் எண்ணுதவர்களே மனித ஜாதிக்கு மிகவும் தொண்டு செய்திருக்கிருர்கள் என்றும், ஆடவரும் பெண்டி ரும் தம்மைப் பற்றியே சிந்தித்திருந்தால் அவ்வளவுக்கும் அவர்கள் ஏனையோருக்கு உதவ இயலாதென்றும் உலக வர லாற்றிலிருந்து கற்றுக் கொள்கிருேம். ஒன்று தன்னல மறுப்பு; இன்னொன்று தன்னல விருப்பம். சிற்றின்பங்களைக் கடைப் பிடிப்பதும் அவை மேன்மேலும் தொடர்ந்து போக வேண்டு மென்று விரும்புவதுமே மிகுந்த தன்னலம். அது மெய்யைப்பற்றிய விருப்பத்திலிருந்தோ, மற்ருேர் மீது கருணை காட்டுவதாலோ எழுவதன்று; "எனக்கே எல்லாம் வேண்டும், ஏனையோரைப் பற்றி எனக்கென்ன கவலை?" என்று நினைத்து இதயத்தைத் தன்னலத்தால் நிரப்புவதா லேயே எழுகிறது. இதுவே என் நினைவு. பண்டைக் காலத்து மாபெருந் தீர்க்கதர்சிகளையும் முனிவர்களையும் போன்ற நன் னெறி பிறழாத அதிகமக்கள் இவ்வுலகில் இருக்க வேண்டு

[1] H. M. S. காலியோபியும் அமெரிக்க யுத்தக் கப்பல்களும் சாமோவா தீவில் நின்றன.—ஆசிரியர்.

மென்று நான் விரும்புகிறேன். அவர்களல்லவா தமது நூற்றுக்கணக்கான உயிர்களையும் ஒரு சிறு விலங்கைக் காப்பாற்றுவதற்குத் துறக்கத் துணிந்தவர்கள்! நன்னெறி, மற்றோருக்கு நன்மை செய்வது இதுபற்றிய பேச்சே! அது இக்காலத்துப் பொருளற்ற வெற்றுப் பேச்சு!

நான் கௌதம புத்தரைப் போன்று நன்னெறி தழுவும் மனிதர்களைப் பார்க்க விரும்புகிறேன். அவர் தனிப்பட்ட கடவுளையோ ஜீவனையோ நம்பவில்லை, அவர்களைப் பற்றி பிரச்சினை எழுப்பவில்லை; முழுதும் அஞ்ஞேய வாதியாகவே இருந்து எவருக்காகவும் தம் உயிரைத் துறக்க ஆயத்தமாயிருந்தார். தமது வாழ்நாள் முழுவதும் அனைவருடைய நன்மையைப் பற்றியே சிந்தித்து அதற்காகவே உழைத்து வந்தார். அவருடைய வாழ்க்கை வரலாற்றை எழுதியவர், அவர்தம் பிறப்பைப் பற்றிக் கூறும்போது, பல மக்களுடைய நன்மைக்காகவும் ஆசிக்காகவுமே அவர் பிறந்தாரென்று இயம்பினர். அவர், தம் மோட்சத்திற்காகவன்று காடு சென்று தியானம் புரிந்தது; உலகில் தீப்பிடித்து விட்டதென்றும், அதை அணைக்கத் தானே வழிகாண வேண்டுமென்றும் அவருக்குத் தோன்றிற்று. "இவ்வுலகில் ஏன் இவ்வளவு துன்பம் நிறைந்திருக்கிறது?" என்பதே அவர் வாழ்நாள் முழுவதும் கேட்டு வந்த கேள்வி. புத்தருக்கு இருந்தது போன்ற நன்னெறிப்பற்று நமக்கெல்லாம் உண்டாகுமென்று நினைக்கிறீர்களா?

தன்னலம் அதிகமாக ஆக, மனிதனது நன்னெறிப் பற்று குறைகிறது. மனித ஜாதியைப் பற்றிய உண்மையும் இத்தகையதே. தன்னலமிருந்த ஜாதியே உலக முழுவதிலும் மிகக் கொடூரமாகவும் துஷ்டத்தனமாகவும் இருந்திருக்கிறது. துவைதக் கொள்கையை மிக அழுத்தமாகப் பின்பற்றிய மதம் அரபு தீர்க்கதரிசி நிறுவியதே; அதைப்போல அவ்வளவு குருதி சிந்தியதும் மற்ற மனிதரிடம் அவ்வளவு கொடூரமாக நடந்து கொண்டதுமான வேறு மதம் இல்லை. குர்ஆனிலுள்ள அறிவுரைகளை நம்பாத மனிதனைக் கொல்ல வேண்டுமென்பது அதிற் கூறப்பட்டிருக்கிறது; அத்தகையோனைக் கொல்வது கருணையே! அழகிய வனிதைகளும் பலவிதப் புலனுகர்ச்சிகளுங்கொண்ட சொர்க்கத்தை அடைய

நிச்சயமான வழி, மதத்தை நம்பாதோரைக் கொல்வதாம். இத்தகைய நம்பிக்கைகளால் எவ்வளவு இரத்தம் சிந்தப்பட்டிருக்கிற தென்பதைக் கூர்ந்து பாருங்கள் !

கிறிஸ்துவின் மதத்தில் அவ்வளவு நயமின்மை இல்லை. தூய கிறித்துவ மதத்திற்கும் வேதாந்தத்திற்குமிடையே மிகச் சிறிய மாறுபாடே உளது. ஆங்கும் ஒருமைப்பாடெனுங் கருத்தைக் காணலாம். எனினும், மக்கள் தொடக் கூடிய ஒன்றைப் பற்றிக்கொண்டு மிக உயரிய குறிக்கோள் வரை முன்னேறுவதற்காக அவர்களுக்கு துவைதக்கொள்கைகளையும் கிறிஸ்து போதித்து வந்தார். “சொர்க்கத்தில் வீற்றிருக்கும் எம் தந்தை” என்று கூறிய அதே தீர்க்கதரிசி, “நானும் என் தந்தையும் ஒன்றே,” என்றும் புகன்றார். சொர்க்கத்திலிருக்கும் தந்தை வழியாகவே “நானும் என் தந்தையாரும் ஒன்றே” என்னும் குறிக்கோளுக்குச் செல்லலாகுமென்பதை முக்காலுமறிந்த அவர் உணர்ந்திருந்தார். ஆசியும் அன்புமே கிறிஸ்துவின் மதத்தில் இருந்தன ; ஆனல், சிறிது நயங் குறைந்தவுடன் அரபு தீர்க்கதரிசியின் மதத்தைவிட அதிகம் உயர்ந்ததன்று என்னும் இழிநிலைக்கு அது வந்துவிட்டது. இந்தச் சிறிய ‘தான்’ என்பதற்காகப் போரிடல், இவ்வாழ்க்கையில் ‘நான்’ என்பதைப் பற்றியது போதாமல் இறந்ததற்குப் பின்னும் அது தொடரவேண்டுமெனும் விருப்பம் ஆகியவையெல்லாம் நயமற்ற தன்மைகளே. இவையே தன்னல மறுப்பென்கிறார்கள் ; இதுவே நன்னெறிக்கு அடிப்படையாம்! நன்னெறிக்கு இதுவே அடிப்படையானல், கடவுளே நம்மைக் காக்க வேண்டும்! இச்சிறு ‘நான்’ போய்விட்டால், நன்னெறியே அழிவுறுமென்றும், ‘நான்’ மறைந்த பிறகே நன்னெறி பிழைக்குமெனும் கருத்து அச்சுறுத்துவதென்றும் அறிவுள்ள மக்கள் நினைப்பது வியக்கத்தக்கதே. இன்ப நிலைக்கும் நன்மை அனைத்திற்கும் காப்புச் சொல் ‘நான்’ அன்று, ‘நீ’ என்பதே. “சொர்க்கமோ, நரகமோ இருக்கிறதா ? ஆன்மா இருக்கிறதா இல்லையா ? மாருதவொன்று இருக்கிறதா இல்லையா ?” என்று யார் கவலைப்படுகிறார்கள் ? துன்பம் நிறைந்த உலகம் இதோ இருக்கிறது. புத்தர் செய்தது போலத் துன்பத்தைக் குறைக்க முயலுங்கள், இன்றேல்

சாவுங்கள். நீங்கள் ஆஸ்திகரோ நாஸ்திகரோ, அஞ்ஞேய வாதியோ வேதாந்தியோ, கிறிஸ்தவனே முகம்மதியனே, யாராயினும் சரி; உங்களையே மறந்து விடுங்கள். இதுவே உங்களுக்கு முதற்படிப்பினை. சிறிய 'நான்' அழிய வேண்டு மென்பதும் உண்மையான ஆன்மாவை நிறுவவேண்டு மென்பதும் எல்லோருக்கும் தெளிவான படிப்பினையாகிறது.

இரண்டு சத்திகள் இணைக்கோடுகள் வழியாகச் செயல் புரிகின்றன. 'நான்' என்கிறது ஒன்று; 'நானன்று' என் கிறது இன்னொன்று. மனிதனில் மட்டுமன்றி விலங்கு களிலும், விலங்குகளில் மட்டுமன்றி மிகச் சிறிய புழுக் களிலும் அவை வெளிப்படுகின்றன. மனிதனின் குருதியில் தன் நகங்களைத் தோய்க்கும் பெண்புலி தன் குட்டிகளைக் காப்பாற்றத் தன் உயிரையே கொடுத்துவிடும். தன் சகோதர மானிடரின் உயிரைக் கொள்வது இயற்கையே என்றெண்ணும் மிகத் தீயோனும், பசியால் வாடும் தன் மனைவி மக்களைக் காப்பாற்றத் தனது உயிரையே தயங் காமல் கொடுக்க முன்வரலாம். ஆகவே, படைப்பு முழுவதும் இவ்விரு சத்திகள் ஒன்றை அடுத்து ஒன்றாகச் செயலாற்றி வருகின்றன. ஒன்றைப் பார்க்குமிடத்து மற்றொன்றையும் காணலாம். ஒன்று தன்னலமானல், இன்னொன்று தன்னல மறுப்பே. ஒன்று கொள்கிறது; இன்னொன்று கொடுக் கிறது; மிகத் தாழ்ந்ததிலிருந்து மிக உயர்ந்தது வரையில் பிரபஞ்சம் முழுவதும் இவ்விரு சத்திகளின் விளையாட்டு நிலமே. இதற்குச் சான்று தேவையில்லை; அனைவருக்கும் விளங்குவதே இது.

இவற்றுள் போட்டி, போர் என்னும் ஒன்றன்மீதே படைப்பின் வேலையும் விரிவும் பொருந்தி யிருப்பனவென்று கூறச் சமுதாயத்தின் எந்த வகுப்பிற்காயினும் உரிமை இருக்கிறதா? சினம், சண்டை இவற்றிலிருந்தே பிரபஞ்சத் தின் செயலனைத்தும் எழுந்தன என்று சொல்ல அவர்களுக்கு என்ன உரிமை? இவையும் இருப்பதை நாம் மறுக்கவில்லை; ஆனல், மற்றச் சத்தியின் செயலாற்றலை ஏன் மறுக்க வேண்டும்? அன்பு, 'நானன்று' எனும் தியாகம், மட்டுமே இவ்வுலகிலுள்ள உடன்பாட்டுச் சத்தி என்பதை எவரேனும் மறுக்க இயலுமா? மற்றது அன்புச் சத்தியின் தவருன

உபயோகமே; அன்பின் சத்தி போட்டியைக் கொணர்கிறது; போட்டி உண்மையில் அன்பினின்றே உதிக்கிறது. தீமை உண்மையாகத் தன்னல மறுப்பினின்றே உண்டாகிறது. நன்மையே தீங்கை இழைக்கிறது; அதன் முடிவும் நன்மையே. நன்மையின் பலத்தைத் தவருகச் செலுத்துவதே அது. ஒருவனைக் கொலை செய்யும் மனிதன் தன் குழந்தையின் அன்பாலேயே தூண்டப்பட்டிருக்கலாம். அந்தச் சிறு குழவியிலேயே அவனது அன்பு கட்டுண்டிருக்கிறது. உலகில் கோடிக் கணக்காயுள்ள மற்ற மனிதரை அவன் புறக்கணிக்கிருன். எனினும், கட்டுண்டதோ இல்லையோ, ஒரே அன்பே அது.

ஆகவே, இவ்வுலகின் தூண்டு சத்தி, (அஃது எவ்வாறு வெளிப்பட்டாலுஞ் சரி) அந்த வியத்தகு தன்னல மறுப்பு, தியாகம், அன்பு; இங்குள்ள ஒரே உண்மையான, உயிருள்ள சக்தியே. ஆகவேதான் வேதாந்தி அந்த ஒற்றுமையை வற்புறுத்துகிருன். இத் தெளிவுரையை நாம் வற்புறுத்துவது உலகிற்கு இரு காரணங்கள் இருக்க இயலாதென்று நாம் கூறுவதாலேயே. அதே அழகிய, வியப்பிற்குரிய அன்பு எல்லைக்குட்படுவதால், தீமையாகவோ இழிவுற்றதாகவோ தோன்றுமெனக் கொண்டால், பிரபஞ்ச முழுவதும் அன்பின் பலமொன்ருலேயே தெளிவாக்கப் படுவதெனக் காணலாம். அஃதின்றேல், உலகின் காரணம் இரட்டையென்று கொள்ள நேரும். ஒன்று நன்மை; மற்ருென்று தீமை. ஒன்று அன்பு; இன்ஞென்று வெறுப்பு. எது அதிக நியாயத்தைத்தழுவியது? நிச்சயமாக ஒரே-சத்திக் கொள்கையே.

துவைதக் கொள்கையைச் சிறிதும் சாராத விஷயங்களுக்கு இனிச் செல்வோம். துவைதிகளிடம் இன்னும் நான் தங்க முடியாது தான்! நன்னெறி, தன்னலமறுப்பு இவற்றின் மிகவுயர்ந்த குறிக்கோள் மிகவும் நுட்பமான தத்துவ நினைவுடன் இயைந்து போமென நிரூபிப்பதே என் கருத்து. நன்னெறி பிறழாதிருக்க உங்களது எண்ணத்தைத் தாழ்த்த வேண்டா; அம்மட்டோ! நன்னெறிக்குத் தகுந்த அடிப்படையை நிறுவவேண்டுமாஞல் மிகவும் உயரிய தத்துவ எண்ணங்களும் சாத்திர நினைவுகளும் தேவைப்படும். மனிதரின் நல்வாழ்வுக்கு முரண்பட்டதன்று அவர்களது

அறிவு. அது மட்டுமன்றி, வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் அறிவே நம்மைக் காப்பாற்றுவது; அறிவே வழிபாடாகும். அறிவு அதிகமாகுந் தோறும் நமக்கு உண்டாவது அதிக நன்மையே. தீங்கெனத் தோன்றுவதன் காரணம் முழுவதும் எல்லையற்றதை எல்லைகளுக்குள் கொணர்வதேயென வேதாந்தி உரைக்கிறான். அன்பு எல்லைக்குட்பட்டுச் சிறு வாய்க்கால் வழிச் செல்லும்போது தீங்காகப் புலப்படுகிறது; கடைசியில் வாய்க்காலின் மறுகோடியில் புறப்படும்போது அதுவே கடவுளாய்த் திகழ்கிறது. தீமையாய்த் தோற்றும் இவையனைத்தின் காரணமும் நம்முன்னேயே உள்ளது என்றும் வேதாந்தம் இயம்பும். இயற்கைக்கு மேற்பட்ட ஒருவரையும் குறைகூற வேண்டா; ஆசையற்றுச் செயலற்றிருக்க வேண்டா; யாரேனும் வந்து கைகொடுத்து உதவவில்லையானால், தப்பிப் போக இயலாத விடத்தில் சிறைப்பட் டிருக்கிறோமென்றும் எண்ணாதீர்கள். 'அஃதவ்வண்ணமன்று,' என்கிறது வேதாந்தம்: பட்டுப் பூச்சிகளைப் போன்றவரே நாம். நமக்குள்ளிருந்தே நூலிழைத்துக் கூடு பின்னுகிறோம்; நாளடைவில் அதற்குள்ளேயே கட்டுண்டு கிடக்கிறோம். ஆனால், இது என்றென்றைக்கும் இராது. அக்கூட்டிலே நாம் ஆன்மிக மெய்யுணர்வைப் பெற்றுப் பட்டுப்பூச்சியைப்போலச் சுதந்தரராக வெளியேறுவோம். இந்தக் கரும வலையை நம்மைச் சுற்றி நாமே பின்னியிருக்கிறோம்; அறிவின்மையாற் கட்டுண்டது போல் எண்ணி, உதவிக்காகக் கதறியழுகிறோம். ஆனால், வெளியிலிருந்து உதவி வருவதில்லை; நமக்குள்ளிருந்தே வருகிறது. பிரபஞ்சத்திலிருக்கும் கடவுளை யெல்லாம் விளித் தழுங்கள்! நான் பல ஆண்டுகள் கதறினேன்; கடைசியில் உதவியெய்தியதாகக் கண்டேன். ஆனால், அது உள்ளிருந்தே வந்தது; தவறிழைத்ததன் விளைவை அகற்றவும் வேண்டுவதாயிற்று. இது தான் ஒரே வழி. என்னைச் சுற்றிப் பின்னிக் கொண்ட வலையை அறுக்க வேண்டி, அதற்குரிய சத்தியையும் என்னுள்ளிருந்தே பெற்றுக்கொண்டேன். என் வாழ்க்கையில் எந்த ஆர்வமும், அது வழிதப்பியோ சரியான வழியிலோ ஆகுக—வீணானதில்லை என்பது திண்ணமே. நன்மை தீமையாகிய இருவிதமான என் இறந்தகாலம் முழு

வதன் விளைவே நான். என் வாழ்க்கையில் எத்தனையோ தவறுகளை இழைத்திருக்கிறேன்; ஆயினும், அவற்றுள் ஒவ்வொன்றும் இழைக்கவில்லையேல் நான் இன்றிருக்கும் நிலையை எட்டியிருக்கமாட்டேன் எனத் திண்ணமாகக் கூறுவேன். எனவே, அவற்றை இழைத்ததற்காகத் திருத்தியே அடைகிறேன். நீங்கள் வீட்டிற்குச் சென்று வேண்டுமென்றே தவறு செய்ய வேண்டுமென்பது என் கருத்தன்று; அங்ஙனம் நான் சொல்வதைத் தப்பாகக் கருதிக்கொள்ளாதீர்கள். ஆனால், நீங்களிழைத்த தவறுகளுக்காக மூலையிலுட்கார்ந்து அழவேண்டா; முடிவில் அனைத்தும் சரிப்படுமென்று உறுதி கொள்ளுங்கள். இது இன்றியமையாததே; ஏனெனில், நமதியற்கை நன்மையும் தூய்மையுமே; அவ்வியற்கை ஒருபோதும் அழிக்க இயலாது. நமது சுயமான இயல்பு எப்போதும் ஒரே தன்மையாகவே இருக்கும்.

தவறு அல்லது தீங்கு எனக் கூறப்படுவதைப் பலவீனத்தாலேயே இழைக்கிறோம்; அறிவின்மையாலேயே பலவீனமாயிருக்கிறோம்என்பதைத் தெரிந்துகொள்ளவேண்டும். அவற்றைத் தவறென்று சொல்லவே துணிவேன். பாவமென்பது முதலில் நல்ல வாக்காயிருந்தது; பிறகு என்னை அச்சுறுத்தும் கருத்தொன்று அதற்கு வந்து விட்டது. யார் நம்மை அறிவிலிகளாகச் செய்கிறார்கள்? நாமே செய்கிறோம். நம் கண்களைக் கைகளால் மூடிக்கொண்டு, 'இருட்டி விட்டதே!' எனக் கதறுகிறோம். கைகளை அகற்றி விட்டால், ஒளி தெளிவாகிறது. மானிட ஆன்மாவின் சுயஞ்சோதியான இயற்கைஒளி நமக்கு எப்பொழுதுமே உண்டு. உங்கள் நாட்டு இக்கால விஞ்ஞானிகள் சொல்வதை நீங்கள் கேட்பதில்லையா? பரிணாமத்திற்குக் காரணமென்ன? விருப்பம். விலங்கு ஏதோ செய்ய விரும்புகிறது; அதற்கியைந்த சூழ்நிலை இல்லாததால், புதியதோருடல் அமைகிறது. அதை அமைப்பது எது? அவ்விலங்கே; அதன் இச்சா சத்தியே. மிகத் தாழ்ந்த சிற்றுயிரிலிருந்து நீங்கள் இந்நிலைக்கு வளர்ந்திருக்கிறீர்கள். இச்சா சத்தியைத் தொடர்ந்து செயற்படுத்தினால், இன்னும் மேலேறுவீர்கள். எல்லாம் வல்லதே இச்சா சத்தி. அஃது அங்ஙனமாயின், நானேன் அனைத்தையும் செய்ய இயலாதெனக் கேட்பீர்கள். ஆனால், நீங்கள் உங்களு

டைய சிறிய ஆன்மாவைப் பற்றியே நினைக்கிறீர்கள். மனித நிலைமையிலிருந்து சிற்றுயிர் வரை உங்களையே பின் நோக்கிப் பாருங்கள். இவ்வளவு வளர்ச்சி எதனால் வந்தது? உங்களது இச்சா சத்தியால் வந்தது. ஆகவே, அது சர்வ வல்லமையுள்ளது என்பதை நீங்கள் மறுக்க இயலுமா? இவ்வளவு மேல் நிலைக்கு உங்களைக் கொணர்ந்ததே இன்னும் உயர உங்களைத் தூக்கிச் செல்லும். ஒழுங்கு முறை, வலிய இச்சா சத்தி இவையே உங்களுக்குத் தேவை.

எனவே உங்களது இயல்பே தீங்கென்றும், சில தவறுகள் இழைத்ததால் நீங்கள் வீட்டுக்குத் திரும்பிக் கந்தல் கட்டிச் சாம்பர் பூசவேண்டுமென்றும் நான் இயம்பினால் உங்களுக்கு அது உதவி புரிவதாகாது, உங்களை மேலும் வலுவிழக்கச் செய்யும். நன்மையைவிடத் தீமைக்கான மார்க்கத்தை உங்களுக்குக் காண்பித்தவனாவேன். ஆயிரக் கணக்கான ஆண்டுகள் இவ்வறையில் இருள் நிறைந்திருப்பதாகவும் நீங்கள் உள்ளே வந்து, "ஐயோ இருளே!" என்று கதறி விசும்புவதாகவும் நினைப்போம். அதனால் இருள் அகன்று விடுமா? ஒரு தீக்குச்சியை உரசுங்கள், ஒரே நொடியில் ஒளி திகழ்கிறது. "ஆ, நான் தீமை செய்தேனே! எவ்வளவோ தவறு செய்தேனே," என்று வாழ்க்கை முழுதும் நினைத்திருந்தால் பயனென்ன? நமக்கு இதை எடுத்துரைக்க ஒரு பேயும் தேவையில்லை. ஒளியைக் கொணருங்கள், அக்கணமே தீங்கு மறைகிறது. உங்களது சுபாவத்தை நிர்மாணியுங்கள்; எப்பொழுதும் தூயதான, சோதிப் பிழம்பான உங்கள் சுய இயல்பை வெளிப்படுத்துங்கள்; நீங்கள் சந்திக்கும் ஒவ்வொருவரிலும் அதை விளித்து எழுப்புங்கள். மிகக் கேவலமான மனிதனிலும் உள்ளிருக்கும் உண்மை நிலைமையை நாமொவ்வொருவரும் எட்ட வேண்டுமென விரும்புகிறேன். கேவல யான்மாவைக் காணும்படியான மானிடரைக் குறைகூறுவதற்கு மாறாக, "ஒளிமிக்கவனே, எழுந்திரு. எஞ்ஞான்றும் தூயவனே, பிறப்பும் இறப்புமில்லாத எல்லாம் வல்லோனே, எழுந்திருந்து உனது உண்மை இயல்பைக் காட்டு. இச் சிறு தோற்றங்கள் உனக்கு உகந்தவையல்ல," என்று சொல்லுங்கள் வேதாந்தம் போதிக்கும் மிகவுயர்ந்த முறையீடு

இதுவே. நமதுண்மை இயல்பை, நம்முள்ளே எந்நேரமும் விளங்கும் கடவுளை, ஓர்ந்து எல்லையற்றதும் எல்லாம் வல்லதும் நன்மை பயப்பதும் தன்னலமற்றதுமான, கட்டுகள் அனைத்தும் விடுத்த அதை எப்போதும் நினைவு கூர்வது தான் ஒரே முறையீடு. அவ்வியல்பு தன்னலமற்றதாலேயே அது வலிமையும் அச்சமின்மையும் கொண்டதாம்; ஏன் எனில், தன்னலமே அச்சம் விளைக்கும். தனக்காக ஒன்றும் விரும்பாதவன் எவனால் அச்சமுறுவான்? எதுதான் அவனை அச்சுறுத்தும்? மரணத்திற்கு அவன் அஞ்சுவானா? தீமை அவனை அச்சுறுத்தவல்லதா? ஆகவே, நாம் அத்துவைதிகளாயின், இக்கணம் தொட்டே நமது பழைய 'நான்' இறந்து போயிற்றென்று கருதவேண்டும். பழைய திருவாளர், திருவாட்டி, அல்லது குமாரி இன்னார் என்பவர் மறைந்துவிட்டனர்; அவர்கள் வெறுங் குருட்டு நம்பிக்கைகளே. எஞ்சியிருப்பது எப்போதும் தூயதான, வலிமைமிக்க, சர்வவல்லமையுள்ள, அறிவு முற்றும் கொண்ட பொருளே. நமக்காக அதுமட்டும் மிகுந்திருப்பதால், அச்சம் முழுவதும் நம்மிடமிருந்து அகன்று விடுகிறது. எங்கும் நிறைந்த நம்மை யார் இன்னலுறச் செய்ய இயலும்? வலுவின்மை முழுவதும் நம்மிடமிருந்து மறைந்து விட்டது; இனி வேண்டுவது, நம் சகோதரர்களிடத்திலும் இந்த அறிவை எழுப்புவதே. அவர்களும் அந்தத் தூய ஆன்மாவே என்பதை நாம் அறிகிறோம். ஆனால், அவர்களுக்கு அது தெரியவில்லை; நாம் அவர்களுக்கு அறிவுறுத்தி, அவர்களது எல்லையற்ற இயல்பை எழுப்ப உதவி புரிய வேண்டும். இதுவே உலகமெங்கும் மிகவும் இன்றியமையாததென எனக்குத் தோன்றுகிறது. இக்கொள்கைகள் பழையவை; பல மலைகளையும் விடப் புராதனமானவை. உண்மை முழுதும் எக்காலத்தும் உள்ளதே. உண்மை ஒருவரது சொத்தன்று; எந்த ஜாதியோ மனிதனோ அதைத் தனது சொந்தமாகக் கோர இயலாது. அனைத்து ஆன்மாக்களின் இயல்பே மெய்ம்மை. அது தமக்குச் சொந்தமென யார் சொல்ல வல்லவர்? ஆனால், அதைச் செயல் முறைக்குக் கொண்டுவர வேண்டும்; அதை எளியதாக்க வேண்டும் (ஏனெனில், மிகவுயர்ந்த உண்மைகள் எப்பொழுதும் எளிய

வையாகவே இருக்கும்); எனவே, அது மனித சமுதாயத்தின் ஒவ்வொருவரிடையும் புகுந்து சாலச்சிறந்த மேதைகளுக்கும் மிகச் சாதாரணமான மனம் படைத்தோருக்கும், ஆண் பெண் குழவி அனைவருக்கும் ஒரே காலத்தில் பொதுவுடைமையாக விளங்கவேண்டும். நியாயத்தின் வழக்குகளும், நுண்ணிய தத்துவக் கோட்பாடுகளும், கடவுளறிவும், சடங்குகளும் ஆகிய அனைத்தும் அதனதன் காலத்தில் நன்றாகவே அமைந்திருக்கலாம்; ஆனால், இப்போது நாம் காரியங்களை எளியவையாகச் செய்யவேண்டும்; ஒவ்வொரு மனிதனிடமுள்ள மெய்ப்பொருள் வழிபடு பொருளாகவும் திகழும் நன்னிலைக்-கொண்டுவர வேண்டும்.

சமய சமரச அனுபூதி நெறி

(பஸடேனா, கலிபோர்னியா, யுனிவர்ஸலிஸ்ட் சர்ச்சில் 28-1-1900 அன்று ஆற்றிய சொற்பொழிவு.)

கடவுளிடமிருந்து அறிவொளியை மனித உள்ளத்திற்குக் கொண்டுவருவதற்கான ஆராய்ச்சியைக் காட்டிலும் அருஞ்செயல வேறொன்றுமிலது. முன்காலத்திலோ இக்காலத்திலோ ஆன்மா, பரமான்மா, சீவர்களின் கதி இவற்றின் ஆராய்ச்சி போன்று வேறு எதுவும் அத்தனை பெரும்பாடு அளித்ததில்லை. நாம் நமது அன்றாட வாழ்க்கைத் தேவைகளைத் தேடுவதில் எவ்வளவு ஆழ்ந்திருப்பினும், நம் பேரவாக்களில் எத்துணை அழுந்தியிருப்பினும், நமது மிகப் பெரும் போராட்டங்களுக்கிடையேயும், சிற்சில நேரங்களில் ஒரு நிறுத்தம் ஏற்படுகிறது. அப்போது மனம் சற்று நின்று இவ்வுலகுக்கு அப்பாற்பட்ட ஒன்றைக் குறித்துச் சிறிதேனும் அறிந்துகொள்ள விழைகின்றது; சில நேரங்களில் புலன்களைக் கடந்த அத்தகைய சிற்சில பகுதிகளையும் அறிந்து கொள்கின்றது; அவற்றை யடையவும் போராடுகிறது. இது யுகக்கணக்காக எல்லா நாடுகளிலும் நிகழ்ந்ததே. அப்பாலுள்ளதை எட்டிப் பார்த்து அறிந்துகொள்ளவும் தன்னை விரிவு படுத்திக் கொள்ளவும் மனிதன் எப்போதுமே விரும்பியுள்ளான். நமது முன்னேற்ற நிலையோ, பரிணும வளர்ச்சியோ அனைத்தும், கடவுளுக்கான விசாரணையின், மனித கதியைப் பற்றிய அவ்வாராய்ச்சியின் அளவைப் பொறுத்தே மதிப்பிடப் படுவதாய் இருக்கிறது.

ஒவ்வொரு நாட்டிலும் நம் சமூகப் போராட்டங்கள் நமது சமூக நிறுவனங்களால் வெளியிடப்படுகின்றன. அவ்வாறே வெவ்வேறு சமயங்களும் நம் ஆன்மிகப் போராட்டங்களைச் சித்திரிக்கின்றன. சமூக நிறுவனங்கள் போன்றே மத நிறுவனங்களும் என்றென்றும் போராடிக் கொண்டேதானிருந்துள்ளன; இன்னும் போராடித்தான் வருகின்றன. குறிப்பிட்ட ஒரு சமூக நிலையினைச் சார்ந்தவர், வாழும் உரிமை தமக்கே உள்ளது என்று கூறி அதனை நிலையாகப்

பெறப் பலவினர்களைத் துன்புறுத்தவும் தயங்குவதில்லை; இப்போதும் அத்தகைய கொடிய போராட்டம் தென்னாப்பிரிக்காவில் நடந்தே வருகின்றது. இப்படி மனிதனுக்குட் பேராக்கம் தருவது சமயமே யாயினும், அச்சமயத்தின் பெயராலேயே மிகப் பெரிய கேடும் கொடுமையும் மனித இனத்தவரால் உண்டாகின்றன. அன்பைப் பெருக்குதற்கும் சமாதானத்துக்கும் சமயத்தைப் போன்று வேறொன்றும் அத்துணை பாடுபடவில்லையெனினும், கொடிய வெறுப்பைத் தீட்டவும் அதனினும் மிக்கது வேறொன்றுமிலது. சகோதரத்துவத்தை வளர்ப்பதற்கான வழி சமயத்தைக் காட்டிலும் மற்றொன்றில்லை; எனினும், அதனைப் போலப் பகைமையை மிகச் செய்ததும் வேறொன்றுமில்லை. சமயமே அறநிலையங்களையும் மருத்துவ நிலையங்களையும் மிகுதியாக உண்டாக்க உதவின; விலங்கினங்களுக்கும் சிகிச்சை செய்வதற்கான மருத்துவ நிலையங்கள் நிறுவத் துணை புரிந்தன. ஆயினும், அதேசமயம் உலகினைக் குருதி வெள்ளத்தில் ஆழ்த்தியதும் சமயமே. ஆயினும், மனித உள்ளத்தின் ஆழத்தில் எப்போதுமே ஒரு நல்லெண்ண நீரோட்டம் இருந்தே வந்துள்ளது; மாறுபட்ட, வேறுபட்ட, பிணக்குற்ற பெரும் சமயப் பிரிவுகளுக்கிடையே அவற்றைப் பொருந்தச் செய்து ஒற்றுமை ஏற்படுத்த முயன்று வந்த குழுக்களும், தத்துவ ஞானிகளின் கூட்டங்களும் பல மத ஆராய்ச்சியாளரான மக்களின் பெருங் கூட்டங்களும் இருந்தே வந்துள்ளன. சிற்சில நாடுகளைப் பொறுத்து இத்தகையோரின் முயற்சி பயன் அளித்ததெனினும், உலகம் முழுவதிலும் அதுபோன்ற வெற்றி ஏற்படவில்லை.

மிகு பழங்காலத்தே தோன்றிய சில சமயங்கள் வற்புறுத்தி வந்த கருத்துகள் பின் வருபவை: மதப் பிரிவுகள் யாவும் வாழச் செய்ய வேண்டும். ஒவ்வொன்றிலும் ஒரு பெருங் கருத்து, ஒரு சரியான பொருள், உள்ளடங்கியுள்ளது. ஆகவே, ஒவ்வொரு சமயப் பிரிவும் உலக நன்மைக்கெனவே உள்ளது; அது வாழ நாம் வழிவகுத்தல் இன்றியமையாததாகும். இக் காலத்திலும் அக்கருத்துகள் நிலவுகின்றன. அவற்றைச் செயல் முறைக்குக் கொண்டு வர ஒவ்வொரு காலத்திலும் வகை செய்து வரப்பட்டுள்ளது.

இம் முயற்சிகளின் பயன் நாம் எதிர் பார்க்கும் அளவிற்கோ தக்க திறனுடனோ விளையவில்லை என்பது மட்டுமல்லாது; நம் பெரிய ஏமாற்றத்திற் கேற்றவாறு கலகங்களும் பெருகி விட்டன.

பிடிவாதக் கொள்கைக்குரிய ஆராய்ச்சியை விட்டு விட்டுப் பொது நோக்குடன் சாதாரண அனுபவ அறிவைக் கொண்டு பார்ப்போமானால், நாம் முதன் முதலில் காண்பது, உலகத்திலுள்ள ஒவ்வொரு பெரிய மதத்திலும் பெரிய தோரளவில் உயிர்ச்சத்தி திகழ்கின்றதென்பதே. சிலர் இதனைத் தாம் அறியவில்லை யென்று கூறலாம்; ஆனால், அறியாமை ஒரு நல்ல காரணம் ஆகாது. "வெளியுலகில் நடப்பது இன்னதென்பது எனக்குத் தெரியாது; ஆகையால் அங்கு ஒன்றும் நிகழவில்லை," என்று ஒருவன் உரைப்பானு கில், நாம் அவனை எப்படிப் பொறுப்பது? உலகப் பெரு மதங்களுள் ஒன்றுவது இதுகாறும் அழிந்து விடவில்லை என்பது உலக முழுவதிலும் உள்ள சமய இயக்கங்களின் போக்கை நன்கு கவனித்து வரும் உங்களுட் பலருக்கும் வெளிப்படையானதே. அம்மட்டோடு நிற்கவில்லை. அவற்றுள் ஒவ்வொன்றும் முற்போக்கு அடைந்து வருகின்றது. கிறித்தவர்களின் கூட்டம் பெருகி வருகிறது. இஸ்லாமியரும் பெருகி வருகின்றனர். இந்துக்கள் மேன்மை பெற்று வருகின்ருர்கள். யூதர்களும் உலகில் எங்கும் மிகுந்து விரைவாகப் பரவி வருகின்ருர்கள். மோசேயின் பிரிவைப் பற்றியுள்ள யூதர் குழாமும் இடையீடின்றிப் பரவியே வருகிறது.

பாரசீகர்களின் மிகப் பழைய பெருஞ்சமயமான ஜரதுஷ்டர மத மென்பதொன்றே தேய்ந்து போய்விட்டது. பாரசீகர் நாட்டை முகம்மதியர் கைப்பற்றிய போது ஓர் இலட்சம் மக்கள் அந்நாட்டை விட்டு நீங்கி இந்தியாவில் அடைக்கலம் புகுந்தார்கள். சிலர் அங்குத் தங்கினர். அப்போது அங்குள்ளவர்கள் முகம்மதியர்களால் இடையருது துன் புறுத்தப்பட்டுக் குன்றிய நிலையை அடைந்தார்கள். இப்போது பதினுயிரம் பெயரே வாழ்கின்றனர். இந்தியாவிலோ எண்பதினுயிரம் பேர்கள் இருந்தும், அவர்தம் எண்ணிக்கை பெருகவில்லை. அதற்குக் காரணம், அவர்கள் மதமாற்றம் செய்யாமையால் இருக்கலாம். இந்தியாவிலுள்ள ஒரு சிலரும்

தமக்கு நெருங்கிய உறவினர்களுக்கிடையே மணம் புரிந்து கொள்ளும் தீய வழக்கத்தினுல் பெருகுவதில்லை. இந்த ஒரே விதி விலக்குக்குட்பட்டு உலகிலுள்ள மாபெருஞ் சமயங்கள் யாவும் உயிர்க்களை பெருகியும் பரவியும் வருகின்றன. இப் பெருஞ் சமயங்கள் யாவும் மிக்க தொன்மை வாய்ந்தவை என்பதை நாம் நினைவிற் கொள்ளவேண்டும். ஒன்ருவது இப்போது உண்டானதன்று. மேலும் ஒவ்வொரு சமயமும் கங்கை, யூப்பிரட்டீஸ் நதிகளுக்கு இடையேயுள்ள நாடுகளி லேயே பிறந்துள்ளது என்பதை நினைவு படுததிக்கொள்ள வேண்டும். மற்றும் ஒரு மதமாவது ஐரோப்பாவிலோ, அமெரிக்காவிலோ அரும்பவில்லை என்பதையும் நினைவிற் கொள்ளவேண்டும். எல்லாம் ஆசியாக் கண்டத்திலேயே தோன்றின என்பதையும், அவை அதற்கே உரியவை என்ப தையும் ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டும். இக்கால விஞ் ஞானிகள் கூறுமாறு தகுதி வாய்ந்தனவே நீடித்து நிற்கும் என்பது உண்மையாஞல், இந்தச் சோதனையினுல் துருவி ஆராயப்படும் போது இம்மதங்கள் யாவும் பழைய உயர் நிலையிலேயே உறுதியாய் இருப்பதனுல் இவை இன்னும் சிலருக்குத் தகுதியுள்ளனவாகவே இலங்குகின்றன என்பது மெய்ப்பிக்கப்படுகிறது. இவை வாழ நல்ல நியாயம் இருக் கிறது. இவை பெரும்பாலாருக்கு நலம் பயக்கின்றன. முகம் மதியரை எடுத்துக் கொள்வோமாயின், அவர்கள் தென் ஆசியாவிலுள்ள சில இடங்களிலும் ஆபிரிக்காவிலும் தீப் போன்று விரைந்து பரவி வருவதைப் பார்க்கிருேம். பௌத்தர்களோ, மத்திய ஆசியாவில் எப்போதுமே பரவி வருகிருர்கள். இந்துக்கள், யூதர்களைப் போன்றே, மதமாற் றம் செய்வதில்லை. எனினும், மற்ற இனத்தவரும் இந்துமதத் தைத் தழுவி இந்துக்களின் பழக்க வழக்கங்களையும் ஆசாரச் செயல் முறைகளையும் தமக்குரியனவாகக் கொண்டு, அவர்க ளுடன் இயைந்தே வாழமுற்படுகிருர்கள். அவர்களது பிரசார அளவிற்கு இராவிடினும், கிறித்தவ மதம் பரவி வருவதனை நீங்கள் அறிவீர்கள். கிறித்தவ விளம்பர முயற்சியில் ஒரு குறையுண்டு. அந்தக் குறைபாடு மேலைநாட்டு நிலையங் கள் யாவற்றுக்குமே பொதுவானது. இயந்திரமானது சக்தியின் நூறுபங்கில் தொண்ணூறு பங்கை விழுங்கிவிடு

வதே அக்குறைபாடு ; இயந்திரமும் அளவுக்கு விஞ்சியது. விளம்பரத் தொழில் என்றுமே ஆசியநாட்டினர்க்கே உரிய தாக வழங்கிவிட்டது. மேலைநாட்டினரோ, சமூக நிறுவனங்களையோ, படையமைப்பையோ, ஆட்சிமுறையையோ நன்கு உருவாக்குவதில் மிகுதியான திறமை வாய்ந்தவரா வர்; பெருமேதைகள். ஆனால், மத விளம்பரம் செய்வதிலோ அவர்கள் மிகவும் பின்தங்கியவர்களே ; அத்துணைத் திறமை படைத்தவர்களல்லர்; ஆசியாவில் வாழ்கின்ற மக்கள்போல அதில் தேர்ச்சியுற்றவர்களல்லர். தவிர, அவர்கள் எப்போதுமே அவ்வேலையை நன்கு பயின்றவர்கள் ; நன்கு கற்றறிந்தவர்கள். அத்துடன் அவர்கள் இயந்திரங்களையும் அளவுக்கு மிஞ்சிப் பயன்படுத்துவதில்லை.

இம்மதங்கள் யாவும் பரவிப் பெருகிக் கிளைத்து வருகின்றன என்பது இக்கால மனித இனத்தின் வரலாறு கண்ட உண்மை. இதில் உண்மையாகவே பொருள் பொதிந்துள்ளது. அருளே வடிவான—எல்லாம் அறிந்தவரான கடவுளின் கருத்து இச்சமயங்களுள் ஒன்றே நிலைத்து மற்றவை மறைந்தேபோகவேண்டுமென்றிருந்தால், அவரது சங்கற்பப்படி, அவரது விருப்பைப் பின்பற்றி அந்த ஒன்று மட்டுமே உய்ந்திருக்கவேண்டுமல்லவா? அவற்றுள் ஒன்றே உண்மையாகவும் மற்றவை பொய்ச் சமயங்களாகவும் இருந்திருந்தால், இதற்குள் மற்றவை யாவும் மடிந்து அவ்வொன்றே உலகம் முழுவதும் பரவியிருக்கவேண்டுமல்லவா? ஆனால், உண்மை அப்படியில்லையே! ஒன்றே உலக முழுவதையும் ஒரு குடைகீழ்க் கொள்ளவில்லை. மதங்கள் யாவும் சில காலம் முன்னேறியும் சிலவேளைகளில் குன்றியும் வருகின்றன : சற்றே சிந்தித்துப் பாருங்கள். உங்கள் நாட்டில் இப்போது ஆறு கோடி மக்கள் இருக்க, இரு கோடி பத்து லட்ச மக்கள் பல்வேறு மதங்களைப் பின்பற்றியுள்ளார்கள். இதனை முன்னேற்றம் என்று மொழிய இயலுமா? ஒவ்வொரு நாட்டிலும் கணக்கெடுத்துப் பார்த்தால், சமயங்கள் சில நேரங்களில் வளர்ந்தும் மற்ற நேரங்களில் தேய்ந்தும் பின்னிட்டும் வருவதுண்டு. சமயப் பிரிவுகளோ, கணக்கின்றிப் பெருகிவருகின்றன. தன்னகத்தே தான் முழு உண்மையும் உளதென்றும், கடவுள் இம்முழு

உண்மையையும் ஒரு குறிப்பிட்ட நூலிலேயே அடக்கித் தந்தருளியுள்ளாரென்றும் ஒரு மதம் சாற்றுவது உண்மையெனின், இத்தனை உட்பிரிவுகள் ஏன் தோன்றலாயின? ஒரே நூலை அடிப்படையாகக் கொண்டு ஐம்பது ஆண்டுகளில் இருபது வகுப்புகள் ஏன் தோன்றுகின்றன? பரம்பொருள் முழு மெய்யினையும் சில குறிப்பிட்ட நூல்களில் கொடுத்திருந்தால், நாம் மூலத்தின் வாக்குகளைக் குறித்துப் போரிடவா அவற்றைத் தந்துள்ளார்? ஆனால் நாம் காண்பது சொற்போரே. அது ஏன்? சமயம் பற்றிய முழு உண்மையை கொண்ட ஒரு நூலை இறைவர் அளித்துள்ளாரென்றே வைத்துக்கொண்டாலும், அது காரியத்துக்கு உதவாது; ஏனெனில் அதனை ஒருவரும் சரிவர அறிந்துகொள்ள மாட்டார். விவிலிய நூலினையே சான்றாக எடுத்துக்கொள்வோம்; இன்னும் கிறித்தவர்களின் பல வகுப்பினரையும் நோக்குவோம். ஒவ்வொரு கட்சியினரும், ஒரு வாக்கியத்துக்கு ஒரு வகையான பொருளைத் .தந்து அதுவே சரியான பொருளென்றும், அதற்குக் கூறப்படும் மற்றப் பொருள்கள் யாவும் பிழைபட்டனவே என்றும் கூறுகின்றனர். இப்படியே ஒவ்வொரு மதத்திலும் நிகழ்கிறது. இஸ்லாமியர்களிடையேயும் பௌத்தர்களிடையேயும் பல பிரிவினர்களும் இந்துக்களிடையே நூற்றுக்கணக்கான பிரிவினர்களும் உண்டு. நான் உங்கள் முன்னர் இவ்விஷயங்களைப் பற்றிக் கூறுவதன் கருத்து யாதெனின், ஆன்மிக விஷயங்களில் மக்களை ஒரே கருத்திற்குக் கொணரும் முயற்சி எதுவும் இதுகாறும் பயன் தரவில்லை, இனி என்றும் பயனளிக்கப் போவதும் இல்லை என்பதே. இன்றும் ஒரு புதிய கொள்கையைத் தொடங்குபவன் தன்னைப் பின்பற்றுவோரிடமிருந்து சிறிது தூரம் விலகிச் சென்றுவிட்டால், அவர்களும் பல புதிய பிரிவினைகளை உண்டுபண்ணி விடுவார்கள். என்றுமே இவ்வாறு நடப்பதை நீங்கள் கண்டுள்ளீர்கள். நீங்கள் யாவரையும் ஒரே கருத்துக்கு இணையச் செய்வது அரிதே. இது ஓர் உண்மை, இதற்காக நான் கடவுளுக்கு நன்றி கூறுகிறேன். எனக்கு ஒரு மதப்பிரிவின்மீதும் வெறுப்பில்லை. அவை இருக்க வேண்டுமென்றும் அதிகமாக வேண்டுமென்றுமே விரும்புவேன். ஏன்?

நீங்களும் நானும், இங்கிருப்போர் அனைவரும் ஒரே வகை யான எண்ணங்களையே எண்ணிவரின், நமக்குச் சிந்தனை செய்வதற்கே பொருள் இராமற் போய்விடும். ஓர் இயக் கத்தை உண்டாக்க இரண்டு அல்லது அவற்றிற்கு மேற் பட்ட சக்திகள் மோதிக்கொள்ளவேண்டும். அதுபோன்று எண்ணங்களின் மோதுதலே, அவற்றின் வேறுபாடே, சிந் தனை சக்தியைத் தூண்டுகின்றது. நாம் அனைவரும் ஒரே வகையில் சிந்திப்போமானால், எகிப்தில் பக்குவப்படுத்தி வைக்கப்பட்ட பிணங்களைப்போன்று ஒருவரையொருவர் வெறித்துப் பார்த்துக்கொண்டிருப்போம், அவ்வளவே. தேங்கி மடிந்துபோன நீர்நிலையில் சுழல்கள் தோன்றா: அவை ஓட்டத்துடன் கூடிய பெரு வெள்ளத்திலேதான் —உயிராற்றிலேதான் தோற்றமளிக்கும். மதங்களின் உயிர் போய்விட்டால், உட்பிரிவுகள் நிலைக்கமாட்டா. மயானத் தின் முழு அமைதியே—அதன் இசையே அங்கு நடமாடும். மனிதனது சிந்தனைச் சக்தி விளங்குமட்டும் பிரிவுகள் இருந்தே தீரும். மாற்றமே உயிர்க்குறி. அது நிகழ்தல் இன்றியமையாதது. எனது வேண்டுகோள், அவை மிகப் பல்கி, மக்களின் எண்ணிக்கை அளவு வளர்ந்து ஒவ்வொரு வருக்கும் விருப்பமான தனி முறையும் சமயச் சிந்தனை வகையும் அமையவேண்டும் என்பதே.

ஆன்மிகத் துறையில் தனி முறையும் தனிப்பட்ட சிந் தனைச் சத்தியும் முன்னரே உள்ளன. ஒவ்வொருவரும் தத் தம் வழியிலேதான் சிந்திக்கின்றனர். ஆனல், அதன் இயல் பான போக்கு என்றும் தடைப்பட்டே வந்துள்ளது; இன் னும் தடைப்பட்டே வருகின்றது. வாள் கொண்டு வீசப்படாவிட்டாலும் வேறு கருவிகள் பயன் படுத்தப் படும். நியூயார்க்கிலுள்ள பெரும் சமயப் பிரசாரகர்களுள் ஒருவரின் பேச்சைக் கேளுங்கள்: பிலிப்பினோ சாதியார் வெல்லப்பட்டாலன்றி அவர்களைக் கிறித்தவர்கள் ஆக்க இயலாது, மதபோதனை புரிய இயலாது. ஏற்கெனவே அவர் கள் கத்தோலிக்க கிறித்தவர்கள். மற்றொரு பிரிவினரான பிரஸ்பிட்டர் ஆகவேண்டுமாம் அவர்கள். இதற்காக அவர் தம் இனத்தவரின்மீது குருதி சிந்தும் தீச்செயலின் கோரமான தீமையைச் சுமத்தப் பார்க்கிறார். இது எத்துணைக் கொடு

மையான செயல்! அவர் நாட்டின் மிகப் பெரிய சமயப் போதகர்களுள் ஒருவராம் ! இத்தகைய பெரிய, அறியாமை மிக்க வார்த்தையை நின்று மொழிய அவர்போன்ற ஒருவர் வெட்கப்படாதபோது உலகத்தின் நிலையை என்னென்று இயம்புவது ! அவர் பேச்சினைக் கேட்டு உவகை மதுவுண்ணும் மக்களின் தரம்பற்றியும் பண்பாடுபற்றியும் கூற என்ன இருக்கிறது ? இதுவா நாகரிகம்? இது புரியின், மனிதரையே கொன்றுதின்னும் மக்கள் இனத்தவரின்—காட்டுமிராண்டியின் இரத்த வெறியேயாகும். இது புதிய சந்தர்ப்பங்களில் புதுப் பெயர்களுடன் வழங்குவதே. இதைத் தவிர வேறு என்ன? இப்போதும் இந்நிலை இருக்குமானால் கட்சி வெறி மிகுந்த பண்டைக் காலத்தில், வெம்பகையில் கிழித்தெறியக் கூடிய கொடுமை வாய்ந்த அக்காலத்தில், உலகோர் எத்தகைய பேரச்சத்தை அடைந்திருப்பர் ! அப்போதோ ஒவ்வொரு மதப் பிரிவினரும் அடுத்த பிரிவினரைக் கூடுமானவரை எதிர்த்து எவ்வகையிலேனும் தம் எதிரியைத் தொலைத்துவிட எண்ணிவந்தனர். இது வரலாறு வாயிலாக வந்த உண்மை. நம் அகத்தே உறையும் கொடிய உணர்ச்சி சாகவில்லை ! அது விழிப்புறவில்லை, உறங்குகிறது ; சாகவில்லை, வாய்ப்புக் கிடைக்கும்போது, அது விரைந்தெழுந்து முன்போன்றே தன் நகங்களையும் நச்சுப் பற்களையும் பயன்படுத்தும். வாளாலோ, வேறு தூலப் படையாலோ, நுண்ணிய மிகக் கொடிய கருவிகளாலோ அழிவை உண்டாக்கலாம். இழிதகவு, சமூக வெறுப்புணர்ச்சி, சாதியிலிருந்து விலக்கி வைத்தல் ஆகிய இவை யாவும் கண்டிக்கும் முறைகளே. நம் போன்ற கருத்துகளைக் கொள்ளாதவர்களுக்கு இவைகளே தண்டனை. கருத்து வேற்றுமை ஏன் இருத்தல் கூடாது? யாவருமே ஏன் நம் போன்றே எண்ண வேண்டும்? இதற்குத் தக்க காரணம் நான்காணவில்லை.நான் சிறிதேனும் நியாய உணர்ச்சி பெற்றவனானால், அவ் வேறுபாட்டினைக் கண்டு பெருமிதம் கொள்வேன். சுடுகாட்டை நிகர்த்த நாட்டில் நான் வாழ விரும்பவில்லை. நான் மேன்மக்கள் வாழும் உலகில் ஒருவனாய் விளங்கவே விழைகின்றேன். சிந்தனைசத்தி படைத்தவர் அவருடைய எண்ணங்களில் வேறுபடவே வேண்டும். வேற்றுமையே நினைவாற்றலின்

புறச்சின்னம். நான் சிந்தனைச் சக்தியின் ஆற்றல் ,பெற்ற வனுயின், கருத்துவேற்றுமை பெற்றவர்களிடையேதான் வாழ விரும்ப வேண்டும்.

'எல்லா வகையான இவ்வேற்றுமைகளும் எவ்வாறு உண்மையாயிருத்தல் கூடும் ?' என்னும் வினு எழுகின்றது. ஒன்று உண்மையாயின், அதற்கு எதிர்படையாக உள்ள இது பொய்யாக இருத்தல் வேண்டும். முரண்பட்ட கருத்துகள் ஒரே காலத்தில் எப்படி எல்லாம் உண்மையாக இருக்க இயலும்? இதனை நான் விளக்கப் புகுகிறேன். உலகச் சமயங்கள் யாவும் உண்மையில் முரண்படுகின்றனவா ? நான் இவ்வாறு நவில்வதனுல் மிகப் பெருஞ்சிந்தனைகள் பொதிந்த புறவடிவங்களைக் குறிக்கவில்லை. பற்பல சமயங்களிலும் பயன்படுத்தப்படும் பல்வேறு கட்டடங்களையோ, மொழிகளையோ, நூல்களையோ, சடங்குகளையோ நான் குறிப்பிடவில்லை. ஆனுல் நான் சுட்டுவது ஒவ்வொரு சமயத்திலுமுள்ள உள்ளுறையும் ஆன்மாவையே. ஒவ்வொரு சமயத்துள்ளும் உயிர்க்களையுள்ள பகுதி ஒன்றுள்ளது. அவ்வுயிர்ப் பகுதி மற்றென்றின் சீவநாடியினின்றும் வேறுபட்டதாய் விளங்கலாம். ஆனுல் இதுபற்றி அவை முரண்பட்டனவே என்று சாற்றுதல் பொருந்துமா ? அவை ஒன்ருேடொன்று மாறுபட்ட நிலையிலுள்ளனவா அல்லது துணையாய் உள்ளனவா ? இதுதான் பிரச்சினை. நான் சின்னஞ் சிறுவனுயிருந்தபோதே இப்பிரச்சினையைப்பற்றி ஆராய்ந்து என் வாணுள் முழுதுமே இதனைச் சிந்தித்து வந்துள்ளேன். எனது முடிவு உங்களுக்கும் சிறிது உதவக் கூடியதாய் இருக்கலாம் என்ற நினைவினுல், நான் அதனை உங்கள் முன்னர்ச் சமர்ப்பிக்கின்றேன். அதுபற்றிய கருத்துகள் முரண்பாடின்றி உண்மையில் துணையாகவே உள்ளன என்று நான் நம்புகிறேன். ஒவ்வொரு மதமும் பொதுவான பெரியதோர் உண்மையின் ஒரு பகுதியினை எடுத்துக்கொண்டு, தனது முழு வல்லமையையும் அதிற் செலுத்தி, அதனை உருவாக்கி ஒரு முன்மாதிரியாகக் காட்டுவதில் கவனம்செலுத்துகிறது. ஆகையினுல் இது கூட்டற்குரியதே; விலக்கத்தலாகாது. இதுவே பொருள். ஒவ்வோர் ஒழுங்கும் சிறந்த ஒரு கருத்தைக்கொண்டே தோன்றுகிறது. இபபடி, பல

கருத்துகளால் பல ஒழுங்குகளும் சேர்ந்து வலுவுறுகின்றன. இதுவே மாந்தரின் முன்னேற்றப் போக்கு. மனிதன் ஒரு போதும் பிழையினின்றும் உண்மைநெறிக்கு முன்னேறிச் செல்லுதலில்லை. அவன் சிறு உண்மையினின்றும் உயர்ந்த உண்மைக்கே அடிவைத்துச்செல்லுகிறான்; ஆனால் ஒருபோதும் ஒரு தவறு வழியாக உண்மைநெறிக்கு முன்னேறுவதில்லை. ஒரு குழந்தை தன் தந்தையைக் காட்டிலும் மேலோங்கலாம். அதனால் தந்தை சிறிதும் அறிவில்லாதவனா? தனயன் தந்தையைவிடக் கூடுதலொன்றைப் பெற்றிருக்கிறான். நீங்கள் குழந்தையாயிருந்தபோது பெற்றிருந்த அறிவினும் இன்று மிகுதியான அறிவு பெற்றுள்ளீர்கள்; அதனால் உங்கள் குழவிப் பருவத்து அறிவைப் புறக்கணித்துவிடலாமா? உங்கள் இக்கால அறிவும் குழவியின் அறிவைக் காட்டிலும் அதிகமே. ஆனால் முன்னிருந்ததைக் குறைகூற இயலாது. இப்பொழுதுள்ள உங்கள் அறிவு குழந்தையின் அறிவுடன் சிறிதளவு கூடுதலாய் இருக்கிறது.

மேலும் ஒரே பொருளைப்பற்றி முரண்பட்ட பல கருத்துகளும் இருக்கலாம் என்றும் அறிவோம். ஆனால் அத்தனை கருத்துகளும் ஒரே பொருளைப் பற்றியவைகளே! ஒருவன் கதிரவனை நோக்கிப் பயணம் செய்யும்போது அவன் பாதையிலுள்ள ஒவ்வோர் இடத்திலும் ஒரு நிழற்படம் எடுக்கிறான் என்று கருதுவோம். அவன் பயணம் முடிந்து படங்களைப் பார்க்கும்போது எந்த இரண்டு படமேனும் ஒன்றுபோல இருப்பதில்லை. ஆயினும் அப்படங்கள் யாவும் ஒரே பகலவன் படங்களே! ஆனால் இட வேறுபாடுகளால் அவை வெவ்வேறு விதமாகக் காட்சியளிக்கின்றன. இம்மாதா கோவிலை நான்கு மூலைகளிலும் நின்று படம் பிடித்துப் பார்த்தால், அவை நான்கும் ஒரே கோயிலின் படங்களேயாயினும் வெவ்வேறு தோற்றங்களை அளிக்கின்றன. அதுபோன்றே நாம் மெய்ம்மையைப் பற்பல கோணங்களினின்றும், அதாவது பிறப்பு, கல்வி, சூழ்நிலைகள், மற்றுமுள்ளவற்றிற்குத் தக்கவாறு நோக்கி வருகிறோம். நாம் உண்மையைக் கண்டறிந்திருக்கும் அளவு, இந்த சந்தர்ப்பங்களைப் பொறுத்திருக்கிறது. இதில் நமது உள்ளங்களின் சார்பினால் அவ்

வுண்மைக்கு வண்ணப்பூச்சுக் கொடுக்கிறோம் ; நமது அறிவுக்கு எட்டிய அளவு கருத்தில் வைக்கிறோம். நமது நெஞ்சிஞல் கூடிய அளவு அதனை உள்ளத்தில் நிறுத்திக்கொள்கிறோம். நமக்குப் பொருந்திய அளவிலும், நாம் கொடுத்து வைத்த அளவிலுந்தான் அவ்வுண்மையினை நாம் அறிந்து கொள்ளுகிறோம். இதுவே மாந்தர்களுக்குள்ள வேறுபாடுகளுக்கும் சிலபோது முரண்பாடுகளுக்குமே ஏதுவாகின்றது. இருப்பினும் நாம் எல்லோரும் ஒரே பெரிய உலகப் பொதுவுண்மைக்கே உரியவர்களாய் இருக்கிறோம்.

மனித சமூகத்திற்கு நலம் புரியும் நோக்குடன் படைப்பு ஒழுங்கில் கடவுளால் அமைக்கப்பெற்ற வெவ்வேறு சத்திகளே இந்த எல்லா மதங்களும் என்பது எனது கருத்து. அவற்றுளொன்றும் சாகாது, மாய்க்கவும் இயலாது. இயற்கையிலுள்ள சத்தி எதனையும் உங்களால் அழிக்க இயலாது. அதுபோன்றே இந்த ஆன்மிகச் சத்திகளும் எவ்வகையினும் அழிக்கத்தக்கனவல்ல. ஒவ்வொரு சமயமும் உயிருடன்கூடியிருக்கிறதென்பதை நீங்கள் கண்டுள்ளீர்கள். சில நேரங்களில் அது முன்னேறியோ பின்தங்கியோ விடலாம். ஒரு சமயம் அதனை மூடியிருக்கும் பல வீண் கோலங்கள் விலக்கப்படலாம்; வேறு ஒரு நேரத்தில் வேறு பற்பல அணிகள் அதனை அழகுபடுத்தலாம். ஆன்மா எப்போதும் அவற்றைவிட்டு நீங்குவதில்லை. அது ஒரு போதும் மறையாதது. எந்தக் குறிக்கோளை அது குறிக்கிறதோ, அது ஒருபோதும் சிதைவதில்லை. ஆகவே, எவ்லொரு சமயமும் நல்ல அறிவுடன் தன் பாதையில் முன்னேறியே வருகின்றது.

ஒவ்வொரு நாட்டிலும் உள்ள ஒவ்வொரு தத்துவ அறிஞரும் பிறரும் கனவு கண்டுள்ள அத்தகைய சமரச சமய சன்மார்க்கம் ஏற்கெனவே உள்ளது. அது இங்கேயே உள்ளது. அகில உலக சகோதரத்துவம் உள்ளவாறே அகில லோக சமயமும் உள்ளதேயாம். உங்களுள் நெடுந்தூரம் உலகில் சுற்றித் திரிந்தவர் எவர்தாம் எந்த நாட்டினரிடமும் சகோதரர்களையும் சகோதரிகளையும் காணவில்லை? யான் உலகெங்குமே அத்தகையினரைக் கண்டுள்ளேன். சகோதர பாவம் எங்கும் முன்னரே உள்ளது; பலர் இதனை அறியாமல் இன்னும் புதிய சகோதரத்துவத்தைக் காண விழைந்து

காரியத்தையே கெடுத்துவிடுகின்றனர். அகில உலகப்
பெருமதமும் முன்னரே உள்ளதே. பல சமயங்களையும்பற்றி
விரிவுரை ஆற்றும் உபதேசியார் தமது இத்தொழிலைச் சிறிது
நேரம் நடத்தாமல் இருத்தலே போதும்: நாம் அந்தச் சம
யத்தை எளிதில் கண்டுவிடலாம். அந்த மத ஒற்றுமையைக்
குலைத்துவருபவர் அவரே; ஏனெனில் அப்படிச் செய்வது
அவரது சுயநலத்துக்கு உதவியாய் இருக்கிறது. ஒவ்வொரு
நாட்டிலுமுள்ள மத குருமார்கள் பழைய காலத்து வைதிக
முறையையே பற்றிக்கொண்டு வருகிறார்கள். இது ஏன்
எனில் அவர்கள் மக்களுக்கு நல்வழி காட்டி, அதனிடம்
அழைத்துச் செல்வதற்கு மாறாக, மக்களால் அவர்கள் செலுத்
தப்பட்டு அவர்களுக்கு ஏவலாளர்களாகவும் அடிமைகளாக
வும் இருக்கின்றார்கள். மக்கள் சொல்வதற்கெல்லாம் அவர்
கள் தலையை அசைத்து வருகிறார்கள். மக்கள் முன்னேறி
னால் அவர்களும் முன்னேறலாம்; அவர்கள் பின்தங்கியிருத்
தல் இயலாது. ஆகவே குருமார்களைப் பழித்துக் கூறுவ
தற்கு மாறாக (அதுவே முறையாய்விட்டது) நாம் நம்மையே
நொந்துகொள்ளவேண்டும். நாம் எதற்குத் தக்க பாத்திர
மாக இருக்கிறோமோ, அதைத்தான் பெற இயலும். உங்க
ளுக்கு நல்ல முன்னேற்ற முறைகளைக் காட்டி அந்தப் பாதை
யில் அழைத்துச் செல்லத் துணிந்து அவ்வாறு செலுத்து
பவனது முடிவு யாதெனின், அவன் மக்கள் வறுமையுற்று
அவனும் கந்தலையே தரிக்க நேரிடும். உங்களுக்கு உள்ள
உலக ஒழுங்கான சட்டங்களே அவர்களுக்கும் உரியவை.
"நீங்கள் முன்னேறுவீர்களானால் நாங்களும் விரைந்து
செல்ல இசைகிறோம்," என்கிறார்கள். அவர்கள் பெரும்பா
லார் சொல்லுக்கு அடங்காதவர்கள். ஒரு சிலரே விதிவிலக்
காய் உள்ளனர்; அவர்களுக்கு உண்மை கண்முன் நின்று
காட்சியளிக்கிறது. அதற்கு அவர்களும் மதிப்புத் தருகின்
றார்கள், வாய்மை அவர்களைத்தான் வயப்படுத்தி அவர்களை
அடக்கியாள்கின்றது. அவர்கள் முன்னேறியே தீரவேண்
டும். அவர்கள் பின்னால் திரும்பிப் பார்ப்பதில்லை. மற்ற
மக்களைப்பற்றிய கவலையும் அவர்களுக்கில்லை: அவர்களுக்
குக் கடவுளுண்மையே தலையானது; அவரே அவர்கள் முன்
நிற்கும் சுடர்விளக்கு. அவர்கள் அந்த ஒளி விளக்கையே

பின்பற்றிச் செல்லுகின்றார்கள்.

நான் மார்மன் வகுப்பினைச் சேர்ந்த ஒருவரை இந்நாட்டிற் கண்டேன். அவர் என்னைத் தமது மதத்துக்கு மாற்ற முயன்றார். நான், "உங்களுடைய கருத்துகளை மிகவும் மதித்துப் போற்றுகிறேன்! எனினும், நாம் சிற்சில செய்திகள்பற்றி ஒரேவிதக் கருத்துக் கொள்ளவில்லை. நான் துறவறம் பூண்டு மடத்தில் வாழும் முனிவன். நீங்களோ, பல மனைவியரை மணந்துகொள்வதில் நம்பிக்கை வைத்துள்ளீர்கள். நீங்கள் ஏன் இந்தியாவுக்குச் சென்று அங்கே மதப் பிரசாரம் செய்யவில்லை?" என்று கேட்டேன். அவர் வியப்புடன், "நீங்களோ திருமணத்தில் நம்பிக்கை வைப்பதில்லை; நாங்கள் பலதாரம் கொள்கிறோம். அவ்வாறிருந்தும் நீங்கள் ஏன் என்னை உங்கள் நாட்டுக்குச் செல்லுமாறு சொல்லுகிறீர்கள்?" என்றார். இதற்கு மறுமொழியாக நான், "உண்மை; எங்கள் நாட்டினர் சமயக்கூற்றை, அது எங்கிருந்து வந்தாலும், காது கொடுத்துக் கேட்பர். நீங்கள் இந்தியா செல்லவேண்டுமென்றே நான் விரும்புகிறேன். அதற்கு முதற்காரணம், எனக்கு மதப் பிரிவினைகள் மிகுந்திருப்பது பெரிதும் திருப்தியளிக்கிறது. இரண்டாவதாக, இப்போதுள்ள எந்தப் பிரிவிலும் திருத்திகொள்ளாத பலரும் அங்குளர். இந்த அதிருத்தியினால் அவர்களுக்குச் சமயமென்பதே பிடிக்கவில்லை. அதில் தொடர்புகொள்ள அவர்கள் வெறுக்கின்றார்கள். உங்களுக்கு அவர்களிற் சிலர் கிடைக்கலாம்," என்றேன். சமயப் பிரிவினைகளின் எண்ணிக்கை அதிகரிக்க, மக்களுக்குச் சமயப்பற்றின் வாய்ப்பும் அதிகமாகின்றது. சிற்றுண்டி விடுதியில் திண்பண்டங்களில் பலவகை இருப்பதனால், யாவருக்கும் அவரவர்க்குத் திருப்தியளிக்கும் பண்டங்கள் கிடைக்கின்றன. மக்களுக்கு மதப்பற்று இல்லையென்று எண்ணிவிடாதீர்கள். அதனை நான் நம்பவில்லை. அவர்களுக்குத் தேவையானதைக் கொடுக்கும் ஆற்றல் மதபோதகர்களுக்கு இருப்பதில்லை. நீங்கள் நாத்திகன் என்றோ, உலகாயதன் என்றோ, வேறு எந்தக் கெட்ட பெயரினாலோ குறிக்கும் மனிதனே, தக்க போதகர் ஒருவர் அவன் வேண்டிய உண்மையினைத் தெரிவித்தால் தன் குழுவிலுள்ள தலைசிறந்த அத்தியாத்தும

ஞானியாய் விளங்கிவிடலாம். நமக்குப் பழக்கமான வழியில் தான் நாம் உண்ண இயலும். இந்துக்களாகிய நாங்கள் விரல்களால் உணவினை எடுத்து உண்கிறோம். எங்கள் விரல்கள் எளிதில் வளைந்துகொடுக்கின்றன. உங்களுக்கு அவை அவ்வாறு இராமையால் நீங்கள் அம்மாதிரி உண்ண இயலாது. கிடைத்த பொருள் மட்டுமன்றி, அதை உண்ணும் வகையும் உங்களுக்குச் சிறப்பான பழக்கமாகத்தான் இருத்தல் வேண்டும். உங்களுச்கு ஆன்மிகக் கருத்துகள் மட்டும் இருந்தால் போதாது. அவை உங்களுக்கு ஏற்ற முறையிலேயே வரவும் வேண்டும். உங்களது மொழியிலே உங்கள் ஆன்மாவுக்கு உகப்பான வழியிலேயே அக்கருத்துகள் வடித்துத் தரப்படவும் வேண்டும். அப்போதே உங்களுக்கு மனநிறைவு ஏற்படும். எனது மொழியிலேயே என்னிடம் பேசி எனக்குப் பொருந்திய வழியில் உண்மையை உபதேசிக்கும் ஒருவன் கிடைத்தால், அப்போது நான் அவ்வுண்மையை அறிந்து அதனை எப்போதும் பயின்று வருவேன், இது ஒரு பேருண்மை.

இதிலிருந்து நாம் அறியும் உண்மை யாதெனில், மனித மனம் பல படிகளும் தரங்களும் அடையப் பெற்றது என்பதே. அத்தனை வகையினரையும் திருத்தி செய்வதே சமயத்தின் மிகச் சிறந்த பணி. ஒருவன் இரண்டு அல்லது மூன்று கோட்பாடுகளைக் கற்பித்துச் சிறந்த மதத்தை நிறுவுவதாக எண்ணிக்கொண்டு அது உலகத்தாரனைவருக்குமே பொருந்துமெனச் சாற்றுகிறான். கடவுளது விலங்குக் காட்சிச் சாலையாம் உலகில் சஞ்சாரம் செய்து, ஒரு சிறு பறவைக் கூண்டையும் தன் கையிற்கொண்டு, "கடவுளோ, யானையோ விலங்கோ, எதுவுமே இதில் புகுதல் வேண்டும். அந்த யானையைப் பல துண்டுகளாகத் துணிக்க வேண்டி வந்தால் அவ்வாறு துண்டிக்கப் பெற்றும் இதில் புகுதல்வேண்டும்," என்று கூறுகின்றான். மற்றும் சில நல்ல கருத்துகள்கொண்ட ஒரு சமயப் பிரிவும் இருக்கலாம். அதைச் சார்ந்தவர், "யாவரும் இதற்குள் நுழைந்தேயாகவேண்டும்," என்கின்றனர். "ஐயா, அதனுள் போதுமான இடமில்லையே!" என்றால், "அக்கறையில்லை; அவற்றைத் துண்டுதுண்டாக வெட்டியாவது எவ்விதத்திலாவது உள்ளே நுழையுமாறு

செலுத்தியாகவேண்டும். ஏனெனில், அவர்கள் உள்ளே செல்லவில்லையானல், சபிக்கப்பட்டு அழிந்தே போய்விடுவர்'' என்று கழறுவர். யான் கண்ட ஒரு மதக்குருவோ, ஒரு கிளை மதத்தினரோ, நின்று ஆலோசித்து, ''மக்கள் ஏன் எங்களது உபதேசங்களுக்குச் செவி சாய்ப்பதில்லை?'' என்று கேட்டுக் கொள்ளாமல் மாந்தரைச் சபித்து அவர்கள் தீயோரென்கிருர் கள். ''நான் ஏன் அவர்களுக்கு ஏற்ற மொழியில் பேசி அவர் களது ஞானக் கண்களைத் திறந்து அவர்களுக்கு உண்மை புகட்டவில்லை?'' என்று தங்களைத் தாங்களே கேட்டுக்கொண் டதில்லை. அவர்களுடைய அறிவு வளரவேண்டும். மக்கள் தங்கள் சொல்லுக்குச் செவிமடுப்பதில்லை என்பதைக் காணுங் கால், அவர்கள் பிறரை நோவாது தங்களையே நொந்து கொள்ளல்வேண்டும். ஆனல் எப்போதும் மக்களது பிழையே போலும்! அவர்கள் தங்கள் சமயப் பிரிவை விரிவாக்கி யாவருக்குமே இடம் தருமாறு அதை அமைப்பதில்லை.

மிகக் குறுகிய மனப்பான்மையின் காரணம் இப்போது உடனே தெரியவருகிறது. ஒரு சிறுகூறு தானே முழுப்பொரு ளின் பாத்தியம்கொண்டாடுகிறது.அளவுபட்ட ஒன்று வரம்பு அற்ற பொருளாகத் தன்னை மதித்துக்கொள்ளுகிறது. சில நூற்ருண்டுகளுக்கு முன்னர் தோன்றிய, பொய்க்கக்கூடிய சிறு மனங்களால் படைக்கப்பட்ட அற்ப அறிவு படைத்த மதப் பிரிவினர் கடவுளின் அகண்டமான முழு மெய்ம்மை யையும் அறிந்துகொண்டுவிட்டதாக வீண் பெருமை பேசிக் கொள்வதை நினைத்துப் பாருங்கள்! எத்துணை அகம்பாவம்! மனித இனத்தவர் எவ்வளவு வீண் பெருமைகொண்டவர் என்பதையே இது தெரிவிக்கிறது. இவ்வுரிமைகள் யாவும் மறுக்கப்பட்டே வந்தன என்பது வியப்பன்று; கடவுள் அருளால் அவை இனியும் தோல்வியே அடையும். இதில் அதிக வெற்றி கண்டவர்கள் முகம்மதியர்களே. அவர்கள் ஒரு கையில் வாளும் மற்ருெரு கையில் குர்ஆனும் வைத்துக் கொண்டு, ''குர்ஆனை ஆதரித்து வாழுங்கள்; இன்றேல் மடியுங்கள்; வேறு வழிகள் இல்லை,'' என்ருர்கள். அவர்க ளது வெற்றி அற்புதமானது. இது வரலாற்று உண்மை. அறுநூறு ஆண்டுகளாக அவர்கள் தடையொன்றுமின்றி மத மாற்றம் செய்து வந்தார்கள். பின்னர் ஒரு காலம் வந்து

"நாம் இதை நிறுத்திவிடவேண்டும்" என்று எண்ணலாயி னார்கள். அம்முறைகளைக் கையாளும் பிற மதங்களும் அவ்வாறே முடிவடையும். நாம் குழந்தைகள்போன்ற பேதை மனமுடையவர்கள்! நமக்கு மனித இயல்பு மறந்துபோய் விடுகின்றது. நாம் வாழ்க்கையைத் தொடங்கும்போது நமக்கு வருங்காலம் தனிச் சிறப்பு வாய்ந்ததாக இருக்கப் போகிறதென்று நம்புகிறோம். இந்த நம்பிக்கையைக் குலைக் கும் ஆற்றல் ஒரு பொருளுக்கும் இருப்பதில்லை: ஆனால் நமக்கு வயதாக ஆக, நமது எண்ணம் மாறுகின்றது. அதே போன்றதுதான் சமயங்களைப் பொறுத்ததும். அது தொடக்க நிலையில் சிறிது பரவுகின்றது; அப்போது உலக மக்கள் தம் மனத்தைச் சிற்சில ஆண்டுகளிலேயே மாற்றிவிட்டுக் கட் டாய மதமாற்றம் செய்வதற்காகப் பலரையும் கொன்று கொண்டே போகலாம் என்றெண்ணமிடுகிறார்கள். அவர் கள் இறுதியில் தோல்வியுற்றுக் கருத்துகளைப் புரிந்து கொள்ள ஆரம்பிக்கின்றார்கள். ஆதியில் நினைத்தபடி அவர் கள் சாதிக்க இயலாதுபோனதுபற்றி நாம் கடவுளைப் போற்ற வேண்டும். அவரது நல்லாசியினாலேதான் இவ்வாறு நிகழ்ந் தது. இம்மதவெறியர் வெற்றி பெற்றிருந்தால் உலகமே அழிந்துபோய், மனிதன் வாழ இடமின்றிப் போயிருக்குமல் லவா? இவர்கள் இம்முயற்சியில் தோற்றுப்போனது நமது பாக்கியமேயாகும். அதற்காக நாம் கடவுளுக்கு வாழ்த்துக் கூறுவோமாக! ஒவ்வோர் உட்பிரிவும் ஒரு பேருண்மையை விளக்குகின்றது; ஒவ்வொரு மதமும் தனக்கு உயிராக உள்ள ஒரு சிறந்த பொருளையே சுட்டுகின்றது. இப்போது எனக்கு பழங்கதை ஒன்று நினைவுக்கு வருகிறது. அரக்கியர் சிலர் ஒரு காலத்தில் வாழ்ந்தனராம். அவர்கள் பற்பல கேடு களை விளைத்து மக்களைக் கொலை செய்யவும் தயங்கவில்லை. அவர்களைக் கொல்வது இயலாத காரியம். ஏனெனில், அவர் களுடைய உயிர்கள் சில பறவைகளிடம் அமைந்திருந்தன வாம். அப் பறவைகளைக் கொன்றாலன்றி, அவ் வரக்கி யரைக் கொல்லுதல் இயலாது. இதைப் போலத்தான் நம்மி லும் ஒவ்வொருவருக்கும் நமது உயிரை வைத்திருக்க ஒரு பறவையுள்ளது. அதுவே வாழ்க்கையின் உயர் குறிக் கோள்—ஒரு நற்செய்தி. ஒவ்வொருவனும் அதன் உருவமே

யாகிறான். நீங்கள் எதை இழந்துவிடினும் இந்தக் குறிக்கோளை மட்டும் இழவாமலிருந்துவிடின், இந்நற்செய்தி பலிதமாகிவிடின், உங்களைக் கொல்ல எதனாலும் இயலாது. செல்வம் வந்து குவியலாம்; அது அழிவுறலாம். மலையனைய தீய ஊழ்வினை மேன்மேலும் குவியலாம். நீங்கள் இலட்சியத்தைச் சிறிதும் சிதறாமல் வைத்திருந்தால் அழியமாட்டீர்கள். நீங்கள் முதியவர்களாகி விடலாம்; நூறு ஆண்டுகள் எய்தியவர்களாகவும் இருக்கலாம்; ஆனால், அக் குறிக்கோள் மட்டும் இளமையுடனும் புதுமையுடனும் விளங்கினால், எதனாலும் உங்களைக் கொல்ல இயலாது. ஆனால், உங்கள் குறிக்கோள் மட்டும் தேய்ந்துவிட்டால், நற்செயதி பாழ்பட்டுப் போனால் உங்களை எதனாலும் காப்பாற்ற இயலாது. உலகச் செல்வம் முற்றும், அதன் ஆற்றல் முழுவதும் உங்களைக் காக்கவல்லனவல்ல. நாட்டுமக்கள் அதன் தனி மனிதர்களின் தொகுதியேயன்றோ? ஆகவே, ஒவ்வொரு நாட்டின் மக்களுக்கும், இனங்களின் இணங்கிய ஒட்டுறவில், ஒரு தனித்த கடமை உண்டு. இந்தக் கோட்பாடு விரதத்தை நன்கு காக்கும் வரை அந் நாட்டுக்கு யாதொரு கெடுதியும் வராது. ஆனால், அந்த நாடு அந்தக் கொள்கையினின்றும் நழுவி வேறு ஒன்றைக் குறித்துச் சென்று விட்டாலோ, அதன் வாழ்நாள் குறுகி, அது மறைந்தே போய்விடும்.

சமயங்களைப் பொறுத்தது இதே முறைதான். பழமையான மதங்கள் யாவும் இன்றும் உயிருடன் விளங்கி வருகின்றன என்பதிலிருந்தே அவை தம் இலட்சியத்தை நன்கு காத்து வந்துள்ளன என்பதனை நாம் தெளிவாக அறியலாம். பல பிழைகளுக்கிடையேயும், பல இன்னல்களுக்கிடையேயும், பற்பல பிணக்குகளுக்கிடையேயும், பல சடங்குகளின் துருவேறிய நிலைகளுக்கிடையேயும் இதய நிலை நன்கு பாலிக்கப்பட்டுளது; இதயத் துடிப்புடன், உயிர் நாடி நன்கு ஓட உயிர் திகழ்கின்றது. இவை தோன்றிய உன்னத நோக்கம் ஒன்றிலும் குன்றவில்லை. அச்சமயங்கள் பிறந்த நோக்கத்தை ஆராய்வது, மனத்துக்கு மேன்மை தருகின்றது. முகம்மதிய சமயத்தைப் பார்ப்போம்: கிறித்தவர்களுக்கு இச்சமயத்தைப் போன்று வெறுப்பளிப்பது

வேறொன்றுமில்லை. அவர்கள் இதனையே யாவற்றிலும் இழிந்ததென்று இகழ்கின்றார்கள். ஆனால் இஸ்லாமியரோ, ஒருவன் தமது மதத்தைச் சார்ந்ததும், அவனைக் கட்டியணைத்துக் கொண்டு, தம் உடன்பிறந்தவன் போன்று அன்பு செலுத்துகின்றார்கள். எவ்வித வேறுபட்ட கருத்துமின்றி இப்படி வேறு எந்த மதமும் இருப்பதில்லை. அமெரிக்க இந்தியன் எவனேனும் இஸ்லாமாகிவிடின், துருக்கியின் சுல்தானும் அவன் பக்கத்தில் அமர்ந்து உணவு கொள்ள மறுக்க மாட்டான். அவன் மூளையுடையவனாய் இருந்தால் அவனுக்கு எந்த உத்தியோகமும் கிடைத்துவிடும். இந்நாட்டில் நான் ஒருபோதும் ஒரு தேவாலயத்திலும் ஒரு வெள்ளையன் கருநிறத்தவனான ஆப்பிரிக்கனோடு இருந்து ஒன்றாகப் பிரார்த்தனை செய்ததைக் கண்டதில்லை. சற்று எண்ணிப் பாருங்கள். இஸ்லாம் தன் மக்களைச் சரிசமமான இடத்தில் வைத்துப் பாராட்டுகின்றது. இது அதற்குள்ள தனி மேன்மை. 'குர்-ஆ'னில் பல இடங்களிலும் இந்திரிய சுகம் பற்றிய வாழ்வின் கருத்தே மலிந்து கிடப்பதை நாம் கருத்திற் கொள்ள வேண்டா. இஸ்லாம் உலகிற்கெடுத்துரைப்பது, தன் மக்கள் யாவரும் சகோதரர் என்ற எண்ணமே. இதுதான் அவர்கள் சமயத்தின் சாராமிசம். துறக்கம் பற்றியோ, வாழ்க்கை பற்றியோ கூறுவது அவர்கள் மதமன்று. அவை யாவும் பிற்சேர்க்கையே.

இந்துக்களில் நாம் ஒரு நாட்டுப் பொதுவான கருத்தைக் காணலாம். அதுவே ஆன்மிகத் துறை. வேறு எந்த மதத்திலும், உலகிலுள்ள வைதிக நூல்களிலும் கடவுட் கருத்தை வரையறுத்துக் கூற இவ்வளவு ஆற்றல் செலவிடப் படுவதை நீங்கள் காணமாட்டீர்கள். அவர்கள் ஆன்மாவின் உண்மையான கருத்தை வெளியிட்டு, அதனால் அதன் தூய்மை உலக ஒட்டுறவால் இழந்துவிடாதவாறு பார்த்துக் கொண்டார்கள். ஆன்மிகம் தெய்வத்தன்மையுடையதாக இருத்தல் வேண்டும். ஆன்மா ஆன்ம நிலையிலேயே எண்ணப்பட வேண்டும், மனித நிலைக்கு இழிந்துவிட்டதாக எண்ணுதல் கூடாது. சீவான்ம பரமான்ம ஐக்கியம், எங்கும் நிறைந்த பரம்பொருளின் நேர்க்காட்சி இவை எங்கும் போதிக்கப்பட்டு வருகின்றன. அக் கடவுள்

ஒரு சொர்க்கத்தில் வாழ்கின்றாரென்றது போன்ற கருத்து பொருளற்றது என்று அவர்கள் எண்ணுகிறார்கள். கடவுள் மீது அது மனிதவடிவத்தை ஏற்றும் கருத்து. எப்போதேனும் உள்ள சொர்க்கம் இங்கிப்போதே உள்ளதே. எல்லையில்லாத காலத்திலுள்ள ஒவவொரு கணப்போதும் மற்றொன்றினைப் போன்றே நலமளிப்பதாகவுள்ளது. உங்களுக்குத் தெய்வ நம்பிக்கை இருக்குமானால், கடவுளை நீங்கள் இங்கு இப்போதே காணலாகும். ஒன்றை அனுபவத்தால் அறியும்போதுதான் சமயம் தொடங்குகிறதென்று நாம் எண்ணுகிறோம். சமயம் என்பது சில கோட்பாடுகளில் நம்பிக்கை வைப்பதிலோ, முழுமனதுடன் ஞானத் தோடியைந்த சம்மதம் கூறுவதிலோ, அல்லது உறுதி மொழிகள் சில விளம்புவதிலோ நம்பிக்கை வைப்பதன்று.

கடவுள் உண்டானால், நீஙகள அவரைக் கண்டுள்ளீர்களா? இல்லை என்று நீங்கள் இயம்பின், அவரிடம் நம்பிக்கை கொள்ள உங்களுக்கு என்ன உரிமை இருக்கிறது? அவர் உளரென்பதில் உமக்குச் சிறிதும் ஐயம் இருந்தால் அவரைக் காண நீர் ஏன் போராடி வருவதில்லை? உலகினை முற்றும் துறந்துவிட்டு உங்கள் வாழ்க்கை முழுவதையும் நீங்கள் ஏன் இந்த ஒன்றுக்காகக் கழிக்கவில்லை? தியாகமும் ஆன்மிகமும் ஆகிய இவ்விரண்டுமே இந்தியாவின் மிக மேலான கருத்துகள்: இந்த இரண்டிலும் அது ஒட்டிக் கொண்டிருப்பதனாலேதான் அதன் தவறுகளும் பொறுக்கப் படுகின்றன.

கிறித்தவ உபதேசியார்களின் போதனைகளிலுள்ள நடு நாயகமான கருத்தும் இதுவே: "காத்திரு; பிரார்த்தனை செய்து வா. மேலுலகின் அரசு உன் அண்மையிலேயே உள்ளது." இதன் பொருள்: "உங்கள் உள்ளங்களைத் தூயவையாக்கி ஆயத்தப் படுங்கள்," என்பதே. அத்தகைய ஆன்ம-உணர்ச்சி ஒரு போதும் அழிவதில்லை. கிறித்தவர்கள் மிகக் கீழான நிலையிலிருந்த காலத்தும், அவர்கள் மூடநம்பிக்கைகள் மிகுதியாக வழங்கி வந்த நாடுகளிலும் ஏசுவின் வருகையை எதிர்நோக்கி, பிறர் நலம் பேணி, மருத்துவச்சாலைகள் முதலியன நிறுவியும் தங்களை எப்போதும் ஆயத்தப்படுத்திக்கொண்டு வந்தார்கள். இது உங்கள்

நினைவில் இருக்கலாம். இந்த நோக்கத்தை மட்டும் கிறித்தவர்கள் விட்டு விலகாதிருப்பார்களாயின், அவர்கள் மதம் ஒருபோதும் அழியாது.

இப்போது என் மனத்தில் குறிககோள் ஒன்று தோன்றுகிறது. அது வெறுங்கனவாகவே இருககலாம். அஃதிவ்வுலகில் மெய்யாகுமா என்றறியேன், எனினும் சிலபோது இவ்வாறு கனவு காண்பது உண்மைச் செய்திகளைப் பற்றிச் சாவதினும் சிறந்ததே. நல்ல கனவு உண்மைகள் அழகற்ற நிகழ்ச்சிகளினும் சாலச் சிறந்தனவே. ஆதலால், நாம் ஒரு கனவு காண்போம்.

மனத்திலும் பல வகைகள் உண்டு. இம்மை விஷயங்களில் கருத்துக்கொண்டு தம் புலன்களையும் பொது அறிவினையும் கொண்டு, தம் யுத்தியையே கையாள்பவர்களை நாம் அறிவோம். அவர்கள் கிரியைகளையும் சடங்குகளையும் புறக்கணித்து, அவர்கள் புத்திக்கு எட்டிய புறப்பொருள்களின் மிக்க உண்மைகளையே ஒப்புக் கொள்வார்கள். மற்றொரு மனம் படைத்தவர், முகம்மதியர்களைப் போன்றும் கிறிஸ்தவ சீர்திருத்தக்காரர்களைப் போன்றும் தமது வழிபாட்டுக்குரிய இடங்களில் ஒரு படத்தையோ, சிலையையோ, வைத்து வணங்குவதை வெறுப்பர். வேறோர் உள்ளத்தினர், கலையுணர்ச்சியின் தூண்டுதலினால், வரிவடிங்களின் வனப்புகளைப் போற்றி வண்ணங்களிலும், நறுமலர்களிலும் அழகிய வடிவங்களிலும் தம் மனத்தினை ஈடுபடுத்தி, மெழுகுவர்த்தி, விளக்குகள் முதலிய ஆடம்பரங்களுடன் கூடிய வழிபாடுகளோடும் பலதிறப்பட்ட சடங்குகளுடனும் கடவுளைக் காண முயல்கிறார்கள். நீங்கள் உங்கள் அறிவினால் கடவுளை அடைய எண்ணுவது போன்று அவர்கள் கடவுளை இப் புறக்கருவிகளால் காண விழைகின்றார்கள். மற்றும் பத்திமார்க்கத்தினரது ஆன்மா கடவுளுக்காக அழுது புலம்பி, அவரை வணங்கி, புகழ்ந்துபாடி வேறொன்றையும் நெஞ்சில் நினையாதிருக்கும். இறுதியாக, தத்துவ ஞானிகள் மற்றவர்கள் யாவரையும் சேராது, அவர்களை இகழ்ந்து, 'என்ன மடமை! என்ன பொருளற்ற கருத்துகள் கடவுளைப் பற்றி!' என்பர்.

இத்தனை வகையினரும் ஒருவரைப் பார்த்து மற்றொருவர்

எள்ளி நகையாடலாம். ஆனால், அத்தனை பேருக்குமே உலகில் தக்க இடமுண்டு. எல்லா வகையினருக்கும் பற்பல மாதிரி மனத்தவர்க்கும் தேவை உளது. இலட்சியச் சமயம் ஒன்றுண்டாயின், அது இத்துணை மனத்தவர்களுக்கும் அளிக்கக்கூடிய ஞான உணவு படைத்த பரந்த மனம் பெற்றிருக்க வேண்டும். அது தத்துவ ஞானிக்கு ஞான நூல்களின் வல்லமையையும், முழுமனத்துடன் வழிபடுபவருக்குப் பத்தனது உருகும் உள்ளமும், கருமங்களில் ஈடுபாடுடையோர்க்கு மிகமிக அற்புதமான தந்திர சாதனங்களை அளிக்கும் ஆற்றலும் அமையப் பெற்றிருக்க வேண்டும். கவிஞனுக்கு அது அவன் ஏற்றுக் கொள்ளும் அளவிற்குக் கவிஉள்ளமும் பிற பல நலங்களும் நல்கவல்லதாய் இருக்கும். அவ்வளவு அகன்று விரிந்த சமயம் கற்பிக்க நாம் மதங்கள் தோன்றிய முற்காலத்துக்கே சென்று மேற்கூறிய அமிசங்கள் யாவற்றையும் கொள்ளுதல் வேண்டும்.

நமது சங்கேதச் சொல் ஏற்றுக்கொள்வதாகவே இருக்க வேண்டும்: விலக்குதல் அன்று. பொறை மட்டும் இருத்தல் போதாது; ஏனெனில், அதில் அதிகமாக நிந்தனையே தோன்றுகிறது. எனக்கு அந்தச் சகிப்புத் தன்மையில் நம்பிக்கை இல்லை; ஏற்றுக்கொள்வதையே நான் நம்புகிறேன். நான் ஏன் ஒருவனைச் சகித்தல் வேண்டும்? அவன் பிழை இழைக்கிறானென்றும், அவன் வாழ நாம் அனுமதிக்கிறோமென்பதுமே அதன் பொருள். நீங்களும் நானும் பிறரை வாழ விடுகிறோம் என்று நினைப்பதே தேவ நிந்தனையாகும். பண்டைக் காலச் சமயங்கள் அனைத்தையும் போற்றி அச் சமயத்தினருடன் ஒன்றுபட்டு, அவர்கள் தொழுத கடவுளை வணங்குகிறேன். அவர்கள் வழிபட்ட வழிகளிலேயே நானும் வழிபடுகிறேன். நான் முகம்மதியருடன் பள்ளிவாசலுக்குப் போய்த் தொழுவேன்; கிறித்தவர்களுடன் மாதாகோவிலுக்குப் போய் ஏசுவின் சிலுவையின்முன் முழங்தாளிட்டுப் பணிவேன்; பௌத்தர்களின் ஆலயத்தில் நுழைந்து புத்தரிடமும் அவருடைய தருமத்திலும் சரண் புகுவேன்; வனத்திற் புகுந்து ஒவ்வொருவரது உள்ளத்தினையும் ஒளிர்விக்கும் ஞான ஒளியைக் காண முயலும் இந்துவுடன் தியான நிலையில் அமர்ந்திருப்பேன்.

இத்துடன் நில்லாது, வருங்காலத்தே நிகழக்கூடியவை யாவற்றுக்குமே எனது இதயக் கதவைத் திறந்து வைத்துக் கொள்வேன். கடவுளது காப்பியம் முடிந்து விட்டதா? அது இடையறாத ஒரு தொடராய் வரும் வெளிப்பாடுகளின் பிரவாகமே. அது அற்புதமான ஒரு நூல்; ஆன்மிகத்துறையில் உலக வெளிப்பாடுகளின் தொகுதி. விவிலிய நூல், குர்-ஆன், இந்து வேதங்கள், பிற வைதிக நூல்கள் இவை யாவும் அந்நூலில் பல ஏடுகளே: இன்னும் எண்ணற்ற இதழ்களும் விரிய இருக்கின்றன. யாவரும் காணுமாறு நான் அந்நூலைத் திறந்தே வைத்திருப்பேன். நாம் இக்காலத்தே காலூன்றி நிற்கின்றோம்; ஆனால் வரம்பில்லாத பிற் காலத்தை ஏற்கத் தயாராயிருக்கிறோம். தொன்மையிலிருந்த எவற்றையும் புறக்கணியாது, இக்காலத்து ஞானவொளியைப் பயன்படுத்தியும், இனி வருங்காலத்து அறிவு நலங்களுக்கு நமது உள்ளங்களாகிய சாளரங்களைத் திறந்து வைத்தும் இருப்போம். முந்தைய தீர்க்கதரிசிகளுக்கு நமது வணக்கம் உரியது; இக்கால மகான்களுக்கும் நமது வணக்கம் உரியது, வரப்போகும் பெரியோருக்கும் உரியதே.

சமய சமரசக் குறிக்கோள்

அது எவ்வாறு பல திறப்பட்ட மனங்களையும் முறைகளையும் தழுவ வேண்டும்?

நம் புலன்களால் அறியப்படுவனவற்றிலும் மனக் கற்பனைகளிலும் இரு சக்திகள் ஒன்றற்கொன்று துணை செய்தும் எதிர்த்தும் நிகழ்கின்றன. இந்த எதிர்ச்சக்திகளின் இயக்கங்களால் நாம் புறத்தே காணும் பொருள்களும் அகத்தே எழும் சலனங்களும் சேர்ந்து சில தோற்றங்களை விளைக்கின்றன. வெளியுலகில் இந்த எதிரிடையான சக்திகளின் மோதலால் கவர்ச்சியும், விலக்கலும் தோன்றுகின்றன. ஆகவே, மையத்துக்கு இழுக்கும் சக்தியாகவோ வெளியில் பாயும் விசையாகவோ அவற்றின் செயல் பரிணமிக்கும். அக உலகிலோ, அவை அன்பும் வெறுப்பும், நன்மையும் தீமையுமாய் விளங்கும். நாம் சில பொருள்களை விலக்குகிறோம்; சிலவற்றை ஏற்றுக் கொள்கிறோம். ஒன்றினால் இழுக்கப்படுகிறோம்; மற்றொன்றினால் விலக்கப்படுகிறோம். நம் வாழ்க்கையில் பல முறை யாதோர் ஏதுவுமின்றியே சிலரால் வசீகரிக்கப்படுகிறோம்; அதே போன்று சிலரால் மற்றொரு சமயம் வெறுக்கவும் படுகிறோம். இது யாவரும் அறிந்த உண்மை. வினையாற்றும் இடம் உயர்ந்திருப்பதைப் பொறுத்து இவ்வெதிரிடைச் சக்திகளின் வன்மை பெருகி வியக்கத்தக்க நிலையிலிருப்பதுடன் அவற்றின் வசீகரமும் அதிகரித்தேயிருக்கும். மனித சிந்தனையின், அவனது வாழ்க்கையின் உயர் நிலையாவது சமயமே. இதில் அவ்விரண்டு விசைகளும் மிகமிக வியப்பான வகைகளில் வினையாற்றுகின்றன என்பதை நாம் காண்கிறோம். மக்களிடத்தே பெருகும் அன்பும், அதே போல மிகக் கொடூரமான வெறுப்பும் காணப்பெறுவது சமயத்தினால்தான். அதினின்றும் தோன்றுவனவே நாம் கேள்விப்படும் மிக மேலான அமைதி மொழிகள். சமயமே மிகப் பெரியவர்களின் கண்டனத்திற்கும் கசப்பான மனநிலைக்கும் காரணமாயிற்று. எவ்வளவுக்கெவ்வளவு சமயத்தின் நோக்கம் உயர்ந்துள்ளதோ, அதன் அமைப்பு நுட்பமாகத் திகழ்கின்றதோ, அவ்வளவுக்கவ்வளவு அதன் வேலைப்பாடு

களும் அற்புதமாய் விளங்குகின்றன. சமயமே உலகத்தை இரத்தக்களரி ஆக்கியது. ஆனல், அதுவே அத்தனை மருத்துவச்சாலைகட்கும் ஏழைகளுக்கான அறநிலையங்களுக்கும் காரணமாயிற்று. மனிதர்களுக்கு மட்டுமல்லாது மிகக் கீழான விலங்குகளுக்கும் சிகிச்சைகள் அளிக்கும் சாதனங்களுக்கு சமயமே காரணமாகும். சமயத்தைப் போலக் கொடுமைப்படுத்தவோ, அதைப் போல் நெஞ்சை நெகிழச் செய்யவோ வேறென்றுமில்லை எனக் கூறலாம். இவ் வண்ணமே எப்போதும் நிகழ்ந்து வந்துள்ளது : இனியும் பெரும்பாலும் நிகழப்போவதும் அதுவே. அதுவே, உலகச் சந்தடிகளுக்கும், பெரும் பூசல்களுக்கும், போராட்டங்களுக்கும் இடையே, சமயங்களும் சமயப் பிரிவுகளும் காட்டி வரும் பெரும் பிணக்குகள், போராட்டங்கள், பொருமை, வெறுப்பு இவைகளுக்கு இடையே அவ்வப்போது இக் கூச்சல்கள் யாவற்றையும் அடக்கிவிட்டு மேலோங்கி நிற்கும். உலகெங்கும் பரவி விளங்கும் ஆற்றல்மிக்க, உச்சத் தொனியுடன் கூடிய குரல்கள் எழுகின்றன ; சாந்தமும் சுருதி லயமும் சேரும் முறையில் ஒலிக்கின்றன. இந் நிலை என்றேனும் வருமா ?

இத்தகைய வலிய போராட்டமுள்ள சமய உலகில் என்றேனும் இடையருத ஒத்த மனநிலை நிலவுதல் இயலுமா? இந் நூற்றுண்டின் இறுதியில் மக்களது ஒற்றுமையுணர்ச்சிக்காகப் பெரும்பாடு படுகிருர்கள். சமூகத்தில் பல்வேறு திட்டங்களை வகுத்து அவற்றைச் செயலாற்ற முயல்கிருர்கள். ஆனல், அது எவ்வளவு கடினமானதென்பதை நாம் அறிவோம். வாழ்க்கைப் போராட்டத்தின் கடுமையைத் தணிப்பதும் மனிதனிடமுள்ள நரம்பின் வலிமையை இதமான அளவிற்குக் குறைப்பதும் எவ்வளவு அரிது என்பதை நாம் அறிவோம். புறஉலகிலேயே இக்காரியம் எளிதாகாதபோது சாந்தத்தாலும் ஒழுங்காலும் அகவியல்பைக் கட்டுப்படுத்துவது ஆயிரம் மடங்கு அருமை என்பது விளங்கும். இப்போது உங்களை ஒன்று கேட்டுக்கொள்கிறேன் : நீங்கள் மொழிகளின் வலையினின்றும் வெளியே வரவேண்டும். நாம் நமது குழவிப்பருவம் தொட்டே அன்பு, அமைதி, தரும சிந்தனை, சமத்துவம், உலக சகோதரத்துவம் என்பன

பற்றிக் கேட்டு வருகின்றோம். ஆனால், அவை யாவும் பொருளற்ற வெற்றுரைகளேயாகிவிட்டன ; நாமும் சொன்னதையே திரும்பச் சொல்லிவரும் கிளிகள் போன்றே ஆகிவிட்டோம். அதை நாம் எவ்வாறு விலக்க இயலும்? பெருமை வாய்ந்த அரிய கருத்துகளை முதன்முதலில் தமது இதயத்தில் கண்ட சான்றோர்கள் நமக்கு மொழியால் ஓதினார்கள். அக்காலத்தவர் அப்பொருளையும் கண்டனர். பிற்காலத்தில் பேதையர் அப்பொருள்களை விளையாட்டாகக் கொண்டு, சமயத்தை ஒரு மொழிச் சிலம்ப வித்தை எனவே கருதி, செயல் முறைக்குப் பொருந்தாதென அதைத் துறந்தார்கள். அக்காலந் தொட்டே, "என் தந்தையின் சமயம்" என்றும், "எங்கள் நாட்டினர் மதம்," என்றும், "உங்கள் தேச மதம்" என்றும் வழங்கத் தொடங்கியுள்ளார்கள். ஆகவே 'மதம்' என்பது நாட்டுப் பற்றின் பகுதியே என்றாகி விட்டது. நாட்டுப் பற்றென்பது எப்போதுமே ஒரு சார்புள்ளதாகும். எனவே, சமயத்தில் ஒற்றுமை விளங்கச் செய்யும் வினை மிகவும் அரிதாகவே இருக்கக்கூடும். எனினும், சமயங்களின் இசைவு பற்றிச் சிறிது ஆராய்வோம் :

ஒவ்வொரு பெரிய சமயத்திலும்—சிறந்ததெனக் கொள்ளப்பட்ட ஒவ்வொரு சமயத்திலும்-மூன்று பகுதிகள் உள்ளனவென்பதை நாம் காண்கிறோம். முதலாவதாக, அம்மதத்தின் அடிப்படைத் தத்துவம், அதன் இலட்சியம், அதையடையும் உபாயம் இவற்றினைத் தெளிய எடுத்துரைக்கும் அதன் முழு அளவைக் கொள்ளும் தத்துவ முறை. இரண்டாவதாக, அத்தத்துவத்தைத் தூல வடிவத்தில் அமைத்துக் காட்டும் கட்டுக்கதை யிலக்கியமே புராணங்களென்று கூறப்படுவன. இவ்விலக்கியத்தில் மனிதர்களின் வரலாறுகளோ, அவர்கள் நிலைக்கு அப்பாற்பட்ட உயிர்களின் வரலாறுகளோ,இவைபோலும் பிறவோ காணப்படுகின்றன. அவை அத்தகைய புருடர்களின் (அவர்கள் பெரும்பாலும் கற்பனை செய்யப்பட்டவர்களே) வாழ்க்கையில் தூலமாகக் காட்டப்பட்ட தத்துவங்களாம். மூன்றாவது பகுதியே சடங்குகள். இவை இன்னும் தூலமான வடிவங்கள், நறுமணம் வீசும் பொருள்கள், மலர்கள், மற்றுமுள்ள கிரியைகள், இன்னும் பல அங்கபாவங்களோடு கூடிய உருவங்

களும் புலன்களுக்கு எட்டத்தக்க பல பொருள்களுமே. இவற்றிலேதான் சடங்கு அமைகின்றது. உலகம் பாராட்டிய எச்சமயத்திலும் இம்மூன்று அமிசங்களும் உள்ளன. சிலர் ஒன்றையும், மற்றும் சிலர் வேறொன்றையும் வற்புறுத்துகின்றனர். முதலில் நாம் முதலாவதாகிய தத்துவப் பகுதியை எடுத்துக்கொள்வோம். அது முழு உலகுக்கும் பொருந்துவதாய் உள்ளதா? இல்லை என்று தான் இப்போது சொல்ல வேண்டும். ஒவ்வொரு சமயமும் தனக்கு விருப்பமானதொரு கொள்கையையே முன்னே கொணர்ந்து, அதுவே உண்மையென வற்புறுத்துகின்றது; இதனோடு நில்லாது, அதை நம்பாதவர்கள் அருநரகை அடைவரென்றும் அறைகின்றது. இதுவுமல்லாமல் தம்மைப் போன்றே ஏனையோரும் அச்சமயத்தை நம்ப வேண்டுமென்று சிலர் கையில் வாள் கொண்டு அச்சுறுத்தியும் வருகின்றனர். இது அவர்கள் கொடுமையினாலன்று; ஆனால், ஒரு விசித்திரமான மதவெறியென்னும் மூளைக் கோளாற்றினால் விளைவதே. இவ்வெறியினர் உண்மையாகவே நேர்மையான உள்ளம் படைத்தவர்; ஆனால், பைத்தியம் பிடித்த நோயாளிகள் போன்றே இவர்கள் தங்கள் செயல்களுக்குப் பொறுப்பாளிகளல்லர். இந்நோய் எல்லா நோய்களினும் மிகக் கொடியது. இதனால், மனித இயல்பிலுள்ள தீமைகள் யாவும் தலைதூக்குகின்றன. சீற்றம் கிளறப்படுகிறது; நரம்புகள் முறுக்கேற்றப்பெறுகின்றன; மக்கள் புலிகளைப் போல மாறி விடுகிறார்கள்.

எல்லாச் சமயங்களிலும் ஏதாவது பொதுவான ஒருமைப்பாடோ, புராண ஒற்றுமையோ, இணக்கமோ இருக்கிறதோ எனின், இல்லவே இல்லை. ஒவ்வொன்றிலும் ஒரு தனிப் புராணம் உள்ளது. ஆனால் அது கூறுவது, "எனது புராணங்கள் ஒன்றும் கட்டுக்கதைகளல்ல," என்பதே. இதை நாம் ஓர் உதாரணத்தாற் காணலாம். நான் உரைப்பது உதாரணத்துக்கு மட்டுந்தான். நான் ஒரு மதத்தையும் குறை கூற முன்வரவில்லை. கடவுள் ஒரு புறாவின் உருவைத் தாங்கி நிலவுலகுக்கு இறங்கி வந்தார் என்பது கிறித்தவரின் நம்பிக்கை. அது அவர்களுக்கு உண்மையே, கதையன்று. இந்துக்களின் கருத்தோ,

கடவுள் பசுவின் வடிவில் தோன்றுகிருரென்பது. கிறித்தவர் இது பற்றிப் பேசுங்கால், "இத்தகைய நம்பிக்கை வெறுங் கட்டுக்கதையே; இது குருட்டு நம்பிக்கையே," என்பர். யூதர்கள் கருத்து யாதோ எனின், "ஒரு பெட்டியின் உருவில் பதுமையொன்றை அமைத்து, அதன் இருபுறமும் இரு தேவ தூதர்களின் வடிவைச் சமைத்துவிடின் அதைக் கருப்பக் கிருகத்தில் வைக்கலாம்; அது ஜெஹோவாவுக்குத் திருப்தியளிப்பதாகும்," என்பது. ஆனால், அதே பதுமை ஓர் அழகிய ஆணுருவிலோ பெண்ணுருவிலோ அமையப் பெற்றிருந்தால், அது உருவ வழிபாடு ஆகிவிடும். "அதனை உடைத்தெறிந்து விடு," என்றே அவர்கள் கூறுவார்கள். இதுதான் நம் புராணங்களின் ஒற்றுமை! ஒருவன் எழுந்துநின்று, "எங்கள் குருதேவர் இன்ன இன்ன அற்புதங்களை ஆற்றியுள்ளார்," என்று கூறினால், மற்றவர் "இது குருட்டு நம்பிக்கையே," என்று சாதித்துவிட்டு, அதே மூச்சில் தம் குருநாதர் செய்த மிகப்பல அற்புதங்களை இயம்பி, "இவை யாவும் வரலாறு உண்மைகளே," என்று சாற்றுவார். இத்தகையோரின் மூளைகளில் சரித்திரக் கூற்றிற்கும் பொய்க்கதைக்குமுள்ள நுண்ணிய வேறுபாட்டினையறிந்து கொள்ளக்கூடிய ஒருவரையும் நான் இது காறும் கண்டிலேன். உண்மையில் எந்தச் சமயத்தை எடுத்துக் கொண்டாலும், அதிலுள்ள கதைப்பகுதி பெரும்பாலும் கற்பனையாகவும், ஒரு சிறிதே உண்மை வரலாருகவும் விளங்கும்.

இனி, சடங்கு பற்றிய விஷயங்களை எடுத்துக் கொள்வோம்: ஒரு மதப்பிரிவினர் சடங்கின் தனித்த வடிவை ஏற்று, அதுவே புனிதமானதென்றும் ஏனையோரின் சடங்குகள் யாவும் மூடநம்பிக்கையில் தோய்ந்தன என்றும் கருதுவர். ஒரு பிரிவு ஒரு விசித்திரமான சின்னத்தைப் போற்றி வரும்போது, மற்ருெரு பிரிவு "ஆ! அது கொடிது!" என்று கூறுகின்றனர். சான்ருக அடையாளக் குறிப்பின் ஒரு பொது வடிவை எடுத்துக் கொள்ளுங்கள். இலிங்கச் சின்னம் பால்வகையில் தோன்றியதே யெனினும், நாளாக ஆக, அதன் அந்த நோக்கம் மறக்கப்பட்டு இப்போது படைக்கும் கடவுளின் திருவுருவச் சின்னமாகவே திகழ்

கின்றது. அதனைத் தமது சின்னமாகக் கொண்ட நாட்டினர் அதன் பழைய பொருளை நினைப்பதே இல்லை; அது ஓர் அடையாளமே. இத்துடன் அப்பிரச்சினை தீர்ந்துவிடுகின்றது. ஆனால், மற்றோர் இனத்தவனும் வேறு கொள்கையில் நம்பிக்கை வைத்தவனும் அதில் பழைய கருத்தையே கண்டு அதைக் கண்டித்தும் வருகிறான். ஆனால், அதே சமயம் இலிங்க பூசை செய்பவர்களுக்கே மிகக் கொடுமையாகத் தோன்றும் ஒன்றை அவன் செய்து கொண்டு வந்திருக்கலாம். விளக்கம் பெறும் பொருட்டு நாம் இரு விஷயங்களைக் கவனிப்போம் : ஒன்று, இலிங்கக் குறி; மற்றொன்று, கிறித்தவரின் ஞானானுமானம் (திருவிருந்து). கிறித்தவருக்கு இலிங்கக் குறி மிக்க வெறுப்பைத் தருவது. இந்துக்களுக்கோ, கிறித்தவரின் திருவிருந்து மிகப்பயங்கரமானது. அவர்கள், "கிறித்தவரது திருவிருந்துக் கொள்கை, ஒருவரைக் கொன்று அவருடைய நற்பண்புகளைப் பெறும் பொருட்டு அவரது ஊனை உண்டு குருதியைப் பருகும் நரபோஜனமாகும். இது காட்டுமிராண்டிகளுட் சிலர் செய்து வருவது. ஒருவன் தீரனாய் விளங்கினால் அவனைக் கொன்று அவனது இதயப் பகுதியைத் தின்பது, அவனது வீரத்தையும் தீரத்தையும் பெறுவதற்குத் துணை செய்யும் என்று அவர்கள் நம்புகிறார்கள்," என்று கூறுவார்கள். சர் ஜான் லப்பாக்கு என்ற ஆழ்ந்த கிறித்தவ பத்தரும் இதனை ஒப்புக் கொள்கின்றார். அவர், "கிறித்தவக் கற்பனையின் அடிப்படை இந்தக் காட்டுமிராண்டிக் கருத்தே," என்று கூறுகிறார். கிறித்தவர்களோ, மூல காரணத்தின் இந்த அபிப்பிராயத்தை ஒப்புக்கொள்வதில்லை. இந்த அனுமானம் எழலாம் என்பதும் அவர்கள் மனத்தில் தோன்றுவதே இல்லை. அது தூய்மை வாய்ந்த ஒரு பொருளைச் சுட்டுகிறது என்பதே அவர்கள் அறிய விரும்புவது. இவ்வாறே பாரெங்கும் பல சமயங்களுக்கும் பொருந்தக் கூடிய, யாவராலும் பொதுவாகக் கொள்ளக்கூடிய சடங்குகள் இல்லை. இப்படியிருக்க, உலகப் பொதுமையான பொருள் எங்கேதான் உள்ளது? அப்போது அகில உலகுக்கும் பொருந்தும் பொதுச் சமயமொன்று எவ்வாறு இருத்தல்கூடும்? உண்மையில அது முன்னரே உள்ளது. அது யாதென்பதை நாம் இனிக் காண்போம்.

நாமெல்லோரும் அனைத்துலக சகோதரத்துவம் பற்றிப் பேசுவதைக் கேட்டுள்ளோம். அதைப் போதிக்கப் பல சங்கங்களும் ஏற்பட்டுள்ளன. எனக்கு ஒரு பழங்கதை நினைவுக்கு வருகின்றது. இந்தியாவில் மதுபானம் செய்வது மிகவும் தீயசெயல் எனக் கருதப்பட்டு வருகின்றது. ஒருநாள் சகோதரர் இருவர் இரகசியமாக மது அருந்த விரும்பினர். வைதிகத்தில ஈடுபாடுள்ள அவர்கள் அம்மானுர் அருகேயுள்ள ஓர் அறையில் உறங்கிக் கொண்டிருந்தார். ஆகவே, அவர்கள் மதுபானம் செய்யத் தொடங்கும் முன்னரே ஒருவரோடொருவர், "நாம் மிக்க மௌனத்துடன் செயலாற்ற வேணடும்; அல்லாவிடின் அம்மானுர் விழித்துக் கொள்வார்," என்று பேசிக்கொண்டனர். மதுவைப் பருகும் போதும், "சத்தம் செய்யாதே; அம்மானுர் விழித்துக் கொள்வார்," என்று உரக்க உருப்போட்டு வந்தனர். ஒருவர் எழுப்பிய சத்தத்துக்கு மேல் மற்றவரது குரல் ஓங்கவே, இறுதியில் கூச்சல மிகுதியாகி அம்மானுர் விழித்தெழுந்து வந்து, அவர்களது நிலையை நோக்கினுர். இப்போது நாம் அனைவரும் இக்குடியர்களைப் போன்றே 'உலக சகோதரத்துவம்' எனக் கத்துகினறேம். 'நாமெல்லோரும் சமமே; ஆகவே, நாம் ஒரு தனி மதப் பிரிவினை உண்டாக்குவோம்,' என்று கதறுகிறேம். நீங்கள் அத்தகைய மதப் பிரிவைப் படைத்ததும சமத்துவத்தை எதிர்த்துப் பேசுகிறீர்கள். சமத்துவம் பறந்தே போய்விடுகிறது. முகம்மதிய மதம் சமத்துவம் குறித்துப் பேசுகின்றது. ஆனுல், நடப்பது என்ன? முகம்மதியரல்லாதார் எவருமே அககுழுவில் சேர்க்கப்படார்; அதைக் காட்டிலும் அவர்களது தலையைத் துணடித்து விடுவதே சாத்தியமாகும். கிறித்தவர்கள் உலக சகோதரத்துவம் பற்றிப் பேசி வருகின்றுர்கள்; ஆனுல், கிறித்தவரல்லாத எவரும் என்றுமநிலையான தீ மேலிட்ட பாத்திரத்தில் உயிரோடு வறுக்கப்படும் ஓர் உலகிற்குச் செல்வர் என்பதே அவர்கள் கருத்து.

நமது அகில உலக சகோதரத்துவத்தையும் சமத்துவத்தையும் நாடி இவ்வாறு நாம் உலகிற் சென்று கொண்டிருக்கிறேம். இத்தகைய பேச்சை நீங்கள் உலகில் கேட்கும் போது நான் உங்களை எச்சரிக்கும் வகையில் ஒன்று கூறு

வேன் : சிறிது மோனம் சாதித்தல் வேண்டும் ; உங்களைப் பாதுகாத்துக் கொள்ளலும் வேண்டும். ஏனெனில், இப் பேச்சுகள் அடிக்கடி உள்ளே செறிந்து கிடக்கும் சுயநலக் கருத்தையே மறைத்து நிற்கின்றன. "குளிர்காலத்தில் ஒவ்வொரு சமயம் பேரிடியுடன் கூடிய மேகம் தோன்றுகின்றது; அது மிகுந்த வீறுடன் குமுறுகின்றது. ஆயினும், துளி மழைகூடப் பெய்வதில்லை. ஆனால், மழைக்காலத்திலோ முகிலின் இடிமுழக்கம் கேட்கப்படுவதில்லை. எனினும், உலகினை ஊழிக்கால வெள்ளத்தில் ஆழ்த்தி விடுகின்றது. அவ்வாறே எவர்கள் உண்மையில் உழைக்க, மனித சகோதரத்துவத்தை உண்மையாகவே உள்ளத்திலுணர்ந்து வருகிறார்களோ அவர்கள் அதிகமாகப் பேசுவதில்லை ; சகோதரத்துவத்தை நிலவச் சிறுசிறு மதப்பிரிவுகள் அமைப்பதில்லை. ஆயினும், அவர்கள் செயல்களும் இயக்கங்களும், வாழ்க்கை முழுதுமே அவர்களுக்கு உண்மையில் மனித சகோதர வாஞ்சை உள்ளதென்றும், அவர்களுக்கு யாவரிடமும் அன்பும் பரிவும் உள்ளனவென்றும் தெளியக் காட்டுகின்றன. அவர்கள் வீண் பேச்சுப் பேசுவதில்லை ஆனால் செய்கையில் காட்டியே வாழ்கிறார்கள். இவ்வுலகில் 'பயனில் சொல்'லுக்குக் குறைவே இல்லை. நமக்குத் தேவையானது மிகுதியான உண்மை உழைப்பும் பேச்சின் குறைவுமே.

நாம் காணு மட்டும் மதம் பற்றிய உலகப் பொதுவான சின்னங்கள் இருப்பதைக் காண்பது அரிதே. ஆனால், அவை உள்ளன என்பது மட்டும் நமக்குத் தெரியும். நாமெல்லோரும் மானிடர்களே ; ஆனால், நாம் சரிசமமாய் இருக்கிறோமா ? அது ஒரு நாளும் நிகழக்கூடியதன்று. 'நாம் சமமானவர்' என்று யார் கூறுகின்றனர் ? மூளைக் கோளாறுள்ளவரே. நமது மூளையிலோ, சக்தியிலோ நாம் சமானர்களாக இருக்கிறோமா ? ஒருவன் மற்றொருவனைவிட அதிக வலிமை படைத்தவனாய் இருக்கிறான். ஒருவனுக்கு மற்றொருவனைக் காட்டிலும் அதிக மூளைவன்மை பொருந்தியுள்ளது. நாம் எல்லோரும் சமானமாய் இருப்போமானால், இத்தகைய வேறுபாடு ஏன் ? இந்த மாறுபாட்டை உண்டு பண்ணியவர் யார் ? நாமே. ஏனெனில், நமக்கு ஏறுமாறான சத்திகளும், மூளையும், வெவ்வேறு அளவில் உடல்வன்மை

யும் இருப்பதனுல், நம்முள் வேறுபாடு இருந்தே தீரும். ஆனுல், சமத்துவக் கோட்பாடு நமது உள்ளத்தைக் கவர்கின்றது. நாம் எல்லோரும் மனிதரே; ஆகிலும் சிலர் ஆடவராகவும், சிலர் பெண்டிராகவும் உள்ளனர். இங்கே ஒரு கறுப்பன் இருக்கிருன்; அங்கே ஒரு வெள்ளையன் இருக்கிருன். ஆனுல், யாவரும் மனித இனத்தைச் சார்ந்தவரே. நம் முகங்கள் பலதிறப்பட்டவை. மனிதர் ஒவ்வொருவருமே வேறுவேறு தோற்றமளிக்கின்றனர். ஆயினும் நாமெல்லோரும் மாந்தரே. ஒரே தன்மையான மனிதத்துவம் என்பது எங்கே இருக்கிறது? ஓர் ஆணே, ஒரு பெண்ணே கறுப்பாகவோ வெள்ளையாகவோ இருக்கின்றனர். இத்தனை பேருக்குமிடையே பொதுவான ஒரு மனிதத் தத்துவம் இருக்கிறதென்பதை நான் அறிவேன். அது தொட்டறிய இயலாதது. ஆனுல் அது திண்ணமாகவே உள்ளது என்பதை நான் உறுதியாகக் கூறுவேன். ஏதேனும் ஓர் உறுதிப் பொருள் இருக்குமாயின், அது இந்தப் பொதுவான மனிதத் தத்துவமே. இத்தகைய பொதுக் கருத்தாலேதான் உங்களை நான் ஆடவர் பெண்டிராகக் காண்கிறேன். அப்படியே கடவுளென்னும் வடிவத்தில் உலகத்திலுள்ள பல்வேறு மதங்களையும் ஊடுருவிச் சென்றுவரும் உலக சமய விஷயத்திலும்; அது முடிவில்லாத காலத்தில் இருந்தே தீரும், தீரவேண்டும். “இவ்வெல்லா முத்துகளுள்ளும் ஊடுருவிப் பாயும் நூல் நானே.” ஒவ்வொரு முத்தும் ஒவ்வொரு சமயம் அல்லது அதன் பிரிவினையாகும். இத்தகையனவே பல்வேறு முத்துகளும்; கடவுளே அவற்றையெல்லாம் துளைத்துச் செல்லும் சரடு போன்றவர். மனித இனத்தில் பெரும்பாலார் அதனைச் சிறிதும் அறியாமலே இருக்கின்றனர்.

வேற்றுமையிலும் ஒற்றுமையே பிரபஞ்சத்தின் ஒழுங்குமுறை. நாமெல்லோரும் மனிதரே; நம்முள் ஒவ்வொருவரும் மற்றவர்களிடமிருந்து வேறுபட்டவராகிருேம். மனித வர்க்கத்தினைச் சார்ந்தவன் ஆகையினுல் நான் உங்களுள் ஒருவனுகின்றேன். இன்னுர் என்று பெயர் வைத்துக் கூறுவதனுல் நான் உங்களைவிட்டு வேறுபட்டவனுகிறேன். ஆடவர் என்னும் நிலையில் நீங்கள் பெண்ணினத்தினின்றும்

வேறுபட்டவர்களாகிறீர்கள். ஆனால், மக்களினத்தவராய்
இருப்பதனால் நீங்களும் அப்பெண்டிரும் ஒன்றே. மனிதர்
என்னும் நிலைமையில் நீங்கள் விலங்கினின்றும் பிரிந்து நிற்
கின்றீர்கள். ஆனால், உயிர் வாழ்வனவாதலால் ஆண்,
பெண், விலங்கு, செடி, கொடி என்பன அனைத்தும் ஒன்றே.
இருப்பு என்ற நிலையில் நீங்கள் மாபேருலகுடன் ஒன்றுபட்ட
வர்கள் ஆகின்றீர்கள். அகில உயிரின் நிலையே கடவுள்
என்பதாகும். அவரே பிரபஞ்சத்தின் முடிவு நிலையான
ஒற்றுமை. நாம் எல்லோரும் அவருள் ஒன்றியிருப்பவர்
களே. அதே சமயம் வெளிப்பாடுகளில் இவ்வேற்றுமைகள்
எப்போதும் இருந்தே தீரவேண்டும். நமது தொழிலிலும் சத்தி
களிலும் அவை வெளியுலகில் காட்டப்படுவது போன்று
மாறுபாடுகள் யாவும் இருந்தே தீரவேண்டும். ஆகவே, நாம்
கோட்பாடுகளின் தொகுதியென்று யாவராலும் நம்பப்பட
வேண்டுமென்று சொல்வதே பொதுச் சமயத்தின் கருத்து
என்றால், அது நிகழக்கூடாது. எல்லா முகங்களும் ஒரே
வண்ணமாய் ஒருபோதும் இரா. மற்றும் உலகம் முழுதி
னுக்கும் ஒரே புராணம் இருக்க வேண்டுமென்று எதிர்பார்த்
தலும் இயலாத காரியம். எல்லா மதத்துக்கும் ஒரே சடங்கு
இருத்தலும் இயலாது. அத்தகைய நிலை ஒருபோதும் ஏற்
படக்கூடுவதன்று. அப்படி ஏற்பட்டாலும், உலகமே
அழிந்து விடும்; ஏனெனில், வேறுபாடே வாழ்க்கையின்
அடிப்படைத் தத்துவம். நம்மை உயிர்களாக உருவாக்குவது
எது? வேறுபடுத்தும் தன்மையே. சமநிலையை எய்துவது
நமது அழிவிற்கு அறிகுறியேயாகும். சரிசமமான அளவில்
பரந்திருப்பதே இந்த அறையிலுள்ள உஷ்ண அளவின் இய
லெனின், இது அவ்வாறு பரவியதும் அந்நிலை இல்லை
யென்றே கூறும் படியாகும். இப்பிரபஞ்சத்தில் அசைவு
உண்டாக்குவது எது? தவறிய சமநிலையே. இப்பிரபஞ்சம்
அழிவுறும் போதுதான் சமநிலையில் இருக்கக் கூடிய தன்மை
ஏற்படும். அல்லாவிடின், அத்தகைய காரியமே இயலாது
போய்விடும். அம்மட்டோ? அதனை அவ்வாறு வைத்
திருப்பதே ஆபத்துக்கு இடமாகும். நாமெல்லோரும் ஒரே
வண்ணமாக எண்ண வேண்டுமென்று விரும்பவும் கூடாது;
அன்றேல் சிந்தனைக்கு எட்டும் பொருளே இராது போய்

விடும். நாமெல்லோரும் பொருட்காட்சிச் சாலையில் பக்குவப் படுத்தி வைக்கப்பட்ட எகிப்தியப் பிணங்கள் போன்று ஆகிவிடுவோம். சிந்தனை யொன்றுமின்றி ஒருவரை யொருவர் வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டிவரும். இவ்வேற்றுமையே, வேற்றுமைகாணும் தன்மையே, நமக்குள் சமநிலையில்லாத் தன்மையே நமது முற்போக்கிற்கு உயிர் நாடியாய், நமது எண்ணத்தின் உயிராய் உள்ளது. இதெப்போதும் இருந்தே தீரும்.

ஆகவே சமரச சமயக் குறிக்கோள் என்று நான் உரைக்கும் போது என் கருத்தென்ன? நான் ஏதோ ஓர் உலகப் பொதுத் தத்துவக் கொள்கையையோ பொதுவான புராணக் கதையையோ யாவராலும் பொதுவாகக் கொள்ளப் பட்ட கிரியைகளையோ கொள்கிறேனென்பது கருத்தன்று. ஏனெனில், ஒன்றுக்கொன்று இயைபுடன் இணைந்து இயங்கும் பல சக்கரங்கள் கொண்ட மிக வியப்பான, சிக்கலுடன் கூடிய, ஓர் இயந்திரத் தொகுதி போன்ற உலகு தொடர்ந்து செயற்பட வேண்டுமென்பதை யான் அறிவேன். நாம் இந்நிலையில் செய்ய வேண்டுவது யாதெனின், அப்பொறியை மென்மையாக, குறைந்த அளவிலேயுள்ள உராய்தலுடன் இயங்குமாறும் சக்கரக் குடங்களுக்கு மையிட்டு வரலாம் என்பது. இதன் பொருள் என்ன? மாற்றமென்பது இயல்பானது, கட்டாயமானது என்பதையும் அறிந்து கொள்வது. ஒருமைத் தன்மையை நமது இயற்கை யுணர்ச்சியினலேயே ஏற்றுக் கொள்வதைப் போல மாற்றத்தையும் ஒப்புக்கொள்ள வேண்டும். உண்மையானது பலப்பல ஆயிர வழிகளிலும் வெளிப்படலாமென்பதையும் அவற்றில் ஒவ்வொரு பாதையும் தன் அளவில் செவ்விதே என்பதையும் நாம் கற்றுக் கொள்ள வேண்டும். பல கோணங்களில் காணப்பட்ட பொருள் ஒன்ருகவே இருத்தல் கூடும் என்னும் உண்மையைக் காணவேண்டும். சான்ருக, சூரியனை எடுத்துக் கொள்வோம். தரைமீது நின்று ஒருவன் சூரியன் உதிப்பதை நோக்குகிருனென்று வைத்துக் கொள்வோம்; அவன் பெரிய பந்து போன்ற ஒரு வடிவத்தைக் காண்கிருன். அவன் அதை நோக்கியே தன் பிரயாணத்தைத் தொடங்கி, தான் செல்லும் பல்வேறு நிலைகளிலும் நின்று நின்று செஞ்சுட

ரோனைப் புகைப்படங்கள் பிடித்து வருகிருன் என்றும் வைத்துக்கொள்வோம். ஒரு நிலையில் நின்று எடுத்த படமானது மற்ற நிலைகளில் நின்று எடுத்துள்ள படங்களினின்றும் வேறுபட்டே தோன்றும். படங்கள் பல; ஆயினும், யாவும் ஒரே சூரியனது படமேயன்ருே? ஒரே சுடர்தான் அந்தப் பல் வேறுபட்ட படங்களும் குறிக்கும் பொருள். அவனது பயணத்தின் பல கட்டங்களிலும் எடுத்த ஒரே பொருளின் பல படங்களே அவை யாவும் என்பதை நாம் நன்கறிவோம். இது போன்றதேதான் இறைவன் விஷயமும். உயர்ந்த தத்துவத்தினாலோ தாழ்ந்த கொள்கையினாலோ, மிக மேன்மையான புராண வகையினாலோ மிகக் கீழ்த் தரமான ஒன்றினாலோ, மிகப் பண்பாடுற்ற சடங்கினாலோ மிக இழிந்த உயிரற்ற பொருளைக் கடவுளென வழிபடுதலாலோ, ஒவ்வொரு மதப்பிரிவும் ஒவ்வொரு ஆன்மாவும் ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு சமயமும் அறிந்தோ அறியாமலோ மேல் நோக்கியே, கடவுளைக் குறித்தே தத்தளித்துச் சென்று கொண்டிருக்கிறது. மனிதனுக்குக் கிடைக்கும் உண்மையின் காட்சி அந்த ஒருகடவுளது காட்சியேயாகும், வேருென்றையும் பற்றியதன்று. நாம் எல்லோரும் ஒவ்வொருவரும் கையில் ஒரு கலத்தைக் கொண்டு ஏரியிலிருந்து தண்ணீர் எடுத்துவரச் செல்வோமாயின், ஒருவர் தம் கோப்பையிலும் வேருெருவர் தம் குடத்திலும், மூன்ருமவர் ஒரு வாளியிலும், மற்ருெருவர் ஒரு பாத்திரத்திலுமாகக் குளிர்நீர் கொண்டு வருவோம். ஒவ்வொரு கலத்திலும் அதன் வடிவைக் கொண்டே நீர் உள்ளது. கோப்பையில் உள்ளநீர் கோப்பை வடிவையும், குடநீர் குடத்தின் வடிவையும், இவ்வாறே எல்லாக் கலங்களிலும் உள்ள நீர் அக்கலங்களின் வடிவையும் ஏற்கின்றது. ஆனால், ஒவ்வொரு கலத்திலும் இருப்பது ஒரே குளத்துத் தண்ணீரே. இத்தகையதே தான் சமயத் துறையும். நமது மனம் இக் கொள்கலன்களைப் போன்றது. நம்முள் ஒவ்வொருவரும் கடவுட் காட்சியைக் காண முயன்று வருகிருேம். கடவுள் இப் பாத்திரங்களில் நிறைந்துள்ள நீர் போன்றவர். ஒவ்வொரு கலத்திலும் கடவுளின் காட்சி கலத்தின் வடிவிலே உள்ளது. ஆனால், அக் கடவுள் ஒருவரே; அவர் ஒவ்வொரு சான்றிலும் தாமேயாகிருர். நாம்

பெறக்கூடிய பொதுத்தன்மையைக் கண்டறிந்து கொள்ளும் விதம் ஈதொன்றே.

கொள்கையளவில் இவை யாவும் சரியே. ஆனால், சர்வ சமயங்களின் இந்த ஒற்றுமையைச் செயல்முறையில் வழங்கும் வகை ஏதேனும் உளதா? சமயங்களின் நோக்குகள் யாவும் உண்மையே என்று தெளியும் அறிவு மிகவும் பழமையானது. நூற்றுக்கணக்கான முயற்சிகள் இந்தியா, அலெக்ஸாண்ட்ரியா, ஐரோப்பா, சீனு, ஜப்பான், திபேத்து, கடைசியாக அமெரிக்கா இந்நாடுகளில் மதக்கொள்கையில் இணைந்த தன்மையைக் கொணர்ந்து மதங்கள் யாவும் அன்பில் ஒன்றுபடுவதற்காகச் செய்யப்பட்டன. அவை யாவும் தோல்வியுற்றதற்குக் காரணம், அவை நடைமுறைக்குத் தக்கதான திட்டமொன்றையும் கையாளாமையே. உலகச் சமயங்கள் யாவும் சீரானவைகளே என்பதை அவை யாவும் ஒப்புக்கொண்டன. ஆனுல், அவற்றை ஒன்ருகக் கூட்டி உருவாக்கி அதற்குரிய தனித் தன்மையை இழவாது வைத்துக்கொள்ள உதவக்கூடும் வழியொன்றைக் காட்டும் வல்லமை இவை பெற்றிருக்கவில்லை. எந்தத் திட்டம் மதத்திலுள்ள எத் தனி மனிதனது தனித் தன்மையையும் அழியாமல், அத்துடன் மற்றவரோடு இணைந்திருக்கும் இயல்பினைத் தருகிறதோ, அவ்வொன்றே நடைமுறைக்கு ஒத்ததாகும். ஆனுல் இதுவரை மத ஒற்றுமைக்கென வகுக்கப்பட்டுள்ள திட்டங்கள் யாவும் கொள்கையளவிலே எல்லாச் சமயங்களின் பல திறத்தனவான நோக்குகளையும் ஏற்றுக்கொள்வனவாக இருப்பினும், எல்லா மதங்களையும் ஒருசில கோட்பாடுகளுக்குள் கொண்டு வரவே முயன்றன: எனவே அவை இன்னும் பல புதிய சமயப் பிரிவினைகளை உண்டாக்கியே வந்தன. அப்பிரிவுகளும் தம்முள் பிணங்கியும் போராடியும், ஒன்றினை மற்ருென்று நெருக்கித் தள்ளியுமே வந்துள்ளன.

நானும் ஒரு சிறு திட்டத்தை வகுத்துள்ளேன். அது வினையாற்றி வருமோ, வாராதோ யானறிகிலேன். ஆனுல் அதை உங்கள் ஆராய்ச்சிக்கு விட்டுவிட விழைகின்றேன். எனது திட்டம் யாது? நான் முதன்முதலில் மனித இனம் இந்த மூதுரையினை நினைவு கூருமாறு வற்புறுத்துவேன்: "அழிக்கும் வேலையில் ஈடுபட வேண்டா." பழைமைகொண்ட பொருள்க

ளைத் தகர்த்தெறியத் துணியும் சீர்திருத்தவாதிகள் உலகுக்கு யாதொரு நன்மையும் பயப்பவர்களல்லர். "துண்டுபடுத்த வேண்டா; ஒன்றையும் அதன் நிலையினின்றும் பெயர்த்தெடுத்து அதனைக் கீழே தள்ளவேண்டா. ஆனால், ஆக்கவினையையே ஆற்றுக. கட்டடம் அமைத்து வருக. உங்களால் இயலுமானால் உதவி புரிக. முடியாவிடின், கைகட்டிப் பக்கம் நின்று நடப்பதை நோக்கி வருக. உங்களால் உதவிசெய்ய இயலாதுபோனால், இடையூறு செய்யாதொழிக. உண்மையுடன் கூடியிருக்கும் வரை எதிராளியின் மனமொப்பிய தீர்மானங்களுக்கு மறுப்பொன்றும் சொல்லவேண்டா. இரண்டாவதாக, மனிதன் நிலையினை உயர்த்தி அவனைக் கைதூக்கி விடுக. எல்லாச் சமயங்களுக்கும் மையமாகக் கடவுள் விளங்குகின்றாரெனின், நாமெல்லோரும் அவரை நோக்கியே வட்டத்தின் பற்பல ஆரங்கள் வழியாகச் செல்லுகின்றோமெனின், நாம் யாவருமே அம்மையத்தினை அடைவது நிச்சயம். எல்லா ஆரங்களும் அந்த வட்டத்தின் நடுவில் குவியும்; அப்போது வேறுபாடுகள் யாவுமே மறையும். ஆனால் அந்த இடத்தை அடையும்வரை மாறுபாடுகள் இருந்தே தீர வேண்டும். அந்த ஆரங்கள் யாவும் அந்த மையத்திலேதான் ஒன்றுகூடவேண்டும். ஒருவன் தனது இயல்புக்கேற்றவாறு அந்த ஆரங்களில் ஒன்று வழியாகச் செல்கிறான்; மற்றொருவன் வேறொன்று வாயிலாகப் போகிறான். நாமெல்லோருமே நமக்கு ஏற்ற பாதையிலே செல்வோமேயானால் மையத்துக்குச் சென்று சேர்வது நிச்சயம்; ஏனெனில், "எப்பாதையும் ரோமாபுரிக்கே அழைத்துச் செல்வதாகும்." நம்முள் ஒவ்வொருவரும் இயல்பிலேயே நமது இயல்புக்கேற்ப வளர்ந்து காலப்போக்கில் மிகமிக மேலான உண்மையை அறியத்தான்போகிறோம்; ஏனெனில், எப்படியும் மனிதர் தமக்குத் தாமே அறிவுறுத்திக்கொள்ளல்வேண்டும். நீங்களும் நானும் எதனைச் சாதிக்கக் கூடும்? உங்களால் ஒரு சிறு குழவிக்கும் அறிவு புகட்ட முடியுமென்று எண்ணுகிறீர்களா? உங்களால் அது இயலாது. குழந்தை தனக்குத் தானே அறிவுறுத்திக்கொள்கின்றது. உங்கள் கடமை, வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவதும் இடையூறுகளை நீங்கச் செய்வதுமே. ஒரு செடி வளர்கின்றது. நீங்களா அதை

வளரச் செய்கிறீர்கள்? உங்கள் கடமை அதைச் சுற்றி வேலி அமைத்து, விலங்குகள் அதைத் தீண்டாதபடி செய்வதே யாம். அதோடு உங்கள் பணி முடிகின்றது. செடி தானே வளர்கின்றது. இப்படிப்பட்டதே ஒவ்வொருவரின் ஆன்ம வளர்ச்சியும். உங்களுக்கு ஒருவரும் போதனை செய்ய இய லாது. ஒருவரும் உங்களை ஆன்மிக மனிதனாக்க முடியாது. உங்களுக்கு நீங்களே பாடம் கற்பித்துக்கொள்ளவேண்டும். உங்களது வளர்ச்சி உங்கள் உள்ளிருந்தே எழவேண்டும்.

நமக்குப் புறம்பான ஆசிரியர் செய்யக்கூடுவது என்ன இருக்கின்றது? அவர் இடர்களை ஒரு சிறிது நீக்கலாம்; அத்தோடு அவரது கடமை முடிந்துவிட்டது. ஆகவே, உங்களால் இயலுமானால் துணை செய்க; ஆனால் அழிவுத் தொழிலைச் செய்ய வேண்டா. மாந்தர்களை ஆன்மிகம் படைத்தவர்களாகச் செய்யமுடியுமென்ற நினைவை நீங்கள் அறவே அகற்றிவிடுக. அது இயலாத காரியம். உங்கள் ஆன்மாவைத் தவிர்த்து உங்களுக்கு வேறோர் ஆசான் இல்லை. இதை அறிந்துகொள்க. அதன் பயனென்ன? சமூகத்தில் நாம் எத்தனையோ வகையான இயல்புகளைக் காண் கின்றோம். உள்ளங்களும் விருப்பங்களும் ஆயிரக் கணக்கில் வேறுபடுகின்றன. அவற்றைப் பூரணமாகத் தொகுத் துரைப்பது இயலாத காரியமே; ஆனால், நடைமுறைக்கேற் பவே நாம் அவற்றை நான்கு பிரிவுகளாகப் பிரித்துக்கூற லாம். முதலில் ராஜஸ குணம் வாய்ந்த தொழிலாளி இருக்கி றான். அவனுக்குச் செயல் ஆற்றுவதிலேயே ஆர்வம் இருக் கின்றது. மகத்தான சத்தி அவன் தசைகளிலும் நரம்புகளி லும் துடிதுடிக்கின்றது. அவனது இலட்சியம் வினையாற்று வதே; மருத்துவச் சாலைகளும் வீதிகளும் அமைத்து, தருமச் செயல்கள் புரிந்து திட்டங்கள் வகுத்து ஒழுங்குபடுத்து வதே. இரண்டாவது வகை மனிதன் உணர்ச்சி மிக்கவன். அவனுக்கு உயர்ந்த சிறப்புகளும் அழகிய பொருள்களுமே மிக விரும்பத் தக்கவை. அழகுள்ள பொருள்களையும் இயற் கையின் அழகிய பகுதியினையும் பார்த்துத் திளைப்பதில் அவ னுக்குப் பேரவா; அன்பையும் அன்புக் கடவுளையும் வழிபட வும் விழைகிறான் அவன். அவன் தன் முழுமனத்துடன் எக் காலத்திலும் தோன்றிய சான்றோர்களையும் தீர்க்கதரிசி

களான மகான்களையும், ஈசுரத் தன்மை வாய்ந்த அவதார புருடர்களையும் போற்றுகிறான். ஏசுநாதரோ புத்தபிரானோ உண்மையில் வாழ்ந்தார்களோ இல்லையோ என்பதற்குத் தருக்கம் என்ன கூறுகிறதென்பது பற்றி அவனுக்குச் சிந்தையே இல்லை. மலை மீதேறிச் சொற்பொழிவாற்றிய நேரம் பற்றியும் அவனுக்கு அக்கறை இருப்பதில்லை. கண்ண பிரானார் அவதரித்த காலம் பற்றிய விளக்கமான செய்தியும் அவனுக்குத் தேவையில்லை. அவன் காண விரும்புவதெல்லாம் அன்பு செய்யப்பட்ட அவர்களுடைய தன்மைகளும் பண்புகளுமே. அவன் மனப்பாங்கு இத்தகையதே. இதுவே நட்பின் இயல்பு; பத்தனது நற்பண்பு. அடுத்த வகுப்பினன் ஞானியாவான். அவனது நிலை, தன்னை அறிந்து கொள்ளும் தன்மையும், பிறர் மனத்தினை ஆராய்ந்தறிந்து கொள்ளும் பெற்றியும், அகமே இயங்கும் சக்திகளின் அறிவும், அவ்வறிவினால் அவற்றைத் தன் வயப்படுத்தும் ஆற்றலும் பெற்றதாகும். மற்றுமோரினத்துத் தத்துவ சாத்திரி, எப்பொருளையும் எடையிட்டுப் பார்த்து, மனிதக் கோட்பாடுகளுக் கெல்லாம் அப்பாற்பட்ட எல்லையிலும் தன் மதியை உபயோகிக்க விழைவான்.

இத்தனை வகையான மனிதர்களுக்கும் தக்கதொரு தத்துவத்தைத் தந்து பெரும்பான்மையான மனங்களையும் திருத்தி செய்யக்கூடிய மதமே தேவை. இத்தகைய ஆற்றல் இன்றேல், இன்றைய மதப் பிரிவினைகள் யாவும் ஒரு பக்கச் சார்பு பெற்றனவாகும். அன்பையும் உணர்ச்சியையும் வற்புறுத்தும் ஒரு குழுவினரிடம் நீங்கள் சென்றால் அவர்கள் ஆடி அழுது அன்பைப் புகட்டுவர். அவரிடம் நீங்கள், "நண்ப, இதெல்லாஞ் சரி; ஆனால் எனக்கு வேண்டுவது இதனைக் காட்டிலும் வலியதும் நியாயத்துக்கும் தத்துவத்திற்கும் பொருத்தமுள்ளதுமான ஒன்றே. நான் படிப் படியாகப் பொருள்களைத் தருக்க நெறிக்கு இயைந்தவாறு அறிந்து கொள்ள வேண்டும்," என்று சொன்னால், அவர்கள் உங்களை வெளியேற்றி விடுவதன்றி, விரும்பத்தகாத இடத்துக்கே அனுப்பி விடவும் துணிவார்கள். இதன் பயன் யாதெனில், உணர்ச்சி வயப்பட்டவர்களுக்கே அவர்கள் சமயப் பிரிவு உதவக்கூடும். மற்றவர்களுக்கு உதவ மறுப்பதோடு நில்

லாது அவர்களை அழித்து விடவும் முற்படுவர். மிகத் தீயோர் பிறருக்கு உதவ மறுப்பதல்லாது, அவர்களது உண்மை உள்ளத்திலும் நம்பிக்கை வைப்பதில்லை. மற்றும் சில அறிஞர்கள் இந்தியாவின், கீழை நாடுகளின் ஞானச் செல்வம் பற்றிப் பேசி, மன நூல் பற்றிய மிக நீண்ட பெரிய குழூக்குறி வார்த்தைகளையும் மொழிவார்கள். அவர்களிடம் என்போன்ற ஒரு சாதாரண மனிதன் ஆன்மிக அறிவு அளிக்குமாறு வேண்டி நின்றால் அவர்கள் உடனே சிரித்து, "நீங்கள் யுத்தி வகையில் எங்களை விட மிகத் தாழ்ந்த நிலையில் உள்ளீர்கள். உங்களுக்குப் பாரமார்த்திக விஷயங்கள் பொருள்பட மாட்டா," என்று கூறுவர். இவர்கள் உயர்ந்த தத்துவ ஞானிகள்; தம் இல்லங்களினின்றும் உங்களை வெளியேற்றி விடுவார்கள். பின்னும் மறைவான உலகங்களிலுள்ள மர்மங்கள் பற்றிப் பேசும் பிரிவினர் பல பூமிகள், பலவிதமான மன நிலைகள், மனத்தின் சத்தி எதை ஆற்ற வல்லது என்று பலபடப் பேசுவார்கள். நீங்கள் சாதாரண மனிதர்களாய் அவர்களை அணுகி, "நான் செய்யக்கூடிய நலம் பற்றி நவிலுங்கள்; எனக்குச் சிந்தனை சிறிதும் இல்லை," என்று சாற்றினால், அவர்கள் புன்முறுவல் பூத்து, தங்களுக்குள், "இந்த மூடன் கூறுவதைக் கேள். இவனுக்கு ஒன்றுமே தெரியாது. இவன் வாழ்க்கையே வீண்," என்று பேசிக் கொள்வார்கள். இது தான் உலகெங்கும் வழங்கி வருவது. இத்தகைய அறிஞர்களை ஒன்று கூட்டி அவர்களது இகழ்ச்சி தோன்றும் சிரிப்புகளைப் புகைப்படம் பிடித்துப் பார்க்க வேண்டுமென்று நான் விரும்புவதுண்டு.

இதுவே இக்காலச் சமய நிலை; நிகழ்ச்சிகளின் நிலை. நான் பரவச் செய்ய நினைக்கும் மதம், எல்லா மனங்களும் ஒன்று போல் ஏற்கத்தக்கதாக விளங்க வேண்டும். அது தத்துவ ரீதிக்கோ, பத்தி உணர்ச்சிக்கோ ஞான மனப்பாங்குக்கோ, செயலாற்றுவதற்கோ சம அளவில் பொருந்தும் வகையில் அமைந்து இருத்தல் வேண்டும். விஞ்ஞானத்தில் தேர்ச்சி பெற்ற பேராசிரியர்கள் கல்லூரிகளிலிருந்து வந்து யுத்திக்குப் பொருந்துவதை வேண்டுவார்கள்; இது இயன்ற வரை ஏற்றுக் கொள்ளட்டும். ஆனால், ஒரு படியடைந்ததும் அதற்கு மேல் தங்களது தருக்க ஆற்றல் செல்ல மாட்டா

தென்று அவர்கள் விட்டு விடுவார்கள். "கடவுளையும் கதி மோட்சத்தையும் பற்றிய இக்கருத்துகள் குருட்டு நம்பிக்கைகளே, அவற்றை விட்டு விடுங்கள்," என்று சொல்வார்கள். நான் அவர்களை நோக்கி, "தத்துவ சாத்திரிகளே, உம்முடைய உடல் அவற்றிலும் மூட பக்தி நிறைந்த ஒன்று. அதனை விடுத்து, உணவு கொள்ள வீட்டிற்கோ, சொற்பொழிவாற்றக் கல்லூரிக்கோ செல்லாதொழிக, முடிந்தால் உடல் எண்ணத்தை ஒழித்து விடுக; அன்றேல், அபயங் கூறி, அருள் வேண்டிச் சும்மா இருப்பீராக," என்று இயம்புவேன். இவ்வுலகம் ஒரு முழுப் பொருளே; பிரபஞ்சத்தில் சத்தான பொருள் ஒன்றே தான் உளதென்று உபதேசிக்கும் தத்துவத்தை அனுபவம் வாயிலாக அறியும் வகையை மதமானது விளக்கிக் காட்டும் வன்மை பெற்றதாக இருத்தல் வேண்டும். மரும ஞானி நம்மிடம் வருங்கால் அவரை நாம் வரவேற்று அகநூலை நன்கு விரித்துக் கூறி, அவருக்கு விளங்குமாறு அதனைத் தெளிவு படுத்த வேண்டும். உணர்ச்சி ததும்புபவர்கள் வந்தால் நாம் அவர்களுடன் அமர்ந்து, அவர்களோடு சேர்ந்து சிரித்து விளையாடியும் கடவுளின் பெயரால் உள்ள முருக அழுது, அன்பின் அமுதை உண்டு வெறிகொண்டவர்கள் போன்றே ஆக வேண்டும். வலிமை பெற்ற கரும வீரா நம்மை அணுகினால், நாமும் அவருடன் முழு வலியுடன் வினையாற்ற வேண்டும். இம்முறைகள் யாவும் ஒன்று சேர்ந்து இணையும் போது நாம் நமது குறிக்கோளான சமரச சமயத்தை அணுகியவராவோம். மக்கள் யாவரும் தமது உள்ளத்தில் இவ்வனைத்து நெறிகளும் சம அளவில் அமையப் பெற்றிருக்க வேண்டுமென்று நான் இறைவனை இறைஞ்சுகின்றேன். அத்தகைய மதமே எனது இலட்சியம்; அதாவது, பூரணத்துவம் பெற்ற மனிதனைக் குறிக்கும் எனது இலட்சியம். குணப் பண்பின் கூறுகளில் ஒன்றிரண்டு மட்டும் கொண்ட ஒருவனை நான் "ஒரு - பக்க - வளர்ச்சியுள்ளவனே" என்று தான் கூறுவேன். அத்தகையவரின் கூட்டமே உலகில் பெரும்பாலும் உள்ளது. அத்தகையவர் தாம் சென்று வரும் ஒரே பாதையைத் தான் அறிவர், பிற நெறிகள் யாவும் அவர்களுக்கு அபாயகரமானவையாகவும் அச்சுறுத்துவனவாக

வுமே காட்சியளிக்கும். இந்நான்கு வகைகளிலும் ஒத்த அளவில் இணக்கத்துடன் கூடியதே எனது இலட்சிய மதம். இத்தகைய மதம் இந்தியர்களாகிய நாங்கள் 'யோக' மெனக் கூறும் ஒன்றினுல் அடையப் படுவதொன்று. கருமம் ஆற்றுபவனுக்கு அது மனிதர்களையும் மனித இனத்தினையுமே ஒன்று கூட்டி வைக்கும் கருவி; மரும ஞானம் படைத்தவனுக்குத் தனது சிவான்மாவுக்கும் பரமான்மாவுக்கும் உள்ள சம்பந்தமே, காதலன்பனுக்குத் தனக்கும் அன்பு செய்யப்படும் இறைவருக்குமுள்ள சேர்க்கையே குறியாகும்; ஞானிக்கோ, ஒன்று சேர்ந்த அனைத்துப் பொருள்களின் கூட்டு இருப்பே. இதுதான் யோகம் என்பதன் பொருள். இது வடமொழியிலுள்ள சொல். யோகத்தின் நான்கு பிரிவுகளுக்கும் வேறு வேறு பெயர்கள் உள்ளன. இத்தகைய சேர்க்கையை நாடுபவனுக்கு 'யோகி' என்பது பெயர். வினையாற்றுபவனுக்குக் 'கரும யோகி' என்றும், பத்தனுக்குப் 'பத்தி யோகி' என்றும், மரும ஞானத்தால் நாடுபவனுக்கு 'இராச யோகி' என்றும் தத்துவ ஞானத்தால் தேடுபவனுக்கு 'ஞான யோகி' என்றும் பெயர்கள் வழங்கப்படுகின்றன. ஆகவே 'யோகி' என்ற மொழி அவர்கள் யாவரையும் அடக்கியதாகும்.

முதன் முதலில் இராஜயோகத்தினை எடுத்துக்கொள்வோம். மனத்தை அடக்கியாளும் இராஜயோகம் என்பது என்ன? இந் நாட்டில் யோகம் என்ற மொழியைக் கேட்கும்போது நீங்கள் பேய் பிசாசுகளையே நினைக்கிறீர்கள். ஆகையினுல், நான் தொடக்கத்திலேயே யோகத்துக்கும் பிசாசங்களுக்கும் யாதொரு தொடர்புமில்லை என்று சாற்றுவது நலம். யோகிகளில் ஒருவரும் தருக்க நெறியைப் புறக்கணித்துவிடுவதில்லை. ஒருவரும் உங்களை ஏமாறுமாறு உரைப்பதுமில்லை. எவருமே உங்கள் யுத்திவாதத்தை எவ்வகையினரான குருமார்களின் கையிலும் ஒப்படைக்கும்படி விளம்புவதுமில்லை. ஒருவரும் உங்கள் பத்தி விசுவாசத்தை மனிதனுக்கு மேலான ஒரு தேவதூதனிடம் வைக்குமாறு வற்புறுத்துவதுமில்லை. அவர்களுள் ஒவ்வொருவருமே உங்கள் அறிவைப் பற்றிக்கொண்டு அதனையே கடைப்பிடிக்குமாறு கூறுகின்றனர். அத்தனை உயிர்களிலும்

அறிவின் மூன்று திறப்பட்ட கருவிகள் இருக்கக் காண்கிறோம். முதலாவது, இயற்கையுணர்வு. இது விலங்குகளிலேதான் மிகுதியான அளவில் காணப்படுகிறது. இது அறிவின் கீழான படியிலுள்ள கருவி. அறிவின் இரண்டாவது கருவி யாது? புத்தியின் ஆற்றல். இது மனிதனிடந்தான் மிகப் பெரிய அளவில் விளங்கக் காண்கிறோம். இயற்கையுணர்வென்பது மிகக் குறைந்த தகுதியுள்ள ஒரு கருவியாகும். விலங்குகளுக்குச் செயலாற்றும் வட்டம் மிகக் குறுகியது. அக்குறைவான இடத்துக்குள்ளேதான் அது செயலாற்ற வேண்டும். மனிதனிடமோ, அத்தகைய இயற்கையுணர்வு மிகப் பெரியதோர் அளவிற்கு ஆலோசனைத் திறனாய் வளர்ந்துவிடுகின்றது. செயலாற்றும் துறையும் தக்கவாறு பெருக்கமடைகின்றது. ஆயினும், புத்தியின் நியாயத்தை ஆய்ந்தறியும் திறன் மிகவும் குறைபாடுள்ளதே. அது சிறிது முன்னேறியவுடன் நின்றுவிடுகின்றது. அதற்கு அப்பாற் செல்ல அதற்கு ஆற்றல் இல்லை. அதனை வலிய முன்னுக்குத் தள்ளிவிடின் தவிர்க்க முடியாத குழப்பமே விளைகின்றது. தருக்க அறிவு ஒரு தீய வட்டத்தில் வாதிப்பது போன்றதாகி விடுகிறது. எடுத்துக்காட்டாக, ஞானத்தின் அடிப்படைகளான சடமும் சத்தியும் என்பனவையே எடுத்துக் கொண்டால், சடப்பொருள் என்பது யாது? அது சத்தியினால் இயங்குவது. சத்தியோவெனின், சடத்தை இயக்குவதொன்று. இதில் தருக்கஞானிகள் ஏற்றப் பலகையெனக் கூறும் சிக்கல் ஒன்றையே நீங்கள் காண்பீர்கள். இச்சிக்கலில் ஒரு பொருள் மற்றொன்றினைப் பொறுத்ததாகும்; அம்மட்டோ, முற்கூறியதொன்றினையே சார்ந்ததாகும். நியாய நெறிக்கு எதிராக வலியதொரு தடையை நாம் காண்போம். நமது யுத்திக்கு அதனைத் தாண்டி அப்பாற் செல்லும் ஆற்றல் இல்லை. எனினும், அது பொறுமையின்றி அதற்கப்பாலுள்ள அகண்டத்தில் புகுந்துவிடவே விழைகின்றது. நம் புலன்களால் அறியப்பட்ட, உள்ளத்தினால் உணரப்பட்ட இப் பிரபஞ்சம் பேரண்டத்தின் ஓர் அணுவே, இது நமது உணர்வெனும் சமதளத்தின் மீது வீசப்பட்ட ஒரு காட்சி ஆகும். நம் மதி அச்சிறிய எல்லைக்குள், உணர்வென்னும் வலையினால் வகுக்

கப்பட்ட நிலத்தில் வினையாற்றுகின்றது. அதற்கப்பால் இது தொழில் ஆற்ற இயலாது. ஆகவே, அதற்கப்பாலும் செல்வதற்கான பிறிதொரு கருவி இருத்தல் வேண்டும். அக் கருவிக்கு தெய்விக உணர்வு என்பது பெயர். இப்படி இயற்கையுணர்வு, யுத்தி பலம், தெய்விக உணர்வு இம் மூன்றுமே அறிவின் மூன்று கருவிகள் ஆகின்றன. இயற்கையுணர்வு விலங்குகட்கும், தருக்கவாதம் மனிதனுக் கும் தெய்வ ஊக்கம் தேவர்களையொத்த மாந்தர்கட்கும் ஆகிய உடைமைகள். ஆனால், எல்லா மக்களிலும் இம் மூன்றுமே அதிக அளவிலோ சற்றுக் குறைந்தோ உள்ள வளர்ச்சியுடன காணப்படுகின்றன. எப்படியும் அறிவின் மூன்று வகையான கருவிகளும் தங்கள் முதல் நிலையான கருவிலேனும் காணப்படுகின்றன. இவை வளர்ச்சிபெறு மாறு கருவிலேனும் மூலப் பொருள்கள் இருந்தே தீரவேண் டும். இன்னும் நாம் நினைவுகூர வேண்டுவது, ஒரு கருவி மற்றொன்றின் வளர்ச்சியேயாகுமாதலால், அது மற்றொன் றுடன் முரண்பாடுற்றது ஆகாது என்பதே. புத்தியே தெய்வ ஊக்கமெனப் பரிணமிக்கின்றது, ஆதலால் தெய்வ ஊக்கம் நியாயத்தோடு முரண்படுவதற்கு மாறாக அதை முற்றுறச் செய்கிறது. கிழவன் குழந்தையுடன் மாறுபட்ட வனாகான்; அவன் குழந்தையைப் பூரணமாக்குகிறான். புத்திவாதங்களால் அடைய முடியாதனவும் தெய்வ ஊக்கத் தால் வெளிக்கொணரப்படுகின்றன. ஆகவே நீங்கள் எப் போதும் நினைவில் வைக்க வேண்டுவது யாதெனில், கீழான நிலையுள்ள கருவியை மேலானதென்றெண்ணும் அபாயமான எண்ணத்திற்கு ஆளாகிவிடக் கூடாது. பலகாலும் இயற்கையறிவே தெய்வ ஊக்கமென உலகத்துக்கு முன் கொணர்ந்து காட்டப்படுகிறது. அப்போதுதான் எதிர் காலத்தை உரைக்கும் ஆற்றல் பற்றிய பொய்யான வாக்கு கள் எழுகின்றன. ஒரு முட்டாள் அல்லது அரைப்பைத்தியங் கொண்டவனும் தனது உள்ளத்தில் நிகழும் குழப்பத்தை தெய்வ ஊக்கமென்றே கொள்கிறான்; ஏனையோரும் அவ னைப் பின்பற்ற வேண்டுமென்று எண்ணுகிறான். உலகில்

திக்கொவ்வாத பொருளற்ற செய்தி

யரைக் கொண்டு மூளை குழம்பிய

மூடர்களால் பிதற்றப்படுகின்றது.

உண்மையான அறிவுரையின் உரைகல் அது யுத்தி நியாயத்துக்கு முரணுக இருத்தல் கூடாதென்பது. இந்த அனைத்து யோகங்களின் அடிப்படையும் அவ்வாறே அமைந்துள்ளது என்பதை நீவிர் காணலாகும். நாம் உள நூல் சாத்திர முறையில் அமைந்துள்ள, இறைவனோடு மன நூல் வகையில் கூடும் பெற்றித்தான அரச யோகத்தினை எடுத்துக்கொண்டால், அது மிகவும் விரிந்த பொருள். நான் இப்போது அதன் மையக் கருத்தினை மட்டும் குறிப்பிடு வேன். நாம் ஞானம் பெறும் வழி ஒன்றேதான். மிகவும் தாழ்ந்த மனிதனிடமிருந்து மிகவும் மேல் நிலையிலுள்ள யோகி வரையில் யாவரும் ஒரே முறையைத்தான் ஆள வேண்டும். அம்முறையே மனத்தை ஒருமுகப்படுத்துவ தென்பது. தனது ஆராய்ச்சிக்கூடத்தில் பாடுபட்டு வரும் இரசாயன விஞ்ஞானி, தனது மனதிலுள்ள சத்திகள் யாவற் றினையும் ஒரே இடத்தில் குவித்து அவற்றை மூலப்பொருள் களின் மீது ஏவுகிருன். அப்பொருள்கள் பாகுபாடு அடை கின்றன. அவனுக்கு இதன்மூலம் அறிவு தோன்றுகின்றது. வான நூல் வல்லாரும் தமது மனஆற்றல்களை ஒரு சிறு புள்ளியில் குவியச் செய்துள்ளனர். அவற்றை அவர் தொலையாடி வாயிலாகப் பார்த்து, பார்க்கப்படும் பொருள் களின்மீது சொரிகின்ருர். அப்போது விண்மீன்களும் ஏனைய உலகங்களும் முன்னுக்கு உருண்டோடித் தம் மருமங்களை அவருக்கு வெளிப்படுத்திவிடுகின்றன. இத் தகையதேதான் ஒவ்வொரு விஷயமும். நாற்காலியில் அமர்ந் துள்ள பேராசிரியரிடமும், நூல் பயிலும் மாணவனிடத்தும், அறிவுபெற உழைத்துவரும் ஒரு மானிடனிடத்தும், இதே தான் நிகழ்கிறது. நீங்கள் நான் பேசுவதைச் செவிமடுக் கிறீர்கள். என் பேச்சில் நீங்கள் அக்கரைகொண்டிருப்பின் உங்கள் மனம் அதில் பதிந்திருக்கும். அப்போது மணி யடிக்கும் ஒரு கடிகாரத்தின் ஓசையும் உங்கள் குவிந்த மனத் தினுல் உங்கள் செவியில் விழாதிருக்கலாம். உங்கள் மனத் தினை நீங்கள் எவ்வளவுக்கெவ்வளவு ஒருமுகப்படுத்தி வைத் திருக்கிறீர்களோ, அவ்வளவுக்கவ்வளவு நீங்கள் என்னை நன்கு புரிந்துகொள்ள இயல்கின்றது. எவ்வளவுக்கெவ்

வளவு நான் எனது அன்பையும் சத்திகளையும் ஒரே நிலையில் குவித்து வைக்கிறேனோ, அவ்வளவுக்கவ்வளவு நான் உங்களுக்குக் கூறிவருவது அழகுபட நன்கு விளங்கும். இந்தக் குவிந்த நிலை வளரவும் நீங்கள் அதிகமான அறிவைப் பெற்று வருவீர்கள். ஏனெனில், இது அறிவினைப் பெறுவதற்கான ஒரே வழி. பாதரட்சையில் கறுப்புப் பூசும் இந்த இழிந்த பையனும் மிகுதியாக ஒருமுகத் தன்மையுடன் இருந்தால், அவன் மிகுந்த அழகுடன் வண்ணம் பூசுவான். குவிந்த மனமுள்ள சமையற்காரனும் சமையலை நல்லதுறையில் சமைப்பான். பணம் தேடுவதிலோ, இறைவனைத் தொழுவதிலோ, அல்லது வேறு எந்த வேலையைச் செய்வதிலோ ஒருமைப்பாட்டு வன்மையின் அளவுக்குச் செயலும் திருத்தமாக அமைவதாகும். இந்த ஒரே குரல், ஒரு கதவு தட்டுதலே, இயற்கையின் பெருமடைகளைத் திறந்து ஒளி வெள்ளத்தைப் பாய்ச்சுவதாகும். இத்தகைய குவிந்த மனமே அறிவின் கருவூலத்தைத் திறக்கவல்ல ஒரே திறவுகோல். இராஜயோகத்தின் முறை, பெரும்பாலும் மற்றவற்றை ஒதுக்கிவிட்டு, இப்பொருள் பற்றியே பேசுகின்றது. நமது உடலின் இப்போதைய நிலையில் நமது கவனம் கலைகின்றது: மனமோ, தனது சத்திகளைப் பலதிறப்பட்ட கருத்துகளிற் செலுத்தி வீணாக்கிவிடுகின்றது. என் நினைவுகளை அமைதிப்படுத்தி அறிவின் ஏதோ ஓரிலக்கின் மீது உள்ளத்தை ஒருமுகப்படுத்த முயலும்போது விரும்பப்படாத பலலாயிரம் உணர்ச்சி வேகங்கள் மூளைக்குள் புகுகின்றன: ஆயிரக்கணக்கான எண்ணங்கள் என் நெஞ்சில் நுழைந்து அதனைக் கலக்கின்றன. அவற்றையெல்லாம் அடக்கியாள்வது என்பதே இராஜயோகம் ஆராயும் ஒரே முதன்மையான விஷயம்.

இப்போது கருமயோகத்தை, அதாவது வினையாற்றுவதால் கடவுளை அடையும் நெறியை எடுதது்க் கொள்வோம். சமூகத்தில் மக்களுட் பெரும்பாலார் ஏதாவது ஒரு தனிச் சிறப்புள்ள கருமதததைச் செய்யவே பிறந்திருப்பதாகத் தோன்றுகிறது. அவர் மனம் சிந்தனை உலகில் நிலைக்கும் ஆற்றலின்றி, புலன் வழிபற்றக் கூடிய ஒரு தூலமான தொழிலிலே செயலாற்றுகின்றது. இவ்வகை வாழ்வுக்கும்

ஒரு விஞ்ஞான நூல் வேண்டப்படுகின்றது. நம்முள் ஒவ்வொருத்தரும் ஏதாவது ஒரு தொழிலில் இறங்கியுள்ளோம். ஆனால், பெரும்பாலார் வேலையின் இரகசியத்தைப் புரிந்து கொள்ளாமையினால், தமது சத்திகளின் பெரும்பகுதியை வீண்விரயம் செய்துவருகிறோம்; கருமயோகம் இந்த இரகசியத்தை வெளிப்படுத்துகின்றது; எங்கே எவ்வாறு வினையாற்றுதல் வேண்டுமெனவும், நமக்கு முன்னேயுள்ள வேலையில் நமது வல்லமைகள் மிகப் பெரியதோரளவிற் பயன் பெறுமாறு ஆற்றும் வகையையும் போதிக்கிறது. இந்த இரகசிய அறிவுடன், வேலை செய்வதற்கு ஊறு விளைப்பது பற்றியும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும். அது துன்பம் தருவது என்றதே மறுப்பிற்கு இடம் ஆகின்றது. துன்பம், துயர் யாவும் பாசங்களால் நேர்வனவே. நான் வேலை செய்ய விரும்புகிறேன்; ஒருவனுக்கு நலன் ஆற்ற ஆசைப்படுகிறேன். அவன் பெரும்பாலும் நன்றி கொன்ற நிலையில் எனக்குப் பகையாகவே வேலைசெய்து, அதனால் எனக்குத் துன்பமே விளைப்பான். இத்தகைய விஷயங்கள் ஒருவனைத் தொழில் செய்வதினின்றும் விலக்கவே முயலும். துயர்தரும் என்ற அச்சமே மனிதனது சத்தியையும் பேரளவில் கெடுத்துவிடும். கருமயோகம் நமக்குப் போதனை செய்வது யாதெனின், "கடமையென்றே பற்றற்றுக் கருமத்தைச் செய்துவா; இதனால் யாருக்குப் பயன், எதற்காக என்பவற்றையெல்லாம் ஆராயவேண்டா" என்பது. கருமயோகி உழைக்கிறான்; ஏனெனில், அது அவனது இயல்பு: அவ்வாறு செய்வது தனக்கு நன்மை தரும் என்று அவன் உணர்கின்றான். இதைத் தவிர்த்து அவனுக்கு வேறொரு நோக்கமும் இல்லை. இவ்வுலகில் அவனது நிலை நன்கொடை கொடுப்பவன் நிலையைப் போல்வது. அவன் எதனையும் ஏற்பதற்கு அக்கறை கொள்வதில்லை. தான் தானம் கொடுப்பதாக அறிந்து அதற்குக் கைம்மாறாக எதனையும் எதிர்பாராததால் அவன் துயரின் பிடிப்பினின்றும் நழுவிவிடுகிறான். துன்பம் வருங்கால் அதன் பிடி, பற்றின் பயனாகவே நிகழ்கின்றது.

இனி, பத்தி யோகத்தைப்பற்றி கவனிப்போம். உணர்ச்சி வயப்பட்ட பத்தனுக்கு இது உரியதாகும்.

அவன் கடவுளுக்கு அன்புசெய்ய விழைந்து அதற்கெனத் தந்திர சாதனங்களனைத்தின் மீதும் நம்பிக்கை வைத்து, மலர்கள், தூபம், அழகிய கட்டடங்கள், திருவுருவங்கள் முதலிய யாவற்றினையும் பயன் படுத்துகிறான். அவ்வாறு ஆற்றுபவர் அனைவரும் பிழைபடுகிறவரா? ஓர் உண்மையை நான் குறிப்பிட வேண்டும். இந்நாட்டில் சிறப்பாக நீங்கள் நினைக்க வேண்டுவது : உலகத்தில் தோன்றிய மிகப் பெரிய ஆன்மத்துறையில் மேன்மை பெற்றவர் யாவரும் புராணச் செல்வம், சடங்குகள் இவற்றின் ஈடுபாடு மிக்குள்ள மதப்பிரிவினரிடையேதான் தோன்றினர். கடவுளை அருவமாகவும் கிரியைகளின்றியும் வழுத்திவர முயன்ற எல்லாப் பிரிவினரும் இரக்கமின்றி மதத்திலுள்ள அழகான மேன்மை படைத்தவற்றையெல்லாம் நசுக்கியே விட்டார்கள். அவர்களது மதம் ஒரு வெறியாட்டமே; வறண்டுபோன பொருளே. இந்த உண்மைக்கு உலக வரலாறே ஒரு நிலையான சான்றாகும். ஆகையால் சடங்குகளையும் புராணங்களையும் வெறுத்துக் கூறாதீர்கள். மக்களுக்கு அவை சொந்தமாக இருக்கட்டும் ; விருப்புற்றவர்கள் அவற்றைக் கொள்ளட்டும். தகாத இகழ்ச்சிச் சிரிப்பைக் காட்டி, “அவர்கள் மதியிலிகள் ; அவர்களுக்கு அவை இருக்கட்டும்,” என்று இயம்பாதீர்கள். அது நியாயமன்று. நான் எனது வாழ்நாளில் கண்டுள்ள மிகவும் பெரியவர்களுள் பாரமார்த்திக அறிவில் வியப்பு அடையக் கூடிய வளர்ச்சி பெற்றுள்ளவர்களும் இக்கிரியைகளின் கட்டுப்பாடுகள் வழியாகத் தான் வந்துள்ளார்கள். நான் அவர்களுடைய திருப்பாதங்களின் அருகே உட்காரக்கூடத் தகுதியற்றவனாக என்னை மதிக்கிறேன் ; அத்தகைய நான் அவர்களைப்பற்றிக் குறைகூறுதல் பொருந்துமா ? “இக் கருத்துகள் மனிதர் உள்ளங்களில் எவ்வாறு ஆட்சிபுரிகின்றன ! அவற்றில் எவற்றை யான் ஒப்புக்கொள்கிறது ? எவற்றை ஒதுக்குகிறது ?” என்று யான் எங்ஙனம் அறிந்து கொள்வது ? தக்க காரணமின்றியே நாம் உலகிலுள்ள யாவற்றையும் குறைகூறுகின்றோம். மக்கள் வேண்டுமளவு புராணங்களையும் அவற்றின் அழகிய ஞான ஊக்கங்களையும் வைத்துக்கொள்ளட்டும். ஏனெனில், உணர்ச்சி

வயப்பட்டவர்களுக்கு உண்மையின் தத்துவ முறையான, அருவமான வாக்கியங்களில் கருத்தில்லை என்பது உங்கள் நினைவில் இருக்கவேண்டும். அவர்களுககுக் கடவுள் தொட்டறியக் கூடியவர் ; ஒரே உண்மைப் பொருள். அவர்கள் அவரை உற்றுணர்ந்து, கேட்டும் பார்த்தும் அன்பு செய்கின்றார்கள். அக்கடவுளை அவர்கள் வைத்து வாழட்டும். ஓர் அழகிய உருவச்சிலையைப் பார்த்ததும் அதனை உடைத்து அது எதனால் ஆக்கப்பட்டது என்பதை அறிய விரும்பின மூடனைப் போல அவர்களுக்கு உங்களது யுக்திவாதி தோற்றம் அளிக்கிறான். கரந்துள்ள ஏதோ ஒரு பயனைக் கருதாது எவ்வாறு அன்பு செய்ய முடியும் என்பதனைப் பத்தியோகம் உபதேசம் செய்கின்றது. கடவுளையும் நற்பொருள்களையும் போற்றுதலே நன்மை ஆகும்! சொர்க்கம் பெறவோ, செல்வம், குழந்தைகள், வேறு எதுவுமே பெறுவதற்காகவோ அன்று அவரை வழுத்துவது என்பதையும் அது அறிவுறுத்துகின்றது. அன்பு செய்வதே தனக்கு மிக மேலான கைம்மாறு என்றும், கடவுளே அந்த அன்பென்றும் அது ஓதுகின்றது. கடவுளுக்கு எல்லா விதமான காணிக்கையும் செலுத்துமாறு அது அறிவுறுத்துகின்றது. அவரைப் படைப்புத் தலைவர், முற்றறிவினர், கரந்தெங்கும் பரந்துள்ளவர், முழு ஆற்றல் பெற்ற ஆட்சியாளர், ஆதித்தாய் தந்தையர் என்றெல்லாம் போற்றுமாறு அது வற்புறுத்துகின்றது. அவரை விளக்கிக் காட்டக் கூடிய மிக மேலான சொற்றொடர், அவரைக் குறித்து மனிதமனம் கற்பனை செய்யும் மிக மேலான கருத்து, அவர் 'அன்புத் தெய்வம்' என்பதே. எங்கெல்லாம் அன்பு நிலவுகின்றதோ, அந்த அன்பு அவரே. எங்கேனும் அன்பு இருக்குமானால் அது அவரே. கடவுள் அங்கே திகழ்கிறார்! கணவன் மனைவியை முத்தமிடும்போது, அவர் அந்த முத்தத்தில் உளர். தாய் தன் சேயை முத்தமிடுங்கால் அந்த முத்தத்தில் அவர் விளங்குகின்றார். நண்பர் கைகோத்துக் களிக்கும்போது கடவுள் அன்பின் தெய்வமாய் அங்கு இடம் பெறுகிறார். சான்றோர் ஒருவர் மனித இனத்துக்குப் பரிவுகொண்டு அதற்கு உதவிபுரிய எண்ணுங்கால் அவர் அங்கே தாராளமாகத் தமது வண்மையால், மனிதர்பாலுள்ள அன்பால் அள்ளிக்கொடுக்கின்றார்.

எங்கெல்லாம் இதயம் விரிந்து காண்கின்றதோ, அங்கெல்லாம் அவர் தம்மை வெளிக்காட்டிக்கொள்ளுகிறார். இதுவே பத்தியோகம் பகர்வதாகும்.

இறுதியாக, நாம் ஞானயோகத்தின் அருகில் வருகிறோம். ஞானயோகி சிந்தனையாளர், தத்துவத்தை அறிபவர்; காணும் காட்சிக்கு அப்பாற் செல்ல அவாக் கொள்பவர். அவரே இவ்வுலகிலுள்ள அற்பப் பொருள்களுடன் அமையாது வாழ்பவர். அவரது கருத்து, தினசரி வாழ்க்கையொழுங்குகளுக்கு, உண்ணல் பருகல் முதலியவற்றிற்கு, அப்பாற் செல்லுவது. ஆயிரக்கணக்கான நூல்களின் உபதேசங்களும் அவருக்குத் திருத்தியளிக்கமாட்டா. விஞ்ஞானம் அனைத்துமேகூட அவருக்கு மனநிறைவு அருள்வதாகா. அவை அதிக பட்சம் நிகழ்த்துவது அவர் முன் இவ்வற்பஉலகத்தைக் கொணர்ந்து நிறுத்துவதே. பின்பு எதுதான் அவருக்குத் திருப்தியளிக்கும்? அவருக்கு எண்ணிறந்த உலகத் தொகுதிகளும் திருத்தியளிக்கவல்லனவாகா. அவருக்கு அவை யாவும் இருப்பு என்ற பெருங்கடலிலுள்ள ஒரு நீர்த்துளியேயாகும். அவரது ஆன்மா அவற்றிற்கெல்லாம் அப்பாற்சென்று, 'இருப்பின்' இதயத்தானத்துக்குப் போக எண்ணம் கொள்கிறது. இது உண்மையினை உள்ளபடியே பார்த்து, அதனை அனுபவம் வாயிலாக உணர்ந்து, அதுவாகவே ஆகிவிட, பிரபஞ்சத்திலுள்ள ஏக உயிர்ப்பொருளுடன் ஒன்றிவிடும் நெறியையே குறிக்கும். இதுவே ஞானியின் நிலை. கடவுளைத் தந்தையென்றோ, தாயென்றோ, படைப்புக் கடவுள் என்றோ, உலகினைக் காத்தளிப்பவரென்றோ, அதன் வழிகாட்டி என்றோ கூறுவது, அவரைப் போதுமான அளவு எடுத்துக் கூறியதாகாது. அவருக்குக் கடவுளே தமது வாழ்வின் உயிர்; தமது ஆன்மாவின் அந்தரான்மா. கடவுள் தமது ஆன்மனே. அவரையன்றி எஞ்சும் பொருள் வேறு யாதொன்றும் இலது. அவருடைய நிலையற்ற பகுதிகள் யாவும் தத்துவத்தின் பலத்த அடிகளால் தாக்குண்டு பொடியாக்கப்பட்டு ஒதுக்கப்பட்டு வருகின்றன. இறுதியில் உண்மையாக நிலை நிற்கும் பொருள் கடவுள் ஒன்றே.

ஒரே மரத்தில் இரு பறவைகள் அமர்ந்துள்ளன: ஒன்று உச்சியிலும், மற்றொன்று தாழ்ந்த பகுதியிலும் இருக்கின்

றன. உயர இருப்பது அமைதியும் மோனமும் மாட்சிமையும் கொண்டு சொந்தப் பொலிவில் மூழ்கியுள்ளது; மற்றையதோ மாறி மாறி இன்கனிகளையும் கசந்த கனிகளையும் தின்ற வண்ணம் கிளைக்குக்கிளை தாவி, மாறி மாறி இன்புற்றும் துன்புற்றும் தோன்றுகிறது. சிறிதுபோழ்து சென்றபின், கீழே யுள்ள பட்சி மிகக் கசப்புள்ள கனியினை அருந்தி வெறுப்புற்று, மேல்நோக்கிப் பொன்வண்ணம்கொண்ட சிறகு வாய்ந்த அதிசயப் பறவையைக் காண்கின்றது. அதுவோ இருவகைக் கனிகளையும் உண்ணாது, இன்பதுன்பங்களிரண்டையும் ஒதுக்கி, அமைதியுடன் ஆன்மனில் உள்ளத்தைச் செலுத்தி வேறொன்றினையும் காணாது வீற்றிருக்கின்றது. கீழிருக்கும் பறவை இந்நிலையை விரும்பி, உடன் மறந்து கனிகளைத் தின்கிறது. மீண்டும் மிகக் கசக்கும் கனியைத் தின்று துயருற்று மீண்டும் மேலே நோக்கி அங்குள்ள பறவையை அணுகுகின்றது. மறுபடியும் மறந்து, இப்படி மாறி மாறி முடிவில் அழகிய பறவையை நெருங்கும்போது தனது உடலிலும் அத்தகைய ஒளி வீசுவதைக் கண்ணுறுகின்றது; ஒரு மாறுதலைத் தன்னிடமே கண்டு தன் உடலே கரைந்துபோவதாக உணர்கின்றது. மீண்டும் நெருங்கினுல் சுற்றுமுள்ளதெல்லாம் மறைந்து இறுதியாக வியப்பான மாறுதலின் பொருளைப் புரிந்துகொள்கிறது. கீழேயிருந்த பறவை மற்றதன் நிழலே போலும். தான் எப்போதுமே உண்மையில் மேலேயிருந்த அப்பறவையே. கீழே தோன்றிய இச்சிறு பறவை, மாறி மாறி மகிழ்ந்தும் அழுதும் வந்த இது, வெறுங்கனவே; ஆதாரமற்ற ஒரு பொய்த் தோற்றமே. உண்மையான பொருள் மேலுள்ளதே: மோனமும் அமைதியும் கொண்ட, மாட்சிமையுடன் இன்ப துன்பமற்ற நிலையில் இருப்பது அப்பறவையே. கடவுள், இப்பிரபஞ்சத்தின் நாதன்; கீழுள்ள பறவை உலக இன்பதுன்பங்களாகிய கனிகளைத் தின்று வந்த சீவான்மா. அதற்குச் சிலபோது ஒரு பலமான அதிர்ச்சி நேருகின்றது. சில நேரம் அப் பறவை கனியருந்துவதை விட்டு, அறிதற்கரிய பரமனை நோக்கிச் செல்ல, ஒரு பரந்த ஒளிப் பிழம்பு தோன்றுகிறது. உலகம் ஒரு மாயத் தோற்றமே என்பதை அது எண்ணுகின்றது. ஆனுல், மறுமுறையும் புலன்கள் அதனைக் கீழே இழுக்

கின்றன; பின்னும் அது முன்போன்றே உலக இன்ப துன் பங்களைத் துய்க்க முற்படுகின்றது. மீண்டும் மிகப் பலத்த ஓர் அதிர்ச்சி உண்டாகின்றது. அதன் உள்ளம் மறுபடியும் தெய்வ ஒளிக்குத் தன்னைத் திறந்துகொள்கின்றது. இப்படிப் படிப்படியாக, அது கடவுளை நெருங்குகின்றது; அவரை அண்மியதும் தனது பழைய உடல் கரையக் காண்கின்றது. போதுமான அளவு அணுகியதும் தான் கடவுளேயன்றி வேறன்று என்பதைக் கண்டு கூவுகின்றது: "இப்பிரபஞ்ச வாழ்வென்று நான் விரித்துக்கூறிய அவன், அணுவிலும் ஞாயிறுகளிலும் திங்கள்களிலும் வாழும் அவனே நமது வாழ்க்கைக்கு அடிப்படை; அவனே நமது ஆன்மனுள்ளும் ஆன்மா. நீ அந்த அவனே ஆகிறாய்." இதுவே ஞானயோகம் என வழங்கி வருவது. அது மனிதன் உட்கருத்தில் தெய்வீகம் படைத்தவனே என்பதனைக் குறிக்கிறது. அது மனித இனத் துக்கே வாழ்வின் உண்மையான ஒற்றுமையையும் நம்மில் ஒவ்வொருவருமே மண்ணில் தோன்றிய மாபெருங் கடவுளே என்பதையும் எடுத்துக் காட்டுகிறது. நாம் யாவரும், நம் காலடியில் ஊர்ந்துசெல்லும் மிகக் கீழ்த்தரமான புழுவி லிருந்து, நாம் வியப்புடனும் பயபத்தியுடனும் போற்றிவரும் மிக மேலான தெய்வங்கள் வரை—யாவருமே அதே பரமனின் வெளித்தோற்றங்களே!

இறுதியாக, இப்பலதிறப்பட்ட யோகங்கள் யாவும் அனு பவத்துக்குக் கொண்டுவரப்படுவது இன்றியமையாதது. இவைபற்றிய வெறுங்கொள்கைகளால் யாதொரு பயனு மில்லை. முதலில் நாம் இவற்றைப்பற்றிக் கேட்டறிதல்வேண் டும்; பின்னர் இவற்றைக் குறித்துச் சிந்தித்தல் வேண்டும்; தியானத்திலமர்ந்து சிந்தனை புரிதல் வேண்டும். காரண காரியத்தோடு எண்ணி எண்ணி அவ்விஷயங் களை நம் மனங்களில் பதியச் செய்யவேண்டும்; இறுதியில் அவையே நமது முழு வாழ்க்கையாகுமாறு அனுபவரீதியில் கொணரவேண்டும். இனிச் சமயமென்பது வெறுங் கருத்து களின் கூட்டமாகவோ, கொள்கைகளின் தொகுதியாகவோ இராது, புத்திக்குமட்டும் எட்டி அதன் சம்மதத்தை மட்டும் பெற்றிராது, நமது உயிரிலேயே புகுந்துவிடும். நாம் மதி நுட்பத்தின் சம்மதம் வாயிலாக இன்று ஒப்புக்கொள்ளும்

பல மூடச் செய்திகளுக்கும் மறுநாளே முற்றும் மனவேறு பாடு அடைந்துவிடுகிறோம். உண்மையான சமயமோ, ஒரு போதும் மாறுவதில்லை. மதம் அனுபவம் வாயிலாக ஏற்படும் நேர்க்காட்சியாகும்; வெறும் பேச்சோ, கோட்பாடோ, மிகமிக அழகிதான கொள்கையோ அன்று. அது இருந்து வாழ்ந்து வருவது ; கேட்டு ஒப்புக்கொள்வது மட்டுமன்று. அது தான் நம்பிக்கை வைக்கும் பொருளாகத் தன் முழு ஆவியை யும் மாற்றிக்கொள்வதாகும்: இதுதான் சமயமெனப்படுவது.

பத்தியோகச் சொற்பொழிவுகள்

ஆயத்தப் பயிற்சி

" உலகில் பகுத்தறிவற்ற சாதாரண மக்கள் ஐம்புலன்களின் தேவைகளை நிறைவேற்றக் கூடிய நிலையிலாப் பொருள்களின் மேல் வைத்துள்ள அழியா ஆர்வம், ஆண்டவரே, உம்மிடம் திகழ எனக்கு அருளவேண்டும். உம்மைப் பற்றி நினைக்கும்பொழுது அரும்பும் அத்தகைய அன்பு என் இதயத்தை விட்டு அகலா வண்ணம் இலங்க வேண்டும்," என்று பிரகலாதன் ஆண்டவரை இறைஞ்சுவதையே பத்தி யோகத்தின் சிறந்த இலக்கணம் என இயம்பலாம். மேலான சிறந்த ஒன்றை அறியாத மக்கள் இந்திரிய இன்பத்தைத் தருகின்ற பணம், உடை, மனைவி, மக்கள், நண்பர்கள் போன்ற மற்றைய இம்மைப் பொருள்களின்மீது அன்பைப் பொழிகின்றனர்கள்; இவற்றில் எவ்வளவு உறுதியான பற்று வைத்திருக்கிறார்கள்! இந்தக் கூற்றையே அமைத்து முனிவர், ' அத்தகைய அன்பை, காதலை, உம்மிடமே நான் செலுத்துவேன்,' என்று உரைக்கின்றார். இத்தகைய பற்று ஆண்டவரின் மேல் வைப்பதுதான் 'பத்தி' எனப்படும். பத்தி அழிவற்றது. நமக்கு அளிக்கப்பட்டுள்ள திறமைகள் வீணாக அளிக்கப் பட்டவையல்ல. அவை நம்மை வாழ்விலிருந்து விடுவிக்கவே நமக்கு அளிக்கப்பட்டவை என்பதைப் பத்தி நமக்கு எடுத்துக் காட்டுகிறது. பத்தி இயல்புகளை மாய்த்து விடுவதில்லை. அது இயற்கைக்கு மாறுபட்டதன்று. அது மேன்மேலும் உயர்ந்து செல்லக்கூடிய ஒரு பாதையைக் காட்டுகின்றது. ஐம்புல இன்பத்திற்காகக் கண்ணுக்குத் தெரியும் பொருள்களை நாம் நேசிக்கிறோம். அவை நமக்கு மிகவும் உண்மையான பொருள்களாக விளங்குவதால் அப்படி அவற்றை நாம் விழைகிறோம். வான் பொருள்களை—சிறந்த நெறிகளைப்—பற்றிய உண்மைகளைப் பொதுவாக நாம் காண்பதில்லை. ஆனால், ஒருவன் தன் ஐம்புலன்களுக்கு அப்பால் நோக்குவானாகில், அவன் பார்வை இந்திரியப் பிரபஞ்சத்தைக் கடந்து விரையுமாகில், சாதாரணப் பொருள்களின்மேல் வைத்துள்ள அந்த அள

வற்ற அன்பை அவன் ஆண்டவரிடம் மாற்றிக்கொள்வான். இத்தகைய நிலைக்குப் பத்தி என்பது பெயர். இத்தகைய ஆழ்ந்த அன்பை அமைத்துக்கொள்ளக் கீழ்க்கூறும் ஆயத்தங்கள் இன்றியமையாதவை என இராமானுசர் மொழிகின்றார் :

முதலில், 'பகுத்தறிவு' (விவேகம்) தேவை. இது மேல் நாட்டாருக்கு மிகவும் வியத்தகு பொருளாய் உள்ளது! 'விவேகம்' என்பது உணவின் ஆய்வே என்று இராமானுசர் உரைக்கின்றார். நமது உடலும் உள்ளமும் நல்ல முறையில் செயலாற்றத் தேவையான சாரமுள்ள அமிசங்கள் கொண்டதே உணவாகும். இப்போது நான் அருந்தும் உணவே, நான் இவ்வாறு விளங்குவதற்குக் காரணமாய் உள்ளது. அது இடம் பெயர்க்கப்பட்டும், சேமிக்கப்பட்டும் என்னுடைய உடலில் புதிய நெறியில் புகுத்தப்பட்டும் இயங்குகின்றது. ஆனால், உடலும் உள்ளமும், நான் உட்கொள்ளும் உணவிலிருந்து மாறுபடவில்லை. தூல உலகில் சத்தியும் சடமும் இருப்பதுபோல, நம்முள் இவ்விரண்டும் உடலும் உள்ளமுமாய்த் திகழ்கின்றன. உணவு அதை வெளிப்படையாகக் காட்டுகின்றது. எனவே, நாம் உட்கொள்ளும் உணவிலிருந்து நினைவிற்கு அவசியமான கருவியையும், உணவின் அணுக்களில் உள்ள நுட்பமான சத்திகளினால் நினைவையும் பெறுகிறோம். எனவே, நாம் உட்கொள்ளும் உணவின் விளைவை இக்கருவி நன்கு உணரும். சில உணவுப் பொருள்களை அருந்துவதால் நம் மனத்தில் சில மாறுபாடுகள் நிகழ்கின்றன என்பதை ஒவ்வொரு நாளும் நாம் உணர்கிறோம். சில உணவு வகைகள் நமது உடலிலும் சில மாறுதலை ஏற்படுத்தி, பிற்காலத்தில் நம் மனத்தையும் மிகவும் நலிவுறச் செய்கின்றன. நாம் அனுபவிக்கும் பல துன்பங்கள் நாம் உட்கொள்ளும் உணவினால் எழுகின்றன என்பதை அறிதலே ஓர் அருஞ்செயலாகும். எளிதில் சீரணிக்காத நிறைந்த உண்டிக்குப் பிறகு நம் மனத்தைக் கட்டுப்படுத்துவது கடினம். மனம் பலவாறு ஓடிக்கொண்டே யிருக்கும். உணர்ச்சிகளைத் தூண்டும் சில உணவு வகைகள் உள்ளன. அவற்றை உண்பதால் நம் மனத்தை நாம் அடக்குவது கடினம். மதுபானங்களை

அருந்திய ஒருவன், சுயவுணர்வு அற்று, தன்மனம் ஒரு வரம்பிற்கு உட்படாது நிற்பதை நோக்குகின்றோம்.

இராமானுசரின் கொள்கைப்படி மூன்று பொருள்களை உணவிலிருந்து அகற்ற வேண்டும். முதலாவதாக, உணவின் இயல்பையோ, வகையையோ நாம் கருத வேண்டும். உணர்ச்சியைத் தூண்டக்கூடிய உணவு வகைகளை விலக்குவது நலமாம். சான்றாக, ஊனை நீக்க வேண்டும். அது தூய்மையுடைய உயிரைச் சிதைப்பதன் மூலந்தான் நமக்குக் கிடைக்கின்றது. நமக்கு ஒரு நொடிக்கு இன்பம் அளிக்க ஒரு விலங்கு தனது உயிரையே அர்ப்பணம் செய்ய வேண்டி உள்ளது. இதோடு நிற்பதில்லை. மற்றவர்களையும் இதனால் நாம் கெடுக்கிறோம். ஊனை உட்கொள்ளும் ஒவ்வொருவனும் தானே அவ்விலங்கைக் கொல்வது நலம். ஆனால், கொல்வதற்காகவே சமூகம் ஒரு கூட்டத்தை அமைத்துள்ளது. எனினும், அந்தச் செயலைப் புரிவோர்களைச் சமூகம் வெறுக்கின்றது. இவ்விடத்திலுள்ள முறையை யான் அறியேன். ஆனால், இங்கிலாந்தில் இவ்வாறு விலங்குகளைக் கொல்கிறவர்கள் இரக்கமற்ற நெஞ்சினராதலால், அவர்கள் நீதி மன்றத்தில் பணியாற்றத் தகுதியற்றவர்களே. அவர்களை யார் இவ்வளவு கொடியவர்களாக்குகிறார்கள்? நாம் ஊன் அருந்த வில்லையென்றால், அவர்கள் கசாப்புக்காரர்களாக இயலாதவர்களே. மிகக் கடுந்தொழில் ஆற்றுபவர்களும், பத்தர்களல்லாதவர்களும் ஊனை அருந்தலாம். ஊனைப் போலவே பூண்டு, வெங்காயம், நாற்றமடிக்கின்ற உணவு வகைகள் ஆகியவைகளைத் தவிர்க்க வேண்டும். நாட்பட்ட பழைய உணவு, அழுகின உணவுப்பொருள், சாரம் வற்றிய உணவு முதலியவை நீக்கவேண்டுபவைகளே.

அடுத்தது மேல் நாட்டார் சுலபமாகப் புரிந்து கொள்ள முடியாததாய் உள்ளது. அதுதான் 'ஆசிரய தோஷம்' (வருமிடம் பற்றிய மாசு) என்பது. இது இந்துக்களின் அறிய வொண்ணாத ஒரு தத்துவமாகும். இதன் கருத்து யாதெனில், ஒவ்வொருவரையும் சுற்றி ஒருவிதமான சத்தி அல்லது ஒளி உள்ளது. ஒருவர் தொடும் ஒவ்வொரு பொருளுக்கும் இச்சத்தி வாயிலாக அவருடைய குணங்கள் ஏற்படுகின்றன. எனவே, நமது உணவு யார் கையி

லிருந்து நமக்குக் கிடைக்கின்றது என்பதே கருதற்குரிய பொருளாகும். ஒழுக்கமற்றவர்களும், கீழ் மக்களும் நாம் அருந்தும் உணவைத் தீண்டுதல் தக்கதன்று. பத்தராகத் திகழ விருப்பமுள்ளவர்கள், தீயவர்களை அறிந்த அக்கணமே அவர்கள் தரும் உணவைப் புறக்கணிக்க வேண்டும். ஏன் எனில், அவர்தம் தீய குணங்கள் உணவு வழியாகப் பரவக் கூடுமல்லவா ?

அடுத்தது 'நிமித்தம்' என்பதாகும். இது எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய பொருளே. நாம் உட்கொள்ளும் உணவு தூசி, அசுத்தம் இவை இல்லாதவையாக இருக்க வேண்டும். கடையில் வாங்கி வந்தபடியே கழுவாது மாசு படிந்த உணவை நாம் மேசையின் மேல் உண்பதற்காக வைக்கக்கூடாது. உமிழ்நீரைத் தொட்டுவிட்டு மற்றப் பொருள்களைத் தொடும் பழக்கத்தை விட வேண்டும். நம்முடைய உடம்பில் சளியைச் சுரக்கச் செய்யும் மென்தோல் நுண்ணியது. எனவே, அது வழியாகச் சுரந்துவரும் நீரில் எல்லாவிதமான தீமைகளும் பரவும். எனவே, அதனைத் தொடுதல் அருவருப்பு மட்டுமன்று ; தீங்கையும் இழைக்கக்கூடிய இயல்புள்ளது. எனவே, ஒருவன் உண்டு வைத்துள்ள எஞ்சிய உணவை நாம் அருந்தக்கூடாது. உணவிலிருந்து இவற்றை நீக்கிவிட்டால், உணவு தூய்மையாய்த் திகழும். தூய்மையான உணவு மாசற்ற மனத்திற்குக் காரணமாக அமையும். இது வாயிலாக ஆண்டவரின் இடையறாத நினைவே மனத்தில் நிலை பெறும்.

இதையே சங்கரர் பின்வருமாறு விளக்குகிறார் : 'ஆகாரம்' என்ற சொல் 'திரட்டுதல்' என்ற பொருளை உடையது. எனவே, நாம் சேர்ப்பவை என்ற பொருளைக் கொண்டுள்ளது. உணவு சுத்தமாயிருந்தால், மனமும் மல மற்று மிளிரும். எனவே, ஐம்புல இன்பத்தை அகற்ற நாம் சில பொருள்களை நீக்கவேண்டும். ஒன்று, ஆண்டவரைத் தவிர ஒரு பொருளின் மீதும் நமக்குப் பற்று இருக்கக் கூடாது. எல்லாவற்றையும் பார் ; தொட்டுப் பார் ; செய்து பார் ; ஆனால், ஒன்றின் மேலும் பற்று வையாதே.

இத்தகைய ஆழ்ந்த பற்று ஏற்பட்டவுடன் மனிதன் அடிமையாகிவிடுகிருன். ஒரு மனிதன் ஒரு பெண்ணின் மேல் ஆழ்ந்த பற்றை வைத்தால், அவன் அப் பெண்ணிற்கு அடிமையாகி விடுகிருன்; அவ்வண்ணமே ஆணும் அடிமையாக அமைவதால் யாதொரு பயனுமில்லே. ஒரு மானிடனுக்கு அடிமை ஆவதைக் காட்டிலும் உயர்ந்த நிலேகள் இந்த ஞாலத்தில் உண்டு. நீ எல்லோரையும் நேசி; எல்லோருக்கும் நனமை செய்; ஆனுல், அடிமையாகிவிடாதே. அடிமையானுல், நம்மை அது இழிவு படுத்துவதோடு நிற்காமல் நமககு மிகுந்த தன்னலத்தையும் விளேக்கின்றது. ஆதலால் நாம் நட்புக் கொள்ளுபவர்களுக்கு நன்மையை உண்டாக்க மற்றவர்களுக்குத் துன்பத்தை அளிக்கின்ருேம். பழமையான இவ்வுலகில் நடக்கும் தீச்செயல்களனேத்தும் இது காரணமாக ஏற்படுவன. அச்காரணம் பற்றியே எல்லாரையும் நேசிக்க வேண்டும். அழுக்காறு, எல்லாத் தீமைக்கும் காரணமாய் உள்ளது. பொருமையே இருக்கக் கூடாது. இந்தத் தீய இயல்பினே வெல்வது அரிதே. அடுத்தது நிலேயாமை. நாம் ஒவ்வொன்றையும் நிலேயானது என்று கருதுகிருேம். இதனுல் துன்பத்தை நுகர்கிருேம். நன்மைக்கு மாருகத் திமையையும் ஏற்கிருேம். இதனுல் நாமே அடிக்கடி வருந்த நேர்கிறது. ஒரு நரம்பின் கணப்பொழுது இன்பவுணர்ச்சியைப் பெரிதும் நலமெனப் போற்றி அதில் ஆழ்கின்ருேம்; பிறகு அது நம்மை மிகவும் நலிவுறச் செய்கிறது என்று அதைத் தவிர்க்க முடியாத நிலேயில் உணர்கிருேம். வாழ்க்கையில் ஒவ்வொரு நாளும் இந்தத் தவற்றைத் தொடர்ந்து செய்துகொண்டு செல்கிருேம். அழுக்காறு அற்ற, பற்றற்ற, நிலேயான பணிகளே தூய்மையான உணவு எனச் சங்கரர் சாற்றுகிருர். உணவு சுத்தமாக உள்ளபோது, பொருள்களேப் பற்றிப் பற்றற்ற நிலேயுடன் நாம் எண்ணுகிருேம். ஆதலால், மனம் மாசற்றுத் திகழ, எஞ்ஞான்றும் ஆண்டவனின் நினைவாகவே இருக்க வேண்டும்.

இதுவே சங்கரரின் தக்க இலக்கணமாகத் தோன்றினும், இராமானுசரின் விளக்கத்தை நாம் புறக்கணிக்கக் கூடாது. இதைப் பற்றிக் கவனித்தாலே, நமக்கு ஓய்வு

கிடைக்கும். மனமே நமக்குத் தலைமையாய்த் திகழ்ந்த போதிலும், பலர் ஐம்புலன்களுக்குத்தான் கட்டுப்பட்டுள்ளனர். நாம் பொருள்களினால் படைக்கப்பட்டுள்ளோம். அவற்றின் உதவி நமக்குத் தேவை. அதைப் பெற்று நாம் நல்ல ஆற்றல் பெறவேண்டும். அதற்குப் பிறகு எதை வேண்டுமானாலும் அருந்தலாம். எனவே, உண்பதிலும் நீர் அருந்துவதிலும் இராமானுசர் கொள்கைகளைப் பின்பற்ற வேண்டும். அந்நேரத்திலேயே நமது உள்ளத்து உணவையும் கவனிக்க வேண்டும். மனம் பண்பட்டுக் கொண்டே போகவேண்டும். அதனாலேதான் நமது உடல் சிறிது சிறிதாகப் பயிற்சியுறும். ஒவ்வொருவரும், ' நாம் உயர்ந்த இலட்சியத்திற்குத் தாவவேண்டும், ' என விரும்புகின்றனர். அப்படித் தாவினால் காலே உடைந்துவிடும். நாம் இதிலேதான் கட்டுப்பட்டிருக்கிறோம். எனவே, இச் சங்கிலிகளை மெதுவாக உடைக்க வேண்டும். இதற்குத் தான் ' விவேகம் ' என்பது பெயர்.

அடுத்தது, விமோகம். அதாவது, ஆசைத் தளைகளிலிருந்து விடுதலை பெறுதல். ஆண்டவரை நேசிக்க விரும்புகிறவன் பேராசைகளிலிருந்து விடுதலைபெற வேண்டும். நீ ஆண்டவரைத் தவிர வேறொன்றையும் விழையாதே. இவ்வையகம் ஒருவரை எவ்வளவு தூரத்தில் உயர்ந்த உலகத்திற்கு எடுத்துச் செல்ல உதவுகிறதோ அவ்வளவு தூரம் வரை இது நல்ல ஞாலமே.

சிறந்த பொருள்களைப் பெறக் கண்ணுக்குப் புலனாகும் பொருள்கள் எவ்வளவு உதவுகின்றனவோ, அவ்வளவுக்கு அவை உயர்ந்தவையே. இவ்வுலகமே முடிவன்று; முடிவிற்கு ஒரு நெறியே என்பதை நாம் மறந்துவிடுகின்றோம். இதே முடிவாயிருந்தால், நமது உடல் இங்கே நிலையாயிருக்க வேண்டுமே! நாம் இறக்கக் கூடாது; ஆனால், சுற்றிலும் ஒவ்வொரு நொடிப் பொழுதிலும் மக்கள் மரிப்பதைப் பார்க்கிறோம். அப்படியிருந்தும், அறிவின்மையால் நாம் எப்போதும் இறக்கப் போவதில்லை என்று நினைக்கிறோம். அந்த நம்பிக்கையில் வேரூன்றி நம் வாழ்வே அடைய வேண்டிய இலட்சியம் என எண்ணுகிறோம். நம்முள் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது சதவிகிதம் பேர்கள் இவ்வண்ணமே

தான் எண்ணுகிறோம். இக்கருத்தை உடனே விட்டுவிட வேண்டும். இவ்வுலகம் நம்மைப் பரிபூரணமாக்க ஒரு வழியாய் அமைவது நலந்தான். ஆனால், அவ்வாறு இது அமையவில்லை என்றால், இது தீமையே; தீமையைத் தவிர வேறொன்றுமில்லை. முன்னேற்றத்திற்கு மனைவி, மக்கள், கணவன், பணம், டாலர்கள், படிப்பு ஆகியவை உதவும் வரை நலமே; ஆனால், அவை அப்படிச் செய்யாது நின்று விட்டால், தீமையைத் தவிர வேறொன்றுமில்லை. ஆண்டவரை அடைய மனைவி உதவினால், அவள் நல்ல மனைவி தான். அத்தகையவரே குழந்தையும் கணவனும். மற்றவர்களுக்கு நன்மை புரியச் செல்வம் உதவினால், அது சிறிது மதிப்புடையது; அப்படி இல்லையென்றால், அது பெருந் தீமையாகும். எவ்வளவு விரைவாக அதை அப்புறப்படுத்து கிறோமோ, அவ்வளவும் நலமே.

அடுத்தது, அப்பியாசம்: அதாவது பயிற்சியாகும். மனம் ஆண்டவரையே நாட வேண்டும். மற்ற எப்பொருளுக்கும் மனத்தில் இடமில்லை. ஆண்டவரையே இடையறாது சிந்திக்க வேண்டும். அது அரிதான வேலையாய் இருந்தாலும், தொடர்ந்து அதையே பயிற்சி செய்ய வேண்டும். நம் முன்காலப் பயிற்சி நாம் இப்போது இருக்கும் நிலைக்குக் காரணம். இப்போதைய பயிற்சி நாம் எதிர்காலத்தில் இருப்பதற்கு வேராய் உள்ளது. எனவே, நல்ல முறையில் பயிற்சி செய். தீய ஒழுக்கத்தில் சிக்கினாலும் விரைவில் நல்லொழுக்கம் ஏற்படப் பயிற்சி செய். ஐம்புலன்களின் சிந்தையே நம்மை இந்நிலைக்கு இழியும்படி செய்துவிட்டது. ஒருகணம் புலம்புகின்றோம். மறுகணம் மகிழ்ச்சியுறுகின்றோம். காற்றின் ஒவ்வோர் அசைவுக்கும் நாம் அடிமையாகி விடுகிறோம். ஒவ்வொன்றும் நம்மீது ஆணை செலுத்தத் தொடங்கிவிடுகின்றது. நாம் உலகின் அடிமைகள். இதற்கு நாமே காரணம். புலன்வழி அல்லாது ஆண்டவரையே இடையறாது நினை. உடலின்பம், மனமகிழ்ச்சி இவற்றில் ஆழ்ந்துவிடாமல் எப்பொழுதும் ஆண்டவரை நினை. வேறு ஏதாவதைப் பற்றிக் கருத்துச் செல்லுகையில் அதை அடித்து ஆண்டவரிடம் நிறுத்து. ஆண்டவரை நினை. எண்ணெயை ஒரு கலயத்தினின்று ஊற்றுகையில்

அது தொடர்ச்சியாக விழுவதுபோல, தூரத்திலிருந்து வரும் மனிதனது ஒலி தொடர்ந்து கேட்கப்படுவதுபோல ஆண்டவரிடமும் மனம் ஒரே தொடர்பாக அமைய வேண்டும். மனத்தை இதற்குப் பண்படுத்துவது மட்டும் போதாது. ஐம்புலன்களுக்கும் இத்தகைய பயிற்சியை அளிக்க வேண்டும். பயனற்றவைகளைக் கேட்பதைத் தவிர்த்து, எப்போதும் ஆண்டவரைப் பற்றிய விஷயங்களையே செவிகள் கேட்க வேண்டும். வேண்டாப் பேச்சை அகற்றி ஆண்டவரைப் பற்றியே உரையாடுவது சாலவும் நன்று. பல நூல்களைப் படிப்பதைவிட ஆண்டவரைப் பற்றிய புத்தகங்களிலேயே தோய்தல் சிறப்பாகும். எப்பொழுதுமே ஆண்டவரைச் சிந்தையில் வைத்துக்கொள்வதற்கு இசையினாலேதான் இயலும். இறைவர் நாரதரிடம், “நான் விண்ணவர் நாட்டில் உறைவதில்லை; யோகிகளுடைய இதயத்திலும் நான் வீற்றிருக்கவில்லை: மெய்யடியார்கள் எங்கு என் திருநாமம் இசைக்கின்றார்களோ அங்கே நான் திகழ்கின்றேன்,” என்றார். ஆதலால் மனத்தை ஓர் இமைப் பொழுதில் ஈர்க்கக்கூடிய இசைக்கு வியத்தகு சத்தி உண்டு. மனத்தை ஒரு நொடிப்போதுகூடக் குவிய வைக்க இயலாதவர்களும் இசையால் கவரப்படுகின்றார்கள். சிங்கம், நாய், பூனை, பாம்பு போன்றவைகளும் இசையாம் மாயவலையில் சிக்கிவிடுகின்றன.

அடுத்தது ‘கிரியா’ அல்லது வேலையாகும். அதாவது மற்றவர்களுக்கு நன்மை செய்வது. தன்னலம் உள்ளவனுக்கு ஆண்டவரின் நினைவே தோன்றாது; மற்றவர்களுக்கு நாம் மிகுதியாக நன்மை செய்வதால், நமது உள்ளம் தூய்மையாகி, உள்ளத்தில் கடவுள் கோயில் கொள்கிறார். வேதங்களில் ஐந்து பணிகள் ஐந்து வழிபாடுகளாகக் கூறப்படுகின்றன. முதலது படிப்பு. ஒரு மனிதன் ஒவ்வொரு நாளும் நல்ல அறிவு மிகும் பகுதிகளைப் படிக்க வேண்டும். இரண்டாவது, கடவுளையோ, தேவதைகளையோ, சன்னியாசிகளையோ வழிபடுவது. மூன்றாவது, நம் முன்னோர்களுக்கு நாம் செய்ய வேண்டிய கடமை. நான்காவது, மானிடருக்கு நாம் செய்ய வேண்டிய கடமை. தேவைப்படுபவர்களுக்கும், ஏழைகளுக்கும் வீடு இருந்தாலொழிய, ஒருவனுக்கு ஒரு

வீட்டில் உறைய உரிமையில்லை. இல்வாழ்வான் வீடு ஏழைகளுக்கும், துன்பப்படுபவர்களுக்கும் என்றென்றும் திறந்திருந்தால்தான், அவன் உண்மையான இல்லறம் நடத்துபவனாய்த் திகழ்வான். ஒருவன் தன் மனைவிக்கும், தனக்கும் ஒரு வீட்டைக்கட்டி மகிழ்வானாகில், அவன் ஆண்டவரை நேசிப்பவனல்லன்; இது தன்னலச் செயலே ஆகும். எம்மனிதனுக்கும், தனக்கெனவே உணவு தயாரிக்க உரிமையில்லை. மற்றவருக்கும் கொடுத்து எஞ்சியதையே அவன் உண்ண வேண்டும். இந்தியாவில் பருவகாலங்களில் முதலில் கடைகளிலிருந்து வரும் பொருள்களை வாங்கி ஏழைகளுக்குக் கொடுத்த பிறகுதான் ஒருவன் அருந்துவது வழக்கம். அந்தப் பழக்கத்தையே இந்நாடும் பின்பற்ற வேண்டும். இது ஒரு மனிதனைத் தன்னலமற்று வாழப் பயிற்றுவதோடு அவன் மனைவி மக்களையும் அதே பழக்கத்திற்குக் கொண்டு வருகிறது. ஹீப்ருக்கள் தங்கள் மரங்களில் முதலில் பழுக்கும் பழங்களை ஆண்டவருக்கேதான் அளிக்கிறார்கள். எனவே, ஒவ்வொரு பொருளின் முதற்பகுதியும் ஏழைகளுக்கேதான் செல்லவேண்டும். எஞ்சியதைப் பெறவே நமக்கு உரிமையுண்டு. ஆண்டவனின் பிரதிநிதிகள் ஏழைகள். துன்பப்படும் ஒவ்வொருவனும் ஆண்டவரின் பிரதிநிதி. கொடாமல் மகிழ்ச்சியுடன் உண்கிறவன் பாவத்தைப் புரிகின்றான்.

ஐந்தாவது, விலங்குகளுக்கு நாம் செலுத்தவேண்டிய கடமையாகும். மனிதனுக்காகவே விலங்குகள் படைக்கப்பட்டன என்று கூறுவது சரியன்று. அது ஆண்டவரின் கூற்று அன்று; சாத்தானின் கூற்று எனலாம். அவ்விலங்குகளின் ஒரு பாகத்தில் நரம்புகள் அசைகின்றனவா என்றறிய அவற்றைத் துன்புறுத்திப் பார்ப்பது தவறு. எங்கள் நாட்டில், அன்னியர்கள் இவற்றையெல்லாம் எவ்வளவு கூறினபோதிலும், இந்துக்கள் ஏற்றுக்கொள்வதில்லை. நாம் அருந்தும் உணவின் ஒரு பகுதி, விலங்குகளுக்குச் சொந்தமானது. அவற்றுக்கும் தினந்தோறும் உணவு தரவேண்டும். அவயவங்கள் முறிந்து முடமானவையும், முதுமை எய்தியவையுமான குதிரைகள், பூனைகள், நாய்கள் போன்றவைகளுக்கு ஒவ்வொரு நாட்டிலும் மருத்துவவிடுதி இருக்க

வேண்டும். அவ்விடங்களில் அவ்விலங்குகளுக்கு உணவு கொடுத்து அவற்றைப் பாதுகாக்கவேண்டும்.

மற்றது பரிசுத்தம் ஆகும். அதில் பல நிலைகள் அடங்கியுள்ளன. முதல்நிலை உண்மை. எவனொருவன் உண்மை வடிவமாய் விளங்குகின்றானோ, அவனிடம் உண்மைக் கடவுள் விளங்குகின்றார். எண்ணம், சொல், செயல் இவை அனைத்தும் உண்மையாக இருக்கவேண்டும்.

அடுத்தது, நேர்மை. இதன் பொருள் எளிமை என்பது. இரட்டை நிலையின்றி ஒரே மாதிரியாக என்றும் செயல் புரிதல்; உள்ளொன்று வைத்துப் புறமொன்றாய் இருப்பதன்று. சில சமயங்களில் சற்றுக் கண்டிப்பாக இருக்கவேண்டியிருந்தாலும் நேர்மையே நன்று.

அடுத்தது தயவு.

பின்னது இன்னா செய்யாமை; உரையிலோ, நினைவிலோ, செயலிலோ ஒருவரையும் புண்படுத்தக்கூடாது.

அடுத்தது, ஈதல். இதைவிட மேலான அறமில்லை. எவனொருவனது கை தனக்கு வாங்கிக்கொள்வதற்காக மட்டுமே அமைந்துள்ளதோ, அவன் மிகவும் இழிவான மனிதனாவான்; எவனுடைய கை மற்றவர்களுக்கு வழங்குகிறதோ அவனே சான்றோனாவான். உன்னிடமுள்ள கடைசி ரொட்டித் துண்டையும், நீ பட்டினி கிடந்தாற்கூட, மற்றவருக்குக் கொடு. நீ மற்றவர்க்காக பட்டினி கிடந்து இறந்தால், நீ ஒரே நொடிப் பொழுதில் விடுதலை அடைவாய். உடனே நீ தூய்மை உள்ளவனாகி, ஆண்டவனாகிவிடுவாய். குழந்தைகளை உடையவர்கள் கட்டுக்குட்பட்டவர்களே; குழந்தைகளை எளிதில் பெற்றோர்கள் விட இயலாது. பெற்றோர் குழந்தைகள் இன்புற வாழ விழைகின்றனர். அவர்களை எளிதில் நீக்கிவிட இயலாது. இவ்வுலகில் போதுமான குழந்தைகள் இல்லையா? 'எனக்கொரு குழந்தை இன்றியமையாதது,' எனக் கருதுகிறவர்கள் மிகவும் சுயநலம் பேணுகிறவர்கள்.

இதன் பிறகு வருவது மகிழ்ச்சி அல்லது அனவசாதம். எப்போதும் கையறு நிலையில் நிற்பது சமயமன்று. எக்காலமும் இன்புற்றும் புன்னகை பூத்தும் இருப்பது வழிபாட்டைக் காட்டி, நம்மை ஆண்டவன்பால் விரைவில் ஈர்த்துச் செல்லும். இருளடைந்த, அயர்வுற்ற மனத்

தால் எப்படி அன்புகாட்ட இயலும்? அவர்கள் அன்பைப் பற்றிப் பேசினாலும் அது பொய்யே. அது மற்றவர்களைப் புண்படுத்தும். மிகவும் மதப்பற்றுள்ளவர்கள் செருக்குள்ள முகத்தோற்றம் உடையவர்களாய் இருக்கிறார்கள். அவர்களது மதம் செய்கையிலும் உரையிலும் மற்றவர்களோடு போர் புரிவதே ஆகும். அவர்களது முன்பிறவியைப் பற்றி உன்னிப்பார். இப்போது அவர்களுக்கு விடுதலையைக் கொடுத்தால் என்னசெய்வார்கள் என்பதைச் சிந்தனைசெய். உலகமனைத்தையும் குருதி வெள்ளத்தில் ஆழ்த்திவிடுவார்கள். ஏனென்றால் அவர்களுக்கு அதுதான் கடவுள். அதையே வணங்குவதால் சிறிதும் அவர்களுக்கு அன்பு கிட்டாது. அவர்களுக்கு இரக்கம் என்பதே இராது. எனவே, எப்போதும் மனம் நொந்து சாம்புகிறவன் ஆண்டவரிடம் அணுக இயலாது. அது மதமன்று. 'நான் துன்பப்படுகிறேன்,' என்று மொழிவது விலங்கின் இயல்பாகும். ஒவ்வொரு மனிதனும் தன் சுமையைத் தானே சுமக்கவேண்டி உள்ளது. நீ வருத்தத்தோடு, துன்பத்தோடு இருந்தால் துன்பத்தை வென்று மகிழ்ச்சியோடு இருக்க முயல்க. பலவீனமாக இராதே. இப்படி உள்ளவர் ஆண்டவரை அடைய இயலாது. நீ நல்ல ஆற்றல் படைத்தவன். அளவற்ற பலம் உன்னிடம் திகழ்ந்து நிற்கின்றது. பின் வேறு எதைக்கொண்டு ஒன்றை வெல்லக்கூடும்? இதைத் தவிர ஆண்டவரை நீ எப்படி அடையமுடியும்? அளவு கடந்து உவகையைக் கொள்ளாதே. எல்லையற்ற மகிழ்ச்சியுள்ள மனம் அமைதியடைய இயலாது. அது மாறும்; அது சலிக்கும்; மிகுதியான உவகையைத் துயரம் பின்தொடரும் தன்மை வாய்ந்தது. அழுகையும் சிரிப்பும் அதுபோன்றவையே. மனிதர் ஒரெல்லையிலிருந்து மற்றோரெல்லைக்கு ஓடுகின்றனர். மனம் இன்புற்றும், அமைதியாகவும் இருக்கட்டும். வரம்பு கடந்த நிலையில் அது ஆழக்கூடாது. ஆழ்ந்தால் அதன் விளைவை அனுபவிக்கவேண்டும்.

இவைகளே இராமானுசர் இயம்புகிறபடி பத்தியின் ஆயத்தப் பயிற்சிகள்.

முதற்படிகள்

பத்தியைப்பற்றி எழுதிய தத்துவ சாத்திரிகள், ஆண்டவிரின்மீது வைக்கப்படும் எல்லையற்ற ஆழ்ந்த அன்பே பத்தி என்று கூறுகின்றார்கள். ஏன் ஒரு மனிதன் கடவுளை நேசிக்க வேண்டுமென்பதை உணர்ந்தாலொழிய, இவ்விளக்கங்களை நாம் அறிந்துகொள்ள இயலாது. இரண்டு இலட்சிய வாழ்க்கைகள் உளளன. எந்த நாட்டிலும், சமயப்பற்றுள்ள எந்த மனிதனும், தான் உடலும் ஆன்மாவும் உள்ளவன் என உணர்கின்றான். மானிட வாழ்க்கையின் குறிக்கோள்களைப் பற்றி மாறுபட்ட கருத்துகள் இருக்கின்றன. மேலைநாடுகளில் மக்கள் மனிதனது உடலைப்பற்றித்தான் மிக்க கவனம் செலுத்துகிறார்கள். இந்தியாவில் பத்தியைப்பற்றிக் கூறினவர்கள் மனிதனது ஆன்மாவின் சிறப்பைத்தான் எடுத்துக்காட்டியிருக்கின்றார்கள். இந்த மாறுபாடு கீழ்த்திசைக்கும் மேல்திசைக்கும் இயல்பாய் உள்ளது. பொதுவான மொழியிலும் அப்படித்தான் இது திகழ்கிறது. இங்கிலாந்தில் ஒரு மனிதன் இறக்கும்போது அவன் ஆவியைக் கொடுத்துவிடுவதாக உரைக்கப்படுகிறது. இந்தியாவில் ஒருவன் இறக்கும்போது ஆன்மா அவனை விட்டுப் பிரிவதாகக் கூறப்படுகிறது. 'மனிதனுக்கு உடல் உண்டு; அதில் ஆவி உள்ளது,' என்பது ஒரு கருத்து; மற்றொன்று 'மனிதனுக்கு ஆன்மா உண்டு; அதற்கு ஓர் உடல் உண்டு,' என்பதாகும். கடினமான பிரச்சினைகள் இதிலிருந்து எழுகின்றன. உடலுக்கு ஆவி உள்ளது என்னும் கொள்கை உடலை மிகுதியாகப் பாராட்டவேண்டும் என்பதை வற்புறுத்துகின்றது. 'ஏன் மனிதன் வாழ்கின்றான்?' என்ற கேள்விக்கு, 'புலன்களினாலும், உடைமையினாலும், சொத்தினாலும் உறவினராலும் இன்பம் அடைவதற்கே' என்ற பதில் கூறப்படுகிறது. அதைவிட அவன் மிகுதியாக எண்ண இயல்வதில்லை. எதிர்கால வாழ்வு, இன்பத்தைத் தொடர்ந்து அனுபவிக்கவேயாம் என்பது அவன் கருத்து. 'எப்போதும் அப்படியிருக்க முடியாதே! உலகை விட்டுப் பிரியவேண்டுமே!' என்று அவன் வருத்தப்படுகின்றான். தொடர்ந்து இதுபோலவே இன்பம் அனுபவிக்க முடியும் என்று அவன் எண்ணுகிறான். இந்த

முடிவைப் பெற ஆண்டவரை வழிபடவேண்டும் என்பதனுலேயே அவன் கடவுளை இறைஞ்சுகிருன். அவனதுவாழ்க்கையின் இலட்சியம் புலனின்பந்தான். அதை ஆண்டவரின் அருளாலேதான் பெறலாமென ஆண்டவரைத் துதிக்கின்ருன். ஆனுல், இந்தியரது கருத்து என்னவென்ருல், 'வாழ்க்கை முடிவு ஆண்டவரே; அவருக்குப்பின் ஒன்றுமில்லை,' என்பதே. புலனின்பங்கள் நமக்குச் சிறந்தவை கிடைக்க அமைந்துள்ளன என்பதாகும். இது மாத்திரமன்று. இவ்வின்பங்களைத் தவிர வேருென்றுமில்லை என்பது மிகவும் இழிவான நிலை. நம்முடைய அன்ருட வாழ்க்கையிற் புலனின்பம் எவ்வளவு குறைவடைகிறதோ, அதற்கேற்றவாறு, மனிதனது வாழ்க்கையும் உயர்வடைகின்றது. நாய் தின்பதைக் கவனி. ஒரு மனிதனும் அது திருத்தியோடு தின்பதுபோல உணவருந்துவதில்லை. தின்னும்போது மிக்க திருத்தியோடு இடையிடையே உறுமிக்கொண்டு தின்னும் பன்றியைப் பார். அவ்வளவு திருத்தியோடு உண்கிற ஒரு மனிதனும் உலகில் பிறக்கவில்லை. மிகவும் தாழ்ந்த விலங்குகளின் செவிப்புலச் சத்தியை, பார்வைச் சத்தியை நினைத்துப் பார். அவற்றின் புலன்கள் யாவும் நன்கு வளர்ந்துள்ளன. புலனின்பம் அவற்றுக்கு மிகுதியே. அதனுல், வரம்பு கடந்த மகிழ்ச்சியினுல் அவற்றுக்குப் பைத்தியங்கூடப் பிடித்து விடுகிறது. மனிதன் எவ்வளவுக்கெவ்வளவு இழிவாக இருக்கிருனே, அவ்வளவுக்கவ்வளவு புலனின்பத்தில் திளைக்கின்ருன். அவன் உயர உயர, அன்பும் தருக்க அறிவும் அவனுடைய வாழ்க்கையின் முக்கிய அமிசமாய்த் திகழ்கின்றன. இவை வளர வளர அவனுக்குப் புலனின்பத்தில் மகிழ்ச்சி குறைகிறது. சான்ருக, மனிதனுக்குத் தன் உடல், உடைமை, ஆன்மா இவற்றுக்குக் குறிப்பிட்ட ஒரு சத்தி கொடுக்கப்பட்டால் எவ்வளவு சத்தி கொடுக்கப்படுகிறதோ, அதற்கேற்ருற் போல மற்றவர்கட்கு அவன் செலவழிப்பதில்லை. காடுறை இழிவான மக்களுக்குப் புலன் சத்திகள் நுட்பமானவை. நாகரிகம் அடைய அடைய, உணர்ச்சியின் ஒழுங்கு நுட்பமாகிறது. எனவே, அவன் பலவீனம் அடைகிருன். ஒரு காட்டுமிராண்டி இனத்தைப் பழக்கிப்பார். அதைத்தான் காண்பாய். இன்னெரு முரட்டு இனத்தினர்

வந்து அவர்களைத் தோல்வியுறும்படி செய்வார்கள். எப்போதும் காட்டுமிராண்டிகளாய் உள்ளவர்களே வெற்றி பெறுவார்கள். எனவே, புலனின்பத்தைப் பெற நமக்கு விருப்பமாயின், நாம் விலங்கின் நிலையைத்தான் அடைய வேண்டும். தன் புலனின்பத்திற்காக ஓரிடத்திற்குப் போக வேண்டுமென மனத்தில் விரும்புகையில், அவன் எத்தன்மையதை இருக்கின்றான் என்பது அவனுக்குத் தெரிவதில்லை. அப்படி அதனைப் பெறுகிறவன் விலங்கு நிலைக்குத்தான் செல்கிறான்.

புலனின்பம் மண்டிய சுவர்க்கத்தை விழைவது இத்தன்மைத்தே. அவர்கள் சிற்றின்பச் சேற்றில் பன்றிகள் போலப் புரண்டு அதற்கப்பால் ஒன்றும் நோக்கும் அறிவைப் பெறாதவர்கள். இதுதான் அவர்களுக்கு இன்றியமையாதது. இது இல்லாதது சுவர்க்கமே இல்லா நிலைக்கு நிகராகும். அவர்கள் பத்தர்களாக இருக்க இயலாது. ஆண்டவர்பால் அன்புகாட்டும் உண்மையான பத்தர்களாய்த் திகழ இயலாது. எனினும், சிறிது காலம் இப்படி இருந்த பிறகு இந்நிலை மாறுதல் அடையும். ஒவ்வொரு மனிதனும் தனக்குத் தெரியாத உயர்ந்தது ஒன்று உள்ளது என்பதை உணர்வான். உயிரின்மேலுள்ள பற்றும் புலன்களின் மேல் உள்ள பற்றும் நாளடைவில் சிறிது சிறிதாகக் குறையும். நான் மாணவனாய் இருந்தபோது சில இனிய தின்பண்டங்களின் பொருட்டு என் பள்ளித்தோழனோடு சண்டையிட்டேன். அவன் உடல் வலிமை உள்ளவனாதலால், என் கையிலிருந்ததைப் பிடுங்கிச் சண்டையில் வெற்றிபெற்றான். அப்போது எனக்கிருந்த உணர்ச்சி எனக்கு இன்னும் நினைவிருக்கிறது. 'இவன் உலகில் பிறந்த ஒன்றுக்கும் உதவாத பையன்,' என்று நான் நினைத்தேன். எனக்கு ஆற்றல் ஏற்பட்டதும் அவனைத் தண்டிக்க வேண்டும் என்று எண்ணினேன்; ஆனால், அவனது குற்றத்திற்கேற்ற போதுமான தண்டனை இல்லை என்று கருதினேன். நாங்கள் இருவரும் இப்போது நெருங்கிய நண்பராய் இருக்கிறோம். எனவே, இதுபோலக் குடிப்பதையும் உண்பதையுமே எல்லாமாகக் கருதும் குழந்தைகள் இவ்வுலகில் ஏராளமாக உள்ளார்கள். அவற்றில் ஒரு சிறு பகுதியும் நீக்கப்பட்டால் அவர்களுக்கு

அது பெருந்தீதாய் இருக்கிறது. அவர்கள் எப்பொழுதும் தின்பண்டங்களையே கனவில் கண்டு கொண்டிருப்பார்கள். அவர்களுக்குப் பிற்கால வாழ்க்கையும் எங்குத் தின் பண்டங்கள் மிகுதியாகக் கிடைக்குமென்பதேயாகும். பிற் கால வாழ்வு நல்ல ஒரு வேட்டையாடும் இடத்திலென நம்பும் செவ்விந்தியனை நினைத்துப்பார். ஒவ்வொருவருக் கும் தமக்கு இன்றியமையாத சொர்க்கலோகத்தைப் பற்றிய கருத்துண்டு. ஆனால், நாளாக நாளாக, நாம் வளர்கையில் இவற்றைக் காட்டிலும் அப்பாலுள்ள உயர்ந்த காட்சிகளை உடையவர்களாய் இருக்கின்றோம். ஆனால், ஒன்றிலுமே நம்பிக்கை யில்லாத வகையில் அமைந்துள்ள கருத்துகளை நம்முடையனவாக்கிக் கொள்ளக் கூடாது. அது நமக்கு அழிவையே தரும். அழிக்கும் நாத்திகன் ஒவ்வொன்றையும் தவறுகக் கருதுகிறான். பத்தன் உயர்ந்தவைகளை எண்ணு கிறான். நாத்திகனுக்குச் சொர்க்கம் என்பது ஒன்றில்லை. அக்காரணம் பற்றி அவன் அங்கே போக விழையவில்லை. பத்தனே, சுவர்க்கம் புகுவது குழந்தையின் விளையாட்டைப் போல எளிது என்றுதான் அங்கே போக விரும்பவில்லை. அவனுக்கு ஆண்டவரே வேண்டும். ஆண்டவரை விட அவனுக்கு உயர்ந்தது ஒன்றுமில்லை. ஆண்டவரே அவ னுக்கு உயர்ந்தவர். அவரைக் கண்டு மகிழ்வதே அவ னுக்குப் பேரின்பம். இதைக் காட்டிலும், நாம் ஒன்றுமே கற்பனை செய்ய இயலாது. ஏனென்றால், ஆண்டவரே நிறை வுள்ளவர். அன்பைவிடச் சிறந்த இன்பத்தை நாம் நினைக்க இயலாது. அன்பு என்பதற்குப் பல் பொருள்கள் உண்டு. இது சாதாரண உலகத்தின் மேலுள்ள தன்னலப் பற்றன்று. அபபற்றை இவ்வாறு வழங்குவது நிந்தனையாகும். நம் மனைவி, மக்களின்மீது நாம் சொரியும் அன்பு விலங்கின அன்பாகும். தன்னலம் கருதாத அன்பே அன்பு. அதுதான் கடவுளின் மேலுள்ள அன்பு. அதை அடைவது மிகவும் அரிதே. நாம் குழந்தைகளின் மேல், தாய் தந்தையரின்மேல், கொண்டுள்ள அன்பு நெறியாகச் செல்லுகிறோம். மெல்ல மெல்ல, உண்மையான அன்பில் பயிற்சி பெறுகிறோம். ஆனால், பெரும்பாலும் இத்தகைய அன்பிலிருந்து யாதொரு படிப்பினையும் யாம் பெற்றிலோம். ஏதாவது ஒரு பொரு

ளிடம் பற்றை ஏற்படுத்திக் கொள்கிறோம். சில சமயங்களில் மக்கள் இந்த வலையிலிருந்து விடுபடுகிறார்கள். அவர்கள் மனைவிகளை நாடுகின்றார்கள்; செல்வம், புகழ், பெருமை என்பவற்றின் பின்னரே ஓடுகிறார்கள். சில சமயங்களில் தலைமேல் அடிக்கப் படுகிறார்கள். அதன் பின்னரே உலகம் என்பது என்னவென்பதை உணர்கிறார்கள். ஆண்டவரைத் தவிர ஒன்றையுமே நேசிக்க இயலாது. மானிட அன்பு வெற்று மாயையே. மனிதனால் நேசிக்க இயலாது; 'அன்பே, ஆருயிர்த் தலைவரே,' என்று மனைவி தன் கணவனை நேசிப்பதாகக் கூறி அவரை அணைத்து முத்தமிடுகிறாள். அவன் இறந்தவுடன், முதலில் அவளது நினைவு அவன் சேமித்து வைத்ததிலேதான் செலகிறது. அவள் 'நாளை நடப்பது என்ன?' என்பதைப் பற்றித்தான் நினைக்கிறாள். கணவன் மனைவியை நேசிக்கிறான். ஆனால், மனைவி உடல் நலம் குறைந்து அவள் அழகு தேய்ந்தவுடன் அல்லது மூப்பெய்தியவுடன் அல்லது ஒரு தவறு செய்தால் அவன் அவள்பால் கவலையுறுவதில்லை. உலகில் காணும் அன்பு அனைத்தும் மாயையே. எல்லாம் வஞ்சனை மிக்க, பொய்புதைந்த போலி நாடகமே.

எல்லையுள்ள பொருளால் நேசிக்க இயலாது. அதே போல எல்லையுள்ள பொருளையும் நேசிக்க இயலாது. ஒரு மனிதனது அன்பு ஒவ்வொரு நொடியும் இறந்துகொண்டே இருக்கிறது. அவன் வளர வளர அவன் மனமும் எஞ்ஞான்றும் மாறிக்கொண்டே செல்லும். எஞ்ஞான்றும் மாறாத அழியாத அன்பை இந்த ஞாலத்தில் எதிர்பார்க்க இயலுமோ? ஆண்டவரைத் தவிர எங்கும் ஓர் அன்பு இருக்க இயலாது. அப்படியிருக்க, ஏன் இந்தப் பல்வகையான நேசங்கள்? இவை யாவும் படிகளாவன. ஏதோ ஒரு சக்தி அன்பின் அருகில் நம்மை உந்திக்கொண்டு போகின்றது. உண்மையான பொருளை நாம் எங்குத் தேடுவது என்பது தெரியவில்லை. ஆனால் இந்த அன்பு, அதைக் கண்டுபிடிக்க நம்மை முன்னே தள்ளுகிறது. நமது குற்றத்தை மறுபடியும் நாம் உணர்கிறோம். ஒரு பொருளைப் பற்றுகிறோம். அது நமது பிடியிலிருந்து விரல்கள் வழியாக நழுவுகிறது. பிறகு இன்னொன்றைப் பற்றுகின்றோம். இப்படி நீண்ட யாத்திரை

செய்து இறுதியில் ஞான ஒளியை நண்ணுகின்றோம். பிறகு நாம் நேசிக்கும் தனிப்பட்ட ஒருவரான ஆண்டவரிடம் வருகிறோம். அவரது அன்புக்கு ஒரு மாறுதலும் ஏற்படுவதில்லை. அது எப்போதும் நம்மை ஏற்றுக் கொள்ள ஆயத்தமாய் உள்ளது. நான் உங்களைக் காயப்படுத்தினால் எவ்வளவு தான் பொறுப்பீர்கள்! ஆனால் அழுக்காறு, வெறுப்பு, சீற்றம் இவை இல்லாத ஒருவன், எப்போதும் தனது நிலையில் இருக்கிறவன், இறக்காதவனாக, பிறக்காதவனாக இருக்க இயலும். அப்படித் திகழ்பவர் ஆண்டவரே ஆனால் ஆண்டவரை அடையும் வழி மிகவும் கடினமானது. மிக நீண்டதே. சிலருக்கே அதை அடைய இயலும். நாம தட்டுத் தடுமாறும் குழந்தைகளே. இத்தகைய பந்தத்தைக் கோடிக் கணக்கானவர்கள் விற்பனை செய்கிறார்கள். எல்லோரும் இதைப் பற்றியே பேசுகின்றனர். ஆனால் ஒரு சிலரே இதை அடைகின்றனர். நூற்றுவருள் ஒரு சிலரே அந்தக் கடவுளின் அன்பைப் பெறுகின்றனர். நாடு முழுவதும் அவர்கள் வாயிலாக ஆசிபெற்றுப் புனிதமடைகின்றது.

கடவுள் உவக்கும் அவர்தம் குழந்தை தோன்றும்போது நாடே பெருநலம் பெற்றுத் திகழ்கின்றது. அதுபோல உலகில ஒரு நூற்றாண்டில் ஒரு சிலர் பிறக்கின்றனர். ஆனால், நாம் அந்த ஆண்டவரிடம் அன்பு செலுத்த முயற்சி செய்வோம். நம்முள் ஒருவர் இந்தப் பூரணமான அருளைப்பெறக் கூடியவராய் இருக்கலாம். ஆனால், அதை யார் அறிவர்? எனவே, நாம் முயலுவோமாக. ஒரு மனைவி, தன் கணவன்பால் அன்பைச் செலுத்துகிறாள் என்று இயம்புகின்றோம். அவள் ஆன்மா முழுதுமே அவனிடத்தில் ஆழ்ந்து கிடக்கிறது என்று நினைக்கிறாள். ஒரு குழந்தை பிறக்கிறது. அவ்வன்பின் பாதியோ, பாதிக்கு மேலோ அக்குழந்தைபால் பாய்கின்றது. அவளே கணவனிடத்தில் முன் இருந்ததுபோலத் தனக்கு அன்பு இல்லாததை உணர்வாள். அதே போலத் தான் தந்தைக்கும். அன்பிற்குத் தீவிரமான பொருள்கள் மேன்மேலும் திகழத் திகழ, முன்னிருந்த அன்பு சிறிது சிறிதாகத் தேய்ந்து மறைகிறது. நீங்கள் பள்ளியிலிருந்த போது தாய்மார்கள் அல்லது தந்தைமார்கள் அல்லது பள்ளித் தோழர்கள் வாழ்க்கையில் மிகவும் அன்பானவர்கள்

என நினைத்தீர்கள். அதற்குப் பிறகு கணவன், மனைவியர் ஆகும் நிலை வருகின்றது. முன்னுணர்ச்சிகள் பறந்துவிடு கின்றன. பின்பு இல்வாழ்க்கையின் அன்பு இன்னும் தீவிர மாகிறது. ஒரு விண்மீன் தோன்றுகின்றது. இன்னும் பெரியதொன்று மலர்கின்றது. அதன் பிறகு அதைவிடப் பெரியது ஒன்று பூக்கின்றது. இறுதியில் ஞாயிறு தோன் றவே, மற்றச் சிறு ஒளிகளனைத்தும் மறைகின்றன. அந்தச் செஞ்சுடரோனே கடவுள். உடுக்கணங்கள் சிறிய அன்பு களாய் அமைகின்றன. இப்படி வெய்யோன் போன்ற அன்பு வெள்ளம் ஒருவனுக்குப் பொங்கி வருகையில் அவனுக்குப் பத்திப் பித்தேறிவிடுகின்றது. அவனை 'ஆண்டவர் நற வுண்டவன்' என்று எமர்சன் நவில்கின்றார். பிறகு மனிதன், கடவுள் உருவத்தை அடைகிறான். அந்த அன்புக் கடலில் எல்லாம் ஆழ்ந்து கரைந்து விடுகின்றன. சாதாரண அன்பு விலங்கின் கவர்ச்சிதான்; அன்றேல், ஏன் ஆண் பெண் என்னும் மாறுபாட்டை ஏற்படுத்துகின்றோம்? ஒருவன் ஓர் உருவத்தின் முன்னால் மண்டியிட்டுத் தொழுதால், அது கொடுமையான ஓர் உருவ வழிபாடு ஆகும் என்கிறோம். ஆனால், மனைவி அல்லது கணவன் முன்னால் முழங்காலிட் டால், அது மிகவும் ஏற்றுக்கொள்ளக் கூடியதே எனக் கருதுகிறோம். அன்பின் பல படிகளை இவ்வையகம் நம்முன் நிறுத்துகின்றது. முதன் முதலாக நாம் நெறியை வகுத் துக் கொள்ள வேண்டும். வாழ்வைப்பற்றி நாம் கொண்ட கருத்தின் மீதே அன்பைப் பற்றிய கொள்கை நிறுவப்படும். இம்மையே முடிவும் இலட்சியமுமாகக் கொள்ளுவது விலங் கின் இயல்பாகிவிடும்; அது மிகவும் இழிவானதே. அந்த எண்ணத்தைக்கொண்டு வாழ்க்கையைத் தொடங்குகிறவன் தன்னையே சீர்கேடாக்கிக் கொள்ளுகிறான். அதிலிருந்து அவனால் உயர இயலாது. அவனுக்குப் பின் மிளிர்ந்து கொண்டிருப்பது அவனுக்குக் காட்சியளிக்காது. ஐம்புலன் களுக்கு எபபொழுதும் அவன் அடிமையாகவே இருப்பான். ஒருசில தின்பண்டங்களை வாங்குதற் பொருட்டு 'டாலர்' பணத்தைத் திரட்ட அவன் அரும்பாடு படுவான். இத்தகைய வாழ்வு நடத்துவதைக் காட்டிலும் இறப்பதே சாலச் சிறந்த தாகும். உலக இன்பத்திற்கு இரையாகும் அடிமைகளே

ஐம்புல அடிமைகளே, இதைவிட உயர்ந்தது ஒன்றுள்ளது. இத்தகைய எல்லையில்லாததும் எல்லாம் அறிந்ததுமான அகண்ட ஆன்மா மனிதனுடைய கண், செவி, மூக்கு இவற்றுக்கு அடிமையாய் இருக்கப் பிறந்தது என நீங்கள் எண்ணுகிறீர்களா ? நிலையற்ற, உயர்ந்த ஓர் ஆவி எதை வேண்டுமானாலும் செய்வது ; ஒவ்வொரு பற்றையும் உடைக்கும் அந்த ஆவி நாமே. அது அன்பினாலேதான் நமக்கு ஏற்படுகிறது. இதுதான் இலட்சியம். இது நன்றாக நினைவிருக்கவேண்டும். ஆனால், இதை நாம் நாளைக்குப் பெறுவதில்லை. இது கிடைத்தது என்று நாம் கற்பனை செய்துகொள்வோம்; ஆனால், இது வெறுங்கற்பனையே. உண்மையோ, நெடுந்தூரத்திலுள்ளது. மனிதன் நிற்கும் நிலையிலிருந்து அவனை அப்பால் முன்னேற்ற இயலுமானால், அவனுக்கு முன்னேற உதவி செய்யவேண்டும். மனிதன் உலகாயதத்திலேதான் ஊன்றி நிற்கின்றான். நீங்களும் நானும் உலகாயதர்களே. ஆண்டவரைப்பற்றியும், ஆன்மாவைப்பற்றியும் பேசுவதுநலமாகும். ஆனால், அது சமூகத்தில் நிலவிவரும் வெறும்பேச்சே தவிர வேறன்று. கிளிப்பிள்ளையைப்போன்று அதை நாமும் பேசக் கற்றுக்கொண்டோம். எனவே, நாம் வேரூன்றி நிற்கும் உலகாயதத்திலிருந்து சடத்தின் உதவிகொண்டே பையப்பைய உண்மையான ஆன்மிகச் செல்வர்களாய்த் திகழும்வரையில் முயன்றுகொண்டே போகவேண்டும். நாமே ஆன்மாக்கள் என்பதை உணரவேண்டும் ; நம்மை ஆன்மாக்களாக அறிந்துகொள்வது சாலச் சிறந்தது. முடிவில்லாத உலகம் என்று நாம் கருதும் இந்த ஞாலம், அப்பாலிருக்கும் அவ்வுலகத்தின் தூல வடிவெனக் கொள்ளவேண்டும்.

ஆனால், இதோடு இன்னும் ஒன்று தேவை. ஏசுநாதரின் மலைப் பிரசங்கத்தில் மிளிரும் பின்வருவதை நாம் படிக்கின்றோம் : "கேட்பீராயின், அதனைப் பெறுவீர் ; நாடுவீராயின் அதனைக் காண்பீர்; தட்டுவீராயின், கதவு திறக்கப்பார்ப்பீர்." ஆனால், நாடுவார் யார் ? விழைவார் யார்? நாமெல்லோரும் கடவுளை உணர்ந்திருக்கிறோம் என உரைக்கின்றோம். ஒருவன் கடவுள் இல்லையென்பதைச் சான்றுடன் புலப்படுத்த ஒரு நூல் எழுதுகின்றான் ; மற்றொருவன் கடவுள் இருக்கிறார் என்பதை நாட்ட வேறு நூலைச் சமைக்கின்றான். ஒருவன்

வாழ்க்கை முழுவதும் ஆண்டவர் இருப்பதைப்பற்றிச் சான்று கூறவேண்டும் எனக் கருதுகின்ருன். மற்ருெருவன் இல்லை என்று எழுதிக் கொண்டே போகின்ருன்; இவ்வண்ணமே ஆண்டவர் இல்லையென்று மானிடருக்குக கற்பித்துக்கொண்டே போகின்ருன். கடவுள் உண்டு இல்லையென்று சான்று கூறிக் கணக்கிலா நூல்களைப் படைப்பதால் என்ன நன்மையுள்ளது? மக்களில் பெரும் பாலார்க்குக் கடவுள் இருக்கிருரா, இல்லையா என்பதில் என்ன கவலை? இங்குள்ள மக்களுட் பெரும்பாலார் காலையில் எழுந் திருந்து காலைச் சிற்றுண்டி அருந்தக் கீழே செல்கின்றனர். ஆண்டவர் ஆடை அணிவதிலோ உண்பதிலோ ஒருவனுக்கு உதவி புரிவதில்லை. அவன் வேலைக்குச் சென்று நாள் முழு வதும் பணத்திற்காகப் பாடுபடுகிருன். அதை ஒரு சேமிப்பு நிலையத்திலோ, பாங்கியிலோ கட்டிவிட்டு, மாலை உணவிற் குப் பிறகு இயந்திரங்கள் இயங்குவதுபோல உறங் கச் சென்றுவிடுகிருன். ஆண்டவரைப்பற்றிச் சிந்திக்கவோ அவர் தனக்கு இன்றியமையாதவர் என்று எண்ணவோ இல்லை. பின்பு ஒரு நாள் சாவு, "வா" என்று அவனை விளிக் கின்றது. மனிதன், "சிறிது காத்திரு: இன்னும் வாழச் சிறிது காலம் எனக்கு அளி; நானே, என் மைந்தன் ஜான் இன்னும் சற்று வளரும் அழகைப் பார்க்கவேண்டும்," என்கி ருன். ஆனல் மரணதேவனே, "உடனே வா" என்று கூவி அழைக்கின்ருன். இவ்வண்ணம் வாழ்வாம் சக்கரம் சுழன்று கொண்டே ஓடுகின்றது. இப்படி ஜானும் வாழ்க்கைப் பாதையில் ஏகுகின்ருன். அவனிடம் நாம் என்ன நவில்வது? ஆண்டவரே உயர்ந்த பொருள் என்பதை அவனுக்கு உரைக்க, அவன் ஒன்றையும் கண்டிலன். முற்பிறவியில் அவன் ஒரு பன்றியாய் உழன்று இப்போது மானிடனுய் உயர்ந்து பிறந்திருக்கின்ருன். ஆனல், உலகில் அவனைப் போன்றவர்கள் மாத்திரம் இல்லை. ஒரு சிலருக்கு ஆன்மச் சுடர் விழிப்பும் ஏற்படுகின்றது. ஏதோ சிறிது இன்னல் உறுகிருர்கள். நாம் அன்பைப் பொழியும் ஒருவர் இறக்கிருர். எவருக்காக—அவர் நம் சகோதரராயிருக்கலாம்—நாம் ஆன்ம சக்தி அனைத்தையும் வழங்கினேமோ, எவருக்காக வையக மனைத்தையும் வஞ்சித்து வந்தோமோ—அவர் மின்னெனத்

திடீரென்று மறைகின்ருர். நம்மீது ஒருபேரிடி விழுகின்றது. நம் இதயத்தில், "இதற்குப் பின் என்ன?" என்னும் வினுக் குரல் ஒலிக்கின்றது. எந்த மகனுக்காகத் தன்னையும் ஊணின்றி வதைத்து உலகையும் ஏமாற்றிவந்தாளோ, அந்த மகன் ஒருநாள் இறக்கிருன். ஜானுக்கு அப்பொழுது அந்தக் கொடிய அடியினுல் விழிப்பு ஏற்படுகின்றது. எந்த மனைவிக்காக ஒருவன் ஆடைக்கும், நகைக்கும், மதம் பிடித்த எருதைப்போல எல்லாருடனும் பூசல் புரிந்து மிகுந்த இன்னலுடன் பணம் திரட்டினுனே, அவளே திடீரென மாண்டு போகின்ருள். 'பிறகு யாதாகுமோ?' என்ற வினு பிறக்கின்றது. சிற்சில சமயங்களில் யாதோர் அடியின் அதிர்ச்சியுமின்றி மரணம் மெல்ல வருகின்றது. ஆனுல், செயல்கள் இவ்வண்ணம் நிகழ்வது மிக அரிதே. நம் பொருள் கைவிட்டு நழுவும்போது நம்முள் பலர் 'இதற்குப் பிறகு என்ன?' என்று பதறி ஓலம் இடுகின்ருேம். ஆற்றில் மூழ்கும் ஒருவன் ஒரு வைக்கோலைச் சிக்கெனப்பற்றி, அதனுல் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள முயல்கிருன். இது இயலாதபோது யாராவது தனக்கு உதவி புரியவேண்டுமென இறைஞ்சுகின்ருன். இப்படி ஐம்புல இன்பங்களை நாம் பற்றி நிற்கின்ருேம்! கிளரொளி இளம்பிராயத்துக் காமக்கழனியில் இன்ப விதைகள் தூவிய பின்னரே சிலர் உயர்ந்த நிலையை அடையக் கூடும் எனக் கூறுகின்றனர்.

இந்தப் பத்திநெறியே சமயமாகும். உண்மையான சமயவொளி பலருக்குத் திகழ்வது இயலாது. முழங்காலின் பயிற்சியும் தோப்புக்கரணம் போடுவதும் பலருக்குத் தக்கனவாக அமையும். ஆனுல் சமயமோ, ஒரு சிலருக்கே தோன்றும். ஒருசில நூறு மனிதர்க்கே மதப்பற்று இருக்கும். மற்றவர்களுக்கு இருக்க இயலாது. அவர்களுக்கு ஆன்ம விழிப்பு இல்லை. அவர்கள் அதை விழையவும் இல்லை. முக்கியமான செயல் ஆண்டவரை நாடுவதே. ஆனுல், கடவுளைத் தவிர மற்ற எதையும் நாம் தேடி அலைகின்ருேம். உலகு நமக்கு வேண்டும் தேவைகளை வழங்குகின்றது. புற உலகத்தின் எல்லையைக் கடந்து அப்பால் சென்ருல்தான் ஆண்டவரை நாம் நாடுகிருேம். இம்மையின் குறுகிய வட்டத்திலே நம் தேவைகள் யாவும் அடங்கியிருக்கும்பொழுது கடவுளைப்

பற்றிய கவலையே இருப்பதில்லை. இவ்வுலகத்தில் உள்ள வற்றிலெல்லாம் சலிப்படைந்த பிறகுதான் அதற்கப்பால் திகழ்கின்ற ஒன்றைக் கவனிக்கிறோம். ஆண்டவரை அடைய வேண்டிய பசியும் வேட்கையும் எழுந்தால் அது கிட்டும். விரைவில் இந்த உலகமாம் குழவி விளையாட்டை உதறித் தள்ளுக. இதற்கப்பால் மிளிரும் ஒன்றை நாடும் அவா அரும்பும் அக்கணந்தான் சமயத்தின் முதற்படி உங்கள் கண்முன் தோன்றும்.

மிக நாகரிகமான மதம் ஒன்று நம்மிடையே எழும்பி விட்டது.

கூடத்தில் மிகுதியாக நாற்காலி முதலிய சாமான்கள் திகழ்கின்ற ஜப்பானிய நண்பரின் மேசையில் ஒரு வண்ணக் கிண்ணத்தை மற்றச் சாமான்களுடன் பார்க்கின்றேன். பல ஆயிரம் டாலர்கள் விலையிருந்தாலும் அதை வாங்கியாக வேண்டும். அதுபோலவே நாகரிகத்திற்காக எனக்கு ஒரு சமயம் வேண்டும். எனவே, மாதா கோயிலில் ஓர் அங்கத்தினனாகி விடுகின்றேன். இத்தகைய வாழ்க்கை நடத்துபவர்களுக்கன்று பத்தி. பத்தி தணிப்பரும் பசியாகப் பிறக்க வேண்டும். எது இன்றி நாம் உயிர்வாழ முடியாதோ, அது தான் நம் இன்றியமையாத தேவையாகும். மூச்சு, உணவு, உடை, இவை இல்லாது நாம் வாழ இயலாது. ஒரு மனிதன் ஒரு பெண்ணைக் காதலிக்கும்போது அவளால் அவள் இல்லாமல் வாழ இயலாது என்று நினைக்கிறான். அவ்வெண்ணம் பிழையானதாய் இருந்தபோதினும், அவன் அப்படியே நினைக்கிறான். ஒரு கணவன் இறக்கையில், அவனில்லாமல் தான் வாழ இயலாது என்று அவன் மனைவி கருதுகிறாள். இதுதான் இன்றியமையாததன் இரகசியம். தேவையான ஒரு பொருள் இல்லாதவிடத்து நாம் இறப்போம். காலம் வரும் போது இவ்வுலகைவிட நாம் ஒன்றை நாடியே தீர்வோம். அப்போது நாம் பத்தர்களாகிறோம். ஒரு நொடிப்பொழுது மாயமுகில்கள் அகன்ற உடனே, உலகிற்கப்பால் உள்ளவைகளை உற்று நோக்குவோம். அக்கணமே நம் சிற்றின்பங்கள் யாவும் கடலில் மறையும் ஒரு நீர்த்துளி போலத் தோன்றும். பின்பு ஆன்மசத்தி ஓங்கி வளர்கிறது. ஆண்டவரை அடைய வேண்டுமெனத் தணிப்பரிய ஆர்வமும் வேட்கை-

யும் பிறக்கின்றன.

எனவே, முதற்படியில் எழும் வினு யாதெனில், "நமக்கு இன்றியமையாதது யாது?" என்பதே. "ஆண்டவர் வேண்டுமா?" என்ற கேள்வியை நாள்தோறும் நமக்கு நாமே கேட்டுக்கொள்வோம். உலகிலுள்ள எல்லா நூல்களையும் படிக்கலாம். பேச்சுத் திறமையினுல் இந்த அன்பு மலர்வதில்லை. மதிநுட்பத்தினுலும் இது முகிழ்ப்பதில்லை. அல்லது பற்பல கலைகளைக் கற்பதாலும் அரும்புகிறதில்லை. ஆண்டவரையே மிகவும் விழைவோர்களுக்கே அன்பு சுரக்கும். அவர்களுக்கு ஆண்டவர் காட்சி அளிக்கிருர். அன்பிற்கு அன்பே தான் மாருகவரும். அன்பின் எதிரொலி அன்பேதான். நீங்கள் என்னை வெறுக்கலாம். நான் உங்களை நேசிக்கத் தொடங்கினுல் நீங்கள் என்மீது அப்போதும் சற்று அருவருப்புக் கொள்ளலாம். ஆனுல், தொடர்ந்து ஒரு திங்களுக்கோ, ஓர் ஆண்டுக்கோ நான் இடையருது நேசித்தேனுகில், திண்ணமாக என்பால் அன்பைச் சொரிவீர்கள். இது உள நூல் கண்ட ஓர் உண்மை. அன்புமிக்க மனைவி இறந்துபோன கணவனை நேசிப்பதுபோல, நீங்கள் ஆண்டவரை நேசிக்க வேண்டும். அப்பொழுது ஆண்டவரை அடைவீர்கள். நூல்களும், பற்பல விஞ்ஞான சாத்திரங்களும் இவற்றைக் கற்பிக்க இயலாது. நாம் நூல்களைப் படிப்பதால் கிளிப் பிள்ளைகளாகிருேம். புத்தகங்களைப் படிப்பதால் ஒருவனும் அறிஞனுவதில்லை. மனிதன் அன்பைப் பற்றிய ஒரு வார்த்தையின் பொருளை அறிந்தால், அது போதும். அவன் நன்கு கற்றவனுகிவிடுகிருன். அன்பைப் பெறும் ஆசையை முதலில் வளர்த்தல் வேண்டும். 'கடவுள் நமக்கு வேண்டுமா?' என்ற வினுவை நாம் கேட்டுக்கொள்வோம். சமயத்தைப் பற்றி மொழியும்போது நாம் உயர்ந்த ஒரு நிலையைப்பெற்று அதை மற்றவர்களுக்குக் கற்பிக்கும்போது இதே வினுக்களை நாம் சந்ததமும் கேட்டுக்கொள்வோம். பல சமயங்களில் கடவுளை அடைய நான் விழைகிறதில்லை. ஒரு ரொட்டித் துண்டைத்தான் நாடுகிறேன். ஒரு துண்டு ரொட்டி கிடைக்கவில்லை என்ருல், பைத்தியம் பிடித்துவிடுகிறது. தமக்கு ஒரு வைர ஊசி கிடைக்கவில்லையென்ருல், பெண்டிர் பித்தேறிவிடுகின்றனர். ஆனுல், உண்ணுஞ்சோறும், பருகும்

நீரும் போலக் கடவுள் அவர்களுக்கு அமைகிறதில்லை. உலகி லுள்ள ஒரே உண்மையை அவர்கள் உணர்ந்தார்களில்லை. 'நான் ஒரு வேடனாகத் திகழ விரும்பினால், ஒரு காண்டா மிருகத்தையே தேடித் திரிவேன்; ஒரு கொள்ளைக்காரனாக விளங்க நான் விழைந்தால், ஓர் அரசனின் பொக்கிஷத்தைச் சூறையாடுவேன்,' என்று எங்கள் மொழியில் முதுமொழி யொன்று உண்டு. பிச்சைக்காரர்களிடம் களவாடுதலாலும், எறும்புகளை வேட்டையாடுவதனாலும் பயன் யாதோ! எனவே, நேசிக்க விரும்புவீர்களாயின், ஆண்டவர்பால் அன்பு செலுத்துக. யார் உலகிலிருப்பவைகளைப் பற்றிக் கவலைப்படுகிறார்கள்? நான் ஒளிப்பின்றி உள்ளவாறு மொழிகின்றவன்; ஆனால், எல்லோருக்கும் நன்மையே விரும்புகின்றவன்: உங்களுக்கு உண்மையை உரைக்க அவா உறுகின்றேன்; உங்களைப் போற்ற விரும்பவில்லை. அது என் வேலையன்று. நீங்கள் என் குழந்தைகளைப்போன்ற வர்கள். நான் உங்களுக்கு உண்மையைக் கூற வேண்டும் என விரும்புகிறேன். பொய் புதைந்த வடிவந்தான் இந்த ஞாலம். இவ்வுலகச் சான்றோர்—அறிவுரை வழங்குவோர்—அனைவரும் இதை நன்கு உணர்ந்துள்ளனர். இப்பொய் உலகத்தினின்று தப்ப வேறு புகலிடம் உண்டோ? அவரே நம் வாழ்க்கையின் குறிக்கோள். இவ்வுலகமே நமது இலட்சியம் என்று எண்ணுகிறவர்களின் கருத்துகள் கேடு விளைவிக்கின்றவைகளே. உலகத்திற்கும் உலகத்தைச் சார்ந்த உடலிற்கும் அததற்குரிய சிறப்புண்டு. ஆனால், உலகமே ஒரு முடிவாக விளங்க இயலாது. ஓர் உயர்ந்த குறிக்கோளை எய்த இவை துணைக் கருவிகளாகக் காட்சியளிக்கலாம். தீய ஊழ் உந்த, உலகையே முடிவாகவும், அதைப் பெற ஆண்டவரை ஒரு பாதையாகவும் நாம் அமைத்துக் கொள்கிறோம். நாம் மாதாகோவிலுக்குச் சென்று, "ஆண்டவரே, எனக்கு இவை இவை வேண்டும்; என் பிணியைத் துடைப்பீராக," என்று இறைஞ்சுகின்றோம். சிலர் உடல்நலத்தை வேண்டு கின்றனர். ஓரிடத்தில் யாரோ ஒருவர் இருக்கிறார் இந்தப் பணியை யாற்ற என்று எண்ணியே நாம் வழிபடுகிறோம். இத்தகைய சமயக் கொள்கையை ஏற்று ஒழுகுவதைவிட நாத்திகனாய் இருப்பது சிறந்ததாகும். நான் நவின்றபடி

இந்தப் பத்தியே மிகச்சிறந்தது. பல கோடி ஆண்டுகளானு லுங்கூட நாம் இதை அடைவோமா ? யான் இதை அறிந்தி லேன். நம் புலன்களை உயர்ந்த பொருள்களையே நோக்கிச் செல்லத் தூண்ட வேண்டும். நாம் தொலைக் குறிக்கோளை அடைய இயலாவிட்டாலும் அருகிலாகிலும் வருவோம். உலகம் வாயிலாகவும் ஐம்புல நெறிகள் மூலமாகவும் பையப் பைய ஆண்டவரை நண்ண முயலவேண்டும்.

ஞான குரு

பூரணத்தை அடைவது ஆன்மாவின் விதியேயாகும். ஒவ்வோர் உயிரும் அந்நிலையை அடைந்தே தீரும். நம்முடைய இந்நிலை முற்பிறவியின் வாழ்வின் நடத்தை, எண்ணங்கள், இவற்றின் விளைவேயாகும். இப்போது நாம் புரிவதும் சிந்திப்பதும் நம் எதிர்காலத்தை உருவாக்கும். ஆனால், இது நாம் புறஉதவி பெறுவதைத் தவிர்க்கவில்லை. நம் ஆன்மாவின் மறைந்து நிற்கும் திறமைகள் யாவும் புறத்துணையினாலேதான் எஞ்ஞான்றும் புலப்படுகின்றன. எனவே, உலகில் பெரும்பான்மையினருக்கும் புற உதவி மிகவும் இன்றியமையாததாய் இலங்குகின்றது. விரைவான கவர்ச்சி புறத்திலிருந்தேதான் வருகிறது. அது நமக்கு இருக்கும் திறமை வாயிலாக இயங்குகின்றது. பின்பு வளர்ச்சி ஏற்பட்டு ஆன்மிக வாழ்வு தொடங்குகின்றது. முடிவில் மனிதன் தூய்மையுள்ளவனும் புனிதமானவனும் ஆகின்றான். இவ்வண்ணம் விரைவாகப் புறத்திலிருந்து பிறக்கும் மாறுதல் புத்தகங்களிலிருந்து வர இயலாது. ஆன்மா இன்னோர் ஆன்மாவைத் தவிர வேறு ஒன்றிலிருந்தும் கவர்ச்சியைப்பெற இயலாது. நாம் வாழ்க்கை முழுவதும் நூல்களைப் படித்துக் கொண்டிருக்கலாம். அதனால் நாம் மிகவும் மதிநுட்பமுள்ளவராகலாம். இறுதியில் நாம் ஆன்மிக வளர்ச்சி அடையவில்லையென உணர்கிறோம். எனவே, மதி நுட்பம் ஆன்மிகப் பயிரை வளர்க்கின்றது என்று இயம்புவதற்கில்லை. ஒவ்வொரு நாளும் ஆன்மிக வளர்ச்சிக்குமாறாக அறிவுக்கூர்மை ஓங்குவதை உணரலாம். நூல்கள் வாயிலாக மதி நுட்பத்திற்கு எத்தகைய உதவியையும் பெறலாம்; ஆனால், ஆன்மிக வளர்ச்சி ஒன்றையும் எய்துதல் இயலாது. நாம் நூல்களைப் பயிலுந்தோறும் அவை ஆன்மிக வளர்ச்சியில் உதவுகின்றன என்னும் தவறான கருத்தைக் கொள்ளுகிறோம். ஆனால், ஆழ்ந்து சிந்தித்தால், மதிநுட்பத்திற்குத்தான் நூற்படிப்புத் துணை புரிவதே ஒழிய ஆன்மாவின் வளர்ச்சிக்கு உதவுவதில்லை என்பது நன்கு புலனாகிறது. அதன் விளைவாகத்தான் நம்முள் பலர் ஆன்மிக விஷயங்களைப்பற்றி யாவரும் வியக்கும்

படி பேசுகின்றனர்; ஆனால், செயலுக்கு வரும்போதுதான் நாம் எவ்வளவு அவ்விஷயத்தில் குறைவுள்ளவர்கள் என்பதை உணர்கிறோம். இதற்குக் காரணம் யாதெனில், புறத்திலிருந்து பெறக்கூடிய ஆர்வம் மிக்கத் தூண்டுதலை நூல்களிலிருந்து பெற இயலாமையேயாகும். ஆன்மா தன் பாதையில் விரைந்து செல்ல இன்னோர் ஆன்மாவிலிருந்துதான் அப்பெருந்தூண்டலை அடைய வேண்டும். எந்த ஆன்மாவிலிருந்து இத்தகைய தூண்டுதலும் ஆர்வமும் ஏற்படுகின்றனவோ, அந்த ஆன்மாதான் நமக்கு ஞான குருவாய்த் திகழக்கூடும். எந்த ஆன்மா மீது உணர்ச்சி வெள்ளம் பாய்கின்றதோ, அதுவே சீடனாகும். முதலில் இந்த உணர்ச்சிப் பெருந்தல் எந்த ஆன்மாவிலிருந்து எழுகிறதோ, அந்த ஆன்மாவிற்குப் பரவ வைக்கும் சத்தி வேண்டும். இரண்டாவதாக, எந்தப் பொருளுக்கு அது பரவப்படுகிறதோ அந்தப் பொருளுக்கு அதை இழுத்துக் கொள்ளும் சத்தி வேண்டும். விதையானது உயிர்ச்சத்தி உள்ளதாகவும் சமயக் கழனி பண்படுத்தப் பட்டுமிருக்குமானால், அங்கு மதமானது வியக்கத்தக்க வகையில் வளரும். சமயத்தைப் பற்றிக் கூறுபவர் ஓர் அற்புதமான சத்தி வாய்க்கப் பெற்றோராய்த் திகழவேண்டும். அவ்வண்ணமே செவி சாய்ப்போரும் இருக்கவேண்டும். இருவரும் இப்படி அற்புதமாய் அமையும்போது நல்ல ஆன்மிக வளர்ச்சி ஏற்படும். இவர்களே உண்மையான ஞான குரவர்கள்; உண்மையான மாணவர்கள். மற்றவர்களோ, ஆன்மிக ஒளியைப் பற்றிய ஆராய்ச்சியை ஒரு பொழுதுபோக்காகக் கொள்ளுகின்றனர்கள். அறிவுப் போராட்டத்தில் சற்று அறிவின் முனை கூர்மையுறும் என்பது உண்மையே. ஆனால், அவர்கள் உண்மையான சமயமாம் தொடுவானத்தின் புறத்திலுள்ள ஓர் ஓரத்திலேதான் நிற்கின்றனர்கள். இதில் சற்றுப் பயனுண்டு. சமயத்தை அறிவதற்குரிய வேட்கையை இது எழுப்பும். செல்வமனைத்தும் நாளடைவில் வந்தெய்தும். கழனி பண்பட்டதும் அதற்குற்ற விதை வருகிறது என்பது விளக்க இயலாத இயற்கையின் விதியாகும். ஆன்மா சமயத்தை நாடியதும் சமய ஒளிக்கதிராம் ஓர் அருவி எனப் பாயச் செய்யும் மற்றோர் உயர்ந்த ஆன்மா வரத்தான் வேண்டும்.

தன் பாவம் கழுவ நாடும் தீயோனை உய்விக்கும் அருளாளர் தேடி வருகின்றார். ஒளியைப்பெற விழையும் ஆன்மாவின் சத்தி முதிர்ந்தும் நிறைந்தும் இருக்கும்போது, அந்தக் கவர்ச்சிக்கு எதிரொலி அளிப்பது போல மற்றொரு சத்தி வந்துதான் ஆக வேண்டும்.

ஆனால், ஆன்மிகத் தோட்டப் பாதையிலோ, பல இன்னல்கள் மண்டிக் கிடக்கின்றன. உணர்ச்சியைச் சமயத்தின்பால் எழுந்த ஆர்வம் என்று கருதும் மின்போலத் தோன்றி மறையும் ஆன்மாவிற்கு அதைத் தவறாக எண்ணும் இன்னல் இருக்கிறது. பல முறை இவை நம் வாழ்க்கையில் நிகழ்வதைக் கண்ணுறுகிறோம். நாம் அன்பு பொழியும் ஒருவர் இறந்து விடுகிறார். அக்கணத்தில் நம்மீது ஒரு பேரிடி விழுந்தது போல எல்லாம் தோன்றுகின்றன. அதற்குப் பிறகு நாம் உயர்ந்ததை நாடுகிறோம். நாம் சமயப் பற்றுள்ளவர்களாய் இருக்க விரும்புகிறோம். சில நாள்களில் அந்த அதிர்ச்சிஅலை மறைந்து விடுகின்றது. நாம் எங்கு முன்னே இருந்தோமோ, அங்கேயே கிடக்கப் பார்க்கின்றோம். இத்தகைய மின்னின் நிலையினவாகிய உணர்ச்சிகளை மத ஏக்கம் என்று பலமுறை தவறாக நாம் எண்ணுகிறோம். இமைப்பொழுதில எழுந்து மறையும் உணர்ச்சிகளை நாம் மத ஏக்கம் என்று தவறாக உன்னுகிறவரையில் நமது ஆன்மாவிற்த ஆண்டவரை அடையக்கூடிய உண்மையான பசியோ, வேட்கையோ ஏற்பட இயலுமோ? நாம் அதைப் பெறுமாறு வழங்கும் சத்தியைக் காண்பது அரிதே.

எனவே, உண்மையை எய்த முடியவில்லையே என்று குறை கூறுமிடத்தும், அது மிகவும் இன்றியமையாதது என்று விரும்பும்போதும், நமது ஆன்மாவின் ஆழங்களை முதலில் அளந்து கொள்ள வேண்டும். 'நாம் உண்மையாகவே அன்பை ஆர்வத்துடன் விழைகின்றோமா?' என்று நோக்கப் பெரும்பாலார் அதற்குப் பக்குவமடைந்ததாகத் தெரியவில்லை; நாம் அதை விரும்பவில்லை. ஆன்ம ஒளியை நாடும் துறையில் நமக்குத் தணிப்பரு வேட்கை எழுந்ததில்லை. ஆன்ம அறிவொளியை அளிப்போர்களுக்கு பாடில்லை. ஆன்ம அறிவொளியை அளிப்போர்களுக்கு இவற்றைவிட மிகுதியான இன்னல்கள் உண்டு. ஒன்றுமே அறியாத பலர், எல்லாம் தெரியுமென்ற பெருமித உள்

ளத்தோடு நின்றுவிடாமல், மற்றவர்களையும் தம்முடைய தோளின்மேல் தாங்கிச்செல்ல முயல்கின்றனர். எனவே கண்ணிழந்தவனுக்கு வழி காட்டுவதை இது ஒக்கும். இவ் விருவரும் படுகுழியில் விழுகின்றனர். உலகம் இதைத்தான் மிகுதியாகக் கொண்டுள்ளது. ஒவ்வொருவனும் ஞான குருவாய்த் திகழ விரும்புகிறான். ஒவ்வொரு பிச்சைக்காரனும் ஒரு லட்சம் டாலர்கள் மதிப்புள்ள நன்கொடை கொடுக்க வேண்டுமென விரும்புகிறான். வறியவன் வள்ளலாக விரும்பும் நிலையிலேதான் சிறிதும் ஆன்ம ஒளியில்லாத போலி ஆசிரியர்கள் காட்சி அளிக்கின்றார்கள். எப்படி நாம் ஒரு ஞான குருவைக் கண்ணுறுவது? வெய்யோன் தன் சுடர் விரிக்க மெழுகுவர்த்தி ஒளியின் உதவியை நாடுகிறதில்லை; கதிரவனைக்காண ஒரு மெழுகுவர்த்தியை நாம் ஏற்றி வைக்கின்றோமா? ஞாயிறு எழும்போது அது தோன்றுவதை இயல்பாக உணர்கிறோம். நமக்கு உதவ ஒரு ஞான குரு வரும்போது ஆன்மா உண்மையைத் தேர்ந்துவிட்டதாக உணரும். உண்மை தற்சான்றுகள் கொண்டே மிளிர்ந்து அவற்றின் மீது நிற்கின்றது. அதை மெய்ப்பிப்பதற்குப் புறச்சான்றுகள் வேண்டா. அது தன்னொளி பெற்றுத் திகழ்கின்றது. அது நம்முடைய இதயக் குகையின் ஆழத்தையும் ஊடுருவிச் செல்கின்றது. உலகமே ஒருங்கே மூரி நிமிர்ந்து நின்று, "இதுதான் உண்மை," என்று முழங்குகின்றது. இது போன்றவரே அறிவுரை வழங்கும் சான்றோர். இவர்களைக்காட்டிலும் சற்றுத் தாழ்ந்த நிலையில் இருக்கும் ஆசான்களிடமிருந்தும் நாம் உதவியைப் பெறலாம். ஏனென்றால் யாரிடமிருந்து இந்தச் சத்தியை நாம் பெறுவது என்பது இயல்பாகவே நாம் அறியக் கூடியது அன்று. இந்த உண்மை எக்காலத்திற்கும் பொருந்தும். சில சோதனைகள் இருந்துதான் ஆகவேண்டும். கற்கும் சீடர்களுக்கும் அறிவுரை வழங்குகிறவர்களுக்கும் சில நிலைகள் தேவை. மாணவனிடத்தில் தூய்மை, உண்மை, அறிவு வேட்கை, விடா முயற்சி ஆகியவை விளங்க வேண்டும். மாசு படிந்த ஒரு சமயப்பற்றுள்ளதாய் இருக்க இயலாது. அதுதான் ஒரு பெருங்கட்டுப்பாடு. ஒவ்வொரு நாளும் எல்லாத் துறைகளிலும் தூய்மை இன்றியமையாதது. அடுத்த ஏற்பாடு, அறி

வுத்தாகம். யார் இதை ஆர்வத்துடன் விரும்புகிருர் என்பது தான் வினு. நமக்கு என்னென்ன தேவைகளோ, அவை யாவும் கிடைக்கின்றன. அதுதான் மிகத் தொன்மையான விதி. விரும்புவன வந்து மக்களை அடைகின்றன. நாம் சம யத்தை விரும்புவது நாம் நினைப்பது போல அவ்வளவு எளிதான காரியமன்று. பேச்சுகளைச் செவிமடுப்பதற்காக மதம் அமையவில்லை என்பதை நாம் எப்பொழுதும் அறவே மறந்துவிடுகிறோம். சமயம், நூல்களைப் பயில்வதிலும் கோயில் கொள்ளவில்லை. நம் தீய இயல்புகளோடு வெற்றி காணும் வரையில் அது இரண்டொரு நாள்களிலோ, ஆண்டுகளிலோ அல்லது ஒரு பிறவியிலோ வந்துவிடாது. ஆனல், அதற்கு நூற்றுக்கணக்கான பிறவிகள் இன்றி யமையாதனவாக வேண்டப்படுகின்றன. நீங்கள் அதற்கு ஆயத்தமாகுங்கள். அது விரைவில் கைகூடலாம்: அல்லது எண்ணிறந்த பிறவிகளுக்குப் பிறகும் தோன்றக்கூடும்; நாம் அதைப் பெற்றுக் கொள்ள ஆயத்தமாயிருக்க வேண் டும். எந்த மாணவன் இந்த நோக்கோடு முயன்று வருகின் ருனே, அவன் வெற்றி பெறுவான்.

ஞானகுரு சமய நூல்களின் அதிநுட்பங்களை அறிந் திருக்கிருரா என்பதை முதலில் ஆராய வேண்டும். உலகம் முழுவதும் குர்-ஆனையும், விவிலிய நூலையும், மறைகளையும் ஓதுகின்றது. ஆனல் இவை அனைத்தும் சமயத்தின் உலர்ந்த வெற்று எலும்புகளாம் சொற்களும் இலக்கண மும், சொற்றெடரும் சொல்லிலக்கணமும் ஆகும். ஓர் ஆசிரியர் ஒரு புத்தகத்தின் வயதைக் கண்டுபிடிக்கலாம். ஆனல், சொற்களெல்லாம் பொருள்களின் வெளித் தோற்றங் களே ஆகும். யார் சொற்களோடு மிகுந்த தொடர்பு கொண்டு அவற்றில் ஆழ்கின்ருரோ, சொற்களில் மனத்தை ஓடவிட்டுவிடுகிருரோ, அவர் ஆன்மாவை இழக்கின்ருர் எனக் கூறலாம். எனவே, ஆசிரியர் சமய நூல்களின் இத யத்தை அறிந்திருக்க வேண்டும். சொற்கள் ஒரு வலையே. அவை ஒரு பெரிய காட்டைப் போன்றவை; அக் காட்டில் மனித உள்ளம் தன் நிலையை உணர்ந்து திசை காணுது தவிக்கின்றது. சொற்களும் பலவிதமாகத் தொடர்புபடுத்து வது, கவினுற ஒரு மொழியைப் பேசுவது, வேதங்களின்

நடையைப் பலவிதமாக விளக்குவது ஆகியவை எல்லாம் படித்தவர்கள் இன்புறுவதற்காகவே அமைந்துள்ளன. இவை தாய்மைக்கு நம்மை அழைத்துச் செல்லுவதில்லே. இவற்றையெல்லாம் வழங்குகிறவர்கள் தங்கள் அறிவைப் புலப்படுத்துவதற்காகச் செய்கிருர்கள். அதனுல், உலகம் அவர்களைக் கற்ரேர்களெனக் கருதி, அவர்களைப் புகழும். உலகத்தின் உண்மையான ஞானகுரவர்களுள் ஒருவர்கூட இப்படிப் புத்தகங்களைப் பல முறையில் விளக்க முற்பட வில்லே. அவர்கள் பலவாருன புத்தக விமரிசனங்களைச் செய்யவில்லே. "இந்தச் சொல்லிற்கு இதுதான் பொருள்; இதுதான் இவ்வுலகத்திற்கும் அடுத்த உலகத்திற்கும் உள்ள தொடர்பு," என்றெல்லாம் அவர்கள் கூறவில்லே. உலக ஞானகுரவர்களைப் பற்றி நீங்கள் கவனித்துப் பாருங்கள். ஒருவர்கூட அவ்வழிச் செல்லவில்லே. எனினும், அவர்கள் போதித்தார்கள். ஆனல், மற்றவர்கள் — போதிப்பதற்கு ஒன்றுமில்லாதவர்கள் – ஒரு சொல்லே எடுத்துக்கொண்டு அதன் தோற்றத்தைப் பற்றி, அதை முதலில் பயன்படுத்தி யவர்களைப்பற்றி, அவர்கள் என்ன அருந்தி வந்தார்கள், எப்படி அவர்கள் உறங்கினுர்கள் என்பதைப் பற்றி, மூன்று காண்டங்கள் எழுதுவார்கள். என் குருநாதர் ஒரு கதை சொல்லுவார்: சிலர் ஒரு மாந்தோப்பிற்குச் சென்றனர். அக் குழுவில் பெரும்பாலார் இலேகளை எண்ணுவதிலும் அவற் றின் நிறத்தைக் கவனிப்பதிலும் கொம்புகளின் எண்ணிக்கை முதலியவைகளைப் பார்ப்பதிலும் முனைந்திருந்தனர், பிறகு இவற்றைப் பற்றிக் குறிப்புகளும் எழுதிக்கொண்டனர். பிறகு ஒவ்வொன்றைப் பற்றியும் மிகுந்த வியப்புடன் தர்க் கித்துக்கொண்டிருந்தனர். ஆனல் அவர்களுள் அறிஞன் ஒருவன் தனியே அமர்ந்து, மாம்பழத்தைத் தின்றுகொண் டிருந்தான். இவர்களுள் யார் கெட்டிக்காரன்?

இலேகள், கொம்புகள், குறிப்புகள் எழுதுதல் ஆகியவை களை மற்றவர்களின் கவனத்திற்கு விட்டுவிடுங்கள். உரிய இடத்தில் அத்தகைய காரியங்களுக்கு மதிப்புண்டு. ஆனல் ஆன்மிகத் துறையில் அதற்கு இடம் இல்லே. இத்தகைய அலுவல்களினுல் மனிதன் ஆன்மிகத்தைப் பெற இயலாது. ஆன்மிக மனிதர்களுள் ஒருவரைக்கூட இந்த இலே எண்ணு

பவர்கள் நடுவில் காண இயலாது. மனிதனது மிக உயர்ந்த இலட்சியம் சமயமே. அதுதான் ஓர் உயர்ந்த ஒளி. அது தான் மிகவும் எளிதானது. அதற்கு இலேகள் எண்ண வேண்டிய அவசியமில்லை. நீங்கள் கிறித்தவராக விரும்பினால், ஏசுநாதர் செருசலேத்தில் பிறந்தாரா, பெத்திலகேமில் பிறந்தாரா என்றோ, அவர் மலையின்மீது அமர்ந்திருந்து எந் நாளில் சொற்பொழிவு ஆற்றினார் என்றோ அறிய வேண்டுவ தில்லை. உமக்குத் தேவையானதெல்லாம் அவருடைய மலைச் சொற்பொழிவை உணர்ந்துகொள்ள வேண்டுவது மட்டுமே. எப்போது அது கூறப்பட்டது என்பதை 2,000 சொற்களில் படிக்கத் தேவையில்லை. அது பண்டிதர்களின் மகிழ்ச்சிக் குத்தான் இன்றியமையாதது. அவர்கள் அதைப் பெறட்டும். அதற்கு நீங்கள் முடிவு கூறிவிடுங்கள். நாம் தீஞ்சுவை மாங்கனியை அருந்துவோமாக.

ஆசிரியருக்கு இருக்க வேண்டிய இரண்டாவது இலட்சணம், அவர் பாவமற்றவராய் இருப்பது. இங்கிலாந்திலுள்ள நண்பர் ஒருவர், "ஆசிரியரது தோற்றத்தைக் கவனிக்க வேண்டுமா, அல்லது அவர் சொல்வதை மட்டும் மதிப்பிட்டு ஏற்றுக்கொள்ளலாமா?" என்று கேட்டார். அது அப்படியன்று. சலன சாத்திரத்தையோ, இரசாயன சாத்திரத்தையோ அல்லது பௌதிகக் கலையையோ ஒருவன் எனக்குக் கற்றுக் கொடுக்க வேண்டுமானால், அவன் எத்தகைய குணங்களையும் பெற்றிருக்கலாம். ஏனென்றால், இவற்றுக்கு இன்றியமையாதது மதிநுட்பந்தான். அவனுடைய திறமை அவனுக்குள்ள அறிவுக்கூர்மையைப் பொறுத்துள்ளது. சிலர் ஆன்மிக வளர்ச்சியை எள்ளளவும் பெறாமலே மிகவும் வியக்கத்தக்க மதிநுட்பத்தைப் பெற்றிருக்கலாம். ஆனால், ஆன்மிகத் துறையில் முதலிலிருந்து இறுதிவரையிலும் மாசு படிந்த ஒரு ஆன்மாவிற்குச் சிறிதும் ஆன்மிக ஒளி இருக்க இயலாது. எனவே, அவனால் எதைக் கற்பிக்க இயலும்? அவன் ஒன்றையும் அறியான். ஆன்மிக உண்மை, தூய்மை ஒளி போர்த்துள்ளது. "யாருடைய உள்ளம் தூய்மையாய் இருக்கிறதோ, அவர் திருவுற்றவர்; ஏனென்றால் அவரே ஆண்டவரைக் காணலாம்." இந்த உரையில் சமயத்தின் சாரமுள்ளது. இதை நீங்கள் அறிந்துவிட்டால் முன்னே

சொன்ன அனைத்தையும் நீங்கள் அறிவீர்கள் ; இனிமேல சொல்லுவனவற்றையும் உணர்ந்துகொள்வீர்கள். நீங்கள் இதைத் தவிர வேறு எதையும் பார்க்க வேண்டுவதில்லை' ஏனென்றால், இந்த ஒரு வாக்கியத்தில் எல்லாம் உள்ளன' —எல்லாத் தத்துவங்களும் உள்ளன. உலகில் தோல்வி அடையும்போது, அதுதான் உலகத்தைக் காப்பாற்ற வேண்டும். ஆன்மா பரிசுத்தமாகும் வரை, அப்பாற்பட்டவற்றின் தோற்றமோ ஆண்டவரின் தோற்றமோ புலப்படாது. ஆதலால் ஆன்மிகத் தத்துவ ஆசிரியருக்கு மனத்தூய்மைதான் இன்றியமையாதது. அது அவரிடம் இருக்கிறதா என்றும் அவர் என்ன கூறுகிறார் என்றும் நாம் கவனிக்க வேண்டும். நுண்ணறிவு உடைய ஆசிரியரிடம் அவர் எப்படிப்பட்டவர் என்பதைவிட, அவர் என்ன இயம்புகின்றார் என்பதைத்தான் கவனிக்கிறோம். ஞானகுரவரிடம் அவர் எப்படிப்பட்டவர், அவர் மாசற்றவரா என்று நோக்க வேண்டும். மாசற்றவராயிருந்தால் அவரது சொல்லுக்கு மதிப்பிருக்கும். ஏனென்றால், ஆன்மிகச் சக்தியை செலுத்த வேண்டிய அவரிடமே அச்சக்தி இல்லாவிட்டால், அவர் எப்படி அதைச் செலுத்த இயலும்? ஆசிரியருடைய மனத்திலிருந்து ஒருவிதமான அலை மாணவனது மனத்திற்குச் செலுத்தப்படுகிறது. எதுபோல் என்றால், வெப்பத்தை வெளியிடும் ஒன்றிற்கு வெப்பமிருந்தால்தான் அதை வெளியிட இயலும் ; இல்லையேல் இயலாது. இது ஒருவரிடமிருந்து அடுத்தவர்க்குச் சக்தியை மாற்றுவதாகும் ; மதிநுட்பத்தை மாத்திரம் தூண்டுவதன்று. ஏதாவது உண்மையானதும், உபயோகமானதும் இருக்குமானால், அது ஆசிரியரிடமிருந்துதான் வந்தாக வேண்டும். அப்பொழுதுதான் அது மாணவனைச் சாரும். எனவே, ஆசிரியர் உண்மையானவராய் இருப்பது முதலில் அவசியமாகிறது.

மூன்றாவது, அவரது நோக்கம். அவர் பெருமைக்கோ, பேருக்கோ போதிக்கிறாரா, அல்லது உங்கள் மேலுள்ள தூய அன்புக்காக ஓதுகின்றாரா என்பதையும் அறிந்துகொள்ளுங்கள். ஆசிரியரிடமிருந்து ஆன்மிகச்சக்தி மாணவனுக்கு அன்பு வழியாகத்தான் செல்ல வேண்டும் ; அன்பைத் தவிர வேறு எவ்வாற்றாலும் அதைச் செலுத்த இயலாது. இலாபத்

திற்கோ, பெயருக்கோ இருந்தால், அந்த உந்தும் சத்தியை அவை மாசுறச் செய்யும். எனவே, எல்லாவற்றையும் அறிந்தவரே ஆசிரியராய் இருக்க இயலும். மேற்கூறிய நிபந்தனைகள் எல்லாம் உங்களுடைய ஆசிரியரிடம் இருந்தால், நீங்கள் தீங்கு விளையாத நல்லோரிடத்தில் இருப்பதாக உணரலாம். இந்த நிபந்தனைகள் எல்லாம் அந்த ஆசிரியரிடம் இல்லாவிட்டால், அவரிடம் கற்பது பேரின்னலேத்தான் விளைவிக்கும். சில சமயங்களில் அவர் நமக்கு நன்மையை விளைக்காவிட்டாலும், தீமையை விளைத்துவிடகூடும். இத்தகைய சூழ்நிலையிலிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். இதிலிருந்து யாராலும் அறிவுரை வழங்குவது இயலாதது என்பது புலப்படுகிறது. 'அருவிகளும் கற்களும் நமக்கு அறிவொளி அளிக்கின்றன,' என்று ஒரு கவிதையில் இசைக்கப்பட்டிருப்பது மிகப் பொருந்தும். ஆனால், இவ்வுண்மை அவனிடம் இல்லையென்றால் ஒருசிறு உண்மையைக்கூட ஒருவனால் உணர்த்துவது இயலாது. யாருக்கு அருவிகள் அறிவுரை அளிக்கின்றன ? உண்மையான ஆசிரியரிடமிருந்து வரும் ஒளியால் எந்த இதயத் தாமரை மலர்ந்து இருக்கிறதோ, அந்த இதயத்திற்குத்தான் அந்த அறிவுரைகள் கிட்டும். ஆன்ம விழிப்பு எழுந்த அஞ்ஞான்றே அருவிகளிடமிருந்தும் கற்களிடமிருந்தும் அறிவுரை பெற இயலும். அப்போது அவற்றிடமிருந்தும் ஆன்மிக போதனை பெறலாம். ஆனால், அலராத உள்ளம் அருவிகளையும் கற்களையுந்தான் காண இயலும். ஒரு குருடன் பொருட்காட்சிக்குச் செல்லலாம். ஆனால், அவன் செல்வது பயனற்றதாகும். அவன் கண்கள் முதலில் திறக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் அவன் பொருள்களை அறிந்துகொள்ள இயலும். சமயத்தின் கண்களைத் திறப்பவர் ஆசிரியரே. எனவே ஆசிரியருக்கும் நமக்கும் உள்ள தொடர்பு, நமக்கும் நம் முன்னோருக்கும் உள்ள தொடர்பாகும். ஆசிரியர் ஆன்மிக முன்னோராவர். சீடன் ஆன்மிகச் சந்ததியாவன். விடுதலையைப் பற்றியும், சுதந்தரத்தைப் பற்றியும் பேசுவது நல்லதுதான். ஆனால் பணிவு, கீழ்ப்படிதல், நம்பிக்கை, பயபக்தி இவை இல்லையேல், சமயமில்லை. இந்தத் தொடர்பு, ஆசிரியருக்கும் மாணவர்களுக்கும் இருந்

தால்தான் உயர்ந்த ஆன்மாக்கள் வளர இயலும் என்பது ஒரு சிறந்த உண்மை. ஆனல், அவற்றைப் புறக்கணித்தவர்கட்கு மதம் ஒரு பொழுதுபோக்கு. எந்த நாட்டில், எந்த மாதாகோயிலில் இந்தத் தொடர்பு ஆசிரியருக்கும் மாணவர்களுக்கும் இல்லையோ, அங்கே ஆன்மிகச் சத்தி அறியப்படாத ஓர் அருஞ்செல்வமாகும். அது அவ்வுணர்வின்றி வருவதில்லை. அதைப் பரவ வைக்க ஒருவராலும் இயலாது. அதைப் படிக்கிறவர் அனைவரும் சுயேச்சையாளரே. எனவே யாரிடமிருந்து அவர்கள் படிப்பது ? அப்படி வந்தால், அவர்கள் அப்படிப்பை ஏற்க வருவார்கள். ‘ஒரு டாலர் மதிப்புள்ள சமயத்தைக் கொடுங்கள் ; அதற்கு நான் ஒரு டாலர் கொடுக்கக் கூடாதா ?’ எனச் சமயத்தை இவ்வாறு பெற இயலுமோ ?

ஆன்மிக ஞானகுரு ஒருவரிடமிருந்து நமக்குக் கிடைக்கும் அறிவைக் காட்டிலும் உயர்ந்ததோ, புனிதமானதோ ஒன்றுமில்லை. ஒரு மனிதன் பூரணயோகியானல், அது தானுகவே அலருகின்றதே ஒழிய, நூல்வாயிலாக ஏற்படுவதில்லை. நீங்கள் உலகத்தின் நான்கு மூலைகளிலும் போய் முட்டி மோதிக்கொண்டாலும் அல்லது இமயவரை, ஆல்ப்ஸ், காக்கஸஸ்போன்ற மலைகளிலோ கோபி, சகாராப்போன்றகொடிய பாலைவனங்களிலோ, கடலின் அடியிலோ போய் மோதிக்கொண்டாலும் அது வாராது. அதற்கு ஓர் ஆசிரியரைத் தான் தேடிக்கண்டுகொள்ளவேண்டும். ஆசிரியரைக் கண்டுபிடியுங்கள் ; ஓர் இளங்குழவியைப்போல அவருக்கு ஊழியம் செய்யுங்கள். உங்கள் இதயத்தை அவரது ஆட்கொள்ளும் ஆற்றலுககுத் திறந்துவிடுங்கள். அப்போது ஆண்டவரையே அவரது உருவத்தில் நோக்குவீர்கள். ஆசிரியரே ஆண்டவர் என்பதில் நம் கவனம் வேரூன்றவேண்டும், கவனம் ஓங்க ஓங்க, ஆசிரியரின் உருவம் அப்படியே மறைந்து ஆண்டவரின் உருவந்தான் அங்கே இடம்பெறும். யார் உண்மையுடனும், பயபக்தியுடனும், அன்புடனும் வருகிறுர்களோ, அவர்களிடம் மெய்யான ஆண்டவர் மிகவும் வியக்கத்தக்க சொற்களில் உரையாடுகின்றுர். “எந்த இடத்தில் நீ நிற்கிருயோ, அந்த இடம் மிகவும் புனிதமானது. எனவே, உனது செருப்பைக் கழற்றி வை.” எந்த இடத்தில் அவர்

பெயர் கூறப்படுகிறதோ, அந்த இடம் மிகவும் புனிதமான இடம். எனவே, ஆண்டவரின் பெயரைக்கூறுபவர் எவ்வளவு உயர்ந்தவர்! அப்படியிருக்க, ஆன்மிக உண்மைகளை வெளியிடும் ஒரு மனிதரை நாம் எவ்வளவு பயபக்தியுடன் அணுக வேண்டும்! இந்த உணர்வோடுதான் நமக்கு அறிவுரை வழங்கப்படுகின்றது. இத்தன்மை வாய்க்கப் பெற்ற ஆசிரியர்கள் உலகில் மிகக் குறைவாகத்தான் இருக்கிறார்கள். இதில் யாதோர் ஐயமும் இல்லை; உலகம் அவர்கள் இல்லாமல் இல்லை. எந்தக் கணத்தில் இந்தச் சான்றோர்கள் உலகில் இல்லாமல் மறைந்து விடுகிறார்களோ, அந்த நிமிடத்தில் உலகம் நரகமாக மாறிவிடும். இந்த ஆசிரியர்களே வாழ்க்கைப் பொழிலிற் பூத்த அழகான மலர்கள். இவர்கள் உலகம் முன்னேறிச் செல்ல உதவிபுரிகின்றார்கள். இவர்களது ஆற்றலாலேதான் சமுதாயத்தில் இணைப்புகள் பிணைத்து வைக்கப்படுகின்றன

இதற்கப்பால் ஒரு ஞான குரவர் திருக்கூட்டம் உள்ளது. அக்கூட்டத்தினரே உலகத்துக் கிறிஸ்தவர்கள். அவர்களே எல்லா ஆசிரியர்களுக்கும் ஆசிரியர்கள். ஆண்டவரே மனிதராய் வந்துள்ளார். அவர்கள் மிகவும் உயர்ந்தவர்கள். அவர் தொட்ட மாத்திரத்திலேயே, விரும்பிய மாத்திரத்திலேயே, மாணவர்க்கு ஆன்மிக உணர்ச்சியை ஏற்படுத்த இயலும். அதன் விளைவாகக் கீழ்மக்களும் ஒரு நொடிப்பொழுதிலேயே ஞானிகளாகிவிடுவார்கள். நீங்கள் அவர்கள் எப்படிக் காரியங்களைச் செய்கிறார்கள் என்பதைப் படிக்கவில்லையா? அத்தகைய ஆசிரியர்களைப்பற்றி நான் கூறவில்லை. அவர்கள் ஆசிரியர்களுக்கெல்லாம் ஆசிரியர்கள். ஆண்டவரின் படைப்புகளில் மதப்பொலிவுற்றுத் திகழும் அவர்கள் மலைச் சிகரங்கள் போன்றவர்கள். மனித இனத்திற்கே அவர்களின்றி ஆண்டவரைக் காண இயலாது. அவர்களை நாம் துதிக்காமலும் இருக்க இயலாது. நாம் அவர்களைத் துதிக்கக் கடமைப்பட்டவர்கள்.

ஒரு மனிதனும் ஆண்டவரை நேரிலே தரிசித்ததில்லை; ஆண்டவரின் மைந்தரிடந்தான் அவரைக் கண்ணுறுகிறான். ஆண்டவரை நம்மால் பார்க்க இயலாது. அவரை நாம் பார்க்க முயன்றோமானால், நாம் ஆண்டவரின் உண்மையான

உருவத்தை வேறாகக் காண்போம். இந்தியக் கதை ஒன்று உண்டு. ஒன்றும் தெரியாத ஒருவன் சிவபெருமானது உருவத்தை உலோகத்தால் செய்ய வேண்டிக்கொள்ளப்பட்டான். பலநாள் அரும்பாடுபட்டு அவன் ஒரு குரங்கின் உருவத்தைச் செய்தான். எனவே, ஆண்டவரின் உருவத்தை நாம் செய்ய முயலும்போது அவருக்கு மாறுபட்ட ஓர் உருவத்தையே படைத்துக்கொடுக்கிறோம். நாம் மனிதராய் இருக்கும் வரையில் மனிதரைக் காட்டிலும் அவர் உயர்ந்தவர் என்பதை அறிந்துகொள்ள இயலாது. நம்முடைய மனித இயல்பிலிருந்து நமக்கு ஒரு காலம் உயர்வு வரும். அப்போதுதான் அவருக்குரிய தனி உருவை உணர்ந்துகொள்ள இயலும். நாம் மனிதராய் இருக்கும் வரையிலும் மனித வடிவிலேதான் அவரை வணங்கவேண்டும். உங்களால் இயலும் வரையிற் பேசுங்கள்; முயற்சி செய்யுங்கள். மனித வடிவத்திலிருந்து ஆண்டவரைப் பார்க்க இயலாது. நாம் மதிநுட்பமான, அறிவுச் செறிவுள்ள சொற்பொழிவுகளை ஆற்றலாம். நாம் மிகவும் அறிவாற்றல் பெற்றவர்களாகத் திகழலாம். கடவுளைப் பற்றிய கதைகளெல்லாம் வெற்றுரை என்று சான்று கூறலாம். ஆனால் நாம் செயல்முறைப் பகுத்தறிவுக் கோணத்திலிருந்து நோக்குவோம். இந்த மிகவும் வியத்தகு மதிநுட்பத்திற்குப் பின்னே என்ன இருக்கிறது? வெறுஞ் சூனியமே. ஒன்றுமே இல்லை. பயனற்ற நுரைதான் மிதந்து வருகிறது. கடவுள் இல்லை என்று சொற்பொழிவாற்றுகிறவர்களை மற்றொரு முறை அவர்களைச் சந்திக்கும்போது ஆண்டவரைப்பற்றி அவர்களது கருத்து என்னவென்று வினவுங்கள். 'எல்லா வல்லமையும் உடையவர்; எல்லாம் அறிந்தவர்; எங்கும் பரந்துள்ளவர், எங்கும் அன்புமயமாய் நிறைந்தவர்,' என்பவற்றிற்கு என்ன பொருளென அவர்களைக் கேளுங்கள். அவர்களுக்கு ஒன்றுமே இயம்ப இயலாது. ஒரு கருத்தை அவர்கள் ஒழுங்குபடுத்த இயலாது; ஒரு நூலைப் படித்தறியார். சாலையில் செல்லும் ஒருவனைவிட அவர்கள் எந்த வகையிலும் மேலானவரல்லர். தெருவிற் காணும் அம்மனிதன் உலகத்தைத் தொந்தரவுசெய்யாமல் அமைதியாக இருக்கிறான். அவனுக்குத் தனக்கென ஞான மில்லை. எனவே, அவனும் மற்றவர்களும் ஒரே நிலையிலேதான் இருக்கிறார்கள்.

தெளிவாகத் தெரிந்துகொள்ளும் நிலைதான் மதம். பேச்சிற்கும் இந்த உணர்ச்சிக்குமுள்ள நுட்பமான வேறுபாட்டை நீங்கள் புரிந்துகொள்ளவேண்டும். நீங்கள் ஆன்மாவிற் காண்பதுதான் தெளிவுபட்டதாகும். எனவே, 'எங்கும் நிறைந்தவர்,' என்பதற்கு என்ன பொருள்? ஆன்மாவைப் பற்றிய கருத்தே மனிதனுக்கு இல்லை. அதை அவன் தன் முன்னுள்ள பொருள்களோடு இணைத்தே நினைக்கவேண்டும். அவன் நீல வானத்தையோ, பரந்த வயல்களையோ, கடலையோ, அல்லது பெரிதாயுள்ள வேறு எதையோதான் நினைக்கவேண்டும். அதற்கு மாருக, அவன் எப்படி ஆண்டவரை நினைப்பது? எனவே, நீங்கள் என்ன செய்கிறீர்கள்? கடவுளை நினைத்துக்கொள்ளுவதற்கென எங்கும் நிறைந்த ஒரு பொருளைப்பற்றிப் பேசுகிறீர்கள். கடவுள் கடலா? இத்தகைய பயனற்ற, நுரைபோன்ற ஆராய்ச்சிக்கு முற்றுப் புள்ளி வைத்து விடுவோம். நமக்குப் பகுத்தறிவுதான்வேண்டும். பகுத்தறிவைப்போலத் தனிப்பட்ட பொருள் ஒன்றுமே இல்லை. உலகம் முழுவதும் பெரும்பாலும் பேச்சிலேதான் ஆழ்ந்துள்ளது. நம்முடைய இன்றைய மனித உடலமைப்பில், ஆண்டவரை மனிதராகப் பார்க்கும் எல்லையிலேதான் நாம் கட்டுண்டிருக்கிறோம். எருமைகள் ஆண்டவரை வழிபட்டால், அவரை அவை ஒரு பெரிய எருமையாகத்தான் நினைக்கும். ஒரு மீன் கடவுளை வழிபடவேண்டுமானுல், அது அவரை ஒரு பெரிய மீன் போன்றுதான் மனத்தில் கருதிக் கொள்ளவேண்டும். மனிதன் ஆண்டவரை மனிதராகவே நினைக்கவேண்டும்.

இவை வெறுங் கற்பனையல்ல. நீங்கள், நான், எருமை, மீன்—யாவும் பலதரப்பட்ட பாத்திரங்கள். இவையனைத்தும் தமது கொள்ளளவுக்கேற்றவாறு நீரை நிறைத்துக்கொள்ளக் கடவுளிடத்தில் செல்கின்றன. மனிதனில் மனிதனுக்கேற்றபடி, எருமையில் எருமைக்கேற்றபடி, மீனில் மீனுக்கேற்றபடி இந்த ஒவ்வொரு பாத்திரத்திலும் தண்ணீர்தான் உள்ளது. அதுபோலவே தம்மிடமுள்ள ஆண்டவரை மனிதர் மனிதராகவும், விலங்குகள் விலங்குகளாகவும் தத்தம் இலட்சியத்திற்கேற்றவாறு நோக்குகின்றனர். இவ்வண்ணந்தான் அவரைப் பார்க்க ஒரு வழியுண்டு. இதைவிட வேறு வழியில்

லாததாலேதான் அவரை மனிதராகவே வழிபடவேண்டும். இரண்டு வகையான மனிதர்கள் ஆண்டவரை மனிதராக வணங்குவதில்லை. அவர்கள் சமயமற்ற மானிட விலங்குகளும், மானிட வாழ்விற்கப்பால் சென்ற உயர்ந்த யோகிகளும் ஆவார்கள். அவர்கள் மனத்தையும் உடலையும் துறந்து விட்டவர்கள். அவர்கள் இயற்கையின் வரம்பைக் கடந்தவர்கள். இயற்கை முழுவதும் அவராகிவிட்டது. அவருக்கு உடலோ, மனமோ இல்லை. அவரை ஆண்டவராகத்தான் வழிபட இயலும். ஏசுநாதரையும் புத்தரையும் ஆண்டவராகத்தான் வழிபட இயலும். அவர்கள் ஆண்டவரை மனிதராக வழிபடவில்லை. மற்றவன் மானிட விலங்காவான். இவ்விரு வகையான கருத்துகளை நீங்கள் நன்கு அறிவீர்கள். அதுபோலத்தான் படித்தவர்களும் படிக்காதவர்களும் காட்சியளிக்கிறார்கள். இருவரும் ஒருவரையும் வழிபடுவதில்லை. ஆண்டவரை வழிபடும் தேவையை உணராத பாமர மக்கள் அவரை வழிபடுவதில்லை. ஆண்டவரோடு ஐக்கியமாகி உயர்ந்த அறிவைப் பெற்றவரும் ஆண்டவரை வழிபடுவதில்லை. கடவுள் கடவுளையே வழிபடுவதில்லை. இவ்வாறு வாழும் இந்த இரு துருவங்களுக்கு இடையில், 'நான் ஆண்டவரை மனிதராக வழிபடுவதில்லை,' என்று யாராவது உங்களுக்குச் சொன்னால், அவனைப்பற்றி எச்சரிக்கையாய் இருங்கள். அவன் பொறுப்பற்ற பேச்சாளி. அவனுடைய சமயம் பயனற்ற நுரைபோன்ற வெற்றுச் சிந்தனையாளர்களைத்தான் சாரும். அது போலி அறிஞர்களின் பொருளற்ற பிதற்றலே.

ஆகையால், ஆண்டவரை மனிதராக வழிபடுவது இன்றியமையாதது. இவ்வாறு ஒரு மனிதக் கடவுளை உடைய இனங்கள் மிகவும் பாக்கியமுள்ளவை. கிறித்தவர்களுக்கும் கிறித்து உண்டு. அவர்கள் கிறித்துவை எந்தக் காரணத்தை முன்னிட்டும் கைவிட்டுவிடவேண்டா. அவரையே நன்றாக அண்மையில் சிக்கெனப் பிடித்துக்கொள்ளட்டும். எனவே, ஆண்டவரை மனிதராகப் பார்ப்பதுதான், ஆண்டவரைப் பார்க்கும் இயற்கையான வழி. ஆண்டவரைப்பற்றிய எண்ணங்களெல்லாம் அங்கே கூடும். கிறித்தவர்களுக்குள்ள பெரிய வரம்பு என்னவென்றால், கிறித்துவைத் தவிர ஆண்ட

வரின் அவதாரங்களுக்கு அவர்கள் மதிப்புக் கொடாமையே. கிறித்து ஆண்டவரின் அவதாரம். அவரைப் போல்பவர் களே புத்தரும், மற்றும் நூற்றுக்கணக்கானவர்களும். ஆண்டவருக்கு எங்கும் வரம்பை ஏற்படுத்தாதீர்கள். கிறித் தவர்கள் ஆண்டவருக்குச் செலுத்தவேண்டிய மரியாதையை யெல்லாம் கிறித்துவிற்குச் செலுத்தட்டும், அதுதான் அவர் களுககுள்ள ஒரே வழிபாடு. ஆண்டவரை அப்படியே வழி பட இயலாது. அவர் உலகிலுள்ள மிகப் பெரியவர் ஆவர். ஆண்டவராய் அவதரித்தவரைத்தான் நாம் தொழ இயலும். கிறித்தவர்கள் கிறித்துவின் பெயரால் வழிபடுவது நல்லது. ஆண்டவரை வணங்காமல் கிறித்துவையே வணங்குவது தான் மேலானது. மானிடரது தோல்வியை அறிந்த ஆண்ட வர் மானிடருக்கு உதவி புரிய மனிதராகிவிடுகிருர். "அறம் தேய்ந்து மறம் எப்பொழுது தலைவிரித்தாடுகின்றதோ, அப் போது மனிதருக்கு உதவியளிக்க நான் வருகிறேன்," என்று கண்ணபிரானுர் உரைக்கின்ருர். "எல்லாம் வல்ல நான், எங்கும் பரந்துள்ள நான், இந்தப் பிரபஞ்சத்திற்குக் கடவு ளான நான் மனித உடலை எடுத்து வந்திருக்கிறேன்," என்று ஓராத மதியிலிகள் 'அது எப்படியிருக்க முடியும்?' என்று அறியாமல் என்னை ஏளனம் செய்கிருர்கள். அவர் களது மனத்தைப் பேயிருட்டாகிய முகில் மறைத்திருக்கி றது. ஏனவே, அவரது அவதாரத்தில் அவர்களால் ஆண்ட வரைப் பாாக்க இயலாது போய்விடுகின்றது. இத்தகைய ஆண்டவரின் அவதாரங்களை வழிபட்டாகவேண்டும். அது மாத்திரமன்றி, அவர்களையே நாம் வழிபட இயலும். அவர் கள் பிறந்த நாளும் உலகைவிட்டு நீங்கிச் சென்ற நாளும் மிகவும் பயபக்தியோடு நினைக்கவேண்டிய நாட்கள். கிறித்து வை நான் வணங்கும்போது, கிறித்து எப்படி அவரை வணங்க வேண்டுமென்று விரும்பினுரோ, அப்படியே வணங் குவேன். அவர் பிறந்த அந்தப் புனித நாளில், அவரை நினைத்துக் கொண்டாடுவதைவிட, உண்ணுவிரதம் ஓம்பு வதை நான் விரும்புகிறேன். அவர்களைப் பற்றி அடிக்கடி நினைக்கும்போது அந்தப் பெரிய ஆன்மாக்கள் நம் மனத்தில் அவதரித்து அவர்களைப் போலவே நம்மையும் ஆக்குகின் ருர்கள். நமது இயல்பு மாறி நாமும் அவர்களைப்போல் ஆய்

விடுகிறோம். புத்தரையும் கிறித்துவையும் காற்றில் பறந்து செல்லும் ஆவிகளோடு ஒருமிக்கச் சேர்த்துவிடாதீர்கள். இப்படிக் கருதுவது தெய்வ நிந்தனையாகும். கிறித்துவின் ஆவி நடனமாட வருகிறது என்று எண்ணும் புனிதமற்ற ஒரு கூட்டத்தின் நடிப்பை இந்த நாட்டில் நான் பார்த்திருக்கிறேன். கடவுளின் அவதாரங்கள் அவ்வண்ணம் உலகில் வருவதில்லை. கிறித்துவானவர் தொட்டவுடனே மனிதனுடைய ஆன்மாவே மாறுதலடைகின்றது. கிறித்துவைப் போல அவன் மாறிவிடுவான். அவனது வாழ்க்கை முழுவதும் புனிதமாகிவிடும். நல்ல ஆன்மிகச் சத்தி, அவனது உடலிலுள்ள மயிர்க்கால்தோறும் பொசிந்து எட்டிப் பார்க்கும். கிறித்து நோய்களைக் குணப்படுத்தியதிலும், அவர் செய்த அற்புதங்களிலும் அவருக்குள்ள என்ன சத்தி வெளிப்பட்டுள்ளது? சாதாரண மானிடரோடு அவர் இருந்ததால் இத்தகைய அற்புதங்களைத்தான் அவரால் செய்ய முடிந்தது. இந்த அற்புதம் எங்கே நிகழ்ந்தது? யூதர்களிடையே இந்த அற்புதம் செய்யப்பட்டது. யூதர்கள் அவரை ஏற்றுக் கொள்ளவில்லை. அது எங்கே நிகழவில்லை? ஐரோப்பாவில். அற்புதமான செயல் செய்வது கிறித்துவை ஏற்காத யூதர்கள்பால் சென்றது. மலையின்மேல் செய்த சொற்பொழிவு அவரை ஏற்ற ஐரோப்பாவை வாழ வைத்தது. மனித ஆன்மா உண்மையைத் தழுவிப் பொய் புனைந்ததை உதறித் தள்ளிவிட்டது. கிறித்துவின் சத்தி மருத்துவப் பணியிலும் அற்புதச் செயல்களைப் புரிவதிலும் தங்கி நிற்கவில்லை. அறிவிலிகளும் அவற்றைச் செய்யலாம். மதியிலிகள் மற்றவர்களைச் சுகப்படுத்தலாம். பேய்கள் மற்றவர்களின் நோய்களையும் பிணிகளையும் அகற்றலாம். பேய்க்கணங்களோடு தொடர்புள்ள மனிதர்கள் வியத்தகு அற்புதங்களைச் செய்ய நான் கண்டிருக்கிறேன். பூமிக்கு அடியிலிருந்து கனிகளைத் திடீரென எடுத்துக் காட்டுவார்கள். இத்தகையவர்கள், நம் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய முக்காலங்களையும் பற்றிக் கூற நான் கேட்டிருக்கிறேன். ஒரே பார்வையில் படிப்பற்ற அறிவிலிகள் மிகவும் பயங்கரமான பிணியைத் தங்கள் உள்ளத்தின் வல்லமையால் குணப்படுத்துவதைப் பார்த்திருக்கிறேன். இவைகளும் சத்திதானே?

ஆனால், இவை சைத்தான்களின் சக்திகளேயாகும். முதலில் கூறினது கிறித்துவின் ஆன்மிகச் சக்தி ; எல்லோரையும் அணைக்கும் பெரிய அன்புச் சக்தி. இது எப்போதும் வாழும் ; வாழ்ந்திருக்கிறது. அவர் அருளிய மெய்ச் சொற்கள் என்றும் நிலைக்கும். அவர் ஒரே பார்வையில் குணப்படுத்தினவை மறந்து போகலாம் ; ஆனால், அவருடைய அறிவுரைகள் மறக்கப்படாதவை. "தூய்மை வாய்ந்த இதயமுடையவர்கள் பாக்கியசாலிகள் !" இந்தச் சொற்களே மானிட உள்ளம் இருக்கும் வரையிலும் மிகவும் சக்தி வாய்ந்த, கொள்ளக் குறைவிலாத, சக்திக் கருவூலமாகும். ஆண்டவரது பெயர் மறவாது இருக்கும் வரையிலும் இவை தொடர்ந்து விளங்கிக் கொண்டேதானிருக்கும். இவைகளே ஏசுவிற்கு இருந்த சக்திகளும், அவர் பிறருக்கு வழங்கிய சக்தியுமாகும். திட்டமான தூய்மைச் சக்தியைப் பற்றி என்னென்று இயம்புவது ! எனவே, அவரை வழிபடும்போது, அவர் முன் தொழும்போது, நாம் தேடிக்கொண்டு செல்வதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். நாம் நாடுபவை ஓர் அற்புதச் சக்தி கொண்டு கடைபரப்பும் பயனற்ற பொருள்களல்ல. நாம் தேடுபவை வியத்தகு ஆன்மச் சக்திகளே. அந்த ஆன்ம ஒளி மனிதனுக்கு விடுதலை அளிக்கின்றது ; அவனுக்கு இயற்கைமீது ஆணை செலுத்தும் ஆற்றலை நல்குகின்றது. மனிதனது அடிமைச் சின்னத்தை அதுதான் அகற்றி ஆண்டவரின் திருவுருவத்தைக் காட்டுகின்றது.

குறிகளின் இன்றியமையாமை

பத்தி இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒன்றை 'வைதம்' அல்லது விதிமுறைப் புறச்சடங்கு என்பர். மற்றொன்றை 'முக்கியம்' அல்லது 'மிகச் சிறந்தது' என்று மொழிவர். பத்தி என்ற சொல் மிகத் தாழ்ந்த புறவழிப் பாட்டிலிருந்து வானளாவும் பிரேமைநிலை வரையிலு முள்ள எல்லாத் துறைகளையும் தழுவி நிற்கின்றது. சமய வழிபாடுகளும் அன்பினால் ஒழுங்கு படுத்தப் பட்டுள்ளன. எளிய சடங்காயுள்ளவை உள. சடங்கு களில்லாதவையும் பல உள. இவற்றை அன்புநெறி என்று கூறுவதற்கில்லை. இவை கீழான நிலையைச் சுட்டுகின்றன. எனினும், இவை இன்றியமையாதவை. இந்தப் பத்தியின் புறவழிபாடுகள் ஆன்மாவை முன் னேறச் செய்ய மிகவும் உதவுகின்றன. மிக உயர்ந்த பதவியை ஒரே தாவில் எய்த முடியும் என்று மனிதன் பெரிய தவற்றைப் புரிகின்றான். ஒரு குழந்தை ஒரே நாளில் முதிர்ந்து கிழவனாகப் போகிறானென்று நினைத்தால், தவறு எனக் கொள்வீர்கள். பின் காணும் கருத்தை நினைவில் எப்போதும் இருத்துங்கள். சமயம் நூல்களிலோ, அறிவு ஒப்புகின்ற நிலையிலோ, தருக்க அறிவிலோ இயங்கவில்லை. தருக்கமும், கொள்கைகளும், சான்றுகளும், சமயக் கருத்து களும், நூல்களும் துணை புரிகின்றன. ஆனால் சமயம் அனுபூதியே. நாம் எல்லோரும் ஒரு கடவுள் இருப்பதாகச் சொல்கிறோம். 'நீங்கள் அவரை நேரில் கண்டிருக்கிறீர் களா?' என்பதுதான் நூல்கள் எழுப்பும் வினா. கடவுள் விண் ணில் வீற்றிருக்கிறார் என்று ஒருவன் சொல்லக் கேட்கிறீர் கள். அவனிடம், 'ஆண்டவரை நீ பார்த்திருக்கிறாயா?' என்று கேளுங்கள். அவன் கண்டிருக்கிறேனென்றால், அவ னைப் பார்த்து எள்ளி நகையாடி அவனை ஒரு பித்தன் என்று கூறுகின்றீர்கள். பெரும்பாலும் மக்களிடத்தே இதைத் தான் காண்பீர்கள். அறிவு வழங்கும் சம்மதத்திற்கோ, அல் லது ஓர் ஏட்டுச்சான்றுக்கோ அப்பால் அவன் சமயத்தைப் பற்றிக் கொண்ட கருத்துச் செல்லவில்லை. அதை நான் சமய

மெனச் சாற்றமாட்டேன். அத்தகைய சமயத்தையுடையவ ஞய் இருப்பதைவிட, நாத்திகஞய் இருப்பது நலமே. சமயம் நமது மதிநுட்பச் சம்மதிப்பையோ, மதிப்பின்மையையோ தழுவியில்லே. நீங்கள் ஆன்மா ஒன்று உண்டு என்று உரைக் கிறீர்கள். அந்த ஆன்மாவை நேரில் கண்டிருக்கிறீர்களா? நமக்கெல்லாம் ஆன்மா இருந்தும் ஏன் நாம் அதைப் பார்த்த திலலே? இந்தக் கேள்விக்கு விடை அளித்தாக வேண்டும். அன்றேல், சமயத்தைப் பற்றிப் பேசுவது பயனற்றதே. ஏதா வதொரு மதம் உண்மையெனத் திகழ்ந்தால், அது உண்மை யையும், ஆன்மாவையும், ஆண்டவரையும் காட்டவேண் டும். நானும் நீங்களும் ஊழிக்காலம் வரையில் ஏதாவதொரு கொள்கையையோ, பிறிதொன்றையோ பற்றி இடையருது சொற்போர் புரிந்துகொண்டே போனல், ஒரு முடிவிற்கு வர மாட்டோம். மக்கள் பல ஊழிகளாகப் போர்புரிந்துகொண்டே தான் இருக்கிருர்கள். ஆனல் அதனல் என்ன ஏற்பட்டுள் ளது? மதிநுட்பம் அதை நண்ணுவதற்கியலாது. அறிவுக் கூர்மையின் எல்லேக்கப்பால் நாம் ஏகவேண்டும். மதத்தின் சான்று அதை நேரடியாகக் காண்பதே. சுவருள்ளது என் பதை நாம் நேரடியாக நோக்குகின்ருேம. அந்தச் சுவர் இருக்கிறதா இல்லேயா என்பதைப் பற்றி நீங்கள் பல ஆண்டு கள் தர்க்கித்தாலும், ஒரு முடிவிற்கும் வரமாட்டீர்கள். ஆனல் நீங்கள் பார்த்த அக்கணமே போதும். உலகிலுள்ள மக்களெல்லாம் இல்லே என்ருலும், அதை நீங்கள் நம்பமாட் டீர்கள். ஏனென்ருல், அதற்கு உங்கள் கண்களே பல கொள் கைகள், பல ஏட்டுச் சான்றுகளேக் காட்டிலும் பன்மடங்கு உண்மை உரைக்கும். புத்தகங்களேயெல்லாம் கட்டி அப் பால் எறிய வேண்டும். நீங்கள் எவ்வளவுக்கெவ்வளவு புத் தகங்களேக் குறைவாகப் படிக்கிறீர்களோ, அவ்வளவுக்கவ் வளவு நலமே. ஒரே நேரத்தில் ஒன்றையே செய்யுங்கள். இக் காலத்தில் மேலேநாடுகளில் மூளேயைக் கதம்பம் ஆக்குவது ஒரு போக்காய் ஏற்பட்டுள்ளது. சீரணிக்க இயலாத கருத்து கள் எல்லாம் மூளேயில் பேய்க் கூத்தாடிக் குழப்பத்தை விளேத்துவிடுகின்றன. அவை ஒரு நிலேக்கு வந்து குலேயாத ஒரு படிவ வடிவைப் பெறுகிறதில்லே. பல சமயங்களில் அது ஒரு பிணியாகவும் தோன்றுகின்றது. இது ஒரு சமயமா

குமோ ? சிலர் நரம்பில் ஒரு புதிய உணர்ச்சி ஓட விரும்புகின்றனர். அவர்களுக்குப் பேய்க் கதைகளைச் சொல்லுங்கள். அவை அவர்கள் அறியாமலே மறைந்து அவர்களை கவனித்து வருகின்றன. அவை வட துருவத்திலிருந்தோ, அல்லது மிகுந்த தூரத்திலிருந்தோ சிறகடித்துக்கொண்டு வருகின்றன ; அல்லது வேறு உருவங்களில் காட்சி அளிக்கின்றன என்றெல்லாம் கூறி அவர்களுக்குப் புலன்கடந்த—மனித இயல்பிற்கப்பாலுள்ள—ஓர் உணர்ச்சியை ஊட்டுங்கள். அவர்கள் திருத்தி அடைந்து வீட்டிற்குத் திரும்புவார்கள் ; இன்னும் இருபத்துநான்கு மணி நேரத்தில் மறுபடியும் இத்தகைய உணர்ச்சிக் கிளர்ச்சிக்கு ஆயத்தமாவார்கள். இதைத்தான் சிலர் மதமெனக் கூறுகின்றனர். இதுதான் பைத்தியக்கார மருத்துவச்சாலைக்கு வழி. இது சமயமன்று. நீங்கள் இந்தப் பாதை வழியாக ஒரு நூற்றாண்டு வரை சென்றீர்களேயானால், இந்த நாட்டையே ஒரு பைத்தியக்கார விடுதியாக்கிவிடுவீர்கள். மனித இயல்பு கடந்த சுவைச் செறிவுள்ள இத்தகைய கதைகள் பலவீனத்திற்கு அழைத்துச் செல்லும். எனவே இவற்றின் அண்மையிலேகூட நீங்கள் செல்லாதீர்கள். மக்களைப் பலவீனப்படுத்துகின்ற மூளைக்கோளாற்றுக்கு மூலம் இவைகளே. இவை மனத்தை வலியற்றதாகச் செய்கின்றன. ஆன்மாவை இழிவான நிலையில் செலுத்திவிடுகின்றன. அதற்குப் பிறகு தவிர்க்க முடியாத ஒரு பெருங் குழப்பந்தான் இவற்றின் விளைவாகும். வெறும் பேச்சிலோ, நூல்களிலோ, கொள்கைகளிலோ சமயம் கோயில் கொள்ளவில்லை. அது அனுபூதியிலேதான் சுடர் விட்டுத் திகழ்கின்றது. அது கல்வியால் அணுகுவதற்கியலாது ; நாம் ஆன்மாவாகவே திகழவேண்டும். எல்லோருக்கும் 'திருடுதல் கூடாது' என்பது தெரியும். அதனால் என்ன பயன் ? ஆன்மிகச் செல்வத்தை அடைந்தவர்களே களவாடாமலிருப்பார்கள். பிறருக்குத் துன்பம் செய்தல் அறமன்று. இதை யாவரும் அறிவர். ஆனால் ஆன்ம ஒளியைப் பெற்றவனே அப்படியிருத்தல் கூடும். அவர்கள் அனுபூதியாம் அத்திவாரத்தின்மீதே தங்களுடைய பண்பாட்டை நிறுவியிருக்கிறார்கள். எனவே சமயமென்பது அனுபூதியே. பற்பல கொள்கைகள், பற்பல தத்துவ

ஆராய்ச்சி நூல்கள், ஒழுக்க இயல்கள்—இவற்றையெல்லாம் உங்கள் மூளைகளில் திணித்து வைத்துக்கொள்ளலாம்; இவற்றால் பயனில்லையே! ஆன்ம ஒளியைக் கண்டிருக்கிறீர்களா? ஆன்மாவாகவே சுடர்விட்டுப் பொலிகின்றீர்களா? இவற்றைப் பற்றித்தான் நாம் கவலையுற வேண்டும். அப்படி நேரில் காண்பது நீண்ட ஒரு முறையாகும். மனிதர் மிகவும் வியக்கத்தக்க ஒன்று என்று ஒன்றைப் பற்றிக் கேள்விப்படும்போது அதை உடனே அடைந்துவிடக்கூடும் என்று எல்லோரும் கருதுகிறார்கள். அதைப் பெற அரிய பணி செய்ய வேண்டுமென்பதை ஒரு நொடிப்பொழுதுகூட நினைத்துப் பார்ப்பதில்லை. இந்தக் கருத்தை வாழ்வில் உருவாக்கினவர்களே இன்றைக்கு உள்ளபடி தொழுபவர்கள் ஆவார்கள். அனுபூதியின் ஆற்றலே சமயத்தைப் படைக்கின்றது. அந்த இடத்தை எல்லோரும் ஒரு கணத்தில் தாவிக் குதித்து அடைய வேண்டும் என்ற ஆசை எழுகின்றது. அதுவும் மிகச் சிறப்பாக இருந்தால், அதற்கும் நாம் ஆயத்தமாகியிருக்கிறோம். அதை அணுக நமக்குச் சத்தி உண்டா என்பதை நாம் சிறிதும் சிந்திப்பதில்லை. அதன் விளைவாக நாம் ஒன்றுமே புரியவில்லை. ஒரு கருவிகொண்டு புல்லைக் கிளறி எறிவது போல மனிதனை ஆன்மிகத் துறையில் ஒரு நொடியில் செலுத்துதல் இயலாது. நாம் எல்லோரும் சிறிது சிறிதாகப் பணியாற்ற வேண்டும். எனவே மதத்தின் முதற்படி 'வைதி' அல்லது கீழ்நிலை வழிபாடே, அதாவது முறையான சடங்குகளுடன் கூடிய வழிபாடே.

எனவே, இத்தகைய வழிபாடுகள் எவை? அவை எவை என்பதைக் கூறுவதற்கு முன், நான் ஒரு கேள்வியை எழுப்புகின்றேன். நீங்கள் எல்லோரும், "கடவுள் இருக்கின்றார்; அவர் எங்கேயும் பரந்திருக்கிறார்," என்று உரைக்கின்றீர்கள். எங்கும் நிறைந்திருக்கிறார் என்பதைப்பற்றிய உங்கள் கருத்து என்ன? அதற்குப் பதில் கண்களை மூடிக்கொண்டு, 'அது எப்படி இருக்கிறது?' என்று சொல்கிறீர்கள். என்ன பார்க்கிறீர்கள்! நீங்கள் வாழ்க்கையில் பார்த்த பரந்த கடலையோ, விரிந்த நீலவானையோ, அழகிய அகன்ற புல்தரையையோ நினைக்கிறீர்கள். அப்படிக் கூறினால் எங்கும் நிறைந்த ஆண்டவர் என்பதற்கு ஒன்றுமே பொருளில்லை.

அவ்வண்ணமே தெய்விகக் குணங்களான முழு வல்லமை, முழு ஞானம்—இவற்றைப்பற்றி நமக்கு என்ன தெளிவான கருத்து இலங்குகின்றது? நமக்கு ஒன்றுமில்லை. சமயம் என்பது அனுபூதியே. ஆண்டவரைப் பற்றிய உங்கள் கருத்தை நீங்கள் நன்ருக அறிந்துகொண்டால்தான், உங்களை ஆண்டவரை வழிபடுகிறவர்களெனக் கூறுவேன். அதுவரையிலும், அந்தச் சொற்கள் எழுத்தின் தொகுதி என்பதைத் தவிர வேருென்றும் உங்களுக்குப் புலனுகாது. இந்த நிலையை அடைய நாம் உண்மையில் கண்ணுக்குப் புலனுகின்ற பொருள்கள் வாயிலாகச் செல்ல வேண்டும்—அதாவது, கட்புலனுக்குத் தோன்றக் கூடிய பொருள்களைக் கொண்டு குழந்தைகள் படிப்பதுபோல. பின்பு எண்ணக் கூடியவைகளைக் கவனிக்க வேண்டும். ஒரு குழந்தையிடம் இரண்டு தடவை 'ஐந்து, பத்து' என்று பகர்ந்தால், குழந்தை அறிந்துகொள்ள இயலாது. பத்துப் பொருள்களைக் கொடுத்து ஐந்து தடவை இரண்டு—பத்து என்பதைக் காட்டினுல் உடனே உணர்ந்துவிடும். அது நிதானமான நீண்ட முறை. இங்கே நாம் எல்லோரும் குழந்தைகளே. நாம் வயது முதிர்ந்தோராய் இருப்போம். உலகிலுள்ள எல்லா நூல்களையும் படித்திருப்போம். ஆனுல் ஆன்மிகத் துறையில் நாம் எல்லோரும் குழந்தைகளே. இந்தத் தெளிவான சத்திதான் சமயத்தைப் படைக்கின்றது. எத்தனை தத்துவங்கள், கொள்கைகள், மூளைக்குள் நுழைந்திருந்தாலும் அவை யாதொரு பயனையும் அளிப்பதில்லை. நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் என்பதும், எவ்வளவு தூரம் தெளிவான அறிவைப் பெற்றிருக்கிறீர்கள் என்பதுந்தான் இதற்கு இன்றியமையாதவையாகும். நாம் கொள்கைகளையும், கோட்பாடுகளையும் அறிந்திருக்கிருேம். ஆனுல், நமது வாழ்க்கையில், நாம் எதையும் தெளிவாக உணரவில்லை. நாம் தொட்டு அனுபவிக்கும் முறையில் சடங்குகள், பிரார்த்தனைகள், சொற்கள், உருவங்கள் ஆகியவைகளிலிருந்து தொடங்க வேண்டும். ஓர் உருவமே எல்லோருக்கும் இருக்கவேண்டிய அவசியமில்லை. உருவங்களால் சிலருக்கு உதவி கிடைக்கும்; சிலருக்குக் கிடைப்பதில்லை. புறவழிபாட்டில் ஒரு சிலருக்கு ஓர் உருவம் அவசியமாயுள்ளது. சிலருக்கு மனத்தில் ஓர் உருவம் திகழ

வேண்டும் எனத் தோன்றுகிறது. அகத்துறை உருவத்தை வழிபடுவோன், 'நான் உயர்ந்த மனிதன்,' என்று தன்னை உயர்த்திக் கொள்ளுகிறான். அவன் புறவழிபாட்டை 'இலங்கும் உருவவழிபாடு' என்கிறான்; அத்தகைய வழிபாடு தவறு என்று போர் புரியவும் ஆயத்தமாயிருக்கிறான். ஒரு மனிதன் ஓர் உருவத்தை மாதாகோவிலிலோ, கோயிலிலோ அமைத்துக் கொண்டால் அது புனிதமானது என்று நினைக்கிறான்; அது ஒரு மனித உருவமாய் இருந்தால், அது மிகக் கோரமான தென்று கருதுகிறான் எனவே, பலவித உருவங்களின் கண் கூடான பயிற்சியை மனம் பெறுகிறது. பிறகு படிப்படியாக நாம் பண்பான விளக்கத்திற்கு, பண்பான தெளிவுத் தன்மைக்கு வரலாம். மறுபடியும் ஒரே உருவம் எல்லோருக்கு மில்லை. ஒவ்வொருவருக்கும் தகுந்த ஒவ்வோர் உருவம் திகழும். உங்களுக்கு உரியது ஒன்றே. இன்னொருவருக்கு இன்னொன்று இலங்கும். எல்லா உருவங்களும் ஒரே முடிவிற்கு அழைத்துச் சென்றாலும், எல்லோருக்கும் ஒரே உருவம் இராது. இதுதான் நாம் செய்யும் இன்னொரு தவறு. எனது இலட்சியம் உங்களுக்குத் தகுந்ததாய் இல்லை. எனவே அவற்றை நான் உங்கள்மீது ஏன் சுமத்த வேண்டும்? உலகத்திற் சென்று நோக்குங்கள். அப்போது ஒவ்வொரு மதியிலியும், அவனவன் உருவந்தான் தக்கதெனச் சாற்றுவான். அதைத் தவிர ஒவ்வோர் உருவமும் விலங்கினத்தைச் சார்ந்ததென்று உரைப்பின், தானே ஆண்டவரால் தேர்ந்தெடுக்கப்பட்டவன் என்றும் இயம்புவான். இந்த உருவங்கள் அனைத்தும் நல்லவைகளாயும், உதவி நல்கக்கூடியவைகளாயும் விளங்காமற் போகா. மனித இயல்பில் பலவகை இருப்பது போல, அத்தனை வகைகளும் சமயத்திலும் இருந்தே தீரும். அது எவ்வளவுக்கெவ்வளவு மிகுதியோ, அவ்வளவுக்கவ்வளவு உலகிற்குச் சாலவும் நன்றே. இருபது வகைச் சமயங்கள் உலகில் இருத்தலும் நலம். நானூறு இருந்தால், இன்னும் நல்லதாயிற்று. தேர்ந்தெடுப்பதற்கு மிகுதியான வகைகள் இருக்குமல்லவா? எனவே, சமயவகைகள், மதக்கருத்துகள் மிகவும் விரிந்து கொண்டு போவதில் நாம் மகிழ்ச்சிகொள்ளவேண்டும். அப்படிச் செய்வதால், ஒவ்வொரு மனிதனும் அதில் சேர்க்கப்படுவான். அதனால்

மனிதப்பிறவி உதவி பெற்று உய்யும். ஒவ்வொரு மனிதனும் மற்றவனிலிருந்து மாறுபட்டு, தனது சொந்த மதத்தைப் பெறச் சமயங்கள் பெருகட்டும். இதுதான் பத்தியோகத்தின் கருத்து.

எனவே, முடிவாக எனது மதம் உங்களதாகவோ, உங்கள் மதம் எனதாகவோ இருக்க இயலாது. முடிவும், நோக்கமும் ஒன்ருய் இருந்தாலுங்கூட, ஒவ்வொருவரும் அவரவர்க்குற்ற ஒவ்வொரு தனிப்பாதையிலேதான் செல்ல வேண்டும். இந்தப் பாதைகள் வேறு பட்டிருந்தாலும், இவை எல்லாம் உண்மையாகவே சுடர்விட்டுத் திகழும். ஏனென்ருல் இவை எல்லாம் ஒரே முடிவிற்குச் செல்பவை. ஒன்றே உண்மை; மற்றவையல்ல என்று இருக்க இயலாது. அவரவர் உவந்த வழியை வகுத்துக் கொள்வதுதான் தேர்ந்த பாதையாகும். இதற்கு 'இஷ்டம்' என்று பத்திநூல் பெயர் வழங்குகின்றது.

பிறகு சொற்கள் உள்ளன. சொற்சத்தியைப் பற்றி நீங்கள் எல்லாம் கேட்டிருக்கிறீர்கள். அவை எவ்வளவு வியப்பைத் தருகின்றன! விவிலிய நூல், குர்-ஆன், வேதங்கள் ஆகியவை இத்தகைய சத்திவாய்ந்த சொற்களைத்தான் மிகுதியாகக் கொண்டுள்ளன. சில சொற்கள் மானிடரின்மீது ஆணை செலுத்தும் ஆற்றல் பெற்றுள்ளன. இக்குறிகள் மானிடரது மனத்தில் ஒருவகையான உள்ளங்கவர் சத்தியை எழுப்புகின்றன. மதத்தின் மாட்சிமை தங்கிய உருவங்கள் தற்செயலாக ஏற்படுத்தபட்டவையல்ல. அவை நினைவின் இயற்கையான வெளிப்படைகள் என்பதை நாம் அறிகிருேம். நாம் குறிகளோடு நினைக்கிருேம். நம் சொற்கள் அனைத்தும் நினைவைப் பின்பற்றிய குறிகளேயாகும். உண்மையை ஓராமல் பலர் பல குறிகளை வழங்குகின்றனர். இவை எல்லாம் பின்னர் அமைந்தனவே இந்தக் குறிகள் யாவும் நினைவோடு சம்பந்தப்பட்டவை நினைவு, குறியைப் புறத்தே கொண்டு வருவதுபோல, குறிகள் அகத்தின் நினைவைத் தூண்டுகின்றன. எனவே, இந்தப் பத்தியின் பகுதிகள் வழிபாடு சொற்கள், குறிகள் ஆகியவைகளைப் பற்றி இயம்புகின்றன. ஒவ்வொரு மதத்திற்கும் வழிபாடு உண்டு. செல்வத்திற்கோ உடல்நலத்திற்கோ இறைவரை வணங்குவது பத்தியன்று

என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். அது கருமம் அல்லது பெருமை தரக்கூடிய செயல் ஆகும். ஏதாவது அழிவுறும் பொருளுக்காகக் கடவுளை இறைஞ்சுவது கர்மமாகும். சொர்க்கத்திற்குப் போகவேண்டுமென்பது போன்றவை காமத்தைச் சார்ந்தவைகளே. ஆண்டவர்பால் அன்பு செலுத்துகிறவன்—பத்தனுக மிளிர விழைகிறவன்—எல்லா வகையான வழிபாடுகளையும் அறவே விடுதல் வேண்டும். ஞான ஒளி மண்டலங்களுக்குச் செல்ல விரும்புகிறவன், கொடுக்கல் வாங்கல் எனும் வாணிகமாம் சமயத்தைப் புறக்கணித்துவிட்டு அவற்றின் திருவாயிலுக்குள் நுழைய வேண்டும். நீ இறைஞ்சுவது உனக்குக் கிடைக்காமல் போகக் கூடியதன்று; எல்லாம் உனக்குக் கிடைக்கும். ஆனுல் அது இரப்பவர் சமயமாகும்; மிகவும் தாழ்வானது; அருவருப்பானது. கங்கை ஆற்று ஓரத்திலிருந்துகொண்டு நீருக்காகக் கிணறு வெட்டுகிறவன் அறிவிலியே. வைரச் சுரங்கத்திற்குள் போய்க் கண்ணுடி மணிகளைப் பொறுக்குகிறவன் மதியிலியன்ருே? என்னே! கொள்ளக் குறையிலா வைரச் சுரங்கமாய் இருக்கும் ஆண்டவரிடத்தில் உணவையும் உடல் நலத்தையும் ஆடையையும் இரப்பதா? இவை அனைத்தும் அழிவுறும் கண்ணுடிகளே. இந்த உடல் சிறிது காலத்தில் மாய்ந்துவிடும். இந்நிலையில் இதன் நன்மையின் பொருட்டுத் திருப்பித் திருப்பி ஏன் வழிபட வேண்டும்? உடல் நலத்திலும் செல்வத்திலும் என்ன இருக்கிறது? எவ்வளவு செல்வம படைத்தோனும் அவன் சொத்தில் ஒரு சிறிதளவைத்தான் பயன்படுத்திக்கொள்ள இயலும். உலகத்தில் எல்லாப் பொருள்களையும் நாம் அடைய முடியுமோ? அவை கிடைக்கவில்லையென்ருல் நாம் கவலைப்படவேண்டுமா? இந்த உடல் அழிவுறும், இதை யார் பொருட்படுத்துவார்கள்? நல்லவை வந்தால் வரட்டும்; வரவேற்போம். போனுல் போகட்டும். அப்படிப் போவதையும் நாம் வரவேற்போம். அவை போகட்டும். வருவதும் போவதும் வருவதுமான அவற்றுக்கு நாம் நல்லாசி கூறுவோம். நாம் ஆண்டவரை உணரப்போகிருேம். வேந்தர்களுக்குள் வேந்தராய் விளங்கக்கூடியவரிடம் நாம் அணுகமுயல்கிருேம். அவ்விடத்திற்கு நாம் இரவலர் உடையில் செல்ல இயலாது. அப்படி உடை

அணிந்து கொண்டு மன்னர்க்கு மன்னராய் வீற்றிருக்கும் அவர் முன் செல்ல நமக்கு அனுமதி கிடைக்குமா? திண்ண மாகக் கிடைக்காது. நம்மை வெளியே துரத்திவிடுவார்கள். நம் கடவுள் சக்கரவர்த்திகளுக்கெல்லாம் சக்கரவர்த்தி. அவரி டம் இந்த யாசக உடையோடு செல்ல இயலாது. அவ்விடத் தில் வாணிபஞ் செய்வோர்க்கிடமேது? வாங்குவதும் விற்ப தும் அங்கே இல்லை. வாங்குபவர்களையும் விற்பவர்களையும் ஏசுநாதர் கோவிலிலிருந்து துரத்திவிட்டார் என்று விவிலிய நூலில் நீங்கள் படித்திருக்கிறீர்கள். அப்படி இருந்தும் சிலர், “ஆண்டவரே, என் சிறு பிரார்த்தனையை உமக்குச் செலுத்துகின்றேன். அதற்கு மாறாக எனக்கு ஒரு புதிய ஆடையை அளியும். ஆண்டவரே, என் தலைவலியைக் குணப்படுத்தும். நான் நாளைக்கு இரண்டு மணிகளுக்கு மேல் வழிபடுகின்றேன்,” என்று இறைவரை இறைஞ்சுகின் றார்கள். உங்கள் மனக் கருத்திற்கு ஒரு படி மேலேயே உயர் வாக நீங்களே உங்களை உயர்த்துங்கள். இந்த அற்ப விஷ யங்களை ஆண்டவரிடம் கேட்பதிலிருந்து நீங்கள் உங்களை விடுவித்துக்கொள்ளவேண்டும். வீண் பொருளுக்காக மனி தன் தன் சக்தியைச் செலவழித்தல் அழகன்று. மனிதனுக் கும் விலங்கிற்குமுள்ள வேறுபாடென்ன? பத்தறுவதுதான் முதற்பணியாகும். சொர்க்கத்தை அடையும் ஆசைகளையும் மற்ற எல்லா ஆவல்களையும் அறவே நீக்கிவிடவேண்டும். எனவே, சொர்க்கங்கூட வேறு இடங்களைப்போலச் சற்று நன்றாய்த் திகழும். இம்மையில் நமக்குச் சில துன்பங்களும் சில இன்பங்களும் உண்டு. அங்கே ஒன்று குறைந்தும், ஒன்று கூடியும் இருக்கும். இங்கே இருப்பதைக் காட்டி லும், அங்கே நமக்கு ஒளி இல்லை. அது நம் நற்செயல்களின் விளைவாகத்தான் இருக்கும். கிறித்தவக் கருத்துப்படி சொர்க் கம் என்பது இன்பம் மண்டிக்கிடக்கும் ஓர் இடமாகும். அது ஆண்டவருக்காக எப்படி அமைந்திருக்க இயலும்? இத்த கைய அவாவனைத்தையும் எப்படி விட்டுவிடுவது என்பது தான் வினா. இந்த ஆசைகளே மக்களைத் துன்பத்திற்குள் ளாக்குகின்றன. அவர்கள் ஆசைத்தளைகளால் கட்டுண்ட அடிமைகள். அவர்கள் ஆசைகளால் ஆட்டிவைக்கும் பொம்மைகளாய் இருக்கின்றார்கள். விளையாட்டுக் கருவிகள்

கீழே நழுவி விழுவதுபோல விழக்கூடியவர்கள். நம் உடலை ஏதாவது வீழ்த்திவிடுமோ என்று தொடர்ந்து பாதுகாத்துக் கொள்கிறோம். எனவே, எந்நாளும் அச்சமுற்றே இருக்கின்றோம். அச்சத்தினால் ஒரு நாளைக்கு அறுபது அல்லது எழுபது மைல் ஒரு மான் விரைந்தோடுவதை நாம் படித்திருக்கின்றோம். அது பல மைல்கள் கடந்து சென்று நெடுந்தூரத்தில் நின்று ஏதாவது அருந்தும். நாம் மானைக் காட்டிலும் மிகுந்த இழிவான நிலையிலிருக்கிறோம் என்பதை நாம் உணரவேண்டும். மானுக்குச் சிறிது ஓய்வு உண்டு. ஆனால், நமக்கு ஒன்றுமே இல்லை. புல் மிகுதியாகக் கிடைத்தால், அதற்கு மிகத் திருத்தியாய் இருக்கிறது. ஆனால் நம் தேவைகளை நாம் நாளுக்குநாள் பெருக்கிக்கொண்டே போகின்றோம். நம் தேவைகளை மிகுத்துக்கொண்டிருப்பதே உடல்நலத்தைக் குலைக்கக் கூடிய நோய்போல ஆகிவிட்டது. நாம் இயற்கைக்கு மாறாக வாழ்கின்றோம்; ஒழுங்குபடுத்தும் வாழ்க்கைக் 'கீலை' இழந்துவிட்டோம். எனவே, இயற்கையான எந்தப் பொருளும் நம்மைத் திருத்தியடையச் செய்வதில்லை. நாம் இயற்கைக்கு முரணான கிளர்ச்சிகளால் இயற்கையோடு இயையாத உணவு, நீர், சூழ்நிலை, வாழ்வுபோன்ற உடல் நலத்தை நல்கக் கூடாதவைகளின் பின்னே ஓடிக்கொண்டேயிருக்கிறோம். நம் காற்றை நாமே நஞ்சாக்கி, அதை உட்கொள்ளுகிறோம். அச்சத் தொடர்புபற்றியவரையில் நாம் அச்சம் மண்டிய வெற்று மூட்டைகளாகக் காட்சியளிக்கின்றோம். புலி, ஓநாய் போன்ற ஏதோ ஒரு விலங்கு பற்றியே மான் அச்சுறுகின்றது. ஆனால், மனிதனுக்கு இந்த விரிந்த பாதையைக் கண்டே அச்சங்கொள்ள வேண்டியிருக்கிறது.

நாம் இதிலிருந்து எப்படி நம்மை விடுவித்துக்கொள்வது என்பதுதான் வினா. பயன் நாடும் கொள்கையினர், "ஆண்டவரைப்பற்றிப் பேசாதீர்கள். இனி இவைகளைப் பற்றி நாம் ஒன்றும் அறியோம். நாம் இன்பமாய் இவ்வுலகில் வாழ்வோம்," என்று கூறுகிறார்கள். நமக்கு முடியுமானால், நான் அதை முதலில் புரிபவனாகப் பொலிவேன். ஆனால் உலகம் நம்மை அனுமதிக்காது. இயற்கையின் அடிமையாய் இருக்குமளவும், நீங்கள் அதை எப்படிச் செய்ய

இயலும்? நீங்கள் எவ்வளவுக்கெவ்வளவு முயல்கிறீர்களோ அவ்வளவுக்கவ்வளவு அதில் சிக்கிக் கொள்கிறீர்கள். இத்தனை ஆண்டுகளாக அதனை யான் அறியேன். நீங்கள் இன்பமுறத் திட்டங்கள் வகுக்கின்றீர்கள். ஒவ்வோர் ஆண்டிற்குப் பின்னும், இவை இன்னும் இழிவான நிலையிலேயே தான் இருக்கின்றன. இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு, பண்டைய உலகத்தில் மக்களின் தேவைகள மிகச் சிலவே. அவர்களது அறிவு கணக்கு முறையில் விரிந்தால், அவர்களுடைய தேவைகள் இடக் கணித முறையில் பெருகிவிட்டன. நம் மீட்சியில், சொர்க்கத்தில் நம்முடைய ஆசைகள் யாவும் நிறைவேறுமெனக் கனவு காண்கிறோம்: எனவே மோட்சத்திற்குப் போக விரும்புகிறோம். என்னே இந்தத் தணியாத இடையறாத வேட்கை! எஞ்ஞான்றும் ஏதாவது ஒன்றை விழைந்துகொண்டே இருக்கின்றோம். ஒரு மனிதன் ஓர் இரவலனாய் இருந்தால் அவன் பணத்தை நாடுகின்றான். அவனுக்குச் செல்வம் வந்துற்றபோது சமூகத்தில் காணப்படும் பல பொருள்களை அவன் விரும்புகின்றான். அதற்குப் பிறகு இன்னும் ஏதாவது தேவைப்படுகிறது. ஒரு பொருளின்மீது அவன் அவாப் பாய்கின்றது. எப்போதும் அவனுக்கு ஓய்வில்லை. இதை எப்படி நாம் தணிப்பது? நாம் சொர்ககத்திற்குச் சென்றால், நமககுள்ள ஆசை இன்னும் மிகும். வறுமையுற்றோன் செல்வம் படைத்தோனாயினும் தன் விருப்பங்களை அவனால் நிறைவேற்றித் தன் வேட்கையைத் தணிகக இயலவில்லை. அது தீயில் நெய்யைச் சொரிந்து அதை அவிப்பதை ஒக்கும். நெய்தானே மிகுதியாகத் தீயை வளர்த்துக் கொழுந்துவிட்டெரியச் செய்யும? சொர்ககத்திலும் செலவதென்பது மிகுந்த செல்வாக்குடையவர்களாதல எனப்படும். பிறகு ஆசைகள் ஓங்கி வளர்ந்து கொண்டே போகின்றன. சுவாக்கத்திற்குச் சென்ற பல மண்ணவர்கள் ஒழுங்கான முறையில் நடந்துகொள்ளவில்லை என்பதையே வையகத்தில் காணப்படும் சமய நூல்கள் வாயிலாக நாம் அறிகின்றோம். அவர்கள் சொர்க்கத்திற்கு செல்வதன் நோக்கம் ஐம்புலஇன்பங்களைத் துய்த்தலேயன்றோ? சொர்க்கத்திற்குப் போக வேண்டும் என்ற அவாவை வேரோடு மாய்த்தல் நலமே. சுவர்க்கத்தை நாடும்

அவா அற்பமானது; பண்பாடற்றது. இத்தகைய அவா, நான் ஒரு கோடீசுவரனாய் மக்கள் மீது ஆணை செலுத்து வேன் என்பதை ஒக்கும். இத்தகைய இன்பம் மண்டிய சுவர்க் கங்கள் பல உள்ளன. ஆனால், இவற்றின் மூலமாகச் சமயம், அன்பு இவற்றின் கதவுகளைத் திறந்து செல்லும் உரிமை உங்களுக்கு இருக்க இயலாது.

தலைமையான குறிகள்

'பிரதீசம்' 'பிரதிமா' என்னும் இரண்டு வடமொழிச் சொற்கள் உண்டு. பிரதீகம் என்ற சொல் நெருங்கி வந்துகொண்டிருப்பது என்று பொருள்படும். எல்லா நாடுகளிலும் நீங்கள் பல வழிபாடுகளைப் பார்க்கிறீர்கள். சான்ருக, இந்த நாட்டில் ஞானியரின் உருவங்களை வழிபடுகிறவர்களும், சில குறிகளையும், சில உருவங்களையும் தொழுபவர்களும் திகழ்கின்ருர்கள். மாந்தர்களைக் காட்டிலும் உயர்ந்தவர்களை வேறு சிலர் வொழ்த்துகின்ருர்கள். பிதிர்க்களை வழிபடுபவர் எண்ணிக்கை மிகப் பெருகிக்கொண்டே போகின்றது. அப்படிப்பட்டவர் இங்கே சுமார் 80 லட்சம் இருப்பதாக நான் படித்திருக்கிறேன். இவர்களைக் காட்டிலும் உயர்ந்த தேவதைகளையும் கடவுளர்களையும் வழிபடுகிற மக்களும் உண்டு. பத்தியோகம் இந்த வழிபாடுகளுள் ஒன்றையும் மறுக்கவில்லை. ஆனுல், இவை யாவும் பிரதீகம் என்ற தலைப்பிலேதான் வருகின்றன—இவை பிரதீக வழிபாடாகும். அவர்கள் ஆண்டவரை இறைஞ்சவில்லை. ஆனுல் பிரதீகத்தை—அதாவது அடுத்துள்ள ஒன்றைத் தொழுதுகொண்டிருக்கிருர்கள். அவர்கள் அது வழியாக ஆண்டவரை அடைய முயல்கின்ருர்கள். இந்தப் 'பிரதீக' வழிபாடு நம்மைச் சுதந்தரத்திற்கோ, மோட்சத்திற்கோ அழைத்துச் செல்லாது. இவற்ருல் நாம் விழைந்தவற்றைத்தான் தர இயலும். எடுத்துக்காட்டாக, ஒருவன் தன் இறந்துபோன முன்னேர்களையோ, நண்பர்களையோ வழிபட்டால் ஒருகால் சில சக்திகளோ, அல்லது சில செய்திகளோ அவர்களிடமிருந்து கிடைக்கக்கூடும். இந்த வழிபாட்டிற்கு 'வித்தியா' என்பது பெயர். ஆனுல், நம் உயர்ந்த நோக்கமான சுதந்தரம், ஆண்டவரை வழிபடுவதாலேதான் கிடைக்கும். மறைகளை விளக்குவதில் சில கீழைநாட்டு அறிஞர்கள் உருவக்கடவுளைப் 'பிரதீகம்' என்று கருதுகிருர்கள். உருவக் கடவுளைப் 'பிரதீகம்' என்று கருத இடமுண்டு. ஆனுல், 'பிரதீகம்' என்பது சகுணக் கடவுளுமன்று (உருவக் கடவுளுமன்று), நிர்க்குணக் கட

வுளுமன்று (அருவக் கடவுளுமன்று). அதை ஆண்டவர் என்று வழிபட இயலாது. எனவே, இந்தப் பலவகைப் பிரதீகங்களை—தெய்வங்களை--முன்னோர்களை அல்லது தென்புலத்தோர்களை வழிபடுவதால் ஆண்டவரை அடையலாம் என்று நினைப்பது தவருகும். அவர்களுடைய உதவியால் சில சத்திகளைத்தான் பெற இயலும். ஆனுல் ஆண்டவராலேதான் அவர்களுக்குச் சுதந்தரம் அளிக்க இயலும். இதனுல் அவற்றை மறுக்கவேண்டுவதில்லை. அவர்களை வழிபடுதலும் சில பலன்களைக் கொடுக்கின்றது. சிறந்தவற்றை அறிந்துகொள்ள இயலாத மனிதன் இந்தப் பிரதீக, பிரதிமைகளிடமிருந்து சிறிது சத்தியைப் பெறலாம்; சிறிது மகிழ்ச்சியை எய்தலாம். ஆனுல், சிலநாள் வரை அதை அனுபவித்த பிறகு அவன் சுதந்தரமடைய ஆயத்தமானவுடன், அவனே இந்தப் பிரதிமைகளை நீக்கிவிடுவான்.

இந்தப் பலவகையான பிரதீகங்களில் மிகுதியாகக் காண்பது இறந்துபோன நண்பர்களின் ஆவிகளை வழிபடுவதாகும். நட்புணர்ச்சி என்பது மக்களின் இயல்பிலேயே வேரூன்றி உள்ளது. எனவே நம் சிநேகிதர்கள் இறக்கும்போது நாம் அவர்களை மீண்டும் காண விரும்புகின்ருேம். அவர்களுடைய வடிவங்களைச் சிக்கெனத் தழுவிக்கொள்ளுகிருேம். அவர்களது உடல் அவர்கள் உயிருடன் இருக்கும்போது தொடர்ந்து மாறிக்கொண்டே இருக்கிறது என்பதை அறவே மறக்கிருேம். அவர்கள் இறக்கும்போது அவர்களை அழிவற்றவர்களாக நினைக்கின்ருேம். அவர்களை அப்படியே பார்ப்போமென்றும் சிந்திக்கின்ருேம். வாழ்நாளில் நமக்கு ஒரு நண்பன் அல்லது ஒரு மைந்தன் ஒரு பெருங்கயவனுயிருப்பான். ஆனுல், அவன் மாண்டு போனுல், அவனைப்போல இவ்வையகத்தில் ஒரு ஞானியைப் பார்க்க முடியாதென்று எண்ணுகின்ருேம். அவன் ஒரு கடவுளாய்த் திகழத் தொடங்குகின்ருன். எமது இந்தியாவில் ஒரு குழந்தை இறந்தால், அதை எரிக்காமல், அதைப் புதைத்த இடத்தில் ஒரு கோயிலை எழுப்புகின்ருர்கள். அந்தக் கோயிலில் உறையும் கடவுளாக அந்தக் குழவி இலங்கிவிடுகின்றது. எல்லா நாடுகளிலும் ஏதோ ஒரு முறையில் இத்தகைய சமய உருவம் இருந்துகொண்டுதான் இருக்கின்

றது. இதுதான் சமயத்தின் தொடக்கம் என்று நினைக்கும் தத்துவ ஆசிரியர்களும் இல்லாமல் இல்லை. திண்ணமாக அவர்கள் இதை மெய்ப்பிக்க இயலாது. இந்த வகையான பிரதீக வழிபாடு நம்மைச் சுதந்தரத்திற்கோ, மோட்சத்திற்கோ உறுதியாக அழைத்துச் செல்லாது. இரண்டாவதாக, இது பேரின்னலை விளைக்கக்கூடியது. இந்தப் பிரதீகத்தால் விளையும் இன்னல் என்னவென்றால், இதிலேயே நாம் ஆழ்ந்து ஆயுளைப் போக்கிவிடுவதே. ஆன்ம யாத்திரையில் இது ஒரு மைல்கல் என்று கருதுவது நலமே. இதையே பற்றி நிற்கும் மக்கள் தொண்ணூறு சதவீதம் உள்ளார்கள் என்று குறிப்பிடலாம். மாதாகோவிலில் பிறப்பது நலமே. ஆனால் அதிலேயே மாள்வது அழகல்லவே! இன்னும் தெளிவாகக் கூறினால், ஒரு குறிப்பிட்ட குழுவில் பிறந்து, அந்தக் குழுவின் பயிற்சியைப் பெறுவது நலம். அது நம் சிறந்த தன்மைகளைப் புலப்படுத்துகின்றது. ஆனால், அந்தக குழுவிலேயே வாழ்ந்து நம்மில் பெரும்பாலோர் மடிந்துவிடுகிறோம். அதிலிருந்து வளர்வதோ வெளியேறுவதோ இல்லை. அதுதான் இந்தப் பிரதீக வழிபாட்டால் விளையும் இன்னலாகும். ஒருவர் இவை யாவும் மனிதன் கடந்து செல்லும் படிகள் என்று உரைக்கின்றார். ஆனால், ஞானமுதிர்ச்சி பெற்றாற்கூட அவன் இவற்றையே பற்றி நிற்பதை நாம் நோக்குகின்றோம். ஓர் இளைஞன் மாதாகோவிலுக்குச் செல்லவில்லையென்றால், அவன் நிந்திப்பதற்குரியவனே. ஒரு முதியோன் மாதாகோவிலுக்குச் சென்றால், அவனும் வசைக்கு இலக்கானவனே. அந்தக் குழந்தை விளையாட்டில் அவன் கலந்துகொள்வதற்கு யாது இடமுள்ளது? மாதாகோவில் அவனை ஓர் உயர்ந்த நிலைக்குக் கொண்டுவர வேண்டும். இந்த அறிவு பழுத்த நிலையில் உருவ வழிபாடுகள், பிரதீகம் இவற்றால் அவனுக்கு ஆவது யாதுமில்லை. இவை யாவும் மேல் நிலைக்கு உய்க்கும் கீழ்ப்படிகளே. இவற்றோடு அவனுக்கு யாதொரு தொடர்புமில்லை.

புத்தகங்களை வழிபடுவது மற்றோர் ஆற்றல்மிக்க பிரதீகமாகும். எல்லா நாடுகளிலும் புத்தகம் கடவுளாய்க் காட்சியளித்து விடுகின்றது. நாட்டில் பல சமயப் பிரிவினர் கடவுள் மனித வடிவெடுக்கிறார் என்று நம்புகின்றனர். எனி

னும், கடவுள்கூட மானிடராக அவதாரஞ் செய்தால் வேத முறைப்படியே இருக்க வேண்டும். அவருடைய அறிவுரை அதற்கு ஏற்றபடி அமையவில்லையென்ருல், மக்கள் அதை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். புத்தரைப் பௌத்தர்களே யன்றி, எல்லோரும் வழிபடுகின்றனர். அவர்களிடம் "புத்தரை வழிபடுகையில் ஏன் அவர் அறிவுரைகளைப் பின்பற்றுவதில்லை ?" என்று கேட்டால், அவர்கள், "அவருடைய அறிவுரைகள் மறைகளை மறுக்கின்றன," என்று விடை அளிக்கின்ருர்கள். இவ்வண்ணமே, புத்தக வழிபாடும் அமைகின்றது. ஒரு சமய நூலில் காணப்படும் எத்தனையோ பொய்களை ஏற்பார்கள். இந்தியாவில் ஏதாவது புதிதாக ஒன்றை ஓதவேண்டுமானுல், எனது தனிப்பட்ட கருத்தென்ருல், அதை ஒருவரும் செவிமடுக்கமாட்டார். மறைகளிலிருந்து சில பகுதிகளை எடுத்துக்கூறி ஏமாற்றி, அவற்றிற்குக் காணமுடியாத உரையெல்லாம் அளிக்கலாம். அவற்றில் நம் அறிவுக்கென அமைந்த சுடரொளியை அவித்துவிடலாம். பிறகு நம் கருத்துகள் அருமறையினில் அலர்ந்திருக்கின்றன என்று கூறினுல், கூட்டமாக எல்லா மதியிலிகளும் சூழ்ந்து கொண்டு என்னைப் பின்பற்றுவார்கள்.

சிலர் கேட்போரை அச்சுறுத்தும் முறையில் கிறித்தவ சமயத்தைப் போதிக்கின்றனர். அது கேட்டு எளிய ஒரு கிறித்துவன் மிகவும் அஞ்சுகிருன். ஆனுல், "ஏசுகிறித்து இதைத்தான் இயம்பியுள்ளார்," என்று அவர்கள் மொழிந்தால், அவர்களை அந்த அறிவிலிகள் சூழ்ந்துகொள்கிருர்கள். வேதங்களிலோ, விவிலிய நூலிலோ இல்லாத புதிய கருத்துகளை மக்கள் விரும்புவதில்லை. எல்லாமே நரம்புகளுடைய ஒரு நிலைதான். உள்ளத்தைத் தொடும் புதிய ஒன்றைச் செவியுற்ருலும், புதியது ஒன்றைக் கண்டாலும் உடனே திடுக்கிடுறீர்கள் ; பதைக்கின்றீர்கள். இது அவர் அவர் மன இயல்பைப் பொறுத்தது. இதைவிட நினைவுலகத்தில் இயக்கங்கள் மிகுதியாகத் தோன்றுகின்றன. ஒரு புதிய கருத்தை ஏற்றுக்கொள்வது மிகவும் அரிதாக இருக்கிறது. எனவே, புதுக்கருத்தை அந்தப் பண்பையே தடத்தின் அண்மையில் வைத்தே தீரவேண்டும். பிறகு நாம் மெல்ல அதை ஏற்கிருேம். அது ஒரு தந்திரம் எனினும் ஒழுக்கக்

கேடே. அறிவுரை வழங்குபவர்கள் என்று கூறப்பட்டவர்கள் சமூகத்தின்கண் பொழிகின்ற ஏராளமான பொருத்தமற்ற முரணுன கருத்துகளை உன்னிப்பாருங்கள். கிறித்தவ விஞ்ஞானிகள் கண்களுக்கு ஏசுநாதர் ஒரு பிணி தீர்ப்பவராகக் காட்சி அளிக்கிருர். ஆவி நூல் வல்லார்களுக்கு அவர் மானத சத்தி வாய்ந்தவராவார். பிரம்ம ஞானிகளோ அவரை மகாத்துமாவாகக் கருதுகிருர்கள். இவை யாவும் ஒரே பொருளிலிருந்து முடிவு காணப்பட்டவையாகும். "சத்து அல்லது இருப்பு என்பது தான் இருந்தது. ஓ, என் அன்பே, வேருென்றும் முன்னல் திகழவில்லை," என்று மறைகளிலுள்ள ஒரு வரி சாற்றுகின்றது. இந்த வரியில் விரிந்த 'சத்து' என்பதற்குப் பல பொருள்கள் அளிக்கப்பட்டுள்ளன. அணுவிஞ்ஞான வாதிகள் இந்தச் சொல்லுக்கு 'அணு' என்று பொருள் கூறுகின்ருர்கள். அவற்றினின்று தான் உலகம் விரிந்தது என்கின்ருர்கள். இயற்கை விஞ்ஞானிகள் அதன் பொருள் இயற்கை என்றும், இயற்கையிலிருந்தே எல்லாம் பிறந்தன என்றும் இயம்புகின்ருர்கள். சூனியவாதிகள், இதற்குப் பொருள் ஒன்றுமில்லை என்றும், இன்மையினின்று எல்லாம் வெளிப்பட்டன என்றும் உரைக்கின்ருர்கள். ஆத்திகர்கள் 'கடவுள்' என்று வழங்குகின்ருர்கள். அத்துவைதிகள் இதன் பொருள் இயல் உண்மை (சொற்பதங் கடந்த சத்து) என்று சாற்றுகின்ருர்கள். ஆனுல், எல்லோரும் ஒரே வரியைத்தான் தமக்கு ஆதாரமாக வைத்துப் பொருள் விரிக்கின்ருர்கள்.

இவைகளே புத்தக வழிபாட்டின் குறைகள். ஆனுல், இதில் ஒரு பெரு நன்மையும் பொதிந்துள்ளது. அது நமக்கு நல்ல சத்தியை நல்குகின்றது. நூல்களைப் பெருத எல்லாச் சமயப்பிரிவுகளும் மாயையாய் மறைந்துபோயின. வேறு ஒன்றும் அவற்றை மாய்த்ததாகத் தெரியவில்லை. உங்களுட் சிலர் பார்ஸிகளைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். அவர்களே பழைய பாரசீகர்கள். ஒரு காலத்தில் அவர்கள் பல கோடிக் கணக்கில் வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் அரேபியர்களிடம் தோல்வியுற்ருர்கள். இப்பொழுது அவர்களது நாட்டில் உள்ள நவீனப் பாரசீகர்கள் முகம்மதியர்களாய் மாறிவிட்டார்கள். அவர்களிடமிருந்து தப்பிப் பிழைத்தவர் ஒரு

சிலரே. ஆனால், அவர்களுடைய நூல் அவர்களை இன்னும் தனி இனத்தாராக இயங்க உதவியுள்ளது. மீண்டும் யூதர் களைப் பற்றி உன்னுங்கள்; அவர்களுக்கு 'டால்மூடு' என்னும் ஒரு சிறந்த நூல் ஒளி பரப்பாமல் போகுமாயின், அப்படியே அவர்கள் உலகத்தில் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போயிருப்பார்கள். அப்புத்தகம் அவர்களின் சிறப்பையும் ஆற்றலையும் பாதுகாக்கிறது. எவ்வளவு அச் சுறுத்தும் இன்னல்கள் இருந்தும் 'டால்மூடு' அவர்களை ஒன்று சேர்த்து வைக்கிறது. அதுதான் நூலின் ஒரு பெரிய அனுகூலம் அது எளிய முறையில் எல்லாவற்றையும் தெளிவு படுத்துகிறது. அதுதான் சுலபமாகத் தாங்கிச் செல்லக்கூடிய உருவம். பலிபீடத்தின்மீது ஒரு புத்தகத்தை வையுங்கள். அதை எல்லோரும் கண்ணுறுவர். சிறந்த நூலானால் எல்லோரும் அதை நோக்குவர். என்னைப் பட்சபாத முடையவன் என்று எண்ணுவார்கள் என அஞ்சுகிறேன். என் கருத்தில் புத்தகங்கள் நன்மையைவிடத் தீமையையே விளைவித்திருக்கின்றன. அவைகளே தீமையைத் தோற்று விக்கும் கொள்கைகளுக்கு வேராய் உள்ளன. கொள்கைகள் புத்தகங்களிலிருந்து எழுகின்றன. புத்தகங்களே கொடிய வதைக்கும் மதவெறிக்கும் காரணமாய் உள்ளன. எல்லா இடங்களிலும் நூல்களே பொய்யர்களைப் படைக்கின்றன. ஒவ்வொரு நாட்டிலுமுள்ள பொய்யர்களின் தொகை எனக்கு வியப்பூட்டுகிறது.

அடுத்ததாக நாம் கவனிக்க வேண்டுவது, உருவங்களை எப்படிப் பயன்படுத்துவது என்பதே. உருவங்கள் அல்லது பிரதிமைகள் நம் மனத்தைக் கவர்கின்றன. உலகில் எல்லாம் நீங்கள் ஒருவகையிலோ, மற்றொரு விதத்திலோ உருவங்களைக் காண்பீர்கள். சிலரிடத்தில் அது ஒரு மனித உருவத்தில் திகழும். அதுதான் மிகவும் உயர்ந்ததோர் உருவம். நான் ஓர் உருவத்தை வழிபட விரும்பினால், ஒரு கட்டடத்தையோ, மிருகத்தையோ அல்லது வேறு உருவத் தையோ வழிபடுவதைவிட, மனித உருவத்தையே விரும்பு வேன். ஒரு சமயப்பிரிவு, ஒருவித உருவந்தான் தக்க உருவ மெனக் கருதுகிறது. மற்றப் பிரிவு, அது பொருத்தமன்று என்று நினைக்கிறது. கிறித்தவர் ஒருவர் கடவுள் புரு

வடிவத்தில் வந்ததே சரியென எண்ணுகிறார்; ஆனால், இந்துக்கள் கூறுகிறபடி, கடவுள் மீன் வடிவத்தில் வந்தார் என்றால், அதைத் தவறாகவோ, அல்லது மூடநம்பிக்கையாகவோ கருதுகிறார். யூதர்கள் கடவுளின் வடிவம் ஒரு பெட்டியின்மேல் ஒரு புத்தகம் இரு தேவதூதர்களோடு அமைந்திருத்தல் தக்கதென எண்ணுகிறார்கள். அது ஓர் ஆடவன் வடிவத்திலோ, பெண் வடிவத்திலோ இருந்தால், அது ஒரு கோரமான காட்சியெனக் கருதுகிறார்கள். முகம்மதியர்கள் தொழும்போது காபாவுடைய ஒரு கருமையான கல்லையும் அமைத்து, மேற்றிசை நோக்கித் தியானத்தில் ஆழ்வதுதான் தக்கதென எண்ணுகிறார்கள்; மாதா கோவிலைப்போல ஒரு வடிவத்தை அமைத்தால், அது தவறு என்றும், அது உருவ வழிபாடு என்றும் நினைக்கிறார்கள்; இதுதான் உருவங்களின் வழிபாட்டில் உள்ள குறைபாடாகும். எனினும், இவை யாவும் இன்றியமையாத படிகளே என்பது தோன்றுகிறது!. இவ்விஷயத்தில் நாம் என்ன நம்புகிறோம் என்பது தான் மிகச் சிறந்தது. நாம் எத்தகைய அனுபூதிச் செல்வத்தை அடைந்துள்ளோம் என்பதுதான் வினா. ஏசுநாதரோ, புத்தரோ, மோஸஸோ அப்படிச் செய்தார், இப்படிச் செய்தார் என்பது பயனற்றது. நாம் அத்தகைய அனுபூதியைப் பெறவேண்டும். அவர்களைப் போலத் திகழாமல் ஓர் அறையிற் புகுந்து கதவை மூடிக்கொண்டு மோஸஸ் அருந்தினதையும், நம்மை இரட்சிக்க மோஸஸ் கருதினதையும் நினைத்துக் கொண்டிருந்தால், நம் பசி தீருமா? என் கருத்துகள் இது சம்பந்தமாகப் புரட்சிகரமானவைகளே. சில சமயங்களில் நான் பண்டைய ஆசிரியர்களின்படி யோசிப்பது தக்கதென எண்ணுகிறேன். சில சமயங்களில் நான் சொல்வதை அவர்கள் ஏற்பது நலமென எண்ணுகிறேன். நான் எதிலும் சுதந்தரமாகத் தனிப்பட்ட முறையில் நம்பிக்கை உள்ளவன். இந்த ஞானகுரவர்களிடமிருந்து கருத்தில் நான் வேறுபட்டுத் தனித்து நிற்பேன். எல்லா வித மரியாதையையும் அவர்களுக்குச் செய்யுங்கள். ஆனால், சமயத்தைத் தனித்த ஓர் ஆராய்ச்சியாகக் கொள்ளுங்கள். அவர்கள் கண்டபடி நானும் அந்த ஞானதீபத்தின் ஒளியைக் காணவேண்டும். அவர்கள் ஒளியைக் கண்டது எல்லோருக்

கும் திருத்தியை ஏற்படுத்தாது. நீங்களே ஒரு வேதநூலான பைபிளாக மாறவேண்டும். அதை நீங்கள் பின்பற்றுதல் மட்டும் போதாது. நீங்களே அதை ஒரு வழிகாட்டியாக—பாதையைக் காட்டும் ஒரு குறியாக—எண்ணி அதற்கு மரியாதை செலுத்த வேண்டும். அதுதான் நாம் புத்தகத்திற்குக் காட்டும் மதிப்பு. ஆனால், உருவங்களும், மற்றவைகளும் அவசியமே. மனத்தை ஒரே முகமாக நிலைக்க வைக்கவோ, அல்லது ஓர் எண்ணத்தை வெளிப்படுத்தவோ, உங்கள் மனத்தில் எண்ணங்களை எழுப்பவோ நூல் பயன் படும்.

நீங்களும் உங்கள் மனத்தில் உருவங்களை அமைக்கின்றீர்கள். உருவங்களை அமைக்காமல் உங்களால் இருக்க இயலாது. உருவமே வேண்டாத இரண்டு வகையான மக்கள் உள்ளார்கள்: அவர்கள் சமயத்தைப் பற்றிக் கவலைப் படாதவர்களும் எல்லாவற்றையும் கடந்த ஞானியர்களும் ஆவர். இந்த இரண்டு எல்லைக்குள் பலவகையான வழிபாடுகள் விரிகின்றன. நம் இலட்சியம், நம்மை விட்டுச் சென்ற ஒரு மனித உருவமாக இருக்கலாம்; அல்லது வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு பெண் அல்லது ஆணாக இருக்கலாம்; அல்லது மாண்டவர்களாய் இருக்கலாம். அது இயற்கையான நிலைதான். நாம் ஒன்றை உருவாக்க விரும்புகிறோம். ஒன்றை உருவாக்காமல் நாம் எப்படி உய்ய முடியும்? நாமும் உருவான ஆவிகளே. உருவாக்கும் இயல்பு தான் நம்மை இங்கே கொண்டுவந்துள்ளது. அதுதான் நம்மை வெளியே அழைத்துச் செல்லும். புலன்களின் பின்னே செல்வது, நம்மை மானிடமாக்கியுள்ளது. எனவே மானிட உருவங்களை எவ்வளவு எதிர்த்துப் பேசின போதும் கூட நாம் உருவங்களை வழிபடுகிறோம். 'நீ இப்படி உருவத்தில் ஈடுபடக் கூடாது,' என்று சொல்வது எளிது. ஆனால் எந்த மனிதன் இதை இயம்புகின்றானோ, அவனே அதில் ஆழ்ந்து விடுகின்றான். ஆடவரிடமோ பெண்டிரிடமோ அவன் வைத்த பற்றோ மிகமிக வலியது. அவன் அவர்கள் இறந்தாலும், அவர்களைப் பின்தொடர்ந்து செல்ல விரும்புகிறான். அது தான் உருவ வழிபாடு. அது ஏதாவது ஓர் உருவத்தில் புலனாகாமற் போகாது. ஒரு சாதாரண ஆடவனிடமோ

பெண்ணினிடமோ உள்ள பற்றைவிட ஏசுவினிடமும், புத்தரிடமும் பற்று இருப்பது சிறந்ததன்றோ? மேலைநாடுகளில், “கிறித்துவின் உருவத்தின் முன் முழங்கால் இடுவது நல்லதன்று,” என்று கூறுகிறார்கள். ஆனால், ஒரு மங்கை முன்னால் முழங்காலிட்டு, “நீ தான் என் உயிர்; நீ தான் என் ஒளி; நீ தான் என் கண்ணின் பாவை; நீ தான் ஆன்மா,” என்று உளம் உருகிப் போகின்றார்கள். இது உருவ வழிபாட்டை விட இழிவானது. “எனது ஆன்மா; என் உயிர்,” என்று பேசுகிற பேச்சில் ஏதாவது பயனுண்டா? ஐந்து நாளில் இந்த உணர்ச்சி மறைந்து விடும்; இது ஐம்புலப் பற்றேயாகும். இது தன்னலப் பற்றே. இதைச் சிலர் மலர்களைக் கொண்டு மறைக்கின்றனர். கவிஞர்கள் இதற்கு அழகான பெயர் வழங்குகின்றார்கள்; இதன் மேல் பன்னீர் தெளிக்கிறார்கள். ஆனால், இது தன்னலப்பற்றே ஒழிய வேறன்று. மகாவீரர், புத்தர் இவர்களுடைய சிலைகளுக்கு முன்னால் முழங்காலிட்டு, “நீங்கள் தான் என் உயிர்,” என்று கூறுவது இதைவிடச் சிறந்த தன்றோ? நான் முன் கூறினதை விட இப்படி நூறு தடவை செய்வதைத்தான் விரும்புவேன்.

இதைவிட இன்னொரு வகையான பிரதிகை வழிபாடு மேலை நாடுகளில் உள்ளது. அது நம் நூல்களில் கோயில் கொண்டிருக்கிறது. அது மனத்தையே கடவுள் என்று வழிபடுவதாகும். ஏதாவது ஒன்றை ஆண்டவரென்று வழிபடுவது ஒரு படியாகும். அது ஆண்டவரை நாடச் செய்ய உதவும். கார்த்திகை மண்டலத்திலுள்ள அருந்ததி என்னும் மிகச் சிறிய விண்மீனைக் காட்ட, அக்கூட்டத்திலுள்ள பெரிய விண்மீனை முதலிற் காட்டி, அதில் பார்ப்பவன் கவனம் ஊன்றிய பிறகு அதற்கு அடுத்துள்ள தாரகையைக் காட்டி, அப்படியே அருந்ததி நட்சத்திரத்தை உணர்த்துகின்றோம். இது ‘அருந்ததி நியாயம்’ எனப்படும். இப்படியே பலவிதப் பிரதீகங்களும், பிரதிமைகளும் நம்மை ஆண்டவரிடம் மெல்ல மெல்ல அழைத்துச் செல்கின்றன. புத்தர், ஏசுநாதர் வழிபாடும் பிரதிமை வழிபாடுதான். அது ஆண்டவரின் வழிபாட்டிற்கு அடுத்து வருவதாகும். ஆனால் இத்தகைய வழிபாடு ஒரு மனிதனைக் காப்பாற்றாது. இதைக் கண்டு அவன் ஆண்டவரிடம் செல்ல வேண்டும். ஆண்ட

வரே நமக்குச் சுதந்தரம் நல்கக் கூடும். தத்துவ ஆராய்ச்சி வல்லுநர் சிலர் ஏசுநாதரும் புத்தரும் கடவுளெனக் கருதப் பட வேண்டுமென எண்ணுகின்றனர்; அவர்கள் பிரதீகங்கள் அல்ல; கடவுளே என்கின்றனர். இவை யாவும் ஆண்டவரை நெருங்கிச் செல்லும் படிகளென நாம் ஏற்றுக்கொள்ளலாம். அவர்கள் கூறுவதற்காக நாம் மனம் வருந்த வேண்டுவ தில்லை. ஆனால், 'இந்தப் பிரதிமைகளை வழிபடும்போது ஆண்டவரை வழிபடுவதாக நினைத்தால், அது தவருகும்; இயேசு நாதரை வழிபடுவதனுலே தான் உய்யமுடியும்,' என நினைத்தால், அது திண்ணமாகத் தவறேயாகும். ஒரு மனிதன் ஓர் உருவத்தையோ, ஆவிகளேயோ அல்லது மாண்ட தென்புலத்தோர்களையோ வழிபட்டால், அவன் காப்பாற்றப்படுவன் என நினைத்தலும் பிழையே. ஆனல் நீங்கள், 'கடவுள் இதில் உள்ளார்' என்று எதையாவது வழி படலாம். உருவத்தை மறந்து அதில் கடவுளைக் காணுங் கள்.

கடவுள் மீது நாம் உருவம் ஒன்றையும் புகுத்தி விட லாகாது. ஆனல், நமது விருப்பப்படி எதில் வேண்டுமாஞ லும் கடவுளைப் புகுத்தலாம். வடிவத்தை மறந்து அதில் ஆண்டவரை அழைத்துக் கொள். அது தக்கதே; ஏனென் ருல், அவரிடமிருந்து தான் யாவும் வருகின்றன. அவர் எல்லாப் பொருள்களாயும் இருக்கிருர். கடவுளைப்போல ஓர் ஓவியத்தை வழி படலாம். ஆனல் ஓவியத்தைக் கடவு ளென்று வழி படக்கூடாது. கடவுள் ஓவியத்தில் திகழ் கிருர் என்பது சரி. ஆனல், ஓவியமே ஆண்டவர் என்பது தவறு. அது ஒரு 'பிரதீகம்' தான்.

அடுத்து, நாம் சிறப்பாக ஆராய வேண்டுவது 'நாம சத்தி' என்பதே; அதாவது, பெயரின் ஆற்றலைப் பற்றி யதே. உலகமே உருவத்தாலும் பெயராலும் அமைந்திருக் கின்றது. அது உருவம், பெயர் இவற்றின் சேர்க்கை என லாம். அல்லது பெயர் மட்டும் போதும். உருவம் மனம் படைக்கும் வடிவமே. எனவே, பெயரும் உருவமும் இல்லாது ஒன்றுமே உலகில் இல்லை. ஆண்டவனுக்கு உருவமோ வடிவமோ இல்லையென்பதை எல்லோரும் நம்புகிருேம். ஆனல், அவரை வழிபடத் தொடங்கிய உடனே அவருக்குப்

பெயரும் உருவமும் அளிக்கின்றோம். 'சித்தம்' என்பது ஓர் அமைதி நிலவும் குளம். நினைவுகள் சித்தத்தின் அலைகளைப் போன்றவை. இந்த அலைகள் இயல்பாகவே நாம ரூபத்தோடு எழுகின்றன. பெயரும் உருவுமின்றி ஓர் அலையும் எழும்ப இயலாது. குலையாமல் என்றும் ஒரே சீராயுள்ள நிலையைச் சிந்திக்க இயலாது; அது நினைவிற்கு அப்பாலுள்ளது. நினைவும் சடமும் அது ஆனவுடன், அதற்குப் பெயரும் உருவமும் வந்தாக வேண்டும். அவற்றை நாம் பிரிக்க இயலாது. இந்த பிரபஞ்சத்தைக் கடவுள் வாக்கைக் கொண்டு படைத்தார் என்பது பல நூல்களில் எழுதப்பட்டுள்ளது. வடமொழியில் காணப்படும் 'சப்தபிரம்மம்' என்பது கிறித்தவர்கள் 'வாக்கு' என்று சொல்வதே. இந்தப் பண்டைய இந்துக் கொள்கை, இந்திய நாட்டுச் சமயப் பணியாளர்களால் அலக்ஸாண்டிரியாவுக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கு நிலைபெற்று விட்டது. அவ்வாறு வாக்கு, அவதாரம் இவற்றைப் பற்றிய கருத்து அங்கே நிலைத்து விட்டது.

ஆண்டவர் வாக்கிலிருந்தே எல்லாவற்றையும் படைத்தார் என்னும் கருத்திற்கு மிகுந்த ஆழமான பொருளுண்டு. ஆண்டவருக்கு உருவமேயில்லை. இதுதான் படைப்பையோ உருவத்தையோ விளக்கும் மிக நல்ல முறையாகும். படைப்பு என்பது வடமொழியில் சிருஷ்டி என்பதாகும். 'சூனியத்திலிருந்து ஆண்டவர் எலலாவற்றையும் படைத்தனர்,' என்பதன் பொருளென்ன? பிரபஞ்சம் ஆண்டவரிடமிருந்தே வெளிவர, அவரே பிரபஞ்சமாகி விட்டார்; எனவே, யாவும் அவரிடமே மீண்டும் சேர்கின்றன; மறுபடியும் படைப்பு ஏற்பட்டு, மறுபடியும் அவரிடத்தே திரும்புகின்றன. இறுதிவரையும் இது இவ்வண்ணம் சென்று கொண்டே தானிருக்கும். மனத்தில் என்ன ஏற்படுகிறதோ, அது பெயரும் உருவமும் இல்லாமல் இருக்க இயலாது. உங்கள் மனம் மிகவும் அமைதியாக, எண்ணங்களே அற்றதாக இலங்குவதென வைத்துக் கொள்வோம். எனினும், எண்ணங்கள் எழத் தொடங்கியதும் அவை பெயரையும் உருவத்தையும் எடுத்துக் கொள்ளத்தான் செய்யும். ஒவ்வொரு நினைவும் ஒரு குறிப்பிட்ட பெயரையோ அல்லது

உருவத்தையோ உடையது. எனவே, படைப்பு, தோற்றம் என்பவை எப்போதும் பெயரோடும் உருவத்தோடும் சேர்ந்தே உள்ளன. ஆகையால், மாந்தர்க்குரிய ஒவ்வொரு கருத்தும் குறிப்பிட்ட ஒரு சொல்லின் மற்றொரு பாகமாகும் என்பதில் ஐயமில்லை. இப்படி இருப்பதால், இந்தப் படைப்பே மனத்தின் வெளித்தோற்ற மென்பது இயல்பன்றோ? எப்படி யெனறால், உங்கள் கருத்து உருவாகுமானால், அதன் தோற் றந்தான் உங்கள் உடம்பாகும். உங்கள் உடல் எப்படி உங்கள் கருத்தின் தூலத் தோற்றமோ, அப்படியே இந்த அகிலப் பிரபஞ்சமும் மனத்தின் தூலவடிவமாகும்; சுருங்கக் கூறுமிடத்து, உருப்பெற்றதாகும். இந்த முறையில் எல்லாம் அமைக்கப் பட்டிருக்குமாயின், ஓர் அணுவின் இயல்பை அறிந்து விட்டால், பிரபஞ்சத்தையே அறிந்து விடக்கூடும். உடலையும் மனத்தையும் பிரிக்க இயலாது. புறத்தில் காணப்படுகிற தூலவடிவமான உடலின் சூக்கும வடிவந்தான் மனமாகும். எனவே, உங்களுக்கு உடல் அற்ற போதே கருத்தும் அழிந்து போய்விடும். ஒவ்வொரு நாளும் நீங்கள் அதை உணர்கின்றீர்கள். ஒரு மனிதனது மனம் அமைதியற்றவுடன் அவன் கருத்துகளும் கலங்கி விடு கின்றன. ஏனென்றால், இரண்டும் ஒன்றே தான்; சடம், மனம் என்பன வெவ்வேறு பொருள்களல்ல; இவை ஒன்றே. உயர்ந்து தூண்போல் ஓங்கி நிற்கும் வாயுவில் செறிந்த பாகமும் நுண்ணிய பாகமும் இருக்கக் காண்கின்றோம். ஆனால், தனிப்பொருளான வாயு ஒன்றே உயரச் செல்லச் செல்ல மிகவும் மென்மையுறுவது போல, நமது உடலும் தூலத்திலிருந்து நுட்பத்திற்குப் போகின்றது. நாம் படிப் படியாகத் தூலத்திலிருந்து சூக்குமத்திற்கு வருகின்றோம். மறுபடியும், நம் உடல் நமது விரல் நகங்களுக்கு ஒப்பானது. நமது நகத்தை வெட்ட வெட்ட அது வளர்கிறது. அவ்வண் ணமே நம் நுண்ணிய எண்ணங்களால் ஒருடலுக்குப் பின் மற்றொருடல் வளர்ந்து கொண்டே போகின்றது. எவ்வள வுக் கெவ்வளவு நுட்பமாக ஒன்றிருக்கிறதோ, அவ்வளவுக் கவ்வளவு அது அழியாமல் நிலைத்து நிற்கப் பார்க்கின்றது. இந்த உண்மையை எப்பொழுதும் நாம் உணர்கின்றோம். தூலப் பொருள்கள் உறுதி பெறுகிறதில்லை. எண்ணத்தின்

தூல சூக்கும வடிவந்தான் அனைத்தும். எண்ணம், தூலம், சூக்குமம் இந்த மூன்றும் ஒன்றே. இம்மூன்றும் மும்மூர்த்திகளே. இவை யாவும் ஒரே பொருளின் மூன்று நிலைகளாகும். ஒன்றையே நுட்பமானது, செறிவுடையது, மிகச் செறிவுடையது என்று கூறலாம். எங்கே பெயர் திகழ்கின்றதோ, அங்கே உருவமும் எண்ணமும் மிளிர்கின்றன. உடலின் திட்டப்படி படைப்பு அமைக்கப்பட்டிருந்தால், இயல்பாகவே படைப்பு, உருவம், பெயர், எண்ணம் ஆகிய மூன்றை மட்டுமே பெற்றிருக்க வேண்டுமென்பது திண்ணம். எண்ணம் படைப்பின் மிக நுட்பமான பாகம். அது தான் உண்மையான தூண்டு சத்தி. அதற்குத்தான் கடவுள் என்பது பெயர். நமது உடலின் பின் மிளிரும் எண்ணம் ஆன்மாவாகும். பிரபஞ்சத்தின் பின் சுடர்விடும் எண்ணம் ஆண்டவரே என இயம்பலாம். ஒன்றுக்குப் பின் ஒன்றாய் எல்லாம் அமைந்து காட்சி அளிக்கின்றன. நாமமும், இறுதியாக நாம் தொட்டு உணரக்கூடிய வடிவமும் எழுகின்றன. சான்றாக, நீங்கள் குறிப்பிட்ட ஒரு மனிதர்; பேரண்டத்தில் ஒரு சிற்றண்டம். இந்த உடலுக்கு ஓர் உருவமுண்டு. அதற்குத் திருவாளர் ஜான் அல்லது திருவாட்டி ஜேன் என்ற பெயரும் உண்டு. அதற்குப் பின் ஒரெண்ணம் ஒளிர்கின்றது. அது போலவே இந்தப் பிரபஞ்சமும் அமைந்துள்ளது. அது கணக்கற்ற வகையில் பெருகியுள்ளது. அதற்குப் பின் ஒரு நாமமுண்டு. அது தான் வாக்காகுமென்று எல்லாச் சமயங்களும் சாற்றுகின்றன; அதற்குப் பின் கடவுள் இருக்கிறார். விசுவமனத்தைத் தான் சாங்கியர்கள் 'மகத்து' என மொழிகின்றார்கள். அதுதான் விசுவ உணர்வாகும். அந்தப் பெயரென்ன? ஏதாவதொரு பெயர் திகழ வேண்டும். உலகம் ஒரே இயல்பானது. இக்கால விஞ்ஞானம் எப்பொருளினால் இவ்வுலகம் ஆக்கப்பட்டதோ, அப்பொருளினாலேயே ஒவ்வோர் அணுவும் ஆக்கப்பட்டிருக்கிறதென்று சிறிதும் ஐயத்திற்கு இடமின்றி வற்புறுத்துகிறது. உங்களுக்கு ஒரு களிமண்கட்டியைப் பற்றித்தெரிந்தால், பிரபஞ்சமே தெரிந்ததாகும். ஆண்டவரின் படைப்பில் மனிதன் ஒரு பிரதிநிதிபோல மிகவும் பொலிவுற்றிருக்கிறான். மனிதனே ஒரு சிற்றண்டம்;

அவன் ஒரு சிறிய பிரபஞ்சமே. அவனில் உருவமும், அதற்குப் பின் நாமமும், நாமத்திற்குப் பின் மனமும், மனத்திற்குப் பின் சிந்திக்கும் ஆன்மாவும் உள்ளன. இதே திட்டப்படி தான் உலகமும் அமையவேண்டும். 'நாமம் என்று நவில்கின்றோமே, அது யாது?' என்பதுதான் வினா. இந்துக்கள் கருத்துப்படி அந்த வாக்கு தான் 'ஓம்' என்பது. பழைய எகிப்தியர்களும் அதை நம்பினார்கள். "எதைத் தேடிக் கொண்டு ஒருவன் பிரம்மசரிய ஆச்சிரமத்தில் வேறொன்றி நிற்கின்றானோ, சுருங்கக் கூறுமிடத்து அதுதான் 'ஓம்' என்பதாகும். அதுதான் பிரம்மம்; என்றும் மாறாதது; உயர்வற உயர்ந்தது. அந்தக் குறையாத ஒன்றை எவன் அறிகின்றானோ, அவன் விரும்புவன எல்லாவற்றையும் பெறுகின்றான்" என்று கடவல்லி முழங்குகின்றது. உலகம் முழுவதையும் தழுவும் சொல்லாய் 'ஓம்' நிற்கிறது. அது புறவுலகத்திலும் கடவுளுக்கும் நடுவில் அமைந்துள்ளது. அது இரண்டையும் குறிக்கிறது; ஆனால், நாம் பிரபஞ்சத்தை நம் ஐம் புலன்களுக்கு ஏற்றவாறு அமைத்துக்கொள்ளக் கூடும். ஊறு, சுவை, நிறம் இவை போன்றவை மூலமாக அதை நாம் நண்ண முடியும். ஒவ்வொரு முறையிலும் இந்தப் பிரபஞ்சத்தைப் பல கோணங்களிலிருந்து நோக்கி, பல கோடி பிரபஞ்சங்களை எழுப்பி விடலாம். ஒவ்வொன்றும் ஒவ்வொரு பிரபஞ்சமாகக் காட்சியளிக்கும். ஒவ்வொன்றிற்கும் ஒரு பெயரும் ஓருருவமும், ஓரெண்ணமும் உண்டு. இவற்றிற்குப் பின் மிளிரும் எண்ணங்களுக்கே 'பிரதிமைகள்' என்பது பெயர். ஒவ்வொன்றுக்கும் ஒரு பெயருண்டு. இந்தப் பல புனிதமான திருநாமங்கள் பத்தியோகத்தில் வழங்கப் படுகின்றன. இந்தத் திருநாமங்களுக்கு எல்லையற்ற சத்தியுண்டு. இந்தப் பெயர்களைப் பலமுறை ஓதுவதால் நாம் நம் விருப்பப்படி எதை வேண்டுமானாலும் பெறலாம். நாம் பூரணத்தையும் அடையலாம். ஆனால், இரண்டு பொருள்கள் இன்றியமையாதவை. "ஞானகுரு வியத்தகு சான்றோராய் விளங்க வேண்டும்; குருவுக்கேற்ற சீடனும் ஒருவன் இருத்தல் வேண்டும்," எனக் கடவல்லி கூறுகின்றது. தக்க குல முறையாக வந்த நாமத்தைப் பெற்றவனிடமிருந்து நாம் அதை அடைதல் வேண்டும். பண்டைக் காலத்திலிருந்தே

குரு—சீடன் என்ற முறையில் ஆன்மிகச்சுடர் வெள்ளம் தன் சக்தியைப் பெருக்கிக் கொண்டே போகின்றது. இந்தச் சொல் எவரிடமிருந்து வருகிறதோ, அவருக்குக் குரு என்பது பெயர்; யாரிதைப் பெறுகின்றாரோ, அவருக்குச் சீடர் என்பது பெயர். அந்தச் சொல் தக்க முறையில் ஏற்கப்பட்டு அது பலமுறை ஓதப்பட்டால், பத்தியோகத்தில் மிகுந்த முன்னேற்ற மடையலாம். அந்த நாமத்தை இசைப்பதால் பத்தியின் உயர்ந்த நிலை கைகூடும். "உமக்குப் பல திரு நாமங்களுண்டு. அந்தத் திருநாமங்களின் பொருளை நீர் அறிந்திருக்கிறீர். ஒவ்வொன்றிலும் உமது அளவற்ற சத்தி சூழ்ந்து நிற்கிறது. இடத்தையோ, நேரத்தையோ பொருட்படுத்த வேண்டுவதில்லை. ஏனெனில், எல்லா நேரமும் எல்லா இடமும் புனிதமானவையே. ஆண்டவரே, நீர் காட்சிக்கெளியீர். அருளே உமது வடிவம். நான் ஓர் ஏழை. உம்மிடம் சிறிதேனும் அன்பு வைக்கும் பாக்கியம் பெற்றிலேன்!" என்று ஆண்டவரிடம் முறையிடுங்கள்.

‘ இஷ்டம் ’*

நான் முன்பு சிறிது சுருக்கமாகக் குறிப்பிட்ட ‘இஷ்டம்’ என்ற கொள்கைக்குச் செவி சாயுங்கள். இது உற்றுக் கவனிக்க வேண்டிய பொருளாகும். இதைப் பற்றிச் சரியான விளக்கம் ஏற்பட்டால், உலகிலுள்ள எல்லாச் சமயங்களையும் நாம் அறிந்து கொள்ள இயலும். ‘இஷ்டம்’ என்னும் சொல் ‘இஷ்’ என்னும் தாதுவிலிருந்து பிறந்தது. விரும்பு, தேர்ந்தெடு என்னும் சொற்களும் இதிலிருந்து பிறந்தவைகளே. எல்லாச் சமயங்களும் அவற்றின் பிரிவுகளும், அவற்றின் இலட்சியமும் ஒன்றே தான். அது யாதோவெனில், துன்பந் துடைத்து விடுதலை பெறுவதே. எங்கெந்த இடங்களில் சமயங்கள் உள்ளனவோ, அந்த இடங்களிலெல்லாம் இந்த இலட்சியம் ஒரு வடிவத்திலோ மற்றொரு வடிவத்திலோ உருவாகிறது. ஆனால், சமயத்தின் கீழான நிலைகளில் அது அவ்வளவு நன்றாகத் தெளிவுபடுத்தப்படவில்லை. ஆனாலும் சற்றுக் குறைவாகவோ, அல்லது நன்றாகவோ புலனாகாத போதிலும், நாமெல்லாரும் ஒரே இலட்சியத்தை நோக்கியே செல்கின்றோம் என்பதில் யாதோர் ஐயமுமில்லை. துன்பங்களிலிருந்து, நாடோறும் நாம் படும் இன்னல்களிலிருந்து, விடுபடவேண்டும். இதற்காக உடல், உள்ளம், ஆன்மா இம்மூன்றிலும் நாம் முயல்கின்றோம். இந்தக் கருத்திற்கிணங்கவே உலகம் நடைபெறுகின்றது. முடிவு ஒன்றுதான்; ஆனால் அதை அடையும் வழிகளோ பலவாகும். இந்த வழிகள் நமக்குள்ள தனித்தன்மைகளைப் பொறுத்தவை. ஒருவர் மிகத்தீவிர உணர்ச்சி இயல்புள்ளவராய் இலங்குகின்றார்; இன்னொருவர் நுண்ணறிவு படைத்தவராய்த் திகழ்கின்றார்; அடுத்தவர் சுறு சுறுப்புடன் அரிய செயலில் ஈடுபடுகின்றார். இவ்வாறு பலவகை மக்கள் உண்டு. மறுபடியும் ஒரே இயல்பில் கீழ்க்கிளைகளும் இருக்கலாம். சான்றாக, நாம் இக்கணம் சிறப்பாக ஆய்கின்ற பத்திநெறியை எடுத்துக் கொள்வோம். ஒருவன் தன் குழந்தையினிடம் மிகுதியான அன்பைச் சொரிகிறான். ஒருவன் தன் மனைவி மீது அதைப் பொழி

*தொழுதற் பொருட்டுத் தனக்குரிய வழிபடு தெய்வத்தைத் தேர்ந்தெடுத்தல்.

கின்றான். தாயினிடமும் தந்தையினிடமும் ஒருவனுடைய அன்பு பாய்கின்றது; ஒருவன் நண்பனிடம் பாசம் வைக்கிறான். ஒருவனுக்கு நாட்டுப்பற்று மிகுதியாயிருக்கிறது. சிலர் சமூகத்தின் மீது கண்ணுங் கருத்துமாயிருக்கின்றனர். வாழ்க்கைப் பாதையில் இந்த அன்புதான் தம்மை உந்துகிறது என்று உரைத்தபோதிலும், அவ்வாறு வாழ்க்கையை மேற்கொண்டு செல்வோர் ஒரு சிலரே. ஞானியர் ஒரு சிலர் இத்தகைய அமுதமாகிய அன்பை அனுபவித்திருக்கக் கூடும். மனித இனத்தில் சான்றோர் சிலர் இத்தகைய பரந்த அன்பை — பிரபஞ்சத்தைத் தழுவக்கூடிய அன்பை — உணர்ந்திருக்கக்கூடும். இவ்வுலகு அத்தகைய மனிதர்களைத் தன்னகத்தே கொள்ளாது போகாது என்பதை நம்புவோமாக!

நாம் ஒரு துறையிலும் முடிவைக் காணப்பல முறைகளுண்டாவென்று துருவி ஆராய்கின்றோம். கிறித்தவர் அனைவரும் இயேசுநாதரை நம்புகின்றனர்; ஆனால், அவரைப்பற்றி எத்தனையோ வேறுபட்ட விளக்கங்களும் கருத்துகளும் கொண்டிருக்கின்றனர். கிறித்தவ சமயத்தின் ஒவ்வொரு பிரிவினரும் தத்தம் அறிவொளி கொண்டு பல கோணங்களில் நின்று இயேசுநாதரைப் பார்க்கின்றனர். பிரெஸ்பிட்டேரியன் பிரிவைச் சார்ந்தவருடைய கண்கள், பணம் கொடுத்தல் வாங்குதல் செய்யும் வணிகர்பால் இயேசுநாதர் சென்ற காட்சியைக் காண விரைகின்றன. அவர்கள் அவரை ஒரு போர்வீரராகக் கருதுகின்றார்கள். குவேக்கர்களைக் கேட்டோமானால், அவர்கள் இயேசுநாதர் தம் பகைவர்களை மன்னித்தாரென்று உரைப்பார்கள். குவேக்கர்கள் அக்கருத்துக் கொண்டுதான் இயேசுநாதரைப் பார்ப்பார்கள். இவ்வாறு பல கோணங்களும் பல பார்வைகளும் நம்முன் விரிந்து விடுகின்றன. கத்தோலிக்கர் ஒருவரைக் கிறிஸ்துவின் வாழ்க்கையில் உள்ளங்கவர்ந்து வினவினால், பீட்டருக்குத் திறவுகோல்கள் அவர் தந்த காட்சிதான் மிகச் சிறப்புற்றதென்று மொழிவர். எனவே, ஒவ்வொரு பிரிவும் ஒவ்வொரு முறையில் இயேசுநாதரைக் காண்கிறது.

ஒரே பொருளுக்குப் பல பிரிவுகளுண்டு. அறிவிலா மக்கள் இந்தச் சிறு பிரிவுகளுள் ஏதோ ஒன்றைக்கொண்டு

அதைச் சிக்கெனப் பற்றியிருக்கின்றார்கள். அவர்களுள் ஒவ்வொருவரும் அவரவர் அறிவின் ஒளிக்கேற்றவாறு பிரபஞ்சத்திற்கு விளக்கந்தர உரிமையில்லையென்று மட்டும் நின்று விடாமல், மற்றவர்கள் மொழிவது தவறென்றும், தாம் கூறுவதுதான் தக்கதென்றும் துணிந்து சாற்றுகின்றனர். அவர்களை எதிர்த்தால் சொற்போர் தொடுக்கின்றார்கள்; 'நாங்கள் கொண்ட கருத்தை நம்பாதோரைக் கொல்வோம்!' என அறை கூவுகின்றார்கள். மதவெறி பிடித்த முகம்மதியர்கள் இவ்வண்ணம் செய்கிறார்கள் அல்லவா?

தாங்கள் கொண்ட கருத்தில் உண்மையுள்ளோர்களாய்த் திகழ்வதாகக் கருதி, மற்றவர்களைப் புறக்கணிக்கின்றார்கள். ஆனால், பத்தியோகச் செயல் முறையில் நாமெந்த நெறியைப் பின்பற்ற வேண்டும்? அவரவர் போற்றும் வழிகள் 'தவறான பாதைகளல்லவென்று' கூறுவதோடு நில்லாமல், அவரவர் கடைப்பிடிக்கும் நெறிகளும் சிறந்தனவென்று நாம் கூறவேண்டும். எவரும் தத்தம் வழிகளிலே செல்லட்டும். எந்தப் பாதை உங்கள் இயல்பிற்குகந்ததோ, அந்தப் பாதை தக்கதே. நாம் ஒவ்வொருவரும் முற்பிறவியின் விளைவாக ஒவ்வொரு தனிப்பட்ட இயல்போடு உலகில் தோன்றியிருக்கிறோம். அதை முன்பிறவியின் அனுபவமென்று மொழிந்தாலுஞ் சரி; அல்லது குலமுறைச் செல்வமெனக் கூறினாலுஞ் சரி. நாமனைவரும் நம் பண்டைய வினைப் பிண்டங்களே. எந்த வாய்க்கால் வழியாகப் பண்டைய வினைகள் பெருகி வந்தனவோ, அவற்றின் விளைவே நாம் என்பது திண்ணம். நாம் ஒவ்வொருவரும் ஒன்றின் விளைவே என்பது இயல்பாய் ஏற்படுகின்றதன்றோ? ஆதலால், ஒவ்வொருவர் முன்பும் மாறுபட்ட தனி வழிதான் விரியும். அவரவர்க்குற்ற பாதையை அவரவரே நாடிக் கண்டு கொள்ள வேண்டும். இந்த வழி, இந்த முறை—நமக்கு இயற்கையாய் அமைந்தது. நாம் வகுத்துக் கொண்ட பாதைதான் 'இஷ்டம்' என்ற கொள்கையாகும். நமது வழியே நம் இஷ்டமென இயம்புகிறோம். எடுத்துக்காட்டாக, ஒருவன் கடவுளை, பிரபஞ்சத்தை ஆளும் எல்லாம் வல்ல வேந்தரெனக் கருதுகிறான். அவனுடைய இயல்பு அத்தகையதாயிருக்கிறது. அவன் மிகுந்த செருக்குற்ற

வனும் எவர்மீதும் ஆணை செலுத்தும் குணம் பெற்றவனுமிருப்பான்; எனவே, ஆண்டவரையும் இவ்வண்ணமே கருதுகிறான். மற்றொருவன், கடுமையான ஒரு பள்ளி ஆசிரியனாயிருப்பான்; அவன் ஆண்டவரை நோக்குங்கால், அவரை நடுவு நிலையில் நின்று நியாயமும் தண்டனையும் வழங்கும் நீதிமன்றத் தலைவராகத் தேர்வான். எனவே, அவரவர் இயல்பிற்கு ஏற்றவாறு ஆண்டவரைக் காண்கின்றனர். இந்தக் காட்சி நமது இயல்பிற்கேற்றவாறு அமைவதே நமது 'இஷ்ட'மாகும். நாம் இப்படி ஆண்டவரைக் காண்கிற நிலையில் நம்மை அமைத்துக் கொண்டோம். இத்தகைய காட்சியைத் தவிர வேறு காட்சியை நம்மால் பார்க்க இயலாது. நீங்கள் சில சமயங்களில் ஒரு மனிதனது அறிவுரை சாலச்சிறந்ததென்றும் உங்களுக்கு ஏற்றதென்றும் எண்ணுகிறீர்கள். அடுத்த நாள் உங்கள் நண்பர் ஒருவரை அதைக் கேட்கும்படி சொல்கிறீர்கள். ஆனால், அவர் செவிமடுத்த அறிவுரை மிகவும் இழிவானதென்ற கருத்திற்கு வந்து விடுகிறார். கூறினவருடைய அறிவுரையிற் பழுதில்லை, ஆனால், கேட்டோருடைய உள்ளத்திற்கு அது உகந்ததாயில்லை. கேட்டவர் தவறான கருத்தைக் கொண்டு விட்டாரென்று அவரோடு வாதாடுவதிற் பயனில்லை. உண்மையைப் பல கோணங்களிலிருந்து நோக்கினாலும், அது உண்மையே; ஆனால், அது இதே உண்மையென்று சொல்லுவதற்கில்லை என்பதை உணர வேண்டும்.

இது முதலில் முரண்பட்ட கருத்துப்போலத் தோன்றக் கூடும். ஆனால் உண்மை. அகண்ட மெய்ப்பொருள் ஒன்றேதான் என்பதை நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். அதோடு தொடர்புள்ள கருத்துகள் இயல்பாகவே வேறுபட்டுத்தான் திகழும். சான்றாக இந்தப் பிரபஞ்சக் காட்சியை எடுத்துக் கொள்ளுங்கள். இந்தப் பிரபஞ்சத்தை ஒன்றாகக் காணுமிடத்து இது சிதையாது; மாறுதலும் அடையாது; எஞ்ஞான்றும் ஒரே சீராய்த் தான் திகழும். ஆனால் நீங்களும் நானும், மற்ற ஒவ்வொருவரும் அவரவர் கொண்ட பிரபஞ்சத்தையே பார்க்கின்றோம், கேட்கின்றோம்.

சூரியனை எடுத்துக் கொள்ளுங்கள் : கதிரவன் ஒன்று தான். ஆனால், நீங்களும் நானும் மற்ற நூற்றுக்கணக் கான மனிதரும் பற்பல இடங்களிலிருந்து அதைப் பார்க்கை யில், ஒவ்வொருவரும் ஒவ்வொரு வேறுபட்ட சூரியனையே பார்க்கிறோம். ஓரிடத்தின் சிறுமாறுதல் சூரியனது காட் சியையே மாற்றும். சூழ்நிலையில் ஏற்படும் மாறுதல் வேறு வகையான காட்சியையே கொடுக்கும். எனவே, புலன்களின் பலவகை உணர்ச்சிக்கேற்றவாறு உண்மை பலமுறையாகத் தான் ஒளிவிடும். ஆனால், அழியா மெய்ப்பொருள் ஒன்றே தான். எனவே, உங்கள் கருத்திற்கேற்றவாறு ஒருவன் காட்சி பெறவில்லை யென்ற காரணத்தைக்கொண்டு நீங்கள் அவனோடு வாதாடுதல் அழகன்று. முரண்பட்ட தோற்ற மளித்தாலும், இருவர் கூறுவதும் உண்மையாக இருக்கலா மென்பதை நீங்கள் இதயத்தில் இருத்திக் கொள்ள வேண் டும். ஞாயிற்றின் ஒரே மையத்தை நோக்கி, பல கோடிக் கணக்கான ஆரங்கள் கூர்ந்து செல்கின்றன. மையத்தி லிருந்து ஓராரம் இருக்கும் தொலைவிற்கேற்ப, மையத்திற்கும் அவ்வாரத்திற்கும் இடையே உள்ள தூரம் வேறுபடுகிறது. ஆனால், மையத்தில் எல்லாம் கூடும்போது வேறுபாடுகள் யாவும் மறைந்தொழிகின்றன. இப்படிப்பட்ட ஓர் அழியா மையம் மனிதனது குறிக்கோளாய் அமைகின்றது. ஆண்ட வரே அந்த மையம்; நாமே ஆரங்கள். இந்த ஆரங்களுக் குள்ள தூரங்களே ஆண்டவரின் காட்சியை அடைய ஏற் படுத்தப்பட்டுள்ள வரம்புகள். இந்த மட்டத்தில் நாம் நின்றுகொண்டு ஆண்டவரின் தனி உண்மையைப் பல நிலையில் சிந்திக்கத் தலைப்பட்டிருக்கிறோம். எனவே, எல்லாக் கருத்துகளும் உண்மையானவை. நாம் ஒருவரும் சமயப் போர் புரிய வேண்டுவதில்லை. நம் வேறுபாடுகள் மையத்தை அடைவதைப் பற்றியே உள்ளன. நாம் நம் வேறுபாடுகளைப் போராடியோ, வாதம் செய்தோ, நிலை நிறுத்தலாமென்றால், ஒரு முடிவுக்கு வாராமல் பல நூற்றாண்டுகள் நாம் போய்க் கொண்டேயிருக்க வேண்டிவரும். வரலாறு இந்த உண்மையை மெய்ப்பிக்கின்றது. முன்னாற் சென்று மையத்தை அடைவதே ஒரே முடிவாகும். இதை எவ்வளவு விரைவாகச் செய்கிறோமோ, அவ்வளவு விரைவில் இந்த

மாறுதல்கள் யாவும் மறைந்துவிடும்.

எனவே, இஷ்டமென்ற கொள்கை யாதெனில், மக்கள் தங்கள் சமயத்தைத் தாங்களே தேர்ந்தெடுத்துக்கொள்வதே. ஒரு மனிதன் தான் வழிபடுவதை மற்றவர்களும் வழிபட வேண்டுமென்று வற்புறுத்தக் கூடாது. மக்களை ஒன்றாகத் திரட்டிப் படைகளினாலோ, வலிமையாலோ, அல்லது தருக்க ஆற்றலாலோ ஒரே இடத்தில் சந்தைக்கூட்டம் போல அடைத்து, ஒரே கடவுளை வழிபடச் செய்து வந்த முயற்சிகள் யாவும் வெற்றிபெறாது சிதைந்து போயின; அவ் வண்ணம் குலைந்துதான் போகுமென்பது திண்ணம். அது மனித இயல்பிற்கு முற்றிலும் மாறுபட்டதே. அது மட்டுமன்று; மக்கள் முன்னேறுகின்ற பாதையில் அத்தகைய முயற்சிகள் இடையூறுகளாய் அமையாமற் போகா. ஏதாவது ஒரு சமயத்திற்காக முயலாத ஆடவனையோ பெண்ணையோ நாம் சந்திக்க இயலாது. எத்தனையோ பேர் திருத்தி அடைகின்றனர்; எத்தனையோ பேர் திருத்தியற்றவராயும் இருக்கின்றனர். ஏதனாலென்றால், அனைவரும் செய்து முடிக்க இயலாத அலுவல்களை நாடிச்செல்வதனாலேயே. ஆழங்காண முடியாத அலுவல்களில் அவர்கள் இறங்கும் காரணம், அவர்கள் பிறரால் தூண்டப்பட்டதே. எடுத்துக்காட்டாக, என் குழந்தைப் பருவத்தில் என் தந்தையார் ஒரு சிறிய நூலை என் கையில் கொடுத்து, 'இந்தப் புத்தகம் கடவுளைச் சித்திரிக்கிறது,' என்று மொழிந்தார். அதிலுள்ள கருத்தை என் மனத்தில் புகுத்த அவருக்கு என்ன உரிமை உள்ளது? நான் எந்த முறையில் வளரக் கூடும் என்பதை அவர் கருதவில்லை. எனினும், அவர் தம் கருத்துகளை என் மனதில் வளரும்படி நுழைக்கின்றார். அதன் விளைவாக என் வளர்ச்சி குன்றுகின்றது. ஒரு செடிக்குப் பொருந்தாத மண்ணில் அதை உங்களால் வளரும்படி செய்ய இயலாது. ஒரு குழந்தை தனக்குத்தானே கற்பித்துக் கொள்கிறது. அதன் துறையில் அது முன்னேற நீங்கள் துணை புரியலாம், ஆனால் நேர்முகமாக ஒன்றும் செய்வதற்கில்லை. இடையூறுகள் அனைத்தையும் நீக்கி விடலாம், ஆனால் அதன் அறிவு வளர்ச்சி அதன் இயல்பினைச் சார்ந்ததே. இறுகிய நிலத்தைச் சற்று நெகிழ்த்தினால், செடியின்

முளை தானே தோன்றும். அது மடியாவண்ணம் அதைச் சுற்றி ஒரு வேலி அமைப்பீர்கள். அதோடு நீங்கள் புரியும் உதவி முடிவடைகின்றது. இதற்குமேல் ஒன்றும் புரிவதற்கில்லை. மற்றவை யாவும் அதனுடைய தனிப்பட்ட இயல்பிலிருந்து விரிந்து விடும். ஒரு குழந்தையின் கல்வியும் இம்முறையிலே தான் நடைபெறவேண்டும். அது தானே கற்றுக்கொள்கிறது. நீங்கள் நான் சொல்வதைச் செவிமடுக்க வந்திருக்கிறீகள் : உங்களது வீட்டிற்கேகிய பிறகு நான் கூறிய கருத்தையும் நீங்கள் கற்றுத்தேர்ந்த கருத்தையும் ஒப்பிட்டுப் பாருங்கள். எல்லாம் ஒன்ருய்த்தான் திகழும்.

உங்களுடைய கருத்திற்கு நான் உருக்கொடுத்தேன். உங்களுக்கு நான் ஒன்றும் புதிதாய் ஓதவில்லை. நீங்களே உங்களுக்கு அறிவுரை வழங்கிக்கொள்ளவேண்டும். ஆனுல் அந்த எண்ணத்தை வெளிப்படுத்த ஒருகால் நான் உதவக்கூடும். மதத்திலும் அவ்வண்ணமே. இன்னும் இயம்பினுல், சமயத்துறையில் எனக்கு நானே ஞானகுருவாய் இருந்து கொள்ள வேண்டும். பற்பல தேவையற்ற கருத்துகளை என் தலையில் புகுத்த என் தந்தையாருக்கு என்ன அதிகாரமிருக்கிறது? இவ்விஷயங்களை என் மனத்தில் புகுத்த என் ஞானகுருவிற்குத்தான் என்ன அதிகாரமிருக்கிறது? அல்லது சமுதாயத்திற்குத்தான் இவற்றை என் மனத்தில் புகுத்த என்ன அதிகாரம்? ஒருவேளை அவை நன்மை பயக்கக்கூடியவைகளாய்த் திகழலாம்; ஆனுல் நான் புகும் பாதைக்கு ஏற்றவைகளாக இருக்க இயலாது. உலகிற்கு இன்றைய் தினம் இழைக்கப்படும் வெட்டவெளிச்சமான கொடுமைகளையும் இன்னல்களையும் எண்ணிப்பாருங்கள். பொய் புதைந்த போதனையால் களங்கமற்ற அந்தக் கோடிக்கணக்கான குழந்தைகளின் ஆன்மாவையல்லவா மாய்த்துக் கொண்டிருக்கிறேம்! குடும்பமதம், சமூகமதம், நாட்டு மதம் இவை பற்றிய பயங்கரமான கருத்துகளினுல் எத்தனையோ எழில் மிக்க பொருள்கள்—எதிர்காலத்தில் வியப்பூட்டும் உண்மையான கருத்துகளாக அரும்பக்கூடியவை—முளையிலேயே கிள்ளி எறியப்படுகின்றன. உங்களுடைய குழந்தைப் பருவத்துச் சமயத்தையும் உங்கள் நாட்டின் சமயத்தையும் அதில் மல்கிக்கிடக்கும் மூட நம்பிக்கைகளையும், அவை

களால் நிகழ்வதும் நிகழக்கூடியதுமான எண்ணிறந்த தீமைகளையும் நினைத்துப்பாருங்கள். மனிதனுக்கு எவ்வளவு கெடுதல் அவை புரிய இயலுமென்பது தெரியாது. ஒவ்வொரு சொல்லுக்கும் செயலுக்கும் பின்னணியில் எத்தகைய அளப்பரிய சக்தி திகழ்கின்றது என்பதையும் தான் அறியான். "தெய்வங்கள் காலெடுத்துவைக்க அஞ்சுமிடத்தில் அறிவிலிகள் விரைந்து செல்ல முந்துவார்கள்," என்ற முதுமொழி முற்றிலும் உண்மை. இதைத் தொடக்கத்திலிருந்து நம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். எப்படி என்று வினவுவீர்களானால், 'இஷ்டம்' என்பதில் நம்பிக்கை வைத்தே என்று நான் நவிலுவேன்.

பல இலட்சியங்கள் இருக்கின்றன உங்களுடைய இலட்சியம் எதுவாக இருக்க வேண்டுமென்று சொல்லவோ, அல்லது அந்த இலட்சியத்தை உங்களிடம் வற்புறுத்தவோ எனக்கு உரிமை இல்லை. எனது கடமை இலட்சியங்களையெல்லாம் உங்கள் முன் வைத்து உங்கள் திட்டப்படி, உங்களது விருப்பப்படி, உங்களுக்கேற்றபடியுள்ள இலட்சியத்தை மதிப்பிட உதவுவதாகும். உங்களுக்கு மிகவும் தகுதியான ஒன்றை ஏற்று அதில் விடாமுயற்சி யுடையவர்களாய் இருங்கள். அதுதான் உங்களது 'இஷ்டம்'; உங்களது சிறப்பான இலட்சியமும் அதுவே. எனவே, எல்லோரும் ஒரே சமயத்தையே பின்பற்றுகிற முறை இருக்க இயலாதென்பதை நாம் அறிகிறோம். மதத்தின் அலுவல் அவரவர் பொறுப்பேயாகும். எனது சொந்தக் கருத்து ஒன்றுண்டு. அதை நான் மிகப் புனிதமாகவும் இரகசியமாகவும் வைத்துப் போற்ற வேண்டும். ஏனென்றால், அது உங்களுடைய கருத்தாக இருக்கவேண்டிய நியதி இல்லை. இரண்டாவதாக, எனது கருத்தை ஒவ்வொருவரிடமும் உரைத்து ஏன் நான் ஒரு குழப்பத்தையும் பூசலையும் ஏற்படுத்தவேண்டும்? மற்றவர்கள் என்னிடம் வந்து சண்டையிடக்கூடும். நான் அவர்களிடம் மொழியவில்லை என்றால், அவர்கள் என்னிடம் போர்புரிய வரமாட்டார்களல்லவா? ஆனால், எனது கருத்தை அவர்களிடம் கூறிக்கொண்டே போனால், என்னை அவர்களெல்லாம் எதிர்த்தே தீருவார்கள். எனவே, அவர்களுடன் பேசுவதால் என்ன நன்மை? இந்த இஷ்டத்தை இரகசியமாக வைத்

துக்கொள்ள வேண்டும். இது உங்களுக்கும் கடவுளுக்கும் இடையே உள்ள பொறுப்பாகும். சமயத்தின் கொள்கைகளை வெளிப்படையாக மக்களிடம் பரப்பலாம். அவற்றைப்பற்றிப் பொதுக்கூட்டங்களில் சொற்பொழிவுகள் ஆற்றலாம். சமயத்தின் உட்கருத்துகளை அவ்வண்ணம் செய்ய இயலாது. சமய உணர்ச்சிவெள்ளத்தை ஒரு கணத்தில் பெருக்க இயலாது. இப்படிச் சமயச் சடங்குகளை எள்ளி அவற்றை நகை அம்புகளுக்கு இலக்காக வைப்பதனால் பயன் யாது? அது சமயத்தைக் கேலி செய்வதாகும்; தெய்வ நிந்தனையுங் கூட. அதன் பலன்களைக் கிறித்தவர்கள் தொழும் இடங்களில் பார்க்கின்றீர்கள். இத்தகைய சமயப் பயிற்சியை மக்கள் ஏற்றுப் பொறுத்து நிற்க இயலும். இது படைஞர் தம் விடுதியில் புரியும் போர்ப்பயிற்சியை ஒக்கும். 'துப்பாக்கிகளைத் தோளின்மேல் வையுங்கள்: முழங்காலிடுங்கள்; புத்தகத்தைக் கையில் எடுங்கள்,' என்னும் இச்செயல்கள் ஒரே அச்சில் அமைக்கப்படுகின்றன. ஐந்து நிமிஷ உணர்ச்சிப் பெருக்கு, ஐந்து நிமிஷத் தருக்க அறிவிற்கு விருந்து, ஐந்து நிமிஷ வழிபாடு, இவை யாவும் முன்னரே ஒரு முறையில் அமைக்கப்பட்டு ஆயத்தமாயிருக்கின்றன. இந்தப் பொம்மலாட்டங்கள் சமயத்தையே விரட்டி விடுகின்றன. இம்முறை இன்னம் சில நூற்றாண்டுகளுக்கு நீடித்தால், சமயமே மறைந்துவிடும். கிறித்தவர்கள் தாங்கள் தொழுமிடங்களில் சமயக்கோட்பாடுகளை— கொள்கைகளை – உள்ளம் திருத்தி கொள்ளும் அளவிற்கு ஓதட்டும். ஆனால் சமயத்தின் செயல்முறைப்பகுதியான தொழுகையில் இறங்கும் போது, நீங்கள் இறைஞ்சும் போது இயேசு நாதர் அறவுரையைப் பின்பற்ற வேண்டும். உங்கள் வழிபாட்டு அறைக்குள் நுழைந்து நன்றாகத் தாழிட்டுக் கொள்ளுங்கள். பிறகு எல்லாவற்றையும் மறைந்து நோக்கும் உங்கள் தந்தையாரான கடவுளைத் தோத்திரம் செய்யுங்கள். 'இஷ்ட' மென்ற கொள்கை இதுவே ஆகும். பல இயல்புகள் வாய்ந்த மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு இதுதான் துணைபுரியும்; மற்றவர்களோடு வாதம் செய்யும் சந்தர்ப்பங்களை இதுதான் அகற்றும். இதுதான் ஆன்மிகவாழ்வுத்துறையில் முன்னேறத் தக்க வழியாகும். என் சொற்

களுக்குத் தவருன முறையில் பொருள் கொண்டு அதன்படி நடவாதீர்கள் என்று நான் உங்களுக்கு எச்சரிக்கை செய்கிறேன். இரகசியக் கூட்டங்களை அமைக்க முயலாதீர்கள். ஒரு துட்ட தேவதை இருந்தால், அதை நான் இந்த இரகசியக் கூட்டத்திலே தான் கண்ணுற முடியும். அதுதான் இரகசியக் கூட்டத்தின் படைப்பாகும். அத்திட்டங்கள் யாவும் கொடுமை வாய்ந்த பேய்த்திட்டங்களாகும்.

இந்த 'இஷ்டம்' புனிதமானது; இரகசியமானதன்று. உங்கள் இஷ்டத்தைப் பற்றி ஏன் மற்றவர்களிடன் நீங்கள் பேசக்கூடாது? ஏனெனில், அது உங்களுடைய புனிதமான உடைமை. அது மற்றவர்களுக்கு உதவக் கூடும். ஆனால் அது மற்றவர்களைப் புண்படுத்தாது என்பது எப்படி உங்களுக்குத் தெரியும்? ஒரு மனிதன் தன் வடிவமான உருவக்கடவுளை வழிபட இயலாத இயல்புடையவனய் இருப்பான். உருவமற்ற ஆண்டவரைத் தன் ஆன்மாவாகவே அவன் வழிபடுவான். நான் ஒரு கால் அவனை உங்கள் நடுவில் வரச் செய்கின்றேன் என்று வைத்துக் கொள்வோம். அவன் உருவக்கடவுள் இல்லை என்றும், உங்களிடத்தும் என்னிடத்தும் ஒரே மெய்ப் பொருளே சுடர்விடுகிறது என்றும் மொழிந்தால், நீங்கள் திடுக்கிடுவீர்கள். அவனது கருத்துப் புனிதமானது; ஆனல் இரகசியமானதன்று. எனினும், ஒரு சிறந்த சமயமோ, அல்லது பெரிய ஞானகுருவோ, இரகசியமான கூட்டங்களைப் படைத்து ஆண்டவரின் உண்மைகளை ஓதினதாகத் தெரியவில்லை. இந்தியாவில் இத்தகைய இரகசியக் கூட்டங்கள் இருந்ததேயில்லை. இவை யாவும் மேல் நாட்டுக் கருத்துகளே. இவற்றை மேனாட்டார் இந்தியாவின் மீது திணிக்க விரும்புகின்றனர். இவற்றைப் பற்றிய இரகசியங்களை நாங்கள் அறியோம். என் நாடான இந்தியாவில் ஏன் இரகசியக் கூட்டங்கள் இருக்கவேண்டும்? ஐரோப்பாவில் கிறித்து மதத்திற்கு மாறுபட்ட கொள்கைகளைப் பற்றி ஒரு சொற்கூடப் பேச மக்களுக்கு அனுமதி இல்லை. எனவே, இத்தகைய இயல்பினர் ஒளிந்து மலைகளுக்குச் சென்று இரகசியக்கூட்டங்கள் ஏற்படுத்த வேண்டி இருந்தது. அப்பொழுதுதான் அவர்களால் அவரவர் வழிபடும் முறைகளைப்

பின்பற்ற இயலும். சமயத்தைப் பற்றி வேறுபட்ட கருத்து களைக் கொண்டிருந்தமைக்காக இந்தியாவில் எக்காலத்தும் எவரும் தொல்லைக்கு ஆளாக்கப்படவில்லை. இந்த இரகசியக் கூட்டங்கள் மிகக் கோரமான வடிவங்களை எடுத்துவிடு கின்றன. எத்தனையோ பேரின்னல்களை இவை விளைத் திருக்கின்றன என்பதை இவ்வையகத்தில் நாம் காண்கின் ேறாம். இவை கண்டபடி காமங்கொள்ளும் காதற்கழகங் களாகவும், ஆவிக்கொள்கை மன்றங்களாகவும் மாறிவிடு கின்றன. பிறர் கைகளில் ஆடவரும் மங்கையரும் சுய அறி விழந்து பொம்மைகள் போல ஆடுகின்றனர். உளத்திலும் செயலகளிலும் அவர்களுக்கு ஏற்படக்கூடிய வளர்ச்சிகள் அனைத்தும மாயந்தே போகின்றன. இவ்வண்ணம நான் கூறுவது உங்களுள் சிலருக்குத் திருத்தி அளிக்காது. ஆனல் நான் உங்களுக்கு உண்மையை உரைத்தல வேண்டும். எனது வாழ் நாள் முழுவதும் ஒரு கால ஐந்தாறு ஆடவர்களும் மங்கையர்களும் என்னைப் பின்பற்றக் கூடும். ஆனல, அவாகள தூயமையான, கள்ளங் கபடமற்ற, உண்மையான ஆடவாகளும பெண்களுமாகத் திகழ்வார் கள். எனக்கு ஒரு பெருங் கூட்டம் தேவையில்லை. மாபெருங் கூட்டங்களில என்ன அருஞ் செயல் ஆற்ற இயலும்? உலகவரலாற்றையே படைதத சான்றோர்கள் ஒரு சிலரே; அவர்களுடைய தொகையை விரல்விட்டு எண்ணக்கூடும். மற்றவர்கள் பெருஞ் சந்தைக் கூட்டமே

இத்தகைய இரகசியக் கூட்டங்கள், பொய் புதைந்த போலிக் கூட்டங்கள், மக்களை வலியிழந்தவர்களாகவும் குறு கிய மனப்பான்மை யுடையவர்களாகவும் தூய்மையற்றவர் களாகவும் செய்து விடுகின்றன. பலவீனமானவர்களுக்குத் தங்களுக்கென ஓர் உறுதியில்லை. அவர்களால் ஒரு செயலை யும் ஆற்ற இயலாது. எனவே, அந்தப் பொய்க் கூட்டங்க ளோடு யாதொரு தொடர்பும வைத்துக்கொள்ளாதீர்கள். இரகசியக் கூட்டத்தினிடம் வைக்கப்படும் அன்பு உங்கள் மனத்தில எழுந்த அக்கணமே அதை அடித்துக் கீழே வீழ்த்தி மாய்த்து விடுங்கள். எள்ளளவும் புனிதம் அற்ற வன் என்றாலும், அவன் சமயப்பற்று உடையவனயிருத்தல் இயலாது. மிகுதியாக அழுகிச் சொட்டும் புண்களை ரோஜா

மலர்களைக் கொண்டு மூடும் முயற்சியில் இறங்காதீர்கள். ஆண்டவரை ஏமாற்றலாமென்று நீங்கள் நினைக்கிறீர்களா? அது ஒருவராலும் இயலாத காரியமாகும். நேர்மையான ஒரு பெண்ணையோ அல்லது ஆணையோ எனக்குக் கொடுங்கள். இந்தப் பறக்கும் தேவதூதர்கள், ஆவிகள், பேய்கள்—இவற்றிலிருந்து ஆண்டவர் என்னைக் காப்பாற்றட்டும்! எந் நாளும் ஒரே விதமான சாதாரண நேர்த்தியான மக்களாய்த் திகழுங்கள்.

நமக்கு இயல்பான உணர்வென்பது உள்ளது. அது விலங்குகளுக்கும் நமக்கும் பொதுவாக உள்ளது. அது நமது உடலில் ஓர் இயந்திரத்தின் எதிர் அசைவைப் போன்று விளங்குகின்றது. அதை விட நமக்கு ஓர் உயர்ந்த சத்தி உண்டு. அது தான் நம்முடைய தருக்க அறிவாகும் அது பல பொருள்களைத் தொகுத்து ஒரு பொது விதியை நிறுவுகின்றது. அதற்கு மேலுள்ள ஓர் அறிவுச்சத்தி இயங்குகின்றது; அதைத்தான் அருட்சத்தி என்று உரைக்கின்றோம். அது தருக்க அறிவுகொண்டு ஆய்கிறதில்லை; இமைப்பொழுதில், ஒரு மின்னல் வீச்சில், எல்லாவற்றையும் அறிந்து விடுகின்றது. அதுதான் சிறப்புள்ள சத்தியாகும். அதை இயல்புச் சத்தியிலிருந்து எப்படிப் பிரித்து அறிய இயலும்? அது மிகவும் அரிதே. ஒவ்வோர் அறிவிலியும் உங்களிடம் வந்து ஆன்ம விழிப்பு ஏற்பட்டு விட்டதாக இயம்புகிறான்; தனக்கு ஆன்ம அருளொளி பிறந்து விட்டதாயும், அதனால் புலன்கடந்த சத்திகளைப் பெற்று விட்டதாயும் உரைக்கிறான். அருளுரையையும் பொய்யுரையையும் எப்படிப் பிரித்து அறிந்து கொள்வது? அருளுரை தருக்க அறிவுக்கு முரண்பட்டதன்று என்பதை முதலில் கண்டு கொள்ள வேண்டும். முதுமைப் பருவம் குழவிப் பருவத்திற்கு முரண்பட்டதன்று; குழவிதான் முதியோனாய் வளருகின்றது. நாம் ஆவேசம் என்று கூறுவது தருக்க அறிவின் முதிர்ந்த பழமே. உங்கள் உடலின் இயல்பான இயக்கங்கள் அறிவுக்கு மாறுபட்டவையல்ல. நீங்கள் ஒரு சாலையைக் கடந்து செல்லும் போது கார்களின் விபத்திலிருந்து தப்ப எவ்வளவு இயல்பாக உங்கள் உடல் இயங்குகிறது? அந்த வழியில் உங்களைப் பாதுகாத்துக்

கொள்ள நீங்கள் நாடுகின்ற ஒன்றை அறிவின்மை யென்று உங்கள் மனம் உரைக்கின்றதா? உண்மையான இயலுணர்ச்சி ஒன்றும் தருக்க அறிவை எதிர்த்து நிற்காது; எங்கெல்லாம் அது எதிர்க்கின்றதோ, அங்கெல்லாம் ஏமாற்றந் தான் ஏற்படும். இரண்டாவதாக, இந்தத் தெய்வ ஆவேசம் ஒவ்வொருவருடைய நன்மைக்குத்தான் பயன் படுகிறது. ஒரு தனிப்பட்ட இலாபத்திற்கோ பெயருக்கோ அல்லது பெருமைக்கோ அன்று; உலகத்தின் நன்மைக்காகவே. இதைப் பரிபூரணப் பொது வாழ்விற்கே பயன் படுத்த வேண்டும். இந்தச் சோதனைகள் யாவும் நிறைவேறினவுடன் இதைத் தெய்வ ஆவேசமெனத் தேர்ந்துகொள்ளுங்கள். நீங்கள் மிகவும் விழித்திருப்பீர்கள். இந்தத் தெய்வ ஆவேச உணர்ச்சி இருப்பவர்கள் இவ்வுலகில் ஒரு கோடியில் ஒருவரும் இல்லை யென்பதை நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இப்போது அத்தகையோர் எண்ணிக்கை மிகக் குறைவே. வருங்காலத்தில் மிகுதியானவர்கள், ஏன், உங்களுள் ஒவ்வொருவருமே அத்தகையோராக இருப்பீர்களென நான் எதிர்நோக்கி இருக்கின்றேன்.

சமயத்தை நாம் ஒரு பொழுதுபோக்காகக் கொண்டிருக்கின்றோம். உண்மையான தெய்வஆவேசத்தோடு நாம் சமயத்தைத் தொடங்குவோம். "இப்பொழுது கண்ணுடியின் வாயிலாகச் சற்று இருளடைந்த நோக்கைப் பெற்றுள்ளோம். பிறகு நேருக்கு நேராக உண்மையொளியை உற்றுப்பார்ப்போம்," என்று ஞானியாரான பால் என்பவர் கூறுகின்றார். இந்த உலகநிலையில் மிகக் குறைவானவர்களே இந்நிலையினை எய்தியிருக்கின்றார்கள். எந்தக் காலத்திலும் இப்போதிருக்கும் அளவிற்கு அருளொளியைப் பற்றி உரிமைகள் பாராட்டப்படவில்லை. பெண்களுக்கு எதையும் நேரில் காணும் ஆவேசச் சத்திகள் இருக்கின்றனவாம். இந்தச் சத்திகளைத் தருக்க அறிவொளி கொண்டு மனிதன் பையப்பைய அணுகுகின்றான். இந்த உரையை நீங்கள் நம்பாதீர்கள். பெண்களுக்குள்ளதைப் போலத் தெய்வ ஆவேச உணர்ச்சி ஆண்களுக்கும் உண்டு. மூர்ச்சை நோய்க்கும் நரம்புத்தளர்ச்சிக்கும் பெண்களுக்குத்தான் மிகுதியான உரிமையுண்டு. பொய்யர்களாலும் செப்படிவித்தைக்காரர்

களாலும் நீங்கள் ஏமாற்றப்படுவதைவிட, நம்பிக்கையற்ற நாத்திகராகப் போவது சாலச் சிறந்ததே. உங்களுக்குப் பயன்படுவதற்குத் தருச்க அறிவொளி அளிக்கப்பட்டிருக் கிறது. நீங்கள் அது தக்கபடி உலகிற்குப் பயன்படும் முறையை மெய்ப்பிச்க வேண்டும். அப்படிச் செய்தால் உயர்ந்த பொருள்களை நீங்கள் அடைந்து, அவற்றைக் காப் பாற்ற இயலும்.

கடவுள் அன்பு வடிவானவர் என்பதை நாம் எப்பொழு தும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். "கங்கை ஆற்றங்கரையோரத்தில் இருந்து கொண்டு நீருக்காகக் கிணறு வெட்டுகிறவன் அறிவிலியே. வைரச் சுரங்கத் திற்கு அருகில் வாழ்ந்துகொண்டு கண்ணாடி மணியைப் பொறுக்குகிறவன் ஒரு மதியிலி." அந்த வைரச் சுரங்கந் தான் கடவுள். ஆவிகள், பறக்கும் தேவிகள் போன்ற இவற்றைச் சுற்றி எழுந்த கட்டுக்கதைகளை நம்பிக் கடவுளை மறப்பவர்களே மதியிலிகள். இப்படி நம்புவது ஒரு நோயேயாகும்; பிணியனைய அவாவேயன்றிப் பிறிதன்று. இது மனித இனத்தை இழிவு படுத்துகின்றது; நரம்புகளைத் தளர்வுறச் செய்கிறது; மூளையைப் பலவீனப்படுத்துகிறது. இந்தப் பண்படாத கதைகள் பேய்களைக் கண்டு அஞ்சும் நோயனைய நிலையில் நம்மை வைக்கின்றன; அல்லது புதுமை காணும் அவாவைத் தூண்டுகின்றன; இயற் கைக்கு மாறான, நரம்புகள் முறுக்கேறின நிலைக்கு நம்மை அழைத்துச் சென்று விடுகின்றன. படிப்படியாக மனித இனத்தையே சீர்குலையச் செய்கின்றன. இவை புனித மானவை, பரிசுத்தமானவை எனக் கருதி, கடவுளையே விட்டுவிடுவது மிகவும் இழிவாகும். இந்தப் பொருளற்ற, பயனற்றவைகளையா நாம் நாடிச் செல்வது? மற்றவர்களின் மனங்களில் எழுகின்ற எண்ணங்களை அறியும் கருமத்தை என்னென்று இயம்புவேன். நான் மற்றவர்களுடைய எண்ணங்களைத் தெரிந்து கொள்ளும் துறையில் ஐந்து நிமிஷம் இறங்குதல் போதும்; எனக்குப் பைத்தியம் பிடித்து விடும்!

நீங்கள் நிமிர்ந்து நின்று ஆற்றலுள்ளவர்களாய்த் திகழ் வீர்களாக; அருள்வடிவான ஆண்டவரை நண்ணுவீர்களாக.

இதுதான் மிகப் பெரிய ஆற்றல். எந்தச் சத்திதான் தூய்மையான சத்தியை விட உயர்ந்தது? அன்பும் தூய்மையும் உலகின் மீது ஆணை செலுத்துகின்றன. இந்த அன்புக் கடவுளை வலியிழந்தவர்களால் அடைய இயலாது. எனவே உடல, உள்ளம், ஆன்மா இந்தத் துறைகள் அனைத்திலும் பலவீனமாக இராதீர்கள். ஆண்டவரே உண்மை. மற்றவை அனைத்தும் பொய்யே. ஆண்டவருக்காக எல்லாவற்றையும் துறக்கவேண்டும். ஆண்டவர்பால் அன்பைச் சொரிவதும் அவருக்குக் கைங்கரியம் செய்வதுமே நற்பணிகளாம். மற்றவை வெற்று ஆடம்பரமும் ஆரவாரமுமேயாகும்; ஏன், ஆடம்பரத்திற்குள் ஒரு மாபெரிய ஆடம்பரமாகும்!

வழிபடுவோனும் வழிபடுபொருளும்

(ஸான் பிரான்ஸிஸ்கோ பிராந்தியத்தில் 9—4—1900இல் ஆற்றிய சொற்பொழிவு)

மனித இயல்பின் மதிவசத்தைப் பற்றி இதுவரை நாம் அதிகமாக ஆராய்ந்தோம். இப்பொழுது நாம் உணர்ச்சி வசத்தைக் குறித்து ஆராய்வோம். முன்னதில் மனிதன் அளவிலாப் பொருளாக, தத்துவமாக, மதிக்கப்படுகிறான். பின்னதில் அவனை எல்லைக்குட் பட்டவனாகக் கருதுவோம். சில கண்ணீர்த்துளிகளோ வேதனையோ முன்னவனை நிறுத்தி வைக்க இயலாது; கண்ணீரைத்துடைக்காமல், துன்பத்தை ஆற்றாமல் பின்னவன் முன்செல்ல மாட்டான். முதலிற் கூறியவன் பெரியவன்—மிகப் பெரியவன்; அவன் பெருந்தன்மையைக் கண்டு சில சமயம் நாம் அலமந்து போகிறோம். மற்றவன் சாதாரண மனிதன்; ஆனால் மிகவும் அழகு வாய்ந்தவன்; நமக்கு உற்றவன். ஒருவன் நம்மைப் பிடித்து உயரக் கொண்டு செல்கிறான்; அந்தச் சூழ்நிலையில் மூச்சு விட இயலாமல் நமது நுரையீரல் வெடித்துவிடலாம். மற்றவன் நாமிருக்குமிடத்தே நம்மை விட்டு வாழ்க்கைப் பொருள்களைப் பார்க்க முயல்கிறான்; எல்லைக்குட்பட்டதே அவனது காட்சி. புத்தியின் ஒளிரும் முத்திரையின்றி ஒருவன் ஒன்றையும் ஒப்புக்கொள்ள மாட்டான்; மற்றவனுக்கு நம்பிக்கை யுளது; காண இயலாததை அவன் நம்புகிறான். இருவரும் நமக்குத் தேவையே. ஒரே இறக்கையால் எந்தப் பட்சியும் பறக்க இயலாது.

இசைவுடன் விரிவுகொண்ட மனிதனைப் பார்க்கவே நாம் விரும்புகிறோம். அவன் பெரிய இதயம், பரந்த மனம், உயர்ந்த செயல் இவற்றைப் படைத்திருக்க வேண்டும். உலகத்தின் துயரையும் துன்பத்தையும் தீவிரமாக உணரும் இதயம் படைத்தவனே நமக்குத் தேவை. உணருவதோடு நில்லாது, பொருள்களின் கருத்தை அறிந்து, இயற்கையின் இதயத்திலும் அறிவிலும் ஆழமாக ஊடுருவிச் செல்பவனே நமக்குத் தேவை. அதோடு நில்லாது, அந்த உணர்ச்சியையும் அறிவையும் செயலாக்குபவனே நமக்குத் தேவை.

மூளை, இதயம், செயல் இவற்றின் அத்தகைய ஒற்றுமையே அவசியமாகிறது. இவ்வுலகில் எத்தனையோ குருமார் உள்ளனர். ஆனால், அவர்களுட் பெரும்பாலர் ஒருசார்புடையவரே யென்பதைக் காணலாம். ஒருவர் நடுப்பகற் கதிரவனது ஒளிபோன்ற புத்தியையன்றி வேறொன்றையும் காண்பதில்லை. இன்னொருவர் அன்பின் அழகிய இசையையன்றி வேறொன்றையும் கேட்பதில்லை. மற்றுமொருவர் செயலில் ஈடுபட்டிருக்கிறார்; ஆனால் உணரவோ நினைக்கவோ அவருக்கு அவகாசமில்லை. ஒரே விதமாகச் செயலாற்றும், அறியும், உணரும் தண்ணியன் ஏனிருத்தல் கூடாது? அது இயலாததா? நிச்சயமாக இயலும். அவனே எதிர்கால மனிதன்; அத்தகையோர் இப்பொழுது ஒரு சிலரே உளர். உலகமுழுதும் மனிதத்தன்மை பரவும்வரை அவரது எண்ணிக்கை அதிகமாய்க் கொண்டே வரும்.

இதுவரையில் நான் உங்களோடு புத்தியைப் பற்றியும் நியாயத்தைப் பற்றியும் பேசி வந்தேன். வேதாந்தம் முழுவதும் நாம் கேட்டாய் விட்டது. மாயையின் திரை கிழிந்தாயிற்று; குளிர்கால மேகங்கள் மறைகின்றன; பகலவன் நம் மீது ஒளி வீசுகிறான். இமயமலை யுச்சியில் ஏற நான் முயன்று வந்தேன்: அங்கு முகில்களுக்குமேல் கொடுமுடி மறைந்திருக்கிறது. உங்களுடன் மறுபாகத்தையும் ஆராய நான் விரும்புகிறேன். இயற்கையில் மிக அற்புதமான அழகு வாய்ந்த படுகைகள் அங்கே உள்ளன. உலகில் துன்பங்கள் அனைத்தும் இருந்த போதிலும் நம்மை இங்கே பிடித்து வைக்கும் அந்த அன்பை ஆராய்வோம். அந்த அன்பே நம்மால் துன்பச் சங்கிலியைத் தொடுக்கச் செய்தது; அதனாலேயே மனிதன் எப்போதும் உயர்கொள்கைக்காக மடிவதைத் தானாகவே ஏற்றுக்கொள்கிறான். எதற்காக மனிதன் தன் கையாலேயே சங்கிலியைத் தொடுத்தானோ, எதற்காகத் துயருறுகிறானோ, அந்த அழிவிலா அன்பைப் பற்றி நாம் ஆராய விழைகிறோம். மற்றதையும் நாம் மறக்கப் போவதில்லை. இமாலயத்தின் பனியாறு காசுமீரத்தின் நெல்வயல்களுடன் ஒன்று சேரவேண்டும்; இடிமுழக்கமும் பறவைகளின் பாட்டும் இயைந்து போக வேண்டும்.

இந்தச் சொற்பொழிவுத் தொடர் மனோகரமான, அழகேறிய ஒவ்வொன்றையும் சர்ச்சை செய்யும். வழிபடுதல் எங்கும், ஒவ்வோர் ஆன்மாவிலும் உள்ளது. ஒவ்வொருவனும் கடவுளை வழிபடுகிறான்; எந்தப் பெயரினாலாகட்டும், ஒவ்வொருவரும் கடவுளை வழிபடவே செய்கின்றனர். வழிபாட்டின் ஆரம்பம்—அழகிய தாமரையைப் போல, அதன் வாழ்க்கையைப் போல—நிலத்துச் சேற்றில் இருப்பது ஆகும்......அச்சமென்னும் அமிசம் இருக்கிறது, இம்மையில் பரிசு பெறும் அவா உள்ளது, பிச்சைக்காரனது வழிபாடும் இருக்கிறது. உலகில் வழிபாட்டின் ஆரம்பங்கள் இவைகளே; இவற்றின் முடிவோ, கடவுளிடம் அன்பு செலுத்துவது; மானிடன் மூலமாக இறைவரை வழுத்துவது.

இறைவரென்று ஒருவர் இருக்கிறாரா? அன்பு செலுத்த, அன்பு செய்வதை ஏற்றுக்கொள்ள, ஒருவர் உளரா? ஒரு கல்லை அன்பு செய்வதாற் பயனில்லை. அன்பை ஈர்க்கும் ஒன்றினிடமே அன்பு செய்கிறோம். வழிபாடும் இத்தகையதே. நமது இந்த உலகில் ஒருவன் கல்லைக் கல்லெனவே வழிபடுவதாகச் சொல்லாதீர்கள். அவன் எங்கும் நிறைந்த பொருள் கல்லிலும் இருப்பதையே வழிபடுகிறான்.

எங்கும் நிறைந்த அப் பொருள் நம்முள் இருப்பதாகக் காண்கிறோம். ஆனால், நம்மிலிருந்து வேறுபட்டிருந்தாலன்றோ அப்பொருளை நாம் வழிபட இயலும்? யான் உன்னையே வழிபட இயலும்; என்னையன்று நான் உன்னிடமே முறையிட இயலும், என்னிடமன்று. "நீ" என்பதொன்றுண்டா?

அந்த ஒன்றே பலவாகப் பிரிகிறது. அந்த ஒன்றை நாம் பார்க்கும்போது, மாயைமூலம் நிழலாடும் எல்லைக்கட்டுகள் மறைகின்றன; ஆனால், பல என்பது மதிப்பற்றதன்று என்பது மிகவும் உண்மையே, பலவின் மூலமாகவே நாம் ஒன்றை அடைகிறோம்......

உருவமுள்ள கடவுள்—நினைக்கும், புரிந்துகொள்ளும், நமக்கு வழிகாட்டும் இறைவர்—இருக்கிறாரா? இருக்கிறார். உருவற்ற கடவுளுக்கு இச்சொன்ன குணங்களுள் ஒன்றும் இல்லை. நீங்கள் ஒவ்வொருவரும் தனிமனிதர். நீங்கள் சிந்திக்கிறீர்கள்; அன்பு கொள்கிறீர்கள்; வெறுக்கிறீர்கள்;

கோபம் அல்லது வருத்தம் உறுகிறீர்கள்......... எனினும், நீங்கள் உருவமில்லாதவர்களே; எல்லையற்றவர்களே. நீங்கள் ஒருங்கே உருவமும் உருவின்மையும் கொண்டவர்கள். உருவுள்ள தன்மையும் உருவற்ற தன்மையும் உங்களுக்குண்டு. உருவற்றதற்குக் கோபம், வருத்தம், துன்பம் இவை இல்லை—துன்பத்தைப் பற்றி நினைக்கவும் அதற்கியலாது. அது நினைப்பதில்லை; அறிவதில்லை. அறிவே அது. ஆனால், உருவமுள்ளது அறிகிறது, சிந்திக்கிறது, சாகிறது......ஆம், உலகப் பொதுவான சார்பற்றதற்கு இரண்டு பகுதிகள் இருக்க வேண்டும். ஒன்று, அனைத்தின் எல்லையற்ற உண்மையைக் காட்டுவது; மற்றொரு பொருள் உருவ அமிசம், நம் ஆன்மாக்களின் ஆன்மா; தேவர்களுக்கெல்லாம் தேவர். அவரே இவ்வுலகைப் படைக்கிறார். அவர் வழிகாட்டுவதால் இவ்வுலகு நிலை பெறுகிறது.

அவரே எல்லையற்றவர்; எப்போதும் தூயவர்; என்ஞான்றும் சுதந்தரர். அவர் நீதிபதியல்லர்; இறைவர் நீதி வழங்குவதில்லை. அவர் சிங்காதனத்தில் வீற்றிருந்து நல்லோருக்கும் தீயோருக்கும் இடையே நீதி வழங்குவதில்லை. அவர் குற்றச் சட்டத்தை வழங்கும் நீதிபதியோ சேனைத் தலைவரோ எசமானரோ அல்லர். எல்லையற்ற கருணையும் அன்பும் நிறைந்தவரே உருவக்கடவுள்.

இன்னொரு கோணத்திலிருந்து இதைப் பார்ப்போம். உமது உடலிலுள்ள ஒவ்வொரு சிற்றறையிலும் அவ்வறையை உணரும் ஓரான்மாவுளது. அது தனியாகவே இருக்கிறது. அதற்குச் சொந்தமான சிறு இச்சாசத்தியும் வினையாற்றுமிடமும் உள்ளன. சிற்றறைகளெல்லாம் சேர்ந்ததே தனியுருவம். அது போன்றே இத்தனியுருவங்களனைத்தும் சேர்ந்தவர் இப்பிரபஞ்சத்தின் உருவக் கடவுள் ஆகிறார்.

இன்னும் ஒரு விதமாக இதைப் பார்ப்போம். உங்களை நான் காண்கிறேனென்பதற்கு என்ன பொருள்? உங்களது சார்பற்ற இயல்பை எவ்வளவு நான் எல்லையுட்படுத்த இயலுமோ, அதையே காண்கிறேன். என் கண்களின், புலன்களின், வலிமையால் உங்களைக் காண நான் உங்களை

எல்லேக்குட்படுத்தியிருக்கிறேன். எவ்வளவிற்கு உங்களே என் கண்கள் காண இயலுமோ, அவ்வளவே நான் காண் கிறேன். என் மனம் உங்களேக் கிரகிக்குமளவிற்கே நான் உங்களேத் தெரிந்துகொள்கிறேன்; அதற்கு அதிகமன்று. அது போன்றே, நான் வழிபடுவதும் சார்பற்றது; உருவ மிலாதது. அதையே உருவக் கடவுளாகக் காண்கிறேன். நமக்கு உடலும் மனமும் உள்ளளவும் நாமெப்பொழுதும் இந்த மும்மூர்த்திகளேக் காண்கிறோம்: இறைவர், இயற்கை, ஆன்மா. எப்போதும் ஒன்றில் மூன்ருன இது, பிரிக்க முடியா மல் இருக்கும். இயற்கை உள்ளது; மனித ஆன்மாக்கள் உள்ளன. மேலும், இயற்கையையும் ஆன்மாக்களேயும் தன்னுள் அடக்கும் அதுவும் உள்ளது.

பிரபஞ்சமயமான ஆன்மா, உடலேக் கொண்டுள்ளது. எனதான்மாவே இறைவரின் ஒரு பங்குதான். அவர் நம் கண்களுக்குக் கண், நமதுயிருக்கு உயிர்; நமது மனத்திற்கு மனம்; நமதான்மாவிற்கு ஆன்மா. இதுவே நமக்குள்ள உருவக் கடவுளேனும் மிக உயர்ந்த குறிக்கோள்.

நீங்கள் துவைதிகள் அல்லாமல் அத்துவைதிகளாய் இருந்தாலும், உருவக் கடவுளே ஏற்கலாம். இரண்டிலா ஒருவன் இருக்கிருன். அவன் தன்னேயே காதலிக்க விரும்பி ஞன். ஆகவே, அவ்வொன்றிலிருந்து பலவற்றைப் படைத் தான். பெரிய, உண்மையான நான் என்பதைச் சிறிய 'நான்' வழிபடுகிறது. ஆகவே, எல்லா ஒழுங்குகளிலும் உருவக் கடவுள் உங்களுக்கிருக்கலாம்.

மற்றவர்களே விட மகிழும் படியான நிலேமையிற் சிலர் பிறந்திருக்கிருர்கள்; நீதியுள்ள ஆண்டவர் ஆட்சியில் இதேன் நிகழ்ந்தது? இவ்வுலகில் சாவிருக்கிறது. இவையே வழியிலுள்ள இடையூறுகள். இப்பிரச்சிஇனகளுக்கு இன்னும் சமாதானம் கிடைக்கவில்லே; துவைதக் கொள் கையிலிருந்து கிடைக்கவும் இயலாது. பொருள்களே உள்ள படி ஆராய்ச்சி செய்ய நாம் தத்துவஞானத்திற்குத் திரும் பிச் செல்லவேண்டும். நாம் நமது கருமத்திஞலேயே துயருறுகிறோம். அது கடவுளின் குற்றமன்று; நாம் செய் வது நமது குற்றமேயன்றி வேறன்று. இறைவரை ஏன் குற்றம் சாட்ட வேண்டும்?

தீமை ஏன் உள்ளது ? நன்மை, தீமை இரண்டையும் கடவுள் படைத்தார் என்பதே இப்பிரச்சினையைத் தீர்க்கும் வழி. உருவக் கடவுளெனும் கொள்கையின் பெரிய இடையூறு இதுவே. 'அவர் நன்மையே, தீமையன்று,' என்றால், உங்கள் தருக்கத்தின் வலையிலே சிக்கிக் கொள்வீர்கள். கடவுள் இருப்பது உங்களுக்கு எங்ஙனம் தெரியும் ? அவர் இவ்வுலகின் தந்தையாரென்றும், நல்லவரென்றும் சொல்கிறீர்கள்; இவ்வுலகில் தீங்கும் இருப்பதால் அதுவும் அவரே......அதே இடையூறு !

நன்மையுமில்லை, தீமையுமில்லை ; கடவுளே இருக்கிறார். எது நன்று என்பது உங்களுக்கு எவ்வாறு தெரியும் ? அதை உணருகிறீர்கள். எது தீங்கென நீங்கள் எப்படி அறிவீர்கள்? அது வந்தால் அதை உணருகிறீர்கள். நன்று, தீது என்பவற்றை நம் உணர்ச்சிகளால் தெரிந்துகொள்கிறோம். நல்ல, சுகமான உணர்ச்சிகள் மட்டுமுள்ளவன் ஒருவனும் இல்லை. துக்கமான உணர்ச்சிகள் மட்டுமுள்ள ஒருவனு மில்லை.

துக்கத்திற்கும், சுகத்திற்குங்கூடக் காரணங்கள் வறுமையும் கவலையுமே. இன்மை அதிகமாகிறதா? குறைகிறதா? வாழ்க்கை எளிதாகிறதா, சிக்கலாகிறதா? அது சிக்கலேதான். இன்மைகள் அதிகமாகின்றன. உங்களது கொள்பாட்டனாருக்கு உங்கள் அளவு உடையோ பணமோ தேவைப்படவில்லை. அவர்களுக்கு மின்வண்டிகளோ புகைவண்டிப் பாதைகளோ இருக்கவில்லை. அதனாலேதான் அவர்கள் குறைவாக வேலைசெய்தார்கள். இப்புதிய சாதனங்கள் வரும்போது இன்மை அதிகமாகிறது ; வேலைப்பாடும் கடினமாகிறது. அதிகமதிகம் கவலை; இன்னுமதிகம் போட்டி.

பணங்கிடைக்க உழைக்கவேண்டும் ; அதைக் காப்பாற்றுவதோ, இன்னும் கடினம். சிறிது பணம் சேர்க்க நீங்கள் உலகையெல்லாம் பகைத்துக் கொள்கிறீர்கள் ; அதைப் பாதுகாக்கவோ, வாழ்நாள் முழுதும் போரிடுகிறீர்கள். எனவே, ஏழைகளைவிடப் பணக்காரருக்கே கவலை அதிகம்...இதுவே இயல்பு...

இவ்வுலகில் நன்மையும் தீமையும் எங்கும் உள்ளன. ஆம்; சிலபோது தீமையே நன்மையாகிறது ; ஆனால், சில போது நன்மையும் தீமையாகிறது. நம் புலன்கள் அனைத்

தும் சிற்சில போது தீமை விளைக்கின்றன. ஒருவன் மது அருந்தட்டும்; முதலில் அது தீங்கு செய்யாது; ஆனால், அவன் குடித்துக் கொண்டேயிருந்தால் தீமை விளையும். ஒருவன் தனவந்தரான தாய் தந்தையருக்குப் பிறக்கிறான், சரி; அவன் முட்டாளாய் உடம்பையோ மூளையையோ பயிற்றுவதில்லை. நன்மையால் தீமை விளைவதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு. உயிரின் மீதுள்ள பற்றைப் பாருங்கள்: நாமெங்கோ சென்று குதித்துச் சில கணங்கள் வாழ்கிறோம், உழைக்கிறோம். நாம் சிறிதும் வலுவில்லாத குழந்தைகளாய்ப் பிறக்கிறோம்; பலவாண்டுகளுக்குப் பிறகு பொருள்களை அறிகிறோம். அறுபது, எழுபது வயதில் கண்ணைத் திறக்கும்போது, "வெளியே செல்!" என்னும் கட்டளை பிறக்கிறது. அவ்வளவே...

நன்மை, தீமை என்பவை சார்புமொழிகளென்பதை நாம் கண்டுகொண்டோம். எனக்கு நலந்தருவது உங்களுக்குத் தீமையாயிருக்கலாம். நான் சாப்பிடுவதை நீங்கள் சாப்பிட்டால அழ ஆரம்பிப்பீர்கள்; நான் சிரிப்பேன். நாமிருவர் நடனமாடலாம்; ஆனால் நான் மகிழ்ச்சியாலும் நீங்கள் துன்பத்தாலும் ஆடலாம்...ஒரே பொருள் நம் வாழ்க்கையின் ஒரு பாகத்தில் நன்மையாகவும் இன்னொரு பாகத்தில் தீமையாகவும் இருக்கலாம். "நன்மையும் தீமையும் தீவிரமாகப் பாகுபடுத்தப்பட்டவை: இதுவொன்று முழுதும் நன்மை; அதுவொன்று முழுதும் தீமை," என்று நீங்கள் எங்ஙனம் நவிலலாம்?

இறைவர் எப்போதும் நல்லவரேயானால், இந்த நன்மை தீமையனைத்திற்கும் பொறுப்பாளி யார்? சாத்தானென்னும் கனவானொருவர் இருப்பதாகக் கிறித்தவரும் முகம்மதியரும் கூறுகின்றனர். இரண்டு கனவான்கள் வினையாற்றுவதாக நீங்கள் எப்படிச் சொல்லலாம்? ஒருவரே இருக்க இயலும்... தீ குழந்தையைச் சுடும் தீயே சமையலை அமைக்கிறது. தீ நல்லதோ தீயதோ என்றும், அதைப் படைத்தவர் வேறுபட்ட இருவரென்றும் நீங்களெப்படிச் சொல்லலாம்? தீயதென்று சொல்லப்படுவதையும் படைத்தவர் யார்? கடவுளே. வேறு வழியில்லை! உயிரையும் சாவையும், வாந்திபேதி முதலிய தொத்து நோய்கள் அனைத்தையும் அவரே அனுப்புகிறார்.

ஆண்டவர் அத்தகையராஞல், அவரே நல்லவர் ; அவரே தீய வருமாவர் ; அழகுள்ளவரும் பயங்கரமானவரும் அவரே ; வாழ்க்கையும் மரணமும் அவரே.

அத்தகைய கடவுளை வழிபடுவது எங்ஙனம்? ஆன்மா பயங்கரமானதை உண்மையாகவே வழிபடக் கற்றுக்கொள் ளலாம் என்பதை நாமறிந்து கொள்வோம்; அப்போது அவ்வான்மாவுக்கு அமைதி நிலவும்...உங்களுக்கு அமைதி இருக்கிறதா? நீங்கள் கவலைகளை விட்டுவிடுகிறீர்களா? முதலிற் சுற்றிப் பாருங்கள்: பயங்கரத்தை நேராக நோக்குங்கள். முக முடியைக் கிழித்தெறிந்து அதே கடவுள் அங்கிருப்பதைப் பாருங்கள். உருவக் கடவு ளாம் அவர் நன்மையெனத் தோன்றுவதும் தீங்கெனத் தோன்றுவதும் ஆவர் ; வேறொருவரும் இல்லை. இரண்டு கடவுளர் இருந்தால், இயற்கை ஒரு கணமும் நிலை நிற்க இயலாது. வேறுபட்ட ஒருவர் இயற்கையில் இல்லை : அனைத்தும் இசையொழுங்கே. கடவுள் ஒருபங்கும் சாத்தான் இன்ஞெரு பங்கும் இயற்றிஞல், அனைத்தியற்கையும் குழப்ப மாய்விடும். யார் சட்டத்தை மீற இயலும்? நான் இந்தப் பளிங்குக் கிண்ணத்தை நொறுக்கிஞல் இது கீழே விழும். ஒருவன் ஓரணுவையேனும் தன்னிடம்விட்டு நகரச்செய்தால் மற்ற அணுக்களெல்லாம் ஒழுங்கினமாய்விடும்...நீதியை ஒருபோதும் மீற இயலாது. ஒவ்வோர் அணுவும் அதனதன் இடத்தில் பொருத்தப்பட்டிருக்கிறது. ஒவ்வொன்றும் எடை போடப்பட்டு, அளக்கப்பட்டு, அதனதன் கைங்கரியத்தை ஆற்றுகிறது. அவரது ஆணையால் காற்றுகள் வீசுகின்றன, பகலோன் ஒளிர்கின்ருன். அவரது ஆட்சியில் உலகங்கள் தத்தம் இடங்களில் அமைகின்றன. அவரது ஆணையாலே மர ணத்தேவன் இப்புவியில் விளையாடுகிருன். பிரபஞ்சத்தில் இருவரோ மூவரோ கடவுளர் மல்யுத்தம் புரிவதாக எண்ணிப் பாருங்கள்! அது இயலாததே.

இவ்வுலகைப் படைத்த உருவக்கடவுள் கருணையுள்ள வரும் கொடூரருங்கூட ஆகலாமென்பதை நாமிப்போது காண்கிருேம். அவரே நன்மை ; அவரே தீமை. அவர் முறுவல் பூக்கிருர் ; சினப் பார்வையும் பார்க்கிருர். ஒருவரும் அவரது நீதியைமீற இயலாது. அவரே இப்பிரபஞ்சத்தைப் படைத்தார்.

படைப்பு என்பது யாது? பூச்சியத்திலிருந்து ஒன்றைக் கொண்டுவருவதா? ஆறுயிரம் ஆண்டுகளுக்கு முன் கடவுள் தம் கனவைக் கலைத்து உலகைப் படைத்தாராம்! அதற்குமுன் ஒன்றுமே இருக்கவில்லையா? அப்போது இறைவர் என்ன செய்து கொண்டிருந்தார்? அவருக்கு நல்ல உறக்கமா? கடவுளே இப்பிரபஞ்சத்திற்குக் காரணம்; காரிய மூலமாக நாம் காரணத்தைத் தெரிந்து கொள்ளலாம். காரியமின்றேல், காரணம் காரணமாகாது. காரியத்திலும் அதன் மூலமுமே காரணம் எப்பொழுதும் அறியப்படுகிறது... படைப்பு எல்லையற்றது......காலத்திலோ தேசத்திலோ ஆரம்பம் என்பதை நீங்கள் கற்பனை செய்ய முடியாது.

இறைவர் ஏன் படைக்கிருர்? அது அவர்தம் விருப்பமாதலால்; அவர் சுதந்தரராதலால். நீங்களும் நானும் சில வழிகளிலேயே வினையாற்ற இயலும்; வேறு வகையிலன்று. ஆகவே, நாம் சட்டத்திற்குட்பட்டவராகிறோம். "கால்களில்லாமல் அவர் விரைவிற் செல்கிருர்." உடலின்றியும் அவர் வலுவனைத்தையும் உடையவரே. "எந்தக் கண்களும் யாரைப் பார்க்க முடியாதோ, ஆனல் யார் ஒவ்வொரு கண்ணின் காட்சிக்கும் காரணமோ, அவரே பிரபுவெனத் தெரிந்து கொள்க." வேருெருவரையும் நீங்கள் வழிபட இயலாது. சர்வ வல்லமையுள்ள கடவுளே இவ்வுலகை நிலை நிறுத்துகிருர். "சட்டம்" என்பது அவர்தம் இச்சாசத்தியின் வெளிப்பாடே. அவர் தம் சட்டங்களால் இவ்வுலகை ஆண்டு வருகிருர்.

நாம் இதுவரையில் கடவுளையும் இயற்கையையும், என்றுமுள்ள இறைவரையும் என்றுமுள்ள இயற்கையையும் பற்றி ஆராய்ந்தோம். ஆனல் ஆன்மாக்களோ? அவைகளும் எஞ்ஞான்றுமுள்ளவைகளே. ஒரான்மாவும் படைக்கப்பட்டதன்று, அது சாகவும் இயலாது. ஒருவனுவது தன் மரணத்தைப்பற்றிக் கற்பனை செய்யவும் இயலாது. ஆன்மா எல்லையற்றது; என்றுமுள்ளது. அதெங்ஙனம் சாக இயலும்? அது உடல்களை மாற்றுகிறது. மனிதன் தன் பழைய, கிழிந்த உடைகளைக் களைந்து புதியவற்றை அணிவதுபோல, தேய்ந்த உடல் களையப்பட்டுப் புதிய உடல் ஏற்கப்படுகிறது.

ஆன்மாவின் இயல்பு யாது? ஆன்மாவும் சர்வ வல்லமையுள்ளது, எங்கும் நிறைந்தது. அதற்கு நீளம், அகலம், பருமன் என்பவை இல்லை...அது இங்கோ அங்கோ இருப்பதாகச் சொல்வதெப்படி? இவ்வுடல் விழுந்தால், ஆன்மா வேறோருடல் மூலமாக வினையாற்றுகிறது. ஆன்மா ஒரு வட்டம்: அதன் பரிதி எங்குமில்லை; அதன் மையம் உடலே. கடவுளும் ஒரு வட்டமென்றால், அதன் பரிதி எங்குமில்லை; ஆனால், அதன் மையம் எங்கும் உள்ளது. ஆன்மா தன் இயல்பாலே அருள்பெற்றது, தூயது; நிறைவுள்ளது. அதன் இயற்கை தூயதன்றேல் அது தூயதாவது எங்ஙனம்?...ஆன்மாவின் இயல்பே தூய்மை; அதனாலே ஆன்மாக்கள் தூயனவாகின்றன. இயல்பால் ஆன்மா அருளுடைத்து; ஆகவே, அது அருள்பெற இயலும். அதுவே அமைதி; ஆதலால் அது அமைதி பெற இயலும்...

இப்போதைய நிலையில் இருக்கும் நாமனைவரும் உடலால் ஈர்க்கப்படுகிறோம்; உயிர் வாழ்வதற்காக உழைக்கிறோம்! பொறாமை, போர், துன்பம் இவற்றிற்காளாகி இறுதியில் மாய்ந்து போகிறோம். இதனால், நாம் சரியான நிலைமையில் இல்லையென்பது தெளிவாகிறது. நாம் சுதந்தரம், மிகுந்த தூய்மை முதலியவற்றைப் பெற்றிலோம். ஆன்மா சுருங்கி விட்டதாகக் கூறலாம். இப்போது அதற்குத் தேவையானது விரிவே......

இதைச் செயலாற்றுவது எங்ஙனம்? நீங்கள் சுயமாகவே இதைச் செய்ய இயலுமா? இயலாது. ஒருவன் முகத்தில் தூசு படிந்திருந்தால் அதைத் தூசாலே கழுவலாமா? நான் தரையில் ஒரு விதையை இட்டால் அது மரமாகிறது; மரத்திலிருந்து விதை உண்டாகிறது; அதினின்றும் இன்னொரு மரம் உண்டாகிறது...கோழியிலிருந்து முட்டையும், முட்டையிலிருந்து கோழியும் உண்டாகின்றன; நீங்கள் நன்மை புரிந்தால் அதனைத் துய்க்க இன்னொரு பிறவி எடுக்க நேரும். அப்போது வருந்துவீர்கள். முடிவற்ற இந்தச் சங்கிலி ஆரம்பித்துவிட்டால் நீங்கள் எங்கும் நில்லாது, கீழும் மேலும், துறக்கத்திற்கும் புவிக்கும் தொடர்ந்து போவீர்கள். இத்தனை உடல்களும் ஏற்கவேண்டும். இதனால் விடுதலை இல்லை...

இவற்றிலெல்லாமிருந்து கரையேறுவது எங்ஙனம்? இங்கு நமது நோக்கம் யாது? துயரைத் தொலைப்பதே நம் கருத்து. அதற்காகவே நாம் இரவு பகலாகப் பாடுபடுகிறோம். ...ஆனால், உழைப்பால் அது வருவதன்று. வினையிலிருந்து மேலும் வினையே உண்டாகிறது. சுதந்தரரான ஒருவர் நமக்கு உதவி புரிந்தால்தான் அது இயலும். "அமுதத்தின் குழந்தைகளே, இவ்வுலகிலும் உயர்ந்த சுவர்க்கங்களிலும் உறைபவர்களே, செவி சாயுங்கள்: நான் இரகசியத்தைப் பெற்றுவிட்டேன்," என்கிறார் சான்றோர். "இருளுக்கெல்லாம் அப்பாலான அவரை நான் கண்டுவிட்டேன். அவரது தயவாலேதான் நாம் இந்த சமுசாரக் கடலைத் தாண்ட இயலும்."

குறிக்கோளைப் பற்றிய கருத்து இந்தியாவில் இவ்வாறுள்ளது: சொர்க்கங்களும் நரகங்களும் பூமிகளும் உள்ளன. ஆனால், அவையெல்லாம் நிலையற்றவை. என்னை நரகத்திற்கு அனுப்பினால் நான் என்றும் அங்கேயே தங்கமாட்டேன். நான் எங்கிருந்தாலும் அதே போர் தொடர்கிறது. இந்தத் துன்பம் அனைத்திலிருந்தும் மீள்வதெப்படி என்பதே பிரச்சினை. நான் சுவர்கத்திற்குச் சென்றால் அங்குச் சிறிது ஓய்வு கிடைக்கலாம். என் தீவினைக்காகத் தண்டனை ஏற்றால் அதுவும் என்றைக்கும் நிலைபெறாது ...சுவர்க்கத்திற்கு ஏகுவதன்று இந்தியாவின் குறிக்கோள். பூமியினின்றும் நரகத்தினின்றும் வெளியேறுங்கள். சொர்க்கத்தினின்றும் வெளியேறுங்கள். குறிக்கோள் யாது? சுதந்தரமே. நீவிர் அனைவீரும் சுதந்தரர் ஆகவேண்டும். ஆன்மாவின் பொலிவு மறைந்திருக்கிறது. அதை மீண்டும் வெளிக்கொணர வேண்டும். ஆன்மா இருக்கிறது; அது எங்கும் உளது. அது எங்குச் செல்லும்? எங்குச் செல்ல இயலும்? அது இல்லாத இடத்திற்கே செல்லக்கூடும். அது எப்போதும் உள்ளது என்பதைத் தெரிந்து கொண்டால் நீங்கள் என்றும் நிறைந்த சுகம் பெறுவீர்கள். அதற்குப் பின் பிறத்தலோ இறத்தலோ இல்லை...நோயுமின்று; உடலுமின்று. உடலே மிகப் பெரிய நோய்!

ஆன்மா ஆன்மாவாகவே நிற்கும். ஆவி ஆவியாகவே வாழும். இதை எவ்வாறு செயற்படுத்துவது? இயல்பாகவே

என்றுமுள்ள, தூய, நிறைவுற்ற ஆன்மாவில் இறைவரை வழிபடுவதால். சர்வவல்லமையுள்ள இருவர் மூவர் கடவுளர் இவ்வுலகில் இருப்பதாக எண்ணிப்பாருங்கள் : ஒருவர் உலகைப் படைப்பார் ; இன்னொருவர் அதை அழிப்பதாகக் கூறுவார். இது ஒரு போதும் நடவாது. ஒரே ஆண்டவரே இருக்க இயலும். ஆன்மா நிறைவுறுகின்றது ; கிட்டத்தட்ட சர்வவல்லமையும் அனைத்தறிவும் பெறுகின்றது. இதுவே வழிபடுபவர். வழிபடப்பட்டவர் யார் ? கடவுளே அவர், எங்கும் நிறைந்தவர் ; எல்லா அறிவும் கொண்டவர்; எல்லாக் குணங்களும் உடையவர். இவற்றிற்கெல்லாம் மேலாக, அவர் அன்பே. ஆன்மா இந்த நிறைவைப் பெறுவது எதனால் ? வழிபடுவதாலேயே.

பொருட் குறிப்பகராதி

அ

அகங்காரம் 37;—ர மமகாரங்கள் 37, 263.
அகண்ட அறிவு 246;—த் தன்மை 30, 37.
அகண்டப்பிரம்மம் 59;—பொருள் 30, 33-4, 60, 170, 172.
அகவுலகம் 146
அகில உலக சகோதரத்துவம், —சமயம் 418.
அசுரச் செயல்கள் 75;—ப் படைகள் 72.
அஞ்ஞேய வாதம் 63 அடிக்குறிப்பு; —வாதி 185,--வாதிகள் 63-4
அடி-ராத்தல் சத்தி 241.
அணுக்கள் 258, அணுப்பொருள் 241;—வாதிகள் 258.
அணுவிஞ்ஞானிகள் 518.
அத்துவித ஞானம் 205;–வேதாந்தம் 392.
அத்துவைத ஒழுங்கு 118, 294-5; —க் கொள்கை 120, 267, 389, —தரிசனம் 301.
அத்துவைதம் 106, 109, 114-5, 203-4, 267.
அத்துவைதி 109, 118-9, 271, 389.
அந்தணரின் சமயங்கள் 4-5.
அந்தரான்மா 456.
அதிகாரவலிமை 381.
அதியாத்தும வித்தை 274
அப்பியாசம் 466.
அமரநிலை (அமரத்துவம்) 4, 33-4, 170, 184, 239, 276-7, 396.
அமெரிக்கர் 60
அரக்கியர் (கதை) 423.
அரபு தீர்க்கதரிசி 399-400.
அராபியக் காவியங்கள் 156.
அருச்சுனன் 324, 330.
அருட்செல்வம் 124.
அருவக் கடவுள் 359-61, 382; —கருத்து 360, 377;—கொள்கை 363.
அலக்ஸாண்டிரியா 524.
அலை வடிவங்கள் 25, 215
அவதாரம் 102.
அவைதிகம் 255;—ர் 256.
அவ்யக்தம் 211, 214.
அஸ்தி, நாஸ்தி 209.
அஹரிமான் 195.
அளவை நூல் 151.
அழுக்காறு 464.
அறக்கடவுள் 75, 161;—ச் சட்டங்கள் 167;—நெறி 8,9;—வழியின் அடிப்படை 378.
அறிஞன் 159; —ர்கள், ஆதிகால 143.
அறிபவன் 36.
அறியாமை 230.
அறிவு 36, 230, 371.
அனந்த சத்தி 8.
அனுபவம் 240.
அனுபூதி 504-5.
அன்பு 473-5, 477, 482.

ஆ

ஆகாசம் 46-7, 290-1
ஆகாரம் 463.
ஆங்கிலேயன் 62.
ஆசிய சோதி 6.
ஆசியா கண்டம் 411.
ஆசிரய தோஷம் 462.
ஆசை 129—க் கோட்டைகள் 20. 22.
ஆதாம் 167, 197;–அவன் வீழ்ச்சி
ஆதி மனிதன் 71.
ஆத்துமானுபவம் 162.
ஆரணிய தத்துவம் 114.
ஆராய்ச்சி 408

ஆரிய இலக்கியம் 3 ; —இனத்தவர் 3.
ஆரியர்கள், ஆசிய 147; ஆரியன் 70.
ஆருணி 323
ஆர்மோனியப் பெட்டி 231.
ஆர்வம் 403, 481.
ஆர்னுல்டு, ஸர் எட்வின் 141.
ஆவி 471, 478 ;—உடல் 296 ;
—கள் 65;—க் கொள்கை 1.
ஆவேசம், தெய்விக 5.
ஆனந்த பரவசம் 5; —ம் 38.
—அந்தமிலா 8; --மயம் 13 4.
ஆன்மதரிசனம் 317.
ஆன்மசாட்சாத்காரம் 319.
ஆன்மா 26-7, 29, 81-2, 138, 225-6, 249-53, 266, 269-71, 275, 277, 283, 294-5, 304, 337-8, 425, 471 ; அதன் மூன்று இடங்கள் 296-7;-வின் இயல்பு 553.
ஆன்மிக சத்தி 82, 425, 481;
—கள் 418;—பூமி 5;—வளர்ச்சி 485-6;—வாழ்வு 585;—விழிப்பு 493.

இ

இங்கிலாந்து 59.
இசை 467.
இச்சா சத்தி 105, 293, 404-6.
இதயத்தில் ஒலிப்பது 93;—தின் முடிச்சுகள் 184.
இதய பீடம் 208.
இந்தியச் சிந்தனையாளர் 47;—ப் புராணம் 25;—மாது 62;—ர் 61
இந்திரன் 72, 172, 262.
இந்திரியங்கள் 220, 249.
இந்துக்கள் 413, 425;—புராணம் 25.
இயக்கன் 51.
இயற்கை 35, 98, 112, 209, 257, 270, இருவகை 12;—உணர்வு 231-2, 449;—வழிபாடு 3;
—விஞ்ஞானிகள் 218;—யிலுள்ள கடவுள் 100;—யின் சத்திகள் 3-4, 220.
இயந்திரம் 411-2.
இரசாயன நூல் 151.
இரட்டை 24.
இரண்டு சத்திகள் 401;—சார்புகள் 325-6;—வழிகள் 91.
இராமானுசர் 461, 464-5.
இராஜயோகம் 184, 448, 451-2.
இரு சத்திகள் 430 ;—சோதனைகள் 374;—பறவைகள் (உபநிடதக் கதை) 456-8;—விளுக்கள் 310.
இருக்குவேத கீதங்கள் 22;—சங்கிதை 3;—ம் 172.
இருடியர் 144, 155.
இருப்புப்பாதை வண்டித்தொடர் 80, 397.
இலட்சிய ஒருமை 7;—ச் சமயம், மதம் 428, 448;—ப் பொருள் 136;—மனிதன் 7;—ங்கள் 330;
—ம் 136-7, 333, 424.
இலஸ்ட்ரேட்டடு லண்டன் நியூஸ் 397.
இஷ்டம் 508
இஸ்லாம் 425;—மியர் 371, 413.
இழந்த சாம்ராச்சியம் 198-9.
இளமை மணம் 61.
இறைவர் 132;—ஏகமான 85;
—வழிபாடு 123.
இன்பநுகர்ச்சித் திறன் 56.

ஈ

ஈசுவரர் 127, 135;—சாந்நித்தியம் 319.
'ஈதர்' 257
ஈஸாப்புக் கதைக் கொத்து 135.

உ

உடலெனுங் கோயில் 100;
உடற்சிறை 270.
உட்கருவி 292.
உணவு 461-2.
உண்மை இயல்பு 405;—தத்துவம் 206;—மனிதன் 30-2, 34.
உதிட்டிரன் 51.
உபகோஸல காமலாயனன் 349.
உபதேசியார்கள், கிறித்தவ 426.

உபநிடதங்கள் 45, 68, 115-7, 162, 190-3,323, 350, 352, 355, 359;—ளின் பேராசிரியர்கள் 84; —தம் 181, 256, 341; —பழைய 126.
உபாசனமூர்த்தி 119.
உபாதானகாரணம் 266, 268.
உபாதிகள் 315.
உயிரணு 26; உயிர்க்கரு 243; —ச் சத்து 385;—த் தத்துவம் 46
உரிமைகள் 314.
உருவகம் (ஆலமரம்) 18[illegible]; —(தேர்) 162.
உருவக் கடவுள் 359, 372-3, 382, 547-8, 551. —கொள்கை 363,377;—ங்கள் 507, 519-21.
உருவற்ற,—வுற்ற, தன்மை 547.
உரோமன் கத்தோலிக்கர் 380
உலகப் பொதுவுண்மை 418.
உலகாயதக் கொள்கைகள் 397; —ச் சாத்திரங்கள் 339;—ம் 13, 81,114-5.
உலகானுபவம் 94.
உலகியலறிஞர் 123.
உளநூல் 292, 482.
உள்ளுறுப்பு 277.

ஊ

ஊழின் பயன் 130.

எ

எகிப்தியர் 2, 527.
எகிப்து 414.
எண்ண அலைகள் 296
எதிர்வினை 223, 293,—ச் செயல் 247.
எபிரேயர் 147

ஏ

ஏகதத்துவம் 310.
ஏகத்துவம் 138, 318.
ஏகமான இறைவன் 85.
'ஏகமேவாத்விதீயம்' 267.
ஏசுநாதர் 60, 130, 491, 510.

ஐ

ஐக்கிய பாவம் 119.
ஐந்து பணிகள் 467-8.
ஐம்புல உலகு 20;—வாழ்க்கை 126;—ன்கள் 4, 38, 48.
ஐரோப்பா 116;—பியர் 117;—ய விஞ்ஞானிகள் 46.

ஒ

ஒடுங்குதல் 241.
ஒட்டுவமை 197.
ஒருபக்க வளர்ச்சியுள்ளவன் 447
ஒருமைப்பாடு 334, 337, 339-43, 376, 382, 452.
'ஒரே நான்' 388.
ஒளியுடல் 29.
ஒழுங்கமைப்புகள் 243.
ஒற்றுமை 18.

ஓ

ஓடின் 157
ஓம் 159, 527.
ஓரிருப்புத் தத்துவம் 378.

க

கங்கை 411;—க் கரை 23.
கடவுள் 236-7;—அன்பு 263;அருவமாய—193; உருவற்ற—193; உருப்பெற்ற,—35;—உவக்கும் குழந்தை 476; நெஞ்சிலுள்ள —வழிபாடு 25;
கடவுளது காப்பியம் 429.
கடவுளர் 70-1, 74, 261-2, 264; —ளின் சித்தம் 221;—ளுண்மை 419.
கசாப்புக்காரர்கள் 462
கடோபநிடதம் 19, 141, 144, 190; (கடவல்லி 527).
கட்புலன் 292.
கணித நூல் மொழி 24
கண்ணபிரானர் 70,324;—கூற்று 499.
கதிரவன் படங்கள் 417.
கந்தர்வ உலகம் 183.
கயிறு, பாம்பு (எடுத்துக்காட்டு) 376, 389.
கருத்துண்மைவாதி 377.
கரும பூமி 298-9;—ப் பலன் 262; —யோகம் 452-3;—வலை 403.
கருவிகள் 292.

கர்ம இயல்பு 131; —கதி 130; —சக்கரம் 132;—பலன்கள் 133, 311.
களிமண் கட்டி 211, 290.
கழற்சிக்காய் 285.
கற்பம் 214
கற்பு 61, 175.
கனவு 77;—கள் 4,339;—க்காலம் 22.
கன்பியூஷியஸ் 11.
காந்த சத்தி 263.
காப்புக்கடவுள் 73.
காரணகாரியக் சுவர்கள் 88;—த் தத்துவ நியதி 104;—த்துவம் 103;—த் தொடர்பு 282, 383; —ம், காரியம்: 212, 214. 242-3.
காலதேச காரணகாரிய நியதிகள் 78;—நிமித்தங்கள் 29-30; —நியதி 47-8.
காலதேவர் 90.
கானல் நீர் 312.

கி

கிரகங்கள் 46, 50.
கிரியா 467.
கிரேக்கர் 68.
கிறித்தவர் 53
கிறித்து 499-500;—மதம் 53,400.

கீ

கீதை 190, 324.

கு

குடை இராட்டினம் 286
குரான் 379, 422.
குரு-சீடன் 528.
குருட்சேத்திரம் 329
குருட்டு நம்பிக்கை 204-5, 228, 325, 338, 406.
குரு நாதரின் கதை 490.
குருவுக்குரிய சுதந்தரம் 82.
குழந்தையும் பணப்பையும் 42.
குறிக்கோள், உயர் 206, 333.

கூ

கூட்டுத்தொகை: எண்ணங்களின், வினைகளின் 235.
கூம்புதல் 241.

கை

கைம்மை 52.

கொ

கொசு (கதை) 124.
கொள்பாட்டனர் 549

கோ

கோந்த் 387

ச

சகுணக் கடவுள் 65, 67, 79;—ம் 274.
சகோதரத்துவம் 275: அகில உலக— 436-7.
சங்கராச்சாரியார் 45, 115-6, 122, 463-4.
சங்கற்பம் 103, 243;—சத்தி 234.
சங்கிதைகள் 46, 68, 354, 358.
சச்சிதானந்தப் பிரம்மம் 139, —பொருள் 208;—ம் 122, 196, 310.
சடங்குகள் 205, 369, 427, 432-5, 505.
சடப் பொருள் 26-8, 300.
சட்டம் 552
சத்தியம் 206, 208;—யுகம் 22.
சத்து அசத்து 48
சத்யகாமன். 346-9
சப்தப் பிரம்மம் 524.
சமநிலை 283-4, 302, 439-40.
சமயக் குறிக்கோள் 322;—சுதந்தரம் 80, 82;—சிந்தனை 14, 414;—ங்கள் 22, 25, 71,—ளின் இசைவு 432;—ளின் தொடக்கம் 1,—ப் பிரசாரகர் 81;—ப் பிரிவினைகள் 420-1, 442;—ம் 93, 156, 171, 308, 354-5, 409, 418, 430-1, 458-9, 473-4, 480, 510, 512; —ம், சிறந்த 421.
சமய இயக்கங்கள் 410;—குருக்கள் 360;—த்தின் வைகறை 154;—நூல்முறை 325;-வாழ்வு 73, 94.
சமயாசாரம் 155;—சாரியர் 84.
சமரச சமயக் குறிக்கோள் 440, 447;—ப் படுத்தல் 95.
சமுசயவாதிகள் 116.

சமூகம் 38-40;—என்ற கட்டம் 74:—மூதாட்டி 80;—வாழ்வு 1.
சம்ஸாரம் (சுழல் வட்டம்) 284.
சம்ஸ்காரங்கள் 296;—ம் 278-9.
சருவவியாபி 267.
சனத் குமார முனிவர் 370
சாங்கிய தத்துவாசிரியர்கள் 248; —ம் 256.
சாசுவத (நிரந்தர) எழுவாய் 108
சாட்சி 106-7, 132.
சாத்தான் 550-1
சாந்தோக்கிய உபநிடதம் 190, 346, 370.
சார்புமொழிகள் 550
சார்வாகர் 81-2.
'சாவின் மர்மம்' 141
சாவு 20, 50, 479.
சான்றோர் 218, 243, 245.

சி

சிக்காகோ பொருட் காட்சி 245 அடிக் குறிப்பு.
சித்தம் 249, 524.
சித்தாந்தங்கள் 381, 393.
சித்திரப் படம் 131.
'சித்து' 287.
சிந்தனு சத்தி 27, 415-6;—னை 289, 292.
சிப்பாய்க் கலகம் 39.
சிலந்திப் பூச்சி 265.
சிவோஹம் 202.
'சிற்சத்தி' 291, 300.
சிற்றணு 211
சிற்றண்டம் 220.
சிற்றறை 385.

சீ

சீர்திருத்த வாதி 51-2.
சீலம் 278.
சீவதத்துவம் 299.
சீவர்கள் 267;—ன் 266, 282, 295, 302, 386;—ன்முக்தர்கள் 189, 311; சீவான்மா 282, 294, 306.
சீனர் 2-3.

சு

சுதந்தரக் கருத்தா 95-6;—ச்சத்தி 98;—ம் 96-8, 280, 313-4, 364-5.
சுயநலம் 207.
சுயம்பு 170.
சுவர்க்க இராச்சியம் 130;—ங்கள் 360.
சுவாமிகளின் குழந்தைப் பருவம் 156;—பள்ளித் தோழன் 473.
சுவாமியார் 39.
சுவேதகேது 108, 323, 350, 370-1, 378.

சூ

சூக்கும உடல் 29, 223-5, 295, 394;—நிலை 213.
சூதாடும் காய்கள் 244.
சூனியம் 26, 227,—வாதிகள் 21, 518.
சூரிய சந்திர வமிசங்கள் 73.

செ

செந்தழல் தேவன் 22.
செல்வ வழிபாடு 25.
செவிப்பேரிகை 292.
செவ்விந்தியன் 474.
சொப்பனம் 77.
சொர்க்க வாழ்வு 146.

ஞ

ஞாதா 36.
ஞான ஒளி மின்னல்கள் 22; —குரவர் 486, 490, 495;—குரு 485, 501, 527;—ம் 106;—யோகம் (யோகி) 456, 458.
ஞானுனுமானம் 435
ஞானி 30;—யர் 84.
ஞானோதயம் 316.

ட

டார்வின் 25.
டால்மூடு 519.
டான்டலஸ் 75-6;—ஸின் நரகம் 76.
டூஸன் 255.

த

தண்ணியன் 545
தத்துவ ஆசிரியர்கள் (சாங்கிய) 248;—ஒழுங்கு 206;—சாத்திரம் 157, 163;—சாத்திரிகள் 352,

356;—ஞானம்24,548;—ஞானி 24,217;—ஞானிகள், இந்தியா வின் 209; —ஐரோப்பிய 230; —நூல்கள் 22,158;—வாதிகள் 193.
தத்துவமஸி 108, 253, 321.
தருக்க அறிவு 449;—த்தின் வலை 549.
தனித்துவம் 391-2.
தனிமனிதத் தன்மை 32-3.
தன்னடக்கம் 74.
தன்னம்பிக்கை 336.
தன்னலம் 38, 401 ;—மறுப்பு 401-2.
தாமஸ்-அ-கெம்பிஸ் 344.
தாய்தந்தையர் 208.
தான்' 341-2, 357.

தி

திபேத்து 175.
தியாகம் 60, 167.
திரவப்பொருள் 28.
திருநாமம் 467.

தீ

தீக்கடவுள் 347.
தீப்பந்தம் (எடுத்துக்காட்டு) 300.
தீமை முடிவு வாதம் 50.
தீரபுருடன் 39.
தீர்க்கதரிசிகள் 344-5, 395.
துவைத பாவனை 174; – மதப் பிரிவுகள் 120; —மதம் 203, 257-8; அதன் ஆட்சி காலம் 205 ; அதன் இன்னல் 259; – க் கொள்கை 261, 399-400, 548;—மூவகைக் கருத்து 305.

து

துவைதிகள் 118-9, 194, 259, 263-4, 266, 294-5, 301-2.
துறக்கம் 157.
துறவறம் 420.
துறவியார் 40, 205.
துன்ப உணர்ச்சித்திறன் 56

தெ

தெய்வங்கள் 65, 69, 71, 74-5, 298-9, 312 ; இரு 177;—ம் 99; — தன்மை 171, 196.
தெய்விக உணர்வு 450;—புருடர் 320.
தென்கடல் தீவுகள் (நிகழ்ச்சி) 397-8.
தென்கிழக்குப் பௌத்தர்கள் 6.
தென் புலத்தார் 22.
தென்னாப்பிரிக்கா 409.

தே

தேரின் உருவகம் 162.
தேவதேவன் 75.
தேவதைகள், கொடிய 99.
தேவர்கள் 72;—ளுக்கேற்ற கருத்துகள் 221..
தேவயானம் 299.
தோத்திரப்பாடல் 99-100
தோற்றப்பாடு 376.
தோற்ற மனிதன் 30.

ந

நகையம்பு 25.
நசிகேதன் 144-5, 148-50.
நத்தை இனம் 25-6
நரகம் 358.
நரம்புகள் 56-7 ; நரம்புமையம் 222, 247.
நல்முடிவு வாதம் 50.
நவதானியங்கள் 297.
நன்னம்பிக்கை, உண்மையான 179.
நன்னெறி 118, 402 ;—க் கொள்கைகள் 335 ;—ப் பற்று 399 ; — வாழ்க்கை 121.
நாடகமேடை 364.
நாட்டுப் படங்கள் 316.
நாத்திகம் 327;—ர் 84, 106;—ன் 336.
நாம ரூபங்கள் 78, 269, 304, 524, 526;—பேதங்கள் 303.
நாரத முனிவர் 370, 467;—ரும் கண்ணபிரானும் (கதை) 89-90
நார்வே நாட்டினர் சொர்க்கம் 157.
'நான்' 107, 342, 362 ; உண்மையான—548 ; சிறிய—272, 400-1, 548 ; பழைய—406.

நி

நிமித்தம் 463.
நியாய அறிவு 99
நிர்க்குணப் பிரம்மம் 85.
நிலக்கவர்ச்சி 230
நிவிருத்தி 73.
நிறுவனங்கள் 409
நிறை நிலே 35.

நீ

'நீ', உண்மையான 179;— 'நான்' 268, 303; 'நீயே அது' 384.
நீதி நெறி 7, 113;—ச் சட்டம் 121.
நீதிபதி 547

நு

நுட்ப உடல் 223; 393.
நுண்ணிய நிலே 210-1;—மனம் 226.
நுண்துகள் 27.
நெஞ்சிலுள்ள கடவுள் 35.
நையாயிகம் 256.

ப

பகவற்கீதை 190, 324.
பகுத்தறிவு 340, 461.
பஞ்ச பூதங்கள் 212.
படம் 102;—ங்களும் பதிவுகளும் 107.
படைப்பு 525-6, 552;—க் கடவுள் 379.
பட்டுப் பூச்சிகள் 403.
பண்டைப் பிறவி 244.
பண்டைய இந்தியர் 3,—கிரீசு 4.
பதிவுகள் 228, 234, 248-9, 293.
பத்தி 470-1; அதன் சிறந்த இலட்சணம் 466; இரு பிரிவுகள் 502;—நெறி 480;—யின் உயர்ந்த நிலே 528;—யோகம் 453, 455.
பத்தொன்பதாவது நூற்றுண்டு 68, 81, 92, 113.
பந்து (எடுத்துக்காட்டு) 280.
பயன் படுகை 9-11;—டு கொள்கை 14-5.
'பயோப்ளாஸ்மிக்' சிற்றறை 233-4.
பரப்பிரம்மம் 102, 269, 306.
பரமபுருடர் 99, 317.
பரமான்மா 194, 315, 317.
பரம்பொருள் 32, 99, 102, 105, 155.
பரிசுத்தம் 469-70.
பரிணமக் கொள்கை 214, 216;—ம் 240, 242, 392;—முன்னேற்ற முறை 54;—வளர்ச்சி 408;—வாதியர் 25,
பரிபூரணம் 63.
பலவீனம் 404.
பள்ளிப் பரீட்சை 306.
பழங்கதை 436.
'பழைய ஏற்பாடு' 23, 69.
பன்றிவேட்டை 157-8.
பாச்சிகை 244.
பாஞ்சாலமன்னன் 350-1.
பாபிலோனியர் 2, 23.
பாரசீகர் 68,177, 410;—கக் கதை 368.
பாரமார்த்திகப் பொருள் 59
பார்ஸிகள் 518
பாலேவனம் (சுவாமிகளின் அனுபவம்) 311-2.
பால் வேற்றுமை 314
பாவம் 329, 334, 345, 404.
பாற்பிரிவு 269.

பி

பிதிருயானம் 299
பிதிர்களின் வழிபாடு 99
பிரகலாதன் 460
பிரகிருதி 211, 258.
பிரதிமா,—மை, பிரதீகம் 351, 514-6, 523, 527.
பிரதிவிம்பே 247-8
பிரபஞ்சம் 34, 36, 96, 102, 111, 126, 211, 213, 302, 305, 393, 401, 526-7;—விளக்கம் 142;—ப் பிரச்சினே 142.
பிரமன் 23, 107.
பிரமாண்டம் 211, 291.

பிரமிடு 2.
பிரமை 36.
பிரம்மம் 123, 277, 303, 315, 347-9, 351, 358, 527;—லோகம் 183, 297, 299; நிர்க்குண—85.
பிரவாகண ஜைபலி 323
பிரவிருத்தி 73
பிரளயத்தின் கதை 23
பிராணன் 46, 257, 290-1, 370.
பிராம்மணங்கள் 46, 182.
பிரெடரிக்கு ஹாரிஸன் 387
பிலிப்பினோ சாதியார் 414
பிளாட்டோ 116

பு

புண்ணியக் கிரந்தங்கள் 191
'புதிய ஏர்ப்பாடு' 135
புத்தமதத்தினர் 6.
புத்தர் 6, 49, 81, 94, 114-7, 121-2, 363, 399, 499.
புத்தி 293
புராணக் கதை 25;—ங்கள் 432-4.
புலனடக்கம் 184;—னறிவு 77;—னுகர்ச்சி 21, 38, 472;—னுலகு—300;—னுணர்வு 6, 223.
புலாலுணவு 332.
புவிக் கவர்ச்சிச் சத்தி,—யீர்ப்புச் சத்தி 257, 373.
புறக்கருவி 292.

பூ

பூதவுடல் 292
பூரண மனிதன் 26, 275;—த் தன்மை,—த் துவம் 150, 163, 287;—ர் 35.

பெ

பெண்சிங்மம் (கதை) 41-2
பெர்ரிஸ் இராட்டினம் 245; ஜி. டபிள்யு, ஜி.—245 அடிக் குறிப்பு.

பே

பேரண்டம் 211.
பேரின்பம் 158.
பைபிள் 23

பொ

பொதுத்தன்மை 442;—ப் படுத்துகை 372, 374.
பொய்யுலகம் 483.
பொருட்கவர்ச்சி 87
பொருளுண்மை வாதி 377.
பொற்குவை 51.
பொன்மயமான தட்டு 139

போ

போராட்டம் 66

பௌ

பௌதிகநூலோர் 291.
பௌத்தர் 45, 197-8, 263, 299, 302, 375, 386, 388, 413.
பௌராணிகமொழி 24.

ம

'மகத்து' 291, 526.
மகாகாசம் 257;—புருடர் 320.
மடவாசிகள் 114
மத ஏக்கம் 487;—குரவர்கள் 217;—குருக்கள் 374, 419;—ங்கள் 64, 69;—போதனைகள் 320;—ப் பற்று 480;—ப் பிரிவுகள் 255-6, 409;—ம், மிக நாகரிகமான 481;—மாற்றம் 410-1, 422-3.
மதுவருந்தல் 550
மயக்க அறிவு 36.
மரண தேவதை,—த்தேவன் 51, 159, 162, 170;—பயம் 34, 231;—ம் 20, 50, 552.
மலைப் பிரசங்கம் 154, 478, 491.
மறு பிறப்பு 226-7, 229, 280, 395.
மனச் சத்திகள் 257;—நூல் 289;—ம் 248-9, 291-4.
மனித அறிவு 77;—ஆன்மா 283;—இனத்தின் விதி 1;—ன், எதிர் கால 545.
மனு 23.
மாக்ஸ் முல்லர் 255. 486;
மாணவர், உண்மையன—ன் 488-9.

மாதாகோவில் படங்கள் 417.
மாயாவாதி 198.
மாயை, 66-8, 71, 77-8, 86-91, 98-9, 111, 176, 194, 277, 304; இதற்குப் பல பொருள்கள் 44-56;—யின் திரை 545.
மார்மன் வகுப்பு (நிகழ்ச்சி) 420.
மாலுமிகள் 236,
மானசீகம் 143
மானத சரீரம் 295
மானவர் 24
மானிடமொழி 24
மான் கதை 135

மி

மித்தை 44, 68.
மிருக வாழ்வு 76
மின் சத்தி 283

மீ

மீமாம்ஸகம் 256

மு

முகம்மதிய மதம் 379, 424 - 5; —ர்கள் 197, 422-3.
முகம்மது நபி 197
முக்காலங்கள் 21;—ச் செய்திகள் 287.
முக்தி 262, 264, 273.
முடி மன்னர் 329
முடிவற்ற சங்கிலி 553.
'முடிவிலி' 342
முதுமொழி 483
மும் மூர்த்திகள் 547
முஸல்மான் 39.
முன் பிறப்பு 280-1.
முறையீடு, மிகவுயர்ந்த 405.

மூ

மூடக்கொள்கை 204-7
மூதாதையர் 268;—வழிபாடு 2-3.
மூலப்பிரகிருதி 279; ப் பொருள் 265
மூன்று துறைகள் 274
'மூன்று பேருரைகள்' (வேதாந்த நூல்) 255.

மெ

மெய்ப் பொருள் 102, 105, 155, 316, 407;—ம்மை 206. 355, 357-8, 370-1, 417;—ய்யுணர்வு 153, 155, 169, 318, 357, 381.

மை

மையக்கருத்து 102.

மோ

மோசஸ் 25; மோசேயின் பிரிவு 410.
மோட்ச நிலை 283.

ய

யந்திரங்கள் 55
யமன் 145

யு

யுகம் 214, 262.

யூ

யூதர் 69, 519;—களது சாத்திரம் 22.
யூப்பிரட்டீஸ் நதி 411

யோ

யோகம், யோகி 448.

ர

ராஜயோகம் 184, 448, 451-2.
ராஜஸ குணம் 444

ரி

ரிஷி 6
ரோமில் ஒரு செல்வந்தன் 156

ல

லலிதா விஸ்தாரம் 49

வ

வகுப்புச் சார்வு 208
வட்ட நெறிக்கொள்கை 25-6
வலிமை 207-8
வழிபடுதல் 546;—பயங்கரத்தை 551
வழிபாடுகள் 427, 551
வாக்கு 524
வாத நோய் 52
வாழ்க்கைக் குறிக்கோள் 327-8, 333, 470-1, 483;—ப் போராட்

டம் 52, 431;—முறை 207, 298;
—மேலான 168.
வாழ்வு 20-1, 270.
வானநூல் 282.

வி

விசிட்டாத்துவைதிகள் 264-6.
விசும்பு 290, 370.
விஞ்ஞான அறிவு 38;—சாத்திரங்கள் 83;—சோதனை 331—ம் 241; விஞ்ஞானி 86, 163
விடுதலை 280, 286, 297.
விண்ணகம் '38
விதி 21, 236
விமோகம் 465
விரிவு 240
விலங்கறுவை
331
விலங்கின் வா
விலைமதிப்பு 3
விவகார உல
விவிலிய நூல்
413.
விவேகம் 461
விளம்பரத்
விழிப்பு நிலை
வீடுபேறு 200

வெ

வெப்ஸ்டர் 245 அடிக்குறிப்பு.
வேதகாலச் சிந்தனையாளர் 46
வேதங்கள் 95, 257, 351, 379, 381, 467; வேதநூல்கள் 273.
வேதாந்தம் 57-8, 60, 66-7, 70, 76, 99, 113, 132-3, 176-7, 180, 325;—த்தின் குறிக்கோள் 367;
—கொள்கை 63;—த
169, 323;—நூல்கள்
செயல்முறை—322.
வேதாந்தி 47, 67, 121, 1
305-6.
வேள்விகள் 147.
வைதம் 502.
வைதிக தருமம் 255.

ஷ

ஷோபனேர் 103-4.

ஸ

த்-ஆனந்தம் 384.
ஸர்வ வியாபகத்துவம் 30.
ஸ்காந்திநேவியர் 4.
வதாஸ்வதர உபநிட

ஹ

ஸ்லி 25, 228.
ருக்கள் 68, 468.
ர்பர்ட்டு ஸ்பென்ஸர்

ஜ

ஜடம், சேதனம் 291.
ஜபாலா 346.
ஜரதுஷ்டரமதம் 410.
ஜாண் ஸ்டுவர்ட் மில் 382.
ஜாதிப் பிரிஷ்டம் 80.
ஜீவன் 394-5.
ஜெர்மனி 59;
ஜெர்மானிய தத்துவசாத்
166;—ப்பேராசிரியர்
—ர் 4.
ஜெஹோவா 69-70, 72, 7

கைவசமுள்ள தமிழ் புத்தகங்கள்

	ரூ.	ந.பை
ராமகிருஷ்ணரின் மொழியமுதம் (புதிய பதிப்பு)	6	50
ராமகிருஷ்ண தேவரின் திவ்விய சரிதப் பாடல்	5	50
ராமகிருஷ்ணரின் உபதேச மொழிகள்—கால் காலிகோ	4	00
வேகாநந்தர் சம்பாஷணைகள் ...	3	50
மத் பகவத் கீதை ...	3	50
மத் பிரம்மாநந்த சுவாமிகளின் வரலாறும் ஞானோபதேசமும்	3	00
விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்திரம் ...	2	75
பநிஷத் ஸாரம் முதல் பாகம் ...	2	50
,, இரண்டாவது பாகம் ...	3	00
ய அன்னையார் ஸ்ரீ சாரதாமணி தேவியார் ...	1	25
ராமகிருஷ்ண உபநிஷதம் ...	1	25
ராமகிருஷ்ணரின் ஞான முரசு (பாக்கட் சைஸ்)	0	40
விவேகாநந்தரின் வீர முரசு ...	0	37
சாரதா தேவியாரின் அன்பு முரசு ,,	0	40
புத்தரின் அறமுரசு ,,	0	37
கிருஷ்ணரின் யோக முரசு ,,	0	40

	ரூ.	ந.பை
ரு அருள் மொழி	3	50
ரதா தேவியார்	3	25
ந்தியப் பிரசங்கங்கள்	3	25
தவி மாஹாத்மியம்	3	00
ஞானவளி	3	00
ந்துமத சாரம்	2	25
ராஜயோகம்	2	25
ருத்ரம்	2	00
கவத்கீதை வெண்பா	2	00
லலிதா ஸஹஸ்ரநாமம்	2	50
ர்க்கா சரண நாகர்	1	50
விவேகாநந்த சரித்திரம்	1	50
க்தி ஸாரம்	1	37
சாரதா தேவி சரிதம்	1	25
பாராயண) கீதை	1	25
லலிதா த்ரிசதீ	1	25
த்மநிவேதனம்	1	25
ருக்கேதார யாத்திரை	1	25
ருக்கைலாயகிரி யாத்திரை	1	12

	ரூ.	நபை
லலிதா ஸஹஸ்ரநாமம் பாராயணம்	1	00
பாரதப் பெண்மணிகள்	1	00
கருமயோகம்	1	00
நமது தாய் நாடு	1	00
ஸந்தியாவந்தனம்	1	00
ஸ்ரீ ராமகிருஷ்ண சரித்திரம்	0	75
உப கதைகள்	0	75
பக்தியோகம் (புதிய 5-ம் பதிப்பு)	0	75
கல்வி	0	75
தைத்திரீயோபநிஷத்து	0	62
தற்கால இந்தியா	0	62
பக்தி மார்க்கம்	0	50
குருதேவர் வாக்கியம்	0	50
எனது வாழ்வும் பணியும்	0	50
எனது குருநாதர்	0	37
அமெரிக்கா பிரசங்கம்	0	37
எனது போர் முறை	0	37
புருஷ ஸூக்தம்	1	00

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்
மயிலாப்பூர் :: சென்னை-4

Our Sanskrit Scripture Series

Each Volume containing the original text in Devanagari, English translation and copious notes as well as elaborate introduction

	Rs.	nP.
UPANISHADS :		
Isavasya Upanishad ...	0	75
Kena Upanishad ...	0	75
Katha Upanishad ...	1	50
Prasna Upanishad ...	1	00
Mundaka Upanishad ...	1	00
Mandukya Upanishad ...	0	75
Taittiriya Upanishad ...	2	00
Aitareya Upanishad ...	1	00
Svetasvatara Upanishad ...	1	50
Brihadaranyaka Upanishad	7	50
Chandogya Upanishad ...	8	00
Mandukya Upanishad (with Gaudapada's Karika & Sankara's commentary. Translated by Sw. Nikhilananda)	6	00
Mahanarayanopanishad (Just out)	5	00
GITA :		
Srlmad-Bhagavad-Gita (with Sridhara's Gloss. Translated by Swami Vireswarananda)	7	00
Gita by Swami Swarupananda	5	50
MISCELLANEOUS :		
Brahma-Sutras by Swami Vireswarananda Pp. LXVIII + 560 ...	6	00
Upadeshasahasri of Sri Sankaracharya ...	3	50
Narada Bhakti Sutras ...	3	00
Worship of Sri Ramakrishna by Sw. Suddhasatwananda	1	00

	Rs.	n
Devi-Mahatmyam (Chandi) (Durga Saptasati) ...	2	0
Vakyavritti & Atmajnanopadesavidhi of Sri Sankaracharya ...	1	0
Ramakrishna Kathamrita (in Sanskrit) ...	2	0
Atmabodha of Sri Sankaracharya. Translated by Sw. Nikhiananda (in Press) ...	4	0
Vivekachudamani of Sri Sankaracharya. Translated by Swami Madhavananda ...	3	0
Vedantasara of Sadananda. Translated by Swami Nikhilananda ...	2	0
Drig-Drisya-Viveka. Translated by Swami Nikhilananda	1	0
Yatindramatadipika of Srinivasa Dasa (A Manual of Visishtadvaita) ...	5	0
Mimamsa-paribhasha. Translated by Swami Madhavananda ...	2	0
Vairagya-Satakam ...	1	0
Laghu-Vakyavritti ...	0	7
STOTRA LITERATURE :		
Sivamahimnah Stotram ...	0	7
Stotraratna (Text & translation) ...	0	7
Divine Life (Selection from Sanskrit Scriptures by Sw. Yatiswarananda) ...	3	0
Universal Prayers (A companion to the above) ...	2	0
Altar flowers ...	2	5

Sri Ramakrishna Math :: Mylapore, Madras-